JL
Zm 211, N08
N08.13
162024



ஸ்ரீ பழனியாண்டவர்.

**Sri Palaniandavar.**

OFFICE OF ... 8- DEC 1920


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII } ரௌத்திரி௵ ஆனி௴ :: 1920-ம௵ ஜுலை௴ { பகுதி 1


உ
கணபதிதுணை



திருத்தணிகேசன் துணை

## மஞ்ஞைப் பதிகம்

[ஸ்ரீமான் வ.சு. செங்கல்வாராயபிள்ளை, எம். ஏ.]

ஆடு மயிலே !நிர்த்தம் ஆடு மயிலே ! —தணிகை
ஆறுமுக நாதன்வர ஆடு மயிலே !
பாடுமடி யார்பரவ ஆடு மயிலே! — சம்
பந்தன்வர எந்தன் முனம் ஆடு மயிலே!

தணிகைமலைத் தேவன்வர ஆடுமயிலே !-தந்திம்
தத்திம் தித்திம் தத்திமென ஆடு மயிலே!
பணியுமெனைக் காத்துவர ஆடு மயிலே!—பரன்
பால குகன் ஏறிவர ஆடு மயிலே!

நீல மயிலே ! மந்த்ர ரூப மயிலே !—நிதம்
நித்தன் அத்தன் ஏறிவரு சித்ர மயிலே!
கோல மயிலே ! நீயே ஒல மயிலே ! —அண்ட
கூடமுழு தோடிவலி சேட மயிலே !

துங்க மயிலே ! நாக பந்த மயிலே ! —சிகைச்
சூட்டு மயிலே !கவலை யோட்டு மயிலே !
வெங்கண் மயிலே !கந்தர் தங்கு மயிலே!-அன்பன்
வெற்றி பெற வந்துதவு கொற்ற மயிலே!

நேச மயிலே ! அரன் பூசை உமையே—திகழ்
நின்னுருவங் கொண்டுசெய்தாள் முன்னம் மயிலே!
ஆசைமயிலே ! எங்கள் அருணகிரியாம்—அன்பர்
அன்றழைக்க வந்து நின்றாய் ஆதி மயிலே!

வாகை மயிலே !மணி நாக மயிலே ! —மலை
மாதுதரு நாதனமர் சோதி மயிலே !—
தோகை மயிலே! தரு மோக மயிலே !—சுகச்
சுத்த நிலை இன்னதெனச் சொல்லு மயிலே !

தேவாதி தேவ னென் றாடு மயிலே !—திருச்
செங்கோட்டு வேலனென் றாடு மயிலே !
சாவாப்ர சாதந்தந் தாடுமயிலே !—தனத்
தந்தான தானவென் றாடு மயிலே!

வேலா விசாக என் றாடு மயிலே !—மலை
வேந்தா குமார என் றாடுமயிலே !
பாலா விநோத என் றாடு மயிலே ! — மலர்ப்
பாதா குகேச என் றாடுமயிலே !

தத்திமென நிர்த்தமிடு பச்சை மயிலே ! —குக
சண்முகனை என்முன்வரப் பண்ணு மயிலே !
சத்தி மயில் வஜ்ரமயில் சண்ட மயிலே ! —தனித்
தங்க மயில் துங்கமயில் எங்கள் மயிலே!

செம்பொன் மயிலே ! சித்ர பைம்பொன் மயிலே ! -
செந்தின் மயிலே! பரங் குன்றின் மயிலே! [திருச்
அம்பொன் மயிலே ! எங்கள் நம்பன் மயிலே!— பணி
அஞ்சு மயிலே ! நீயே தஞ்ச மயிலே !

வள்ளி மண வாள என்றே ஆடு மயிலே —வான
மங்கை பங்க துங்க என்றே ஆடு மயிலே
கொள்ளுநலை மின்னதெனக் காட்டுமயிலே—கோழிக்
கொடிக் கரத்துத் தேவனருள் கூட்டு மயிலே.

ஆறுதிருப் பதியானென் றாடு மயிலே! — மெய்
யன்பருக்குக் கதியா னென் றாடு மயிலே !
வேறுகதி யில்லையென்றே ஆடு மயிலே ! —எங்கள்
வேல வேல வேல என்றே ஆடு மயிலே !

அந்த மயிலே ! ஆநந்த மயிலே !—சச்சி
தானந்தன் பாட நடம் ஆடு மயிலே !
சந்த மயிலே எங்கள் கந்தர் மயிலே பிர
சண்ட மயிலே ! சிகைக் கொண்டை மயிலே !

(இதன் தொடர்ச்சி 13-ம் பக்கம் பார்க்க.)

800 009
1620244

# விவேக போதினி

தொ.13] ரௌத்திரி௵ : : ஆனி௴ [ப.1

## யுதிஷ்டிரர்

## YUDHISHTIRA

சல்லியன் செய்த வாக்குத்தத்தத்தைக் கேட்டு துரியோதனன் ஆனந்தத்தால் உடல் பூரித்து "அர்ஜுனன் இறந்தான். பாண்டவர்கள் அழிந்தனர். கௌரவராஜ்யத்தில் இப்பொழுதுதான் நமக்குப் பட்டாபிஷேகமாயிற்று" என்று நிச்சயித்து, "மாமா! கௌரவருக்கும் பாண்டவருக்கும் சமீபத்தில் நடக்கும் யுத்தத்தில் கிருஷ்ணன் அர்ஜுனனுக்குத் தேர்ப்பாகனாயிருக்கஒப்புக்கொண்டுவிட்டான். அவனுக்கு நிகரான கர்ணனுக்குத் தேரோட்டுவதற்குத் தகுதியானவர் நீரே. ஆகையால், அந்த உதவியை எனக்குச் செய்யவேண்டும்" என்று அவரைப் பிரார்த்தித்தான்.

பாண்டவர்களைச் சேர்ந்தவனும், அவர்களுடைய ஜயத்தையும் க்ஷேமத்தையும் கோரினவனும், அவர்களுக்குத் துணைபுரிய வந்தவனுமான சல்லியன், இப்படி வஞ்சனையால் தன் சத்துருக்களுக்கு உதவிசெய்யக் கட்டுப்பட்டதைக்குறித்து வருத்தமுற்று தான்செய்த பிரதிக்ஞையை நிறைவேற்றத் தவறக்கூடாதென்ற தருமத்தை அனுசரித்துத் "துரியோதனா! அப்படியே செய்கிறேன். நீ கவலைப்படாதே. ஆனால், இப்பொழுது நான் பாண்டவர்களைப் பார்த்துவிட்டுத் திரும்பி வருகிறேன்" என்று அவனிடத்தில் விடை பெற்றுக்கொண்டு, தருமபுத்திரரிடம் வந்து நடந்த வரலாற்றையெல்லாம் அவருக்குச் சொல்லி, "இப்படி நான் மோசம் போனேனே. இதற்கென்ன பரிகாரம்" என்று கேட்டான்.

### சல்லிய ஸாரத்தியம்

யுதிஷ்டிரர் சற்றும் தயங்காமல், "மாமா! துரியோதனன் கர்ணனைப் பார்த்து, 'நீ அர்ஜுனனைக் கொல்லுவதில் சந்தேகமுண்டோ' என, அந்தத் தேர்ப்பாகனுடைய மகன், 'நண்பனே! அர்ஜுனனுக்குக் கண்ணன் சாரதியாயிருப்பது மேல், அவருக்குச் சமமானவன் என் தேரை நடத்தினால் பார்த்தன் இறந்தானென்றறி' என்றான். கண்ணனுக்கு நிகரானவன் நீரேயென்று அந்தக் கௌரவன் உம்மை இப்படி ஏமாற்றிக் கட்டுப்படுத்திவிட்டான். ஆயினும், எங்களுக்கு எந்தக் கெடுதி நேர்ந்தபோதிலும், நீர் தருமத்தைக் கைவிடாமற் செய்த பிரதிக்ஞையைப் பொய்யாக்காமல், சொன்னபடி நடந்துகொண்டது மிகவும் புகழத்தக்கது; நன்கு செய்தீர். ஆனால், நானும் உம்மை ஒரு வரம் கேட்கிறேன். நீர் அப்படிச் செய்வது நியாயமல்லவென்று எனக்குத் தெரியும். ஆனாலும், நீர் எங்களுக்கு மாமன்; எங்களுடைய அன்பிற்கும் பூஜைக்கும் உரியவர்; எங்களிடத்தில் அளவற்ற பிரியம் வைத்து, நாங்கள் ஜயத்தையும் க்ஷேமத்தையும் அடையவேண்டுமென்று கோரி அதற்காக இரவு பகலாய் எந்த சமயத்திலும் உழைக்கிறவர். எங்களுக்கே துணைபுரிந்து கௌரவரை நாசஞ்செய்ய வந்தவர்; உமது இஷ்டத்திற்கு விரோதமாய் உம்மை பிரதிக்ஞை செய்யச் சொல்லி உம்மையும் எங்களையும் பகைவர்களாய் நிறுத்தி வைத்த அந்தத் துஷ்டனுடைய வஞ்சனையையும் ஆலோசித்து, அதற்குப் பதில் வஞ்சனை செய்வதால் குற்றமில்லையென்றும், க்ஷத்திரிய தர்மமென்றும், யுத்த நீதியென்றும் தெளிந்து, நான் வேண்டியபடி செய்யும். கர்ணனுக்கு நீர் தேரோட்டுவதை நான் தடுக்கவில்லை. ஆனால், உமது பிரதிக்ஞைக்கும் தர்மத்திற்கும் விரோதமில்லாமல், எங்களுக்கு எக்காலத்திலும் எவ்விடத்திலும் க்ஷேமத்தையே செய்துகொண்டிருக்கவேண்டும். முக்கியமாய் அர்ஜுனனைக் காப்பாற்றவேண்டும். கர்ணனுக்கு ரதமோட்டும்பொழுது தகுந்த சமயம் பார்த்து, அவனுடைய மகிமையையும் பராக்கிரமத்தையும் இகழ்ந்து பார்த்தனுடைய மகிமையையும் பராக்கிரமத்தையும் அடிக்கடிப் புகழ்ந்து, அந்தக் கர்ணனுக்கு உற்சாக



SL
3m211n08
F103-13



மும் சக்தியும் குறையும்படி சமயோசிதமாய்ச் சொல்லவேண்டும். இது நியாயமல்லவென்று எனக்குத் தெரிந்திருந்தும், எங்களுக்கு மாமனானதால் உம்மை இப்படிச் செய்யும்படி வேண்டுகிறேன்" என்றார். சல்லியன் அதற்குச் சம்மதித்து, "கர்ணனுடைய சக்தியைக் குறைத்து அவனுடைய கர்வத்தை அழிக்கச் சகல உபாயங்களையும் தேடுகிறேன். அப்பொழுது அர்ஜுனன் அவனை எளிதிற் கொல்வான்" என்றான்.

### இது நியாயமா?

இந்த விஷயத்தில் யுதிஷ்டிரர் செய்தது சரியென்று சொல்லமுடியாது. தனக்குக் கெடுதி செய்தவருக்குத் தான் கெடுதி செய்வதில்லையென்றும், தருமத்தையே நம்பி, தருமமே ஜயிக்கும், தருமமே காப்பாற்றுமென்னும் நிச்சயமான கொள்கையையுடைய தருமபுத்திரர், இப்படி நடந்தது நியாயமல்ல. துஷ்டனான துரியோதனன் தன் வழக்கப்படி வஞ்சனையால் பாண்டவர்களை ஜயிக்க விரும்பி, அவர்களுடைய நண்பனான சல்லியனைப் பிரதிக்ஞையால் கட்டுப்படுத்தி, தனக்காகப் போர் புரியச் செய்தான். அதற்காக யுதிஷ்டிரரும் அவனோடு தன்னைச் சமமாகச் செய்துகொண்டு, வஞ்சனையால் கர்ணனைக் கொல்லச் சூழ்ச்சி செய்தது தருமமாகுமா? ராஜ்யத்திற்காக ஆசைகொண்டு எந்த அக்கிரமத்தையும் செய்யலாமென்பது, அவர் அனுஷ்டித்துவந்த தருமத்திற்கு முற்றிலும் விரோதம். ஓர் யுத்த வீரனுக்குத் தேர் நடத்த ஒப்புக்கொண்டால், அவனுக்கு ஜயம் கிடைக்கும்படி சகல உதவியையும் புரியவேண்டியது கடமை. வீரன் மூர்ச்சையடைந்தபொழுது அவனைக் காப்பாற்றும் வழியைத் தேடி, வேறிடத்திற்குக் கொண்டு போகவேண்டும். சில சமயங்களில் தானே நேரில் யுத்தஞ் செய்யவேண்டும். வீரனுக்குச் சக்தியும் பராக்கிரமமும் வரவர அதிகரிக்கும்படிக்கும், சத்துருவின் பலத்தையும் உற்சாகத்தையும் குறைக்கும்படிக்கும் எல்லா உபாயங்களையும் தேடவேண்டும். அப்படியிருக்க, தன்னை நம்பியிருக்கும் கர்ணனையும் அவனை நம்பியிருக்கும் துரியோதனனையும் வஞ்சித்து, அவர்கள் தோற்கும்படிக்கும் அவர்களுடைய சத்துரு ஜயிக்கும்படிக்கும் சகல உபாயங்களையும் செய்வதைப்போல் நம்பிக்கைத் துரோகமும் கொடிய பாதகமும் வேறில்லை. தருமபுத்திரருக்கு வரத்தைக் கொடுத்து அதனால் கட்டுப்பட்டு, அதற்குத் தகுந்தபடி நடந்துகொண்ட சல்லியனுக்குப் பாபமில்லையென்று சொல்லலாம். துரியோதனனுக்கு வரம் கொடுத்து, அதற்குக் கட்டுப்பட்டு, அதன்படி கௌரவர்களுக்குச் சகாயம் செய்ததாலும், சல்லியனுக்குப் பாபமில்லை. அவன் துரியோதனனுக்குச் செய்த பிரதிக்ஞைக்கும், க்ஷத்திரிய தருமத்திற்கும், நம்பிக்கைக்கும் முற்றிலும் விரோதமாய் நடக்கும்படி வரங்கேட்ட தருமபுத்திரருக்கே அந்தப் பாபமெல்லாம் சேரும். மேலும், தெரியாமற் செய்தாரென்று சொல்லவும் இடமில்லை. "இப்படிக் கேட்பது அதருமமென்று எனக்கு நன்றாய்த் தெரியும். ஆயினும், நீர் என் மாமனாயிருப்பதால் இதற்கிணங்கவேண்டும்" என்று சல்லியனைத் தருமசங்கடத்திற்குட்படுத்தி நிர்ப்பந்தித்தது, இன்னும் அதிகபாபம். மேலும், துரோணருடைய மரணத்தைப்பற்றின விஷயத்தைப்போல, கிருஷ்ணனுடைய தூண்டுதலால் இப்படிச்செய்தாரென்றுசொல்லவும் இடமில்லை. இதற்காகவும், புத்தி பூர்வகமாய்ப் பொய்யைச் சொல்லித் துரோணரைக் கொல்லுவித்ததற் காகவுமே, தருமபுத்திரருக்குக் கொஞ்ச நேரமாவது நரகங்களில் கோரமான தண்டனையைப் பார்க்கும்படியான பாப பலன் ஏற்பட்டது.

### யுத்தஞ்செய்ய பீஷ்மரை உத்தரவுகேட்டது

கௌரவ பாண்டவ சைன்னியங்கள் போர் செய்யத் தயாராயிருக்கும்பொழுது, தருமபுத்திரர் தம் கவசத்தைக் கழற்றிவிட்டு, ஆயுதங்களை வைத்துவிட்டு, ரதத்திலிருந்து இறங்கி, மௌனமாய்க் கைகூப்பி, கிழக்கு முகமாய் பீஷ்மரிருக்குமிடத்தை நோக்கிச் சென்றார். உடனே அவருடைய தம்பிகளும் கிருஷ்ணனும் அவரைப் பின்தொடர்ந்தார்கள், "எங்களைவிட்டு, கால் நடையாய், பகைவர் சைன்னியத்தை நோக்கி ஏன் போகிறீர்" என்று பீமாதியர் தடுக்கும்போது, கிருஷ்ணன் "இவன் அவர்களைச் சுனறிவேன். யுத்தம் ஆரம்பிப்பதற்கு முன் பெரியோருடைய கருத்தை, பீஷ்மர் துரோணர் கிருபர் முதலிய பெரியோரைப் பணிந்து, சல்லியனோடு யுத்தஞ்செய்ய உத்தரவுபெற்று ஆசீர்வதிக்கப்

பட்டுப் பிறகு இந்த மகாயுத்தத்தைத் தொடங்குவார். இப்படிச் செய்வதால் இவருக்கே ஜயம் கிடைக்கும்" என்றார்.

கௌரவ சைன்னியத் தலைவர்களில் சிலர் "இஃதென்ன விபரீதம்! இந்த தருமபுத்திரன், பீமார்ஜுனர்களைத் துணையாகக்கொண்டும், கையா லாகாதவனைப் போல், இந்த மகா சைன்னியத்தைப் பார்த்துத் திகிலடைந்து, பீஷ்மரைச் சரணமடையப்போகிறான்" என்று தங்களுக்குள் சொல்லிக் கொண்டிருந்தார்கள். துரியோதனாதியர் கைகொட்டி ஆரவாரித்துத் தருமபுத்திரர் என்ன சொல்லப் போகிறாரோ வென்று ஆவலுடன் எதிர் பார்த்துக்கொண் டிருந்தார்கள்.

அப்பொழுது யுதிஷ்டிரர் பீஷ்மரிடத்திற்குச் சென்று, அவருடைய பாதங்களில் தலையைவைத்து வணங்கி, "சத்துருகுல காலனே! வந்தனமளிக்கிறேன். இன்று தங்களுடன் யுத்தஞ்செய்ய அனுமதிகொடுத்து என்னை ஆசீர்வதிக்கவேண்டும்" என்றுபிரார்த்தித்தார். அதைக்கேட்டுப் பீஷ்மர் "மஹாராஜா! நீ இப்பொழுது இப்படி என்னிடத்தில் வராமலிருந்தால், உனக்கு அபஜயம் கிடைக்க வேண்டுமென்று சபித்திருப்பேன். உன்னிடத்தில் திருப்தியடைந்தேன். என்னுடன் யுத்தஞ் செய். உன் கோரிக்கைக ளெல்லாம் இந்த யுத்தத்தில் ஈடேறி ஜயமடைவாய். தனம் ஒருவனுடைய அடிமையுமல்ல; தனத்திற்கே எவனும் அடிமையாகிறான். ஆகையால், நானும் கௌரவர்களுக்குத் தனத்தால் கட்டுப்பட்டு அவர்களுடைய அன்னத்தைத் தின்றபடியால், அவர்களால் வளர்ந்த இந்தத் தேகத்தை அவர்களுக்காக யுத்தத்தில் தாரைவார்க்க வேண்டும். கையாலாகாதவனைப்போல், என் விருப்பம் ஒருவிதமாயிருக்க, நடத்தை வேறு விதமா யிருப்பதற்கு இதே காரணம். உனக்காக யுத்தஞ்செய்வதைத் தவிர, வேறு எந்த …த்தையாவது கேள்" என்றார்.

…த்திரர் "மகானுபாவா! கௌரவர்களுக்… யுத்தஞ்செய்யும். ஆனால், ஒவ்வொரு நா… என்னையும் ஞாபகத்தில் வைத்துக்கொண்… னக்கு க்ஷேமமுண்டாகவேண்டுமென்று ஆசீ…க்கவேண்டும். மேலும், நான் ஜயத்தை ய… வேனென்றுதாங்கள் ஆசீர்வதித்தது எப்படி நிறைவேறும்? திரிமூர்த்திகள் ஒன்று சேர்ந்தாலும் ஜயிக்கமுடியாத தாங்கள் இருக்கும்வரையில் எனக்கு ஜயமேது? காலன் தங்களுடைய உத்தரவில்லாமல் தங்களிடத்தில் நெருங்க மாட்டான். ஆகையால், தாங்கள் ஆயுதங்களை வைத்துவிட்டு இந்தத் தேகத்தை விடவேண்டுமென்று நினைக்கும் காலம் எது? அதற்கு என்ன உபாயம் செய்யவேண்டும்" என்றார். பீஷ்மர் "குழந்தாய், அது நேருவதற்கு இது சமயமல்ல. வேறொரு தடவை என்னைவந்து தனியே கேட்டால், அதற்கு உபாயம் சொல்லுகிறேன்" என்றார். பிறகு யுதிஷ்டிரர் அவரை வணங்கி விடைபெற்றுக்கொண்டார்.

### துரோணரைக் கேட்டது

பிறகு அவர் துரோணாசாரியரிடத்திற்குச் சென்று, அவருடைய பாதங்களில் பணிந்து, "ஆசாரியரே! தங்களைப்போன்ற மேலோருடன் யுத்தஞ் செய்தும், பாபம் வராமலிருப்பதெப்படி? நான் சத்துருக்களை ஜயிக்கும்படி எனக்கு உத்தரவு அளிக்க வேண்டும்" என்றார். துரோணர் "யுத்தஞ்செய்வதற்குமுன் நீ என்னிடத்தில் வந்து அனுமதி கேட்காமலிருந்தால், உனக்கு ஜயமுண்டாகாதபடி கோரமான சாபம் கொடுத்திருப்பேன். இப்பொழுது உன்னால் தகுந்தபடி மரியாதை செய்யப்பட்டுத் திருப்தியடைந்தேன். என்னுடன் யுத்தஞ்செய். ஜயத்தை அடைவாய். கௌரவருடைய தனத்தைப் பெற்று, அவர்களுக்குக் கட்டுப்பட்டு, என் இஷ்டத்திற்கு விரோதமாய் யுத்தஞ்செய்ய வேண்டியிருக்கிறது. அவர்களுடைய அன்னத்தால் வளர்ந்த இத்தேகத்தை அவர்களுக்காக இந்த யுத்தத்தில் பலிகொடுக்கப் போகிறேன். யுத்தத்தை நிறுத்துவதைத்தவிர வேறு எந்த வரத்தையாவது கேள். தருமபாசத்தால் கட்டுப்பட்டுக் கையாலாகாதவனைப்போல் இப்படிச் சொல்ல வேண்டி யிருக்கிறது" என்றார்.

அதைக்கேட்டு யுதிஷ்டிரர் "சுவாமீ! தாங்கள் கௌரவர்களுக்காகவே யுத்தஞ்செய்யுங்கள். இதுதான் நான் கேட்கும் வரன்" என்றார். துரோணர் "கிருஷ்ணனைத் துணையாகக்கொண்ட உங்களுக்கே ஜயம் கிடைக்கும். கௌரவருக்காக நான் யுத்தஞ் செய்தாலும், உங்களுக்கு ஜயம் கிடைக்கவேண்டுமென்றே பிரார்த்திக்கிறேன். கிருஷ்ணனிருக்குமிடத்தில் தருமமிருக்கும்; தருமமிருக்குமிடத்தில் ஜயமிருக்கும். வேண்டிய வரத்தைக் கேள்" என்றார்.

தருமபுத்திரர் "ஒருவராலும் ஜயிக்கமுடியாத தங்களை ஜயித்தாலொழிய எனக்கு ஜயமேது? தங்களை ஜயிப்பதெப்படி" என்றார். துரோணர் "நான் யுத்தஞ்செய்யும் வரையில் உங்களுக்கு ஜயமில்லை. ஆகையால், நீங்கள் என்னைச் சீக்கிரம் கொன்றுவிடவேண்டும்" என்றார். யுதிஷ்டிரர் "தங்களுக்கு மரணம் நேரும் விதத்தைச் சொல்லவேண்டும்" என, ஆசாரியர் "நான் யுத்தஞ் செய்யும் வரையில் என்னைக் கொல்லக்கூடியவன் ஒருவனுமில்லை. எனக்கு மிகுந்த வருத்தத்தை கொடுக்கக்கூடிய சமாசாரத்தைக் கேட்டால், நான் ஆயுதங்களை வைத்துவிட்டு, யுத்தஞ் செய்வதை நிறுத்துவேன். அந்த வேளையில் என் பிரஞ்ஞையை வெளிவிஷயங்களிலிருந்து இழுத்து, இந்தத் தேகத்தை விட நிச்சயித்து, நான் தியானித்தி லிருக்கும்பொழுது, உங்களுக்குள் மகாவீரனும் என் பிரியமான சிஷ்யனுமான அர்ஜுனன் என்னைக் கொல்லும் பாணத்தை விடட்டும்" என்றார்.

### கிருபர் உத்தரவு கொடுத்தது

அவரை வணங்கி விடைபெற்றுக் கொண்டு யுதிஷ்டிரர் கிருபாசார்யரிடத்திற்குச் சென்று வணங்கி "ஆசாரியரே! தங்களுடன் இன்று யுத்தஞ்செய்வதற்கு எனக்கு அனுமதிகொடுங்கள். அதனால் எனக்கு யாதொரு பாபமும் நேரக்கூடாது. நான் சத்துருக்களை ஜயிக்கும்படி ஆசீர்வதியுங்கள்" என்றார். கிருபாசாரியர் "குழந்தாய்! பெரியோர்களின் ஒழுக்கத்தின்படி நீ இப்படி வந்து என்னை வணங்காவிட்டால், உன் அபஜயத்தை நீயே தேடிக்கொண்டதற்காக உன்னைச் சபிப்பேன். இப்பொழுது உன்னால் பூஜிக்கப்பட்டுத் திருப்தியடைந்து, என்னுடன் யுத்தஞ் செய்ய உனக்கு அனுமதி கொடுத்தேன். கௌரவரிடத்தில் நான் வேலைக்கமர்ந்து, அவருடைய அன்னத்தால் இந்த தேகத்தை வளர்த்ததால் தருமபாசத்தால் கட்டுப்பட்டு, அவர்களுக்காக யுத்தஞ் செய்யப்போகிறேன். நீ என்னைக் கேட்க விரும்பும் வரத்தை அறிவேன். ஆயினும், நான் சிரஜீவி. எனக்கு மரணமில்லை. அதனாலென்ன? உனக்கே ஜயம் கிடைக்கும்" என்றார்.

### சல்லியன் அனுமதிகொடுத்தது

பிறகு யுதிஷ்டிரர் சல்லியனிடத்திற்குச் சென்று, அவரைச்சுற்றி வலம்வந்து வணங்கி "இன்று தங்களுடன் யுத்தஞ் செய்யும்படி எனக்கு உத்தரவளித்து அதனால் என்னைப் பாபம் அணுகாதபடி வரமளிக்கவேண்டும். மேலும், எனக்கு ஜயம் கிடைக்கும்படி ஆசீர்வதிக்கவேண்டும்" என்றார். சல்லியன் "குழந்தாய்! க்ஷத்திரிய தருமத்தை அனுசரித்து நீ இப்படி மூத்தோரை வணங்கி, யுத்தஞ்செய்ய உத்தரவுகேட்காமலிருந்தால், உனக்கு மகாபாபமும் என் சாபமும் அபஜயமும் நேரும். என்னை நீ விதிப்படி பூசித்ததால் திருப்தியடைந்தேன், என்னுடன் யுத்தஞ்செய். உனக்கு ஜயம் கிடைக்கட்டும். ஒரு தடவையாவது கௌரவருடைய அன்னத்தைப் புசித்ததால் அவர்களுக்குக் கட்டுப்பட்டு, வரங்கொடுத்து, இப்பொழுது உங்களுக்கு விரோதமாயும், அவருக்குச் சாதகமாயும் யுத்தஞ் செய்யவேண்டியதாயிருக்கிறது. அதைத்தவிர வேறு எந்த வரத்தையும் கேட்கலாம்" என்றார். யுதிஷ்டிரர், "தங்களுடைய வார்த்தைப்படி கௌரவர்களுக்கே யுத்தஞ் செய்யுங்கள். ஆனால் ஒவ்வொருநாளும் எங்களையும் மனதில் நினைத்துக்கொண்டு, எங்களுக்கு வேண்டிய ஒத்தாசை செய்யவேண்டுமென்று கேட்டுக்கொள்ளுகிறேன். மேலும், கர்ணனைப்பற்றி நான் முன்பு செய்துகொண்ட விண்ணப்பத்தை மறக்கக்கூடாது" என்றார். சல்லியன் "அப்படியே செய்கிறேன். உனக்கே ஜயம் கிடைக்கும்" என ஆசீர்வதித்து விடைகொடுத்தனுப்பினான்.

### தருமயுத்தம்

நமது முன்னோர்கள் செய்துவந்த தரும யுத்தம் இன்னதென்று இதனால் நாம் நன்றாய் அறியலாம். தனக்கு எந்தக் கெடுதி நேர்ந்தாலும், தான் செய்த பிரதிக்ஞையைத் தவறக் கூடாதென்றும், பிரியமான பந்துவாயிருந்தாலும், குருசிஷ்யர்களா யிருந்தாலும், அதைக் கவனிக்காமல் தங்களுடைய கடமையைச் செலுத்துவதற்காக வஞ்சனையில்லாமல் இயன்றவரையில் ஒருவரோடொருவர் யுத்தஞ்செய்யவேண்டுமென்றும், தன் உயிரைப்போக்கக் கூடிய உபாயத்தைப் பகைவன் கேட்டாலும், உண்மையையே சொல்லவேண்டுமென்றும்

சேலைமேற் சேலைகட்டித் தேவரம்பையாடினாலும், ஓலைமூத்தாணி ஊன்றும் பெண் ஆகாது.



சேற்றிலே புதைந்த யானையைக் காகமும் குத்தும்.

பெரியோருடன் யுத்தஞ்செய்வதற்கு முன், அவர்களை வணங்கி, அனுமதிபெற்று, ஆசீர்வதிக்கப்படவேண்டுமென்றும், ஒரு பிரபுவிடத்தில் வேலைக் கமர்ந்திருப்பவர்கள் எப்பொழுதும் அவனுக்கு இதத்தையே சொல்லவேண்டுமென்றும், அதை அவன் கேட்காவிட்டாலும் அதனால் கோபங்கொண்டாலும், அதைவிட்டு நியாயமாய் நடக்கும் அவனுடைய சத்துருவுடன் சேராமல், அவனுக்காகவே வஞ்சனையில்லாமல் இயன்றவரையில் யுத்தஞ் செய்துவந்து, உடலையும் உயிரையும் தத்தம் செய்யவேண்டுமென்றும் இதனால் விளங்குகிறது. தற்காலத்தில் வழங்கும் யுத்தநீதிக்கும் இதற்கும் எவ்வளவு பேத மிருக்கிறதென்றும்,அதற்குத் தகுந்தபடியே வெற்றியும் தோல்வியும் க்ஷேமமும் கெடுதியும் நேருகிறதென்றும் சற்று யோசித்தால் விளங்கும்.

### பீஷ்மரைக் கொல்வதெப்படி?

பீஷ்மாசாரியர் கௌரவசைன்னியத்திற்குத் தலைவராய் அபிஷேகஞ் செய்யப்பட்டுக் கடும் போர் புரிந்து, பாண்டவர் படையைத் தன் பாணங்களுக்குஇரையாக்கிக்கொண்டிருந்தார். "இப்படியானால் நாம் இருந்தவிடம் தெரியாமல் அழிவோம்" என்று பாண்டவர்கள் கவலைகொண்டு, கிருஷ்ணனிடம் முறையிட, கண்ணன், "என்னை என்ன செய்யச் சொல்லுகிறீர்? நிகரற்ற வீரர்களான பீமார்ஜுனர்கள் பீஷ்மருக் கெதிரில் நிற்கமுடியவில்லை. அவரைக் கொல்லக்கூடியவன் நான் ஒருவனே. ஆனால், நானோ இந்த யுத்தத்தில் ஆயுதமெடுப்பதில்லையெனத் துரியோதனனுக்கு பிரதிக்கினை செய்துகொடுத்திருக்கிறேன். உனக் கிஷ்டமிருந்தால் அதையும் மீறி, பீஷ்மரைக் கொன்று அந்தப் பெரும் பாபத்தையும் ஏற்றுக்கொள்ளுகிறேன். 'கங்காபுத்திரனை நானே கொல்வேன்' என்று உபப்பிலாவ்ய நகரத்தில் அர்ஜுனன் செய்த பிரதிக்கினை பொய்யாகுமென்று கவலைப்படுகிறேன். அவன் அனுமதி கொடுத்தால் பீஷ்மரைக் கொல்வேன். ஆனால் நன்றாய் யோசித்துப்பார்த்தால், அர்ஜுனனுக்கு அது அசாத்தியமானகாரியமல்ல. மேலும், பீஷ்மர் உங்களிடத்தில் மிகுந்த அன்புகூறி, உங்களுடைய க்ஷேமத்தையும் ஜயத்தையும் விரும்பி, எவ்வித ஒத்தாசையையும் செய்யத் தயாராயிருக்கிறார். யுத்தம் ஆரம்பிக்குமுன் இதைப்பற்றி உன்னிடத்தில் என்ன சொன்னார்" என்று யுதிஷ்டிரரைக் கேட்டார்.

தருமபுத்திரர் "கிருஷ்ணா! அர்ஜுனனுடைய பிரதிக்கினையும் வீணாகக்கூடாது. உமது பிரதிக்கினையும் பொய்யாகக்கூடாது. நான் பீஷ்மாசாரியரிடத்தில் உத்தரவு பெற்றுக்கொள்ளப் போனபொழுது அவர், 'குழந்தாய்! நான் உங்களுக்காக யுத்தஞ் செய்யமுடியாவிட்டாலும் உங்களுடைய க்ஷேமத்தையும் ஜயத்தையும் மிகவும் கோருகிறேன். அதற்காக உங்களுக்கு எவ்விதமான சகாயத்தையும் செய்வேன்' என்றிருக்கிறார். ஆகையால், நாமெல்லோரும் அவரிடத்திற்குப் போய், நமக்கு ஜயமுண்டாகும்படி ஏதாவது உபாயத்தைச் சொல்லவேணுமென்று கேட்போம். அவர் யுத்தத்திலிருந்து ஒழிவதற்கு நாம் என்ன செய்யவேண்டுமென்பதை அவரே சொல்வார். ஐயோ! இதென்ன அநியாயம்! எங்களுக்குத் தகப்பன் இறந்தபொழுது,தாயும் தகப்பனும் ஆசாரியனும் நண்பனுமாய், எங்களை எடுத்து வளர்த்த இந்தக் குருகுலக் கிழவரை நான் கொல்ல விரும்பி கையாலாகாமல், அதற்கு அவரையே உபாயம் கேட்கும்படி யாயிற்று. சீ, சீ, இந்த க்ஷத்திரிய தருமத்தைச் சுடவேண்டும்" என்றார்.

அப்படியே பாண்டவர்களும் கிருஷ்ணனும் பீஷ்மருடைய கூடாரத்திற்குப் போனார்கள். அப்பொழுது அவர், கவசத்தையும் ஆயுதங்களையும் வைத்துவிட்டு இளைப்பாறிக்கொண்டிருந்தார். பாண்டவர்களை வரவேற்று, அவர்களால் வணங்கப் பெற்று, அவர்களுக்கும் கிருஷ்ணனுக்கும் தகுந்த உபசாரம் செய்து, "தருமா! உங்களுக்கு நான் செய்யும் உபகாரம் ஏதாவதுண்டோ" என்றார்.

யுதிஷ்டிரர் "இந்த யுத்தத்தில் சைன்னியங்கள் கோடி கோடியாய் அழிந்துகொண்டிருக்கின்றன. தாங்கள் கௌரவர்களுக்காக யுத்தஞ்செய்யும் வரையில் எங்களுக்கு ஜயமேது? ராஜ்யமேது? நாங்கள் இந்த மகாயுத்தமென்ற சமுத்திரத்தைத் தாண்டிக் கரையேறுவது எப்படி?" எனப் பணிவுடன் கேட்டார்.

ஆரியமத உபாக்யானம்.—நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட சிறந்த நீதிக்கதைகள் அநேகம் கொண்டது. அழகிய படங்களுடன் முதற் பாகம் அணா 8, இரண்டாம் பாகம் அணா **10.**





# உலக விசித்திரங்கள்

## WONDERS OF THE WORLD

[ஸ்ரீமான் ந. சுப்பிரமணியம், பி. ஏ.]

"எப்பொருள் எத்தன்மைத்தாயினும் அப்பொருள் மெய்ப்பொருள் காண்பதறிவு" —திருக்குறள்.

### 1. பூமியின் உற்பத்தி

இந்திரியங்களுக்குப் பொருளாகும் பதார்த்தங்களனைத்தும் ஆதியும் அந்தமும் உடையனவென்பது நமது கொள்கை. ஆகையால் நாம் வசிக்கும் இப்பூகோளமும், சூரியமண்டலமும், கிரகங்களும், நக்ஷத்திரங்களும் ஒருகாலத்தில் உண்டாயிருக்கவேண்டுமென்பதும் ஒவ்வொன்றும் மற்றோர் காலத்தில் அழிவடையத்தக்கதென்பதும் சுலபமாய் ஊகிக்கத்தக்கது. எனினும், இப்பூமியே இல்லாமலிருந்த காலம் ஒன்றுண்டோ? சூரிய, சந்திர, நக்ஷத்திர மண்டலங்கள் ஒருகாலத்தில் உற்பத்தியானவைதானோ? அழிவுடையவைதானோ? என்றென்றும் சாசுவதமாயுள்ளவையன்றோ? என்று சாமான்ய ஜனங்கள் சங்கிக்கலாம். இவையனைத்தும் ஓர்காலத்தில் தோன்றியவைதானென்பதற்குத் தகுந்த முகாந்தரங்கள் உண்டென்று பௌதிக சாஸ்திரிகள் கூறுகின்றனர்.

சூரியனிடமிருந்து நமக்கு வரும் ஜோதிக் கிரணங்களை ஸபெக்ட்ராஸ்கோப் என்னுங் கருவியால் பரிசோதிக்குங்கால்,பூமியில்காணப்படும் உலோகங்களும் இதரப்பொருள்களும் அங்கும் உள்ளதாக வெளியாகின்றது. தவிரவும் பூமியைப்போன்று சூரியனைச் சுற்றிவரும் இதர கிரகங்களிலும் இதே பொருள்கள் உள்ளனவென்றுந் தெரியவருகின்றது. இவையனைத்தும் இவ்வாறு ஒரேமாதிரியான பொருட்களால் ஆக்கப்பட்டிருப்பின், முதன்முதலில் ஒன்றாயிருந்திருக்கலாமென்றும், பின்பு காரணாந்தரங்களால் பிரிந்து போயிருக்கக் கூடுமென்றும் ஊகிப்பது தவறாகாது. பல்லாயிரம் வருஷங்களுக்குமுன், பூமியும் ஏனைய கிரகங்களும் சூரியனுடன் ஒன்றாயிருந்திருக்க வேண்டும். அப்பொழுது சூரியன் இப்பொழுதிருப்பதைவிட மிக்க அதிக உஷ்ணமுள்ளதாயும் உருண்டை வடிவமும் அடையாமல் ஆவிரூபமாய்ச் சுழன்றும் நின்றிருக்கவேண்டும்.

தூரதிருஷ்டிக் கண்ணாடியால் ஆகாய வெளியைப் பரிசோதிக்குங்கால், இப்பேர்க்கொத்த ஆவிக்கூட்டங்கள் எண்ணிறந்தவை,பலகோடி மைல்களுக்கப்பால் காணப்படுகின்றன. இவைகளுக்கு நேபுலா எனப் பெயர். இவைகள் நாளாவட்டத்தில் குளிர்ந்து இறுகி, பல சூரிய மண்டலங்களுக்கு உற்பத்திஸ்தானமாகும். நமது சூரியனும் கிரகங்களும் இவ்வாறே ஓர் 'நெபுலா' வினின்று உண்டாயிருக்குமென்று நினைக்க வேண்டியதாயிருக்கிறது. வெளியில் அலைந்துதிரியும் சூரியர்கள் மோதிக்கொள்ள நேர்ந்தால் அது காரணமாயுண்டாகும் உஷ்ணத்தால் ஆவிரூபமாய் மாறி 'நெபுலா' உண்டாகின்றதென்பது சிலர் கொள்கை.

முதன்முதலில் இப்பூமி, காய்ந்தெரியும் கற்குழம்பாயும், பின் சூரியனைச் சுற்றுவதாலும் குளிர்ச்சியால் இறுகுவதாலும் உருண்டை வடிவம் பெற்றும் இருக்கவேண்டும். உற்பத்தி காலத்திற்குப் பல்லாயிரம் வருஷங்களுக்குப் பின்னரே இதன் வடிவம் ஓர் நிலையையடைந்திருக்கும். சூரியனைவிட்டுப் பிரிந்தபின் வெகுகாலம்வரை அதைவிட்டு விலகிச் செல்வதில் கழிந்திருக்கும். சூரியனுக் கருகாமையிலிருந்தபொழுது மிக்க உக்கிரமான எரிமலைகள் எங்கும் நிரம்பியதாயும், இடைவிடாத பூகம்பங்கள் உடையதாயும் அவைகளின் அதிர்ச்சியால் சின்னாபின்னப்படுத்தப்பட்டு மிருக்கும். இந்த ஸ்திதியிலிருந்தபொழுதுதான் சந்திரனும் பூமியினின்று உற்பத்தியாயிருக்க வேண்டுமென்று ஊகிக்கின்றனர். ஓர் காலத்தில் சூரியனுடைய ஆகருஷண சக்தி வேகத்தால் பூகோளம் வெடித்து அதினின்று ஓர் பாகம் பிரித்திழுக்கப்பட்டிருக்குமென்றும், சுழன்றுகொண்டிருந்த பூமியினின்று கிளம்பியதால் இது பூமியைச்சுற்றிச் செல்ல ஆரம்பித்ததென்றும் கூறப்படும். இதுவே நமக்கு இரவில் குளிர்ந்த நிலாவைக் கொடுக்கும் சந்திரன். கிரகங்கள் சூரியனிடமிருந்து உண்டானதுபோலவே சந்திரனும் பூமியினிடமிருந்து உண்டாகி பூப்பிரதக்ஷிணம் செய்து வருகின்றது. இவ்வாறு ஓர் பாகம் பெயர்ந்து போனதால் பூமியிலுண்டான பள்ளமே பின் மகா சமுத்திரங்களுக்கு ஸ்தானமாயிற்றென்பது சிலர் கருத்து.

பூகம்பங்களாலும், எரிமலைகளாலும், குளிர் வெப்பத்தாலும், இன்னும் பல.காரணங்களா

லும் நாளாவட்டத்தில் பூமியின் மேல்பாகம் மேடுபள்ளங்கள் நிறைந்ததாயிற்று. பூமியைச் சூழ்ந்துநின்ற நீராவி குளிர்ந்தபொழுது ஜலரூபமாய்ப் பள்ளத்தாக்குகளில் நிறைந்து சமுத்திரங்களுக்குக் காரணமாயிற்று. மேடுகள் மலைகளாயின. முதலில் உண்டான மேடு பள்ளங்கள் ஸ்திரமாயிருக்கவில்லை. அடிக்கடி சமுத்திரங்களில் மலைகளும் இதர பூபாகங்களும் மூழ்குவதும், வேறு சிலவிடங்களில் பூபாகங்கள் சமுத்திர மட்டத்துக்குமேல் கிளம்புவதுமாயிருந்தது.

இதையெல்லாம் ஆலோசிக்குங்கால், பூமி இப்பேர்க்கொத்த நிலையில் எவ்வளவு காலத்துக்கு முன்னிருந்ததென்பதையறிய ஹேதுவில்லையோ வென்றையமுண்டாகின்றது. பூமியின் வயதை நிர்ணயிக்கப் பல வித்வான்கள் முயன்றிருக்கின்றனர். முதன்முதலில் பூமியின் அமைப்பை ஆராய்ந்த சிலர், பூமியின் மேல் ஓடு, ஒன்றின்மேலொன்றாய் வெவ்வேறு குணபேதங்களுள்ளதாயிருக்கும் பல அடுக்குகளா யமைக்கப்பட்டிருக்கிறதென் றுணர்ந்து, ஒவ்வொரு அடுக்கும் உள்ளபடி அமையப் பல கோடி வருஷங்க ளாயிருக்க வேண்டுமென்று கூற அவைகளிலேயே தகுந்த சாக்ஷியங்கள் காணப்படுகின்றனவென்றும் கூறினார்கள். இதற்குமுன் பூமியின் வயது கோடிக்கணக்கான வருஷங்களாயிருக்குமென்று மேனாட்டார் உணரவில்லையென்று தோன்றுகின்றது. இதன்பின்னர் இதரவிதங்களாலும் இதனுண்மையைப் பரிசோதிக்கப் பலர் யத்தனித்தனர்.

கேல்வின் பிரபு என்னும் ஓர் கணித சாஸ்திரி சூரியனைப்போன்ற உஷ்ணதசையிலிருந்து பூமி இப்பொழுதுள்ள குளிர்ச்சியையடைய எவ்வளவு காலம் சென்றிருக்கவேண்டுமென்பதைப் பௌதிகசாஸ்திர முறைப்படி கணக்கிட்டு, இரண்டு கோடி வருஷமென மதித்தார். பூகோளசாஸ்திரிகள் இது மிகவும் குறைவான மதிப்பென்று வாதாடுகின்றனர். மற்றொரு வித்துவான் சமுத்திரஜலம் நீராவி குளிர்ந்துண்டானதுபற்றி, முதன் முதலில் உப்பற்றதென்றும், பின் நாளடைவில் மலைகளினின்றும் ஆறுகளால் கொண்டுவரப்பட் டிருக்குமென்றும், இவ்வாறே தற்காலத்திலும் சமுத்திரஜலம் அதிக உப்பாய் வருவதாயும் ஊகித்தார். இப்பொழுது சமுத்திரத்தில் நூற்றில் மூன்று பங்கு உப்பு இருக்கின்றது. வருஷந்தோறும் உலகத்திலுள்ள ஆறுகளெல்லாம் சுமார் 16 கோடி டன் நிறையுள்ள உப்பை சமுத்திரங் கொண்டு போய்ச் சேர்க்குமென்று இவர் மதிப்பிட்டார். சமுத்திரத்திலுள்ளதைக் கணக்கிட்டால் இதைப்போல் 9 கோடி மடங்காவது இருக்குமென்பது வெளியாகிறது. ஆகையால் பூமியின் வயது 9 கோடி வருஷமென்று இவர் மதித்தார். இன்னொரு விதமாயும் பூமியின் வயது கணக்கிடப்படும். சந்திரன் பூமியிலிருந்து உற்பத்தியான காலத்தில் வெகுவேகமாய், பூமியுடனேயே கூடச் செல்ல முயன்றிருக்கும். முதன் முதலில் பூமியைப் தினமொரு முறை சுழன்று, பௌர்ணமியும், அமாவாசையும் தினந்தோறும் பன்னிரண்டு மணிக்கொரு முறை மாறி மாறி வந்திருக்கும். பின்பு சக்தி குறைந்து பூமியுடன் ஓடமுடியாமல் பூமியை விட்டகன்றும் சென்றது. கடைசியில் 2,50,000 மைலுக்கப்பால் சென்று 29 நாளுக்கொருமுறை பூப்ரதக்ஷிணம் செய்தது. மறுபடியும் பூமியை நெருங்கிவருகிறது. இப்பொழுது 2,40,000 மைல் தூரத்தினின்று 27 நாட்களுக்கொரு முறை சுற்றுகிறது. இம்மாதிரியான சந்திரகதியைக் கவனித்த வானசாஸ்திரிகள் பூமியின் வயது $5\frac{1}{2}$ கோடி வருஷமென நிர்ணயிக்கின்றனர்.

பூமி உற்பத்தியாகிக் கோடிக்கணக்கான வருஷங்களாகியும் அதைப்பற்றியும் அதன் ஜனங்களைப்பற்றியும் தேசசரித்திரங்கள் கூறுவதெல்லாம் கடைசி மூன்று அல்லது நாலாயிரம் வருஷங்களைப்பற்றியதே. அதற்கு முன்னர், மனிதர்களும், மிருகங்களும், இதர ஜீவகோடிகளும் பூமியில் தோன்றி எவ்வளவு காலமாயிற்றென்பதையும், அக்காலத்தில் ஜீவராசிகளின் வாழ்க்கை எத்தன்மையதென்பதையும் அறிய, மனம் மிக்க அவாவுறுகின்றது.

இயற்கை அற்புதங்கள்.—மழைக்கால்கள், எரிமலைகள், பூகம்பம், வென்னீர் ஊற்றுகள், வால் நக்ஷத்திரங்கள், வானவில், எரி நக்ஷத்திரங்கள் முதலியவைகளைப்பற்றிய விவரங்கள் இதில் தெளிவாய் எழுதப்பட்டிருக்கின்றன. காலஞ்சென்ற ஸ்கூல் இன்ஸ்பெக்டர் எல். வி. வில்லியம்ஸ் பிள்ளை அவர்களின் சிறந்த முகவுரையுடன் கூடியது. அநேகம் சித்திரப் படங்களும் கொண்டது. துரைத்தனத்தார் அங்கீகரித்தது யாவரும் வாசிக்கவேண்டுவது. அணா **10.**





## தமிழ் நாட்டில் பிரதேசச் சுய ஆட்சி

## LOCAL SELF-GOVERNMENT IN THE TAMIL COUNTRY

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம் எம். ஏ.]

தற்காலத்தில் பிரதேசச் சுயஆட்சியை அபிவிருத்தி செய்யவேண்டுமென இராஜாங்கத்தார் முயற்சி செய்துவருவது யாவரும் அறிந்த விஷயம். கிராமங்களில் பஞ்சாயத்துகளை ஏற்படுத்திக் கிராமக் காரியங்களை அவர்களைக் கொண்டு நடத்திக்கொள்ளுவது நன்மையாகவிருக்குமென இராஜாங்கத்தார் அபிப்பிராயங்கொண்டு பல நவீன ஏற்பாடுகள் செய்து வருகிறார்களே யாயினும், ஜனங்கள் அதில் துறையெடுத்து ஒற்றுழைக்காமலிருக்கிறார்கள். தென்னிந்தியாவில் பல கிராமங்களில் பஞ்சாயத்தென்று ஒரு கூட்டம் பேருக்கு இருக்கிறதேயாயினும், அவர்கள் கிராமக்காரியங்கள் ஒன்றையும் விசேஷ கவனத்துடன் நடத்துவதில்லை. அது மாத்திரமன்று. கிராமப் பஞ்சாயத்து நடத்தக்கூடிய கிராமக்காரியங்கள் இன்னவென்றே பலருக்குத் தெரியவில்லை. இதற்குக் காரணமென்ன ? இந்தியர்களுக்கு ஆளுந்திறமை குறைவோ? அவ்வாறு எண்ணுவதற்கிடமில்லை. ஏனெனில், ஆயிரம் வருஷங்களுக்கு முன்னமேயே தென்னிந்தியாவில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சிறு குடியரசுதரணியாக விருந்ததென்றும், தன்னுடைய காரியங்களனைத்தையும் தானே முற்றிலும் நடத்திக்கொண்டதென்றும் பல படிப்பாளிகள் ஆராய்ச்சிசெய்தறிந்து உலகத்தாருக்குத் தெளிவாய் உரைத்திருக்கிறார்கள். அவ்வாறிருக்க, ஏன் இராஜாங்கத்தார் இப்போது செய்துவரும் முயற்சிகள் பயன்படாமலிருக்கின்றன ? ஆராயுமிடத்து அதற்குப் பல காரணங்களுள என்பது வெளியாகும். முக்கியமானதென்னவெனில், பஞ்சாயத்துக்கு இராஜாங்கத்தார் கொடுப்பதாகச் சொல்லும் தொழில்களும் அதிகாரங்களும் ஒரு பொதுஜன சபையை ஆவலுடன் வேலை செய்யத் தூண்டப் போதாதவைகளா யிருக்கின்றன. இவ்விஷயம் பூர்வம் தென்னிந்தியாவில் கிராமங்களிலிருந்த சபைகளின் தொழில்களையும் அதிகாரங்களையும் சிலாசாசனங்களையும் பழைய நூல்களையும் ஆராய்ந்து பார்த்துத் தெரிந்துகொண்டு, அவைகளை இப்போது இராஜாங்கத்தார் அளிப்பதாக வுரைக்கும் தொழில்களுடனும் அதிகாரங்களுடனும் ஒப்பிட்டுப்பார்த்தால் நன்கு விளங்கும். தென்னிந்தியாவில் தமிழ் நாடுகளில் ஆயிரம் வருஷங்களுக்கு முன் முதல், கிராமங்கள் எவ்வளவு திறமையுடன் தங்கள் காரியங்களனைத்தையும் இராஜாங்கத்தாரது உதவியை அடிக்கடி விசேஷமாய்த் தேடாமலே தங்கள் சபைகளைக் கொண்டு நடத்திவந்தன வென்பதைத் தெரிந்தமட்டில் சாக்ஷியங்களுடன் சுருக்கமாய்ச் சொல்லுவோம்.

மேலே சொன்னதுபோல் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு சிறு குடியரசுதரணியாக விருந்தது. சாதாரணமாக, அரசன் கிராமக் காரியங்களிற் பிரவேசிப்பதே கிடையாது. ஒவ்வொரு கிராமத்தாரும் தங்களைத் தாங்களே ஆண்டுவந்தனர். வேற்றரசர் படையெடுத்து வராமல் தடுப்பதும், நாட்டுக்குள் திருடர் முதலியோரால் கலகம் நேரிடாமல் தடுப்பதுமே இராஜாங்கத்தாருடைய முக்கிய தொழில்களாயிருந்தன. அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறையைப்பற்றி அரசனுக்கும் கிராமச்சபைக்கும் சம்பந்தமுண்டே யொழிய, அரசனுக்கும் கிராமத்திலுள்ள தனித்தனி குடித்தனக்காரர்களுக்கும் யாதொரு சம்பந்தமுமில்லை. கிராமத்தார்களாவது கிராமச் சபையார்களாவது கிராமக் காரியங்களிற் பிரவேசித்து சீர்திருத்தங்கள் செய்யும்படி அரசனை வேண்டிக்கொண்டாலல்லது அரசன் அக்காரியங்களிற் பிரவேசிப்பதில்லை. ஆயின், கிராமச்சபையில் ஏற்படுத்தப்படும் சட்டதிட்டங்களுக்குக் கட்டுப்படாத கிராமக்குடிகளைத் தண்டிக்க அரசன் எப்போதும் ஆயத்தமாயிருந்தான்.

ஓர் நாட்டில் வேற்றரசன் படையெடுத்து வந்து அந்நாட்டரசனை முறியடித்தோட்டிவிட்டு அந்நாட்டைக் கைப்பற்றிக் கொண்டபோதும், அந்நாட்டுக் கிராமங்களின் உள் ஆட்சியில் சிறிதும் மாறுபாடு ஏற்படவேயில்லை. அவ்வாறு நாட்டைக் கைப்பற்றிக் கொண்ட வேற்றரசன் தன்னுடைய உத்தியோகஸ்தர்களை நாடெங்கும் அனுப்பி, கிராமங்களின் சபையார்களோடு அக்கிராமங்கள் தனக்குச் செலுத்தவேண்டிய இறை

இவ்வளவென்று ஏற்பாடு செய்துகொண்டானே யொழிய, கிராமங்களின் உள் ஆட்சியிற் சிறிதேனும் தானாகத் தலையிட்டுக் கொள்ளவேயில்லை. இதனால்தான் சோழ பாண்டியரது உக்கிரமான போர்களினால் சிறிதும் குன்றாது கிராமங்களும் அவைகளாலாய தமிழ்நாடும் கல்வியிற் சிறந்து, செல்வத்திற் பெருகி, நாகரிகத்திற் செழித்து, மேன்மேலும் அபிவிருத்தி யடைந்து வந்தன.

ஒரு கிராமத்திலுள்ள நிலங்களெல்லாம் அக்கிராமத்துக்குப் பொதுவில் பாத்தியப்பட்டனவாகக் கருதப்பட்டனவென்று எண்ண வேண்டியிருக்கிறது. ஏனெனில், கிராமத்திலுள்ள நிலங்களுக்கெல்லாம் அரசனுக்கு இறை செலுத்தியவர் கிராமச்சபையார்; இன்னின்ன நிலத்துக்கு இவ்வளவிவ்வளவு இறை வரி செலுத்தவேண்டுமென நிச்சயித்தவர்களும் அவர்கள்தாம்; புதிதாகக் காடுவெட்டித் திருத்தின நிலங்களை விற்கும் சுவாதீனத்துடன் அனுபவித்ததும் அவர்கள்தாம். அன்றியும், கிராம நிலங்களிலொன்றை அனுபவித்துவரும் ஒரு கிராமக்குடி அடுத்தடுத்து இரண்டு வருஷம் கிராமச் சபையாரால் அந்நிலத்துக்கு விதிக்கப்பட்ட இறை வரியைச் செலுத்தத் தவறுவானேயாகில், அந்நிலத்தைப் பறிமுதல்செய்து விற்றுவிட கிராமச் சபையாருக்கு அதிகாரமிருந்தது. கிராமங்களில் தரிசாகக் கிடந்த பூமிகளை வெட்டித் திருத்திச் சாகுபடிசெய்து அனுபவிக்க கிராமக் குடிகளுக்கு அனுமதி கொடுத்து, அதற்கு இறை ஏற்படுத்தி வசூலிக்கவும் அச்சபையாருக்கு அதிகாரமிருந்தது.

ஆகையினால், ஒரு நிலத்தை அனுபவித்து வந்த ஒரு கிராமக்குடியினிடமிருந்து அந்நிலத்தைச் சாதாரணமாகப் பிடுங்கிக்கொள்வதற்கு கிராமத்துக்கு அதிகாரமில்லையே யாயினும், கடைசி முடிவில் கிராம நிலங்களுக்கெல்லாம் சொந்தக்காரன் கிராமமேயெனக் கொள்ளவேண்டியதாக விருக்கிறது.

மேற்கூறிய விஷயங்களுக்குச் சாக்ஷியமாக சில சிலா சாசனங்களின் சிற்சில பாகங்களை எடுத்தெழுதுவோம். [கீழே கண்ட சிலாசாசனங்கள் செங்கற்பட்டு ஜில்லாவில் உக்கல் என்னும் கிராமத்திலுள்ள விஷ்ணுகோவிலிலிருக்கின்றன.]

1. "* * * ஸ்ரீ விக்ரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் எம்மூர்ப் புவனிமாணிக்க விஷ்ணுக்ருஹத்து முகமண்டபத்தே கூடியிருந்து * * * எம்மூர்க்குடிகள் எம்மூர்ப்படாகை வட்டத்து குடிப்போலை மொற்பட்ட நிலங்களும் (அதாவது, தானசாசனங்களி லடங்காத நிலங்களும்) மற்றுமெப்பேர்ப்பட்டனவும் ஸபை மத்யமம் (பொது) * * மத்யமமாய்க் கிடந்த நிலங்கள் குழிவரி யெற்றி இறை இறுப்போமென்ற குடிகளுக்கு விற்றுக் கொடுப்போமாகவும். இவ்விற்றுக்குடுத்த பூமிகள் எம்முதென்று எப்பேர்ப்பட்டாருங் குடிப்போலையும் ஆவணமுங் காட்டப் பெறுதாராகவும். இப்பரிசுகாட்டின குடிமக்களை * * * ஸபையோமே தண்டிப்போமாகவும். * * *

2. * * * யாண்டு பதினாறாவது முதல் இருபத்து மூன்றாவது வரையில் (அரசனுடைய அரசாட்சி வருஷங்கள்) ஈராண்டு நிரம்பி மூவாண்டு தந்தங்காணியான நிலங்களுக்கு அவ்வவ ஊர்களிலாரோடும் ஊரிடு வரிப்பாடு இறை இறாது போனார் காணி உடையாரைத் தவிர ஊர் நிலமாய் அவ்வவ ஊர்களிலாரே விற்றுக்கொள்ளப் பெறுவார்களாகவும். * * *"

கிராமச்சபையார் மேற்கூறியவாறு கிராம நிலங்களை விற்றது விசேஷமாக தர்மகைங்கரியஞ் செய்தவர்களுக்குத்தான். அவ்வாறு விற்றபோது சிலசமயங்களில் அந்நிலங்களுக்கு ஆண்டாண்டுதோறும் செலுத்தவேண்டிய இறைக்காக ஓர் மொத்தத் தொகையை சபையார் விற்கும்போதே பெற்றுக்கொண்டு அந்நிலங்களை இறையிலிநிலங்களாக்குவதுமுண்டு. அவ்வாறு தருமகைங்கரியங்களுக்காகப் பிறருக்கு விற்ற நிலங்களை சபையார் தாமே ஒப்புக்கொண்டு அத்தருமங்களை என்றென்றைக்கும் நடத்துவதாக ஒப்புக்கொள்வது வழக்கம். இவ்வழக்கங்களும் அக்காலத்தில் ஜனங்கள் எத்தகைய தருமங்களைச் செய்து வந்தனரென்பதும் பின்வரும் சிலாசாசனப் பாகங்களிலிருந்து நன்கு விளங்கும்.

1. "* * * உக்கலாகிய விக்கிரமாபரணச்சதுர்வேதிமங்கலத்து மகாஸபையோம் நிலவிலையாவணக் கையெழுத்து. * * * * அனவரதசுந்தர நல்லூர்க் கோமுழான் அரையன் பலதேவன் எம்மூர் ஏரிக்கு வைத்த ஓடம் இரண்டினுக்கும் போகமாக விற்றுக்கொடுத்த நிலமாவது





* * * நடுவுட்பட்ட நிலம்மேற்கு நின்று அடையப்பதினாறுசாண்கோலால் மூவாயிரங்குழியும் மேலைஏரிஎதிர்வாயிற் கழும்பருடையார் முன் ஓடத்துக்குக் கொண்டுவைத்த ஏத்தநீக்கி இதனுக்குக் கிழக்கு அஞ்சேத்தமும் விற்று விலையாவணஞ்செய்து கொடுத்தோம். * * * இந்நிலத்துக்கு விலைத்திரவியமும் இறைத்திரவியமும் அறக்கொண்டு இறையிலியாக விற்று விலையாவணஞ்செய்து கொடுத்தோம் மகாஸபையோம். * * *"

[ஏரியில் நீர்நிரம்பியிருக்குங்காலத்தில், ஏரியில் நீர்பாய்ந்ததாற் படிந்து ஏரியைத் துற்றிருக்கும் மணலை எடுத்து விடுவதற்காக படகுகள் வைக்கப்பட்டனவென்றும், அம்மணலைப் படகிலிருந்து சுலபமாய்க் கரையேற்றுவதற்காக ஏத்தங்கள் வைக்கப்பட்டனவென்றும் ஊகிக்க இடமுண்டு.]

2. "*** விக்கிரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து ஸபையோம் எழுத்து. * * * இவனே நந்தவனத்துக்கு ஸபையோம் பக்கல் விலைகொண்ட நிலம் * * * நிலத்துக்கு கிரயத் திரவியமும் இறைத்திரவியமும் அறக்கொண்டு இந்நந்தவனமும் நந்தவனபுறமும் சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் இறைஇலியாக இறைஇழிச்சி சிலாலேகை செய்து கொடுத்தோம் ஸபையோம். * * *"

கிராமச்சபையார் கிராமப் பொதுக் காரியங்களுக்காக பணம் கடன் வாங்கவும் அதற்குச் சந்த்ராதித்யருள்ளவரையில் வட்டி செலுத்த ஒப்புக்கொள்ளவும் அதிகாரமுடையவர்களாயிருந்தனரென்றும், அவ்வாறு அவர்கள் கடன் வாங்கியது விசேஷமாகக் கோவில்களுக்குப் பிறரால் வைக்கப்பட்ட தர்ம திரவியங்களிலிருந்தேயென்றும், அவ்வாறு வாங்கிய கடன் தொகைக்குச் சந்த்ராதித்யருள்ள வரையில் வட்டிமட்டும் செலுத்த வேணுமன்றி முதல் தொகையை ஒருபோதும் திருப்பிக்கொடுக்க வேண்டுவதில்லையென்றும், [illegible]" என்று நெல்லாகவும், வேறு சாமான்க[illegible]டனே, [illegible]ரொக்கமாகவும் செலுத்தத்தக்க[illegible]ும் பின்வரும் சிலாசாசனங்களால் தெரியவரும். [கீழேகண்ட சிலாசாசனங்கள் தஞ்சாவூர் ப்ருகதீச்வரசுவாமி கோவிலிலிருக்கின்றன.]

1. "** ஸ்ரீராஜேஸ்வரமுடையார் கோவிலில் * * * தக்ஷிணமேருவிடங்கருக்கும் ஆழ்வார் பராந்தகன் குந்தவையார் குடுத்த பொன் ஆடவல்லான் என்னும் குடிஞைக்கல்லால் நிறை எடுத்தும் * * * பொலிசையூட்டுக்கு (வட்டிக்கு விடுவதற்கு) வைத்தகாசு * * * [கோவிலில் தர்மகைங்கரியங்களுக்குப் பொன் வைப்பவர்களே அப்பொன்னை வட்டிக்குவிட்டு அவ்வட்டியைக்கொண்டு என்றென்றைக்கும் தர்ம கைங்கரியங்கள் நடத்தவேண்டுமென்ற தங்கள் அபிப்பிராயத்தை சாசனங்களிலேயே எழுதியிருக்கிறார்கள் என்பது கவனிக்கத்தக்கது.] * * * திருவிழா எழுந்தருளும்போது திருவமுதுக்குந் திருப்பள்ளித்தர்மத்துக்குந் திருவிளக்கெண்ணைக்கும் உள்ளிட்டு வேண்டும் அழிவுக்கும் பொலிசையூட்டுக்குவைத்தகாசில் நித்தவிநோதவள நாட்டு முடிச்சோழநாட்டு ப்ரும்மதேயம்ஜனநாதச்சதுர்வேதிமங்கலத்து ஸபையோர் யாண்டு இருபத்தெட்டாவது (அரசனது அரசாட்சிவருஷம்) பசான் (பிசானம்) முதல் காசு ஒன்றுக்கு ஆட்டைவட்டன் (ஆண்டுதோறும்) முக்குறுணி நெற்பொலிசை (வட்டி) யாகத் தஞ்சாவூர் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் பெரும்பண்டாரத்தே ஆடவல்லான் என்னும் மரக்காலால் சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் அளக்கக்கடவார்களாகக் கொண்ட காசு இருநூறினால் ஆட்டாண்டு தோறும் அளங்கக்கடவ நெல்லு ஐம்பதின்கலம். * * *

2. * * * ராஜேந்த்ரசிங்கவளநாட்டுத் தனியூர் ஸ்ரீபராந்தகச் சதுர்வேதிமங்கலத்து ஸபையோர் யாண்டு இருபத்தொன்பதாவது முதல் காசின்வாய்த் திங்கள் அரைக்கால் அக்கப் பொலிசையாக ஆட்டாண்டுதோறும் தஞ்சாவூர் ஸ்ரீராஜராஜீஸ்வரமுடையார் பண்டாரத்து சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் பொலிசை இடக்கடவார்களாகக் கொண்ட காசு நூற்றுஒருபத்திரண்டினால் ஆட்டாண்டுதோறும் இடக்கடவ காசு பதினாலு. * *" (பன்னிரண்டு அக்கம் கொண்டது ஒரு காசு).

அன்றியும், முன்னமே கூறியவாறு கிராமச் சபையார் அக்கிராமத்தில் நடக்கவேண்டிய தருமங்களுக்காக வைக்கப்பெறும் நிலங்களையும் திரவியத்தையும் பெற்றுக்கொண்டு, அந்நிலங்களின் வரும்படியைக் கொண்டும் அத்திரவியத்தின் விருத்தியாம்சத்தைக்கொண்டும்

அத்தருமங்களை சந்த்ராதித்யருள்ள வரையில் நடத்துவதாக ஒப்புக்கொண்டனரென்றும் பின்வரும் சிலாசாசனப் பாகங்களால் தெரிய வரும்.

I "* * * அபராஜிதச் சதுர்வேதி மங்கலத்து ஸபையோம் எழுத்து. இக்கோட்டத்துத் தன் கூற்று உத்தரமேருச் சதுர்வேதி மங்கல மீயாளுங் கணத்தாருட் சேதிறூர்த் திருவிக்ரம பட்டராகிய ப்ரும்மாதிராஜர் பக்கல் கொண்ட பொன் இருநூற்றுக் கழஞ்சு. இப்பொன்னின் வ்ருத்தியாலுமே எம்மூர்ப் புவநிமாணிக்க விஷ்ணுக்ருஹத்துப் பெருமானடிகள் உச்சம் போழ்துதிருவமிர்து செய்வதன் முன்னம் நிசதி பன்னிருவர் ப்ராம்மணர் வேதம்வல்லார் உண்பதாகவும். * * * இப்பரிசு ஒட்டி சிலா லேகை செய்து கொடுத்தோம் ஸபையோம் ஸ்வத்ஸ்ரீ." (இச்சிலாசனம் உக்கல் விஷ்ணு கோவிலி விருக்கிறது.)

II "ஸ்வஸ்திஸ்ரீ கம்பவர்ம்மற்கு யாண்டு பதினஞ்சாவது உட்கர் (உக்கல்) ஸபையோம் எழுத்து * * * சடையன்பக்கல் ஆயிரக்காடி நெல் கொண்டோம். இவ்வாயிரக்காடி நெல்லாலும் பலிசை (பொலிசை) அய்ந்நூற்றுக் காடி நெல் ஆட்டாண்டுதோறும் ஏரிக்கட்டி இகுத்துவிப்போமானோம் ஸபையோம் * * * ஸம்வத்ஸர வாரியப் பெருமாக்களே அட்டுவிக்கக்கடவார்." [இச்சிலாசாசனமும் உக்கல் விஷ்ணுகோவிலி லுள்ளது.]

II "ஸ்வஸ்திஸ்ரீவீரபாண்டியனைத் தலைகொண்ட கோப்பரகேசரி பந்மற்கு யாண்டு நாலாவதுகாலியூர்க்கோட்டத்து தன்கூற்றுச் சிவசூளாமணிமங்கலமாகிய ஸ்ரீவிக்ரமாபரணச் சதுர்வேதிமங்கலத்து இருந்து வாழும் வெள்ளாளன் சிக்காருடையான் புலியன்மகன்சேனை தனக்கு தர்ம்மார்த்தமாக இவ்வூர் ப்ரும்மஸ்தானத்தே ஆறுமாஸம் தண்ணீரட்டுவதாகவும் ஆறுமாஸம் அக்நிஷ்டைஇடுவதாகவும்.மண்டகத்து தொட்டி முன்னே வத்தம் எடுப்பதாகவும். இத்தர்ம்மத்துக்கு சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் நிற்க வைத்த பூமி வளையிலிறபட்டி நிலமும் அவ்வவ ஸம்வத்ஸரங்களில் க்ராமகாரியம் திருத்தும் பெருமக்கள் இத்தர்ம்மங் கடைக்காண்பதாகவும்." [இச்சிலாசாசனமும் உக்கல் விஷ்ணுகோவிலி லுள்ளது.]

[கீழேகண்ட சிலாசாசனங்கள் வடஆற்காடு ஜில்லாவில் பாலாற்றின் கரையிலுள்ள திருவல்லத்தில் பில்வநாதேஸ்வரர் கோவிலில் உள்ளன.]

III "* * * இரண விக்ரமச் சதுர்வேதிமங்கலத்து ஸபையோம் இக்கோட்டத்து மீயாறு நாட்டுத் தீக்காலிவல்லத்துத் திருத்தீக்காலிப் பெருமானடிகளுக்கு சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் ஒரு திருநுந்தாவிளக்கு எரிப்பதற்கு நிசதம் உழக்காழாக் கெண்ணெயட்டுவதற்கு * * * எட்டுக்கூர் மாதவக்ரமவித்தன் பக்கல் தன்ம கட்டளைத் துலை நிறை இருபத்தைந்து கழஞ்சு பொன்கொண்டு சந்த்ராதித்யர்(உள்ள) வரையில் எரிப்பதாக இத்தந்மம் முட்டாமல் செலுத்துவோமானோம் ஸபையோம். இத்தந்மம் முட்டில் தந்மாஸநத்திலே நிசதம் (தினம்) ஐங்கழஞ்சுபொன் பன்மாஹேஸ்வரரோ(சபையோர்) மன்றப்பெறுவ தாகவும் (அபராதம் செலுத்தக்கடவாராகவும்)" * * * *

IV * * * மகாபலி குலோத்தவவாண விஜாதரவாணராயர் மாதேவியார் தென்றளி தீக்காலிப் பெருமானடிகளுக்கு நந்தாவிளக்குக்கு திருவல்லத்து ஸபையோர்க்குக் குடுத்தது செம்பொன் இருபதின் கழஞ்சு. இதன் பொலிசையூட்டு நிசதி உரி நெய் அட்டுவோமானோம் ஸபையோம் இந்நெய் முட்டின போதும் ஐங்கழஞ்சு பொன் தண்டப்படுவோமானோம். இத்தண்டப் பட்டும் நெய் முட்டாதே அட்டுவோமானோம் ஸபையோம்."

V "* * * ப்ரதிபதி அரையர் மகளார் குந்தவ்வையரான வாணமஹாதேவியார் பக்கல் தீக்காலிவல்லத்து ஸபையோம் நால்பதின் கழஞ்சு செம்பொன் கொண்டு திருத்தீக்காலிப் பெருமானடிகளுக்கு நிசதம் உரி நறு நெய்யும் கால்க்கற்பூரமும் இட்டு ஒரு நொந்தா விளக்கு சந்த்ராதித்யர் (உள்ள) வரையில் எரிப்போமானோம் ஸபையோம்."

VI "ஸ்வஸ்தஸ்ரீ கம்பவர்ம்மற்கு யாண்டுபத்தாவது உட்கற (உக்கல்) ஸபையோர்க்கு சடையன்குடுத்த நெல் நானூற்றுக்காடி. சதுர்லால் பொலியூட்டு ஆண்டு வரை நூறுயா நெல் பலிசையால் நிசதி இருவர் பிராமண நிலமும் நாயறும் உள்ள அளவும் ஊட்டுவோமானோம் உட்கல் சபையோம்." [இச்சிலாசாசனமும் உக்கல் விஷ்ணுகோவிலில் உள்ளது.]





மேற்கூறியவாறு கிராமச்சபையார் முற்காலத்தில் அரசனது அதிகாரத்துக்குச் சற்றேறக்குறைய சமமான அதிகாரத்துடன் இராஜாங்கத்தார் செய்யவேண்டிய பலகாரியங்களைத் தாங்களே நடத்திவந்தார்கள்.

இக்கிராமச்சபையார், இந்தியர்கள் விஷயத்தில் கொஞ்சம் பாடு படுவார்களாகில், நாடு முன்னிருந்த நல்ல நிலைமைக்கு வருமென்பதற் கையமில்லை. ஏனெனில், கிராமச்சபையார், வித்யாசாலைகள், வைத்தியசாலைகள் முதலியன ஏற்படுத்தியதும், திருடர் முதலிய அயோக்கியர்கள் ஜனங்களைத் துன்புறுத்தாமல் தடுக்க ஏற்பாடுகள் செய்ததும், பஞ்சகாலங்களில் இராஜாங்கத்தார் உதவிசெய்யச் சக்தியற்றவரா யிருந்தபோது தாங்களே ஜனங்களுடைய கஷ்டத்தை நிவர்த்திசெய்ததும், கிராமத்தி லேற்பட்ட வியவகாரங்களை விசாரித்துத் தீர்த்ததும், மேற்கூறிய பல தொழில்களையும் பல நிர்வாக சபைகளைக் கொண்டு நடப்பித்ததும்,கிராமச்சபையாரையும் நிர்வாக சபைகளின் அங்கத்தினர்களையும் தெரிந்தெடுப்பதற்காக விமரிசையான சட்டதிட்டங்கள் ஏற்படுத்திக்கொண்டதும், பல சிலாசாசனங்களால் நன்ருய் நிரூபிக்கப் படுகின்றன. அவைகளை இன்னொரு வியாசத்தில் விவரித்தெழுதுவோம்.

---

(1-ம் பக்கத் தொடர்ச்சி.)

வாசுகி எடுத்துதறு வண்ண மயிலே !—நீ
வள்ளிமலை நாதன்வரப் பண்ணு மயிலே !
ஆசுகவி பாடியுனை ஓத மயிலே—வரம்
ஆதரித்துத் தந்தருளு நீதி மயிலே!

எப்போதும் போற்றி செய்வேன் எங்கள் மயிலே !
ஏமனிடங் காட்டாதே எங்கள்மயிலே! [என்னை
முப்போதும் பூஜை செய்வேன் எங்கள் மயிலே-திரு
முருகனருள் கூட்டிவைப்பாய் எங்கள் மயி
[லே !

கோடிநமஸ்காரமுனக் காடு மயிலே.—கோடிக்
நமஸ் காரமுனக் காடு மயிலே!
சரி" என் போற்றுகின்றேன் ஆடுமயிலே!—ஆடிப்
உடனே டிப் போற்றுகின்றேன் ஆடுமயிலே.

கு
ம
மாக

# ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்

## SRI LOKAMANYA BALGANGADHAR TILAK

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ் அவர்கள், எம். ஏ., எல். டி.]

இத்தேசத்தில் தர்மம் என்பது க்ஷீணித்து அதர்மம் செழித்து வருங்கால், அவ்வச்சமயத்துக்குத் தக்கவாறு பகவானே அவதாரம் எடுப்பதாகக் கூறியுள்ளனர். அவ்வண்ணமே முன்னாட்களில் தேவாம்சம் வாய்ந்த பல ரிஷிகளும், முனிவர்களும், கவிகளும் இருந்துள்ளனர். சென்ற நூற்றைம்பது வருஷகாலமாய், நமது தேசம் பிரிட்டிஷ் அரசாங்கத்துக்குட்பட்டபின் ரிஷிகளும், முனிவர்களும் அவதரிப்பதைப் பார்க்கிலும், ராஜ்ய பரிபாலன விஷயங்களை அறிந்து பொது ஜனங்களுடைய நன்மைக்காக சுயநயம் என்பதைச் சற்றுங்கருதாது உழைப்பவர்களே அவசியம் என்று கடவுள் மனதில் தோன்றியது போலும். அப்படியே மஹாதேவ கோவிந்த ரானடே, கோபால கிருஷ்ண கோகலே, ஸர் பிரோஸிஷாமேடா முதலிய அரிய மஹான்கள் நமது தேசத்தில் பிறந்து, கோடிக்கணக்கான ஜனங்களுக்குத் தம்மாலியன்ற உதவிசெய்து, அழியாப் புகழ்ப் படைத்திருக்கின்றனர். அப்போ்ப்பட்ட மஹான்களில் காலஞ்சென்ற ஸ்ரீ பாலகங்காதர திலகர் ஒருவராவர்.

திலகர் என்னும் பெயர் அவர் குணாதிசயங்களுக்குப் பொருத்தமாகவே இருந்தது என்று சொல்லலாம். அவர் காலஞ் சென்றனர் என்ற சமாசாரம் நமது காதுக்கு எட்டியவுடனே நாமெல்லோரும் அளவற்ற துக்கத்தில் மூழ்கி விட்டோம். "இப்பரத கண்டத்துக்கே ஓர் திலகமாய் விளங்கிய திலகர் விண்ணுலகத்துக்கு ஏகினர். இனி நம் வாழ்வு என்னே ?" என்ற ஓரேஏக்கம் எல்லார் மனத்திலும் இருந்தது. "தோட்டிமுதற் தொண்டைமான் வரையில்" என்ற பழமொழிக்கு அவர் பெருஞ்சான்று ஆகும்படி, அவர் பெயர் எங்கு பார்த்தாலும் தெரிந்திருந்தது. இந்தியர்களில்அவரை அறியாதவரில்லை, அவரை நேரில் கண்டு அறிந்தவர்களில் அவரை மதியாதார் ஒருவருமில்லை.

மனோதைரியத்திலும், வாக்சாதுரியத்திலும் அவருக்கு நிகர் காண்பதரிது. தமது தாய்ப் பாஷையாகிய மஹாராஷ்டிரத்திலும், ஸம்ஸ்கிருதத்திலும், ஆங்கிலத்திலும் நல்ல பாண்டித்தியம் உடையவர். சாஸ்திர நிபுணர். வேத ஆகமங்களில் பல ஆராய்ச்சிசெய்தவர். தொன்று தொட்டு வழங்கும் பகவத் கீதை என்ற காவியத்துக்கு ‘கீதை ரஹஸ்யம்’ என்று ஒரு வழிநூல் செய்திருக்கின்றனர். அதன் மேன்மையைப் புகழ்ந்து, கற்றோர்கள் அதை ஆங்கிலம் முதலிய பல்வேறு பாஷைகளில் மொழி பெயர்த்திருக்கின்றனர். பொது ஜனங்களின் நன்மைக்காக பல பள்ளிக்கூடங்களை ஸ்தாபித்தவர். தாம் பிறந்த நகராகிய ‘பூனா’வில் ஒரு முதல்தரச் சர்வகலாசாலை ஏற்படுத்தியதுமல்லாமல் அதில் தாமே பலவருஷங்கள் உபாத்தியாயராய் விளங்கினார். பிறகு இந்தியாவுக்குக்கூடிய சீக்கிரத்தில் சுயராஜ்யம்கிடைக்க வேண்டும் என்ற நோக்கத்தை வைத்துக்கொண்டுசென்ற முப்பத்தைந்து வருஷமாய் உழைத்து வரும் காங்கிரஸ் மஹா சபையின் அங்கத்தினரானார். அவ்விஷயத்தில் பாடுபடும் போது கவர்ன்மெண்டாருக்கும் இவருக்கும் பல வேறுபாடுகள் தோன்றின. ஆதலின் இவரை இரண்டு மூன்று தரம் சிறைச்சாலைக்கனுப்ப நேரிட்டது. சிறையிலும் மனந்தளராது தமது ஜன்மபூமிக்கே தமது ஆயுள் முழுவதையும் அர்ப்பணஞ் செய்வதாய்த் தீர்மானித்து, அங்கிருந்து வெளிவந்தவுடன் மறுபடியும் தமது கருத்தையே மனதில் வைத்தார். இப்படிச் சுயநயம் என்பதையே கனவிலும் கண்டிராத இம்மஹானைப் பற்றி ஸர் வேலன்டைன் சிரால் என்பவர் பழித்துப்பேசி அடாததெல்லாவற்றையும் எழுதியதால் அவர்மீது பிரியாது கொண்டுவந்து, கோர்ட் நடவடிக்கைக்காக இங்கிலாந்துக்குப் போய் வந்தனர். அங்கே இவருக்கு நியாயம் கிடைக்காவிடினும் இவர் அற்புத குணாதிசயங்களைப்பற்றி பலபேர் மெச்சினார்கள். திரும்பி வந்த பிறகுகூட மனத்தளர்ச்சியில்லாமல் இந்தியர்களின் முன்னேறறத்துக்காகப் பல பாடுபட்டனர்.

அவர் குணாதிசயங்களைக்குறித்தே அவருக்குப் பம்பாய் ராஜதானி முழுவதிலும் அளவற்ற செல்வாக்கிருந்தது. மேலோரும் தாழ்ந்தோரும், ஏழைகளும் பணக்காரர்களும் கற்றவர்களும் கல்லாதவர்களும் எல்லோரும் இவரைக்கண்டால் சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்து இவர் குறிப்பின்படி நடப்பார். ஆதலாலன்றோ, அவரை ‘லோகமானியர்’ என்றும் ‘திலக மஹாராஜர்’ என்றும் பலரும் அழைத்து வந்தனர்! மஹாராஷ்டிர தேசம் முழுவதும் இவர் வாக்கை தேவ வாக்காகப் பாராட்டியது. மறுபிரயோஜனம் என்பதைச் சற்றும் கருதாது தமது நிகரற்ற புத்தியையும், மனதையும் பொது ஜனங்களின் முன்னேற்றத்துக்காக அர்ப்பணஞ்செய்து,தாமும் அளவற்ற கஷ்டங்களை அனுபவித்து வந்ததால், ‘மஹாத்மா’ எனினும், ‘மஹான்’ எனினும், ‘மஹாராஜா’ எனினும் இன்னும் பலவாறு புகழினும் இவர் பெருமையைச் சரிவரக் கொண்டாட முடியாது. நம் தேசத்திலுள்ள முப்பத்து முக்கோடி ஜனங்களும் இவர் திவ்விய சரித்திரத்தை மனனஞ் செய்யவேண்டும். இவர் நடந்தவாறு நடப்பதே தங்கள் கடமையாக நினைக்க வேண்டும். அப்படிச் செய்தால்தான் அவர் ஆன்மாவுக்குத் திருப்தி உண்டாகும். நாமும் நமது தேசமும் செழித்து நாளுக்கு நாள் முன்னேற்றமடைவோம்.

இவரது ஜீவிய சரித்திரத்தைக் குறிப்பது எளிதல்ல. இவரது தைரியத்தைக் கண்டு அஞ்சினார் பலர்; இவரது அபூர்வ சாமார்த்தியத்தைக்கண்டு பொறாமை கொண்டனர் சிலர்; நீதியையே பெருங்கடவுளாய்ப் பாவித்து வந்ததால் அநீதியை எங்கே பார்த்தாலும் இவர் தாக்ஷணியமென்பதே இல்லாமல் கண்டித்து வந்ததால் இவருக்குச் சில சத்துருக்களுமுண்டு; பல பழிகளை இவர் தலைமேல் சுமத்த பலபேர் காத்திருந்தனர்; ஆயினும் கடைசியில் தர்மமும் நீதியுமே தலைகாக்குமாதலால் இவர் செய்த விஷயங்களில் ஒன்றாவது அநியாயமேயில்லையென்பது இப்பொழுதுஉள்ளங்கை நெல்லிக்கனிபோல் வெளிப்படையாயிருக்கிறது.

இவர் மனோதைரியத்தையும்அஞ்சாநெஞ்சையும் புத்திகூர்மையையும் பார்த்தால் தூர் [illegible] முறை தலைமுறையாய்அந்தஸ்துள்ள [illegible] உதித்தவர் என்று எளிதில் ஊகிக்கலாம். இ[illegible]ரது முன்னோரில் பலர் மஹாராஷ்டிர தே[illegible] சரித்திரத்தில புகழ் படைத்தவர்கள். இவ[illegible] தந்தை (இராமசந்திர திலகர்) ரத்னகிரி[illegible]

சோம்பல் இல்லாத் தொழில் சோதனையில்லாத் துணை.



உபாத்தியாயராயிருந்தவர். அப்படியிருக்கும் நாளில் 1856 வருஷம் ஜூலை மாதம் 23ம்தேதியில் கங்காதரர் என்ற திவ்ய புருஷர் அவதரித்தார். தந்தை கணிதப் பயிற்சி அடைந்தவராதலின் மகனுக்கும் அவ்விஷயத்தில் ஊக்கம் அதிகரித்தது.

பாலகங்காதரருக்குப் பதினாறு பிராயம் வந்தவுடன் தந்தை இறந்துவிட்டனர். எவ்வளவு கஷ்டம் வந்தாலும் சரி, படிப்பை விடாமல் பீ.ஏ.,பரீக்ஷையில்தேறி, 1879-ம் வருஷத்தில் எல். எல். பி. என்ற சட்டப் பரீக்ஷையிலும் தேறினார். ஆயினும் வக்கீலாயிருந்து பணம் சம்பாதிப்பதைக்காட்டிலும், பொது ஜனங்களின் அஞ்ஞானம் என்ற நிறையிருளை ஓட்டுவதற்காக ஒரு ஸர்வகலாசாலை ஏற்படுத்தி அதில் தாம் ஒரு உபாத்தியாயராய் இருக்கவேண்டுமென்று தோன்றிற்று. ஆதலின் 1880-ம் வருஷம் ஜனவரிமாதம் 2-ம்தேதியில், புதிய இங்கிலீஷ் பாடசாலை என்ற பெயருடன் ஒரு பள்ளிக்கூடத்தை ஸ்தாபித்தார்.இம்முயற்சியில் உதவி புரிந்தவர் பலர். முக்கியமானவர்கள் அகர்கரும், விஷ்ணு கிருஷ்ண சிப்லுங்கருமே. பிறகு, நாம்ஜோஷி, ஆப்டே என்பவர்கள் அப்பள்ளிக்கூடத்தில் உபாத்தியாயர்களாய் விளங்கினார்கள்.

“சாதாரணமான ஒரு பள்ளிக்கூடத்தை வைத்துச் சிறுவர்களுக்கு கல்வி கற்றுக்கொடுப்பது மாத்திரம் போதாது; பொது ஜனங்களுககுத் தங்கள் சுவாதந்த்ரியம் இன்னவை என்பதைப்பற்றியும், வெளியூர்களில் என்னென்ன விஷயங்கள் நடக்கின்றன என்பதைப்பற்றியும் தெரியவேண்டுமாதலால் ஆங்கிலத்தில் ஒரு பத்திரிகையும் மஹாராஷ்டிரத்தில் ஒரு பத்திரிகையும் ஸ்தாபிக்கவேண்டும்” என்று இவர் எண்ணங்கொண்டார். இவர் ஆப்த நண்பர்களாகிய அகர்கரும், சிப்லுங்கரும் இதை ஆமோதிக்க, இவ்வெண்ணம் வெகு சீக்கிரத்தில் நிறைவேறியது. “மஹாராட்டா” என்ற ஆங்கில பத்திரிகையும், “கேசரி” என்ற மஹாராஷ்டிர பத்திரிகையும் உடனே ஸ்தாபிக்கப்பட்டன.

இப்பத்திரிகைகள் ஸ்தாபித்த சிலநாளைக்குள் ஒரு விசேஷம் நடந்தது. கொல்ஹாபூர் மஹாராஜாவை அவ்வூர் கார்வாரி அகௌரவமாக நடத்திவந்தார் என்ற சமாசாரம் தெரிந்ததும், அப்படிச் செய்தது தவறு என்று இவர் பத்திரிகையில் எழுதினார். அதற்காக இவர்களுக்குக் கஷ்டம் நேரிட்டது. கோர்ட்டில் கேஸ் நடக்கும்போதே சிப்லுங்கர் காலமாய் விட்டார். திலகரையும், அகர்கரையும் நான்கு மாதம் சிறையிலிடும்படி கோர்ட்டார் உத்தரவு செய்தார்கள்.

சாதாரண ஜனங்களாயிருந்தால் “எம் கதி இப்படிச் சிறையிலிருக்கவேண்டியதாயிற்றே” என்று மனம் நொந்து கஷ்டப்படுவார்கள். திலகரோ அப்பேர்ப்பட்டவரல்ல.“நமது மனச்சாக்ஷிக்கு விரோதமில்லாமல் நாம் நடந்திருப்பதால், எது வரினும் வருக; நாம் பயப்படப் போகிறதில்லை,” என்ற ஒரே தீர்மானத்தை வைத்துக்கொண்டு, சற்றேனும் மனம் கலங்காமல் ஸர்வ ஸாதாரணமாய் இருந்தார்.சிறைச்சாலையில் அப்படியிருப்பது அரிதினும் அரிதன்றோ?

சிறையினின்று வந்தவுடனே, தமது ஊக்கத்தைச் சற்றும் கைவிடாமல், தாம் ஸ்தாபித்திருந்த பள்ளிக்கூடத்தை முன்னுக்குக் கொண்டு வருவதிலேயே கருத்தாயிருந்தார். இதற்காக 1884-ம் வருஷத்தில் தக்ஷணக் **கல்விச் சங்கம்** என்று ஒரு கல்விச்சங்கத்தை ஏற்படுத்தினார். அதற்கடுத்த வருஷத்திலேயே கேள்கார், தாப்,கோளே,முதலிய சிறந்த உபாத்தியாயர்கள் சேர்ந்ததால், தமது பள்ளிக்கூடத்தை ஒரு ஸர்வகலாசாலை யாக்கினார். அதுதான் இப்போது பெரும்புகழ் பெற்ற **பர்கூஸன் காலேஜ்** என்பது.

அக்கலாசாலையில் திலகரே ஸமஸ்கிருதம், கணிதம், ரஸாயன முதலிய சாஸ்திரங்கள் எல்லாவற்றையும் சொல்லிக்கொடுத்து வந்தார். இவர் ஆழ்ந்த ஞானமுடையவராதலின் மாணாக்கர்களெல்லோருக்கும் இவர்மேல் அன்புண்டாயிற்று.

இப்படி ஐந்து வருஷம் சென்ற பிறகு இவருக்கும் மற்ற உபாத்தியாயர்களுக்கும் ஏதோ சில விஷயங்களைப்பற்றி வித்தியாசங்கள் ஏற்பட்டபடியால், கலாசாலையை விட்டு நீங்குவதே உத்தமம் என்று இவர் புத்திக்குப்பட்டது. அப்படியே கலாசாலையை விட்டு நீங்கினாராயினும், அதன் நன்மையைக் கோரி வந்ததும் தவிர, பல மார்க்கங்களில் அதற்கு வேண்டிய உதவியும் புரிந்துவந்தார்.

சோம்பேறிக்கு வாழைப்பழம் தோலோடே.

1888-ம் வருஷத்தில் அகர்காரும் 'கேசரி' என்ற பத்திரிகையை விட்டு நீங்கினபடியால், 'கேசரி', 'மஹராடா' என்ற இரண்டு பத்திரிகைகளின் நடவடிக்கை முழுவதும் திலகர் பொறுப்பாயிற்று. இந்திய பாஷைகளில் பிரசுரம் செய்யப்படும் பத்திரிகைகளில் 'கேசரி' என்பது வெகு சிறப்புடன் விளங்கிற்று. தினம் ஒன்றுக்கு முப்பதாயிரம் காபிகள் வரையிலும் செலவழிந்தது என்று சொல்லுகிறார்கள்.

இது நிற்க. அநாதிகாலமாய் விளங்கும் நமது சதுர் வேதங்கள் எப்போது எழுதப்பட்டன என்ற விஷயத்தைப்பற்றிப் பலபேர் பல ஆராய்ச்சி செய்திருக்கிறார்கள். வேதங்களிலிருக்கும் சில வான சாஸ்திரக் குறிப்புகளை வைத்துக்கொண்டு, தமது அளவற்ற பாண்டித்தியத்துடன் வேதங்கள் எப்பொழுது எழுதப்பட்டிருக்க வேண்டும் என்று தாமே ஒரு புதிய ஆராய்ச்சி செய்யத் திலகர் புகுந்தனர். 1892-ம் வருஷத்தில் லண்டன் மாநகரில் கூடிய 'கிழக்கு தேசத்தினர் காங்கிரஸ், என்ற சபைக்குத் தம் ஆராய்ச்சியை ஒரு வியாஸமாய் எழுதி அனுப்பித்தார். அங்கிருந்த மாக்ஸ்முலர், விட்னி, வேபர் முதலிய நிபுணர்களெல்லோரும் திலகரின் அற்புத ஞானத்தை மெச்சினார்கள். அமெரிக்கா தேசத்திலுள்ள டாக்டர் ப்ளும்பீல்ட் என்பவர் திலகரைக் கல்வியிற்சிங்கம் என்றுபுகழ்ந்தார்.

விஷயம் என்னவென்றால், ஐரோப்பியர்கள் பலரும், "இந்தியர்கள் சொல்லுமாறு, வேதங்கள், அவ்வளவு ஆதிகாலந் தொட்டு வந்தவையல்ல" என்று சொல்லிவந்தனர். இக்கொள்கையே சரியானது என்று, சில இந்தியர்களும் நினைக்க ஆரம்பித்தார்கள். 'இப்படித் தவறான எண்ணம் கொண்டிருக்கிறார்களே, இவர்களுக்கு உண்மையைத் தெரிவிக்கவேண்டும்' என்று இவர் மனதில் நினைத்து இவ்வாராய்ச்சி செய்யப்புகுந்தார். அவ்வாறு செய்ததில் இருக்வேத ஸம்ஹிதைகள் கிறிஸ்து பிறப்பதற்கு நாலாயிரம் வருஷத்துக்கு முன்னால் எழுதப்பட்டிருக்கவேண்டும் என்று நியமனஞ் செய்தார். (அதாவது இற்றைக்கு ஆறாயிரம் வருஷங்களுக்கு முன்னமே ருக்வேதம் இயற்றப்பட்டிருக்கவேண்டும் என்று இவர் ஸ்தாபித்தார்.)

மற்றவர் வசை மொழிகளைத் தீர்த்து இவர் எப்படித் தம் ஜன்ம பூமியின் கௌரவத்தை நாட்டப் புகுந்தனரோ, அப்படியே தமது சிநேகிதர்களின் மானத்தையும் காப்பாற்ற முன் வந்தனர். இதற்கு ஓர் உதாரணம் கூறுவோம். திலகரின் ஆப்த நண்பரான ராவ் சாஹேப் பாபட் என்பவர் பரோடா ராஜ்யத்தில் ஒரு பெரிய உத்தியோகஸ்தரா யிருந்தார். அவருக்கு ஆகாதவர்கள் சிலர், அவர் மேல் வீண் பழிசுமத்தினர். சங்கதி இவருக்குத் தெரிந்தவுடனே, கோர்ட்டாருக்கு முன் நின்று தம் நண்பர் பக்ஷமாய்ச் சட்டத்தை எடுத்துப் பேச ஆரம்பித்தார். சட்டத்தில் இவ்வளவு ஞானமும் இருந்து, அபூர்வமான வாக்சாதுரியமும் பொருந்தியவர் வக்கீலாயிருந்தால் எவ்வளவு நன்றாயிருக்குமென்று பலரும் புகழ்ந்தார்கள். உண்மையிலோ, இவர் வக்கீலாயில்லாமல் இருந்ததே உத்தமம். ஸாதாரண வாதங்களை எடுத்துப் பேசிப் பணம் வாங்குவதற்குப் பதிலாய் இந்தியர்கள் படும் கஷ்டம் அனைத்தையும், ஸவிஸ்தாரமாய் எடுத்துக்கூறி உலகெங்கும் பொது நன்மைக்காக உழைத்தவர் என்ற பெயர்ச் செல்வத்தை அடைந்தார்!

நாளாவர்த்தியில் இவருக்குப் பல கௌரவங்கள் கிடைத்தன. பம்பாய் ராஜதானியில் 'மாகாணக் கான்பரன்ஸ்' என்பதை இவரே ஏற்படுத்தினார் என்று சொல்லலாம். ராஜதானியின்சட்டசபை அங்கத்தினராய் இவரை இரண்டுதரம் தேர்ந்தெடுத்தார்கள். பம்பாய் யூனிவர்ஸிடியில் இவர் ஸினேட் மெம்பரா யிருந்தார். 1895-ம் வருஷத்தில் பூனாவில் முனிஸிபல் கௌன்ஸிலரா யிருந்தனர்.

ஆயினும் இவை எல்லாவற்றைப் பார்க்கிலும் இவர் காங்கிரஸ் மஹா சபைக்காக உழைத்ததே அதிகமாதலால் அதைப்பற்றி இனி விவரிப்போம். 1895-ம் வருஷம் நடந்த காங்கிரஸுக்கு இவர் காரியதரிசியா யிருந்தனர். ஆனால் காங்கிரஸ் பந்தலில் ஆசாரச்சீர்திருத்த மகாநாடு நடத்தவேண்டும் என்று சிலர் கூறினர். அதற்கு இவர் சம்மதிக்காததால் இவரைப்பற்றி பலபேர் பலவாறு கூறினார்கள். சற்று யோசித்துப் பார்த்தாலோ, இவர் நினைத்ததில் தவறு ஒன்றும் இல்லை என்று தெரியவரும். நமது புராதன சாஸ்திரங்களிலும், வேதாகமங்களிலும்,





புராணங்களிலும் கூறியவைகளை அஸ்திவாரமாய் வைத்துக்கொண்டு, அவ்வச்சமயத்துக்குத் தக்கவாறு ஒழுகவேணுமே தவிர, நவீனக் கொள்கைகளெல்லாம் நவீனமாய் இருப்பதாலேயே நன்மை பயக்கும் என்று எண்ணுவது பேதைமை என்று வற்புறுத்தினார். அதற்காகவும் சாஸ்திரங்களில் சொல்லியிருத்தலாலேயே அவ்விஷயங்கள் ஒவ்வொன்றும் சரியானவை என்றும் இவர் ஒப்புக்கொள்ளவில்லை. மொத்தமாய்ப் பார்த்தால், "ஒரு கொள்கை புராதனமானது, நவீனமானது என்பதை மட்டும் கவனிக்காமல், அது சமயத்துக்கொத்தது என்பதை மாத்திரம் ஆராய்ந்துவரவேணும்" என்றுதான் கூறியிருக்கிறார். அதற்கு இவர் ஜீவிய சரித்திரமே ஒரு பெரிய உதாரணமாகும். சாஸ்திரங்களில் 'வயது வருவதற்குமுன்னாலேயே பெண்களுக்குக் கலியாணம் செய்துவிடவேண்டும்' என்றிருந்தாலும் அது இவர் மனதுக்கு ஒவ்வாததால் தம் பெண்களை வயது வந்த பிற்பாடே கலியாணம் செய்து கொடுத்தார். சாஸ்திரங்களில் கடலைக் கடக்கக்கூடாது என்றிருந்தாலும் இவர் தம் அறுபத்தோராவது வருஷத்தில் கடலைத் தாண்டிச் சென்று இங்கிலாந்துக்குப் போய்வந்தார். சாஸ்திரத்தில் எப்படி இருந்தபோதிலும்; மனிதனுக்குக் கல்வியினாலும் குணத்தினாலுமே சிறப்புண்டாகின்றதென்றும், மதத்தினாலும் ஜாதியினாலும் சிறப்பு இல்லவே இல்லை என்று பலதரமும் கூறியிருக்கிறார். ஆதலால் இவர் சாஸ்திரத்திலுள்ளவை எல்லாம் உத்தமம் என்று சொன்னார் என்பது சரியல்ல.

1896-ம் வருஷத்தில் மழையில்லாமல் இராஜதானி முழுவதும் பஞ்சம் வந்துவிட்டது. விலைவாசி அதிகரித்ததால் ஏழைகள் பட்ட கஷ்டம் இவ்வளவு அவ்வளவு அல்ல. சோறு இல்லாமல் பலரும் பட்டினியாய்க் கிடந்தனர். இவற்றையெல்லாம் நன்றாயறிந்து, நெல் வியாபாரிகள் எல்லோரிடத்திலும் ஜனங்கள் படும் கஷ்டத்தை இவர் விவரித்தார். அவர்கள் மனம் கசிந்து, இவர் பொருட்டே தானியத்தின் விலையைக் குறைத்து ஏழைகளுக்குதவிபுரிய முன் வந்தார்கள். சமயத்திற் செய்த உபகாரமாதலால் அதை ஜனங்கள் வெகுவாய்ப் பாராட்டினதுமல்லாமல், அன்றுமுதல் திலகரைத் தெய்வத்துக்குச் சமமாய்க் கொண்டாடினர்.

அப்படியே முதல்முதலில் பூனாவில் பிளேக் என்ற கொள்ளை வியாதி வந்தபொழுது இவர் அதிகாரிகளுக்கு உதவி செய்தது வெகு மேன்மையானது. தமது பத்திரிகைகள் மூலமாய் அவ்வியாதியின் கொடுமையை விவரித்து, அதைத் தீர்க்கும் வழிகளை ஜனங்களுக்குக் கற்பித்துவந்தார்.

அச்சமயத்திலேயே இவர் மஹாராஷ்டிர தேச சரித்திரத்தை சரிவர வாசிக்க ஆரம்பித்தார். அப்படி வாசித்துவந்ததில் சிவாஜி என்பவர், சில சரித்திரக்காரர்கள் சொல்லுகிறபடி தீவட்டிக் கொள்ளையிடும் பாதகன் அல்லவென்று நன்றாய் வெளிப்பட்டது. உண்மையிலேயே யோசித்துப்பார்த்தால், ராஜமர்மங்களெல்லாவற்றையும் நன்றாயறிந்து, ராமதாஸ், துகாராம் முதலிய மஹாராஷ்டிர பக்தர்களுடைய பூர்ணாசீர்வாதம் பெற்று, தன் குடிகளுக்கு நன்மையையே புரியவேண்டுமென்ற பேரவாவுடைய தர்மராஜனென ஏற்பட்டது. ஆதலின்சிவாஜிமஹாராஜாவின் சரித்திரத்தை எடுத்துப் பிரசங்கஞ் செய்து அவர் வரலாற்றை நன்கு விளக்குவதற்காக 'சிவாஜி' பிறந்த நாளை ஒரு பெரு உற்சவமாகக் கொண்டாடும்படிச் செய்தனர். நம் முன்னோர்களில் பெரியவர்கள் இருந்தனர் என்பதை நாம் அறிவோமானால், "அவரைப்போல் நாமும் பெரியவராய் விளங்கவேண்டும்" என்று நமது மனதில் தோன்றும். ஆதலால் ஒவ்வொரு தேசத்திலும் அவ்வத் தேசத்திலிருந்த பெரியோர்களின் சரித்திரத்தைப் பரவச்செய்து அவர்கள் அவதரித்த தினத்தை ஒருபெரிய உற்சவமாய்க் கொண்டாடுதல் ஸகஜமாயிருக்கிறது. உதாரணமாக இங்கிலீஷ்காரர்களில் பெயர்போன தளகர்த்தனாகிய நெல்ஸன் டிரபால்கர் என்ற சண்டையில் வெற்றியடைந்தான்; அவ்விஷயத்தைக் கொண்டாடுவதற்காக வருஷாவருஷம் ட்ரபால்கர்தினம் என ஒருநாள்வைத்து அதில் நெல்ஸனுடைய குணாதிசயங்களைப்பற்றிப் பலரும் பிரசங்கிப்பது வழக்கம். அப்படியே, மஹாராஷ்டிர தேசத்திலுதித்த தீரனான சிவாஜியின் குணங்களைப் போற்றி அவன்போல் கீர்த்தியடையவேண்டும் என்று இவர் ஜனங்களுக்கு இக்கொண்டாட்ட தினத்தில் சொல்லி வந்தார்.

இப்படிச் சொல்வதில் கொஞ்சமும் தோஷமில்லையாயினும், கவர்ன்மெண்டாருக்கு இவர் மேல் சந்தேகமுண்டாயிற்று. அதற்குத் தகுந்தபடி அச்சமயத்திலேயே வேறு காரணமாய் இரண்டு ஐரோப்பியர்களைச் சிலர் சதிக்கொலை செய்தனர். அவ்விஷயம் விசாரணைக்கு வந்தபோது, குற்றவாளிகளில் சிலர் 'ஐரோப்பியர்கள் செய்ததாகக் கூறப்பட்ட அநியாயங்களை நாம் 'கேசரி' யில் கண்டோம். நமக்கு அது பொறுக்கமுடியாமல் இப்படிச் செய்தோம்' என்று சொன்னார்கள். இதனால் திலகருக்குக் கஷ்டம் சம்பவித்தது. இவரே நேராகக் கொலையில் சம்பந்தப்படாமலிருந்தும், இவர் பிறர் மனதைக் கெடுக்கக்கூடிய சமாசாரங்களை எழுதுகிறாராதலின் இவரைத் தண்டிக்கவேண்டும் என்று துரைத்தனத்தார் எண்ண, பம்பாய் ஹைகோர்ட்டில் கேஸ் நடந்தது.

விசாரணை செய்ததில் இவருக்குப் பதினெட்டு மாதம் கடுங்காவல் விதித்துவிட்டார்கள். இங்கிலாந்திலுள்ள பிரிவி கௌன்ஸிலுக்கு அப்பீல் செய்து, ஆஸ்க்வித்—பின்பு பிரதான மந்திரியானவர் — வக்கீலாயிருந்து திலகர் பக்ஷமாய்ப் பேசியும் பயன்படவில்லை. கடைசியாக மாக்ஸ்மூலர், ஸர் வில்லியம் ஹண்டர் முதலிய வித்வான்களெல்லாரும் சேர்ந்து மஹாராணியாரை வேண்டிக்கொண்டபின் தான் தண்டனை சற்று மாற்றப்பட்டது.

இச்சங்கதிகளெல்லாம் 1897-ம் வருஷம் நடந்தன. ஜெயிலிலிருந்து திரும்பினவுடன் திலகர் தென்னிந்தியாவுக்கு வந்து, சென்னை ராஜதானியின் முக்கிய பட்டணங்களைப் பார்த்து, அங்கிருக்கும் ஜனங்களின் சுபாவத்தை நன்கறிந்தனர். (தொடரும்.)

## ஸ்ரீமான் ராஜம் ஐயர் சரிதை

இப்புத்தகம், கமலாம்பாள் சரித்திரம் என்னும் அற்புதக்கதையின் நூலாசிரியராயும் பிரபுத்த பாரதம் என்ற மாதப் பத்திரிக்கையை மிகுந்த சிறப்புடன் நடத்தி ஆங்கிலம் உணரும் திறனுடையவர்களுக்கு நமது வேதாந்த உண்மைகளை எளிய நடையில் ஸுலபமாகத் தெரிவித்தவரும் ஆகிய ஸ்ரீமான் பீ.ஆர். ராஜம் அய்யர் அவர்கள், பி.ஏ., என்பவரது திவ்விய சரித்திரத்தை அடக்கியுள்ளது. அநேகம் அழகிய சித்திரப் படங்களுடன் விலை அணு 8.

# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

### ஒரு சரித்திர சம்பந்தமான நாவல்

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது].

### முதற்பாகம்

### முதல் அத்தியாயம்

### சித்திர விற்பனை

ராஜஸ்தானிலுள்ள மலைப் பிரதேசத்தில் ரூபநகரமென்று ஒரு சிறிய இராஜ்யமிருந்தது. இராஜ்யம் சிறியதாயிருந்தாலுஞ் சரி பெரியதாயிருந்தாலும் சரி; அதற்கொரு அரசனிருப்பானல்லவா? ரூபநகரத்திற்கும் அரசனொருவனிருந்தான். இராஜ்யம் சிறியதா யிருந்தாலும் அதை ஆளுபவனுடைய பெயர் பெரியதாயிருப்பதற்கு யாதொரு ஆக்ஷேபணையு மிருப்பதில்லை. ரூபநகரத்தை ஆண்டுவந்த அரசனுக்கு விக்கிரமஸிம்ஹனென்று பெயர். விக்கிரமஸிம்ஹ ராஜனுடைய வரலாற்றை மேலே விசேஷமாய்ச் சொல்லுவோம்.

இப்பொழுது நாம் அவனுடைய அந்தப்புரத்தில் பிரவேசிக்கவேண்டியதாயிருக்கிறது. இராஜ்யம் சிறிது. ராஜதானி சிறிது. சிறிய அரண்மனை; அதில் மிகவும் அழகான ஒரு பெரிய மகல்; மகலில் தரையெல்லாம் இரத்தின கம்பளங்கள் பரப்பின மாதிரி, வெளுப்பு கருப்பு வர்ணமுள்ள கற்களால் தளவரிசைபோடப்பட்டுப் பிரகாசித்துக்கொண்டிருந்தது. சுவர்கள் வெள்ளைக்கற்களால் கட்டப்பட்டு அநேக வர்ணங்களுள்ள இரத்தினங்களால் சிங்காரிக்கப்பட்டிருந்தன. அக்காலத்தில்தான் தாஜ் மஹால், மயிலாசனம் இவைகளைப்போல் கட்டிடங்கள் கட்டுவது வழக்கம். அதனால் அந்த அரண்மனையின் சுவர்களின்மேல் உலகத்தில் ஒரு நாளுமிராத பட்சிகள், எங்குமில்லாத கொடிகளின் மேலுட்கார்ந்துகொண்டு ஏதோ பழங்களைத் தின்று கொண்டிருப்பதுபோல் சித்திரிக்கப்பட்டிருந்தது. தரையின்மேல் ஒரு பெரிய கனமான இரத்தினக்கம்பளி விரிக்கப்பட்டிருந்தது. அதன்மேல் பத்து பதினைந்து ஸ்திரீகள்; நாநாவர்ணமான வஸ்திரங்கள்—அநேக விதமான இரத்தின நகைகள்—மிருதுவாயும் ஜ்வலித்துக் கொண்டுமிருக்கிற அழகான தேக





காந்தி—ஒரு ஸ்திரீ மல்லிகைப்பூவின் வர்ணம்—தாமரைப்பூவையொத்த மேனி யுடையவளொருத்தி — மற்றொருவளின் காந்தி செண்பகப்பூவை யொக்கும், இப்படி அநேக விதமாய்ப் பிரகாசித்துக்கொண் டிருந்தார்கள். சிலர் தாம்பூலம் போட்டுக்கொண்டிருந்தார்கள். ஒருத்தி பெரிய முத்திட்டிழைத்த தன் புலாக்கு அசையும்படி பீமஸிம்ம ராஜாவின் பட்டமகிஷியான பத்மினியின் சரித்திரத்தைச் சொல்லிக்கொண்டிருந்தாள்.

இன்னுஞ் சிலர், காதில் தரித்துக் கொண்டிருந்த நவரத்தினங்களிழைத்த ஆபரணங்களை ஆட்டிக்கொண்டு பிறரைப் பரிகாசம் பண்ணிக்கொண் டிருந்தார்கள். அக்கூட்டத்தில் அநேகர் இளம்பிராயமுள்ளவர்கள். ஆதலால் பரிகாசமும் நகைப்பும் அதிகமாயிருந்தது. சிறு பெண்கள் விளையாட்டையொத்திருந்தது.

அவர்கள் நகைப்பதற்கு ஒரு காரணமிருந்தது. ஒரு கிழவி சில படங்களை விற்பதற்காகக் கொண்டுவந்திருந்தாள். அப்படங்கள் அவர்கள் கையில் விழுந்தன. தந்தத்தினால் செய்யப்பட்ட பலகைகளில் வெகு அழகாய்ப் படங்கள் வரையப்பட் டிருந்தன. கிழவி விற்கவேணு மென்கிற ஆசையால் தன் பையிலிருந்து படங்களை ஒவ்வொன்றாய் எடுத்துக் கொடுத்துக்கொண்டிருந்தாள். அப்பெண்கள் அவைகளில் வரைந்திருந்த மனிதர்கள் யார் யார் என்று விசாரித்துக்கொண் டிருந்தார்கள்.

கிழவி முதலில் படத்தை யெடுத்துக் கொடுத்தவுடன் பெண்களில் ஒருத்தி "இது யாருடைய படம்?" என்று கேட்டாள்.

கி:—"இதுஷாஜஹான் பாதுஷாவின்படம்."

அழகி:—" எடுத்துக்கொண்டுபோ—இந்தத் தாடி எனக்குத் தெரியும். இது நம்ம தாத்தா தாடியாக்கும்."

மற்றொருத்தி கிழவியைப்பார்த்து "தாத்தா பேர் சொல்லு. அது உன் புருஷனுடைய தாடிதான்" என்று சொல்லி மற்றவர்களைக் குறித்து "இந்தத்தாடியில் ஒருநாள் ஒரு தேள் புகுந்துகொண்டது. நான் விளக்குமாற்றினால் அடித்தெறிந்தேன்" என்றாள். உடனே எல்லோரும் கொல்லென்று சிரித்தார்கள்.

கிழவி இன்னொரு படத்தை யெடுத்துக் காண்பித்து "இது நூர்ஜஹானின் படம்' என்றாள்.

அதைப்பார்த்து அவர்களில் ஒருத்தி இதன் விலை என்னவென்றாள். கிழவி அதிகவிலை கேட்டாள்.

அப்பொழுது அப்பெண், "படங்களின் விலை அப்படியிருக்கட்டும்.' இது நகல். அசலான நூர்ஜஹான் பேகம் என்ன விலைக்கு வந்தாள்" என்றாள். கிழவி தன் சாமர்த்தியத்தைக் காண்பிக்க விருப்பமுள்ளவளாய் "விலையே இல்லை" என்றாள்.

அதற்கு அவ்வழகி "அசலுக்கே இந்த கதியாயிருந்தால் நகலை நம்முடைய வீட்டில் குப்பைக்காகக் கொடுத்துவிட்டுப் போ."

எல்லோரும் மறுபடியும் நகைத்தார்கள்—கிழவி முகஞ்சுண்டி படங்களை யெல்லாம் எடுத்து மூடிக்கொண்டாள். பிறகு நகைத்து "அம்மா! நீங்கள் வாங்குகிறவர்களில்லை—ராஜகுமாரத்தி வரட்டும். வந்தவுடனே படங்களைக் காட்டுகிறேன் ராஜகுமாரிக்காக இது இங்கே கொண்டுவந்தது" என்றாள்.

அப்பொழுது நால்வர் நாலு திக்கிலிருந்தும் "நான்தான் ராஜகுமாரி நான்தான் ராஜகுமாரி" என்று கூவினார்கள். கிழவி ஒன்றுமறியாமல் நாலுபக்கமும் திரும்பிப்பார்த்தாள்—உடனே எல்லோரும் சிரிக்கவாரம்பித்தார்கள்.

இப்படியிருக்கும்பொழுது நகைப்புச் சத்தம் அடங்கிற்று. மழை நின்றபிறகு கொஞ்சம் கொஞ்சமாய்க் காணப்படும் மின்னலைப்போல் உதடுகளில் புன்னகை மாத்திரமிருந்தது. இதற்குக் காரணமென்னவென்று தெரிந்து கொள்வதற்காகப் படம் விற்கிறவள் திரும்பிப்பார்த்தாள். பார்க்கவும் பின்னே ஏதோ ஒரு தேவஸ்திரீயின் பிரதிமை நின்றாற்போல் தோன்றிற்று.

கிழவி காந்திமயமான பிரதிமையை உற்றுப் பார்த்தாள். என்ன அழகு! கிழவிக்கு வயது மிகுந்ததால் பார்வை மங்கிப்போயிருந்தாலும், பார்த்தவுடன் இது பிரதிமையல்லவென்று கண்டுகொண்டாள். அவள் பார்க்கும்பொழுது பிரதிமை மிருதுவாய் நகைத்தது. பிரதிமை நகைப்பதுண்டோ? நீண்ட கருவிழியோடு கூடின கண்களிரண்டும் நகைத்துக்கொண்டிருந்தன.

கிழவிக்குப் பேசுவதற்கு வாயெழவில்லை. இங்குமங்கும் பார்த்தாள். ஒன்றும் தெரியவில்லை. அங்கிருந்த பெண்களைப் பார்த்து

"நீங்களாவது சொல்லக்கூடாதா" என்றாள். அவர்களில் ஒருவள் அடக்க முடியாமல் கெட்டியாய்ச் சிரித்து விட்டாள். அப்பொழுது கிழவி மனங்கலங்கி அழத்தொடங்கினாள்.

அப்பொழுது பிரதிமை பேசிற்று. இனிய குரலில் "ஏனம்மா! அழுகிறாய்?" என்று கேட்டது.

கிழவி "இது பிரதிமையல்ல—நிஜமான மனிதசரீரமே—மகாராணியோ — ராஜகுமாரியோ இருவரில் ஒருவரா யிருக்கவேணும் என்று தெரிந்துகொண்டாள்.

உடனே கிழவி சாஷ்டாங்கமாய் நமஸ்காரம் செய்தாள். அந்த நமஸ்காரம் ராஜ குலத்திற்காகவல்ல. அவள் கண்ணுக்கெதிரில் தோன்றிய அழகுக்கே. கிழவி பார்த்து சௌந்திரியத்திற்கு வணங்கினாள்.

## இரண்டாம் அத்தியாயம்

## அதிரஹஸ்யம்

**யா**ரைப்பார்த்துப் படம் விற்பவள் நமஸ்காரம் செய்தாளோ அந்த ஒப்பற்ற அழகி, ரூபநகரத்திய அரசன் மகள். அவள் பெயர் சஞ்சலகுமாரி. இதுவரையில் கிழவியுடன் பேசிப் பரிகாசஞ் செய்தவர்கள் அவளுடைய வேலைக்காரிகள். சஞ்சலகுமாரி அங்கேவந்து நின்றுகொண்டு அவர்கள் செய்த வேடிக்கைகளைப் பார்த்துக்கொண்டு மௌனமாய் நகைத்துக் கொண்டிருந்தாள். கிழவி அழவாரம்பித்தவுடன் மெல்ல "நீ யாரம்மா?" என்று கேட்டாள்.

தாசிகள் பரபரப்புடன் "அவள் படங்கள் விற்பதற்குக் கொண்டுவந்திருக்கிறாள்" என்றார்கள்.

சஞ்சல:—"கொண்டுவந்தால் நீங்கள் எதற்காக இவ்வளவு சிரித்துக்கொண்டிருந்தீர்கள்?"

சிலருக்கு ஒன்றும் பதில் சொல்ல முடியவில்லை. விளக்குமாறு சமாசாரம் சொல்லி பரிகாசம் பண்ணினவள் "எங்கள் பேரில் என்ன குற்றம்! இக்கிழவி இவ்வளவு பாதுஷாக்களின் படங்களைக் காண்பித்தாள், அதனால் சிரிப்படக்க முடியவில்லை. நம்ம சித்திர சாலையில் ஷாஜஹான்பாதுஷா—ஜிஹாங்கீர்பாதுஷா மாத்திரமா? எவ்வளவோ படங்களில்லையா?" என்றாள்.

கிழவி:—"இல்லாதிருக்குமா? ஒன்றிருந்தால் வேறொன்று வாங்கிக்கொள்ளப்படாதா? உங்களைப் போலொத்தவர்கள் வாங்காமற்போனால் என்னைப்போன்ற ஏழைகள் ஜீவிப்பதெப்படி?"

அரசன் மகள் கிழவி கொண்டுவந்த படங்களையெல்லாம் பார்வையிடுவதாகஒப்புக்கொண்டாள். கிழவி படங்களை ஒன்றொன்றாய் எடுத்து ராஜகுமாரிக்குக் காண்பித்துக்கொண்டு வந்தாள்—அக்பர் பாதுஷா, ஜிஹாங்கீர், ஷாஜஹான், நூர்ஜஹான் முதலானவர் படங்களைக் காண்பித்தாள். ராஜகுமாரத்தி புன்சிரிப்புடன் அவைகளைப்பார்த்து திருப்பிக்கொடுத்துவிட்டு "இவரெல்லாம் நம்முடைய குடும்பத்தைச் சேர்ந்தவர்கள். வீட்டில் அனேகம் படங்க ளிருக்கின்றன. இந்து ராஜாக்கள்படம் ஏதேனும் உன்னிடத்திலுண்டோ?" என்றாள்.

கிழவி:—'அதற்கென்ன குறைச்சல்' என்று சொல்லி, ராஜாமான்ஸிங்—ராஜாவீரபாலன்—ராஜா ஜயஸிம்மன் முதலியவர் படங்களைக் காண்பித்தாள். அரசன் மகள் அவைகளைத் திருப்பிக்கொடுத்துவிட்டு "இவைகள் எனக்கு வேண்டாம். இவர்கள் இந்துக்களல்ல, இவர்களெல்லோரும் துருக்கரானவர்கள்;" என்று சொன்னாள்.

கிழவி சிரித்து "அம்மா! யார் யார் ஜாதி மாறினவர்களோ நானறியேன். என்னிடத்திலுள்ள படங்களில் எது தங்களுக்கு இஷ்டமோ அதை எடுத்துக் கொள்ளலா"மென்றாள்.

கிழவி படங்களைக் காண்பித்துக்கொண்டு வந்தாள். ராஜகுமாரத்தி அவைகளிலிருந்து ராணா பிரதாபஸிம்ஹன், ராணா அமரஸிம்ஹன், ராணா கர்ணன், யசோவந்தஸிம்ஹன் முதலானவர் படங்களை எடுத்துக்கொண்டாள். கிழவி அவைகளில் ஒரு படத்தை மூடிக்கொண்டாள். அதைக் காண்பிக்கவில்லை.

அரசன் மகள் "அதென்ன மூடிக்கொள்வது?" என்று கேட்டாள். கிழவி பேசவில்லை. ராஜகுமாரி மறுபடியும் கேட்டாள்.

கிழவி பயத்துடன் கையைப் பிசைந்துகொண்டு "என் குற்றத்தை மனதில் வைத்துக் கொள்ளவேண்டாம். அஜாக்கிரதையாய் மற்றப் படங்களுடன் கொண்டுவந்துவிட்டேன்" என்றாள்.





அரசன் மகள்:—"எதற்காக அவ்வளவு பயம்? இப்பேர்ப்பட்டவர் படங்களைக் காண்பிப்பதில் என்ன பயம்?"

கிழவி:—"காண்பித்துப் பிரயோஜனமில்லை. தங்கள் குலத்திற்குச் சத்துருவின் படம்."

அரசன்மகள்:—"யாருடைய படம்?"

கிழவி:—"(பயத்துடன்) 'ராணா ராஜஸிம்ஹன் படம்."

ராஜகுமாரத்தி நகைத்து, "வீரபுருஷர் ஸ்திரீகளுக்கு ஒருபொழுதும் சத்துருவாகார். நான் அப்படத்தை வாங்கிக்கொள்ளுகிறேன்" என்றாள்.

கிழவி ராஜஸிம்ஹன் படத்தை ராஜகுமாரத்தி கையில் கொடுத்தாள். கையில் வாங்கி அதைவெகுநேரம் உற்றுப்பார்த்தாள். பார்க்கப் பார்க்க அவள் முகம் மலர்ந்தது. கண்கள் பிரகாசித்தன. ஒருதோழி அவள் மனதையறிந்து படத்தை தான் சற்றுப்பார்க்கவேண்டுமென்று கேட்டாள். அரசன்மகள் அதை அவள் கையில் கொடுத்து "பார்க்கத்தகுந்த படம்" என்றாள்.

படம் தோழிமார் கைகளெல்லாம் ஒருதரம் போய்த்திரும்பிவந்தது. ராஜஸிம்ஹன் தருணனல்ல. ஆனாலும் படத்தைப் பார்த்ததும் எல்லோரும் புகழ்வாரம்பித்தார்கள்.

கிழவி இதையறிந்து அப்படத்திற்கு ஒன்றுக்கு இரண்டாய் விலை சொல்லி பண ஆசைகொண்டு, "வீரர்கள் படம் வேண்டுமானால் இன்னொன்று கொடுக்கிறேன். அவனைப்போல வீரன் இந்த லோகத்தில் வேறெங்குமில்லை" யென்றாள்.

இப்படிச் சொல்லிக்கொண்டு கிழவி மற்றொரு படத்தை யெடுத்து ராஜகுமாரத்தியின் கையில் கொடுத்தாள்.

ராஜகுமாரத்தி:—இது யாருடைய படம்?

கிழவி:—பாதுஷா அலங்கீர்.

ராஜகுமாரி:—வாங்கிக்கொள்ளுகிறேன்.

இப்படிச் சொல்லிவிட்டு ராஜகுமாரி வேலைக்காரிகளைக் கூப்பிட்டு, வாங்கின படங்களுக்கு விலையைக் கிழவிக்குக்கொடுக்கும்படி கட்டளையிட்டாள். தாசிகள் கொண்டுவரப்போனார்கள்—இதற்குள் ராஜகுமாரத்தி தோழிகளைப்பார்த்து "இங்கே வாருங்கள், ஒரு வேடிக்கை" என்றாள். தோழிகளெல்லாம் கிட்டவந்து "என்னவேடிக்கை சொல்" என்றார்கள்.

ராஜகுமாரி:—"இந்த அலங்கீர் படத்தைத் தரையின்மேல் வைக்கிறேன். நீங்கள் ஒவ்வொருவரும் வந்து உங்கள் இடக்காலால் ஒருதரம் உதைத்துவிட்டுப் போகவேண்டும். யார் உதையினால் அவன் மூக்கு உடைகிறதோ பார்க்கவேண்டும்" என்றாள்.

இதைக்கேட்டவுடன் தோழிமார் முகமெல்லாம் சுண்டிப்போயிற்று. அவர்களி லொருத்தி "அப்படிப்பட்ட வார்த்தையை வாயினால் சொல்லவேண்டாமம்மா. காக்கை கேட்டாலும், ரூபநகரத்தின் கோட்டையில் ஒரு கல் கூட பாக்கியிராது" என்றாள்.

ராஜகுமாரத்தி நகைத்துப் படத்தைப் பூமியின்மேல் வைத்துவிட்டு "யார் உதைப்பீரோ அவர் உதையுங்கள்" என்றாள்.

ஒருவராவது முன் வரவில்லை—நிர்மலா வென்கிற ஒரு தோழி ராஜகுமாரத்தியின் வாயை மூடிப் பிடித்துக்கொண்டு நகைத்துக் கொண்டே "இப்படிப்பட்ட வார்த்தை பேசவேண்டாம்" என்றாள்.

சஞ்சலகுமாரி ஆபரணங்களால் சிங்காரிக்கப்பட்ட தன் இடக்காலைத் தூக்கி மெல்ல மெல்ல அவுரங்கசீபின் படத்தின்மேல் வைத்தாள். காலை ஊன்றிக் கொஞ்சம் அமிழ்த்தவும் மடமடவென்று ஒரு சத்தமுண்டாயிற்று. அவுரங்கசீபு பாதுஷாவின் பிரதிபிம்பம் ராஜகுமாரத்தியின் காலினாலுடைந்து பொடி பொடியாயிற்று.

அதுகண்டு தோழிமாரெல்லோரும் "இதென்ன ஆபத்து? என்ன செய்தாய்?" என்று சொல்லி நடுநடுங்கினார்கள்.

ராஜகுமாரத்தியோ சிரித்துக் "குழந்தைகள் எப்படி பொம்மைகளை வைத்துக்கொண்டு குடும்பக்காரியஞ் செய்கிற ஆசையை தீர்த்துக் கொள்ளுகிறதோ அப்படியே நானும் மொகலாய பாதுஷாவின் முகத்தின்மேல் உதைக்க வேணுமென்கிற ஆசையைத் தீர்த்துக்கொண்டேன்" என்று சொல்லி நிர்மலையைப்பார்த்து—"ஸகி, நிர்மலா! குழந்தை ஆசை தீர்ந்தது. நான் எப்பொழுதாவது உயிருள்ள அவுரங்கசீபின் முகத்தின்மேல் இப்படி—"வார்த்தை முடிவதற்கு முன்னேயே நிர்மலா ராஜகுமாரத்தியின் வாயை கெட்டியாய் மூடிக்கொண்டாள். வார்த்தை முடியவில்லை. ஆனால் அர்த்தம்எல்லோருக்கும்தெரிந்தது.கிழவியின்

இருதயம் நடுங்கிற்று. இப்படிப்பட்ட மரணத்துக்கேதுவான வார்த்தை பேசுகிற விடத்தைவிட்டு எப்பொழுது வெளிக்கிளம்புவோம் என்கிற வெண்ணங்கொண்டு மனங்கலங்கினுள். அதற்குள் விற்ற படங்களின் விலைப் பணமும் வந்தது. பணம் கையில்விழுந்ததோ இல்லையோ கிழவி அவ்விடத்தை விட்டுப் பெருமூச்சு விட்டுக்கொண்டு ஓடிப்போனுள்.

புறப்பட்டு அரண்மனைக்கு வெளியே வந்தாள். நிர்மலா அவள் பின்னே ஓடிவந்து அவள் கையில் ஒரு மோகரா கொடுத்து "கிழவி! நீ கேட்ட வார்த்தையை யார் காதிலும் போடவேண்டாம். ராஜகுமாரத்தி பேசுவதைத் தடுக்கமுடியாது. இன்னும் குழந்தை விளையாட்டு விடவில்லை" என்றாள்.

"கிழவிமோஹராவை வாங்கிக்கொண்டு, ஏனம்மணி! இதென்ன யாருக்காவது சொல்லத்தக்கதோ? நான் தங்கள் தாசி, இந்த வார்த்தை இனி என் வாயிலிருந்து வருமோ" என்றாள்.

நிர்மலா சந்தோஷத்துடன் திரும்பிப் போனுள்.

## மூன்றும் அத்தியாயம்

## சஞ்சலகுமாரியின் ஆலோசனை

மறுநாள் சஞ்சலகுமாரி தனியே உட்கார்ந்து கொண்டு விலைக்கு வாங்கின படங்களையெல்லாம் மனங்கொடுத்துப் பார்த்துகொண்டிருந்தாள். அப்பொழுது நிர்மலகுமாரியும் அங்கு வந்துஉட்கார்ந்துகொண்டாள். அவளைப்பார்த்து சஞ்சலை, "நிர்மலா! இவைகளில் யாரை விவாகம் செய்துகொள்வதில் உனக்கிஷ்டம் சொல்லு" என்றாள்.

நிர்மலா:—"நான் யாரை கலியாணம் பண்ணிக்கொள்ள வேண்டுமென் றிருந்தேனே, அவன் படத்தை நீ காலினுல் உதைத்துவிட்டாய்."

சஞ்சலா:—"அவுரங்கசீபையா?"

நிர்மலா:—"ஆமாம்—அதில் ஆச்சரியப்படுவானேன்?"

சஞ்சலா:—"அந்த மகாகெட்டவனையா? அப்படிப்பட்ட மதத்துரோகி இனி இந்தப் பூமியில் பிறப்பனே?"

நிர்மலா:—"கெட்ட குணமுள்ளவனை என் வசமாக்கிக்கொள்வதில் எனக்கு மிகவும் பிரீதி உண்டு. நான் புலிவளர்ப்பது உனக்குத் தெரியாதா? நான் ஒரு நாளில்லாவிட்டால் ஒரு நாள் அவுரங்கசீபைக் கலியாணம் பண்ணிக் கொள்ளவேண்டுமென் றிருக்கிறேன்."

சஞ்சலா:—"மகம்மதியனையா?"

நிர்மலா:—என் கையில் அகப்பட்டால் அவுரங்கசீபு ஹிந்துவாவான்."

சஞ்சலா.—நீ நாசமாய்ப் போனுய்! தொலைந்துபோ."

நிர்மலா: — "அதற்காக்ஷேபணையில்லை. ஆனுல் திருப்பித் திருப்பிப் பார்க்கிற படம் யாருடையது? அதை முன்னுல் தெரிந்து கொண்டு பிறகு செத்துப்போகிறேன்."

சஞ்சலா தான் பார்த்துக்கொண்டிருந்த படத்தை மற்றப் படங்களுடன் சேர்த்துவிட்டு "யார் படத்தை நான் திருப்பித் திருப்பிப் பார்த்தேன். வெறுமனே பிறர்மேலே எதற்காகக் குற்றம் சாட்டுகிறது? யார் படத்தை நான் திருப்பித் திருப்பிப் பார்த்தேன்?" என்றாள்.

நிர்மலா சிரித்துக்கொண்டு "படத்தைப் பார்த்துக்கொண்டிருந்தால் அதில் என்னகுற்றம்? இராஜகுமாரி! நீ கோபித்துக்கொண்டாலெனக்கென்ன? என் கையில் அகப்பட்டுக்கொண்டாய்! யாருடைய முகம் பிரஸன்னமாயிருக்கிறதோ? படங்களைப் பார்த்துத் தேடி எடுக்க என்னுல் முடியும்" என்றாள்.

சஞ்சலா:—"அக்பர் பாதுஷாபடம்."

நிர்மலா—"அக்பர் பெயர் சொன்னுல் ராஜபுத்திரி விளக்குமாற்றை எடுத்துக்கொள்வாள். அது இல்லவே இல்லை."

இந்தப் பிரகாரம் சொல்லிவிட்டு நிர்மலா படங்களை வைத்திருந்த தட்டை யெடுத்துக்கொண்டாள். "நீ பார்த்துக்கொண்டிருந்த படத்தின் பின்பக்கத்தில் ஒரு கருப்புப்புள்ளியிருந்தது நான் பார்த்தேன். அந்த அடையாளத்தை வைத்துக்கொண்டு எடுத்துவிடுகிறேன்" என்று சொல்லி அப்படத்தை எடுத்து சஞ்சலை கையில் கொடுத்து "இதைத்தான் நீ பார்த்துக்கொண்டிருந்தாய்" என்றாள்.

சஞ்சலகுமாரி கோபங்கொண்டு "படத்தை எறி. உனக்கு வேறே வேலையில்லை. பிறரைத் தொந்தரவு பண்ணுகிறதே உனக்கு வேலையாயிற்று. போ தூர!"

நிர்மலா:—நான் தூரப்போவதில்லை. இந்தக் கிழவன் படத்தைப் பார்க்கிறதற்கா இதை நீ எடுத்துக்கொண்டது?





சஞ்சலா—"கிழவனு? உன் நெற்றியில் கண் இல்லாமல் போயிற்றே?"

நிர்மலா, சஞ்சலையின் கோபத்தை அதிகப்படுத்தும்படியே பேசிக்கொண்டிருந்தவள் பரிகாசமாய் நகைத்தாள். நிர்மலை மிக சௌந்தரியமுள்ளவள். அதனுல் அவள் மதுரமாய் நகைத்தது அவள் அழகை எடுத்துக்காண்பித்தது. நிர்மலை "படத்தில் வரையப்பட்டிருக்கிறவன் உனக்குத் தெரியாமல் இருக்கலாம். ஜனங்கள், மஹாராணு ராஜஸிம்ஹனுக்கு அதிகப் பிராயமாயிற்று இரண்டு பிள்ளைகளிருக்கிறார்கள், என்று சொல்லுகிறார்களம்மா" என்றாள்.

சஞ்சலா—"அதென்ன ராஜஸிம்ஹன் படமோ? அது யாருக்குத் தெரியும்?"

நிர்மலா—"நேற்று வாங்கினது இன்றைக்குத் தெரியாமல் போகுமோ? அவனுக்கு வயதாயிற்று. அவ்வளவு அழகுமில்லை; பார்த்துக்கொண்டிருந்தாயல்லவா? நான் நன்றாய்ப் பார்த்தேன்."

சஞ்சலா:—"புருஷர்களுக்குச் சௌரியமே அழகல்லவோ?" என்று பொதுவாய்ச் சொல்லிவிட்டு சும்மாவிருந்தாள்.

நிர்மலா:—"பார் இப்போ நீயாகவே நீ சாகிறதற்கு வலையை விரித்தமாதிரி யாயிற்று. ராஜஸிம்ஹனை நினைத்துக்கொண் டிருந்தாயானுல் அவனைப் புருஷனுக அடைவதெப்படி?"

சஞ்சலா:—"அடையவேண்டுமென்றே நினைப்பது. அடையமுடியுமென்றுதானே நீ அவுரங்கசீபை நினைத்துக்கொண்டாய்?"

நிர்மலை "நான் விளையாட்டுக்கு அவுரங்கசீப் பேரைச்சொன்னேன். எனக்கு அவன் கிடைக்காமல்போனுல் விளையாட்டுக்குச் சொன்னதாய்ப் போய்விடும். நீயும் அப்படியேதான் விளையாட்டுக்கு நினைத்துக்கொண்டாயோ?"

சஞ்சலா:—"என் விஷயத்திலும்அப்படியே கிடைக்காது. ஆதலால் இந்த ஜன்மத்தில் என் ஸம்ஸார சுகம் முடிந்துபோயிற்று."

நிர்மலா:—"ராஜஸிம்மனு? என்ன சொல்லு. சித்திரத்தைப்பார்த்து இவ்வளவு ஆயிற்றே?"

சஞ்சலா:—"எப்படிஎன்ன ஆகுமோ நமக்கு என்னமாய்த் தெரியும்?"

நாமும் அப்படியேதான் சொல்லவேண்டியிருக்கிறது. சஞ்சலகுமாரிக்கு என்ன ஆயிற்றென்று நாம் எப்படிச் சொல்லுகிறது? உலகத்தில் பிரீதி உண்டாவது மனிதருக்கு மனிதர்மேல்—படம் மனிதனுகுமோ? ஆவதுண்டு. படத்தைவிட்டு மனிதனைத் தியானம் பண்ணிக்கொண்டிருந்தால் ஆகக்கூடும். முதலில் மனதில் ஏதாவது ஒன்றை வைத்துக்கொண்டு பிறகு படத்தைப் பார்த்து ஞாபகம் பண்ணிக் கொண்டால் ஆகலாம். அந்தப் பதினெட்டு வருஷமுள்ள பெண்ணின் மனதை நாம் அறிவதெப்படி—அறிந்தாலும் பிறரறியச் சொல்லுவதெப்படி?

சஞ்சல குமாரியின் மனம் எப்படியிருந்தாலும் இருக்கட்டும். அவள் மனதிலுள்ள அக்கினியை ஊதி, விருத்தி செய்வது சரியல்ல. ஏனென்றால் முதலில் அதிக ஆபத்துகள் காத்துக்கொண்டிருந்தன. ஆனுல் அந்த ஆபத்துக்களைச் சொல்லவேண்டுமானுல் கொஞ்சம் அவகாசம் வேண்டும்.

## நான்காம் அத்தியாயம்

## தாயும் மகனும்

## ரஹஸ்யம் வெளியாதல்

சித்திரம் விற்ற கிழவி திரும்பித் தன் வீட்டுக்கு வந்தாள். ஆக்ராவில் அவள் வீடு. அவள் ஊரூராய்ப் போய்ப் படம் விற்பவள். கிழவி ரூபநகரத்திலிருந்து ஆக்ராவுக்கு வந்தாள். அவள் வீட்டுக்குப் போய்ப் பார்க்கவும் அவள் மகன் வந்திருந்தான்; அவள் மகன் டில்லி பட்டணத்தில் கடைவைத்துக்கொண்டு வியாபாரஞ் செய்துவந்தான்.

கிழவி ரூபநகரத்துக்குச் சித்திரங்களை விற்கப்போனது சரியான வேளையல்ல. அங்கு நடந்ததைத் தான் பார்த்து ஒருவருக்கும் சொல்ல முடியாமல் கிழவி தவித்தாள். நிர்மலகுமாரி மோகரூவைக் கையில் கொடுத்து ஒருவருக்குஞ் சொல்லவேண்டாமென்று கேட்டுக்கொள்ளாமலிருந்தால் கிழவி யாருக்காவது உடனே சொல்லியிருப்பாளென்பதற்குச் சந்தேகமில்லை. ஆனுல் சமாசாரத்தை வெளியில் சொல்லுவதற்கு எவ்வளவு தடையிருந்ததோ அவ்வளவுக்கவ்வளவு அவளுக்குத் துக்கம் ஜாஸ்தியாயிற்று. கிழவி என்னசெய்வாள்? ஒருவரிடத்திலும் சொல்லவில்லை என்று ஆணையிட்டு வந்திருக்கிறாள். மேலும் மோஹரூ கையில் வந்து அவர்கள் உப்பைத்தின்றிருக்கி

றாள். விஷயம் வெளிக்குவந்தால் சஞ்சலகுமாரிக்கு பாதுஷாவினால் அதிக கஷ்டமுண்டாகுமென்று நன்றாய்த் தெரிகிறது. அதனால் இப்பேர்ப்பட்ட சமாசாரத்தை வெளிப்படுத்துவது சரியல்ல. ஆனால் அதை மனதில் வைத்துக்கொண்டு கிழவிக்கு ஆகாரம் வேண்டியிருக்கவில்லை; தூக்கமும் வரவில்லை. கடைசியில் இந்த வார்த்தையை ஒருவருக்கும் சொல்லுவதில்லை என்று தன் மனதுக்குள் சபதஞ்செய்து கொண்டாள். இதானவுடனேயே அவள் மகன் சாப்பிட உட்கார்ந்தான். கிழவி, மகன் பீங்கானில் கொஞ்சம் ரொட்டியும் வெண்ணெயுமிட்டு "எடுத்துக்கொள்ளப்பா! எறிந்துவிடாதே! ரூபநகரத்திலிருந்து வரும்போது ஒருநாள் தட்டினது. என்னமாய்ப் பண்ணினேனோ சொல்ல முடியாது. இப்படியொருநாளும் செய்ததில்லை; இனிமேலும்செய்யப்போகிறதில்லை" என்றாள்.

மகன் சாப்பிட்டுக்கொண்டு—"அம்மா! ரூபநகரத்திய சமாசாரம் ஏதோ சொல்லுகிறேன் என்றாயே சொல்லு" என்றான்.

தாய்:—"வாயைத் திறக்க வேண்டாமப்பா ? அந்த வார்த்தை வாயினால் சொல்லத்தகாதது. நான் என்ன சொன்னேன்? ஏதோ மறந்து சொல்லியிருக்கவேணுமென்று தோன்றுகிறது."

முதலில் ஒருதரம் சஞ்சலகுமாரியின் வார்த்தை கிழவியின் வயிற்றைக் கலக்கினதால் மகனுடன் அது இது என்று சொல்லிக்கொண்டிருந்ததை மறந்துவிட்டாள். இப்பொழுது தாய் சொல்வதைக்கேட்டு மகன் "நான்சும்மாவிருக்கிறேன். அது என்ன வார்த்தையாயிருக்கலாம்? சொல்லப்படாதோ" என்றான்.

தாய்: —"கேட்கத்தக்கவார்த்தையில்லையப்பா?

மகன்:—"என்ன வார்த்தை? ஏன் கேட்கக்கூடாது ?"

தாய்:—"இன்னொன்றுமில்லை. ரூபநகரத்திய ராஜகுமாரத்தியின் வார்த்தை."

மகன்:—"அந்தப்பெண் வெகு அழகுள்ளவளோ? இதென்ன அவ்வளவு இரகசியம் ?"

தாய்:—"அதில்லை என்ன துஷ்டத்தனம்? ஐயோ - அல்லா! நான் என்ன சொல்லிவிட்டேன்?"

மகன்—"ரூபநகரத்தின் கோட்டை எங்கே இருக்கிறது? அவ்விடத்தில் ராஜகுமாரியாயிருந்தாலென்ன? நீ ஏன் சொல்லக்கூடாது? நான் ஏன் கேட்கக்கூடாது?"

தாய்:—"பொல்லாதவள்—சாக்ஷாத் பாதுஷாவைக்கூட மதிக்கிறதில்லை."

மகன்:—"பாதுஷாவை வைதிருக்கவேண்டுமென்று தோன்றுகிறது.

தாய்:—"வைதாளோ? அதைப் பார்க்கிலும் கெட்டது."

மகன்:—"அதற்கும் மேல் என்ன செய்திருக்கலாம். பாதுஷாவை அடித்துப் போட்டிருக்கமுடியாது."

தாய்:—"அதையும் பார்க்கக் கெட்டது."

மகன்:—"அடிப்பதை பார்க்கிலும்கெட்டது என்ன ?"

தாய்:—"மகனே ! இனி கேட்கவேண்டாம். நான் அவள் உப்பைத் தின்றிருக்கிறேன். "

மகன்:—"உப்புத்தின்றது எப்படியம்மா ?"

தாய்:—"மோகரா ஒன்று கொடுத்தாள்.

மகன்:—"எதற்காக ?

தாய்:—"அந்த அவ்வளவு கெட்டவார்த்தையை ஒருவருக்குஞ்சொல்லக்கூடாதென்று.

மகன்:—"எனக்குச் சொல்லக்கூடாத வார்த்தை என்னம்மா?

தாய்:—"வேறொன்றுமில்லை. பாதுஷாவின் படத்தை—படத்தை" — வார்த்தை வாயிலிருந்து புறப்பட்டது.

மகன்!—"படத்தை உடைத்தெறிந்து விட்டாளோ ?

தாய்:— 'ஐயோ — மகனே—உதைத்துப் உடைத்து போட்டாள். ஐயோ—நான் உண்ட வீட்டுக் கிரண்டு பண்ணிவிட்டேனே."

மகன்:—"அதில் உண்ட வீட்டுக் கிரண்டு என்ன? நீ தாய் நான் மகன். எனக்குச் சொல்வதில் உண்டவீட்டுக்கிரண்டு எங்கே வருகிறது?"

தாய்:—"ஜாக்கிரதை யாருக்கும் சொல்ல வேண்டாம்."

மகன்:—"நீ நிச்சயமாய் நினைத்துக்கொள்—நான் ஒருவருக்கும் சொல்லமாட்டேன்." அப்பொழுது கிழவி சமாசாரம் நடந்ததையெல்லாம் வெகு ரஸமாய் மகனுக்கு உரைத்தாள்.

### கிரிஸெல்டா

துரைத்தனத்தார்] அல்லது [அங்கீகரித்தது

'பொறுமையுள்ள மனைவி'

இப்புத்தகம் பெண்பாலார் அவசியம் வாசிக்க வேண்டிய புத்தகங்களில் ஒன்று. இப்புத்தகத்தில் ஒருபெண் தன் கணவனிடம் நடந்துகொண்ட சிலாக்கத்தக்க மாதிரியை விளக்கியிருக்கிறது. அணா 3

தகப்பன் வெட்டின கிணறென்று தலைகீழாய் விழுவார்களா ?



# கூட்டுறவு

## CO-OPERATION

[ஸ்ரீமான் கீ. சி. ராமஸ்வாமி, பீ. ஏ., எல். டி.]

தற்காலத்தில் உலகமுழுவதும் ஒருபெரும் கிளர்ச்சி கிளம்பி இருக்கின்றது. அது வெவ்வேறிடங்களில், வேறு வேறு உருவங்கள் கொண்டிருக்கின்றது. சிலவிடங்களில் தொழிலாளிகள் சங்கங்கள் கூடி, தங்கள் சம்பளம், வேலைசெய்யும் நேரம், விடுமுறைநாட்கள், குடியிருக்கு மிடங்கள் முதலியவற்றை செம்மைப் படுத்திக் கொள்கின்றனர். சில இடங்களில், முதலாளிகள் தங்களுக்கு லாபம் அதிகமாகக் கிடைக்க வேண்டுவதற்கான முயற்சிகளைச் செய்துகொண் டிருக்கின்றனர். நாட்டையாளும் அரசர்கள், தங்களுடைய பூர்வீக நிலைமைக்கு என்ன கெடுதி நேரிடுமோவெனப் பயந்து, அதை நிலைநிறுத்த ஏற்பாடுகள் செய்கின்றனர். குடிகள், அரசர்கள் தம்மை எவ்விதத்திலும் வருத்தாது தம் வழிப்படியே ஆள வேண்டும் என்னும் எண்ணங்கொண்டு, தம்மாலான வரையில் அரசர்களையும் அதிகாரிகளையும் அடக்கிக்கொண்டு வருகின்றனர். இவைகள் எல்லாவற்றிலும் நாம் கவனிக்கக்கூடிய விஷயம் ஒன்றுண்டு. அஃதென்ன வெனின், உலகிலுள்ள ஒவ்வொரு ஜாதியாரும், வகுப்பினரும் தம் நிலைமையை எவ்விதத்திலேனும் உயர் நிலைமைக்குக் கொண்டுவரவேண்டுமெனப் பாடுபடுவதே.

இவ்வுலகில், மனிதர்களில் பெரும்பாலாரில் ஒருவர்க்கொருவர்க்குள்ள பற்றுதலின் காரணத்தை உற்று நோக்கும்போது, மனிதர்கள் தாமாகவே ஒன்றும் செய்யமுடியாதாகையால் மற்றவர்களுடன் எவ்வாறு ஒன்றுசேர்ந்து உழைத்தால் அனைவருக்கும் இன்பமும் உயர்வும் கிடைக்கும் என்பதை அறிந்திருக்கின்றனர் என்று வெளியாகிறது. இதைப் பற்றிப் பிறகு விவரிப்போம். இவ்விதம் ஜனங்கள் ஒவ்வொருவருடைய உதவியை நாடவேண்டி யிருப்பினும், முற்காலத்தில் காலதேச . வித்தியாசங்களினால், பணமுடையோரிடத்தும் பலமுடையோரிடத்துமே, பலர் அண்டினர். இது பல விஷயங்களில் நன்மை புரிந்ததேயாயினும், ஒருவரை மற்றொருவர் கீழ் இருக்கும்படிச் செய்தது. ஆனால் நாகரிகம் நாளடைவில் விருத்தியாக, செல்வம் சக்கரம்போற் சுழன்று, சிலரிடமே தங்கிற்று. அவர்கள் வர்த்தகர்களாம். இவ்வர்த்தகர்கள் ஜனஸமூகத்திற்கு இன்றியமையாத ஓர் வகுப்பினர். அவர்கள் தம் வியாபாரத்தில் லாபமடைந்து செல்வஞ்சேர்ந்து வாழ்ந்தனர்; வாழ்கின்றனர். ஆனால் அவர்களுடைய செல்வம் சேர்ந்ததெப்படி ? சரக்குகளை மொத்தத்தில் வாங்கி, வாங்கின விலைக்குமேல் கொஞ்சம் லாபம் வைத்து விற்பதனாலேயே. இந்த லாபம், சரக்குக ளிருப்பவனிடம் சென்று கூடியவரையில் குறைந்தவிலைக்கு வாங்கி லாபத்திற்கு விற்பதாலேயே. வியாபாரிகள் செய்வதெல்லாம், முன் பணம் கொடுத்தலும், சரக்குகளைச் சேகரித்து வைத்தலுமே. ஆனால் அவ்விதம் வர்த்தகர்களிடம் வாங்குவதைவிட, சரக்கு வேண்டியவர்கள், முதலாளி (சரக்குகளை உற்பத்தி செய்தோ, அமைத்தோ தருபவன்) யினிடம் சென்று, ஒன்றுகூடி, மொத்தமாக வாங்கி, தமக்குள் வாங்கினதைப் பகிர்ந்துகொண்டால், வியாபாரிக்கு வரும் லாபம் அவர்களுக்குக் கிடைக்கின்றது. அதாவது, அவர்கள் மூன்றாவது மனிதனை, வியாபாரிக்குக் கொடுக்கவேண்டிய விலையைவிட, குறைந்த விலைக்கே, தங்களுக்கு வேண்டியதை வாங்கிக்கொள்கிறார்கள். இதுவே கூட்டுறவுச் சாலைகளின் சூக்ஷமம்.

இவ் வுண்மைகளை கைக்கொண்டே கூட்டுறவுச் சங்கங்கள், நம் நாடெங்கும் பரவியிருக்கின்றன. இங்கிலாந்து, ஐர்லாந்து முதலிய தேசங்களிலும் உலகிலுள்ள மற்றெல்லாத் தேசங்களிலும் இச்சங்கங்கள் பரவி, அங்கு எண்ணற்கரிய பல பெரும் காரியங்களைச்செய்தன. செய்தும் வருகின்றன. அச்சங்கங்களின் நோக்கம் என்னவென்பதைச் சுருங்கக் கூறலாம்:—கூடியவரையில், ஓர் வஸ்துவை, மூன்றாவது மனிதன் (தரகன்) வழியாகச் செல்லவிடாமல், உபயோகிப்பவர்களுக்கு நேரே பட்டுவாடாச் செய்தால், வஸ்துக்களின் விலை குறைகிறது. ஏனெனின், மூன்றாவது மனிதனை (தரகு) வியாபாரி தனக்குலாபம் வைத்துக்கொண்டே விற்கவேண்டும். லாபம் இல்லாவிடின் அவன் வியாபாரம் செய்யவேமாட்டான். ஆகையால், நாம் அவனிடம் சரக்குகளை வாங்காமல், நேரே



தகப்பனுக்கு இட்டது தலைச்சனுக்கு.

வாங்கினோமானால், அந்த மூன்றாம் மனிதனுக்குக்கிடைக்கும் லாபம்மறைகின்றது. அதனால், சரக்குகளின் விலை நமக்குச் சரசமாகின்றது. ஆகவே நாம் ஓர்சரக்குக்கு அதிகபணம் கொடுக்கவேண்டிய அவசிய மில்லாதுபோகின்றது.

ஆனால், கூட்டுறவு வியாபாரம் முதலியவை ஏன் இத்தனை நாட்களாக, முன்னுக்கு வரவில்லை என்ற சங்கை உண்டாகும். அச்சங்கையைத் தீர்ப்பது கஷ்டமான காரியமன்று. பல நூற்றாண்டுகளாக, நம் நாட்டில் (மற்ற நாடுகளிலும் கொஞ்சம்) ஓரிடத்திலிருந்து மற்றோரிடத்திற்குப் போவதற்கு வேண்டிய வசதிகள் இல்லாதிருந்தன. தேசத்தில் பற்பல இடங்களில் இருக்கும் பொருள்களின் விலைகள் நமக்குத் தெரியவில்லை. மேலும், நம்மவர்களில் ஒருவர்மீது ஒருவருக்கு சந்தேகமிருந்தது என்றும் சொல்லலாம். கூட்டுறவிலாகட்டும், வேறு மற்றெந்த தொழிலிலாகட்டும், நம்பிக்கையே முக்கியமானதாகையால், அது இல்லாதவரையில், கூட்டுறவு பரவுவதற்கு நியாயமேயில்லை எனக் கூறலாம்.

ஆனால் சிறிது காலமாக, அயல் நாட்டாரைக் கண்டு அவர்களிடமிருந்து புதுத் தொழில் முறைகளைக் கற்றுக்கொண்டதினாலும், அவர்களுடைய தொழில்கள் முன்னுக்கு வரவேண்டிய காரணங்கள் என்னவென்று கருதினதினாலும், அயல் நாட்டார், செல்வத்திலும் சுகத்திலும் பெருகுவதற்குக், கூட்டுறவே ஓர் முக்கிய காரணமென்று தெரியவந்தது. அதையறிந்த நம்மவரிற் கற்றோர் பலர், கூட்டுறவு முறையை இத்தேசத்திலும் பரவுவதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டனர். கூட்டுறவுச் சங்கங்கள் நம் நாட்டில் முக்கியமாக வியாபாரச் சங்கங்களாகவும்,நாணயச் சங்கங்களாகவும் பரவின. துரைத்தனத்தார், பிற்கூறியதை விருத்திசெய்வதற்கு வேண்டிய முயற்சிகளை எடுத்துக்கொண்டு அதற்கென்றே, இலாகா ஒன்றை ஏற்படுத்தியிருக்கின்றனர். இவைகளைக் கவனிக்கும்போது நமக்கு மிகவும் திருப்தியுண்டாகின்றது. ஆயினும்,கூட்டுறவே காரணமும் காரியமுமாகக்கொண்டு, சங்கங்கள் நன்மை செய்யக்கூடுமாதலின், எவ்வெவ் வழிகளில் நன்மை செய்யக்கூடுமென்பதையும், அவைகளுக்கு அனுகூலமானவைகள் என்ன என்பதையும் நாம் அறியவேண்டியது அவசியம். மேலும், நம் தேசத்திற் பெரும்பாலார், நல்லெண்ணங் கொண்டவர்களா யிருந்தபோதிலும், கூட்டுறவு என்னவென்பதை அறியாம லிருக்கின்றனராதலின், அவர்கள், 'கூட்டுறவு'' என்னவென்பதையும்,அதனால்நாம்அடையக்கூடிய எண்ணிறந்த நன்மைகளையும் அறிவரேல், உடனே அம்முறையை எல்லாத் தொழில்களிலும் மேற்கொள்ளுவரென்று கூறுவது அநாவசியம். அவர்களுக்கும், மற்றும் கூட்டுறவில் சிரத்தை கொண்டிருப்பவர்களுக்குமென்றே இவ்விஷயம் எழுதப்பட்டது.

### 2. கூட்டுறவு: போது நோக்கம்

"கூட்டுறவு" என்பது மனிதர்கள் ஒன்றுகூடி, ஏதாயினுமொரு காரியத்தைக்குறித்து யோசித்து, அதைத் தமது கூட்டுவேலையால், தமக்கும், கூடுமானால் மற்றவர்க்கும், நன்மை செய்து கொள்ளலாம். இவ்வுலகில் தன்னந்தனியனாய் ஒருவன்இருந்து பிறருடைய உதவியில்லாமல் பிழைப்பது கடினமாயினும், முடியாததன்று. ஆனால் அவ்வாறு வாழ்பவன், சாதாரணமாய் மனிதர்கள்அடையும் சுகங்களையும் கவலைகளையும் கொள்ளாது, தனித்து வாழும் மிருகங்களைப்போலாகிறான். எனவே, இவ்வுலகில் இன்புற எண்ணும் மனிதன் தம்மினத்தாரோடு சேர்ந்து உழைத்தல் அவசியமெனக் கொள்ளலாம். "கூட்டுறவு" பல பொருள் கொடுக்குமாயினும், நாம் அவைகளை எல்லாம் இங்கு கவனிக்கவில்லை ; கவனித்தலும் இயலாது. ஆயின் இங்கு எந்தப் பொருளில் நாம் கூறுகின்றோமெனின், மனிதர்கள் தங்களுக்குள் சுகம் ஏற்படக்கூடிய வழிகளை உத்தேசித்து, அதை அடைவதற்குவேண்டிய வழிகளைத் தேடி, அவ்வழிகளினூடே செல்வதாம்.

நாமனைவரும் வேண்டுவது ஒன்று: இன்பம் என்பது. அவ்வின்பம் இவ்வுலகில் கிடைக்கவேண்டுமாயின், அதற்கு முக்கியமாக வேண்டியவை, நல்லுணவும் அதைச் சார்ந்தவைகளுமே. ஆயின் இவைகளுக்குப் பணம் வேண்டியது அவசியம். பணம் வேண்டுமாயின் உழைப்பு வேண்டும். அவ்வுழைப்பு எவ்விதமானதா யிருந்தாலும் சரி, அதற்குப்





பிரதியாகக் கிடைப்பது பணமே. ஆகவே பணம் அவசியம் என்று அனைவரும் ஒப்புக்கொள்வர். எவ்வளவுதான் திருப்தியடைந்த மனதுள்ளவர்களாயிருந்தபோதிலும், பணம் கொஞ்சமாயினும் வேண்டும், அல்லது பணத்தால் அடையக்கூடியவைகள் வேண்டும்.

பணம் அவசியமே ! ஆயினும் வெள்ளி, தங்கம், தாமிரம் முதலியவைகளாலாகிய நாணயங்களை வைத்துக்கொண்டு நாம் என்ன செய்கிறோம். அந்நாணயங்களை உண்ணல் முடியாது, அதனால் நாம் அவற்றை மத்தியமாக வைத்து, நமக்குவேண்டிய உணவுப்பொருள்கள்,துணிமணிகள், மற்றும் பலவகை சௌகர்யத்திற்கென்றேற்பட்ட சாமான்களை வாங்குகிறோம். இச்சாமான்கள் நமக்குத் தேவையேயன்றி, லோபிக்கு வேண்டிய நாணயங்கள் நமக்குத் தேவையில்லை. இனி இச்சாமான்களை (முக்கியமாய் உணவுப்பொருள்களை) ப்பற்றிச் சற்று ஆராய்வோம். பொருட்கள் எங்கோ ஓரிடத்தில் பயிராகின்றன. அவற்றைப் பயிராக்குபவன் தனக்கு வேண்டியதற்கு எஞ்சியவைகளை விற்று, அதனால் கிடைக்கும் பணத்தைக் கொண்டு மற்றைய பொருள்களை வாங்குகிறான்.ஆனால் இவனிடம் ஓர் பொருளை வாங்கினவனோ, அதை எடுத்துச் சென்று, தான் எடுத்துக்கொண்ட சிரமத்திற்கும் தன் பணத்தின் வட்டிக்கும், காலத்திற்கும், இடத்திற்கும், பொருளின் ஆவசியகத்திற்கு மேற்ப விலைகூறி விற்றுவிடுகிறான்.

---


## புலவர்சரித்திரத் திரட்டு

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

இஃது கவிசக்ரவர்த்தியாகிய ஒட்டக்கூத்தர், இரட்டைப்புலவர், படிக்காசுப்புலவர் என்பவர்களுடைய சரித்திரம். இச்சரித்திரத்திற் காதாரமாகக் கொண்ட விஷயம் மூன்றும் பாராட்டத்தக்கன. இப்புலவர்கள் சரித்திரத்தில் கன்றிய மனத்தாலும், பொறுமையாலும் உண்மையை அறியாமையாலும், அறிவின்மையாலும், பண்டித பாமரரால் வழங்கும் நம்பக்கூடாதனவும், பொய்மையான விஷயங்களை இதன் ஆசிரியர் தக்க சமாதானஞ்சொல்லி கண்டித்திருப்பதை அறிவுடையோர் கவனிக்கற்பாலர். இம்மாதிரியான சரித்திரங்களை மாணாக்கர்களும், உபாத்யாயர்களும் அவசியம் வாங்கிப் படிக்கவேண்டும். விலையுயர்ந்த காகிதத்தில் அச்சிடப்பெற்றது.

விலை அணா 8.


# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### பல தேசக்காட்சி

### 1. கதை ஆரம்பம்

ஒரு நாள் காலை பத்து மணிக்குக் கமலா,தன் தம்பி கிருஷ்ணனுடன் விளையாடிக்கொண்டிருந்தாள். அப்பொழுது வாசற்கதவை யாரோ தட்டும் சத்தம் கேட்டது. உள்ளே யிருந்துகொண்டே "கதவை யார் தட்டுகிறது?" என்று கமலா கேட்டாள். "அம்மா, தபால்" என்று பதில் கேட்டது. 'இதோ வந்துவிட்டேன்' என்று கூவிக்கொண்டே, ஓடிப்போய்க் கமலா கதவைத் திறந்தாள். தபாற்காரன் அவள் கையில் கார்டு ஒன்றைக் கொடுத்துவிட்டுப் போய்விட்டான்.

கமலா கடிதத்தை எடுத்துக்கொண்டு ஓடவே, கிருஷ்ணனும், அவளோடு உள்ளே ஓடினான். சமையலறையில் இருந்த அவர்கள் தாயார், குழந்தைகளைப் பார்த்து "என்னம்மா கமலா!" என்றாள்.கமலா "அம்மா, தபால்காரன் கார்டு கொடுத்துவிட்டுப்போனான்" என்றாள்.

'கார்டு யார் போட்டிருக்கிறார்கள் ?' என்று தாயார் கேட்டாள்.

"எனக்கு எப்படித் தெரியும், அம்மா ?"

"உனக்குப் படிக்கத் தெரியுமே! எழுத்துக் கூட்டிப்பார்!"

"இதோ பார்க்கிறேன்.அம்மா. மேலே "ம-தி-ரா-ஸ் — மதிராஸ் என்று எழுதியிருக்கிறது" என்றாள் கமலா.

"மதிராஸிலிருந்தா? யார் எழுதினார்கள்? அண்ணாவா? மாமாவா? வாசித்துச்சொல்!" என்று தாயார் கேட்டதும், கமலா எழுத்துக் கூட்டி வாசித்தாள்.

"அ·ப்-பா·வு·க்·கு— அப்பாவுக்கு— அ·ன்-பு·ள்-ள—அன்புள்ள, ர·ங்·க·ன் ரங்கன்— அம்மா, அம்மா, ரங்கண்ணா, கடிதாசி எழுதியிருக்கிறான்" என்றாள் கமலா.

"ரங்கனா ! இதோ வந்து வாசிக்கிறேன் !" என்று சொல்லிவிட்டுத் தாயார் கையை யலம்பிக்கொண்டு, குழந்தைகளை மடியில்வைத்துக்கொண்டு வாசித்தாள்.

க்ஷேமம். பச்சையப்பன் காலேஜ்,
மதிராஸ். 15-4-1920.

ம-ா-ா-ஸ்ரீ அப்பா அவர்களுக்கு அன்புள்ள ரங்கன் அநேக நமஸ்காரம்.

"எங்கள் பரீக்ஷை இன்றோடு முடிந்துவிட்டது. நான் இரண்டு நாட்களில் அங்கு புறப்பட்டு வருகிறேன். தங்கை கமலாவுக்கும் தம்பி கிருஷ்ணனுக்கும் பொம்மைகளும், சுந்தரத்திற்குப் புஸ்தகங்களும் வாங்கிக் கொண்டு வருகிறேன். வேறு விசேஷமில்லை.

தங்கள் பணிவுள்ள குமாரன் ரங்கன்."

"அம்மா, அம்மா! இன்னொரு தடவை வாசியம்மா? எனக்கு அண்ணா என்ன கொண்டுவருகிறாராம்!" என்றாள் கமலா. அவள் தாயார் வாசித்தாள்.

"நேக்கு என்னாம்ம" என்றான் கிருஷ்ணன். "தம்பி உனக்கும் எனக்கும் அண்ணா பொம்மை கொண்டுவருகிறாராம்! வா, நாம் ஆடப் போகலாம்!" என்று சொல்லிவிட்டு கமலா கிருஷ்ணனைக் கூப்பிட்டுக்கொண்டு போய் விட்டாள்.

பகல் ஒரு மணிக்குப் பள்ளிக்கூடத்திலிருந்து சுந்தரம் வந்தான். அவனுக்குத் தன் அண்ணனுடைய கடிதத்தைக் கண்டதும் மிகுந்த சந்தோஷமுண்டாயிற்று. "அண்ணா, எனக்குப் புத்தகம் கொண்டுவரப்போகிறார். என் பாடு கொண்டாட்டம் தான்" என்று அவன் ஆநந்தமடைந்தான். மாலைநேரத்தில் பையன்களுடைய தகப்பனார் வந்ததும், கடிதத்தைப் பார்த்தார். அவர் அந்த ஊர் தாசில்தார். அவருக்குத் தன் பிள்ளை படித்த பிறகு என்ன செய்வது என்று வெகுநாளாக யோசனை. தன் பிள்ளை ரங்கனைக் கேட்டு, அவன் இஷ்டப்படியே நடக்கவிடவேண்டுமென்பது அவர் எண்ணம். அன்று இரவு அவர் சாப்பிட்டபிறகு, கூடத்தில் குழந்தைகளுடன் விளையாட்டாய்ப் பேசிக் கொண்டிருந்தார். அப்பொழுது வாசித்துக்கொண்டிருந்த சுந்தரம், தன் தகப்பனாரைப் பார்த்து, "அப்பா, அண்ணா படித்தாய்விட்டதே, இனிமேல் என்ன செய்யப் போகிறார்" என்று கேட்டான்.

"ஏனப்பா, ரங்கண்ணா உங்களைப்போல வேலைக்குப் போகவேண்டாமா?" என்றாள் கமலா.

"என்னவேலைக்கு அண்ணா போவான், சொல்லுங்கள் பார்ப்போம்!" என்றார் தகப்பனார்.

"அப்பாவைப் போல அண்ணா ஆபீசுக்குப் போவான்" என்றாள் கமலா.

"இல்லை இல்லை, அண்ணா படிப்பா"—என்றான் கிருஷ்ணன்.

அதற்குள் அங்குவந்து உட்கார்ந்த அவர்கள் தாயார், "சுந்தரம்" நீ சொல்லு பார்ப்போம்! என்றாள்.

"என்னம்மா கேட்டீர்கள்?" என்று சுந்தரம் படிப்பதை நிறுத்திவிட்டுக் கேட்க, தன் தாயார் சொன்னதைக்கேட்டு, "அண்ணா சீமைக்குப்போய்ப் படிக்கட்டுமே" என்றான்.

இதுவரையிலும் குழந்தைகள் பேசிக் கொண்டிருந்ததைக் கேட்டுக்கொண்டிருந்த அவர்கள் தகப்பனார் அருணாசல முதலியார், சுந்தரத்தைபார்த்து "என்ன சுந்தரம், ரங்கன், இங்கிலாந்திற்குப் போய் எதற்காகப் படிக்கிறது?" என்று கேட்டார்.

"ஏனப்பா அப்படிக் கேட்கிறீர்கள்? கலெக்டர் வேலைக்குப் படிக்கலாம், அல்லது பெரிய பாரிஸ்டர் வேலைக்கும் படிக்கலாமே?" என்றான்.

இதைக்கேட்ட அவன் தாயார் "சுந்தரம், நீ என்ன செய்யப் போகிறாய், பெரியவனான பிறகு?" என்றாள்.

"நானா? பிறகு சொல்கிறேன்" என்றுசொல்லிவிட்டுத் தன் பாடத்தைக் படிக்க ஆரம்பித்தான். இம்மாதிரி பேசுவதிலேயே வெகுநேரமாகி விட்டதால், அனைவரும் படுக்கச் சென்றனர்.

## 2. ரங்கன் வருகை

குறித்த நாளில் ரங்கன் ஊர்வந்து சேர்ந்தான். அவன் சென்னப்பட்டணத்தில் பீ. ஏ. வகுப்பில் படித்துவிட்டு, பரீக்ஷைக்குப் போயிருந்தான். அவனுக்கு வயது 20 இருக்கும். மிகவும் நல்லவன். தன் தம்பிகளிடமும், தங்கையினிடமும் மிகவும் பிரிய மானவன். படிப்பில் அவன் வெகு கெட்டிக்காரன். அவன் படித்த பள்ளிக்கூடத்தில் அவனுக்குப் பரிசாகப் பல புத்தகங்கள் கிடைத்திருந்தன. ஆனால் அவனுக்குத் தன் படிப்பைப்பற்றிக் கொஞ்சமாவது கர்வமென்பதே கிடையாது. அதனால் அவனிடத்தில் பெரியவர்களுக்கும் சிறியவர்களுக்கும் ரொம்பவும் ஆசை.

ரங்கன் ஊருக்கு வந்ததும், அவன் தன் தங்கைக்கும் தம்பிகளுக்கும் பாடஞ்சொல்லிக் கொடுத்தான். கதைகள் சொன்னான். அவர்க

தங்கம் புடத்திலே வைக்கப்பட்டாலும், தன் நிறம் போகாது.



ளோடு விளையாடினான். சிற்சில வேளைகளில் அவன் தன் தகப்பனாரோடு கச்சேரிக்குப் போய் வருவதுமுண்டு.

ரங்கனுக்கு இங்கிலாந்திற்குப் போக வேண்டுமென்று ஆசை உண்டு. அதைப்பற்றித் தன் தாயாரிடமும், தகப்பனாரிடமும் அடிக்கடி சொல்லுவது வழக்கம். அவனுடைய பெற்றோர்களும் அதற்குச் சம்மதித்தார்கள். இங்கிலாந்திற்குப் போய் கலெக்டர் வேலைக்குப் படிக்கப் போவதற்கு வேண்டிய ஏற்பாடுகளை ரங்கன் செய்தான். அவன் பீ. ஏ. பரிக்ஷையில் முதல் வகுப்பில் தேறினதாகவும், அதனால், அவனுக்குப் பணம் கவர்ன்மெண்டாரால் கொடுக்கப்படுமென்றும் சங்கதி ரங்கனுக்குத் தெரியவந்தது.

கடைசியாய் ரங்கன் சீமைக்குப்போகத் தீர்மானித்து, தன் பெற்றோர்களுடைய உத்தரவு பெற்றுக்கொண்டான். அதற்கு வேண்டிய ஏற்பாடுகள் செய்து, குறிப்பிட்ட தினம் ஊரைவிட்டுப் புறப்பட்டான். அவன் பெற்றோர்களுக்குஅது மிகவும் விசனமாயிருந்தது. அழுகை வந்தபோதிலும் அடக்கிக்கொண்டு, அவனை சௌக்கியமாய் உடம்பைப் பார்த்துக் கொள்ளும்படிக்கும், அடிக்கடி கடிதம் எழுதும்படிக்கும் சொல்லியனுப்பினார்கள். கமலாவும், சுந்தரமும் தாங்கள் படிப்பதற்குப் புத்தகங்கள் வாங்கியனுப்பும்படியும் தங்கள் பெயருக்கே கடிதமெழுதும்படியும் சொன்னார்கள். குழந்தை கிருஷ்ணன், தான் விளையாடுவதற்கு வேண்டிய 'பொம்மை'ச் சாமான்களை வாங்கி அனுப்பும்படி கேட்டுக்கொண்டான்.

நம்தேசத்திலிருந்து இங்கிலாந்திற்குப்போக வேண்டுமானால், எந்தத்துறைமுகத்தில் கப்பல் ஏறவேண்டும் தெரியுமா? மேற்குக் கடற்கரையில் பம்பாய் ராஜதானிக்கு முக்கிய நகரமான பம்பாய் நகரத்தில் துறைமுகத்தில் கப்பல்கள் வந்து நிற்கும். அங்கேதான் கப்பலில் ஏற வேண்டும். ரங்கன் அதுவரையில் பம்பாய்க்குப் போனதில்லை. ஆகையால் அவனுக்குத் துணையாக அவன் தகப்பனார் பம்பாய்க்குப் போய் அவனைக் கப்பலில் ஏற்றிவந்தார். அவன் கப்பலில் போய்க்கொண்டிருக்கும்போதே கடிதம் எழுதவதாகவும், இங்கிலாந்திற்குப் போய்ச்சேர்ந்த பிறகும் கடிதம் விவரமாய் எழுதுவதாகவும் கூறிச் சென்றான்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

[ஸ்ரீமான் ஸி. ஆர். ஸ்ரீநிவாஸய்யங்கார், பீ. ஏ.]

### தாராபாய்

சரசமல்லன் சாருணீதேவியின் சொல்லை மறக்காது நேவார் நாட்டைக் கைப்பற்ற நிச்சயித்து, மாளவதேசத்தரசனையும் சாரங்கதேவனென்ற ஓர் நண்பனையும் சேர்த்துக்கொண்டு ராயமல்லனுடைய நாட்டின்மேல் படையெடுத்து வந்தான். ராயமல்லன் தன்னால் இயன்ற வரையில் அவனை எதிர்த்துப் போர்புரிந்து படுகாயங்களால் உடல்சோர்ந்து, தோற்கும் தருணத்திலிருந்தான். அப்பொழுது பிருதிவியும் தாரையும் தங்களுடைய ஆயிரம் போர் வீரர்களுடன் அமர்க்களத்திற் புகுந்து, சரசமல்லனையும் அவனுடைய துருப்புகளையும் இடிபோல் தாக்கிக் கடும்போர் புரிந்து, பின்னடையச் செய்தார்கள். அந்த யுத்தத்தில் தாரை செய்த வீரச்செயல்களுக்குக் கணக்கில்லை. அம்புகளும் ஈட்டிகளும் கத்திகளும் பாய்ந்துகொண்டிருக்கு மிடத்திலேயே அவளுடைய தலை காணப்பட்டது. தேவதைகளால் காக்கப்பட்டவளைப்போல், உடம்பில் ஒரு காயமுமில்லை. அவளுடைய அம்புகளுக்காவது கத்திவெட்டிற்காவது தப்பிப் பிழைத்தவனில்லை. ராயமல்லன், அதுவரையில் தாரை போர்க்களத்தில் சண்டையிட்டுப் பார்த்ததில்லை. வீரட்டானமென்று சொல்லப்பட்ட ராஜஸ்தானத்தில் தொன்றுதொட்டு வழங்கும் சரித்திரத்தில், இத்தகைய பெண்மணியைப் போன்ற க்ஷத்திரிய ரமணியைப்பற்றிக் கேட்டதில்லை. லோகங்களை உபத்திரவம் செய்து வந்த அசுரர்களை மாய்க்க அவதரித்த காளியோ, துருக்கையோ வீரலட்சுமியோ வென்று திகைத்தான்.

தன் தமையனான சங்கன் தூரதேசத்திலிருப்பதாயும், யாரையோ மணஞ்செய்து கொள்ளப் போவதாயும் கேள்வியுற்று, பிருதிவி கடுஞ்சினமடைந்து, அவனைக் கொன்று, அவனுடைய வம்சமே யில்லாமற் செய்து, தான் தடையின்றிப் பட்டத்திற்கு வரவேண்டுமென்று கருதி, அவனைத் துரத்திச் செல்லப் புறப்படுகையில், சிரோஹி நாட்டரசனுக்கு மணஞ்செய்து கொடுத்திருந்த தன் உடன்

தஞ்சம் என்று வந்தவனை வஞ்சிக்க ஆகாது.

பிறந்தாளிடத்திலிருந்து ஓர் கடிதம் வந்தது. "அன்பார்ந்த அண்ணு! என்னை மணஞ்செய்த இந்நாட்டரசன் மனிதனல்ல, காட்டு மிருகம். இராஜபுத்திரக் குறியே இல்லை. நமது வழக்கமும் ஆசாரமும் மரியாதையும் கௌரதையும் ஆண்மையும் அவனை முற்றிலும் துறந்தோடின. நமது நாட்டில் செல்வமாய் வளர்க்கப்பட்ட நான், இங்கே நரக வேதனையை அனுபவிக்கிறேன். இரவும் பகலும் அளவுக்கு மிஞ்சி அபினைக் குடிக்கிருன். வெறிகொண்டு என்னை அடித்து உதைத்துத் தள்ளிக் காயப்படுத்துகிருன். இரவில் நாய் பூனை முதலிய பிராணிகளைப்போல் கட்டிலின்கீழ் படுக்கச் சொல்லி கட்டி அடிக்கிருன். வெறியால்என்னை உபத்திரவஞ் செய்யாதவேளையில் குடிமயக்கத்தால் பிணம்போல் தூங்குகிருன். இந்த அவமானத்தையும் கொடுமையையும் ஒருவரிடத்திலேயும் சொல்லாமல் பொறுத்து வந்தேன். இனித் தாளமாட்டேன். என்னை மார்பிலும் தோளிலும் எடுத்துவளர்த்த நீ, வெல்லற்கரிய வீரனய் விளங்கிக் கொடியவர்களை நடுங்கச் செய்யும்பொழுது நான் இப்படி அனதையாய்த் தவித்தல் நன்ருே? நம்மவர்களைப் பற்றி அவன் சொல்லும் அவதூறுகளுக்கு எல்லையில்லை. கடுக வராவிட்டால் உயிர் துறப்பேனெ"ன்று எழுதியிருக்கக்கண்டான்.

இயல்பாகவே மூர்க்கனுன பிருதிவி தன் குலத்திற்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்காமல் உடல்பதறி, அந்தக் கடிதத்தைத் தாரைக்குக் காட்ட, அவள் சற்றும் தயங்காமல், "இப்பொழுதே புறப்பட்டுப்போய் அந்த நீசனைத் தகுந்தபடி தண்டித்து, நமது தங்கையை இங்கே அழைத்து வருவோம்" என்ருள். ஆனல், தன் தங்கை படும் துயரத்தையும் அவமானத்தையும், தன் உயிருக்குயிரான தாரையும் பார்க்கக்கூடாதென்ற குலச்செருக்குற்ற பிருதிவியோ தாரையைத் தடுத்து, தான் ஒண்டியாய்ப் போகப் புறப்பட்டான். ஒருநாளும் அஞ்சாத நெஞ்சும், கலங்காத மனமுமுடைய தாரை, அதுவரையிலும் அவனை விட்டு கணப்பொழுதும் பிரிந்தவளில்லை. அந்தத் தடவை தன் நாதனுக்கு ஏதோ ஆபத்து நேருமென்று அவளுடைய உள்ளத்தில் பட்டது. எவ்வளவு தடுத்தும் வேண்டியும் அவன் கேட்காததைக் கண்டு, விதியின்படியே நடக்குமென்று தன்னைத் தேற்றிக்கொண்டு, "தாங்கள் ஒண்டியாய்ப் போவது அவசியமாயிருந்தால், அப்படியே செய்யுங்கள். ஆனல் மறுபடியும் தாங்கள் அபாயமின்றி இங்கே வரும் வரையில் என் துயரம் நீங்காது. தாங்கள் வரும் வழியையே பார்த்துக் கொண்டிருப்பேனென்" என்று விடைகொடுத்தாள்.

அன்று இரவில் நடுஜாமத்தில் பிருதிவி சிரோகிக்கு வந்து, கோட்டைச் சுவரின் மேலேறி, தன் தங்கையின் அந்தப்புரத்தில் ஒருவருக்கும் தெரியாமற் புகுந்து கட்டிலில் சவம்போல் விழுந்து கிடக்கும் ராஜகுமாரனையும் கட்டிலின்கீழ் பயந்து ஒதுங்கிக் கட்டப்பட்டிருக்கும் தன் தங்கையையும் கண்டான். ராஜகுமாரியை மெதுவாய்த் தட்டியெழுப்பி, ஏறிட்டுப் பார்க்கையில், உடம்பெங்கும் புழுதி படிந்து, சவுக்கடியாலும் பற்கடியாலும் குத்துகளாலும் பட்ட புண்கள் ஆறியும், ஆருமலுமிருக்கக்கண்டு, ஒரு நாளுமில்லாத கோபவெறி கொண்டு, பற்களைக் கடித்து, கட்டாரியை உருவி, நெஞ்சில் குத்தப்போனன்.

உடனே அவனுடைய தங்கை கையைப் பிடித்துத் தடுத்து "அண்ணு! உன் கோபத்திற்கு இவனை இரையாக்கி, என்னை விதவையாக்கி என் அவமானத்தை நாடெங்கும் வெளியிடாதே. ஒருவருக்கும் தெரியாமல் இங்கிருந்து போய்விடுவோம்" என்ருள். பிருதிவி "அப்படியல்ல. இந்த மிருகத்திற்கு தகுந்த புத்தி வரும்படி செய்யாமல் விடேனெ"ன்று, படுக்கையிற் கிடந்தவனை உதைத்தான். அவன் திடுக்கிட்டெழுந்து, குடிவெறி பாதி நீங்கி, திக்கு திசை தெரியாமல், தன்னைப் பழிவாங்கும்தேவதையைப் போல் தன் மனைவி கண்களில் சினம் பொங்க நிற்பதையும், காலனுக்கும் காலனைப் போன்ற தன் மைத்துனன், உருவின கத்தியுடன் தன்னைக் கொல்ல வருவதையும் கண்டு, பயத்தால் நடுங்கி, "நீ—நீ—இங்கே—ஏன்—வந்தாய்—?" என்று பிதற்றினன். "இராஜபுத்திர மரியாதையை உனக்குக் கற்பிக்கவே வந்தேனெ"ன்று பேரிடிபோற் கர்ச்சித்துக் கத்தியை ஓங்கின பிருதிவியைக்கண்டு, பிரபுராவ் என்பவன் "என்னைக் கொல்லாதே. உன் சொற்படி நடக்கிறேன்" என்று காலில் விழுந்தான். க்ஷத்திரியத்தன்மை அணுவேனுமில்லாத அந்தப் பதரைக் கண்டு பிருதிவி சொல்லமுடியாத வெறுப் படைந்து 'நாயே! நீயும் ஆண்பிள்ளையோ? மனித உருக்கொண்ட மிருகமே! என் தங்கையை உனக்கு மனைவியாகக் கொடுத்த எங்களுடைய மடத்தன்மையையல்லவோ நோகவேண்டும். இவளுடைய காலில் விழு. இவளுடைய ஜோடுகளைத் தலையில் வைத்துக்கொண்டு 'நான் இதுவரையில் செய்ததைமன்னிக்கவேண்டும். இனி இப்படிச்செய்யே'னென்று கெஞ்சிக்கேள்" என்ருன். அவமானத்தையும் கோபத்தையும் அடக்கி, பிரபுராவ் பயந்து அப்படியே செய்தான்.

தட்டான், தாய்ப் பொன்னிலும் மாப்பொன் எடுப்பான்.



அவனுக்குப் புத்தி வந்ததென்று எண்ணிப் பிருதிவி சினந்தணிந்து, அந்நகரத்தில் சில நாள் தங்கியிருந்தான். அவனுக்கு எல்லா உபசாரமும் பணிவிடையும் செய்துவந்த பிரபுராவ், தன் குடிவெறியிலும் தன்னைப்போன்ற இராஜபுத்திரனும் மைத்துனனுமான பிருதிவியால் தனக்கு நேர்ந்த அவமானத்தை மறக்கவில்லை. வெளிப்படையாய் அதைக் காட்டிக்கொள்ளவோ அதற்கு பதில் செய்யவோ ஆண்மையில்லாமல், இரவும் பகலும் பழிவாங்க உபாயம் தேடிக்கொண்டிருந்தான்.

பிருதிவி அவனிடத்தில் விடைபெற்று, ஊருக்குப்போகப் புறப்படுகையில், சிரோகியில் செய்யப்படும் பெயர்பெற்ற மிட்டாய்களைப் பிரபுராவ், அவனுக்குக் கொடுத்தனுப்பினன். வஞ்சனை அறியாத அவ்வீரன், அவைகளைப் பெற்றுத் தாரையைக் காணவிரும்பி, கடுவேகத்துடன் சவாரிசெய்கையில், பசிமேலிட்டு அவைகளைத் தின்ருன்.

சற்றுநேரத்திற்குள் இன்னதென்று சொல்லமுடியாத ஓர் மயக்கமும் ஆயிரம் ஊசிகள் ஒரே காலத்தில் சேர்ந்து குத்துவதைப் போன்ற வலியும், தேகமெங்கும் எரிச்சலும் உண்டாகக்கண்டு, "ஓகோ! மோசம்போனேனே! இப்படி வஞ்சனையால் என் உயிருக்கு உலைவைத்தானே பாபி" என வருந்தி, எப்படியாவது உயிருடன் தாரையைப் பார்க்கவேணுமென்று, குதிரையை வாயுவேகமாய்த் துரத்திக்கொண்டுபோய்க் கோமள்மீர் கோட்டையின் கொத்தளங்களைக் கண்டு தைரியமடைந்து பல்லைக் கடித்துக் கொண்டு, தான் கீழேவிழாமல் குதிரையின் பிடரிமயிர்களைக் கைவிரல்களில் சுற்றி இறுகப் பிடித்துக்கொண்டு போகையில் மாம தேவியின் ஆலயத்திற்கருகில் வந்தான். இனித்தாளாதென்றறிந்து குதிரையிலிருந்துதள்ளாடிக்கொண்டிறங்கி, தட்டித்தடவிக்கொண்டு கோயிலில் புகுந்து, குருக்கள்மாரை அழைத்துத் தழதழத்த குரலுடன் "கொடிய—விஷம்—தாரை உடனே—பார்க்கவேண்டும்— தாமதிக்காதேயுங்கள்" என்றுசொல்லி மூர்ச்சையடைந்தான்.

அவர்கள் கடு வேகமாய்க் கோட்டைக்குச் சென்று, பிருதிவியின் பயங்கரமான நிலைமையைத் தாரைக்குத் தெரிவித்தார்கள். தாரை மனோவேகத்தைப் பழிக்கும் குதிரையின் மேற் பாய்ந்து, வெகுதூரம் சென்று விட்டாள். அந்தப் புரவியும், தான் பிறந்தது முதல் அவ்வளவு வேகமாய்ப் பறந்தோடினதில்லை. தன் அரசியின் வருத்தத்தையும் ஆத்திரத்தையும் தானும் அறிந்ததுபோலும். ஐயோ! அதைக்காட்டிலும் காலனுடைய வேகம் கடுமையன்ருே! தாரை மின்னற்கொடிபோல் கோயிலுக்குள் பாய்ந்தாள். தன் கணவனுடைய தலைமாட்டில் மிருத்யு வீற்றிருக்கக் கண்டாள். வீரசிகாமணியும் இராஜபுத்திரியுமான அம்மாது யாது செய்வாள்? அடங்காத் துயரத்தை மனவலிமையால் அடக்கி, கண்ணில் ஒரு துளி நீரில்லாமலும், உடம்பில் சற்றும் நடுக்கமில்லாமலும், கற்சிலைபோல் தன் காதலன் முகத்தையே உற்றுப்பார்த்துக்கொண் டிருந்தாள். அதற்குள் பிருதிவியின் போர்வீரர்கள் கொந்தளிக்கும் அலைகளைப்போல் வந்துகூடி, வாய்திறவாமல் கோபமும் துக்கமும் பொங்கக் கண்ணீர் வடித்துக்கொண்டு நின்ருர்கள். திடீரென்று தாரை வாய்விட்டு "மன்னவா இதோ வந்துவிட்டேன்" என்று கூவி, இருதயம் வெடித்து உயிரற்றுப் பிருதிவியின்மேல் விழுந்தாள். அத் தம்பதிகளைப் பிரிக்காது, அப்படியே எடுத்துப்போய்ச் சிதையடுக்கி, தகனம் செய்வித்தார்கள்.

தாரையும் பிருதிவியும், இணைபிரியாமல், அங்கும் மாந்தாதா முசுகுந்தன் தசரதன் முதலியவர்களைப்போல், அசுரர்களுடன் கடும் போர் புரிந்து தேவேந்திரனுக்கு உதவிசெய்துகொண்டிருக்கிருர்களென்று நினைப்பதில் பிசகென்ன? (முற்றிற்று.)

தட்டிப் பேசுவார் இல்லாவிட்டால், தம்பி சண்டப்பிரசண்டன்.

# பிரபஞ்ச வர்த்தமானம்.

## NEWS AND NOTES

**மின்சார சக்தி**

மின்சார சக்தியால் தற்காலத்தில் ஆகாத காரியமுமுண்டோ ? மின்சாரசக்தியால் ஜலதரங்கமும் வாசிக்கஆரம்பித்துவிட்டார்கள். மின்சாரத்தால் ஜலதரங்கம்வாசிக்கும்யந்திரத்தைக் கண்டுபிடித்து, கச்சேரியும் நடத்திக் காட்டுகிறார்கள். ஹார்மோனியத்தின் உதவியின்பேரில் ஜலதரங்கம் வாசிக்கப்படுகிறது. ஹார்மோனியத்தில் எவ்வளவு கட்டைகளுண்டோ அவ்வளவு கோப்பைகளில், சுரத்தின், அளவிற்குத் தக்கபடி நீர்நிறப்பி ஹார்மோனியத்திற்கு சற்று தூரத்தில் வைக்கப்படுகிறது. பாட்டரியின் மூலமாய் இந்த ஹார்மோனியத்திலிருந்து கோப்பைகளுக்கு மின்சார சக்தி செலுத்தப்படுகிறது. ஆதலால் ஹார்மோனியத்தை வாசிக்கும் அதே சமயத்தில் ஜலதரங்கமும் வாசிக்கப்படுகிறது. ஹார்மோனியத்தை ஒருவன்வாசித்தால் கச்சேரி நடக்கும் ஹாலில் பல மூலைகளிலும் ஜலதரங்கம் வைத்து வாசிக்கும்படி செய்யலாம். ஜலதரங்கம் வாசிப்பது கஷ்டமாதலால், ஹார்மோனியத்தில் நன்றாய் சாதகம் செய்துகொண்டால், இந்த யந்திரத்தின் உதவியால் அருமையான ஜலதரங்கச் கச்சேரியும் செய்துவிடலாம்.

* * *

**புதிய ரப்பர் சக்கரங்கள்.**

தற்காலத்தில் துவிச்சக்கர வண்டிகளும், மோட்டார் வண்டிகளும் ரப்பர் சக்கரங்கள் உள்ளவை. அவைகள் சரியாக ஓடவேண்டுமானால், உள்ளிருக்கும் ரப்பர் குழாய் காற்றடைபட்டு இருக்கவேண்டும். ஆனால் குண்டூசி முதலிய கூரான வஸ்துக்கள் குத்திவிட்டால் மேற்கூறிய குழாய்களிலிருந்து காற்று வெளியேறசக்கரங்கள்சரியாய்ச்செல்வதில்லை. இதை உத்தேசித்து அமெரிக்காவில் ஒரு கம்பெனியார், ஓர்வித மெழுக்குத் திராவகத்தைக் கண்டுபிடித்திருக்கின்றனர். அதை ரப்பர் உட்குழாய்க்குள் விட்டால், அது காற்றிலடைபட்ட சக்கரத்தைப்போலவே இருக்கின்றதாம்; ஆனால் அதன் அசௌகர்யங்களில்லை. மற்றொரு கம்பெனியார் உட்குழாய்க்குப் பதிலாக ரப்பரின் உட்புறத்தில் நெருக்கமாக சிறு ரப்பர் பீடங்கள்வைத்து சக்கரங்கள் அமைத்திருக்கின்றனர். அது வெகு லேசாக ஓடுவதோடு, நீடித்த காலம் இருக்கின்றதாம்.

* * *

**நிலக்கரிக்குப் பதிலாக எண்ணெய்.**

சிறந்த தொழிற்சாலைகளும், நீராவி யந்திரங்களும் ஏற்படவும் இங்கிலாந்து முன்னுக்கு, வரவும், நிலக்கரி உதவி செய்தது. நிலக்கரி, சுரங்கங்களிலிருந்து அபரிமிதமாய் எடுக்கப்பட்டு வந்தபோதிலும் எக்காலத்தும் அது கிடைக்குமென்பது நிச்சயமில்லை. காலக் கிரமத்தில் சுரங்கங்கள் அதிக ஆழம்போவதால், நிலக்கரி வெட்டுதல், பூமிமட்டத்திற்குக் கொண்டுவருதல் முதலியவற்றின் கூலி அதிகமாக, அதன்விலை யேறுகின்றது. அதனால் நிலக்கரிக்குப் பதிலாக யந்திரங்கள் வேலைசெய்ய எதை உபயோகிக்கலாமென பல சாஸ்திர நிபுணர்கள் யோசித்து, மண்ணெண்ணெய் முதலியவற்றை உபயோகிக்கலாமெனத்தீர்மானித்திருக்கின்றனர். இவ்வெண்ணத்துடன் இங்கிலாந்திலுள்ள ரெயில்வே கம்பெனியார்கள் சில எஞ்சின்களுக்கு எண்ணெயை விட்டுப் பரீட்சைபார்த்ததில், எண்ணெய் நிலக்கரியைவிட பலவிஷயங்களில் சிலாக்கியமானதெனத் தீர்மானித்திருக்கின்றனர். ஆனால் பயமென்னவெனில், இம்மாதிரி ரயில்வே கம்பெனியார் எண்ணெயை உபயோகிக்க ஆரம்பித்தால், எண்ணெயின் விலை உயருமே என்பதுதான்.

* * *

**ஸ்பிட்ஸ்பேர்கன் தீவில் நிலக்கரி.**

ஆனால் ஆங்கில வியாபாரிகள் நிலக்கரிக்காக அதிகம் விசாரப்படவேண்டியதில்லையென்று எதிர் கட்சியார் ஒருவர் கூறி வருகின்றனர். இங்கிலாந்தில் நிலக்கரி யில்லாவிடின், வடக்கே அட்லாண்டிக் மகாசமுத்ரத்திலுள்ள ஸ்பிட்ஸ்பர்கன் என்னும் தீவில் ஏராளமான நிலக்கரித் தளங்கள் இருக்கின்றன. அவைகளில் பெரும்பாலானவை ஆங்கிலேய வியாபாரிகளுக்குச் சொந்தமானவை. ஆகையால் அங்கே வேலைசெய்வதால், ஆங்கிலேய கம்பெனிகளுக்கு வேண்டிய நிலக்கரி அகப்படும் என்று இவர்கள் கூறுகின்றனர்.

* * *

தண்ணீர் வெந்நீரானாலும் நெருப்பை அவிக்கும்.

7- JAN 1921
MADRAS



ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்

SRI LOKAMANYA BALGANGADHAR TILAK


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII | ரௌத்திரி: ஆடி-ஆவணி : : 1920-ம்ளு ஆகஸ்ட்-செப்டம்பர் | பகுதி 2-3


## தமிழ்

### TAMIL

[ஸ்ரீமான் ச. தா. மூர்த்திமுதலியார்.]

என்னுடைப்பாஷையே எந்தனுக்குயர்வாம்;
என்னுடைமக்களே எந்தனுக்குரியர்;
அந்நிய பாஷையால் அமையுமோ நன்மை ?
அந்நியமக்களால் அடைவமோ பெருமை?
இப்படிநினைப்பது இயல்பதாம் உலகில்;
நம்முடைமக்களோ நலமிலதாகிய
அந்நியர் நடையையும் அவரது உடையையும்
சென்றனர்நாடி சேர்ந்தனர்கூடி;
இன்றோ அறிவர் இதினற் பெறுபயன்?
தன்பெரும்பாஷையைத் தடிகொடுமோட்டி,
அந்நியபாஷைக்கு அவாவியே நின்றனர்.
அந்நியமதனில் அளிக்குமோ நன்மையை ?
இதயந்தன்னில் இருக்குமோவூன்றி?
உயிர்கொடுபோகும் உரிமையாளனும்,
எமன்வருமன்னுள் ஏழை மாந்தர்காள்!
ஏதுக்கழுவீர் எவ்வுரை பகருவீர்?
உம்முடைப்பாஷைதான் உதவுமேயல்லால்,
அந்நிய பாஷையால் அமையுமோவதுகால்,
மக்கள் மனைவியும் மற்றுளார் அனைவரும்,
உற்ற நண்பரும் உறுதுணையாளரும்,
சுற்றிலுஞ்சூழ்ந்து நிற்குமச்சமயம்
உம்முடைக்கருத்தை உரைப்பதுஉமெதனல்?
'குட்மார்நிங்' என்பிரோ ' குட்நைட்' என்பிரோ?
கம்நியர்' என்பிரோ 'கம் குவிக்' என்பிரோ?
எந்தையினறையை எவ்விதம் ஏற்றுவீர்?
அந்நிய பாஷையால் அமையுமோ நாட்டம்?
உம்முடைக்கருத்தை உரையிடவிசையுமோ?
மாற்றங்கொள்ளவும் மதிமயங்கிடவும்,
ஆகுமேயல்லால் அகத்தெளிவமையுமோ?
இதனையறிந்தினி எழுவீர் இன்னே.
நன்றேநவில்வீர் நம்முடைத் தமிழ்மொழி.
தம்தம் பாஷையே தாய்ப்பாஷையாமால்,
தயவுடன் தமிழைத் தாங்குமின் இன்றே.
தாய்மொழியாகியும் சேய்மொழியாகியும்,
நல்லுரையாகியும் சொல்லுரையாகியும்,
உதவுமிம்மொழிபோல் உண்டோவேறு;
உம்முடைப்பாஷையில் உளபலநூற்களை
ஊன்றிப்படிமின் ! உரைப்படி செல்மின்!
இதினற் பெறும்பயன் இனிதே விளக்கமாம்.
வாழ்நாளதனிலே வழாதுவாழ்மின்!
வீழ்நாளொன்றோ விளங்குவதின்றால்,
இன்றே பெறும்பயன் இன்றேபெறவும்,
நன்றே செய்யவும் நயம்பட வுரைக்கவும்,
அறம்பலதாங்கவும் அன்புகொண்டுலவவும்
தமிழ்மொழிமலியவும் தமிழ்த்தாயோங்கவும்
தமிழ்நாடியாவும் தமிழ்மணங் கமழவும்,
தமிழ்முரசறையவும் தமிழ்க்கொடியுயரவும்
தமிழ்மணி யிசைக்கவும் தமிழ் ஒளிவீசவும்,
தமிழ் தமிழ் என்ற தமிழ் ஒலி முழங்கவும்,
தமிழ்ப்பெருந்தெய்வம் தமிழ் ஆசி கூறவும்,
வாழ்நாளதனில் வழுத்துமின் இறையை.

தண்ணீர் குடித்த வயிறும், தென்னோலையிட்ட காதும் சரி.

# விவேக போதினி

தொ.13] ரௌத்திரி: ஆடி - ஆவணி [ப. 2 - 3


## யுதிஷ்டிரர்

## YUDHISHTIRA

யுதிஷ்டிரர் பணிவுடன் கேட்டதற்குப் பீஷ்மர் சொல்லுகிறார்:—"நீ சொல்வது உண்மையே. நான் ஆயுதங்களை வைத்தபொழுது என்னை நீங்கள் பாணங்களுக்கிரையாக்கலாம். யுத்தத்தில் அடிபட்டு விழுந்தவனோடும், ஆயுதங்களை விட்டெறிந்தவனோடும், கவசமும் கொடியும்முறிபட்டவனோடும், பயந்தலைகிறவனோடும், சரணமடைந்தவனோடும், ஸ்திரீயோடும், பெண்ணின் பெயரை வைத்துக்கொண்டிருப்பவனோடும், ஒரே புத்திரனை உடையவனோடும், அல்பனோடும், காயமடைந்து யுத்தஞ்செய்ய முடியாதவனோடும், நான் சண்டையிடுவதில்லை. மேலும், ஏதாவது அபசகுனத்தைக் கண்டால் ஆயுதம் எடுக்கமாட்டேன். உங்களுடைய சேனையில் சிகண்டியென்று ஓர் யுத்தவீரனிருக்கிறான். அவன்,முன்பு பெண்ணாயிருந்து இப்போது வரபலத்தால் ஆணாயிருக்கிறான். ஆகையால், அவனுடன் நான் யுத்தஞ்செய்யமாட்டேன். அர்ச்சுனன் ஒருவனைத் தவிர இந்த மூன்று லோகங்களிலும் வேறொருவனுடைய பாணங்கள் என்னை ஒன்றும் செய்யமாட்டா. இதை அறிந்து, அவன் சிகண்டியைத் தனக்கு முன்னால் தேர்த்தட்டில் வைத்துக்கொண்டு என்னுடன் யுத்தஞ்செய்யவந்தால் நான் ஆயுதங்களை வைத்துவிடுவேன். அப்பொழுது என்னை விஜயன் கூர்மையான சரங்களால் அடித்துத் தள்ளட்டும். இதைத்தவிர நீங்கள் ஜயமடைவதற்கு வேறு உபாயமில்லை."

பாண்டவர்களும் கிருஷ்ணனும் பீஷ்மாசாரியரை அடிபணிந்து விடைபெற்றுக்கொண்டு தங்கள் இருப்பிடம் வந்துசேர்ந்தார்கள்.

அப்படியே பீஷ்மாசாரியர் யுத்தத்திலிருந்து விலகினபிறகு, துரோணாசாரியர் சேனைத் தலைவராய் நியமிக்கப்பட்டுக் கோரமான யுத்தஞ் செய்து, பாண்டவப் படையைச் சிதற வடித்து, எந்த வீரனும் தலைகாட்டாமல் ஓடச் செய்துகொண்டிருந்தார். அதைக் கண்டு பாண்டு புத்திரர்களும் கிருஷ்ணனும் மிகுந்த கவலை கொண்டார்கள். யுதிஷ்டிரர் கிருஷ்ணனைப் பார்த்து, "இதற்கென்ன செய்வது? சமுத்திரத்தின் அலைகளைப்போல் ஆபத்துகள் ஓயாமல் வந்துகொண்டிருக்கின்றனவே. இந்தத் துரோணாசாரியர் யுத்தத்திலிருந்து விலகாமலிருந்தால் நமது சைன்னியம் சீக்கிரத்தில் அழிந்து, நாமும் ஆயுளுள்ளவரையில் வனவாசஞ் செய்யும்படி நேரும். எல்லாவற்றிற்கும் உம்மையே சரணமடைந்திருக்கிறோம்; நீரே எங்களுக்குக் கதி" என்றார். கண்ணன் "இதற்கு நான் என்ன செய்வேன்? இவரை எப்படியாவது ஆயுதங்களை வைத்துவிட்டு யுத்தத்திலிருந்து விலகச் செய்யவேண்டும். நீங்கள் தருமமாகவோ அதர்மமாகவோ அந்தக் காரியத்தை முடிக்கவேண்டியது. சத்துருவை ஜயிக்கும் விஷயத்தில் எந்த உபாயத்தைச் செய்தாலும் பாபமில்லையென்பது யுத்த நீதி. அசுவத்தாமா கொல்லப்பட்டால் துரோணர் யுத்தத்தை நிறுத்திவிடுவார். ஆகையால், நம்முள் யாராவது ஒருவர் துரோணரிடம் சென்று, அவர் கேட்கும்படி, "அசுவத்தாமன் யுத்தத்தில் கொல்லப்பட்டானென்று சொல்லுங்கள்" என்றார். அருச்சுனன் அந்த யோசனையைக் கொஞ்சமேனும் ஒப்புக்கொள்ளவில்லை. மற்றவர்கள் அதை அங்கீகரித்தார்கள். யுதிஷ்டிரர் வெகுநேரம் தயங்கி, பிறகு அதை ஏற்றுக்கொண்டார்.

இதற்கு முன்பே, பீமசேனன் மாளவ தேசத்தரசனான இந்திரவருமனுடைய போர் யானையைக் கதையால் அடித்துக்கொன்றிருந்தான். அதற்கு அசுவத்தாமனென்று பெயர். அந்தத் தைரியத்தால் அவன் துரோணருக்கருகில் சென்று, வெட்கத்துடன், "அசுவத்தாமா கொல்லப்பட்டான்" என்று, சைன்னியமெங்கும் கேட்கும்படிக் கூவினான். இந்த விபரீதமான வார்த்தையைக் கேட்டு,





துரோணர் சற்றுத் தயங்கி, மனந் தளர்ந்து, ஆயினும் தன் புத்திரனுடைய பராக்கிரமத்தையும் திறமையையும் யோசித்து, தன்னைத் திடப்படுத்திக்கொண்டார். அந்த ஆத்திரத்தால் பாண்டவ சைன்னியத்தின்மேல் காலாக்கினியைப்போல் விழுந்து எரித்துக்கொண்டிருக்கையில், தன் தேருக்கெதிரில் அக்கினிபகவானும்,விசுவாமித்திரர்,ஜமதக்னி, பரத்துவாஜர், கௌதமர்,வஸிஷ்டர், காசியபர், அத்திரி, கர்க்கர்,வாலகில்லியர்கள்,மரீசிபர்கள், பிருகுக்கள், அங்கிரசுகள் முதலிய மகாரிஷிகளும் நிற்கக்கண்டார். துரோணாசாரியர் அஷ்டவசுக்களில் ஒருவருடைய அவதாரமாகையால், அவர் பூமியில் வசிக்கவேண்டிய காலம் முடிந்ததை அறிந்து, அவரை மறுபடியும் தேவலோகத்திற்கு அழைத்துப்போக அவர்கள் வந்தார்கள். அந்த மஹானுபாவர்கள் "துரோணரே! நீர் பூமியில் வசிக்கவேண்டிய காலம் முடிந்துவிட்டது. மேலும், இப்பொழுது நீர் செய்யும் காரியம் உமக்குத் தகுந்ததேயல்ல. ஆயுதங்களை விட்டெறியும். வேத சாஸ்திரங்களைக் கரைகடந்து, சத்தியத்தையும் தருமத்தையும் கருணையையும் அனுஷ்டிக்கும் பிராமணராயிருந்தும், அதை அறியாது இன்று பிரமாஸ்திரத்தால் எண்ணிறந்த ஜனங்களைக் கொன்றுவிட்டீர். பிராமணனுக்கு ஏற்ற தொழிலைவிட்டு, க்ஷத்திரியன் அனுஷ்டிக்கவேண்டிய தருமத்தைக் கைக்கொண்டீர். ஆபத்துக்காலத்தில் மாத்திரம் அனுசரிக்கவேண்டிய தருமத்தை ஆபத்து நீங்கின பிறகும் அனுஷ்டித்துக்கொண்டு வருகிறீர். உமது ஞானத்தை மறைத்திருக்கும் இந்த அஞ்ஞானத்தை விலக்கி, சாதுக்களின் ஆசாரத்தைக் கைக்கொள்ளும்.இவ்வுலகத்தை விட்டு நித்தியமான உமது பதவியை அடையவாரும்" என்று சொல்லி மறைந்தார்கள்.

துரோணர், முன்பே பீமனுடைய வார்த்தையால் மனந்தளர்ந்து, மகரிஷிகளின் எச்சரிக்கையால் யுத்தத்தில் வெறுப்படைந்து, தன்னைக் கொல்வதற்காகவே பிறந்திருக்கும் திருஷ்டத்யும்னன் தனக்கெதிரில் வருவதையும் கண்டு, தன் காலம் முடிந்துவிட்டதென்றறிந்தார். யுதிஷ்டிரரைப் பார்த்து, "தருமபுத்திரா! மூன்று லோகங்களின் சாம்பிராஜ்யம் உனக்குக் கிடைத்தாலும், நீ பொய் சொல்லமாட்டாய். பிறந்ததுமுதல் விளையாட்டுக்காவது நீ பொய் சொன்னதில்லை. ஆகையால், என் புத்திரனை அசுவத்தாமன் யுத்தத்தில் கொல்லப்பட்டானோ வென்று உன்னைக் கேட்கிறேன். வேறு எவருடைய வார்த்தையையும் நம்பமாட்டேன்" என்றார்.

இப்படித் தன்னை நேரில் கேட்டு, தான் அனுஷ்டிக்கும் தருமத்தையே பிரமாணமாக வைத்த தன் ஆசாரியரிடத்தில் பொய்சொல்லத் தயங்கி நிற்கும் யுதிஷ்டிரரைப் பார்த்து, சர்வலோகநாதனான கண்ணன், "தருமநந்தனா! துரோணரால் நாங்கள் மடியாதபடி காப்பாற்றும். இவர் கோபங்கொண்டு இன்னும் சற்று நேரம் யுத்தஞ்செய்தால் நமதுசைன்னியத்தில் ஒரு பிராணிகூடப் பிழைக்காது. ஓர் உயிரைக் காப்பதற்குச் சொல்லும் பொய்யால் பாபம் நேராது. தன்னை வஞ்சிக்கும் ஸ்திரீகளிடத்திலும், பசுக்களையும் அந்தணர்களையும் காப்பதற்காகவும், விவாகத்தைச் செய்விப்பதற்காகவும் பொய் சொல்லுவதால் பாபமில்லை" என்றார். பீமன் "அண்ணா! துரோணருடைய மரணத்திற்கு உபாயத்தை நான் அறிந்தவுடன் மாளவ தேசத்தரசனான இந்திரவருமனுடைய அசுவத்தாமாவென்ற யானையை அடித்துக்கொன்றேன். ஆகையால், அசுவத்தாமா கொல்லப்பட்டானென்று நீர் சொல்வது பொய்யாகாது. கண்ணனுடைய யோசனையை ஒப்புக் கொள்ளும். முன்பு இதே வார்த்தையைத் துரோணரிடத்தில் நான் சொல்லியும் அவர் நம்பவில்லை. உமக்கு ராஜ்யமும் ஜயமும்வேண்டியிருந்தால்,நாங்களும் நம்மை நம்பியிருக்கும் இந்தக் கோடானுகோடி சைன்யமும் மடியவேண்டாமென்றிருந்தால், நாம் செய்த பிரதிக்கினையை நிறைவேற்றாத பாபம் நமக்கு வரவேண்டாமென்றிருந்தால், அசுவத்தாமாகொல்லப்பட்டானென்று சொல்லும். துரோணர் அதைக் கேட்டு ஆயுதங்களை வைத்துவிடுவார். பிறகு திருஷ்டத்யும்னனும் அருச்சுனனும் அவரைக் கொல்வார்கள். உண்மையையே நீர் சொல்வீரென்று லோகப் பிரஸித்தமானதால் அவர் உம்மையே நம்பியிருக்கிறார்" என்றான். பீமனுடைய வார்த்தையாலும், கிருஷ்ணனுடைய யோசனையாலும், ராஜ்யமும் ஜயமும் தனக்குக் கிடைக்கவேண்டுமென்ற ஆசையாலும், ஒருவராலும் தடுக்கமுடியாத

பூர்வ கர்மரூப பலனான விதியாலும் தூண்டப்பட்டு, பொய்யைச் சொல்ல இஷ்டமில்லாமல் உண்மையைச் சொல்லவும் விரும்பி, அசுவத்தாமா கொல்லப்பட்டானென்று தெளிவாய் உரக்கச்சொல்லி, அசுவத்தாமாவென்ற வார்த்தைக்குப் பிறகு, யானையென்று மெதுவாய்ப் பிறர் கேட்கமுடியாதபடி சொன்னார்.

அதுவரையில் அவருடைய ரதமும் குதிரைகளும் நான்கு விரல் உயரத்துக்குமேலே பூமியைத் தொடாமல் நின்றுகொண்டிருந்தன. அவர் அனுஷ்டித்துவந்த தரும தேவதை அதுவரையில் அவரைக் காத்து ரதத்தைத் தாங்கிக்கொண்டிருந்தது. அவர் தருமத்திலிருந்து விலகி, லௌகிக மேன்மைக்கு ஆசைப்பட்டவுடன், ரதமும் குதிரைகளும் பூமியில் விழுந்தன.

யுதிஷ்டிரருடைய வார்த்தையைக் கேட்டு அவர் சொல்வது நிஜமென்று நம்பி துரோணர், புத்திரனிறந்த சோகத்தால் ஆயுதங்களை விட்டெறிந்து, தான் அவ்வுடலைத் துறந்து உத்தம கதியையடைய நிச்சயித்தார். அந்தச் சமயத்தை எதிர்பார்த்துக்கொண்டிருந்த திருஷ்டத்யும்னனும் பார்த்தனும் அவரைக் கொன்றார்கள்.

---

**அசுவத்தாமன்** சிரஞ்சீவியர் எழுவருள் ஒருவன். துரோணாசாரி புத்திரன். இவன் தாய், கிருபாசாரியின் தங்கையாகிய கிருபி. பாரத யுத்த ஆரம்பகாலத்தில் சேனாதிபதித்துவம் பெறவொட்டாது கண்ணன் சூழ்ச்சியால் தடுக்கப்பட்டவன். யுத்தத்தில் அசுவத்தாமாவென்னும் பெயர்கொண்ட யானையொன் றிறப்ப, தருமர் வாயால் "அசுவத்தாமா மாஹதா" எனச் சொல்லக் கோரிய கண்ணன் விருப்பின்படி "அசுவத்தாமா ஹதா" என்றதோடு "குஞ்சரம்" எனக் கூட்டிச்சொல்லுகையில், குஞ்சரமென்பது கேட்கவொட்டாது கண்ணன் வெற்றிச் சங்கத்தொனியெழுப்ப, தருமன் சொல்லாதலின் உண்மையெனத் துரோணர் மதிமயங்கி மூர்ச்சையடைய, திருஷ்டத்யும்னன் அவரைக் கொன்றனன். அதனாற் கோபங்கொண்டு, திரௌபதிபெற்ற பிள்ளைகளையெல்லாம் கொன்று பழிவாங்கி வியாச சாபத்தால் ரோகியாய், அதனோடு திருப்தியடையாது, பரீக்ஷித்தையுங் கொல்ல முயன்றனன். பரீக்ஷித்து கண்ணனாற் காக்கப்பெற்றான்.

# குமரக்கடவுள் ஔவையாரை ஆட்கொண்ட தமிழ் விளையாட்டு

## HOW GOD KUMARA TOOK UNTO HIS GRACE POETESS AUVVAI

[ஸ்ரீமான் எஸ். ஏ. திருமலைக்கொழுந்து பிள்ளை, பி.ஏ.,]

கல்விக்கடலைக் கரைகண்ட நமது ஔவைப் பிராட்டியாரை ஆட்கொண்டு அவளது வாக்கிலிருந்து சில உறுதிகளைத் தமிழுலகத்திற்குக் கொடுக்க வெண்ணங்கொண்ட குமரக்கடவுள், ஒரு சமயம் கொடிய வெயிலில் ஔவையார் நிழல்தேடி வருவதைக் கண்டு, அவள் வரும் வழியிலிருந்த நாவல் மரத்தில் ஆயர்குலச் சிறுவன்போல் உருவெடுத்து, அதிலிருந்த கனிகளைப் புசித்துக்கொண்டிருந்தார்.

பாட்டியார் அத்தருவைக் கிட்டலுமே, அதன் மேல் ஒரு சிறுவனிருப்பதைக் கண்டு, நீர் வேட்கை மேலீட்டால், அவனை நோக்கி 'அப்பா குழந்தாய், எனக்கு இரண்டொரு பழம் போடமாட்டாயா?' வெனக் கேட்டாள்.

குமரவேள் அவளை நோக்கிப் 'பாட்டியாரே, உமக்குச் சுட்ட பழம் வேண்டுமோ? அல்லாக்கால் சுடாத பழம் வேண்டுமோ? சொல்லும்' எனக் கேட்டார்.

குழந்தைச் சிவனாரது கருத்தை யோராத மூதாட்டி, சுட்டபழமாயின் நாவைப் பொசுக்கின் யாது செய்வதென வெண்ணங்கொண்டோ அல்லது வேறெதனை நினைத்தோ, பையனை நோக்கி 'எனக்குச் சுடாப்பழமே வேண்டு' மெனக் குறையிரந்தாள்.

உடனே முருகக்கடவுள் மரத்தை உலுக்கினார். அப்போழ்து நன்கு கனிந்த பழங்களும் கனியாதசெங்காய்களும் மரத்திலிருந்து மணற்றரையில் வீழ்ந்தன. ஔவையார் அவற்றுள் நன்கு கனிந்த பழங்களைக் கையிலெடுத்து மணலைப் போக்குதற்காக வாயாலூதினள். அப்போழ்து கடவுள் அவளை நோக்கி, 'பாட்டியாரே, நன்றாய் ஊதும், பழம் சுடப்போகிறது; ஆயினும் நீர் கேட்டது சுடாப்பழமாகவிருப்ப, இப்போழ்து சுட்ட பழங்களை நாடாநின்றீரே! இஃதென்ன பேதமை' யென அசதியாடினர்.

அப்போழ்து, அம்மையார் 'அந்தோ, நான் இச்சிறுவனது கருத்தை யாராய முடியாத

தப்பை அடித்தவன் தாதன், சங்கு ஊதினவன் ஆண்டி.



அறியாமைக்கென்செய்வேன்' எனத்துக்கித்து தனது கதியை நினைந்து,

கருங்காலிக் கட்டைக்கு நாணாக் கோடாலி
இருங்கதலித் தண்டிற்கு நாணும்—அருங்கானிற்
காரெருமை மேய்க்கின்ற காளைக்கு நான்தோற்ற
தீரிரவு துஞ்சாதென் கண்.

[பொழிப்புரை: மிக்க முரண்படைத்த கருங்காலிக் கட்டையையும், எளிதே துண்டாட வல்ல பதம் வாய்ந்த கோடரி, ஈரம்வாய்ந்து எளிதே முறிபடும். வாழைத்தண்டைத் தரிக்கப்புகின் பதங்கெட்டு வலிகுன்றும். அவ்வாறே எப் புலவர்களது அறிவையும் புறங்கண்டு அவர்களை வெற்றிகொள்ள வல்ல நான், இப்போழ்து கரிய எருமைகளை மேய்க்கின்ற இந்தக் காளைக்குத் தோற்ற புதுமையை என் சொல்வேன்! இந்த அவமானத்தால் எனது கண்களுக்கு இரண்டு இரவு தூக்கம் வராதுபோலும்] என வெண்பாமுகத்தாற் பாடினள்.

அப்போழ்து குமரவேள் 'இக்கிழவி நமது மாயவலையிற் சிக்குண்டு நம்மைத் தெளிகின்றிலளே'யென வுன்னி, தமது திப்பிய உருவொடு தரிசனங் கொடுத்தார்.

உடனே ஔவையார் பரசவமுற்று 'ஏ, சரவணபவனே, உனது அற்புதத் திருவிளையாட்டை மதியாது ஏமாந்த எனது பேதமையை யென்சொல்வேன்' எனச் செப்பிப் பலவிதத்தாலும் சிவகுமாரனை வழுத்தினாள்.

பின்பு அறுமுகக்கடவுள் அவளை மற்றும் அருளுடன் நோக்கிப் 'பாட்டியாரே, யான் உன்னை ஆட்கொண்ட கருத்தைச் சொல்கிறேன். கல்வியைக் கரைகண்ட ஏ மூதாட்டி, உனது அரிய வாக்கினின்று உலகத்தாருக்குச் சில வுறுதிகளைத் தெற்றெனக் காட்டுதற் பொருட்டே இவ்விளையாட்டைக் கொண்டேன். முதற்கண் உனது வாக்கினின்று பெரியதித்து வென்பது வெளிவரட்டும்' என ஆக்ஞை செய்தார்.

உடனே பாட்டியார் முருகவேளை நோக்கி,

பெரியது கேட்கின் தனிநெடு வேலோய்,
பெரிது பெரிது புவனம் பெரிது;
புவனமோ நான்முகன் படைப்பு;
நான்முகனோ கரிய மாலுந்தி வந்தோன்;
கரிய மாலோ அலைகடற் றுயின்றோன்;
அலைகடலோ குறு முனி கையி லடக்கம்;
குறுமுனியோ கலசத்திற் பிறந்தோன்;
கலசமோ புவியிற் சிறுமண்;
புவியோ அரவினுக் கோர்தலைப் பாரம்;
அரவோ உமையவள் சிறுவிரன் மோதிரம்;
உமையோ இறைவர் பாகத் தொடுக்கம்
இறைவரோ தொண்டருள்ளத் தொடுக்கம்
தொண்டர்தம் பெருமையைச் சொல்லவும்
[பெரிதே!

என அடுக்கடுக்காய் கூறி அடியார்களே எவரினும் எவற்றினும், பெரியோரெனக் காட்டினள்.

பின்னர், குமரவேள் மற்றும் அவளை இனிதுநோக்கி "பாட்டியாரே, பெரியது உள்ளபடி எஃதென்பதை படிப்படியாய் மிகவழகாய்க் காட்டினீர். இனி 'அரியதெது', 'இனியதெது', 'கொடியதெது' எனும் கேள்விகளையும் உலகமுய்ய வெளியிடுக" வென ஆணைதந்தார்.

அதற்கிணங்கப் பாட்டியாரும் அகவற்பாமுகத்தால் தக்கவிடை பகர்ந்தாள். (பாடல்களை தனிப்பாடற்றிரட்டிற் கண்டுகொள்க.)

இவ்வாறு பாட்டியாரை யாட்கொண்ட குழந்தைச் சிவனார் பொருக்கென மறைந்தனர்.

முருகவேள் ஔவைப் பிராட்டியரை யாட்கொண்ட விந்தையைக் கூறினோம். இனி குமரக்கடவுள் முட்டையெனப் பெயர்கொண்டு பொய்யாமொழிப் புலவனது செருக்கை யடக்கிய தமிழ்விளையாட்டை விளக்கஞ் செய்வாம்.

---

**காவிரி.**—ஒரு புண்ணிய நதி. இது அகத்திய முனிவர் கமண்டலத்தைத் கவேரகிரியில்விநாயகராற் கவிழ்த்துற்பத்தி செய்யப்பட்டது. நதியின் வளத்தினாலே சோழநாடு புனநாடெனப்படும். இந்நதியின் இருகரை யோரங்களிலும் எண்ணிறந்த சிவாலயங்களுள். இராஜரிஷியும், யோகிகளிற் சிறந்தவருமாகிய கவேர முனிவர் பிரமதேவரைக் குறித்து அருந்தவஞ்செய்து அவரருளால் விஷ்ணுமாயையைத் தம் புத்திரியாக அடைந்து. முத்திபெற்றனரென்றும், பின்னர் அக்கன்னி பிரமதேவர் கட்டளைப்படி நதிவடிவாகிப் பிரவகித்துக் கவேர கன்னி, காவிரியெனப் பெயரேற்றனன் என்றும் ஆக்கினேயபுராணம் இரண்டாம் பாகம் காவேரி மகத்துவம் 23-ம் அத்தியாயம் கூறும்.

தம் இனம் தம்மைக் காக்கும், வேலி பயிரைக் காக்கும்.

# பிரதம கல்விச்சாலைகளின் அமைப்பு

## ELEMENTARY SCHOOLS : ORGANISATION

[ஸ்ரீமான் பி. எஸ். சீதாராமய்யர், பி. ஏ., எல். டி.]

இதற்கு முன், பிரதம கல்விச் சாலைகளின் நோக்கத்தைப்பற்றி விவரித்தெழுதினோம். ஒவ்வொரு உபாத்தியாயரும் தனது பிள்ளைகள் எவ்விதமான பயிற்சியடைய வேண்டுமோ, அதையே தனது நோக்கமாகக் கொண்டு அதற்கேற்றவாறு போதிக்கவேண்டும். நோக்கமின்றிப் புகட்டப்பட்ட கல்வியானது, மணியைக் குறிப்பிக்கும் முகமில்லாத கடியாரத்தைப்போல் நிஷ்ப்ரயோஜனமாகும். கிராமங்களிலிருக்கும் பள்ளிக்கூடங்களில் கிராமத்தாருக்கு உபயோகமான விஷயங்களே போதிக்கப்படவேண்டும். 'எண்ணுமெழுத்தும் கண்ணெனத்தகும்.' ஆயினும் இவைகளை மாத்திரமே கற்பிப்பது பூரணமான கல்வியாகமாட்டாது.' முன்பே விவரித்திருப்பதுபோல் நமதுவாழ்க்கையில் நேரக்கூடியகஷ்டங்களைச் சாமர்த்தியத்துடன் நிவர்த்தித்துக்கொள்வதற்கும் அல்லது அச்சமயங்களில் சிறிதேனும் சஞ்சலப்படாமல் சரியாய் நடந்துகொள்ளுவதற்குமேற்ற சக்தியையும் திறமையையும் ஒவ்வொருவருக்கும் புகட்டுவதே கல்வியின் முதன்மையான நோக்கமாகும்.

கிராமத்தாருக்குச் சிறிதேனும் உபயோகமில்லாத விஷயங்களைப் போதிப்பதனால், பள்ளிக்கூடங்கள் கிராமத்தாரால் கவனிக்கப்படாமலிருக்கின்றன. படிப்பதும் எழுதுவதும் கணக்குபோடுவதும் தவிர, அக்கிராமத்தின் விவகாரத்தைக் குறித்தும், அக்கிராமத்தில் பெரும்பான்மையாய் வழங்கும் கைத்தொழிலைக் குறித்தும், பிள்ளைகளுக்குப் போதிக்கவேண்டும். உழவு நடவு காலங்கள், எருபோடவேண்டிய விதங்கள், எரு உபயோகப்படுத்துவதால் உண்டாகும் நன்மைகள், பயிர்களுக்கேற்ற எருக்களின் விவரங்கள் முதலான முக்கியமான விஷயங்கள் ஏராளமாகக் கற்பிக்கவேண்டும். மேலும் பிள்ளைகள் எழுதும் வியாசமும், போடும் கணக்குகளும், கிராமத்தாரின் சாதாரண விவகாரங்களுக்குச் சம்பந்தப்பட்டதாயும், கற்பிக்கும் பூலோக பாடங்கள் கிராமத்தைப்பற்றினதாயுமிருக்கவேண்டும். கல்விச்சாலைகளில் புகட்டப்பட்ட விஷயங்களும், பாடங்களும், பிள்ளைகளின் இல்வாழ்க்கையை அநுசரித்ததாயும், நித்திய விவகாரங்களையொட்டியதாயும் இருக்கவேண்டும். தற்காலத்திய கிராமப் பள்ளிக்கூடங்களில் போதிப்பது பெரும்பான்மையாய்ப்பிள்ளைகளது இல்வாழ்க்கையையநுசரித்ததாக இல்லாமலிருப்பதே, கல்வியின் அபிவிருத்திக்குப் பெரிய தடையாயிருக்கிறது. கிராமங்களிலிருக்கும் சிறுவர் சிறுமிகளுக்கு அவரவர்கள் வீட்டு அலுவல்களைக் கவனித்த பிறகு, கிடைக்கக்கூடிய காலங்களில் போதிப்பதே உசிதமாகும். ஊரில் முக்கியமான திருவிழாக்காலங்களையும், நடவு அறுவடை காலங்களையும் பள்ளிக்கூட விடுமுறையாக அநுசரிப்பது, தற்காலத்திய சனி ஞாயிறு கிறிஸ்மஸ் முதலான விடுமுறைகளை விட அதிக நன்மையை விளைவிக்கும். கிராமங்களில் வீட்டு நடவடிக்கைகளுக்கும், பள்ளிக்கூட பாடங்களுக்கும் சம்பந்த மேற்படாமல் போதிப்பதினாலேயே, பிள்ளைகள் அபிவிருத்தியடைவதில்லை. கொஞ்சகாலத்திற்கு முன்பாக, நமது ராஜதானியில் வித்தியா இலாகா தலைவராயிருந்த ஒருவர், பள்ளிக்கூடத்திலிருக்கும் பிள்ளைகளைக்காட்டிலும், பள்ளிக்கு வராத பிள்ளைகளே புத்திசாலிகளாயும் உலக இயல்பு தெரிந்தவர்களாயுமிருக்கிறார்களென்று கூறியுள்ளார்.

இப்பொழுது பிரதம கல்விச் சாலைகளின் அமைப்பைப்பற்றிக் கவனிப்போம். கல்விச்சாலைகளின் உபாத்தியாயர்கள் இவ்விஷயமாக கவனிக்கவேண்டிய முக்கியமான அம்சங்களாவன:— (1) பள்ளிக்கூடத்தின் கட்டடம், (2) பிள்ளைகளை வகுப்புகளாகப் பிரிப்பது, (3) உபாத்தியாயர்களது வேலைப் பாகுபாடு, (4) கால அட்டவணை, பாட அட்டவணை, (5) பள்ளிக்கூடத்திற்குவேண்டிய உபகரணங்களும் இதர சாமான்களும், (6) பள்ளிக்கூட அங்கீகாரம்.

1. கட்டடம்.—கல்விச்சாலைக்காக அமைக்கப்பட்ட கட்டடமானது கிராமத்திலிருக்கும் பிள்ளைகளும், சமீபமாயுள்ள கிராமங்களிலிருக்கும் பிள்ளைகளும் அதிக பிரயாசையின்றி சுலபமாய் வரக்கூடிய இடத்தில் அமைக்கப்படவேண்டும். கட்டடமானது பள்ளத்தாக்கிலிராமல், மேடான பிரதேசத்தில் கட்டப்படவேண்டும். இல்லாவிடில், மழைகாலங்களில் கட்டடத்தைச் சுற்றியிருக்கும் ஜலத்தேக்கத்தினால் பிள்ளைகளுக்கு வியாதியும் இதர அசௌகரியங்களும் ஏற்படும். தவிர கட்டடம் அமைக்கப்பட்ட இடமானது, கடை, சந்தை முதலான ஜனக்கூட்டங்களுள்ள பொது இடங்களுக்கு சமீபத்திலிராமலிருக்க வேண்டும். ஏனெனில், பிள்ளைகள் தங்கள் வேலையைச் சரிவர செய்யவேண்டுமானால், அவர்கள் கவனமானது இதர விஷயங்களால் ஆகர்ஷிக்கப்படாமலிருக்கவேண்டும். ஜனநெருக்கமும் ஜனசந்தடியும் அதிகமாயிருக்கும் ஸ்தலங்களுக்கு இடையில், கல்விச்சாலையிருக்குமாயின், பிள்ளைகள் எப்போதும் சுற்றிலுமிருக்கும் வினோதங்களையும் வேடிக்கைகளையும் பார்த்துக்காலங்கழிப்பார்களேயொழிய தங்கள் கிரமமான வேலையில் கவனம் செலுத்தமாட்டார்கள்.

சூரியனது வெளிச்சம் கட்டடத்திற்குள் ஏராளமாய்ப் பிரவேசிக்கும்படியாகக் கட்டடங்களையமைக்கவேண்டும். கட்டடத்தின் விஸ்தீரணமும் அறைகளின் அமைப்பும் பிள்ளைகளின் சங்கியைக்கும் அவர்களுக்குக் கற்பிக்கவேண்டிய பாடங்களுக்கும் ஏற்றதாயிருக்கவேண்டும். கைத்தொழில் கற்பிக்கும் பக்ஷத்தில், அதற்கேற்றவாறு பிரத்தியேகமான கைத்தொழிற்சாலையிருக்கவேண்டும். வெளிச்சமும் காற்றும் ஏராளமாய் வரும்படியாய், வேண்டிய அளவு ஜன்னல்களும் கதவுகளும் அமைக்கப்படவேண்டும். நமது வித்தியா இலாகா சட்டங்கள் பிரகாரம் ஒவ்வொரு பிள்ளைக்கும் 8 சதுர அடி பரப்பும் 80 கன அடி இடமும் இருக்கும்படி ஒவ்வொரு அறையின் நீளம் அகலம் உயரம் தீர்மானிக்கப்படவேண்டும். வெளிச்சமானது எப்போதும் பிள்ளைகளது இடது பக்கத்திலிருந்து வரும்படியாக அமையவேண்டும். வலது பக்கத்திலிருந்து வெளிச்சம் வருமாயின் எழுதுகோல், கை முதலானவைகளில் நிழல் விழுவதினால் அந்த வெளிச்சம் அநுகூலமாகயிராது. பிள்ளைகளுக்கு எதிராக வெளிச்சம் அதிகமாயிருந்தால் கண்களுக்குக் கூச்சம் ஏற்படும். பின்பக்கத்திலிருந்து வரும் வெளிச்சத்தால் நிழல் விழுவதால் பாதக மேற்படும். வேறு மார்க்கமில்லாவிடில் சில வேளைகளில் கூரைகளிலிருந்து வெளிச்சம் வரும்படி கண்ணாடிகள் அமைக்கப்படவேண்டும்.

தவிர, பள்ளிக்கூடங்களில் பிள்ளைகள் விளையாடுவதற்கு வேண்டிய இடமும் தோட்டத்திற்காக இடமும் பிரத்தியேகமாயும் முக்கியமாயும் ஏற்படுத்தவேண்டும். பிள்ளைகளுக்குப் பாடம் கற்பித்தல்போல, சரீரப் பயிற்சியையும் முக்கியமாய்க் கவனிக்கவேண்டும். இம்மாதிரியான விளையாட்டுகளில்லாவிடில் பிள்ளைகளது சரீர சௌக்கியமும் மனோ உற்சாகமும் குன்றும். பிரகிருதி சாஸ்திரத்தைத் தோட்டத்தில் செடிகள்வைத்து திருஷ்டாந்தப்படுத்திக் கற்பிப்பது வெகு சிலாக்கியமானது.

நமது இராஜதானியில் ஏராளமாய் வழங்கிவரும் பிரதம கல்விச்சாலைகளின் கட்டட அமைப்புகளைக் குறித்து உருவப்படங்கள் மூலமாய் அடுத்த சஞ்சிகையில் விவரிப்போம்.

---

**அக்கரைக்கிக்கரை பச்சை** — என்று ஆடுகள் எண்ணிக்கொண்டுஅலைவது வழக்கம். ஓர் நதியின் கரையில் இருக்கும் புல்லைச் சிறிது மேய்ந்துகொண்டிருக்கும்போதே அக்கரையில் பசும்புல்லைக் கண்டு ஆடுகள் அங்கே ஓடும். மறுபடியும் அங்கிருந்து பார்த்து இக்கரைதான் பச்சையென்று இங்கே ஓடிவரும். அதுபோல் ஸ்திரபுத்தியில்லாதவர்கள் மதிமயங்கி ஒவ்வொரு மதத்திலும் சிற்சில நாளிருந்து உழன்று திரிவார்கள். ஒரூரில் ஒரு குடியானவன் கிணறுவெட்டவேண்டி ஓரிடத்தில் 20-அடி தோண்டினான். ஜலம் வரவில்லை. அதைவிட்டு இன்னோரிடத்தில் 20-அடி தோண்டினான். அங்கும் ஜலம் காணப்படவில்லை. மூன்றாவது இடத்தில் 20-அடி பறித்தான். அங்கும் ஜலத்தைக் காணாது நான்காவது இடத்தில் 20-அடி தோண்டினான். அங்கேயும் நீரைக் காணாது ஐந்தாவது இடத்தில் 20-அடி பறித்துப்பார்க்க பலன் இல்லாமற் போயிற்று. மனம் வெறுத்து வீட்டிற்குத் திரும்பினான். இவ்வாறு ஐந்து இடங்களில் 20-அடிவீதம் பறித்து சிரமப்பட்டதைவிட ஒரேயிடத்தில் 100-அடி ஆழம் தோண்டியிருந்தால் ஜலத்தைக் கண்டிருப்பானன்றோ? அவனுக்குப் பொறுமையில்லாத தோஷத்தால் வேலைசெய்தும் பலன் கிடைக்கவில்லை. அதுபோல்ஒரு மதத்தை அநுசரித்து அதன் கொள்கைப்படி ஈசுவரனைப் பஜியாமல் அடிக்கடி பிறமதங்களில் பிரவேசிக்கிறவர்கள் ஒருபோதும் ஞானமடையார்கள்.

தம்பி கால் நடையிலே, பேச்சுப் பல்லக்கிலே.



தம்பி பிறக்கத் தரைமட்டம் ஆயிற்று.

## தமிழ் நாட்டில் பிரதேசச் சுய ஆட்சி

## LOCAL SELF-GOVERNMENT IN THE TAMIL COUNTRY

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ.]

முந்திய வியாசத்திற் கூறியவாறு முற்காலத்தில் தமிழ் நாட்டில் ஒவ்வொரு கிராமமும் ஒவ்வொரு குடியரசுத்தரணியாக விருந்து தன்னுடைய காரியங்களனைத்தையும் இராஜாங்கத்தாரது உதவியை விசேஷமாய் எதிர்பாராமலே நடத்திவந்தது. கிராமத்தவர்கள் வேண்டிக்கொண்டாலல்லது அரசன் கிராமக் காரியங்களிற் பிரவேசிப்பதில்லை. கிராமத்தவர்கள் மகாசபை கூடி, தங்கள் காரியங்களை நடத்தி வருவதற்காகப் பல நிர்வாக சபைகளைத் தெரிந்தெடுத்துக் கொண்டார்கள். அவ்வாறு நிர்வாகசபைகளைத் தெரிந்தெடுப்பதற்குக் கிராமங்கள் தங்கள் தங்கள் சௌகரியத்துக்கேற்க விதிகளை ஏற்படுத்திக்கொண்டனவாதலால், வெவ்வேறு கிராமங்களின் விதிகள் சிற்சில வேறுபாடுகளுள்ளனவா யிருந்தன. ஆயினும் அவைகள் பெரும்பாலும் ஒத்தேயிருந்தன. அவ்விதிகள் தற்காலத்தில் மேல் நாடுகளில் சபைகளைத் தெரிந்தெடுப்பதற்காக விதிக்கப்பட்டிருக்கும் விதிகளை முற்றிலும் ஒத்திருக்கின்றன. அவ்விதிகள் சுமார் ஆயிரத்து இருநூறு வருஷங்களுக்குமுன் வெட்டப்பட்ட சிலாசாசனங்களிற் காணப்படுகின்றன. அக்காலத்துக்கு முன்முதலே கிராமச் சபைகள் இருந்துவந்தனவென்று சிலாசாசன வாசகங்களால் தெரியவருகிறது.

அவ்விதிகள் செங்கற்பட்டு ஜில்லாவில் மதுராந்தகம் ரெயில்வேஸ்டேஷனுக்குப் பத்தரை மைல் தூரத்திலுள்ள உத்தரமல்லூர் என்ற உத்தரமேருச் சதுர்வேதிமங்கலத்தில் வைகுண்டநாதப் பெருமாள் கோவில் மேற்குச் சுவரிலுள்ள இரண்டு சிலா சாசனங்களில் மிகவும் விரிவாய் உரைக்கப்பட்டிருக்கின்றன. முதற் பராந்தகன் என்னும் சோழராஜன் ஆண்ட காலத்தில், மேற்கூறிய உத்தரமேருச் சதுர்வேதிமங்கலத்தில் கிராமச்சபை சம்பந்தமான விதிகள் தகுந்த கட்டுப்பாடுகளை யுடையனவா யிராததால், மூடர்களும் அயோக்கியர்களும் சபைகளில் அங்கத்தினர்களாகத் தேர்ந்தெடுக்கப்பட்டு கிராமப் பொதுப்பணங்களை அபகரித்துக்கொண்டு கணக்குக் கொடுக்க மாட்டோமென்று சொல்லிவந்தமையால், கிராமத்தவர்கள் அரசனுக்கு அவ்விஷயத்தைத் தெரியப்படுத்தி கிராமக்காரியங்களைச் சீர்திருத்தம் செய்து தரும்படி கேட்டுக்கொண்டதின்பேரில் அரசன் முதலில் ஒரு உத்தியோகஸ்தனை அனுப்ப, அவ்வுத்தியோகஸ்தன் சில விதிகளை ஏற்படுத்தினான். ஆயினும் கிராமக் காரியங்கள் சரியான நிலைமைக்கு வராமலிருக்கக் கண்டு, அரசன் மற்றொரு உத்தியோகஸ்தனை அனுப்ப, அவன் மிகவும் மெச்சத்தக்க பல விதிகளை ஏற்படுத்தி, எக்காலத்திலும் கிராமக்காரியங்கள் சரிவர நடந்து வரும்படி செய்தான். அரசன் முதலில் தன் உத்தியோகஸ்தனை அனுப்பியது கி.பி. 918-9-ம் வருஷத்தில். அவன் ஏற்படுத்திய விதிகள் கீழேகண்ட முதல் சிலாசாசனத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அரசன் இரண்டாவது தடவை தன் உத்தியோகஸ்தனை அனுப்பியது கி.-பி. 920—21-ஆம் வருஷத்தில். அவன் ஏற்படுத்திய விதிகள் கீழே கண்ட இரண்டாவது சிலாசாசனத்தில் கூறப்பட்டிருக்கின்றன. அவ்விதிகள்ஏற்கனவே தொன்றுதொட்டு அக்கிராமத்தில் வழங்கிவந்த விதிகளைச் சீர்திருத்தஞ் செய்வதற்காக ஏற்படுத்தப்பட்டனவே தவிர, நூதனமாக அக்கிராமத்தில் கிராமச்சபை ஏற்படுத்துவதற்காக வல்லவென்பதை முக்கியமாய்க் கவனிக்க வேண்டும். இனி, மேற்கூறிய சிலாசாசனங்களைக் கவனிப்போம்.

முதல் உத்தியோகஸ்தன் ஏற்படுத்திய விதிகளடங்கிய முதற் சிலாசாசனம்:—

ஸ்வஸ்தஸ்ரீ மதிரைகொண்ட கோப்பரகேசரி வம்மற்கு யாண்டு பனிரெண்டாவது (ஆட்சிவருஷம்) உத்திரமேருச் சதுர்வேதிமங்கலத்து சபையோம் இவ்வாண்டு முதல் எங்கள் ஊர் ஸ்ரீமுகப்படி ஆணையினால் தாத்தனூர் மூவேந்த வேலன் இருந்து ஆட்டொருக்காலும் ஸம்வத்ஸர வாரியமும் தோட்ட வாரியமும் ஏரி வாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை செய்த பரிசாவது. குடும்பு முப்பதாய் முப்பது குடும்பிலும் அவ்வவக் குடும்பிலாரே கூடி கா(ல்) நிலத்துக்குமேல் இறை நிலம் உடையான் தன் மனையிலே அகம் எடுத்துக்கொண்டு இருப்பாரை யறுபது பிராயத்துக்கு உள் முப்பது பிராயத்துக்கு மேல்பட்டார் வேதத்திலும் சாஸ்த்ரத்திலும் காரியத்திலும் நிபுணர் என்னப்பட் டிருப்பாரை அர்த்த சௌசமும் ஆத்மசௌசமும் உடையாரை மூவாட்டினிப்பறம் வாரியஞ் செய்திலாத்தார் வாரியஞ் செய்தொழிந்த பெருமக்களுக்கு அணிய பந்துக்கள் அல்லாத்தாரைக் கூ(கு)டவோலைக்குப் பேர்தீட்டி சாடேரி வழியே திரட்டி பன்னிரண்டு சேரியிலும் சேரியால் ஒரு பேராமாறு ஏதும் உருவறி யாதான் ஒரு பாலனைக் கொண்டு குடவோலை வாங்குவித்து பன்னிருவாரும் ஸம்வத்ஸர வாரியம் ஆவதாகவும். அதின் பின்பே தோட்ட வாரியத்துக்கு மேற்படி வாரியத்துக்கு குடவோலை வாங்கிப் பன்னிருவரும் தோட்டவாரியமாவதாகவும். நின்ற அறுகுடவோலையும் ஏரிவாரியம் ஆவதாகவும். முப்பதுகுடவோலை பரிச்சுவாரியஞ் செய்கின்ற மூன்று திறத்து வாரியமும் முந்நூற்றறுபது நாளும்நிரம்ப வாரியம் ஒழிந்த அநந்தரம் இடும் வாரியங்கள் இவ்வியவஸ்தை யோலைப்படியே குடும்புக்குக் குடவோலை யிட்டுக் குடவோலை பரிச்சுக்கொண்டே வாரியமிடுவதாகவும். வாரியஞ்செய்தார்க்கு பந்துக்களும் சேரிகளில் அந்யோன்யமே (யாவாரு)ம் குடவோலையில் பேர் எழுதி இடப்படாதார் ஆகவும். பஞ்சவாரவாரியத்துக்கும் பொன்வாரியத்துக்கும் முப்பது குடும்பினும் முப்பது குடவோலையிட்டு சேரியால் ஒருத்தரைக் குடவோலை பரித்து பன்னிருவரிலும் அறுவர் பஞ்சவாரவாரியம் ஆவதாகவும், அறுவர் பொன் வாரியமாவதாகவும். ஸம்வத்ஸர வாரியமல்லாத வாரியங்கள் ஒருக்கால் செய்தாரை பின்னை அவ்வாரியத்துக்கு குடவோலை இடப்பெறுததாகவும். இப்பரிசே இவ்வாண்டு முதல் சந்த்ராதித்யர் உள்ளவரையில் என்றும் குடவோலை வாரியம் இடுவதாக. தேவேந்தரன் சக்ரவர்த்தி ஸ்ரீ வீரநாராயணன் ஸ்ரீபராந்தக தேவராகிய பரகேசரிவர்மர் ஸ்ரீமுகம் அருளிச்செய்து வரக்காட்ட ஸ்ரீ ஆணையினால் தாத்தனூர் மூவேந்தவேலன் உடனிருக்க நாம் கிராமத்து துஷ்டர் கெட்டு சிஷ்டர் வர்த்தித்திடுவாராக வ்யவஸ்தை செய்தோம், உத்தரமேருசதுர்வேதிமங்கலத்துசபையோம்.

இச்சிலாசாசனத்தில் கண்ட விதிகளின் சுருக்கமாவது:—

1. ஸம்வத்ஸரவாரியம், தோட்டவாரியம் ஏரிவாரியம் என்ற மூன்று நிர்வாகசபைகளின் அங்கத்தினர்களும் வருஷத்துக் கொருமுறை தேர்ந்தெடுக்கப்படவேண்டும்.

2. நிர்வாக சபைகளின் அங்கத்தினர்கள் எப்படிப்பட்டவர்களா யிருக்க வேண்டுமென்றால் — வரியுள்ள கால் நிலம் உடையவராய், தம்முடைய சொந்த வீட்டிலேயே வசிப்பவராய், முப்பதுக்கு மேற்பட்டு அறுபதுக்குட்பட்ட வயதுடையவராய், வேதம் சாஸ்திரம் காரிய நிர்வாகம் இவைகளில் நிபுணரெனப் பேர்பெற்றவராய், யோக்கியமாய் சம்பாதித்த தனமுடையவராய், பரிசுத்தமான வாழ்க்கையையுடையவராய் இருக்கவேண்டும்.

3. அவர்கள் எப்படிப்பட்டவராயிருக்கக் கூடாதெனில் — தெரிந்தெடுப்பதற்கு மூன்று வருஷத்துக்குள் எந்த நிர்வாக சபையிலும் அங்கங்கத்தினரா யிருந்திருக்கக் கூடாது. அவ்வாறு அங்கத்தினரா யிருந்தவர்களுக்கு நெருங்கிய பந்துக்களாகவும் இருக்கக்கூடாது.

4. அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் முறை — பன்னிரண்டு சேரிகளையுடைய அக்கிராமம் முப்பது வகுப்புகளாக வகுக்கப்பட்டது. ஒவ்வொரு வகுப்பிலுள்ளாரும் கூடி தங்களுக்குள் மேலே கண்டவாறு தேர்ந்தெடுக்கப்பெறும் தகைமை யுடையாரொருவரைத் தெரிந்தெடுத்து அவரது பெயரை ஓர் ஓலையிலெழுதி ஓர் குடத்தில் போடவேண்டும். அவ்வாறு குடத்தில் சேரும் முப்பது ஓலைச்சீட்டுகளினின்று ஒவ்வொரு சேரிக்கு ஒருவராகுமாறு ஸம்வத்ஸர வாரியத்துக்காகப் பன்னிரு சீட்டுக்களையும், தோட்ட வாரியத்துக்காகப் பன்னிரு சீட்டுக்களையும் ஓர் குழந்தையைக் கொண்டு எடுக்கச் சொல்லவேண்டும். மீதி ஆறு சீட்டுக்களில் கண்டவர்கள் ஏரிவாரியமாக விருக்கவேண்டும்.

5. **அங்கத்தினர்களின் உத்தியோக காலம்.**— தெரிந்தெடுக்கப்பெற்ற நாள் முதல் முந்நூற்றறுபது நாள் அவ்வுத்தியோகத்திலிருக்க அவர்கள் அர்ஹதையுள்ளவர்.

6. **பஞ்ஜவார வாரியம், பொன்வாரியம்.**— இப்பேர்களைப்பெற்ற இரு நிர்வாக சபையார்கள் ஒருவருஷத்துக் கொருமுறை தெரிந்தெடுக்கப்படவில்லையெனக் சொள்ளவேண்டியிருக்கிறது. இவ்வாரியங்களின் அங்கத்தினர்

களைத் தெரிந்தெடுப்பதற்கும்மேற்கூறியவாறே
முப்பது வகுப்புகளில் ஒவ்வொரு வகுப்புக்கு
ஒவ்வொரு ஓலைச்சீட்டாக முப்பது சீட்டுகளை
ஓர் குடத்திலிட்டு, பன்னிரு சீட்டுகளை ஒரு
குழந்தையைக்கொண்டு எடுப்பித்து, அச்சீட்
டுக்களில் குறிப்பிட்ட பன்னிருவரில், அறுவர்
பஞ்ஜவார வாரியமாகவும் அறுவர் பொன்
வாரியமாகவும் இருக்கவேண்டும்.

இனி இரண்டாவது சிலாசாசனத்தைக்
கவனிப்போம்.

இரண்டாவது முறை அனுப்பிய உத்தியோ
கஸ்தன் ஏற்படுத்திய விதிகளடங்கிய

இரண்டாவது சிலாசாசனம்:

ஸ்வஸ்த ஸ்ரீ மதிரைகொண்ட கோபரகே
ஸரிவன்மற்கு யாண்டு பதிஞலாவது நாள் பதி
ஞறு. காளியூர் கோட்டத்து தன் கூற்று உத்
தரமேருச் சதுர்வேதிமங்கலத்து சபையோம்
இவ்வாண்டு முதல் எங்களுக்கு பெருமானடி
கள் எம்பெருமான் ஸ்ரீவீரநாராயணன் ஸ்ரீ
பராந்தகதேவன் ஸ்ரீ பரகேசரிவன்மருடைய
ஸ்ரீமுகம் வரக்காட்ட ஸ்ரீமுகப்படி ஆக்ஞையி
ஞல் சோழநாட்டுப் புறங்கரம்பை நாட்டு
ஸ்ரீவங்கநகர்க் கரஞ்சை கொண்டயக் கிரம
வித்தபட்டன் ஆகிய சோமாசி (சோமயாஜி)ப்
பெருமான் இருந்து வாரியமாக ஆட்டொருக்
காலும் ஸம்வத்ஸர வாரியமும் தோட்டவாரிய
மும் ஏரிவாரியமும் இடுவதற்கு வ்யவஸ்தை
சேத (செய்த) பரிசாவது. குடும்பு முப்பதா(ய்)
முப்பது குடும்பிலும் அவ்வவ குடும்பிலாரே
கூடிக் காணிலத்துக்குமேல் இறை நிலம் உடை
யான் தன் மனையிலே அகம் எடுத்துக்கொண்
டிருப்பானை எழுபது பிராயத்தின்கீழ் மூப்
பத்தைந்து பிராயத்தின் மேற்பட்டார் மந்
த்ரப்ராம்மணம் வல்லன் ஓதுவித்தறிவானைக்
குடவோலை இடுவதாகவும். அரைக்கா நில
மே உடையான் ஆயினும் ஒருவேதம் வல்
லானை நாலு பாஷ்யத்திலும் ஒரு பாஷ்யம் வக்
காணித்தறிவான் அவனையும் குடவோலை எழு
திப்புக இடுவதாகவும். அவர்களிலும் காரியத்
தில் நிபுணராய் ஆசாரம் உடையாராணரையே
கொளுவதாகவும். அர்த்தசௌசமும் ஆன்ம
சௌசமும் உடையாராய் மூவாட்டின் இப்பு
றம்வாரியஞ் செய்திலாதாரைகொள்வதாகவும்.
எப்பேர்ப்பட்ட வாரியங்களும் செய்து கணக்
குக் காட்டாதே இருந்தாரையும், இவர்களுக்
குச் சிற்றவைப் பேரவை மக்களையும் இவர்
களுக்கு அத்தைமாமன் மக்களையும் இவர்
களுக்குத் தாயோடு உடப்பிறந்தானையும் இவர்
கள் தகப்பனோடுடப் பிறந்தானையும் தன்னோடு
உடப்பிறந்தானையும் இவர்களுக்குப் பிள்ளை
கொடுத்த மாமனையும் இவர்கள் பிராம்மணி
யோடு (மனைவியோடு) உடப்பிறந்தானையும் தன்
னோடுடப் பிறந்தாளை வேட்டானையும் (மணந்த
வனையும்) உடப்பிறந்தாள் மக்களையும் தன்
மகளை வேட்ட மருகனையும் தன்தகப்பனையும்
தன் மகனையும் ஆக இச்சுட்ட * * * (ப்பட்ட
இத்தனை) பந்துக்களையும் குடவோலை எழு
திப்புக இடப்பெறுதா ராகவும். அகமியா
கமனத்திலும் மகாபாதகங்களில் முன்படைந்த
நாலு மகாபாதகத்திலும் மெழுத்துப் பட்டா
ரையும் இவர்களுக்கும் முன்சுட்டப்பட்ட
இத்தனை பந்துக்களையும் குடவோலை எழுதிப்
புக இடப்பெறுதாராகவும். சம்ஸர்க்க பதி
தரை ப்ராயஸ்சித்தஞ் செய்யுமளவும் குட
வோலை இடாதாகவும். * * * * தியும் ஸாக
ஸியரா யிருப்பாரையும் குடவோலை எழுதிப்
புகவிடப் பெறுதாராகவும். பரத்ரவ்யம் அப
ஹரித்தானையும் குடவோலை எழுதிப்புக
விடப் பெறுதாராகவும். பரத்ரவ்யம் அப
ஹரித்தானையும் குடவோலை எழுதிப்புக
விடப்பெறு தாராகவும். எப்பேர்ப்பட்ட கை
யூட்டுங் கொண்டான் க்ருத ப்ராயஸ்சித்தஞ்
செய்து சுத்தராணனையும் அவ்வவர் ப்ராணாந்
திகம் வாரியத்துக்குக் குடவோலை யெழுதிப்
புகவிடப் பெறுததாகவும். * * * பாதகஞ்
செய்து ப்ராயச்சித்தஞ்செய்து சுத்தராணரை
யும் க்ராம கண்டகராய் ப்ராயசித்தஞ்சேது
(செய்து) சுத்தராணரையும் அகம்யாகமனம்
சேது ப்ராயஸ்சித்தஞ்செய்து சுத்தராணரை
யும் ஆக இச்சுட்டப்பட்ட அனைவரையும் ப்ரா
ணாந்திகம் வாரியத்துக்குக் குடவோலை எழு
திப்புக விடப்பெறுததாகவும். ஆக இச்சுட்டப்
பட்ட இத்தனைவரையும் நீக்கி இம்முப்பது
குடும்பிலும் குடவோலைக்குப் பேர் தீட்டி இப்
பன்னிரண்டு சேரியிலும் ஆக இக்குடும்பும்
வெவ்வேறே வாயோலை பூட்டி முப்பது குடும்
பும் வெவ்வேறே கட்டிக் குடம்புக இடுவதாக
வும். குடவோலை பறிக்கும்போது மகாசபைத்
திருவடியாரை சபாலவிருத்தம் நிரம்பக் கூட்
டிக்கொண்டு அன்றுள்ளூரில் இருந்த நம்பி





மார் ஒருவரையும் ஒழியாமே மகாசபையிலே
உள்மண்டகத்திலே இருத்திக்கொண்டு அந்
நம்பிமார் நடுவே அக்குடத்தை நம்பிமாரில்
வ்ருத்தராய் இருப்பாரொரு நம்பி மேல்நோக்கி
எல்லா ஜனமுங் காணுமாற்றால் எடுத்துக்
கொண்டு நிற்க பக்கலே யந்தர மறியாதனொரு
பாலனைக்கொண்டு ஒரு குடும்பு வாங்கி மற்
றொரு குடத்துக்கே புகவிட்டுக் குலைத்து அக்
குடத்தில் ஓரோலைவாங்கிமத்யஸ்தன்கையிலே
கொடுப்பதாகவும். அக்குடுத்தவோலை மத்யஸ்
தன் வாங்கும்போது அஞ்சு விரலும் அகல
வைத்து உள்ளங்கையிலே ஏற்றுக் கொள்வா
ஞகவும்: அவ்வேற்று வாங்கின ஓலை வாசிப்
பாஞகவும். வாசித்த அவ்வோலை அங்
குள் மண்டகத்திருந்த நம்பிமாரெல்லாரும்
வாசிப்பாராகவும். வாசித்த அப்பேர் தீட்டுவ
தாகவும். இப்பரிசே முப்பது குடும்பிலும்
ஓரோபேர் கொள்வதாகவும். இக்கொண்ட
முப்பது பேரிலும் தோட்ட வாரியமும் ஏரி
வாரியமும் செய்தாரையும் விஜய வ்ருத்தரை
யும் வயோவ்ருத்தர்களையும் ஸம்வத்ஸர வா
ரியமாககொள்வதாகவும். மிக்குநின்றுருட்பன்
னிருவரைத் தோட்டவாரியங் கொள்வதாக
வும். நின்ற அறுவரையும் ஏரிவாரியமாகக்
கொள்வதாகவும். இவ்விரண்டு திறத்து வாரிய
மும் கரை காட்டிக் கொள்வதாகவும். இவ்வா
ரியம் செய்கின்ற மூன்று திறத்து வாரியப்
பெருமக்களும் முந்நூற்று அறுபது நாளும்
நிரம்பச்செய்து ஒழிவதாகவும். வாரியஞ் செய்
யா நின்றாரை அபராதங்கண்டபோது அவனை
ஒழித்துவதாகவும். இவர்கள் ஒழிந்த அனந்
தரமிடும் வாரியங்களும் பன்னிரண்டு சேரி
யிலும் தன்மக்ருத்யங் கடைக்காணும் வாரிய
ரே மத்யஸ்தராய்க்கொண்டு குறிகூட்டிக்கொ
டுப்பாராகவும். இவ்வியவஸ்தை யோலைப்படி
யே * * * க்குக் குடவோலை பறித்துக்
கொண்டே வாரியம் இடுவதாகவும். பஞ்ஜவார
வாரியத்துக்கும் பொன் வாரியத்துக்கும் முப்
பது குடும்பிலும் குடவோலைக்கு பேர் தீட்டி
முப்பது வாயோலை கட்டும் புகஇட்டு முப்பது
குடவோலை பறித்து முப்பதிலும் பன்னி
ரண்டு பேர் பறித்துக்கொள்வதாகவும். பறித்த
பன்னிரண்டிலும் அறுவர் பொன்வாரியம்
அறுவர் பஞ்ஜவார வாரியமும் ஆவன வாக
வும். பிற்றை ஆண்டும் இவ்வாரியங்கள் குட
வோலை பறிக்கும்போது இவ்வாரியங்களுக்கு
முன்னம் செய்த குடும்பன்றிக்கே நின்ற
குடும்பிலே கரை பரித்துக் கொள்வதாகவும்.
கழுதை ஏறிஞரையும் கூடலேகை செய்தானை
யும் குடவோலை எழுதிப்புக இடப்பெறாத
தாகவும். மத்யஸ்தரும் அர்த்த சௌச
முடையானே கணக் கெழுதுவாஞகவும்.
கணக்கெழுதிஞன் கணக்குப் பெருங்குறிப்
பெருமக்களோடுகூடக் கணக்குக் காட்டி சுத்
தன் ஆச்சிதின் பின்னன்றி மற்றுக் கணக்குப்
புகப்பெறுதாஞகவும். தான் எழுதின கணக்
குத் தானே காட்டுவாஞகவும், மற்றுக் கணக்
கர் புக்கு ஒடுக்கப் பெறுதாராகவும். இப்பரி
சே இவ்வாண்டு முதல் சந்த்ராதித்யவல்
என்றும் குடவோலை வாரியமே இடுவதாக தே
வேந்த்ரன் சக்ரவர்த்தி பண்டித வத்ஸலன்
குஞ்சரமல்லன் சூரசூளாமணி கல்பகசரிதை
ஸ்ரீபரகேசரி பன்மற்கா ஸ்ரீமுகம் அருளிச்
சேது வரக்காட்ட ஸ்ரீ ஆணையா சோழநாட்டு
ப்புறங் கரம்பை நாட்டு ஸ்ரீ வங்கநகர்க்கரஞ்
சை கொண்டய க்ரமவிட்ட பட்டஞகிய
சோமாசிப்பெருமாஞடன் இருந்து இப்பரிசு
செய்விக்க நம் க்ராமத்துக்கு அப்யுதயமாக
துஷ்டர் கெட்டு விசிஷ்டர் வர்த்திப்பதாக
வ்யவஸ்தை செய்தோம் உத்தரமேருச் சதுர்
வேதி மங்கலத்து சபையோம். இப்பரிசு குறி
யுள் இருந்து பெருமக்கள் பணிக்க வ்யவஸ்
தை எழுதினேன் மத்யஸ்தன் காட்டிப்
போட்டான் சிவக்குறி இராஜமல்ல மங்கள
ப்ரியனேன்.

இச்சிலாசாசனத்திற் கண்டவிதிகளை அடு
த்த வியாசத்தில் நன்கு கவனிப்போம்.

---

ஞானிக்கு இல்லை இன்பழும் துன்பழும் என்ற
படி சில பெரியோர்கள் தங்களுடைய சரீரத்தைக்
காப்பாற்றுவதில் ஏன் கவலை கொள்ளுகின்றனர் ?
அழிந்துபோகும் சரீரம் எப்படியிருந்தால் என்ன ?
தண்ணீர் முதலியவைகளால் ஏன் அதைச் செய்ய
வேண்டும் ? அன்ன பானுதிகளால் ஏன் அதை சம்
ரக்ஷிக்கவேண்டும்? வெறுங்கூடையை யாரும் பெட்
டியிலவைத்துப் பூட்டமாட்டார்கள். அதேபோல
உயிரற்ற சரீரம் உபயோகமில்லை. பலவித ரத்தின
ங்களும், பொன் நகைகளும் நிறைந்த கூடையைப்
பெட்டியில் வைத்துப் பத்திரப்படுத்துவதுபோல்
சின்மயானந்தராகிய பரமாத்மா வசிக்கும் சரீரத்தை
மகான்கள் காப்பாற்றுகிறார்கள்.

# உலக விசித்திரங்கள்

## WONDERS OF THE WORLD

[ஸ்ரீமான் ந. சுப்பிரமணியம், பி. ஏ.]

### 2. பூமியின் உருவும் கதியும்

பூமி பந்துபோல் உருண்டை வடிவமுள்ளதென்பதைத் தற்காலத்தில் ஒவ்வொரு சிறுவனும் அறிவான். மேதாவிகள் உலக தத்துவத்தை ஆராய்ந்துணர்ந்து போதித்த பின்னர், அவைகளைக் கிரகிப்பது நமக்கு எளிதாய்த் தோற்றுவதால் அவ்வுண்மைகளை முதலில் கண்டுபிடிப்பதும் அவ்வளவு எளிதா யிருந்திருக்குமென் றெண்ணுவது தவறாகும். தவிரவும் பிறர் கூறக் கேட்டதாலேயே உண்மைகளைச் சரிவர உணர்ந்துவிட்டதா யெண்ணுவதும் தவறு. இவ்வுண்மைகளை முதன் முதலில்ஆராய்ந்தறிந்தமகான்களுக்குண்டான பேரானந்தம் நமக்கேன் அவைகளைக் கற்கும் பொழுதுண்டாவதில்லை? நாம் அவைகளைச் சரியாய் அறியாததே காரணம். வாழ்க்கையின் பயன் ஈசுவர சிருஷ்டியின் பெருமையை உணர்ந்துய்வதேயாம். ஆனதுபற்றி நாம் உண்மையை உயிரைப்போல் நேசித்து, அதன் பெருமையை இடைவிடாது ஆராய்ந்து, அதைப்பற்றிய சிந்தையி லாழ்ந்து, அதனாலுண்டாகும் ஆனந்த நிலையை அடையக் கருதவேண்டும். இப்பேரானந்தத்தில் ஆழ்ந்தோரே மேலோர்.

பண்டை காலத்தில் பூமி தட்டையானதென்று அநேக ஜனங்கள் நம்பிவந்ததாய்த் தெரிகின்றது. இப்பொழுதும் கற்றறியா மாந்தர் பலர் அவ்வாறே நினைக்கின்றனர். ஏனெனில் மந்த புத்தியுள்ளவர்கள் தங்கள் இந்திரிய உணர்ச்சிகளை மட்டுமே ஆதாரமாகக் கொண்டு தோற்றங்களையே உண்மைகளாய்ப் பாவிக்கின்றனர். ஆனால் சிறிது யோசித்தால் உண்மை விளங்கும்.

கடற்கரை யோரத்தில் நின்று நம்மை விட்டகலும் ஓர் கப்பலை நோக்குவோமானால், முதலில்அடிப்பாகமும் பின்பு சிறிதுசிறிதாய்ப் பாய்மரமும் மறைவதைக் காண்கின்றோம். பூமி உருண்டிருந்தால்தான் எல்லா விடங்களிலும் இதே தோற்ற முண்டாகக் கூடுமென்று நிர்ணயிக்கலாம்.

நம்மைச்சுற்றிலும் வானம் சிறிது தூரத்துக்கப்பால் பூமியைத் தொடுவதாய்ப் புலப்படுகின்றது. இவ்வட்டத்துக்குள்ளுள்ள பொருள்கள் மட்டுமே நமக்குத் தெரிகின்றன. அப்பாலுள்ளவை தெரிவதில்லை. ஆனால் ஓர் குன்றின் மேற் செல்வோமானால் அப்பாலுள்ள பொருள்களும் தென்படுகின்றன. முற்கூறிய பிரகாரம் பூமி உருண்டையா யிருந்தாற்றான் இவ்வா றிருக்க முடியும்.

நாம் வடதேசங்களுக்குச் செல்வோமானால் துருவ நக்ஷத்திரம் உயர ஏறித்தோன்றுகின்றது. மத்தியரேகைக்கருகில் வரவரக் கீழிறங்கி வந்து, மத்திய ரேகைக்குக் கீழ்ச்சென்றால் மறைந்தும் போகின்றது. துருவ நக்ஷத்திரம் அசைவற்றிருந்தும் நமக்கு இவ்வாறு இடம் மாறிக் காண்பதற்குக் காரணம் பூமி வட்டமாயிருப்பதே.

பூமி தட்டையாயிருந்தால் பூமண்டலம் முழுவதும் ஒரே காலத்தில் இரவு பகல்கள் ஏற்படவேண்டும். நமக்குப் பகலாயிருக்கும் பொழுது, அமெரிக்காவில் இரவாயிருக்கிறதென்பதை உணர்வோம். பூமி உருண்டையாயிருப்பதாலேயே சூரியோதயம் மேல்கிழக்காயுள்ள இடங்களுக்கு வெவ்வேறான காலங்களில் உண்டாகின்றது.

சந்திர கிரகண காலத்தில் சந்திரன் மேலுறையும் பூமியின் நிழலின் வடிவம் வட்டமாயிருப்பதாலும் பூமி உருண்டையெனப் புலப்படும்.

பூமி உருண்டை வடிவமென்றாலும் துருவ தேசத்தில் சிறிதளவு தட்டையாயிருப்பதால், பூமி ஆரஞ்சுப்பழம் போன்ற உருவமுள்ளதென்று சிலர் கூறுவர். அது சரியலல. துருவத்துக்குத் துருவம் 7899 மைலும், மத்தியப்ரதேசத்தில் 7926-மைலும் பூமியின் குறுக்களவு. இந்த 27-மைல் குறைவு, பூமியின் கனத்தை நோக்கும்பொழுது ஒரு பொருட்டாகாது. ஆகையால் பூமி, டென்னிஸ் பந்துபோல்உருண்டையானது என்பதுதவறாகாது.

இப்பந்துபோன்ற பூமி ஆகாய வெளியில் தங்க இடமின்றி, நிறக நேரமின்றி ஓயாது பம்பரம்போல் சுற்றுகின்றது. எவர் இப்படி இப்பிரம்மாண்டத்தை ஓய்வின்றி ஆட்டிவைப்பது? பூமி ஆகாயத்தில் ஆடித்திரிகின்றதென்பதும், ஸ்திரமாய் ஓரிடத்தில் நிற்பதில்லை

தலைக்கு மேற்பட்ட தண்ணீர், சாண் ஓடினால் என்ன, முழம் ஓடினால் என்ன?



யென்பதும் நாம் சிறுவயதுமுதல் கேள்விப்பட்டுள்ளோமாயினும், சில நூற்றாண்டுகளுக்குமுன் பூமி அசைவற்றதென்றும், சூரியனும், பல்லாயிரம் நட்சத்திரங்களும். பூப்ரதக்ஷிணம் தினந்தோறும் செய்வனவென்றுமே எல்லோருங் கருதிவந்தனர். இதற்குக் காரணம் பூமி சுழல்வதை நாம் நேரில் காண இயலாததேயாம். ஐரோப்பாவில் முதன் முதல் இவ்வுண்மையை உணர்ந்து தெளிவாய் ஜனங்களுக்கு எடுத்துக் கூறியவர் கேலீலியோ என்னும் வானசாஸ்திரி. இவ்வுண்மை, மதத்துக்கு விரோதமான கொள்கையென்று அக்காலத்துப் பண்டிதர்களால் கருதப்பட்டது. இதுபற்றி அவரை மதத்துவேஷியென்று பிராணஹிம்ஸை செய்தனர். "மெய்வருத்தம் பாரார், பசிநோக்கார், கண்துஞ்சார், எவ்வெவர் தீமையும் மேற்கொள்ளார்,......கருமமே கண்ணாயினார்" என்றவாறு இவர் உண்மையை நிலைநிறுத்த உயிரையும் இழக்கத் துணிந்தார். இதனால் ஜனசமூகத்தில் தோற்றங்களை நீக்கி உண்மைகளை ஸ்தாபிப்பது எவ்வளவு கடினமானதென்பது நன்கு விளங்குகின்றது. பூமி சுழல்கின்றதென்பதற்கு இப்பொழுது பல முகாந்திரங்கள் கூறப்படும்.

நாம் புகைவண்டியிற் செல்லும்பொழுது; வெளியிலுள்ள மரம் செடிகள் எதிர்மார்க்கமாய் ஓடுவதாய்த் தோற்றமுண்டாகின்றது. இது எவ்வாறு பொய்யோ, அதுபோலவே சூரியனும் நக்ஷத்திரங்களும், தினந்தோறும் பூமியைச் சுற்றுவதாய்த் தோற்றுவதும் பொய். பூமியைவிட கோடானுகோடி மடங்கதிகமான நக்ஷத்திரங்கள் அனைத்தும் பூமியைச்சுற்றுவது துர்லபம் என்பது யோசிக்குங்கால் நன்கு விளங்கவில்லையா? யானைக்கூட்டங்கள் பூனையை ஆசிரயித்து நிற்குமா? ஆகையால் பூமி, மேல் கிழக்காய்ச் சுற்றுவதாலேயே மற்றனைத்தும் கீழ்மேலாய் ஓடுவதாய்த் தோன்றுகிறது என ஊகிக்க வேண்டியிருக்கின்றது. மேலும் சூரியனையும், இதர கிரகங்களையும் ஆராய்வோமானால் அவைகளின் வட்டவடிவமும், அவைகள் சுழல்வதும் வெளியாகின்றது. இதைக் கொண்டு பூமியும் சுழலவேண்டுமென்று ஊகிக்கலாம். பூமி துருவப்பிரதேசத்தில் தட்டையாயிருப்பதும் இவ்வாறு சுழல்வதாலேயே உண்டாயிருக்கக் கூடுமென்றும் நிர்ணயிக்கலாம். பூமி தன்னைத் தானே சுற்றாமல் சூரியனைமட்டும் சுற்றிவருவதாய்ச் சொல்வோமென்றால், அவ்வாறிருப்பின் வருஷத்துக்கொரு பகலும் ஒரு இரவுமே இருக்கும்; பூமி சூரியனை ஒரு முறை சுற்றிவருவதற்குள் தன்னைத் தானே 365 தடவை சுற்றிக்கொள்வதாலேயே வருஷமொன்றுக்கு 365 இரவு பகல்கள் உண்டாகின்றன.

பூமி பம்பரம்போன்று வெகு வேகமாய்ச் சுற்றுவதாய்ச் சொன்னோம். சிறு பம்பரம் நிமிஷத்துக்குப் பன்முறை சுற்றுங்கால், இது ஒருமுறை சுற்ற 24-மணி நேரமாகின்றது. இதை எப்படி அதிவேகமெனக் கூறலாமென்றால், பூமத்திய ரேகையின் மேலுள்ள ஒரு வஸ்துவை கவனிப்போமானால் இது நன்கு விளங்கும். பூமியின் சுற்றளவு இருபத்தையாயிரம் மைல் ஆவதால், பூமத்திய ரேகையின் ஒவ்வொருஸ்தானமும், மணியொன்றுக்கு ஆயிரம் மைலுக்கு மேற்பட்ட வேகத்துடன் ஓடுவதாய் ஏற்படுகிறது. இது அதிவேகமல்லவா? இவ்வாறு தன்னைத் தானே சுற்றுவதுமன்றி ஒரு செகண்டுக்குப் பதினெட்டுமைல் வீதம் சூரியனைச் சுற்றியோடுகின்றது. இதன் வேகம் மனதால் இவ்வாறென்று எண்ண முடியாததா யிருக்கின்றது. புகைவண்டியல்லவோ நாம் மிக்க வேகமென்று கூறுவது? பூமியோ புகைவண்டியைப்போல் மூவாயிரம் மடங்கதிகமான வேகத்துடன் ஓடுகின்றது.

தாம் தாமிருக்குமிடத்தை உண்மையிலறிந்தோர் வெகு சிலர். நாம் வசிக்கும் உலகின் இயல்பு இவ்வாறென்று அறிதல் எளிதல்ல. ஆகாயக்கப்பலேறிச் செல்வதைத் தற்காலத்தில் பெரிய ஸாகஸமாய்க் கருதுகின்றோம். எல்லாம் படைத்த எம்பெருமானால் ஏவப்பட்டு மணியொன்றுக்கு 70,000 மைல் பறந்து செல்லும் பூமண்டலத்தில் ஏறி நாம் பறக்கும் அதிசயம் என்னே!

**ஈசுவரனைத் தரிசித்தல்.**—ஜலம் அசைவற்றிருந்தால், அதில் நம்முடைய சாயையைக் காணலாம்; அசைவுண்டானால் காணமுடியாது. அதுபோல மனம் சலனமின்றி ஒரே ரீதியாயிருந்தால், ஈசுவரனைத் தரிசிக்கக் கூடும். அது அங்குமிங்கும் அலைந்துகொண்டிருந்தால் ஈசுவரனை அறியமுடியாது.

தலைக்குத்தலை பெரியதனம், உலைக்கு அரிசி இல்லை.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஸி. எஸ். ரங்கசாமி ஐயங்கார், பி. ஏ., எல். டி.]

### வ்ருஷன்: ஓர் வைதிகக் கதை

இந்தியாவுக்கு வடமேற்கிலுள்ள பாமீர்மேட்டில்உற்பத்தியாகும் ஆறுகள் அநேகம். அவைகளில் மிகப்பெரியது ஸர்தாரியா, ஆமு தாரியா என்பவைகளே. தவிர, அநேகம் சிற்றாறுகளும் இம்மலையில் உற்பத்தியாகி சுற்றுமுள்ள பாலைநிலங்களில் போய் வறண்டுவிடுகின்றன.

இற்றைக்குச் சற்றேறக்குறைய நான்காயிரம் வருஷங்களுக்குமுன் இச்சிற்றாறுகள் ஒன்றின் கரையில், ஒரு சிறிய கிராமத்தில் வ்ருஷன் என்ற ஒரு வாலிபன் இருந்தான். அவன் ஆரியரென்னும் ஒரு பெரிய வகுப்பைச் சார்ந்தவன்.

இவ்வாரியர் யார்? பாமீர் மேட்டுக்கு அவர்கள் வரக்காரணம் என்ன? என்று கேட்கலாம். காஸ்பியன் கடல் எனப் பெயர்பெற்ற உள்நாட்டு ஏரியைச் சுற்றி வெகு நாட்களுக்கு முன் ஒரு ஜாதியார் வசித்துவந்தார்கள். ஆரியர் என்று அவர்கள் தங்களை அழைப்பது வழக்கம். அப்பதத்திற்கு உயர்ந்தோர் என்பது பொருள். பக்கத்திலுள்ள ஜாதியார் தங்களை விடத் தாழ்ந்தவர் என அவர்களுக்கு அபிப்பிராயம்.

இவர்கள் இருந்த இடத்தில் நீர் வளம் நாளடைவில் குறைவுபெற்று வந்தது. ஜனஸங்கியை அதிகப்படவே, அவர்களில் சிலர் தம் தேசங்களைத் துறந்து பக்கங்களிலுள்ள பல நாடுகளில் போய்க் குடியேறும்படி நேரிட்டது. ஐரோப்பியரில் பலரும், பாரசீகத்தாரும் இந்துயரில் பெரும்பாலரும் இந்த ஜாதியார்தான்.

அப்படித் தம் தேசத்தை விட்டு அயலிடங்களில் போய்க் குடியேறின ஜனங்களில் தெற்கில் போன பலர், பாரஸீகததில் போய்ப் பரவினார்கள். சிலர் தென்கிழக்காக வந்து இந்தியாவின் வடமேற்கிலுள்ள தேசங்களில குடியேறினார்கள். கொஞ்சம் கொஞ்சமாகக் கிழக்கில நகர்ந்து ஸிந்துநதியினுடையவும், அதன் கிளைகளுடையவும் கரைகளில் வசித்துவந்தார்கள். இப்புதிய நாட்டிறகு அவர்கள் இட்ட பெயர் "பிரம்மாவர்த்தம்" மற்றொரு பிரிவார் கிழக்காய் வந்து அங்கு ஓடிய நதிக்கரையில் வசித்துவந்தனர். அவர்களில் ஒருவனாகிய 'பிரியமேதன்' என்பவன் தன் நெருங்கிய உறவினர்களான சுமார் நூறு வீட்டுக்குத் தலைவன். குலபதி என்று அவர்கள் அவனைக் கூப்பிடுவது வழக்கம்.

இந்தக் குலபதி பிரியமேதன் குமாரன்தான் வ்ருஷன். வயது அதிகமாகாமலிருந்தபோதிலும் உயரமும் பருமனுமாய் இருப்பான். இந்த ஜாதியாரே நிறத்தில் நல்ல வெளுப்பு. எடுப்பான மூக்கும் நீண்ட கண்களும் உடைய நம் கதா நாயகன் பார்வைக்கு வெகு லக்ஷணமாயிருப்பான். தன் ஜாதியாருக்கேற்பட்ட சகல கடமைகளையும் செவ்வனேதெரிந்து நன்றாகச் செய்து மிகவும் சமர்த்தனெனப் பெயர் பெற்றான்.

இவர்களுக்கு முக்கியதனம் ஆவினங்களே. அவைகளைப் பராமரிப்பதில் வ்ருஷன் வெகு சமர்த்தன். ஓரோர் சமயங்களில் மற்ற குலங்களுடன் சண்டை வந்துவிடும். அச்சமயங்களில் முன்னின்று கோரமாய் யுத்தஞ் செய்வான். சண்டை போடுமுன்னும், ஜயம்பெற்ற பொழுதும் தங்கள் இஷ்ட தேவதைகளாகிய மருத்துக்கள் அக்கினி இந்திரன் முதலானோர்க்கு அழகிய ஸ்தோத்திரப்பாட்டுக்களால் வந்தனை புரிவான். அக்காலங்களில் அந்த தேவதைகளுக்கு யாகங்கள் செய்வதுமுண்டு.

இச்சாதியாரின் ஆகாரம் முக்கியமாய் சாக பதார்த்தமும், பால, தயிர், வெண்ணெயுமே. ஆயினும் பல சந்தர்ப்பங்களில்,முக்கியமாய் யாகங்களின் இறுதியில் அவர்கள் ஆடுமாடுகளின் மாமிசங்களையும் சாப்பிடுவதுமுண்டு. ஸோமம் என்னும் ஒரு கொடியின் போதையளிக்கக் கூடியரஸம் அவர்களுக்குப் பிரியமான பானம்.

ஆரியர் ஒருவரோடொருவர் சண்டையிடுவது வழக்கமெனச் சொல்லியிருக்கிறது. பக்கத்திலுள்ள பலவானான ஒரு குலபதி, சிறியதொரு சண்டையில் பிரியமேதனை ஜயித்தான். அப்பொழுது படுகாயம்பட்ட குலபதி சில நாட்களில இறக்கவே, இன்னும் பதினெட்டு வயதாகாத வ்ருஷனை தன்குலத்திற்குத் தக்க பதியெனத் தேர்ந்தெடுக்கப்பட்டான்.

இப்படி நம் கதாநாயகனுக்கு வந்த பொறுப்பு சாதாரணமானதல்ல. சுற்றிலுமுள்ள சத்

தலைமேலே அம்பு பறந்தாலும், நிலையிற் பிரியல் ஆகாது.



துருக்கள் தீரனான பிரியமேதன் இறந்தது தெரிந்தால் ஒன்று சேர்ந்து இவர்கள் குலத்தையே அழிக்க ஏற்பாடு செய்வார்கள். ஆகையால் மித்திரர்களான குலங்களை ஒன்று சேர்த்துப் பலப்படுத்திக் கொள்ளவேண்டும். சத்துருக்கள் திடீரென்று தங்களைத் தாக்காவண்ணம் துர்க்கத்தைக் காத்து உணவுப்பொருள்களைச் சேகரித்துத் தங்கள் பசுக்கிடைகளைக் காப்பாற்றவேண்டும், சமயம் பார்த்துச் சரத்கால ஆரம்பத்திலேயே சத்துருக்களை எதிர்த்தடிக்கவும் தயாராகவே இருக்கவேண்டும்.

வ்ருஷன் தீரனென முன்னமேயே சொன்னோம். தந்தையிறந்தஇரண்டு,மூன்றுவருஷங்களுக்குள் சுற்றிலுமுள்ள ஆரியர்குலங்கள் நடுங்கும்படிச் செய்தான். தன் தகப்பனைக் கொன்ற குலம் அழிந்துபோம்படி கோரயுத்தம் புரிந்தான். இவன் மித்திரர்கள் பலர் ஒன்று சேர்ந்து தம் குலங்களுக்கும் இவனையே தலைவனாக்கி மகாகுலபதியென்று அழைத்தார்கள்.

நம் கதாநாயகனுக்கு நோதஸ் என்றொரு நண்பர் இருந்தார். இவர் இவ்வாரியரால் பயபக்தியுடன் பூஜித்து வரப்பெற்ற ஒரு ரிஷிகுலத்தைக் சார்ந்தவர். பகவான், அவர்கள் முகமாய் ஸநாதனமான வேதத்தை மானிடர் உஜ்ஜீவிப்பதற்காக வெளியிடுவதாக இந்த ஜாதியாருடைய கொள்கை. நோதஸ்ஸின் முன்னோரான உபஸ்துதர், கோரர், வ்ருஷ்டிஹவ்யர் முதலான ரிஷிகள் மருத்துக்களுக்கும்,இந்திரன், அக்னி, வருணன் முதலிய வழிபடு தெய்வங்களுக்கும் ஸ்தோத்திரமாக அநேக ரிக்குகளை வெளிப்படுத்தியிருந்தார்கள். அவர்கள் ஜனக்கூட்டத்தின் மத்தியிலில்லாமல் சமீபத்திலுள்ளகுளம் அல்லது ஆற்றின் கரையில் கட்டப்பெற்ற ஒரு ஆசிரமத்தில் வசிப்பது வழக்கம். கிராமத்திலுள்ள சகல ஜனங்களாலும் ஆராதிக்கப்பட்டு, சற்குண சம்பன்னர்களாய், மதாபிவிருத்தியில் ஊக்கமுடையவர்களாயிருந்தார்கள்.

யுத்தத்திற்குப் போகுமுன்னும், ஜயம் பெற்ற பின்னும் செய்யும் யாகங்களை நோதஸ்ஸே நடத்திவந்தார். அவர் முகமாகவும் சில 'ரிக்'குகள் வெளிவந்தன. அவற்றின் ஒன்றை இங்கு மொழிபெயர்த்து எழுதுவாம்.

1. "பௌருஷமுடையவர்களும், சூரரும், ஞானவான்களுமான மருத்துக்களுக்கு, ஏ நோதஸ்! ஸுவ்ருக்தியை (ஸ்துதிரிக்கை)க் கொணர்வீர். புத்திசாதுர்யமுடைய ஸமர்த்தனை வேலைக்காரன்போல், யாகாதிகளில் உபயுக்தமான வார்த்தைகளை நான் சேர்க்கிறேன்."

3. யுவாக்களும் ஜரையில்லாதவர்களும் அபோக் என்னும் அசுரனைக் (மழையில்லாத மேகங்களை) கொல்லுகிறவர்களுமான மருத்துக்கள் மலைகள்போல் எதிரில்லாமலாய் விட்டார்கள். தங்கள் பலத்தால் ஆகாயம் பூமியிலுள்ள மகா பலமுள்ளவைகளையும் நடுங்கும்படிச் செய்கிறார்கள்.

5. சக்தி கொடுப்பவர்களும், கர்ஜனை செய்பவர்களும், சத்ரு ஸம்ஹாரகர்களுமான இந்த மருத்துக்கள், தங்கள் சக்தியால் காற்றையும், மின்னலையும், உண்டாக்குகிறார்கள். எல்லாவற்றையும் நடுங்கச்செய்யும் இவர்கள் சுற்றிலும் அலையும் மேகங்களிலிருந்து நீரைக் கரந்து பூமியில் மழை நிறையச்செய்கிறார்கள்.

14. ஓ மருத்துக்களே! உங்களை வழிபடுவோருக்குப் பலத்தைக் கொடுங்கள். அதனால் கீர்த்தியும் ஜயமும், தனலாபமும், ஸ்துதியும் ப்ரக்யாதியும் உண்டாகட்டும். அதனால் நாங்கள் பல்லாண்டுகளுக்கு பந்து பரிபாலனம் செய்யக்கடவோம்.

15. ஹே, மருத்துக்களே! ஸ்திரமானவும், பலத்தோடு கூடியவுமான ஐசுவரியத்தைக் கொடுங்கள். அது சதஸஹஸ்ரமாக வ்ருத்தியடையட்டும். பருஸ்துத்யமான மருத்கணம் சீக்கிரமாக வரட்டும்.

நோதஸ்ஸுக்கு "பிரமாவர்த்தம்" என்னும் பெயருடைய மேல் பஞ்சாபில் உள்ள ஆரியரைப்பற்றித் தெரியும். அவர்கள் வசித்துவந்த பூமி மிகவும் செழிப்புற்றதென்றும், வாஸயோக்கியமானதென்றும் கேள்விப்பட்டிருந்தார். எப்பொழுதும் சிரமத்துடன் ஜீவனம் செய்யவேண்டிவரும் தம் தேசத்தைவிட்டு அவ்விடத்தில் சுற்றுப்பக்கங்களிலுள்ள ஆரிய குலங்களிடம் ஏற்பட்டிருந்த மாத்ஸல்யத்தையும் தொலைத்து, புதிய பூமியை அடைந்து ஆயுளைக்கழிக்கவேண்டுமென்னும் ஆசை அவருக்கு உண்டாயிற்று. அடிக்கடி இந்தப் பிரஸ்தாபத்தை அவர் வ்ருஷனுக்குமுன் பண்ணுவதுண்டு. எப்பொழுதும் வீரச் செயல்களில் நோக்கமுடைய தீரனான மகாகுலபதியும் கொஞ்ச காலத்திலேயே அவர் அபிப்பிராயத்

தலையும் தலையும் பொருதினால் மலையும் வந்து பொறுக்கும்.

திற்கிசைந்து, தன் பரம சிநேகிதர்களான சில நூற்றுவரோடு புறப்படுவதாகத் தீர்மானித்துவிட்டான்.

அப்படிப் புறப்பட்டுப்போவது சாதாரணமான விஷயமல்ல. பின் தங்குவோரைப் பரிபாலிப்பதற்காகத் தன் தம்பியும், தன்னோடொத்துழைத்து வந்தவனுமான மேதாதிதி என்பவனைக் குலபதியாக அபிஷேகஞ் செய்தான்.

பயணத்திற்கு வேண்டிய சாமக்கிரியைகளை சீக்கிரமே திட்டஞ் செய்தான். இவ்விஷயங்களில் "நோதஸ்" எப்பொழுதும் கூடவிருந்து யுக்தி சொல்லி வருவார். ஏற்கெனவே இந்திய ஆரியர் சென்றவழி போனால் வெகுதூரம் போகவேண்டி வரும். மேலும் முன்னமே ஏற்பட்டிருக்கும் ராஜ்யங்களுக்கு நடுவில் அவைகளின் அதிபதிகளுக்கு அடங்கியிருக்கும்படி வரும். அப்படியிருப்பது நமது கதாநாயகனுக்கு முடியவே முடியாது. ஆகையால் தெற்கேயுள்ள மலைகளைக் கடந்துபோவதே உசிதமென்று அவர்கள் தீர்மானித்தார்கள்.

அவ்வழியிலுள்ள சிரமத்தையும் அவர்கள் யோசித்துப் பார்த்தார்கள். தாண்டிப் போகவேண்டிய மலைகள் அனந்தம். எப்பொழுதும் பனி இருக்கும்படியான மிகுந்த குளிரான பிரதேசங்கள்.

வழி நிச்சயமாய் ஒருவருக்கும் தெரியாது. பலவான்களான ஆண்பிள்ளைகள் மாத்திரமே போகக்கூடுமே யல்லாது அபலைகளான ஸ்திரீகள் போவது அசாத்தியம். பிரகிருதியில் உள்ள கஷ்டங்களுடன், வழியில் உள்ள பல தேசத்தாருடனும் எதிர்த்து ஜயம்பெற்றுப் போகவேண்டிவரும். ஆனால், கடைசியில் தாங்கள் போய்ச் சேரும் தேசம் இவ்வளவு கஷ்டப்பட்டும் போகத் தகுந்ததென்று நோதஸ் பிடிவாதமாய்ச் சொன்னார்.

ஏற்பாடுகளெல்லாம் ஆயின. யுத்தத்திற்கு உதவக்கூடிய ஆயுதங்களே அவர்களுக்கு முக்கியமான பாரம். சில தினங்களுக்கே தங்களுக்கு வேண்டிய ஆகாரங்களை அவர்கள் திட்டம் செய்து வைத்திருந்தார்கள். போகும் வழியில் தங்கள் திறனால் தமக்கு வேண்டினவற்றைக் கைப்பற்றிக் கொள்ளலாமென்னும் எண்ணம் அவருக்குண்டு.

தைரியமும் பதிவிருதாசிரத்தையும் வாய்ந்த சில ஸ்திரீகளே அவர்களுடன் கூடப் புறப்பட்டார்கள். சசிருதுவில் நல்ல நாள் பார்த்தாய் விட்டது. நம் கதாநாயகனுக் குட்பட்ட குலங்களெல்லாம் ஒன்றுகூடி யிருந்தன. நோதஸ் ஸும், மற்றும் சில ரிஷிகளும் மகத்தான யாகஞ்செய்து இஷ்டதேவதா பூஜையை முடித்தார்கள். எல்லோரும் கொஞ்சதூரம் கூட வந்து வழிவிட, நம் கதாநாயகனும் நோதஸ் மகரிஷியும் அவர்கள் பரிஜனங்களும் தாங்கள் எடுத்துக்கொண்ட மகா யாத்திரையை ஆரம்பித்தனர்.

இவர்களுக்கு வழியில் நேர்ந்த சம்பவங்களை நாம் இங்கு சொல்லப் புகவில்லை. பிரகிருதியாலும் மனிதர்களாலும் அவர்களுக்கு நேர்ந்த கஷ்டங்கள் பல.

குளிர் பொறுக்கமாட்டாமலும் வழிசிரமம் தாங்காமலும், கூடவந்த பெண்பாலரில் அநேகர் மடிந்தனர். வழியிலுள்ள பல ஜாதியாரை எதிர்த்து யுத்தஞ் செய்ததில் அநேகரை இழக்கவேண்டி வந்தது. சிற்சில வேளைகளில் தீரனான நம் குலபதியும் இப்படி நாம் எடுத்துக்கொண்ட ஸாஹஸத்தை பூர்த்தி செய்ய முடியுமாவென்று நினைத்துக் கலங்குவான். அச்சமயங்களில் நோதஸ்ஸே அவனுக்கு தைரியம் சொல்லிவருவார்.

வருஷம் இரண்டாயிற்று. பாமிர் மேடு, காரகோரம் மலை, மேல் ஹிமாசலம் எல்லாம் தாண்டியாயிற்று. இதுவரையில் ஆறுகளெல்லாம் வடக்கு முகமாய் ஓடிக்கொண்டிருந்தன. இப்பொழுதோ ஆறுகளெல்லாம் தெற்குமுகமாக ஓடுகின்றன. இந்த விசேஷத்தை நோதஸ் வ்ருஷனுக்குக் காட்டித் தம் நாட்டம் நிறைவேறியதென்று வெகுவாக சந்தோஷித்தார். திவ்யமான 'ரிக்'குகள் அவர் முகமாய் வெளிவந்தன. வ்ருஷனும் அவர் கூட வந்தவர்களும் இதைப்பார்த்து ஆச்சரியமடைந்து தாங்கள் பட்ட சிரமமெல்லாம் மறந்து, தாமடைந்த புது தேசத்தின்மகிமையெல்லாம் தெரிந்துகொள்ள ஆவலாயிருந்தார்கள்.

அப்படி அவர்கள் காச்மீர நாட்டின் அழகையும் ஓடும் நதிகளையும் பெரிய நீர் வீழ்ச்சிகளையும் அதிசயமான பெருங் காடுகளையும், புஷ்பங்களையும் பார்த்து ஆச்சரியப்பட்டு அங்கிருந்து காலங்கழிக்க விருப்புக்கொண்டனர். ஆனால், நோதஸ் மறுபடியும் அவர்களைத்

தலையோடு போகிறது தலைப்பாகையோடு போயிற்று.



தூண்டி, அவர்கள் பார்த்த நாட்டைவிடப் பன்மடங்கு விசேஷமான தேசம் அவர்களுக்கு சித்திக்குமென்று சொல்லிப் பெரிய மலைகளைக் கடந்து ஹிமாசலத்தின் அடிவாரத்திலுள்ள, மகா காந்தாரத்தின் ஓரமாய் ஆறுகளைக் கடந்து கிழக்கு முகமாய்ப் போகலானார்.

ஸிந்து நதியும், அதன் கிளைகளும், பாயும் பிரமாவர்த்தத்திற்கு அவர் ஏன் வரவில்லை? கிழக்கு நோக்கிப் போவானேன்? என்று கேட்கலாம். அவர் அபிப்பிராயம், நம் கதாநாயகன் புது நாடடைந்து ஆர்யகுலாபிவிருத்தியில் முதல்வனாக நிற்கவேண்டுமென்பதே. இதுமுதல், வழியில் அவர்களை எதிர்த்த சத்துருக்கள் இந்தியாவில் ஏற்கெனவே குடியேறிய ஜனங்கள். கருப்பு வர்ணமாயும், உருவத்தில் குட்டையாயும் இருப்பார்கள். இவர்களைத் திருணமாய்ப் பாவித்து, ஹதம் செய்துகொண்டு, வ்ருஷன் முன் போவான். ஆனால் சில இடங்களில் இந்த ஜாதியார் ஆற்றங்கரை ஓரங்களில், வனதுர்க்கங்களில், பலமானகோட்டையினடுவில் இருந்துகொண்டு நம் ஆரியரை எதிர்த்தனர். அப்பொழுது பலமான யுத்தம் நடக்கும். நோதஸ் முகமாக சீறும்படியான வீரரஸம் பொருந்திய 'ரிக்கு'கள் வெளிவரத் தைர்யமடைந்த ஆர்யவீரர் இணை இல்லை என்று சொல்லும்படியாகச் சண்டைசெய்து சத்துருவை முறியடித்தார்கள்.

இப்படியாக ஸிந்து, அஸிக்னி, பருஷணி, ஸரஸ்வதி முதலிய நதிகளைத் தாண்டி கங்கை யமுனை நதிகளின் மேற்போக்கை அடைந்தனர். அப்பொழுது நோதஸ் பிரமாவர்த்த ஆர்யர் பரவிவந்த அத்யந்த தூரம் கடந்துவிட்டதாகக்கண்டு, தெற்குநோக்கி, மலையடிவாரத்தைவிட்டு ஸமபூமியை அடைந்து, புதிதாக வ்ருஷனுக்கு ஒரு நாடமைக்கும் வழி தேடினர். யமுனையின் ஓரமாக நல்லதோர் இடம்பார்த்து சிற்பவிதிப்படி பட்டணங் கட்ட ஏற்பாடுசெய்தார்.

வழியில் ஆரியர், அநேக ஜாதியாரை ஜயித்து வந்தார்களென்று சொன்னோம். அவர்களில் சிலர் இவர்களுக்குத் தாழ்ந்தும், இவர்களுடன் சேர்ந்தும், மற்றவர்களை எதிர்க்க ஒத்தாசை செய்தும் வந்தார்கள். நோதஸ் அவர்கள் வகுப்பில் இருந்த, அழகுவாய்ந்த யுவதிகளைத் தம்முடன் வந்த ஆரியருக்குக் கலியாணம் செய்துவைத்தார். ஸ்வஜாதியில் ஸ்திரீ இல்லாத அவர்கள் அப்படியே கலியாணம் செய்துகொண்டார்கள். அவர்களும், அவர்கள் ஸந்ததியும் ஆரிய ஸ்திரீகளுடன் இருந்தவர்களைவிட ஒருபடி தாழ்வாகவே மதிக்கப்பட்டனர்.

வ்ருஷனுடைய ராஜ்யம் பெருமையிலும் ஐசுவரியத்திலும் மிஞ்சியது. புதிதாக ஏற்பட்ட இந்த ராஜ்யத்தைப்பற்றிக் கேட்ட மேலாரியரில் பலர் இங்கே வந்து மரியாதை பெற்று இவர்களுடனேயே தங்கிவிட்டார்கள். ரிஷிகளும் அநேகர் நோதஸ்ஸின் பெருமையையும் அவர் ரிக்குகளின் மகிமையையும் கேள்வியுற்று வர, அவர்களுக்கெல்லாம் தகுந்தபடி ஆசிரமங்கள் அமைத்து, அவர்களெல்லோரும் அங்கே தங்கும்படி செய்தார். இப்படி நோதஸ்ஸால் ஏற்பட்ட இப்புதிய ஆரியர் நாடு பிரமரிஷிதேசமெனப் பெயர்பெற்று விளங்க ஆரம்பித்தது.

---

அரிசியும் உமியும்போல்—என்று சொல்வதுண்டு. அதாவது, அரிசியும் உமியும் சேர்ந்திருந்தாலன்றி அதற்கு நெல் என்னும் பெயர் உண்டாகாது. நெல்லை விதைக்கவேண்டுமானால் அதிலுள்ள உமியை நீக்கலாகாது. அரிசி, சத்துள்ள பதார்த்தமாயினும், அசத்தான உமி அதனுடன் சேர்ந்திருந்தாலன்றி முளைக்கும் யோக்கியதை அதற்கு உண்டாகாது. அதுபோல் ஞானம் உண்டாவதற்கு முதலில் மனிதன் கர்மத்தை விடாமல் அனுசரிக்கவேண்டும். ஞானம் உண்டானபிறகு கர்மமாகிற உமியை நீக்கிவிடலாம். ஆத்மஞானம் உண்டாகுமுன்னே நித்தியகருமங்களைக் கைவிடுகிறவன் ஒருநாளும் கடைத்தேறமாட்டான். உமிநீங்கிய நெல், முளைக்காமற் போவதுபோல் கர்மபிரஷ்டனான மனிதன் ஞானி யாகமாட்டான். சிலர், வேதாந்தம் படித்து "நான் வேதாந்தியாய்விட்டேன். எனக்கு ஸ்நானம் வேண்டாம். நான் சிராத்தாதி கருமங்களைச் செய்யமாட்டேன்" என்று சொல்லுகிறார்கள். இது பெரும் பிசகு. வேதாந்தம் படித்ததினாலேயே ஞானி ஆகமாட்டான். வேதாந்தத்திற் கூறியபடி அனுஷ்டித்து பிரமஞானத்தை அறிபவனே ஞானி. அப்படி அறிந்தவன் ஜீவன் முக்தனாகிறான். அவனை நாம் காண்பதரிது. ஆதலின் தற்காலம் உள்ள சகல ஜனங்களும் கர்மத்தை யனுசரிப்பது அவசியம். அப்படி அனுசரியாதவர்கள் பாபிகளென்பதில் ஆக்ஷேபனையில்லை.

—(o)—

7 தலைவன் நிற்கத் தண்டு நிற்கும், தலைவன் மயங்கச் சர்வமும் மயங்கும்.

# ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்

## SRI LOKAMANYA BALGANGADHAR TILAK

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ், எம். ஏ., எல். டி.]

(18-ம் பக்கத் தொடர்ச்சி)

1901-ம் வருஷம் முதல், 1904-ம் வருஷம் வரையில் திலகருக்கு வேறு விஷயத்தில் கஷ்டங்கள் நேரிட்டன. இவருக்கு ஸ்ரீ பாபா மஹாராஜென்று ஒரு ஆப்த நண்ப ரிருந்தனர். அவருடைய குடும்ப விசாரணையில் இவர் வெகு சிரத்தை வைப்பது வழக்கம். ஆதலின் அவர் சாகுந்தருணத்தில் இவரை வரவழைத்துத் தம் சொத்தை தனக்குப்பிறகுத் தன் பாத்தியஸ்தர்களுக்குப் பங்கிட்டுக் கொடுக்கும்படி வேண்டிக்கொண்டனர். நெடுநாளாய் இருந்த நட்பினால் இவர் அவ்வேண்டுகோளுக்கிரங்கினார்.

ஸ்ரீபாபா மஹாராஜா காலஞ் சென்றவுடனே அவ்வாஸ்தியை யெல்லாம் இவர் சீர்திருத்த முயன்றனர். குடும்பத்துக்குப் பெரியதொரு தொகை கடனிருந்ததால் அக்கடனைத் தீர்க்க முதலில் வழிதேடினார். ஸ்ரீ பாபாவுக்கு ஆண் சந்ததியே யில்லாததாலும், வார்சு ஒருவருமில்லாத சொத்து வெகுசீக்கிரத்தில் அழிந்துபோவது சகஜமாதலாலும், இவர், ஒரு பிள்ளையை ஸ்வீகாரம் வாங்கிக் கொள்ளவேண்டும் என்று ஸ்ரீ பாபாவின் பெண்சாதிக்குச் சொன்னார். ஆகையால் அம்மாது அவுரங்கபாத்துக்குப் போய்த் தன் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு நல்ல பையனைப் பார்த்து ஸ்வீகாரம் செய்து கொண்டு திரும்பிவந்தாள்.

இதற்குள்ளாக, இவள் ஸ்வீகாரம் வாங்கிக் கொள்ளாமலிருந்தால் சொத்து முழுதும் தமக்கே வரும் என்று நினைத்திருந்த சிலர்க்கு இச்சமாசாரம் மிகுந்த மனவருத்தத்தையுண்டாக்கியது. உடனே அவர்கள் ஸ்வீகாரம் செய்தது தவறு என்று எதிர்கட்சி யுண்டாக்கி, கொஞ்சங் கொஞ்சம் திலகருக்கும் தாய் மகாராஜனுக்கும் பகை மூட்டிவிட்டனர். அவள் திலகரின் பெருமையை உணராதவளாதலின், அவர் தன்னை மோசஞ் செய்கிறதாகப் பாவித்தாள். திலகர் பலவந்தப்படுத்தியதால் ஸ்வீகாரம் வாங்கப்பட்ட தென்றும், அதன் பொருட்டு ஸ்வீகாரம் செல்லாதென்றும் வீண் வாக்குவாதம் செய்து, கோர்ட்டில் பிரியாது கொடுத்தாள். பூனாவிலுள்ள ஜில்லா ஜட்ஜான ஆஸ்டன் என்பவர் திலகர் செய்தது தவறென்று தீர்மானித்து, அவர் பொய்க் கையெழுத்து போட்டவராதலின் பதினெட்டு மாதம் கடுங்காவலி லிருக்கவேண்டுமென்று உத்தரவு அளித்தனர்.

திலகர் தம் சிநேகிதர்களின் உதவியால் ஹைகோர்ட்டுக்கு அப்பீல்செய்ததில் திலகர் மேல் சற்றும் குற்றமில்லையென்று ஸ்தாபிக்கப்பட்டது. ஆதலின் இவர் சத்துருக்கள் மறுபடி பிரீவி கௌன்ஸிலுக்கு அப்பீல்புரிந்தனர். அதிலும் திலகர் நடவடிக்கை ஒழுங்கானதேயென்றும், அதில் ஒருவிதமான குற்றமும் இல்லாததால், அவர் முயற்சியால் நடக்கப்பெற்ற ஸ்வீகாரம் சட்டப்படி செய்ததே என்றும் ஒரு சந்தேகமுமில்லாமல் பிரீவிகௌன்ஸிலர்கள் வற்புறுத்திவிட்டனர்.

விசாரணை வெகுநாள் வரையில் நீடித்திருந்ததாலும், தன் குணத்தைப்பற்றிப் பற்பல வசைமொழிகள் ஏற்பட்டிருந்ததாலும், அவற்றைத் தீர்த்துக்கொள்ள இவர் விடாமுயற்சி செய்ததால் இவருக்கு 1901-ம் வருஷம் முதல் 1904ம் வருஷம் இறுதிவரையில் வேறொரு விஷயத்திலும் கவனம் செலுத்த முடியாமல் போய்விட்டது.

எனினும், 1905-ம் வருஷம் முதல், இவர் அரசியல் விஷயங்களில் ஊக்கத்துடன் பிரவேசிக்க ஆரம்பித்தனர். அப்போதுதான் இராஜப் பிரதிநிதியான கர்ஸன் பிரபு வங்காளத்தை இரண்டு துண்டாகப் பிரித்துவிடவேண்டும் என்றெண்ணி, பொது ஜனங்களின் அபிப்பிராயத்துக்கு நேர் விரோதமாகத் தம் எண்ணத்தைப் பூர்த்தி செய்தனர்.

பொது ஜன அபிப்பிராயத்தை வெகு அலக்ஷியமாகப் பாராட்டியதால் ஜனங்களுக்கு சொல்லற்கரிய கோபம் உண்டானது. ஆதலின் இனிமேல் நமக்கேதாவது குற்றங் குறைகளிருந்தால் அரசாங்கத்தாருக்கு அதைப்பற்றி முறையிட்டும் ஒரு பிரயோஜனமு மில்லையே, என்று ஏங்கினர் சிலர். மற்றுஞ்சிலர், "அவர்கள்மேல் குற்றஞ் சாட்டுவதில் பயனே இல்லை. நாமே சரியான வழியில் வேண்டிய முயற்சி செய்து ஸ்வராஜ்யத்துக்காக உழைக்கவேண்டும்" என்றனர். புத்தி நுட்ப மில்லாதவர் சிலர் "நாம் பிரிட்டிஷ் அரசாங்கத்தாருக்குட்பட்டே யிருக்கக் கூடாது" என்றனர். இப்படிச் சொல்லியும் நடந்தும் வந்தவர்கள் மிகவும் சொற்பம்.





துரைத்தனத்தாருக்கு வரவரப் பயம் அதிகரித்தது. புதிதானவும், குரூரமானவுமுள்ள பல்வேறு சட்டங்களை நியமிக்க ஆரம்பித்தனர். இச்சங்கடத்தினின்று தப்பும் வழி யாது? என்று பொது ஜனங்கள் யோசித்ததில் பலபேர் பலவிதமாய்ப் பேசினார்கள். காசி நகரத்தில் காலஞ்சென்ற கோகலேயின் அக்கிராசனத்தின் கீழ் 1905-ம் வருஷத்தில் நடந்த தேசிய காங்கிரஸ் மஹாசபையிலேயே இவ்வேறுபாடுகள் தோன்ற ஆரம்பித்தன. 1906-ம் வருஷத்தில் கல்கத்தாவில் நடந்த காங்கிரஸுக்கு தாதாபாய் நௌரோஜி அக்கிராசனம் வகித்ததால் ஒரு கஷ்டமும் இல்லாமல் போய்விட்டது.

"இந்தியாவிற்குக்கூடிய சீக்கிரத்தில் ஸ்வராஜ்யம் வரவேண்டும்; ஆதலின் அதற்குத் தகுந்த முயற்சி செய்துவரவேண்டும்" என்று அவர் ஐயந்திரிபறச் சொன்னார். 1907-ம் வருஷத்திலும் இதைஅஸ்திவாரம் வைத்துக்கொண்டு மேல் நடவடிக்கை பார்க்கப் பிரயத்தனம் செய்வது சகஜமாயிருந்தது.

ஆயினும் அப்படிச் செய்வது தவறென்றும், ஸ்வராஜ்யம் அடையக்கூடிய நிலைமைக்கு இன்னும் இந்தியா தேசம் வரவில்லையாதலால் நாம் அந்நோக்கத்தை விட்டுவிட வேண்டுமென்றும் சிலர் சொல்லிக்கொண்டே யிருந்தனர்.

நாளாவர்த்தியில் இவ்விரண்டு கக்ஷிக்காரர்களுக்கும் வேறுபாடுகள் அதிகரித்தன. 1907-ம் வருஷத்தில் சூரத்தில் நடந்த காங்கிரஸ் பந்தலில் இவ்விருதிறத்தாருக்கும் பகைமேலிட்டு, வீண் சண்டை ஏற்பட்டு, காங்கிரஸ் மஹாசபையே கலவரப்பட்டது.

பம்பாய் மாகாணம் முழுவதிலும் ஸர் பிரோஸிஷா மேடாவுக்குள்ள செல்வாக்கு வேறெவருக்குமில்லை. அவர் கொள்கை திலகர் கொள்கைக்கு நேர் விரோதமாயிருந்ததால், தன் சொற்படி கேட்கிறவர்களையே அதிகமாய்க் காங்கிரஸ் ஸபைக்கு அழைத்து வந்தனர். இந்த சமாசாரம் மற்றையோருக்குத் தெரிந்தவுடனே, மேடாவும், மேடாவைச் சார்ந்தவர்களும் என்ன என்ன செய்கிறார்களோ அவை யெல்லாவற்றிற்கும் விரோதமாய் நடப்போம் என்று திலகரும் அவர் கூட்டத்தாரும் கங்கணம் கட்டினார்கள்.

காங்கிரஸ் ஸபை ஆரம்பிக்கும்பொழுதே ஸர் ராஷ் பிஹாரி கோஸ் அக்கிராசனம் வகிக்க வேண்டும் என்று மேடாவைச் சேர்ந்தவர்கள் கேட்டுக் கொண்டபோது, திலகர் அது கூடாது என்று ஓரேபிடிவாதமாய்ச் சொன்னார். அன்றைக்கு இருந்த கூக்குரலில் ஒருவரும் பேசவே முடியவில்லை.

அடுத்த நாளாவது, காங்கிரஸ் ஸபையில் கலவரமில்லாமலிருக்கும் என்று பலரும் எண்ணினார்கள். இரு கக்ஷிக்காரர்களும் ஸமாதானம் அடையும்பொருட்டு லாலா லஜபதிராய் தம்மா லியன்றவரையில் முயற்சிசெய்தனர். ஆயினும் ஒன்றும் பயன்படவில்லை. ஏனெனில், திலகர் ஸபைக்கு வந்தவுடனே மிதவாதிகள் எல்லோரும் அவரைப் பரிகசிக்க ஆரம்பித்தனர். பேச்சுக் கடுமையானதும் நாற்காலிகளையும், பெஞ்சுகளையும், ஒருவர்மேல் ஒருவர் வீச ஆரம்பித்தார்கள். அப்படியிருந்தும் திலகர் அஞ்சா நெஞ்சினராய் கொஞ்சமும் மனத்தளர்ச்சியில்லாம லிருந்தது வெகுவாய்ப் பாராட்டத்தக்கது. அப்படியே எதிர் கக்ஷியிலிருந்த மேடாவின் மேன்மையும் அன்று நன்கு புலப்பட்டது. சண்டை உண்டானவுடனே 'போலீஸாரைக் கூப்பிடவேண்டும்' என்று பலர் சொன்னபோதும், அதை மனதில் வைக்காமல் தானே கலவரம் சீக்கிரம் அடங்கிவிடும் என்ற நோக்கத்தால் மனோ தைரியத்துடன் தம் ஆசனத்தில் வீற்றிருந்தார்,

திலகர் நடவடிக்கையில் கொஞ்சமும் தவறுதல் இல்லை எனினும், ராஜாங்கததாருக்கு அவர்மேல் அதிக துவேஷம் உண்டாயிற்று. மிதவாதிகள் கொள்கையே சரியென்றும், திலகரும் திலகரைச் சார்ந்தாரும் துன்மதியுடையவரென்றும் தீர்மானித்து, துரைத்தனத்தார் இவர்களைப் பலவிதத்தாலும் ஹிம்ஸிக்கலாயினர். 1908-ம் வருஷம் ஜூன்மீ இருபதாம் தேதியில் சட்ட நிர்வாக ஸபை

யில் பம்பாய் கவர்னர் பிரசங்கம் செய்ததிலிருந்தே ஏதோ பெருத்த கஷ்டம் வரப்போகிறது என்று தெரிந்தது.

போதாக்குறைக்கு மிதமிஞ்சிப் பேசுகிறவர்களில் ஆத்திரக்காரரான இரண்டு மூன்று பேர் சில இங்கிலீஷ்காரர்களைச் சதிக்கொலை புரிந்தனர். இவையெல்லாம் திலகர் பேசியதால்தான் உண்டாயிற்று என்று துரைத்தனத்தார் எண்ணங்கொண்டு, அவரை 'ராஜத்துவேஷி'என்று சொல்லி, பம்பாய் ஹைகோர்ட்டில் கேஸ் கொண்டுவந்தார்கள்.

உடனே போலீஸாரில் சிலர் பூனாவுக்குச் சென்று அவர் வீடுமுழுவதையும் சோதித்தார்கள். மற்றுஞ்சிலர் சிங்காடியுள்ள திலகர் பங்களாவைப் பரிசோதனை செய்தார்கள். இன்னுஞ் சிலர் 'மஹாராட்டா''கேசரி' ஆகிய இரு பத்திரிகைகளும் பிரசுரிக்கப்படும் ஆபீஸ் முழுவதையும் தேடினார்கள், திலகர் இராஜத்துவேஷிதான் என்று ஸ்தாபிக்க ஒரு ருஜுவும் அகப்படவில்லை.

ஆயினும் ஜூன் மாதம் 24-ம் தேதி 'ஸர்தார் கிருஹம்' என்ற விடத்தில் தங்கியிருந்த திலகரை ஜெயிலிலிட்டனர். உடனே கேஸ் ஹைகோர்ட்டில் நடந்தேறியது. "திலகர் எழுதிய வியாசங்களில் துரைத்தனத்தாரை வெகுவாய்க் கண்டித்தெழுதியுள்ளார். ஆதலின் அவர் பிரஜைகளின் ராஜவிசுவாசத்தை மாற்றி ராஜத்துவேஷத்தை உண்டாக்க முயல்கிறார். உடனே இவரைத் தண்டிக்கவேண்டும்" என்று ஜஸ்டிஸ் தேவர் சொல்லி, இவருக்கு ஆயிரம் ரூபாய் அபராதம் போட்டதுமன்றி ஆறு வருஷகாலம் அந்தமான் தீவுகளில் சிறையிருக்க வேண்டும் என்றும் விதித்தனர். எது எவ்வாறாயினும், கேஸில் திலகரின் வாக்சாதுரியத்தை மெச்சாதவர் ஒருவருமில்லை. "நான் செய்தது தவறென்று கோர்ட்டார் எண்ணினால், அதற்குத் தகுந்த தண்டனைக்கு நான் உட்படுகிறேன். ஆயினும் எனது மனச்சாக்ஷிக்குத் தெரிந்தவரையில் நான் செய்ததிலும் எழுதியதிலும் கொஞ்சமும் பிசகில்லை. நான் மஹாராஷ்டிர பாஷையில் பிரசங்கஞ் செய்தேன். அதை இங்கிலீஷில் மொழிபெயர்த்ததில் பல மாறுபாடுகள் பண்ணியிருக்கின்றனர். இங்கிலீஷ் மொழிபெயர்ப்பை வைத்துக்கொண்டு கோர்ட்டார் என்னை மதிப்பது சரியானதல்ல" என்று ஐந்து நாள் வரையிலும் கோர்ட்டார் ஆச்சரியப்படும்படி பேசினார்.

இப்பிரயத்தனம் எல்லாம் வீணாகி, தண்டனை விதித்தான பிறகும், அவர், "ஏதோ கடவுளின் செயல்கள் நம்மால் அறிய முடியாது. பொதுஜன நன்மையின் பொருட்டே நான் இதுவரையில் உழைத்து வந்திருக்கிறேன். நான் இந்தியாவிலிருப்பதைப் பார்க்கிலும், அந்தமான் தீவில் சிறையிருப்பின் பொது ஜனங்களுக்கு நன்மை அதிகரிக்கும் என்று கடவுள் கிருபையிருக்கிறது போலும். ஆயின் அப்படியேயாகுக" என்று மனச்சஞ்சலம் ஒன்றுமில்லாமல் வெகு சாந்தமாய்ப் பேசினார். என்னே இவர் மனத்திறமை!

திலகரைச் சிறையிலிட்டனர் என்று தெரிந்ததும், ஜனங்களுக்குண்டான வருத்தம் சொல்லிமுடியாது. பட்டணங்களிலும், கிராமங்களிலுமிருந்து பொது ஜனக் கூட்டங் கூடித் தம் வருத்தத்தைத் தெரியப்படுத்தினர்.

திலகரை உடனே பம்பாயிலிருந்து ஆமதாபாத்துக்குக் கொண்டுவந்து அங்கிருந்து மாண்டலேக்குக் கெண்டுவந்தார்கள். மனம் நிம்மதியாயிருந்தால் சிறையிலிருந்தாலென்ன, மாளிகையிலிருந்தாலென்ன, எல்லாம் ஒன்றுதானே. 'மனஸே காரணாத்மனே' என்று பெரியோர் கூறியுள்ளனரல்லவா? அப்படியே திலகர் சிறையிலிருந்தும் கொஞ்சம் கூட மனம் நோகாமல் நம்மைப் படைத்த கடவுளின் குணாதிசயங்களைப்பற்றி யோசித்து அவரது பெருமையையும் சக்தியையும் நினைத்து நினைத்து மகிழ்ந்தனர்.

கடவுளைப்பற்றி ஆராயுங்கால், ஆயுள் முழுவதுமே போதாது. ஆதலால் இவர் சிறையிலிருந்த ஆறு வருஷமும் இவருக்கு ஆறு மணியாய்த் தோன்றியதே தவிர வேறல்ல. சதுர்வேதங்களுக்கொப்பான பெருமையையுடைய பகவத்கீதையை இவர் வாசிக்கவாசிக்க அதன் ரகசியம் தெளிவாய்த் தெரிந்தது. தாம் கஷ்டப்பட்டு ஆராய்ந்ததைப் பொதுஜன நன்மைக்காகப் பலரும் தெரியும் வண்ணம் இவர் 'கீதை ரஹஸ்யம்' என்று மஹாராஷ்டிரத்தில் ஒரு வழிநூல் எழுதினார். அதன் மகிமையை அறிந்து அதை ஆங்கிலம், தெலுங்கு முதலிய பல பாஷைகளிலும் கற்றோர் மொழிபெயர்த்திருக்கின்றனர். "தர்மம் எதுவோ





அதன் வழியே நாம் நடக்கவேண்டும். அதனால் கஷ்டம் வந்தாலும் சரி, சுகம் வந்தாலும் சரி, நாம் நமது கடமையைச் செய்யவேண்டுமே தவிர, சுகதுக்கத்தை நாம் கொஞ்சமும் கவனிக்கக்கூடாது. இரண்டாவது, பகவத்கீதையில் சொல்லியிருக்கும் விஷயம் சந்நியாசிகளுக்குத்தான் முக்கியமானதென்றும் கிரஹஸ்தர்களுக்குரியதில்லை என்றும் பலர் தவறான எண்ணங்கொண்டிருக்கின்றனர். தீர்க்காலோசனை செய்தாலோ, கீதையில் சொல்லும் விஷயம், ஒவ்வொருவரும் ஏற்றுக்கொண்டு நடக்கத்தக்கதே. நாம் செய்யும் கர்மங்களின் பலத்தைக் கருதாமலே, காரியங்களைச் செய்யவேண்டியது. பலன் இல்லாமற்போகிறதேயென்று கர்மங்களை நிறுத்தவும் கூடாது. மூன்றாவது, ஞானத்தினாலும் பக்தியினாலும் நாம் மோக்ஷத்துக்குச் செல்லலாமாகிலும், கீதையில் வற்புறுத்துவதென்னவென்றால், கர்மத்தினாலும் நாம் மோக்ஷமடையலாம் என்பதே. ஆதலின் நாம் பணக்காரராயினும் சரி, ஏழையாயினும் சரி, எவ்வருணத்தாராயினும் சரி, எச்சாதியாராயினும் சரி, தத்தம் கருமங்களைத் தர்மம் தவறாமல் செய்தால் கடவுள் சந்தோஷப்படுவார் என்று தெளிவாய்க் கூறியுள்ளார். நான்காவது, கீதையின் உள் நோக்கத்தை யறிந்தால் நமக்கு வரும் எல்லா சந்தேகங்களும் நிவர்த்திக்கப்படும். ஞானம் முக்கியமா? அல்லது கர்மம் முக்கியமா? என்று அர்ஜுனன் கேட்க, ஸ்ரீகிருஷ்ண பகவான் தடையின்றி அவனுக்குப் பதில் கூறுவார்: 'ஞானம், பக்தி, ஸந்யாஸம் முதலியவையெல்லாம் முக்கியந்தான். ஆயினும், மோக்ஷஸாம்ராஜ்யத்தை அடைவதற்கு நாம் செய்யும் கர்மமே முக்கியமான ஸாதனமாகும்' என்று உலகத்தாரெல்லோருக்கும் புத்திகூறியுள்ளார்.

இவைகளையும் இன்னும் இவைபோன்ற மற்ற உண்மைகளையும்ஸவிஸ்தாரமாய்க்கூறும் கீதைரஹஸியம் என்று ஒரு நூலை இவர் சிறையிலிருக்கும் பொழுது இயற்றினார் என்றால் இவர் சிறைச்சாலையிலிருந்தும் பொதுநன்மைக்காக உழைத்தவர் என்பதில் தவறுண்டோ?

---

அடங்கி நடத்தல்.—பழம் நிறைந்த மரங்கள் வளைந்திருக்கின்றன. அதுபோல் நீ பெரியவனென மதிக்கப்பட விரும்பினால் எல்லோருக்கும் அடங்கி நட.

# கூட்டுறவு

## CO-OPERATION

[ஸ்ரீமான். கீ. சி. இராமசுவாமி ஐயர், பி. ஏ., எல். டி.]

மறுபடியும் இப்பொருள், இங்கிருந்து பலருக்கு விற்கப்பட்டு, உழைத்துப் பணஞ் சம்பாதிக்கும் உழைப்பாளிக்கு ஓர் சில்லறைக் கடையில் கிடைக்கின்றது. பயிராக்கினவனிடமிருந்து இப்பொருள் கொண்டுவரப்பட்டது முதல், வாங்குவோன் கையில் வந்துசேரும் வரைக்கும், பல கைகள் மாறிற்று. அநேகமாய் மாறும்போதெல்லாம், தன்னை இன்னொருவனுக்கு விற்றவனுக்கு லாபம் கொடுத்தே வந்தது. ஆகையினால் நாம் அறிந்தது என்ன? பயிராக்குபவனால் விற்கப்பட்ட பொருள், முதலில் விலைகுறைந்து, பிறகுவரவர விலையுயர்ந்து கொண்டே வருகின்றது. அதனால் தொழிலாளி, தான் வாங்கும் பொருள்களுக்கு, அவ்விலையோடு, அதை விற்றவர்களுக்கு லாபத்தையும் கொடுக்க வேண்டியிருக்கிறது என்பது வெளிப்படையாகின்றது. இச்சந்தர்ப்பத்தில் நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு, பலர் கைமாறி வருவதாலுண்டாகும் லாபத்தோடு சரக்குகளைச் சில்லறைக்கு விற்பதாலும் லாபம் கிடைக்கின்றது. இது நாமனைவரும் நன்கறிந்த விஷயம்.

இவ்விஷயம் வர்த்தகர்களுக்குச் சந்தோஷம் கொடுக்குமேயாயினும், நாம் அதைக் கவனிப்பதற்கில்லை. நமக்குக் கவலை இச்சரக்கு வாங்குவோரைப்பற்றியே. இம்மாதிரி பலருக்கும் லாபம் கொடுத்துவரும் வழியைவிட, வாங்குபவனுக்கு லாபம் கொடுக்கக்கூடிய வழியுண்டா இல்லையா என்பதே தொழிலாளிகளில் அறிஞர்களின் யோசனை. வழியுண்டு என்பது அவ்யோசனையின் முடிவாய் நின்றது. எப்படியெனின், தொழிலாளிகள் தமக்கு வேண்டியவைகள் என்னவென்று அறிந்து அவைகளை வர்த்தகர்களிடம் சில்லரையாகவாவது, அன்றேல், இவ்வர்த்தகர்களிடமாவது வாங்குவதில்லை என்று தீர்மானிக்கிறார்கள். பிறகு தமக்குள் ஒரு சங்கம் ஏற்படுத்தி, அதற்குத் தகுந்த உத்தியோகஸ்தர்களை நியமிக்கிறார்கள். இச்சங்கத்தில் சேரும் ஒவ்வொருவனும், அச்சங்கத்திற்குக் கொஞ்சம்

பணம் கொடுக்கிறான். அதை அவன் பங்குத் தொகை என்று சொல்லலாம். இம்மாதிரி சங்கத்திற் சேரும் பலரும் கொடுக்கும் தொகையை முதலாக வைத்துக்கொண்டு, சரக்குகளை மொத்தமாக வாங்குகிறார்கள். அவை பிறகு சங்கத்தாருக்கு விற்கப்படுகின்றன. இவைகளை விற்பதற்கென்று ஓர் இடமும், சிப்பந்திகளும் இருப்பதால் சங்கத்தைச் சேர்ந்தவர்கள் அங்கு தமக்கு வேண்டியவைகளைக் கஷ்டமின்றி வாங்கிக்கொண்டு போகலாம்.

ஆயின், இதிலென்ன லாபம்? கூட்டுறவு இங்கு என்ன? சாதாரணமான கடைக்கும் இச்சங்கத்துக் கடைக்குமுள்ள மாறுபாடென்ன? என்ற கேள்விகள் பிறக்கலாம். முக்கியமான மாறுபாடு ஒன்றுண்டு: கடைக்காரன், தான் லாபமடையும் பொருட்டு விற்கிறான். சங்கத்துக் கடையோ கூட்டுறவுச் சங்கத்தின் அங்கத்தினர்களுடைய லாபத்திற்கென ஏற்பட்டுள்ளது. ஆதலால், வியாபாரிக்குக்கிடைக்கும் லாபம் சங்கத்தினர்களுக்குக் கிடைக்கின்றது. இரண்டாவதாக, கடைக்காரனுடைய போட்டியும் சண்டையும் இங்கு கிடையாது. ஏனெனில், சங்கத்துக்கடை, அங்கத்தினர்களுடைய அதிகாரத்தி லிருப்பதால் அவர்கள் தமக்கு எப்படி சௌகர்யமோ, அப்படி ஏற்பாடுகளைச் செய்து கொள்ளலாம். இக்கூட்டுறவுச் சங்கங்கள் (உதாரணமாக, திருவல்லிக்கேணி கூட்டுறவுச் சங்கம்) சரக்குகளை விற்பதோடு, அவர்களுடைய பணத்தைச் சேர்க்கும் ஓர் நிதியாகவும் வேலை செய்கின்றது. இதனால் பணம் நமக்குக் கிடைத்த போதெல்லாம், அதை அந்த நிதியில் போட்டுவந்து, வேண்டியபோது எடுத்துக்கொள்ளலாம். இதனுடன் கூட, சங்கத்துக் கடையில் வாங்குவதால் அவன் வாங்கின சாமான்களின் தொகைக்கு ஏற்ப, ஆறுமாதத்திற்கு ஒருமுறையோ வருஷத்திற்கொருதடவையோ ரூபாய்க்கு இவ்வளவு என்று, லாபம் (பங்கு லாபம்) கொடுக்கப்படுகின்றது. அதனால் சங்கத்தில், சேரும்போது கட்டின சந்தாத் தொகை வெகு சீக்கிரத்தில், லாபமாக வந்து சேருவதால் பிறகு கிடைப்பதெல்லாம் அவனுக்குக் லாபமே.

பணவிஷயம் இப்படியிருக்க, விற்கப்படும் சரக்குகளைப்பற்றிச் சற்று விசாரிப்போம். சங்கத்து அங்கத்தினர்களுக்குப்பலபொருட்களைப் பற்றின வியாபார விஷயங்கள் சரிவரத் தெரியாத போதிலும், சங்கத்தின் அதிகாரக் கமிட்டியார் தக்க மனிதர்களை நியமிக்கிறார்கள். அதனால் சரக்குகள் சிறந்தவையாய் இருக்குமென்பதில் சந்தேகமில்லை. சாதாரண கடைக்காரன், தன் கடைக்கு வந்திருக்கும்போது பிரியமாகவும், மற்ற வேளைகளில் (உதாரணமாக, தன் கடையில் வாடிக்கையாக வாங்குபவன், வேறொரு கடைக்குப் போகும்போது) வேறுவிதமாகவும் நடப்பது இச்சங்கக் கடைகளில் கிடையாது.

வியாபாரத்தில் மாத்திரந்தான்கூட்டுறவின் நன்மை தெரியவருகின்றதென நாம் நினைத்தலாகாது. நாமனைவரும் அனுபவத்தில் அறியக்கூடிய விஷயமென்றே அதைக் கூறினோம். ஒரு மனிதன் எத்துறையில் உழைத்தபோதிலும், அவன் தன்னோடு உழைப்பவர்களுடன் சேர்ந்து தொழிலைப் பெருக்க, முயற்சி செய்யலாம். அப்படி ஏற்படும் கூட்டுவேலையைக் கூட்டுறவுச் சங்கவேலையென்று சொல்லலாம்.

பல காலமாக நம் தேசம் வியவசாயிகள் நிறைந்த தேசமென்பது அனைவரும் அறிந்த விஷயம். வியவசாயம் மற்றெல்லாத் தொழில்களைவிட உயர்ந்தது என்பது ஆன்றோர் துணிபு. "தொழுதூண் சுவையின் உழுதூணினிது" "உழுதுண்டு வாழ்வதற்கொப்பில்லை கண்டீர், பழுதுண்டு வேறோர் பணிக்கு." ஆனால் இவ்வியவசாயிகள் பெரும்பாலோர் சிறு குடித்தனக்காரர்கள். ஒரு ஏகரா இரண்டு ஏகரா நிலமுடையவர்கள். இவர்கள் பல காரணங்களை முன்னிட்டு, பெரும் கடன்காரர்களாக இருக்கின்றார்கள். தங்கள் நிலத்தின் சாகுபடியின்மேல் முன்கடன் வாங்கி, மணம் படிப்பு முதலிய காரியங்களை நடத்துகிறார்கள். ஆனால் இவர்கள் வாங்கினபணமும் அதன்வட்டியும் சாகுபடியானதும் செலுத்திவிட, சோற்றுக்கில்லாது பிறகு தவிக்கின்றனர். மேலும் மேனாட்டார் வியவசாயமுறையில் புதிய முறைகளைக கண்டுபிடித்திருப்பதை இவர்கள் அறியாதுமிகவும்நஷ்டமடைகின்றனர். தங்கள்சாகுபடியைக் கடன் கொடுத்தவனுக்குக் கொடுக்கிறார்களே யொழிய, உயர்ந்த விலைக்குக் கொடுப்பதில்லை. ஆகையால் கூட்டுறவு இவர்களுக்குளவ்விதம்உதவிசெய்கின்றது, செய்யும், என்பதைச்





சற்று ஆராய்வோம். தற்காலம் துரைத்தனத்தாருடைய ஒத்தாசையுடன் ஏற்பட்டிருக்கும் ஐக்கிய நாணயச் சங்கங்கள் கூட்டுறவை விருத்தி செய்யவே வேலை செய்கின்றன. குடியானவர்களுக்கும், வியவசாயிகளுக்கும் நிலத்தைப் பொறுப்பாக வைத்துக்கொண்டு, அவைகள் குறைந்த வட்டிக்குப் பணம் கடனாகக் கொடுக்கின்றன. இந்த ஐக்கிய நாணயச்சங்கத்தார் கடனை, மாதம் கொஞ்சமாக கொடுத்துவிடலாம். 'கடன் வாங்கினோம், நம் நிலம் இனி வெகுகாலம் நில்லாது' என்று நினைக்கவேண்டிய அவசியமில்லை. பணவிஷயம் இப்படியிருக்க, வியவசாயிகள் தாங்களே ஒன்றுகூடி என்ன செய்யமுடியும் என்பதைச் சற்று யோசித்தால், பல விஷயங்கள் தெரியவரும். ஒவ்வொரு குடியானவனும், கொஞ்சம் பணம்கொடுத்து மொத்தப் பணத்திற்கு நல்ல விதைகள், உழவிற்கு வேண்டிய புதுக்கருவிகள் முதலியவைகளை வாங்கி, பிறகு தங்களுக்குள் பங்கிட்டுக்கொள்ளலாம். இவைகளோடு நிற்காமல், சாகுபடியையும் ஒன்று சேர்த்து, ஓர்விலை மதிப்பிட்டு அதை மொத்தமாகப் பெருத்த வியாபாரிகளுக்கு விற்று, லாபமடையலாம். இவ்விஷயத்தைப்பற்றிப் பிறகு விவரித்துக் கூறுவோம்.

'கூட்டுறவு' என்னவென்பது நம்மவர்களுக்குத் தெரியாதென்று சொல்வதும் பிசகு. ஏனெனில், நம்மவர் பல விஷயங்களில் இம்முறையையே வெகுகாலமாகக் கையாடிவருகின்றனர். உதாரணமாக, நம் தேசத்தில் ஏழைகளும் பணக்காரரும் "திருவுளச்சீட்டுப் போடுதல்" அல்லது 'சீட்டு' என்னவென்பதை அறிவர். இது நம் தேசத்து ஸ்திரீகள் நன்றாய் அறிந்த வழி. இதன்படி, பத்து நபர்களோ பன்னிரண்டு நபர்களோ, அல்லது அதிகமானவர்களோ ஒன்றுகூடி ஒவ்வொருவரும் கொஞ்சம் பணம்கொடுப்பதாக ஏற்பாடுசெய்துகொண்டு, அப்படிச் சேர்ந்த பணத்தை ஏலங்கூறி ஒருவர் எடுத்துக்கொள்கின்றனர். நாம் கவனிக்கவேண்டியது என்னவெனில், மேற்கூறிய கூட்டுறவை மேன்மேலும் விருத்தி செய்யக்கூடிய வழிகள் எவையென யோசிக்கவேண்டியதே.

மற்றெல்லா விஷயங்களைவிட நாம் கவனிக்கவேண்டிய விஷயம் ஒன்றுண்டு. அஃதென்னவெனில், கூட்டுறவினா லுண்டாகும் பயிற்சியேயாம். கூட்டுறவினால் ஜனங்கள் ஒருவர்க்கொருவர் நெருங்கப் பழகுகின்றனர். ஒவ்வொருவருடைய குணலாபங்கள் நன்கு விளங்குகின்றன. பரஸ்பர அன்பு உண்டாகின்றது. ஒவ்வொருவருடைய வாழ்க்கையும் நன்கு தெரிகின்றது. ஜனசமூகத்தில் நாம் ஒருவன் என்பது வெளிவருகின்றது. சிறு சாமான்களை வாங்குவதாலும், பணம் கொஞ்சம் கொஞ்சமாய் சேர்த்துவைப்பதாலு முண்டாகும் நன்மை நன்கு தெரியவருகின்றது. முக்கியமாய் வியவசாயிகள் கடன்வாங்குவது, திருப்பிக் கொடுப்பது முதலியவைகளில் மிகவும் ஜாக்ரதையாய் இருக்கவும், கடன்காரர்களிடம் அகப்பட்டுக்கொண்டு விழிக்காம லிருக்கவும் கற்பிக்கின்றது; ஒத்துழைப்பதின் மேன்மையை நன்கு வெளிப்படுத்துகின்றது ; புத்தி விசாலத்தைக் கொடுக்கின்றது.

இனி கூட்டுறவு எந்தத் தொழில்களில் மிகப் பயன்தரும் என்பதைப்பற்றி ஆராய்வோம். அனைவருக்கும் மிக்க அவசியமானது உணவேயாதலின் அதற்கு அவசியமான வியவசாயத்தில் கூட்டுறவு எங்ஙனம் சிறந்த பயனைத் தருகின்றது என்பதை முதலில் விவரிப்போம்.

ஆசாபாசம் அந்தத்தில் மோசம் — என்பதை அறியாமல் ஒருவன் ஞானியை நோக்கி, "மகராஜ், சொர்க்காதிபோகங்களை அடைவதைவிட மேலான சுகம் ஒன்றுமில்லை. ஆயினும், அதிபால்யர்களாயிருக்கும் என் பிள்ளைகளுக்குக் கல்யாணமானவுடன் நான் தங்களுடன் புறப்பட்டுவருகிறேன், ஆதலின் எட்டு வருஷம் கழித்து இங்கே வாருங்கள்" என்றான். அவ்வாறே ஆகட்டுமென்று ஞானி போய்விட்டார். சரியாக எட்டு வருஷம் ஆனவுடன், அவர் மறுபடியும் வந்தார். அப்போது அவனுடைய கடை எடுபட்டு, வீடு இடிந்துகிடந்தது. அதைப் பார்த்து ஞானி "என்னடா குமாரலாப, இப்பொழுதாவது வருகிறையா சொர்க்கத்துக்கு" என்றார். அதற்கு அவன் 'ஸ்வாமி என் பிள்ளைகள் சர்வ முட்டாள்கள். அவர்களுக்கு ஏதாவது ஒரு வியாபாரத்தை யேற்படுத்தி கடனில்லாமல் நாலுகாசு கையிலேறும்படி பிரயத்தனம் செய்து பிறகு வருகிறேன். தயை செய்து இன்னும் எட்டு வருஷம் கழித்து வாருங்கள்' என்றான்.

# லோகமான்ய பாலகங்காதர திலகரின் பிரிவாற்றாமை குறித்து

## ஒரு தமிழறிஞர் பாடியது

இந்திய அன்னைநீ எங்ஙனம் வாழ்குதி
ழுந்திய நின்மகன் முனிதில கனையிழந்
திந்திய வெந்துயர் உயிர்நனி உண்ணுமே
பிந்திய செல்வம்நின் பீழை பெரிதந்தோ! (1)

வேறு

பாலகங்கா தாதிலக! பாரதத்தாய்க் கொருபுதல்வ!
மேலவர்கள் புகழ்மேலோய்! மேதினிக்கோர் திலகமன்னாய்!
சாலவளர் மன்பதையென் தருவினில் ஆயிரவாண்டில்
ஏல ஒரு முறைபூக்கும் எழிற்பூவே! எம்மானே! (2)

வேறு

புலவரும் புகல வொண்ணாப் புலமையும் மதியும் மிக்கோய்!
நிலவரும் மறை ஆறங்கம் நெடிதுற ஆய்ந்தோய்! இந்நாள்
குலவுறும் ஆங்கிலத்தின் குணம் எல்லாம் ஒருங்கு கொண்டே
பலப்பல புதிய உண்மை பரிந்தெடுத் துலகிற் கீந்தோய். (3)

பொன்மலர் நாற்றம் பெற்றால் போலுநின் புலமை யோடு
சொன்முறை சொல்லும் வன்மை சொலற்கொணா அளவில் பெற்றாய்!
நின்மொழி மராட்ட மட்டும் நின்றிய தாற்றல், சீர்சால்
மன்மொழி ஆங்கிலத்து மாம் இது; மதிசொல் வல்லோய்! (4)

இவ்வரு நலங்கள் போல்வ இசையலாம் பிறர்க்காணும்
செவ்விய குணத்தாய்! ஈரச்சிந்தையாய்! நாட்டில் வாழும்
எவ்வரும் அடிமை நீங்கி இன்புற வேண்டி நீசெய்
தெவ்வரும் மதிக்கும் தியாகச் செயல்பலர் செய்தற்காமோ? (5)

வேறு

தேசப் பற்றே அன்றியோர் பற்றும் தெரியாய்! நின்
நேசக் குற்றே வலின் உயர் நாடு நெறியல்லா
ஆசைப் பட்டோர் மோசக் கட்டு ளகப்பட்டு
தேசற் றாழும் நாள்விண் செல்லல் சீராமோ? (6)

காற்றில் பட்டாழ் கலமுற் றிடுமீ காமனுயிர்
கூற்றம் வாயிற் கொளுதல் போலும் கூறிலிது
மாற்றம் வல்லோய்! மரணப் போதுநீ மாகீதை
சாற்றும் வாய்மை யுணர்வோர் நின்னைச் சலியாரே. (7)

முன்னைய அன்பும் இன்பும் சோதர மொய்ம்புந்தன்
பின்னைய நாளில் பின்ன முறுத்தும் பேதத்தால்,
தன்னய நாடும் புன்மதியால் நம் தாய்நாடு
அந்நியர் கைத்தாய் சின்ன மடைந்த தறிந்தாய் நீ! (8)





மேற்றிசை நாகம் மேதினிஉண்ண மிக்கெண்ணி
நாற்றிசை யுஞ்சென் றுற்றுவ நாடி நங்கேட்டிற்
கீற்றிசை விக்கற் கேற்றநல் மந்த்ரம் ஈதென்னப்
போற்றுசு யாட்சிக் கேற்ற சுதேசி புகன்றாயால். (9)

மந்திரம் ஓதும் மாணவர் சேனை வளர்தல் காண்
தந்திர வாணர் வன்குரு நின்னால் தளர் வெய்தி;
பந்தனை மேன்மேல் செய்பவும், அங்கிப் பரு பொன்போல்
வெந்திறல் மிக்கே கொந்தினை; வீரம் வியவாரார்? (10)

பெரு மறி வுடையன் என்கோ? பிறர்க்குறி யாளன் என்கோ?
திருமிகு சதுரன் என்கோ? தேசபி மானி என்கோ?
மறுவறு சீலன் என்கோ? மகுடமில் மன்னன் என்கோ?
பொருவறு வீரன் என்கோ? புவிக்கொரு திலகம் என்கோ? (11)

நிறைமதிக் கொரு களங்கம் நேர்ந்தெனத் திலக! நிற்கோர்
குறையுள தென்பர் சில்லோர், கூறிடின்: "அரசியற்றின்
துறைநிலை கண்டாரேனும் துன்பகாரணங்களாம் நம்
கறையுறு சாதித் தீமை காய்ந்திலர்; குறையீ" தென்பர். (12)

சமயமா சாரந் தம்மில் தக்கசீர் திருத்தஞ் செய்தற்
கமயமீ தென் றுணர்ந்தும், அரசியில் சுதந்தரத்தால்
அமையுமித் திருத்தம் நன்கென் றதுகுறித் துழைத்தாய் நம்தொல்
சமயமார் நல்லவெல்லாம் தழுவுதல் வேண்டும் என்றாய். (13)

ஒன்றைநன் கியற்ற உன்னி உடற்றினை அரசியற் போர்
இன்றை நாள் நின்போல் வீரன் எழுந்துநம் மவர்பாலுள்ள
குன்றுநேர் குற்ற மெல்லாம் கோபிக்கின் குறைவு தீரும்.
சென்றையே! எனினும் நீசெய் செயல் மிகச்சிறப்பிற்றாமே (14)

எள்ளலில் பெருமை யோடும் இந்தியர் எழுதல் வேண்டிப்
பள்ளியும் கழகமும் மெய்ப் பயில்சிலம் பரங்கம் கண்டாய்;
உள்ளுதல் உயரவேண்டிக் கணபதி ஒளிர் சிவாஜிக்
கொள்ளிய விழவும் கண்டாய்; உன்மொழிக்குறுதி கண்டாய். (15)

மேதைகள் மதிக்குமாறு விழுமிய நூலாங் கண்ணன்
கீதையின் உரையுங் கண்டாய்; கெழுசிறை நோன்பில்; வேதக்
காதைகள் உண்மை கண்டாய்; கனபத்திரிகைகள் கண்டாய்;
வாதைகள் வதைக்க வீரர் வருமுறை நெறியில் கண்டாய். (16)

செயற்கருஞ் செய்கை செய்த தீரநின் செய்கை யெல்லாம்
அயர்ப்பிலா துரைக்க இங்ஙன் ஆகுமோ? கரும யோக
இயற்கைக்கோர் எடுத்துக்காட்டாய் இலகுவோய்! இந்தியாவின்
உயிர்ப் பிணிற் கலந்தெந் நாளும் உதவுவாய் உதவல் வல்லாய்! (17)

திலகமா முனிவ! போற்றி தேசப்பற் றுருவ! போற்றி
இலகுமாசீல! போற்றி இறையடி மறவாய்! போற்றி
அலகிலாவீர! போற்றி அரும்புகழ்கணியே! போற்றி
பலதில கர்களிங் கெய்தப் பரிந்திடாய், போற்றி, போற்றி. (18)

# கபிலர்

## KAPILAR

[ஸ்ரீமான் பண்டித உலகநாதப்பிள்ளை.]

செந்தமிழ் நாடாகிய பாண்டிவளநாட்டில், திருவாதவூரில், கற்புடைய மனைவியோடிருந்து இல்லறத்தில் வழுவாதொழுகிய ஒரு அந்தணசீலரது அருமந்த புதல்வர் கபிலர். இவர் இளம்பிறைபோல வளர்ந்து உரிய பருவத்திற் கல்வி பயின்று, இலக்கண இலக்கியங்களை ஐயந்திரிபறக்கற்றுப் புலமை நிரம்பி, அன்பு, அருள், அடக்கம் முதலியநற்குணம் அமைந்து 'பாட்டு எனப்படுவது கபிலரது பாட்டு' எனப் புலவர் புகழ்ந்துரைக்குமாறு இனிய செய்யுளை விரைவில் இயற்றும் வன்மையும், பொய்யா நாவும் செய்ந்நன்றி மறவாத சீலமும், இன்னா கடிந்து இனியவை புரியும் நோக்கமும், குறிஞ்சித்திணையைப் பெருகப்பாடும் தன்மையும், எவ்வெவர் கொள்கையும், செவ்விதெனக் கொள்ளும் சைவசமயப்பற்றும் உடையராய் இனிதிருக்கையில், மதுரைநகரைத் தனது அரசிருக்கையாகக் கொண்டு, ஒரு குடை நிழற்றி இருநிலமுழுவதும் முறைசெய்திருந்தனன், பாண்டியன் உக்கிரப்பெருவழுதி என்பவன்.

இவன் தமிழின் அருமைபெருமைகளை நன்குணர்ந்தவனாதலால், அதனை வளர்த்தற்கண் ஆர்வமுற்று, "முத்தமிழின் துறைபோகிய உத்தமர் பலரைக் கொணர்க" என எல்லாப் பக்கமும் ஆட்போக்கினான். ஏவலாளர் எம்மருங்கினும் நாடிக்கொணர்ந்த கல்விவல்லார் பலருள், நல்லறிவாளராகிய கபிலரும் ஒருவர்.

இவர், பாண்டியன் இரீஇய சங்கமண்டபத்தில் ஏனைய புலவரோடு வீற்றிருக்கையில் சொக்கப்பெருமானை வழிபட்டு, சதுரமாய் ஒருமுழ அளவினதாய்ப் புலவர்கட்கு முழம் நீண்டு இடம் தரவல்லதாய பலகை ஒன்று பெற்றுப், புலவர்கட்குத் தலைவராய் அதன் மீது ஏறியிருந்து தமிழாராய்வாராயினார்.

இவ்வாறு சங்கத்திருந்து தமிழாராய்ந்து, தென்னவனுக்கு உவகையுண்டாகப் பன்னாளியற்றி எங்கணும் தமிழ்பரப்பி வருகையில், பிரகத்தன் என்னும் பெயரையுடைய ஆரிய மன்னவன் ஒருவன் வடநாட்டினின்றும் போந்து மதுரையின்கண் தங்கினான். அவன் தமிழ் மக்களோடு வேற்றுமையின்றி ஊடாடியிருந்தமையின், தமிழ் கற்பதில் அவற்கு ஆர்வம் பெருகிற்று. அதனையறிந்த புலவர்பெருமான் கபிலர், குறிஞ்சிப்பாட்டு என்ற நூலைப் பாடிக் கைக்கொண்டு, அவன்பாற் சென்று, அதனை விரித்துரைக்கு முகத்தால் தமிழறிவுறுத்து, அவனைப் பொருட்டுறை தேர்ந்த புலவனாக்கினார்.

அதன்பின்னர் கபிலர், மலையமானாட்டில் திருக்கோவலூரில்அரசுபுரிந்திருந்த திருமுடிக்காரி என்பவனை அணுகி, 'வண்மையிற் சிறந்தோய்! ஒருதிசைக்கண் வள்ளியோன் ஒருவன் உளனாயின், அவனை நினைந்து, பல திசையினின்று பரிசின்மாக்கள் பலரும் வருவர் அவர் வரிசைஅறிதல் அரிது, கொடுத்தல் மிக எளிது; நீ அவ்வரிசை அறிதலை நன்றாகத் தெரிந்தனையாயின், புலவரிடத்து வரிசை கருதாமல் ஒருதரமாகப் பார்த்தலைத் தவிர்ப்பாயாக' என்றுரைத்து அவனை ஒருப்படுத்தி அங்குநின்றும் புறப்பட்டு, மலைநாட்டில் நல்லூரில் ஆவியர் குடியிற் பிறந்த வையாவிக்கோப் பெரும்பேகன்பாற் சென்றனர்.

அவன், தன்னூர்ப் பரத்தை ஒருத்தியினது அழகில் ஈடுபட்டு, தன் மனையாள் கண்ணகியைத் துறந்து, அவளோடு உடனுறைவானாயினான். அதனை உணர்ந்த கபிலர், பரணரை உள்ளிட்ட புலவர் சுற்றத்துடன் அவன்பாற் சென்று, பல்லாற்றானும் நல்லறிவு புகட்டிப், பரத்தையைக் கையகன்று கண்ணகியோடிருந்து இல்லறத்தை இனிதாக நடத்தச் செய்து மதுரையை அடைந்தனர்.

சிலநாட் சென்றபின்பு கபிலர், தம்மைவிட்டகலாது உடனிருந்து தமிழாராயும் பரணர் உடன்வர, ஒருநாட்காலையில், வைகையாற்றங் கரையோரமாகப் போய்க்கொண்டிருக்கையில் இளம்புலவர் இருவர் இருப்பை மரத்தடியில் உதிர்ந்து கிடக்கும் மலர்களைநோக்கி இவற்றை எவற்றிற்கு ஒப்பிடலாமெனத் தம்மில் உசாவி நிற்பக்கண்டனர். அன்னவர் செய்கைக்குவந்த நம்புலவர், நாண்மலரை ஒருவரையும் பழம் பூவை மற்றவரையும் எடுத்துவரப் பணித்திட்டு, நீராடு துறைக்கண் நின்ற பிடியையும் பரதர் முற்றத்தில் உணங்கிக்கிடந்த இருன் மீனையும் காட்டி, வாடாத மலர் பிடியின் கொம்பையும், வாடிய மலர் இருன்மீனையும் நிகர்த்தலைக் காண்மின் எனக்கூறி, 'நெட்டிலை யிருப்பை' என்றொரு செய்யுளும் பாடினார்.

கேட்ட புலவர் இருவரும் வியந்து மகிழ்ந்து நிற்கையில், அருகிலிருந்த பரணர் கூறுவார்: "இஃதென்ன வியப்புக்கண்டீர்? இவர்க்கு இடைக்காடனார் முதலிய நண்பர் பலர் இருப்பினும், என்னைப்போல இணைபிரியாமல் உடனுறைபவர் பிறரின்மையின், இவரது இயற்கையை ஏனையோரினும் யானே நன்குணர்வேன். எமது இயல்பையறிந்த ஆசிரியன்மாரெல்லாம் உம்மைத்தொகைக்குளெடுத்துக் காட்டாக 'கபில பரணர்' என எம்மையே எடுத்தாளுவர். இவரது சதுரப்பாட்டினை எடுத்துரைக்கப் புகின் வரம்பின்றிப் பெருகுமாதலின், அதனைவிடுத்து இயற்கைப் பொருளினை எடுத்துவமிக்கும் இவரது இயல்பினைச் சிறிது காட்டுவேன்; கேண்மின்.

பூந்தாதிற் படிந்த கரியவண்டினை, 'கட்டளையன்னமணி நிறத்தும்பி' எனப் பொன்னுரை கல்லிற்கும், கல்லிற் பரந்து நீண்டு கிடக்கும் இத்திமரத்தின் வேரை 'புல்வீழிற்றிக் கல்லிவர் வெள்வேர் - வரையிழி யருவியிற் றோன்றும்' என மலையினின்று இழியும் வெள்ளருவிக்கும், நொச்சியின் கரிய அரும்புகளை, 'நொச்சி மாவரும் பன்ன கண்ண வெக்கர் ஞெண்டு' என நண்டின் கண்ணிற்கும், உவமை கூறுவர். தலைவியின் உயிர் மிக நுண்ணிது. இவள் கொண்ட காமமோ பெரிது என்பதனை 'வேரல் வேலி வேர்க்கோட் பலவின் - சிறுகோட்டுப் பெரும்பழந் தூங்கியாங்கு - இவளுயிர் தவச்சிறிது காமமோ பெரிதே' எனப் பலாவின் சிறு கிளை தன்னிடம் தூங்கும் பெரும்பழத்தைத் தாங்கி நின்றதுபோல் என்றனர். இன்னும் தலைவியினது வருத்தம் உணராதொழுகும் தலைமகனை, 'கான மஞ்ஞை யறையீன் முட்டை வெயிலாடு முசுவின் குருளை யுருட்டும் குன்ற நாடன்' என, மயின் முட்டையின் மென்மை நோக்காது, அதனைப் பாறையில் உருட்டும் முசுக்கலையாக, உள்ளுறை உவமத்தால் உணர்த்துவது எத்தனை அழகு பாருங்கள்? இன்னும், பாங்கற்குத் தலைமகன் உற்றதுரைக்கும் கூற்றாக, 'குறுமகள் நீரோ ரன்ன சாயல் தீயோ ரன்னவென்னு ரனவித் தன்றே' எனக் கூறி, யாவரும் அஞ்சுதற்கு ஏதுவாகிய தலைவனது பேராற்றல், ஒரு சிறுமியினது மென்சாயலுக் குடைந்ததனை எவற்றையும் அழிக்கவல்ல தீயும் நீர் மிகுமாயின் அழிவெய்தும்' என்னும் இயற்கை நயத்தால் பொருளின் தன்மையை விளக்கி நிற்றல் ஆராயத்தக்கது. இன்னும், ஒருவர் தம்மோடு நட்புக்கொள்ள வேண்டின், 'பெரியோர் நாடி நட்பினல்லது - நட்டு நாடார்தம் மொட்டியோர் திறத்தே' என, அவரது நீர்மையை முன்னர் ஆராய்ந்து நட்புக் கொள்க; பின்னர் நாடுதல் கூடாது என்றிடுவர்; பெரியோரது கேண்மை அருமையும் இனிமையும் வாய்ந்தது என்பதனை, 'சாந்திற் றொடுத்த தீந்தேன் போலப் - புரைய மன்ற பெரியோர்கேண்மை' எனச் சந்தன மரத்தில் வைத்த இனிய தேன் என்பர். இன்னும், குலத்திற்கேற்ற குணவமைதியும், மேம்பாடும், ஒழுக்கமும் குன்றாமற் பாதுகாத்தல் வேண்டும்; அவை குன்றின் இழுக்குண்டாம்; அதனால் புகழ்கெடும்; பின்னர் இவற்றை இழுக்கி னீக்கிப் புகழ்பட நிறுத்துதல், ஒழுக்கமும் அவற்றின் நீங்கினோர் கைக்கொள்ளும் கழுவாயும் இன்னின்ன எனக் கண்ட தேவ இருடிகட்கும் ஆகாது என்று வற்புறுத்தப் புக்கவர், 'முத்தினும் மணியினும் பொன்னினும் அத்துணை - நேர் வருங்குரைய கலங்கெடிற் புணரும் சால்பும் வியப்பும் இயல்பும் குன்றின் மாசறக் கழீஇ வயங்கு புகழ் நிறுத்தல் ஆசறு காட்சி யையர்க்கு மந்நிலை யெளிய வென்னார் தொன் மருங்கறிஞர்' எனக் கூறியிருத்தல் எத்துணை அழகு பாருங்கள்.

இவர் கூறியவற்றுட் சிலவே கூறினேன்; ஒவ்வொன்றாக எடுத்துக் காட்டப் புகின், நெடுநாட் செல்லும்; இவர் இயற்றிய செய்யுட்களெல்லாம், எட்டுத்தொகை, பத்துப்பாட்டு, பதினெண் கீழ்க்கணக்குகளில் தொகுக்கப்பட்டுள்ளன. அவற்றை ஆராய்வீராயின், எனது நண்பர், இயற்கை நயந்தோன்ற இன்சொற் புணர்த்துச் செய்யுள் இயற்றும் இயல்பும், நட்பின் திறமும், செய்ந்நன்றி மறவாமையும், வள்ளியோர் மாட்சியும் கூறிச் செல்லும் மாண்பும் இவை போல்வன பிறவும் பரந்து கிடக்கக் காண்பீர்கள்; 'பொய்யா நாவிற் கபிலன்' என நப்பசலையாரும், 'நல்லி

சைக்கபிலன்' என பெருங்குன்றூர் கிழாரும், 'தாழாது—செறுத்தசெய்யுட் செய் செந்நாவின் வெறுத்த கேள்வி விளங்கு புகழ்க் கபிலன்' எனப் பொருந்தில் இளங்கீரனாரும் இவரைப் புகழ்ந்திட்டனர். ஆதலால் இவரை ஏனையோரைப் போற் கருதன்மின். ஒரு புலவர் மற்றொரு புலவரைக் காரணமின்றிப் புகழ்ந்துரையார்; இவர், அறிவினும் சீலத்தினும் யாரினும் சிறந்து விளங்குவதாலன்றோ அன்னவர் இன்னவரைப் புகழ்ந்திடுவா ராயினர்? ஆகவே இவரைப் புலவர் கொண்டாடும் பெரும் புலவர் எனப் பேசவும் வேண்டுமோ? என இயற்கைப் பொருளை எடுத்துவமிக்கும் கபிலரது திறனும் அவரது இயல்பும் கூறுமுகத்தால், சங்கநூலைப் பயிலுதற்கண் பேரவா உண்டாக்கி விடையளிக்க, அன்னவரும் வணங்கித் தம்மூர்க்கு வழிக்கொள்ள, கபிலரும் பரணரோடு புறப்பட்டுச் சங்க மண்டபத்தை அடைந்தனர்.

### 6. கபிலர் பாரியின் அவைக்களப் புலவராய் அமைதல்.

பறம்பு நாட்டில் உழுவித்துண்ணும் வேளாளர் மரபில், கொடைக்கு எல்லையாகச் சிறந்து விளங்கிய வேள்பாரி என்று ஒரு வள்ளல் இருந்தான். அவன் கல்லெனத் திரண்ட தோளும், நல்லெழில் மேனியும், படைக்கலப் பயிற்சியால் பகைவரைப் புறங் காணும்ஆற்றலும், இரப்பவர் இன்முகம் காணுமளவும் ஈத்தளிக்கும் வள்ளன்மையும், கல்வியே நல்லுயிர்த்துணை எனக்கருதும் மாட்சியும் உடையவன்.

அவ்வள்ளல், தனக்குரிய பறம்பு மலையின் மேல், பகைவரால் படைக்கலத்தால் அழித்தற்கும் கொள்ளுதற்கும் ஒண்ணாத அருமை வாய்ந்த அரண் அமைத்து, அதனைத் தனது அரசிருக்கையாகக் கொண்டு வாழ்ந்திருக்கையில் சிந்திக்கலாயினன்:—

'இடருற்ற காலையில், ஊன்று கோல்போல உதவி, அறிவை வளர்த்து, அழிவிலாத இன்பம் பயப்பது, கற்றறிந்தார் கூறும் நற்சொல்லன்றே? இத்தகைய நற்சொல் கூறும் பெரியாரை இல்லாத என் அவைக்களம், கண்ணில்லாத முகமும், மதியில்லாத வானமும், பூவில்லாத பொய்கையும் போலப் பொலிவற்றிருக்கின்றது; உரவோர் கேண்மையை, உறுப்பினில் ஒன்று கொடுத்தேனும் கொள்க என்பர், ஆன்றோர்; கற்றுத்துறைபோகிய சான்றோராவார் கபிலர்; அப்பெரியாரைத் துணைக்கோடல் தக்கது' என்று திருமுகத்தோடு ஆளும் போக்கினன்.

இவர், 'நாடியே நட்டல் வேண்டும், நட்டபின்னர்ஆராய்தல்கூடாது'என்னும் கொள்கையராதலால், அவனைப் பல்லாற்றானும் ஆராய்ந்தனர். தாம் வெறுக்கத்தக்க தீயகுணம்அவன்பாற் சிறிதும் இல்லா திருக்கக்கண்டு, 'இவன் நம்மால் தோழமை கொள்ளத் தக்கவனே' என மதித்துப் பாரியின் அவைக்களம் புக்கு அவனாற் பெரிதும் உபசரிக்கப் பெற்று, ஆதனத்தின் கண் அமர்ந்த பின்னர், "யாரினும் புகழின் மிக்க பாரி! மழை பெய்யினும் பெய்யாதொழியினும் சிகரந்தோறும் அருவி இழிதரும் பறம்பிற் கோமானே! ஒருவரும் விரும்பாத எருக்கம் பூ எனினும் தெய்வம் அதனை வெறுக்காமல் ஏற்றுக் கொள்ளும்; அதுபோல நின்னை நாடிவந்தவர், அறிவற்ற புன்மையரெனினும், அன்னோரை வெறுக்காமல் கைவண்மை செய்யும் கடப்பாடுடையை: ஆகலின் உலகைப் புரப்பதற்கு மாரியும் இருக்கச் செந்நாப்புலவர் நின்னையே புகழ்கின்றனர்.

"நல்லவுந் தீயவு மல்ல குவியிணர்ப்
புல்லிலை யெருக்க மாயினு முடையவை
கடவுள் பேணே மென்னா வாங்கு
மடவர் மெல்லியர் செல்லினுங்
கடவன் பாரி கைவண்மையே"

எனவும்,

"பாரி பாரி என்றுபல வேத்தி
ஒருவற் புகழ்வர் செந்நாப் புலவர்
பாரி யொருவனு மல்லன்
மாரியு முண்டீண் டுலகு புரப்பதுவே"

எனவும்,

பாடி, அவனை மகிழ்வித்து, நன்மைதீமைகளை முன்னறிவித்தலிற் கண்ணும், வந்த தீங்கை அவன்பாற் சாரவொட்டாமல் தடுத்தலிற் கவசமும்போல, உதவி உடனுறைந்தனர்.

பெரியாரைத் துணைகொண்டு மகிழ்வோடிருக்கும் பாரி, 'ஒரு குடை நிழற்றி இருநிலம் புரக்கும் மன்னர்க்கும், அன்று வருந்தித் தம் வயிறு வளர்க்கும் வறிஞர்க்கும், உண்பதும் உடுப்பதும் ஒக்கும்; பிற வெல்லாம் மிகையாகும்; பெற்ற செல்வத்தை யாமே நுகர்வேம் என்று கருதின் தவறுவன பலவாகும்; ஆதலால் செல்வத்தாற் பெற்றபயனாவது கொடுத்தல்,' என நினைந்து, பறம்பு நாட்டின் முந்நூறூர்களையும் இரவலர்க்குக் கொடுத்து இசைபட வாழ்ந்திருந்தனன்.

அவன், இவ்வாறு புகழில் யாரினும் மேம்பட வாழ்ந்திருக்கையில், பொறாமை யுற்று, தமிழ் நாட்டு மன்னர் மூவரும், நாற்படை சூழ்தரப்போந்து, பறம்பரணை முற்றுகை செய்தனர். அதனால் பறம்பரண் அடைமதிற்பட்டது.

அப்பொழுது அங்கிருந்த கபிலர் அவ்வேந்தரது பொறாமைக் குணத்தை இகழ்ந்தனர். அவரை நோக்கி, 'மன்னர்காள்! நீவிர் மூவரும் சூழ்ந்திட, அதனால் மதில் அடைப்படினும், உள்ளிருக்கும் எங்கட்கு வருத்தமின்றி வாழ்வதற்கு வேண்டும் உணவுப் பொருள்கள் நிரம்ப அகப்படும்; அவை என்னென்பீரேல், மூங்கில் நெல், பலாப்பழம், வள்ளிக்கிழங்கு, கோற்றேனுமாம். அளவிறந்த நீர்நிலைகளும் உண்டு. இவ்வரண், அகல, நீள உயரத்தால் வானிடத்தை ஒக்கும்; இதன் கட்சுனைகள் வானத்துள்ள மீனை நிகர்க்கும். வேண்டுமாயின், தினை இறுங்கு முதலியவற்றை விளைவித்துக் கொள்வோம்; இதனால், எங்கட்கு உணவுப் பொருளைக் குறித்துச் சிறிதும் கவலை உண்டாகாது. நீயிர், முத்திறத்தீரும் ஒருங்குகூடி, மரந்தொறும் களிற்றினைப் பிணித்துப், புலந்தொறும் தேரைப்பரப்பி, நெடுங்காலமளவும் போர் புரியினும், உங்கள் முயற்சியால் இவ்வரண் கொள்ளுதற்கு அரிது; இந்நாடு முந்நூறு ஊர்களை உடைத்து; அவற்றைப் பரிசிலர் பெற்றனர்; நீவிரும், உமது விறலியர் பின்வர யாழை வாசித்து, ஆடிப் பாடி வருவீராயின், யாமும் பாரியும் உள்ளோம்; மலையுமுண்டு; இதுவே, இம்மலையை நீவிர் கொள்ளும் பரிசு' எனப், பாரியின் இரவலர்க்கு எளிமையும் புரவலர்க்கு அருமையும் தோன்ற இடித்துக்கூறி,

"வான்க ணற்றவன் மலையே வானத்து
மீன்க ணற்றதன் சுனையே யாங்கு
மரந்தொறும் பிணித்த களிற்றினி ராயினும்
புலந்தொறும் பரப்பிய தேரினி ராயினும்
தாளிற் கொள்ளலிர் வாளிற் றூரலன்
யானறி குவனது கொள்ளு மாறே
சுகிர்புரி நரம்பின் சீறியாழ் பண்ணி
விரையொலி கூந்தனும் விறலியர் பின்வர
ஆடினிர் பாடினிர் செலினே
நாடுங் குன்று மொருங்கீ யும்மே'

எனவும்

'கடந்தடு தானை மூவிருங் கூடி
உடன்றனி ராயினும் பறம்பு கொளற் கரிதே
முந்நூ றூர்த்தே தண்பறம்பு நன்னாடு
முந்நூ றூரும் பரிசிலர் பெற்றனர்
யாமும் பாரியு முளமே
குன்று முண்டுநீர் பாடினிர் செலினே'

எனவும் பாடினர்.

இவ்வாறு இடித்துரைத்த சொற்கள் மனத்தைச் சுடவும், மானத்திற்கஞ்சி, நெடுங்காலமளவும் முற்றுகையை விடாதிருந்தனர். அதனால், உணவுப்பொருள்கள் குறைபட்டன; குறைபடவே, இத்தகைய சமயத்திற்கென்று வளர்த்துப் பழக்கிய கிளிகளை விடுத்து, அரணுக்கு வெளியிலுள்ள புலங்களிலிருந்து நெற்கதிர்களைக் கொணர்வித்துக், குடிபடைகளைக் காத்து, நட்புரிமை இஃதென உணர்த்துவாராயினர், கபிலர்.

இவர் செய்கை இவ்வாறாக, வேந்தர் மூவரும், நெடுநாளாக முற்றுகை செய்தும் தம் கருத்து நிறைவேறாமையின், 'புலவர் கூறியவை புண்ணில் புகுத்திய வேல்போல, எம் நெஞ்சில் ஊடுருவிப் பாய்கின்றன; பறம்பரணை வாளாற் கொள்ளுந்திறமும் எமக்கில்லை; இனிக் கைக்கொளற்குரியது சூழ்ச்சியேயல்லது பிறிது என்?' எனத் தம்முள் சிந்தித்துப், பரிசிலர் போல, உருக்கரந்து சென்று, நெஞ்சில் ஈரமின்றி வஞ்சத்தால் பாரியைக் கொலைபுரிந்து, அரணையும் கைப்பற்றினர்.

தம் ஆருயிர் நண்பன் பாரி, முடியுடை வேந்தர் மூவரது சூழ்ச்சியால் இறந்தமைக்கு, மனம்பொறாத கபிலர், ஆறாத்துயரால் அழுங்கி, அன்பன் இல்லாத நகர் ஆருமற்ற அருஞ்சுரம் நிகர்த்தமையின், அரைக்கணமும அங்கிருக்கமாட்டாராய், இருமுது குரவரை இழந்து ஒரு களைகணுமின்றிப் புலம்பும் பாரிமகளிரை உடன்கொண்டு புறப்படத் துணிந்தனர்.

### 7. கபிலர் பறம்பு நீத்து விச்சிக்கோனிடம் சேறல்.

இங்ஙனம் வருந்திப் பறம்பரணை விட்டுப்

தனக்கு ஆகாத பானை உடைந்தால் என்ன இருந்தால் என்ன?

தனக்குப் பின்னால், அகம் இருந்து என்ன கவிழ்ந்து என்ன?

புறப்பட்ட கபிலர் தாம் நெடுநாளாகப் பழகியிருந்த அதனை நீங்குதற்கு மனம் வராமையால், வருந்தி,

'பெட்டாங் கீயும் பெருவளம் பழுனி
நட்டனை மன்னோ முன்னே யினியே
பாரி மாய்ந்தெனக் கலங்கிக் கையற்று
நீர்வார் கண்ணேந்தொழுது நிற்பழிச்சிச்
சேறும் வாழியோ பெரும்பயர்ப் பறம்பே
கோறிரண் முன்கைக் குறுந்தொடி மகளிர்
நாறிருங் கூந்தற் கிழவரைப் படர்ந்தே'

எனப்பாடி,

'பறம்பே! பாரி இருந்த காலத்தில், யாம் விரும்பிய பரிசே தரும் மிக்க செல்வத்தோடு எம்முடன் நட்புச் செய்தனை; இப்பொழுது அவன் இறந்ததனால் கலங்கிச் செயலற்று, நீரொழுகுகண்ணேம் நின்னைத்தொழுது வாழ்த்தி, இம்மகளிர்க்குரியவரை நாடிச் செல்கின்றேம்' என்று பறம்பரணை விடுத்து மகளிரை உடன்கொண்டு போம்பொழுது, நெடுநாட் பழகிய, ஒன்றைச் சடுதியில் விடுக்க எவர்க்கு மனம் வரும்? வாராதாகையால், அதனை நோக்கி நின்று,

'ஈண்டுநின் றோர்க்குந் தோன்றுஞ் சிறுவரை
சென்றுநின் றோர்க்குந் தோன்று மன்ற
களிறுமென் றிட்ட கவளம் போல
நறவுப் பிழிந்திட்ட கோதுடைச் சிதறல்
வாரசும் பொழுகு முன்றிற்
றேர்வீ சிருக்கை நெடியோன் குன்றே'

எனப்பாடி, 'பாரி உளனுயகாலத்து, கண்ணுற்காணுதார்க்கும், புகழான் உயர்ந்து செவிப்புலனுகத் தோன்றும் நீ, இப்பொழுது ஏனைய மலைகளைப்போலக் கட்புலனுகத் தோன்றும் அளவாயினை எனக் கூறினர்.'

---

கலித்தொகை:—எட்டுத் தொகையுள் ஆறுவது. க்டைச்சங்கப் புலவராற் செய்யப்பட்டது. இதற்கு நச்சினார்க்கினியர் உரை செய்தனர். இது கடவுள் வாழ்த்துட்பட நூற்றைம்பது கலிப்பாக்களையுடையது. குறிஞ்சி, மருதம், முல்லை, நெய்தல் பாலையென்னுமைந்திணைக்குமுரிய முதற்பொருள் கருப்பொருள் உரிப்பொருளென்னும் மூவகைப் பொருள்களையும் விளக்கி அகப்பொருட் பகுதிகளை விரித்துக் கூறுவது. அவ்வச் செய்யுளைச் செய்தார் பெயர் அறியக்கூடவில்லை. இது குறுங்கலித் தொகையென்றுங் கலியென்றும் பெயர்பெறும்.

# ஹாஸ்யத் துணுக்குகள்

## WIT & HUMOUR

[ஸ்ரீமான், பி. எஸ். நீலகண்டம்.]

மாஜிஸ்ட்ரேட்:—குற்றவாளி சண்டை போட்டுக் கொண்டிருந்தபோது, நீர் அவனைப் பார்த்ததாகச் சொல்லுகிறீரே, பேர்வழி இந்த மனுஷ்யந்தான் என்று நிச்சயமாய்ச் சொல்வதற்கு விசேஷமாய் ஏதாவது கவனித்தீரா?

சாக்ஷி:—எஜமான் இப்படி க்ராஸ் பண்ணினால் நான் என்ன சொல்லுகிறது—விசேஷம் என்ன—அவனுடைய முன் பல்லொன்று ரொம்ப வெள்ளையா யிருந்தது.

மா:—நீர் சொல்வது நம்பத்தக்கதாயில்லையே. நீர் நின்றுகொண்டிருந்த இடத்துக்கும் சண்டை நடந்த இடத்துக்கும் எவ்வளவு தூரமிருக்கும்?

சா:—3 கஜம், 2 அடி, $8\frac{1}{2}$ அங்குலம்.

மா:—பேஷ்! பேஷ்! வேலிக்கு ஓணன் சாக்ஷிதான்.

சா:—இப்படிப்பட்ட குருட்டுக் கேள்விகள் பிறக்குமென்றே அளந்துபார்த்தேன்.

*
* *

நியாயாதிபதி:—இந்த பிராமஸரி நோட்டிலுள்ள இந்தக் கையெழுத்து உம்முடையதல்லவென்று சத்தியமாய்ச் சொல்லுவீரா?

சாக்ஷி:—உம். உ...ம்,சொல்லுவது விளங்கவில்லையே.

நி:—இது உம்முடைய கையெழுத்து மாதிரி இருக்கிறதா?

சா:—இல்லையென்றுதான் தோன்றுகிறது.

நி:—ஒரு எழுத்துக்கூட உம்முடையது மாதிரி இல்லையா?

சா:—எழுதிப்பார்த்தால் தெரியும்.

நி:—எழுதிப்பாரும். சிங்காரவேலு (சாக்ஷி) "ஸ்ரீ"ஞ எழுதும்.

சா:—எழுதத்தானே எனக்குத் தெரியாது. அதுதான்.

*
* *

ராமய்யர்:—கிருஷ்ணய்யர்வாள் நம்ம குப்பு பொகு புத்சாலி. பொய் சொல்லரத்துலே தீரன். ஓமக்குத் தெரியாதே அது. இங்கடா குப்பு! சரியான பொய் ஒன்று சொல் பார்க்கலாம்!

தனக்கு என்று ஒருத்தி இருந்தால், தலைமாட்டில் இருந்து அழுவாள்.



குப்பு:—இது ஒரு பிரமாதமா? எஜமாங்களைப்போல் யோக்கியர் பூமியிலே கடையாது. எஜ்மாங்கதான் கடஞ்சு எடுத்த யோக்கியர்.

*
* *

உபாத்தியாயர்:—பையன்காள்! நீங்கள் இப்போது நான்காம் வகுப்புக்கு வந்துவிட்டீர்கள். ஆகையால் நீங்கள் இனிமேல் உங்களுக்குத் தெரிந்தவரையில் இங்கிலிஷிலேயே பேச வேண்டும்.

பாலு:—ஸார், யூ தமிழில் பேசினால் வீ எப்படி ஸார் இங்கிலிஷில் பேசமுடியும்.நீங்களே எல்லாத்தையும் தமிழில் பேசரயேளே.

ஆஞ்சநேயன்:—ஏன் ஸார், தமிழ் டீச்சர் காட்டன் (பஞ்சு) சாஸ், விக் (திரி) கிளாவில் கூடவா என்னர் எ டவுட்ஸார். சாஸ் என்கிறதுக்கு என்ன ஸார் இங்கிலிஷ்?

*
* *

சற்றே அங்கஹீனமாயுள்ள உபாத்தியாயர், வகுப்பிலுள்ள ராமனை கையப்புடைத்து நிறுத்தியவுடன், திடீரென்று இன்ஸ்பெக்டர் பரீக்ஷைக்கு வந்துசேர்ந்தார். உபாத்தியாயரின் போராதகாலக் கொடுமையால், இன்ஸ்பெக்டர் ராமனைப் பார்த்து "கேள்விக்குறி என்றால் என்ன" என்று கேள்வி கேட்டார். ராமன் சரியான சமயம் வாய்த்தது என்று குதூகலப் பட்டுக்கொண்டு, "கேள்விக்குறிக்கு கழுத்து, முதுகு, கால், எல்லா அங்கங்களும் ஒரே கோணல். அது வந்துவிட்டால், குறுக்குப் பாடியாய்ஏதோ ஒரு கோணக்கேள்விகேட்கும்.

*
* *

வைத்தி தீக்ஷதர்:— ரத்தனஸாமி அய்யர்வாள்! என்னைப்பற்றி என்னென்னமோ வாயில் வாராதபடி பேசுகிறீராமே. பேருக்கே மோசத்தைக் கொண்டுவந்து விடுவீர்போலிருக்கே.

ர:—என்னய்யா! வாயிலே வாராதபடி பேசுவது! எந்தப் பேருக்கு ஐயா மோசம் வந்துடுட்து.

வை:—நீர்... என்னை ... அயோக்கியன் ... என்றும் ... போக்கிரி...என்றும்...இம்...இம்

ர:—மோசமே வராது. நானும் அப்படியே தான் சொல்லுகிறேன்.

*
* *

வித்வான் சம்சாரம்:—ஏன் அம்மாஞ்சி, ஸம்ஸ்கிருதத்திலே நீங்க படே வித்வான் என்று பேரு; மெடல் எல்லாம் வாங்கியிருக்கயளே. தோஷம் என்ற பதத்துக்கும் சந்தோஷம் என்ற பதத்துக்கும் என்ன வித்தியாசம்?

வித்வான்:—கேள்வி அயன் கேள்வி. கவனமாய்க் கேள். ஒன்னே நானு கணத்துலே தள்ளினு அது எனக்கு தோஷம். நீயா விழுந்துட்டையோ அது எனக்கு ரொம்ப சந்தோஷம்.

*
* *

சாமிநாதன்:—ஏண்டா சுப்பராயா! நோக்கும் ஒன்னும்படையாளுக்கும் அஹோராத்ரம் ஏண்டா இப்படி யுத்தமாயிருக்கு?

சு:—அந்த எழவெ ஏன் கேக்கரே—எங்க ரெண்டுபேர் மனஸும் ஒத்துருக்கு, அதுலே தான் வர தண்டாவெல்லாம்.

சா:—என்னடா நீ சொல்லரது வேடிக்கையாருக்கு. ரெண்டுபேர் மனஸு ஒத்திருந்தால் சௌஜன்யமான்னு இருக்கணும். என்னமோ ஓளர்ரயே.

சு:—இவ்வளவுதான் நோக்குத் தெரிஞ்சது. அவுளுக்கு அவ சொல்லரதே நான் கேக்கணும்னு இருக்கு: எனக்கு நான் சொல்லரதே அவ கேக்கணும்னு இருக்கு. என்ன மாடா ஒத்துவரும்.

*
* *

கர்னெல் பிக்ஸ்:—ஸார்! நீர் என்னை அவமானப்படுத்தினீரோ, நான் உம்மை அவமானப் படுத்தினேனே அது எப்படியோ போகட்டும். நான் உம்மை மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுகிறேன். உம்முடன் நான் சண்டை செய்யத் தயாராயில்லை.

ஸார்:—ஏன் என்ன காரணமோ?

பிக்ஸ்:—நான் உம்முடன் கத்திச்சண்டை செய்தால், நீர் இறப்பது திண்ணம்: பிறகு என்னைப்போல் பூமியில் சர்வ அவலக்ஷணமும் பொருந்திய இன்னுமொருவன் இருக்க மாட்டான்.

*
* *

தனக்குத் தவிடு இடிக்கத் தள்ளாது, ஊருக்கு இரும்பு அடிக்கத் தள்ளும்.

# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(24-ம் பக்கத் தொடர்ச்சி)

### ஐந்தாம் அத்தியாயம்

### தரியா

கிழவியின் மகன் பெயர் கிஜிர்ஷேக். அவன் தான் இப்படங்களை யெல்லாம் எழுதுபவன். டில்லியில் அவனுக்கு ஒரு கடையுண்டு. தாயின் வீட்டில் இரண்டு மூன்று நாளிருந்து விட்டு டில்லிக்குப் புறப்பட்டுப் போனான். டில்லியில் அவனுக்கு ஒரு மனைவி. அவள் கடையிலேயே இருப்பாள். அவள் பெயர் பாதிமா. கிஜிர்ஷேக் தாயினிடத்திலிருந்து கேட்ட ரூபநகரத்திய சமாசாரத்தையெல்லாம் பாதிமாவுடன் சொல்லி, "நீ இப்பொழுதே தரியாவிடத்திற்குப் போய் இந்த சமாசாரத்தைப் பேகம் அவர்களுக்கு விற்றால் ஏதாவது பணம் காசு கிடைக்கும்" என்றான்.

தரியா அண்டை வீட்டிலே வாசம்பண்ணிக் கொண்டிருந்ததால் இந்த வீட்டின் கொல்லைப் பக்கமாய் அந்த வீட்டிற்குப் போவதற்கு வழி இருந்தது. பாதிமா கோஷாவில்லாமலே அவள் வீட்டுக்குப் போனாள்.

கிஜிர்—பாதிமா — இவர்கள் விஷயமாய் அதிக விஸ்தாரமாய் நாம் சொல்லவேண்டிய தொன்றுமில்லை. ஆனால் தரியாவைப்பற்றி மாத்திரம் கொஞ்சம் ஜாஸ்தியாய்ச் சொல்ல வேண்டியிருக்கிறது. தரியாவின் நிஜமான பெயர் தரீரஉன்னீஸா என்பது. ஆனால் அவளை அந்தப் பெயரால் ஒருவரும் கூப்பிடுவதில்லை. தரியா என்றே கூப்பிடுவார்கள். அவளுக்குத் தாயுமில்லை தந்தையுமில்லை. தமக்கை ஒருத்தி இருந்தாள். மற்றொருத்தி கிழவி; ஏதோ உறவு. இவர்களிருவர் மாத்திரந்தான் இருந்தார்கள். அவள் வீட்டில் புருஷர்களொருவருமில்லை. தரியாவுக்குப் பதினேழு வருஷத்திற்கு மேலில்லை.

அவள் பரமஸௌந்தரி. எப்பொழுதும் மலர்ந்த பூவைப்போல் பரந்த முகவுள்ளவளாயிருப்பாள். தரியாவின் அக்காள், நல்ல நல்ல அத்தர் பன்னீர் முதலானவைகளை விற்று சீவனஞ் செய்பவள். தானே வண்டியில் உட்கார்ந்து கொண்டு பெரிய மனிதர் வீடுகளுக்குப் போய் அந்த அத்தர் முதலான வஸ்துக்களை விற்பாள். ஏழை—இரவில் நடந்துகொண்டு போவாள். பாதுஷாவின் அந்தப்புரத்தினுள்ளே போவதற்கு யாருக்கும் உத்திரவில்லை. வெளி ஸ்திரீகள் கூட அங்கே போகக்கூடாது. ஆனால் தரியாவுக்கு உள்ளே போய்வருவதற்கு ஒரு உபாயமிருந்தது. அதை மேலே யறிவிப்போம்.

பாதிமா தரியாவினிடத்தில் சஞ்சலகுமாரி சமாசாரமெல்லாம் சொல்லி இதை விற்று ஏதாவது பணங்கொண்டு வரவேண்டுமென்று கேட்டுக்கொண்டாள்.

தரியா.—"அப்படியானால் ரங்கமகலுக்குப் போகவேணுமே. போவதற்கு உத்தரவு வேண்டுமல்லவா" என்றாள்.

பாதிமா—"நீ போகமுடியும்" என்றாள். தரியா பெட்டியைத் திறந்து அதிலிருந்து ஒரு காகிதத்தை எடுத்துக்கொண்டு அதை திருப்பிப்பார்த்து "இதுதான்" என்றாள்.

தரியா—"ஸுர்மா" அத்தர், உத்தரவு, இவைகளை எடுத்துக்கொண்டு வெளியே புறப்பட்டாள்.

### இரண்டாம் பாகம்

### முதல் அத்தியாயம்

### மோகலாயர் அரண்மனை

சந்திரனொளியில் அதிவெண்மையான மணலின்மத்தியில் பிரவகிக்கிற கருமையான நீருள்ளயமுனா நதியின் தீரத்திலுள்ள நகரங்களுக்கெல்லாம் பிரதானமானதும் மகாநகரமானதுமான டில்லி பட்டணம் இரத்தின கண்டம் போல்பிரகாசித்துக்கொண்டிருந்தது. சலவைக் கல்லினால் நிர்மிக்கப்பட்ட ஆயிரக் கணக்கான கோரிகளும் மினாரத்துக்களும், மேலே தலையைத் தூக்கிக்கொண்டு சந்திர கிரணங்களை பிரதிபலிக்கச் செய்தன. தூரத்தில் குதுப் மினாரின் உயர்ந்த சிகரம் புகைமயமான பெரிய ஸ்தம்பம்போல் தோன்றிற்று. பக்கத்தில் ஜும்மா மசூதியின் நான்கு மினாரத்துகளும், நீலவர்ணமான ஆகாயத்தை நான்கு பாகங்களாய்ப் பிரிந்துகொண்டு நிலவில் ஓங்கி நின்றன. ராஜ வீதிகளில் கடைகள், கடைகளில் அழகான தீபங்கள்—பூக்களின் பரிமளம்—நகரவாசிகள் தரித்திருக்கிற புஷ்பங்களின் கந்தம், அநேகவிதமான வாத்தியங்களின்கோஷம் —ஜனங்கள் சிலவிடங்களில் உரக்க, சிலவிடங்களில் மெதுவாய் நகைக்கும் சத்தம்,





ஆபரணங்களின் ஓசை, இவைகளெல்லாம் ஒருங்குகூடி மனதிற்கு மோகத்தை விளைவித்துக்கொண்டிருந்தன. பூக்காற்றும் அத்தர் மழையுமாயிருந்தது. தாசிகளின் கால் சலங்கைகளின் தொனி, பாடகரின் ஸப்த ஸ்வரங்களின் ஆரோஹணமவரோஹணத்தின் ஒலி, வாத்தியங்களின் கோஷம், அழகுள்ள பெண்மணிகளின் கைத்தாளம், மதுக்களின் பிரவாகம், அநேகவிதமான நகைப்பின்சத்தம், மார்க்கங்களில் குதிரைகளின் குளம்போசை, பல்லக்குப் போயிகளின் கோரமான சத்தம், யானைகளின் மணியோசை, எக்கா வண்டியின் ஜணஜணசத்தம், நகரத்தின் மத்தியில் ரஜபுத்திரர் துருக்கர் குதிரைகளின் மேலேறி சவாரி செய்கிறார்கள். உலகத்தில் எந்தெந்த பதார்த்தங்கள் விலையுள்ளவையோ அவைகளெல்லாம் தரம்தரமாய் குவியல் குவியலாய்க் கொட்டியிருக்கின்றன. அங்கங்கே குஸ்திக்காரர் குஸ்தி செய்துகொண்டிருக்கிறார்கள். ஜனங்களெல்லோரும் சுற்றிப் பார்த்துக்கொண்டிருக்கிறார்கள். சிலவிடங்களில் வித்தையாடிகள் தங்கள் வேடிக்கைகளை காட்டிக் கொண்டிருக்கிறார்கள். எல்லா விடங்களைக் காட்டிலும் ஜோசியர் உட்கார்ந்திருந்த விடங்களில் மாத்திரம் ஜனங்கள் அதிகமாயிருந்தார்கள். மொகலாயர் காலத்தில் ஜோசியருக்கிருந்த மரியாதை மற்றொரு காலத்திலுமில்லை என்று தோன்றுகிறது. மொகலாய பாதுஷாக்கள் ஜோதிட சாஸ்திரத்தில் அதிக நம்பிக்கையுள்ளவர்களா யிருந்தார்கள். ஜோசியரைக் கேளாமல் எந்தப் பெரிய காரியத்தையும் ஆரம்பிப்பதில்லை.

டில்லியில் சாந்தனீ சௌகியில் ஒரு ஜோசியன் அழகான ஒரு ஆசனம் போட்டுக் கொண்டு ஒரு பெரிய புஸ்தகத்தை வைத்துக்கொண்டு தலையில் உருமாலைக் கட்டிக்கொண்டு உட்கார்ந்திருந்தான். அநேகம் ஆண் பெண்கள் தங்கள் தங்கள் அதிருஷ்டத்தைக் கேட்டுக்கொள்வதற்காகக் காத்துக் கொண்டிருந்தார்கள். கோஷா ஸ்திரீகள்கூட அந்த ஜனக்கூட்டத்தில் நுழைந்து தங்கள் அதிருஷ்டத்தைக் கேட்பதற்கு நாணவில்லை. ஜோசியன் ஒருவனே. ஜனங்களோ நான்கு பக்கங்களிலும் நெருக்கமாய் உட்கார்ந்திருந்தார்கள். அக்கூட்டத்தில் பின்பக்கத்தில் கோஷா ஸ்திரீ ஒருவள் இங்குமங்கும் நடந்து கொண்டிருந்ததின் பொருள் ஜோசியன் பக்கத்தில் போக இஷ்டம் எனக்காட்டிற்று. ஆனால் கூட்டத்தில் ஜனங்களைத் தள்ளிக்கொண்டுபோகத் தைரியம் இல்லை. அங்குமிங்கும் பார்த்துக் கொண்டிருந்தாள். அப்பொழுது அங்கே ஒருவன் குதிரையின்மேலேறிச் சவாரிசெய்துகொண்டிருந்தான். அவன் யௌவனபிராயமுள்ளவன். பார்த்தால் மொகலாயனென்று தோன்றிற்று. மிகுந்த காந்தியுள்ளவனாயிருந்தான். மொகலாயரில்கூட அவ்வளவு சுந்தர புருஷன் அபூர்வம். அவன் கனவானென்று புலப்பட்டது. குதிரையும் நல்ல ஜாதிக்குதிரையா யிருந்தது.

ஜனநெருக்கமாதலால் சவாரிசெய்பவன் குதிரையை மெள்ள நடத்திப்போய்க் கொண்டிருந்தான். அங்குமிங்கும் பார்த்துகொண்டிருந்த அப்பெண் அவனைக் கண்டவுடன் பக்கத்தில் வந்து லகானைப் பிடித்துக்கொண்டு "கான்ஸாஹேப் மபாரக ஸாஹேபரோ மபாரகா?" என்றாள்.

மபாரகன்—"நீ யார்?"

பெண்—"ஆ, அல்லா, இன்னும் தெரியவில்லையோ?"

மபாரகன்—"தரியாவா என்ன?"

தரியா—"ஆமாம் ஸ்வாமி."

மபாரகன்—"இங்கு எதற்கு வந்தாய்?"

தரியா—"நான் எங்கும் போகிறேன். நீர் தான் ஒரு ஆக்ஷேபணையும் சொல்லுகிறதில்லையே. நீர் வேண்டாமென்கிறீரா?"

மபாரகன்—"நான்ஒன்றும் தடைசொல்லுவதில்லை. நான் எதற்காகத் தடுக்கவேணும்? நீ என்னைச் சேர்ந்தவளோ!"

இப்படிச் சொல்லி "ஏதேனும் வேண்டுமோ" என்று கேட்டான். தரியா, காதில் கை வைத்துக்கொண்டு, "உன் பணம் எனக்கு விஷம் மாதிரி" என்றாள்.

மபாரகன்—"அப்படியானால் எதற்காக என்னை யிழுத்து நிறுத்தினாய்?"

தரியா—"இறங்கு சொல்லுகிறேன்."

மபாரகன் குதிரையை விட்டிறங்கி "இப்பொழுது சொல்," என்றான்.

தரியா—"இக்கூட்டத்திற்குள் ஒரு ஜோசியனுட்கார்ந்திருக்கிறான். இவன் யாரோ புதி

தாய் வந்திருக்கிறான். இவனைப்போல் கெட்டிக்காரன் ஒருபொழுதும் இங்கே வந்ததில்லை. இவனிடத்தில் உம்முடைய ஜாதகத்தைக் காண்பிக்கவேணும்."

மபாரகன்—"என் ஜாதகத்தைப் பார்த்து உனக்கு என்னவாகவேண்டும்? உன் ஜாதகத்தைக் காண்பி."

தரியா—"என் ஜாதகம் தெரியவேண்டிய அவசியமில்லை. பார்க்காமலே தெரிகிறது. உம்முடைய ஜாதகத்தைப் பார்க்கவேண்டிய அவசியமுண்டு."

இப்படிச்சொல்லி மபாரகன் கையைப்பிடித்திழுத்துக்கொண்டு போனாள்.

மபாரகன்—"என் குதிரையை யார் பிடித்துக்கொள்வார்கள்?"

வழியில் சில பையன்கள் லட்டுத் தின்றுகொண்டு நின்றிருந்தார்கள். அவர்களைப்பார்த்து "இந்தக் குதிரையைச் சற்று பார்த்துக்கொள்ளுங்கள். நான் வந்து, லட்டு வாங்கிக் கொடுக்கிறேன்" என்றான்.

இப்படிச் சொல்லவும், இரண்டு மூன்று பையன்கள் வந்து குதிரையைப் பிடித்துக்கொண்டார்கள். மபாரகன் தன் ஜாதகம் பார்ப்பதற்காகப் போனான்.

மபாரகனைக் கண்டவுடன் மற்ற ஜனங்களெல்லாம் வழிவிட்டார்கள். தரியாவும் அவனோடுகூடப் போனாள். மபாரகன் கையை ஜோசியனுக்குக் காட்டினான். ஜோசியன், கையை வெகுநேரம் பார்த்து, "தாங்கள் போய் விவாகஞ் செய்துக்கொள்ளுங்கள்" என்றான்.

பின்னே கூட்டத்தில் மறைவாய் நின்றுக்கொண்டிருந்த தரியா "அவருக்கு விவாகமாயிற்றே" என்றாள்.

ஜோசியன்—"அது யார்? அந்த வார்த்தை சொன்னது?"

மபாரகன்—"அவள் ஒரு பைத்தியம் பிடித்தவள். எனக்கு எப்படிப்பட்ட விவாகமாகும்? பார்த்துச் சொல்லமுடியுமா?"

ஜோசியன்—"நீங்கள் யாரோ ஒரு ரஜபுத்திரியை மணஞ்செய்யப் போகிறீர்கள்."

மபாரகன்—"அதனால் என்னவாகும்?"

ஜோசியன்—"அப்படியானால் தங்களுக்கு உத்தியோகம் பெரிதாகும்."

கூட்டத்திலிருந்த தரியா "ஆனால் அதில் மரணமுண்டாகும்" என்றாள்.

ஜோசியன்—"அது யார்?"

மபாரகன்—"அவள் பைத்தியம்."

ஜோசியன்—"பைத்தியம் பிடித்த மனுஷியல்லவென்று காணப்படுகிறது. உங்கள் கையை இனி நான் பார்ப்பதில்லை."

மபாரகனுக்கு ஒன்றும் புரியவில்லை. ஜோசியனுக்கு ஏதோ பணம் கொடுத்துவிட்டுத் தரியாவைத் தேடிக்கொண்டு போனான். அவள் அகப்படவில்லை. மனம் கொஞ்சம் கலங்கி குதிரையின்மேலேறிக்கொண்டு கோட்டைப் பக்கமாய்ப் போனான். பையன்களுக்கு லட்டு கிடைத்தது என்று சொல்லவேண்டியதில்லை.

## இரண்டாம் அத்தியாயம்

### ஜேப உன்னீஸா

தரியாவின் கோள்விற்பனை எப்படியாயிற்று? யாருக்கு விற்பது? இது தெரிய வேண்டுமானால் மொகலாய பாதுஷாவின் அரண்மனைக்குள் கொஞ்சம் பழக்கமாகவேண்டும். பாரத வருஷத்தில் ஸ்திரீகளநேகர் ராஜ்ய பரிபாலனத்தில் பெயர்போனவரா யிருக்கிறார்கள்—ஐரோப்பாவில் ஏதோ ஒரு எலிஜபெத், ஒரு இஸபெல்லா, ஒரு ஸினோபியா அப்படிப்பட்டவர்களாயிருந்தார்கள். மொகலாயரில் பாதுஷாக்களின் பெண்களெல்லாம் அரசிறையில் தேர்ச்சியுடையவர்கள். ஆனால் நீதி சாஸ்திரத்தில் எவ்வளவு நிபுணராயிருந்தார்களோ அவ்வளவு சிற்றின்பத்தில் முழுகியிருந்தார்கள். அவுரங்கசீபுக்கு ஜாஹானாரா, ரோஷின்வார் என்று இரண்டு சகோதரிகள். ஜாஹானாரா, ஷாஜிஹான் ராஜ்யபரிபாலனகாலத்தில் அவனுக்கு முக்கிய மந்திரியாயிருந்தாள். ஷாஜிஹான் அவள் ஆலோசனையில்லாமல் ஒரு காரியத்தையும். நடத்துவதில்லை. அவளை ஆலோசித்து நடத்திவந்ததினால் காரியமும் கைகூடிற்று, அவனும் கீர்த்தியடைந்தான். ரோஷன்வார் தந்தையிடத்தில் பகைகொண்டு சகோதரனை அவுரங்கசீபினிடத்தில் பிரீதியுள்ளவளாயிருந்தாள். அவளும் ஜாஹானாராவைப்போல் ராஜநீதியில் தேர்ச்சியுள்ளவளாயிருந்ததும் தவிர, வெகு யுக்தியுள்ளவளாயுமிருந்தாள். சிற்றின்பத்தில் மாத்திரம் பயமில்லாமலும் திருப்தியில்லாதவளாயுமிருந்தாள். அவுரங்கசீபு தன் தந்தையைச் சிம்மாசனத்திலிருந்து தள்ளிச் சிறையிலடைத்து அவன் ராஜ்யத்தைக் கைப்பற்றிக்கொள்ளும்





பொழுதெல்லாம் அவனுக்கு முக்கிய மந்திரி ரோஷன்வார். ஆதலால் அவுரங்கசீபு அவளுக்கு நிரம்ப பாத்தியப்பட்டவனாயிருந்தான். அவுரங்கசீபின் காலத்தில் ரோஷன்வார்தான் முதல்; பாதுஷா இரண்டாவதுதான். ஆனால் ரோஷன்வாருடைய துரதிருஷ்டத்தினால் அவளுக்குப் பிரதிகக்ஷியாகி வெகு கெட்டிக்காரி ஒருத்தித் தலையெடுத்தாள். அவுரங்கசீபுக்கு மூன்று பெண்குழந்தைகள். இளைய பெண்களிருவரையும் சிறையிலிருந்த தன் அண்ணன் பிள்ளைகளிருவருக்குக் கலியாணஞ்செய்து கொடுத்துவிட்டான். மூத்தவளான ஜேப உன்னீஸா என்பவள் விவாகம் செய்துகொள்ளவில்லை. தன் அத்தைகளைப்போல் வசந்தகாலத்தில் வண்டு பூப்பூவாய்ப் போய் மதுபானம் செய்வதுபோல் திரிந்துகொண்டிருந்தாள். இவளுக்கு அத்தைகளின்மேல் வைரமுண்டாகித் தன் தந்தையினிடத்தில் அவர்கள்பேரில் கோட்கள் முடிந்துகொண்டிருப்பாள். கடைசியில் ரோஷன்வார் பூமியிலெங்கும் காணப்படவில்லை. அதன்பிறகு—ஜேப உன்னீஸா—தன் அத்தையின் பதவியையும் அவள் மரியாதையையுமடைந்தாள்.

பதவிக்கேற்ற மரியாதை யென்பதற்கு அர்த்தமென்னவென்று தெரிந்துகொள்ளுவது அவசியம். பாதுஷாவின் அந்தப்புரத்திற்கு நபும்ஸகர் தவிர, வேறு புருஷர்கள் ஒருவரும் பிரவேசிக்கக்கூடாது. அந்தப்புரத்தியுவேலைக்கெல்லாம் ஸ்திரீ ஜாதியவரே. இந்த ஸ்திரீகளுக்கெல்லாம் ஒரு நாயகி யிருந்தாள். இப்பெண், சேனைக்கெல்லாம் சேனாபதிபோலுள்ளவள். அவளுக்குப் பெரியசம்பளமும் மரியாதையுமுண்டு. இப்பதவிக்கு ஜேப உன்னீஸா வந்து அந்தப்புரத்துக்கு எஜமானியானாள். அங்குள்ள ஸ்திரீகள், போயிகள், காவற்காரர்கள் எல்லாரும் அவளுக் கடங்கினவர்கள். ஆதலால் அவளுக்கிஷ்டப்பட்டவர் மகலுக்குள்ளே பிரவேசிக்கக்கூடும்.

இரண்டு விதமான ஜனங்கள் அவள் கட்டளைப் பிரகாரம் அந்தப்புரத்துக்கு வரத்துப் போக்குண்டு. முதலாவது. அவள் பிரீதிக்குப் பாத்திரமானவர்கள். இரண்டாவது, உளவு வர்த்தமானம் விற்று, பணம் வாங்கிக்கொண்டு போகிறவர்கள்.

ஜேப உன்னீஸா ராஜநீதியில் சிறந்தவனென்று சொன்னோம். மொகலாய அரசிறையாகிற படகின் பத்துக்கோல் அவள் கையிலிருந்தது. ராஜ நீதியில் முக்கியமானது எங்கே என்ன நடக்கிறதென்பதைத் தெரிந்துகொள்ளவேண்டியதல்லவா? ஜேபஉன்னீஸா நான்கு திக்குகளிலிருந்தும் சமாசாரங்களைத் தருவித்துக் கொண்டிருந்தாள். இதற்காக அநேகம் வேவுகாரர்களை நியமித்திருந்தாள். அவர்களுள் சித்திரமெழுதுபவன் ஒருவன். அவன் தாய் ஊருராய்ப்போய்ப் படம் விற்றுக்கொண்டு, அங்கங்கு நடக்கிற சமாசாரங்களை அறிந்து வந்து மகனுக்குச் சொல்லுவாள். தரியாவின் அக்காள் டில்லி பட்டணத்தில் அத்தர் பன்னீர் விற்பதற்காக இங்குமங்கும் சுற்றி வர்த்தமானந் தெரிந்துவருவாள். இவைகளைத் தரியா அந்தப்புரத்திற்குட் போய் ஜேபஉன்னீஸாவுக்கு அறிவித்துவருவாள். உன்னீஸா வாரத்துக் கொருமுறை சமாசாரம் கொண்டுவந்தவருக்கு ஏதாவது வெகுமானங்கொடுத்து வருவாள். இதற்காகவே தரியா அந்தப்புரத்திற்குள் யாதொரு தடையுமில்லாமல் பிரவேசிப்பதற்காக அவளுக்கு ஒரு உத்தரவுப் பத்திரம் கொடுத்திருந்தாள்.

ஆனால் தரியா அந்தப்புரத்தினுள்ளே பிரவேசிக்கிற சமயத்தில் விக்கினமொன்றுண்டாயிற்று. கான்ஸாஹேப் மபாரகன் மகலுக்குள் பிரவேசித்து கொண்டிருந்தான். அதுகண்டு, தரியா உடனே உள்ளே போகவில்லை. சற்று நேரமானவுடன் பிரவேசித்தாள்.

அவள் போய்ப் பார்க்கவும், ஜேப உன்னீஸா சிங்காரமான மகலில் உட்கார்ந்துகொண்டிருந்தாள். தரியா ஒரு பக்கத்தில் ஒளிந்துகொண்டு பார்த்துக்கொண்டிருந்தாள்.

## மூன்றாம் அத்தியாயம்

### ஜேப உன்னீஸாவின் அரண்மனை

மகாநகரமான டில்லி பட்டணத்தில் ஸாரமானது டில்லிக் கோட்டை; கோட்டைக்குள் முக்கியமானது அரசனரண்மனை. அரண்மனைக்குள் மாத்திரம் இருந்த பணக்குவியலும் இரத்தின ராசியும் ரூபராசியும் இப்பாரத வருஷத்திலெங்கு மிருந்தவைகளையெல்லாம் ஒன்று சேர்த்தால் எவ்வளவிருக்குமோ அதையும் அதிகரித்தது. அரசன் அரண்மனைக்குள்

கணேசன். இந்தக் குழு மைசூர், பெங்களூர் பிரயாணம் செய்து திரும்பியது. பிருத்விக் குழுவின் தலைவன் பரந்தாமன். இவர்கள் டில்லி போய்வந்தார்கள். சாரதா குழுவின் தலைவி சகுந்தலா. இவர்கள் கல்கத்தா போய் வந்தார்கள். விக்கிரமக் குழுவின் தலைவன் சிவநேசச் செல்வன். இவர்கள் இராமேச்வரம், கன்னியாகுமரி இவ்விடங்களில் பிரயாணம் செய்து திரும்பி வந்தனர்.

ஒவ்வொரு குழுவுக்கும் தங்கள் பிரயாண விவரங்களை விளக்கி ஒரு பத்திரிகை (எழுத்துப் பிரதி) தயாரித்தது. அதில் போட்டோ படங்களும், எழுதிய சித்திரங்களும், நகைப்புத் துணுக்குகளும் இருந்தன. இயற்கைக் காட்சிகள், கோவில் சிற்பங்கள், அந்தந்த இடத்தில் அறிமுகமான பிரமுகர்கள், பிள்ளைகள் நடத்திய நிகழ்ச்சிப் படங்கள் முதலியனவும் நிரம்பியிருந்தன. ஆங்காங்குக் கட்டுரைகளும் வர்ணனை விவரங்களும் அழகாக எழுதியிருந்தார்கள். பிரயாண டயரியும், தினசரி வேலை விவரங்களும், பிரயாணச் செலவுகளும், நன்றிக்கு உரித்தான உபகாரிகளைப்பற்றிய விவரங்களும் எல்லாம் படிக்க மிகவும் சுவையாயிருந்தது.

கோடை லீவு முடிந்து பள்ளி திறந்தவுடன் மாணவர்களின் முதல் கூட்டத்தில் பிரயாணக் குழுக்கள் தலைவர்கள் தங்கள் பிரயாண ரிபோர்ட்டைப் படித்தார்கள். பிரயாண ஆல்பங்களை எல்லா மாணவர்களும் கண்டு பரிசீலனை செய்து மகிழ்ந்தார்கள்.

கூட்ட நடவடிக்கைகளைச் சுருக்கமாக விவரிப்போம். தலைமை ஆசிரியர் பிரசன்னமாயிருக்க முடியாததால் முதல் உதவி ஆசிரியர் கூட்டத்தின் ஆலோசகர் ஆக இருந்தார். சாரதா குழுவின் தலைவி சகுந்தலாவை எல்லாம் அன்றையக் கூட்டத்திற்குத் தலைமை தாங்கும்படி கேட்டுக்கொள்ளவே, அவள் தலைவியாக அமர்ந்தாள்.

தலைவர் முன்னுரையில் இந்தியாவின் ஏழு அதிசயங்களைக் குறிப்பிட்டார். (1) ஆக்ராவில் உள்ள தாஜ் மகால், (2) டில்லியில் குத்துப் மினார், (3) அமிர்தசரஸ் பொற்கோவில், (3) அபு மலையில் உள்ள தில்வாரா கோவில், (5) அஜந்தாக் குகைக் கோவில், (6) மதுரை மீனாட்சி கோவில், (7) பீஜப்பூர் கோல்கும்பஸ்—இவைகளே இந்தியாவின் ஏழு அதிசயங்கள். பழைய உலகத்தின் ஏழு அதிசயங்களைப் பற்றிப் படித்திருக்கிறோம். ஆனால் இப்போது உலக அதிசயங்களில் இவைகளும் முக்கியமானவை. பள்ளிக் காலத்தில் வருஷா வருஷம் ஒரோர் திசையிலும் பிரயாணம் செய்து, இந்தியா முழுவதும் சுற்றிப் பார்க்கவேண்டும் என்றார்.

பிறகு குழுத் தலைவர்கள் தங்கள் குறிப்புக்களைப் படித்தார்கள். டில்லி சென்று திரும்பிய குழுத் தலைவன் கூறியதாவது— எங்கள் பிரயாண விவரங்கள் முழுவதையும் இங்குசொல்லவேண்டுமாயின் அதிக நேரம் ஆகும். எங்கள் குழுவின் பத்திரிகையில் நீங்கள் சாவகாசமாகப் படித்து மகிழும்படி கேட்டுக்கொள்கிறேன். முக்கியமாக இவ்விடம் டில்லியைப் பற்றி மாத்திரம் பேசுகிறேன். டில்லிக்குப் போக சென்னையிலிருந்து கிராண்டு டிரங்க் எக்ஸ்பிரெஸ்ஸில் சனிக்கிழமை புறப்பட்டோம். 1360 மைல் பிரயாணம் செய்து திங்கள் காலை 8 மணிக்கு டில்லி சேர்ந்தோம். வழியில் அநேக இடங்களைப் பார்க்கவேண்டுமென்ற ஆசை. ஆனால் எங்கள் குழுவில் ஆறு மாணவர்களது பெற்றோர்கள் டில்லியில் உத்தியோகத்தில் இருப்பதால் அவர்கள் அழைப்புதான் எங்கள் டில்லி பிரயாணத்திற்கு முதல் காரணம்—முக்கிய காரணம். இந்த வருஷம் பிரயாணத்தில் டில்லி, ஆக்ரா, மத்துரா முதலிய இடங்களைப் பார்த்தோம். இன்னொரு சமயம் மற்ற இடங்களைப் பார்க்க வசதி கிடைக்காமலா போகும்?

நமது நாட்டுச் சரித்திரம் டில்லியின் சரித்திரத்துடன் இணைந்துள்ளது. மகாபாரத காலம் முதல் டில்லி ஏற்பட்டது. அப்போது அதற்கு இந்திரப்பிரஸ்தம் என்றுபெயர். பிறகு பிருத்விராஜ் காலத்தில் டில்லி புகழ்பெற்றது. முஸ்லிம் சுல்தான்கள் டில்லியில் ஆளத் தொடங்கிய பிறகு பல புதிய கட்டிடங்கள் தோன்றின. குத்புமினார் கோபுரம் வானத்தை நோக்கிச் செல்லும் அழகைப் பற்றி என்ன சொல்வது. வளைந்து வளைந்து செல்லும் படிகளில் ஏறி ஒரோர் வரிசையிலும் வெளி வராந்தாவிலிருந்து கீழே நோக்கிப் பார்த்தோம். உலகமே நமது காலடியில் இருப்பதுபோல் தோன்றியது. இரண்டொருவருக்கு மயக்கமாயிருந்தது.



அருகே உள்ள இரும்புத் தூண் இன்னொரு அதிசயம். ஜெயசிங் கட்டிய வானசாஸ்திர ஆராய்ச்சி இடங்களைப் பார்த்தோம். ஷாஜஹான் சக்கரவர்த்தி மயிலாசனத்தில் வீற்றிருந்து தர்பார் நடத்திய மண்டபத்தைப் பார்த்தோம். இவைகளை எல்லாம் நகரும் படச் சுருளாக ஆசிரியர் எடுத்திருக்கிறார். அதையும் பிறகு பார்க்கலாம்.

டில்லிக்குச் செல்பவர் மகாத்மா சமாதிக்கு அஞ்சலி செய்யத் தவறுவதில்லை. அதுவே முதல் கடமை. அந்நிய நாட்டுத் தூதர்களும், உத்தியோகஸ்தர்களும் டில்லிக்கு வந்தவுடன் முதல் வேலையாக ராஜ்காட் சென்று புஷ்பங்கள் சமர்ப்பித்து மரியாதை செய்வர். நாங்களும் அவ்விதமே செய்தோம்.

பிரிட்டிஷ் இராஜ்யப் பிரதிநிதிகளுக்கென கட்டப்பட்ட பிரம்மாண்டமான மாளிகையில் இப்போது ராஷ்டிரபதி வசிக்கிறார். இதில் 350 அறைகள் இருக்கின்றனவாம். அநேக அறைகள் ராஷ்டிரபதிக்குத் தேவையில்லை என்று சொல்லிவிட்டதால் தேசிய மியூசியம் புத்தகசாலை என்று எல்லாம் உபயோகப்படுத்துகிறார்கள்.

சுதந்தர இந்தியாவின் தலைநகர் ஆன பிறகு டில்லி மிகவும் முக்கியமாகிவிட்டது. அந்நிய தூதர்களும் ஸ்தானிகர்களும் வரவும் போகவும் வேண்டியதாயிற்று. அவர்கள் காரியாலயங்கள், வியாபார ஸ்தலங்கள் எல்லாம் பெருகிவிட்டன. அடிக்கடி பிரபல நிபுணர்களும் தலைவர்களும் வந்து மகாநாடு கூடிப் பேசுகிறார்கள்.

டில்லியிலிருந்து ஆகாய விமான சர்விஸ் நாலா புறங்களுக்கும் செல்கிறது. இன்னொரு முறை டில்லிக்குப் போகும்போது ஏரோப்ளேனில் போகவேண்டுமென்று எங்களுக்கு வெகு ஆசை.

(அப்படிப் போவதாகக் கற்பனை செய்து கொள் என்று கூச்சல்.)

அடுத்தபடி பேசிய மாணவன் மைசூர், பங்களூர் போய் வந்த விவரத்தை வர்ணித்தான். மைசூரிலிருந்து குடகு நாட்டிற்குப் போய் தலைக் காவேரியில் நீராடியதை வெகு அழகாகச் சொன்னான். இந்தக் குழுவினர் போட்டோ படங்கள் எடுத்திருந்தார்கள். அவைகளை எல்லாம் காட்டி விளக்கிச் சொன்னான்.

மூன்றாவதாகப் பேசியவன் தங்கள் இராமேஸ்வரப் பிரயாணத்தைப் பற்றிச் சொன்னான். மதுரை மீனாட்சியம்மன் கோவில், திருமலை நாயக்கர் அரண்மனை, பாம்பன் பாலம், ராமேச்வரம் கோவில், திருச்செந்தூர், கன்னியாகுமரி முதலிய இடங்களைப் பற்றி மிகவும் சுருக்கமாகச் சொன்னான்.

கடைசியில் தலைவி பேசினாள். அவர்கள் குழு கல்கத்தா போய் வந்தார்கள். இந்தியாவில் மிகப் பெரிய நகரம் கல்கத்தா. ஹௌரா பாலம், காளிகட்டம், ஹூக்ளியில் கப்பல்கள் தங்கும் இடம் இவைகளைப் பற்றிய படங்களைக் காட்டி வர்ணித்தாள்.

பார்வையாளராக இருந்த ஆசிரியர், குழுத் தலைவர்களது பேச்சை மிகவும் பாராட்டி மகிழ்ச்சி தெரிவித்தார். இவ்விதம் ஒரு வகுப்பில் மாணவர்கள் அநேகமாய் இந்தியா முழுவதும் பிரயாணம் செய்து பார்த்து வந்தார்கள். தங்கள் அனுபவங்களை ஒருவரோடொருவர் பரிமாறிக் கொண்டு அறிவைப் பெருக்கிக் கொண்டார்கள். நாட்டின் பல்வேறு இடங்களின் செழுமையைப் பற்றியும் மக்கள் வாழ்க்கை விவரங்களைப் பற்றியும் தெரிந்து கொண்டார்கள். போக்குவரத்து வசதிகளைப் பற்றி நேரில் அனுபவமாகக் கற்றுக் கொண்டார்கள். இவ்விதப் பிரயாணங்களினால் கிடைக்கும் நலன்களை விரிவாகச் சொன்னார்.

பிறகு மாணவர் கூட்டம் முடிந்தது.

# ஆள் இயல்பை வர்ணிப்பது

வி. நடராஜன்

சமீபத்தில் கடலூரில் நடந்த கல்வி மகாநாட்டில் நான் ஒரு யோசனை கூறினேன். அதாவது ஒவ்வொரு ஆசிரியரும் தன்னைப்பற்றிய வர்ணனை ஒன்று எழுதி அந்தந்த ஜில்லா கில்டு தலைவருக்கு அனுப்பவேண்டும் இது அநேகருக்கு ஒரு 'தமாஷ்' ஆகத் தோன்றியது. ஆனால் இதில் 'தமாஷ்' அம்சத்துடன் ஒரு சிறந்த பயிற்சிக்கும் இடம் உண்டு. ஒவ்வொரு மாணவனின் தன்மை இயல்பை வர்ணித்து அவனைப்பற்றிய குறிப்பு எழுதவேண்டியது ஆசிரியரின் வேலைகளில் ஒன்று அல்லவா ? இது எவ்வளவு சிரமமானது என்பது விளங்கவேண்டுமாயின் தன்னைப்பற்றிய குறிப்பு ஒன்றையும் ஆசிரியர் எழுதிப் பார்க்கட்டுமே!

கம்பெனிகளிலும் சர்க்கார் ஆபீசுகளிலும் உயர் பதவிகளுக்கு விண்ணப்பம் போடுபவர்களை இம்மாதிரி ஒரு சோதனை செய்வது உண்டு. நூறு வார்த்தைகளுக்குள் உன்னைப்பற்றி வர்ணித்து எழுதிய சிறு கட்டுரையும் அனுப்பு என்பார்கள். உன்னை வர்ணிக்க முடிந்தால் பிறரையும் வர்ணிக்க முடியும். முதலில் நீ உன்னையே அறிந்து கொள் என்று பேரறிஞர்கள் போதிப்பார்கள்.

ஒரு ஆளை வர்ணிப்பது என்றால் அவன் உருவம் அங்க அமைப்பு அடையாளங்களை வர்ணிப்பது ஒருபுறம். சில எழுத்தாளர்கள் தங்கள் கதா பாத்திரங்களைப்பற்றி வெகு அழகான சொற் சித்திரங்களில் வருணிப்பார்கள். படிக்கும்போதே அந்த ஆளின் ஸ்தூலமான உருவம் நம் மனக் கண்முன் காட்சி தரும். கூரான மூக்கும், ஒட்டிய கன்னங்களும் சுருக்கக் கோடுகள் உள்ள நெற்றியும், துறுதுறுவென்று-பிரகாசிக்கும் கண்களும், வழுக்கையான முன் மண்டையும்—என்று சித்தரிக்கும்போது ஆசாமியின் முகம் காட்சித் திரையில் ஆஜர் ஆகிவிட்டது. ஸ்தூலமாக உருத்தை வர்ணிப்பது ஓரளவு சுலபம்தான். நெட்டை, குட்டை, ஒல்லி, கட்டை என்று அடைமொழிகளைப் பிரயோகிப்பது எளிது. ஆனால் அவன் குண விசேஷ இயல்பை வர்ணிப்பதுதான் கஷ்டம். அவன் ஒருமாதிரி மனுஷன், ஒரு தினுசுப் பேர்வழி என்று சொல்கிறோம். சாதாரணமாகப் பழகுபவர்களைவிட இந்த ஆள் வித்தியாசப்பட்டவன் என்று மாத்திரம் தெரிகிறதேயல்லாது அவன் எந்தமாதிரி, எந்த தினுசு என்று திட்டமாகத் தெரிவதில்லை. வருணிக்கும் உனக்கு நன்கு தெரியலாம். ஆனால் கேட்போனுக்கும் (படிப்பவனுக்கும்) தெரியவேண்டுமே!

S.S L.C. தொடங்கிய அந்த நாளில் (1910-ம் வருஷம் எங்கள் வகுப்பு ஆசிரியர் ஒரு மாதிரி (Specimen) சர்டிபிகேட் புத்தகத்தைக் காட்டி விளக்கிச் சொன்னது ஞாபகம் வருகிறது. ஆளின் அங்க அடையாளங்கள், குலம், கோத்திரம், ஊர், பேர், பிறந்த தேதி முதலிய எல்லா விவரங்களும் இதில் குறிப்பிடுவார்கள். இப்போது இன்னும் ஒரு படி மேலான சீர்திருத்தங்கூட சில நாடுகளில் காணலாம். சர்டிபிகேட்டின் சொந்தக்காரரது படம் ஒன்றும் ஒட்டப்பட்டிருக்கும். அந்நிய நாடுகள் செல்லும்போது ஆள் அடையாளம் தெரியவேண்டி பாஸ்போர்டில் (அனுமதிப் பத்திரத்தில்) சிறிய போட்டோ படமும் ஒட்டி வைக்கவேண்டும். மோட்டார் ஓட்டிகள், பஸ் டிரைவர்கள்கூட அவர்களது லைசென்ஸ் அட்டையில் போட்டோ படம் ஒட்டி வைத்திருக்க வேண்டும். இவையெல்லாம் நல்லதுதான். சிலர் தமது மணிபர்சிலும் பாக்கெட் புக்கிலும் போட்டோ படம் வைத்திருப்பதும் உண்டு.

சர்க்கார் ஆபீசுகளிலும் பெரிய கம்பெனிகளிலும் தங்கள் உத்தியோகஸ்தர்களைப் பற்றிய ரிகார்டுகள் வைத்திருப்பார்கள். ஒவ்வொருவரைப்பற்றிய குறிப்புக்கள் அவரவரது (Personal File) அட்டையில் காணப்படும். ஆறு மாதத்திற்கு ஒரு முறை அல்லது வருஷத்திற்கு ஒரு முறை ஒவ்வொரு மேல் அதிகாரியும் தன் கீழ் வேலை செய்யும் உத்தியோகஸ்தர்களது நடவடிக்கைகளைப் பற்றிய ரிபோர்ட்டு எழுதவேண்டும். இரகஸ்ய ரிபோர்ட்டு எனப்படும் இவைகளைக் கொண்டு அந்த உத்தியோகஸ்தருக்கு பிரமோஷன் தருவதும் மேல் பதவிக்குத் தேர்தல் செய்வதும் நிர்ணயிக்கப்படும்.

தலைமை ஆசிரியர் உதவி ஆசிரியர்களைப் பற்றிய ரிபோர்ட்டு எழுதவேண்டும். ஜில்லா போர்டு அதிபர், முனிசியல் கமிஷனர் இவர்கள் எல்லாம் தலைமை ஆசிரியர்களைப்



பற்றிய ரிபோர்ட்டுகளைப் பரிசீலனை செய்து நடவடிக்கை எடுப்பார்கள்.

பொதுஜன வாழ்வில் அமைதி நிலவி இருக்கவேண்டும் அல்லவா ? இதைக் கவனிக்கும் போலீஸ் அதிகாரிகளும் ஆட்களைப் பற்றிய இரகஸ்ய ரிபோர்ட்டுகளை வைத்திருப்பார்கள். பலநாள் திருடர்கள் (கே. டி. என்று சொல்வதுண்டு). மோசடி மன்னர்களைப்பற்றிய ரிகார்டுகள் மாத்திரமல்ல. ஜனத் தலைவர்கள், சமூக ஊழியர்கள் இவர்களைப் பற்றியும் குறிப்புக்கள் வைத்திருப்பார்கள். பிரிட்டிஷ் ஆட்சியில் ஸி. ஐ. டி. போலிஸார் ரிபோர்ட்டுகள் பிரமாதமாயிருந்தன. காங்கிரஸ் தலைவர்களையும் புரட்சிக்காரர்களையும் போலிஸ் ஒற்றர்கள் வேவு பார்ப்பார்கள். இவை எல்லாம் இங்கு விஸ்தரிப்பானேன்? பள்ளிச்சாலைகளிலும் இவ்வித நிலைமை கொஞ்சங் கொஞ்சமாகப் புகுந்து வருவதைப்பற்றி ஆசிரியர்கள் எச்சரிக்கையாயிருக்க வேண்டும்.

மாணவர்களைப் பற்றிய ரிகார்டு வைக்கவேண்டியதென்னவோ அவசியம்தான். டெர்ம் ரிபோர்ட்டு, ஆண்டு ரிபோர்ட்டு என்று பெற்றோர்களுக்கு அனுப்பவேண்டியது அவசியம்தான். தேர்ச்சியைப்பற்றி அந்தந்த ஆசிரியர்களைக் கலந்துகொண்டு ரிபோர்ட்டுஎழுதுவது முறை. அதுபோலவே மாணவனது நடத்தை, குணம், சுபாவ இயல்பு, தனித் திறமை முதலிய விசேஷங்களைப் பற்றி குறிப்பு எழுதும்போதும் அம்மாணவனுடன் பழகும் எல்லா ஆசிரியர்களையும் கலந்து நிதானமாகச் செய்ய வேண்டும். அவசரப்பட்டு முடிவு செய்யக்கூடாது. சென்ற ஆண்டு எழுதிய குறிப்புக்கு முற்றிலும் மாறுதலாக இந்த ஆண்டு முடிவு இருக்கவும் கூடும். அவ்வித மாறுதல் ஏற்பட்டது வாஸ்தவம்தான். இதர ஆசிரியர்களது அபிப்பிராயங்களையும் கவனிக்கவேண்டும். சில சமயம் மாணவ சகபாடிகளின் அபிப்பிராயமும் உதவும். சகபாடிகளைப்பற்றி மாணவர்கள் தமது கருத்துக்களை ஆசிரியர் சமயோசிதமாகவும் சாமர்த்தியமாகவும் சேகரிப்பது அவசியம்.

மாணவனைப் பற்றிய திறமைக் குறிப்பை இரகஸ்யமாக வைத்திருக்க வேண்டும் என்பது அவசியமல்ல. சில சமயம் பெற்றோர்களுடன் நேரில் பேசி தன் அபிப்பிராயமும் அவர்கள் அபிப்பிராயமும் ஒத்து இருக்கிறதா எனப் பார்க்கலாம். மாணவன் தேர்ச்சிக்கும் பயிற்சிக்கும் ஊக்கமாக இருக்கும் என்று தோன்றினால் மாணவனிடமே அவனது குறிப்பைக் கொடுத்துப் படிக்கும்படி செய்யலாம். அவன் திறமைக்கேற்ப அவனுக்குப் பள்ளி அலுவல்களில் பங்குகொள்ள வசதி அளிக்கவேண்டும். முக்கியமாக அவன் உத்சாகம் பெருகி ஆசையுடன் செயல்புரியும் வகையில் இருக்கவேண்டும் என்பதே ஆசிரியர் ஆசை. மாணவன் மனம் நொந்து தாழ்வு மனப்பான்மை கொள்ளக்கூடாது. சமயோசிதம்போல் மாணவனைப் பற்றிய குறிப்புக்களை எந்தசமயம் அவனே படித்து அபிவிருத்தி செய்யவோ திருத்திக்கொள்ளவோ சாத்தியப்படுமோ அந்த சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக்கொள்வதே ஆசிரியரது நோக்கமாகும்.

ஒருவரை வர்ணிக்கும் அனுபவம் பெறவும், தன்னைப்பற்றிப் பிறர் வருணிப்பதை ரசிக்கும் தன்மை பெறவும் நாங்கள் ஒரு புதுமுறை விளையாட்டு நடத்துவதுண்டு. பெரியோர்களும்கூட இந்த ஆட்டத்தை ரசித்துப் பொழுது போக்கினார்கள். இளைஞர்கள் கூட்டத்தில் தமாஷ் கலந்த படிப்பினையாகவும் இருக்கும். கூட்டத்தின் தலைவன் (அல்லது கட்சித் தலைவன்) யாரேனும் ஒருவரை வெளியில் போகும்படி சொல்வான். தானே இஷ்டப்பட்டு முன்வருபவனையும் போகச் சொல்லலாம். அவன் போன பிறகு அவனைப்பற்றிய அபிப்பிராயங்களைச் சொல்லும்படி தலைவன் கேட்பான். சொல்பவர் பெயரையும் அவர் சொல்லும் விஷயத்தையும் அவன் குறித்துக் கொள்வான். 4 அல்லது 5 பேர் அபிப்பிராயங்களைக் குறித்துக்கொண்ட பிறகு வெளியே சென்றிருப்பவனைக் கூப்பிட்டு, ஓரோர் அபிப்பிராயத்தையும் (சொன்னவன் பெயரை வெளியிடாமல்) தலைவன் வாசிப்பான். இந்த அபிப்பிராயத்தைச் சொன்னவர் இன்னார் என்று அவன் ஊகித்துக் கண்டுபிடிக்கவேண்டும். இந்த ஆட்டம் மிகவும் பயன் தந்தது. தன்னைப்பற்றி தன் சகாக்கள் என்ன அபிப்பிராயம் கொண்டிருக்கிறார்கள் என்று அறிய ஒரு சிறந்த வாய்ப்பு. கூச்சமின்றி தாராளமாக ஒருவரையொருவர் நட்பு உரிமையில் வருணித்துக் கொள்ளவும் ஒரு பயிற்சி. இந்த ஆட்டத்தை இன்னொரு விதமாகவும் நடத்துவது உண்டு. ஒவ்வொருவனைப் பற்றிய அபிப்பிராயங்களைச் சேக

தரியா—"வேலையாயிற்று. வீட்டுக்குப் போகிறேன்" என்றாள்.

தார்த்தாரி—"ரூபாய் அகப்பட்டது—எனக்கு ஒன்றும் கொடுக்கிறதில்லையோ?"

தரியா—"ரூபாய் எனக்கு வேண்டியிருக்கிறது—அதற்குப் பதில் ஒரு பாட்டுச் சொல்லி விட்டுப் போகிறேன். தம்பூர் கொண்டுவா." என்றாள்.

தம்பூர் பக்கத்தி லிருந்தது. அதை யெடுத்துக்கொண்டு தரியா பாட வாரம்பித்தாள்: சதுரமான குரல்; சங்கீதம் வெகு இனியது. ஜேப உன்னீஸா உள்ளேயிருந்து கேட்டு "யார் பாடுகிறது" என்று கேட்டாள்.

தார்த்தாரி—"தரியா."

அவள் உள்ளேவரும்படி உத்தரவாயிற்று.

தரியா மறுபடியும் உள்ளேபோய் ஸலாம் செய்தாள். ஜேப உன்னீஸா. "பாடு. வீணையிருக்கிறது" என்றாள்.

வீணையை யெடுத்துக்கொண்டு தரியா பாடினாள்; வெகுஇனிமையாய்ப்பாடினாள். ஜேப உன்னீஸா அநேக பாடகர் ஸங்கீத மெல்லாம் கேட்டிருந்தும், இவள் பாட்டில் இருந்தஆனந்தம் வேறொன்றிலுமில்லை யென்றறிந்து பாட்டு முடிந்தவுடன், "நீ மபாரகன் பக்கத்தில் எப்பொழுதாவது பாடினாயோ"என்றுகேட்டாள்.

தரியா—"என் பாட்டைக்கேட்டே அவன் என்னை, விவாகம் பண்ணிக்கொண்டான்" என்றாள்.

ஜேப உன்னீஸா ஒரு புஷ்ப மாலையினால் தரியாவை பலமா யடித்தாள். தரியாவுக்கு நோயினால் முகஞ்சுண்டிற்று. அதுகண்டு ஜேப உன்னீஸா அவளுக்கு கொஞ்சம் திரவியம் கொடுத்து "நீ இனி இங்கே வரவேண்டாம்" என்றாள்.

தரியா பிரணமம் செய்து புறப்பட்டுப்போகும் பொழுது மறுபடியும் வந்து இவளிடத்தில் அடிவாங்கிக்கொண்டு ரூபாயும் பெற்று "இவளை, எப்படியும் கெடுக்கிறேன்" என்று நிச்சயம் பண்ணிக்கொண்டாள்.

---

ஆரியமத உபாக்கியானம்.—நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட அநேகம் அருமையான கதைகள் கொண்டது. அநேகம் அழகிய ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் உத்ஸாகத்துடன் வாசிக்கத்தக்கது. முதற்பாகம் அ. 8, இரண்டாம்பாகம் அ. 10.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### பல தேசக் காட்சி

### 3. ரங்கனிடமிருந்து ஓர் கடிதம்

ரங்கன் இங்கிலாந்திற்குப் புறப்பட்டுச் சென்று ஒருவாரத்திற்கு மேலாயிற்று. ஊரில் கமலா கிருஷ்ணன் முதலியவர்கள் அவர்கள் தாயாருடனும் தகப்பனாருடனும் தங்கள் அண்ணனைப் பற்றித் தினந்தோறும் பேசிக் கொண்டிருந்தார்கள். சுந்தரம் சாதாரணமாய் அவர்களோடு பேசுவதில்லை. தன் பாடங்களைப் படித்துக்கொண்டு மிகவும் கவனமாய்த் தகப்பனார் தாயார் முதலியவர்கள் சொல்வதை கேட்டுக்கொண்டிருப்பான்.

ஒருநாள் சுந்தரத்தின் தகப்பனார் பார்த்து "என்ன, சுந்தரம், நீ ஒன்றும் பேசாமலிருக்கிறாய்" என்றார்.

அதற்குச் சுந்தரம், "அதெல்லாமொன்றுமில்லை. பள்ளிக்கூடத்தில் பாடம் கொஞ்சம் அதிகம்; அவ்வளவுதான்" என்றான்.

"ஏன் அப்பா, சுந்தரம் படிக்கிறானே? அவனுக்கு ரங்கண்ணா இப்போது எங்கே இருப்பார் என்று தெரியுமா?" என்று கமலா கேட்டாள்.

"சுந்தரத்திற்குத் தெரியும். அவனுக்குப் பூகோள பாடத்தில் அதெல்லாம் சொல்லிக் கொடுப்பார்கள்" என்றார்.

"அப்படியானால் சுந்தரண்ணா, அண்ணா எங்கேயிருப்பார் சொல்லு பார்ப்போம்" என்றாள் கமலா.

"இங்கேவா நான் காட்டுகிறேன்" என்று சொல்லிவிட்டு, சுந்தரம் தன் பூகோளப் படத்தை விரித்துக் கீழே வைத்தான். கமலாவும் கிருஷ்ணனும் அவர்கள் தாயாரும் அருகில் வந்துபார்த்தாள்; சுந்தரம், பூகோளத்தின் கீழ்ப்பாகத்தின் படத்தைப் பிரித்து வைத்துக் கொண்டு "இதோ பார் கமலா, நம்மஊர்இங்கே இருக்கிறது. இங்கிருந்து பம்பாய்க்குப் போகவேண்டுமானால் இந்த ரயில் வழியாய்ப் போகவேண்டும். பம்பாயில்தான் இங்கிலாந்திற்குப் போவதற்குக் கப்பலில் ஏறவேண்டும். அப்பா ரங்கனோடு அதுவரையில்தான் போயிருந்தார். அண்ணா கப்பலில் ஏறினதும், அப்பா இங்கே வந்துவிட்டார் அல்லவா? அதற்குப்பிறகு அந்தக் கப்பல் நேரே மேற்கேபோய் இந்தத் துறைமுகத்தில் தங்கியிருக்கும்.

தன் குற்றம் இருகப் பிறர் குற்றம் பார்க்கிறதா?



"துறைமுகமென்றால் என்ன?" என்று கமலா கேட்டாள். "கப்பல் தங்குகிற இடம்; பட்டணம் ஒருதுறை முகம், பம்பாய் ஒரு துறை முகம்."

"அவ்வளவுதானா? அதற்குப் பேரில்லையா?

"சொல்லுகிறேன். அதற்கு ஏடன் என்று பெயர். அங்கிருந்து இந்த சிறு கடல் வழியாய்ப் போனால் ஒரு நீளக் கால்வாயண்டை போய்ச் சேர்வார்கள். அந்தக் கால்வாய்க்கு ஸூயஸ் கால்வாய் என்று பெயர்."

"கால்வாய் சின்னதாகத்தானே இருக்கும். அதில் கப்பல்கள் எப்படிப் போகும்?

"நம் ஊர் கால்வாயைப்போல சின்னதாக இருக்காது. வெகு அகலமாயும் ஆழமாயும் இருக்கும். அந்தக் கால்வாய் சுமார் 80 மைல் நீளமானது. அதைத் தாண்டினதும் இன்னொரு கடலுக்கு, ரங்கண்ணா போகும் கப்பல் போய்ச் சேரும். அந்தக் கடலில்தான் அண்ணா ஏறின கப்பல் போய்க் கொண்டிருக்கும்" என்று சொன்னான் சுந்தரம்.

"ஏன், சுந்தரம், ரங்கன் போகிறவழியில் ஊர்களே கிடையாதா? நடு சமுத்திரத்திலேயா அவன் கப்பல் போகும்?"

"ஆமாம் அம்மா! பம்பாயிலிருந்து ஏடன் போகும்வரையில் எல்லாம் கடல்தான். இந்த படத்தைப் பார். நீல வர்ணமாயிருக்கும் இடமெல்லாம் ஜலமிருக்கும். பிறகு கால்வாயைத் தாண்டும்போது இரண்டு பக்கங்களிலும் கரையிருக்கிறதே."

"அங்கேயெல்லாம். ஊர்கள் இருக்குமல்லவா?"

"ஊர்கள் கிடையாது. ஏன் தெரியுமா? அந்தக் கால்வாயின் இரண்டு பக்கங்களிலும் பெரிய மணல் வனாந்தரங்கள்தான். அங்கு என்ன பயிராகும்?"

"அப்படியானால் ஜனங்களே யிருக்கமாட்டார்களா?"

"நம் ஊரில் இருப்பதைப்போல் அவ்வளவு அதிகமாய் ஜனங்கள் இருக்கமாட்டார்கள். அந்த மணற்காட்டிலேயே சில இடங்களில் சிறு ஊற்றும், ஈச்சமரங்களும் இருக்கும். அங்கே சில ஜனங்கள் இருப்பார்கள்."

"ஆனால், நீங்கள் அங்கே தரை எல்லாம் மணலாயிருக்கும் என்று சொன்னீர்களே" என்றாள் கமலா.

"மணலாய்த்தான் இருக்கும். ஆனால் ஜனங்கள் கூடாரங்களில் குடியிருப்பார்கள்" என்றான் சுந்தரம்.

"அதிருக்கட்டும் அண்ணா! பெரிய ஊர்களே கிடையாதா?"

"கால்வாய், சமுத்திரத்தோடு சேரும் இடத்தில் ஓர் ஊர் இருக்கிறது. அதற்கு ஸேட்டு துறைமுகப் பட்டணம் என்று பெயர்" என்று சுந்தரம் சொன்னான்.

இப்படி இவர்கள் பேசிக்கொண்டிருக்கையில் தபால்காரன் வந்தான். அவனைக் கண்டதும் குழந்தைகள்ஓடிப்போய் அவன்கொடுத்த கடிதங்களை வாங்கிக்கொண்டு வந்தன. மிகவும் ஆவலுடன் அந்தக் கடிதங்கள் யாரிடமிருந்து வந்தனவென்று திறந்து அவர்கள் பார்த்தார்கள். இரண்டு கடிதங்களும் ரங்கனிடமிருந்து வந்தவை. ஒரு கடிதம் அவர்கள் தகப்பனாருக்கு; மற்றொரு கடிதம் "சுந்தரம், கமலா" இருவருக்கும்.

ரங்கன் தன் தகப்பனாருக்கு அதிகம் எழுதவில்லை. சௌக்கியமாய்ப் பிரயாணம்செய்ததாயும் அடிக்கடி கடிதம் எழுதுவதாயும், தான்கப்பலில் சென்றபோது கண்டவைகளை விவரமாய்க்கமலாவுக்கும் சுந்தரத்திற்கும் எழுதின கடிதத்தில் கூறியிருப்பதாயும் எழுதியிருந்தான். ஆகையால் எல்லோரும் இரண்டாவது கடிதத்தில் ரங்கன் என்ன எழுதினானென்று தெரிந்துகொள்ள ஆவலாயிருந்தார்கள். சுந்தரம் கடிதத்தைப் பிரித்துவாசித்தான். மற்றவர்கள் கவனமாய்க் கேட்டுக்கொண் டிருந்தார்கள்.

கெய்ரோ நகரம், எகிப்து,

க்ஷேமம். 191 . ஹு ஜூலை 25வ.

சிரஞ்சீவி தம்பி சுந்தரத்திற்கும் தங்கை சமலாவுக்கும் அனேக ஆசீர்வாதம். நீங்கள் எல்லாரும்நன்றாய்ப்படித்துக்கொண்டு சௌக்கியமாய் இருக்கிறீர்களென்று நம்புகிறேன். குழந்தை கிருஷ்ணன் நன்றாய் விளையாடுகிறானா? அப்பாவும் அண்ணாவும், நமக்குத் தெரிந்தவர்களும் சௌக்கியமா? அவர்கள் எல்லாரையும்பற்றி விவரமாய் நீங்கள் எனக்குக் கடிதம் எழுதவும்.

அப்பாவுடன் நான் பம்பாய்க்கு வந்ததும் கப்பலில் ஏறுவதற்குவேண்டிய ஏற்பாடுகளைச்



தன் குஞ்சென்று வளர்க்குமாம் குயிற்குஞ்சைக் காகம்.

செய்ததைப் பற்றியும், நான் கப்பலில் ஏறினதைப்பற்றியும் அப்பா உங்களுக்குச் சொல்லியிருப்பார்.

நான் கப்பலில் ஏறி என் சாமான்களை எனக்கென்று விடப்பட்ட ஓர் அறையில் வைத்துவிட்டேன். பிறகு கப்பலின் மேல் தட்டில் வந்து பார்த்தபோது, ஹார்பரில் உள்ள வாராவதியின்மேல் அப்பா நின்றுகொண்டிருந்தார். சற்றுநேரத்திற் கெல்லாம் கப்பல் புகைவிட்டுக்கொண்டு புறப்பட்டது. முதலில், கப்பல் சற்று ஆடுவது போலிருந்தது. கொஞ்சம் கொஞ்சமாக அது ஜலத்தில் நீந்துவதுபோல, முன்பக்கத்திலுள்ள ஜலத்தைக் கிழித்துக்கொண்டு வேகமாகப் போயிற்று. ஹார்பரை வெகு சீக்கிரத்தில் விட்டு, கரையிலிருந்து நேர்மேற்கே போயிற்று. கப்பல் ஹார்பரைவிட்டுப் போனபிறகு அப்பாவைப் பார்க்கமுடியவில்லை.

நான் வெகு நேரம் கப்பல் ஜலத்தில் போவதைப் பார்த்துகொண்டிருந்தேன். கப்பலைச் சுற்றிலும் சுமார் 60 அடிமுதல் 500 அடிவரை ஆழம் இருக்கும். அவ்வளவு ஆழமான ஜலத்தில் கப்பல் முழுகிவிட்டால் என்ன செய்வது என்றுகூட எனக்குப் பயமாயிருந்தது. ஆனால் கப்பல்கள் எத்தனையோ கடலில்போகின்றன. எவ்வளவோ ஜனங்கள் ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்திற்குப் போகிறார்கள். அப்படியிருக்க, நான் போகிற கப்பல் மாத்திரம் முழுகுவானேன்? என்று தைரியமாகவே யிருந்தேன். சற்றுநேரத்திற்கெல்லாம் இருட்டாய் விட்டது. ஆகையால் நான் என் அறைக்குப் போனேன். அந்த அறைக்குப் படிகட்டுகள் வழியாய்க் கீழிறங்கிப் போகவேண்டும். அறை சிறியதானாலும், நிரம்பஸௌகர்யம். ஒருபக்கத்தில் ஒரு மேஜையும் கண்ணாடியும் நாற்காலியும் இருந்தன. அவைகளுக் கெதிரே, என் படுக்கை நூற்கட்டிலில் போடப்பட்டிருந்தது. இராத்திரி ரொட்டியும் பாலும் சாப்பிட்டுவிட்டுப்படுத்துக்கொண்டேன். நல்ல தூக்கம்.

மறுநாள் காலை நான் எழுந்து, கப்பலின் மேல் தட்டுக்கு வந்து பார்த்தேன். அப்போது தான் சூரியன் உதயமாயிற்று. அதைப் பார்ப்பதற்கு மிகவும் அழகாயிருந்தது. காலையில் காப்பி சாப்பிட்டுவிட்டுப் பிறகு என் அறைக்குப்போனேன். நல்ல வேளையாய் என்னுடன் படித்த ஒரு சிநேகிதனும் இங்கிலாந்திற்குப் படிக்கப்போகிறான். அவன் பெயர் சிவஸ்வாமி. அவன் இஞ்ஜினீரிங் வேலைக்குப் படிக்கவேண்டும். எனக்குக் கூட்டாளி அகப்படவே மிகவும் சந்தோஷமாய் நாங்கள் இருவரும் இருந்தோம். சாப்பாட்டு விஷயத்திலும் எங்களுக்குக் கஷ்டமில்லை.

பம்பாயை விட்டுப் புறப்பட்டுப்போன ஐந்தாம் நாள் நாங்கள் ஏடன் என்னும் துறைமுகத்தில் தங்கினோம். அங்கே ஐரோப்பியர் சிலர் கப்பலில் ஏறினார்கள். ஏடன் எங்கே யிருக்கிறதென்று சுந்தரத்திற்குத் தெரியும். அங்கிருந்து கப்பல் சிவப்புக் கடல் என்பதைத் தாண்டி ஸூயஸ் கால்வாய் வழியாய்ப் போயிற்று. இந்தக் கால்வாய் சுமார் 50 வருஷங்களுக்கு முன்தான் வெட்டினார்கள். அதற்குமுன் நம் தேசத்திற்கு சீமையிலிருந்து வந்தகப்பல்கள் ஆப்பிரிக்காவைச்சுற்றிவந்தன. அப்பொழுது வெகு காலமாயிற்று. ஆனால் இந்தக்கால்வாய் வெட்டின பிறகு, வெகு சீக்கிரமாக இங்கிலாந்து முதலிய தேசங்களுக்குப் போக முடிந்தது. இந்தக் கால்வாய் வழியாய் கப்பல்கள் வேகமாய்ப் போகிறதில்லை. மணிக்கு சுமார் 8 மைலிலிருந்து 10-மைல் வேகமாய்ப் போகின்றன. கப்பலின் மேல் தட்டிலிருந்து பார்த்தால் கால்வாயின் இரண்டு பங்கங்களிலும் கண்ணுக் கெட்டினவரையிலும் ஒரே மணல் காடாகத் தெரிகிறது. சிற்சில இடங்களில் மாத்திரம் நாலைந்து பேரீச்ச மரங்களும், கூடாரங்களும் இருக்கின்றன. இதைத் தாண்டினதும் போர்ட்ஸெட்டு என்னுமிடத்திற்குப்போய்ச் சேர்ந்தோம். அங்கிருந்து கப்பல் எகிப்திலுள்ள பெரிய நதியான நைல் நதியின் முகத்வாரத்தில் நின்றது. கப்பலின் சரக்குகளை ஏற்றவும், இறக்கவும் இரண்டு நாட்கள் ஆகுமென்று கப்பல் தலைவர் எங்களுக்குச் சொன்னார். இஷ்டப்பட்டால், அதுவரையில் நாங்கள் கரையிலிறங்கி, சுற்றுப்புறங்களிலுள்ள ஊர்களையும், முக்கிய காட்சிகளையும் பார்த்துவிட்டு வரலாம் என்று சொன்னார்.

எகிப்து தேசத்தைப்பற்றி நாங்கள் காலேஜில் படித்திருந்தபடியால், அந்த தேசத்திலுள்ளவைகளைப் பார்க்கவேண்டுமென்று எங்களுக்கு மிகவும் ஆசையாயிருந்தது. ஆகையால் நானும் சிவஸ்வாமியும் இன்னும் சிலரும் சந்தோஷமாய்க் கப்பலைவிட்டு இறங்கிப் போனோம்.

தன் சோறு தின்று, தன் புடவை கட்டி, வீண் சொல் கேட்க விதியோ?



அலெக்ஸாண்டிரியா நகரம் எகிப்தின் முக்கியத் துறைமுகப் பட்டணமென்று சொல்லவேண்டும். ஆனால் அங்கு நாங்கள் வெகுநேரம் நிற்கவில்லை. ஒரு சிறு படகில் ஏறி அங்கிருந்து எகிப்தின் தலைநகரமாகிய கெய்ரோ நகரத்திற்குப் போனோம்; கெய்ரோ எங்கிருக்கிறது தெரியுமா? சுந்தரத்தைக் கேட்டால் அவன் அதன் இருக்குமிடத்தை பூகோள படத்தில் காட்டுவான். அந்த நகரத்திலிருந்து நான் இக்கடிதம் எழுதுகிறேன்.

கெய்ரோ மிகப் பெரியபட்டணம், தற்காலம் பல பெரிய மெத்தைகள் உள்ள வீடுகள் உள்ளன. இங்கெல்லாம் வசிக்கும் ஜனங்கள் அனேகமாய் ஜரோப்பிய வியாபாரிகளே. அவர்களிருக்குமிடம் வெகு அகலமாயும் அழகாயும் இருக்கின்றது. இங்கு பல பெரிய பங்களாக்களும் உயர்ந்த உப்பரிகைகளுள்ள வியாபாரச் சாலைகளும் இருக்கின்றன. இங்கிருக்கும் ஐரோப்பியர்களிற் பெரும்பாலார் ஆங்கிலேயர்களே. ஆனால் இங்கிருந்து எகிப்தியர்கள் இருக்குமிடம் போய்ப் பார்த்தால், அங்கு எல்லாம் வித்தியாசமாகத் தோன்றுகின்றன. வீடுகள் மிகச் சிறியவைகள். அநேகமாய் மண் சுவர்கள் எடுக்கப்பட்டு, தெருப்பக்கத்தில் சிறு ஜன்னல்கள் உடையவை. தெருக்கள் எல்லாம் நெருக்கம்.

இங்கிருக்கும் ஜனங்கள் எல்லோரும் மகம்மதியர்கள். நம் தேசத்தாரைப் போலவே நீண்ட சட்டையும், தலைப்பாகையும், காலில் பாதக்குறடுகளும் போட்டுக்கொண்டிருக்கிறார்கள். இவர்களில் ஸ்திரீகள் நம் தேசத்து முகம்மதிய ஸ்திரீகளைப்போலவே, முகத்தை மூடிக்கொண்டு போகிறார்கள்.

ஆனால் எகிப்தில் நாங்கள் பார்க்கவேண்டுமென்று வந்த இடத்தைப் பார்க்க, அன்றையதினமே புறப்பட்டு, கீஸே என்னுமிடத்திற்குப் போனோம். அங்கே நாங்கள் எதைப் பார்க்கப்போனோம் தெரியுமா? எகிப்தில், அரசர்களுடைய ஸமாதிகளாகக் கட்டப்பட்ட பிரமிட்டுகள் என்னும் உயர்ந்த ஸ்தூபிகளையும் அதனருகே இருக்கும் நரஸிம்ஹ விக்ரகத்தையும் தான். இவைகளின் படங்கள் என் அலமாரியிலிருக்கும். "எகிப்து" என்னும் புத்தகத்தில் இருக்கும். சுந்தரத்தைக் கேட்டால் எடுத்துக் காட்டுவான்."

கமலா உடனே சுந்தரத்தைப் பார்த்து "அண்ணா, நீங்கள் அந்த புஸ்தகத்தைக் கொண்டுவாருங்களேன் பார்க்கலாம்" என்று சொல்ல, சுந்தரமும் அப்படியே செய்தான். அவர்கள் அந்த புஸ்தகத்தைத் திறந்துபார்க்கப் படம் இருந்தது. கமலா சுந்தரம் ஆகிய இருவர்களும், மற்றவர்களும், அப்படங்களைப் பார்த்துவிட்டு, சுந்தரத்தை மறுபடியும் கடிதத்தைப் படிக்கச் சொன்னார்கள்.

"அந்த கோபுரங்கள் மொத்தம் நான்கு. அவைகளின் மிகப் பெரியதற்கு சீயாப்ஸ் கோபுரம் என்று பெயர், அது சுமார் 80 ஏகரா சதுரமானது, அது சுமார் ஐந்நூறு அடி உயரமிருக்கும், அவைகள் படிக்கட்டுகள்போலக் கட்டியிருப்பதால், ஜனங்கள் கொஞ்சம் கஷ்டப்பட்டு மேலே ஏறலாம். முற்காலத்தில் எகிப்திய அரசர்களுடைய பிணங்களுக்கு மருந்துத் தைலங்களிட்டு பத்திரமாய் வைத்திருந்தார்களாம். அவ்வரசர்களோடு, மிகவும் விலையுயர்ந்த நகைகளும் பாத்திரங்களும் வைத்திருந்தபடியால் சில திருடர்கள், அச்சமாதிக்குள் எப்படியோ நுழைந்து நகைகள் முதலியவைகளைத் திருடிக்கொண்டு போய்விட்டார்கள். அச்சவங்களில் மிகவும் விநோதமான விஷயம் என்னவென்றால் அவைகளிற் சில சுமார் இரண்டாயிரம், மூவாயிரம்வருஷங்களுக்கு முன்னமேயே தைலத்தில் அமிழ்த்தி எடுக்கப்பட்டவை. அந்த சவங்கள் வைக்கப்பட்டிருந்த இடங்களைப்போய்ப் பார்த்தால், அங்கே சுவர்களில் எல்லாம் பல சித்திரங்கள் எழுதப்பட்டிருக்கின்றன. அவைகளைக் கவனித்துப் பார்த்தால் பூர்வீகத்தில் எகிப்தியர்கள் எப்படியிருந்தார்கள் என்பது நன்றாய் விளங்குகின்றது.

அவ்விடத்திற்குச் சற்று அருகாமையில் வெகு பெரிய நரஸிம்ஹ விக்ரகம் ஒன்று இருக்கிறது. அதன் முகம் மாத்திரம் மனித முகம். ஆனால் உடல் எல்லாம் ஓர் மிருகத்தினுடையதைப்போலவே இருக்கிறது. அதன் தலை தரைமட்டத்திலிருந்து சுமார் 200-அடி உயரமிருக்கும். எவ்வளவு வருஷங்களுக்கு முன் கட்டினார்களோ யார்க்கும் தெரியாது. ஆனால் இந்த கோபுரங்களும், நரஸிம்ஹமும்

தன் பலம் கண்டு, அம்பலம் ஏறவேண்டும்.

பட்டணங்களின் அருகில் இருக்கிறது என்று நினைக்கிறீர்களா? இல்லை இல்லை. இவைகள் எகிப்தில் பாலைவனாந்தரத்தின் ஓரத்தில் இருக்கின்றன. நாலாபக்கங்களிலும் கண்ணுக்கெட்டின வரைக்கும் மணற்காடு பரவியிருக்கிறது. இவைகளைப் பார்க்க வேண்டுமென்றாலும் மின்சார சக்தியினால் போகும் ரயிலில் ஏறித்தான் போய்வரவேண்டும். சிற்சில இடங்களில் மாத்திரம் ஒரு சிறு ஈச்சந்தோப்பும் அதனருகே ஒரு சிறு நீரூற்றும் இருக்கும்; அவ்வளவுதான்.

எகிப்துதேசம் முழுவதும் அப்படித்தானா? என்றால், ஆமாம் அப்படிதான் என்று சொல்லவேண்டும். ஏனென்றால் எகிப்தே ஒரு பெரிய மணற்காடான தேசம் என்று சொல்லவேண்டும். ஆனால் அத்தேசத்தில் ஜனங்கள் எப்படிப் பிழைக்கிறார்கள்? நம் தேசத்துப் பயிருண்டா? பயிருக்கு அவசியமான மழையும், ஆறுகளும், ஏரிகளும் உண்டா? என்று நீங்கள் கேட்பீர்கள். எகிப்தில் மழை வெகு கொஞ்சம். அத்தேசத்தில் ஒரேஒரு முக்கிய நதிதான் உண்டு. அதற்குத்தான் நைல் நதி என்று பெயர். அதிலிருந்து வரும் நீரை இங்கிலீஷ் எஞ்சினியர்கள், அங்கங்கே தடுக்கி, மதகுகளால் நிலங்களுக்குப் பாயும்படியான ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதனால் அந்த ஜலம் எல்லா நிலங்களுக்கும் சரியாகப் பாய்கிறது. அந்த நதியில்லாவிட்டால் எகிப்து தேசமே ஓர் பெரிய வனாந்தரமாய்விடும் என்று அத் தேசத்து ஜனங்கள் சொல்லுகிறார்கள்.

நாங்கள் கோபுரங்களையும், நரஸிம்ஹத்தையும் பார்த்துவிட்டு வருவதற்குள், ஒன்றரைநாள் செலவழிந்துவிட்டது. அதனால் நாங்கள் வெகு சீக்கிரமாகப் புறப்பட்டுக் கப்பலிருக்குமிடம் வந்து சேர்ந்தோம். கப்பலும், துறைமுகத்தை விட்டுப் புறப்படுவதற்குத் தயாராயிருந்தது. ஆகையால் நான் உடனே இந்தக் கடிதத்தை அவசரமாக எழுதி, கெய்ரோவிலுள்ள தபாலாபீசில் போடும்படி ஒரு ஆளிடம் கொடுத்தனுப்புகிறேன்.

மற்ற விஷயங்களைப்பற்றி அவ்வப்பொழுது எழுதுகிறேன். என் க்ஷேமத்தை அனைவருக்கும் தெரியப்படுத்த வேண்டுகிறேன்.

இப்படிக்குத் தங்கள்
பிரியமுள்ள குமாரன் ரங்கன்."

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

[ஸ்ரீமான் ஏ. வரதாசார்யா, பி.ஏ., எல்.டி.]

### ஸ்ரீ வத்ஸன் சரித்திரம்
### (சனியின் கொடுமையும், லக்ஷ்மிதேவியின் மகிமையும்)

முன்னொருகாலத்தில் இமயமலையின் உச்சியில் தேவதைகள் ஓர் சபைகூடி, இவ்வுலகத்திலுள்ள மனிதர்களின் சுகதுக்கங்களைப்பற்றிச் சம்பாஷித்துக்கொண்டிருக்கையில், பூலோக வாழ்க்கை விஷயமாய் சனிபகவானுடைய வலிமை, லக்ஷ்மிதேவியின் மகிமை இவற்றுள் எது உயர்ந்தது என்பதைப்பற்றிச் சர்ச்சை ஏற்பட்டது.

மனிதரின் ஐசுவரியத்திற்கு அதிஷ்டான தேவதையாகிய மஹா லக்ஷ்மியானவள், சனியைக் காட்டிலும் தானே சிறந்தவளென்றும், எல்லோரும் தனம், சுகம் இவற்றையடைய தன்னையே தொழுவதாயும் புகழ்ந்துபேச, சனிக்குக் கோபமுண்டாகி, "மனிதரின் மனோ தர்மம் அறியாமலே, லக்ஷ்மி இவ்விதம் சொல்லுகிறாள். மனிதர்கள் ஐசுவரிய மடைய லக்ஷ்மியை நினைந்து வணங்குகிறார்களெனினும், ஏழ்மை, துக்கம் முதலியவற்றால் வருந்துவது மிகக் கஷ்டமானதால், இவற்றின் முக்கிய தேவனாகிய என்னுடைய பீடை தங்களுக்கு உண்டாகாமலிருக்கப் பிரார்த்திக்கிற பொழுதும், அதிலிருந்து நிவர்த்திசெய்ய முயலுகிறபொழுதும் என்னையே ஸ்மரிக்க நேரிடுகிறது. இதனால் நானே லக்ஷ்மியைக் காட்டிலும் மிக்கவல்லவன் என்று ஏற்படவில்லையா?" என வெகு ஆடம்பரத்துடன் பதிலளித்தான். இவ்விதம் சனிபகவான் வாக்கோஷம் பண்ணினதாலேயே, தான் தோல்வியடைந்ததாய் ஒப்புக்கொள்ள மனம் வராமலே லக்ஷ்மியானவள் தேவர்களை நோக்கி, 'நாங்கள் தம் தம் பெருமையைப் புகழ்ந்து பேசுவதில் பயனென்ன? எங்களுள் யாருடைய சக்தி மேற்பட்டது என்பதை நீங்களே நிதானித்துச் சொல்லவேண்டும்" என, தேவதைகள் ஆலோசித்து, இவ்வித சந்தர்ப்பத்தில் மத்தியஸ்தர்களாக இருந்து தீர்மானிப்பது மிகவும் சிரமமென்று நன்குணர்ந்து, பூலோகத்திலுள்ள ஒரு மனிதனிடம் இவ்வித பாரத்





தைச் சுமத்தக் கருதி, இந்துஸ்தான் என்னும் தேசத்தில் மிகக் கியாதிபெற்ற ஸ்ரீவத்ஸன் என்னும் ஓர் அரசனிடத்தில் போய் தங்கள் வழக்கைத் தீர்த்துக்கொள்ளும்படி சனியையும் லக்ஷ்மியையும் கேட்டுக்கொண்டார்கள். அதற்கிணங்கி, இருவரும் இமயமலையிலிருந்து கீழிறங்கி, ஸ்ரீவத்ஸனின் அரண்மனையை அடைந்து, அவனால் பூஜிக்கப்பட்டு, தங்கள் வரவின் காரணத்தையும் தெரிவித்து, அது விஷயமாய் அவனுடைய அபிப்பிராயத்தைச் சொல்லும்படி கேட்டுக்கொண்டார்கள். அரசன் இதை ஆலோசித்துச் சொல்லத் தனக்கு 24-மணி அவகாசம் கொடுக்கவேண்டுமென்று வேண்டிக்கொண்டான். 'அப்படியே ஆகட்டும். அந்த நேரமானதும் நாங்கள் திரும்பி வருகிறோம். அப்போது உன்னுடைய நிச்சயமான அபிப்பிராயத்தைச் சொல்லக்கடவாய்" என்று சொல்லிப்போனார்கள். ஸ்ரீவத்ஸனும் இவ்விஷயத்தில் சிந்தா என்னும் தன்னுடைய இராணி தகுந்த உபாயம் சொல்லக்கூடிய புத்திசாலியானவள் என்றறிந்து, உடனே அவளை வரவழைத்து, புன்னகை கொண்டு அவளை நோக்கி, "என் பிராணநாயகியே, இத்தேசத்து அரசர்களுள் நான் புத்தியில் மிகச்சிறந்தவன் என்று எல்லாரும் சொல்லுவது உனக்குத் தெரிந்த விஷயமே. இவ்வித சந்தர்ப்பங்கள் நேருங்கால், என் புத்திகோசரத்தால் தத்துவ நிர்ணயம் செய்ய எனக்கு ஒருவாறு சக்தி உண்டெனினும், உன்னுடைய புத்திசாதுரியத்தின் சகாயத்தைக்கொண்டு நான் ஸூக்ஷ்மமான விஷயங்களை நிர்ணயிக்கக்கூடிய சமயங்கள் சில உள. அவ்வித சமயம் இப்போது நேர்ந்திருக்கிறது" என்று சொல்லி, சனி, லக்ஷ்மி இவர்களின் பராக்கிரமத்தைக் குறித்த விவாதத்தையும், அது விஷயமாய், தான் 24-மணிக்குள் பதிலளிக்க வேண்டியதையும் அவளுக்கு விவரித்தான். இது விஷயத்தில் கணவனுடைய அபிப்பிராயமென்னவென்று சிந்தா வினவ, எவ்விதத்திலும் கஷ்டத்தை நிவர்த்தி செய்யக் கருதி, சனிபகவானின் கிருபையைத் தேடுவது நலம் என்று சொல்ல, இராணி, எப்பொதும் ஐசுவரியத்தையும் சுகத்தையும் மேன்மேல் சம்பாதிக்க விரும்பி, லக்ஷ்மி தேவியின் அருளையே தான் அபேக்ஷிப்பதாய்த் தெரிவித்தாள். இதன்மேல் அவர்களுக்குள்ளே பற்பல சர்ச்சை உண்டாகி, வெகுநேரம் வரையில் யாதொரு தீர்மானத்துக்கும் வராமல், கடைசியாய் லக்ஷ்மிக்கும் சனிக்கும் தங்கள்மீது யாதொரு மனஸ்தாபமும் வராமலிருக்கும்படியாய் ஓர்வித உபாயத்தினால் தர்ம சங்கடத்திலிருந்து தங்களை நிவர்த்தித்துக்கொள்வதாய் மனதைத் திடப்படுத்திக்கொண்டார்கள். 24-மணி நேரம் சென்றது; ஒருக்ஷணம் கூட தாமதிக்காமல் சனியும் லக்ஷ்மியும் தர்ப்பாரில் வீற்றிருக்கும் ஸ்ரீவத்ஸன், சிந்தா இவர்கள் முன்னே தோன்றினார்கள். ராஜ சிம்மாஸனத்திற்கு வலது புறத்தில் தங்கத்தால் செய்த ஆசனமொன்றும், இடது பக்கத்தில் வெள்ளியில் செய்யப்பட்ட ஆசனமொன்றும் காலியாயிருந்தன. ஸ்ரீவத்ஸன் அவர்களைக் கண்டதும் உடனே எழுந்திருந்து எதிர்கொண்டழைத்து, காலியாயுள்ள ஆசனங்களில் வீற்றிருக்கும்படி அவர்களை வேண்டிக்கொள்ள, ஸ்ரீலக்ஷ்மியானவள் உடனே தங்காசனத்தில் சம்பிரமமாய் அமரவே, சனி மற்றொன்றில் உட்காரும்படி நேர்ந்தது. சனிபகவான் ஸ்ரீவத்ஸனை நோக்கி, "உன் தீர்மானம் என்ன? இவ்வுலகத்தில் எவர் வலிமை சிறந்தது, எனதா, லக்ஷ்மியினுடையதா?" என்றான். அரசனும் புன்னகை கொண்டு, மிக வணக்கத்துடன் அவர்கள் வீற்றிருக்கும் ஆசனங்களைச் சுட்டிக்காட்டி "தேவனே! நீங்களிருவருமே உங்கள் விவாதத்தை ஒருவாறு தீர்த்துக்கொண்டுவிட்டீர்களே, நான் வேறு சொல்லவேண்டுமோ" என, அதன் கருத்தையறிந்து, மகாலக்ஷ்மியானவள் சந்தோஷமடங்காமல், பரிகாசமாய்ச் சிரித்து அரசனை நோக்கி. "ஸ்ரீவத்ஸ, இவ்வித தீர்மானத்திற்குச்சனி, தன்னால் இயன்றமட்டும் உன்னைப்பலவித ஆபத்துக்குள்ளாக்க முயலுவான், ஆனால் ஒன்றுக்கும் அஞ்சவேண்டாம். எவ்வித சங்கடத்திலிருந்தும் நிவர்த்தித்து உன்னை மேன்மையான பதவிக்கு நான் கொண்டுவரக் கூடும் என்பதை உறுதியாய் நம்பியிரு" என்று அருள்புரியுவே, சனி தீராக் கோபங்கொண்டு, 'நல்லது இருக்கட்டும், உன்னை எளிதில் விட்டேனா? உன் முன்னோரும் விஷ்ணுவின் அவதாரமுமாகிய ஸ்ரீராமசந்திரமூர்த்தியே என்னால் பட்டகஷ்டத்தை யறியாய்போலும்! என் வல்லமையைப் பார்' என்று பயமுறுத்தி மறை

யவே, சிந்தா என்னும் அரசி, நடுநடுங்கி ஸ்ரீ லக்ஷ்மியின் பாதத்தில் விழுந்து, அவளைத்தவிர தனக்கு வேறு கதியில்லையென்றும், எவ்வித ஆபத்திலிருந்தும் தங்களைக் காப்பாற்றவேண்டுமென்று யாசிக்கவே, லக்ஷ்மி தேவியும் மிகுந்த கிருபையுடன் இராணியை நோக்கி, 'நீ யாதொன்றுக்கும் பயப்பட வேண்டாம். சகல ஐசுவரியமடைந்து அநுபவித்து வாழ்நாள் முழுவதும் இராணி என்ற பட்டத்துடன், கணவனுடன் சுகித்திருப்பாய்" என்று ஆசீர்வதித்து மறைந்தாள். உடனே அண்டங்களெல்லாம் நடுங்கும்படியான ஓர் புயல் காற்று அடிக்க ஆரம்பித்து, பட்டணத்தைச் சின்னபின்னம் செய்தது. மின்னல்கள் பளீர் பளீர் என்று பார்ப்போர் கண்ணைப் பறிக்கும்படி ஜ்வலித்தன. பேரிடிகள், யாவரும் செவிடுபடும்படி கர்ஜித்து முழங்கின. எங்குபார்த்தாலும் ஆகாயத்திலிருந்து எரிகொள்ளிகளும், அக்கினிப் பந்தங்களும் விழத்தொடங்கின. பிரளய காலமே வந்துவிட்டாற்போல் தோன்றியது. உடனே மகத்தான ஓர் பூகம்பம் உண்டாகி, வீடுகள் அரண்மனை எல்லாம் இடிந்துவிழுந்து சமதரையாய்விட்டன. அப்போது ஆகாயத்தில் ஓர் உருவம் தோன்றி, 'நதி ஜலமெல்லாம் நஞ்சிடப்பட்டுவிட்டது. அதைக் குடித்து, அரசனுடைய சேனையெல்லாம் மாண்டுவிட்டது,' என்று சொல்லிக்கொண்டு வெகு விரைவாய்ச் செல்வதையும், ஸ்ரீவத்ஸன் கண்ணுற்று, 'ஐயோ? இதெல்லாம் சனியின் கொடுமையே! ஒரு நொடியில் என்னை ஆண்டியா யடித்துவிட்டானே. இனி என்ன செய்வது' என்று திகைத்தான். உடனே தன் மனைவியை நோக்கி, தான் எப்படியாவது கஷ்டத்தை யனுபவித்து நல்ல ஸ்திதியடைய முயல்வதாயும், அவளைத் தன் தகப்பன் வீடுசென்று க்ஷேமமா யிருக்கும்படிக்கும் உபதேசம் செய்தான். சிந்தா என்னும் ஸ்திரீ ரத்தினமும், கற்புடை மாதரின் தர்மத்தைக் கவனியாது, தனது தேக சுகத்தை நாடும் இக்காலத்திய சாமான்ய ஸ்திரீஜாதி போன்றவளா? உலகத்திலுள்ள எல்லாத தேசங்களுள், இப்பாரதபூமியிலுதித்த சாதாரண ஸ்திரீகளுக்கே கணவனைக் கடவுளாய் வணங்குவது இயல்பு என்றால், மிக உயர்ந்தகுலத்தில் பிறந்து, மகாகீர்த்திபெற்ற அரசகுலத்தில் புகுந்து, பெண்கள் குலத்திற்கே ஓர் திலகம்போல் விளங்கும் சிந்தா எனும் சிறந்த இராணி இச்சமயம் எவ்விதம் நடந்துகொள்வாளெனக் கேட்கவும் வேண்டுமோ? அவள் உடனே அரசனை நோக்கி, 'பிராணநாயகா! தாங்கள் என்னைப்பார்த்து இவ்விதம் சொல்வதும் உசிதமாகுமா? இவ்விஷயத்தில் தங்களுக்குத் தெரியாத தர்மஸூக்ஷமம் உண்டா? நான் எடுத்துச் சொல்லவேண்டுமோ? வஸ்துவைவிட்டு அதன் நிழல் அகலுமா? சர்க்கரைக்குத் தித்திப்பிருப்பது இயல்பல்லவா? கணவனிருக்கும் காடும், மனைவிக்கு அரண்மனையே; அவனில்லாத வீடும் கானகமே. எக்காலத்திலும் அவனுடனிருந்து, அவன் சுகத்தை நாடி உபசரிப்பதல்லவோ பத்தினியின் கடமை. சந்தோஷம் வந்தால் தானும் ஆனந்தித்து அனுபவித்தும், விரதாதி நியம காலத்தில், கூடவிருந்து அனுஷ்டித்தும், துக்க காலங்களில் கணவன் மனம் சோர்ந்து இருக்கும் பொழுது அவனைத் தேற்றியும், சிநேகிதன் போலும், மந்திரிபோலும், ஊழியன் போலும், அந்தந்த காலானுகுணமாய் நடந்து, பதிவிரதை என்னும் பெயரை நற்பொருளுள்ளதாய்ச் செய்பவளே பத்தினியாவாள். எனக்குமுன், சீதை முதலிய ஸ்திரீ ரத்தினங்கள் அனுஷ்டித்துக் காட்டியிருக்கும் தர்மங்களை நான் மறந்திலேன். கணவனிடம் செலுத்தவேண்டிய பக்தி விஷயத்தில் நான் தாழ்ந்தவளல்ல. தாங்கள் எங்கு சென்றாலும் நானும் கூடஇருந்து பணிசெய்ய அனுமதி அளிக்கவேண்டும்' என்று பலவிதமாய் வேண்டிக்கொண்டாள். அவளுடைய அபிப்பிராயத்திற் கிணங்கி, அரசனும் அவள் தன்னுடன் வர உத்தரவளித்தான். இராணியும் பிரயாணத்திற்குச் சித்தமாகி, ஆபத்துக் காலத்தில் சற்றாவது உதவுமென்று சில ஆபரணங்களையும் தங்கத்துண்டுகளையும் ஓர் தலையணையில் அடைத்துத்தைத்து கையுடன் எடுத்துக்கொண்டாள். சனியின் கொடுமை தங்களைத் தாக்கும் வரையில் அவ்வித ஆபரணதிகளால் யாதொரு பயனுமுண்டாகாதென்று அரசன் சொல்லியும், பெண்புத்தி சபலத்தால் அவளுக்கு அதை எடுத்துப்போக வேண்டுமென்ற விருப்பமே அதிகரித்தது. சமீபத்திலிருந்த அரண்யத்தை நோக்கி இருவரும் சென்றார்கள். மார்க்கத்தில் ஓர்பெரிய நதி காணப்பட்டது. அதன் பிரவாகம் கரை





புரண்டு ஓடிக்கொண்டிருந்தது. அதைக்கடந்து போகும்விதம் தெரியாமல், அவர்கள் திகைத்து நின்று நாலாபக்கமும் நோக்கும்போது, அதன் கரையில் தனிமையாயிருக்கும் ஓர் சிறு ஓடத்தையும், தொண்டு கிழமான ஓர் ஓடக்காரனையும் கண்ணுற்றார்கள். ஓடக்காரனைக் கூப்பிட்டழைத்து தங்களைப் படகில் ஏற்றி அக்கரை சேர்க்கமுடியுமா வென்று அரசன் வினவ, தோணிக்காரன் மிக வணக்கத்துடன், "ஐயா, என் படகோ மிகச் சிறிதும், துர்ப்பலமுமானது. ஒவ்வொருதடவையிலும், ஒருவரைத்தான் ஏற்றிக்கொண்டு போகக்கூடும். தங்களையும், மனைவியையும், தலையணையையும் அக்கரை சேர்க்க மூன்றுதரம் போய் வரவேணும். அதற்குத் தகுந்த கூலி கொடுப்பதானால், அப்படியே செய்யக் காத்திருக்கிறேன்" என, அரசனும் ராணியும் யாது செய்வது என்று வெகு நேரம் ஆலோசித்து, அவனது துர்ப்பலமான தோணியில் தங்களுள் யாராவதுமுதலில் ஏறிப்போகத் துணிவதைக்காட்டிலும், தலையணையை எடுத்துப்போகச் சொல்லி, அது பத்திரமாய்ப் போய்ச்சேர்ந்தால் பிறகு தாங்கள் போகலாமென்று தீர்மானித்து, தலையணையிலிருப்பது அவனுக்குத் தெரியாதென்று நினைத்து, அதை ஓடக்காரனிடம் கொடுத்தார்கள். ஓடக்காரனும் அதை எடுத்துக்கொண்டு ஓடத்தைக் கொஞ்சதூரம் செலுத்திக்கொண்டு போய், கண்மறைந்து போய்விட்டான். காலத்தின் கோலமல்லவா புத்திசாலியான அவர்களுக்கும் புத்திமயங்கி ஆபரணங்கள் அடங்கிய தலையணையை இவ்விதம் அவனிடம் கொடுக்க நேர்ந்தது! அவர்களாலான மட்டும் காத்திருந்தும், எல்லாத் திசைகளிலும் கண்ணுற்று நோக்கியும், படகும் ஓடக்காரனும் காணோம். அவர்கள் ஆபரணதிகளையிழந்து பரிதபித்துக்கொண்டிருக்கையில், "என் கோபத்துக்குள்ளான பிறகு, அற்பமாயினும் எவ்வித சுகத்தையும் அனுபவிக்க நினைப்பது எவ்வளவு முட்டாள்தனம் என்று இப்பொழுதாவது உங்களுக்குத் தெரிந்ததா? பெரும் மகிமையுள்ளவளென்று நீங்கள் நம்பியிருந்த லக்ஷ்மி எங்கே போய்விட்டாள்? ஏன் இச்சமயம் உங்களுக்கு உதவிபுரிந்து காப்பாற்றக்கூடாது" என்று ஓர் ஆகாய வாக்குப் பிறந்தது. இருவரும் இதுவும் சனியின் செயலே என்று தெரிந்து ஏங்கினார்கள். பிறகு, ஆகாரமில்லாமல் வருந்தி ஓர் குட்டையிலுள்ள ஒரு சிறு மீனைப்பிடித்து அதைச் சமையல் செய்து, இராணி அதை எடுத்து அரசனுக்கு உணவுக்காகக் கொடுக்கப் போகுந் தருவாயில், திடீரென்று மாம்ஸத்துண்டானது சாம்பல் அழுக்கு முதலியவற்றால் மூடப்பட்டு, சாப்பாட்டுக்கு உதவாவண்ணம் விகாரமடைந்தது. அதுகண்டு, சிந்தா மிகவும் விசனமுற்று, நதிக்கரைபோய் ஜலத்தில் சுத்தமாய்க் கழுவ, பிரயத்தனம் செய்ததும், அத்துண்டு மாமிசத்திற்கு உயிர் வந்து அவள் கையிலிருந்து நழுவி, ஜலத்தில் நீந்திப்போய்விட்டது. இதுகண்ட இராணிக்கு தீராத் துயரமுண்டாகி, "ஐயோ தெய்வமே! இவ்வித சோதனையும் வேண்டுமோ? ஒரு சமயம் நானே அதைத் தின்றுவிட்டதாய் என் பிரியமுள்ள கணவனும் என்னைச் சந்தேகிக்க இடமுண்டாய்விட்டதே! இவ்வித கஷ்டங்களுக்கு எப்போது முடிவு ஏற்படுமோ தெரியவில்லையே; யாதுசெய்வேன்!" என்று நானாவிதமாய்ப் பரிதபித்தாள். (இன்னும் வரும்.)

பிரம்மத்தையொரு நிமிஷத்தில் காட்டவேண்டுமென்று முற்காலத்திய அரசன் தன்னிடம்வந்த ஸாதுக்களையெல்லாம் கேட்டு மறுமொழிசொல்லத் தெரியாமல் விழிக்கிற அத்தகையோர்களையெல்லாம் சிரச்சேதம் செய்துவந்தான். இவ்வாறு அக்கொடிய அரசனால் அநேக ஸாதுக்கள் மாண்டு போயினர். ஒரு நிமிஷத்தில் பிரம்மத்தைக் காட்டுவதென்றால் யாரால் முடியும்? இப்படியிருக்கையில், சுகாசாரியர் அவ்வரசனது அறிவீனத்தைப் போக்கி, ஸாதுக்களை ரக்ஷிக்கவெண்ணி அவனிடம் வந்தார். அரசன் வேட்டைக்குப் புறப்படுகையில், சுகாசாரியர் அவன் எதிரில் காஷாய வஸ்திரத்துடன் வந்ததைநோக்கி மன்னன் கத்தியையுருவி 'அடே சன்னியாசி! எங்கே பிரம்மம்? அதைக் காட்டுகிறையா? அல்லது உன்னை வெட்டட்டுமா?' வென்றான். உடனே சுகர் அவ்வரசனை நோக்கி, 'ஹே அரசனே, பிரவிருத்தியை விட்டு விடு, உடனே பிரம்மத்தைக் காணுவாய்' என்றார். உடனே கத்தியைத் தொங்கப்போட்டு 'பிரம்மம் எங்கே' என்றான். சுகர், 'அரசனே, குதிரையின்மேல் ஏறிக்கொண்டிருக்கிறாய், அதுவே ஒரு பிரவிருத்தி, கையை அசைக்கிறாய் வாயைத்திறக்கிறாய் அது ஒருபிரவிருத்தி, இந்தப் பிரவிருத்திகளை யெல்லாம் விட்டுவிடு, நீ பிரம்மத்தைக் காணுவாய்' என்றார். அரசன் அசைவற்று சிறிது நேரம் நிற்கையில் சுகஸ்வாமி அவனுக்கு ஒவ்வொரு தத்வமாய் உபதேசித்து ஆத்மஞானத்தையுண்டாக்கினார்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**நூதன தாவர சிருஷ்டிகள்**

செடி கொடி விஷயங்களில் வெகு காலம் சிரத்தையுடன் கவனித்துவந்த லூதர் பர்பாங்க் என்னும் அமெரிக்க தாவரசாஸ்திரி, பல அதிசயிக்கத்தக்க முறைகளைக் கண்டுபிடித்திருக்கிறார். அவர் கண்டுபிடித்தவைகளால், மனிதர்களுக்குப் பிற்காலத்தில், எண்ணிறந்த நன்மைகள் உண்டாகுமெனத் தோன்றுகிறது. உதாரணமாக, மழை அதிகமான இடங்களில் பயிராகும் சப்பாத்திக்கள்ளி மாடுகளுக்கு நல்ல தீனியாகும் என்று சாஸ்திர நிபுணர்கள் கூறுகின்றனர். ஆனால் அவற்றிலுள்ள முட்கள்தாம், அச்சப்பாத்திக் கள்ளியை மாடுகளுக்கு ஏற்ற உணவாக ஏற்படுத்துவதைத் தடுக்கின்றது. இதை யறிந்த பர்பாங்கி, பல ஆராய்ச்சிகளும் புதுமுறைகளும் கண்டுபிடித்து அவைகளினால், முட்களில்லா சப்பாத்திக்கள்ளியைப் பயிராக்கியிருக்கிறார். இதனால், மழை நன்றாய்ப் பெய்யாத காலத்தில், மாடுகளுக்குப் புல் முதலியவை இல்லையென்ற விசாரமில்லை. ஏனெனில் முள்ளில்லாத சப்பாத்திக் கள்ளியை அறுத்து, அதையே கால் நடைகளுக்குத் தீனியாக உபயோகிக்கலாம். மேலும், ஒரு மரத்தின்மீது பல வேறு செடிகளை ஒட்ட வைத்துப் பயிராக்குவதால் பல நூதனமான செடி வகைகளையும், பழங்களையும் உண்டாக்கியிருக்கிறார். அவருடைய தோட்டத்தில் இருக்கும் சில மரங்களில் ஒவ்வொன்றில் சுமார் நூறு முதல் ஆயிரம் வரையில் வெவ்வேறு விதமான பழங்கள் காய்க்குமாறு செய்திருக்கிறார். இவ்வளவும் நம்பத்தக்கதல்ல போலத் தோன்றும். உண்மையே யாதலால், நம் தோட்டத்திலுள்ள ஒரு மரத்திலேயே ஒரு கிளையில், மாம்பழங்களும், மற்றொரு கிளையில் மாதுளம் பழங்களும், வேறொரு கிளையில், கிச்சிலிப் பழங்களும், நான்காவது கிளையில், எலுமிச்சம் பழங்களும் ஆகிய பல விதப் பழங்களைப் பெறலாம். இது ஆச்சரியமன்றோ?

* * *

**மூன்று இன்ஸ்பெக்டர்களின் நியமனம்.**

சமீபத்தில் வெளியான ஒரு கவர்ன்மெண்ட் உத்தரவின்படி, பள்ளிக்கூடங்களில் மாணவர்களின் வைத்திய பரிசோதனை சம்பந்தமாய், பயிற்சி பெற்ற மூன்று அஸிஸ்டெண்ட் ஸர்ஜன்களை 2 வருஷத்துக்கு கவர்ன்மெண்டார் சாங்கிஷன் செய்திருக்கிறார்கள். அவர்களுக்கு முறையே சென்னையிலும் ராஜமஹேந்திர புரத்திலும் கோயமுத்தூரிலும் தலைமை ஸ்தானங்கள் அமைத்துக் கொடுக்கப்படும். அவர்களுடைய சம்பளத்தைத் தவிர, 100 ரூபாய் விசேஷப் படியும் அவர்களுக்குக்கொடுக்கப்படும். பிரத்தியேகமாய் வைத்தியம் பார்க்க அவர்களுக்கு உரிமை கிடையாது. சர்க்கார் நடத்தரப்பள்ளிக் கூடங்களில் வாசிக்கும் ஒவ்வொரு மாணவனிடமிருந்தும் இனி அரைரூபாய் தலைக்கு வாங்கப்படும். மேற்படி ஸர்ஜன்களின் முக்கியமான வேலை சர்க்கார் பள்ளிக்கூடங்களில் மட்டுமாயினும், மற்றப் பள்ளிக்கூடங்களின் வைத்திய பரிசோதனையை இன்ஸ்பெக்ஷன் செய்யவும் வேண்டும்.

* * *

**கானாட்டுக் கோமகனின் இந்திய விஜயம்**

அடுத்த ஜனவரிமாதத்தில் கானாட்டுக் கோமகன் சென்னை, கல்கத்தா, டில்லி, பம்பாய் ஆகிய இவ்விடங்களுக்கு விஜயஞ்செய்வார். மத்திய மாகாணத்திற்கும் ஆக்ரா விற்கும் தனியாகச் செல்வார். இதற்கு முன் நெருங்கிய சம்பந்தம் வைத்திருந்த ராவல்பிண்டிக்கும் விஜயஞ்செய்வார். அரசர் பெருமானின் பிரதிநிதியாக இவர் மாகாணச் சட்டசபைகள், இந்தியா சட்டசபை, ராஜாங்க சபை, மன்னர் சபை ஆகிய இவைகளைத்திறந்துவைத்து அரசர் பெருமான் அனுப்பியுள்ள செய்தியை வாசிப்பார். இந்தியாவில் மொத்தத்தில் அவர் ஏழு வாரம் தங்கியிருப்பார். ஜனவரிமாதம் இரண்டாவது வாரத்தில் சென்னை வந்து சேருவார். ஜனவரி மாத முடிவிலும் பிப்ரவரிமாத ஆரம்பத்திலும் கல்கத்தாவிலிருப்பார். பிப்ரவரிமாத இரண்டாவது வாரத்தில் டில்லியில் சபைகளின் திறப்புவிழா நடைபெறும். பிப்ரவரிமாத முடிவில் பம்பாயைவிட்டுப் புறப்படுவாரென்றும் தெரிகின்றது.

தன்னைப் பெற்றவன் கொடும்பாவி, பெண்ணைப் பெற்றவள் மகராசி.



கனம் ஜஸ்டிஸ் ஸ்ரீமான் வே. ராமேசம் பந்துலு

The Hon'ble Mr. Justice V. RAMESAM PANTULU


# விவேக போதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.


12 APR 1921 MADRAS

தொகுதி XIII} ரௌ: புரட்டாசி-ஐப்பசி : : 1920-ம்ஷு அக்டோபர்-நவம்பர் {பகுதி 4-5

## மகானுபாவர் ஸ்ரீமான் லோகமான்ய திலகர் பிரிவாற்றாது பாடிய சரமகவிகள்.

[ஸ்ரீமான் இ. சே. எஸ். வரதராஜன்.]

அறுசீர்க்கழிநெடிலடியாசிரியவிருத்தம்

பொலம் பூத்த திரையாழித்துகிலுடுத்த
புவிக்கணியாய்ப் பொலிந்து சீர்சால்
நிலம் பூத்த பாரதமகள் வலக்கரமென்
றொளிர்பம்பாய் தேத்து நாப்பண்
வலம் பூத்த மாராஷ்ட்ர மியற்று
தவப் பயனாகி மறையோர் தூய
குலம்பூத்துத் திலகரெனப் பெயர்பூண்டு
புகழ்நிலவக்குலவி நின்றோய் !

திருமகட்கும் கலைமகட்கு மெஞ்ஞான்று
முறைவிடமாய்த் திகழ்ந்து ஞாலத்
தொருமகளாய்க்கவினும் பாரதமகள்
தனதுரிமையுயர் வேயாதி
பெருமணியைப் பூண்டொளிரப்பெரு
முயற்சி செய்தன்பிற் பிள்ளையேய்க்கு
மருமகனை யம்மகட்குத்திலகமென
வகுத்துரைத்த வாய்மைநன்றே!

உண்மையினும் கல்வியினும் பத்தியினு
முயர்வேதப் பயிற்சி தீராத்
தண்மையினுந் தன்னாட்டினலமறவாத்
தன்மை யினுந் தகுதிசான்ற
திண்மையினுந் தண்ணளியினரசாங்க
முறைதெரிந்த செயலின்மாறா
வண்மையினு மற்றெவருமொவ்வாத
வளமுடையாய் மாண்பின் மிக்காய் !

பூதவுடற் கருதாது புகழுடம்பே
மேலதெனப் பொருவிறந்த
மேதகையும் நற்பொறையு மவனியெலாங்
கண்டுவப்ப மீட்டு மீட்டு
மாதரவிற்றேராதார் சிறைசெய்யவுறைந்
தொறுத்தார் மருவு மின்பம்
பேர்தளவே பொறுத்தார்க்குப் பொன்றளவும்
புகழாதல் புலனாச் செய்தாய்!

அண்ணல் நீ பாரதமகளணியோங்கப்
பணிபுரியு மார்வந் தன்னைக்
கண்ணாரக் கண்டவரும் காதாரக்
கேட்டவருங் கவினார் நீயிம்
மண்ணுடல் விட்டொழிந்து விண்ணாடி
விட்டதிறன் வகுக்கக் கேட்டுப்
புண்ணான நெஞ்சின ராய்த் தமததிர்ஷ்டக்
குறைவினையே புலந்து நொந்தார் !

தூய்மையினு மேதையினுந் தொலையாத
பொறுமையினுந் துகளிலாத
வாய்மையினுமேம்பட்டாய் திலகவென
வுளத்தேற்று வழங்கு நாறென்
றேய்மகத் தோனமைச்சாக்க வெண்ணினனோ
விடைப்பாகன் மறைவலாயென்
றுய்ந்தவன்பால் வீற்றிருக்க வுன்னினனோ
வவனிவிடுத்தகன்றதென்னே !

நட்டாரும் பகைத்தாரு மிதமிதக்
கட்சிதனை நாடினரு
மட்டாரும் நறுந்தெரியற் பாரதமக
ளெழிற்சுதரா மற்றுளாரும்
முட்டாத பேரன் பிணிணைப் புகழ
வாழ்ந்து புவிமுயக்கம் நீத்தாய்
கட்டாண்மை யழகவனைப்பெற்றவரே
பெற்றவராற் கலைவலோயே !

இசையாரு மிந்தியர்கள் பழஞ்சீர்மை
தேசுபுலனிவைகள் யாவும்
நசையாரு முளத்தோடும் காட்டினை !
கீதையென நவிலுநூலின்
மிசையார்வ முற்றெழுந்தன்னதன்
பொருளினுட்பமதை விரித்தோரெட்டுத்
திசையாருந் திகைத்துவப்பத் தினகரனென்
றொளிசெய்தாய் திறத்தின் மிக்காய் !

(இதன் தொடர்ச்சி 84-ம் பக்கம் பார்க்க.)



தாசரி தப்பு தண்டவாளத்துக்குச் சரி.

# விவேக போதினி

தொ. 13] ரௌத்திரி: புரட்-ஐப்பசி [ப. 4-5

## யுதிஷ்டிரர்

## YUDHISHTIRA

பின்பு கர்ணன் சல்லியன் துரியோதனன் முதலிய கௌரவத் தலைவர்கள், பாண்டவர்கள் பிரதிக்ஞை செய்தபடியே கொல்லப்பட்டார்கள். தருமபுத்திரர் ராஜ்யாபிஷேகம் செய்யப்பெற்று, வெகுகாலம் வரையில் தருமமாய்க் குடிகளைக் காப்பாற்றி உலகெங்கும் கீர்த்தி பெற்றார். கிருஷ்ண பரமாத்மாவும், யாதவகுலம் நாசமடைந்தவுடன், தன்னடிச்சோதிக்கெழுந்தருள, பாண்டவர் இனி இவ்வுலகிலிருக்கக் கூடாதென்று நிச்சயித்து, குடிகளிடத்தில் விடைபெற்றுக்கொண்டு, அபிமன்யு புத்திரனான பரீக்ஷித்திற்கு முடிசூட்டி, கௌரவ வம்சத்தில் கொல்லப்படாமல் மிகுந்திருந்த யுயுத்ஸுவை அவனைப் பாதுகாக்கும்படி நியமித்து மான்தோல் மரவுரியைத் தரித்து, ராஜ்யத்திலிருந்து புறப்பட்டு வடக்கே சென்றார்கள். யோகத்தால், இந்திரியங்களையும் மனதையும் அடக்கிக்கொண்டு, இமயமலையைத் தாண்டிப் பெரிய பாலைவனத்தைக் கடந்து, மேருமலைக் கருகில் வந்தார்கள். யுதிஷ்டிரர், பீமன், அருச்சுனன், நகுலன், சகதேவனென்ற வரிசையாய் நடந்து போகையில் ஆரம்பம் முதல் ஒரு நாய் அவர்களைப் பின்தொடர்ந்து வந்தது.

திடீரென்று பாஞ்சாலி யோக நிலையிலிருந்து நழுவிப் பூமியில் விழுந்தாள். அதைக் கண்ட பீமன் "அண்ணா இந்தத் திரௌபதி ஒரு பாபத்தையும் செய்யவில்லையே! இப்படித் திடீரென்று பூமியில் விழுந்து இறப்பதற்குக் காரணமென்ன" என்று கேட்டான். யுதிஷ்டிரர் "இவள் நம் ஐவரையும் மணம் புரிந்து பேத புத்தியில்லாமல் இருக்கவேண்டியவள். எப்பொழுதும், அருச்சுனனிடத்தில் அதிகப் பிரியமுள்ளவளாயிருந்தாள். அதன் பலனை இப்பொழுது அனுபவிக்கிறாள்" என்றார்.

சற்று நேரத்திற்குப் பிறகு, சகதேவன் திரௌபதியைப்போல் பூமியில் விழுந்தான். அதைக்கண்ட பீமன் "அண்ணா! ஞானிகளுக்குள் சிறந்தவனான இந்தச் சகதேவன் இப்படித் திடீரென்றுவிழக் காரணமென்ன" என, யுதிஷ்டிரர் "இவன் தனக்குச் சமமான புத்திமான் ஒருவருமில்லையென்று கருவங்கொண்டதால், இக்கதியை அடைந்தான்" என்றார்.

இப்படிச் சில தூரம் போனவுடன் நகுலன் யோகநிலையினின்று தவறிப் பூமியில் விழுந்தான். அதைக்கண்டு பீமன் "நகுலனுக்கும் இக்கதி வாய்த்ததேன்" என்று கேட்க, யுதிஷ்டிரர் "குழந்தாய் இவன் ரூபலாவண்ணியத்தில் ஒருவரும் தனக்கெதிரில்லையென்று இறுமாப்படைந்ததால், நடுவில் விழுந்தான்" என்றார்.

இப்படிச் சில தூரம் சென்ற பிறகு ஒப்பற்ற வீரனான அருச்சுனனே திடீரென்று கீழே விழுந்தான். அதைக்கண்டு பீமன் "ஐயோ! இருகையாலும் ஓயாமல் சரமாறி பொழியக்கூடிய பார்த்தனுக்கும் இக்கதிவாய்த்ததே" என்று புலம்ப, தருமபுத்திரர் "இதில் ஆச்சரியமென்ன? இவன் தனக்கு நிகராக வீரன் ஒருவருமில்லையென்று மதித்து இறுமாந்து மற்ற வில்லாளிகளை அவமதித்துவந்தான். இது போதாதோ" என்றார்.

இன்னும் சில தூரம் சென்ற பிறகு, பீமசேனன் திடீரென்று கீழே விழுந்து, "அண்ணா! மற்றவருக்கு நேர்ந்த கதி எனக்கும் கிடைத்துவிட்டதே! நானென்ன பாபம் செய்தேன். திரும்பிப்பாருமே" யென்று பரிதாபமாய்க் கூற, யுதிஷ்டிரர், திரும்பிப் பார்க்காமல் "பீமா! நீ மிதமில்லாமல் சாப்பிடுகிறவன். அப்பொழுது பிறருடைய விருப்பு வெறுப்பங்களைக் கவனித்தாயில்லை. மேலும், தேகபலத்தில் உன்னைப்போன்றபலவான்ஒருவனுமில்லையென்று கருவம் கொண்டிருந்ததால் இக்கஷ்டம் நேர்ந்தது நியாயமே" என்று தயங்காமல் சென்றுகொண்டேயிருந்தார். அந்த நாய் மாத்திரம் அவரைப் பின்தொடர்ந்து கொண்டிருந்தது.

தாது அறியாதான் பேதை வைத்தியன்.



பிறகு இந்திரன் தேவகணங்களால் சூழப்பட்டு, திவ்யவிமானத்தில் அவரிடத்திற்கு வந்து, "பாண்டுபுத்திரா! பூமியில் இவ்வளவு காலம் எல்லையற்ற கீர்த்தியுடன் விளங்கி, இப்பொழுது உன் நற்கருமங்களின் பயனை அனுபவிக்கப்போகிறாய். உன் தம்பிமாரும் திரௌபதியும் உனக்கு முன்பே தேவலோகத்திற்குச் சென்று சுகமாய் வசிக்கிறார்கள். இதோ இந்த விமானத்தில் ஏறக்கடவாய்" என்றான்.

யுதிஷ்டிரர் "தேவராஜா! அப்படியே செய்கிறேன். ஆனால், இந்த நாய் என்னை ஆரம்பம் முதல் விசுவாசத்துடன் பின்தொடர்ந்து வருகிறது. என் தம்பிகளும் திரௌபதியும் என்னை நடுவில் விட்டு விழுந்தார்கள். இந்த நாயோ என்னை விட்டுச் சற்றும் அகலாமல் வந்துகொண்டேயிருக்கிறது. ஆகையால், என்னுடன் இதுவும் சுவர்க்கத்திற்கு வரும்படி அனுமதி கொடுக்கவேண்டும்" என்றார்.

இந்திரன் கைகொட்டிச் சிரித்து, "தருமபுத்திரா! எல்லாமறிந்த நீயும் இப்படிச் சொல்லலாமா? நாய் மிகவும் அசுத்தமான தாழ்ந்த ஜந்து. அது நம்மைத் தொட்டாலும் வைதிகக் கிரியைகளைச் செய்யும்பொழுது பார்த்தாலும் தீட்டுண்டு. சுவர்க்கத்தில் நாய்களுக்கு இடமெங்கே? நாயைக்கொண்டு வருகிறவனுடைய புண்ணிய கரும பலனும் அழியும். உலக சம்பந்தத்தை முற்றிலும் துறந்த உனக்கு இந்த நாயிடத்தில் இவ்வளவு பற்று இருப்பது எவ்விதத்திலும் தகுதியல்ல. இதைவிட்டுச் சுவர்கத்திற்குவா" என்றான்.

யுதிஷ்டிரர், "நான் செய்திருக்கும் புண்ணியத்தின் பலனை அனுபவிக்க சுவர்க்கத்திற்கு நான் வரும்பொழுது என்னை நம்பினவனைக் கைவிட்ட மகாபாபத்தை மூட்டையாகக் கட்டிக்கொண்டு வருவேனோ? கொலை, களவு, காமம், கள்ளுண்டல் முதலிய மகாபாதகங்களுக்குள் இதற்கிணை வேறொன்றுமில்லையெனப் பெரியோர்கள் கூறுகிறார்கள். இதைப்பற்றி இவ்வளவு வீண் வாதமேன்? இந்த விசுவாசமுள்ள நாயை நான் கைவிடமாட்டேன். இதற்குக் கிடைக்காத சுவர்க்கம் எனக்கும் வேண்டாம். இந்த நாயுடன் தேவலோகத்திற்கு வருவேன். அதற்குச் சம்மதிக்காவிட்டால் உன் விமானமும் இந்திரலோகமும் உன்னிடத்திலேயே இருக்கட்டும். நான் பூலோகத்திற்குத் திரும்பிப் போகிறேன்" என்றார்.

உடனே அந்தநாய் மறைந்தது. அது நின்றவிடத்தில் ஒளிக்குன்றாய் விளங்கும் ஓர் மகா புருஷன் தோன்றி, யுதிஷ்டிரரைக் குளிரப்பார்த்து, "குழந்தாய்! நானே உன் உறுதியைப் பரீட்சிக்க விரும்பி, இப்படி நாய் உருவங்கொண்டு உன்னுடன் வந்தேன். உன் தரும சிந்தையும், அண்டினவர்களைக் கைவிடேனென்ற உறுதியும், ஜீவகாருண்ணியமும் என் மனதைக் கவர்ந்தன. முன்பு நீங்கள் வனவாசஞ் செய்யும்பொழுது யக்ஷ ரூபத்தை எடுத்து உன்னைப் பரிட்சித்தேன். அப்பொழுதும் நீ உன்னுடன் பிறந்த பீமார்ச்சுனர்கள் பிழைத்து எழுந்திருக்க வேண்டுமென்று பிரார்த்திக்காமல், சக்களத்திபிள்ளையான நகுலனையே வேண்டினாய். அப்படியே இப்பொழுதும் உன் தம்பிமாருக்கு மேலாய் உன்னைப் பின்தொடர்ந்துவந்த அல்ப ஜந்துவான நாய்க்காகச் சுவர்க்கத்தைத் துறந்தாய். உத்தமலோகங்களில் நீ தடையில்லாமல் வசிக்கக்கடவாய்" என்று ஆசீர்வதித்தார்.

பிறகு நாரதர் "பாண்டுபுத்திரா! உன்னைப்போல் தர்மானுஷ்டானத்தால் உத்தமலோகங்களை அடைந்தவர்யாருமில்லை. நீ மனுஷ்யதேகத்துடனே அவைகளை அடையும் விசேஷ பாக்கியத்தையும் பெருமையையும் பெற்றாய். நீ விரும்பும் லோகத்திற்கு உன்னை அழைத்துப் போகக் காத்திருக்கிறோம்" என்றார். அதைக் கேட்டு யுதிஷ்டிரர் "மகரிஷே! என் தம்பிகளும் பார்யையும் மித்திரர்களும் எவ்வுலகத்திலிருக்கின்றனரோ அங்கேயே வசிக்க விரும்புகிறேன். எனக்கு வேறு உலகங்கள் வேண்டாம்" என்றார். நாரதர் "யுதிஷ்டிரா! உன் புண்ணியத்தால் சம்பாதிக்கப்பட்ட பதவி இதே. பூலோகத்தைவிட்டு வந்தபிறகும் அண்ணன் தம்பி, கணவன் மனைவி, தகப்பன் மகன், நண்பன் பகைவனென்ற தோற்றங்களுமுண்டோ? உன் தம்பிகளும் தங்களுடைய தருமங்களுக்குத தகுந்த உலகங்களை அடைந்திருக்கிறார்கள். இதோ விருக்கும் ரிஷிகளையும் முனிகளையும் பார். காமக்குரோதங்களுக்கு எல்லாப் பற்றுகளையும் துறந்து தெளிந்து அடங்கின மனதுடன் விளங்குகிறார்கள்" என்றார்.

யுதிஷ்டிரர் "நீங்கள் எவ்வளவு வற்புறுத்தினாலும் என் தம்பிகளும் பார்யையும் இருக்குமிடத்திற்கே நான் போவேன்" என்று சுவர்க்

தாம்பு அறுதல், தோண்டியும் பொத்தல்.

கத்தில் பிரவேசித்து, அங்கே துரியோதனன் சூரியனைப்போல் ஒளிவீசும் தேகத்துடன் திவ்வியாபரணங்களால் அலங்கரிக்கப்பட்டுத் தேவர்களும், கந்தர்வர்களும், அப்ஸரஸ்ஸுகளும் உபசரிக்க, வீரலக்ஷ்மியுடன் விளங்கி உத்தமமான சிங்காதனத்தில் வீற்றிருக்கக் கண்டார். உடனே கோபங்கொண்டு திரும்பி "வஞ்சனையும் பேராசையும் துரோகமும் கொடுமையும் குடிகொண்ட இந்தக் கௌரவ வேந்தன் இருக்குமிடத்தில் எனக்கென்ன வேலை? இவனால் நாங்கள் படாதபாடெல்லாம் பட்டுச் சொல்லமுடியாத அவமானத்தை அடைந்து, பெரியோர் செய்த புண்ணிய பலத்தால் உயிர்தப்பிப் பிழைத்தோம். இவனுடன் நான் இங்கே ஒரு நொடிப்பொழுதேனும் தங்கமாட்டேன். என் தம்பிகள் இருக்குமிடத்திற்கு அழைத்துப்போங்கள்" என்றார்.

நாரதர் அதைக் கேட்டுச் சிரித்துக்கொண்டு, "குந்திபுத்திரா! இது பூலோகமல்ல, சுவர்க்கம். இங்கே நட்பு, பகை, விருப்பு, வெறுப்பு முதலியவை கிடையாது. இந்தத் துரியோதனன் உங்களுக்குக் கெடுதி செய்தாலும் க்ஷத்திரிய தருமம் தவறாது அஞ்சாத நெஞ்சனாய், முடிவுவரையில் பகைவருடன் போர் புரிந்து, அமர்க்களமென்ற யாகசாலையில் தன்னுயிரை ஆகுதியாய்க் கொடுத்திருக்கிறான். அண்டினவரைக் காப்பாற்றினான். அதற்காக இப்பொழுது இவன் வீரசுவர்க்கத்தை அடைந்திருப்பது நியாயமே" என்றார்.

(81-ம் பக்கத் தொடர்ச்சி.)

பூவரசுவிடுத்து வனந்தொடுத்தரக்கர்
சிறை செறித்த புவிபுதல்வி
மாவரசிதனைப்புரந்தான் ரகுராமன்
மனைவிடுத்து மறந்து செல்வந்
தாவருஞ் சீர்ப்பொறையோடுஞ் சிறை
யடுத்தப் பரதமகடழைக்கச் செய்து
தேவரெலாமெதிரேற்கப் புவிவிடுத்தாய்
ரகுவம்ச திலகனேய்த்தே!
பாராரு மாயிரத் தெண்ணூற்று நாற்பான்
மூன்றாகப் பயிற் சகாத்தஞ்
சீராரிரெனத்திரியிலாடி மதிப் ரதமை
சனியவிட்டஞ் சேர்நாள்
காராரும் பொழிற் சூழும் பாத நிலம்
பெருமையுறக் கருதிநோற்ற
தாராருந் தனித்திலகர் விண்ணிவர்ந்தார்
மண்ணிருந்தார் தயங் கமாதோ!

# சிருஷ்டியமைப்பின் ஓர் மகாசக்தி

## THE MIGHTY ELECTRON

[ஸ்ரீமான் கே. வி. ஐயர், பி.ஏ.]

### நாம் இந்த மகாசக்தியை கையாண்டு உபயோகித்துக்கொள்ள முடியுமா?

ஸர் ஆலிவர் லாட்ஜ் என்ற ஆங்கில மகா பண்டிதர், வஸ்து அணுவில் உற்பத்தியாகும் மகாசக்தி, உலகில் வெகு பிரயோசனகரமாக வுள்ள நிலக்கரியையே நமக்குத் தேவையில்லா வண்ணம் ஓட்டிவிடுமென்று சொல்கின்றார். இந்த ஆச்சரியகரமான விஷயத்தை நாம் விசாரித்துப் பார்ப்போம்.

ஸர் ஆலிவர் லாட்ஜ் என்ற மகா வித்வான் தற்காலத்தில் இங்கிலாந்தில் ஜீவதசையோடிருந்துவரும் பல பிரமுக தத்வசாஸ்திர பண்டிதர்களுள் முதன்மைபெற்றவராவர். அவர் இவ்வுலகில் சாதாரண பூதவஸ்துக்களுக்குள் மறைந்து கிடக்கும் சக்தியைக் கையாளத்தக்க நாகரிகத்தை இன்னும் மனிதன் அடைந்துவிடவில்லையென்பது தமது அபிப்பிராயமாகக் கூறுகின்றார். "சக்தியை உற்பத்திசெய்ய இப்போது விசேஷ ஆதார வஸ்துவால் உபயோகப்பட்டுவருகிற நிலக்கரியை யோட்டிவிட்டு அதற்குப் பிரதியாய், அணுத்திரளில் திணிந்துகிடக்கும் அபாரமான மகாசக்தியே உபயோகப்படும்படியான காலம் வந்து நேர்வதை நாம் காண்போம்" என்று லண்டன் நகரில், ராஜ சித்திர வித்யா சங்கத்தில் (Royal Society of Arts) சில நாள் முன்தான் பேசியிருக்கிறார். ஸர் ஆலிவர் லாட்ஜ், இந்த நவீன காலத்துரஸாயன தத்துவ சாஸ்திர பண்டிதர்களுக்குள்ளெல்லாம் இவர் உன்னதப்பதவி பெற்றவராவார். அவர் தமது ஜீவிய காலத்தின் விசேஷ பாகத்தை இந்த "அணு"வின் பரிசோதனை ஆராய்ச்சியிலேயே கழித்து அதைப்பற்றிய விஷயஞானத்தை வெகுவாய் விருத்திசெய்து உலகத்திற்கு உதவியிருப்பதுடன் இன்னமும் உதவிவருகின்றார். நமக்குப்பின் வரப்போகும் நமது கொட்பேரர்கள், எண்ணெய்க்கும் நிலக்கரிக்கும் பதிலாக இச்சக்தியை உபயோகித்துக்கையாளக்கூடுதல் சர்வ சாதாரணமாகும், என்று நினைப்பதற்குரிய இந்தப் புதுருபத்துடன்கூடிய மகாசக்திக்குள்ள செயல் மனதைப் பிரமித்து நடுங்கச் செய்யக்கூடிய அவ்வளவு அபாரமாயிருப்பதால், நமது நற்காலத்தின் பயனாய், அதை விடுவித்து உபயோகிக்கும் வழி யாதென நாம் இப்பொழுது அறியாமலிருப்பதே நலம் என்று கருதி ஸர்ஆலிவர்லாட்ஜ்சந்தோஷப்படுகிறார். மனித வர்க்கத்தினர், அதை நேர்மையாயுபயோகிக்கக்கூடிய மூளையும், சுத்தமனமும் வாய்க்கப்பெறும் வரையில் அதைக் கண்டுபிடிக்க அவர்களால் ஆகாதெனவும், ஏனெனில், நேர்மைத்தப்பான மனமுடையோர் அதைக்கண்டு பிடித்து உபயோகிக்க நேர்ந்துவிடுமானால் உலகமே மகா அபாயநிலைமைக்குள்ளாகிவிடும் என்றும் அவர் கூறுகின்றார். தற்காலம், சக்தியுற்பத்தி செய்வதற்காக மனிதனுக்குதவும் வஸ்துக்களுக்குள் முற்றிலும் அளவில் அபாரமானதாயுள்ள ஓர் மகாசக்தி அப்பொழுது உலகத்தினர் கைக்கு உள்ளாகிவிடும்; அந்தச் சக்தியைமாத்திரம் அவர் கண்டுபிடிக்க நேர்ந்துவிட்டால், என்றும் அவர் சொல்லுகின்றார்.





இந்த 'அணுதத்துவ' ஞானத்தில் தற்காலம் முதன்மை பெற்றிருக்கும் நிபுணரும் ஆங்கில தேசத்தவருமான ஸர் ஜே. ஜே. தாம்ஸன் என்பவர் இந்த அபார பயங்கரமான சக்தியைப்பற்றி வருணித்திருப்பதை நாம் வாசிக்குங்கால், அது ஸர் ஆலிவர் லாட்ஜ் கூறியிருக்கும் மேலே சொன்ன அவரது அபிப்பிராயம் உண்மையிலும் உண்மையென்று நாம் அங்கீகாரம் செய்யும்படி தூண்டுகின்றது. ஒரு அவுன்ஸ், அதாவது சற்றேறக்குறைய இரண்டரை ரூபாய் இடையுள்ள குளோரீன் என்ற பெயருடன் வழங்கும் மஞ்சள்வர்ணமுள்ள காற்று வடிவம்கொண்ட தனிவஸ்துவான 'உப்பு வாயு'வை நாம் எடுத்துக்கொண்டோமானால், அதிலுள்ள இந்த 'அணுச்சக்தி'யானது நாமெல்லோரும் அநேகமாய்க் கேள்விப்பட்டிருக்கக்கூடிய பிரசித்திபெற்ற பூலோகத்திற்கே பெரியகப்பலெனச் சொல்லப்பட்ட அமெரிக்கா தேசத்துப் புகைக்கப்பல், மாரிடேனியாவை அதன் முழுவேகத்தோடும் இரவும் பகலும் இடைவிடாது ஒரு வாரகாலம் செலுத்தி யோட்டுவதற்குத் தேவையாகக்கூடிய அவ்வளவு சக்தியையும் அது அளிக்கக்கூடுமென்றும், அப்படியே உலகிலுள்ள எந்த வஸ்துவையும் அது ஆக்கப்பெற்றிருக்கும் அதன் அணுத்திரள்களாகப் பிளப்போமானால் அதனிலிருந்தும் உற்பவிக்கக்கூடிய இந்த அணுச்சக்தி அபார அளவுள்ளதாகவேயிருக்குமென்றும் அவர் சொல்லியிருக்கிறார். ஒரு வஸ்துவில் ஒன்றிரண்டு பவுண்டு அதாவது சற்றேறக்குறைய அரை, முக்கால் வீசைக் கனமுள்ளதாக எடுத்துக்கொண்டு அதனுள்ளுள்ள அணுக்கூட்டங்கள் அதனிலிருந்தும் வெடித்துப் பிரியும்படி நாம் செய்வோமானால், அதனால் உண்டாகும் வெடிப்பு அதிர்ச்சிமாத்திரம் ஓர் பெரிய மகாகண்டத்தையே சுக்கல் நீறாயாக்கக்கூடிய வலிமையுடையதாயிருக்குமென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கின்றது.

எல்லா வஸ்துக்களுமே அணுத்திரள்களாலே ஆக்கப்பட்டிருக்கின்றன. அதாவது ஒரே ஜாதியோ அல்லது பல ஜாதியானவோ அணுக்களில் அநேகம் திரள்கள் ஒன்றுகூடியே ஒவ்வோர் வஸ்துவும் அமைக்கப்பட்டிருக்கின்றது. மேலே சொல்லிய பயங்கரமான அபூர்வ 'அணுசக்தி'யினாலாகக்கூடிய அபரிமிதமான காரியங்களைப்பற்றிப் பேசுங்கால், மேற்கூறிய சாஸ்திரநிபுணர்கள், குறித்த ஒரே ஜாதிவகை அணுக்களை மாத்திரமே மனதினில்நினைத்துச் சொன்னவர்களல்ல. எந்தச்சாதாரண உலோக வஸ்துவின் அணுக்களானாலும்சரி,—ரேடியம் (Radium) என்னும் மகாசக்திகொண்ட புதிய உலோகமென்ன, இரும்பு, செம்பு, மரம், கல், எந்த வஸ்துவினுடையதாயினும் சரியே, இந்தப் பிரஸ்தாபமகாசக்தி அவற்றிற்குள்ளெல்லாம் உள்ளதேயாகும். நாம் உண்ணும் ஆகாரம் அம்மாதிரியான அணுக்களாலேயே ஆக்கப்பட்டிருக்கிறது. அதேமாதிரி நமது வீடுகளிலுள்ள மேசைகள், நாற்காலிகள் முதலிய தட்டுமுட்டுச்சாமான்களும்கூட அந்த அணுக்கள் சேர்ந்தவையேயாகும். நம் தேகங்களுங்கூட அவ்வித அணுக்கள்சேர்ந்து ஆக்கப்பட்டவைகளேயாம். ஆகவே, நம்மில் ஒவ்வொருவரும் தன் தனக்குள்ளேயே அளவிடக்கூடாத அரிய அபாரசக்தியை அடைத்துப் பூட்டிவைத்துக்கொண்டிருக்கின்றோமல்லவா? நாம் மாத்திரம் அதில் உள்ளடங்கிக் கிடக்கும் சக்தியை அவிழ்த்துவிட்டு விகசிப்பிக்கும்படி செய்யக்கூடுமானால், நமது இந்தியாமுழுவதிலும், ஏன் இங்கிலாந்து அமெரிக்

காவிலுங்கூட ஓடிக்கொண்டிருக்கும் எல்லா இருப்புப்பாதைப் புகைவண்டிகளையும் ஏக காலத்தில் சில நிமிஷநேரம் ஓட்டிவிடக்கூடிய அவ்வளவு அபரிமிதமான சக்தி நம் கைச் சுண்டுவிரலிலேயே இருக்கின்றது. மகாயுத்த களத்தில் நடக்கும் ஓர் பெரும் போரில் வெடித்து வீசப்படும் கோடானுகோடி வெடி குண்டுகளுக்கும் கூட நமது தேகத்திலுள்ள அணுக்களுக்கிருக்கும் சக்தியின்காரியங்களுக்கீடான பயங்கர சக்தி கிடையாதென்றே நாம் உறுதியாய்ச் சொல்லலாகும்.

அணுவின் அபூர்வசக்தியைப்பற்றி தற்காலம் நாம் பெற்றிருக்கிற இவ்வளவுமட்டும் விஷயஞானமும் முதன்முதல் நமக்கு உண்டாகியதற்குக் காரணம், "எக்ஸ்ரே" (X. Ray) யென்றும் "ராண்ட்ஜன்ரே" (Rontgen Ray) யென்றும் பெயர் கொடுக்கப்பட்டிருக்கிறதும் புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறதுமான ஓர்வகை மின்சார ஒளியின் இயக்கத்தினுலுண்டாகும் ஒளிக்கிரணத்தின் பரிசோதனையாராய்ச்சியின்மூலமாகவேயாகும். இந்தஎக்ஸ்ரே யுண்டுபண்ணும் ஓர்வகை மின்சாரக் குழாய்களில், ஸர் ஜெ. ஜெ. தாம்ப்ஸன் பண்டிதர் வெகுபல ஆராய்ச்சிகள் செய்துவருங்காலையில், அந்தக்காலம் வரையில் அந்த ஜாதி அணுக்களுக்குள்ளும் வெகு லேசான அணு என்று சாஸ்திரஞர்களால் கொண்டாடப்பட்டு வந்த ஜலவாயு ஹைட்ரொஜென்-(Hydrogen) அணுவினதுநிறைக்குஇரண்டாயிரத்திலொரு பங்குநிறையுள்ள அதிலேசானஅணுவும் இருக்கின்றதெனக் கண்டுபிடித்தார். பிறகு, சமீப காலத்தில், பீடா (Beta) அணுக்களென்றும், இலெக்ட்ரான் (electron) அதாவது மின்சார அணுக்கள் என்றும் தற்காலம் பெயர் கொடுக்கப்பட்டு வழங்கிவருகிற இந்தச் சிற்றணுக்கள் ரேடியம் (Radium) என்ற புதிதாய்க் கண்டுபிடிக்கப்பட்ட மின்சார உலோகத்தின் அணுக்கள் பிளந்து பிரிவதனுலுண்டாகும் வஸ்துக்களிலொன்ருகவும் வெளிவருகின்றனவென்று கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது. இனிப் பிளவுபடாது; இதுவே முடிவான சிற்றணு, (atoms) என்று அதுவரையில் நினைக்கப்பட்டுவந்த சாதாரண அணுக்கள் சுபாவஸ்திதியில் தாமாக மேலும் பிளவுபடுவதில்லை யாஞலும், அவைகள் ஏற்ற சந்தர்ப்பங்களில் மற்றும் பல சிற்றணுக்களாய் ஒவ்வொன்றும் பிளவுபடக்கூடியதேயென்று இப்பொழுது நாம் நிச்சயமாய்த் தெரிந்துகொண்டிருக்கிறோம். சிற்சில சந்தர்ப்பங்களில் மேற்சொன்ன சாதாரண அணுக்களும், ரேடியம் என்கிற மின்சார உலோகத்தில் தாமாகவே வெடித்துக் கிளம்புவதுபோல, பல சிற்றணுக்களாய்ப் பிளவுபடுகின்றன. அப்படிப் பிளவுபடும் சிற்றணுத்துணுக்குகள், துப்பாக்கியினின்றும் எறிபட்ட ரவைக்குண்டுகளின் மகா வேகத்தை ஒரு நத்தையின் ஊருதலுக்குச் சமானமென்று சொல்லக்கூடிய அவ்வளவு மனதினுலும் நினைத்தற்கரிய அசாதாரணவேகத்துடன் விடுபட்டுவீசியடிக்கின்றன.

ரேடியம் என்னும்உலோகமாத்திரமேயல்ல. பூலோகத்தில் படைக்கப்பட்டிருக்கும் எல்லா வஸ்துக்களுமே சரி, இதேவிதமாகச் சிற்றணுக்களைத் தம்மிடமிருந்து உதிர்த்துவீசி, அணுச்சக்தியையும் வெளிப்படுத்திக் கொண்டிருக்கின்றனவென்று தீர்மானமாய் ஊகிப்பதற்குத் தக்க காரணங்கள் உண்மையாகவே கண்டறியப்பட் டிருக்கின்றன. ஆயினும், நாம் ரேடியம் உலோகத்திலும் அந்த ரேடியத்தின் தன்மையைப் பெற்றுவிளங்கும் சிற்சில இதர வஸ்துகளிலுமாத்திரமே, இவ்விதச் சிற்றணுக்கள் பிளப்புண்டு வெளியில் வீசுவதை ஆராய்ந்தறிவது இலகுவாயிருப்பதின் காரணமாக அவற்றின் தன்மையையும் குணுகுணங்களையும் அந்த வஸ்துக்களிலேதான் நாம் விளக்கமாய்க்கண்டு உணரமுடியுமாயிருக்கிறது. உதாரணமாக சுண்ணும்புக்கல்லை யெடுத்துக்கொள்வோம். இந்தச் சுண்ணும்புக்கல்லுக்கும் ரேடியத்தின் தன்மை ஓரளவு இருக்கின்றதாகக் கண்டுபிடிக்கப்பட் டிருக்கிறது. ஆஞல் ரேடியம் எனும் உலோகமானது தனது அணுமய சக்தியை சுண்ணும்புக்கல்லைக்காட்டிலும்எவ்வளவோ மடங்கு அதிவேகமாயும் உக்கிரமாயும் வெளியில் வீசுகின்றது. அது காரணத்தினுலேயேதான் பிற தனி வஸ்துக்கள் எதனையும் காட்டிலும் இந்த ரேடியம் மகா விசேஷச் சுறுசுறுப்பு வாய்ந்திருப்பதாகத் தோற்றுகின்றது. ஓர் ரேடியம் அணுவை பிறவஸ்துயாதாயினும் ஒன்றின் அணுவுடன் ஒப்பிட்டுப் பார்ப்போமாஞல்இந்த ரேடியம்என்னும்அணுவானது ஒரு இரண்டு டன் (4480 பவுண்டு) கனமுள்ள பீரங்கியினின்றும் ஒரு நூறு

தாயைச் சேர்ந்த உறவு ஆனாலும், அறுத்துத்தான் உறவு ஆடவேண்டும்.



பவுண்டு வெடிகுண்டைத் தாக்கி வீசுவதை ஒக்கும். அந்த பீரங்கியைப் போலவே அந்த ரேடியம் அணுவினின்றும் வெளியில் வீசப்பெறும் சிற்றணுத்தவிர மிகுந்த அதன்பாகம் அது வீசியடிக்கப்பட்டதின் பலஞய், எதிர் அதிர்ச்சியையேற்று அதஞல் பின்வாங்குகின்றது. இப்படி நாம் அதைப்பற்றி விவரித்துப் பேசுவது மஞோராஜ்யத்தால் ஊகித்துச்சொல்லும் விஷயமல்ல, வேடிக்கையான வர்ணனையுமல்ல. இந்தப் பின் அதிர்ச்சி அல்லது பின்வாங்கல் என்பது தீர்மானமான சோதனை ஆராய்ச்சியால் உண்மையெனக் கண்டறியப்பட்டிருக்கிற விஷயமாகும். அந்த ரேடியம் எனும் அணு ஒன்றிலிருந்து இதுபோன்ற ஐந்து சிற்றணுக்கள் வெடித்து வெளிவீசி விடப்பட்ட பின்பு, மிகுதியாய் நின்ற அந்த அணுவின் பாகம் வேறுவகையான ஓர்வித மாறுதலடைந்து வேருேர் புது வஸ்துவாக மாறி அமர்ந்துவிடுகிறது. அப்படி மாறிவிட்ட நிலைமையில் அது காரீயமோ, அல்லது ரஸாயன முறையில் அதற்குச் சம்பந்தப்பட்ட வேருேர்வஸ்துவாகவோ மாறிவிடுகிறது. அந்த நிலைமையில் அது தன் முந்திய வீரியம் அற்றுப்போய் சாதுப்பிரகிருதியுடையதான ஓர் வஸ்துவாய் அமர்ந்துவிடுகிறது.

யுரேனியம் என்று பெயர் கொண்டிருக்கிற மற்ருேர் உலோகப்பொருளின் அணுவொன்று மேலே சொன்னவிதமாகவே தன்னிலிருந்தும் நான்கு சிற்றணுக்குண்டுகளைப் பிரித்துத் தூரத்தி வெளியாக்கிவிட்டபின்பு மிகுதியாய் நின்றது ஒரு ரேடியம் அணுவாக மாறிவிட்டதாய்க் கண்டறியப்பட்டது.

மேற்கூறிய விஷயங்களெல்லாம் வியக்தமாய்ஆராய்ந்து பரிசோதிக்கப்பட்டுத்தெளிந்து கொள்ளப்பட் டிருக்கிறது. ஆகவே முற்காலத்தில் ரஸவாதிகளெனப் பழிப்புப் பெயர் பெற்று இரும்பைத் தங்கமாய் மாற்றும் முறை உண்டெனவும் அது உண்மையெனவும் மதித்த ரஸவாத பரீட்சகர்களின் ஆராய்ச்சிகள் அவ்வளவாகத் தவறுதலான வீண் பிரயத்தனங்களென நாம் மதித்துச் சொல்வதற்கில்லை. நம் கண்முன்னேயே இயற்கையமைப்பானது இடைவிடாது ஓர்வகைத் தனிவஸ்துவை மற்ருென்ருக மாற்றிக்கொண்டேயிருப்பதை நாம் பார்க்கிருேம். எந்த வஸ்துவினுடையவும் ஓர் அணுவினுள்ள சிற்றணுக்களாகிய இலெக்ட்ரான் அல்லது மின்சார அணுக்களைப் பிரித்து அவைகளை அடக்கி யாண்டு உபயோகிக்க ஒருவன் கற்றுத் தேர்ந்து விடுவானேயாஞல், நினைத்தமாத்திரத்தில் தாழ்ந்த உலோகங்களைத் தங்கமாக மாற்றுதல் அவனுக்கு ஓர் ஆகாதகாரிய மல்லவென்பது நிச்சயம். அதைக்காண நமக்கு ஓர் ஆச்சரியமுண்டாகாது. சர்வசாதாரணமாகவே போய்விடும்.

இப்பொழுது இது சம்பந்தமாக நமக்கு ஏற்பட்டிருக்கும் விஷயஞானம் எட்டியமட்டில், ஒவ்வோர் வஸ்துவிலுமுள்ள சாதாரண அணுக்களெல்லாம் சிற்றணுக்கள் கொண்டு இருக்கின்றனவென்றும், அந்தச் சிறிய அணுக்குண்டுகள் வெவ்வேறு குணங்களோடு கூடிய இருவகை யணுக்களாய்த் தோன்றுகின்றனவென்றும், ஒன்று ஆல்பா (Alpha) என்று பெயர் பெற்றிருக்கிற கனத்த அணுக்குண்டுகளெனவும், மற்ருென்று வெகு இலேசான சிற்றணுக்களாய் (Beta) எனப்பெயரிடப்பட்டு விளங்குகின்றது. முதற்கூறிய ஆல்பா (Alpha) அணுவிற்கு 'ஹீலியம்' (Helium) எனப் பெயர் கொடுக்கப்பட்டும் விளங்குகின்றது. பின்சொல்லிய 'பீட்டா' (Beta) சிற்றணுவே மின்சாரத்தில் பிரதான வஸ்துவாக விளங்குவதும் இலெக்ட்ரான் எனப் பெயர்பெற்று வழங்குவதுமாகும். 'ஆல்பா' (alpha) என்ற அணுவை வஸ்துவின் ஓர் வகைக்கட்டினின்றும் விடுபட்ட சிற்றணுவென்று சொல்லலாம். வஸ்துவினின்றும் அவ்வணு விடுபட்டு அப்பால் வெளியில் வீசப்படும் அதன் வேகம் விஞடிக்குப் பதிஞயிரம் (10000) மைல் எனக் கண்டறிந்துகொள்ளப் பட்டிருக்கிறது.

இந்த ஆல்பா (Alpha) சிற்றணுவிற்கு இந்த பயங்கரமான வேகம் எங்கிருந்து வந்தது? அது வஸ்துவினின்றும் ஓர்விதமாய் வெடித்துப்பிரிந்து வீசப்படுவதிஞலேயே யாகும். ஆஞல் இந்த வெடிப்பு சாதாரண வெடித்தல் மாதிரி யாகாது. அது நைட்ரோ கிளிஸெரீன் (nitro-glycerine) என்னும் எண்ணெய் போன்ற வழவழப்பும் தடிப்புமான ஓர்வித ஜலரூபவஸ்து ரஸாயனசாஸ்திர ஆராய்ச்சி

தாயைப்பார்த்துப் பெண்ணைக் கொள்ளு, பாலைப் பார்த்துப் பசுவைக் கொள்ளு.

யால் கண்டுபிடிக்கப்பட்டு இக்காலத்தில் வெகுவாய் உபயோகிக்கப்பட்டு வருகின்றது. அது மிகவும் அபாயகரமான வஸ்துவாகும். அது ஏதாவது சற்றுலேசான உரைசலுக்கு உட்படுத்தப்படுமாயினும் கூட, வெகு பயங்கரமாய் வெடிக்குந்தன்மையையுடையது. ஆகவே அது இக்காலத்து யுத்ததளவாடங்களிலொன்றாகவும், பாறை, மலைகளைத் தகர்ப்பதிலும் பெயர்ப்பதிலும் உடைத்தெடுப்பதிலும், குடைவதிலும் விசேஷமாய் உபயோகிக்கப்பட்டு வருகிறது. நமது ஆல்பா (Alpha) சிற்றணுக்குண்டு வஸ்துக்களினின்றும் வெடித்துக் கிளம்புவது இந்த நைட்ரோகிளிஸரீன் என்ற வஸ்து வெடிப்பதுபோல வெடிக்குந் தன்மையுடையதல்ல. நைட்ரோகிளிஸரீன் வெடிப்பதை மடேரென்று இடிந்து விழும் ஓர் வீட்டின் முழக்கத்திற்கு ஒப்பிட்டுச் சொல்லலாம். ஆனால் ரேடியம் உலோகத்தினின்றும் அணுக்கள் உதிர்ந்து விடுபட்டு ஓடுவதனால் உண்டாகும் இந்த ஆல்பா (Alpha) சிற்றணுக்களின் பிளவு வெடிப்பு வேறுமாதிரியானது. அது நேற்றைய யுத்தங்களில் புதிதாய்க் கண்டுபிடித்து உபயோகித்துவரும் யந்திர பீரங்கியின் (machine gun) ஒன்றன் பின்னொன்றாய்த் தொடர்ந்து பட், பட், பட்டென்று கிளம்பி வெடிக்கும் வேட்டுகளைப்போன்றதாகும். மேற் கூறிய உதாரணத்தில் அந்த இடிந்து விழும் வீட்டின் செங்கல்கள் ஒவ்வொன்றாய் வெளிப்பட்டு வெடித்தோடினால் எப்படி அவ்வீடு மெதுவாயும் ஆற்றலாயும் பொல பொலத்து இடிந்துவிழ நேருமோ அதுபோலவே இந்த ஆல்பா (Alpha) சிற்றணுக்கள் வரிசையாய் ஒன்றன் பின்னொன்றாய் வெடித்து வெளியில் வீசப்படுகின்றனவாகும்.

அப்படி இந்தச் சிற்றணுக்கள் வெடித்துப் பிரியும் பிரிவு வெகு அவசரமாய் நடந்துவிடும் ஓர்மாறுதலாகாது. யாராயினும் ஒருவர் சுமார் ஒன்றரைச்சேர் அதாவது ஒருபவுண்டுநிறைக் கனமுள்ள ரேடியம் கட்டியொன்றைச்சென்ற கி. பி. முதலாவது நூற்றாண்டின் முதலாவது வருஷத்தில் இவ்வகை மாறுதலுக்கு உட்படுத்தி ஆரம்பித்து வைத்துவிட்டதாக வைத்துக்கொள்வோம். நமது 1920-ம் வருஷத்தின் இச்சமயத்தில் அப்போது துவக்கப்பட்ட அந்தமாறுதலினால் அந்த ஒருபவுண்டு ரேடியம் கட்டியிலிருந்தும் அதனுடைய ஓர் சரிபாதி நிறையே கழிபட்டுப்போயிருக்கும்.

இது இப்படிக்கிருக்க, இலெக்ட்ரான் என்னும் மின்சாரச் சிற்றணுக்களின் ஆகிருதியோ வெகு நுட்பத்தினும் நுட்பமானதாகும். அதன் பரிமாணத்தை ஒருவாறு நம் மனதில் ஊகித்து நாம் தெரிந்துகொள்ளலாம். இவ்வளவு வெகு சாவகாசமாய்ப் பிளந்து வெடித்துப்பிரியும் சிற்றணுக்கள் ஒரு குண்டு மணியிடை ரேடியமுலோகத்திலிருந்து பிரதியொவ்வொரு விநாடிக்கும் 2,000,000,000, அதாவது இருநூறுகோடி இலெக்ட்ரான் மின்சாரத் துணுக்கள் வெடித்து வீசப்படுகின்றனவென்றால் ஒவ்வோர் சிற்றணுத்துண்டின் பரிமாணம் எவ்வளவு நுண்ணியதாயிருக்குமென்று நாம் மனதைச் சற்று ஊன்றி ஊகித்துப் பார்ப்போமானால், மனதிற்கே ஓர்விதப் பிரமையும் திகைப்பும் உண்டாகிவிடுகின்றது. ஆல்பா (Alpha) அணுக்கள் எனப் பெயர்கொண்ட இந்தத் துணுக்குகள் விநாடியொன்றுக்கு 1000 மைல் வேகத்துடனும் வீசப்பட்டுச் சிதறிவெளியோடுமானால் எவ்வளவு ஏராளமான உஷ்ணம் இந்தப் பிரிவினின்றும் உற்பத்தியாகக்கூடுமென்று நாம் ஒருவாறு ஊகிக்கலாம். வாஸ்தவமாக, ஒவ்வோர் குண்டுமணியிடை ரேடியமும் இவ்விதமாகப் பிளவுபட்டுச் சிதறிக் குறைவுபடும் வேலையில் ஒவ்வோர்மணி நேரத்தில் தன் நிறைக்கு ஒன்றரை மடங்குக்கதிகமான பனிக்கட்டியைத் தண்ணீராய் உருக்கிவிடக்கூடிய உஷ்ணத்தைக் கொடுக்கின்றதாகக் கணக்கிட்டுக் கண்டுகொள்ளப்பட்டிருக்கிறது. இவ்விதமாக நடைபெற்றுவரும் தொழில் அந்தக் குண்டுமணியிடையும் அற்றுப்போவதற்குச் சுமார் (2700) இரண்டாயிரத்தெழுநூறு வருஷமளவு பிடிக்குமாகையால், ரேடியமுலோகம் எவ்வளவு விசேஷமான சக்தியைத் தன்னுள் அடக்கி வைத்துக்கொண்டிருக்கும் ஓர் ஆதாரவஸ்துவாகின்றது. (தொடரும்.)

---

**ஆரியமத உபாக்கியானம்.**—நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட அநேகம் அருமையான கதைகள் கொண்டது. அநேகம் அழகிய ஆப்டோன் படங்களும் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் உத்ஸாகத்துடன் வாசிக்கத்தக்கது. முதற்பாகம் அ. 8. இரண்டாம் பாகம் அ. 10.





# புண்ணிய ஸ்தலங்கள்

## PLACES OF PILGRIMAGE

### 1. சிதம்பரம்

'ஆலயந்தொழுவது சாலவுநன்று' என்றும், 'கோவிலில்லா ஊரில் குடியிருக்கவேண்டாம்' என்றும் கூறியிருக்கின்றனர் சான்றோர். இந்தியாவில் பற்பல விடங்களிற் பற்பல ஆலயங்களிருப்பினும், அவைகளிற் சிலவே மிகப்புண்ணியஆலயங்களெனப் பலர் கருதுகின்றனர். அத்தகைய ஆலயங்களுள் ஒன்று மஹாபுண்ணியபூமியெனக்கருதப்படும் சிதம்பரத்திலுள்ள சிவாலயம். எத்தகைய ஆலயத்திலும் இன்றியமையாத அங்கங்கள் (1) கர்ப்பகிரஹம் (2) அர்த்த மண்டபம் (3) மஹா மண்டபம் (4) ஸ்தூபி (5) விமானம் (6) பிராகாரம் (7) கோபுரம் எனக் கூறப்பட்டுள்ளது தேவாலயச் சிற்ப சாஸ்திர வித்வான்களால். தவிர, எல்லா ஆலயங்களிலும்பிரதானதேவதா பிம்பம் அவைகளின் கர்ப்பக்கிரஹத்தில் இருக்கும். இவ்வாறு ஒரேமாதிரி எல்லா ஆலயங்களும் கட்டப்பட்டிருப்பதற்குக் காரணம், உலகிலுள்ள மாந்தர் அனைவரும் உள்நோக்காக அகப்பொருளை அறிந்துய்யும் ஆற்றலை இயற்கையாகவே பெற்றிருப்பார்களாதலால், யாவர்க்கும் தத்தம் சரீர இயல்பு எளிதில் புலப்படும் நோக்கத்துடன் ஞானிகளால் அமைக்கப்பட்டிருத்தலே என் நாம் கருதவேண்டும்.



மானிட சரீரக் கூற்றைக் காட்ட, ஆலயங்கள் செங்கல், கருங்கல்களால் வெளிநோக்காகக் கட்டப்பட்டிருக்கின்றனவென்றும், யோகிகள் உள்நோக்காகவே, எப்போதும் இத்தகைய அமைப்பை மானிட சரீரத்திற் காண்கிறார்கள் என்றும் கூறப்பட்டுளது.

சில ஆலயங்கள் ஹிருதயகமலப்பிரஸ்தாரம் எனக் கூறப்பட்டிருக்கின்றன. கமலம் என்றாலும், ஸர்ப்பம் என்றாலும், ஆகாயமெனப் பொருந்தும். பூமியை ஆதிசேஷன் என்ற பெரும் பாம்பு தாங்குவதென்பதும், மஹாவிஷ்ணு சேஷசாயி என்பதும், பூமியும் விஷ்ணுவும் ஆகாயத்தில் அந்தரமாய் நிற்பதையே குறிக்கும். இதுபோலவே வித்தியா தேவதையாகிய ஸரஸ்வதியும், மஹாலக்ஷ்மியும், பறவை அல்லது தாமரையில் வீற்றிருப்பது ஆகாயத்தில் அவர்களது அமைப்பையேகூறும் நோக்கமுள்ளது.

சிதம்பரத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் ஆலயம் ஹிருதய கமலத்தை அதாவது, ஹிருதய ஆகாயத்தையே குறிக்கும் எனச் சான்றோர் நவின்றிருக்கின்றனர்.

ஆகாயத்தைக் குறிக்க இவ்வளவு ஆர்ப்பாடம் எதற்கெனின், பின் விவரிக்கப்படுவது நன்கு கவனிக்கப்படவேண்டும்.

இக்காணும் கண்ணில் கலந்து நிற்கும் ஓர் அகக்கண் உளதெனவும், அந்த அகக்கண்ணே இந்த ஹிருதய ஆகாயமென்றும்

இந்த ஆகாயக்கண்ணை உபயோகித்தலே ஞான சக்ஷுஸ் அல்லது கண்ணை உபயோகித்தல் எனவும் யோகிகள் கூறியுள்ளனர். சாந்தோக்கிய உபநிஷத்தும் இவ்வாறே கூறுகின்றது.

ஊனின் அமைப்பைப் பெற்றிருக்கும் கண், ஒன்றைப் பலவாறாகக் காட்டும் இயல்பினை உடையதென்றும், ஹிருதயாகாசக் கண்ணோ பலவகைகளையும் ஒன்றாகக் காட்டும் என்றும் கூறுகின்றனர். எவன் ஒருவன் புறக்கண்ணை மூடி அகக்கண்ணை உபயோகிக்கும் சாமர்த்தியத்தை அடைகிறானோ, அவனே கிருதகிருத்தியன் எனக் கருதப்படுகிறான்.

ஓர் ஆலயத்தின் அமைப்பு (1) மூலாதாரம் (2) ஸ்வாதிஷ்டானம், (3) மணிபூரகம், (4) அனாகதம், (5) விசுத்தி, (6) ஆக்ஞை என்னும் ஆறு ஆதாரங்கள் அல்லது தேஹத்தின்கணுள்ள ஆறு ஸ்தானங்களாகிய சக்கிரங்களைக் குறிக்கும். ஒவ்வொரு ஆலயத்தின் கர்ப்பகிரஹத்திலும், கமல முகை போன்ற ஓர் விமானம் இருக்கும். இது ஹிருதய கமலம் அல்லது ஆகாயத்தைக் குறிக்கும். இதன் உட்புறத்தில் அமைக்கப்பெற்றிருக்கும் திருவுருவம் இக்கமலத்திற் சஞ்சரிக்கும் சக்தியைக் குறிக்கும் கடவுளே.



ஹிருதயகமலப் பிரஸ்தார ஆலயங்களுள் சிறந்தது சிதம்பரத்தில் உள்ள ஆலயமே எனக் கூறத் தடையில்லை. ஏனெனில் புராணத்திலும், வேதத்திலும், உபநிடத்திலும், 'சித் அம்பரம் ஹிருதயமத்தியில் உளது' எனக் கூறப்பட்டுளது. இதனால் நாம் அறிவது யாதெனில், வியஷ்டியிலுள்ள ஜீவனுக்கு அவனது ஹிருதய ஆகாயம் எந்த ஸ்தானமோ, அதுபோல் ஸமஷ்டியாகிய விராட்புருஷனது அகன்ற ஹிருதய ஆகாயஸ்தானத்தில் சிதம்பரம் என்ற க்ஷேத்திரமும் ஆங்குள்ள ஆலயமும் அமைக்கப்பெற்றிருக்கின்றன என்று 'திவ்ய சக்ஷுஸ்' உடன் கூடிய மஹான்கள் கூறியுள்ளார் என்பதே.

இப்புவி ஒருக்காலும் மஹா ஞானிகளாகவும் யோகிகளாகவும் இருக்கும் ஆதிகாரிக புருஷர்களது ஆக்ஞையில் இராமலிருப்பதென்பது கிடையாது. ஆதலின் ஓர் சமயம் மஹா யோகியாகிய பதஞ்சலி, லோகானுக்கிரஹத்தின் பொருட்டு, விராட்புருஷனது ஹிருதய ஆகாய ஸ்தானம் இப்புவியில் எப்பாகத்தில் உளதென்னும் அதிரஹஸ்யத்தை அறிந்து அதன் மத்தியில் விசுவகர்மா என்ற தேவசிற்பியைக் கொண்டு சிதம்பர ஆலயத்தைக் கட்டுவித்த விஷயம் வெளிப்படுகிறது.

ஓர் மஹா யோகியினது சரீரத்தை வடக்கே தலையும், தெற்கே பாதமுமாக வைத்து நோக்கின், அவரது தேகக் கூறு முதலியன எவ்வாறிருக்குமோ அதை அனுசரித்து, இச்சிதம்பரத்தில் உள்ள ஆலயம், விராட் புருஷனது ஹிருதயாகாயத்தில் அமைக்கப்பெற்றிருக்கின்றனவாம். அவ்வாலயத்திலுள்ள ஆயிரக்கால் மண்டபம், மேற்கூறியயோகியினது சிரஸிலுள்ள ஸஹஸ்ராரம் (ஆயிரம் இதழ் உள்ள கமலம்) அல்லது ஆயிரம் எனும் ஸ்தானத்தைக் குறிக்கும் என்றும், சிவகங்கை, யோக ஆனந்தத்தினால் மூளையினின்றிழியும் அமிர்த தாரையைக் குறிக்கும் என்றும், மார்கழி, ஆனிமாதங்களில், அந்த ஆயிரக்கால் மண்டபத்தில் நடராஜ மூர்த்திக்கு மஹாபிஷேகம் நடந்து வருவது, ஜாக்கிராவஸ்தையில் ஆன்மாவின் அறிவு மூளையில் விளங்கும் இயல்பைக் குறிக்கும் என்றும் கூறுகின்றனர்.

தெற்கேயுள்ள திருச்சிற்றம்பலம் என்னும் மஹாசபையில் ஐந்து பீடங்களிருப்பது, பிரமா, விஷ்ணு, ருத்திரன், மஹேசுவரன், ஸதாசிவன் என்னும் ஐவரது ஸ்தானமென்றும், ஐந்துபடிகளும் பஞ்சாக்ஷரத்தின் ஐந்தெழுத்துக்களைக் குறிக்கவும், கதவு, மாயை அல்லது அஞ்ஞானத்தைக் குறிக்கவும், அமைக்கப்பட்டிருக்கின்றனவாம். கதவிலுள்ள தொண்ணூற்றாறு பலகணிகள் தேகத்தின் தத்துவ தாதுவிகங்களையும் நடுவிலிருக்கும் நான்கு பொற் கம்பங்கள் நான்கு வேதங்களையும், இருபத்தெட்டு மரக் கம்பங்கள் இருபத்தெட்டு ஆகமங்களையும் குறிக்கின்றனவாம்.



கர்ப்பக்கிரகமாகிய இச்சபையின் மத்தியில் பிரணவ பீடத்தின்கண் அகிலலோக மாதாவாகிய சிவகாமசுந்தரி என்னும் பராசக்தியுடன் நடராஜ மூர்த்தி விளங்குகின்றனர்.

பிரணவபீடத்தின் வாயுபாகத்தில், சிதாகாச வடிவமாகிய சிவவொளி ரஹஸியமென விளங்கா நிற்கும்.

பூதஜன்மங்கள் கோடி புனிதனானபுருஷன், தனது அகக் கண்ணின் துலக்கத்தினால் விராட் புருஷனது ஹிருதய ஆகாய மத்தியில் நடனமாடும் சித்ஸபேசனைக் கண்டுகளித்து அவரிடம் ஐக்கியமாவான் என்பதைக் குறிக்க மஹாயோகியாகிய நந்தனது கதை இங்கு சுருக்கமாய்க் கூறப் பொருந்தும்.

ஆதனூரில் ஓர் வேதியனிடம் நந்தனென்ற பெயருடன் கூடிய ஓர் சிவபக்தன் அடிமைக்காரப் பறையனாக அமர்ந்திருக்கையில், ஒருநாள் அவன் தன் புண்ணியகர்ம பரிபாகத்தினால் ஹிருதய ஆகாயக் கண் துலக்கப்பெற்று, ஞானத்தை அடைந்து, விராட்புருஷனது ஹிருதய ஆகாயஸ்தலமாகிய சிதம்பரம்போய் அங்கு நடனமாடும் மூர்த்தியைத் தரிசிக்க விரும்பினான். அந்தோ! மானிடர்களில் எவ்வளவு பேர்கள் கர்மானுபந்தத்தினால் தங்களிடம் நெருங்கியிருக்கும் ஞானிகளது இயல்பை அறியாமலும், அவர்கள் நீறுபூத்த நெருப்பென்பதை உணராமலும் நடந்துகொள்ளும்படி நேரிடுகின்றது!

நந்தனது யஜமானனாகிய அந்தணனும், தனது அடிமைப் பறையனை ஓர் சாதாரணமான பறையனென மதித்து அவனது வேண்டுகோளுக்கிணங்காமல், அவனுக்குக் கடினமான வேலைகளையே இட்டுவந்தான்.

ஸத்திய ஸ்வரூபியின் அம்சமாகிய நந்தனா தனது கடமையைச் செவ்வனே நிறைவேற்றாது, ஆசையாகிய பாசத்தின் வசப்பட்டுச் சித்ஸபேசனை நாடிச் செல்பவன்? அங்கிருந்தவாறே அவனைப் போற்றினன். தன்னிடம் வர நோக்கமுள்ள கன்றைக் கவராத தாய்ப்பசுவும் உண்டோ! தனது குழந்தையைக் கட்டியணைக்காத தாய் தகப்பன் உண்டோ இப்புவியில்! தனது பக்தனது பக்தியினால் கவரப்பட்ட சித்ஸபேசனும் தனது கணங்களைக்கொண்டு, நந்தனது வேலைகளைச் சரிவரச் செய்து முடித்து அவன் அவனது யஜமானனது அநுமதி பெற

றுத் தன்னிடம் வந்துசேர உதவிபுரிந்தானன்றோ!

ஞானாக்கினியினால் தகிக்கப்பட்டு அஞ்ஞானரஹிதனாய்,ஸ்வயம்பிரகாசனாய், புடம்போட்ட பத்தரைமாத்துத் தங்கம்போன்ற மேனியுடன் கூடிய நந்தன், தனது ஜடலத்தைச் சிதம்பரத்தில் அக்னிக்களித்து, விராட்புருஷனது ஹிருதயஸ்தான மத்தியில் துலங்கும் ஆனந்த நடராஜமூர்த்தியுடன் ஐக்கியமானான்.

இதுகாறும், இப்புண்ய பூமியின், வேதாந்த சம்பந்தமான விஷயம் கூறப்பட்டது. இனி இதைப்பற்றிய இதர விஷயங்களையும் இங்கு எடுத்துக் கூறுதல் நலமென நினைப்பதால் முதலில் இதன் பற்பல நாமதேயங்களையும், அவைகளின் தாத்பரியார்த்தங்களையும்கூறுதல் நன்று.

சிதம்பரம் என்னும்பெயர், சித்+அம்பரம், எனப்பிரியும். 'சித்' என்றால், 'அறிவு' என்று அர்த்தம். 'அம்பரம்' எனின், ஆகாயம். ஆதலின், சிதம்பரம் என்னும் பதத்திற்கு, அறிவைத்தரும் ஆகாயம் என்பது கருத்து.

இப்பட்டினத்தின் புராதனப் பெயர் 'தில்லைவனம்' என்பது; அதைச் சுருக்கித் தில்லையெனவும் கூறுவர். அப்பெயர் பூண்ட மரத்தினின்றும் ஏற்பட்ட காரணப்பெயரென்பதிற் றடையில்லை.

முற்கூறிய இருபெயர்களைத் தவிர்த்து,மரங்களின் மீதேறிப் புஷ்பங்களைப் பறித்து வந்து பகவானுக்கு அர்ச்சனை செய்ய அநுகூலமான நீண்ட நகங்களுடன் கூடின புலிக்கால்களைத் தவம் செய்துபெற்ற 'வியாக்கிர பாதர்' என்று வடமொழியில் பெயர்வாய்ந்த மஹானிடமிருந்து 'புலியூர்' என்ற பெயரும், அநேகம் பெரியோர்களால் ஈசன் சேவிக்கப் பெற்றதிலிருந்து 'சேவையூர்' என்றும், அமைப்பின் அழகிலிருந்து 'சித்திரகூடம்' என்றும், நிர்மலமான ஆகாயத்தைக் குறிப்பதாகிய வெண்டாமரைமலரினின்றும் 'புண்டரீகபுரம்' என்றும் பற்பல நாமங்களாற் சிறப்புற்றது இந்நகரம்.

இது 402 சதுரமைல் விஸ்தீர்ணமுள்ள தென் ஆற்காடு ஜில்லாவில் அமையப்பெற்றிருக்கிறது. இந்த ஜில்லாவின் பாஷை தமிழ். இதன் ஜனத்தொகை சுமார் மூன்றுலக்ஷம் எனக் கூறலாம்.



இந்த ஜில்லாவின் தென்கிழக்குப்பாகம்,வடக்கில் கூடலூர், விருத்தாசலம் தாலூக்காக்களையும், தெற்கில், கொள்ளடம் என்ற மஹாநதியையும், கிழக்கில் வங்காளக் குடாக்கடலையும் கொள்ளடத்தையும், மேற்கில் திருச்சிராப்பள்ளி ஜில்லாவின் உடையார்பாளையம் தாலுக்காவையும், எல்லையாகவுடையது. இதில் அடங்கிய சிதம்பரம் என்னும் நகரம் தென் இந்தியா ரயில் மார்க்கத்தில் ஓர் ஸ்டேஷன். தவிர, அது ஓர் முனிஸிபாலிடி. தாலூக்காவின் பிரதான பட்டணம். சுமார் இருபதினாயிரம் ஜனத்தொகை அடங்கியுள்ளது.

இந்நகரம்ஆயிரத்து நூற்றைந்துஏகரா விஸ்தீரணமும் உள்ளது.சமுத்திரக்கரைக்குஎட்டு மைல்தூரத்திலும், கூடலூரிலிருந்து இருபத்தொருமைல்தூரத்திலும், சென்னையிலிருந்து நூற்றிருபதுமைல் தூரத்திலும்ஸப்கலெக்டர் ஸ்தானமாகிய திண்டிவனத்திலிருந்து ஐம்பத்தேழு மைல் தூரத்திலும் உள்ளது. இதன் வடமேற்கில் நான்குமைல் தூரத்தில் உள்ளது





பிரதிவாரமும் சந்தைகூடும் இடமாகிய புவனகிரி என்னும் ஊர். இதிலிருந்து ஆறேகால் மைல்தூரத்தில் உள்ளது கிள்ளை என்னும் பெயர்வாய்ந்த கடற்கரை ஊர்.

இந்த ஜில்லாவின் புராதன ஊர்களுள் முக்கியமானவைகள்,சிதம்பரம்,பரங்கிப்பேட்டை, சிவபுரி, ஸ்ரீமுஷ்ணம். என்னு மிடங்களே. இவைகளிற் பரங்கிப்பேட்டை, சரித்திர சம்பந்தமாய்ப் பேர்பெற்ற விடம். சிவபுரி, புகையிலைக்குப் பேர்போனவிடம்; ஸ்ரீமுஷ்ணமும், சிதம்பரமும் புண்ணிய ஸ்தலங்கள்.

இந்த ஜில்லா முழுவதையும் ஓர் சமவெளிப் பிராந்தியம் எனக் கூறலாம். வடகிழக்கில் பெரும்பான்மையான பாகம் மணல் வெளிப்பிரதேசம்.நீர்ப்பாய்ச்சலுக்கு,வெள்ளாறு,மணிமுக்தா நதி, வடவாறு, கொள்ளடத்திலிருந்து வரும் வடக்கு ராஜவாய்க்கால் முதலியன சாதனமானவைகள். வெள்ளாறு, மணிமுக்தா நதி இவைகளுக்கு அணைக்கட்டுகள் உண்டு. வெள்ளாற்றிற்கு இரு அணைக்கட்டுகளும், மணிமுக்தாநதிக்கு ஓர் அணைக்கட்டும் உண்டு. தவிர,வீராணம் ஏரியென்ற ஓர்ஏரியினின்றும் விவசாயத்திற்கு நீர்க்கால்வாய்கள் ஏற்பட்டிருக்கின்றன.

கூடலூருக்கருகில் செண்டு டேவிட் கோட்டை கட்டப்பட்டிருந்தது. 1749-ம் வருஷத்தில் தேவக்கோட்டையை எதிர்க்கச் சென்ற ஆங்கில ராணுவம் முறியடிக்கப் பெற்று திரும்பி செண்ட் டேவிட் கோட்டைக்கு ஓடுகையில் இச்சிதம்பரத்தில் தங்க நேர்ந்ததாகக் கூறப்பட்டுள்ளது. 1750-ம் வருஷத்தில், முராரிராவும், முஸபர்ஜங்கும் இங்கு சந்தித்தது சரித்திர சம்பந்தமான விஷயம். 1753-ம் வருஷத்தில்,பிரஞ்சுக்காரர்கள் புவனகிரியிலுள்ள கோட்டையைப் பிடித்துக் கொண்டு, இங்கிலீஷ்காரர்கள் விட்டுவிட்டு ஓடிப்போன சிதம்பரம் கோவிலை ஆக்கிரமித்துக்கொண்ட விஷயம் சரித்திரத்தினின்றும் விளங்கும். அதே வருஷத்தில் பிரெஞ்சுக்காரர்களும், மஹாராஷ்டிரர்களும் திருச்சிராப்பள்ளிக்குப் போகுமுன் சிதம்பரத்தில் சந்தித்தார்கள். 1759-ம் வருஷம் சிதம்பரம் கோவிலைப் பிடித்துக்கொள்ள இங்கிலீஷ்காரர்கள் முயன்றது வீணானபோதிலும், 1760-ம் வருஷத்தில் அதிலிருந்த ராணுவம் சரணாகதியடைந்தது. யுத்தசம்பந்தமாக, ஹைதர் ஆலி இந்தச் சிதம்பரம் கோவிலை பந்தோபஸ்து செய்ததாகச் சரித்திர ஆசிரியர்கள் கூறுகின்றனர். 1781-ம் வருஷத்தில் ஸர் ஐர் கூட் என்பவர், இக்கோவிலை எதிர்த்து முறியடிக்கப்பட்டார்.

இங்குள்ள சிவாலயம் நகரமத்தியில் முப்பத்து ஒன்பது ஏகரா விஸ்தீரணமுள்ளதாகவிருக்கிறது. கோவிலுக்கு ஸபாநாயகர் கோவிலென்றும் பெயர் உண்டு. இங்கு, இந்தியாவில் ஆதி சங்கராசாரியரால் பிரதிஷ்டை செயயப்பட்ட,பிருதுவி,அப்பு, தேயு, வாயு, ஆகாயம் என்ற ஐந்து லிங்கங்களில், ஆகாச லிங்கம் இங்குளது. காஞ்சீபுரத்தில் பிருதிவி லிங்கமும், ஜம்புகேசுவரத்தில் எக்காலத்தும் நீர் வடியும் அப்புலிங்கமும், திருஅண்ணாமலையில் ஜோதிமயமான தேஜோலிங்கமும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றனவென்று கூறப்பட்டிருக்கிறது. இந்தச் சிதம்பரம் கோயிலுள் ஐந்து ஸபைகள் இருக்கின்றன. அவையாவன (1) கனகஸபை (2) சித்ஸபை (3) தேவஸபை (4) நிருத்தியஸபை (5 ராஜஸபை. இவைகளைப் பற்றிக் கூறப்புகின் விரியும்.

தவிர, இக்கோவிலுள் ஓர் விஷ்ணு ஆலயமும், ஓர் பிள்ளையார் கோவிலும் இருக்கின்றன. இந்தப் பிள்ளையார் கோவிலிலுள்ள விநாயக விக்கிரகம், இந்தியாவிலுள்ள விநாயக விக்கிரகங்களுட்பெரிதெனக் கூறுகின்றனர்.

இதன் மத்தியில், அழகிய பார்வதியம்மன் கோவிலிருக்கிறது. தவிர, இங்கு ஒவ்வொரு ஸ்தம்பமும் ஒரே கல்லால் ஆகிய, ஆயிரத்து நூற்றுக் கதிகமான கல்ஸ்தம்பங்களால் தாங்கி நிற்கும் ஓர்மண்டபமும், சிவகங்கை அல்லது 'ஹேமபுஷ்கரணி' என்ற பெயர்வாய்ந்த திருக்குளமும் இருக்கின்றன. ஹைதர் இவ்வாலயத்துள் ஒருக்கால் தங்கியபொழுது இந்த ஆயிரக்கால்மண்டபத்தைப் பின்னப்படுத்திய விஷயம், அதன் யானைகள் முதலிய சிலைகள் முண்டங்களாக விருப்பதிலிருந்து விளங்கும். இவ்வாலயம் முழுதும் கருங்கற்களால் அமைக்கப்பெற்றிருக்கின்றது. இக்கருங்கற்கள், வெள்ளாற்றைக் கடந்து நாற்பது மைல்கள் தூரம் கொண்டுவரப்பட் டிருக்கவேண்டும்.

இவ்வாலயத்தின் கோபுரங்கள் நூற்று இருபத்திரண்டடி உயரமுள்ளவைகள். அவைக

ளில் ஏற்றப்படும் விளக்குகள், சமுத்திரத்தில் பத்து மைல் தூரம்வரையில் தெரியுமாம். இதனுள் இருக்கும் சிவகங்கையின் அடியில் கையில் ஒட்டாத ஓர்வித கருவண்டல் படிந்திருக்கிறது. இதற்குக் காரணம், வெகு காலமாக அபிஷேகம் செய்யப்பட்ட ஏராளமான நெய் தேன் முதலியன இதில் வந்து விழுந்திருப்பதேயெனக் கூறுகின்றனர்.

இந்தக் கோவில்முழுவதும், தில்லைவாழ் அந்தணர்களாகிய, தீக்ஷதர்கள் என்னும் பிரிவினர்களுக்குச் சொந்தம். அவர்களுக்கு அவ்வூரை விட்டு வேறு ஊர்களில் சம்பந்தமில்லை. தில்லைப்பெண்டிர் எல்லை தாண்டப்படாதென்பது அவர்களது கொள்கை.

லங்கை ஹிந்துக்களும், மதுரை நாட்டுக் கோட்டைச் செட்டிகளும், இக்கோவிலைப் பரிபாலிக்கிறார்கள் என ஒருவகையிற் கூறலாம். ஏனெனில் தீக்ஷதர்களின் பெரும்பான்மையான வருமானம் இவர்களிடமிருந்தே.

ஒருகாலத்தில், இக்கோவிலில், ஒவ்வொரு கணுவும் மூன்றடி நீளமுள்ளதாயும், மொத்தத்தில் ஐந்நூற்று நாற்பத்து எட்டடி நீளமுள்ளதாகவுமிருந்த ஓர் ஆச்சரியத்தை விளைவிக்கக்கூடிய கருங்கற் சங்கிலி ஒன்றிருந்ததாகக்கூறுகின்றனர். ஆனால் தற்சமயம் அதன் ஒருபாகமாவது அங்கு காணப்படவில்லை.

பிரதி வருஷமும், மார்கழி (டிசம்பர்) மாதத்தில், இந்த ஆலயத்தில் ஆருத்திரா தரிசனமென்ற முக்கியத் திருநாள் கொண்டாடப்படுகிறது அப்பொழுது ஆயிரக்கணக்கானஜனங்கள் அங்குக் கூடுகின்றனர்.

இவ்வூரில் விசேஷமான இன்னொரு விஷயம் உளது. இங்கு அநேகம் சத்திரங்கள் உண்டு. மொத்தத்தில் அறுபத்து ஒன்பது இருக்கின்றன. இவைகளுள் பெரியது சுமார் தொளாயிரம் (ஒன்பதுநூறு) பெயர்கள் அடங்கக்கூடிய 'காசிமடம்' என்பது.

இந்த சந்தர்ப்பத்தில், 'சிதம்பரத்திலே பிறந்த பிள்ளைக்குத் திருவெம்பாவை கற்றுக் கொடுக்கவேண்டுமோ?' 'பொன்னம்பலத்துக்கும், புவனகிரிப் பட்டணத்திற்கும் என்றைக்கும் உண்டான இழவு', என்னும் இரு பழமொழிகளும் ஞாபகத்திற்கு வருவது இயல்பு. ஏனெனில் சிதம்பரவாசிகளுக்குத் தெய்வ பக்தி தொட்டிற்பழக்கம் அன்றோ! பன்முறையும், போர்புரியும் அரசர்களால் ஆக்கிரமிக்கப்பட்டு, ஐரோப்பாக் கண்டத்தில் பெல்ஜியம் என்ற சிறு தேசத்துடன் ஒருவாறு ஒப்பிட்டுக் கூறும்படியாகச் சண்டைக்காலங்களில் கஸ்தியடையும் பிரதேசம் இது அன்றோ!

இது நிற்க, இவ்வூரில் தென்மேற்கு பாகத்தில் 'இளமை ஆக்கினார் கோவில்' என்ற ஓர் கோவிலும், அதன் எதிரில் ஓர் குளமும் இருக்கின்றன, ஓர் காலத்தில் சிவபக்தர்களான தம்பதிகள் ஒருவருடன் ஒருவர் பேசாமலிருக்க நேர்ந்தது. அவர்களை ஒற்றுமைப் படுத்தக் கடவுள் ஓர் அதிதியாக அவர்கள்முன் தோன்றி, அவர்கள் கைகோர்த்தவண்ணம் எதிரிலுள்ள குளத்தில் ஸ்நானம்செய்து வந்தாலொழிய உணவு அங்கு உட்கொள்ளமாட்டேன் எனக் கூறியதும், அவர்கள் அவ்வாறே செய்து கரையேற, கிழவர்களான அவர்களிருவரும் வாலிபதசையை அடைந்திருந்ததையும், அதிதி காணாமல் மறைந்துபோனதையும் கண்டதிசயித்து, வந்தவர் கடவுளேயென அறிந்து அதுமுதல் ஒற்றுமையுடன் வாழ்ந்தார்களாம். இந்த வயதுமுதிர்ந்த தம்பதிகளை இளமை வாயும்படிச் செய்த விஷயத்தைக் கொண்டாட ஏற்பட்ட இக்கோயிலுக்கு இளமையாக்கினார் கோவிலெனப் பெயர்வந்ததெனக் கூறுகின்றனர்.

மேற்கு எல்லைக்கோடியில், துர்வாஸ மஹாரிஷியால் ஸ்தாபிக்கப்பட்ட ஓர் சிறிய கோவிலும் இருக்கிறது. ஒருக்கால், மஹா முன் கோபியாகிய துர்வாஸ மஹரிஷி எந்த சமயத்திற் போனாலும் அதிதிபிக்ஷை நடக்கக்கூடிய விடம் சிதம்பரமெனக் கேள்வியுற்று அதைப் பரிசோதிக்குமாறு, ஓர் இரவில், அகாலத்தில் அங்கு வந்து சேர்ந்தனராம். எங்கும் ஓரே இருட்டாக விருந்தது. அவரைக் கவனிப்பார் யாரையும் காணாததால் கோபமூண்டு 'எருக்குமூண்ட தில்லை, ஈசரிங்கில்லை' எனச் சபித்தாராம். இதைக்கேட்ட அம்மன் பயந்து, மேற்கெல்லையில் ஓர் வீட்டை உண்டாக்கி, விளக்கேற்றி வைத்துக்கொண்டு, அன்னபானாதிகளுடன் காத்திருந்து, துர்வாஸ மஹரிஷி அங்குவந்ததும், அவரை எதிர்கொண்டு சென்று, உபசரித்து அறுசுவையுடன் உண்வளித்தவுடன், ஈசரில்லாமற் போகும்படி அவர் சபித்துவிட்டால், அவ்விடத்தில் தானெப்படி





யிருத்தல் இயலும் எனக் கேட்டதும், அவர் அகமகிழ்ந்து 'எருக்கழிந்த தில்லை, ஈசர் இங்குண்டு' என ஆசீர்வதித்து, அக்கோவிலை ஸ்தாபித்து ஈசரைப் பூசித்தாரெனக் கூறப்பட்டுளது.

இவ்வூரின் வடக்கெல்லையில், கிராமதேவதையாகிய தில்லைஅம்மன் கோவில் ஸ்தாபிக்கப்பெற்றிருக்கிறது. அவ்வம்மனது உக்கிரத்தை சகிக்கமுடியாது ஜனங்கள் தபிக்க, கடவுள், அவளைத் தோற்கடித்து ஊரைவிட்டுத் துரத்தி எல்லைக்கரையில் வசிக்கும்படிச் செய்தாரென்று கூறப்படுகிறது.

ஆதலின் இத்தகைய மேன்மைபொருந்திய சிதம்பரத்தின் முக்கிய ஆலயத்தின்கண் துலங்கும் ஆநந்த நடேசனைச் சாஸ்திரவிதிப்படி மெய்யன்போடு, முதலில் புறக்கண்ணாலும், பிறகு அகக்கண்ணாலும் தரிசனம் செய்து போற்றின், பந்தம் நீங்கி ஞானமுதித்து ஆனந்தம் விளையுமென்பதும், ஆன்மநிலை விளங்கி முக்தி கிடைக்குமென்பதும் திண்ணம்.

---

**அலெக்சாந்தரின் பெருந்தன்மை.**—முற்காலத்தில் அலெக்சாந்தர் இந்தியாவின்மேற் படையெடுத்துச் சிந்து நதிக்கரையிலுள்ள தேசங்களைக் கைப்பற்றினான். இவ்வரசன் போர்க் களத்திலேயே கவிகள் செய்யும் வல்லமையுள்ளவன். எப்போதும் பண்டிதர்களால் சூழப்பட்டு கல்விப்பிரியனாய்க் காலங்கழிப்பதே இவனது சுபாவம். இத்தகைய சாமர்த்தியசாலியான அலெக்சாந்தர், இந்து சாஸ்திரிகளைப் பரீக்ஷிக்க வேண்டி ஓர் ஜோசியனையும், ஓர் தார்க்கிகனையும் வரவழைத்தான். முதலில் தன் ஜோசியனை நோக்கி 'இன்றைக்கு எவ்வளவு மழை பெய்யும்' என்றான். அவன் கணக்குப்படி ஓர் குடம் மழை பெய்யுமென்றான். பிறகு தான் வரவழைத்த இந்து ஜோசியனைக் கேட்டான். அவன் ஒரு விரற்கடை குறைய ஓர் குடம் மழைபெய்யும் என்றான். இவர்களில் இன்னார் சொன்னது உண்மையென்று அறியவேண்டி, மழைபெய்ய ஆரம்பித்தவுடன் ஓர் குடம் வைத்தான். அதில் உண்மையாகவே குடம் நிறைய மழைபெய்தும், கடைசியில் ஜலம் சற்றுத் ததும்பி வழிகிறவாடிக்கையாதலால் மழையோய்ந்து குடத்தைப் பார்க்கும்போது ஓர்விரற்கடை குறைவாகவிருந்தது. உடனே அலெக்சாந்தர் இந்து ஜோஸ்யனது லௌகிகஞானத்துக்கு அகமகிழ்ந்து அவனுக்கு வேண்டிய வெகுமதிகளைக் கொடுத்தான்.

***

# ஸ்ரீ லோகமான்ய பாலகங்காதர திலகர்

## SRI LOKAMANYA BALGANGADHAR TILAK

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ், எம். ஏ., எல். டி.]

(53-ம் பக்கத் தொடர்ச்சி.)

**1914**-ம் வருஷம் ஜூலை மாதம் திலகர் சிறையினின்று விடுபட்டவுடனே மறுபடியும் தமது தேசத்துக்காகவே உழைக்க ஆரம்பித்தனர். அவர் யத்தனித்த வேலைகளில் முக்கியமான தென்னவென்றால், காங்கிரஸ் மஹாசபையிலிருந்த இரு பிரிவினர்க்கும் சச்சரவு, மனஸ்தாபம் முதலியவை ஒன்றுமில்லாமல், இருதிறத்தாரும் ஒன்று சேர்ந்து பொது நன்மைக்காகப் பாடுபடவேண்டுமென்பதே. அதற்குச் சாதனமாகச் சென்னை ராஜதானியில் மிஸ்ஸெஸ் பிஸெண்டும் இவருக்கு ஒத்தாசையாயிருந்தார். ஸ்ரீமான் கோகலேக்கும் அது உத்தமம் என்று தோன்றியதால், எல்லோரும் ஓரே மனதாய் காங்கிரஸிலிருந்த இருபிரிவினரும் ஒன்றாய்க் கூடவேண்டும் என்று சிரமப்பட்டார்கள்.

ஆயினும் நாமொன்று நினைக்கத் தெய்வமொன்று நினைக்கிறதல்லவா? பம்பாயிலுள்ள சிலர், "அப்படிச் செய்தால் திலகருக்கு இன்னும் செல்வாக்கு அதிகரித்துவிடும். நமது வார்த்தையை உலகம் மதிக்கவே மதிக்காது" என்று வீண் எண்ணங்கொண்டு பலவிதமான அற்ப உபாயங்களால் ஒற்றுமை யுண்டாகாமலிருக்கச் செய்தனர். அதன் பொருட்டு 1914-ம் வருஷத்தில் சென்னப்பட்டணத்தில் நடந்தேறிய காங்கிரஸில் அது விஷயத்தைப் பற்றி ஒருவரும் அதிக கவனம் செலுத்தவில்லை.

காங்கிரஸ் நடந்து இரண்டு மாதத்துக்குள்ளாக (1915-ம் வருஷம் பிப்ரவரி மாதத்தில்) ஸ்ரீமான் கோகலே காலஞ்சென்றனர். இதனால் இந்தியர்கள் துக்கசாகரத்தில் மூழ்கினவராய், ஒற்றுமையின் மேன்மையை நன்கறிந்து, இனியாவது காங்கிரஸுக்குள் வேறுபாடு இருக்கவே கூடாது என்று தீர்மானஞ் செய்தனர். இதனாலும், மற்றும் சிலகாரணங்களாலும் லக்னோ

(லக்ஷ்மணபுரி) வில் 1916-ம் வருஷம் நடந்த காங்கிரஸில் வெகு நாளாய் எதிர்பார்த்த எண்ணம் நிறைவேறி காங்கிரஸ் ஒற்றுமைப்பட்டது. இதனின்றும், ஒற்றுமைக்காகப் பாடுபட்டவர்களில் திலகர் வெகுவாய்ச் சிரமப்பட்டனர் என்பது வெளிப்படையாகும்.

இதற்குள்ளாகப் பூலோகம் முழுவதும் இதுவரையில் பார்த்திராத கோரமான ஐரோப்பிய யுத்தம் ஆரம்பித்திருந்தது. அப்போது இராஜப்பிரதிநிதியாயிருந்த ஹார்டிஞ்சு பிரபுவானவர் இந்தியச் சேனையை ப்ரான்ஸ் தேசத்தில்சண்டைபுரியும்படி அனுப்புவித்தார். பிரஞ்சுக்காரர்களுக்கும், இங்கிலீஷ்காரர்களுக்கும் இச்சேனை எவ்வளவு உதவியாயிருந்தது என்பதை ஆங்கிலேய மந்திரிகளே வெகுவாய்ப் பாராட்டிக் கூறியிருக்கின்றனர். "நமது ராஜ்யத்துக்கே ஆபத்து நேர்ந்த சமயத்தில் நம்மிடத்திலுள்ள விசுவாசத்தினல் இவ்விந்தியர்கள் உதவிபுரிந்திருக்கின்றனரே, இவர்களுக்கு இனிமேல் கொஞ்சம் கொஞ்சமாகவாவது சுயஆட்சி கொடுக்கவேண்டும்" என்று சொல்லி 1917-ம் வருஷம் ஆகஸ்டுமாதம் 20-ம் தேதி மாண்டேகுவே சொன்னர்.

இப்படி உதவிபுரிவதில் "இந்திய காப்புச் சேனை" (Indian Defence Force என்று ஒரு சேனையைக் கவர்ன்மெண்டார் சேகரிக்கலானர்கள். எப்போதுமே இந்தியர்களுக்குச் சேனையில் மேலதிகாரம் கொடுக்க வேண்டுமென்று திலகர் சொல்லியதால் இச்சேனையில் இந்தியர் பலரும் வந்து சேரவேண்டுமென்று வற்புறுத்தி மஹாராஷ்டிரம் முழுவதும் இவர் பிரசங்கங்கள் செய்தனர்.

இப்படிச் சுயநலத்தையே நினைக்காமலிருந்தும் இவருக்கு வேண்டாதவர்கள் இவரைப் படாத பாடு படுத்திவைத்தனர். 1916ம்-வருஷம் இவர் "ஹோம் ரூலுக்காகச்" செய்த பிரசங்கங்களில் இவர் பிரிட்டிஷ் அரசாட்சியைக் கண்டித்தாரென்றும், அப்படிச் செய்ததால் ஜனங்களுக்குள்ள ராஜவிசுவாஸத்தைக் குறைத்தனரென்றும் இவர்மேல் பிரியாது கொண்டுவந்தனர். 1916-ம் வருஷம் ஆகஸ்டுமாதத்தில் பூனவிலிருந்த டிஸ்டிரிக்ட் மாஜிஸ்ட்ரேட் திலகர் செய்தது தவறென்று சொல்லி இவருக்கு 40,000 ரூபாய் அபராதம் போட்டனர்.

இதில் ஒரு விசேஷம் என்னவென்றல், அவருக்கு அப்போதுதான் ஷஷ்டிபூர்த்தி(அறுபதாம் கலியாணம்)நடந்தசமயம். மஹாராஷ்டிரத்திலிருந்தவ ரெல்லாருஞ்சேர்ந்துஇவருக்குப் பொதுநன்மைக்காகச் செலவழிக்க ஒருலக்ஷம் ரூபாய் கொடுத்திருந்தனர். இராஜதானியெல்லாம் திலகர் பிறந்த தினத்தைக் கொண்டாடிக் கொண்டிருந்தபோது பூன மாஜிஸ்ட்ரேட் இவ்வாறு செய்தனர் என்று கேட்டு எல்லோரும் துக்கித்தார்கள்.

ஆதலால் திலகர் உடனே பம்பாய் ஹைகோர்ட்டுக்கு அப்பீல் செய்தனர். மிஸ்டர் ஜின்ன திலகர் பக்ஷத்தில் பேசி, இவர் செய்ததிலும் பேசியதிலும் ஒன்றுவது குற்றமாகாது என்று ஐயந்திரிபறக் காட்டினர். நியாயாதிபதிகளும் அதைச் சரியென்று ஒப்புக்கொண்டு கீழ்க்கோர்ட்டின் நடவடிக்கை தவறென்று சொன்னர்கள். அதனல் தற்காலத்துக்குத் திலகருக்குக் கொஞ்சம் சந்தோஷமாயிருந்தது என்று நாம் கூருமலே எல்லோருக்கும் தெரியும்.

ஆயினும் அவருக்கு மனம் நிம்மதியாயிருக்கவில்லை. ஸர் வாலண்டைன் சிரால் (Sir Valentine Chirol) மேல் இங்கிலாந்தில் பிரியாது புரிந்திருந்தனர் என்று முன்னமே நாம் கூறினேமல்லவா ? அதற்காக சிரால் இந்தியாவுக்கு வந்து தனக்கு வேண்டிய சில விஷயங்களைத் தெரிந்துகொள்ள யத்தனித்ததில் பம்பாய் கவர்ன்மெண்டார் பெரும் உதவியாயிருந்தனர் என்று ஒரு பெரிய வதந்தியுண்டாயிருந்தது. "அது எப்படியாயினும் நாம் இங்கிலாந்துக்குப் போவோம்" என்று இவர் நினைத்து பாஸ்போர்ட்*வேண்டி கவர்ன்மெண்டாருக்கு எழுதினர்.

பாஸ்போர்ட் கொடுக்கச் சற்றும் மனதில்லாமல் இரண்டு தடவை 'கொடுக்கமுடியாது" என்று மறுத்தனர். ஒருதரம் பாஸ்போர்ட் கொடுத்தும் இவர் கொழும்புவுக்குப் போனபின் "இங்கிலாந்துக்குப் போகக்கூடாது" என்று தந்தியனுப்பி இவரை வருத்தினர்.

இது மாத்திரமல்ல. பஞ்சாப் மாகாணத்திலுள்ள லெப்டினண்ட் கவர்னர் "திலகர் பஞ்சாபுக்கு வரக்கூடாது" என்று ஒரு விளம்

* யுத்தகாலத்தில் பாஸ்போர்ட் இல்லாமல் இந்தியாவிலிருந்து இங்கிலாந்துக்குப் போகமுடியாது.





பரம் செய்தனர். "நான் பஞ்சாபுக்கு வரவேண்டும் என்று ஒரு நாளும் அபிப்பிராயப்படவில்லை" என்று மறுதந்தி இவர் கொடுத்தார்.

ஆயினும், இந்திய காரியதரிசியாகிய மாண்டேகுவும், இராஜப்பிரதிநிதியான செம்ஸ்போர்டு பிரபுவும் சண்டை முடிந்தவுடன் இந்தியாவுக்கு எவ்விதமான சீர்திருத்தங்கள் செய்யவேண்டும் என்று தெரிந்துகொள்வதற்காக டெல்லிக்கு வந்து பெரிய தேசாபிமானிகளை வரவழைத்து ஒவ்வொருவருடைய அபிப்பிராயத்தையும் அறியலானர்கள். அப்போதுமாத்திரம் திலகரை டெல்லிக்கு வரலாம் என்று சொல்லி மறு உத்தரவு அளிக்கப்பட்டது.

இப்படிப் பலநாட்கள் கழிந்தபின் கடைசியில் திலகர் இங்கிலாந்துக்குப் போகலாம் என்று கவர்ன்மெண்டார் கூறினர். அப்படியே இவர் அங்கு சென்று, இந்தியாவின் நிலைமையை இங்கிலீஷ்காரர்களுக்கு நன்கு விளங்கும்படி பல பிரசங்கங்கள் செய்துவந்தார். சிராலுக்கு எதிராய் இவர் கொண்டுவந்த பிரியாதை இங்கிலாந்தில் தள்ளிவிட்டனரென்றாலும், வேறு விதத்தில் இந்தியாவின் முன்னேற்றத்துக்காக இவர் அங்கு பாடுபட்டனர்.

அப்போதுதான் "இந்திய சீர்திருத்தக் சட்டம்" என்ற ஒரு சட்டத்தை,பார்லிமெண்டில் கொண்டுவர மாண்டேகு பிரயத்தனம் செய்த சமயமாதலால், அவ்விஷயத்தில் தமக்குண்டான அப்பிராயத்தை தைரியமாய்ச் சொல்லி எல்லோரும் மெச்சும்படி நடந்துவந்தனர்.

இங்கிலாந்திலிருந்து திரும்பிவந்து இவர் அதிக நாள் ஜீவித்திருக்கவில்லை. 1920-ம் வருஷம் ஜுலை மாதம் முதலிலேயே இவருக்கு தேகம் அசௌக்கியமாயிருந்தது என்று தெரிந்தது. ஏதோ காரியமாக இவர் பூனவை விட்டு பம்பாயிக்கு வந்து "ஸர்தார் கிருகம்" என்ற விடத்தில் தங்கியிருந்தனர். அசௌக்கியம் அதிகரித்தவுடனே பம்பாயிலுள்ள பெரிய டாக்டர்களெல்லோரும் வந்து பார்த்து அதிக ஜாக்கிரதையாய் அவருக்கு வேண்டிய சௌகரியம் செய்துகொடுத்தனர். ஆயினும் ஒன்றும் பயன்படவில்லை. 1920-ம்ஷ ஜுலை மீ 31-வ மண்ணுலகத்தை விட்டு இவர் விண்ணுலகுக் கேகினர்.

இச்செய்தி தெரிந்தவுடனே பம்பாய் ஜனங்களெல்லோரும் துக்கபரவசராய் "இப்படிப் பட்ட மகான் மறுபடி இந்தியாவில் எப்போது உதிப்பரோ?" என்று ஏக்கங்கொண்டு, இவர் தேகத்தைக் கடற்கரை யோரத்தில் வைத்து உத்தரக்கிரியைகளைச் செவ்வனே நடத்தி, லக்ஷக்கணக்காய் ஜனங்கள்கூடி இவரது அதிசய குணங்களை வர்ணித்துக்கொண்டும், இவர் பெருமையை நினைத்துக்கொண்டும், இரண்டு நாள் வரையில் ஓரே கோஷமாய் ஆரவாரித்திருந்தனர்.

சீர்திருத்தச் சட்டம் இந்தியாவில் அமுலுக்கு வந்த பிற்பாடு இவர் உயிர்வாழ்ந்திருப்பின் நமக்குள்ள, பல சந்தேகங்களையும் இவர் தமது புத்திகூர்மையால் நிவர்த்தித்து, மேலும் மேலும் தமது ஜன்ம பூமி முன்னேற்றமடைந்துவருவதைக் கண்டுகளித்திருப்பார்.அதற்கு நாம் கொடுத்துவைக்கவில்லையே என்பதுதான் பலருக்கும் உள்ளதோர் துக்கம்.

"நஞ்சக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கமே, குப்பைக்குள் இருந்தாலும் குன்றிமணி குன்றிமணியே" என்று உலகத்தார் சொல்லும் வழக்க மொழிக்கிணங்க, ஸ்ரீமான் பாலகங்காதர திலகருடைய பூதவுடலானது நசவரமான இந்தப் புவியிலிருந்து நீங்கிய தென்றாலும், அவரது புகழுடம்பானது கற்பகோடி காலம் நம் மத்தியிலிருந்து விலகாதென்பது நிச்சயம் !

ஒவ்வொரு தேசத்திலுள்ள மகான்களின் சரித்திரத்தை அறிவதில் நமக்குப் புலப்படுவதென்ன வென்றல், நாமும் அவர் உதாரணத்தை வைத்துக்கொண்டு, கடவுள் நமக்கு எந்த விடத்தில் வைத்திருக்கிருரோ அவ்விடத்திலேயே யிருந்துகொண்டு நம் சக்திக்குத் தகுந்தவாறு நமது தேசத்தின் நன்மைக்காக வேலைசெய்யவேண்டுமே தவிர, சுயநலத்தைப் பாராட்டக் கூடவே கூடாது என்பதுதான்.

ஆதலின் இத்திலகர் பெருமானின் சரித்திரத்தைச் செவ்வனே எண்ணி எண்ணி அவர்போல் எல்லோரும் தேசபிமானிகள் ஆகவேண்டும் என்பதே எமது பிரார்த்தனை.

## விவசாய விஷய அறிவு

## A KNOWLEDGE OF AGRICULTURE

[ஸ்ரீமான். எஸ். பஞ்சாபகேசசர்மா, பி. ஏ., எல். டி.]

உயிருடன் வாழ்வதற்கு நமக்கு ஆகாரம் எவ்விதம் அவசியமோ, அதேமாதிரி செடிகளுக்கு ஆகாரம் அவசியம். நாம் சாப்பிடாவிட்டால் இளைத்துக் களைத்துப்போகிறோம். இவ்விதம் இன்னும் சிலநாள் ஆகாரமின்றியிருந்தால் இறந்துபோவோம். அதேமாதிரிதான் செடிகள். ஆனால் அவைகள் சாப்பிடுவதை நம்மால் பார்க்கமுடியாது. நமக்குப் பெரிதான ஒரே வாய் இருக்கிறது. ஆனால் செடிகளுக்கோ கண்ணுக்குத் தெரியாத அநேக சிறு வாய்கள் இருக்கின்றன. அவைகளின் வாயைப் பார்க்கவேண்டுமானால், மிக நுட்பமான வஸ்துவைப் பெரிதாகக் காட்டும் பூதக்கண்ணாடி வைத்துத்தான் பார்க்கமுடியும். நம்மைப் போல் அவை ஆகாரம் சாப்பிடுவதில்லை. ஆனால் இவ்வளவு சிறிய வாய்களினால், நாம் தண்ணீர் குடிப்பதுபோலவும் மூச்சுவிடுவது போலவும் அவை ஆகாரத்தை உட்கொள்ளுகின்றன.

குழந்தைகளாக இருந்தபோது நாமும் அவைகளைப்போலவே சாப்பிடாதபடி ஆகாரத்தைப் பாலாகக் குடித்து வளர்ந்தோம். ஆனால் நாம் வளர்ந்து பெரியவரானதும், சாப்பிட ஆரம்பித்துவிட்டோம். அவைகளோ நாம் குழந்தைப்பருவத்தில் இருந்ததைப்போலவே, எப்போதும் ஆகாரத்தைப்பால்போல் குடித்து வளர்கின்றன. அவைகள் உட்கொள்ளும் ஆகாரம் வெறுந்தண்ணீரில்லை. ஏனென்றால் தண்ணீர் மாத்திரம் ஆகாரமாகாது. அதில் ஆகாரப்பொருள் கரைந்திருக்கும். உதாரணமாக,

சோதனை:—

பார்வைக்குத் தண்ணீரைப்போலத் தெளிவாகஇருக்கும் தண்ணீரில்கொஞ்சம்சர்க்கரை போட்டால், சர்க்கரை கண்ணுக்குத் தெரியாமல், மறைந்து போகிறது. ஆனால் சர்க்கரை தண்ணீருக்குள்ளேதான் இருக்கிறது. அந்தத் தண்ணீரைக் குடித்தால் தித்திக்கும். இதிலிருந்து தண்ணீர் தெளிவாக இருந்தாலும் சில ஆகார வஸ்துக்கள் கண்ணுக்குத் தெரியாதபடி, அதில் கரைந்திருக்கலாம் என்று தெரிந்துகொள்ளுகிறோமல்லவா? இதேமாதிரி செடிகள் உட்கொள்ளும் எவ்வித ஆகாரத்தையும், தண்ணீரில் கரைத்தே உட்கொள்ளுகின்றன. இவ்விதம் உட்கொண்டு வளர்கின்றன.

உங்களுக்கு இப்பொழுது செடிகளும் நம்மைப்போல ஆகாரம் உட்கொள்ள வேண்டியது என்பது தெரிகிறதல்லவா? இப்போது அவைகளுக்கு ஆகாரம் எங்கிருந்து கிடைக்கின்றனஎன்பதைச் சொல்லுகின்றேன். ஆகாரத்தை செடிகள் மூன்று இடங்களிலிருந்து சம்பாதித்துக்கொள்ளுகின்றன. சிறு கன்றுக்குட்டி, மாட்டைப்போல் வைக்கோல் தவிடு தின்பதில்லையென்று உங்களுக்குத் தெரியுமே. ஆனதால் கன்றுக்குட்டி தானாக வைக்கோல் புல் தின்னும்வரை, பசு தன் பாலைக் கன்றுக்குட்டிக்குக் கொடுத்து வளர்க்கின்றது.

இதேமாதிரி சிறு செடிகளுக்கும் முளைக்கும்போது ஆகாரம் தாயினிடமிருந்து கிடைக்கின்றது.

சில தினங்களுக்கு முன்பாக, கொஞ்சம் மொச்சைக் கொட்டை யெடுத்து, நனைத்து ஒரு ஓட்டில்வைத்தேன். ஒவ்வொருகொட்டையிலிருந்தும், முளை கிளம்பிற்று. அதை நாம் கையால் எடுக்கும்போது, ஜாக்கிரதையாக எடுக்காவிட்டால், முளை ஒடிந்துபோகும். இம்மாதிரி சிறு முளை தானாகவே ஆகாரம் சம்பாதித்துச் சாப்பிடமுடியாது. ஆகையால் அதற்கு வேண்டிய ஆகாரம் மொச்சைக்கொட்டையிலிருந்தே கிடைக்கவேண்டும். அவைகளின் கீழ் ஈரம் உலர்ந்து போகாதபடி, ஒரு நனைந்த மை யொத்தும் காகிதத்தை வைத்தேன். முளையுண்டாகும்போது அதற்கு வேண்டிய ஆகாரம் அதன் தாயாகிய விதையிலிருந்தேவருகிறது. அதுவும் தண்ணீருடன், ஆகாரச் சத்தைக் கலந்து பால்போல் கொடுக்கப்படுகிறது. பால்போலவே ருசியாக இருக்கும். சிறு முளை, வெகு பிரியமாக அந்தப் பாலை உட்கொண்டு, வளர்கிறது. ஆனால் அந்த விதையில் பால் எவ்விதம் உண்டாயிற்று என்பதைப்பற்றி பின்னாலே சொல்லுகிறேன். தற்காலம் பசு கன்றுக்கு பால் கொடுத்து வளர்ப்பதைப் போல விதை, அதிலிருந்து உண்டாகும் முளைக்கு ஆகாரத்தைக்கொடுத்து வளர்க்கிறது. இவ்விதமே விதையிலிருக்கும் ஆகாரம் செலவாகும் வரையில் அதை உட்கொண்டு முளை வளர்கிறது. விதையிலுள்ள எல்லா ஆகாரமும் . செலவாகிவிட்டால், சிறு முளை என்ன செய்யும்? இதற்குத் தண்ணீர் விசேஷமாக வேண்டியிருக்கிறது. தண்ணீர் குறைந்துபோனால் சிறு முளை உலர்ந்து போகும். பிழைப்பதில்லை.

தாய் தூற்றினால் ஊர் தூற்றும், கொண்டவன் தூற்றினால் கண்டவன் தூற்றுவான்.



மூன்று விதைகளையெடுத்து நனைத்து, ஒன்றை, தண்ணீர் நிறைந்த பாத்திரத்தில் ஒரு காகிதத்தில் வைப்போம். மற்றொன்றை வெறும் தரையில் வைப்போம். இன்னும் ஒன்றை தோட்டத்து மண்ணில் புதைத்து தண்ணீர் விடுவோம். இம்மூன்றும் எப்படியாகிறதென்று கவனிப்போம். தண்ணீரும் மண்ணும் என்ன செய்கிறதென்று கவனிப்போம். இவை மூன்றில் எது நன்றாய் வளர்கிறது? வெறும் தரையில் வைத்தது, வாடி வதங்கி, உலர்ந்துபோய்விட்டது. ஏன்? தண்ணீர் இல்லை. அதனால் விதையிலுள்ள ஆகாரத்தைக் கரைத்து, பாலாக முளைக்கு அனுப்ப முடியவில்லை. ஆகையால்தான் தன்னிடம் இருக்கும் ஆகாரத்தைப் பாலாக முளைக்கு அனுப்பி, வளரச் செய்ய, விசேஷத் தண்ணீர் வேண்டும் என்று சொன்னேன். தண்ணீர் இல்லாமையால் பால் இல்லை. அதனால் உலர்ந்து போய்விட்டது.

தோட்டத்திலுள்ளது, நன்றாய் வளர்ந்திருக்கிறது. மற்றதோ, தண்ணீர் இருந்தாலும் சீக்கிரம் இறந்துபோகும்போலத் தோன்றுகிறது. சீக்கிரம் இறந்துதான் போகும். அந்த விதையைக் கையில் எடுத்து,அமிழ்த்திப் பார். அதற்குள் ஒன்றும் இல்லை. முதலில் உலர்ந்துபோன விதையை, அமிழ்த்திப் பார். அது இவ்விதம் இல்லை. ஏன்? இதற்குத் தண்ணீர் இல்லாமையால், விதையிலிருந்த ஆகாரத்தை, பாலாக்கி அனுப்பமுடியவில்லை. மற்ற விதையோ, தன்னிடமிருந்த ஆகாரத்தையெல்லாம் முளைக்குப் பாலாக்கி அனுப்பிவிட்டபடியால், வெறும் தோல்பைபோல் ஆகிவிட்டது. இனி ஆகாரம் ஒன்றும் இல்லாமையால், இறந்துவிடும்.

தோட்டத்திலுள்ளதோ, நன்றாக வளர்ந்திருக்கிறது: ஏனென்றால், விதையிலுள்ள ஆகாரம் செலவாகிவிட்டதும், ஆகாரமிருக்கும் இரண்டாவது இடமாகிய மண்ணில் இருந்த ஆகாரத்தைத் தேடிக்கொள்ளுகிறது. நல்ல மண்ணில் செடிகளுக்கு வேண்டிய நல்ல ஆகாரம் விசேஷமாக இருக்கிறது. ஆகையால் அதிலிருந்து, ஆகாரத்தை வேண்டிய அளவு, எடுத்துக்கொள்கிறது. செம்மையாக வளர்கிறபடியால், ஆகாரம் அதற்குத் தகுந்தவாறு இருக்கிறது. இதற்கும் இறக்குஞ்சமயத்திலிருக்கிற மற்றதற்கும் என்ன வித்தியாசம்? இது "என் ஆகாரம் எனக்குப் பிடித்திருக்கிறது. வேண்டிய அளவு இருக்கிறது" என்றும், மற்றது "எனக்கு ஆகாரம் ஒன்றுமில்லையே" என்றும் சொல்வதுபோலத் தோன்றுகிறது.

இப்போது இறக்க இருக்கும் இம்முளையை ஜீவிக்கும்படியாகச் செய்யமுடியுமா எனச் சோதிப்போம். அதையெடுத்து மண்ணில் நட்டு, தண்ணீர் விட்டு, என்ன நேருகிறதென்று நாளைக்குப் பார்ப்போம்.

இரண்டும் உயிரோடிருக்கின்றன. ஒன்று மற்றொன்றைப் பார்க்கிலும், திமிராக இருக்கிறது. நேற்று சாக இருந்ததை, பிழைக்கும்படி செய்துவிட்டோம். ஏனென்றால் இதற்கு வேண்டிய ஆகாரத்தை மண்ணில் இருந்து அது எடுத்துக்கொள்கிறது.

மறுநாள் தோட்டத்தில் பார்த்தால் இரண்டும் வளர்ந்துவருகின்றன. ஆனால் சாக இருந்த பயிர்,திமிராகவும் மற்றதைப்போலப் பெரிதாகவும் இல்லை.

இப்பொழுதுசெடிகள், ஆகாரத்தைவிதையிலிருந்து முதலிலும், பிறகு மண்ணிலிருந்தும் உட்கொள்ளுகின்றன.மூன்றாவது இடம், நம்மைச்சுற்றிலுமிருக்கும்காற்று.இலைகளில் ஆயிரக்கணக்கான சிறுவாய்கள்இருக்கின்றன. நம் கண்ணுக்குத் தெரியாது. பூதக்கண்ணாடி மூலமாகப்பார்த்தால்தான் தெரியும். ஆனால் ஆகாயத்தில் இவைகளுக்கு என்ன ஆகாரம் இருக்கின்றனவென்று நீங்கள் கேட்கலாம்.காற்றில் நம்மால் பார்க்கமுடியாத அநேக வஸ்துக்கள் இருக்கின்றன.

சோதனை:—ஒரு கண்ணாடி சீசாவை யெடுத்து குளிர்ந்த பனிக்கட்டி போட்டு மூடி, துடைத்துவிட்டு மேஜையின்மேல் வைப்போம். சற்றுநேரம் கழிந்ததும் அதைப் பார்த்தால் வெளிப்புறம் மங்கலாகவும், சிறு ஜலத்துளிகள் இருப்பதையும் நீங்கள் பார்ப்பீர்கள்.சீசாவுக்குள் இருக்கும் ஜலம் வெளியே வந்திருக்க முடியாது. ஆகையால் இது சீசாவைச் சுற்றியி

தாய்முகம் காணாத பிள்ளையும், மழைமுகம் காணாத பயிரும் செவ்வைப்படமாட்டாது.

ருக்கும் காற்றிலிருந்தே வந்திருக்கவேண்டும். ஆனதால் காற்றில், கண்ணுக்குத் தெரியாதபடி தண்ணீர், ஆவியாக இருக்கிறது. ஆகையால் செடிகள், ஆகாரத்தைத் தேடிக்கொள்ளும் மூன்றாவது இடம் காற்று. ஆனால் மண் முழுவதுமாவது காற்று முழுவதுமாவது செடிக்குவேண்டிய ஆகாரப் பொருளாயில்லை. அதில் இருக்கும் சில பண்டங்களே ஆகாரமாகிறது. மண்ணிலும் காற்றிலும் செடிகளுக்கு வேண்டிய சில ஆகாரப் பொருள்கள் இருக்கின்றனவேயொழிய மண்ணும் காற்றுமே ஆகாரம் என்று எண்ணக்கூடாது. அதிலிருக்கும் ஆகாரப் பொருள், நமக்குப் பிடிக்காது. ஆனாலும் செடிகள் பிரியமாக ஏற்றுக்கொள்ளும். அதற்கு செடியின் ஆகாரம் என்று சொல்வது வழக்கம்.

செடிகள் நம்மைப்போல் ஆகாரம் உட்கொள்ளுவதில்லை. ஆகாரத்தைத் தண்ணீருடன் கலந்து உட்கொள்ளுகின்றன. ஆகையால் செடிகளின் ஆகாரம் தண்ணீரில் கரையக் கூடியதாயிருந்தால்தான் உட்கொள்ள முடியும்.

இப்பொழுது உங்களுக்கு சர்க்கரை சாப்பிட வேண்டுமென்றால் சர்க்கரையையே சாப்பிட்டாலும் சாப்பிடலாம். அல்லது சர்க்கரையைத் தண்ணீரில் போட்டால் கரைந்து போகிறது. அந்தத் தண்ணீரைக் குடித்தாலும் அந்த சர்க்கரை உங்கள் வயிற்றுக்குள் போகிறதல்லவா? அதேமாதிரி, ஒருசெடிக்கு சர்க்கரை கொடுக்க வேண்டியிருந்தால் மண்ணில் கொஞ்சம் சர்க்கரை போட்டால் செடிக்குப்போகும். தண்ணீர் அதைக் கரைத்துக்கொண்டு போகும். அப்பொழுது செடி சர்க்கரையை உட்கொள்ளும். அதேமாதிரி சர்க்கரைக்குப் பதில் கொஞ்சம் செடியின் ஆகாரப் பொருளை மண்ணில் போட்டு தண்ணீர் விட்டால் அது தண்ணீரில் கரைய, செடி தண்ணீரை உட்கொள்ளும்போது ஆகாரம் உட்செல்லுகிறது. ஆகையால் எவ்வளவு ஜலம் தரையில் விட்டாலும் மண்ணிலுள்ள ஆகாரப்பொருளை மாத்திரம் கரைத்துக்கொண்டுபோய் செடிக்குக் கொடுக்குமேயொழிய மண்ணைக்கரைத்துக்கொடுப்பதில்லை. மண்ணிலும் ஆகாரப் பொருள் எல்லாம் கரையக்கூடியதா யிருப்பதில்லை. கொஞ்சம்தான் செடிகளுக்கு உபயோகிக்கக்கூடியதாயிருக்கிறது. மற்றவை பிந்திய வருஷ உபயோகத்திற்காகப் பூமியில் இருக்கும். வீட்டில் ஏதாவது பக்ஷணம்செய்தால் கொஞ்சம் கொடுத்து விட்டுப் பாக்கியை உரியில் உங்களுக்கு எட்டாதபடி எடுத்து அம்மாள் வைக்கிறாள் அல்லவா? அதேமாதிரி, செடிகளுக்கு தற்கால ஆகாரத்தை மாத்திரம் கரைத்து உட்கொண்டு மற்றவை பிற்காலத்திற்கென்று தொடாதபடி வைத்துவிடும். அப்படியில்லாவிட்டால் செடிகளுக்குப் பிற்காலத்திற்கு வேண்டிய ஆகாரம் இல்லாமல் செலவழிந்து போகும். ஆகையால் மண்ணிலுள்ள ஆகாரம், பொருள்களில் தற்கால உபயோக ஆகாரப் பயிர்கள் என்றும், பிற்கால உபயோக ஆகாரப் பொருள்கள் என்றும் இரண்டுவிதம் உண்டு. கொஞ்ச நாள் கழிந்ததும், எப்படிக் குடியானவன் வருஷா வருஷம் பிற்கால ஆகாரப் பொருளை செடிகளுக்கு உபயோகமாகும்படி தயார் செய்கிறான் என்று தெரிந்துகொள்வீர்கள்.

### உழுதல்

நிலத்தை ஏன் உழவேண்டும்? ஏன் கொத்தவேண்டும்? குடியானவன் விளையாட்டிற்காக உழவில்லை. அவன் பயிரிடும் செடிகளுக்கு உபயோகமாகவேண்டுமென்றே உழுகிறான். அவன் நோக்கம் செடிகளின் உணவுப் பொருளைத்தயார் செய்யவேண்டு மென்பதே. எவ்வளவுக்கெவ்வளவு நன்றாக உழுகிறானோ அவ்வளவுக்கவ்வளவு செடிகளுக்கு அதிக ஆகாரத்தை தயார்செய்து தண்ணீரில் கரைந்து செடிக்கு உதவும்படி செய்கிறான். சோம்பேறி ராமன் வயலில், பயிர் நன்றாக இருப்பதில்லை. உழைப்பாளி ரங்கன் தோட்டத்துப்பயிர் எவ்வளவு செழிப்பாக இருக்கிறது! ஏனென்றால் ரங்கன் நன்றாக வயலை உழுது, செய்கால் நேர்த்தி செய்கிறான். எப்பொழுதும் கொத்துவதும் வெட்டுவதும் உழுவதுமாகவே யிருக்கிறான்.

நாம்எப்படி நன்றாகச்சாப்பிட்டால் நன்றாக வளர்கிறோமோ, அதேமாதிரி செடிகளுக்கு நல்ல உணவுப் பொருள் கொடுத்தால் நன்றாக வளரும். அது உட்கொள்ளும் ஆகாரம் வளர்வதற்கு உபயோகப்படுகிறது. உழைப்பாளி ரங்கன் பாடுபடுகிறான்: நல்ல மகசூல் அவனது உழைப்பிற்குத் தகுந்தாற்போல நல்ல கூலி கிடைக்கின்றது.





உழுவதால் பயிருக்கு வேண்டிய ஆகாரத்தை தயார் செய்வது ஒன்று. அதோடு தயார் செய்த ஆகாரத்தை, செடிகளுக்கே உபயோகமாகும்படி காப்பாற்றுகிறது.

உங்களுக்கு நல்ல சாப்பாடு தயார்செய்து வைத்திருக்கிறதாக நினைத்துக்கொள்ளுங்கள். நீங்கள் சாப்பிடு முன்னமே, அநேகம் பெரியபிள்ளைகள் ஓடிவந்து சாப்பிட்டுவிட்டுப் போய்விட்டால் உங்களுக்கு எப்படியிருக்கும்? அதேமாதிரி நாம் எந்தப் பயிருக்கு என்று உழுது உணவைத் தயார்செய்கிறோமோ அதே பயிர்கள் அவைகளை உபயோகிக்கும்படியும் மற்றப்பயிரை வரவொட்டாதபடி தடுப்பதற்கும் உழுதல் அவசியம். பிரயோசனமற்ற பூண்டுகள் பயிருக்கென்று தயார் செய்யபட்ட குடியானவனுக்கு உபயோகம் இல்லை. ஆகையால் அவைகளுக்கு வயலில் இடம்கொடுக்காமல், வேரோடு பிடுங்கி எறியவேண்டும். நெல் பயிரிடுவதற்கென்று வைக்கப்பட்ட வயலில் பிரயோஜனமில்லாத கோரைப் பூண்டு வந்து முளைத்தால், நெல்லுக்கென்று சேகரிக்கபட்ட ஆகாரத்தை உட்கொள்ளும். அதனால் நெல் பயிருக்கு ஆகாரம் குறைந்து போகும். அதனால் நெல்பயிர் மிகக் குறையும். இப்படிவேண்டாத பயிருக்குக் களை என்று சொல்லுவார்கள். நெல்வயலின் நடுவே கேழ்வரகுப்பயிர் ஒன்றொன்று முளைத்தால் கேழ்வரகுக்களை யென்றுபெயர். நாம் எதற்கென்று வயலைத் தயார் செய்துப்பயிரிடுகிறோமோ அதைத்தவிற வேறு எந்தப் பயிர்(நல்லதாயிருக்கட்டும் கெடுதலாயிருக்கட்டும்) முளைத்தாலும் களையென்றுதான் சொல்லவேண்டும். உங்களுடைய சாதத்தை நல்லவர்களான சிலபையன்கள் சாப்பிட்டுவிட்டால் நியாயமா? நல்லவர்கள் என்று அவர்களை சும்மாவிடலாமா? நல்லவர்களாக இருந்தால் அவர்கள் வீட்டிலல்லவா சாப்பிடவேண்டும்? அழைக்காத வீட்டில் அக்கிரமமாக வந்தால் அடித்துத் துறத்தவேண்டும். இதுபோல் அழைக்காத இடத்தில் வளரும் செடிகளுக்கு களையென்று பெயர். (தொடரும்.)

சுதேசமித்திரன்.—* * நன்கு நடத்தப்படும் மாதாந்தத் தமிழ்ச்சஞ்சிகைகளுள் விவேக போதினியை முக்கியமாக எடுத்துச் சொல்லாமென்பதற்கு, இதற்குக் கிடைத்திருக்கும் மதிப்புரைகளேதக்க ஆதாரமாகும்.

## கபிலர்

## KAPILAR

[ஸ்ரீமான் பண்டித ஆலாலசுந்தரநாதப்பிள்ளை.]

(62-ம் பக்கத் தொடர்ச்சி)

'பயில்பூஞ் சோலை மயிலெழுந் தாலவும்
பயிலிருஞ் சிலம்பிற் கலைபாய்ந் துகளவும்
கலையுங் கொள்ளா வாகிப் பலவும்
கால மன்றியு மரம்பயம் பகரும்
யாண ரறாஅ வியன்மலை யற்றே'

பூஞ்சோலைக்கண் மயில்கள் எழுந்து ஆடவும், பெரியமலையின் கண் ஏறித்தாவி உகளும் முசுக்கலைகளும் பழங்களை நுகர்ந்து வெறுக்கவும், காலமல்லாத காலத்தும் மரங்கள் பலவும் காயும் பழமும் முதலாயினவற்றை விளைந்து கொடுக்கும் இடமாயிருந்தன; இனி அவற்றை இழந்தன.

'மைமீன் புகையினும் தூமந் தோன்றினும்
தென்றிசை மருங்கின் வெள்ளியோடினும்
வயலக நிறையப் புதற்பூ மலர
மனைத்தலை மகவை யீன்ற வமர்க
ணாமா நெடுநிரை நன்பு லாரக்
கோஒல் செம்மையிற் சான்றோர் பல்கிப்
பெயல் பிழைப் பறியாப் புன்புலத்ததுவே'

சனிமீன் புகையினும், எல்லாத் திசையினும் புகை தோன்றினும், மேற்றிசைக்கண் செல்லாது, தென்றிசைக்கண் வெள்ளியோடினும்; வயலிடம் விளைவு மிகப், புதலிடம் பூமலர, ஆமா நிரை புல்மேயக், கோல்செவ்விதாகலின் சான்றோர் பலராக, மழை பிழைப்பறியாத புன்புலத்தது; அது பெயல் பிழைப்பறியாமைக்கு ஏதுவாகிய செங்கோலை நிறுத்திய பாரியை இழப்பதே?

'நிழலினீளிடைத் தனிமரம் போலப்
பணைகெழு வேந்தரை யிறந்தும்
இரவலர்க் கீயும் வள்ளியோ னாடே'

நிழலில்லாத நெடிய வழிக்கணின்ற தனிமரத்தைப்போல, அரசரின் மிகுத்து இரவலர்க்கு வழங்கும். வள்ளியோன் நாடு, இனிக் கெடுங்கொல்லோ?

'தெண்ணீர்ச் சிறுகுளம் கீள்வது மாதோ
கூர்வேற் குவைஇய மொய்ம்பிற்
றேர்வண் பாரிதண் பறம்பு நாடே'

கூரிய வேலையும், திரண்ட தோளையும், தேர் வண்மையும் உடைய பாரியது குளிர்ந்தபறம்பு



[stamp] 600 009 ... 62024
51
3 ...

நாடு, தெண்ணீர் நிறைந்த சிறுகுளம், காப்பாரின்மையின் உடைவதுபோல, அந்தோ! அழிந்தது.

புறந்தந்தோடுவாரைப் பின் தொடராது நாணி நிற்கும் சேயை ஒப்போய்! சிறுவீ முல்லைக்குப் பெருந்தேர் நல்கிய கோமானே! தேடி அடைந்தவர்க்குத் தேரும், நாடி வந்தார்க்கு நாடும் அளித்திட்ட பாரி! என் உயிரினும் இனிய நண்ப! இனி நின்னை என்றுக் காண்பேன்?" எனப் பாரியையும், அவன் அரசிருக்கையாகிய பறம்பரணையும்,வரையாது கொடுக்கும் அவனது வள்ளன்மையையும் நினைந்து நைந்துருகிப், பறம்பு நாட்டினை அரிதின் அகன்று வச்சிரநாட்டில் அரசுபுரிந்திருந்த வேளிர் குலத்தினனாகிய விச்சிக்கோனிடம் சென்றனர். அவன் முகமனுரைத்து வழிபட்டிட வீற்றிருந்த கபிலர்,

'விளங்குமணிக் கொடும்பூண் விச் சிக்கோவே
இவரே, பூத்தலை யறுஅப் புனைகொடி முல்லை
நாத்தழும் பிருப்பப் பாடா தாயினும்
கறங்குமணி நெடுந்தேர் கொள்கெனக்கொடுத்த
பரந்தோங்கு சிறப்பிற் பாரி மகளிர்;
யானே, பரிசிலன் மன்னு மந்தணன்; நீயே
வரிசையில் வணக்கும் வாண்மேம் படுநன்;
நினக்கியான் கொடுப்பக் கொண்மதி சினப்
அடங்கா மன்னரை அடக்கும் [போர்.
மடங்கா விளையுள் நாடுகிழ வோயே'

'விச்சிக்கோவே! இவர்கள்தாம் முல்லைக் கொடி நாத்தழும் பேறத் தன்னைப் பாடாதாயினும், தான் ஏறிச்சென்ற தேரைக் கொள்கவெனக் கொடுத்த பாரிக்கு மகளிர்; யான் பரிசிலன்; அது அன்றியும், அந்தணன்; நீ, பகைவரைப் பொருதுவணக்கும் அரசன்; உலகில் மகட்பேசிவிடக் கொடுத்தலையன்றித் தாமே ஒருவர்பாற் சென்று கொடுத்திடார்; யானோ என்றால் நின்பால் வந்து இவரைக் கொள்வாயாக என்று இரக்கின்றேன்; அந்தணனாகிய யான் தருவதற்குரியேன், அரசனாகிய நீ கொள்வதாற் குற்றமாகாது;ஆதலால்,நினக்குயான் தர இவரை மணந்து கொள்வாயாக; பரிசிலனாகிய என் குறையை முடித்தல் நினக்குக் கடனாகும்' என்றனர்.

அந்தணர் குறையை முடித்தல், அரசர்க்கு அடுத்தது எனினும் விச்சிக்கோன் உடன்பட்டிலன்.

'வேளிர் குலத்தினன் என்றெண்ணி இவனை இரந்தோம்; புலவர் வாராமல் கதவடைத்துப் பழிதேடியதன்றி,இரக்கமின்றிப் பெண்கொலை புரிந்து நிரயம் எய்திய நன்னன் மரபில் வந்த இவனுக்குப் பெண்கள்பால் எங்ஙனம் மனம் இரங்கும்? இவனை நோவதிற் பயனில்லை; இவன் தன் மரபிற்கு அடுத்ததே செய்தான்' என, விச்சிக்கோனை இகழ்ந்து, வச்சிர நகரை அப்பொழுதே விடுத்து, அரையம் நோக்கி வழிக்கொண்டனர் புலவர்.

### (௮) கபிலர் பாரி மகளிரைக் கொள்கென இருங்கோவேளை வேண்டுதல்

சிற்றரையம், பேரரையம் என்னும் இரு கூறமைந்த பெருநகரம் அரையம் என்பது. துவாராபதியினின்றும் போந்து நாற்பத்தொன்பது தலைமுறையாக வேளிர் மரபினர் இங்கு அரசாளுவாராயினார். இத்தொன்னகர்க்கு அரசனாவான் இருங்கோவேள். புலியை அஞ்சித் தன்னை வந்து வேண்டிய ஒரு அந்தணர் பொருட்டு, அதனை அம்பு எய்து கொன்று, புலிகடிமால் எனப் பெயர் பெற்றவன். நாமும் ஓர் அந்தணனாதலால், நம் சொற்கிணங்கித் தன்னோடு ஒத்தமரபினனாகிய வேள்பாரியின் மகளிரை இவன் மணத்தலும் கூடும் என நினைந்து இருங்கோவேளிடம் சென்றனர் கபிலர்.

அவனும், மிக்க அன்போடு முகமனுரைக்க, இவர் ஆதனத்தமர்ந்தபின், இருங்கோவேள், புலவர் மருங்குநின்ற மகளிரை நோக்கினான். 'இம்மகளிர் துயரால் வாட்டம் எய்தினார் எனலை இன்னவர் முகமே முன்னுரைக்கின்றன; உடற்பொலிவினை உற்று நோக்கின், அந்தணர் குலத்துப்பிறந்த பைந்தொடியாராக நினைத்தற்கு இடமில்லை; மன்னவர் மரபில் வந்த கன்னியராகக் காணப்படுகின்றனர்; இம்மங்கையர்க்கரசியர் யாவரேயாயினும் ஆகுக; இப்புலவர்பெருமானோடு இங்கு வருதற்கு இயைபு சிறிதும் தெரிந்திலது; ஆகவே, அதனைக் கேட்டறிகுவோம்' எனக்கருதி நோக்கினான்.

அவனாற் குறித்த கருமத்தை அவன் முகத்தானும் கண்ணானும் நோக்கி அறிந்த கபிலர்,

தாழிபோல் வயிறும், ஊசிபோல் மிடறும்.



'இவர்யா ரென்குவை யாயினிவரே
ஊருட னிரவலர்க் கருளித் தேருடன்
முல்லைக் கீத்த செல்லா நல்லிசைப்
படுமணி யானைப் பறம்பிற் கோமா
னெடுமாப் பாரி மகளிர்; யானே
தந்தை தோழன்; இவரென் மகளிர்;
அந்தணன் புலவன் கொண்டுவந் தனனே;
நீயே, வடபான் முனிவன் தடவினுட்டோன்றி
செம்புபுனைந் தியற்றிய சேணெடும் புரிசை[ச்
யுவரா வீகைத் துவரை யாண்டு
நாற்பத் தொன்பது வழிமுறை வந்த
வேளிருள் வேளே! விறற்போ ரண்ணல்!
தாரணி யானைச் சேட்டிருங் கோவே
யாண்கட னுடைமையிற் பாண் கடனாற்றிய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
யான்றர விவரைக் கொண்மதி'.

'வடபுலத்து முனிவன் வேள்வியிற்றோன்றித் துவராபதியை நாற்பத்தொன்பது தலைமுறை ஆண்ட வேளிர் மரபில் வந்த இருங்கோவே! போரில்வல்ல புலி கடிமாலே! இவர் யாரென்று வினவுவாயாயின் இரப்பவர்க்கு முந்நூறூர்களையும் வழங்கித் தேரைப் புரவியோடுங்கூட முல்லைக்கொடிக்கு நல்கிய வேள் பாரியின் மகளிர்; யான் இவரது தந்தையின் தோழன், ஆதலால், இவர் என்னுடைய மகளிர்; அந்தணனாகிய புலவன் யான் கொண்டு வந்தேன்; நீ உயர்குடியிற் பிறந்தோனாதலால், இவரது தந்தையின் தோழனும் அந்தணனுமாகிய யான்தர நீ இவரைக்கோடற்குக்குறையில்லை; ஆதலால், நீ இவரைக் கொண்மதி' என்றனர்.

புலவர் பெருமான் இத்தனை சொல்லியும், இருங்கோவேள், பாரியோடு ஒத்த மரபினனாக இருந்தும் முடியுடை வேந்தர் மூவரை அஞ்சி இம்மகளிரை மணஞ்செய்தற்கு மனம் இசைந்திலன்.

உடனே கபிலர்க்குக் கோபம் பிறந்தது. அருகில் இருந்தவர் யாவரும் யாதுவிளையுமோ என அஞ்சினர்; அப்பொழுது புலவர் அவன் முகம் நோக்கி,

'வென்றி நிலைஇய விழுப்புக ழொன்றி
இருபாற் பெயரிய வுருகெழு மூதூர்க்
கோடிபல வடுக்கிய பொருணுமக் குதவிய
நீடுநிலை யரையத்துக் கேடுங் கேளினி
நுந்தை தாய நிறைவுற வெய்திய
ஒலியற் கண்ணிப் புலிகடி மாஅல்!
நும்போ லறிவி னுமரு ளொருவன்
புகழ்ந்த செய்யுட் கழாஅத் தலையை
இகழ்ந்ததன் பயனே யியறே ரண்ணல்!
எவ்வி தொல்குடிப் படீஇயர் மற்றிவர்
கைவண் பாரி மகளி ரென்றவென்
தேற்றாப் புன்சொல் நோற்றிசிற் பெரும!
விடுத்தனென் வெலீஇயர் நின் வேலே'.

'புலிகடிமாலே! இருகூற்றாற் பெயர்பெற்ற உங்கட்குரிய மூதூராகிய அரையத்தினது அழிவிற்குக் காரணம் கேட்பாயாக: நும்மையொக்கும் அறிவினையுடைய நும் குடியுள் ஒருவன், தன்னைப் புகழ்ந்து பாடிய கழாஅத் தலையார் என்னும் புலவரை இகழ்ந்ததனால் அவர் வசை பாடினார்.அவர் வாக்குத் தப்பாதாகலின், அவ்வங்கதச் செய்யுளின் பயனாயிற்று அது. அண்ணல்! நீவேளிர் தலைவன் என்பதை உட்கொண்டு, நின்னியல்பு நாடாது, இம்மகளிர், எவ்வி குடியிற் பிறந்த வள்ளியோன் பாரியின் மகளிர் என்று சொல்லிய என் புன் சொல்லைப் பொறுப்பாயாக; பெருமானே! யான் நின்னை விடைகொண்டேன்; நின் வேல் வெல்வதாக' எனக் கூறி, அங்கு நின்றும் புறப்பட்டு மலையமானாடு நோக்கிப் போயினர்.

### 9.கபிலர் பாரிமகளிரைப் பார்ப்பார் காப்பினில் வைத்தல்

மலையமானாட்டில் மலையமான் திருமுடிக்காரி என்பவன், அரசு புரிந்திருந்த காலத்தில், கபிலர் பரிசில் காரணமாக, அவனது தலைநகராகிய திருக்கோவலூர்க்கு வந்து, தம் மனமொத்த அந்தணரோடு பழகி இருந்தவராதலால், இம்மகளிரை, அன்னவர் பாதுகாப்பில் வைத்துவிட்டுப் பாரியின் பிரிவால் தமக்கு நேர்ந்த துன்பத்தை, அவனோடொத்த ஈகையும் நற்குணமும் உடைய செல்வக்கடுங் கோவைக் கண்டு சிறிது ஆற்றியிருப்பேன் என்று நினைத்துப் பெண்ணைக் கரைக் கண்ணுள்ள திருக்கோவலூரை அடைந்து, ஆவணம் பல கடந்து பார்ப்பனச் சேரியைத் தலைப்பட்டனர்.

இவரது வருகைக்கு உவந்த அங்கிருந்தார் யாவரும் எதிர்கொண்டு அழைத்து முகமனுரைக்கவும், முன்னாளிற்போல அளவளாவியிராமல், கலையிழந்த மதிபோல நகையிழந்த

தாழ்குலத்தில் பிறந்தாலும் புத்தியினால் அலரிப்பூவைப்போல் பிரயோசனப்படுவார்.

முகத்தினராய்த் துயரக் கடலில் மூழ்கி யிருப்
பக்கண்டு, அந்தணர் பெருமானே! உமக்கு
என் உற்றது? என அன்போடு வுசாவினர்.
அதைக்கேட்ட கபிலரும், 'என் சொல்
வேன்? என்னுயிர் நண்பன் பாரி என்பதை
அறிகுவீர்; அவன் கொடையினும் புகழினும்
மேம்பட்டவன் என்று அறியாதார் இல்லை; புக
ழில் சிறந்த அப்புண்ணியன் தமக்கு மகட்
கொடை மறுத்த காரணத்தால் சினந்து பொ
ருது கண்ணோடாது வஞ்சித்துக் கொன்றனர்
தமிழ் வேந்தர்; உயிரும் உடலும்போல ஒரு
வரை ஒருவர் பிரியாதிருந்தோம்; அவனைப்
பிரிந்த பின்னர் உயிரற்ற உடலானேன்; இனி,
என்னுடல் இந்நிலத்திற்கு ஒரு சுமையே யல்
லாது பிறிதன்று; இதனை ஒழிக்கக் கருதி
னேற்கு, இம்மக்களது கவலை பெரிதா யிருக்
கின்றது; மகளிரைத் தக்க கணவரை நாடிக்
கொடுப்பது தந்தையர் கடனாகும்; இவரது
அரும்பெறற் றந்தை இறந்து பட்டனன்;
இன்னவர்க்கு அன்னவன் நண்பனாகிய
என்னையன்றிக் களை கண்ணாவார் எவர் உளர்?
இவர்க்குத் தக்க கணவரை நாடினேன்; எவ
ரும் இதுகாறும் கிடைத்திலர்; நீவிர் மனம்
இசைவீராயின், தக்கமணாளர் கிடைக்குமள
வும், இவரை நும் பாதுகாப்பில் வைத்துச்
செல்வேன்; இதுவே என் கவலைக்குக் காரண
மாயிருந்தது', என்று கூறினர்.
அவர்கள் இப்புலவர்பால் அன்புடைய ராத
லால் இவர்க்குண்டாகிய துயரம் தமக்குண்டா
யதுபோல வருந்தி ஐயரே! ஊழின்வலி
கடக்க வல்லாரும் உண்டோ? இல்லைஎன்பதை
நீவிர் அறிந்ததுதானே; இம்மகளிரை நும்
விருப்பிற் கிணங்க எம் காப்பில் வைத்து,
நுமக்கறிந்தவாறு புக்கு ஆற்றியிரும் என்
றுரைத்த சொற்கேட்டுப், பெரும்பாரம்தாங்கி
னோன், சுமை நீங்கிய போழ்து ஆறுதலடை
வதுபோல, மக்களால் தமக்கிருந்த கவலை
சிறிது நீங்கிச் சேரனொடு சென்றனர் கபிலர்.

### தமிழ்ப் புத்தகங்கள்

| | | | | |
|---|---|---|---|---|
| ஸ்ரீராமாயண ஸாரம் | ... | 1 | 0 | 0 |
| புலவர் சரித்திரத்திரட்டு | ... | 0 | 8 | 0 |
| ஆரியமத உபாக்கியாணம், I, II. | | 0 | 10 | 0 |
| இயற்கை அற்புதங்கள் | ... | 0 | 10 | 0 |
| மரகதவல்லி | ... | 0 | 12 | 0 |
| பஞ்சரத்தினம் | ... | 0 | 12 | 0 |

## கூட்டுறவு

## CO-OPERATION

[ஸ்ரீமான். சீ. சி. இராமசுவாமி பி. ஏ., எல். டி.]

### 3. கூட்டுறவும் விவசாயிகளும்

ஒரு நாட்டில் வசிக்கும் குடிகளில், மிகவும்
அவசியமானவர்கள் வேளாண்மையைக் கைக்
கொண்டவர்களே. நாம் உயிர்வாழ்தற்கு
வேண்டிய பொருட்களை அவர்கள் பயிரிட்டு
வருகின்றமையால், அவர்களிடம் நாம் மிகவும்
நன்றி பாராட்டுபவர்களாக இருக்கவேண்டும்.
அந்நன்றியறிதலைக் காட்டவேண்டுமாயின்,
அப்பயிரிடுபவர்களுடைய நலத்தைக் கருது
வது அவசியமாகின்றது.
பயிரிடுபவர்கள் தாங்கள் பிழைப்பதற்கு,
அறுவடையையே நம்பியிருக்கிறார்கள். அறு
வடை நல்ல பலன் கொடுக்கவேண்டுமாயின்,
பல அனுகூலங்கள் பயிரிடுபவனுக்கு ஏற்பட
வேண்டும். முதலாவது, அவனுடைய நிலம்
அவனுக்கே சொந்தமானதாயிருத்தல் இன்றி
யமையாதது. இல்லாவிடின், பிறருடைய
நிலங்களுக்காகப் பாடுபட்டுஉழைப்பது அரிது.
இரண்டாவது, விதைக்கும் விதைகளும், நடப்
படும் நாற்றுக்களும் நல்லவைகளாய் இருக்க
வேண்டும். எவ்வளவு பரந்த நிலங்களிலிருந்தா
லும், நல்ல விதைகள், நாற்றுக்க ளில்லாவிட்
டால், தகுந்த அறுவடை யாகாது. ஆனால் நிலங்
கள் விஸ்தீர்ணங் குறைந்திருந்த போதிலும்,
பொறுக்கின விதைகளும், நாற்றுக்களாகவு
மிருப்பின் நல்ல அறுவடையாகும். எருவும்,
நிலங்களுக்குப் புஷ்டி தருபவைகளாக யிருக்க
வேண்டும். இவைகள் எல்லாமிருப்பினும்,
போதுமான நீர்ப்பாய்ச்சல் இருக்கவேண்டும்.
அதற்குத்தகுந்த மழை பெய்யவேண்டும்.அன்
றேல், போதுமான கிணறுகள் வெட்டப்பட்டு
அவைகளிலிருந்து நீர் பாய்ச்சப்படவேண்டும்.
இவ்வளவு உழைத்துக் கடைசியில் அறுவடை
யானபிறகு, மாசூலில் தனக்கு வேண்டியதை
நிறுத்திக்கொண்டு, மிஞ்சியதை விற்றுவிட
வேண்டும். இப்படி விற்றபிறகு கிடைத்த
பணமே, வியவசாயிக்கு உபயோகமாகின்றது.
மேற்கூறியவைகளில் ஏதாயினு 'மொன்றில்
குறைவேற்படுமானால், அக்குறைவிற்குத் தக்க
படி, அவன் நஷ்டமடைகிறான். அதனால்,
நிலம் வாங்குதல்,விற்றல், விதைகள் நாற்றுகள்





பெறல், கிணறுகள் வெட்டுதல், மாசூலை விற்
றல் முதலியவைகளில் எவ்வளவு உதவி நாம்
பயிரிடுபவர்களுக்குச் செய்கிறோமோ, அவ்
வளவு உதவி நாம் நமக்கே செய்துகொண்டவர்
களாவோம். கூட்டுறவுச் சங்கங்கள் வியவ
சாயிகளுக்கு மேற்கூறிய விஷயங்களில் ஒத்
தாசை செய்ய முடியுமாதலால், அதை இனிக்
கவனிப்போம்.
வியவசாயிகள் நம் தேசத்தில் முன்னுக்குவர
முடியாமைக்குக் காரணம், அவர்கள் கடன்
பட்டவர்களா யிருத்தல் என்று முதலிலேயே
கூறப்பட்டிருக்கிறது. அவர்கள் தங்கள் கடன்
களைத் தீர்த்துவிட்டால், பிறகு சௌக்கிய
மாக இருக்கலாம். அதனால் கடனைத் தீர்க்க
வழிகள் என்னவென யோசிக்கவேண்டும். நம்
நாட்டில் வியவசாயிகள் அதிக வட்டிக்கேகடன்
வாங்கிச் செலவு செய்கிறார்கள் என்பது அனை
வரும் அறிந்த விஷயம். அவர்கள் கொடுக்கும்
வட்டி சில வருஷங்களுக்குள், அசலுக்குப்
பன்மடங்கு அதிகமாகின்றது. ஆகையால்,
குறைந்த வட்டிக்குப் பணம் அகப்பட்டால்,
அப்பணத்தை வாங்கிப் பழைய கடன்காரர்
களுக்குக் கொடுத்துவிட்டுப், பிறகு குறைந்த
வட்டிக்குக் கொடுத்தவர்களிடம் பணத்தைத்
திருப்பிக் கொடுத்துவிடலாம். இதற்காகவே,
1912-ம் வருஷத்தில் ஏற்பட்ட சட்டத்தின்படி,
ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டிருக்கின்
றன. இவ்வைக்கிய நாணயச் சங்கங்கள் தற்
காலம் நம் தென்னாட்டில் வெகு சீக்கிரத்தில்
ஒவ்வொரு கிராமத்திலும் பரவும்படி, நாம் எல்
லோரும் முயற்சிசெய்யவேண்டும். ஒவ்வொரு
கிராமத்தாரும், கூட்டுறவினால் தங்களுக்குலாப
முண்டென்பதை அறிந்தால், ஒன்றுகூடி, ஓர்
சங்கம் ஸ்தாபிக்கலாம். இதற்குக் குறைந்தது
பத்து நபர்கள் இருக்கவேண்டும். இவர்கள்
சங்கம் ஏற்படுத்தவேண்டுமென்று தீர்மா
னித்த பிறகு, தங்கள் தீர்மானத்தை கூட்டுற
வுச் சங்கங்களின் தலைமை உத்தியோகஸ்தரு
(ரெஜிஸ்ட்ரார்)க்குத் தெரிவித்தால், அவர்
நேரில் வந்தாவது, தம் உத்தியோகஸ்தர் மூல
மாவது விசாரித்து தகுந்த ஏற்பாடுகள்
செய்வார். அதன்பிறகு, அச்சங்கத்தின் அங்
கத்தினர்கள் தமக்குள் ஒரு நிருவாக சபையை
ஏற்படுத்திக்கொண்டு, தங்கள் அலுவல்களை
நடத்தலாம்.
இவ்விதம் சட்டப்படி ஏற்படுத்தப்பட்ட சங்
கம், தன் சங்கத்திலுள்ளவர்களின் பொதுப்
பொறுப்பின் பேரில், பாங்கிகளிடமிருந்தாவது
மற்றவர்களிடமிருந்தாவது வேண்டியதொகை
யைக் கடனாகப் பெறலாம். ஒருவன் தன்
சொந்த ஜாமீன்பேரில் கடன்வாங்குவதற்கும்,
ஒரு சங்கம் கடன் வாங்குவதற்கும் வித்தியா
சம் என்னவென, சிலர் கேட்கலாம். ஒருவன்
தன் பொறுப்பில் கடன் வாங்கப்போனால் அவ
னுக்குச் சில வேளைகளில் கடன் கொடுக்க ஒரு
வரும் முன்வருவதில்லை. அப்படிக் கொடுத்தா
லும், வட்டி, மிக்கக் கடுமையாக விருக்கின்
றது. ஆனால், ஒரு சங்கத்தார் கடன் வாங்கி
னால், அது பலபேரால் வாங்கப்படுவதால்,
கடன் கொடுக்கும் பாங்குக்கும் (நிதிக்
கும்) அல்லது கொடுப்பவனுக்கும் நம்பிக்கை
யுண்டாகின்றது. நீடித்த காலங்களுக்கும்
கடன் வாங்கமுடியும். மற்றொரு விஷயம்
என்னவெனில், சாதாரணமாக ஒருவன் கடன்
வாங்கினால், அதற்கு ஈடாக ஏதாவது கொது
வை வைக்கவேண்டியிருக்கிறது. ஆனால் கிரா
மங்களில் ஏற்படும் சங்கங்களில், பணக்காரர்
களும் சேருவார்கள். அதனால், நம்பிக்கை
அதிகரிக்க, ஈடுவைக்கவேண்டியது அவசியமில்
லாது போகின்றது.
இதனோடு, நாம் கூட்டுறவுச் சங்கங்களுக்
கும், மற்ற நிதிகளுக்குமுள்ள மாறுபாட்டைக்
கவனித்தால், சில உண்மைகள் வெளிப்படும்.
இச்சங்கங்கள் பணம் கொடுப்பது மாத்திரமே
செய்துவந்தால், ஓர் சாதாரண நிதியாகும்.
ஆனால் இவை, சங்கத்தாரை நல்ல நிலைமைக்
குக் கொண்டுவருவதையே முக்கியமான நோக்
கமாகக் கொண்டிருப்பதால், சங்கத்தார்கள்,
தங்கள் செலவிற்கு எஞ்சின பணத்தைச்சேர்த்
துவைக்கும் இடங்களாகின்றன. அப்படி
சேர்த்துவைக்கப்பட்ட பணம், வேண்டியவர்
களுக்கு உபயோகப்படுகின்றது. சங்கத்து
அங்கத்தினர்கள், சந்தாத் தொகையாகக் கட்
டும் பணமும், ஒருமுறையில் கொடுக்கப்பட
வேண்டியதில்லை. சிறுசிறு பாகங்களாகக் கொ
டுக்கப்பட்டுவந்தால் போதும். அப்பணமும்,
சங்கத்தாருக்கு உபயோகப்பட்டு வருகின்றது.
ஆகவே, சங்கத்தில் பணம், சந்தாத்தொகை,
எஞ்சியபணம், வெளிபாங்குகளிலிருந்து கடன்
வாங்குதல் முதலியவைகளா லாக்கப்படுகின்

றது. இவையனைத்தும் குறைந்த வட்டிக்கே சங்கத்தாரால் பெற்றுக்கொள்ளப்படுகின்றன. இத்தொகையே சங்கத்தின் கொடுக்கல் வாங்கல்களுக்கு உபயோகப்படுகின்றது.

ஆனால் இத்தொகையை கடன் கேட்பவர்கள் அனைவருக்கும் கொடுப்பதா? என்று ஒரு கேள்வி பிறக்கலாம். கூட்டுறவினால் நன்மையடைய விரும்புபவர்களால் ஏற்படுத்தப்பட்ட சங்மாகையால், அச்சங்கத்தில் சேரும்பணம், அங்கத்தினர்களுக்கு மாத்திரம் உபயோகப்படும். அங்கத்தினர்களுக்கும், கேட்டவுடனே வேண்டுமென்று அவர்கள் கூறும் தொகையைக் கொடுப்பதும் கிடையாது. ஏனெனில், அங்கத்தினர்கள் எவ்வளவு ஜாக்கிரதையாய்ப் பொறுக்கியெடுக்கப்பட்ட போதிலும், சிலர் இச்சங்கத்திற் சேருவதால் தங்களுக்கு வேண்டிய பணம் கிடைக்குமென்று வந்து சேருவார்கள். அதனால், சங்கத்தார் ஒவ்வொருவரும் கடன் கேட்கும்போதே, எதற்காகப் பணம் வேண்டுமென்பதைத் தெரிவிக்கவேண்டும். அக்காரணம் நிருவாக சபையாரால் ஒப்புக்கொண்டபிறகே, பணங் கொடுக்க உத்தரவாகும். ஒவ்வொருவரும் குறிப்பிட்ட ஓர் தொகைக்குமேல் கடன்வாங்கலாகாது என்று ஓர் நியதி இருக்குமானால், அது சங்கத்துப் பணம் வீணாகாதபடிச்செய்யும். ஏனெனில், பலர் கடன்வாங்கிக்கொள்ளத் தயாராயிருந்த போதிலும்,சக்திக்கு மிஞ்சிக் கடன்வாங்கினால் திருப்பிக் கொடுக்கக் கஷ்டப்படவேண்டிவரும். அதோடு, சங்கத்தார் குறைந்தவட்டிக்கு, யோசனையின்றிக் கேட்பவர்க்குக் கொடுக்க ஆரம்பித்தால், சிலர், சங்கத்தில் பணம் வாங்கி,பிறருக்கு உயர்ந்த வட்டிக்குக் கொடுக்க முயலுவார்கள். இஃது நடக்காமலிருக்கவும் முயற்சி செய்யவேண்டும்.

இனி சங்கத்தார், எவ்வெவ் விஷயங்களுக்குக் கடன் கொடுக்கிறார்கள் என்று ஆராயலாம். சரியாகப்பார்த்தால், பின்னர் பலன் தரக்கூடிய விஷயங்களுக்கே அதாவது, சங்கத்தார் கொடுக்கும் கடனை முதலாக வைத்துக் கொண்டு, முற்கூறிய விதைவாங்கல் முதலியவைகளுக்கே கடன்கள் கொடுக்கப்படவேண்டும். ஆனால் அங்கத்தினர் கடனாளிகளாக இருந்தால்,அவர் எவ்வளவுதான் முயற்சிசெய்த போதிலும், சேர்க்கும்பணம், வட்டிக்கும் அசலுக்கும் போதுமோ போதாதோ எனத்தோன்றும். ஆகையால் அவன் சிரமப்படுவதை நீக்க வேண்டியது நல்ல காரியம். அம்மாதிரி விஷயங்களில், அடமானம் போக்கியம் முதலியவை செய்யப்பட்டவைகளை சங்கத்தினர் ஏற்றுக்கொண்டு,முந்தின அடமானம்,போக்கியம் முதலியவற்றை பணம் கொடுத்து நீக்கலாம். ஆனால் இவ்விஷயத்தில் சங்கத்தாரும், முக்கியமாய் நிருவாக சபையாரும், வெகு ஜாக்கிரதையாக இருக்கவேண்டும்.

விதைகள், புது உழவு யந்திரங்கள், கிணறு வெட்டுதல், மாடுகள்,யந்திரங்கள் முதலியவை பின்பலன் தரக்கூடியவைகளாதலால், அவைகளுக்காகப் பணம் கொடுக்கப்படலாம். ஆனால், பணம் கொடுத்ததோடு, கவலை நீங்கிற்றென்று எண்ணலாகாது. குறிப்பிட்ட காரியத்திற்குப் பணம் செலவாகின்றதா என்று பார்ப்பதோடு, அப்பணம் வேறு விதமாக, நிருவாக சபையார் உத்தரவின்றி, செலவு செய்யப்பட்டால், உடனே கடனை ரத்துசெய்து, கொடுத்த பணத்தை வசூலிக்கவேண்டும். நம் கிராமங்களிலிருப்பவர்களுக்குத் தம் அண்டை அயலில் இருப்பவர்களுடைய நிலைமை நன்கு தெரியுமாகையால், மேற் பார்வை செய்வதில் கஷ்டம் அதிகமிராது.

---

"விவேக போதினி" பன்னிரண்டாம் தொகுதியைப்பற்றி நவசக்தி எழுதுவது:—இப்பெயர் வாய்ந்த மாதாந்த பத்திரிகை பதின்மூன்று வருட காலமாகத் தமிழ்நாட்டில் உலவி வருகிறது. இத்துணை ஆண்டுகளாக இப்பத்திரிகை நிலவி வருதலொன்றே இதன் மாண்பைப் புலப்படுத்தும். விவேக போதினியில் மனித வாழ்க்கைக்கு வேண்டப்படும் பொருள்கள் பலவற்றைக் காணலாம்.விவேக போதினி ஒழுக்கம், பொருளாதாரம், இலக்கியம், பௌதிகம், சரித்திரம், விவசாயம், கூட்டுறவு, கைத்தொழில் முதலிய கல்வித் துறைகளால் அலங்கரிக்கப் பட்டிருப்பது போற்றத்தக்கது. இப்பத்திரிகை பெண்பாலார்க்கும் சிறுவர்க்கும் பயன்படும் பல விடயங்களையும் உதவிவருகிறது. இத்தகைய பத்திரிகையைத் தமிழ்நாட்டுக்கு மாதந்தோறும் வழங்கிவரும், பத்திரிகாசிரியர் ஸ்ரீமான் குப்புசாமி அய்யர் அவர்கட்கு எமது நன்றியறிதலைச் செலுத்துகிறோம். * * இதனைத் தமிழ் நாட்டார் நன்கு ஆதரிப்பாராக. வருடசந்தா உள் நாட்டுக்கு ரூ. **5**; வெளி நாடுகட்கு ரூ. **6**.

---

தானாகவந்த சீதேவியைக் காலால் உதைத்துத் தள்ளலாமா?



## தமிழ் நாட்டில் பிரதேசச் சுய ஆட்சி

## LOCAL SELF-GOVERNMENT IN ANCIENT INDIA

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ.]

முந்திய வியாசத்திற் கண்ட இரண்டாவது சிலாசாசனத்தில் கிராமச்சபைகளின் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பதற்காக ஏற்படுத்திய விதிகளைப் பரிசீலனை செய்வோம்.

1. நிர்வாகசபைகளும், அங்கத்தினர்களைத் தேரிந்தேடுக்குங் காலமும் :— ஸம்வத்ஸர வாரியம், தோட்டவாரியம், ஏரிவாரியம் இம் மூன்று நிர்வாக சபைகளுக்கும் முறையே பன்னிரண்டு, பன்னிரண்டு, ஆறு அங்கத்தினர்களை வருஷத்துக் கொருமுறை தெரிந்தெடுக்கவேண்டும். தன்மக்ருத்யங் கடைக்காணும் வாரியம் என்று நிர்வாக சபையொன்றிருப்பதாகத் தெரியவருகிறதேயன்றி,அச்சபையின் அங்கத்தினர் எத்தனை பேர்களென்பதாவது அவர்களை எத்தனை வருஷங்களுக்கொருமுறை தெரிந்தெடுக்கவேண்டு மென்பதாவது இச்சிலாசாசனத்தினின்று விளங்கவில்லை. போன்வாரியம், பஞ்ஜவாரவாரியம் என்ற நிர்வாகசபைகளில் ஒவ்வொன்றுக்கும் ஆறு அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்க வேண்டுமென்று கூறப்பட்டிருக்கிறதேயன்றி, எத்தனை வருஷத்துக்கொருமுறை தெரிந்தெடுக்க வேண்டுமென்பது தெளிவாக விளக்கிக் கூறப்படவில்லை. ஆயினும், இச்சிலாசாசனத்திலுள்ள ஓர் வாக்கியத்தினின்று அவர்களை வருஷத்துக்கொருமுறை தெரிந்தெடுக்கவேண்டுமென ஊகிக்கவேண்டியிருக்கிறது.

2. நிர்வாகசபைகளின் அங்கத்தினர்கள் எப்படிப்பட்டவர்களா யிருக்கவேண்டுமெனில்:— கால் (வேலி) நிலத்துக்கு மேல் வரி செலுத்தும் நிலம் உடையவராய்,தம்முடைய மனையிலேயே வீடுகட்டிக்கொண்டு வசிப்பவராய், முப்பத்தைந்துக்கு மேற்பட்டு எழுபதுக்குட்பட்ட வயதுடையவராய், மந்திரங்கள் ப்ராம்மணங்கள் இவைகளைக் கற்றுப் பிறருக்கு ஓதுவிப்பதனால் அவைகளை நன்கறிந்தவராய், யோக்கியமாய்ச் சம்பாதித்த தனமுடையவராய், பரிசுத்தமான வாழ்க்கையுடையவராய் இருக்கவேண்டும்.ஒருவர் அரைக்கால் (வேலி) நிலமே யுடையவராயிருந்தாலும், அவர் ஒரு வேதத்தைக் கற்றவராயும், நான்கு பாஷ்யங்களில் ஒரு பாஷ்யத்தைப் பிறருக்கு விளக்கியுரைத்ததனால் நன்கறிந்தவராயு மிருப்பாராகில், அவரையும் அங்கத்தினராகத் தெரிந்தெடுக்கலாம்.மேற்கூறியவாறு தகைமையுடையவர்களிலும் காரிய நிர்வாகத்தில் தேர்ந்தவராயும், தமது ஆசாரத்தைத் தவறாது அனுஷ்டிப்பவராயும், அதற்குமுன் மூன்று வருஷங்களுக்குட்பட்டு எந்நிர்வாகசபையிலும் அங்கத்தினராயிருந்தாரல்லாராயும் இருப்பவர்களே அங்கத்தினர்களாகத் தெரிந்தெடுக்கப்பெறும் தகைமையுடையவர்கள்.

3. நிர்வாக சபைகளின் அங்கத்தினர்களாகத் தேரிந்தேடுக்கப்பேறும் தகைமை யற்றவர்கள்.—

1. அதற்கு முன் எந்நிர்வாக சபையிலாவது அங்கத்தினராயிருந்து கணக்குக் காட்டாமலிருந்தவரும், அவருக்குப் பின்வரும் உறவு முறையுள்ள சுற்றத்தவரும் :— (1) சிறிய தாயார் பெரியதாயார் பிள்ளைகள், (2) அத்தை, மாமன் பிள்ளைகள், (3) தாயின் உடன்பிறந்தவன், (4) தகப்பனுடன் பிறந்தவன், (5) சகோதரன், (6) பெண்கொடுத்த மாமனார், (7) மனைவியுடன் பிறந்தவன், (8) உடன்பிறந்தவளுடைய புருஷன், (9) உடன் பிறந்தவளுடைய பிள்ளைகள், (10) மகளைமணந்த மருமகன், (11) தகப்பன், (12) மகன்.

2. மிகவும் நெருங்கிய உறவுமுறையுள்ள ஒரு ஸ்திரீயைப் புணர்ந்த காரணத்தினால் சாஸ்திர விரோதமான தகாப் புணர்ச்சி செய்தவ ரென்றுவது பஞ்சபாதகங்களில் முதல் நான்கு பாதகங்களான ப்ரும்மஹத்தி, மதுபானம், களவு, குருவின் ஸ்திரீயைப் புணர்தல் இவைகளில் எதையேனும் செய்தவரென்றுவது கிராமப் புத்தகங்களில் எழுதப்பட்டவரும் அவருக்கு மேற்கூறிய உறவு முறையுள்ளவர்களும்.

3. தாம் செய்யக் கருதியகாரியத்தின் மூலத்தையும் பலனையும், அதன் வலிமையையும், தமது வலிமையையும், எதிரியின் வலிமையையும், அக்காரியத்தைத் தாம் செய்யக் கருதும் காலம்,இடம் இரண்டின் தன்மையையும் ஆராயாது ஓர் காரியத்திற் பிரவேசிக்கத் துணியும் இயல்புடையவர்.

4. பிறர் பொருளை அபகரித்தவர்.

---

தானும் உண்ணான், பிறருக்கும் கொடான்.

5. கூடலேகை செய்தவர், அதாவது பிறர் கையெழுத்தை யிட்டவர்.

6. யாதாயினுமொரு பாபம்செய்து அதற்குத் தண்டனையாகக் கழுதையின்மேல் ஏற்றப்பட்டவர்.

7. இழிகுலத்தவருடன் நெருங்கிப் பழகிய காரணத்தினால் ஜாதியைவிட்டு விலக்கப்பட்டவர்கள், பிராயச்சித்தஞ் செய்து கொள்ளும் வரையில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் தகைமையற்றவராவர்.

8. எவ்விதமான கையூட்டுங்கொண்டவர் க்ருதப் பிராயச்சித்தஞ் செய்துகொண்டு சுத்தரானபோதிலும், அவர் வாணாளின் முடிவுவரையில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப்பெறும் தகைமை யற்றவராவர்.

9. கிராமத் துரோகியெனக் கருதப்பட்டவர், சாஸ்திர விரோதமான தகாப்புணர்ச்சிசெய்தவர் இவர்கள் பிராயச்சித்தஞ்செய்துகொண்டு சுத்தரானபோதிலும், அவர் வாணாளின் முடிவுவரையில் அங்கத்தினராகத் தேர்ந்தெடுக்கப் பெறும் தகைமையற்றவராவர்.

4. அங்கத்தினர்களைத் தெரிந்தெடுக்கும் முறை:—பன்னிரண்டு சேரிகளடங்கிய அக்கிராமம் முப்பது குடும்பு (வகுப்பு) களாக வகுக்கப்பட்டிருந்தது. ஒவ்வொரு குடும்பிலுள்ள ஒவ்வொருவரும் மேற்கூறியவாறு தகைமை பொருந்தியவர்களில் ஒருவரது பெயரை ஒரு ஓலைச்சீட்டி லெழுதவேண்டும். அவ்வாறு ஒவ்வொரு குடும்பிலும் எழுதப்படும் சீட்டுகளைச் சேர்த்து அவ்வக்குடும்பின் பெயரெழுதப் பெற்ற வாயோலைபூட்டிக்கட்டி, அக்கட்டுகளை ஓர் குடத்தில் போடவேண்டும். அவ்வாறு முப்பது குடும்புகளிலும் போட்ட முப்பது கட்டுகளடங்கிய குடத்தைச் சபாமண்டபத்துக்குக் கொண்டுபோய், வாலிபர் முதல் விருத்தர் வரையிலுமுள்ள அனைவரையும் சபாமண்டபத்திற்கூட்டி, அன்று அவ்வூரிலிருக்கும் நம்பிமார்கள் அனைவரையும் அழைத்துவந்து உள்மண்டபத்திலே இருத்தி, அவர்களின் நடுவே அக்குடத்தை வைக்கவேண்டும். நம்பிமார்களில் விருத்தராயுள்ள ஒருவர் மேல் நோக்கினவண்ணமாய் யாவரும் காணும்படி அக்குடத்தை யெடுத்துக்கொண்டு, நடைபெறுங் காரியம் இன்னதென்றறியமுடியாத ஓர் பாலகனை அக்குடத்திலிருந்து ஓர் குடும்புச் சீட்டுக்கட்டை யெடுத்து மற்றொரு குடத்திற் புகவிட்டுக் கட்டை யவிழ்க்கச்செய்து சீட்டுகளைக் குலுக்கி, அப்பாலகனை அவைகளினின்று ஓர் சீட்டு எடுக்கச் சொல்லி, அதை வாங்கி மத்யஸ்தன்கையிற்கொடுக்கவேண்டும். அப்போது மத்யஸ்தன் ஐந்து விரற்களையும் அகலவைத்து உள்ளங் கையிலே அவ்வோலையை வாங்கிக்கொண்டு, அதில் எழுதிய பெயரை வாசிக்கவேண்டும். பிறகு அங்குள்ள நம்பிமாரெல்லோரும் அவ்வோலையில் எழுதிய பெயரை வாசிக்கவேண்டும். பிறகு அப்படி வாசித்த பெயரை ஓர் ஓலையில் எழுதிக் கொள்ளவேண்டும். இவ்வாறு முப்பது குடும்புச் சீட்டுக்கட்டுகளிலிருந்தும் முப்பது சீட்டுகளை எடுத்து அவைகளிலுள்ள பெயர்களை வாசித்துக் காட்டி, அப்பெயர்களை யெல்லாம் ஓர் ஓலையில் எழுதவேண்டும். அவ்வாறு தெரிந்தெடுக்கப்படும் முப்பதின்மரில், மிகவும் விருத்தாப்பியராயுள்ள பன்னிருவரை ஸம்வத்ஸரவாரிய அங்கத்தினராகக் கொள்ளவேண்டும். மிக்குநின்ற பதினெண்மரில், பன்னிருவரை தோட்டவாரிய அங்கத்தினராகவும் அறுவரை ஏரிவாரிய அங்கத்தினராகவும் கொள்ளவேண்டும். பஞ்ஜவாரவாரியத்துக்கும் பொன்வாரியத்துக்கும் மேற்கூறியவாறே முப்பது சீட்டுகள் தெரிந்தெடுத்து, அம்முப்பது சீட்டுகளையும் குடத்திலிட்டுக் குலுக்கி பன்னிரு சீட்டுகள் தெரிந்தெடுத்து, அச்சீட்டுகளில் எழுதப்பெற்ற பன்னிருவரில் அறுவரை பஞ்ஜவாரவாரிய அங்கத்தினராகவும், அறுவரை பொன்வாரிய அங்கத்தினராகவும் கொள்ளவேண்டும்.

5. **அங்கத்தினர்களின் உத்தியோககாலம்:**— அங்கத்தினர்கள் அவர்கள் செய்த தவறுகளுக்காக உத்தியோகத்தினின்று விலக்கப்பட்டாலன்றி, அவர்களைத் தெரிந்தெடுத்தவன்று முதல் முந்நூற்றறுபது நாள் நிரம்ப அவ்வுத்தியோகத்திலிருக்க அர்ஹதையுள்ளவர்கள்.

6. பஞ்ஜவாரவாரியம், பொன்வாரியம்:— இவ்வாரியங்களுக்கும் அங்கத்தினர்கள் வருஷத்துக் கொருமுறை தெரிந்தெடுக்கப்பட்டனர் என்று கொள்ளவேண்டியிருக்கிறது. ஏனெனில், இச்சிலாசாசனம் ஏற்பட்ட மறுவருஷமுதல் இவ்வாரியங்களுக்கு அங்கத்தினரைத் தெரிந்தெடுப்பதற்கு, முந்தியவருஷத்தில் அவ்வாரியங்களின் அங்கத்தினர்கள் எக்குடும்புகளைச்சேர்ந்தவர்களோ அக்குடும்புகளை நீக்கி மற்றப் பதினெட்டுக் குடும்புகளில் மட்டும் சீட்டுகள் சேர்த்துக் குடத்திலிட்டு மேற்கூறியவாறு பதினெட்டுச் சீட்டுகள் தெரிந்தெடுத்து, அப்பதினெட்டுச் சீட்டுகளையும் குலுக்கி அவைகளினின்றும் பன்னிரண்டு சீட்டுகளைத் தெரிந்தெடுத்து, அவைகளி லெழுபெற்ற பன்னிருவரில்; அறுவரை பஞ்ஜவாரவாரிய அங்கத்தினராகவும் அறுவரைப்பொன்வாரிய அங்கத்தினராகவும் கொள்ளவேண்டுமென இச்சிலாசாசனத்தில் கண்டிருக்கிறது.

7. **மேற்கூறிய ஐந்துவாரியங்களுக்கும் அங்கத்தினர்களைத் தேர்ந்தேடுப்பதற்கு மகா சபை கூட்டுவது யாரேனில்** :—ஒவ்வொரு ஆண்டும் அங்கத்தினர்களைத் தெரிந்தெடுப்பதற்கு தன்மக்ருத்யங்கடைக்காணும் வாரியத்தின் அங்கத்தினரே மகாசபை கூட்டவேண்டும்.

8. **மத்யஸ்தன்** :—யோக்கியமாய்ச் சம்பாதித்த தனமுடையவனைத்தான் மத்யஸ்தனாக நியமிக்கலாம். மத்யஸ்தன் கணக்கெழுதி, கணக்கைப் பரிசீலனை செய்வதற்காக மகாசபையாரால் நியமிக்கப்படுபவர்களிடத்தில் கணக்குக் காட்டவேண்டும். அவன் யோக்கியனென அவர்களால் அங்கீகரிக்கப்பட்டால்தான் மறு வருஷத்துக்கு அவன் கணக்கெழுதலாம். ஒரு கணக்கன் எழுதிய கணக்கை அவனே காட்டவேண்டும். ஒருவனது கணக்கை மற்றக் கணக்கர்களைக் கொண்டு முடிக்கக்கூடாது.

மேலே விவரித்துள்ள விதிகளினின்று துஷ்டர்கள் கிராம நிர்வாக சபைகளில் அங்கத்தினர்களாகாமல் தடுக்கவும் அச்சபைகள் கிராமத்தின் நன்மைக்கு விரோதமாக நடப்பதற்கு இடங்கொடாமல் தடுக்கவும் நமது முன்னோர்கள் எவ்வளவு நுட்ப புத்தியுடன் சட்டதிட்டங்கள் ஏற்படுத்தினர் என்பது நன்கு விளங்கும். இவைகளுடன் ஒத்துப் பார்ப்பதற்காக இதே காரியத்துக்காக நவீனநாகரீகத்திற் சிறந்த நாடுகள் ஏற்படுத்திக்கொண்டிருக்கும் விதிகளைப் பின்னர் எடுத்துக் கூறுவோம். அதற்குமுன் நமது நாட்டில் பண்டு கிராமச் சபைகள் திறத்துடன் நடத்திவந்த காரியங்களின்னவென அறிந்துகொள்ள வேண்டுவது அவசியமாகும்.

தானே கனியாத பழத்தைத் தடிகொண்டு அடித்தால் கனியுமா ?



# துவேஷம்

## HATRED

[ஸ்ரீமான் ச. தா. மூர்த்தி முதலியார்.]

இது போது துவேஷம் எங்கும் பரவி நிற்கின்றது. இதனால் விளைவது நன்மையா அல்லது தீமையா என்று ஆராய்ந்து பார்ப்போமேயானால், அளவிட்டுச் சொல்ல முடியாத தீமையே விளைகிறதென்பது வெளியாகும். துவேஷங்களில் பலவகை யுண்டு. ஜாதித்துவேஷம், மதத்துவேஷம், பாஷைத் துவேஷம், தாரதம்மியத்துவேஷம் என்பன முக்கியமானவை. ஜாதித் துவேஷம் தற்சமயம் மேலோங்கி நிற்கின்றது. ஒரு ஜாதி மேலோங்கி நின்றால், மற்றொரு ஜாதியாருக்கு அது முற்றிலும் பொருந்துகிறதில்லை. நில வேம்புக் கஷாயம் குடித்ததுபோல, முகம், மனம் முதலியன விகாரப்படுகின்றன. இவ்வுலகம் எல்லோருக்கும் பொதுவானது. ஒருவன் உயர்வடைய வேண்டாமென்று கூறுகிறதற்கு இவ்வுலகில் எவரும் இல்லை. ஒவ்வொருவரும் எப்படித் தம்முடைய சுய முயற்சியினால் உயர்வடைய வேண்டியதாயிருக்கிறதோ, அப்படியே ஒரு ஜன சமூகம் முன்னேற்ற மடையவேண்டுமானால், அந்தச் சமூகம் உழைக்கும் அளவில் முன்னேற்றம் ஏற்படும். பிறருடைய உன்னத நிலைமையைக் கண்டு வெறுமனே துவேஷம் கொள்வதனால் எவ்விதமாகிய பயனும் சித்திக்காது. அவரவருடைய உழைப்புக்குத்தக்க பயனே கிடைக்குமன்றி, கூலிக்கு மேற்பட்ட பயன் எங்கும் இல்லை. அநேகர் யாதொரு முயற்சியும் இல்லாமல், முயற்சியுடைய பிறரது உயர்வைக் கண்டு மனம் பொறாது துவேஷங் கொள்கிறார்கள். இதனால் அமைதியின்மை உண்டாகுமேயொழிய, நன்மை ஒரு சிறிதும் ஏற்படாது. துவேஷம் அதைக் கொண்டவனுக்கு மனவமைதியைக் கொடுக்காது. அதனால் அவன் சித்தப்பிரமை கொண்டுவிடுகிறான். காரண காரியங்களை யறியும் ஆற்றலை முற்றிலும் போக்கிக் கொள்கிறான். தான் பிடித்த முயலுக்கு மூன்றே கால்கள் என்று சாதிக்கத் தொடங்கிவிடுகிறான். இதனால் அவனுக்கும் பிரயோசனமில்லை, பிறருக்கும் எவ்விதமாகிய நன்மையும் உண்டாகமாட்டாது. துவே

தான் சாக மருந்து உண்பார் இல்லை.

ஷங்கொண்டவன் நேராகப் பார்க்குந் தன்மையையும் இழந்துவிடுவான். எதைப் பார்த்தாலும் அவனுடைய திருஷ்டிக்கு நூதனமாகவே தோற்றும். தான் துவேஷங்கொண்ட ஜாதியினர் செய்யும் ஒவ்வொரு நற்காரியமும் தீய காரியமாகவே தோன்றும். இதற்கு மாறாக துவேஷங்கொள்ளாது, மற்றவர் உயர்வடைவதற்குக் காரணம் யாது? நம்மவர் ஏன் அவ்விதம் உயர்வடையவில்லை? என்பனவற்றைத் தூயமனங்கொண்டு ஆராய்ந்து பார்த்தால் விஷயத் தெளிவு ஏற்படும். இருளில் நடந்து போகிறவன் இருள் என்று உள்ளூர உன்னுவானேயானால் அவ்விருளிலும் அபூர்வ வெளிச்சம் தோன்றக்காண்பான். ஆகையினால் நன்மை வேண்டும் என்று உண்மையாக ஒருவன் மனனம் பண்ணுவானேயானால் ஆங்கே, அப்பொழுதே, நன்மை சித்திக்கும். இதுவே சரியான மார்க்கமன்றிப் பிறருடைய உயர்வைக்கண்டு மனம் புழுங்கி அவரைத் துன்புறுத்தவோ அவர்களுடைய பகைமையைத் தேடிக்கொள்ளவோ முயற்சி செய்வது கிரமமான முறையன்று.

மதத்துவேஷமும் இப்படியே நேரிடுகிறது. மதம், மதிகொண்டு ஆராய்ச்சி செய்யும் தன்மையினது. அவ்விதமான ஆராய்ச்சி உன்னதமாயும் எல்லாவற்றுக்கும் மூலகாரணமாயுமுள்ள பொருளொன்றைக் காண முயல்வதில் செய்யப்படவேண்டியது கிரமமாயிருக்க, மதியை யிழந்துகொள்ளுந் தன்மையில் தான் தான் கண்டவளவில் சித்தப்பிரமைகொண்டு ஒருமதச்சார்பாகிப் பிறமதங்களையும் பிறமதஸ்தர்களையும் தூற்றுவது துவேஷச்செயலாகும்.

கடவுள் எத்தன்மையாகிய பொருளென்று கூறவந்த விடத்து பெரியோர்கள் "சமயாதீதப் பழம் பொருள்", என்று உண்மை யுரைபாடியுள்ளார்கள். எல்லாச் சமயங்களையுங் கடந்து நின்ற பொருளே கடவுள். இவ்வுண்மையை யறியாதோர் மதப்பித்தர். தன் சமயமே பெரிதென்று நினைக்கும் கள்வனொருவன், சமயங் கடந்த பொருளை யனுட்டிக்கும் ஒரு கூட்டத்தினரையே கள்வர் என்று கூறினானென்றால், தன் மனங் கொண்டு பிறர் மனமளப்பது உலக சுபாவம். இந்த மதத்துவேஷத்தினால் பல ஜனாசாரச் சீர்கேடுகள் நம்முடைய தமிழ் நாட்டில உண்டாயினமையை உண்மைத் தமிழன் எவன்தான் உன்னி மனமழுங்காமலிருப்பான். கடவுளை நேராய்க்கண்டோர் பிறருக்கு விண்டாரில்லை. கடவுளைக் கண்டதாக விண்டோன் உண்மையில் கண்டவனேயல்லன். பிறிதொன்று, சமஸ்கிருதம் பயின்றவன் தமிழ் தள்ளப்படவேண்டிய பாஷை யென்கிறான், தமிழை நன்றா யோதினோன், சமஸ்கிருதம் இறந்துபோன பாஷை யென்கிறான்; இரண்டையும் ஒருங்கே பயின்றோன் ஒவ்வொன்றுக்கும் தனித்தனிச் சிறப்புண்டு என்கிறான். உண்மை, கடைசியாகக் கூறியவனுடைய பட்சத்தினதேயாகும். துவேஷங்காட்டி ஒன்றில் மற்றொன்று உயர்வுடையது என்று சொல்வதில் யாது பயன் உண்டாகும்? பிறருடைய ஏசுகைக்கு ஆட்பட நேரிடும். அவ்வளவுதான். வெளவால் பதவிதான் சித்திக்கும். எந்தப் பாஷையும், அபிப்பிராயங் கூற வரும் அறிவிலிகளைப் போன்றவர்களால் தோற்றத்துக்குக் கொண்டுவரப்படவில்லை. அப்படியிருக்க, அபிப்பிராயங் கொடுக்க வருவோர் தங்கள் துவேஷ புத்தியைக் காட்டிக் கொள்வது ஒவ்வாத காரியம்.

இனி, தாரதம்மியத் துவேஷம் எல்லாவற்றிலும் கொடியது. நூறு ரூபாய்ச் சம்பளம் வாங்குகிறவனுக்கு நாற்பது ரூபாய்ச் சம்பளக்காரனுடைய நட்பு பிடிக்கிறதில்லை. நாற்பது ரூபாய்ச் சம்பளக்காரன் இருபது ரூபாய்க்காரனை அவமதிப்பாக நடத்துகிறான். பெரிய உத்தியோகத்திலுள்ளவனுக்குத் தன்கீழ் வேலை பார்ப்போரெல்லோரும் மனிதப் பிறவியிலுங் கீழ்ப்பட்டவர்களென்னும் அபிப்பிராயம். குதிரைவண்டியிற் போகிறவனுக்கு நரவண்டியிற் போகிறவனைக் கண்டால் வெறுப்பு. கடனற்ற வாழ்க்கையிலிருப்பவனைக் கண்டால் டாம்பீகிக்கு மனந்தாளுகிறது கிடையாது. பொதுவாக, ஒருவனுக்கு மற்றொருவன் பிடிக்கிறதில்லை. இந்தத் துவேஷம் தமிழர்களாகிய நம்மில் பெயராவண்ணம் குடிபுகுந்து இருக்கிறது. விரிந்த எண்ணங் கிடையாது. பரந்த மனமில்லை. இதனால் ஒற்றுமையில்லை. ஒருவர் மற்றொருவருக்குச் சகாயம் புரியும் தன்மையில்லை. நேரிற்காணும் மனிதரோடு வார்த்தையாடாத விரதங்கொண்டலைவுகிறோம். மற்றவர்களுடைய க்ஷேமத்தை யறிய விரும்புகிறோமில்லை. (இதன் தொடர்ச்சி 121-ம் பக்கம் பார்க்க.)





# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(72-ம் பக்கத் தொடர்ச்சி)

### இரண்டாம் பாகம்

### ஐந்தாம் அத்தியாயம்

### உதயபுரி பேகம்

அவுரங்கசீபு உலகப்பிரசித்திபெற்ற பாதுஷா. நல்ல புத்திகூர்மை யுடையவன்; விடாமுயற்சி, தைரியம் முதலிய அரசனுக்குரிய குணங்களவனிடத்தி லனேகமிருந்தன. இவ்வளவு மேன்மையான குணங்கள் அவனிடமிருந்தும் தன் ராஜ்ஜியத்துக்குக் கேடு விளைவிக்கும்படியான வெகு காரியங்களைச் செய்துகொண்டு வந்தான்.

இதற்கு முக்கியகாரண மென்னவென்றால், அவுரங்கசீபு மகா பாபசிந்தையுடையவன். சுயகாரியத்திலேயே கண்ணாகிப் பிறரைத் துன்புறுத்துவதில் நிபுணனான இப்படிப்பட்ட மகா கபட சுபாவமுள்ளவன் உலகத்தில் வேறெங்குமிரான். தனக்குச் சிற்றின்பங்களில் சிறிதேனும் பிரியமில்லாததுபோல் நடிப்பான். ஆனால் அவனந்தப்புரம் தேன்பாண்டத்தில் ஈக்களைப்போல் வடிவழகிகளால் நிறைந்து, அவர்கள் இனிய குரலோசையினால்செவிக்கானந்தத்தைக் கொடுத்துக்கொண்டிருக்கும்.

அவன் பட்டமகிஷிகள் எண்ணமுடியாதவர். விவாகமில்லாமல் சம்பளத்துக்கிருந்த பெண்மார் இன்னுமதிகம். இக்கதை இப்பாவிகளைப்பற்றியில்லை. ஆனால் அவன் மகிஷிகளால் ஆகவேண்டிய விஷயங்கள் சிலவுண்டு.

மொகலாய பாதுஷா யாரை முதலில் மணம் செய்துகொண்டானோ அவளே பிரதானமகிஷியென்னப்படுவள். துரதிர்ஷ்டவசமாய் இந்தத் துவேஷியான அவுரங்கசீபுக்கு பிரதான மகிஷி ஒரு இந்துராஜன் மகள். அக்பர், ரஜபுத்திர கன்னிகைகளை விவாகம் பண்ணிக்கொள்ளுகிற வழக்கத்தை ஆரம்பித்திருந்தான். அவ்வழக்கப்படி அவுரங்கசீபிற்கு யோதபுரிபேகம் என்பவள் பிரதானமகிஷியாயிருந்தாள்.

யோதபுரிபேகம் பிரதான மகிஷியாயிருந்தாலும் பாதுஷாவின் பிரீதிக்கும் விசுவாசத்துக்கும் உரியவளாயில்லை. எல்லாரைக்காட்டிலும் அவுரங்கசீபு ஒரு கிறிஸ்தவ ஸ்திரீயின்மேல் பிரீதி அதிகம் வைத்திருந்தான். இந்துதேச சரித்திரத்தில் அவள் உதயபுரிபேகம் என்று வருணிக்கப்பட்டிருக்கிறாள். இவள் பிறந்தவிடம்ஆசியாகண்டத்தின் மேல்பாகத்திலுள்ள ஜார்ஜியாதேசம். அடிமைவிற்கிறவன் ஒருவன் இவளை இளம்பிராயத்திலேயே விற்பதற்காக இந்தியாவுக்குக் கொண்டுவந்தான். அவுரங்கசீபின் அண்ணனான தாரா என்பவன் இவளை விலைக்கு வாங்கிக்கொண்டான்.

பிராயமானவுடன் பெண்மணியின் ரூபலாவண்யத்திற்கு தாரா அடிமையானான். உதயபுரி பேகம் மகம்மதியளல்ல. கிறிஸ்தவ ஜாதி. கடைசியில் தாராவும் கிறிஸ்தவனானானென்று உலக வதந்தி ஒன்றுண்டு.

தாராவை யுத்தத்தில் ஜெயித்தவுடன் அவுரங்கசீபு சிங்காதனத்திலேறினான். தாராவைச் சிறையிலடைத்துக் கடைசியில் அவனை வதம் பண்ணினான். அது மாத்திரமல்ல. அவுரங்கசீபு, கொரானில் விதித்திருக்கிறபடி அண்ணன் பெண்ஜாதியைத் தம்பி விவாகம் பண்ணிக்கொண்டு தீரவேண்டுமென்று சொல்லி, தாராவின் மகிஷிகளிருவரும் தன்னிடம் வரவேண்டுமென்று உத்திரவு செய்தான். அவர்களில் ஒருத்தி ரஜபுத்திர கன்னிகை. மற்றொருத்தி இந்த உதயபுரிபேகம். அந்த ரஜபுத்திர கன்னிகை இந்த சமாசாரம் கேட்டு என்ன செய்தாளோ அதை இந்துஜாதிப்பெண் தவிர வேறொருவரும் செய்யத் துணியார். அவள் விஷங்கொண்டு மரணமடைந்தாள். கிறிஸ்தவப்பெண் ஆநந்தத்துடன் அவனுக்கு மகிஷியானாள். இந்த கிறிஸ்தவப்பெண்ணின் பெயர் வெளிக்கு வந்ததேயொழிய, தருமத்துக்குப் பயந்த ரஜபுத்திரியின் பெயரை யாருமறியார். உதயபுரி எவ்வளவு ஒப்பற்ற அழகுள்ளவளோ அவ்வளவு மதுபானத்தில் நிகரில்லாத ஆசையுள்ளவளாயிருந்தாள். டில்லி பாதுஷாக்கள் மகம்மதியரானாலும் மதுபானம் பண்ணுவதுண்டு. ரங்கமகலில் மதுவின்பூஜை அதிகம். ஜேபஉன்னீஸா தானாக உத்தரவில்லாமல் உதயபுரியின் படுக்கையறையுள்ளே போகக்கூடுவதில்லை. ஏனென்றால், பாதுஷாவின் பிரிய மகிஷி மதுபானத்தில் மெய்மறந்திருந்தாள். வேலைக்காரிகள் அவள்உடுப்புமுதலியவைகளை,

சரிப்படுத்தி உரத்துக் கூப்பிட்டு அவளுக்கு ஞாபகம் வரும்படி செய்தார்கள். ஜேப உன்னீஸா உள்ளேபோய் பார்க்கவும் உதயபுரியின் இடக்கையில் உக்காவின் குழாய், கண்கள் முக்கால் வாசி மூடியிருந்தது. புஷ்பங்கள் பரப்பப்பட்ட மெத்தையின்மேல் விழுந்திருந்தாள். ஜேப உன்னீஸா அவளுக்கு மரியாதைசெய்து, "அம்மா தங்களுடம்பு சௌக்கியமா?" என்ருள். உதயபுரி அரைவிழி ஞாபகமாய் "இராத்திரி இத்தனை நாழிக்கேன் வந்த காரணம்."

ஜேப.—ஒரு பெரிய ஸமாசாரமிருக்கிறது.

உதய.—மகாராஷ்டிர திருடன்செத்தானே?

ஜேப.—"அதைப்பார்க்கிலும் நல்ல ஸமாசாரம்" என்று சொல்லி ஜேபஉன்னீஸா கொஞ்சங் கொஞ்சம் பொய்கலந்து ரங்கபுரத்தில் சஞ்சலகுமாரி படத்தை உடைத்துப் போட்ட விருத்தாந்தத்தையெல்லாம் விஸ்தாரமாய் விவரித்தாள். "இது என்ன நல்ல சமாசாரமா?" என்ருள் உதயபுரிபேகம்.

ஜேப.—இவள் மிகவும் அழகுள்ளவள், தங்களுக்கடிமையாயிருந்து தங்களுக்கு வெற்றிலை மடித்துக் கொடுப்பதை நான் பார்க்க வேணும். அந்த ராஜகுமாரி தங்களுக்கு அவ்வேலை செய்யும்படி தாங்கள் பாதுஷாவை வேண்டிக்கொள்ளவேண்டும்.

உதயபுரி வெகு கம்பீரமாய் "நல்லது" என்ருள்.

இது நடந்த சற்றுநேரத்துக்கெல்லாம் ராஜகாரியங்களால் களைப்படைந்து அவுரங்கசீபு உதயபுரிபேகம் அறைக்கு வந்தான். உதயபுரி ஜேப உன்னீஸா தனக்குச் சொன்ன ஸமாசாரத்தைஅவனுக்குத்தெரிவித்து,"ராஜகுமாரி எனக்கு ஒரு வேலை செய்யவேண்டும்" என்று வேண்டிக்கொண்டாள். அதைக் கேட்டவுடன் அவுரங்கசீபு அப்படியே செய்வதாக ஒப்புக்கொண்டான்.

## ஆரும் அத்தியாயம்

## அவுரங்கசீபின் ஆக்கினை

மறுநாளே ராஜாக்கினை ஏற்பட்டது. அற்பராஜ்ஜியமான ரூபநகரத்தினரசனுக்கு கட்டளை புறப்பட்டது. அவுரங்கசீபின் குரூரத்திற்குப் பயந்து யசோவர்மன், ஜயஸிம்மன் முதலான தீரர்கள்கூட முயலைப்போல் ஓடி யொளிந்துகொண்டார்கள். தந்திர சிரோமணியான சிவாஜியும் அவுரங்கசீபின் குரூரத்திற்காளாகி சிறையிலடைபட்டிருந்தான். அப்படிப் பட்டக் குரூர சுபாவத்திலிருந்தே ஒரு ஆக்கினைப் பத்திரம் பிறந்தது. அதில் எழுதப்பட்டிருந்ததென்னவென்ருல்: "அவுரங்கசீபு ரூபநகரத்திய ராஜகுமாரியின் சௌந்தரிய குணங்களைக்கேட்டு மயங்கியிருக்கிருர். மேலும் ரூபநகரத்திய அரசனின் பக்தியினுலும் வணக்கத்தினுலும் பிரீதியடைந்திருக்கிருர். அதனுல் பாதுஷா அந்த ராஜகுமாரத்தியை மணம்புரிந்து அவ்வரசனின் ராஜபக்திக்குத்தக்க மரியாதை செய்யவேண்டுமென்றிருக்கிருர். ஆதலால் அரசன் தன் மகளை டில்லிக்கனுப்பத் தயாராயிருக்கவேண்டும். ஜாக்கிரதையாய் அவளை யழைத்து வருவதற்கு சேனை சீக்கிரத்தில் அவ்விடம் வந்து சேரும்" என்பது.

இந்த ஸமாசாரம் ரூபநகரத்திற்கெட்டினதும் அங்கே வெகு கடுபிடியாயிற்று. அவ்வூரில் உண்டான ஆநந்தத்துக்களவில்லை. யோதபுரி, ஆம்பர் முதலான பெரிய ராஜ்ஜியங்களிலுள்ள ரஜபுத்திர ராஜாக்கள் மொகலாய பாதுஷாவுக்கு கன்னிகாதானம் செய்துகொடுப்பது வெகு கௌரவமென்றிருந்தார்கள். அப்படியிருக்க, சிறிய தேசத்தானுகிய ரூபநகரத்தரசனுடைய அதிர்ஷ்டமே இது என்று எல்லாரும் புகழத் தொடங்கினுர்கள். எந்த டில்லி பாதுஷாவுக்கு நிகர் வேறெங்குமில்லையோ அப்பேர்ப்பட்டவர் அரசனுருக்கு மருமகனுவார். சஞ்சலகுமாரி பூவுலகாதிபதியாவாள். இதைப் பார்க்கிலும் மேன்மையானது என்ன ? அரசனும் ராணியும் ரூபநகரத்துப் பிரஜைகளும் ஆநந்தசாகரத்தில் மூழ்கியிருந்தார்கள். ராணி தேவாலயங்களுக்கெல்லாம் பூஜைக்கு வேண்டிய திரவியங்களை யனுப்புவித்தாள்.

சஞ்சல குமாரியின் தோழிகள் மாத்திரமே விசனத்தை யடைந்தார்கள். மொகலாயரைக் கண்ணுல் கண்டால் பாவமென்றிருந்த சஞ்சலகுமாரிக்கு இதனுல் சுகம் ஏதேனுமில்லையென்று அவர்களுக்கு நன்ருய்த்தெரியும்.

இந்த ஸமாசாரம் டில்லியில் எங்கும் பரவிற்று. பாதுஷாவின் ரங்கமகலினும் எட்டிற்று. யோதபுரிபேகம் இதைக்கேட்டு வியாகுலத்தை யடைந்தாள். அவள் இந்து ஜாதிய ஸ்திரீ. மகம்மதிய மனையில் புகுந்து

தான் திருடி, அயல் வீட்டை நம்பான்.



பூலோகமுழுவதிற்கும் மகாராணியாயிருந்தும் அவளுக்கு எள்ளளவும் சுகமில்லை. அவள் அவுரங்கசீபின் அந்தப்புரத்திலிருந்தாலும் இந்து சமயவாசாரங்களை அனுசரித்துக்கொண்டுவந்தாள். அவள் வேலைக்காரரெல்லாம் இந்துக்கள். இந்துக்கள் சமைத்த அன்னத்தைத்தவிர வேறொன்றும் புசிப்பதில்லை. அவுரங்கசீபின் அரண்மனையிற்கூட இந்து விக்கிரகங்களை வைத்துப் பூசித்துவந்தாள். இந்துமதத்துவேஷியான அவுரங்கசீபு இதைச் சகித்துவந்ததைப் பார்க்கும்பொழுது அவளிடத்தில் அனுக்கிரகமுள்ளவனென்று காண்கிறது.

யோதபுரிபேகம் இவ்விஷயத்தைக் கேட்டாள். ஒருநாள் அவளுக்கு அவுரங்கசீபின் பேட்டிகிடைத்தது. அப்பொழுதுஅவள்வெகு வணக்கத்துடன் "சுவாமி தங்கள் கட்டளையினுல் பிரதிதினமும் மகாராஜாக்கள் தங்கள் பதவியை யிழந்துவிடுகிருர்கள். அப்பேர்ப்பட்ட தங்கள் கோபத்துக்கு ஒரு சிறு பெண் பாத்திரமாவாளோ ?" என்ருள்.

ராஜேந்திரன் நகைத்தான். ஆனுல் ஒன்றும் சொல்லவில்லை.

அப்பொழுது யோதபுரத்திய ராஜகுமாரி மனதில் "ஆ கடவுளே நான் விதவையானுலும் சிந்தையில்லை. இந்த ராக்ஷஸன் இன்னும் வெகுகாலம் ஜீவித்திருந்தால் இந்து என்கிற பெயரே போய்விடும்" என்று எண்ணிக்கொண்டாள்.

தேவியென்று அவளுக்கொரு வேலைக்காரியிருந்தாள். அவள் யோதபுரத்திலிருந்து தன் கூடவந்தவள். ஆனுல் தேசம் விட்டு வந்து துருக்கர் சீமையிலிருப்பதற்கு இஷ்டமில்லாமல் தன்னூருக்குப் போகவேண்டுமென்கிற ஆசை யுடையவளாயிருந்தாள். வெகுநாளாய் எஜமானியை உத்தரவு கேட்டுக்கொண்டிருந்தாள். ஆனுல் அவள் வெகு நம்பிக்கையுள்ளவளாயிருந்ததால் விடுவதற்கு மனதில்லாமல் உத்தரவாகவில்லை. யோதபுரிபேகம் அவளை இன்று கூப்பிட்டு இரகசியமாய் "நீ ஊருக்குப் போகவேண்டுமென்று வெகுநாளாய்க் கேட்டுக்கொண்டிருக்கிருய். இன்றைக்கு உனக்கு உத்தரவு கொடுக்கிறேன். ஆனுல் நீ எனக்கு ஒருகாரியம் செய்யவேண்டியிருக்கிறது. வேலையோ பெரிய காரியம். வெகு சாகசம் வேண்டும், நம்பிக்கையாயிருக்க வேண்டும். அதற்கு வேண்டிய பணங்கொடுக்கிறேன். இனுமும் தருவேன். நீ மறுபடியும் இங்கு வரவேண்டியதில்லை. இந்த வேலையைச் செய்யமுடியுமா" என்று கேட்டாள்.

தேவி—உத்திரவுப்படி.

யோதபுரி— ரூபநகரத்திய ராஜகுமாரத்தியின் சமாசாரம் காதில் விழுந்ததல்லவா? அவளிடத்திற்கு நீ போகவேண்டும். நான் காகிதம் எழுதிக்கொடுப்பதில்லை. நான் சொல்லுவதை அவளிடத்தில் சொல்லு. நான் கொடுக்கிற என் மோதிரத்தைக் காண்பித்தால் அவள் நம்புவாள். உனக்குக் குதிரைசவாரி செய்யத் தெரியுமல்லவா ? குதிரை வாங்கிக்கொள்ளுவதற்குப் பணந்தருகிறேன். வேறெங்கேயாவது வாங்கிக்கொள்.

தேவி—என்ன சொல்லவேண்டும்?

யோதபுரி—ராஜகுமாரிக்குச் சொல்லவேண்டியதென்னவென்ருல், 'இந்து கன்னிகை மகம்மதியர் வீட்டுக்கு வரக்கூடாது. நான் புகுந்து பிரதிதினம் மரணத்தை வேண்டிக் கொள்கிறேன். படத்தை நீ உடைத்த சமாசாரம் பாதுஷாவிற்குத் தெரிந்து அதற்கு உன்னைத் தகுந்தபடி சிக்ஷைசெய்ய வேண்டுமென்றே அழைத்துவரும்படி கட்டளையிட்டிருக்கிருன். உன்னை அழைத்துவந்து உதயபுரி பேகத்துக்கு தாசியாக்கி உன் கையால் அவளுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கும்படி செய்வதாய் பிரதிக்கினை செய்திருக்கிருன். விஷத்தையாவது தின்னவேண்டுமே தவிர டில்லிக்கு வரக்கூடாது' என்று சொல்ல வேண்டும்.

மேலும் சொல்லவேண்டிய தென்னவென்ருல், 'டில்லி சிம்மாசனம் வேர் பலமில்லாமல் ஆடிக்கொண்டிருக்கிறது. தெற்கே மராட்டியர் மொகலாயர் மூளையைப் பொடிப்பொடியாக்குகிருர்கள். ஜாஸியா என்ற வரியானது இந்துக்கள் வயிற்றில் நெருப்பை மூட்டியிருக்கிறது. இராஜஸ்தானத்தில் கோஹத்தி யாகிக்கொண்டு வருகிறது. எந்த ரஜபுத்திரன் இதைச் சகிப்பான்?உதயபுரத்திய ராணு, மகா வீரன் என்கிருர்கள். அவனுக்கொப்பான வீரன் மொகலாயரில் யாருமில்லை. அவன் ரஜபுத்திரரை ஒன்றுசேர்த்து நடத்திவந்தால் ஒரு பக்கத்தில் சிவாஜியும் இன்னொரு பக்கத்தில்



தான் பத்தினியானல், தேவடியாள் தெருவிலும் குடியிருக்கலாம்.

ராஜஸிம்ஹன் இவர்கள் படையெடுத்து வந்தால் டில்லிராஜ்யம் எத்தனைநாள் நிற்கும்!'

தேவி—அந்த வார்த்தை சொல்ல வேண்டாமம்மா! டில்லி சிங்காதனம் உன் மகனுக்குரியது. உன் மக்கள் சிம்மாஸனத்தை எடுத்தெறிய நீயே உபாயஞ் சொல்லலாமா?

பேகம்—என் மகன் இந்த ராஜ்யத்துக்கு அதிபதியாவானென்று எனக்கு நம்பிக்கையில்லை. எவ்வளவு நாள் இந்த ராக்ஷஸியான ஜேபஉன்னீஸாவும் இந்த உதயபுரியும் ஜீவித்திருக்கிறார்களோ அதுவரையில் அந்த நம்பிக்கை எனக்கில்லை. ஒருதரம் இந்த நம்பிக்கை வைத்துக்கொண்டதற்கு ரோஷன்வாவிடத்தில் அடிபட்டேன். இன்னும் முகத்தில் அந்த வடு இருக்கிறது.'

என்று சொல்லி யோதபுரிபேகம் கண்ணீர் விட்டு மறுபடியுஞ் சொல்லத் தொடங்கினாள்.

இந்த வார்த்தைகளினால் பிரயோசனமில்லை. என்னபிப்பிராயம் உனக்குத் தெரியாது. தெரிந்து என்ன பிரயோஜனம்? நான் சொல்லுகிறபடி செய். ராஜகுமாரியை ராஜஸிம்ஹனைச் சரணமடையென்று சொல். அவன் அவளை உபேக்ஷிக்கமாட்டான். அவள் ராணா ராஜஸிம்ஹன் மகிஷி ஆகவேண்டுமென்று நான் ஆசீர்வதித்ததாகச் சொல்லு. ராஜமகிஷியானபிறகு உதயபுரிபேகம் அவளுக்கு வெற்றிலை மடித்துக் கொடுக்கட்டும். ஜேபஉன்னீஸா அவள் பாதசேவை செய்யட்டுமென்று சொல்லு.

தேவி—இதெல்லாம் ஆகுமா அம்மா?

பேகம்—அதைப்பற்றி நீ கேட்கவேண்டாம். நான் சொன்னதைமட்டும் செய்யமுடியுமா முடியாதா?

தேவி—அப்படியே செய்கிறேன்.

அப்பொழுது யோதபுரிபேகம் தேவிக்கு வேண்டிய திரவியம் இனும் முதலானவைகள் கொடுத்துத் தன் முத்திரைமோதிரத்தையும் கொடுத் தனுப்பினாள்.

## ஏழாம் அத்தியாயம்

## ஜேபஉன்னீஸாவும் மபாரகனும்

மறுபடியும் ஜேபஉன்னீஸா தன் சிங்காரவறையில் இருக்கிறாள். மபாரகனும் பக்கத்தில் இருக்கிறான். அவன் கீழே ஜமக்காளத்தில் உட்கார்ந்துகொண்டு கைகூப்பிக் கொண்டிருக்கிறான். ஜேபஉன்னீஸா தன் மஞ்சத்தின்மேல் உட்கார்ந்துகொண்டு தங்கத்தினால் செய்த ஹுக்காவின் குழாயை வாயிலிட்டுக்கொண்டிருக்கிறாள்.

ஜேப—எல்லாம் சரியாய்ச் சொல்லுகிறாயா?

மபாரகன்—உத்தரவானால்சொல்லுகிறேன்.

ஜேப—நீ தரியாவை விவாகஞ்செய்து கொண்டிருக்கிறாயா?

மபார—எங்களூரிலிருக்கும்பொழுது செய்துகொண்டேன்.

ஜேப—அதனால்தான் அனுக்கிரகம்செய்து என்னையும் கலியாணஞ்செய்து கொள்ள வேண்டுமென்று இஷ்டப்பட்டதோ?

மபார—நான் வெகு நாளுக்குமுன் அவளுக்குத் தல்லாக் கொடுத்துவிட்டேன். (தல்லாக் என்றால் முஸல்மானரில் புருஷன்பெண்ஜாதி ஒருவருக்கொருவர் சம்பந்தம் வேண்டாமென்று செய்துகொள்வதற்குச் சொல்லுகிறது.)

ஜேப— எதற்காக அவளை விட்டுவிட்டீர்?

மபா—அவள் பைத்தியம் என்பது தங்களுக்குத் தெரிந்திருக்கலாம்.

ஜேப—அவள் பைத்தியமென்று எனக்கு ஒருபொழுதும் தோன்றவில்லை.

மபா—அவள் தன் காரியத்தை முடித்துக் கொள்வதற்காக இங்கே வருகிறாள். வேலை செய்கிற வேளையில் அவள் பைத்தியமென்று தெரியாது. ஆனால் மற்ற சமயத்தில் அவள் பைத்தியம் என்று தெரிகிறது. வேண்டுமானால் காண்பிக்கிறேன்.

ஜேப—அவளை இங்கே அனுப்புவீரா! எனக்குக் கொஞ்சம் நல்ல பன்னீர் வேண்டுமென்று சொல்லு.

மபா—நான் நாளைக்காலையில் தூரதேசத்திற்குப் போகவேண்டியிருக்கிறது.

ஜேப—தூரதேசத்திற்கா? எனக்கேன் சொல்லவே இல்லை.

மபா—ராஜஸ்தானத்தில் ரூபநகரமென்கிற இராஜ்யமொன் றிருக்கிறது. அந்த இராஜகுமாரியை விவாகம் பண்ணிக்கொள்ளுவதாக பாதுஷா அவர்களின் மர்ஜ்யா யிருக்கிறது. அவளையழைத்து வருகிறதற்காக நாளைக்காலமே சேனைபோகிறது. அத்துடன் நானும் போகவேண்டும்.

ஜேப—அந்த விஷயத்தில் நான் சொல்ல வேண்டியது கொஞ்சமிருக்கிறது. ஆனால

தான் போனால் தாகத்துக்குக் கிடையாது, 'எழுதடா ஓலை நூறுகுடம் தயிருக்கு' என்கிறான்.



முதலில் இந்தக் கேள்விக்கு உத்தரங்கொடு. நீ ஜோசியனுக்குக் கைகாண்பித்தாயா?

மபா—போயிருந்தேன்.

ஜேப—எதற்காக?

மபா—எல்லாரும் போய்க்கொண்டிருந்தார்கள். நானும் போயிருந்தேன். இவ்வளவு சொன்னால் போதும். ஆனால் வேறொரு காரணமுண்டு. தரியா என்னை பலாத்காரமாக இழுத்துக்கொண்டு போனாள்.

ஜேப—அப்படியா?

இப்படிச்சொல்லி ஜேபஉன்னீஸா கொஞ்ச நேரம் சும்மாவிருந்து பிறகு, நீ ஏன் போனாய்? என்றாள்.

மபா—நடந்த சங்கதிதெரிவித்துவிட்டேன்.

ஜேப—அரசன் மகளை விவாகம்பண்ணிக்கொண்டால் முன்னுக்குவருவாய் என்று ஜோசியன் சொன்னானா?

மபா—ஆமாம்.

ஜேப—அதனால்தான் நீ அன்று விவாகப்பிரஸ்தாபஞ் செய்ததோ?

மபா—அது தருமமென்று நினைத்துச் சொன்னேன். அதற்கு முன்னேயே இந்த வார்த்தை தங்களிடத்தில் சொல்லியிருப்பது ஞாபகமிருக்கலாம்.

ஜேப—என்னமோ எனக்கு ஞாபகமில்லை. அதுபோகட்டும். அதனால் பிரயோஜனமில்லை. நான் இவ்வளவு சொன்னேனென்று நீ கோபித்துக் கொள்ளவேண்டாம். நீ கோபித்துக் கொண்டால் எனக்கு வெகு வருத்தமாயிருக்கிறது. உன்னைப் பார்த்துக்கொண்டிருந்தால் எனக்கு சுகமாயிருக்கிறது மஞ்சத்தின்மேல் வந்துட்காரு. அத்தர் பூசுகிறேன்.

ஜேபஉன்னீஸா மபாரகனை மஞ்சத்தின் மேல் உட்காரவைத்து அவனுக்கு அத்தர் முதலானது பூசி சற்று நேரங்கழித்து, இப்போது ரூபநகரத்தாளின் வார்த்தையைப் பற்றிப் பேசுவோம். அவள் தகப்பன் அவளை அனுப்புவனோ மாட்டானோ சொல்லமுடியாது. அவன் அனுப்பாவிட்டால் நீ பலாத்காரமாக அவளைக் கொண்டுவரவேண்டும், என்று சொன்னாள்.

மபா—பாதுஷா அப்படிக் கட்டளை இடவில்லையே.

ஜேப—நானே பாதுஷா என்று தெரிந்து கொள்ளப்படாதோ? பாதுஷாவுக்கு அப்படியப்பிப்பிராயமில்லாமலிருந்தால் எதற்காகச் சேனையை யனுப்புகிறார்?

மபா—மார்க்கத்தில் விக்கினங்களைத் தடுப்பதற்காக.

ஜேப—நீ எப்படியாவது ரூபநகரத்தாளைக் கொண்டுவரவேண்டும். அதனால் பாதுஷா கோபத்தையடைந்தால் நான் பார்த்துக் கொள்ளுகிறேன்.

மபா—எனக்கு அவ்வளவு சொன்னால் போதும். தங்களுக்கு இந்த அபிப்பிராயம் வந்ததற்குக் காரணம் என்னவென்று தயவு செய்து சொன்னால், என் கையில் இன்னும் கொஞ்சம் பலம் விருத்தியாகும்.

ஜேப—அதைச் சொல்லுவதற்காகவே நான் இந்த வார்த்தையை யெடுத்தேன். என்னால் தான் அவளை இங்கே அழைத்துவரும்படி ஏற்பாடாயிற்று.

மபா—அதனால் ஆகவேண்டிய காரியமென்ன?

ஜேப—உதயபுரி பேகம் தனக்கு மிஞ்சி அழகுள்ளவள் வேறு இல்லையென்று கர்வங்கொண்டிருக்கிறாள். ரூபநகரத்தாள் வெகுசுந்தரி யென்று கேழ்வி. அப்படியானால் அவள் பாதுஷாவின்மேல் அதிக அதிகாரமுடையவளாவாள். நானே அவளை அழைத்தேனென்று அவளுக்குத் தெரிந்தால் ரூபநகரத்தாள் எனக்கு வசமாவாள். பின்னே என்னதிகாரத்துக்குக் குறைவுவராது. நீ போவது இன்னும் நல்லதாயிற்று. அவள் உதயபுரி பேகத்தைக்காட்டிலும் அழகுள்ளவளோ பார்.

மபா— நான் உதயபுரிபேகம் அவர்களைப் பார்த்ததேயில்லை.

ஜேப— பார். காண்பிக்கிறேன்.

ஜேப உன்னீஸா நகைத்துக்கொண்டு அவள் படத்தைக் காண்பித்து, பின்னே ரூபநகரத்தாளைப் பார். அவள் உதயபுரியைக் காட்டிலும் அழகுள்ளவளாயிருந்தால் அவளிடத்தில் நான் தான் அவளை யழைத்துவரப் பிரயத்தனப்பட்டதாகச் சொல்லு. அவள் அவ்வளவு அழகில்லாதவளா யிருந்தால்—

இவ்வளவு சொல்லிக் கொஞ்சம் ஆலோசிக்க வாரம்பித்தாள். மபாரகன், அவளுக்கு அவ்வளவழகில்லாவிட்டால் என்ன செய்வது? என்றான்.

தான் தின்னி, பிள்ளை வளர்க்காள், தவிடு தின்ன கோழி வளர்க்காள்.

ஜேப—நீ கலியாணஞ் செய்துகொள்ள வேண்டுமென்று நிரம்ப ஆசைப்படுகிறாய். நீயே அவளைக் கலியாணஞ் செய்துகொள். பாதுஷாவின் அனுமதிகொடுக்கும்படி நான் செய்கிறேன்.

மபா—துர்ப்பாக்கியனான என்மேல் தங்களுக்கு அனுக்கிரகமே யில்லையோ?

ஜே—பாதுஷாவின் மகளுடையப் பிரீதி விசுவாசம் தவிர வேறென்ன ;

மபா—பாதுஷாவின் மகளை அல்லா எதற்காக சிருஷ்டித்தார்?

ஜேப—சுகப்படுவதற்காக.

மபாரகன் வேறொன்றுஞ் சொல்லவில்லை. அந்த வார்த்தையை விட்டுவிட்டு "பாதுஷாவுக்குப் பேகம் ஆகிறவளை நான் பார்ப்பதெப்படி?" என்றான்.

ஜேப—ஏதாவது ஒரு உபாயஞ் செய்.

மபா—கேட்டால் பாதுஷா என்ன செய்வாரோ?

ஜேப—அதற்கு நான் ஜவாப்தாரி.

மபா—தாங்கள் சொன்னபிரகாரம் செய்கிறேன். ஆனால் ஏழையாகிய என்மேல் பிரீதியில்லை.

ஜேப—என்னுயிரைக்காட்டிலும் உன்னிடத்தில் பிரீதிவைத்திருக்கிறேனென்று நான் முன்னேயே சொல்லவில்லையா?

மபாரகன் முகஞ்சுண்டி உத்தரவு பெற்றுக்கொண்டு அவ்விடத்திலிருந்து புறப்பட்டுப் போனான்.

## மூன்றாம் பாகம்

## முதல் அத்தியாயம்

### சம்பாஷணை

நிர்மலை இராஜகுமாரியின் பக்கத்தில்போய் உட்கார்ந்து கொண்டிருந்தாள். இராஜகுமாரித் தனியாக விருந்தாள்; அன்று விலைக்கு வாங்கின படங்களில் ஒன்றைக்கையில் வைத்துப் பார்த்துக் கொண்டிருந்தாள். நிர்மலையைக் கண்டவுடன் படத்தைப் பின்புறம் திருப்பிக் கொண்டாள். யாருடைய படத்தைப் பார்த்துக் கொண்டிருந்தாளென்பது நிர்மலைக்குத் தெரிந்தவிஷயமே. நிர்மலை சமீபத்தில் உட்கார்ந்துகொண்டு "இப்பொழுது என்ன உபாயஞ்செய்யலாம்?" என்றாள்.

சஞ்சலா—உபாயமிருந்தாலுஞ்சரி. இல்லாவிட்டாலுஞ்சரி. நான் போய் மொகலாயருக்கு அடிமையாவதில்லை.

நிர்மலா—அது எனக்குத் தெரியும். அலங்கீர் பாதுஷாவின் உத்தரவிற்கு நம்முடைய மகாராஜா வேறு என்ன சொல்லமுடியும். உபாயமில்லை ; அது நீ ஒப்புக்கொள்ள வேண்டியதே ; இந்தக் காலத்தில் ராஜாக்கள் எல்லோரும் டில்லி பாதுஷாவிற்குப் பெண் கொடுப்பதற்கு இஷ்டமுள்ளவர்களா யிருக்கிறார்கள். உனக்கேன் மகாராணியாவதற்கிஷ்டமில்லை ?

சஞ்சலை—கோபங்கொண்டு, போ தூர, என்றாள்.

நிர்மலை, அந்தமாதிரி பேசுவதில் பிரயோஜனமில்லை யென்றறிந்து, வேறு விதமாகவாவது இவளுக்கு உபகாரஞ் செய்யவேண்டுமென்று நினைத்துகொண்டு, "நான் எழுந்து போகிறேன். ஆனால் இவ்வளவு காலம் யாரால் பரிபாலிக்கப்பட்டேனோ, அவளுக்கு இதஞ் செய்ய வேண்டுமென்று யோசிக்கிறேன். நீ டில்லிக்குப் போகாமலிருந்தால் உன் தகப்பனுருக்கு என்ன கதியாகுந்தெரியுமா?" என்றாள்.

சஞ்சலை—தெரியும். நான் போகாவிட்டால் அவர் தலை மிஞ்சுவதில்லை. ரூப நகரத்திய கோட்டைக் கற்கள் ஒன்றாவது நிற்காது. நான் என் தந்தையின் வதத்திற்குக் காரணமாக மாட்டேன். பாதுஷாவின் விருதுகள் வந்தவுடன் அவர்களுடன் நான் டில்லிக்குப் போவேன் இது நிச்சயம்.

நிர்மலை சந்தோஷத்துடன் "நான் அப்படியே சொல்லவேண்டுமென்று வந்தேன்" என்றாள்.

இராஜகுமாரி மறுபடியும் கோபங்கொண்டு "நான் டில்லிக்குப்போய் முஸல்மானரின்படுக்கையில் படுப்பேன் என்று நினைக்கிறாயோ?" என்றாள்.

நிர்மலை ஒன்றும் புரியாமல் "அப்படியானால் என்ன செய்வாய்?" என்று கேட்டாள்.

சஞ்சலை, விரலில் போட்டுக்கொண்டிருந்த மோதிரத்தைக் காட்டி, "டில்லிக்குப் போகிற மார்க்கத்தில் விஷபானஞ் செய்வேன்" என்று சொன்னாள். நிர்மலை மோதிரத்தில் விஷமிருக்கிறதென்று அறிந்துகொண்டாள்.

நிர்மலை—வேறு உபாயமொன்று மில்லையா?

சஞ்சலா—நிர்மலே! வேறு உபாயமென்ன? பூலோகத்தில் அப்படிப்பட்ட வீரன் யார்!

தான் தேடாப் பொன்னுக்கு மாற்றும் இல்லை, உரையும் இல்லை.



என்னைக் காப்பாற்றி டில்லி பாதுஷாவினிடத்தில் வைரங்கட்டிக் கொள்ளுபவன் யாரிருக்கிறான். ரஜபுத்திரரெல்லாரும் இக்காலத்தில் மொகலாயருக்கு தாஸராயிருக்கிறார்கள். இப்பொழுது, ஸங்கிராமஸிம்மன், பிரதாபஸிம்மன் முதலானவர்கள் யாரிருக்கிறார்கள் சொல்லு.

நிர்மலை—நான் என்ன சொல்லுவேன்? ஸங்கிராம ஸிம்மனு மில்லை. பிரதாபஸிம்மனு மில்லை. இருந்தாலும், உனக்காக டில்லி பாதுஷாவினிடம் பகைகொள்ளுவதற்கு அவர்களுக்கு என்ன அவசியம்? ஸங்கிராமனில்லை பிரதாபனில்லை ; ராஜஸிம்ஹ னிருக்கிறான். ஆனால் அவன் உனக்காகத் தன் க்ஷேமத்தை எதற்காகக் கெடுத்துக்கொள்ளவேண்டும்?

சஞ்சலை—அதென்ன அப்படிச்சொல்லுகிறாய்? கைகளில் பலமுண்டானால் ரஜபுத்திரர்கள்சரணமடைந்தவர்களைக்காப்பாற்றவேண்டுமல்லவா? நானும் இந்த விஷயத்தைத்தான் யோசித்துக் கொண்டிருந்தேன். பிரதாபஸிம்மன் ஸங்கிராமஸிம்மன் இவர்கள் வம்சத்துக்குத் திலகம்போல் விளங்குகிறவனைச் சரணமடைய வேண்டுமென்றிருக்கிறேன். அவனால் என்னை ரக்ஷிக்கமுடியாதா? என்று சொல்லிக்கொண்டு மூடியிருந்த படத்தை நன்றாய்த் திருப்பிவைத்தாள். பார்க்கவும் ராஜஸிம்ஹன் படமாயிருந்தது. சித்திரத்தைப் பார்த்துக்கொண்டு அரசன் மகள் மறுபடியும் சொல்லத் தொடங்கினாள்: "இதோ பார். இவன் காந்தியைப்பார்த்தால், கதி இல்லாதவருக்கு நாதனென்று தெரியவில்லையா? நான் இவனிடத்தில் சரணமடைந்தால் என்னைக் காப்பாற்ற மாட்டானோ?"

நிர்மலை நல்ல புத்திசாலி. சஞ்சலைக்குச் சகோதரியைக்காட்டிலும் அதிகமாயிருந்தாள். சற்று நேரம் யோசித்துப்பிறகு சஞ்சலையை உற்றுப் பார்த்துக்கொண்டு "ராஜகுமாரி! உன்னை இந்த ஆபத்திலிருந்து விடுவிக்கிற வீரனுக்கு நீ என்ன கொடுப்பாய்?" என்று கேட்டாள்.

இராஜகுமாரி தெரிந்துகொண்டு மெதுவாய் "நான் என்ன கொடுக்கமுடியும்? என்னிடத்தில் என்ன விருக்கிறது! ஸ்திரீஜாதியாகிய நான் என்ன செய்வேன்?" என்றாள்.

நிர்மலை—நீயே இருக்கிறாயல்லவா!

சஞ்சலை—போ தூர.

நிர்மலை—அரசர் வீடுகளில் இப்படியாவதுண்டு. நீ ருக்மிணியானால் யாதவராஜன் உன்னை நிச்சயமாய்க் காப்பாற்றுவான்.

சஞ்சலையின் முகம் பிரீதியினாலும் வெட்கத்தினாலும் வர்ணிக்கமுடியாத ஒரு அபூர்வமான அழகை யடைந்தது. அவள் "அப்படிப்பட்ட பாக்கியம் எனக்குண்டாகுமோ? அப்பேர்ப்பட்ட புண்ணியம் நான் செய்திருக்கிறேனோ? நானே என்னை விற்றுக்கொள்ளப் போனால் அவன் வாங்கிக் கொள்ளுவனோ?" என்றாள்.

நிர்மலை—எடுத்துக்கொள்வதும் விட்டுவிடுவதும் அவனிஷ்டம். நாம் யோசிக்கவேண்டிய விஷயமல்ல. ராஜஸிம்ஹன் பாஹுபலமுள்ளவன் என்று கேட்டிருக்கிறேன். அவனுக்கு யாராவது ஒரு தூதனை அனுப்பமுடியுமா? ஒருவருக்குந் தெரியாமல் அங்கே போகக்கூடிய தூதன் யாராவது இருக்கிறானா?

சஞ்சலை சற்றுயோசித்து "நீபோய் நம் குருதேவரை அழைத்துவா. என்னிடத்தில் அவரைக் காட்டிலும் பிரீதிவைத்தவர் வேறு யாருமில்லை. நீயே போய் எல்லா சமாசாரத்தையும் விபரமாய்த் தெரிவித்துக் கூப்பிட்டுக்கொண்டு வா. சொல்லுவதற்கு எனக்கே வெட்கமாயிருக்கிறது" என்றாள்.

இச்சமயத்தில் தோழிகள் சிலர் வந்து முத்து விற்பவள் ஒருத்தி முத்துகொண்டுவந்திருக்கிறாள் என்று தெரிவித்தார்கள். ராஜகுமாரி "முத்துவியாபாரஞ் செய்வதற்கு இது சமயமில்லை ; அவளைப் போகச்சொல்" என்றாள். தோழிமார் "போவென்றால் அவள் போகிறதில்லை. அவளென்னமோ தங்களைப் பார்க்கவேண்டிய அவசியமுள்ளவள்போல் தோன்றுகிறது" என்றார்கள். அப்பொழுது சஞ்சலை "வரச்சொல்" என்றாள்.

முத்துவிற்பவள் வந்து சில அற்ப முத்துக்களை எடுத்துக்காண்பித்தாள். ராஜகுமாரி "சீமை முத்துகளைக் காண்பிப்பதற்கா இவ்வளவு தொந்தரவு செய்தாய்?" என்று சொன்னாள்.

முத்துவிற்பவள்—இல்லை. இன்னும் காண்பிக்கத்தக்க பதார்த்தங்கள் இருக்கின்றன. தாங்கள் கொஞ்சம் தனியாய் வந்தால் காண்பிக்கிறேன்.

சஞ்சலை—நான் ஒண்டியாய் இருக்கமாட்டேன். என்னுடன் நிர்மலைமாத்திரம் இருக்

தான் தின்கிற நஞ்சு, தன்னைத்தான் கொல்லும்.

கட்டும். மற்றவரெல்லாரும் போங்கள்.

அப்பொழுது மற்றவர்களெல்லாம் வெளியே போய்விட்டார்கள். உடனே தேவி—முத்து விற்பவள் தேவியேயொழிய வேறு இல்லை—யோதபுரிபேகம் கொடுத்திருந்த முத்திரை மோதிரத்தைக் காண்பித்தாள். வாசித்துப் பார்த்து சஞ்சலகுமாரி "இது உனக்கு எங்கு கிடைத்தது" என்றாள்.

தேவி—யோதபுரிபேகம் அவர்கள் கொடுத்தது.

சஞ்சலை—நீ யார் ?

தேவி—நான் அவள் தாசி.

சஞ்சலை—பேகம் அவர்களின் முத்திரை மோதிரத்தை எதற்காகக் கொண்டுவந்தாய் ?

தேவி அப்பொழுது சங்கதிகளை விபரமாய் அறிவித்தாள் ; கேட்டுச் சஞ்சலையும் நிர்மலையும் ஒருவர் முகத்தை ஒருவர் பார்த்துக்கொண்டார்கள். சஞ்சலை தேவிக்கு மிகுந்த வெகுமானம் கொடுத்து அனுப்பினாள்.

தேவி போகும்பொழுது யோதபுரி முத்திரை மோதிரத்தை எடுத்துக்கொண்டு போகாமல் அங்கேயே விட்டுவிட்டுப் போனாள். மனப்பூர்வமாய் 'எங்கே போட்டாலென்ன யார் எடுத்துக் கொள்வார்' என்று நினைத்துச் சஞ்சலையின் பக்கத்தில் வைத்துவிட்டுப் புறப்பட்டுப் போனாள்.

அவள் போனவுடன் சஞ்சலகுமாரி "நிர்மலே ! அவளைக் கூப்பிடு ; மோதிரத்தை வைத்துவிட்டுப் போய்விட்டாளே" என்றாள்.

நிர்மலை—வேண்டுமென்றே விட்டுவிட்டுப் போயிருக்கிறாள்.

சஞ்சலை—நான் அதை வைத்துக்கொண்டு என்ன செய்கிறது?

நிர்மலை—எப்பொழுதாவது யோதபுரிக்குத் திருப்பி யனுப்புவிக்கவேணும்.

சஞ்சலை—அது எப்படியானாலும் ஆகட்டும். பேகம் சொல்லியனுப்பியது நமக்குத் தைரியம் விருத்தியாயிற்று. நாமிருவரும் சிறு பெண்கள். நாம் யோசித்தது சரியோ தப்போ என்பது தெரியவில்லை. இப்பொழுது தைரியம் வந்தது. ராஜஸிம்ஹனைச் சரணமடைய வேண்டும்.

"அது முதலிலேயே எனக்குத்தெரிந்த விஷயம்" என்று சொல்லி நிர்மலை நகைத்தாள். சஞ்சலையும் நகைத்தாள். நிர்மலை எழுந்து போய்விட்டாள். அவளுக்கு நம்பிக்கையில்லை. அழுதுகொண்டு போனாள்.

## இரண்டாம் அத்தியாயம்

## தூது விடுத்தல்

அநந்தமிசிரன் சஞ்சல குமாரியின் தந்தை வம்சத்திய புரோஹிதன். தன் மகளைக்காட்டிலும் ஜாஸ்தியாக சஞ்சலகுமாரியி னிடத்தில் விசுவாச முள்ளவன். அவன் மஹோபாத்தியாய பண்டிதன். எல்லோரும் அவனிடத்தில் பக்தி யுள்ளவர்களா யிருந்தார்கள். சஞ்சலை கூப்பிடுகிறாளென்று கேட்டதும் அவன் அந்தப்புரத்துக்கு வந்தான். குடும்ப புரோகிதன் அந்தப்புரத்துக்குப் போவதில் யாதொரு அட்டியுமில்லை. போகிறவழியில் நிர்மலை அவனுக்கு சமாசாரத்தையெல்லாம் விபரமாய்த் தெரிவித்தாள். விபூதி சந்தனம் பூசிக்கொண்டு ருத்திராக்ஷமாலை யணிந்த அந்தப் பிராமணன் சஞ்சலகுமாரி யண்டை வந்து நின்றான். நிர்மலை புறப்பட்டுப் போகும்பொழுது, யார் முன்னும் அழாத சஞ்சலை, அழுவதைக்கண்டாள். இப்பொழுது அழவேயில்லை. குருதேவன் பார்க்கும்பொழுது தீரசுபாவ முள்ளவளா யிருந்தாள்.

குருதேவன் — தாயே. என்னை நினைத்ததெதற்காக?

சஞ்சலை—என்னைக் காப்பாற்றுவதற்கு; காப்பாற்றுவார் வேறு யாருமில்லை.

அநந்தமிசிரன் நகைத்து "ருக்மணி கலியாணமென்று காண்கிறது. அதற்காகக் கிழப்பிராமணன் துவாரகைக்குப் போகவேண்டியதாயிருக்கிறது. அப்படியானால் மார்க்கச் செலவுக்குக் கொடுத்தால் உதயபுரம்போய்ச் சேருவேன்" என்றான்.

சஞ்சலை ஜரிகையில் செய்த ஒரு பையை எடுத்து வெளியே போட்டாள். அது நிறைய மோகராக்ள் இருந்தன. புரோகிதன் அதிலிருந்து ஐந்துமோகராவைமாத்திரம் எடுத்துக் கொண்டு பாக்கியைத் திரும்பிக்கொடுத்தான். பிறகு "நான் ஒன்று சொல்லுகிறேன். அப்படிச் செய்வாயா" என்றான்.

சஞ்சலை — அக்கினியில் விழு என்றாலும், இந்த ஆபத்திலிருந்து தப்பிக்கொள்வதற்காக விழுகிறதற்குத் தயாராய் இருக்கின்றேன். உத்தரவாகட்டும். என்ன செய்யவேண்டும் ?

அநந்த—ராணா ராஜஸிம்ஹனுக்கு ஒரு காகிதம் எழுதிக்கொடுப்பாயா ?

தான் தின்னத் தவிடு இல்லை, வாரத்துக்குப் பன்றிக்குட்டியா?



சஞ்சலை சற்று யோசித்து, "நான் சிறு பெண். அவனுக்கும் எனக்கும் பழக்கமில்லை. காகிதம் எப்படி எழுதுகிறது ? ஆனால் நான் அவனிடத்தில் பிக்ஷை வேண்டுபவளாயிருக்கிறேன். வெட்கப்படுவதில் பிரயோஜனமில்லை. எழுதித்தருகிறேன்" என்றாள்.

அனந்த—நான் சொல்லுகிறபடி எழுதலாமோ? இல்லை நீயே எழுதுவையோ ?

சஞ்சலை—தாங்கள் சொல்லுகிறபடியே எழுதுகிறேன்.

அங்கிருந்த நிர்மலை "அதுசரியல்ல. இந்த வைதீகப்பிராமணன் புத்தி, இந்த விஷயத்திற்குத் தகாது. இதற்கு ஸ்திரீகள் புத்தி வேண்டும். நாம் காகிதத்தை எழுதுவோம், தாங்கள் புறப்படுவதற்குத் தயாராக வாருங்கள்" என்றாள்.

மிசிரடாகூர் புறப்பட்டுப்போனார். ஆனால் வீட்டுக்குப் போகவில்லை. ராஜா விக்கிரமஸிம்மனிடம் போய் "நான் தேசசஞ்சாரத்துக்காகப் போகிறேன். அதற்காக மகாராஜாவுக்கு ஆசீர்வாதஞ்செய்து போகவேண்டுமென்று வந்தேன்." "எதற்காக, எங்கே போகிறீர்கள்", என்று கேட்பதற்குப் பதில் ஒன்றும் சொல்லவில்லை. ராணா ராஜஸிம்ஹனுக்கு ஒரு காகிதம் என்னைப்பற்றி எழுதிக்கொடுக்க வேண்டும் என்று கேட்டுக்கொண்டான். அரசன் காகிதம் எழுதிக்கொடுத்தான்.

அநந்தமிசிரன் அரசன் கொடுத்த காகிதத்தை வாங்கிக்கொண்டு சஞ்சலகுமாரியின் அந்தப்புரத்திற்கு வந்தான். அதற்குள் சஞ்சலை நிர்மலை இருவருங்கூடி புத்தியை ஒருங்கு சேர்த்து ஒருகாகிதம் எழுதி முடித்து ராஜகுமாரியின் காகிதத்தைப் பிராமணன் கையில் கொடுத்து பெட்டியிலிருந்து ஒரு முத்து வளையை எடுத்துக்கொடுத்து ராணா கடிதத்தை வாசித்தவுடன் "எனக்குப்பதிலாக இந்தக் காப்பை ஈடாகக் கொடுத்துவரவேண்டும். ரஜபுத்திர குலத்திற்குத் திலகமாய் விளங்குகிற ராணா ரஜபுத்திர கன்னிகை அனுப்பிய ஈடை அவமதிக்கமாட்டான்" என்றாள்.

அநந்தமிசிரன் ஒப்புக்கொண்டு போனான். போகும்பொழுது ராஜகுமாரி அவனுக்கு ஸாஷ்டாங்க நமஸ்காரஞ் செய்தனுப்பினாள்.

## மூன்றும் அத்தியாயம்

## கள்வர்கள்

உடுக்கிறதற்கு வேண்டிய வஸ்திரம், கொடை, தண்டம், சந்தனக்கட்டை, சொம்பு முதலிய மிகவும் அவசியமான சாமான்களை எடுத்துக்கொண்டு, கூட ஒரு மனிதனை அழைத்துக்கொண்டு பத்தினியினிடத்தில் சொல்லிவிட்டு உதயபுர யாத்திரைக்குப் புறப்பட்டான். புறப்படும்பொழுது அவர் பத்தினி எதற்காக வீண் சிரமம் என்று வேண்டிக் கொண்டாள். ராணாவினிடத்தில் ஏதாவது ஒரு வேலை சம்பாதித்துக்கொண்டு வருகிறேன் என்று சொன்னவுடன் சும்மாவிருந்துவிட்டாள். அநந்தமிசிரன் யாத்திரைக்குப் புறப்பட்டான். ஐந்தாறு ஆட்களைக் கூட அழைத்துக்கொண்டுபோக முடியுமானாலும் அதிக ஜனங்கள் வந்தால் சமாசாரம் வெளிக்குவந்துவிடுமென்று நினைத்து ஒருவனை மாத்திரம் அவன் அழைத்துக்கொண்டு போனான்.

வழி வெகு கஷ்டமானது. அநேகமாய் மேடும் பள்ளமுமாயிருந்தது. சிலவிடங்களில் நிற்பதற்குக்கூட இடமில்லை. பிராமணனுக்கு ஒரு வேளை மாத்திரம் ஆகாரம். எங்கே போஜனம் அகப்பட்டதோ அங்கே அதிதியாகப்போவான். பகல் முழுவதும் வழிநடந்து போவான். மார்க்கத்தில் கள்வர் பயம். மடியில் இரத்தின வளை இருந்ததால் தனியாய்ப் போகப்பயம். வழிப்போக்கர் அகப்பட்டால் அவருடன் புறப்படுவன். ஒரு நாள் ராத்திரி ஒரு தேவஸ்தானத்தில் போஜனம் தீர்த்துக் கொண்டு படுத்துகொண்டிருந்தான். அவனுடன்கூட வர்த்தகர் நால்வர் சயனித்துகொண்டிருந்தார்கள். காலமே புறப்படும்பொழுது வழித்துணைக்குதேடவேண்டிய அவசியமில்லை. அதே பருவதமார்க்கமாய் புறப்பட்ட வர்த்தகர் பிராமணனைப்பார்த்து "நீங்கள் எங்கே போகிறீர்கள்" என்றுகேட்டார்கள். பிராமணன் 'உதயபுரத்துக்குப் போகிறேன்' என்றான். வர்த்தகர் 'நாங்களும் அங்கே போகிறோம். சேர்ந்து போகலாம்' என்றார்கள். பிராமணன் சந்தோஷமடைந்து, 'உதயபுரம் இன்னும் எவ்வளவு தூரம்?' என்று கேட்டான். அதற்கவர் 'சமீபத்தில் வந்துவிட்டோம் இன்று சாயங்காலம் போய்ச் சேரலாம். இதெல்லாம் ராணாவின் ராஜ்யமே', என்றார்கள்,

இப்படிப் பேசிக்கொண்டு எல்லாரும் பிரயாணமானார்கள். குன்றுகள் காடுகள் இவைக

திக்கு அற்றவனுக்கு தெய்வம் துணை.

ளில் நடப்பது வெகு கஷ்டம். எங்கும் ஜனங்கள் வாசஞ்செய்கிற ஸ்தலமில்லே. ஆனல் காட்டுவழி முடிர்துவருகிறதாக தோன்றிற்று. ஸமதலமான பூமி நெருங்கிற்று, பிரயாணிகள் ஒரு வெகு அழகான இடத்துக்கு வந்து சேர்ந்தார்கள். இரண்டு பக்கத்திலும் அதிக உயரமில்லாத பருவதங்கள். அதன்மேல் பசுமையான விருக்ஷங்கள் ஆகாயத்தில் தலையை தூக்கிக்கொண்டு நின்றன. பருவதங்களின் மத்தியில் ஒரு சிற்ருற்றின் நீலமான ஜலப்பிரவாகம் சிறு கற்களின்மேல் மதுரமான சப்தஞ் செய்துகொண்டு நுரைமயமாகி காட்டுப் பக்கமாய் ஓடிக்கொண்டிருந்தது. இந்நதியின் பக்கத்தில் மனுஷியர் நடந்து போகத்தக்க சிறு பாதை ஒன்று தோன்றிற்று. அவ்வழியில் போகிறவர்சளை எங்கிருந்தும் பார்க்கமுடியாமல் பருவதங்கள் மறைத்துக் கொண்டிருந்தன. ஆனல் பருவதத்தின் மேலிருந்து மாத்திரம் பார்க்கக்கூடும்.

இந்தவிடம் வந்து சேர்ந்தவுடன் வர்த்தகரிலொருவன் பிராமணனைப்பார்த்து 'உன்னிடத்தில் ரூபாய்கீபாய் உண்டோ?' என்று கேட்டான்.

பிராமணன் அதைக்கேட்டு மனதில்நடுங்கி, இங்கே கள்வர் பயமுண்டுபோல் காண்கிறது. அதனல்தான் வர்த்தகர்கள் ஜாக்கிரதைப் படுத்துகிருர்கள் என்று தெரிந்துகொண்டான். துர்பலனுக்குப் பொய்தான் பலம் என்றபடி பிராமணன் நான் யாசகப்பிராமணன். என்னிடத்திலேது பணம்? என்ருன்.

வர்த்தகர்—'ஏதாவதிருந்தால் எங்களிடத்தில் கொடு. இது கள்வர் உள்ள ஸ்தலம். உன்னல் வைத்துக்கொள்ள முடியாது' என்ருர்கள்.

பிராமணன்—முன்னும் பின்னும் பார்த்து இரத்தின வளையை வர்த்தகர் கையில் கொடுப்போமா என்று யோசித்து, பின்னே இவர்களில் யாரோ நமக்குத் தெரியாது. இவர்களிடத்தில் கொடுக்கக்கூடாது என்று நிச்சயித்து, நான் யாசகப்பிராமணன்; என்னிடத்தில் என்ன இருக்கிறது? என்ருன்.

பிராமணன்முன்னும்பின்னும் பார்த்ததைக் கண்டு, கபடவேஷதாரியான வர்த்தகர் இவனிடத்தில் என்னவோ இருக்கிறது என்று தெரிந்துகொண்டு, அவர்களில் ஒருவன் பிராமணன் கழுத்தில் கைபோட்டுக் கீழே தள்ளிக் கெட்டியாய்ப் பேசமுடியாமல் வாயை மூடிக்கொண்டான். பிராமணனின் வேலைக்காரன் அந்த க்ஷணத்தில் எவ்விடம் ஓடினனேயாருமறியார்.

பிராமணன் நாராயண ஸ்மரணை செய்ய வாரம்பித்தான். வேறொரு திருடன் பிராமணன் மூட்டையை எடுத்து அவிழ்த்துப்பார்த்தான். அதில் சஞ்சலைகுமாரி கொடுத்தனுப்பிய வளை, இரண்டு காகிதங்கள், சில மோகராக்கள் இருந்தன. கள்வன் அவைகளைக் கைவசம் செய்துகொண்டுதன்சிநேகிதர்களைப் பார்த்து, பிராமணனைக் கொல்லுவதில் பிரயோஜனமொன்றுமில்லை. அவனிடத்திலிருந்ததெல்லாம் அகப்பட்டது, அவனை விட்டுவிடு; என்று சொன்னன்.

வேறொருவன் விடக்கூடாது. விட்டால் பிராமணன் சத்தம் போடுவான். இப்பொழுது ராஜா ராஜஸிம்மன் ரொம்ப பொல்லாதவனயிருக்கிருன். அவன் காலத்தில் வீரர் சோறுதின்று பிழைப்பதே வெகு கஷ்டமாயிருக்கிறது. பிராமணனை மரத்தில் கட்டிவிட்டுப் போகவேண்டுமென்ருன்.

இப்படிச் சொல்லிக்கொண்டு கள்வர் பிராமணனை அவன் வஸ்திரத்தினலே காலுங் கையுங்கட்டி ஒருமரத்தில் அவனைக் கட்டிப்போட்டுவிட்டு சஞ்சலகுமாரியின் வளை காகிதங்கள் முதலானவைகளை எடுத்துக்கொண்டு அச்சிறு நதியின் பக்கத்தில் இருந்த சிறு பாதை வழியாய்ப் புறப்பட்டுப் போனர்கள். இச்சமயத்தில் பருவதத்தின்மேலே குதிரைமேலேறிய ஒருவன் இதை எல்லாம் பார்த்துக் கொண்டிருந்தான். கள்வர் அவனைப் பார்க்கவில்லை.

கள்வர் நதிக்கரைமார்க்கமாய் நடந்துநிர்மானுஷியமான ஒரு வனத்திற்குட் புகுந்து அங்கிருந்து ஒரு குகைக்குட் பிரவேசித்தார்கள்.

குகைக்குள் சாப்பாட்டுக்குவேண்டிய பதார்த்தங்கள் எல்லாம் தயாராயிருந்தன. பார்க்கும்பொழுது கள்வர் அப்போதைக்கப்போது அங்கேவந்து வாசஞ்செய்வது வழக்கம் என்று தோன்றிற்று. கூடத்தில் ஒரு குடத்தில் நீர் இருந்தது. கள்வர் வெற்றிலை பாக்கு போட்டுக்கொள்ள வாரம்பித்தார்கள். அப்பொழுது ஒருவன் "மாணிக்கலாலா! சமையல் பின்னை





செய்துகொள்ளலாம். முதலில் பங்குபோட வேண்டும்" என்ருன்.

மாணிக்கலாலன் — முதலில் அதுதான் செய்யவேண்டியது.

அப்பொழுது மோகருக்களை உடைத்து நாலுபங்காக வைத்தார்கள். ஒவ்வொருவனும் ஒவ்வொருபங்கு எடுத்துக்கொண்டான். இரத்தினக்காப்பு விற்காமல் பாகஞ்செய்ய முடியாதாகையால் அதுமாத்திரம் பொதுவாயிருந்தது. காகிதங்களிரண்டையும் என்ன செய்கிறது என்ற ஆலோசனை பிறந்தது. அவர்கள் தலைவன்—என்ன கிழித்துப்போடு, என்று மாணிக்கலாலன் கையில் கொடுத்தான்.

மாணிக்கலாலனுக்குக் கொஞ்சம் படிக்கத் தெரியும். அவன் காகிதங்களை ஆதியோடந்தம் வாசித்து, சந்தோஷத்துடன் "இக்கடிதங்களைக் கிழிக்கப்படாது. இதை வைத்துக் கொண்டு ஸர்க்கார் வேலை சம்பாதிக்கலாம்" என்ருன்.

அதுகேட்டு என்ன? என்ன? என்று மற்றமூவரும் சத்தமிட்டார்கள். அப்பொழுது மாணிக்கலாலன் சஞ்சலகுமாரியின் காகிதத்தின் விருத்தாந்தத்தை யெல்லாம் சொன்னன். அதுகேட்டு கள்வர்கள் வெகுசந்தோஷமடைந்தார்கள்.

மாணிக்கலாலன், இக்காகிதத்தை ராணுவிடம் கொடுத்தால் இனம் கிடைக்குமென்ருன்.

தலைவன்—போடா முட்டாள். ராணு கடிதம் உனக்கு "எப்படிக் கிடைத்தது என்று கேட்டால் என்ன சொல்லுவாய்? வழிப்பறி செய்ததாகச் சொன்னல் இனம் போய் பிராணனுக்கே வரும். இக்காகிதத்தைக் கொண்டு போய் பாதுஷாவினிடம் கொடுக்கவேணும். இச்சமாசாரத்தைச் சொன்னல் பாதுஷா தகுந்த இனம் கொடுப்பான். அது எனக்குத் தெரியும். இன்னும் இதில் — தலைவன் வார்த்தையை முடிப்பதற்கு முன்னேயே அவன் தலை கழுத்திலிருந்து அறுந்து பூமியில் விழுந்தது.

(110-ம் பக்கத் தொடர்ச்சி.)

இத்துவேஷம் சகோதரத்துவத்தை யழித்து வைக்கிறது. துவேஷம் என்று ஒழிகிறதோ, அன்றே நாமெல்லோரும் ஏக குடும்பத்திலுதித்த சகோதரர்களைப்போல, ஏக ஜனசமூகச் சகோதரர்க ளாவோம்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### பல தேசக் காட்சி

4. சம்பாஷணை

சுந்தரம் கடிதத்தை வாசித்து முடித்தவுடன், கமலா அவனைப்பார்த்து "சுந்தரண்ணு, எகிப்தில் கோபுரம் இருக்கிறதாகவும், அதை ரங்கண்ணு பார்த்ததாகவும் எழுதியிருக்கிருரே, அது ரொம்ப உயரமா?" என்று கேட்டாள்.

சுந்தரம் சிரித்துக்கொண்டே, "ஆமாம், ரொம்ப உயரந்தான். ஆனல் அந்தக் கோபுரங்கள் நம்மூர்க் கோவில் கோபுரங்களைப்போல இராது, பிரமிட்டைப்போல இருக்கும்" என்ருன்.



ஸ்பிங்க்ஸ் உருவமும், கூர்கிதிக் கோபுரமும்

"பிரமிட் என்று இங்கிலீஷில் சொன்னல் எனக்கென்ன தெரியும் அண்ணு?" என்று கேட்டாள் கமலா. அனைவரும் சிரித்தார்கள்.

சுந்தரம் சிரித்துக்கொண்டே, "தமிழில் என்னவென்று சொல்ல எனக்குத் தெரியாது. அதனல்தான் இங்கிலீஷில் சொன்னேன்" என்ருன். அதற்குள் கமலா,

"உனக்குத்தான் நல்ல பொம்மைகள் பண்

ணத் தெரியுமே,சின்னதாகப் பண்ணிக்காட்டு" என்று சொல்லிவிட்டு, ஓடிப்போய்க் களிமண் உருண்டை ஒன்று கொண்டுவந்து வைத்தாள்.

இதெல்லாவற்றையும் பார்த்துச் சிரித்துக் கொண்டேயிருந்த அவர்கள் தகப்பனார், "சுந்தரம், அந்தக் கோபுரத்தின் படம் உன்னிடமில்லையா?" என்றார்.

"ஆமாம் அப்பா; இருக்கிறது. மறந்தே போய்விட்டேன்" என்று சொல்லிவிட்டு, எழுந்து போனான். கமலாவும் அவனோடே போனாள். அதற்குள் கிட்டு, "அம்மா, அம்மா, 'எனக்கு பொம்மை, கோபரம் பொம்மை" என்று கேட்க ஆரம்பித்துவிட்டான்.

இதற்குள் சுந்தரமும் கமலாவும் உள்ளேயிருந்து வந்தார்கள். கமலா, சுந்தரத்தினிடமிருந்த புஸ்தகத்தை வாங்கிக்கொண்டு, "அப்பா, அம்மா, இந்த கோபுரந்தானும், ரங்கண்ணா பார்த்தது" என்று முன்னேயுள்ள படத்தைக் காட்டினாள்.

இருவரும் உற்றுப்பார்த்தார்கள். அதற்குள் சுந்தரம், களிமண்ணால், 'பிரமிட்' டைப்போல சிறு பொம்மை செய்து கமலாவுக்குக் காட்டினான். அவள் "ஏன் அண்ணா இதெல்லாம் கல்லால்தானே செய்திருப்பார்கள்?" என்று கேட்டாள்.

"ஆமாம்" என்றான். ஆனால் "அவர்கள் எப்படி அவ்வளவு உயரத்திற்கு கல்லைக் கொண்டுபோனார்கள்" என்று கேட்க, "எப்படியோ தூக்கிவைத்திருக்கிறார்கள். ரொம்ப கஷ்டம் என்று உபாத்தியாயர் சொன்னார்" என்றான்.

"அண்ணா, உங்கள் உபாத்தியாயரை இங்கே கூப்பிட்டுவாருங்கள். நான் கேட்கிறேன்?" என்றாள் கமலா. எல்லோரும் சிரித்தார்கள். "ஆகட்டும்," என்று சுந்தரம் சொல்லிவிட்டு, அந்தப் புஸ்தகத்தில் மற்றொரு படத்தைக் காட்டினான். கமலா அதைப்பார்த்து "இது யாரண்ணா? தாடிக்காரனா யிருக்கிறான்?" என்றாள்.

"இரண்டு பக்கத்திலும் கல் சுவர்கள் இருக்கின்றன. ஓர் காவல்காரனோ, என்னவோ" என்றாள் அவர்கள் தாயார் லக்ஷ்மி அம்மாள்.

சுந்தரம் அதுவரையிலும் படத்தைக் காட்டினானே தவிர அதன்கீழ் அச்சிட்டிருந்ததைக் காட்டவில்லை. "ஏமாந்தீர்களா!" என்று சொல்லிவிட்டு, கையை எடுத்துவிட்டான். கமலா வாசித்துப்பார்த்து "இரண்டாவது ராமெஸிஸ் அரசன்" என்றாள். "அம்மா, அம்மா, இவர் ஒரு ராஜாவாம்" என்றாள். அதற்குமேல் சுந்தரம், எகிப்து தேசத்து முக்கியமான பூர்வீக அரசர்களில் ராமேஸஸ் ஒருவர் என்று சொன்னான்.



இரண்டாம் ராமெஸிஸ் அரசனது உருவச்சிலை.

"கமலா, இரண்டாவது ராமெஸஸ் என்றால் என்ன?" என்று அவள் தகப்பனார் கேட்டார். அவள் யோசித்துப்பார்த்து, 'ஒன்றாவது ராமெஸிஸ்' யாராவது இருக்கவேண்டும். இல்லையா அண்ணா?" என்றாள்.

சுந்தரம் "ஆமாம்" என்று தலையசைத்தான். "ஆனால் இன்னொரு ராஜாவுக்கு ராமெஸிஸ்"—என்று பேர்வைத்தால் என்ன சொல்கிறது?" என்று கேட்டாள்.

"நீதான் சொல்லேன்" என்றான் சுந்தரம்.

"———ம்———மூன்றும் ராமெஸிஸ், இல்லையா?' என்றாள் கமலா. தகப்பனார், "கமலா, நீ கெட்டிக்காரி", என்று சொல்லி அவளைத் தட்டிக் கொடுத்து "ஏனம்மா, அப்படிப் பேர்வைக்கவேண்டும்?" என்று கேட்டார்.

திங்களும் சனியும் தெற்கே நோக்கவேண்டும்.



"என்ன அப்பா, எனக்குத் தெரியாதா? ராமெஸிஸ் என்று மாத்திரம் சொன்னால் யார் என்று தெரியும்? அதற்காகத்தான் அப்படி ஒன்றாவது இரண்டாவது என்று சொல்லுகிறார்கள்."

"பேஷ்" என்று சொல்லிவிட்டு "இதெல்லாம் உனக்கெப்படித் தெரியும், கமலா?" என்று கேட்டார்.

"ஏனப்பா, பக்கத்தகத்தில் கமலா யிருக்கிறாளோ இல்லையோ. அவள் எனக்குப்பெரியவள். நானும் அவளும் விளையாடும்போது, யாராவது என்னைக் கூப்பிட்டால், "சின்ன கமலா" என்கிறார்கள். அவளை "பெரிய கமலா" என்கிறார்கள். அப்படித்தானே, இங்கேயும்?" என்றாள்.

"ஆம்" என்று அவள் தகப்பனார் சொன்னார். பிறகு அவர்கள் வேறுவிஷயங்களைப்பற்றி பேசிக்கொண்டிருந்தார்கள்.

## 5. இங்கிலாந்தில் ரங்கன்

ரங்கனைப்பார்த்து வெகுநாட்களாய்விட்டன அல்லவா? அவன் இப்பொழுது எங்கே யிருக்கிறான் என்னசெய்கிறான்? என்று பார்ப்போம்.

சுந்தரம் வாசித்த கடிதத்தில் எழுதியிருந்தபடியே ரங்கன் தன் சிநேகிதன் சிவஸ்வாமியுடன்சௌக்கியமாய்க்கப்பலில் பிரயாணம்செய்தான். அவன் எகிப்திலிருந்துபுறப்பட்டு, மத்தியதரைக் கடல்வழியாய்ப்போய்க் கடைசியாய் இங்கிலாந்திலுள்ள டோவர் என்னுமிடத்தில் இறங்கினான். அங்கிருந்து அவன் ரயிலிலேறி லண்டன் நகரத்திற்குப் போய்ச் சேர்ந்தான். அங்கே, அவன் கண்டதெல்லாம் புதிதாயிருந்தது. நம்மவர்கள் ஒருவராவது காணப்படவில்லை. எல்லாரும் பூட்ஸும், நிஜாரும், சட்டையும், வெள்ளைக்கார டொப்பியும் போட்டுக்கொண்டு வெகு அவஸரமாய் போய்க் கொண்டிருந்தார்கள். எல்லோரும் வெள்ளைக்காரர்கள்தானே? ரங்கனும், அவனுடைய சிநேகிதனும், தங்கள் வண்டியிலிருந்து கீழிறங்கி, கூட்டத்தைக்கண்டு ஆச்சர்யப்பட்டு நின்றார்கள். இரண்டுபேர்களும் ஏன் உடனே புறப்பட்டுத் தாங்கள் போய்ச்சேர வேண்டிய இடத்திற்குப் போகக்கூடாது? என்று நீங்கள் கேட்கலாம். அவர்களுக்கு ஊர் புதிதாகையால், தங்களை வந்து அழைத்துப்போகும்படி ஒருவர் வருவார் என்று அவர் சேரவேண்டிய காலேஜின் துரை எழுதியிருந்தார். அதனால் அவர் வரும் வரையிலும் காத்திருந்தார்கள். ரயில் வந்து நின்ற 10 நிமிஷத்திற்கெல்லாம், ஒரு இங்கிலீஷ்காரர் அங்குவந்து "தங்கள் பெயர்கள் ரங்கநாதன், சிவஸ்வாமியோ? என்று கேட்டார். அவர்கள் "நாங்கள்தாம்" என்று சொன்னதும், அவர் அவர்கள் கைகளைக் குலுக்கி, தாம் அவர்களைப் பார்க்க மிகவும் சந்தோஷமடைந்ததாகச் சொன்னார். பிறகு ஒரு கோச்சு வண்டியை அமர்த்திக்கொண்டு, ஓர் பெரிய மெத்தை வீடு போய்ச்சேர்ந்தார்கள். அந்த வீட்டில் நம் தேசத்திலிருந்து படிப்பதற்காக இங்கிலாந்து போன பலர் இருந்தார்கள். அவர்கள் ரங்கனையும் சிவஸ்வாமியையும் கண்டதும் மிகவும் அன்புடனும் பிரியத்துடனும் பேசி, ஓர் அறை அமர்த்திக் கொடுத்தார்கள். தங்கள் தேசத்தார் இருக்குமிடத்தை அடையவே, ரங்கனுக்கும் சிவஸ்வாமிக்கும் உண்டான சந்தோஷம் மிகவும் அதிகம். அவர்களை ஸ்டேஷனிலிருந்து அழைத்து வந்தவர் மறுநாள் வருவதாகச் சொல்லிவிட்டுப் போனார்.

லண்டன் பட்டணத்திற்கு ரங்கன் சாயந்திரவேளையில் போய்ச்சேர்ந்தபடியால், பல கட்டடங்களைக்கவனிக்கமுடியவில்லை. அவன் வெகு தூரம் பிரயாணம் செய்தவனாகையால், அன்றிரவு நன்றாய்த் தூங்கிவிட்டான். மறுநாட்காலை அவன் எழுந்து, காபி சாப்பிட்டுவிட்டு, தான் போய்ச்சேரவேண்டிய காலேஜுகள், பார்க்கவேண்டிய உத்தியோகஸ்தர்கள் முதலியவர்களைக்கண்டு திரும்பினான். சிவஸ்வாமியும் அப்படியே செய்தான். அன்று முதல் ரங்கனுக்கு வேலை சரியாயிருந்தது. படிக்காத நேரங்களில் அவன் தனியாகவாவது, சிவஸ்வாமியுடனாவது இல்லாவிட்டால், மற்ற சிநேகிதர்களுடனாவது லண்டனிலுள்ள முக்கியமான இடங்களுக்குப் போய்ப் பார்த்துவிட்டு வருவான். சிற்சில வேளைகளில், அவன் லண்டனிலிருந்து வேறு ஊர்களுக்குப் போய்வருவதும் உண்டு. அவன் தான் பார்த்தவைகளைப்பற்றித் தன் பெற்றோர்களுக்கும், தம்பி தங்கைக்கும் எழுதுவான்.

ஆனால் நீங்கள் ஒன்று கவனிக்கவேண்டும். அஃதென்னவென்றால் ரங்கனுடைய உடை. அவன் இங்கே யிருக்கும்போது, எந்த மாதிரியான உடை தரித்திருந்தான்? நம்மைப்போலவே அரையில் வேஷ்டியும், மேலே சாதாரண

திண்ணைக்கு விடிந்தால் வீட்டுக்கும் விடியும்.

மாக ஒரு உள் சட்டையும் அங்கவஸ்திரமும் போட்டுகொண்டிருப்பானல்லவா? சில வேளைகளில் மேல் சட்டையும் தலையில் குல்லாவும், காலில் செருப்பும் போட்டுக்கொள்வான். வெயிலடிக்கும்போது, மேல் சட்டையைக் கூட எடுக்கும்படி யிருக்கும். ஏனென்றால், வெயிலால் உடம்பிலிருந்து வியர்வை கொட்டும். ஆனால் இங்கிலாந்திற்குப் போனபிறகு அவன் வேறு மாதிரியான உடை உடுத்திக்கொள்ள வேண்டியிருந்தது. அப்போது, அவன் யார், நம் ரங்கனா என்று யோசிக்கும்படி கஷ்டமாயிருக்கும். அங்கே எப்பொழுதும் குளிரும்; அதனால் கால்முதல் தலைவரையில் போர்த்துக்கொள்ளவேண்டியிருந்தது. இங்கிலீஷ்காரர்களைப்போலவே, ரங்கனும் காலில் மேஜோடு, பூட்ஸ், நிஜார், சட்டை முதலியவைகள் போட்டுக்கொள்வான். தலைக்கும் அவர்களைப் போலவே டொப்பி போட்டுக்கொண்டான். அவன் அந்த 'டொப்பி' போட்டுக் கொள்ளாமலிருந்தாலும் இருக்கலாம். ஆனால், உடைமாத்திரம் அவர்களைப்போலவே போட்டுக்கொள்ள வேண்டியிருந்தது. ஏன் தெரியுமா?

'......அங்கே குளிர் அதிகம்"—ஆம். அதனால்தான் ரங்கன் கம்பளிச் சட்டைகள் முதலியவைகள்போட்டுகொள்ளவேண்டியிருந்தது அவன் டிஸம்பர் மாதத்துக் கடைசியில் ஒரு கடிதம் எழுதினான். அதை வாசித்துப்பார்த்தால், இங்கிலாந்து அப்பொழுது எவ்வளவு குளிராயிருந்ததென்பதை யறிந்துகொள்வீர்கள்.

---

ஸ்ரீமான் கனம் சேஷகிரி ஐயர்.—சென்னை ஹைகோர்ட் ஜட்ஜுகளில் ஒருவராயிருந்து வெகு திறமையுடன் அவ்வுத்தியோகத்தை வகித்து சகலருக்கும் திருப்தியை உண்டுபண்ணினவர்; நமது போதினியை அன்போடு ஆதரித்து வருபவர். இவர் நவம்பர்மீ 10உ தமது நீதிபதி வேலையினின்றும் விலகினார். ஐயரவர்களுடைய விஷயவாராய்ச்சியையும், நியாயம் செய்யவேண்டுமென்கிற மனப்போக்கையும் சட்டத்தில் அவர்க்குள்ள புலமையும் செப்பத் தரமன்று. தேகாரோக்கியமுள்ளவராயிருப்பது பற்றி இனி ஐயர் அவர்கள், தேசத் தொண்டுபுரிவதில் விசேஷ ஊக்கங்காட்டி உழைத்து, பேரும் புகழும் பெறுவாரென எதிர்பார்க்கிறோம். இவர் ஸ்தானத்தில் நியமிக்கப் பெற்றிருக்கும் சாந்தமூர்த்தி ஸ்ரீமான் வேப்பா ராமேசம் பந்துலு அவர்களுக்கும் நல்வரவு கூறுகிறோம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

[ஸ்ரீமான் ஏ. வரதாச்சார்யர், பி.ஏ., எல்.டி.]

(79-ம் பக்கத் தொடர்ச்சி.)

இவ்விதம் இராணி விசனப்பட்டுக் கொண்டிருக்கையில் சில மரவேலைக்காரர்கள் அவ்விடம் வர நேர்ந்தது. அரசன் தன்னை அவர்களுடன் வேலைசெய்து பிழைக்க உத்தரவளிக்கும்படி வேண்டிக்கொள்ள, அவர்களும் அதற்கிணங்கவே, எல்லோரும் ஓர் குடிசைக்குப் போனார்கள்.

மறுநாள்காலையில், விறகு வெட்டுகிறவர்கள் அரசனையும் அழைத்துக்கொண்டு கட்டைகள் வெட்ட காட்டுக்குச் சென்றார்கள். இராணி மாத்திரம் குடிசையில் தங்கியிருந்தாள். எக்காரணத்தாலும் அதைவிட்டு அசையவேண்டாம் என்று அரசன் அவளைக் கட்டளையிட்டான். மற்றவர்கள் பெரிய காட்டுக்கட்டையை எடுத்துவர, அரசன் விலையுயர்ந்த சந்தனக்கட்டையைத்தேடி, வெட்டி எடுத்துவந்தான். மேலும் அரசன் சந்தனக் கட்டையில் அழகான வேலைகள் செய்து, அவற்றை விற்று, வந்த வருமானத்தைக்கொண்டு அக்கிராமத்திலுள்ள விறகுக்காரர்களைப் போஷித்து வந்தான். அவர்களுக்கு அவனிடம் அதிக விசுவாசமுண்டாகி, சீக்கிரத்தில் அவனைத் தங்களுக்குத் தலைவனாகச்செய்துகொண்டார்கள். ஒவ்வொரு பௌர்ணமி தினத்திலும் ஒரு வியாபாரி, நதியின் வழியாகப் படகைச் செலுத்திக்கொண்டு, வெட்டுமரம் வாங்க இந்த கிராமத்தண்டை வருகிற வழக்கமுண்டு. வழக்கம்போல் அவ்வியாபாரி நதியில் வந்து கொண்டிருக்கையில், படகு மணலில் ஆழ்ந்து, என்ன செய்தும் வெளிவரவில்லை. இதைப் பற்றி வியாபாரி ஏங்கி மனவருத்தப்படுகையில் ஒரு வயதுமுதிர்ந்த ஜோஸியர் அவ்விடம் தோன்றி, வியாபாரியை நோக்கி, "நீர் எவ்வித முயற்சி செய்தாலும் படகு மணலை விட்டு வெளிக்கிளம்பாது. அலையோ மேன்மேல் பெரிதாய் வந்துகொண்டிருக்கிறது. என் வார்த்தையைக் கேளாவிட்டால், உம்முடைய பண்டங்கள் எல்லாம் நஷ்டமாய்ப் போவதுடன், நீரும் நீரில் ஆழ்ந்து உயிரையிழக்கும்படி நேரிடும். சமீபத்தில் மரவேலைக்காரர்களிருக்கும் கிராமத்திலுள்ள எல்லா ஸ்திரீகளையும் இவ்விடம் வந்து ஒவ்வொருவராய் இப்படகைத் தொடும்படி செய்யவேணும். அவர்களுள் மகா பதிவிரதாசிரோமணி ஒருவளிருக்கிறாள். அவளுடைய கை பட்டதும், படகு கிளம்பிவிடும்" என்று சொன்னான். வியாபாரியும் சரியென்று ஒப்புக்கொண்டு, கிராமத்திலிருந்துவரும் ஸ்திரீகளுக்கு தகுந்த வெகுமானமளிப்பதாய்ச் சொல்லவே, அவர்கள் கூட்டம் கூட்டமாய் வரத் தொடங்கினார்கள். யார் தொட்டாலும் படகு கிளம்புகிறதாயில்லை. வியாபாரிக்குக் கோபமுண்டாகி, ஜோஸியனைப் பார்த்து 'நீ மிக்க அயோக்கியன். உன் ஏமாற்றும் வித்தையை என்னிடம் காட்டிவிட்டாயா? இதோ உன்னைப் படகில் சேர்த்துக் கட்டி அத்துடன் முழுகிவிடும்படி செய்கிறேன்' என, ஜோஸியன் ஒன்றுக்குமஞ்சாமல், 'எனது சாஸ்திரம் ஒருநாளும் பொய்போகாது என்பது நிச்சயமே. எல்லோரும் வந்துதொடவில்லை. ஒரு சிறு குடிசையிலிருக்கும் ஒரு ஸ்திரீ வந்து தொடவில்லை' என்று பதிலளித்து, வியாபாரியையும் அழைத்துக்கொண்டு, நதிக்கரையில் நடக்கும் சந்தடியைச் சற்றும் கவனியாது அமைதியுடன் கடவுளைத் தியானம் செய்துகொண்டிருக்கும் இராணியைச் சுட்டிக் காண்பித்தான்.

உடனே வியாபாரி அவளைப் படகை வந்து தொட்டு, அநேக உயிர்களைக் காப்பாற்ற வேண்டுமெனப் பிரார்த்தித்ததும், அப்படிச் செய்வதில் தனக்கு சந்தோஷமுண்டெனினும், அக்குடிசையைவிட்டு வெளியிற்போக வேண்டாமென்று தன் கணவன் செய்திருந்த கட்டளையை மீறி, படகண்டை தான் வர முடியாதென்பதைச் சிந்தா எடுத்துக்காட்டினாள்.

அந்த சமயத்தில் அவள் வந்து பலபேர்கள் மரணமடைவதைத் தடுக்கச் சாதனமான அக்காரியத்தைச் செய்வதினால் அவள் கணவனுக்கு சந்தோஷமுண்டாகுமே தவிர தன் கட்டளையைக் கடந்து நடந்தாள் என்று கோபமுண்டாகாதென்று வியாபாரி பலவிதமாய் மன்றாடிக் கேட்டுக்கொள்ள, இராணியும் அதற்கிசைந்து, படகண்டைவந்து அதைத் தொடவே, மண்ணில் ஆழ்ந்து கிடந்த தோணியானது உடனே கிளம்பி ஜலத்தில் செல்ல ஆரம்பித்ததும் இவ்விந்தையைக்கண்டு எல்லோரும் வியந்தார்கள். 'பாம்புக்குப் பால்வார்த்தால் நஞ்சாய் முடியும்.' இராணியின் மஹிமையைக் கண்ணுற்ற வியாபாரிக்கு 'இவளை எடுத்துச்சென்று என்னுடனே வைத்துக்கொண்டால் எவ்வளவு சௌகர்யமாயிருக்கும்' என்ற துர்ப்புத்தி உதித்தது. உடனே அவளைப் பிடித்து இழுத்து, படகில் ஏற்றிக்கொண்டு செல்ல வாரம்பித்தான். இச்சமயம் 'இதற்கெல்லாம் காரணம் யார் தெரியுமா? நான் தான் சனி' என்ற சப்தம் அவள் காதில் விழுந்தது.

ஸ்ரீவத்ஸன், சந்தனக்கட்டைகளை பொறுக்கி எடுத்துக்கொண்டு கானகமிருந்து திரும்பி வந்ததும், குடிசையின் வாயிலில் ஜோதிடன் ரூபமான சனி நின்றுகொண்டு, 'அரசனே! நல்லது, இருக்கட்டும். இப்போது உன் நிலைமை உனக்குத் தெரிந்ததா? உன் பத்தினியிடமிருந்து உன்னைப் பிரித்துவிட்டேன்' என்று நடந்த வரலாற்றை விஸ்தாரமாய்ச் சொன்னான்.

இதைக் கேட்டதும், ஸ்ரீவத்ஸன் ஆராத்துயரங்கொண்டேங்கினான். தன்னிலும்பெரிய மஹான்கள், சனியின் கோபத்தால் அடைந்த கொடுந்துயரங்களை நினைந்து ஒருவாறு மனச்சமாதானமடைந்து சமீபத்திலுள்ள சித்த ஆனந்தம் என்னும் அரண்யத்தில், அடர்ந்த நிழல் சோலைகளும், குளிர்ந்த ஜலம் நிறைந்த தடாகங்களும், இனிய குரலோடு கூவும் பக்ஷி ஜாதிகள் நிறைந்த சுரபி ஆசிரமம் என்னும் ஓர் பிரதேசத்தை அடைந்து, நெடுநாள் பிரயாசைப்பட்டு, சந்தனக்கட்டையால் வெகு நேர்த்தியான வேலைத்திறமுள்ள ஒரு பெட்டியைச் செய்துமுடித்தான். அதை விற்றுத் தன் ஜீவனோபாயத்தைத் தேடிக்கொள்ள நினைத்திருந்தான். இவ்விதமிருக்க, ஒருநாள் அவன் தன் பத்தினியை நினைந்து நதிக்கரை போக நேர்ந்தது. அங்கு ஓர் வியாபாரி ஓர் படகுவிட்டு இறங்கி, விற்பனைக்கேதேனுமுளதா என்று அவனை வினவினான். உடனே அரசன், தான் வெகு அழகாய்ச் செய்திருந்த பெட்டியைக் காண்பிக்க, வியாபாரி அதன் வேலைத்திறனை பலவாறாகப் மெச்சிப் படகினுள் வந்தால் அதன் கிரயத்தைப் பேசி முடிக்கலாமென்று ஸ்ரீவத்ஸனை அன்பு

பாராட்டி அழைத்தான். யாதொரு தீங்கையும் சிறிதும் சிந்தியாது அரசன் அதற்குள் செல்லவே, வியாபாரி ஓர் ஜாடைகாட்டி சேவகர்களைக்கொண்டு அவனைப் பின்கட்டு முறையாய்க் கட்டும்படி செய்வித்து, சந்தனமரப் பெட்டியையும் தான் அபகரித்துக்கொண்டான். சிறிதுநேரத்திற் கெல்லாம் அவனைத் தூக்கி நதி ஜலத்தில் தள்ளிவிடவே, அவன் நீரில் மூழ்கித் தத்தளிக்கையில், 'நீ கொண்டாடிய லக்ஷ்மி தேவி எங்கு போய்விட்டாள்? அவள் ஏன் இச்சமயம் உன்னைக் காப்பாற்றக்கூடாது? என்று பரிஹாஸமாய்ச் சொல்லும் த்வனி ஸ்ரீவத்ஸன் காதில்படவே, அவனும் மூழ்கிக் கொண்டே 'எனது பிரியையான சிந்தா எங்கிருக்கிறாள்' என்று கத்தினான். இப்படகிலேயே சிறை வைக்கப்பட்டிருந்த சிந்தாதேவியின் காதில் இச்சப்தம் கேட்டதும், அவள் ஓர் வலையைத் தண்ணீரி லெறியவே, அதன் உதவியால் அரசனும் மூழ்கிப்போகாமல் கொஞ்சம் சமாளித்துக்கொண்டு, நதிப்பிரவாகத்தின் திசையே சென்று, கடைசியில் சில கிராமவாசிகளால் கரையில் எடுத்து ஏற்றிக் காப்பாற்றப்பட்டான். அவர்களுடன் வசித்துவருகையில் பூந்தோட்டங்களை நன்கு விருத்தி செய்வதில் தனக்குள்ள சாமர்த்தியத்தால், அப்பிரதேசத்தை அழகிய செடி, கொடி, புஷ்ப விருக்ஷங்களால் தழைத்தோங்கும்படி செய்து, அவன் அவர்களுக்குத் தலைவனாகி அவர்களின் பரமவிசுவாஸத்திற்குப் பாத்திரனானான்.

இந்தப் பிரதேசமோ, ஸ்ரீவத்ஸ மஹா சக்கரவர்த்தியின் சிற்றரசனாகிய பாகுதேவனின் ஆளுகைக்குள்பட்டது. இவனுக்குத் திலோத்தமை என்று செல்வப் பெயரையுடைய, பத்திரவதி என்றோர் அருமைப்புதல்வி இருந்தாள். அக்காலத்திய வழக்கத்தை யனுஸரித்து ஸ்வயம்வர சபைகூட்டி, தன் கணவனைத் தேர்ந்தெடுப்பதற்கு ஏற்பாடுசெய்யும்படி அவள் தன் பிதாவைக் கேட்டுக்கொண்டாள். இவ்விதம் ஸ்வயம்வர விஷயத்தில் இன்னார்தான் வரலாமென்ற நிபந்தனை ஏற்படுத்தவோ, அல்லது அஸ்திர சஸ்திரப்பந்தயம், அல்லது புத்திகோசரமான பரீக்ஷணங்கள் முதலியவற்றைக் கொண்டுதான் கணவனை வரிக்கவேண்டுமென்ற நிர்ப்பந்தத்துக்குள்படவோ அவளுக்கு இஷ்டமில்லை. ஸ்வயம்வர கல்யாணப் பத்திரிகை எல்லாதேசத்து மன்னர் முதலானவர்களுக்கு அனுப்பப்பட்டு, அவர்களும் அதைச் சந்தோஷமாய் அங்கீகரித்து வந்துசேர்ந்தார்கள். ஸ்ரீவத்ஸனை உத்தேசித்துப்போன சேவகர்கள், அவர் கொஞ்சகாலமாய் நாட்டைவிட்டு விலகி காட்டிற்குள் சென்று வசிப்பதாயும், பத்திரிகையை அவரிடம் கொடுக்கமுடியவில்லையென்றும் திரும்பிவந்து சொல்லிவிட்டார்கள். இது கேட்டதும், பத்திரவதி தேவிக்கு ஆராத்துயருண்டாயிற்று. என்ன செய்வதென்றும் ஏங்கினாள். ஸ்ரீலக்ஷ்மிதேவிக்கு பன்னிரண்டு வருஷம் விரதாதிகளால் பூஜைசெய்து, 'இப்பிரதேசத்தின் கண்ணுள்ள மஹாசக்கிரவர்த்திக்கு மஹிஷி ஆவாய் என்று லக்ஷ்மிதேவியால் நான் வாக்கருள் பெற்றும், இவ்விதம் நேர்ந்ததே. அவ்வாக்கு எவ்வாறு பலிக்கும்? என்று பலவிதமாய் மனக்கிலேசமடைந்தாள்.

ஸ்வயம்வரதினமும் வந்தது. மண்டபம் வெகு விசித்திரமாய் அலங்கரிக்கப் பெற்றிருந்தது. அரசர்கள் பலரும்; வெகு விலையுயர்ந்த ஆடையாபரணம் பூண்டு, தத்தமக்குரிய ஆசனங்களிலமர்ந்து, மிக்க ரூபலாவண்யத்துடன் ஜ்வலித்தார்கள். பத்திரவதியும், உயர்ந்த புஷ்பங்களால் கட்டப்பட்ட மாலையையும், ஸுகந்தமான சந்தனத்தையும் கையிலெடுத்துக் கொண்டு, கல்யாண மண்டபத்தில் தோன்றினாள். ஒவ்வொருவரும், அவள் ஸௌந்தர்யத்தில் ஈடுபட்டு கண்ணிமை கொட்டாமல் அவளை யுற்று நோக்கினார்கள். அவள் தனக்கெதிரில் வரும்போது ஒவ்வொருவரும் அவள் தன்னை வரிக்கமாட்டாளாவென்று எதிர்பார்த்து, தன்னைவரிக்காமல் அவள் தாண்டிப்போனதும், மனம் நொந்து, முகம்வாடி, தலைதொங்கிவிட்டார். அவள் இவ்விதம் அரசர்கள், அரசகுமாரர்கள் வரிசையெல்லாம் கடந்து சென்றதும், அவர்களெல்லாம் கோபாவேசங்கொண்டு 'இதென்ன விந்தை! எல்லாரையும் வரவழைத்து, ஒருவரையும் வரித்து மணம்புரியாமலிருப்பதுதான் சுயம்வரமென்பதின் கொள்கையோ' என்றும் பலவாறாக ஆக்ரோஷத்துடன் கேட்கத் தொடங்கினார்கள். இது கேட்டு, பத்திரவதி ஸர்ப்பம்போல் சீறி, 'நீங்களேன் இவ்வளவு அவசரப்பட்டு ஆத்திர

திருகாணிக்கு வலுவும், பழஞ்சாணிக்குப் புழுவும் உண்டு.



மடையவேண்டும்? நான் ஒருவரையும் வரிக்காமல் திரும்பி, சந்தனம் மாலை இவற்றைக் கீழே எறிந்துவிட்டேனா?'' என்று கண்டித்துப் பேசிக்கொண்டு, சமீபத்தில் ஒரு மரத்தடியில், வெகு விசித்திரமாய்க் கட்டப்பட்டுள்ள புஷ்பமாலையை விற்பனைக்காக வைத்துக் கொண்டு உட்கார்ந்திருக்கும் ஓர் மனிதனை நோக்கிச்சென்றாள். அவன் முன்பாக நின்று, அவன் முகத்தில் தன் கையிலிருந்த சந்தனத்தைப் பொட்டிட்டு, புஷ்பமாலையை அவன் கழுத்தில் போட்டாள். உடனே ஸ்வயம்வரத்திற்கு வந்திருந்த மன்னர் அனைவரும் 'கொல்' என்று நகைத்துக் கூக்குரலிட்டார்கள். 'என்னுடைய குமாரி இத்தனை அரசர்கள், இராஜகுமாரர்கள் இவர்களை விட்டு, இழிவான ஓர் புஷ்பக்காரனைக் கணவனாகத் தெரிந்தெடுத்தாளே! விதியின் பயனல்லவோ இவ்விதம் அவளுக்கு புத்திதோன்றிற்று' என்று பாகுதேவன் துக்கிக்க, அவன் மனைவி, 'இதெல்லாம் ஜன்மாந்திர கர்மாவின்செயலே! அனுபவிக்க வேண்டியதை அனுபவித்தே தீரவேண்டும். இவ்வுலகில் காரணமற்று ஒருகாரியமும் ஏற்படாது. எந்த ஹேதுவுக்கும் பயனில்லாமற் போகாது. ஆகையால் இவ்விஷயத்தில் பரிதபித்தலின் பிரயோஜனமென்ன!' என்று சமாதானப்படுத்தினாள். சிறிதுநேரத்திற்கெல்லாம் அரசன் தன் புதல்வி இவ்வித இழிவான கணவனைத் தேடிக்கொண்டதற்காக தம்பதிகளை அரண்மனைக்குள் வரவழைக்க மனம்வராது, வெளியில் பிரத்தியேகமான ஜாகையொன்று ஏற்படுத்தி அவர்களிருவரும் இருக்கும்படி ஏற்பாடு செய்தான். நாளடைவில், அரசனுக்கு தன் புத்திரி, மருமகன் இவர்களிடம் அன்பு அதிகரிக்க, அவர்களிஷ்டப்படி, நதிக்கரையில் ஓர் மாளிகை நிர்மாணம் செய்து அவ்விடத்தில் இவ்விருவரும் அநேக சேவகர்களுடன் சுகமாய் வசிப்பதற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்தான்.

இப்படியிருக்க, பௌர்ணமி தினம் வந்தது. முன் சொன்ன வியாபாரி ஓர் படகில் ஏறிக்கொண்டு நதிக்கரைக்கு வழக்கம்போல் வியாபாரம் செய்ய வந்தான். அவனைக் கண்டதும் ஸ்ரீவத்ஸன் தன் வேலைக்காரர்களைக்கொண்டு அவனைப்பிடித்து சிறையிலிட்டான். அக்கிரமமாய்த்தன்னைபிடித்து வைத்ததற்காக அவ்வியாபாரி பாகுதேவனிடம்முறையிட, அவன் வெகு சினங்கொண்டு, இதன் காரணத்தை வினவினான். புஷ்பக்காரன் வேஷம்பூண்ட ஸ்ரீவத்ஸனும்; அரசனை நோக்கி, 'பிரபுவே, இப்படகில் தேடினால், ஒரு சந்தணப்பெட்டி அகப்படும். அதனுட்புறம் பொன்னால் இழைக்கப்பெற்று, வெகு விசித்திரமான சிற்பவேலைத்திறத்தோடு அமைக்கப்பட்டுள்ளது. அது அவ்வியாபாரிக்கு சொந்தமானால், அதை அவன் திறக்கும் வழி தெரிந்துகொண்டிருப்பான். அப்படிக்கில்லாவிடில் அது அவனதல்ல. என்னுடையதே' என, அரசனும் அது மிகவும் உசிதமென்று ஒப்புக்கொண்டு, அவ்வியாபாரியை, அதைத் திறக்கும்படி கட்டளையிட்டான். வியாபாரி திகைத்து யாதொரு வழியாலும் அதைத் திறக்கமுடியாமல், உடைக்க யத்தனிக்கையில், ஸ்ரீவத்ஸன் 'அதை என்னிடம் தரவேண்டும், நான் திறக்கிறேன்' என்று சொல்லி அதிலுள்ள நுட்பமான வில்லொன்றை அழுத்தினதும், அப்பெட்டி உடனே திறந்துவிட்டது. இதென்ன விந்தை என்று எல்லோரும் ஆச்சரியமடைந்து நிற்கையில், மறுபடியும் அப்படகை சோதித்துப்பார்த்தால், ஒரு ஸ்திரீ காணப்படுவாளென்று புஷ்பக்காரன் சொல்ல, வேலைக்காரர்கள் அங்ஙனமேசெய்து பெண்ரத்தினத்தை அழைத்து வந்தார்கள். 'இது யார்' என்று பாகுதேவனின் இராணி கேட்க, புஷ்பக்காரன், 'அவள் சிந்தா என்னும் ராணி' என்றான். சிந்தா என்பவள் ஸ்ரீவத்ஸ சக்கரவர்த்தியின் மஹிஷி என்று நன்குணர்ந்த இராணி, வியப்புற்று 'உனக்கும் சிந்தா என்பவளுக்கும் என்ன சம்பந்தம்' என, புஷ்பக்காரன் மிக்க அமரிக்கையுடன், 'நான்தான் ஸ்ரீவத்ஸன்' என்றான்.

இதுகேட்டு வியாபாரி தவிர மற்றெல்லோரும் ஆனந்தசாகரத்தில் மூழ்கினார்கள். வியாபாரி அவனுடைய பாதகத்துக்காக தலைவாங்கப்பட்டான். ஸ்ரீவத்ஸனும் ஸவிஸ்தாரமாய் நடந்த செய்திகளெல்லாம் சொல்லி, சனியின் கொடுமையால் பட்ட கஷ்டங்களையெல்லாம் எடுத்துரைத்தான். பாகுதேவனும் ஸ்ரீவத்ஸன் தனக்கு மருமகனாய்க் கிடைத்த சம்பவத்தை வெகுவிமரிசையாய்ச் சிறிதுகாலம் கொண்டாடிவிட்டு, அவனையும் இரண்டு இராணிகளையும் தகுந்த பரிசு, பரிவாரங்களுடன், அவனுடைய

திருக்கண்ட கண்ணுக்குத் தீங்கு இல்லை.

ராஜ்யத்துக் கனுப்பிவைத்தான். அவர்கள் ஊர்வலமாய்ப் பட்டணப்பிரவேசம்செய்யும்போது "எந்த ஆபத்து நேர்ந்தாலும், நான் காப்பாற்றுவேனென்று உங்களுக்கு நான் வாக்களிக்கவில்லையா? பத்திரவதி! உன்னை 'இந்துஸ்தானத்திலுள்ள மஹாசக்கரவர்த்தியின் மஹிஷியாக்குவேன்' என்றது பலிக்கவில்லையா? பார்!" என்று ஒரு ஆகாயவாணி பிறந்தது.

இதுகேட்டு ஸ்ரீவத்ஸனும், சிந்தா என்பவளும் தாங்கள் லக்ஷ்மிதேவியையே நம்பி, முன்னம் தீர்மானம் செய்ததைப்பற்றி சந்தோஷித்து, அம்மூவரும் ஸர்வ ஐசுவரியங்களுடன் சுகமாய் வெகுகாலம்வாழ்ந்திருந்தார்கள். கடைசியில், சிந்தா, லக்ஷ்மியின் வாக்குப்பிரகாரம் தன் கணவனுக்கு முன் மரணமடைந்து, கைம்பெண்ணுவதாலுண்டாகும் துக்கத்தை யனுபவியாமலே நல்லகதி யடைந்தாள்.

லக்ஷ்மி தேவதையினிடம் பக்தியுடன் நம்பி நடப்பவர்கள் கைவிடப்படார் என்பதற்கு இக்கதை ஓர் நிதர்சனமாகும். கற்பு மாதர்கள் நடந்துகொள்ளும் விதத்தையும் இச்சரித்திரத்தில் நன்கு கண்டுகொள்ளலாம். தவிர, பெண்ணின் இயற்கையுணர்வும் புருஷனுடைய யுக்தியும் சேர்ந்தால் சர்வ காரியஸித்தியும் உண்டாகுமென்பது ஹிந்துக்களின் கொள்கைகளி லொன்றாகும். சமயோசிதமாய் நடந்துகொள்ளக்கூடிய ஸ்ரீவத்ஸனின் யுக்தியும், சிந்தா என்பவளின் சுயவறிவும் ஒன்று சேர்ந்ததால், அவர்கள் காரியம் கைகூடும் என்று நினைத்தே பாபரூபமாகிய சனீசுவரன் அவர்களைப் பிரித்துவைத்து கஷ்டப்படுத்தினன் என்றும், ஐசுவரிய தேவதையாகிய லக்ஷ்மியின் மகிமையால், யூகமும் சுயபுத்தியும் ஒன்று சேர்ந்து, எல்லா துக்கங்களைக் கடந்து சுகானுபவம் செய்யக் காரணமாயின வென்றும் இச்சரித்திரத்தால் நாம் அறிந்து கொள்ளலாம்.

---

நமது சந்தா நேயர்களுக்கு :—காகிதத்தின் விலை யேற்றத்தினாலும், அச்சுக்கூலி உயர்வாலும் இக்காலத்தில் பத்திரிகையை நடத்திவருவது வெகு கஷ்டசாத்தியமாயிருக்கையில், நமது சந்தா நேயர்களிற் சிலர், சந்தாவைச் சரிவர அனுப்பாமலிருக்கிறார்கள். பாக்கி சந்தாவை உடனே அனுப்பும்படிக்கும், வழக்கம்போல் பத்திரிகையை ஆதரிக்கும்படிக்கும் நம் நேயர்களை வேண்டுகிறோம்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**தொழிற் கல்விக்கான வசதிகள்.**

சுதேசக் கைத்தொழி லபிவிருத்தியை முன்னிட்டு, சில இந்தியர்களுக்கு மேனாடுகளில் தொழிற்பயிற்சி செய்விக்க இந்தியா கவர்ன்மெண்டார் உபகாரச்சம்பளங்கள் திட்டஞ் செய்திருக்கின்றனர். அவ்வாறு தேர்ந்தெடுத்தனுப்பப்படுவோர் ஒரு குறிப்பிட்ட தொழிலில் விசேஷசாமர்த்தியம் படைத்தவராக இருத்தல்வேண்டும். இந்த உபகாரச் சம்பளங்கள் போதாமல், மாகாண வரும்படிகளிலிருந்து ஏதேனும் ஸ்காலர்ஷிப்புகள் கொடுக்கலாமாவென்று கைத்தொழில் இலாகாத் தலைவர்கள் கேட்டுவிடப்பட்டிருந்ததில், வருஷம் 200 பவுன் மதிப்புள்ள நான்கு ஸ்காலர்ஷிப்புகள் (அதாவது 4-பேருக்கு) அதிகமாய் மாகாண வரும்படியிலிருந்து கொடுக்கப்படலாமென்று கைத்தொழில் டைரக்டர் தெரிவித்தார். அதை கவர்ன்மெண்டார் ஒப்புக்கொள்ளுகிறார்கள். சென்னை மாகாணத்தில் பிறந்தவர்களுக்குத்தான் மேற்படி உபசாரச் சம்பளம் கொடுத்துதவப்படும். சாதாரணமாய் இரண்டு வருஷ காலத்து அவ்வாறு கொடுக்கப்படும். ஆனால் இந்தியா மந்திரி இஷ்டப்பட்டால் 5-வருஷங் கொடுக்கலாம். 2-வது வகுப்பில் கப்பல் பிரயாணஞ்செய்யவும் வசதி யுண்டு.

* * *

**'ஆனரபில்' பட்டம் யாருக்கு உரியது?**

கீழ்வரும் அதிகாரிகள், தாங்கள் உத்தியோக பதவியிலிருக்கும் பரியந்தம் 'ஆனரபிள்' என்னும் பட்டத்தைவகித்துவரலாமென இராஜப்பிரதிநிதி அனுமதியளித்திருக்கிறார்:— இராஜப்பிரதிநிதியின் நிர்வாகசபை மெம்பர்கள்; இராஜாங்கச் சபையின் பிரெசிடெண்டு; லெஜிஸ்லேடிவ் அஸம்ப்ளி என்னும் இராஜப்பிரதிநிதி சட்டசபையின் பிரெசிடெண்டுகள்; ஹைகோர்ட்டுகளின் பிரதம நியாயாதிபதிகள், மற்ற நியாதிபதிகள்; கவர்னரின் நிர்வாக சபை மெம்பர்கள், மந்திரிமார்கள்; மாகாணக் கவர்னர்களின் சட்டசபை பிரெசிடெண்டுகள்; லாகூர், பர்மா இம் மாகாணங்களில் தலைமை கோர்ட்டிலுள்ள பிரதம நியாயாதிபதிகள் மற்ற ஜட்ஜுகள்; இராஜாங்கச்சபையின் மெம்பர்கள்.

---

திருக்காவலரைப் பந்தலுக்கு நிழல் உதவி வேண்டுமோ?



நாகபுரி காங்கிரஸ் மஹா சபையில் அக்கிராசனம் வகித்த
ஸ்ரீமான் சேலம், ஸி. விஜயராகவாசாரியார்.

Sriman, C. VIJAYARAGHAVACHARIAR,
President of the Indian National Congress held at Nagpur.


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII } ரௌத்திரி௵ கார்த்திகை௴ : : 1920-ம்௵ டிசம்பர்௴ { பகுதி ௬


## முருகன் பெருமை

### IN PRAISE OF GOD MURUGA

வற்றாதபொய்கை வளநாடுகண்டு
மலைமேலிருந்த குமரா !
உற்றாரெனக்கு வொருபேருமில்லை
யுமையாள் தனக்கு மகனே,
முத்தாடைதந்து னடியேனையாளு
முருகேச எந்தன் மனத்தே !
வித்தாரமாக மயில்மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

ஆலாலமுண்டோன் மகனாகிவந்து
னடியார் தமக்கு முதல்வி
பாலூறலுண்டு கனிவாய்திறந்து
பயிலஞ் செழுத்தை மறவேன்,
மாலாகிவள்ளி தனைநாடிவந்து
வடிவாகி நின்ற குமரா !
மேலான வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

திருவாசல்தோறு மருள்வேத மோது
சிவனஞ் செழுத்தை மறவேன்,
முருகேச ! என்று மடியார் தமக்கு
முதலாகி நின்ற குமரா !
குருநாதசுவாமி குறமாது நாதர்
குமரேசரென்ற பொருளே !
மறவாமல் வெற்றி மயில்மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

உதிரந்திரண்ட கண்ணோர் கறுத்த
உருவோர்கள் தேடிவருமுன்,
கதிர்போலெழுந்த திருமேனி நாத !
கடைவீடு தந்து மருள்வாய்,
மதுவண்டு பண்செய் வயலூரில் செங்கை
வடிவேலெடுத்த குமரா,
அதிர்வேகமுள்ள மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

மன்றாடுமீசன் மகனே ! முகுந்தன்
மருகா ! எனக்கு மருள்வாய்,
வண்டுறல் பாயும் வயலூரில்
செங்கைவடிவேலெடுத்த குமரா !
நன்றாகவந்து னடியேனையாண்டு
நல்வீடு தந்த குகனே !
கொண்டாடி வெற்றி மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

காதற்சிறந்த குறமாது வள்ளி
கனபாகம் வைத்த குமரா !
காலன் எழுந்து வெகு பூசைசெய்து
கயிறும் எடுத்து வருமுன்,
வேலும் பிடித்து னடியார்
தமக்கு வீராதி வீர ! உடனே
சாலப் பரிந்து மயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

தலை கெட்டனூலின் நிழல்போல நின்று
தடுமாறி நொந்தே னடியேன்,
நிலைகெட்டு யானும் புவிமீதில் நின்று
நெடுமூச்செரிந்து படவோ
அலைதொட்ட செங்கை வடிவேற்
கடம்ப ! அடியேனையாளு முருகா !
மலையேறி மேயுமயில் மீதிலேறி
வரவேணு மென்ற னருகே.

வண்டுண்டு பூவில் மதுவூறல் பாயும்
வயலூரில் செங்கை வடிவேல்,
கண்டொன்று சொல்லி புறமொன்றுரைப்பர்
கடைநின் றிரக்க விதியோ ?
வண்டுறு பூவினிதழ் மேவு வள்ளி
தெவயானை நேச முருகா !
நன்றென்று சொல்லி மயில்
மீதிலேறி வரவேணுமென்ற னருகே.



திருநாளும் முடிந்தது, எடேபீடியும் கழிந்தது.

# விவேக போதினி

தொ.13] ரௌத்திரி ௵ :: கார்த்திகை ௴ [ப.6


## யுதிஷ்டிரர்

### YUDHISHTIRA

அதைக் கேட்டு யுதிஷ்டிரர் கோபத்துடன், 'இந்தத் துஷ்டனுக்கு இவ்வளவு பெருமை கிடைத்தால் நிகரற்ற யுத்தவீரர்களும் புண்யவான்களும் சகல உத்தம குணங்களாலும் அலங்கரிக்கப்பட்டவருமான கர்ணன், பீமன், அருச்சுனன், நகுலன், சகாதேவன் சாத்தியகீ, சல்லியன், அபிமன்னியு, திருஷ்டத்துயும்னன்முதலியவர்களுக்கு இதைவிட ஆயிரம் மடங்கு சிறப்பும் காந்தியும் உபசாரமும் நடக்கவேண்டுமே! அவர்களுக்கு முன் இந்தக் கௌரவ குலத்தைக் கெடுக்கவந்த நீசன் எம்மாத்திரம்? எங்களுக்கு உயிருக்குயிரும் உயிர்த்தோழனும் அடைக்கலமுமான கண்ணன் எங்கே? உங்களுக்கு நிகரான பீஷ்மாசாரியார் எங்கே? துரோணாசாரியர் எங்கே? அவர்களில்லாத விடத்தில் நான் இருந்தென்ன? என் சகோதரர்களும் தர்மாத்மாக்களு மிருக்குமிடமே சுவர்க்கம். உங்களைப்போன்ற தேவர்களும் ரிஷிகளும் கோடிக்கணக்காயிருந்தும் துரியோதனனைப்போல் ஒருவனிருந்தாலும் அது சுவர்க்கமல்ல. இனித் தாமதம் செய்யாமல், என்னுடன் பிறந்தவர்கள் இருக்குமிடத்திற்கு என்னை அழைத்துக்கொண்டு போங்களெ"ன்றார்.

அதைக் கேட்டு தேவதைகள் ஓர் தூதனை அழைத்து "யுதிஷ்டிரருக்கு, அவருடைய பந்துக்களும் மித்திரர்களு மிருக்குமிடத்தைக் காட்டு" என்றார்கள். தருமநந்தனர் பின்னும் தேவதூதர் முன்னுமாய்ச் சென்றுகொண்டிருக்கையில், போகும் வழி திடீரென்று மாறிக், கரடுமுரடாயும் பாபிகளே நடப்பதற்குத் தகுந்ததாயும் எல்லோரும் கண்டு அருவெறுக்கத்தக்கதாயு மிருந்தது; நள்ளிருளால் மூடப்பட்டிருந்தது. பிராணிகளின் மயிரே புல்லாயும் பாசியாயும் விளங்கிற்று. பாபிகளின் நாற்றத்தாலும், மாம்ஸமும் ரக்தமும் கலந்த சேற்றாலும், அவைகளில் மொய்த்துக்கொண்டிருக்கும் வண்டு ஈ கொசு முதலிய துஷ்ட ஜந்துக்களாலும், பயங்கரமான காடி முதலிய துஷ்ட மிருகங்களாலும் நிறைந்திருந்தது. எங்கே பார்த்தாலும் அழுகிக்கிடக்கும் பிணங்களின் துண்டங்களும் எலும்புகளும் மயிரும் அவைகளைச் சூழ்ந்திருக்கும் புழுக்களும் பூச்சிகளும் பார்க்கப் பயங்கரமா யிருந்தன. ஆகாயத்தை யளாவிக் கொழுந்து விட்டெரியும் நெருப்பால் நான்கு புறத்திலும் சூழப்பட்டிருந்தது. காக்கை பருந்து கழுகு முதலிய குரூரமான பக்ஷிகளும், பேய் பிசாசம் சாகினீ டாகினீ முதலிய துஷ்ட தெய்வங்களும் வட்டமிட்டுக் கொண்டிருந்தன. கண்ணால் பார்ப்பதற்கும் மனதால் நினைப்பதற்கும் பொறுக்காத குரூரமான தண்டனைகளை அனுபவிக்கும் பாபிகளின் ஓலமும் கூக்குரலும் அழுகையும் காதைச் செவிடுபடும்படி செய்தன.

அதைக் கண்டு யுதிஷ்டிரர் தேவதூதனைப் பார்த்து "இது தேவலோகத்தில் எவ்விடம்? நாம் இன்னும் எவ்வளவு தூரம் போகவேண்டும்? என் தம்பிமார் எங்கே" என்றார். தேவதூதன் நின்று "இவ்வளவு தூரம் உம்மைக் கொண்டுவந்து விட்டு நான் திரும்பிப்போகிறேன். உமக்குக் களைப்புண்டாயிருந்தால், பார்த்தது போதுமென்றிருந்தால் என்னுடன் வந்துவிடும்" என்றான். அந்தக் கோரமான காட்சிகளைக்கண்டு வெறுப்படைந்து, தன் சுற்றத்தாரையும் நண்பர்களையும் காணமல் மனம் நொந்து அங்கிருந்து திரும்புங்கால், நான்கு புறத்திலிருந்தும் பரிதாபமான சத்தம் கிளம்பிற்று. "தருமநந்தனே! இன்னும் ஒரு நொடிப்பொழுதாவது இங்கே இருக்கலாகாதா? நீர் வந்தபிறகு எங்களுடைய துக்கமும் தண்டனையும் ஓய்ந்தன; கடும் நாற்றம் அடங்கிற்று; சுத்தமான காற்று அடிக்கிறது; இருள் விலகிற்று. எங்களிடத்தில் இரக்கம் வைத்து இங்கேயே இரும்" என்ற வார்த்தைகளைக் கேட்டு யுதிஷ்டிரர் நடுங்கி "ஐயோ? இந்தக் கோரமான கதியை அடைந்து என்னைக் கெஞ்சுகிறவர் யார்? தெரியவில்லையே. நீங்கள் எல்லோரும் சேர்ந்து பேசுவதால் இன்னாரென்று நான் கண்டுபிடிக்க முடியவில்லை. உங்களுடைய பெயரைச் சொல்லுங்கள்" என்றார். உடனே "தருமா! உன் தமையனான கர்ணன். என்னைத் தெரியாதா?" "அண்ணா! பீமனை இதற்குள் மறந்துவிட்டீர்களா?" "நான் தங்களுக்கு அடிமையான அருச்சுனனல்லவா?" "உடன் பிறந்தோரைக் காட்டிலும் பிரியமாய் வளர்த்த நகுலனுடைய குரலை மறந்தீர்களோ?" "புத்திமானென்று எக்காலத்திலும் புகழும் சகாதேவன் தங்களுக்கு என்ன அபராதஞ்செய்தான்?" "அக்னி குண்டத்தில் பிறந்து, உங்கள் ஐவரையும் மணந்து, சொல்லமுடியாத அவமானத்தையும் கஷ்டங்களையும் அடைந்து, என் அருமைப் புதல்வர்களையும் பறிகொடுத்து, பூலோகத்தில் பட்ட பாடும் போதாதோ? இங்கேயும் என் துயரம் தொலையவில்லையே" யென்ற தீனமான வார்த்தைகளைப் பாண்டுபுத்திரன் கேட்டார்.

"இதென்ன கொடுமை! பிரபஞ்சத்தில் ஈசுவரனே இல்லையோ? இந்த சாதுக்கள் என்ன பாபத்தைச் செய்து இந்தக் கதியை அடைந்தார்கள்? வணங்காமுடிமன்னனான துரியோதனன் என்ன புண்ணியத்தைச் செய்து பெருமையுடன் விளங்குகிறான்? வேதசாஸ்திரங்களும் பொய்யோ? நான் அனுஷ்டித்துவந்த தருமம் மோசமோ? அல்லது எனக்குத்தான் பைத்தியம் பிடித்ததோ? சொற்பனம் காணுகிறேனோ" என்று தபித்தார். திடீரென்று கடுங்கோபங்கொண்டு "ஓ! தேவதூதனே! உம்மை அனுப்பின தேவதைகளிடத்திற்குச் சென்று 'நான் இங்கேயே இருக்கப்போகிறேன். என் பந்துக்களையும் நண்பர்களையும் கைவிடமாட்டேன். என்னால் அவர்களுக்கு ஏதாவது உபகாரம் செய்யக்கூடியவரையில் இங்கேயே இருப்பேன். உங்களுடைய சுவர்க்கமும் சுகமும் வேண்டியதில்லை யென்று சொல்" என்றார்.

அப்படியே தேவதூதன் இந்திரனிடத்தில் தெரிவித்தான். பிறகு, இந்திரன் முதலான தேவதைகளும், தருமதேவதையும், மகரிஷிகளும், யுதிஷ்டிரர் இருக்குமிடத்திற்கு வந்தார்கள். உடனே இருளும் நாற்றமும் பயங்கரமான சத்தங்களும் காட்சிகளும் மாயையைப் போல் மறைந்தன. சுகந்தமான காற்றும், கண்ணைப் பறிக்கும் ஒளியும், மதுரமான சத்தங்களும் நிறைந்த அவ்விடத்தில், தேவ கந்தர்வ பிதிரு சித்த சாத்திய வித்தியாதர யக்ஷ கின்னர கிம்புருஷ உரக பதக கருட நாக பன்னக கணங்கள் அணி அணியாய் விமானங்களில் வீற்றிருந்தார்கள். தேவேந்திரன் "யுதிஷ்டிரரே! வாரும், வாரும்! இந்த மாயை மறைந்தது. கோபத்திற்கு இடங் கொடுக்காதேயும். ஒவ்வொரு அரசனும், நரகத்தைக் கொஞ்சமாவது அனுபவித்துத் தீரவேண்டும். ஜீவகோடிகள் செய்த பாபபுண்ணியங்களில் எது சிறிதோ, அதன் பலனை முதலில் அனுபவித்துவிட்டு, எது பெரிதோ அதன் பலனைப் பின்பே அனுபவிப்பார்கள். துரோணாசாரியரை ஏமாற்றி, அவருடைய புத்திரன் கொல்லப்பட்டானென்று பொய்யைச் சொல்லி, அருச்சுனனால் அவரைக் கொல்லுவித்த பாபத்திற்காக நரகத்தைச் சற்று நேரமாவது நீர் பார்க்கும்படியாக ஆயிற்று. இப்படியே உமது நடத்தையை அங்கீகரித்த தம்பிமாரும் இதைப்போலவே நரகங்களைப் பார்த்துவிட்டுப் பாபங்களிலிருந்து விடுபட்டு உத்தமலோகங்களை அடைந்திருக்கிறார்கள். இனி உமது எல்லையற்ற புண்ணிய கருமங்களின் பலத்தை நெடுங்காலம் அனுபவிக்கப் போகிறீர். மாந்தாதா, பகீரதன், பரதன் முதலிய ராஜரிஷிகளுடன் விளங்குவீர். இந்த ஆகாச கங்கையில் ஸ்நானஞ் செய்து, மனுஷ்ய சுவபாவம் நீங்கி, விருப்பு வெறுப்புகளையும் ஆசாபாசங்களையும் உதறிவிட்டு, எங்களைப்போல் தேஜோரூபியாய்ப் பிரகாசிக்கப் போகிறீர்" என்றான்.

அப்பொழுது தருமதேவதை திவ்விய ரூபத்துடன் யுதிஷ்டிரரைப் பார்த்து, "பொறுமையாலும், தன்னடக்கத்தாலும், உண்மையாலும், என்னிடத்தில் நீ வைத்த பக்தியாலும் மிகுந்த ஸந்தோஷமடைந்தேன். மூன்றாவது தடவையும் உன்னை நானே பரீக்ஷித்தேன். துக்கத்தை அனுபவித்துக்கொண்டிருந்த உன் தம்பிகளையும் பந்துக்களையும் மித்திரர்களையும் கைவிடாமல், சுவர்க்க சுகத்தைப் பொருட்டாய் எண்ணாமல், அவர்களைப்போல் கொடிய

நரகங்களை அனுபவிக்க நிச்சயித்தபடியால், நீ பாபங்களிலிருந்து விடுபட்டுப் புண்ணிய சொரூபியாய் விளங்குகிறாய். எனக்காகவே இந்திரன் இந்த மாயையைச் சிருஷ்டித்தான். உன் மனித சொரூபத்தை அகற்றி, திவ்விய ரூபத்துடன் விளங்கக் கடவாய்'' என்றார்.

அப்படியே யுதிஷ்டிரர் ஆகாச கங்கையில் ஸ்நானஞ் செய்து, மானிட உடலைக் கழற்றி எறிந்து, திவ்விய ரூபத்துடன் விளங்கிப் பகையும் சோகமும் ஒழிந்து, தேவதைகளாலும் ரிஷிகளாலும் சூழப்பட்டுச் சுவர்க்கத்தில் புகுந்தார். அங்கே கண்ணன், சங்கம், சக்கரம், கதை முதலிய திவ்யாயுதங்களுடன் அருச்சுனனால் உபசரிக்கப்பட்டு, கோடி சூரியனைப்போல் விளங்கிக்கொண்டிருந்தார். அந்த நரநாராயண தேவர்கள், பாண்டுநந்தனரை வரவேற்றார்கள். கர்ணன் தன் பிதாவான சூரியனுடைய ரூபத்துடன் பிரகாசித்துக்கொண்டிருந்தான். பீமன் மருத்துக்களுக்கு நடுவில் வாயுதேவதைக் கருகில் வீற்றிருந்தான். நகுல சகதேவர்கள் அச்வினீ தேவதைகளின் ஆசனங்களில் அமர்ந்திருந்தார்கள். பாஞ்சாலி வெண்தாமரை மாலைகளால் அலங்கரிக்கப்பட்டு, நிகரற்ற காந்தியுடன் விளங்குவதைக் கண்டு, யுதிஷ்டிரர், அவளை ஏதோ கேட்க விரும்பினார். அப்பொழுது இந்திரன் 'குந்தீ புத்திரா! இவள் லோகமாதாவான மகாலக்ஷ்மியின் அம்சமே. உங்களுக்காகவே பூலோகத்தில் துருபதராஜனுடைய பெண்ணாய் அக்கினி குண்டத்திலிருந்து பிறந்தாள். மகாதேவன் உங்களுக்காகவே இவளைப் பாஞ்சாலியாய்ச் சிருஷ்டித்தார். இதோ அக்கினி தேவதையைப்போல் விளங்கும் ஐந்து கந்தருவர்களும் இவளுடைய புத்திரர்களே. திருதராஷ்டிரன் கந்தருவராஜனாய் வீற்றிருப்பதைப் பாரும். அதோ உமது தமயனான கர்ணன் சூரியபுத்திரனாய் ரவியுடன் ஜொலிக்கிறான். சாத்தியகீ விருஷ்ணிகள் அந்தகர்கள் முதலிய உமது துணைவர்கள் சாத்திய விசுவதேவ மருத்துக் கணங்களா யிருப்பதைப் பாரும். அதோ சோமதேவதையின் பக்கத்தில் மற்றொரு சந்திரனைப்போல் விளங்கும் மகாபுருஷனே அருச்சுன புத்திரனான அபிமன்னியு வென்ற ஒப்பில்லா வீரன். அதோ பாண்டு மகாராஜன், குந்தி மாத்ரீயென்ற மனைவிகளுடன் உம்மை அழைக்கிறார். கங்காபுத்திரனான பீஷ்மர் வசுக்களின் நடுவில் அமர்ந்திருப்பதைப் பாரும். பிருகஸ்பதியின் பக்கத்திலிருக்கும் தேவதையே உமது ஆசாரியரான துரோணர். தேவகணங்களே உருவெடுத்து, உமக்காக யுத்தஞ்செய்தார்கள்'' என்றான். கிருதவர்மன் மருத்துகளில் ஒருவனாயும், பிரத்தியும்னன் ஸனத்குமாரராயும், சகுனி துவாபரனாயும், திருஷ்டத்துயும்னன் அக்கினிதேவதையாயும், துரியோதனாதியர் ராக்ஷஸர்களாயும், முன்ரூபங்களை அடைந்தார்கள். பலராமன் ஆதிசேஷனாயும், கண்ணன் ஸ்ரீமந் நாராயணனாயுமிருந்து, இந்தப் பூமியின் பாரத்தைத் தீர்ப்பதற்காகவே துவாபரயுகத்தின் முடிவில் அவதாரம் செய்தார்களென்று தருமநந்தனர் அறிந்தார். பிறகு திருதராஷ்டிரனுடைய தம்பியும், மகாஞானியுமான விதுரரும், பாண்டு புத்திரரான யுதிஷ்டிரரும் தங்களுடைய பிதாவான தருமதேவதையின் சொரூபத்தில் கலந்தார்கள்.

இப்படி யுதிஷ்டிரருடைய புண்ய சரித்திரத்தால் நாம் அறிந்து கொள்ளவேண்டிய நீதிகள் பலவுள. அவற்றுள் சில:—

(1) எக்காலத்திலும் எந்த நிலைமையிலும் தர்மத்தைக் கைவிடாது நம்மாலியன்ற வரையில் அதை நிறைவேற்றவேண்டும்.

(2) பொறுமை அணிகலமாய்க் கொண்டவருக்கு முதலில் கொடிய கஷ்டங்களும் வருத்தங்களும் நேர்ந்தாலும், முடிவில் பரம மங்களம் உண்டாகுமென்பதில் சந்தேகமில்லை.

(3) யானைக்கும் அடிசறுக்குமென்பதைப் போல் மஹான்களும் ஒரு சமயத்தில் விருப்பு வெறுப்புகளை உத்தேசித்து, தர்மமார்க்கத்திலிருந்து சற்றுத் தவறுதல் ஆச்சர்யமல்ல.

(4) ஒரு மஹா புருஷனிடத்தில் எண்ணிறந்த குணங்களும் ஒன்றிரண்டு குறைகளுமிருந்தால், கருணைக் கடலான கடவுள், அக்குறைகளை அழிக்காமல் வளரவிட்டால் அவன் கெடுவானென்று அவைகளை வெளிப்படுத்தி அவைகளால் நேரும் கஷ்டத்தைக் காட்டி விளக்குவார்.

சுபம்.

திருவாசல் ஆண்டியும் ஒரு வேளைக்கு உதவுவான்.



## சிருஷ்டியமைப்பின் ஓர் மகாசக்தி

## THE MIGHTY ELECTRON

[ஸ்ரீமான் கே. வி. ஐயர், பி.ஏ.]

(88-ம் பக்கத் தொடர்ச்சி)

உலகில் எல்லா வஸ்துக்களுமே இம்மாதிரியான மாறுதல் நடையைப் பெற்றிருக்கின்றனவென்று ஊகிப்பதற்கு இதுவே ஆதாரமாகின்றது. ஆனால் இவ்வித மாறுதலை வெகுவாய்க் கண்டறிய முடியாததற்குக் காரணம், ரேடியத்திற்போலல்லாமல் அவைகளில் உண்டாகும் இப்பிரிவு மாறுதல், அந்த ரேடியமென்ற மின்சார உலோகத்திலேயே எவ்வளவோ ஆயிரக் கணக்கான வருஷங்களளவிற்கு நடந்துவர, அதனிலும் பன்மடங்கு மெதுவாய் நடந்து வரும் இதரவஸ்துக்களில் கண்டறிந்துகொள்வது மகா அருமையிலும் அருமையென்பது நன்றாய் விளங்கும். உதாரணமாக, தங்கம் போன்ற பார்வைக்கு வெகு மெதுவான மாறுதலுடையவை என்று தோன்றும் வஸ்துக்களின் தன்மையிலிருந்து அவற்றினில் நாம் மேலே பிரஸ்தாபித்து வரும் மறைந்து நிற்கும் அணுசக்தி இருப்பதற்கு ஆதாரமில்லையென நாம் கொள்ளுதல் பொருந்தாது. ஏனெனில், வெளிப்பார்வைத் தோற்றங்கள் எப்பொழுதும் உண்மையையே காண்பித்துவிடுவது கிடையாது. ஏன், நமது வெடிமருந்து பார்வைக்கு வெகு சாதாரணமும் சாதுவு மாகவேதான் காணப்படுகின்றது. அபார பயங்கர சக்தி அதனிடத்து மறைந்துகிடப்பதாகப் பார்வைக்கு காணப்படுகிறதா? இல்லையே. ஆனால் அதன் சக்தியை வெளிக்கிளப்பி விடுவோமானால் எவ்வளவு பயங்கரமான சேத நாசத்தை அது விளைவிக்கக்கூடியதாயிருக்கின்றது! ஆகவே, நீ உட்கார்ந்திருக்கும் சாதாரண நாற்காலியென்ன, எழுதும் மேஜையென்ன, ஏன், இதை எழுதிக்கொண்டிருக்கும் கடுதாசிதானென்ன, இவைகளின் அணுத்துணுக்குகளும் கூட, வெடிவருந்து, நைட்ரோ கிளிஸரீன் குழம்பு முதலிய வஸ்துக்களின் சக்திக்கு மேற்பட்ட பயங்கரமான சக்தியைப் பெற்றிருக்கலாம் என்பதில் என்ன ஆக்ஷேபனை?

ஆம், இவ்வளவு அளவற்ற சக்தி இந்த சாதாரண வஸ்துக்களுக்கெல்லாம்எங்கிருந்து உண்டாயிற்று? அதை யறிந்தவர்கள் யாருமில்லை. ஆனாலும் ஓர் வகையில் ஊகித்தறியக் கூடிய விதமாய் இந்த அணுக்களின் ஸ்வரூபத்தைப்பற்றி நாம் விவகரித்துப் பார்ப்போம். 'அணு' 'அணு' என்று நாம் பிரஸ்தாபித்துக் கொண்டுவரும் வஸ்துக்களின் மிகச் சிறியதான பாகமாகிற ஓர் துணுக்கை, சிறு பிரமாணத்தோடுங்கூடிய ஓர் சூரியமண்டலமாக நாம் நினைத்துக்கொள்ளலாம். அதன் உள் மையத்தில் சூரியனைப்போன்ற ஒரு நடு மத்தியச் சிற்றணுத்துணுக்கு ஏறு சக்தி பெற்றதாக நிற்க, அதைச்சுற்றி உழலும் சூரியக்கிரகங்களைப்போன்ற இறங்கு சக்தியோடுங்கூடிய சில பல மின்சாரச் சிற்றணுக்கள் (இலெக்ட்ரான்கள்) சூழ்ந்துகொண்டிருக்கின்றன. நடு மையச் சிற்றணுவாகிய சூரியன்போல் நிற்பதைப் பற்றி நமக்கு ஒன்றுமே தெரிவதற்கில்லை. அதைச் சுற்றிச்சுற்றி வரும் கிரகங்கள் போன்ற இலெக்ட்ரான் சிற்றணுக்களெல்லாம் எல்லா வஸ்துக்களிலும் ஓரே மாதிரியானவைகளேயென ஊகித்தறியப்பட்டிருக்கின்றது.

ஜலவாயு—ஹைட்ரொஜன் என்றும் சொல்லப்படும் வஸ்துவின் அணுவிற்கு ஆதாரமான இலெக்ட்ரான் சிற்றணுக்கள், இரும்பின் அணுவினது சிற்றணுக்கள் போன்றவையேயாகும். இலெக்ட்ரான் சிற்றணுக்கள் ஓரே மின்சாரத் தன்மை பெற்றிருப்பவையாதலின் ஒன்றையொன்று தன்னிடமிருந்து அப்பால் தூரத் தப்பார்க்கும் குணமுடையவைகளாகும். ஒரு சாதாரண அணு (atom) வின் குறுக்களவு அதனை ஆக்கிக்கொண்டிருக்கும் சிற்றணுக்களின் குறுக்களவிற்கு நூறாயிரம் மடங்கு பெரிதாக நாம் ஒருவாறு கொள்ளலாம். ஒருவாறு ஒப்பிட்டுப் பேசுவோமானால், நாமெல்லோரும் வசிக்கும் கிரகமாகிய பூமியின் குறுக்கு வரையளவானது அப்பூமியே சூரியனைச் சுற்றிவரும் சக்கரரேகையின் குறுக்களவிற்கு எவ்வளவு மடங்கு சிறியதெனக் கணக்கிடப்பட்டிருக்கிறதோ அவ்வளவு மடங்கே இந்த இலெக்ட்ரான் சிற்றணுவின் குறுக்குவரையளவு அதன் தாயணுவின் குறுக்களவிற்கு இருக்கலாமென்று நாம் ஒருவாறு ஊகித்துக்கொள்ளுதல் பிழையாகமாட்டாது. ஹைட்ரொஜன் என்னும் ஜலவாயுவின் ஓர் சாதாரண அணு இப்படிப்பட்ட நடுமைய அணு ஒன்றும், அதைச்சுற்றிவரும் இலெக்ட்-

திருவாசகத்திற்கு உருகாதார் ஒரு வாசகத்திற்கும் உருகார்.

ரான் சிற்றணு ஒன்றே யொன்று கூடியதாக இருத்தல் கூடுமென நாம் ஊகிக்கலாம். அப்படியே யுரேனியம் (Uranium) என்ற உலோகத்தின் 'அணு' ஒன்றில், 92 இலெக்ட்ரான் சிற்றணுக்க ளிருக்கின்றன. நாம் தற்காலம் அறிந்திருக்கும் தனிவஸ்துக்களெல்லாம் இந்த ஹைட்ரொஜன் என்னும் ஜலவாயு, யுரெனியம் என்னும் உலோகவஸ்து ஆகிய இவ்விரு பொருள்களின் மத்தியில் இருக்கின்றனவாகும்.

இந்த இலெக்ட்ரான் சிற்றணுக்கள் தம் தம் சுற்றுச் சக்கரரேகை வழியே வெகு பயங்கரமான வேகங்களோடும் சுழன்றுவருகின்றன. அடிக்கொருகால், ஒவ்வோர் இலெக்ட்ரான் சிற்றணு அல்லது ஆல்பா (Alpha) துணுக்கு அல்லது இரண்டுமே யாகட்டும் தங்கள் தங்கள் சுற்றுப்பாதைகளினின்றும் முறிக்கப்பட்டு அப்பால் வெளியில் வீசப்படுகின்றன. அப்படிப் பாதைவிட்டு முறிந்து வெளியில் தூரத்தப்படும் வேகம், அந்த ஆல்பா (Alpha) துணுக்கின் கனத்தோடு ஒரு துப்பாக்கி ரவைகுண்டின் கனத்தை ஒப்பிட்டு விடுபட்டோடும் அவ்விரண்டின் சக்திகளையும் ஒப்பிட்டுப் பார்ப்போமானால், ரவைக் குண்டின் சக்தியைப் போல் எவ்வளவோ லட்சம் பத்துலட்சம் மடங்கு அதிகசக்தியை இந்த ஆல்பாத் துணுக்குத் தன்னிடம் வகித்து ஓடுவதாக நாம் சொல்லவேண்டியதாகிறது. ஒரு மில்லிக்ராம் (milligram) நிறையளவு ரேடியம் (அதாவது ஓர் வெகு சிறு அளவுள்ளது, ஒரு விநாடிப்பொழுதில் மூன்று கோடியே அறுபது லட்சம் (36,000,000) சிற்றணுக்களைத் தன்னிடமிருந்து பிரித்து வீசியடிக்கின்ற ஆல்பா (Alpha)ச்சிற்றணு தான் பெற்றிருக்கும் விநாடிக்குப் பதினாயிரம் மைல் (10,000) வேகத்துடன் மனதால் எட்ட முடியாத அவ்வளவு துரிதமாய்ப் பறந்துசென்று பிற அணிக்களின்மேல் மகா கடுமையாய்த் தாக்குகின்றது.

ஆல்பா (Alpha) என்னும் அணுவின் வேகத்தைப்பற்றித்தான் மேலே ஒருவாறு விவரித்துச் சொல்லிவிட்டோம். இனி மின்சார அணு அதாவது இலெக்ட்ரான் என்ற சிற்றணுவின் வேகம் எப்படிப்பட்டது என்று கவனிப்போம். இந்த மின்சார அணுக்கள் பல சேர்ந்தே, மேலே சொல்லிய ஆல்பா (Alpha) என்ற துணுக்கு அமைந்திருக்கிறதாகத் தெரியவருகிறது. அவைகள் சற்றேறக்குறைய ஒளிக்கிரணத்தின் வேகமெனக் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிற, விநாடிக்கு லட்சத்து எண்பத்தாராயிரம் மைல் வேகத்துடன் பறந்தோடுகின்றன. அப்படியானால் ஏன் இந்த இலெக்ட்ரான் சிற்றணுக்கள் சாதாரண அணுவிற்குள் மகாவேகமாய்ச் சஞ்சாரம் செய்வது நமக்கு சாதாரணமாய்ப் புலப்படுகிறதில்லை யென்பதைப்பற்றி விசாரித்துப் பார்ப்போம். வெகு வழவழப்பாய் உறைசலன்னியில் அதிவேகத்துடன் சுற்றியுழலும் யந்திரச்சக்கரம் ஒன்றைப் பார்ப்போமானால் அது இருந்த சோடுவிட்டு அசையாமல் நிற்பதுபோலவே காணப்படுகின்றது. ஆனாலும் அது அகஸ்மாத்தாய் ஏதாவது ஒரு காரணம் பற்றி விண்டு பிளந்துவிடுமானால் அப்பொழுது அது பயங்கரமான வேகத்துடனும் வீசிச்சென்று எதிர்பாராத நாசத்தையும் அபாயத்தையும் உண்டுபண்ணுவதைப் பார்க்க அதனிடத்திருந்த பெருஞ்சுழற்சி வேகம் நமக்கு விசிதமாகிறது. அதே மாதிரியாக, ஒரு அணுவினுள் அணுக்களான மின்சாரச் சிற்றணுக்கள் மகாவேகமாய் அந்த அணுவிற்குள் சுற்றிச்சுழல்வது நமக்குச் சாதாரணமாய்க் கண்டுணர முடியாமலிருப்பதால், அந்த அணு வெடித்துப் பிளந்து, அது தன்னினின்றும் தன் துணுக்குகளைக் கேட்டறியாததும் மனதினால்கூட ஸ்மரிக்கவொண்ணாததுமான மகாவேகத்துடன் வீசியெறியும்போது நமக்குப் பெரிய பிரமிப்புத்தோன்றிக் கடைசியாய் ஒருகால் அந்த அதிவேக நகர்ச்சியானது அவ்வணுவில் ஏற்கனவே இருந்துகொண்டிருந்ததுதான், ஆனால் நம் பார்வைக்கு மாத்திரம் புலப்படாம லிருந்திருக்க வேண்டுமென்று ஊகிக்கவேண்டியதா யிருக்கின்றது.

ஆகவே வஸ்து அணுக்கள், நடு மையத்துணுக்குகளும், நினைத்தற்கரிய மகா வேகங்களுடன் சுற்றிச்சுழலும் மின்சாரச்சிற்றணுக்களுமாகிய இவ்விருவகைகள் கொண்டதாயிருப்பதானால் அவைகளிடத்து அபரிமிதமான அளவில் சக்தி திணித்து மறைந்து கிடக்கின்றது என்று ஊகித்துக் காண்பதும் வெகு இலகுவேயாகும். ஸர் ஆலிவர் லாட்ஜ் பண்டிதரவர்கள் சொல்வதாவது:

திருவாக்குக்கு எதிர்வாக்கு உண்டோ?



"ஒரு அவுன்ஸ் அதாவது சுமார் இரண்டரை ரூபாய் நிறையுள்ள வஸ்துவிற்குள்ளே மறைந்து கிடக்கும் இந்த அபரிமிதசக்தியை மாத்திரம், நாம் வெளிப்படுத்தி உபயோகிக்கக் கூடிய திறமை பெறுவோமானால், சென்ற ஜெர்மானியர் சண்டையின் இறுதியில் ஸ்கேபா புளோ (Scapa Flow) அதாவது ஸ்கேபா ஓட்டம் என்ற சமுத்திர பாகத்தில் அழுந்திக் கிடக்கும் ஏராளமான ஜெர்மன் கப்பல்கள்முழுமையும் கரையேற்றி மிக உன்னதமான ஸ்காட்லண்டு நாட்டின் மலை உச்சிகளில் ஏற்றிப் படுக்கவிடலாம்" என்கிறார்.

அவர் மேலும் சொல்வது யாதெனில், நாம் மிகப்பெரிய ஓர் அற்புதத்தை அறியப்போகும் தருவாயி லிருக்கின்றோம். அது கண்டறிய இன்னும் ஒரு நூற்றாண்டு பிடிக்கலாம். நமது பின்னோர்கள் ஆயிரம் டன் (சுமார் 4,500-பாரம்அல்லது 90,000-மணங்கு நிறை) நிலக்கரியை எரித்து உண்டுபண்ணிய அக்கரியின் சக்தியை உபயோகிப்பதற்குப் பதிலாக ஒன்றிரண்டு அவுன்ஸ் சாதாரண வஸ்துவிலிருந்தே அவ்வளவு ஏராளமான சக்தியையும் விடுவித்து எடுத்துபயோகித்தால் நமக்குக் கூடுமான தாய்விடும் என்பதேயாம்.

"விவேக போதினி".—இந்த அருமையான மாதாந்தத் தமிழ்ப் பத்திரிகையின் 12-ந் தொகுதிச் சஞ்சிகைகள் அடங்கிய பைண்ட் வால்யம் ஒன்று கிடைக்கப் பெற்றோம். பாலர், பாலிகை, சிறியோர், பெரியோர், உத்தியோகஸ்தர், வியாபாரி முதலான பலர்க்கும் இன்றியமையாத விஷயங்களோடு பொதிந்து விளங்கும் இப்பத்திரிகைக்கு ஒரு மகாமகம் பூர்த்தியாகி, இரண்டாவது மகாமகத்திற்கு வந்திருப்பது அதன்க்ஷேமத்தில் அபிமானங்கொண்டவர் அனைவர்க்கும் விசேஷ திருப்தியைத் தருமென்பது திண்ணம். தீர்ந்த கல்வியாளர்களும் விஷயவாராய்ச்சி கொண்டவர்களும் அறிவு வளர்ச்சிக்கு வேண்டிய ஒவ்வோரிடத்தையுங் குறித்து அழகுபெற எழுதிவருவதைக் கல்வியிலாகா அதிகாரிகள் நன்கு கவனிப்பது தகுதியாகும். இதில் அடங்கிய விஷயங்கள் பல, தனித்தெடுத்து அச்சிடப்பட்டிருக்கின்றன. அவை மாணவர்க்கு உபயோகமாகும்படி ஸ்கூல் டெக்ஸ்ட் புக் கமிட்டியாரால் அங்கீகரிக்கப் பெற்றிருப்பதும் எமக்குத் தெரியும். என்றாலும் போதினியின் போஷகர்கள், இவ்விஷயத்திற் கவனம் பூண்டு இப்பத்திரிகையின் ஆசிரியரவர்களுக்குப் போதிய ஆதரணை அளிப்பாராக. —இந்துநேசன்.

## விவசாய விஷய அறிவு

## A KNOWLEDGE OF AGRICULTURE

[ஸ்ரீமான். எஸ். பஞ்சாபகேசசர்மா, பி. ஏ., எல். டி.]

(101-ம் பக்கத் தொடர்ச்சி.)

அக்களைகளால் என்ன கெடுதலென்று கேட்கலாம். உனக்கென்று கொண்டுவந்த சாதத்தை வேறொருவன் சாப்பிட்டால், நீ வயிறாரச் சாப்பிடமுடியுமா? அதுபோலவே களைப்பூண்டுகள் பயிரின் ஆகாரத்தைத் தின்று ஜீவிக்கின்றமையால் பயிருக்கு ஆகாரம் குறைந்து, செம்மையான பலனைக் கொடுப்பதில்லை. ஆகையால் நன்றாக உழுவதினால் களைகளை வேரோடு நாசம் பண்ணிவிடுவார்கள்.

உழுவதற்கு மற்றொரு காரணம் உண்டு. பயிர்களின் வேர் பூமியில் சுலபமாய் இறங்க சௌகரியமாகிறது. வேர் ஏன் பூமியில் இறங்கிப் பரவவேண்டும்? செடிகளுக்கு வேண்டிய ஆகாரப்பொருள்கள் அநேகவிதமுண்டு. பத்துப் பன்னிரண்டு தினுசுகள் உண்டு. நமக்கு எப்படிச் சாதம், பருப்பு,உப்பு, புளி, மிளகாய், நெய் முதலிய பல ஆகாரப்பொருள்கள் அவசியமோ, அதேமாதிரி செடிகளின் ஆகாரப் பொருள்களும் பலவகைகளாக இருக்கும்.

வேர்கள் பூமியில் இறங்கி ஆகாரமிருக்கும் இடத்தைத் தேடிப்பிடித்தும் வேர்கள் மூலமாகச் செடிக்கு, முனிசிபாலிடியார் குழாயின் மூலமாக ஜலம் அனுப்புவதும்போல் அனுப்புகின்றன. செடிக்கு வேண்டியபொருள் கிட்டியதும், அது வளருகிறது. சில சமயங்களில் வேர்கள் ஒரு கஜதூரம் மண்ணில் இறங்கும். ஆனால் மண் கெட்டியாக இருந்தால் இறங்குவது கஷ்டம். செடிக்கு வேண்டிய பொருளைத் தேடியனுப்புவது குறைவுபடும். மண் மிருதுவாயிருந்தால் ஆழத்தில் வேர் இறங்கி,வேண்டிய பொருளைத் தேடி செடிக்கு அனுப்புவது சுலபமாகும். ஆகையால் நிலம் உழுது புழுதியாயிராவிட்டால் வேர் தாராளமாகச் செடிக்குவேண்டியஉணவுப்பொருளைத் தேடிச் செல்லமுடியாது. இப்பொழுது நாம் ஒரு வீடுகட்டுவதாக எண்ணி வேலையாள் நியமிக்கிறோம். வீடுகட்டவேண்டி, கொல்லத்துக்காரன் வேலை செய்யும்பொழுது, செங்கல் வண்டி சாலை கெடுதலாக இருக்கிறதென்று

திருவிளக்கு இல்லா வீட்டில் பேய் குடியிருக்கும்.

நேரங்கழித்துவந்தால் வேலையாள் மெனக்கெடுவானல்லவா ? அதேமாதிரி செடிவளர்வதற்குவேண்டிய ஆகாரத்துக்காக வேர்கள் கீழே கெட்டியான தரையில் இறங்கி, தேடியனுப்பத் தாமதமாவதினால் வளர்ச்சி தாமதமாகின்றது. ஆகையால் குடியானவன் வேர்களுக்குத் தாமதம் உண்டாகாதபடி, நிலத்தை ஆழமாக உழுது புழுதியாக்கிவைக்கவேண்டுவது அவசியம். மேலும் செடிகளுக்கு வேண்டிய ஆகாரத் தினுசுகள் எல்லாம், ஒரே இடத்தில் கிடைப்பதில்லை. ஒன்று மேலேயும் மற்றொன்று ஆழத்திலுமே யிருக்கும். வேர்கள் பல இடங்களுக்கும் இறங்கிச்சென்று ஆகாரப் பொருளைத் தேடியனுப்பவேண்டும்.

உழும் காலம்

எது சரியோ அது செய்வதோடுங்கூட சரியான காலத்தில் செய்யவேண்டிவைகளை அவ்வப்போது செய்து முடித்தல்வேண்டும். ஆகையால் உழவுவேலை எப்பொழுது செய்யவேண்டும்? ஆழமான உழவாக, மழைபெய்ததும் உழவேண்டும். அதுவும் பயிரிடும் முன்னமேயே செய்யவேண்டும். ஆனால் பயிரிட்டபின் செய்தால் அதற்கு நாம் ஆகாரம் சம்பாதித்துக்கொடுக்க முயற்சி செய்யும்போது, அதற்கு இடைஞ்சல் நேரும். ஆனாலும் சில சமயங்களில் களையெடுப்பதற்காக உழுவதும் உண்டு. இது அவசியம். மேலும், 'ஆடிப்பட்டம் தேடிவிதை' யென்று சொல்லும் பழமொழி ஒன்று நீ கேட்டதில்லையா? ஆகையால் அதுவே பயிரிடுவதற்கு ஏற்ற காலமாகும். அதற்கு இரண்டொரு மாதம் முன்னதாக உழுதுபோட்டு வைக்கவேண்டும். இவ்விதம் உழவுகாலம் ஊருக்குத் தக்கபடியும் பயிருக்குத் தக்க்படியும் வித்தியாசப்படும். எதற்கும் காலத்திற்கு முன்னதாகவே தயாராயிருத்தல் வேண்டும். பிந்திப்போனால் அவசரப்பட்டு வேலை செய்யவேண்டிவரும். அவ்விதம் அவசரத்தில் செய்யும் காரியம் செம்மையாக முடிவு பெறாது. பயிர்கள் ஆகாரம் தேடி வளர்கிறதென்றால் நமக்கு நோய் பீடிப்பதுப்போலே அதற்கும் வியாதியுண்டா ? என்று நீங்கள் கேட்கலாம். ஆம். அடிக்கடி வியாதிகள் உண்டாகும். ஆனால் அவைகளைப் பார்த்துத் தோற்றத்தினால் நாம் தெரிந்துகொள்ளவேண்டுமேயொழிய அவைகள் வாயினால் சொல்லமாட்டா. அவைகளுக்கு வேண்டிய ஆகாரப் பொருள்கள் கிடைக்காவிட்டால் நன்றாக வளருவதில்லை. அப்பொழுது வியாதியென்று தெரிந்துகொள்ளுகிறோம். ஆனால் எந்தெந்தப் பயிர்களுக்கு என்னென்ன ஆகாரம் தேவையென்றும், எந்தெந்த நிலத்தில் என்னென்ன ஆகாரம் இருக்கிறதென்றும் தெரிந்திருந்தால் என்ன வியாதியென்று சொல்லலாம். அதைப் பற்றி உங்களுக்கு விவரமாய் இப்பொழுது சொல்ல முடியாது. அதிக மழை பெய்துவிட்டால் பயிர் கெட்டுப்போய் வியாதியடைகின்றது. அப்பேர்ப்பட்ட சமயத்தில் தண்ணீரை வடியச்செய்யவேண்டும். நல்ல தண்ணீர் பாய்ச்சவேண்டும். அவைகளுக்கு நல்ல காற்று தேவை. சில சமயங்களில் காற்று இல்லாமல் வியாதியடையும். செடிகளை நெருங்க நடுவதால், வேண்டிய அளவு காற்று அதன்மேலே படுவதில்லை. அதனால்தான் செடிகளை விலாசமாக நடுதல் வழக்கம். பயிர்கள் நெருக்கி நெருக்கியிருந்தால் நடுவே, நடுவே, பிடுங்கி விலாசப்படுத்துவது வழக்கம். இவ்விதமாகச் செய்வதால் அவைகள் தாராளமாக மூச்சுவிட இடமிருக்கிறது. நன்றாகவும் திடமாகவும் வளர்கின்றன.

நாம் பயிரிடும் பயிர் திடமாகவும் திமிராகவும் வரவேண்டுமென்பது நமது நோக்கம். ஆகையால் அவைகளுக்கு நல்ல ஆகாரம் சம்பாதித்துக்கொடுத்து நிலத்தைப் பண்படுத்தி, வளர்வதற்கு வேண்டிய சௌகரியம் செய்து வைக்கவேண்டும். சில சமயங்களில் வயல்களில் விளைவதைப்பார்க்கிலும் தோட்டங்களில் நன்றாய் வளர்கின்றன. ஏன்? தோட்டங்களில் உழவு செம்மையாகச் செய்து,எரு நன்றாகவும் போடுகிறார்கள். இது மாத்திரம் போதாது. எந்தெந்த நிலத்தில் எந்தெந்தப் பயிர் (விதை) போடவேண்டுமென்று தெரிந்து கொள்ள வேண்டும்.

நல்லநிலத்தில் திடபலனையும், சாரம் குறைவான நிலத்தில் அற்பபலனையும் கொடுக்கக்கூடிய,பயிரைப்போடவேண்டும்.நன்றாக ஓடக்கூடிய உயர்ந்த குதிரைக்கு நல்ல ஆகாரம் போட்டுக் காப்பாற்றுகிறார்கள். துர்ப்பலமான சிறு குதிரைகளுக்கு,சொற்ப ஆகாரம் கொடுக்கிறார்கள். நல்லகுதிரை செய்யும் வேலை,சின்ன குதிரை செய்யாது.நல்ல குதிரையின் ஆகாரம்





குட்டிக்குதிரைக்குப் பொருந்தாது.அதனதன் சக்திக்குத்தக்கபடி வேலை கொடுக்கவேண்டும். அதேமாதிரி நல்ல எருப் போட்டு, செய்நேர்த்தி செய்யும் குடியானவன் சரியான விதையைத் தெரிந்து நிலத்திற்குத்தக்கபடி, விதைக்கவேண்டும். ஒரு நிலத்தில் நெல்லுக்கு வேண்டிய ஆகாரப் பொருள் இராது. ஆனால் புகையிலைக்கு வேண்டிய ஆகாரப் பொருள் இருக்கும்.நல்ல மண்ணில், நல்ல பலன் தரும் பயிரும், எளிய மண்ணில் சொற்ப பலன்தரத் தக்க பயிரும் போடவேண்டும். ஆகையால் இடத்திற்குத்தக்கபடி விதைக்கவேண்டும். இதுதான் குடியானவன்கவனிக்கவேண்டியது.

என்னிடம் பணம் இருக்கிறது. கொஞ்சம் கொஞ்சமாகச் செலவு செய்துவருகிறேன். இவ்விதம் செலவழித்தால் சிலகாலமானதும் பணம் கையில் இல்லாமல் போய்விடுகிறது. இனி கொடுப்பதற்குப் பணமில்லை. எவ்வளவு சீக்கிரம் செலவழிக்கிறேனோ அவ்வளவு சீக்கிரம் பணமும் தீர்ந்துவிடுகிறது. அதுபோல் நீண்ட பயிர் செய்யச் செய்ய நிலத்தின் ஆகாரம் அதிகமாகச் செலவாகிறது; பூமியின் சாரம் குறைகிறது.

என் பணத்தை சும்மாக் கொடுக்காதபடி வட்டிக்குக் கடன் கொடுத்தால், நான் கொடுத்த பணம் வட்டியுடன் வளர்ந்துகொண்டேயிருக்கும்; பணம் செலவாகாது. அதனால் வரவுப் பணம் அதிகமாகிறது. இதேமாதிரி, குடியானவன், நிலங்களிலும் நிலத்தின்சாரத்தைப் பயிர் எடுக்கும்பொழுது கடன் வாங்கிக்கொள்கிறான். அதை வட்டியுடன் திருப்பிக்கொடுக்கவேண்டும். இவ்விதம் செய்தால் நிலமும் உரம் வலுக்கும். குடியானவனுக்கும் லாபம் உண்டு. ஆனால் இம்மாதிரி எல்லாக் குடியானவனும் திருப்பிக்கொடுப்பதில்லை.ஏனென்றால், ஒவ்வொருவனுக்கும் வாங்கினகடனைத் திருப்பிக்கொடுக்கவேண்டு மென்று தெரிந்தாலும், என்ன பண்டம் நிலத்திலிருந்து வாங்கப்பட்டதென்றும் என்ன பண்டம் நிலத்திற்குத் திருப்பிக்கொடுக்க வேண்டுமென்றும் அறிவதில்லை:இப்பொழுது உன்னிடமிருக்கும் பணப்பையிலிருந்து கொஞ்ச நாணயம் விழுந்துவிட்டதென்று நினைத்துக்கொள். உனக்கு எவ்வளவுபணம் அதில் இருந்ததென்றும், எவ்வளவு பணம் நழுவி விழுந்ததென்றும் எந்தமாதிரிப் பணம் என்றும்தெரிந்தாலல்லவா நீ அதைத் திரும்பவும் போட்டுவிடலாம். அவ்விதம் தெரியாவிட்டால் நீ எப்படி விழுந்ததொகையை சரியாய்ப் போடமுடியும்? அதேமாதிரி நிலத்திலுள்ள ஆகாரப் பொருள்களில் நாம் எம்மாதிரி பலன் எடுத்துக் கொண்டோமென்றும், அதனால் நிலத்திற்கு எம்மாதிரி ஆகாரப்பொருள்கள் குறைந்திருக்கிறதென்றும் தெரிந்தால் அதை நிலத்திற்குத் திரும்பக் கொடுத்துவிடலாம்.

ஆனால் குடியானவனுக்கு எவ்விதம் தெரியாமல் போகும் என்று கேட்கலாம். சிலர் இதைத் தெரிந்துகொள்வதில்லை.தெரிந்தாலும் சேகரிக்கும் பொருள்கள் இவர்களுக்கும் தெரியாமல் போய்விடுகின்றன. நல்ல எரு மழையில் நனைந்து, அதிலிருந்த ரசம் ஓடிப் போய்விடுகிறது. அதன் வாசனையும் ஆகாயத்தில் கலந்துவிடுகிறது. இதுதான் பையிலுள்ள துவாரம். எந்த எரு வயலுக்குத் தேவையோ அதற்குப் பதிலாக உயர்ந்த எருவென்று வேண்டாத எருவைப்போட்டால் பிரயோஜனமில்லாமையோடு பொருள் நஷ்டமுமாகும்.

ஆகையால் நிலத்தின் தரத்தை யறிந்து அதை எவ்விதம் உரப்படுத்துவதென்பதை நாம் நன்கு தெரிந்துகொள்வது அவசியம்.

பிள்ளைகளே ! செடிகள் நம்மைப்போல் ஆகாரம் உட்கொண்டு வளர்வது நாம் அறிந்த விஷயம். ஆனால் அவைகள் நம்மைப்போல சாப்பிடாமல் தண்ணீருடன் சேர்த்தும், காற்றுடன் கலந்தும் உட்கொள்ளுகின்றன.அவைகளுக்கு வேண்டிய ஆகாரப் பொருளை முதலில் விதையிலிருந்தும், பிறகு மண்ணிலிருந்தும், மூன்றாவது காற்றிலிருந்தும் எடுத்துக்கொள்ளுகின்றன. ஆகவே, பயிர்களுக்கு முக்கியமாக, காற்றும் தண்ணீரும் தேவை.

நிலத்திலுள்ள ஆகாரப் பொருள் யாவும் தயாராயிருப்பதில்லை. உழுவதினால் தயாராகின்றது. உழுவதினால் வேர் கீழேயிறங்க ஹேதுவாகயிருப்பதினால், வேர் தாராளமாய்க் கீழேயிறங்கி ஆகாரப் பொருள்கள் சம்பாதிக்கின்றன. மேலும், உபயோகமில்லாத பூண்டுகள் வளரவிடாமல் நாசமாக்க உழுதல் அவசியமாகிறது. ஆகவே நிலத்தைச் செம்மை

(இதன் தொடர்ச்சி 140-ம் பக்கம் பார்க்க.)

# பூமியின் அமைப்பு

## EARTH - ITS STRUCTURE

[ஸ்ரீமான் என். சுப்பிரமணியம், பி. ஏ.]

நாம் வசிக்கும் பூமியின் அமைப்பு எத்தன்மையது? இதன் உட்பாகம் எவ்வாறிருக்கின்றது? என்னுங் கேள்விகளுக்கு விடை கூறப் பல தத்துவசாஸ்திரிகள் முயன்றிருக்கின்றனர். எனினும், திருப்திகரமான விடை ஒருவராலும் இதுவரை கூறப்படவில்லையென்றே சொல்லவேண்டியிருக்கிறது. நேரில் பூமியின் உட்பிரதேசம் சென்று பரீக்ஷிக்க ஹேதுவில்லாமைபற்றிப் பலர் பலவிதமாய்த் தத்தம் மனோபாவத்துக்குத் தக்கவாறு ஊகிக்கின்றனர்.

பண்டைக்காலத்தில், பூமி தேங்காயோட்டைப் போன்றதென்றும், அதன் மேற்புறத்துள்ளவாறு உட்புறத்தும் ஜீவராசிகள் உண்டென்றும், உட்பிரதேசம் செல்ல துருவ தேசத்தில வழிகளுண்டென்றும் பலர் நம்பி வந்தனர். பின்னர் எரிமலைகள், வெந்நீரூற்றுகள் இவைபோன்ற விஷயங்களால் பூமியின் உட்பாகம் அத்யுஷ்ணதசையிலிருக்கவேண்டுமென்றும், மேல் பாகம் மட்டுமே ஓடுபோன்றிறுகி விட்டதென்றும் ஊகிக்கலாயினர். சுமார் முப்பத்தைந்து வருஷங்களுக்குமுன் 'கராகடோவா' என்னுந் தீவில் ஓர் எரிமலை பிளவுபட்டு கற்குழம்பை நாற்றிசையிலும் வாரியிறைத்தது அநேகருக்கு ஞாபகமிருக்கக் கூடும். இதிற் கிளம்பிய கற்களும், புகையும், சாம்பலும் பல்லாயிரம் மைல்களுக்குச் சுற்றிப் பரவின. இதனால் அதன்பின் மூன்று வருஷ காலம் சூரியரஸ்மி குறைந்து காணப்பட்டதென்றும, சிறிது சிவந்த வர்ணமுள்ளதாயிருந்ததென்றும் சிலர் கூறுகின்றனர். அக்காலத்தில் ஓர் பூதத்துவ சாஸ்திரி, பூமி ஓர் முட்டையைப் போன்றதென்றும், அதன் பரிமாணத்துடன் ஒற்று நோக்குமிடத்து பூமியின் மேலோடு முட்டையோட்டைப்போல் மெல்லியதென்றும், உள்ளே பொங்கிக் கிடக்கும கற்குழம்பின் அலைகளால் எளிதாக உடைக்கப்படக்கூடியதென்றும் பிரசங்கம் செய்திருக்கின்றார். இதுவும் உண்மையல்ல. பூமத்தியில் உஷ்ணம் அதிகமென்பது உண்மையாயினும், கல்லையும் உருக்கும்படியான அவ்வளவு சூடு இல்லையென்பதும், அங்கேயுள்ள பதார்த்தங்களும் கடின நிலையை ஏற்கெனவே அடைந்திருக்க வேண்டுமென்பதும் நவீன சாஸ்திரிகளின் ஸித்தாந்தம். பூமத்தியில் அவ்வளவு உஷ்ணமில்லாதபொழுது எரிமலை கக்கும் கற்குழம்பு எங்ஙனமெனில், சிற்சில விடங்களில் மட்டும் அஃதிருக்கிறதென்றும், இவ்வுஷ்ணத்துக்கு இதர காரணங்களுண்டென்றுங் கூறுகின்றனர்.

ஒருவரும் ஒருமைல் ஆழத்துக்குக் கீழ் பூமிக்குள் இதுவரை சென்றதில்லை. அதற்குக் கீழுள்ள அமைப்பிற்குப் பிரத்யக்ஷ ஆதாரம் எரிமலை கக்கும் கற்குழம்பு ஒன்றுதான் நமக்குத் தெரியும். பூமியின் உட்பாகமும் மேலோடு போன்றதே யெனக்கொண்டு, பூமியின் அமைப்பிலுள்ள முக்கிய பதார்த்தங்களின் அளவு நிர்ணயிக்கப்படும். முக்கியமான மூலப்பொருள்கள் பூமியில் ரஸாயன முறைப்படி எட்டாம். இவ்வெட்டே பூமியில் ஆயிரத்தில் 995 பங்காகிறது. மற்றெல்லாப் பொருள்களும் ஆயிரத்தில் ஐந்துபாகமேயாவன. பூமியிலுள்ள லோகங்களில் எது ஏராளமானது என்று யாரையாவது கேட்டால் இரும்பு என்றே கூறுவார்கள். ஆனால் உண்மையில் பூமியின் மேல்பாகத்தில் அலுமினியமே அபரிமிதமாய்க் கிடக்கின்றது. இவ்வளவு அபரிமிதமான பொருள் ஒருவருக்கும் விளங்காமல் வெகுகாலம் மறைந்துகிடந்தது ஆச்சரியம். 1820-ம் வருஷம் ஓர் ஜர்மானிய சாஸ்திரி இதைக் கண்டுபிடித்த பின்னரே இவ்வதிசயம் விளங்கிற்று. இன்னொரு விஷயம் இதைவிட வியக்கத்தக்கது. பூமி மூலப்பொருள்களாய்ப் பிரிக்கப்படுமானால் பாதிபாகம் பிராணவாயுவென்பது காணப்படும். கடின பூமியில இஃது சரிபாதியும், நாம் குடிக்கும் தண்ணீரில் ஒன்பதில் எட்டுபங்கும், சுவாசிக்கும் ஆகாயத்தில் ஐந்தில ஒருபங்குமாய் எங்கும் நிறைந்துகிடக்கின்றது. இதுவே பிராணாதாரம். நம்மைச்சூழ்ந்துள்ள ஆகாயத்தின் கனம் 5200,கோடி கோடிடன்; இதில் ஆயிரம் கோடி கோடி டன் நிறை பிராணவாயு. சமுத்திர ஜலமெல்லாம் எண்பது கோடி கோடி டன்; இதில் எழுநூற்றிருபது கோடி கோடி டன் பிராணவாயு. பூமி ஆறு கோடி, கோடி, கோடி டன் நிறை; இதில் மொத்தத்தில மூன்றுகோடி

திறந்த கதவுக்குத் திறவுகோல தேடுவானேன் ?



கோடி கோடி பிராணவாயு. அடுத்தபடியில் வருவது 'ஸிலிகான்' என்பது. இதைத் தனியாய்ப் பலர் கண்டிலராயினும், கல்லிலும், களிமண்ணிலும், மணலிலும் அபரிமிதமாய் இது மறைந்து நிற்கின்றது. இது நூற்றில் முப்பது பாகமென மதிக்கப்படும். இதை 1823-ம் வருஷம் ஒரு ஸ்வீடன் தேசத்து ரஸாயன சாஸ்திரி கண்டுபிடித்தார்.

மூன்றாவதாக வருவது 'அலுமினியம்'. இஃது நூற்றுக்கு எட்டுபாகமாகும். இது தனியாய் எங்குங் காணப்படுவதில்லையாயினும், களிமண்ணிலும், ரத்தினங்களிலும், கண்ணாடிகளிலும் இருக்கின்றது. உலோகங்களுள் ஒன்றாயிருந்தும் மிக்க லேசாயிருப்பது பற்றி, ஆகாயக்கப்பல்களிலும், பலவிதமான சமையல் பாத்திரங்களிலும் இப்பொழுது ஏராளமாய் உபயோகிக்கப்படுகின்றது.

நான்காவது அயம் அல்லது இரும்பு. இஃது பூமியில் நூற்றில் ஆறுபங்கு. இவ்வுலோகம் எல்லோருக்கும் வெகுகாலமாய்த் தெரிந்தது.

ஐந்தாவது 'கால்ஷியம்' என்பது. இது நூற்றில் மூன்றுபங்கு. இது தனியாய்க்காணப்படாவிடினும், சுண்ணாம்பு, சுக்கான்கல், கிளிஞ்சல்கள், சிலைக்கற்கள் இவைகளில் நிறைந்திருக்கிறது.

அடுத்தபடியில் வருவன, 'மெக்னீஷியம்', 'ஸோடியம்' என்பவை. இவை நூற்றிலிரண்டு பங்கு. உப்பில் முக்கிய வஸ்து ஸோடியமே. எட்டாவது 'பொடேஸியம்'. இது எல்லா குணங்களிலும் ஸோடியத்தையொத்தது. இது நூற்றுக்கு ஒன்றரை பாகமாகும்.

இவ்வெட்டுமே முக்கியமானவை. நமக்குத் தெரிந்த தங்கம், வெள்ளி, தாமிரம், ஈயம், துத்தநாகம், கரி, ரஸம், ஜலவாயு, உப்புவாயு இவையெல்லாஞ் சேர்ந்தும் பாக்கியுள்ள ஆயிரத்தில் ஐந்து பாகத்துக்குள்ளடங்குகின்றன. ஆனால் இப்பொழுது டாக்டர் ஆரீனியஸ் என்னும் ஸ்வீடன் தேசத்து ரஸாயன சாஸ்திரி இது தவறென்றும் பூமியின் உள்ளமைப்பு மேலோடு போன்றதல்லவென்றும் அதிக கனமான லோகங்கள் பூமியின் ஆகர்ஷண சக்தியால் கவரப்பட்டு உள்ளே பொதிந்து கிடக்கின்றனவென்றும் கூறுகின்றனர். இவை அத்யுஷ்ணநிலையிலிருக்கலாமென்றும் இவர் அபிப்பிராயம். இதற்கும் அநேக ஆதாரங்களுண்டு.

முதலாவதாக 'ஸேஸ்மோகிராப்' என்னும் கருவியைக்கொண்டு பூகம்பங்களின் ஆராய்ச்சி செய்யப்படுகின்றது. அக்கருவி பல்லாயிரம் மைல்களுக்கப்பாலுண்டாகும் சிறு அதிர்ச்சிகளையும் எளிதில் உணர்கின்றது. அதன்மேல் தாக்கும் நுண்ணிய அலைகளின் வேகத்தையும் அது உணரமுடியும். பூகம்பத்தின் அலைகள் ஓரிடமிருந்து மற்றோரிடம் செல்லுங்கால் கடின பதார்த்தங்கள் வழியாய் விரைவில் செல்வதும், திரவங்கள் வழியாய் மெதுவாய்ச் செல்வதும் வெளியாகின்றது. கடினமான உலோகங்கள் மூலமாய்ச் செல்லுகையில் வேகம் அதிகரிக்கின்றது. பூமியில் இவ்வலைகள் எண்ணூறு அல்லது தொள்ளாயிரம் மைல்களுக்கு மேற்பட்ட ஆழத்தில் பாயும்பொழுது இரண்டு மடங்கு வேகம் அதிகரிக்கிறதென்பது 'ஸேஸ்மோகிராப்'பால் தெரியவருகிறது. அப்படியாயின் பூமியின் எண்ணாயிரம் மைல் குறுக்களவில், சுற்றிலும் சுமார் ஆயிரம் மைல் மேலோடு போன்றதென்றும், உள்ளே கடினமான லோகங்களிருக்கலாமென்றும் ஊகிப்பது தவறாகாது.

தவிரவும் பூமியின் பரிமாணமும் கனமும் பலவகைகளால் நிர்ணயிக்கப்பட்டிருக்கின்றன. இவற்றை ஒற்று நோக்குங்கால், பூகோளம் தன்னளவுள்ள ஓர் நீர்கோளத்தைப்போல் ஐந்தரை மடங்கு கனமானதென்பது விளங்குகின்றது. ஆயிரம் மைல் வரை பரவும் மேலோடோ தன்னளவு நீரைப்போல் மூன்று மடங்கு கனத்துக்கே குறைவாயிருக்கின்றது. இந்த ஆதாரங்களைக்கொண்டு கணித்துப்பார்த்தால், ஆயிரம் மைல் ஆழத்துக்குக்கீழ் அளவுக்களவு தண்ணீரைப்போல் எட்டு மடங்கு கனமான வஸ்து நிறைந்திருக்கவேண்டுமென்றாகிறது. இந்த கனமுடைய வஸ்து இரும்பேயாகும். மேலும் பூமியில் நாம் காண்பதற்கு மாறாக அபரிதமான இரும்பு இருக்கவேண்டுமெனக்கூற இதர முகாந்தரங்களும் உண்டு. எரிமலைகள் கக்கும் கற்குழம்பில் இரும்பு நிறைந்திருக்கின்றது. வானத்திலிருந்து அடிக்கடி பூமியில் விழும் உலகங்களிலும் இரும்பு அதிகமாயிருக்கின்றது. 'ஸ்பெக்ட்ராஸ்கோப்' பரீக்ஷையால் சூரியன், நக்ஷத்திரங்கள் இவைகளிலும் இரும்பு நிறைந்திருக்கின்றதென்று வெளியாகிறது.

தினை விதைத்தவன் தினை அறுப்பான், வினை விதைத்தவன் வினை அறுப்பான்,

மேலும் பூமி ஓர் பிரமாண்டமான காந்தத்தை யொத்திருப்பதை யெல்லோரும் அறிவர். காந்த சக்தி இரும்பிலேயே நிலை பெறுகின்றது. ஆகையால் அற்புதமான காந்தசக்தி வாய்ந்த பூமியும் இரும்பாலாயதோர் கோளமென்றும், மற்ற பதார்த்தங்கள் மேற்கூறியதற்கு மாறாக அளவில் வெகு குறைவென்பதும் இவர் அபிப்பிராயம்.

இவ்வபிப்பிராயத்துக்குக் கியாதிபெற்ற நியூடன் கூட இடங்கொடுத்திருக்கின்றார். பூமி ஓர்காலத்தில் அத்யுஷ்ண நிலையிலிருந்து குளிர்ச்சியால் இறுகி இப்போதுள்ள நிலை யடைந்ததென்று ஒப்புக்கொள்வோமானால், அஃது திரவநிலையிலிருந்தக்கால், தண்ணீரில் எண்ணெய் மிதப்பதுபோல், தங்கம், வெள்ளி, இரும்பு முதலிய கனபதார்த்தங்கள் வரிசைக்கிரமமாய் பூமத்திக்கு ஆகர்ஷிக்கப்பட்டிருக்க வேண்டுமென்றும், மேலே லேசான பதார்த்தங்களே மிதந்து நின்றிருக்க வேண்டுமென்றும் இவ்வாறே பின் இறுகியிருக்குமென்றும் கூறியிருக்கின்றார்.

இவையெல்லாம் யோசிக்குமிடத்து, நாம் மேலே தற்கால ஸித்தாந்தமெனக் காட்டியது இன்னும் வெகுகாலம் நிலைபெறாதெனத் தோன்றுகிறது. உண்மை எங்கு கிடக்கின்றதோ? அதைச் சரிவர அறியும்வரை பல விதமான கொள்கைகள் ஒன்றன்பின் ஒன்றாய்த் தலையெடுத்து தத்தம் காலமானபின் மறைவது இயல்பே.

(137-ம் பக்கத் தொடர்ச்சி.)

யாகவும் தக்க காலத்திலும் உழுது, சரியான விதையை இடத்தின திடத்திற்குத் தக்கவாறு விதைக்கவேண்டும்.

இவ்விதம் நிலத்திலிருந்து எடுக்கப்படும் பயிரினால் பூசாரம் குறைந்துபோகிறது. ஆனதால் நாம் எடுத்துக்கொண்டவற்றை வட்டியுடன் நல்ல எருவாகத் திருப்பிக் கொடுத்து விடவேண்டும். எவ்வித சாமான் எடுத்துக் கொண்டோம் என்றும், எவ்வித எரு தேவையென்றும் தெரிந்துகொண்டு, அவ்வித எருவைப் போடவேண்டியது. இனி இவைகளைப் பற்றி உங்களுக்கு விஸ்தாரமாய்ச் சொல்லுகின்றேன். இப்பொழுது இவைகளை நன்றாய் மனதில் வைத்துக்கொள்ளுங்கள்.

# இளைஞர் கல்வி

## THE EDUCATION OF THE YOUNG

ஸ்ரீமான் கே. ஆர். ராமபத்திரன், பி. ஏ., (ஆனர்ஸ்) எம். ஆர். ஏ. எஸ்.,]

கல்வி அபிவிருத்தியில் நவீனமாக சில அடிப்படையான தத்துவங்கள் மென்மேலும் நாகரீகமடைந்த தேசங்களில் பின்பற்றப்பட்டு வருகின்றன. எடுத்துக்கொண்ட விஷயத்திற்குரியவை அவைகளில் மூன்றெனவே கூறலாம்.

துன்ப முறுத்துவதே அறியாத இளைஞரிடத்தில் எல்லா ஜனங்களுக்கும் விசேஷ அபிமானமும் அன்புமிகுந்த அனுதாபமும் உதித்து வளர்ந்தோங்கி வருகின்றன. இதற்கிணங்க, அமெரிக்காதேசத்துக் கல்விநிபுணராகிய ஸ்டான்லிஹால் என்ற பெரியாரும் யௌவன பருவம் என்ற அரிய விஷயத்தில் விசேஷ ஊக்கம் காண்பித்திருக்கிறார். நம் முதியோர் வாக்கிற்கிணங்க, குழந்தையைத் தெய்வமெனவே கொண்டாடவேண்டியதற்கு, சாஸ்திர ஆராய்ச்சி பூர்வமாகவும் தக்க சான்றுகள் கூறப்பட்டுவருகின்றன.

மனிதன் மிருகத்தினது இனமோ என சந்தேகிப்பதற் கனுகுணமாக தண்டப்பிரயோகந்தான் தக்க உபாயம் என்ற கொள்கையே மாறுபாடடைந்து விட்டது: அதற்குப் பதிலாக, ஸ்வாதந்தர்யமும், ஸ்வயநிர்ணயமுமே தகுந்த மார்க்கங்களென்று பின்பற்றப்பட்டு வருகின்றன. இதினாற்றான், ஆரம்பப் பாடசாலைகளிலும் மிகக்கொடிய தண்டனைகள் எடுபட்டுப்போய்விட்டன. மேலும், குருசிஷ்ய ஸம்பந்தம், பயத்தினால் நிலைநிற்க வேண்டியதில்லையென்றும், அன்பே ஆதாரம் என்ற நம்பிக்கையும் மென்மேலும் ஊர்ஜிதமாய்க் கொண்டுவருகிறது.

இந்நூற்றாண்டில் கல்வியின் அவசியத்தைப்பற்றி எழுதுவது மிகையாகும். எம்மதத்தினராயினுஞ் சரி, எத்தேசத்தினராயினுஞ் சரி, தமது பாலர்களுக்குக் கல்வி புகட்ட வேண்டும் என்ற அவசியம் நன்றாய்றிந்திருக்கிறார்கள். இதற்குச் சான்றாக, ஆரம்பக்கலவி கட்டாயமாயும், இலவசமாயும், எல்லா தேசங்களிலும் ஏற்பாடு செய்யப்பட்டு, அநேகமாய்

தின்னத் தின்னக் கேட்குமாம் பிள்ளைபெற்றவயிறு.



பூர்த்தியாய்விட்டது. இவ்வுலகின் போக்கை உற்று நோக்குமிடத்து, கல்வி புகட்டப்படாத பாலர் இனி இருப்பதரிது என்பது வெளிப்படையாய்த் தெரிகின்றது.

இது நிற்க, இளைஞர் கல்வி எவ்வழிகளில் சீர்திருத்தமடையவேண்டும் என்பதை மட்டில் சற்று ஆராய்வோம். நவீனமார்க்கத்திலோ வஸ்துவின் மூலமாகவே படிப்பு சொல்லப்படவேண்டும் என்ற கொள்கை பின்பற்றப்பட்டு வருகின்றது. ஏனெனில், இளம்பிள்ளைகளது மூளைக்கு அதிகமாய் சிரமம் கொடுப்பது, ஆராய்ச்சியால், நன்றாய் பருவமடைந்து புத்தி விசாலமாக்குவதற்கு குந்தகமென்று சொல்லப்பட்டு வருகிறது. ஆனால் எவ்வளவு நேரம் இந்த மாதிரி போதனாமுறை அனுசரித்து வந்தபோதிலும், கடைசியாக அந்தப் பாடத்தின் முக்கிய விஷயத்தை மனனம் செய்தாகவேண்டியே யிருக்கிறது. நம் முன்னோர்களோ, விசேஷ குருபக்தியுடன் மனனசக்தியை விருத்திபண்ணி கைவல்ய பதவியடையும்வரையில ஸித்தியடைந்து வந்தவர்கள். $1+1=2$ என்பதை போதிப்பதற்கு 20-நிமிஷநேரமெடுத்து, நேர்வழியில் (Direct method) புகட்டுவதுதான் சிரேஷ்டமான வழியென்றும், இதற்கு முன்னமே யிருந்த மார்க்கம் தப்பென்றும் சொல்வது பொருந்தாது. நுட்பமான அரிய விஷயங்களில் மட்டும் உபகரணங்களால் போதித்துப் புகட்ட வேண்டுமென்பதே நிலைநிற்கக்கூடிய கொள்கை.

கல்வி இலாகாவிலும், விசேஷ சிரத்தை இப்பாலர் கல்வியில் செலுத்தப்பட்டு வருவதால், இனிப் பெற்றோர் கடமையே சரிவரச் செய்யப்படவேண்டும். சில கிராமங்களில் குடியானவர்கள் தங்கள் சிறுவர்களை விவசாய வேலையில், சமபாதிப்பதற்கு அவசரப்பட்டு, 7, 8, வயதிலேயே அனுப்புகிறார்கள். இப்படிச் செய்வதினால் விவசாயத்தில் அபிவிருத்தி யடைவதற்கு வேண்டிய ஆரம்பக்கல்வி கூட குந்தகமடைகிறது. இது விசனிக்கத் தக்க விஷயங்களில் ஒன்று.

கல்வியில்மாத்திரம் சிரத்தை காண்பித்துச் "சுவரை"க் கவனிக்காமலிருப்பது சரியா? இதை ஒட்டியே, மேனாடுகளிலும், சில வருஷங்களாக கல்லூரி மாணவர்களுக்கும், இளைஞர்களுக்கும், வைத்திய உதவியின் அவசியம் அங்கீகாரமாகி விட்டது, நமது ஆகாரத்தின் புஷ்டிக் குறைவினாலோ, பரம்பரையாக க்ஷீணமாய்க்கொண்டு வருகின்ற நம் இளைஞரது பலக்குறைவினாலோ, வெகுசீக்கிரமே, 8, 9, பிராயங்களில் வெளியூர்களுக்கு பிள்ளைகளைச் சாப்பாடு விடுதிகளுக் கனுப்புவதால் விளைகிற தேக சௌக்கியக்குறைவினாலோ, சில பிள்ளைகள் பெற்றோரை விட்டுப்பிரிவதால் சம்பவிக்கிற நன்னடக்கையில் சிரத்தைக் குறைவினாலோ, மாணவர்கள் மண்ணெண்ணெய் விளக்குகளில் காலந்தப்பி வாசிப்பதின் பயனோ, பலஹீனவிருத்தியினாலோ, நமது ஸர்வகலாசாலை அங்கத்தினர் ஏற்படுத்திய ஓரேஒரு வருஷாந்திரப்பரீக்ஷையால் மேல்வகுப்பிற்குப் போகவேண்டிய அவசரத்தை ஒட்டி இறுதி ஒருமாதம் மாத்திரம் மாணாக்கர்கள் அதிகமாயும் ஒழுங்கீனமாயும் படிக்கிற காரணமோ, அல்லது நமது கல்வியில் தெய்வ பக்திக் குறைவினாலோ, எக்குறையாயிருப்பினும், கடைசியில் வைத்தியர்களது தேவை விருத்தியாகிக் கொண்டிருக்கிறது. பல காரணங்களால் விளையக்கூடிய ஒரு தீங்கிற்கு, பலவிதமாய் உபாயம் தேடவேண்டிய நியாயத்தை ஒட்டி, பெற்றோர் முயற்சியாலும், பிள்ளைகள் நன்னடக்கையாலும், தேர்ச்சியடைந்த வைத்தியர்களாலும் அவசியமான வைத்தியத்துண்டுப் பிரசுரங்களாலும், நன்மை விளையக்கூடும்.

எவ்வாறு நோக்கினும் "இளமையிற் கல்" என்ற முதியோர் வார்த்தை அங்கீகாரமடைய வேண்டிய அவசியம் நன்கு புலப்படுகிறது. சற்றுப் பொதுவிஷய அறிவில் முன்னேற்றமடையவேண்டியிருக்கிற நாடுகளில், ஆரம்பக் கல்வி கட்டாயமாககப் படும்பொழுது, சில அறியாத பேதைகள் தீதாக எண்ணிக் குந்தகம் விளைவிக்கலாம். இதைத் தடுப்பதற்காக "மனச்சாக்ஷி" ஷரா ஒன்று சேர்ககபபட்டும், கட்டாயக்கலவி விஷயத்தில் பொதுஜனங்களது ஒத்துழைப்பும் கோரப்பட்டு வருகின்றன. பொதுஜன அபிவிருத்திக்கும் பரமஸாம்ராஜ்யத்திற்கும் கல்வியினது மேன்மையை அறியாதவரும் இந்நூற்றாண்டி லிருக்க முடியுமா?

தின்பது கொஞ்சம், ஜீவனம் நிலை இல்லை.

ஸ்பார்டா நகரத்து ஒரு தேசாபிமானி
“லியானிதாஸ்” என்னும் போர்வீரன்
**LEONIDAS**

[ஸ்ரீமான் ஸி. எஸ். சுந்தரம், பி, ஏ., எல். டி.]

முன்னொரு காலத்தில் “லியானிதாஸ்” என்று ஒரு அரசனிருந்தான். அவன் “ஸ்பார்டா” நகரத்தை ஆண்டுவந்தான். அந்நகரம் ஐரோப்பா கண்டத்தில் “கிரீஸ்” தேசத்திலிருக்கிறது. ஆதிகாலத்தில் நம்முடைய தேசத்தைப்போல் “கிரீஸ்” தேசம் மிக நாகரீகமுள்ள தேசம். ஐரோப்பாக் கண்டம் முழுதும் இத்தேசத்திலிருந்தே நாகரீகம் பரவிற்று என்று சொல்ல ஆக்ஷேபணையில்லை. தற்காலத்திலுங்கூட கிரீஸ் தேசத்தின் பழைய பெருமையை எண்ணிக் கைதூக்கி மரியாதை செய்யாதவர்கள் இல்லை. அப்பேர்ப்பட்ட தேசத்தில் பெருமையடைந்த பட்டணங்கள் முக்கியமாய் இரண்டேயாகும். அவை (1) “ஆதன்ஸ்” (2) “ஸ்பார்டா”வாம். அப்பேர்ப்பட்ட “ஸ்பார்டா” நகரத்து அரசன் “லியானிதாஸ்” என்பவன். அவன் காலத்தில் “பெர்ஷியா” தேசத்தில் “க்ஸர்க்ஸீஸ்” என்னும் பெயர்கொண்ட வலிமையுள்ள அரசன் இருந்தான். வலிமையுள்ள அரசர்களுக்கு வேறுநாட்டை வென்று ஆள்வது ஆதிகாலம் முதல் சகஜமாக இருக்கிறது. இவ்வரசனுக்கோ, சைனியங்கள் கணக்கிட முடியாது. அவன் சைனியங்கள் சண்டையில் அம்புகளைப் பிரயோகித்தால் சூரிய வெளிச்சத்தை மறைத்துவிடும் என்று சொல்வார்கள்.

“பெர்ஷியா” தேசத்து அரசன் “கிரீஸ்” தேசத்தைப் படையெடுக்க நிச்சயித்து வேண்டிய காலாட்படைகளையும், குதிரைப்படைகளையும், கப்பல்படைகளையும் சேகரித்து, ஒரு தேசமே புரண்டு வந்ததுபோல் “கிரீஸை” எதிர்த்தான். 50 லட்சம் காலாட்படை, 80,000 குதிரைப்படை, 1,200 சண்டைக்கப்பல்கள், 3000 சிறிய கப்பல்கள் இவைகளைக் கொண்டு படையெடுத்ததாகச் சொல்லுகிறார்கள். ஒன்றுக்குப் பத்து என்று சொன்னாலுங்கூட இவன் ஏராளமான படையுடன் எதிர்த்தான் என்பதில் சந்தேகமில்லை. “கிரீஸ்” தேசத்திலோ இவ்வளவு சைனியத்திற்கு வழியில்லை. தேசமோ சிறிது. ஒவ்வொரு நகரத்திலும் ஒரு ராஜா ஆண்டுவந்தான்.

சமுத்திரம் புரண்டு வருவதுபோல் “பெர்ஷியர்கள்” வருகிறார்கள். நகரங்கள் ஒன்றுகூடி எதிர்த்தாலும் முடியாத காரியம்போல் தோன்றுகிறது. ஊர் இரண்டு பட்டால் கூத்தாடிக்கு எளிது என்கிற கதை போலாகிவிடும் போலிருந்தது. ஆகவே எல்லா நகரங்களிலிருந்தும் பிரதிநிதிகள் கூடி ஆலோசனை செய்தார்கள். ஊருக்கு ஊர் பிரதிநிதிகள் அனுப்பி “காங்கிரஸ்” கூடுவதுபோல் கூடி ஆலோசனை செய்தார்கள். எல்லோரும் ஒரு மனதாய் பெர்ஷியா தேசத்து சைன்யத்தை எதிர்ப்பதாய்த் தீர்மானம்பண்ணி ஸத்தியம் செய்தார்கள். அத்தீர்மானத்துக்கு விரோதமாய் நடந்தவர்களை தேசத்துரோகிகளாக நிச்சயித்து அவர்களுக்குத்தக்க சிட்சை செய்வதாகவும் தீர்மானமாயிற்று. தேசத்துரோகிகள் பண்டைக்காலம் முதல் இருந்துகொண்டிருக்கிறார்கள். இருந்துகொண்டுமிருப்பார்கள். கிரீஸிலும் அப்பேர்ப்பட்டவர்கள் இருந்தார்கள். ஆனாலும் நகரங்கள் ஒன்றுகூடிஒரு மனதாய்ச் சண்டை செய்யத் தீர்மானித்துத் தயார்செய்ய ஆரம்பஞ் செய்யவே, சிலர் தாங்கள் “ஸ்பார்டா” நகரத்தலைவன்கீழ் சண்டை செய்யமாட்டேனென்றும், சிலர் “ஆதன்ஸ்” நகரத்தலைவன் கீழ் சண்டை போடமாட்டேனென்றும் சொல்ல ஆரம்பித்தார்கள். தேச நன்மையையே பெரிதாகக் கொண்டாடக்கூடிய புத்தி நம்முடைய தேசத்திலேயே படித்தவர்கள அநேகருக்கு இப்போது இல்லையே. சுமார் 2300 வருஷங்களுக்குமுன் அப்படி சிலருக்கிருந்தது ஆச்சரியமல்ல. ஆனாலும் புத்தியுள்ளவர்கள் கொஞ்சம் தணிந்து பொது நன்மையை மேலிட்டு தங்களுக்குள் இருந்த சண்டைகளை மறந்து ஊக்கத்துடன் பாடுபட ஆரம்பித்தார்கள். “லியானிதாஸ்”, சைன்யங்களில் காலாட்படைக்குத் தலைவன் ஆனான்.

சண்டையோ, நிலத்திலும் கடலிலும் போடவேண்டியிருந்தது. சுமார் 7000 ஜனங்களுக்குமேல் இல்லை. பெர்ஷியர்களோ லட்சக்கணக்காயிருக்கிறார்கள். “அதீனியர்கள்”, கப்பல் சண்டையை கவனித்து வந்தார்கள். கிரீஸ்” தேசம் அநேக இடங்களில் கடலோரமாயிருக்கிறது. தேசத்தில் மலைகளும் உண்டு. வட





பாகத்திலுள்ள நாடுகளை எதிர்ப்பது இலகு. துப்பறிபவர்களை அனுப்பி, கிரீக்கியர்களில் சிலரைத் தன் வசமாக்க பெர்ஷிய தேசத்தரசன் முயன்றான். அவனுக்கு உதவிபுரிய சமயம் பாராட்டுவோர் இருந்தார்கள் சிலர், எதிர்த்து லாபமில்லை கட்டாயம் தோல்வி யடைவோம் என்று எண்ணி கீழ்ப்படியத் தீர்மானித்தார்கள். ஆனால் “லியானிதாஸ்” “ஆறில் செத்தாலும் சாவு, நூறில் செத்தாலும் சாவு, கீழ்ப்படிதல் கூடாது. நம்முடைய தேசத்தை வேற்றரசன் ஜயிக்கக்கூடாது” என்று தீர்மானித்தான். பெர்ஷியர்கள் எவ்வளவு கூட்டமாயிருந்தாலும் அவர்கள் இரண்டுமலைகளுக்கு மத்தியில் ஒரு கணவாய் வழியாய்ச் சென்றுதான் கிரீக்கியர்களை எதிர்க்கமுடியும். அதன் பெயர் “தெர்மாபொலி வழி” அவ்விடத்தில் வாசற்காப்போன்போல் நாம் முன்ஜாக்கிரதையுடன் சைனியங்களோடு செல்வோம் என்று லியானிதாஸ் தீர்மானித்துச் சென்றான். அவ்விடம் மிகக் குறுகலான இடம். மலைப்பாறைகளுக்கும் கடலுக்கும் மத்தியில் இவ்விடத்தைவிட்டால் வேறு வழியில்லை. இதன் வழியாகத்தான் பகையரசன் சைனியம் வரமுடியும். ஒரு சின்ன வண்டிபோக இடம் இவ்விடத்தில் உண்டே அல்லாது வேறு இடமில்லை. இரண்டு வண்டிகள் சேர்ந்தால்போற் போக விசாலமில்லை.

லியானிதாஸ் இவ்விடத்துக்கு வந்ததும் அவனுக்கு புத்தியில் தோன்றியதாவது:— “நாம் இங்கே தங்கியிருப்பதே நலம். பெர்ஷியர்கள் லட்சக்கணக்காய் வந்தாலும் அவர்கள் பிரிந்து, இக்கணவாய் வழியாய் ஒரே காலத்தில் சில மனிதர்களுக்குமேல் வரமுடியாது. ஆகவே நாம் ஒரே சமயத்தில் எதிரியின் சைன்யங்கள் எல்லாருடனும் சண்டை செய்வதைக் காட்டிலும், ஜனங்கள் வரவர அவர்களை எதிர்ப்பதே நலம்”. இம்மாதிரி யோசித்து அவ்வழிக்குள் கற்பாறை மண் இவைகளைக்கொண்டு ஒரு சுவர் எழுப்பி அதற்குப் பின்னால் தன் சைனியத்துடன் தங்கி, எதிரியின் வரவை எதிர்பார்த்துக்கொண்டிருந்தான். “ஸர்க்ஸீஸ்” தன் ஏராளமான சைன்யத்துடன் போகும்போது, நாட்டிலுள்ள ஜனங்க்ள் இச்சைன்யத்தைக் கண்டு பயந்து இவ்வளவு சைன்யங்கள் உள்ள அரசன் அதி சீக்கிரத்தில்உலகம் முழுவதையும் ஜயித்துவிடுவான். அவனுடன் பகைகூடாதென்று பயந்து அவன் தர்மாபொலிக் கணவாயண்டை வந்ததும் கிரீக்கியர்கள் ஒளிந்து தங்கி சண்டை போடக் காத்திருந்த இடத்தை வெளியிட்டார்கள். உடனே “ஸர்க்ஸீஸ்” தன் சைன்யத்தை நிறுத்தி, கிரீக்கியர்கள் எத்தனை பேர்கள் இருக்கிறார்கள் என்று துப்பறிய ஒரு தூதனை இரகசியமாய் அனுப்பினான். மாறுவேஷம் தரித்து மெதுவாய்ப் பாறைகளிடுக்கில் புகுந்து சத்தம் செய்யாமல் கிரீக்கியர்களிருக்கும் ஸ்திதியை தூதன் அறிந்தான். அவன் பார்த்தபொழுது கிரீக்கியர்களில் அநேகமாய் எல்லோரும் தங்க்ள் தங்கள் இடங்களில் கண்ணுக்குத் தென்படாமல் உள்ளே இருந்துகொண்டிருந்தார்கள். சுவர் மறைவில் அவர்கள் தங்கியிருக்கவே இத்தூதன் கண்ணில் புலப்படவில்லை. ஆனால் சில ‘ஸ்பார்டர்கள்” மட்டும் வெளியே நிறகக்கண்டான். அவர்களில் சிலர் தங்கள் கவசத்தைப் போட்டுக்கொண்டும், மற்றும் சிலர் தங்கள் தலைமயிரை வாரி அழகாய்வைத்துக்கொண்டுமிருந்தார்கள். அவன் உடனே ஓடிவந்து “ஓ, ராஜாவே, கிரீக்கியர்களைக்கண்டு பயப்படவேண்டாம். அவர்கள் தொகை சொல்பம்; பத்து, நூறு மனிதர்களுக்கு மேலில்லை. சண்டைக்கு ஆயத்தமாயில்லாமல் குஷாலாய்த் திரிகிறார்கள். சிலர் தலைமயிரை ஆற்றி வாரிக்கொண்டு அழகுபார்த்துக்கொண்டிருக்கிறார்கள்” என்று சொன்னான்.

இதைக்கேட்டதும் “ஸர்க்ஸீஸ்”க்கு சிரிப்புத் தாங்கவில்லை. இச்சிறு சைன்யத்தோடு சண்டை போடவா என்று இகழ்ந்து “லியானிதாஸ்” க்கு ஒரு தூதனை அனுப்பி ஆயுதங்களைக் கீழேவைத்துப் பணிவிடை செய்கிறானா என்று கேட்டு வரச்சொன்னான். அத்தூதன் வரவே லியானிதாஸ் “ஓ, தூதா, வந்தவழியே திரும்பிப்போ. நாங்கள் எடுத்த ஆயுதங்களை நாங்களே கீழேவைக்க மாட்டோம் —ஸர்க்ஸீஸ் சாமர்த்தியவானானால் அவன் இங்கே வந்து சண்டைசெய்து எங்கள் ஆயுதங்களை எடுத்துப்போகட்டும்” என்று சொன்னான்.

இவவார்த்தைகளைக் கேட்டதும் ஸர்க்ஸீஸ் சில ராணுவ வீரர்களை அனுப்பி “கிரீக்கியர்களை விரட்டியடித்து சைனியத்துக்கு வழி விடுங்கள்” என்று கட்டளையிட்டான். அவர்

கள் வரவே எல்லோரும் ஒருமிக்கச் செல்ல வழியில்லாமல் நெருக்கமாக இருந்ததால் ஒவ்வொரு தடவையும் கொஞ்சம் கொஞ்சமாகச் செல்ல, "லியானிதாஸ்" அவர்களை எளிதில் ஜயித்துவிட்டான். மிகுந்தவர்கள் ஓடிவந்து "மகாராஜாவே! இவ்வெதிரிகள் மிகபராக்கிரம முள்ளவர்கள்; சண்டையில் அவர்களை ஜயிப்பதரிது" என்று கதறினார்கள்.

அரசனுக்குக் கோபம் வந்துவிட்டது. "பயங்காளிகளே, என் எதிரில் நில்லாதீர்கள்" என்று கூக்குரலிட்டு தன் சைனியத்தில் தேர்ந்த வீரர்களைப் பொறுக்கி யனுப்பினான். அவர்கள் கதியும் அப்படியேயாயிற்று. பிறகு சற்றுநேரம் யோசித்து வேறொரு தூதனை யனுப்பினான் அத்தூதன் லியானிதாஸுக்குச் சொன்னதாவது: "லியானிதாஸே, மகா சக்ரவர்த்தியின் பேச்சைக்கேள். இக்கணவாய் வழியாய்ச்சக்கரவர்த்தியின்சைன்யம் செல்ல விடுவாயானால், சக்கரவர்த்தி உனக்கு 'ஸ்பார்டா' மட்டுமல்ல, கிரீஸ் தேசத்திலுள்ள நகரங்களெல்லாவற்றையும் உனக்கே கொடுப்பார். இந்நகரங்களுக்கெல்லாம் நீயே இராஜா வாவாய்" இம்மாதிரி இனிய மொழிகளைச் சொன்னான். தேசாபிமானிகள் இம்மொழிகளால் ஏமாறமாட்டார்கள். ஆகவே, "லியானிதாஸ்" தூதனைப்பார்த்து "தூதா, 'ஸர்க்ஸீஸ்' தனக்குச் சொந்தமான பொருளை பிறருக்குக் கொடுக்கலாம், தனக்குச் சொந்தமில்லாத ஸ்பார்டாவையும் மற்றநகரங்களையும் எப்படிக் கொடுக்கமுடியும்? ஸ்பார்டாவும் மற்றநகரங்களும் தன் சொத்துப்போலும், தன் பாட்டன் சம்பாதித்ததுபோலும் ஏன் பேசுகிறான். போ, போ," என்று சொல்லிவிட்டான்.

ஸர்க்ஸீஸுக்கு ஒன்றும் தோன்றவில்லை. அநேக நாட்கள் ஆய்விட்டன. க்ரீஸுக்குள் புகமுடியாதுபோல் தோன்றுகிறதே என்று விசாரப்பட்டு நிராசையா யிருந்தான். பலவிதம் யோசனை செய்து மனங் களைத்திருக்கையில் ஒருகுடியானவன் பெர்ஷியர்கள் தங்கியிருக்குமிடத்துக்கு வந்து, இராஜாவுடன் ஒரு சமாசாரம் பேசவேண்டுமென்று விரும்பினான். இவன் ஒரு தேசத்துரோகி. இவன் சொன்னதாவது; "ஓ, ராஜாவே, நான் ஒரு உபாயம் சொல்லுகிறேன் கேளும், பயப்படவேண்டாம், அதோபார், அந்த வழியாய் மலைமேல் சென்றால் ஒரு செங்குத்தான வழி இருக்கிறது, அவ்வழியே சென்றால் கிரீக்கியர்கள் இருக்குமிடத்திற்கப்பால் கொண்டுபோய்விடும். அதாவது சில சைனியங்கள் இங்கே தங்கி, சிலர் நான் காண்பிக்கும் வழி வந்தால் கிரீக்கியர்கள் உன் சைன்யத்தின் இரண்டு பாகங்களுக்கு மத்தியில் பாக்குவெட்டியி லகப்பட்ட பாக்குப்போல் தவிப்பார்கள், உடனே அவர்களை அதம்பண்ணி விடலாம்" என்று சொன்னான். ஸர்க்ஸீஸ் உற்சாகத்துடன் இதைக் கேட்டுத் தன் சைன்யத்தில் சிலரை அனுப்பினான்.

மறுநாள் அதிகாலையில் பெர்ஷிய அரசன், சைன்யங்கள் என்ன செய்கின்றன என்று கவனித்த வந்த கிரீக்க காவற்காரர்கள் லியானிதாஸண்டை ஓடிவந்து "மகாராஜாவே, நாம் இந்தக் கணவாயை விட்டுவிட்டு ஓடிப்போவோம். நாம் முன்னும் போகமுடியவில்லை. ஏனெனில் நம்முடைய சைன்யமோ பெர்ஷியா சைன்யத்துடன் ஒப்பிட்டுப்பார்த்தால் சமூத்திரத்தில் ஒருதுளிக்குச் சமானம். முன்போய் அவர்களை எதிர்க்கமுடியாது. இவ்விடத்தைவிட்டு உடனே போகாவிட்டால் நமக்குப் பின்புறத்தில் அவர்கள் சைன்யம் சீக்கிரம் வந்துவிடும். நாம் கூண்டுக்குள் அகப்பட்ட பிராணிமாதிரி அகப்பட்டு உணவில்லாமல் சாகவேண்டும். ஆகையால் ஓடிப்போவோம்" என்று கதறினார்கள். லியானிதாஸ் இதைக்கேட்டு "நானும் ஸ்பார்டர்களும் யுத்தகளத்தைவிட்டுப் போகமாட்டோம். ஸ்பார்ட்டாவில் பிறந்து வளர்ந்து படித்து ஸ்பார்டன் என்று பெயர்கொண்ட ஒருவனும், தான் செத்தாலும் சாவானே அல்லாது தன் இடத்தைவிட்டு விலகான். போர்க்களத்தில் தன் கடமையைச் செய்து மாள்வார்களே யல்லாது முதுகுகாட்டி ஸ்பார்டர்கள் ஓடமாட்டார்கள். பின்னால் பெர்ஷியர்கள் வந்து தடுப்பதற்கு முன் தங்கள் தேசத்தைவிட உயிரைப் பெரிதாய் எண்ணுகிறவர்கள் காலதாமத மில்லாமல் போகட்டும், நான் தடைசெய்யவில்லை" என்று சொன்னான்.

இப்படிச் சொல்லவே முன்னூறு ஸ்பார்டர்களைத் தவிர மற்றவர்கள் எல்லோரும் போய்விட்டார்கள். அவர்களுக்குத் தங்கள்பாடு வீண்பாடு என்று தெரியும். சண்டை செய்தும் பிரயோசனமில்லை யென்று தெரியும். "ஆனாலும் மானம் பெரிதா. தேசாபிமானம் பெரிதா? பிராணன் பெரிதா? பகைவருக்கு முதுகுகாட்டி ஓடுதலிலும் வேறு அவமானம் என்ன? இங்கேயிருந்து இருபக்கத்திலும் சூழப்பட்டு, கைதிகள் மாதிரி இவ்விடத்தில் அடைக்கப்பட்டுச் சாவதைவிட சுயேச்சை மனிதர்களாய் வேற்றரசனுக்குக் கீழ்ப்படாமல் அவனுடன் போர்புரிந்து சாவதே மேன்மை" என்று லியானிதாஸ் தன் கூட்டத்தாரைக்கண்டு சொல்லவே, வீராவேசத்துடன் அக்கணவாயைத் தாண்டி பெர்ஷியாதேசத்தரசன் சைன்யத்துடன் சண்டைசெய்தார்கள். பாருங்கள் என்ன ஆச்சரியம்! முன்னூறு ஜனங்களுக்கும் ஒரே ஒரு எண்ணம். உயிர்வைத்துக்கொண்டு வாழ்ந்திருப்பதிலும், ஸ்பார்டா நகரின் மானத்துக்காகச் சண்டை செய்து பிராணனைவிடுதலே மேன்மை என்று சாவுக்குப் பயப்படாமல் உயிரிழந்தார்கள். இப்பேர்ப்பட்ட வீர, சூர பராக்கிரமசாலிகளும், இவர்கட்குத் தலைவரும் எல்லாத் தேசங்களிலும் கொண்டாடப்படுவாராக. இவர்களிடத்தில் பகவான் எப்போதும் கருணைகூருவாராக.

---

விவேக போதினி, 12-ம் தொகுதியைப்பற்றிப் தேசபக்தன் எழுதுவது.—இந்த அரிய மாதாந்தப் பத்திரிகையின் 1919 ஜூலை முதல் 1920 ஜூன் முடிய வெளிவந்த பன்னிரண்டு சஞ்சிகைகளையும் சேர்த்துக் கட்டிய 12-ம் தொகுதி நமக்கு அனுப்பப்பட்டிருக்கிறது. இத்தனை காலமாக விடாமல் நடந்து வருகிற மாதாந்தப் பத்திரிகை இது ஒன்றுதான். இந்தத் தொகுதியில் 12 படங்களும், சுவையான பல அரிய வியாசங்களும் இருக்கின்றன. காகிதவிலையும் அச்சுக்கூலியும் அகாதமாக ஏறிவிட்ட இக்காலத்தில், எடுத்த காரியத்தை விடக்கூடாது என்று ஒரே பிடிவாதமாய்ச் சிரமத்தையும் செலவையும் பார்க்காமல் பத்திராசிரியர் இப்பத்திரிகையை நல்ல தளதளப்பான காகிதத்தில் சிறந்த ஆசிரியர் எழுதிய வியாசங்களோடு வெளியிட்டு வருவது போற்றத் தக்கது. இந்த 12-ம் தொகுதி நல்ல துணியில் அழகாகக் கட்டப்பட்டிருக்கிறது. தமிழபிமானிகள் இதை அபிமானித்து வாங்குதல் கடமையாகும். உள்நாட்டுக்கு வருட சந்தா ரூ. 5. வெளிநாட்டுக்கு ரூ. 6. வேண்டுவோர் 'விவேக போதினி' காரியாலயம், மயிலாப்பூர், சென்னை, என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெற்றுக்கொள்ளவும்.



# ரா ஜ ஸி ம் ஹ ன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(121-ம் பக்கத் தொடர்ச்சி.)

### நான்காம் அத்தியாயம்

### கள்வர்களின கதி

குதிரை சவாரி செய்பவன் பருவதத்தின் சிகரத்திலிருந்து, நால்வர் ஒருவனைப் பிடித்துக் கட்டிப்போவதைப் பார்த்தான். அதற்கு முன் என்ன நடந்ததோ அதை அவன் பார்க்கவில்லை. அந்நால்வரும் எந்த வழியாய்ப் போனார்களோ அதை உற்றுப்பார்த்துக்கொண்டிருந்தான். அவர்கள், ஆறு வளைந்து போகிற விடத்தில் வேறொரு குன்று மறைவில் கண்ணுக்குப் புலப்படாமல் போகிறவரையில் பார்த்திருந்து தன் குதிரையை விட்டு இறங்கி, அதைத் தட்டிக்கொடுத்து, "விஜய! நீ இங்கே நின்றுகொண்டிரு. நான் வருகிறேன். நீ சத்தம் செய்யாமல் இரு" என்று சொன்னான். குதிரை, சத்தம் ஒன்றும் செய்யாமல் அங்கேயே நின்றுகொண்டிருந்தது. குதிரையின் எஜமானன் பாதசாரியாய் வெகு வேகமாய்க் குன்றிலிருந்து இறங்கிவந்தான். பருவதம் அதிக உயரமில்லை என்று முன்னமே சொல்லியிருக்கிறோம்.

சவாரிக்காரன் மிசிர டாகூருக்குச் சமீபத்தில் வந்து அவனைக் கட்டையறுத்துவிட்டு "என்ன நடந்தது? அதைச் சுருக்கமாய்ச் சொல்லும்" என்றான்.

டாகூர்—நான்கு ஜனங்களுடன் நான்வந்து கொண்டிருந்தேன். அவர்கள் எனக்குப் பரிச்சயமில்லை. வழியில் சந்தித்ததுதான். தாங்கள் வர்த்தகர்கள் என்றார்கள். இங்கு வந்தவுடன் என்னைப்பிடித்து என்னிடத்திலிருந்ததைப் பறித்துக்கொண்டு போய்விட்டார்கள்.

சவாரிக்காரன்- என்னென்ன உன்னிடத்திலிருந்து கொண்டுபோனார்கள்.

பிராமணன்—ஒரு முத்து இழைத்த காப்பு, சில மோகருக்கள், இரண்டு காகிதங்கள்.

சவாரிக்காரன்—தாங்கள் இங்கேயே இருங்கள். அவர்கள் எந்தப் பக்கம் போயிருக்கிறார்களோ பார்த்து வருகிறேன்.

பிராமணன்—நீங்கள் போகிறது சரியல்ல. அவர்கள் நாலுபேர். நீங்கள் ஒண்டி.

சவாரி—தெரியவில்லையோ? நான் ரஜபுத்திர ஸைனிகன்!

அவன் பட்டாளத்தைச்சேர்ந்தவன் என்று பிராமணன் தெரிந்துகொண்டான். அவன் இடுப்பில், கத்தி கைத்துப்பாக்கி முதலிய ஆயுதங்களிருந்தன. டாகூர் பயங்கொண்டு அதிகமாய்ப் பேசவில்லை.

ரஜபுத்திரன் கள்வர் போனவழியாய் அவர் பின்னே போனான். ஆனால் வனத்தின் மத்தியில் வரும்பொழுது மார்க்கம் விட்டுப் போயிற்று. கள்வர் போன வழி தெரியாமற் போயிற்று.

அப்பொழுது ரஜபுத்திரன் மறுபடியும் குன்றின்மேல் ஏறி அங்குமிங்கும் உற்றுப் பார்க்க, தூரத்தில் வனத்தின் மத்தியில்நான்கு பேர் போய்க்கொண்டிருந்தார்கள். அங்கேயே நின்றுகொண்டு அவர்கள் எவ்விடம் போகிறார்கள் என்று பார்த்துக் கொண்டிருந்தான். கொஞ்ச நேரத்துக்கெல்லாம் அவர்கள் ஒரு குன்றினடியில் போனார்கள். முன்னே போவதாகக் காணவில்லை. ரஜபுத்திரன் "இவர்கள் அங்கேயே களைப்பாறுகிறார்கள்போல்தோன்றுகிறது. மரங்கள் மறைவு போலிருக்கிறது. இல்லாவிட்டால் அங்கே ஏதாவது ஒரு குகையிருந்து அதற்குள் போயிருக்கவேண்டும்" என்று நிச்சயித்தான்.

ரஜபுத்திரன் மரங்களின் அடையாளம் வைத்துக்கொண்டு இறங்கிவந்து அந்த இடத்திற்குப் போய்ப்பார்க்கவும் அங்கே ஒரு குகையிருந்தது. குகையினுள்ளே ஜனங்கள் பேசுவது கேட்டது.

குகைவரைக்கும் வந்து கொஞ்சம் ஆலோசித்தான். அவர்கள் நால்வர், தான் ஒருவன். குகைக்குள் போவது உசிதமோ இல்லையோ என்று யோசித்தான். அவர்கள் குகையின் வாசலை மூடிக்கொண்டு சண்டைபோட்டால், தான் பிழைப்பதரிது என்று முதலில் நினைத்தான். ஆனால் அந்த யோசனை செய்துகொண்டு பொழுது போக்கவில்லை. வேறொரு யோசனை மனதிற் புகுந்தது. குகைக்குள் பிரவேசித்தால் ஒருவர் இரண்டு பேர் கொலையாவார்கள் என்பதற்குச் சந்தேகமில்லை. அவர்கள் கள்வராயில்லாமற் போனால், குற்றமில்லாதவரைக் கொல்லுவதாகுமே என்று நினைத்தான்.

இப்படி யோசித்துக்கொண்டு ரஜபுத்திரன் மெல்ல மெல்ல குகையின் வாய்ப்பக்கமாய் நின்றுகொண்டு, உள்ளே இருப்பவர் பேசிக்கொண்டிருப்பதை உற்றுக் கேட்டான். கள்வர் தாங்கள் திருடிவந்ததைப் பிரித்துக்கொள்ளுகிற விஷயமாய்ப் பேசிக்கொண்டிருந்தார்கள். இதைக்கேட்டவுடன்இவர்கள் திருடர்கள்தான் என்றறிந்து குகையின் உள்ளே பிரவேசிப்பதாக நிச்சயித்தான்.

சத்தஞ்செய்யாமல் உறையிலிருந்து வாளை மெல்ல எடுத்து வலக்கையில் பலமாய் பிடித்துக்கொண்டு இடக்கையில் கைத்துப்பாக்கியை எடுத்துக்கொண்டான். கள்வர் சஞ்சலகுமாரியின் காகிதத்தைக் குறித்துப் பேசிக்கொண்டு அதன்மூலமாய்ப் பணம் சம்பாதிப்பதாய் யோசிக்கும்பொழுது, ரஜபுத்திரன் குகைக்குள் சப்தஞ்செய்யாமல் பிரவேசித்தான். கள்வர் தலைவன் குகைவாயிலுக்கு முதுகைக்காட்டி உட்கார்ந்திருந்தான். ரஜபுத்திரன் பிரவேசித்து,தான் கெட்டியாய்ப் பிடித்திருந்த கத்தியை வீசினான். கைபலமதிகமாயிருந்ததால் ஒரே அடியில் கள்வன் தலை வெட்டுண்டு கீழே விழுந்தது.

அந்த க்ஷணத்திலேயே தலைவன் பக்கத்தில் உட்கார்ந்திருந்த இன்னொரு கள்வன், தலையில் விழுந்த அடியால் மூர்ச்சையடைந்து கீழே விழுந்தான். பாக்கி இருவரில் ஒருவன் ரஜபுத்திரனை யடிப்பதற்கு ஒரு பெரிய கல்லையெடுத்துக்கொண்டு வந்தான். அப்பொழுது ரஜபுத்திரன் தன் கைத்துப்பாக்கியை அவனுக்குக் குறிப்பிட்டுச் சுட்டவுடன் அவன் கீழே விழுந்து மரணமடைந்தான். மிஞ்சின மாணிக்கலாலன் கதியற்றவனாய் குகையின் வாயில் வழியாய் ஓடிப்போனான். ரஜபுத்திரன் அவன் பின்னே துரத்திக்கொண்டு ஓடி அவனைப் பிடித்துக் கத்தியை ஓங்கி அவனை சிரச்சேதம் பண்ண நிச்சயித்தான்.

அப்போது மாணிக்கலாலன், பயத்துடன் 'மகாராஜாதிராஜ! எனக்குப் பிராணதானங் கொடுங்கள். என்னைக் காப்பாற்றுங்கள். நான் உங்களைச் சரணமடைந்தேன்' என்றான். ரஜபுத்திரன் அவன் மயிரை விட்டுவிட்டு, கத்தியைக் கீழே தணித்து 'நீ சாவதற்கு இவ்வளவேன் பயப்படுகிறாய்?' என்றான்.





மாணிக்கலாலன் "நான் மரணத்துக்குப் பயப்படவில்லை. ஆனால், எனக்கு ஏழு வருஷமுள்ள பெண் ஒருத்தியிருக்கிறாள். அவளுக்குத் தாயில்லை. என்னைத்தவிர வேறொருவருமில்லை. நான் அவளுக்குக் காலைச் சாப்பாடு போட்டுவிட்டு வந்தேன். சாயங்காலம் போய் சாப்பாடு போடவேண்டும். அவளை விட்டுவிட்டுச் சாவதற்கு இஷ்டமில்லை. நான் இறந்தால் அந்தப் பெண்ணும் இறந்துபோகும். என்னைக் கொல்வதானால் அந்தப் பெண்ணை முன்னால் கொன்றுவிடுங்கள்" என்றான்.

பின்னும் கள்வன், அழுது கண்ணீரைத் துடைத்துக்கொண்டு 'மகாராஜாதிராஜ, நான் தங்கள் பாதங்களைத் தொட்டுப் பிரமாணம் பண்ணுகிறேன். இனி திருட்டுத்தொழிலை விட்டுவிட்டு வெகுகாலம் தங்கள் சேவகத்திலிருக்கிறேன். பிழைத்திருந்தேனானால் ஒருநாளாவது இந்த அற்பனால் தங்களுக்கு உபகாரமுண்டாகலாம்' என்றான்.

ரஜபுத்திரன்—"நான் யாரென்று உனக்குத் தெரியுமா?" என்று கேட்டான்.

கள்வன்—மகாராஜா ராஜஸிம்ஹனை யார் தான் அறியார்?

ராஜஸிம்ஹ—நான் உனக்குப் பிராணதானம் செய்தேன். ஆனால் நீ பிராமணன் சொத்தை யபகரித்துக்கொண்டாய்—உன்னை ஏதாவது ஒரு விதமாய்த் தண்டியாமலிருந்தால் ராஜதருமம் தவறிப்போம்.

மாணிக்கலால—(வணக்கத்துடன்) "மகாராஜா! இந்தத் தொழிலுக்கு நான் புதிதாய் வந்தவன். தயவுசெய்து எனக்கு இலகுவான தண்டனை விதிக்கவேண்டும். தங்கள் சமுகத்திலேயே தண்டனைக்குள்ளாகும்படிச் செய்யவேண்டும்."

இப்படிச்சொல்லி இடுப்பிலிருந்த கத்தியை எடுத்துத தன் கைவிரலை யறுக்க வாரம்பித்தான். அப்பொழுது விரல் சதைமாத்திர மறுக்கப்பட்டு இரண்டு துண்டாகவில்லை. அது கண்டு, விரலை ஒரு கலலின்மேல் வைதது கத்தியை யதன்மேல் வைத்து மற்றொருகல்லினால் அதன்மே லடித்தான். உடனே விரல் கத்திரிக்கப்பட்டு பூமியில் விழுந்தது. அதன் பிறகு கள்வன் "மகாராஜா, இந்த சிட்சை போதும் என்று ஒப்புக்கொள்ள வேண்டும்" என்றான்.

ராஜஸிம்ஹன் ஆச்சரியப்பட்டுக் கள்வன் வலியினால் முகம் சுண்டாம லிருப்பதைக் கண்டு "இது போதும்; உன் பெயரென்ன" என்றான். கள்வன், "இந்த அற்பன் பெயர் மாணிக்கலாலஸிம்மன்; நான் ரஜபுத்திர குலாதமன்."

ராஜஸிம்ஹ—"மாணிக்கலாலா, இன்று முதற்கொண்டு நீ என்னிடத்தில் வேலைக்கு நியமிக்கப்பட்டிருக்கிறாய். நம் குதிரைப் படையில் உனக்கு ஒரு வேலை இப்பொழுதே கொடுத்திருக்கிறேன். உன் மகளை அழைத்துக் கொண்டு உதயபுரத்திற்குப் போ. அங்கே உனக்குப் பூமி முதலானது தருகிறேன், சுகமாயிரு" என்றான்.

மாணிக்கலாலன் ராஜாவின் பாத தூளியைத் தலைமேலிட்டுக்கொண்டு ராஜாவைக் கொஞ்சம்தயவுசெய்யவேணுமென்றுசொல்லிவிட்டுக் குகைக்குள் போய், களவு செய்த முத்துக்காப்பு, மோகரா, இரண்டு காகிதங்கள் எல்லாவற்றையும் கொண்டுவந்து கொடுத்து, "பிராமணனிடத்திலிருந்து நான் திருடினதையெல்லாம் இதோ வைத்துவிட்டேன். காகிதங்களிரண்டும் தங்கள் பெயருக்கு எழுதப்பட்டிருக்கிறது. நான் அதை வாசித்த குற்றத்தை மன்னிக்கவேண்டும்" என்று வேண்டிக்கொண்டான்.

ராஜா ராஜஸிம்ஹன் கடிதத்தைப் பார்த்து மேல்விலாஸம் தனக்கிருந்தது கண்டு, "மாணிக்கலாலா, காகிதத்தை வாசிப்பதற்கு இது ஸ்தலமல்ல—கூட வா—வழி உனக்குத் தெரியும். வழிகாண்பி; முன்னேபோ" என்றான்.

மாணிக்கலாலன வழிகாண்பித்துக்கொண்டு போனான். போகும்பொழுது அறுந்த கையைப் பார்க்கவில்லை. அதன் விஷயமாய் ஒரு வார்த்தைகூடப் பேசவில்லை. ராஜஸிம்ஹன் ஆச்சரியப்பட்டான். வேகவதிநதியின் தீரத்திற்கு வந்து ஒரு அழகான விடத்தில் சேர்ந்தார்கள்.

### ஐந்தாம் அத்தியாயம்
### சஞ்சலையின் லிகிதம

அந்த ரம்மியமான ஸ்தலத்தில் ஒரு பெரிய மரத்தினடியில் உட்கார்ந்துகொண்டு ராஜஸிமஹன் காகிதங்களை வாசித்துப் பார்க்கத் தொடங்கினான்.

முதலில், ராஜா விக்ரமஸிம்மனுடைய காகிதத்தை வாசித்தான். பிராமணனுக்கு ஏதாவது கொடுத்தனுப்பினால் காகிதத்தின் உத்தேசம் பூர்ணமாகிறது என்று நினைத்துக்கொண்டு சஞ்சலகுமாரியின் காகிதத்தை வாசிக்கவாரம்பித்தான். அதன் விவரம் பின்வருமாறு:—

"இராஜனே! நீர் ரஜபுத்திரகுலத்துக் கெல்லாம் சிரேஷ்டர்; இந்துக்களுக் கெல்லாம் சிரோமணி. நான் பரிசயமில்லாத ஈனபுத்தியுள்ள சிறுபெண். கடோமான ஆபத்துக்காளாகாம லிருந்தால் உமக்குக் காகிதமெழுதும்படியான தைரியமுள்ளவளா யிருந்திருக்க மாட்டேன். நான் ஆபத்துக்கடிமையாயிருப்பதால் என் தைரியத்தை மன்னிக்கவேண்டும். இந்தக் காகிதக்தைக் கொண்டுவருகிறவர் என் குருதேவர். அவரை விசாரித்தால் நான் ரஜபுத்திர கன்னிகை யென்று அறியலாம். ரூபநகரம் கேவலம் சிறிய ராஜ்யம். ஆனாலும் விக்கிரமஸிம்மன் கீர்த்திபெற்ற ரஜபுத்திரன். அரசன் மகளென்று நான் மத்திய தேசாதிபதியான உம்மிடத்தில் கண்ணியமுள்ளவளாக மாட்டேன். ரஜபுத்திர கன்னிகை என்பதால் மாத்திரம் உம்முடைய தயவுக்குப் பாத்திரமாவேன். ஏனென்றால் நீர் ரஜபுத்திரபதி; ரஜபுத்திரகுல திலகன்.

என் மேலனுக்கிரகம் செய்து என் ஆபத்தின் விஷயத்தை ஆதரவாய்க் கேட்கவேண்டும். என் துரதிருஷ்டத்திற்குத்தக்கபடி டில்லி பாதுஷா என்னைப் பாணிக்கிரகணம் பண்ணிக்கொள்ளவேண்டு மென்றிருக்கிறான். கொஞ்ச காலத்துக்குள் என்னை யழைத்துக் கொண்டு போவதற்காக அவன் சேனை இங்கே வரப்போகிறது. க்ஷத்திரிய குலத்திற்பிறந்த நான் அவனுக்கு எப்படி தாசியாவேன்? ராஜஹம்ஸியாகி கொக்குக்கு எப்படி வாழ்க்கைப் படுவேன்? நான் இந்த விவாகமாவதற்கு முன்னே விஷபானம் செய்து பிராணத்தியாகம் செய்ய வேண்டுமென்று நிச்சயம் பண்ணியிருக்கிறேன்.

'மகாராஜாதிராஜ! நான் அகங்காரியென்று நினைக்கப்படாது. நான் ஒரு சிற்றரசன் மகளென்பதை அறிந்திருக்கிறேன். யோதபுரம் அம்பரம் முதலான மகாபராக்கிரமமுள்ள ராஜாக்கள் தங்கள் பெண்களை டில்லி பாதுஷாவிற்குக் கன்னிகாதானம்பண்ணுவதை அவமானமென்று எண்ணவில்லை. அதைக் கௌரவமென்றே நினைக்கிறார்கள். அப்பேர்ப்பட்ட பெரிய பெரிய வம்சத்தாரைப் பார்க்கும்பொழுது நான் துரும்புக்குச் சமானம். அப்படியானால் எனக்கு இந்த அகங்காரமெதற்காக என்று கேட்கலாம். மகாராஜா! சூரியதேவன் அஸ்தமனமானவுடன், மின்னல் பூச்சிப் பிரகாசிப்பதில்லையா? பனிக்காலத்தில் தாமரை மூடிப்போயிருக்கும் பொழுது குந்தபுஷ்பம் மலருவதில்லையா? யோதபுரம் அம்பரம் முதலிய சமஸ்தானத்தார் குலநாசம் செய்து கொண்டால் ரூபநகரத்தார் குலத்தை இரக்ஷித்துக்கொள்ளக் கூடாதா? வனவாஸியான ராணா பிரதாபஸிம்மனுடன்கூட மகாராஜா மானஸிம்மன் பந்திபோஜனம் செய்ய வந்தபொழுது மகாராணா போஜனம் செய்யவில்லையென்று புகழுகிற கதைகள் கேட்டிருக்கிறேன். அப்பொழுது மானஸிம்மன் தன் தங்கையைத் துருக்கருக்கு கல்லியாணஞ் செய்துகொடுத்திருந்தாராம். அப்பேர்ப்பட்ட பிரதாபஸிம்மன் வம்சத்தில் பிறந்த உமக்கு, ரஜபுத்திர கன்னிகையான எனக்கு இப்பேர்ப்பட்ட விவாகம் இகபரம் இரண்டுக்கும் கேடு விளைவிக்கு மென்பதைச் சொல்ல வேண்டுமோ? மகாராஜா! இன்றுவரையில் உமது வம்சத்தில் துருக்கர்சம்பந்தம் செய்யாமலிருப்பது எதற்காக? நீங்கள் வீரிய சௌரிய பராக்கிரம சாலிகளென்பது மெய்தான். ஆனால் அதைச் சொல்வதில்லை. ஏனென்றால் மகா பராக்கிரம சாலிகளான ருஷிய தேசத்திய பாதுஷா, பாரஸீகம்தசந்தரசன் முதலானவர்க ளெல்லோரும் டில்லிபாதுஷாவுடன் சம்பந்தஞ் செய்து கொள்வதைக் கௌரவமாக நினைக்கிறார்கள். இப்படியிருந்தாலும், உதயபுரத்தரசன் மாத்திரம் துருக்கருக்குக் கன்னிகாதானம் செய்யாமலிருப்பதேன்? அவர் ரஜபுத்திரரா யிருப்பதனாலல்லவோ?

நானும் ரஜபுத்திரி—மகாராஜா! பிராணத்தியாகமாவது செய்து குலததை இரக்ஷித்துக் கொள்ளவேண்டுமென்று பிரதிஞ்ஞை செய்து கொண்டிருக்கிறேன்.

'அவசியமிருந்தால் பிராணனை விட்டுவிடுவேன். ஆனால இந்தப் பதினெட்டு வயதுள்ள புதிய ஜீவனைக் காபபாற்றிக் கொள்ளவேண்டுமென்று ஆசையிருக்கறது. ஆனால யார்

தீமையை மெச்சுகிறவன் தீமையாளிதான.



இந்த ஜீவனை இந்த ஆபத்திலிருந்து காப்பாற்றுபவர்? என் தந்தைபேர் சொல்வதில் பிரயோஜனமில்லை.. அவரால் பாதுஷாவுடன் விவாதஞ் செய்யவாகுமோ? மற்ற ரஜபுத்திரவரசரோ பெரியவர் சிறியவர் எல்லாரும், பாதுஷாவின் அடிமைகள். எல்லாரும் பாதுஷாவின் பெயரைக் கேட்டவுடன் நடுநடுங்குகிறார்கள். நீ ஒருவன் மாத்திரம் ரஜபுத்திர குலத்திற்குத் திலகமாயிருக்கிறாய். நீயே சுதந்திரமுள்ளவன். உதயபுரேசுவரன் ஒருவன் மாத்திரம் பாதுஷாவுக்குச் சம பலமுள்ளவனாயிருக்கிறான். ஹிந்து குலத்தில் வேறு யாருமில்லை. இந்தக் கதியற்ற பெண்ணை ரக்ஷிப்பவர் யார்? நான் உன்னைச் சரணமடைந்திருக்கிறேன். நீ என்னை இரக்ஷிக்கமாட்டாயா?

'எப்பேர்ப்பட்ட பெரிய காரியத்தில் நீர் தலையிட்டுக் கொள்ளவேண்டுமென்று சொல்லுகிறேனோ அது எனக்குத் தெரியாமலில்லை. நான் கேவலம் பெண் புத்தியினால் எழுதினேன் என்று எண்ணக்கூடாது. டில்லி பாதுஷாவுடன் வாதஞ்செய்வது சாமான்னியமல்லவென்பதை நானறிந்திருக்கிறேன்.

'இந்தப் பூலோகத்தில் அவனுடன் யுத்தம் செய்து நிற்பவர் யாருமில்லை. ஆனால், மகாராஜா நீர் யோசித்துப் பார்க்கவேண்டும். மகாராணா ஸங்கிராம ஸிம்மன் பேபர்ஷாவை முக்கால்வாசி ராஜ்யத்திலிருந்து ஓடும்படிச்செய்யவில்லையா? மகாராணா பிரதாபஸிம்மன் அக்பர் பாதுஷாவை மத்தியதேசத்திலிருந்து விரட்டிவிடவில்லையா? நீர் அந்த ஸிம்மாஸனத்திலேறினவரல்லவோ? நீர் அந்த ஸங்கிராமஸிம்மன் பிரதாபஸிம்மன் வம்சத்தில் பிறந்தவரல்லவோ? நீர் அவர்களைக்காட்டிலும் பலவீனனோ? மகாராஷ்டிர தேசத்தில் கள்வனொருவன் அலங்கீர் பாதுஷாவைத் தோற்கடித்தானென்று கேட்டிருக்கிறேன். அப்பேபபட்ட பாதுஷா, ராஜஸ்தானத்தின் ராஜேந்திரன் முன்னே எம்மாத்திரம்?

'நீர் சொல்லலாம் "என் கையில் பலமுண்டு: பலமிருந்தால் ஏன் உனக்காக இவ்வளவு கஷ்டப்படவேண்டும்? பரிசயமில்லாத ஒரு ஸ்திரீக்காக எதற்காக வீணாய்ப் பிராணஹத்தி செய்ய வேண்டும்? கோரமான யுத்தத்திற்கு எதற்காகப் போகவேண்டும்?" என்று கேட்கலாம். மகாராஜா! எல்லாவற்றையும் அடகுவைத்து சரணமடைந்தவரைக் காப்பாற்றுவது ராஜதருமமில்லையோ? குலத்தில் பிறந்த பெண்ணைக் காப்பாற்றுவது குலதருமமல்லவோ?'

'இன்னொரு வார்த்தை யிருக்கிறது. அதைச் சொல்வதற்கே வெட்கமாயிருக்கிறது. சொல்லாமலும் முடியாது. ஏனெனில் இந்த ஆபத்து வந்ததும் நான் ஒரு பிரதிஞ்ஞை செய்திருக்கிறேன். எந்த வீரன் என்னை மோகலாயர் கையிலிருந்து விடுவித்து ரக்ஷிக்கிறானோ அப்பேர்ப்பட்ட வீரன் ரஜபுத்திரனாயிருந்து சாஸ்திரப்பிரகாரம் என்னை பாணிக்கிரகணஞ் செய்துகொள்ளுவதானால் அவனுக்குத் தாசியாவேனென்று சங்கற்பம் செய்திருக்கிறேன். வீரசிரேஷ்டனே! யுத்தஞ்செய்து ஸ்திரீயை யடைவது வீரதருமம். ஸமஸ்த க்ஷத்திரிய குலத்தாருடன் யுத்தஞ்செய்து பாண்டவர்கள் திரௌபதியை யடைந்தார்கள். காசி ராஜ்யத்தில் கூடியிருந்த ஸமஸ்த ராஜமண்டலத்திற்கு முன், தன் வீரியத்தைக் காண்பித்து, பணமாய் வைத்திருந்த ராஜகன்னிகையை பீஷ்மதேவன் அழைத்துக் கொண்டுவந்தார். நீர் இத்தேசத்தில் ஒப்பில்லாத வீரனாயிருக்கிறீர். நீர் வீரதருமத்திலிருந்து தவறுவீரோ?

'அப்படியானால் நான் உமது மகிஷியாக வேண்டுமென்கிற ஆசை துராசைதான். நான் உம்முடைய பாணிக்கிரகணத்துக்கு யோக்கியமில்லாதவளா யிருக்கலாம். எப்படியானாலுமாகட்டும். உமது அனுக்கிரகத்துக்குப் பாத்திரமாகவேண்டுமென்கிற அபாவினால் என் குருதேவரிடம் ஈடுகொடுத்து வருவதற்கு அனுப்பியிருக்கிறேன். மேலே உமது ராஜதருமம் உமது கையிலிருக்கிறது. என் பிராணன் என் கையிலிருக்கிறது. டில்லிக்குப் போக வேண்டுமானால் மார்க்கத்தில் விஷபானம் செய்துவிடுவேன்.'

கடிதத்தை வாசித்துக் கொஞ்சநேரம் ராஜஸிம்ஹன் யோசித்துப் பின் தலைநிமிர்ந்து மாணிக்லாலனைப் பார்த்து" மாணிக்கலாலா! இந்தக் காகிதத்தின் விஷயம் உன்னைத் தவிர வேறு யாருக்காவது தெரியுமோ?" என்றான்.

மாணிக்க—அது அறிந்தவரைத் தாங்கள் குகைக்குள் கொல்லும்படியாயிற்றே!

ராஜ—நல்லது நீ வீட்டுக்குப்போ. உதய

தீயாரைச் சேர்ந்து ஒழுகல் தீது, தீயார் பண்செய்வனவும் தீது.

புரத்திற்கு வந்து என்னைப்பார். இக்காகித சமாசாரத்தை ஒருவருக்கும் சொல்லவேண்டாம்.

இவ்விதம் சொல்லி தன்னிடத்திலிருந்த கொஞ்சம் பணத்தை எடுத்துக் கொடுத்து மாணிக்கலாலனுக்கு உத்தரவு கொடுத்தான். அவன் நமஸ்காரம் செய்து புறப்பட்டுப் போனான்.

ஆரும் அத்தியாயம்

அநந்தமிசிரன ஓட்டமெடுத்தான் !

ராஜஸிம்ஹன் அநந்தமிசிரனைத் தான் வருகிற வரையில் காத்துக் கொண்டிருக்கவேண்டுமென்று சொன்ன பிரகாரம் அநந்தமிசிரன் அரசனுடைய வரவை எதிர்பார்த்துக் கொண்டிருந்தான். ஆனால் அவன் சித்தத்தில் சமாதானமில்லை. குதிரையேறிவந்த வீரனைப் பார்த்து அவன் கொஞ்சம் பயந்தான். ஒருதரம் ஆபத்தில் விழுந்து பிராணன் தப்புவது கஷ்டமாயிற்று. மேலும் கையிலிருந்ததையெல்லாம் பறிகொடுத்தான். சஞ்சலைக்குக் கொடுத்திருந்த வாக்கு வீணாயிற்று. எப்படி இனி அவள் முகத்தைப் பார்ப்பது ? என்று, பிராமணன் யோசித்துக் கொண்டிருக்கும்பொழுது பருவதத்தின்மேல் இரண்டு மூன்று பேர் பேசிக்கொண்டிருப்பதைக் கண்டான். பிராமணனுக்குப் பயமுண்டாயிற்று. மனதில்,மறுபடி வேறு கள்வர் வந்துவிட்டனரோ ? கள்வர், முன்தடவை கையிலிருந்ததை எடுத்துக்கொண்டு பிராணனுடனாவது விட்டார்கள். இந்தத் தடவை இவர்கள் கையில் விழுநதால் உயிர் பிழைப்பதெப்படி ? என்று ஆலோசித்துக்கொண் டிருக்கும்பொழுது பருவதத்தின்மேலிருந்தவர்கள் பிராமணனைக் குறித்து கையைக்காட்டிப் பேசிக்கொண்டிருந்தார்கள்.' இனதப் பார்த்தவுடன் பிராமணனுக்கு பாக்கியிருந்த கொஞ்ச தைரியமும் போயிற்று. அவன் ஓட்டம் பிடிக்க யத்தனித்தான். அப்பொழுது குன்றின் மேலிருந்தவர்களி லொருவன் இறங்க வாரம்பித்தான். அதுகண்டு பிராமணன் இறைக்க விறைக்க ஓட வாரம்பித்தான்.

அப்பொழுது 'பிடி,பிடி' என்று மூன்று நான்கு போ அவன் பின் ஓடினாகள். பிராமணன் அகப்படவில்லை, கச்சை யவிழ்ந்ததைக் கூடகவனிக்காமல் நாராயண ஸ்மரணைசெய்து கொண்டு, வில்லிலிருந்து புறப்பட்ட அம்புபோல் அதிவேகமாய் ஓடிப்போனான். பின்னே ஓடினவர்கள், அவன் கண்ணுக்கு எட்டாமற் போகவே, திரும்பி வந்துவிட்டார்கள்.

அவர்கள் வேறு யாருமில்லை, மகாராணாவின் சேவகர்கள். இங்கே மகாராணாவின் பேட்டி எப்படிக் கிடைத்ததோ, அதைப்பற்றிக் கொஞ்சம்சொல்லுவோம், ரஜபுத்திரருக்கு வேட்டையில் அதிக பிரீதி.இன்று மகாராணா நூறு குதிரை வீரர்களுடன் வேலைக்காரர்களை யழைத்துக்கொண்டு வேட்டைக்குப் போயிருந்தான். அவர்கள் வேட்டைமுடிந்து பட்டணத்துக்கு திரும்பிப் போய்க்கொண்டிருந்தார்கள். ராஜஸிம்ஹன் எப்பொழுதும் சேனைகளால் சூழப்பட்டு ராஜகோலத்திலேயே இருக்கவேண்டுமென்கிற ஆசையுள்ளவனல்ல. அநேக சமயங்களில் இரண்டு மூன்று பேரைமாத்திரம் பக்கத்திலிட்டுக்கொண்டு, மாறு வேஷம் பூண்டு, பிரஜைகளின் நிலைமையைத் தானே நேராக பார்த்தறியவேண்டுமென்கிற விருப்பத்துடன் சஞ்சரிப்பதுண்டு. அதனால் அவன் ராஜ்யத்தில் பிரஜைகள் சுகமடைந்திருந்தனர்.

இன்று வேட்டையிலிருந்து திரும்பி சேவகர்களைப் பின்னே வரும்படி கட்டளையிட்டு, தான் மாத்திரம் விஜயன் என்கிற குதிரைமேலேறி ஒண்டியாய் முன்னே வந்து கொண்டிருந்தான். அப்பொழுது பிராமணனைப்பார்த்ததும் பிறகு நடந்த சமாசாரமும் முன்னே சொல்லப்பட்டுள்ளது.

இதற்குள் அவன் சேவகர்கள், பொழுதாயிற்று என்று கண்டு,வேகமாய் இங்குமங்கும் அவனைத் தேடப்புறப்பட்டார்கள். பருவதத்திலிருந்து இறங்கிப் பார்க்க, அவன் குதிரை மாத்திரம் நன்றுகொண்டிருந்தது. அதுகண்டு அவர்கள் ஆச்சரியத்துடன் ஆலோசிக்கத் தொடங்கினார்கள். ராணாவுக்கு ஏதோ ஓர் அபாயம் வந்ததுபோல் அவர்கள் மனதில் பட்டது. கீழே அநந்தமிசிரன் உட்காந்திருப்பதைக்கண்டு அவனுக்கு ஏதாவதுதெரியுமோ என்று விசாரிக்கலாம் எனக் கீழ இறங்கி வந்தார்கள். இச்சமயத்தில் டாகூர் நாராயண ஸ்மரணை பண்ணிக்கொண்டு ஓட்டம் பிடித்தான். இவர்கள் அவனைத் துரத்த வாரம்பித்தார்கள். பிராமணன் ஓடி, ஒரு குகையில் ஒளிந்துகொண்டான்.





இன்னொரு இடத்தில் மகாராணா சஞ்சலகுமாரியின் பத்திரத்தைப்பூர்த்தியாய் வாசித்து மாணிக்கலாலனை யனுப்பிவிட்டு, பிராமணனைத் தேடிக்கொண்டுவந்தான். வந்து பார்க்கவும் பிராமணனைக் காணவில்லை. அவனுக்கு ஆதரவாய் தன் சேவகர்கள் அங்கு நிற்பதைக் கண்டான். மகாராணாவைக் கண்டவுடன், அவர்கள் ஜயபேரி யடித்தார்கள். விஜயமென்ற குதிரை எஜமானனைப் பார்த்து ஆநந்தத்துடன் அவன் பக்கத்தில் ஓடிவந்து நின்றது. ராணா குதிரையின்மே லேறிக்கொண்டான். அவன் வஸ்திரத்தில் இரத்தத்தின் அடையாளங்க ளிருப்பதைக்கண்டு சேவகர் ஏதோ விசேஷம் நடந்திருக்கிறது என்று தெரிந்து கொண்டார்கள்.

ராணா—இங்கே உட்கார்ந்திருந்த பிராமணன் எங்கே? யாராவது பார்த்தீர்களா?

பிராமணன் பின்னே ஓடினவர்கள் "அவன் ஓடிப்போனான்" என்றார்கள்.

ராணா—அவனை ஜாக்கிரதையாய்த் தேடி யழைத்துவாருங்கள்.

வேலைக்காரர் நடந்த ஸமாசாரத்தைச் சொன்னார்கள்.

குதிரைவீரர்களில் ராணாவின் புத்திரர்கள் இருவர்; பந்துக்கள் மந்திரிகள் முதலானவர்களும் இருந்தார்கள். அரசன் மந்திரிகளையும் பிள்ளைகளையும் ஒரு பக்கமாய்க் கூப்பிட்டு என்னமோ சொன்னான். அதை நாமறியோம். பிறகு எல்லோருக்கும் முன்வந்து, "இன்றைக்குப் பொழுதுபோய்விட்டது;உங்களுக்குப் பசியா யிருக்கலாம். ஆனால் இன்று உதயபுரத்துக்குப் போய் சிரமபரிகாரம் செய்துகொள்ளும் படியான அதிருஷ்டமில்லை. நாம் மறுபடியும், வந்த வழியே போக வேண்டியதா யிருக்கிறது. ஒரு சிறு யுத்தமும் நெருங்குகிறது. யுத்தத்தில் இஷ்டமுள்ளவர்கள் என்னுடன் வரலாம், இஷ்டமில்லாதவர் உதயபுரத்துக்குப் புறப்பட்டுப்போகலாம்" என்றான்.

இப்படிச் சொல்லிவிட்டு ராணா பருவதத்தின்மேல் ஏற வாரம்பித்தான். அப்பொழுது "மகாராஜாவுக்கு ஜய ஜய விஜயீபவ" என்று கோஷஞ்செய்துகொண்டு அந்த நூறு குதிரை வீரர்களும் அவன் பின்னே புறப்பட்டார்கள். பருவததின் மேலேறி எல்லோரும் ஹூ, ஹூ, என்று சப்தம் செய்துகொண்டு ரூபநகரத்திய மார்க்கமாய்ப் புறப்பட்டார்கள். குதிரைக் குளம்புகளின் சத்தம் எங்கும் பிரதிபலித்துக் கொண்டிருந்தது.

ஏழாம் அத்தியாயம்

ரூபநகரத்து சம்பவங்கள்

அநந்தமிசிரன் ரூபநகரத்தை விட்டுப் புறப்பட்டவுடனே அந்நகரத்தில் மிகுந்த கோலாகல மாயிற்று. மொகலாய பாதுஷாவின் இரண்டாயிரம் குதிரை வீரர்கள் ரூபநகரக் கோட்டையில் வந்திறங்கினார்கள். அவர்கள் சஞ்சலகுமாரியை டில்லிக்குஅழைத்துப் போவதற்காக வந்தவர்கள்.

நிர்மலையின் முகம் வாடிற்று. அவள் வேகமாய் சஞ்சலகுமாரியின் கிட்டப்போய் "இனிச்செய்வது என்ன"வென்று கேட்டாள்.

சஞ்சலகுமாரி மெல்ல நகைத்து "யாருக்கு என்ன ஆகவேண்டும்?" என்றாள்.

நிர்மலா—உன்னை யழைத்துக் கொண்டு போகப் போகிறார்கள். மிசிரடாகூர் உதயபுரம் போய்ச் சேருவதற்கே சாவகாசமாகவில்லையே. உன் கடிதம் ராணாவுக்குப் போய்ச் சேர்வதற்கு முன்னேயே இவர்கள் உன்னை யழைததுக் கொண்டுபோய் விடுவார்களே ! அக்கா என்ன செய்கிறது ?

சஞ்சல— வேறொரு உபாயமு மில்லை. டில்லி மார்க்கத்தில் விஷபானஞ் செய்வதே உத்தமம். அதனால் எனக்கு ஒரு யோசனையுமில்லை. மொகலாய சேனாபதி ஏழு நாள் சாவகாசம் கொடுத்தால், ஒரு வார்த்தை தந்தையவர்களிடத்தில் சொல்லுகிறேன்.

சஞ்சலகுமாரி சமயமறிந்து தந்தையிடம் போய், "நான் இந்த ஜன்மத்தில் மறுபடியும் ரூபநகரத்துக்கு வரப்போகிறதில்லை. தங்கள் பாததரிசனம் கிடைக்கப் போகிறதில்லை. மறுபடி என் பாலிய சிநேகிதருடன் கூடியிருக்கப்போகிறதில்லை. எனக்கு ஏழுநாள் சாவகாசம் கொடுக்கவேண்டும். மொகலாய சேனை அதுவரைக்கும் இங்கேயே இருக்கட்டும்; பிறகு தங்களிடமிருந்து புறப்பட்டுப் போகிறே"னென்றாள்.

அரசன் கண்ணீர்விட்டு, "சேனாபதிக்குச் சொல்லுகிறேன். அவன் சம்மதிப்பானோ என்னவோ சொல்லமுடியாது" என்றான்.

அரசன், தான் சொன்னபிரகாரம் மொகலாய

சேனாதிபதிக்கு அறிக்கைசெய்துகொண்டான். சேனாதிபதி யோசித்து "இவ்வளவு தினத்திற்குள் வரவேண்டுமென்று பாதுஷாவின் உத்தரவு ஆகவில்லை. ஏழு தினம் காத்துக்கொண்டிருப்பதற்கு எனக்கு தைரியமுமில்லை. ஆனால் பிந்தி பாதுஷாவின் பேரும் ஆகப்போகிறவர்களின் கட்டளைக்கு விரோதமாய் நடப்பதும் சரியல்ல" என்று யோசித்து ஐந்து நாளிருப்பதாக ஒப்புக்கொண்டான். இதனால் சஞ்சல குமாரிக்கு அதிக நம்பிக்கை உண்டாகவில்லை.

இதற்குள் உதயபுரத்திருந்து சமாசாரமொன்றும் வரவில்லை. மிசிரடாகூர் திரும்பி வரவில்லை. அப்பொழுது சஞ்சலகுமாரி, உயர நிமிர்ந்துகொண்டு "அநாதி நாதா! தேவாதி தேவா! வதம்செய்ய வேண்டாம், கிருபை புரியவேண்டும்" என்றாள்.

இராத்திரி நிர்மலை அவள் பக்கத்தில்வந்து படுத்துக்கொண்டாள். இருவரும் கட்டிக்கொண்டு அழுதார்கள். நிர்மலை "நானும் உன்னுடன்கூட வருகிறேன்" என்றாள். சஞ்சலை "நீ என்னுடன் எங்கே வருவாய்? நான் சாகிறதற்குப் போகிறேன்" என்றாள். நிர்மலை "நானும் செத்துப்போகிறேன். நீ என்னை விட்டுப்போனால் நான் பிழைத்திருப்பேனா?" என்றாள்.

சஞ்சலை "சீ! இப்படி வார்த்தை சொல்லாதே. என் துக்கத்தை ஏன் ஜாஸ்தி பண்ணுகிறாய்?" என்றாள். நிர்மலை "நீ என்னை அழைத்துக் கொண்டுபோ. இல்லாவிட்டால் போக வேண்டாம். நான் நிச்சயமாய் உன்னோடு வரத்தான் போகிறேன். என்னைத் தடுக்க ஒருவராலும் முடியாது" என்றாள். இருவரும் அழுது அழுது, இரவு பகலாயிற்று.

---


## இயறகை அற்புதங்கள்

புதய பதிப்பு : : வி அணா 10

இப்புத்தகத்திற்கு ஸ்கூல் இன்ஸ்பெக்டர், காலஞ்சென்ற ராவ் பகதூர் L. C. வில்லியம்ஸ் பிள்ளை ஒரு முகவுரை எழுதியிருக்கிறார். இதில், மழைக்கால்கள்; எரிமலைகள்; பூகம்பம் வெந்நீர் ஊற்றுகள்; கானல் நீரும் அதன் ரூபாந்திரங்களும்; வால நக்ஷத்திரங்களும் எரி நக்ஷத்திரங்களும், பொறி நக்ஷத்திரங்களும்; வானவில்; நிழலும் கிரகணங்களும் ஹாலிவால் நக்ஷத்திரம்; இவைகளைப்பற்றி விவரங்கள், அநேகம் படங்களுடன் எளிய நடையில் எழுதப் பெற்றிருக்கின்றன. துரைத்தனத்தாரால் அங்கீகரிக்கப்பட்டது. யாவரும் படிக்கத்தக்கது.


# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

### இங்கிலாந்தில் பனிக்காலம்

மார்கழிமாதம் பிறந்துவிட்டது. காலையில் அதிகபனி. குளிரும் அதிகம். அதனால் ஜனங்கள் தங்கள்மேல் நல்ல கம்பளிகளையும், சால்வைகளையும் போர்த்துக் கொண்டிருந்தார்கள். அந்தக் குளிரிலுங்கூட சிலர், விடியற்காலையில் எழுந்து, ஸ்நானஞ் செய்துவிட்டு, பஜனை செய்தார்கள். அவர்களில் ஒருவர் கையில்வீணையும், மற்றொருவர்கையில் தம்பூரும், மூன்றாவது மனிதர் கையில் ஜாலர் முதலியவைகளும் இருந்தன. அவர்கள் எல்லோரும் கமலா முதலியவர்கள் இருந்த தெரு வழியாய்ப் போவது வழக்கம், அதனால் சுந்தரம் கமலா, பலநாள் பஜனை போகும்பொழுது பார்த்துக் கொண்டிருப்பார்கள். சில நாட்களில் அவர்கள் இருவரும் தங்கள் தகப்பனாருடன் பஜனை கோஷ்டியுடன் போவதுமுண்டு. அப்பொழுது அவர்கள் குளிர் தாங்கும்படியாக நல்ல கம்பளிச் சட்டைகளையும் போர்வைகளையும் எடுத்துக்கொண்டு போவார்கள்.

ஒருநாள் கமலா, பஜனையிலிருந்து திரும்பி வரும்போது தகப்பனாரை நோக்கி, "அப்பா, நம்ம ஊரிலேயே இவ்வளவு குளிராயிருக்கிறதே! இங்கிலாந்தில் இன்னமும் குளிராயிருக்குமல்லவா?" என்று கேட்டாள்.

அதற்கு அவள் தகப்பனார் பதில் சொல்வதற்குள் சுந்தரம் "முன்னமேயே நான் சொல்லவில்லையா! இங்கிலாந்து மிகவும் குளிராய்த்தானிருக்கும்!" என்றான்.

அவர்கள் தகப்பனார், "கமலாவுக்கு அது மறந்து போயிருக்கலாம். அதற்காக அவளை அவ்வளவு கோபித்துக்கொள்ளவேண்டாம்; சுந்தரம்?" என்றார்.

"அதில்லை யப்பா? நம்ம ஊரைவிட இங்கிலாந்தில் குளிரானால், அண்ணா அதைப் பொறுக்க முடியுமா என்றுதான் கேட்டேன்?" என்றாள் கமலா.

"ஆமாம் கமலா! இங்கிருப்பதைவிடக் குளிர்தான். அவர்கள் மிகவும் குளிர்தாங்கக் கூடிய சட்டைகளைப் போட்டுக்கொள்வார்கள். கால்முதல் தலைவரைக்கும் உடைபோட்டுக் கொள்வார்கள். இங்கிலீஷ்காரர்கள் வீடுகளிலிருந்தால்கூட மிகவும் குளிராயிருக்கும். அதற்காக அவர்கள், கணப்புச்சட்டி வைத்துக் கொள்வார்கள்" என்றார்.





சுந்தரம் இதைக் கேட்டுக் கொண்டிருந்தான். "அப்பா, நீங்கள் ஒன்றை மறந்துவிட்டீர்களே?" என்றான். "என்ன" என்று அவர் கேட்க, "இங்கிலாந்தில் பனி பெய்யுமே!" என்று சொல்ல, கமலா, "இங்கே கூட பனி பெய்கிறதே!" என்றாள்.

"இல்லை, கமலா, நம் ஊரில் பனிபெய்வதைவிட இங்கிலாந்தில் அதிகமாய்ப் பனிபெய்யும். அதோடு அந்தப்பனி வெகு நேரம் விழுந்தால் பனிக்கட்டியாய்விடுமாம்" என்றான் சுந்தரம்.

"அப்படியானால் அங்கே யிருக்கிறவர்கள் பனிக்கட்டியே வாங்கவேண்டாம்போலிருக்கிறதே" என்றாள் நம் சிறுமி.

இவர்கள் பேசுவதைக் கவனத்துடன் கேட்டுக் கொண்டிருந்த அவர்கள் தகப்பனார், "கமலா, அந்த ஊரில் பனி வெகு அதிகந்தான். தெருவிலும், வீட்டின் முற்றத்திலும், கூரைமேலும் எங்கும் பனிக்கட்டி நிறைந்திருக்கும். யாராவது அந்தப் பனிக்கட்டிகளை எடுத்துக்கொண்டு போனாலும் சரி, அல்லது வழியைவிட்டுத் தள்ளிவைத்தாலும் சரி, இங்லீஷ்காரர்கள் அப்படிச் செய்பவர்களுக்கு நன்றி பாராட்டுவார்கள்" என்றார்.

"நான் போய்ப்பார்த்தால்தான் எல்லாந்தெரியும்" என்றாள் கமலா. அதற்குள் அவர்கள் தங்கள் வீட்டிற்கு வந்துசேர்ந்தார்கள். கமலா உள்ளே ஓடிப்போய், "அம்மா, அம்மா! ரங்கண்ணா போயிருக்கிறாரே, அங்கே, இங்கிலாந்திலே, இப்பொழுது பனி—பனிக்கட்டி மழை பெய்யுமாம்" என்றாள்.

அதற்கு லஷ்மி அம்மாள், "யார் இதெல்லாம், உனக்குச் சொன்னார்கள்?" "அப்பாவும், சுந்தரண்ணாவும்" என்றாள்.

"பாவம் அந்தக் குளிரில், ரங்கன் என்ன கஷ்டப்படுகிறானோ" என்றாள் லக்ஷ்மி அம்மாள். அதற்குக் கமலா, "அப்பாதான் செலவுக்கு வேண்டிய பணம் அனுப்பியிருக்கிறாரே, ரங்கண்ணா வேண்டிய கம்பளிச், சட்டை தைத்துக்கொண்டிருக்கமாட்டாரா?" என்றாள்.

"தைத்துக்கொண்டிருந்தாலும் இருப்பான். ஆனால நமக்கென்ன தெரிகிறது?" என்று லக்ஷ்மி அம்மாள் சொல்ல, அதைக் கேட்டுக் கொண்டே வந்த கமலாவின் தகப்பனார், கமலா! அம்மாவுக்கு என்ன சொல்லுகிறாய்?" என்று கேட்டார். அதற்குக் கமலா "ரங்கண்ணாவைப்பற்றிச் சொன்னேன்" என்றாள்.

"பையன் என்ன கஷ்டப்படுகிறானோ அந்தக் குளிரில்" என்றாள் லஷ்மி அம்மாள்.

"அவனைப்பற்றி விசாரப்படவேண்டாம். வேண்டுமானால், நாம் அவனுக்கு ஒரு கடிதம் எழுதுவோம். அதற்கு அவன் பதில் எழுதுவான். அதிலிருந்து அவனுடைய சௌகரியங்கள் எல்லாம் தெரிந்துவிடும்" என்றார்.

"சரிதான். யார் எழுதுகிறது?" என்று லக்ஷ்மி அம்மாள் கேட்க, "ஏன், குழந்தை கமலம் எழுதட்டுமே; அவளுக்கும் திருப்தியாயிருக்கும். ரங்கனுக்கும் அவள் கடிதத்தை வாசிக்கச் சந்தோஷமாயிருக்கும்" என்றார்.

கமலாவிற்கு உண்டான சந்தோஷத்திற்களவில்லை. அவள் அன்றையதினம் வெகு உற்சாகத்துடன் தன் பாடங்களைப் படித்துவிட்டுப் பள்ளிக்கூடம் போய், சாயந்திரம் வெகு சீக்கிரம் வீட்டிற்கு வந்துவிட்டாள். அவள் தன் தாயார் சொன்ன விஷயங்களையும், தன் கேள்விகளையும் சேர்த்து எழுத வெகு நேரமாயிற்று. அவளுடைய தகப்பனார் வந்ததும், அக் கடிதத்தைக் காட்ட, அவர் அதைப் பார்த்துவிட்டு "கமலா கெட்டிக்காரி" என்றார். சுந்தரம் வந்த பிறகு அவர் அந்தக் கடிதத்தைக் கொடுத்துத் தங்களுக்கு வாசித்துக் காட்டும்படிச் சொன்னார். கமலாவின் கடிதம் வருமாறு:—

மாயவரம்,

க்ஷேமம். 191-௵ டிஸம்பர்௴ 20௳

பிரியமுள்ள ரங்கண்ணாவுக்கு, தங்கை கமலா நமஸ்கரித்து எழுதின கடிதம்.

இவ்விடம் எல்லாரும் க்ஷேமம். அண்ணா கச்சேரிக்குப் போய்க் கொண்டிருக்கிறார். நானும் சுந்தரண்ணாவும்பள்ளிக்கூடம் போய்க் கொண்டிருக்கிறோம். அம்மாவும் குழந்தை கிருஷ்ணனும் வீட்டிலேயே இருக்கிறார்கள்.

நீங்கள் அங்கே சௌக்கியமாய் இருக்கிறீர்களா? இங்கே ரொம்ப குளிராயிருக்கிறது. அங்கே பொறுக்கமுடியாதபடி குளிருமென்று அப்பாவும் சுந்தரண்ணாவும் சொல்லுகிறார்கள். பனி பெய்து, தரையெல்லாம் பனிக்கட்டியாகவே யிருக்குமென்று சொல்லுகிறார்கள்.

நீங்கள் குளிர்தாங்க நல்ல கம்பளிச் சட்டைகளும், சால்வைகளும் வாங்கினீர்களா? குளிரால் என்ன கஷ்டப்படுகிறீர்களோ, என்று அம்மா மிகவும் வருத்தப்படுகிறாள். உடனே பதில் எழுதிவிட்டு மறுவேலை பார்க்கவும்."

"என்ன கமலா! ரங்கண்ணாவை அதிகாரஞ் செய்கிறாப்போல் இருக்கிறதே" என்று சொல்லி சுந்தரம் கடிதத்தை வாசித்தான்.

"ஏனென்றால், நீங்கள் அங்கே தனியாயிருக்கிறீர்களே என்று எங்களுக்குப் பயமாயிருக்கிறது. ஆகையால் உடனே பதில் எழுதவும்"

இங்கே மார்கழிமீ குளிர். காலையில் நாங்கள் நன்றாய் உடம்பைப் போர்த்துக்கொண்டு தான் வெளியே போகிறோம். தினந்தோறும் பஜனை எங்கள் தெருவழியே போகிறது. அப்பா ஒவ்வொரு நாளும் பஜனையோடு போகிறார். நாங்கள் சில நாட்களில் போவோம். இன்றைக் காலமே நானும் சுந்தரண்ணாவும் அப்பாவுடன் பஜனைக்குப் போய்விட்டு வந்தோம். அங்கே பஜனை உண்டா? நீங்கள் பூஜை செய்கிறீர்களா? எனக்குக்கூட அங்கே வந்து யாவற்றையும் பார்க்க ஆசையா யிருக்கிறது. நீங்கள் முன்எழுதினபடி கடிதமும் படங்களும் அனுப்பினால், எனக்கு எல்லாம் தெரிந்துவிடும்.

உங்களுக்குப் பணம் வேண்டுமானால் அப்பாவுக்கு எழுதும்படி அம்மா சொல்லுகிறாள்"

"இல்லாவிட்டால் யாருக்கு எழுதுகிறது" என்று சொல்லிவிட்டு சுந்தரம் வாசித்தான்.

"குழந்தை கிருஷ்ணன் நன்றாய் விளையாடுகிறான். இப்பொழுது அவன் பள்ளிக்கூடம் வரவில்லை. லீவானதும் அவனைப் பள்ளிக்கூடத்திற்கு அழைத்துக்கொண்டு போவேன்.

நீங்கள் லண்டனைவிட்டு வேறே எந்த ஊருக்காவது போனீர்களா? ஏதாவது வேடிக்கைகளைப் பார்த்தீர்களா? பார்த்தால் அதைப் பற்றியும் எழுதவும்.

சிவஸ்வாமி மாமா, உங்களோடு தானே இருக்கிறார்? அவரைப்பற்றி நாங்கள் எல்லோரும் விசாரித்தாக எழுதும்படி அம்மா சொல்லுகிறாள்.

உங்கள் பதில் கடிதம் வரும் வரைக்கும் எங்களுக்குக் கவலையாயிருக்கும்.

நமஸ்காரம், உங்கள் பிரியமுள்ள
தங்கை கமலா"

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

[ஸ்ரீமான் எஸ். ஏ. ஸ்ரீனிவாஸ சர்மா.]

### வேலையின் கூலி

முன் ஒரு கிராமத்தில் நாகராஜன் எனப் பெயருள்ள புத்திசாலியான வாலிபன் ஒருவன் இருந்தான். ஜாதியில் அவன் தெலுங்கு பிராமணன். கிராமப் பள்ளிக்கூடத்தில் படித்துத் தேறியிருந்தான். அக்காலத்தில் துருக்க ராஜ்யமாகையால் கொஞ்சம் பாரஸீக பாஷையும் அவனுக்குத் தெரியும். ஆனால் எவ்வளவு புத்திசாலியா யிருந்தாலும் தன் குடும்பத்தை ரக்ஷிக்கப் போதுமான வரும்படி அவனுக்குக் கிடைக்கவில்லை. அதனால் அவன் மிகவும் வருத்தமுற்றிருக்கும் சமயத்தில் அவன் ஸ்நேகிதன் ஒருவன், அத்தேசத்து ராஜனிடத்தில் சென்று அவன் சபையில் ஏதாவது ஒரு உத்தியோகமடைந்தால் நிறைய சம்பாதிக்கலாம் என்று சொன்னான்.

அதற்குமேல் நாகராஜன், ராஜசபைக்குச் செல்கிறதென்றும், ஆனால் தான் யோக்கியமாகவே ஒவ்வொரு பைசாவையும் சம்பாதிக்கிறதென்றும் தீர்மானித்தான். காலக்கிரமத்தில் இராஜபட்டணத்திற்குச் சென்று அவ்விடம் அரண்மனையை யடைந்து இராஜனைக் கண்டு வணங்கினான். இவ்வாலிபனுடைய அழகிய வதனத்தையும் கம்பீரமான பார்வையையும் புத்திசாலிமுகத்தையும் பார்த்து அரசன், அவன் வந்த காரணத்தை விசாரித்தான்.

நாகராஜனும் மிகவும் மரியாதையுடன் சிம்ஹாஸனத்தின் அருகில்சென்று ராஜனை வணங்கினான். பிறகு மிகவும் இரங்கின குரலுடன், "ராஜனைக் கடவுள் ரக்ஷிப்பாராக. நான் மிகவும் ஏழை. வெகுதூரத்திலிருந்து வந்துளேன். தங்கள் ஆதரவில் தங்கள் சபையில் ஏதாவது உத்தியோகத்தை வேண்டியே இவ்விடம் வந்திருக்கிறேன்" என்றான். அதற்கு அரசன், "உனக்கு உதவிசெய்ய என்னால் இப்பொழுது முடியவில்லையென்று மனவருத்தமாயிருக்கிறது. ஏனென்றால் இச்சமயம் என் சபையில் வேலையொன்றும் காலி கிடையாது" என்றான். அதற்கு அவ்வாலிபன் "சம்பளமில்லாத வேலையானாலும் சரி; எதைக்

தீராத நெஞ்சுக்குத் தெய்வமே சாக்ஷி.



கொடுத்தாலும் செய்யத் தயாராயிருக்கிறேன்" என்றான். "ஆனால் சம்பளமில்லாத வேலையிலிருந்தால் உனக்கு எவ்விதத்தில் நல்லது?" என்று ஆச்சரியத்துடன் அரசன் கேட்டான். அதற்கு அவன் "அரசர்பெருமானே, ஒரு புத்தியுள்ள மனிதனுக்கு எவ்வேலையாயிருந்தாலும் அதற்குத் தகுந்த கூலிகிடைக்கும். நான் வேண்டுவதெல்லாம்' தங்களிடம் வேலைக்கமர வேண்டுமென்பதே யொழிய சம்பளம் வேண்டுவதில்லை" என்றான்.

அதற்குமேல் அரசன் சம்பளமில்லாத வேலை என்னவென்று தன் மந்திரிகளுடன் யோசனைசெய்தான். மந்திரிகள் வெகுநேரம் யோசித்து அரண்மனைவாயிலில் கட்டியிருக்கும் 'காரிகானா' என்னும் கோபுரத்தில் ஒவ்வொருநாளும் மணியைத் தெரியப்படுத்தும் பெரிய கண்டாமணியை யடிக்கிற வேலைக்காரர்களின் தலைவனாக நாகராஜனை நியமிக்க நிச்சயம் செய்தார்கள். அதற்குமேல் அவர்கள் அரசனுக்குத் தெரியப்படுத்த, அவனும் கூலியில்லா வேலை யிருக்கிறதைக்கண்டு சந்தோஷித்து நாகராஜனைக் கூப்பிட்டு அவனுக்கு கொடுக்கப்பட்டிருக்கிற புதியவேலையைப்பற்றி அவனிடத்தில் சொன்னான். அவ்வாலிபனும் அதற்குச் சம்மதித்து, தனக்கு கீழ்ப்பட்டவர்கள் எப்பொழுதும் எவ்வேலையிலிருந்தாலும் தன் சொற்படி நடக்கவேண்டும் என்கிற ஒரு உத்தரவை அரசனிடம் பெற்றுகொண்டு அரச சமூகத்திலிருந்து வெளிக்கிளம்பினான்.

நாகராஜன் அன்றையதினமே காரிகானா தலைவன் வேலையை ஒப்புக்கொண்டான். அங்கிருக்கும் வேலைக்காரர்கள், அதாவது மணியை அடிப்பவர்களிடம், அரசனுடைய உத்தரவைக் காண்பித்து அவர்கள் கண்டிப்பாய்த் தன் உத்தரவுப்படி நடக்கவேண்டுமென்று கட்டளையிட்டான். அன்று முழுவதும் தன் உத்தியோகத்திலிருந்து எந்த விதமாய்ப் பணம் சம்பாதிக்கிறது என்று யோசித்துக் கொண்டிருந்தான். காரிகான்களின் வேலை யென்னவென்றால், பிரதிதினமும் தவறாமல் இராப்பகலாய் ஒவ்வொருமணியும் அடித்துக்கொண்டிருப்பதைத்தவிர வேறு ஒன்றுமில்லை. இதனால பணம் சம்பாதிக்க மார்க்கமில்லை. நாகராஜன் எவ்வழி யோசித்தும் ஒன்றும் புலப்படாமல், கடைசியாக இரவு 9மணியடிக்கும் சமயத்தில் 12-மணியடிக்க உத்தரவிட்டான். முதலில் இம்முட்டாள்தனத்திற்கு அவர்கள் சம்மதிக்காவிட்டாலும் அரசன் ஆக்ஞைப்பத்திரத்தை காண்பித்தவுடன் அவர்கள் பயந்து அப்படியே செய்தார்கள். 12-அடித்தபின் வரிசைக்கிரமமாக ஒன்றுமுதல் மணியடிக்கச் செய்துவிட்டு தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். இம்மாதிரி, காலம் திடீரென்று 3 மணி பாய்ந்ததால் ஏதாவது சம்பவிக்காதா என்று எதிர்பார்த்தான் நாகராஜன். இந்த சம்பவத்தினால் ராஜபட்டணத்தில் ஒரு விசேஷமும் ஏற்படாவிட்டாலும், பொது ஜனங்களுக்கு வேறொரு இடத்தில், ஓர் ஆச்சரியமுண்டாயிற்று.

அவ்வரசனுக்கு இரண்டு பத்தினிகள் உண்டு. அவர்கள் அடிக்கடி அரசனுடைய ஸ்வாதீனத்திற்காக சண்டையிட்டுக் கொள்கிறது வழக்கம். இதற்காக அரசன் இரண்டு பெயர்களுக்கும் கோபம் வராமல் பிரதிதினமும் சாயந்திரம் முதற்கொண்டு நடுநிசிவரையில் மூத்தவள் அந்தப்புரத்திலும், 12-மணியிலிருந்து காலை 6-மணிவரையில் இளையவள் மாளிகையிலும் காலத்தைப்போக்குவது வழக்கம். அன்றையதினம் மூத்தவள் சயனக்கிருஹத்தில் அரசன் இருக்கும்பொழுது சரியாய் மணி ஒன்பது ஆகும்பொழுதே காரிகானா மணி 12 அடித்ததால், அரசன் தன் வழக்கம்போல் அவசரமாய் எழுந்திருந்து மற்றவள் கிருஹத்திற்குச் சென்றான். பெரிய ராணி, இவ்வளவு திடீரென்று அரசன் கிளம்பிச் சென்றதற்காக மிகவும் துக்கப்பட்டாள். அன்றைய இரவுமட்டும் காலம் எப்படி வேகமாகச் சென்றிருக்கும் என்று யோசித்தாள். கண்டாமணி எட்டு அடித்தது அவளுக்குத் தெரியும். ஆனால் அவள் தன் பர்த்தாவின் சிஷ்ருஷையிலேயே கவனம் செலுத்தினவளாதலால் ஒருவேளை தன்னையறியாமலே காலம் சென்றிருக்கலாம் என்று நினைத்தாள். ஆகையால் அவ்விராணிக்கு ஒருநாளுமில்லாமல் அன்று திடீரென்று கணவன் பிரிவேற்பட்டதினால், அன்று இரவுமுழுவதும் தூங்காமல் தன் படுக்கையில் புரண்டுகொண்டேயிருந்தாள்.

அன்று இரவு ஏற்பட்ட சம்பவங்களுக்குக் காரணத்தை யோசிக்கலானாள். கடைசியாக,

தீவினை செய்யில் பேய்வினை செய்யும்.

மணியடிக்கிறவர்களை இளைய ராணி லஞ்சம் கொடுத்துத் தன் கக்ஷியில் சேர்த்திருக்கவேண்டுமென்று தோன்றிற்று. இந்த யோசனை வரவர முற்றி அவள் மனதில் ஊன்றி, அவளை மிகவும் கஷ்டத்துக்குள்ளாக்கியது. பொழுது விடிந்தவுடன் இதற்கு ஏதாவது செய்யவேண்டும் என்று நிச்சயம் செய்துகொண்டாள்.

மறுநாள் காலையில் அந்த ராணி, தன் அந்தரங்கச் சேடியை காரிகானுவிற்கு ஏதாவது விசேஷம் நடந்ததாவென்று விசாரிக்க அனுப்பினாள். அவ்விடத்தில், எல்லாம் புதிய ஸூபரின்டெண்டெண்டு உத்தரவு என்றும், காரணம் தெரியாதென்றும் அந்த ஆட்கள்சொன்னார்கள். இந்த சமாசாரத்தை ராணிகேட்டவுடன் ரகஸ்யமாக நாகராஜனை வரவழைத்தாள். அவ்வாலிபனும் மிகவும் வணக்கத்துடன் வந்து நின்றவுடன், "அப்பா, என்ன காரணத்திற்காக இரவு 9-மணிக்கு 12-மணியடிக்க உத்தரவுசெய்தாய்?...ஆகா! இப்பொழுது தெரிகிறது. என் சக்களத்தி இளைய ராணி, என் பர்த்தா சீக்கிரமாக அவள் அறைக்குச் செல்வதற்காக உன்னை சரிப்படுத்தினாள்போலும். அப்பா, நீ நல்லவன்போல் தோன்றுகிறாய். இந்தா! இந்தப் பதினாயிரம் ரூபாயை வைத்துக்கொள். இன்றுமுதற்கொண்டு இரவு 3-மணிக்கு 12-மணியடிக்கும்படி உத்தரவுசெய்" என்றாள். நாகராஜனும் அவளை வணங்கி அம்மாதிரியே செய்வதாகச் சொல்லிவிட்டு பணத்தை எடுத்துக்கொண்டு அவ்விடமிருந்து புறப்பட்டான்.

அன்று இரவு அவன் உத்தரவுப்படி 12-மணிக்கு 10-மணியும், 2-மணிக்கு 11-மணியும், 3-மணிக்கு 12-மணியும் அடித்தார்கள். உடனே அரசனும் மிகவும் கஷ்டத்துடன் படுக்கையிலிருந்து எழுந்திருந்து இளையவள் அரண்மனையை நோக்கிச் சென்றான்.

இளையராணியும் என்ன காரணத்திற்காக அன்றையதினம் மட்டும் இரவில் பொழுதே போகவில்லையென்று யோசிக்கலானாள். அடிக்கடி வெளியில் வந்து அரசன் வரவை எதிர்பார்த்தாள்.

முன்னாள் இரவு அரசன் அதி சீக்கிரமாக வந்தவன் இன்றையதினம் வாராததற்குக் காரணம் அவளுக்குப் புலப்படவில்லை. கடைசியாக மிகவும் சிரமத்துடன் அரசன் அவள் அறையில் நுழைந்தான். இவ்வளவுநேரம் சென்று வந்த காரணத்தைக் கேட்க, தன்மேல் ஒன்றும் பிசகில்லை என்றும், கண்டாமணி 12-அடித்தவுடன் நேரே வந்துவிட்டதாகவும் சொல்லி, நித்திரை போய்விட்டான். இளைய ராணிக்கோ தூக்கமே வரவில்லை. அன்று இரவு முழுவதும் யோசனையிலாழ்ந்து கடைசியாக, மணியடிக்கிறவர்களை மூத்தராணி வசப்படுத்தி யிருக்கவேண்டுமென நிச்சயித்தாள்.

மறுநாள் காலையில் அவள் காரிகானுவில் விசாரித்ததில் எல்லாம் நாகராஜனுடைய வேலை என்று தெரிந்து அவனைக் கூப்பிட்டு விசாரித்ததில் தனக்கு ஒன்றும் தெரியாதென்றும், கடிகாரம் சரியாய்ச் செல்லாததினால் அதைத் திருத்தவேண்டியது தன் கடமையாகையால் அதைத் திருத்தினதாகவும் அவன் பயமின்றிப் பதிலளித்தான். அதற்கவள், "அப்பா, முழுப்பூசனிக்காயை சோற்றில் மறைக்கிறாயே, எனக்குத் தெரியாதா? என் சக்களத்தி, பெரியராணியா உன்னைக் கைவசப்படுத்தினது? இந்தா, இந்தப் பதினையாயிரம் ரூபாயைப் பெற்றுக்கொள். இன்று முதல் இரவு 9-மணிக்கே, 12-மணி யடித்துவிடு" என்றாள். நாகராஜனும் அப்பணத்தை பெற்றுக்கொண்டு அப்படியே செய்வதாகச் சொல்லிவிட்டு தன் இருப்பிடம் போய்ச்சேர்ந்தான். ஆனால் நாகராஜன் அம்முழுப் பணத்தையும் தானே வைத்துக்கொள்ளாமல், 20-ஆயிரம் ரூபாயை அரசன் கஜானாவில் தன் பெயரால் செலுத்தினான். அரசனும் இதைக் கேள்விப்பட்டு இரண்டு நாளில் எப்படி 20ஆயிரம் ரூபா சேர்த்தான் என்று ஆச்சரியப்பட்டு நாகராஜனை வரவழைத்துக் கேட்டான். அவனும் உள்ளதை ஒன்றும் விடாமல் சொன்னான். அதைக்கேட்டு அரசன் நகைத்து, "போதும், போதும், உனக்குக்கொடுத்த இவ்வேலை எனக்குப் பிராண ஆபத்தாயிருக்கிறது. உனக்கு வேறு வேலை கொடுக்கிறேன்" என்று சொல்லி மந்திரிகளைக் கூப்பிட்டு, பண வரும்படியில்லாத வேலையொன்று நாகராஜனுக்குக் கொடுக்கும்படி உத்தரவுசெய்தான்.

இவனுக்கு எந்த வேலை கொடுத்தாலும் சம்பாதிக்கிறான் என்கிற பொறாமையினால் அவனை தொலைக்கவேண்டும் என்று நச்சயித்து அந்நகரின் சமீபத்தில் சமுத்திரத்தில்





நதி சங்கமமாகிற இடத்தில் ஒரு நாளில் ஆற்றில் எவ்வளவு அலைகள் அடிக்கின்றனவென்று கணக்கு எடுக்கச்சொல்லி அரசனைத் தூண்டினார்கள். அதற்குமேல், அரசன் அவ்வாலிபனைப் பார்த்து, "அப்பா, நாகராஜா! உனக்குப் புதிதாகச் சம்பளமில்லா வேலையொன்று நிச்சயம் செய்திருக்கிறேன். இப்பட்டணத்திற்கு அருகாமையிலுள்ள ஆற்றில் ஒருநாளில் எவ்வளவு அலைகள் அடிக்கிறதென்று கணக்கெடுத்து இன்று சாயந்தரத்திற்குள் சொல்லவேண்டும். தவறினால் என்னுடைய தயவை இழக்கிறதோடுகூட வேலையும் போய்விடும்; என்ன சொல்கிறாய்" என்றான். அதற்கு நாகராஜன் "நதி மிகவும்பெரியதாகையால் என்னால்முழுவதும் எப்படி அளவு எடுக்கமுடியும்? ஏதாவது ஒருபாகத்திலிருந்து இன்னொரு பாகம் வரையில் கொடுத்தால் எனக்கு சுலபமாயிருக்கும். மேலும் அவ்வேலையைச் சரியாய்ச் செய்ய எனக்கு ஐம்பது சிப்பந்திகள்வேண்டும் என்றான். அரசனும் அப்படியே சம்மதித்து துறைமுகத்திலிருந்து உள்பாகம் அரைமைல் தூரம் கணக்கெடுக்க உத்தரவு கொடுத்தான். நாகராஜனும் அரசனை வணங்கி அவ்விடம் விட்டகன்றான்.

ஐம்பது சிப்பந்திகளுடன் நாகராஜன் கடலில் நதிசங்கமமாகிற இடத்தைநோக்கிச்சென்றான். தன்னுடன்கூட, இரண்டு மாட்டுவண்டி நிறைய கணக்கு எடுக்கிறதற்கு ஓலைச்சுவடிகளும் எழுத்தாணிகளும் கொண்டுசென்றான். கடைமுகத்தில் கூடாரத்தைப் போட்டுக்கொண்டு தன் பரிவாரத்துடன் ஒவ்வொரு அலையாய் எண்ண ஆரம்பித்து இரண்டுமூன்று மணிகளுக்குள் அவ்வளவு ஏட்டுச் சுவடிகளையும் நிறைத்துவிட்டான். இதற்குள் சமுத்திரத்திலிருந்து ஆற்றில் வற்றுப்பெருக்கு அலைகள் ஜாஸ்தியாகவே, அநேக வர்த்தகப் படகுகள் ஆற்றிற்குள் நுழைய ஆரம்பித்தன. உடனே அவைகளை ஆறறுக்குள்ளே நுழையாதபடி நாகராஜன் உத்தரவு செய்தான். இவ்வுத்தரவைக்கேட்டு திடுக்கிட்டு படகுகளின் சொந்தக்காரர்களாகிய வர்த்தகர்கள் எல்லாரும் ஒன்றுசேர்ந்து நாகராஜனிடத்தில் வந்து படகுகளை உள்நாட்டிற்குள்கொண்டுபோகும்படி உத்தரவு செய்யவேண்டுமென்றும், இல்லாவிட்டால் தங்களுக்குஏராளமான நஷ்டம வருமென்றும் சொன்னார்கள். அதற்கு நாகராஜன், அவர்கள் படகைச் செலுத்திக்கொண்டுபோகத் தனக்கு ஒரு தடையு மில்லையென்றும் ஆனால் அவர்கள் ஆற்றில் அடிக்கும் அலைகளை உடைக்காமல் படகைச் செலுத்தவேண்டுமென்றும், அப்படி ஏதாவது ஒரு அலையேனும் உடைந்தால் அத்தனை படகுகளும் ஜப்தி செய்யப்படும் என்றும் சொன்னான். வியாபாரிகளுக்கு அலைகளை உடைக்காமல் எப்படிப் படகை செலுத்துவதென்று புரியவில்லை. பிறகு எல்லோரும் யோசனைசெய்து, உடைகிற அலைகளுக்கு ஈடாகவும் அந்நஷ்டத்திற்காகவும் நாகராஜனுக்கு இருபத்தைந்தாயிரம் ரூபாய் கொடுக்கிறது என்று தீர்மானித்து இதை அவனுக்குத் தெரியப்படுத்தினார்கள். நாகராஜனும் அதற்குச் சம்மதித்துபணத்தைப்பெற்றுகொண்டுபடகுகளை உள்நுழைய உத்தரவிட்டான். சாயந்திரமானதும் கணக்குக்கட்டுகளுடன் அரண்மனைக்குத் திரும்பிவந்து 25 ஆயிரம் ரூபாய்களை வழக்கம்போல் கஜானாவில் செலுத்தினான். கஜானாவில் பணம் செலுத்தினதைக் கேட்டவுடன் அரசனுக்குண்டான ஆச்சரியத்திற்களவில்லை. உடனே நாகராஜனை வரவழைத்து, அலைகளை எல்லாம் சரியாய் எண்ணியாய்விட்டதா என்று கேட்டான். அதற்கு அவ்வாலிபன் ஆய்விட்டது என்று சொலலி கணக்கு மூட்டைகளை சிம்ஹாஸனத்திற்கு எதிரில் வைத்தான். அப்படியானால் இருபத்தைந்தாயிரம் ரூபாய் சம்பாதித்தவ்பரத்தைக்கேட்டான் அரசன். அதறகு அவ்வாலிபன், "வர்த்தகாகள் நதியில் படகை செலுத்தினதால் அலைகளுக்கு நஷ்டம் ஏற்பட்டதறகு ஈடுகொடுத்த பணம் அது" என்றான். "அப்படியானால் நீ கொடுத்த கணக்குச் சரியிலலை போலும்" என்றான் அரசன். "இல்லை, மஹாராஜா! கணக்குகள் எல்லாம் சரிதான். செங்கல் எண்ணும்பொழுது, இரண்டு அரைச் செங்கல்களை ஒன்றாகவும் 4 கால்செங்கல்களை ஒன்றாகவும் எண்ணுகிற வழக்கப்படி படகுகளால சிதறின அலைகளை எல்லாம் அதேமாதிரி எண்ணியிருக்கிறேன். அவசியமானால், நான் போட்ட கணக்குகள் சரியா அலலவா என்பதை நீங்களாவது வேறு யாராவது பரீக்ஷைசெய்து பாருங்கள்" என்றான்.

இப்பதில் அரசன் வாயை மூடிற்று. அவன் கணக்குகளைப்பரீக்ஷைசெய்ய யாரால முடியும்

என்று ஒருவருக்கும் தோன்றவில்லை. உடனே அரசன் தன் புத்திசாலியான மந்திரிகள் பக்கம் திரும்பி, "ஒரு தம்பிடியும் சம்பாதிக்க முடியாததாயும், மிகவும் துர்லபமுமான ஒரு வேலையை உண்டாக்கி இவனுக்குக் கொடுங்கள்" என்றான்.அவர்களும்சற்றுநேரம் ஆழ்ந்த யோசனையிலிருந்து ஒரு தீர்மானத்திற்குவந்து அதை அரசனுக்குத் தெரிவித்ததன்பேரில் அரசனும் நாகராஜனை நோக்கி, "அப்பா? இப்பொழுது உனக்குக் கொடுக்கப்போகிற வேலை ஒரு முக்கிய வேலை. இப்பட்டணத்திலிருக்கிற எல்லா எலிகளையும், சுண்டெலிகளையும் கொல்லவேண்டியது உன் கடமை. இதற்காக நாளைக் காலை முதல் மூன்று நாள் தவணை கொடுக்கப்பட்டிருக்கிறது. ஆனால் இதைக் கவனி; வேலை ஜாக்கிரதையாய்ச் செய்ய வேண்டும். இம்மூன்று நாட்களுக்குப் பிறகு, எலி உபத்திரவத்தைப்பற்றி யாராவது என்னிடத்தில் விண்ணப்பம் செய்தார்களானால், உன் வேலை போய்விடுகிறதோடு கூட, உன்னைக் கடினமான தண்டனைக்கும் உள்ளாக்குவேன்" என்றான். அதற்கு நாகராஜன் ஒப்புக்கொண்டு தனக்குச் சகாயம்செய்ய ஐந்நூறு கூலி யாட்களை அரசனிடமிருந்து பெற்று, மூன்று நாட்களில் வேலையை முடித்துவிடுவதாகச்சொல்லி அவ்விடமிருந்து அகன்றான்.

மறுநாள் காலையில் கடப்பாரை இறுதலைக் குருந்தாலிகள் ஸகிதமாய் 500 தடியாட்களை அழைத்துக்கொண்டு அரசன் ஆக்கினையை நடத்த நாகராஜன் வெளிக்கிளம்பினான். தன் வேலையை ஆரம்பிக்க, பெரிய மாளிகைகளையும் பங்களாக்களையும் முதலில் பொறுக்கினான். ஒரு பெரிய மாளிகையில் நுழைந்து அரசன் உத்தரவைச் சொந்தக்காரனுக்குக் காண்பித்து அக்கட்டடத்தின் தளவரிசைகளை இடிக்க உத்தரவுபண்ணினான். சொந்தக்காரன் தன் வீடு பாழாகிறதைக்கண்டு அந்த எலிகொல்லுகிறவனை பணத்தினால்சரிப்படுத்த எண்ணினான். தன் மாளிகையில் எலிகள் சுண்டெலிகள் முதலியவைகளெல்லாம் கொல்லப்பட்டனவென்றும், பின் எப்பொழுதாவது எலிகள் உபத்திரவம் இருக்கிறதென்று அரசனுக்கு விண்ணப்பம் செய்தால் அவ்விண்ணப்பம் பொய்யாகும் என்றும் ஒரு யோக்கியதா பத்திரமும், ஆயிர ரூபாய் பணமும் கொடுத்தால், தான் போய்விடுவதாகச் சொல்லவே, அதேமாதிரிச் சொந்தக்காரன் கொடுக்க, இம்மாதிரி வீடுவீடாய் நுழைந்து பத்திரமும் பணமும் பெற்றுக்கொண்டு வந்தான்.

இரண்டாம் நாள் காலையில், மந்திரிகள் வீடுகளெல்லாம் நுழைந்து, இம்மாதிரியே ஹதம் செய்யத் தொடங்கி அவர்களிடமிருந்து முன்மாதிரிப் பத்திரமும் ஏராளமான திரவியமும் அடைந்தான்.

மூன்றாம் நாள் தன்னுடைய எலிகொல்லும் சைனியத்துடன் அரண்மனை நுழைந்தான். அச்சமயத்தில், அழகிய சலவைக்கல்லினால் செய்யப்பட்ட தூண்கள் நிறைந்த ஒரு மாளிகையில் அரசன் இரண்டாவது அடுக்கில் நித்திரை செய்து கொண்டிருந்தான். அக்கட்டிடத்தில் நாகராஜன் நுழைந்து குருந்தாலிகளைக்கொண்டு தூண்களை இடிக்க உத்தரவிட்டான். அரண்மனைக் காவலாளிகள் என்ன தடுத்தபோதிலும், அரசனுடைய ஆக்கினையென்று சொல்லி, வேலையை நிறுத்தவில்லை. இடிமேல் இடியிடிக்கத் தூண்கள் எல்லாம் ஆட ஆரம்பித்தன. அரசனும் திடீரென்று தூக்கத்திலிருந்து எழுந்து பூகம்பமோ என்று நினைத்து,கீழே யிறங்கிவந்தான்.

இறங்கினவுடன் நாகராஜனையும் அவன் எலிகொல்லி சைன்யத்தையும் கண்டு கோபங்கொண்டு 'என்ன காரணத்திற்காக இந்தக் கட்டிடத்தின் அழகிய தூண்களை இடிக்கிறாய்! என்று கேட்டான். அதற்கு நாகராஜன், மிகவும் வணக்கமாய் அரண்மனையிலிருக்கும் எலி முதலியவைகளை யழிக்க இவ்விடம்வந்தேனென்றும், சற்று நேரத்திற்குமுன்,இத்தூண்கள்மேல் சில சுண்டெலிகள் ஏறினதைப் பார்த்ததால் அந்தப் பெரிய தூண்களில் ஏதாவது பொந்துகள் இருக்கலாமாகையால் தூண்களை யிடிக்கிறதாகவும் பதில் சொன்னான்.

"எலிகளைக்கொல்ல அரண்மனைக்குள் நுழைய உனக்கு எப்படித் துணிவு உண்டாயிற்று?" என்று ஆத்திரத்துடன்அரசன் கேட்டான். "அரசே, தாங்கள் கொடுத்த பொது உத்தரவில் அரண்மனையைத் தாங்கள் விலக்கவில்லையே. தங்கள் அரண்மனை, இப்பட்டணத்துக்குள்ளேயே இருப்பதால் நான் கட்டாயம் அரண்மனையைப் பரிசோதிக்கவேண்டுமல்லவா! ஏனென்றால் நான் இக்கட்டிடங்களை

தடியாப் பெண்டிர் மடியில் நெருப்பு.



விட்டுவிட்டால்,பிறகு ஒருஎலியைப்பிடித்துக் கொண்டுவந்துநான்சரியாய்வேலைசெய்யவில்லையென்று என்னைத் தண்டித்தால் நான் ஏழை என்ன செய்யமுடியும்?" என்று சொல்லி "அதோ பாருங்கள், எலி ஓடுகிறது" என்று கூச்சலிட்டதின்பேரில் தன்னுடைய பரிவாரங்கள் முன்னிலும் வேகமாக வேலை செய்ய ஆரம்பித்தன. தூண்களெல்லாம் ஆடிப்போய், கட்டிடமும் விழும் தறுவாயிலிருந்தது. அரசனும் நியாயவாதியாகையால் தன் உத்தரவுக்கு மீறிநடக்க இஷ்டமில்லாமல், மனம் தளர்ந்து விழித்தான். அதைக்கண்டு நாகராஜன் சற்று வேலையை நிறுத்தச்சொல்லி "அரசே, இதோ பாரும், இந்த அரண்மனைதவிர இப்பட்டணத்திலுள்ள எல்லாக் கட்டிடங்களின் சொந்தக்காரரிடமிருந்தும் எலிகள் எல்லாம் கொல்லப்பட்டனவென்று ஸர்டிபிகேட்டுகள் பெற்றுக்கொண்டிருக்கிறேன். இந்த ஒருநாள் தவணைதான் பாக்கியிருக்கிறது. அதற்குள் இவ்வரண்மனை முழுவதும் பார்த்துவிடவேண்டும்" என்றான். அதற்கவ்வரசன் இனிமேல் அரண்மனையை இடிக்கவேண்டாமென்றும் வேலையெல்லாம் சரியாய்ச் செய்ததாக ஒப்புக்கொள்ளுகிறதாகவும் சொன்னான். அதற்கவ்வாலிபன் "முடியாது, இதேமாதிரி தாங்கள் எனக்கு ஒரு யோக்கியதா பத்திரமும் வேலையைச் சரியாய் செய்ததற்கு வெகுமானமும் கொடுத்தாலொழிய நான் நிறுத்தமாட்டேன்" என்றான்.

அரசனும் மிகவும் சந்தோஷித்து அதேமாதிரி ஒரு பத்திரமும், நாகராஜனுடைய தைரியத்திற்காக ஒரு லக்ஷம் ரூபாயையும் கொடுத்தான். அவைகளை வாங்கிக்கொண்டு, நாகராஜன் "மஹாராஜா! புத்தியுடையவர்களுக்கு எந்த வேலையாயிருந்தாலும் அதற்குத் தகுந்த கூலி கிடைக்கும் என்று நான் முன்னாலேயே சொல்லவில்லையா? தங்களுக்கு இவ்வளவு சிரமம் ஏற்படுத்தினதற்காக என்னை மிகவும் மன்னிக்கவேண்டுகிறேன்" என்றான்.

இதைக்கேட்டு அரசனும் மிக்க திருப்தியடைந்து அவனைத்தன்னுடைய முதல் மந்திரியாக்கிக் கொண்டான். நாகராஜனும், பெரிய பதவிக்கு வந்தோம் என்று அகம்பாவம் கொள்ளாமல், தன்னுடைய நுட்பபுத்தியால் ராஜ்யத்தை நன்கு பரிபாலித்துவந்தான்.

—ஃ—

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**விவசாயம்**

சமீபத்தில், ஸ்ரீ காசி சர்வகலாசாலை மாணவர்களுக்குச் செய்த பிரசங்கம் ஒன்றில், ஸ்ரீமான் ராய் கங்காராம் பகதூர், சாஸ்திரீக முறைகளால் நமது நாட்டின் நிலவளத்தை விருத்திசெய்தால் எவ்வளவு பெரிய நன்மைகள் ஏற்படக் கூடுமென்பதை விளக்கினார். பஞ்சாப் பிராந்தியத்தில் விவசாயத்தில் தமது சொந்த அனுபவங்களை அவர் விஸ்தரித்துச் சொன்னார். அங்கே அவருக்கு 80,000 ஏக்கரா பூமியிருக்கிற தென்றும், அதில் நவீன முறைகளை மேற்கொண்டதன் பலனாக, தமக்கும் தம் குடிகளுக்கும், பெரிய லாபம் கிடைத்து வருகிறதென்றும் அவர் சொன்னார். வக்கீல் தொழில்களிலும், மற்றத் தொழில்களிலும் போய்க் குவியாமல், விவசாயத்தொழிலை மேற்கொள்ள வேண்டுமென்று அவர் மாணவர்களுக்குப் போதித்தார். ராய் கங்காராம் பகதூர், காசி சர்வகலாசாலை நிலத்திற்காக ஒருலக்ஷ ரூபாயும், விவசாயக் கல்லூரிக்காக ஒருலட்ச ரூபாயும் நன்கொடையளித்திருக்கிறா ரென்பதைக் கூறி, அவரைப் புகழ்ந்துபோற்றிய ஸ்ரீமான் பண்டித மாளவியாவும், விவசாயத்தால் நாட்டிற்கு ஏற்படக்கூடிய நன்மைகளைப்பற்றிக் கூறியதுடன், விவசாயம் முற்காலத்தில் எவ்வளவு மதிப்புடன் கருதப்பட்டு வந்ததென்பதை விளக்குமாறு பூர்வீக வடமொழிப் புலவர்களின் நூல்களினின்று மேற்கோள்களையும் எடுத்துக் காட்டினார்.

*
* *

**கல்வி முறையில் சீர்திருத்தம்.**

சென்னை பச்சையப்பன் ஹைஸ்கூல் மாணவர் கல்விச் சங்கத்தின் ஆதரவில் ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் "நமது ஸர்வகலாசங்கங்களின் வருங்கால நிலைமை" என்ற விஷயமாய் மிகவும் ருசிகரமான பிரசங்கம்செய்தார். திவான் பகதூர் ஸர். பி. தியாகராஜ செட்டியார் அச்சமயம் அக்கிராசனம் வகித்திருந்தார். அக்கிராசனாதிபதி, ஆரம்பத்தில் முகவுரையாகப் பேசுகையில் புதிய சீர்திருத்தம் அமுலுக்கு வந்தபின்,

தடுப்பு இருக்கக் கை வேவானேன்?

15 JUN 1921

கல்வி முறை திருப்திகரமாய் மாற்றப்பட்டுப் போகுமென்று தாம் எதிர்பார்ப்பதாகவும், கௌரவமாயும் தேசத்துக்கு உபயோகமாகவும் பிற்காலத்தில் நடந்துகொள்வது சாத்தியமாகும்படி சிறுவர்களுக்கு கல்விச்சாலைகளில் கல்விபோதிக்கப்பட வேண்டுமென்றும் சொன்னார். ஸ்ரீமான் எஸ். ஸ்ரீனிவாஸ ஐயங்கார் பிறகு பேச ஆரம்பித்துச் சொன்னதாவது:—"தற்போதைய கல்வி முறையில் பல ஊழல்கள் இருக்கின்றன. கல்கத்தா யூனிவர்ஸிடி கமிஷனுடைய சிபார்சுப்படி காரியங்கள் நடப்பதானால் அபாரச் செலவு அனுவசியமாய்ச் செய்ய வேண்டியிருக்கும். நமது தேசத்தின் தேவையையும், தேசத்தாரின் சுபாவத்தையும், பரம்பரையான குண விசேஷங்களையும் உத்தமமான நாகரீகத்தையும் அனுசரித்தே கல்விமுறை திருத்தப்படவேண்டும். எப்படிச் செய்தால் தேசத்துக்கு நன்மை ஏற்படுமோ, எத்தகைய கல்வி போதித்தால் நமது தேசத்தின் பொருளாதாய மூலங்கள் அபிவிருத்தியடைந்து தொழில்கள் வளரக்கூடுமோ, அம்மாதிரியான கல்வியைக் கற்பிக்கவேண்டும். சாஸ்திரப்பயிற்சி யில்லாமல் நம்து நிலைமை மிகவும் கேவலமாகிவிட்டது. பண்டைக்காலத்தில் நம்நாட்டில் உத்தமமான கல்வி போதிக்கப்படவில்லையா? கல்வி நிபுணர்களும், ராஜீய வாதிகளும், கலந்து யோசனைசெய்தால் உபயோககரமான கல்வித்திட்டமொன்றைத் தயாரிக்க முடியாமற் போகாது. இயற்கை அற்புதங்களை நாம் கவனித்துப் பார்ப்பதில்லை. சத்தியம் தர்மம், நியாயம் முதலிய எத்துறையிலும், பிற நாட்டார் நம்மை வெல்லுவதற்கில்லை. ஆனால் சாஸ்திரப் பயிற்சியிலும், இயந்திரப் பயிற்சியிலும், தாவர சாஸ்திரத்திலும், பூமி சாஸ்திரத்திலும் நாம் கவலை செலுத்துகிறோமில்லை. பிறநாட்டு நாகரிகம் நமக்கு வேண்டாம். பிறநாட்டுக் கல்வியும், தற்கசாஸ்திர ஞானமும் நமக்கு வேண்டாம். அத்தகைய கல்வியும் ஞானமுமில்லாமல் நமது ஸ்திரீகள் ஜீவகாருண்யத்துடனும், சத்தியமாயும், நியாயமாயும் சாமர்த்தியமாயும் இயற்கையாக நடந்துகொள்ளசக்தி படைத்திருக்கவில்லையா? ஆகையால் அத்துறைகளில மேனாட்டுப் பயிற்சி நமக்கு வேண்டாம். சாஸ்திரஞானத்தை வேண்டியவரை கற்று அதை அனுஷ்டானத்தில் உபயோகித்து, தேசத்தை முன்னுக்குக் கொண்டுவரக்கூடிய கல்வியே நமக்குஏற்றகல்வியாகும். யூனிவர்ஸிடிகள் அதிகமாய் ஸ்தாபிக்கப்படவேண்டும். அவை நமது மேற்பார்வையிலேயே இருக்கவேண்டும். சாஸ்திர ஆராய்ச்சி செய்யவும், பெருத்த முதல்போட்டுத் தொழில் நடத்துவோருக்கு உபயோகமாயிருக்கவும், ஆசிரியர்களைப் பிரத்தியேகமாய் நியமிக்கவேண்டும். ஆயுர்வேத வைத்தியத்தை அபிவிருத்தி செய்யவேண்டும். பச்சையப்பன் கலாசாலையை ஏன் ஒரு யூனிவர்ஸிடியாகச் செய்யக்கூடாது" என்று பேசினார். தமது முடிவுரையில் அக்கிராசனாதிபதி, விசேஷச் செலவுசெய்து அந்நியநாட்டு நிபுணர்களைத் தருவிப்பதில் பிரயோசனமில்லை யென்றும், அத்தகைய நிபுணர்கள் வாஸ்தவத்தில் நிபுணர்களல்லவென்றும், சென்னை யூனிவர்ஸிடியார் அந்த இனத்தில் செலவழிக்கும் தொகை தம்பிடிகூட பயன்தரத்தக்கதில்லை யென்றும் சாஸ்திரக் கல்வி கற்று, தேசத்தின் பொருளாதாய மூலங்களை அபிவிருததி செய்தால்தான் தேசத்துக்கு க்ஷேமமுண்டாகும் என்றும் குறிப்பிட்டார்.

* * *

**நோபல் ப்ரைஸ்**

முன்பு, ரவிந்திரநாத டாகூருக்கு "நோபல் ப்ரைஸ்" கிடைத்த செய்தியை நேயர்கள் மறந்திருக்க மாட்டார்கள். இந்த வெகுமானம், ஸ்வீடன் தேசத்து வித்தியாசங்கத்தார் மூலமாக, ஒரு வித்தியாபிமானி வைத்த நிதியினின்றும், அவ்வவ்வருஷத்தில் நாகரிக உலக முழுவதிலும், இலக்கியத்திலும், சாஸ்திரத்திலும் மிகச் சிறந்த வித்துவான்களுக்குக் கொடுக்கப்பட்டு வருகிறது. ரவீந்திரநாதருக்குக் கிடைத்த வெகுமதி, ரூபாய்க் கணக்கில், சுமார் லக்ஷத்து இருபதினாயிரமாகும். அப்படிப்பட்ட இந்தப் பரிசுகளில் இலக்கியப்பரிசு 1919-ம் வருஷத்துக்குரியது ஸ்விட்ஜர்லாந்து தேசத்துக் கவியாகிய கார்ல் ஸ்பித்லர் என்பவருக்கும், 1920-ம் வருஷத்துக்குரிய மேற்படி ஸம்மானம் நார்வே தேசத்துப் புலவராகிய நட்ஹாம்ஸன் என்பவருக்கும் கிடைத்திருக்கிறது.

* * *

தடைப்பக் கட்டைக்குப் பட்டுகுஞ்சம் கட்டினது போல.



குமரக்கடவுள்.

# விவேகபோதினி

15 JUN

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII} ரௌத்திரிஸு மார்கழிமீ : : 1921-ம்ஸு ஜனவரிமீ {பகுதி 7

## முருகன் வழிபாடு

## WORSHIP OF MURUGA

ஓல மறைக ளறைகின்ற வொன்றது
மேலை வெளியி லொளிரும் பரஞ்சுடர்
ஓது சரியை க்ரியையும் புணர்ந்தவ ரெவராலும்

ஓதவரிய துரியங் கடந்தது
போத அருவ சுருபம் ப்ரபஞ்சமும்
ஊனு முயிரு முழுதுங் கலந்தது சிவஞானம்

சால வுடைய தவர்கண்டு கொண்டது
மூல நிறைவு குறைவின்றி நின்றது
சாதி குலமு மிலதன்றி யன்பர்சொ னவியோமஞ்

சாரு மனுப வரமைந்த மைந்த மெய்
வீடு பரம சுகசிந்து இந்த்ரிய
தாப சபல மறவந்து நின்கழல் பெறுவேனோ?

வால குமர குகந்த குன்றெறி
வேல மயில எனவந்து கும்பிடு
வான விபுதர் பதியிந்த்ரன் வெந்துயர்
களைவோனே!

வாச கள்ப வரதுங்க மங்கல
வீர கடக புயசிங்க சுந்தர
வாகை புனையும் ரணரங்க புங்கவ வயலூரா!

ஞால முதல்வி யிமயம் பயந்தமின்
நீலி கவுரி பரைமங்கை குண்டலி
நாளு மினிய கனியெங்க ளம்பிகை த்ரிபுராயி

நாத வடிவி யகிலம் பரந்தவ
ளாலி னுதர மூளைபைங் கரும்புவெ
ணாவ லரசு மனைவஞ்சி தந்தருள் பெருமாளே!

'என்று மிளையாய் ! மாரன் வெட்கும் அழகியாய்! அன்பர் இதயகமலத்தில் வசிப்பவனே ! கார்த்திகைப்பெண்க ளறுவரது அன்பிலீடுபட்டு ஆறு திருவுருவங்களைக்கொண்டு, பிறகு அடியார்க்குக் காட்சிக்கெளியனா யிருத்தற்பொருட்டு பார்வதிதேவியார் ஆறு திருவுருவங்களையும் சேர்த்தணைத்துக்கொண்ட மாத்திரத்தில் அறுமுகங்களுடன் ஒரேதிருவுருவங் கொண்ட கந்தா ! உலகமாயையின் சொருபமான க்ரௌஞ்சகிரியை ஞானசக்தியான வேலாயுதத்தினாற் பிளந்தெறிந்தவனே ! ஆபத்துக் காலங்களில் அன்பருக்கு உதவவருவதற்குச் சித்தமாய் சதாகாலமும் ஷடாக்ஷரத்தின் உருவமான மயிலின்மீது வீற்றிருக்கும் சேவகனே !' என்று உன்னைக் கூவியழைத்து, முத்திவீடாம் நின்பாதத் தாமரைகளில் வீழ்ந்து பணிந்த அமரரிறைவன் தேவேந்திரன் அசுரர் துர்ச்செய்கைகளினாற் பட்ட கொடுந்துயரை நீக்கியவனே ! வாசனைகளைப் பூசிக்கொண்டு ஒப்பற்ற மங்களமூர்த்தியாய், எதையும் ஜயிக்கவல்ல பராக்கிரமத்தை யுணர்த்தும் கடகங்களையணிந்த தோள்களையுடையவனாய், கம்பீரமும் அழகும் நிறைந்த திருவுருவத்தைப் பூண்டவனாய், ஆசாபாச துர்க்குணங்களின் அவதாரங்களான அசுரர்களுடன் போர்புரியும் களத்தில் வெற்றிபெற்று வாகைமாலையை யணியும் பெரியோனாய் விளங்கும் வயலூர் முருகா ! உலகமாதாவாய், பர்வதராஜன் புத்திரியாய், பரமனுக்கெதிரே அவைதனில் நடித்த காளியாய், தன் வண்ணத்தை மாற்றிக்கொள்ள விரும்பி கச்சியில் பரமேசுவரனை நோக்கித் தவஞ்செய்த கௌரியாய், பராசக்தியாய், என்றும் மங்கைப்பருவம் மாறுதவளாய், ஓங்கார சொரூபியாய், என்றுமினிய கனியாய், எங்கள் ஈசனது மனைவியாய், திரிபுரதகனஞ்செய்த பரமேசுவரனது வாமபாகத்திலமர்ந்தவளாய், விந்துநாத சொரூபியாய், அகிலமெங்கும் வியாபித்தவளாய், ஆலிலைபோலழகிய வயிறுடையவளாய், பைங்கரும்பின் வண்ணத்தையும் இனிப்பையு முடையவளாய், திருவானைக்காவில் வெண்ணாவல் மரத்தின்கீழ் எழுந்தருளியிருக்கும் முக்கணெந்தையின் பிராட்டியாய் உள்ள என் தாய் உலகமுய்யுமாறு ஈன்றருளிய பெரியோனே ! அஞ்ஞானவிருளை யகற்றவேண்டுமென முறையிடும் வேதங்கள் இதுவே உலகுக்கெல்லாம் காரணமான ஓர்பொருள் என்று சொல்லுவதும், இரவுபகலில்லாத சுத்தவெளியிலே பிரகாசிக்கும் சுயஞ்ஜோதியான பரம்பொருளாயிருப்பதும், சிவாகமங்களில்

(இதன் தொடர்ச்சி 176-பக்கம் பார்க்க.)

# விவேக போதினி

தோ.13] ரௌத்திரிஃஸ :: மார்கழிமீ [ப.7


## ஸ்ரீகிருஷ்ணன்

## SRI KRISHNA

ஜய, விஜயர்களென்ற காவற்காரர் ஒரு சமயத்தில் வைகுண்டபதியான மஹாவிஷ்ணுவின் தரிசனத்துக்குவந்த ஸனகாதி முனிவர்களைத் தடுத்ததால், அவர்கள் கோபங்கொண்டு, "நீங்கள் பகவானுடைய வாயிற்காவலாளிகளாயிருப்பதற்குத் தகாதவர்கள். ஆகையால் உங்களுடைய ராஜஸகுணம் நீங்கி, ஸத்வகுணம் மேலிடும்வரையில் பூலோகத்தில் மூன்று ஜன்மங்கள் எடுக்கக்கடவீர்கள்! உங்கள் நிமித்தமாய் அந்தந்தக் காலத்தில் பகவான் அவதரித்து, உங்களை யுத்தத்திற் கொன்று பூமியின் பாரத்தைத் தீர்ப்பார்" எனச் சபித்தார்கள். அப்படியே அவர்கள் கிருதயுகத்தில் திதியின் புத்திரர்களான ஹிரண்யாக்ஷன், ஹிரண்யகசிபு என்ற முதலாவது ஜன்மமெடுத்தார்கள். திரேதாயுகத்தின் முடிவில் அவர்களே இராவணனென்றும் கும்பகர்ணனென்றும் பெயர்பூண்ட இராக்ஷஸர்களாய் இரண்டாவது ஜன்மமெடுத்தார்கள். அதற்கேற்றபடி மஹாவிஷ்ணுவும் தன் பக்தர்களின் சொல்லை நிறைவேற்றுவதற்கும், பூபாரத்தைத் தீர்ப்பதற்கும், யக்ஞவராஹ மூர்த்தியாய் அவதரித்து ஹிரண்யாக்ஷனையும், நரஸிம்ஹ மூர்த்தியாய் ரூபமெடுத்து ஹிரண்யகசிபுவையும், ஸ்ரீராமசந்திரமூர்த்தியாய் அயோத்தியில் திருவவதாரம்செய்து இராவணனையும் கும்பகர்ணனையும் யுத்தஞ்செய்து கொன்றார்.

### அசுரர்களின் பிறப்பு

துவாபர யுகத்தின் முடிவில் சுமார் ஏழாயிரம் வருஷங்களுக்குமுன் நமது பரத கண்டத்தில் ஆங்காங்கு ஆண்டுவந்த அரசர்கள் கொடுங்கோன் மன்னர்களாய் ஸாதுக்களைக் குரூரமாய் உபத்திரவஞ்செய்து துஷ்டர்களை யாதரித்து நட்புக்கொண்டு, புண்யகருமங்களைத் தடுத்துப் பாபச்செயல்களைப் பெருக்கி வந்தார்கள். ரிஷிகளையும், முனிவர்களையும் பசுக்களையும் கொன்றார்கள். யாகங்களையும் புண்யஸ்தலங்களையும் அழித்தார்கள். அவர்களுடைய கொடியபாபங்களை பூமிதேவியாற் பொறுக்கமுடியவில்லை. அவளுடைய பலமும் வீர்யமும் வரவரக் குறைந்தன. காலாகாலங்களில் மழைபெய்யவில்லை. அதைக் கொடுக்கும் தேவதைகளுக்குத் திருப்தியும் பலமுமுண்டாகும்படி யாகங்களைச்செய்தாலல்லவா தகுந்தகாலத்தில் மழைபெய்யும்? மழையில்லாததால் மரங்களும் செடிகளும் கொடிகளும் பயிர்களும் வளர்ந்து செழிக்கவில்லை. அவைகளையே ஜீவனத்திற்கும் சகல வைதிக லௌகிகக் கிரியைகளுக்கும் ஆதாரமாய்க்கொண்டிருந்த பிராமணர்களும் மற்றவரும் தத்தம் தொழில்களையும் கடமைகளையும் எப்படி நடத்த முடியும்? கொடியவியாதிகளும் பஞ்சமும் யுத்தங்களும் பொய்யும் புரட்டும் மோசமும் குடியும் கொலையும் செழித்தோங்கின. பூமிதேவி இக்கொடிய பாபச்செயல்களின் பாரத்தைத் தாங்கமுடியாமல் இரண்டு கால்களை மாத்திரமுடைய பசுவின்ரூபத்தைத் தரித்து, மூன்று உலகங்களுக்கும் அதிபதியான இந்திரனிடத்திற் போய் முறையிட்டாள். இந்திரன் அவளை அழைத்துக்கொண்டு அக்னி வாயுமுதலிய தேவகணங்களுடன் ஸத்ய லோகத்துக்குச் சென்று, பிரமாவைச் சரணமடைந்தான். இந்திராதி தேவர்களையும் பூமாதேவியையும் அவர் அழைத்துக்கொண்டு, திருப்பாற்கடலில் ஆதிசேஷன்மேல் யோகநித்திரை செய்யும் மஹாவிஷ்ணுவிடத்துக்குச்சென்று, அவரை வேதமந்திரங்களால் ஸ்தோத்திரஞ்செய்தார். அப்பொழுது ஓர் அசரீரிவாக்கு உண்டாயிற்று. அதையே பகவான் தனக்கிட்ட உத்தரவாய் எண்ணி, "தேவர்களே! பூதேவியின் நிலைமையையும், நமது கோரிக்கையும் பகவான் முன்னமேயே தெரிந்துகொண்டிருக்கிறார். யதுவம்சத்திற்பிறந்த வஸுதேவருக்கும்தேவகிப்பிராட்டியாருக்கும்திருக்குமாரராய் அவர் அவதரித்து, பூமியின் பாரத்





தைத் தீர்ப்பார். நீங்கள் அந்தக் காரியத்தில் உங்களாலியன்றவரையில் கைங்கர்யஞ் செய்யும்பொருட்டு அதற்கு முன்னமேயே யதுவம்சத்தில் ஸ்திரீகளாய்ப் பிறக்கவேண்டும். அவருடைய வாகனமான ஆயிரம் பணா முடிகளையுடைய ஆதிசேஷன், தம் அம்சத்தால் அவருக்குத் தமையனாய் அவதரிப்பார். இந்தப் பிரபஞ்சத்தை யந்திரத்தில் வைத்துச் சுழற்றுவதுபோல் மயக்கும் அவருடைய யோகமாயை ஏதோ ஒருகாரியமாய் அதே காலத்திற் பிறக்கப் போகிறாள். கவலையை விடுங்கள்!" என்று அவர்களுக்கும் பூமிதேவிக்கும் ஆறுதல் சொல்லிவிட்டுத் தன் இருப்பிடம் சென்றார்.



சேஷசயனம்

அப்படியே சேதி தேசத்தரசனான் தமகோஷனென்பவனுக்குப் புத்திரனாய் சிசுபாலனும், விருத்தசருமனுக்குப் புத்திரனாய் தந்தவக்திரனும் பிறந்தார்கள். அவர்களே ஜயவிஜயர்கள். அவர்களுக்கு அதுவே மூன்றாம் ஜன்மம். அவர்களுக்குத் துணையாய் அஸுர சிரேஷ்டர்கள் எல்லோரும் அக்காலத்திய இராஜவம்சங்களிற் பிறந்தார்கள்.

### கம்ஸன்

சந்திரவம்சத் தரசனான யயாதியின் யதுவென்ற புத்திரன் கிளையில் ஆஹுகனென்ற ஓர் அரசன் பிறந்தான். அவனுக்குத் தேவகன் உக்கிரஸேனனென்று இரண்டு புத்திரர்கள். தேவகனுக்குத் தேவகீ முதலிய ஏழு பெண்களுண்டு. உக்கிரஸேனனுக்குக் கம்ஸனென்று ஒரு மகன் பிறந்தான். அதே யதுவம்சத்தில் வேறு கிளையில் சூரனென்று ஓர் அரசன் பிறந்தான். அவனுக்கு வஸுதேவன் முதலிய புத்திரர்களும் ப்ருதை முதலிய பெண்களும் பிறந்தனர். வஸுதேவர் தேவகனுடைய பெண்களான தேவகி முதலியவர்களை மணம் புரிந்தார். அவருடைய சகோதரிகளில் ப்ருதை அல்லது குந்தி யென்பவள் பாண்டு மஹாராஜாவைக் கணவனாய் அடைந்து, பாண்டவர்களைப்பெற்றாள். மற்றொருத்தியான சுருததேவை விருத்தசருமாவை விவாகஞ் செய்துகொண்டு தந்தவக்த்ரனை ஈன்றாள். மற்றொருத்தியான சுருதச்ரவஸ் யென்பவள் சேதி தேசத்து அரசனான தமகோஷனைப் பதியாயடைந்து, சிசுபாலனைப் பெற்றாள்.

வஸுதேவர் தேவகியை மணஞ்செய்துகொண்டு ரதத்திலேற்றித் தன்வீட்டுக் கழைத்துக்கொண்டுபோனார். அப்பொழுது அவளு

டைய சகோதரனான கம்ஸன் வெகு சாதுர்யமாய் இரதமோட்டினான். அப்பொழுது ஓர் அசரீரி வாக்குண்டாகி கம்ஸனை யழைத்து, "அடே மூடா! எவளை உடன்பிறந்தாளென்று நினைத்து, வெகு பிரியத்துடன் இரதத்தில் ஏற்றிக்கொண்டு போகிறாயோ, அவளுடைய வயிற்றிற் பிறக்கும் எட்டாவது குழந்தையால் நீ மரணமடைவாய்" என்றது. கம்ஸன் இயற்கையாகவே அஸுரனாதலால் தன் உயிரைக் கொள்ளை கொள்ளுவதற் கியமனாய்ப் பிறக்கும் பிள்ளையைப் பிறக்காமற்செய்து, தன்னுயிரைக் காப்பாற்றி அசரீரி வாக்கைப் பொய்யாக்க வேண்டுமென்று கருதி, தன்னருகிலிருந்த தேவகியின் தலைமயிரைப் பிடித்துக் கத்தியால் அவளை வெட்டப்போனான். அதைக்கண்டு வஸுதேவர் அவனைத் தடுத்து, பலவிதமாய் உபதேசித்து வேண்டி, இவளிடத்தில் பிறக்கும் குழந்தைகளாலல்லவா உனக்கு அபாயம் ஏற்படும் என நினைக்கிறாய்; அவைகளைப் பிறந்தவுடனே உன்னிடத்தில் ஒப்புவித்துவிடுகிறேன். இவளைக் கொல்லவேண்டாமென வேண்டினார். கம்ஸனும் அதற்கிணங்கி அவளை விட்டு விட்டான்.

அப்படியே தேவகி தான் பெற்ற முதலாவது குழந்தையைப் பிறந்தவுடனேயே கம்ஸனிடத்திற் கொடுத்தாள். ஆனால் அவன் "எனக்கு எட்டாவது புத்திரனால் அபாயம் நேருமேயல்லாது மற்றக் குழந்தைகளிடத்தில் எனக்குப் பயமில்லை" யென்று அதைத் திருப்பிக் கொடுத்துவிட்டான்.

பிறகு நாரதமஹரிஷி ஒருநாள் கம்ஸனிடத்திற்குவந்து, "உனக்கு ஒரு தேவரஹஸ்யத்தைச் சொல்லுகிறேன். உன்னை அண்டியிருப்பவர்களெல்லோரும் அஸுரர்கள். அவர்களைக் கொன்று பூமியின் பாரத்தைத் தீர்ப்பதற்காகமஹாவிஷ்ணுதேவர்களால் பிரார்த்திக்கப்பட்டு வஸுதேவருக்குப் புத்திரனாய் அவதரிக்கப்போகிறார். நீ பூர்வ ஜன்மத்தில் காலநேமியென்ற அஸுரன். விஷ்ணுவால் கொல்லப்பட்டு மறுபடியும் இந்த ஜன்மத்தை எடுத்திருக்கிறாய். எட்டாவதென்றால்எந்த விதமாய் எண்ணினால் அது சரியா யிருக்குமோ யாருக்குதெரியும்?" என்று சொல்லிக் கம்ஸனுக்குப் பெரிய சந்தேகத்தை உண்டாக்கி விட்டுப் போய்விட்டார்.

மேலும் வஸுதேவர் முதலிய விருஷ்ணி வம்சத்தாரும், தேவகி முதலிய யாதவ ஸ்திரீகளும் கோகுலத்திலுள்ள நந்தன் முதலிய கோபாலர்களும் அவர்களுடைய பந்துக்களும் நண்பர்களும் தேவர்களின் அம்சங்களாய்ப் பிறந்தவர்களென்றும் சொல்லி, அவனுக்கு எல்லோரிடத்திலும் பயத்தை மூட்டிவிட்டார்.

உடனே அந்தத் துஷ்டன் தேவகியையும் வஸுதேவரையும் விலங்குபோட்டுச் சிறையிலடைத்தான். ஒவ்வொரு குழந்தை பிறந்ததும், மஹாவிஷ்ணு இவனோ இவனோவென்று பயந்து, கொஞ்சமேனும் இரக்கமில்லாமல் தானே அதைத் கொன்றான். பரமஸாதுவான உக்கிரஸேனனென்ற தன் பிதாவையே காராக்கிருகத்தில் அடைத்து தானே இராஜ்யத்தை ஆண்டுவந்தான்.

ஏழாவது தடவை தேவகீ கர்ப்பந்தரித்தாள். அதுவே ஆதிசேஷனுடைய அம்சம். கம்ஸனால் அதற்குநேரப்போகும்அபாயத்தைக்கண்டு பகவான், தன் யோகமாயையை நோக்கி "நீ தேவகியின் கர்ப்பத்திலிருக்கும் ஆதிசேஷனுடைய அம்சத்தை அங்கிருந்து எடுத்து, வஸுதேவருடைய பார்யையாய் கோகுலத்தில் வசிக்கும் உரோஹிணியின் கர்ப்பத்தில் வைத்துவிடு. பிறகு நான் தேவகியின் எட்டாவது புத்திரனாய்ப் பிறக்கப்போகிறேன். கோகுலத்திலுள்ள நந்தனென்ற கோபாலனுடைய பத்தினியான யசோதைக்கு, நீ பெண்ணாய்ப் பிறக்கவேண்டும். உனக்குத் துர்க்கை, பத்திரகாளி, வைஷ்ணவீ, சண்டிகை, கிருஷ்ணை, கன்னிகை, மாயா, நாராயணீ, சாரதா, அம்பிகா என்ற பெயர்கள் ஏற்படும். எண்ணிறந்த ஆலயங்களைக் கட்டி உன்னை உலகெங்கும் பூஜிப்பார்கள். ஒரு வயிற்றிலிருந்து இழுத்துக் கொண்டு போகப்படுவதனால் அந்தச் சிசுவுக்கு ஸங்கர்ஷணனென்றும், நிகரற்ற பலவானாகையால் பலபத்திரனென்றும், எல்லோரையும் மகிழச்செய்வதால் ராமனென்றும் பெயர் உண்டாகட்டும்!" என்றார்.

யோகமாயை அவருடைய உத்தரவுப்படி தேவகியின் கர்ப்பத்திலிருந்த சிசுவை எடுத்து, உரோஹிணியின் கர்ப்பத்தில் வைத்தது. கம்ஸனோ தன் தங்கையின் ஏழாவது கர்ப்பம் கரைந்துவிட்டதென்று நினைததுச் சற்றுக் கவலைதீர்ந்து, எட்டாவது சிசுவை ஆவலுட





னும் பயத்துடனும் எதிர்பார்த்துக்கொண்டிருந்தான்.

பிறகு ஸ்ரீமஹாவிஷ்ணு தம் பிரதிக்ஞையின்படி பூமியின் பாரத்தை நீக்குவதற்காகத் தம் அம்சத்தால் வஸுதேவருடைய மனத்திற் பிரவேசித்தார். காலக்கிரமத்தில் அவரிடத்திலிருந்து தேவகியின் கர்ப்பத்தில் வந்தார். அதனால் அந்தத் தம்பதிகள் ஆயிரங் கிரணங்களையுடைய சூரியனைப்போல் சிறைச்சாலையில் பிரகாசித்தார்கள். கம்ஸன் அதைப் பார்த்து, "எனக்கு மிருத்யுவென்று சொல்லப்பட்ட நாராயணன் இப்பொழுது இவளுடைய கர்ப்பத்தில் வந்திருக்கிறான். இவள் முன்போலில்லை. இவளை இப்பொழுதே கொல்லுவோம்" என்றுன்னினான். பெண்பிள்ளையயும் உடன் பிறந்தாளையும் கர்ப்பிணியையும் கர்ப்பத்தையும் அழிக்கின் மஹாபாபங்கள் நேரும்; கீர்த்தியும் ஐசுவர்யமும் ஆயுளும்நாசமாகும். ஆதலால்முன்போலவே சிசுவைப் பிறந்தவுடனேயேகொல்லுவேனென்று நிச்சயித்து பகவானிடத்தில் விரோத புத்திவைத்து, நிற்கும்பொழுதும் படுக்கும்பொழுதும், நடக்கும்பொழுதும் உண்ணும்பொழுதும் அவரையே நினைத்துக் கொண்டிருந்தான். அவனுக்கு உலகம் முழுவதும்மஹாவிஷ்ணுவாகவே தோன்றிற்று.

பிரமா, பரமசிவன், நாரதர் முதலிய மஹரிஷிகள், இந்திராதி தேவர்கள் முதலியோர் தேவகியிருக்குமிடத்து வந்து, வேதவாக்கியங்களால் நாராயணனைத் தோத்திரஞ்செய்தனர்.



துக்க நிவிர்த்தி.

பிறகு தேவகிக்கும் பிரஸவகாலம் நெருங்கிற்று. கிருஹங்களும் நக்ஷத்திரங்களும் ஸர்வோத்தமமான ஸ்தானத்திலிருந்தன. பிரபஞ்சத்திலுள்ள சராசர பதார்த்தங்கள் யாவும் பரமானந்தமடைந்து களித்தன. ஆகாசம் நிர்மலமாய் சுத்தமான நக்ஷத்திரங்களால் அலங்கரிக்கப்பட்டிருந்தது. மலைகளும் காடுகளும் சோலைகளும் அழகான தளிர்களாலும் புஷ்பங்களாலும் விளங்கின. மேகங்கள் மிருதுவாயும் மதுரமாயும் கர்ச்சித்தன. நதிகளின் ஜலம் நல்லோரின் மனத்தைப் போல் தெளிந் திருந்தது. திசைகள் பிரகாசமாயும், பிராணிகளின் மனம் சாந்தமாயும், காற்று மிருதுவாயும், அக்கினிகள் மங்களமாயும் விளங்கின. தேவ கந்தர்வ கின்னர கிம்புருஷ ஸித்த சாரண வித்யாதர அப்ஸரஸ் தேவரிஷி ராஜரிஷி பிரமரிஷி கணங்கள் பகவானுடைய கலியாண குணங்களைக் கொண்டாடினார்கள். கிருஷ்ணபக்ஷம் அஷ்டமிதிதி உரோஹிணீ நக்ஷத்திரத்தில் ஸர்வலோகநாதனான ஸ்ரீமந் நாராயண மூர்த்தி வஸுதேவரின் பத்தினியான தேவகிப் பிராட்டிக்குத் திருமகனாய் அவதரித்தார். அந்த தம்பதிகள் அவருடைய திவ்யரூபத்தைத் தரிசித்துத் தோத்திரஞ் செய்தார்கள். பகவான் "ஸ்வாயம்புவ மன்வந்திரத்தில் நீங்கள் ஸுதபஸ் என்ற பிரஜாபதியாயும், பிருச்னியென்ற அவருடைய பார்யையாயும் இருந்தீர்கள். பதினாயிரம் வருஷம் கடுந்தவத்தால் என்னை ஆராதித்தீர்கள். நான் உங்களுக்கு இந்த ஸவ

ரூபத்துடன் தரிசனம் கொடுத்து, வேண்டிய வரங்களைக் கேளுங்கள் என்றேன். என் மாயையால் மயங்கி, வெகு காலமாய்ப் புத்திரனில்லாததால் வருந்தி, மோக்ஷத்தைக் கொடுக்க வேண்டுமென்று என்னைக் கேட்காமல், என்னைப்போன்ற புத்திரன் உங்களுக்குப் பிறக்க வேண்டுமென்றுபிரார்த்தித்தீர்கள். அப்படியே நான் பிருச்னிகர்ப்பனென்ற பெயருடன் உங்களுக்கு மைந்தனாய்ப் பிறந்தேன். மறு ஜன்மத்தில் கசியபர் அதிதி யென்றவர்களாய்ப் பிறந்து, என்னையே உபேந்திரனென்ற பெயருடன் புத்திரனாய் அடைந்தீர்கள். இந்த மூன்றாவது ஜன்மத்திலும் உங்களுக்குக் குழந்தையாய்ப் பிறந்திருக்கிறேன். மூன் ஜன்மங்களின் விருத்தாந்தங்களை ஞாபகப்படுத்துவதற்காகவே இந்த ரூபத்துடன் உங்களுக்குத் தரிசனங்கொடுத்தேன். என்னைக் குழந்தையாய் எண்ணிப் பிரீதிவைத்து பரப்ரும்மமாய் எண்ணித் தியானஞ்செய்து என் பரம பதத்தை அடைவீர்களாக! கம்ஸனால் உங்களுக்கு நேர்ந்திருக்கும் பயத்தை யகற்றிக்கொள்வதற்காக என்னை யெடுத்துக்கொண்டுபோய் கோகுலத்தில் நந்தகோபனுடைய மனைவியான யசோதையின் படுக்கையில் விட்டுவிட்டு, அங்கிருக்கும்பெண்குழந்தையைஇங்கே கொண்டு வாருங்கள். என் ஆக்ஞையால் உங்களுக்கு யாதொரு இடையூறும்நேராது" என்று அநுக்கிரகித்துத் தம் திவ்யரூபத்தை மறைத்து, சாமான்யக் குழந்தைபோலானார்.

வஸுதேவரும், ஆக்ஞைப்படியே செய்தார். காவலாளர்களும், நகரத்திலும் கோகுலத்திலுமுள்ள யாவரும், மெய்ம்மறந்து நித்திரையில் ஆழ்ந்திருந்தார்கள். கதவுகள் தாமாகத்திறந்தன. பயங்கரமான சுழல்களையுடைய யமுனாநதி லோகநாதனுக்கு வழிவிட்டது. நள்ளிருளில் ஸப்தமேகங்களும் தாரை தாரையாய்ப் பொழிய, ஆதிசேஷன் ஆயிரம் பணாமுடிகளாற் குடைபிடிக்க, பகவான் வஸுதேவரால் கோகுலத்துக்குக் கொண்டுபோகப்பட்டு யசோதையின் படுக்கையில் வைக்கப்பட்டார். யோகமாயை அவளுடைய வயிற்றிற் பெண்ணாய்ப் பிறந்திருந்தது. வஸுதேவர் அதை எடுத்துக்கொண்டு, மதுரைக்கு வந்து, சிறைச்சாலையிற் புகுந்து, தேவகியின் படுக்கையில் அக்குழந்தையை வைத்தார். அதன் அழுகைச் சத்தத்தால் காவலாளர்கள் விழித்துக்கொண்டு, கம்ஸனுக்குத் தெரிவிக்க, அவன் பரபரப்புடன் தலைவிரிகோலமாய் ஓடிவந்து, குழந்தையைக் கொல்லப் போனான். தேவகி அவனுடைய கால்களில் விழுந்து, "அண்ணா! இதுவரையில் சிசுக்களைக் கொன்றதுபோதாதா? இது ஆணல்ல. பெண்குழந்தை. இக்குழந்தையால் உனக்குப் பயமில்லை. என் கடைசிக் குழந்தையையாவது எனக்குக் கொடுக்கமாட்டாயா?" என்று கெஞ்சினாள்.

கம்ஸன் அதற்குச் செவி கொடுக்காமல், அவளுடைய கையிலிருந்து அதைப் பிடுங்கி இரண்டு கால்களையும்பிடித்துக் கரகரவென்று சுழற்றி கல்லில் அடித்தான். அது அவனுடைய கையிலிருந்து உயரக் கிளம்பி, எட்டுக் கைகளுடனும் திவ்யாயுதங்களுடனும் ஆகாய வீதியில் நின்று தேவகணங்களால் பூஜிக்கப்பட்டு, "அடே மூடா! என்னை நீ கொல்ல முடியுமோ? உனக்கு மிருத்யுவானவன் வேறிடத்திற் பிறந்திருக்கிறான். அவனைக் கண்டுபிடித்துக் கொல்ல முயற்சிசெய்" என்றது.

கம்ஸன் மனங்கசிந்து, தான் அதுவரையில் செய்த கொடிய பாபங்களுக்காக பச்சாத்தாப மடைந்து, தேவகியை ஆறுதல் செய்து, அவர்களை விடுவித்தான்.

பிறகு அவன் அஸுராம்சங்களாய்ப் பிறந்த பூதனை, பிரலம்பன், தேனுகன், அரிஷ்டன் முதலிய மந்திரிகளையும் நண்பர்களையும் அழைத்து, "தேவர்கள் என்னைக் கொல்லப்பார்க்கிறார்கள். ஆனால் என்னிடத்திலுள்ள பயத்தால் அவர்கள் என்னை நேரில் எதிர்க்க முடியாமல் மஹாவிஷ்ணுவைச் சரணமடைய, அவர் எங்கேயோ பிறந்திருக்கிறாராம். ஆகையால் நீங்கள் இன்றுமுதல் தவஞ்செய்யும் ரிஷிகளையும் யாகயக்ஞங்களைச் செய்யும் அந்தணர்களையும், அவைகளுக்கு ஸாதகமாயிருக்கும் பசுக்களையும் கண்டவிடத்திற் கொல்லுங்கள். மேலும் ஒவ்வொரு வீட்டிலும் தேடி ஆண்குழந்தைகளைக் கண்டுபிடித்து, ஒன்று பாக்கியில்லாமல் கொன்றுவிடுங்கள். அவைகளுக்குள் எனக்கு மிருத்யுவான குழந்தையும் ஒன்றாயிருக்குமல்லவா?" என்றான்.

ஆர்யமத உபாக்கியானம்:—நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட 54 நீதிக்கதைகள், 14-அழகிய ஆப்டோன படங்களுடன் விலை அணா 8.





# தமிழ்மொழி வளர்ச்சி

## THE GROWTH OF TAMIL LANGUAGE

[ஸ்ரீமான் எஸ். சச்சிதாநந்தம் பிள்ளை, பி.ஏ., எல்.டி.]

"செந்தமிழ் நாடெனும் போதினிலே - இன்பத்
தேன்வந்து பாயுது காதினிலே - எங்கள்
தந்தையர் நாடெனும் பேச்சினிலே - ஒரு
சத்தி பிறக்குது மூச்சினிலே."—நாட்டுப்பாட்டு.

இப்பத்திரிகையின் பனிரண்டாந் தொகுதியில், முதற்பகுதியில், "தமிழ்நூற் பயிற்சி" என்னுந் தலைப்போடு ஒரு கட்டுரை வெளிவந்துள்ளது. அதைத் தொடர்ந்து, தமிழ்மொழியை வளர்க்கும் வழிகளைப்பற்றிச் சிறிதிங்காராய்வோம்.

'தமிழ்மொழி வளர்ச்சி' என்னும் சொற்றொடரானது, அம்மொழியிலுள்ள சொற்கள், முதலில் பெற்றிருந்த வடிவநிலைமையையும் பின்னர் நாளடைவில் அடைந்த மாறுதல்களையும் இன்னோரன்ன பிறவற்றையும் மொழிநூலாராய்ச்சி முறையால் சோதிக்கப் புகுதலைக் குறிக்கவல்லது. அன்றியும், அது அம்மொழியில் எழுதப்பட்டுள்ள நூல்களின் வரலாற்றைச் சுட்டுவதெனவும் கொள்ள இடமுண்டு. ஆயினும் இங்கு இத்தலைப்பின்கீழ் விளக்கப்படுவது தமிழ்ச் சொற்களையும் தமிழ் நூல்களையும் இக்காலத்தின் தேவைக்கும், இம்மொழியினியல்பிற்கும் ஏற்றவாறு, பெருக்கும்பொருட்டு அம்மொழியைத் தமிழ்மக்கள் பலருக்கும் நன்கறிவுறுத்துதற்கான முறையேயாம்.

இங்ஙனம் தமிழ் மொழி பேணவேண்டுவதின் அவசியத்தை மேற்குறித்த கட்டுரைக்கண் காணலாம். அவ்வாறு பேணும் முறைகளில் முதன்மையாய்க் கூறத்தக்கது யாதெனில், தமிழ்நாட்டில் தமிழ்பேசும் உயர்வகுப்பினர் யாவரும் தம் தாய்மொழிக்குள்ள பெருமையைத் தாமே அறிந்தோ பிறர்வாய்க் கேட்டோ மகிழ்ந்து, அதனிடத்து மெய்யன்பு பூணவேண்டு மென்பதுதான். இங்ஙனம் தமிழ்மொழியினிடத்து நன்மதிப்புக் கொள்ளுதலால், வடமொழியிடத்தோ ஆங்கிலத்தின்பாலோ தமக்குள்ள பற்றுசை விடவேண்டும் என்பதின்று. வடமொழியும் தென்மொழியும் வெவ்வேறு உயர்தனித் தொன்மொழிகளே. ஆயினும், இவ்விருமொழியும் வழங்கிய பெருமக்கள் பல்லாயிர ஆண்டுகளாய் நெருங்கிப் பழகிவந்த தன்மையால், இவை யிரண்டும் இருகண்ணெனத் தமிழ்நாட்டுச் சான்றோரியாவராலும் பாராட்டப்படுவனவாயின. இவ்விரு பெருமொழிகளையும் ஒருங்கு நன்குணர்ந்த மாதவச் சிவஞான யோகிகள்

இருமொழிக்குங் கண்ணுதலார்முதற் குரவர்
இயல்வாய்ப்ப
இருமொழியும் வழிப்படுத்தார் முநி வேந்தர்
இசைபரப்பும்
இருமொழியு மான்றோரே தழீ இனா
ரென்றாலிவ்
விருமொழியு நிகரென்னும் இதற்கையம்
உளதேயோ.

என்று பாடியருளியது பெரிதும் கவனிக்கத்தக்கது. இவருக்கு முன்னரே தமிழ் மறையோதிய சமயகுரவரும் இருமொழிகளுள்ளும் பிணக்கு நேர்தல் முறையன்றென அறிவுறுத்திச்சென்றுள்ளார்:

திருநாவுக்கரசு சுவாமிகள் திருமறைக்காட்டில் இறைவன் இயல்பை விரித்துப் பாடுங்கால்,

"ஆரியன் கண்டாய்; தமிழன் கண்டாய்"

என்றும்? மற்றோர் தலத்து வாய்மலர்ந் தருளியபோது,

"முத்தமிழு நான்மறையு மானான் கண்டாய்"

என்றும்; நம்மவர்க்குச் சுட்டிக்காட்டியுள்ளார்.

இருமொழியும் இருகண்ணெனத்தக்கவை என்பதும், ஒன்றே அறிந்தார் ஒற்றைக்கண்ணரை நிகர்ப்பர் என்பதும்,

"மந்திபோல் திரிந்தாரியத்தோடு
செந்தமிழ்ப் பயன் அறிகிலா
அந்தகர்க் கெளியே னலேன் திருவாலவா
யரன் நிற்கவே"

என்னும் திருஞானசம்பந்த சுவாமிகள் திருவாக்கால் உணரப்படும்.

பெரியார் இங்ஙனம் கூறியருளினமைக்குக் காரணம் பலவுள. இங்கு அவற்றை விளக்க இடமில்லை. வடமொழிக்கண் பெருமதிப்புக் காட்டுவதில் சென்னாள் முன்வரை தமிழ்மக்கள் சிறிதும் பின்வாங்கினவரல்லர். வடமொழி தென்மொழி இரண்டு மறியா மந்தவம்

பர் சிலர்மட்டும் தமிழ்மொழியைத் தாழ்வாக நினைத்து வந்ததுண்டு. இவரெல்லாம் மேற்காட்டிய பெருமக்கள் திருவாக்கின் உட்கருத்தை நன்குணர்ந்து ஒழுகுதல் முறைமை. இருமொழிப் பயிற்சியும் ஓங்கி வளர வேண்டுமென்று முயலுதலே நன்னெறி. ஒரு கண்ணின் பார்வையைக் கூர்மைசெய்ய விரும்பி, மற்றக்கண்ணைக் குருடாக்க முயலுவது அறிஞர் செய்கை யன்று.

இங்ஙனமே, ஆங்கிலப்பயிற்சி செய்யும் நம்மவர், தம் தாய்மொழியைத் தள்ளவேண்டியதின்று. பலதேய மக்களின் அறிவு குணந் தொழில்களின் திறத்தை எளிதிலறிந்து பயனடைதற்கு ஆங்கிலமொழியினுஞ்சிறந்த வாயில் இந்நாளிற் பிறிதொன்று காண்கிலேம். "விரிவிலா அறிவினர்கள்" என்னும் பெயர் நம்மையணுகாமைப்பொருட்டும், அரசியல் நிலைமை கருதியும் ஆங்கிலம் கற்றல் இன்றியமையாததே. ஆயினும் நந்தாய்மொழி கற்றல் அதனினும் இன்றியமையாததே. ஏன்? நல்லொழுக்க வளர்ச்சியும் கடவுட்பற்று முதிர்ச்சியும், நம் நாட்டினர்க்கு நாம் பயன்படும் ஆற்றலும், தாய் மொழியில் தக்க புலமை யடைந்தார்க்கன்றிப் பிறர்க்கு வாய்க்காவாதலால் என்க. இந்நாளில் தமிழ்நாட்டு உயர்தர மாணவர் பலர் தாய்மொழி நன்கறியாத் தாழ்நிலையெய்தி யிருப்பின், அதற்கு அவரே காரணரென்று சொல்லல் முறையாகாது. அவர் படிப்பின் திட்டத்தில் தாய்மொழியைத் தாழ்மொழியாக்கி வைத்துள்ள தகுதியில் செய்கையே வாய்த்த காரணமாம். நந்தேயக் கல்லூரிகளில் ஆங்கிலப் பாடங்களிடத்து எவ்வளவு நன்மதிப்பு காட்டப்படுகின்றதோ அவ்வளவு தாய்மொழியிடத்தும் காட்டப்படின் அது சாலும். இந்திய கல்லூரிகளில், முதல் பதினொரு வருடகாலம், ஆங்கில இலக்கிய இலக்கணமும் கணிதமும் நீங்க, ஏனைய பாடங்களையெல்லாம் நாட்டுமொழிகளிலேயே கற்பித்தல் நலமென்று ஸாட்லர் ஆலோசனைச் சபையினர் (Saddler Commission) தெளிந்தார்களன்றோ? தாய்மொழியிடத்துப் பற்றில்லார் வாழுநாடு தகுதிகுன்றித் தாழ்நிலையுறும் என்பது சாதம். தற்காலத் தமிழ்நாட்டின் நிலையே இதற்குத் தக்க சான்று.

இங்கு ஒரு சிறு சரிதம் நினைவிற்கு வருகின்றது: இப்போது நாடிழந்துழலும் கைசர் பெருமன்னன் நலம்பெற வாழ்ந்த காலத்தில் ஒரு நாள் அவர் மனைவியார், போலண்டு நாட்டுச் சிறுமி ஒருத்திமாட்டன்புற்று அவளை நோக்கி "நினக்கு வேண்டும் வரம் யாது? கூறு. உடனே தருவல்" என்றனர். அப்பெண், "பெருமாட்டி! அடியாள் விரும்புவதைத் தாங்கள் தரவல்லீரோ என்பதொருபுறமும், தர ஒருப்படுவீரோ என்பது மற்றொருபுறமும் கருத்தில் தோன்றி என்னைக் கேளாவாறு தடுக்கின்றன" என்றனள். உன்னியதை உரைத்தே தீரவேண்டும் என்று பேரரசி உறுக்கிய பின்னை அவ்வுயர்நெறிச் சிறுமி, "ஆற்றல் மிக்க அரசியே! போலண்டு நாட்டினராகிய எங்களுக்குப் போலிஷ் மொழியே தாய்மொழி. எங்கள் நாட்டுக் கல்லூரிகளில் அது கற்பிக்கப்படுவதில்லை. எங்கள் நாட்டவர் வாழ்க்கை நலத்திற்கு இறுதி தருவதாகிய இக்குறையை நீக்கி என் தாய் நாட்டில் என் தாய்மொழி தன் முன்னைப் பெருமை அடையுமாறு செய்யுங்கள். இதுவே யான் தங்கள்பால் வேண்டத்தக்கது" என்று பணிவொடு பகர்ந்தனள். தமிழ்பேசும் ஒவ்வொருவருக்கும் இவ்வார்வம் எந்நாள் தோன்றுமோ அந்நாளே தமிழ் நாடுய்ந்த நன்னாள். ஒருவர் தம் மொழியினைப் பெரிதும் போற்றுங்கால் பிறர் மொழியினைப் பழிப்பரோ என்னில், அவர் தம் தாயைப் போற்றி யொழுகுங்கால் பிறர் தாயரைப் பழிக்குந் தொழிலுமுடையரோ என்று கேட்டு, மறுக்க. அன்றியும், உண்மையான அன்பானது வாய்மைக்கு மாறுபட்டு நிகழாதென்க.

இத்தகைய நல்லுணர்ச்சி இந்நாட்டிலும் சின்னாளாய் ஆங்காங்கு தோன்றிவருகின்றது. தஞ்சை, தூத்துக்குடி முதலிய இடங்களிலுள்ள தமிழ்ச் சபைகளிலிருந்தும், பிராமணரல்லாதார் அரசியற்கூட்டங்களி லிருந்தும், கடைசியாகச் சைவசித்தாந்த மஹா ஸமாஜம் என்னும் சமயசபையி லிருந்தும், தமிழ்மொழியை அதன் தகுதிக் கேற்ப உயரிய நிலையில் வைத்து நடாத்த வேண்டுமென்று தீர்மானங்கள் செய்யப்பட்டு வருகின்றன. இது நாட்டின் முன்னேற்றத்திற்கொரு நற்குறியே. முறை திறம்பாத இவ்வேண்டுகோளுக்கு விரைவி லிணங்குவது அதிகாரிகள் கடமை.





முதலிற் சென்னைப் பல்கலைக் கழகத்தார் (Madras University) தமிழாராய்ச்சிக்கென்றே ஒரு ஆசிரியரைத் தேர்ந்தெடுக்க வேண்டும். அவர் தமிழில் முதிர்ந்த புலமையும், மேனாட்டறிஞர் மொழிவளர்க்கு முறைகளிற் பயிற்சியும் உடையரா யிருக்கவேண்டும். தமிழாராய்ந்து அதனை வளர்த்தற்கு வேண்டிய வசதியனைத்தும் அவருக்கு அமைத்துத் தரவேண்டும். அவர் உழைப்பின் பயனை அடிக்கடி தமிழ்மக்கட்குத் தெரிவிக்கவேண்டும். இதனோடு, முன்போல் உயர்தரப் பரீக்ஷைகட்குச் செல்வோரனைவருக்கும் தாய்மொழியையும் ஒரு கட்டாயப்பாடமாய் அமைக்கவேண்டும். "வித்துவான்" பட்டப் பரீக்ஷைக்குச் செல்லும் தமிழ் மாணவர், தமிழோடு பிறிதொரு மொழியையும் கற்கவேண்டும் என்னும் விதியை விலக்கவேண்டும்.

இவ்வாறு செய்யத் தூண்டுதற்குக் காரணம் விரிப்பிற் பெருகும். ஆயினும் சிறிது குறிப்பித்தல் கூடும். தமிழில் வந்துள்ள பிற்கால நூல்களிற் பல, தம்மை மட்டும் கற்போர்க்குப் பழையனவென வரும் எவற்றையும் எளிதில் நம்பிவிடும் ஓர் இயல்பை உண்டாக்குந் தன்மைய. பண்டை நல்லிலக்கியங்களின் நலத்தை அன்னார் பாராட்டுதலும் அருமை. இக்குறுக்க ஆராய்ச்சியின் காரணமாக இக்காலத்தில் அவர் பயன்படும் ஆற்றலும் குறைகின்றது. ஆங்கிலமோ, பிறமொழிப் பெருநூலின் நன்மையெல்லாம் தன்னகத்தே கொண்டு மிளிர்வதும், அறிவின் சுதந்தரத்தை அன்போடு பாராட்டி அச்சமற்ற ஆராய்ச்சி நெறியிற் செலுத்துவதுமான அரிய அகன்மொழி. இம்மொர்ழியை முறைப்படி உயர்தர வகுப்புகளிற் கற்கும் நம் பிள்ளைகள், தாய்மொழியையும் கட்டாயப் பாடமாகக் கற்பாராகில், அதன் பெருமை சிறுமைகளைத் திறம்பட ஆராய்ச்சி முறையில் அறிவர். அறிந்து தம்மொழியின் பின்னாட் சேர்க்கைகளுட் களைவன களைந்தும், இந்நாள் புனைவன புனைந்தும், அதனை அணிபெறச் செய்வர். இங்ஙனம் ஆங்கிலத்தொடு தமிழும் பயின்றதாலன்றோ ஆசிரியர் சுந்தரம்பிள்ளையவர்கள், ஆசிரியர் சூரியநாராயணசாஸ்திரியாரவர்கள், நல்லசாமிப் பிள்ளையவர்கள் முதலிய சில்லோர் தமிழின் பண்டைப் பெருமையை விளக்கியும், புது நூல் பல இரு மொழியினும் எழுதியும், நீர் நிறைந்த ஊருணியாய் விளங்கினர். ஆங்கிலமறியா ஒருவரிருவரும் இவ்வாறு நூலழகை ஆராய்ச்சி முறையிற் காட்டவும் காண்கின்றோமே எனின், அவர் தமிழின் பண்டை நன்னூல்களை நன்காராய்ந்தமையாலும், மேனாட்டாராய்ச்சி முறையைக் கேள்வி முகத்தான் அறிந்தமையானும் அவ்வாற்றல் பெற்றார் என்பாம். இங்குக் கூறுவதெல்லாம் பெரும்பான்மை பற்றிய பேச்சே. ஆங்கிலத்தில் பட்டம் பெறுவிடினும், அம்மொழிப் போக்கையும் மிக நன்குணர்ந்து, தமிழிலும் சமய ஞானத்திலும் நூலாராய்ச்சியிலும் தமக்கு மிக்காரெவருமின்றி இக்காலத்து விளங்கும் ஸ்ரீமத் சுவாமி வேதாசலம் அவர்களும், பண்டிதர் சவரிராயப்பிள்ளையவர்களும் இவர் போன்ற ஏனைச் சில நுண்ணறிவுடைய பெருமக்களும் மேற்காட்டிய பொது விதிக்கு மாறான உதாரணங்களாகார். போலிக் காரணங் காட்டித் தமிழ் முதலிய தாய்மொழிகளைக் கட்டாயப்பாட நிலையினின்று தள்ளிய பின்னர், பட்டம் பெற்றாரில் மேற்காட்டியுள்ளோர்போல் பயன் தந்தவர் எத்தனை பேர்? ஒருவரும் மனக்கண் முன் தோன்றுகின்றாரல்லர். ஆதலின் நஞ்சென்னைக் கழகத்தினர் சென்றதற்கிரங்கி, பாடலிபுத்திரப் பல்கலைக்கழகத்தார் (Patna University) சின்னாட்கு முன்னர் தந்நாட்டுத் தாய்மொழியைக் கட்டாயமாக்கிச் சிறப்பித்ததையுணர்ந்து, தமிழ் முதலிய தென்னாட்டு மொழிகளை முன்புபோல் கட்டாயப் பாடமாக்கக்கடவர்.

இனி ஒரு மொழியே கற்றாரைவிட இருமொழி கற்றோர் அறிவின் விரிவிலும் ஆராய்ச்சித் திட்பத்திலும் சிறந்து விளங்குவர் என்பது மெய்யே. மும்மொழிகள் கற்றோர் இவரினுந் திறமுடையராதலியல்பு. இப்படிப் பன்மொழிப் புலமை வளர்த்தல் நல்லதே. எனினும் உயர்தனிச் செம்மொழிகளாய் இலகுஞ் சிலவற்றில் ஒன்றை மட்டுமே கற்றற்கு வசதியுடையார் அவ்வழியில் இயன்றமட்டும் சென்று பயனடைதற்கு வேண்டிய ஊக்கமளித்தலும் நங்கடமையாம்.

இந்நோக்கத்தோடுதான் வடமொழி சில உயர்தரப் பரீக்ஷைகளுக்குத் தனிப்பாடமாக வைக்

கப்பட்டுள்ளதுபோலும். அம்மொழிக்கு நிகராய தென்மொழிக்கும் பல்கலைக் கழகத்தார் ஏன் இவ்வித உரிமை தரலாகாது? தமிழகத்திலேயே தமிழ் இப்பாடுபடுதல் சால விந்தையே! தமிழ்நாட்டின் முன்னேற்றத்தை விரும்பும் ஒவ்வொருவரும் இத்திருத்தத்தை உடனே செய்விக்க முற்படல் வேண்டும்.

இவ்வண்ணம் பல்கலைக் கழகத்தார் தமிழுக்குச் செய்ய வேண்டிய கடமையைச் செய்யுமாறு உந்தி, தமிழ் பேசுவோரனைவரும் அம்மொழி வல்லாரைப் பண்டைநாளிற் போல் போற்ற வேண்டும். அந்தோ! இந்நாளில் பலர்க்குப் பாரியின்பண்பும், கரிகாலன் கைவண்மையும், பழங்கதையாய்ப் பதுங்கிப் போயின. ஆவடுதுறையில் அருந்தமிழ்ப் பயிர் வளம் சாவியாய்ச் சாய்ந்தது சற்று முன்னாளில். சேதுபதிபோற் சீர்கால் செல்வர் போதிய ஊக்கம் புரிந்திலர் இந்நாள். இன்னோரிவ்வாறொழியினும், ஏனைத் தமிழ் நன்மக்கள் இலக்கக் கணக்காய் இருந்திலரோ? இவர்களில் அறிவு படைத்தார் அனைவரும் முற்பட்டு வந்து தமிழ்த்தொண்டு செய்யின், ஏனைச் செல்வரும் உடன் வராது பிற வழிகளில் செல்வஞ் சிதைந்துத் திரிய முடியுமோ? ஆதலின், தமிழ் நன்மாந்தர் தமிழ் வல்லாரைத் தழுவிப் புலமைக்குத் தக்கவாறு பரிசில் தரக்கடவர். தென் தமிழ் நாட்டின் தொல்வரலாறும், பண்டை இலக்கியச் சிறப்பின் காரணமும், மேனாட்டார் வளர்க்கும் அறிவுநூல்களின் கருத்தும், பிறமொழிகளினுள்ள நன்னூல்களின் மொழிபெயர்ப்பும், தமிழில் வெளிவரல் நாடிப் பலவகை நற்பரிசில் நல்கித் தக்காரைத் தமிழ்த்தொண்டில் ஊக்கிவிடக்கடவர். வழுமலிந்த தமிழ்ச் சுவடிகள் பல இந்நாளி லெழுதப்பட்டு, எவ்வாறுகவோ பாடப் புத்தகங்களாய்ப் பல்லாயிரம் மாணவர் கைக்கெட்டி, அவர் தமிழறிவைப் பாழாக்குகின்றன. தக்காரெழுதியவையே மிக்கு வழங்குமாறு தமிழைக் காக்கக் கடவர். மேலும் தமிழ் வல்லாருக்குப் பள்ளிக்கூடங்களிலும் பிற அலுவற்றுறைகளிலும் போதிய ஊதியங் கிடைக்குமாறு செய்யக் கடவர். எல்லாவற்றினும் பார்க்க வசதி வாய்ந்த யாவரும் தமிழையும் இயன்ற அளவிற் பிறமொழிகளையும் இடைவிடாது கற்கக் கடவர். அவ்வாறு தாமே கற்றற் கேற்ற வசதியற்றோர், பிறரைக் கற்குமாறு ஏவியும், கற்றிலராயினும் ஏனைத்தானும் நல்லவை கேட்டும் நன்மை பெருக்கக் கடவர்.

இங்ஙனம் மாந்தர் தம்மொழியை வளர்த்தற்குச் சபைகள் பெருந்துணையாய் நிற்கும். மாணவப்பருவந் தாண்டிய யாவரும் இவற்றாற் பயனடையலாமே? ஆனால் நாம் காண்பது யாது?

இவற்றிற் பெரும்பான்மைய, ஆண்டிற்கொருமுறை அரிதுயிலகற்றிப் பேரவைகூட்டிப் பெருஞ்சொல் நிகழ்த்தி ஆனதும், அமர்வன அஞ்சிய ஆமைபோல். இவற்றை இங்ஙனம்உறங்கவிட லாகாது. நாள்தோறும், வாரந்தோறும், மாதந்தோறும், அயனந்தோறும், ஆண்டுதோறும் நல்லறிவு வளர்தற் பொருட்டு இவற்றில் அங்கத்தினர் இடைவிடாது படிப்பதும் எழுதுவதும் பேசுவதும் செய்து, பரீக்ஷைகள் நடாத்திப் பரிசில் அளித்து, தம்மிற் பலரைப் பிறர்க்கும் பயன்படும் தகுதியுடையாராக்குதல் வேண்டும். ஆனதும் வெளிப்பட்டு அன்பும் அடக்கமு முடையராய், அருந்துயரில் வருந்திக்கிடக்கும் எளியோர்பால் வலியச் சென்று நல்லொழுக்கமும் கடவுட்பற்றும் வளரும் வண்ணம் கேட்போர் மனங்கொள்ளப் பேசுதல் வேண்டும். இவ்வாறு வளம்படுத்தப்பெற்ற தாய்மொழியைப் பலரும் கற்கவும் கேட்கவும் முற்படுவரேல், நம்நாட்டில் அறியாமை அகலும், அறிவு சிறக்கும், ஆற்றல் மிகுக்கும்; அவனிநோய் குன்றும்; வறுமை சிறுமையாம், வளம்பல மிகுக்கும், சாதிசமயச்சண்டைகள் மாயும்;ஒற்றுமை முற்றும், ஒழுக்கம் உயரும்; உலகில் அன்போங்கும்; ஆண்டவன் திருவடிக் கார்வமு மிகுக்கும். இவற்றினும் பெருநலம் எவைதாம்உள? ஆதலின் சபைகளின் வாயிலாய்த் தமிழுக்கு உண்மைச் சமவாழ்க்கைக்குப் பாடுபடவேண்டும். இவ்வறநெறி நிற்போர்க்கு இவ்வளவுஞ் செய்யஇயலுமோஎன்னற்க.இயல்வது கரவாது

"ஒல்லும் வகையான் அறவினை ஓவாதே
செல்லும் வாய் எல்லாஞ் செயல்"

இவ்வாற்றானெல்லாம் நாம் தாய்மொழிக்காகப் பரிந்து பாடுபடுவோமாயின் "அரசாங்கத்தார் நம் முயற்சிக்கு வேண்டிய துணை செய்யாதிருக்க முடியாது. இக்கால அரசாங்கம்

(இதன் தொடர்ச்சி 187-ம் பக்கம் பார்க்க.)





# பழக்கம்

## CUSTOM

[ஸ்ரீமான் ச. த. மூர்த்தி முதலியார்.]

அந்தோ பழக்கமே! உன்னை ஏன் நான் கூப்பிட்டேன்? உன்னாலன்றோ நம்முடைய தமிழ் நாடு முன்னேறும் தன்மையற்றிருக்கிறது. எடுத்ததற்கெல்லாம் உன்னைக் கூப்பிடக் காண்கின்றேனே. பிறநாட்டார், தினே தினே தங்களுடைய நிலையில் உயர்வடைய, நம்முடைய தமிழ் நாடு முன்னிருந்த நிலையிலிருந்து பின்னடைய நீயே காரணமென்று உன்னையே பலரும் நிந்தனை செய்கிறார்கள். இதை நீ யுணராயா? உணர்ந்திருந்தால் நீ ஏன் இன்னும் இந்த அவதூற்றைத் தாங்கித் தமிழர்களை விட்டு நீங்காதிருக்கிறாய். 'பழக்கமென்பது கொடியதோர் பிசாசு' என்று ஒரு மேதாவி கூறியுள்ளதாக எனக்கு ஞாபக மிருக்கிறது. அப்படியாயின் உன்னையோட்டுவதற்கு மந்திரவாதிகள் இருக்கவேண்டும். அத்தகையோர் உன்னை ஓட்டும் வரையிலும் நீ யொழியாய்போலும். ஆயினும் உலகத்திலே நல்லதும் கெட்டதும் உண்டல்லவா? அதுபோல உன்னையும் நல்லதென்று ஒரு சிலர் கூறுகிறார்கள். நல்ல பழக்கங்கொண்டவர்கள் உன்னை மெச்சுகிறார்கள். பிறர் அவர்களை மெச்சுகிறார்கள். தீய பழக்கங் கொண்டவர்களும் உன்னைக் கொண்டாடுகிறார்கள். ஆனால் பிறர் அத்தகையோரை ஏசுகிறார்கள். அப்பொழுது அது உன்னையுஞ் சாருகிறது. "பாழாய்ப்போன பழக்கமே" என்று கூறும்பொழுது உன் மனம் நோகவில்லையா! நொந்தால் தீயோரைவிட்டு நீ விலகுவாய் என்பது திண்ணம். எடுத்ததற்கெல்லாம் உன்னைக் கூப்பிடும் நாடு தமிழ் நாட்டைத் தவிர வேறு நாடு உலகத்திலேயே கிடையாதென்பேன். "இப்படிச் செய்வானேன்? அப்படிச் செய்தால் நன்றாயிருக்குமே" என்று யாரேனும் உரைத்தால், "இப்படிச் செய்து பழக்கம். ஆகையினால் அப்படிச் செய்யவேண்டாம்" என்ற விடைவருகிறது. உண்டி, உணவு, நடை, பாவனை, தொழில்முறை, குடும்ப விவகாரம், சடங்கு, இட்டலி,தோசை, இடக்கரடக்கல், குழூஉக்குறி முதலியன யாவுக்குமா நீ காரணமா யிருக்கவேண்டும்? என்னே உன் நிலைமை! நீ என்று எங்கள் சமூகத்தை விட்டு நீங்குவாய்! உன்னைக் கோராமல் இருக்க ஓர் உபாயம் தேடிவிடக்கூடாதா? ஒருவர் தகரத்தைத் துகாரம் மாதிரியாக எழுதி நகரத்தை ரகரம் மாதிரி எழுதினால், மற்றவரும் அப்படியே எழுதக் கற்றுக்கொண்டு விடுகிறார்கள். சில காலத்துக்குப்பிறகு பழக்கம்.ஏ! பழக்கமே! நீ அவர்களுடைய பற்களில் தவழ்கிறாய். பல விஷயங்களுக்கு நீ மூல காரணமன்றென்பதை நான் அறிவேன்: பலரும் அறிவார்கள். இருந்தும், உன் பட்டம் தான் பறக்கிறது. உனக்கு ஓர் வழிகாட்டுகிறேன். அதைப் பற்றினால் இந்த அபவாதத்திலிருந்து நீ தப்பித்துக்கொள்ள முடியும். என்னிடம் நம்பிக்கைகொண்டால் நீ நலமடைவாய். இல்லாவிட்டால் துன்புறுவாய். நான் சொல்வதைக் கேள். யாரேனும் தவறுதலாக நடந்து உன்னைக் காரணகர்த்தாவாக்கினால், அவர்களுடைய கன்னப் பொறியில் கனமாய்த் தாக்கிக் கண்ணியப்படுத்து. உடனே அவர்களுடைய கண்களில் ஒளி மிகும். பிரகாசம் உண்டாகும். தங்கள் குற்றத்தை உணர்வார்கள். திருத்தமுண்டாகும். நீயும் அபவாதத்திலிருந்து மீள்வாய்.! இந்த என் உபதேசம் ஏற்றதென்பதை நீ யறிந்தால் உடனே பின்பற்று. அதிக சீக்கிரத்தில் எடுத்ததற்கெல்லாம் நீ இம்சையுறும் அபாக்கிய நிலையிலிருந்து உய்யும் வகை உனக்கு ஏற்படும். ஐயோ! நீ படும்பாடு உலகில் வேறு யாரே பட்டனர்? உன்னைக் கோரும் விஷயத்தை என்று தமிழர்கள் கைவிடுவார்களோ அன்றே அவர்களும் நன்மை யடைவார்கள். நீயும் அதைக்கண்டு ஆனந்தங்கொள்வாய். பழக்கமே! உன்னிடம் எனக்குச் சிறிது பயமும் கிடையாது. இருந்தால் உனக்கு இவ்வுபதேசம் செய்ய முன்வந்திருக்கமாட்டேன். உன்னுடைய சகாயத்தைக் கோரியிருந்தால் உன்னைத் தலைப்பெயராகக்கொண்ட இவ்விஷயத்தையெழுத எனக்கு யோசனை தோன்றியிராது. என்னைத் திருத்தியது நீயே. என்னைத் திருத்தியதுபோல் என் தேசச் சகோதரர்களையும் நீ திருத்திவைப்பாயேயானால், உனக்கு எவ்வளவு புண்ணியமாகும். தருணங் கண்டு இது செய்வாய்.

## உவாட் டைலர் என்னும் இங்கிலாந்து தேசத்து ஒரு தீரன் "WAT TYLER".

[ஸ்ரீமான் ஸி. எஸ். சுந்தரமய்யர், பி.ஏ., எல்.டி.]

சுமார் 580 வருஷங்களுக்கு முன், பதினொன்று வயதுள்ள ஒரு வாலிபன் இங்கிலாந்து தேசத்து இராஜாவானான். அவ்வாலிபன் பெயர் 'ரிச்சேர்ட்' (Richard). இங்கிலாந்து ஜனங்களுக்கு அவனிடத்தில் வெகு அபிமானம். அவ்வரசன் வயதாக ஆக, தன் தகப்பனைப்போல் நல்ல குணங்கள் விருத்தியடைந்து ஏழை ஜனங்களிடத்தில் அன்பு கூர்ந்து, ஈவு, இரக்கம், பச்சாத்தாபத்துடன் அரசுபுரிவானென்று நம்பியிருந்தார்கள். அதுவுமன்றி, தைரியசாலியாய் வேற்றரசர்கள் இங்கிலாந்தின்மேல் படையெடுக்கா வண்ணம் காப்பாற்றுவானென்ற நம்பிக்கையும் பூர்ணமாயிருந்தது.

அந்தக் காலத்தில் அதிகப் பட்டணங்கள் இல்லை. ஜனங்கள் அநேகமாய்க் குக்கிராமங்களில்தான் வசித்து வந்தார்கள். இந்தக் காலங்களில் பட்டணங்களில் ஜனங்கள் கூடுவதுபோல் கூடுவதில்லை. அநேகமாய் எல்லோருக்கும் கொஞ்சம் கொஞ்சம் நிலம் இருந்துகொண் டிருந்தது. பாழுங் குடிசையென்றாலும், ஏதோ ஒவ்வொரு குடும்பத்தாருக்கும் ஒரு குடிசை இருந்தது. தன்னுடைய சொந்த நிலம் என்று சொல்லிக்கொள்ளும்படி ஒவ்வொருவனுக்கும் ஏதோ கொஞ்சம் நிலமும் இருந்துகொண்டிருந்தது. அந்நிலத்தில் ஒவ்வொருவனும், தன் குடும்பத்துக்கு வேண்டிய தான்யத்தைப் பயிரிட்டு ஜீவிப்பான். ரூபாய்க்கு இரண்டு படி அரிசி அகப்படவில்லையே என்று சொல்லி அழுகிறவர்களை நாம் தினந்தோறும் பார்க்கிறோமே! அம்மாதிரி ஜனங்கள் அக்காலத்தில் இல்லை. வீட்டுக்கு வீடு, பசு மாடுகள் உண்டு; பால் தரித்திரம் கிடையாது. இப்போது ரூபாய்க்கு இரண்டுபடி தண்ணீர்ப் பால் என்று மேன்விப்படுகிறோமே? அந்தப் பேச்சு அப்போது கேட்டிருக்கமுடியாது. தயிர் வெண்ணெய் முதலியவை சமர்த்தியாய் ஒவ்வொரு குடும்பத்தினருக்கும் உண்டு. சந்தைக்குப் போய் கறி, காய் வாங்குகிறோமே அம்மாதிரி இல்லை. அவர்களுக்கு வேண்டிய ஆடு, மாடு, பன்றி முதலியவை வீட்டுக்குவீடு கிராமங்களில் ஏராளமாயிருந்தன.

இவ்வளவு சௌகரியங்கள் இருந்ததாகக் காணப்பட்டாலும், ஜனங்கள் சந்தோஷமாகவேயில்லை. ஏனென்று கேட்பீர்களோ? இந்தச் சிறுவயதுள்ள இராஜாவின் சிற்றப்பன் அவன் யுக்த வயது வரும்வரையில் இராஜ்யத்தை ஆண்டுவந்தான். இம்மகானுபாவன் ஜனங்களை ஏராளமான வரி செலுத்தும்படி செய்தான். வரிகளை ஜனங்களால் செலுத்த முடியவில்லை. ஒவ்வொரு கிராமத்திலும் பெரிய மிராசுதார்கள் ஏழைகளிடத்தில் கடினமான வேலை வாங்கிவந்தார்கள். மிராசுதார்களின் வயல்களை உழவேண்டி யிருந்தது. விதை விதைக்க வேண்டி யிருந்தது. களையெடுக்க வேண்டியிருந்தது. வயல்கள் அறுப்பு அறுக்கவேண்டியிருந்தது. இவர்கள் காரியத்துக்கே நேரம் சரியாய்ப் போய்விட்டது. அவர்கள் தங்கள் சொந்தப் பயிர்களைக் கவனித்து மாசூல்களை வீட்டுக்குக் கொண்டுவர நேரமில்லை. அதைக் கொஞ்சம் கவனிப்போம் என்று எண்ணினாலும் அதற்குள் மழையால் பயிர் சேதமாகி மிகக் கஷ்டப்பட்டுவந்தார்கள்.

இப்படிக்கொஞ்சகாலம் கஷ்டத்தைப் பொறுத்து வந்தார்கள். எத்தனை நாள்தான் பொறுக்கலாம்? கஷ்டம் ஜாஸ்தியாகவே வீட்டுக்கு வீடு அதிருப்தி யுண்டாயிற்று. அப்பொழுதுதான் வருத்தம் தாங்கமுடியாமல் ஒரு வீட்டுக்காரன் அயல்வீட்டுக்காரனிடத்தில் துக்கங்களைச் சொல்லிக் கொள்ளுகிறது. அவன் மற்றொருவனுக்குத் தன் துக்கத்தைச் சொல்லுகிறது. இப்படி ஒரு கிராமத்தில் பரவி, மற்றொரு கிராமத்திலும் பரவி, கிராமங்களிலுள்ள ஏழைகள் எல்லாம் வாய்விட்டு அலற ஆரம்பித்தார்கள். சிலர் பணக்காரர்களாய்ச் சுகமாய் வாழ, நாமெல்லாரும் எவ்வளவோ கஷ்டப்படுகிறோம். நாம் ஏன் ஏழைகளாய் வருந்த வேண்டும் என்று ஒவ்வொரு மனிதனும், ஆண், பெண், குஞ்சு குழந்தை முதற்கொண்டு சொலல ஆரம்பித்துவிட்டார்கள். சுவாமி எல்லோரையும் சிருஷ்டித்தபோது, அவர் எல்லோரையும் சமமாய்த்தான் சிருஷ்டித்தார். நாம் எல்லோரும் கஷ்டப்படுகிறது! சிலர் சுகமாயிருக்கிறது. இந்த அநியாயம் எங்கே





அடுக்கும் என்று எங்கேயும் சொல்ல ஆரம்பித்தார்கள். கோவிலிலும் சரி, நான்குசந்தியும் கூடுமிடத்திலும் சரி, எங்கே ஜனங்கள் கூடினாலும் இதுவே பேச்சாயிருந்தது.

இப்படியிருக்கும்போது லண்டன் நகரத்திலிருந்து சில மனிதர்கள் புதிதாக வந்தார்கள். என்ன சேதி கொண்டுவந்தார்கள் தெரியுமா? இராஜாவின் சிற்றப்பன், ஜனங்கள் ஒரு வரி கொடுக்கவேண்டும் என்று உத்தரவு அளித்திருக்கிறாராம் என்பதே. இது வீட்டுக்குவீடு ஒரே நிமிஷத்தில் பரவிவிட்டது. நல்ல சமாசாரம் பரவுவது கஷ்டம். கெட்ட சமாசாரம் தந்திக்குமேல் பரப்பது சகஜம். இதைக் கேட்டதும் ஜனங்களுக்குப் புண்ணில் கோல் எடுத்துக் குத்தினது போலாயிற்று. ஆத்திரம் பொங்க ஆரம்பித்தது.

கொஞ்சம் ஆத்திரம் தணிந்ததும், ஜனங்கள் ஆங்காங்கு கூடி ஆலோசனை செய்ய ஆரம்பித்தார்கள். ஆக்ஷேபணை சமாதானம் எல்லாமான பிறகு அவர்களுக்குள் வந்த தீர்மானமாவது என்னவென்றால், இராஜாவுக்குக் குடிகள் ஏழ்மைத்தனம் தெரிந்தால் இந்த வரிபோடமாட்டார். அவர் சிற்றப்பனையும் இப்படிக் குடிகளை ஹிம்சிக்கச் சொல்லமாட்டார். பணக்காரர்களா யிருக்கும் மிராசுதாரர்களின் வயல்களில் நாம் நெற்றிவேர்வைவிழப் பாடுபடுவதைச் சகிக்கமாட்டார். நம்முடைய சொந்தப் பயிரைக் கவனிக்க அவகாசமில்லாமலும், நம்முடைய பயிரை அறுவடைசெய்யச் சாவகாசமில்லாமலும் நாம் பாடுபடும்வண்ணம் வைக்கமாட்டார். இம்மாதிரியெல்லாம் தீர்மானித்து, காலையிலும் மாலையிலும், வேலைக்குப் போகும்போதும், வேலைவிட்டுவீடு வரும்போதும், ஒருவருக்கொருவர் சொல்லிக்கொள்ளவே, லண்டன் "கௌண்டி" (ஜில்லா மாதிரி ஒரு பிரிவு)யைச் சுற்றிக் கெண்ட், யெஸ்ஸெக்ஸ் முதலிய மற்றும் சில கௌண்டிகளிலெல்லாம் ஜனங்கள் அதிருப்தி வெளியாயிற்று. இப்படி யிருந்துகொண்டிருக்கையில் திடீரென்று ஒரு நாள் ஜூன் மாதத்தில் கெண்ட் கௌண்டியிலிருந்த ஜனங்களெல்லாம் திரண்டு லண்டன் நகரை நோக்கி வந்தார்கள். இம்மாதிரி அதிருப்தியை எத்தனை நாட்கள்தான் அடக்கி வைத்துக்கொண்டிருக்கக் கூடும்? புகைந்து கொண்டேயிருந்த அதிருப்தி கொழுந்துவிட்டு எரிய ஆரம்பித்து விட்டது. 'முதுகில் அடித்தாலும் அடியுங்கள் சாமி, வயிற்றிலடிக்காதேயுங்கள்' என்று கூலியாட்கள் சொல்வதை நாம் எல்லோரும் கேட்டிருக்கிறோமல்லவா. இது சகஜமே. ஏழை ஜனங்கள் ஹிம்சை பொறுக்காமல் நேரே இராஜாவிடம் போவோமென்று தீர்மானித்தார்கள். தற்காலத்திற்கூட கூலியாட்கள், யந்திரசாலைகளில் வேலை செய்பவர்கள் நேரே கவர்னர் வீட்டுக்குப் போவோம் என்று போவதைக் கேட்டிருக்கிறோம். இப்படி அவ்வேழைகள் லண்டனை நோக்கிப் போகும்போது இவர்களுக்கு உள்ளுக்குள் ஒரு பயம் உண்டாயிற்று. பணக்காரர்கள் நம்மை உதைப்பார்களோவென்று பயந்து, சிலர் பழைய வில்லுகளையும் அம்புகளையும் எடுத்துச்சென்றார்கள். சிலர் பழைய கத்திகளை எடுத்துச்சென்றார்கள். மற்றும் சிலர் துருப்பிடித்த ஆயுதங்களானாலும் சரி, அவைகளை எடுத்துச் சென்றார்கள். கத்திகள் வில்லுகளில்லாதவர்கள் கைக்கு எது அகப்பட்டதோ அதை எடுத்துக்கொண்டார்கள். அரிவாளானாலும் சரி, ஆடு வெட்டுங்கத்தியானாலும் சரி, ஒன்றுமில்லாவிட்டால் ஒரு தடியானாலும் சரி, இவைகளையெல்லாம் தங்களைக் காத்துக்கொள்ளும்பொருட்டு எடுத்துச் சென்றார்கள்.

இப்படிப் போய்க் கொண்டிருக்கையில் "உவாட் டைலர்" எனப் பெயர்கொண்ட ஒருவன் அவர்களை இராஜாவிடத்தி லழைத்துப் போவதாய்ச் சொன்னான். அவனைத் தலைவனாகக்கொண்டு செல்லுகையில், போகும் வழியெல்லாம்ஜனங்கள் திரண்டுவந்துஇவர்களோடு கலந்து செல்ல ஆரம்பித்தார்கள். போகும்போது ஏழைகளை வழியிற்கண்டால் அவர்களை ஒன்றும் உபத்திரவம் செய்யவில்லை. வழியில் பணக்காரன் வீடு எங்கேயிருந்தாலும் சரி, அதில் புகுந்து அவ்வீட்டில் மாடு கன்று இருந்தால் அவைகளை விரட்டி அடித்துவிடுகிறது, களஞ்சியத்தில் தான்யமிருந்தால் புகுந்து கொள்ளையிடுகிறது, வீட்டுக்குத் தீவைக்கிறது, இம்மாதிரி தங்கள் வருத்தங்களுக்கு ஒரு போக்குக் காட்டிவிட்டார்கள்.

இந்த ஜனக்கூட்டம் இவ்வாறு அகம்பாவமும் கொடூர சுபாவமும் உள்ள பணக்காரர்களை வருத்திக்கொண்டே லண்டன்மாநகரை

நோக்கிச் சென்றது. இவர்கள் போனவிடங்களிலெல்லாம் ஜன்மத்தோடுதான் நம் கஷ்டம் தீருமோவென ஏங்கியிருந்த எளியோர் அநேகர் நாம் ஏன் இவர்களுடன்சேர்ந்து அரசனைக் காணக்கூடாது, இவர்களுக்கு நன்மை விளைந்தாலும் சரி, அன்றித் தீமை நேர்ந்தாலும் சரியெனத் துணிந்து இவர்களுடன் சேர்ந்தனர். ஆயிரம் பவுன் கொடுத்தாலும் தங்கள் தங்கள் வீடுவாசல் நிலங்களைவிட்டுப் பிரிய இஷ்டப்படாதவர்களாகிய இவர்கள் பசியின்கொடுமையன்றோ வீட்டைவிட்டு வெளியேறித் தங்களையே மறந்து, செய்யத்தகாத காரியங்களைச் செய்யும்படித் தூண்டிற்று? இவர்கள் கஷ்டஜீவிகள்தாம், அது வாஸ்தவமே. ஆனால் தற்சமயத்தில் இப்பெரும் ஜனக்கூட்டம் ஏதோ ஆத்திரத்தில் புறப்பட்டுவிட்டது. அன்ன ஆகாரமின்றி குளிரால்விறைத்தும் வெயிலால் உலர்ந்தும், ஆறு நாள் கால்சோர வழிநடந்து லண்டனுக்கு ஆறு மைல் தூரத்திலுள்ள பிளாக்ஹீத்தைச் சேர்ந்தனர். அக்காலத்து லண்டன் இப்போது காணப்படும் காட்சியையுடையதன்று. இப்போது காணப்படும் ஆகாயத்தை யளாவிநிற்கும் ஒழுங்கான சிங்காரமாளிகைகளும், விஸ்தாரமான வீதிகளும், இருப்புப் பாதைகளும், மின்சார விளக்குகளும் கிடையாது. பிளாக்ஹீத்துக்கும் லண்டனுக்கும் இடையே, இப்போது காணப்படும் வீடுகளுக்கும் தெருக்களுக்கும் பதிலாக நாணற்காடுகளும் செடி கொடிகளும் சேறுமே இருந்தன. லண்டன் பட்டிணத்துக்கு ஓர் ஸ்படிக மாலையைப் போன்ற தேம்ஸ் நதி மாத்திரமே ஓடிக்கொண்டிருந்தது.

உவாட் டைலரும் அவனைச்சார்ந்த இப்பெரும் ஜனத்திரளும் லண்டனை நோக்கி வருகிறார்களென்றும், வழியில் வீடுவாசல்களையெல்லாம் தீக்கிரையாக்கி வருகின்றனரென்றும் சமாசாரம் லண்டன் ஜனங்களுக்கு எட்டியவுடன் அவர்கள் நடுக்கங்கொண்டனர். ஐயோ பாவம்! அவர்கள் போலீஸ்காரர்களுக்கெங்கே போவார்கள்? அல்லது சைன்யத்துக்குத்தான் எங்கே போவார்கள்? தற்காலத்தைப்போல லண்டனில் ஜனங்களை ஆபத்தினின்றும் காக்கும்பொருட்டு மூலைக்கு மூலை போலீஸ் அதிகாரிகளாவது, எதிரிகளினின்றும் காப்பாற்றும் சக்தியுடைய காலாட்படையாவது பீரங்கிப்படையாவது கிடையாது. வல்லவனுக்குப் புல்லு மாயுதமென்னும் பழமொழிக் கேற்ப அக்காலத்து ஜனங்களும் ஒரு உபாயத்தால் எதிரிகளினின்றும் தப்பிப் பிழைத்துவந்தனர். தெம்ஸ் நதியானது லண்டன் மாநகருக்கு ஓர் மாலை போலிருந்ததால் 'லண்டன் பிரிட்ஜ்' என்ற அதன் பாலத்தைத் தாண்டினாலொழிய அந்நகரத்தை நெருங்குவது அசாத்தியமான காரியமாயிருந்தது. இந்தப் பாலத்தின் மத்திய பாகத்துப் பலகையானது நாம் ஏணிகளைச் சாத்திக்கொண்டு ஏறுவதும் இறங்குவதும் போலவே, பாலத்தின் மட்டத்திற்கு தழைக்கவும், வேண்டாதபோது தூக்கி இழுத்துவிடவும் கூடும். இந்தப் பலகையானது தழைக்கப்பட்டுள்ள சமயங்களில் மாத்திரமே ஜனங்கள் வெளியிலிருந்து லண்டனுக்குள் வரலாம். அப்படித் தழைக்கப்படாத சமயங்களில் நதியைத்தாண்ட முயற்சித்தால், நதியில் விழுந்து சமுத்திரத்தைக் காணலாமேயொழிய லண்டன் பட்டணத்தைக் காணமுடியாது. அப்படியேமிஞ்சி நதியைத் தாண்டிவிட்டாலும் பட்டிணத்துக்குள் நுழைவதற்கு ஒரு கோட்டைக் கதவுபோன்ற கதவு ஒன்று உண்டு. இதுவும் திறக்கப்பட்டாலன்றி நகரத்தினுட்செல்லுவது சாத்தியமில்லாமலிருந்தது. இம்மாதிரி தூக்கவும் தழைக்கவும் கூடிய பாலம் அக்காலத்து லண்டனர்களுக்குப் பீரங்கிப்படையாகவும் கோட்டைக்கதவுபோன்றகதவே காலாட்படையாகவும் விளங்கிவந்தன. இச்சமயத்துக்கு இவை இரண்டுமே உதவிற்று. லண்டன் வாசிகள் இந்தஜனக்கூட்டம் தங்கள் நகரத்தை நோக்கிவரும் செய்தியைத் தெரிந்துகொண்டதும், இப்பாலத்தின் பலகையைத் தூக்கிவிட்டு கதவையும் அடைத்துவிட்டனர். இப்பெரும் ஜனத்திரளோ இவ்விஷயத்தை யறிந்ததும், அதிக மனச்சோர்வுடன் இப்பாலத்தினின்று பிளாக்ஹீத்துக்குத் திரும்பிச்சென்றனர். இக்காலத்தில் இராஜசைன்னியங்களுக்கு நடக்கும் உபசாரணையில் கால்திட்டம்கூட இவர்களுக்குக் கிடையாது. இவர்களும் ஒருவிதத்தில் சைன்னியந்தான். ஆனால் 'இராஜ' என்னும் பட்டத்துக்குப் பதிலாக 'ஏழை' என்ற பட்டம் மாத்திரமே அளிக்கவேண்டும். ஆகையால் இந்த ஏழைச் சைன்னியம் அன்ன ஆகாரமின்றி வருந்திற்று. கூடாரமும் உடுப்புகளுமின்மை

துழாவிக் காய்ச்சாதது கஞ்சியும் அல்ல, வினவிக் கட்டாதது கலியாணமும் அல்ல.



யால் இரவில் குளிர் தாங்கமுடியாமல் சுற்றியிருந்த நாணற் காடுகளுக்குத் தீமூட்டினர். அத்தீ கொழுந்துவிட்டு ஓங்கி எரிவதைக் கண்ட லண்டனர்களுக்குப் படுக்கையிலேயே உதறல் எடுத்துவிட்டது.

இம்மாதிரியே மறுநாள் முழுவதும் இந்த ஜனத்திரள் பசியாலும் தாகத்தாலும் வருந்திற்று. புயற்காற்றில் திசைதப்பித் தத்தளிக்கும் ஒரு கப்பலிலுள்ள ஜனங்களுக்குத் துறைமுகம் ஒன்று தென்பட்டதுபோல், இப்பரிதபிக்கும் ஜனங்களுக்குப் பாலம் தழைக்கப்பட்டுவிட்டதென்ற செய்தி தெரிந்தது. உடனே எல்லா வருத்தத்தையும் மறந்து இந்த ஜனக்கூட்டம் அதிக குதூஹலத்துடனும் இரைச்சலுடனும் லண்டனுக்குட் சென்றது. புற்றீசல் போல் சாரி சாரியாய் அச்சிறு பாலத்தின் மார்க்கமாயும் நெருக்கமான தெருக்கள் வழியாயும் சென்றனர். இவர்களைப் போலொத்த ஏழைகள் மாத்திரமே வெளியில் தலைகாட்டத் துணிந்தனர். அவ்வேழைகள் தங்கள் தங்கள் சக்திக்கேற்றவாறு ரொட்டி முதலிய தின்பண்டங்களைக்கொண்டும் சாராயத்தைக் கொண்டும் இவர்களை உபசரித்தனர். அகப்பட்டதை உண்டு அந்த ஜனங்களும் கொஞ்சம் பசியாறினர்.

ஏழை லண்டன்வாசிகள் இவர்களை இப்படி உபசரிக்க, பணக்காரர்கள் இருக்குமிடம் விளக்கேற்றிப் பார்க்கவேண்டியதாய் விட்டது. ஏனென்றால், அவர்கள் இக்கூட்டம் தங்களை என்ன செய்துவிடுமோ வென்ற பயத்தால் பதுங்கிக்கொண்டிருந்தனர். சிலர் தங்கள்வீடுகளை அழுந்தத் தாளிட்டுக்கொண்டு திரைகளின் இடுக்காலும் ஜன்னல்களின் இடுக்காலும் வெளியே என்ன நடக்கிறதென்று அச்சத்துடன் பார்த்துக் கொண்டிருந்தனர். இது இப்படியிருக்க இராஜன் எங்கேயென்றாலோ 'லண்டன் டவர்' என்ற ஒரு பலமான கோட்டையில் சில பிரதானிகளால் பத்திரப்படுத்தப்பட்டார். கொஞ்ச நாழிகைவரையிலும் கால் நடை சப்தமும் சந்தை இரைச்சல்போன்ற இரைச்சலும் மாத்திரமே காதில் விழுந்துகொண்டிருந்தது. இப்படிப் போய்க்கொண்டிருக்கும்போது ஒரு சிங்காரமாய் ஜோடிக்கப்பட்ட மாளிகையை அடைந்தனர். அது இராஜனுடைய சிற்றப்பனுடையமாளிகையைத் தவிர வேறன்று. இரண்டுவிரோதிகள் ஒருவரையொருவர் நேரில் கண்டுவிட்டால் எப்படி ஆத்திரம் தாங்காமல் பொங்கி யெழுந்து கைகலந்து விடுகிறார்களோ அம்மாதிரி இச்சனத்திரளுக்கு அம்மாளிகையைக் கண்ட மாத்திரத்திலேயே ஆத்திரம் பொங்கி யெழுந்ததென்றால், அம்மாளிகை யஜமானனைக் கண்டுவிட்டால் எப்படி யிருந்திருக்குமென்று நீங்களே யோசித்துப் பாருங்கள்! உடனே இடி, தள்ளு, பொசுக்கு என்று கத்திக்கொண்டே இக்கூட்டம் சிதையடுக்குவதுபோல் மரத்துண்டுகளை அதைச்சுற்றிலு மடுக்கிவிட்டு ஒரு பந்தத்தைக் கொண்டு தீமூட்டினர். இம்மாதிரியே இன்னும் சிலவீடுகளையும் தீக்கிரையாக்கினர். இத்தீயினின்றும் ஓங்கிய ஜ்வாலையைக் கண்டு சந்திரனும் நக்ஷத்திரமும்கூடபயந்து இரண்டு ராத்திரி மறைந்துவிட்டன. இரவில்கூட ஆகாய மண்டலம் இஜ்ஜ்வாலையால் சூர்யோதயம்போலவே சிவந்து விளங்கிற்று.

இது, இவ்வாறு நிற்க, ரிச்சர்டு இளவரசர் 'லண்டன் டவரில்' பத்திரமாய்க் காப்பாற்றப் பட்டு வந்தார். ரிச்சர்டு இளவரசு, வயதில் சிறுவராயினும் தைர்யத்திலும் மனோதிடத்திலும் பெரியோர்க்கீடாவர் என்பது அவர் நடத்தையிலிருந்து நன்கு விளங்கும். ரிச்சர்டு தாம் ஜனங்களுடன் நகரத்திற்கு வெளியேயுள்ள 'ஸ்மித் பீல்ட்' என்ற மைதானத்தில், பேசப் பிரியப்படுவதாக உவாட் டைலருக்கு சொல்லியனுப்பினார். 'ஸ்மித் பீல்ட்' என்னும் மைதானம் அதிக விஸ்தீர்ணமுள்ளது. அங்கே குதிரைப் பந்தயம், குஸ்திச் சண்டை முதலிய விளையாட்டுகள் நடந்துவந்ததுமன்றி ஒவ்வொரு வெள்ளிக்கிழமையன்றும் சந்தையும் கூடி வந்தது. நெருக்கமான நகரத்துவீதிகளில் ஜனங்களைக் கண்டு பேசுவதைக் காட்டிலும் இப்பெரிய மைதானத்தில் காணுவதே உசிதமென்று எண்ணி "ரிச்சர்ட்" இங்கே அவர்களைப் பார்ப்பதாகச் சொன்னார். இவர்களைப் பார்ப்பதற்கு முன், ரிச்சர்டு "வெஸ்ட்மின்ஸ்டர்" மாதா கோவிலுக்குச் சென்று, அங்கே தன்னைச் சாதுர்யமாகவும் புத்திசாலித்தனமாகவும் பேச வல்லவனாக்கி, தன்னைக் காத்தருளுமாறு கடவுளைப் பிரார்த்தித்தார்.

துளசிக்கு வாசனையும், முள்ளுக்குக் கூர்மையும் முளைக்கிறபோதே உண்டு.'

அதன் பின்னர் "ரிச்சர்டு" இதா பிரதானிகளுடன் குதிரைமேல் ஏறிக்கொண்டு ஸ்மித்பீல்டை அடைந்தார். அங்கே அவருக்கு நேரே ஜனங்கள் வரிசை வரிசையாய் ஒழுங்காக நின்றனர். இளவரசு அச்சனங்களின் குறைகளைத் தீரப் பொறுமையுடன் காது கொடுத்துக் கேட்டபின்னர், உவாட்டைலர் ஜனத்திரளினின்றும் வெளியே வந்து மைதானத்தின் மத்தியை யடைந்து தாழ்ந்து நமஸ்கரித்து நின்று அரசனுக்குக் கைகொடுத்தான். பின்னர் பதட்டமாகவும் பேச வாரம்பித்தான். இதைக் கவனித்த இளவரசனின் கூட்டாளி யொருவன்'ஏ திருடா!வாயை மூடு' என்று சொன்னான். இதனால் கோபம் மூண்டு, உவாட்தன் வாளை அவன்மேல் வீசினான்.எதிரி கவசதாரியா யிருந்தமையால், அவன் அவ்வாளுக்குத் தப்பினான். இதற்குள்ளாக மற்றொருவன் சரேலென்று உவாட் மேல் பாய்ந்து தன் கத்தியின் ஓரே வீச்சில் படுகாயப்படுத்திவிட்டான். இக்காட்சியைக் கண்டு நின்ற ஜனத்திரள் வீராவேசங்கொண்டு 'இனி விடுவதில்லை, இருந்தாலும் சரி செத்தாலும் சரி'யெனக் கூச்சலிட்டுக்கொண்டு தங்கள் தங்கள் விற்களை நாணேற்றி அம்புதொடுத்து இளவரசர்மேல் பிரயோகிக்கத் தீர்மானித்து விட்டனர். இச்சமயத்தில் ரிச்சர்டு இளவரசர் என்ன செய்தார் என்று எண்ணுகிறீர்கள்? அவர் புறங்காட்டி தன் மனிதர்களுடன் 'செத்தேன் பிழைத்தேன்' என்று ஓடவாரம்பிக்கவில்லை. தனித்து மைதானத்தின் மத்தியில் நின்றுகொண்டு, "எனதருமைக் குடிகளே! நீங்கள் மனதார உங்கள் அரசை மாய்க்கத் துணிவது தர்மமோ? நானே உங்கள் தலைவனாக நின்று உங்களைச் சகல ஆபத்துக்களினின்றும் காப்பாற்றுவேன். என்னை நம்பி என் சொற்படி நடவுங்கள்" என்றார்.

இவ்வாறு சொல்லிவிட்டு, அவர்களை இன்னும் கொஞ்சதூரம் ஒரு சோளக் காட்டிற்கு அழைத்துச் சென்று அவர்கள் குறைகளைத் தீர்க்கத் தன்னாலியன்றமட்டும் முயலுவதாக வாக்களித்தார். இதற்குள்ளாக இக் குடியானவர்களில் சிலரைச் சுட்டு, கூட்டத்தைக் கலைத்து விரட்டிவிடும்பொருட்டு சிலர் சிப்பாய்களை அழைத்துவந்தனர். ஆனால் ரிச்சர்டு இக்குடிஜனங்கள் தன்னிடத்தில் முற்றிலும் நம்பிக்கை வைத்துவிட்டபடியால், அவர்களுக்கு ஒருவித தீங்கும் விளைவிக்கா வண்ணம் வற்புறுத்தினார். கெண்டைச் சார்ந்த குடியானவர்களும் தாங்கள் அரசனைக் கண்டுவிட்டோமென்ற மனச் சமாதானத்துடன் வீடுபோய்ச் சேர்ந்தனர்.

ரிச்சர்டும் லண்டனை யடைந்தார். அங்கே அவர் தாயார் தன் பிள்ளை உயிருடன் திரும்பி வந்த சந்தோஷத்தால் ஆனந்த பாஷ்பம் பொழிய அவரைக் கட்டியணைத்து "என் செல்வமே! நான் உனக்காக இன்றையதினம் பட்ட விசாரத்தை என்னவென்று சொல்லுவேன்!" என்றனள். அதற்கு அவர் "அம்மா! அது வாஸ்தவமே. ஆனால் இன்றையதினம் நான் போய்ஜனங்களைச்சமாதானம்செய்திராவிடின் நம் குலத்தின் பெருமையையும் அரசியலையும் இழந்திருப்பேன் என்பது நிச்சயம். நான் இன்றையதினம் நடந்துகொண்ட விதத்தினால் இழந்த இராஜ்யத்தை யடைந்ததுமன்றி. நம் குலப்பெருமையையும் அரசையும் அதன் தர்மத்தையும் நிலைநாட்டினேன். இதைக் குறித்து ஈசுவரனைத் துதிசெய்வோம்" என்றார்.

---

(161-ம் பக்கத் தொடர்ச்சி)

மேன்மையாகக் கூறப்படும் சரியைகிரியைகளை அனுஷ்டிப்பவ ரெவராலும் கற்றறிவதற்கரிதான துரியநிலைக் கப்பால் துரியாதீதமாக நிற்பதும், ஜீவராசிகளுக்குள்ள அறிவாயும், உருவமில்லாததாயும், உருவமுடையதாயுமிருப்பதும், சகலவுலகங்களிலும் ஜடங்களிலும் அவைகளிலுள்ள உயிர்களிலும் முழுவதுங் கலந்துநிற்பதும், சிவஞானத்தை மிகுதியாயுடைய தவசிகள் உண்மைப்பொருளாக அறிவினால் அறிந்துகொண்டதும், ஆதியில் எங்கும் வியாபித்து நின்றதிற் சிறிதுங் குன்றாது நிற்பதும், சாதிகுலம் பாராது அன்பையே பெரிதாகமதிப்பதும், மெய்யன்பர்கள் புகழ்ந்துபேசும் உலகப்பற்றழிந்த வெட்டவெளியான ஆகாசத்தை நாடியனுபவிப்பவர் நிலையாக அமரும் மோக்ஷசாம்பிராச்சியமாயிருப்பதும், பேரானந்தக் கடலாயிருப்பதுமான நினது வீரக்கழல்களையணிந்த பாதபங்கயங்களைக் கடையேனும் நாடி, காயேந்திரியங்களின் தாபந்தருமாசைகளைப் பூர்த்திசெய்யவேண்டுமென்று ஞானேந்திரியங்களி லெழும் சபலத்தை வேருடன் அழித்துவிட்டு அப்பதமங்களில் வந்து சேர்வேனோ? [சேர்வேன் சேரவேண்டுமென்ற ஆசை என் மனத்திற் குடிகொள்ளுமாகில்.]





# குருடர்களின் கல்விப்பயிற்சி

## EDUCATION OF THE BLIND

[ஸ்ரீமான் என்.ஆர்.கேதாரிராவ்,எம்.ஏ.எல்.டி.]

முன்னொரு வியாஸத்தில் 'குருடர்களின் கல்விப் பயிற்சி' என்ற விஷயத்தைப்பற்றிப் பொதுவாய்ச் சில சங்கதிகளைக் கூறினோம். இவ்வியாஸத்தில்,பார்க்கக் கண்ணுமற்று,கேட்கச் செவியுமற்று, இதுவும் போதாமல், பேசுவதற்கு வாயுமற்று ஊமையாயுமுள்ள ஹெலன் கேல்லர் என்ற அமெரிக்கா தேசத்துப் பெண் ஒருத்தி தன் புத்திசாலித்தனத்தினாலும் விடாமுயற்சியாலும் இக்குறைகளை ஒருவாறு நீக்கி, அவ்விடத்திலுள்ள சர்வகலாசாலையில் B. A. (பி. ஏ.) முதலிய பட்டப்பரீக்ஷைகளில் தேறி, கணிதம், வானசாஸ்திரம் ஆகிய இவைகளில் நுட்பமான ஞானம்பெற்று, லத்தீன், க்ரீக், ஜெர்மன், ப்ரெஞ்சு, இங்கிலீஷ் இவ்வைந்து பாஷைகளிலும் நிபுணியாய், உலகெங்கும் புகழ்பெற்றுவரும் ஆச்சரியத்தைப்பற்றிக் கூறுவோமாக!

இம்மாது அமெரிக்காதேசத்திலுள்ள டஸ்கம்பியா என்ற ஒரு கிராமத்தில் 1880-ம் வருஷம் ஜூன்மாதத்தில் பிறந்தவள். பிறந்து ஒன்றரை வருஷம் வரையிலும் ஒருவித கஷ்டம் இல்லாமல் சௌக்கியமாய் ஆடியோடிக்கொண்டிருந்தாள். பிறகு ஒரு அபாயமான ஜ்வரம் வந்து, அதன் காரணமாய்ப் பிழைப்பதே அரிதாய்விட்டது. சிறந்த அனுபவமுள்ள வைத்தியர்கள் வந்துபார்த்தும், வெகு சிரமமாயிருந்தது. கடைசியில் அவள் உயிருக்கு அபாயம் வராமலிருந்ததேயல்லாமல் ஊமையாயும், செவிடாயும், குருடாயும் போய்விட்டாள்.

இவ்வளவு துரதிருஷ்டமான குழந்தையை வைத்துக்கொண்டு என்னசெய்வது என்பது இவள் பெற்றோர்களுக்குப் புலப்படவேயில்லை. நாலைந்து வருஷம் வரையில் அவர்களுக்கு இதே வியாகூலமாயிருந்தது. ஒருதரம் இவளை அழைத்துக்கொண்டு வந்து, பால்டிமோரிலுள்ள கண்வைத்தியர்களிடம் காட்டியதில், தம்மால்' ஒரு உதவியும் செய்யமுடியாது என்று சொல்லிவிட்டனர்.

இப்படியிருக்க, டெலிபோன் முதலிய அபூர்வ இயந்திரங்களை நூதனமாய்க் கண்டுபிடித்த க்ரேஹாம் பேல் என்பவர், "இவளை போஸ்டன் நகரத்துக்கு அழைத்துக்கொண்டு போனால் ஏதாவது நன்மை விளையும். முன்னொரு தரம் இதேமாதிரி ஊமையாயும், குருடாயும் செவிடாயுமிருந்த லாரா பிரிட்ஜ்மன் என்பவளுக்கு டாக்டர் ஸாம்வெல் ஹோ என்பவர் பலவித உபாயங்களால் கல்வி கற்பித்திருக்கிறார். அவர் இப்பொழுது காலஞ்சென்றிருப்பினும், அவருடைய போதனாமுறையை அங்குள்ளவர் அனுசரித்து வருகின்றனர். அங்கே இவளை நீங்கள் அழைத்துச்சென்றால் அவசியம் நன்மை விளையும்" என்று வற்புறுத்தினார்.

அப்படிச்செய்ய இவர்களும் சம்மதித்தார்கள்; உடனே அன்ன ஸல்லிவன் என்ற உபாத்தியாயனியிடம் இவள் கல்விகற்க ஆரம்பித்தாள்.

"இவளுக்குத்தான் கண்ணும் தெரியாது, காதும் கேட்காது, பேசவும் முடியாதே, எப்படி இவள் கல்வி கற்கமுடியும்?" என்று சிலருக்கு ஒரு சந்தேகம் உதிக்கலாம்.

ஆனால், இவள் கல்வி கற்றவிதம் சாதாரணமானதன்று. அரிச்சுவடியைப் பார்த்து வாசித்தாளில்லை; உபாத்தியாயர் முகம்பார்த்து ஒன்றும் உணர்ந்தாளில்லை; மற்ற சிறுவர் சிறுமிகள் வாசிப்பதைக் கேட்டுச் சந்தேகம் தெளிந்தாளில்லை; செய்யுள் வாசகம் முதலியவற்றைத் தன் வாயால் ஒப்பித்தாளில்லை; பின்னை எப்படித்தான் இவள் பலபாஷைகளில் நிபுணியாய், பல சாஸ்திரங்களில் தேர்ந்தவளாய், பல பரீக்ஷைகளிலும் தேறினாள் என்றால், அது அற்புதத்திலும் அற்புதமே. அதை நம்முடைய சிற்றறிவுக்கெட்டியபடி விவரிப்போம், கவனித்துக் கேளுங்கள்.

முதன்முதலில், உபாத்தியாயர், இவள் உள்ளங்கையில் 'ரொட்டி' 'பொம்மை', முதலிய சிறு வார்த்தைகளைத் தன் விரலால் எழுதி, பிறகு ஒரு ரொட்டித்துண்டையாவது, ஒரு பொம்மையையாவது கையில் கொடுப்பது வழக்கம். இப்படிச் செய்வதால் கையில் எழுதும் வார்த்தைக்கும், கொடுக்கும் பொருளுக்கும் ஏதோ சம்பந்தம் இருக்கவேண்டும் என்பது தெரியவந்தது.

நாளாவர்த்தியில் இவளுக்கு ஏதாவது வேண்டுமானால், உபாத்தியார் உள்ளங்கையில்

இவள் தன் விரலால் 'ரொட்டி', 'பொம்மை', 'நீர்' முதலிய வார்த்தைகளை (தனக்கு எது வேண்டுமோ அதை)ச் சமயோசிதமாக எழுத ஆரம்பித்தாள்.

இப்படியாகக் கஷ்டப்பட்டுச் சொல்லிக் கொடுத்ததில், ஒரு வருஷத்துக்குள்ளாக இவளுக்கு அறுபது வார்த்தைகள் தெரியவந்தன. ஆயினும் இதுவரையில் தனக்குத் தெரிந்ததெல்லாம் ஒரு அணுமாத்திரமென்றும், தெரியாத விஷயம் அதிகமாயிருக்கிறதென்றும் இவளுக்குப் போதிக்கவேண்டுமே! இதற்கு என்ன உபாயம் செய்யலாம்? ஒரு பதார்த்தத்துக்கும், மற்றொரு பதார்த்தத்துக்குமுள்ள சம்பந்தா சம்பந்தத்தை இவளுக்கு எப்படிப் போதிப்பது? உதாரணமாக, ஒரு குடத்தில் தண்ணீர் இருக்கிறது. 'குடம்' என்றால் இவளுக்குத் தெரியும். 'தண்ணீர்' என்றாலும் தெரியும். தண்ணீர் குடத்திலிருக்கிறது என்ற விஷயத்தை எப்படி இவள் மனதில் கொண்டுவரலாம்?" என்று இவள் உபாத்தியாயர் யோசித்துக்கொண்டேயிருந்தார்.

அப்படியிருக்க ஒரு நாள் தண்ணீரில் இவள் கையை அமிழ்த்தி, உள்ளங் கையில் 'தண்ணீர்' என்ற வார்த்தையை எழுதினார். பிறகு குடத்தைக் கையில் கொடுத்து 'குடம்' என்ற வார்த்தையை எழுதினார். பிறகு தண்ணீரைக் குடத்தில் ஊற்றிக் கையில் கொடுத்தார். உடனே இவ்விரண்டிற்குமுள்ள சம்பந்தம் ஹெலன் கெல்லருக்கு நன்றாய்ப் புலப்பட்டது. இனி ஒவ்வொரு பொருளின் பெயரைமட்டும் தெரிந்துகொள்ளாமல், பொருள்களின் சம்பந்தா சம்பந்தத்தையும் அறியலானாள்!

இனி ஞானம் உதிப்பது சுலபமான காரியமென்றே இவள் உபாத்தியாயரும் ஆனந்தக் கண்ணீர் சொரிந்தார்!

ஆயினும் இன்னும் ஒரு பெருங் கஷ்டம் இருந்தது. "நமக்குத் தெரியும் விஷயங்களில் சிலவற்றைத்தான் நாம் தொட்டுக் காட்டலாம். (உதாரணம்:— நாற்காலி, பென்ஸல், புஸ்தகம், ஜன்னல் முதலியவை.) அன்பு, இரக்கம், சந்தோஷம், வியாகூலம் முதலிய மனோபாவங்களைச் சுட்டிக்காட்ட முடியவே முடியாது. இவற்றையெல்லாம் இவளுக்கு அர்த்தமாகும்படி எப்படிச் சொல்லிக் கொடுப்பது?" என்ற ஏக்கம் உபாத்தியாயருக்கு ஏற்பட்டது. ஏனெனில், இவ்வகைத்தான மனோபாவங்கள் தெரியாமற் போனால் கல்வி யபிவிருத்தியடையாது. 'நட்பின் சிறப்பு,' 'ஈகையின் மேன்மை' முதலியவை தெரியாவிட்டால் நமக்கும் ஆடுமாடுகளுக்கும் வேற்றுமை என்ன? 'நியாய அநியாய' பாவங்களும், 'நன்மை தீமை' முதலியவைகளும் நமக்குத் தெரிகின்றன. மற்ற ஜந்துக்களுக்குத் தெரிவதில்லை. ஆதலாலன்றோ மானிட ஜன்மம் சிறப்பாய் விளங்குகிறது? இவ்வேறுபாட்டைச் சொல்லிக் கொடுக்காவிட்டால் கல்வி பூரணமாகுமோ? 'அன்பு,' 'நட்பு,' முதலிய மனோபாவங்களே தெரியாவிட்டால் இவைகளை எப்படிக் கற்றுக்கொடுக்க முடியும்? ஒரு தரம் 'அன்பு' என்ற வார்த்தையை இவள் உள்ளங்கையில் வழக்கம்போல் எழுதியபோது, 'அன்பை எனக்குக் காட்ட முடியாதோ?' என்றாள். அது சாத்தியமானதன்று என்றவுடன், 'அது என்ன பூக்களிலுள்ள வாசனையா? சூரியனுடைய வெப்பத்தை ஒத்திருக்குமா?' என்று இவ்வாறாய்க் கேள்வி கேட்க ஆரம்பித்தாள். இதற்கென்ன பதில் சொல்வது என்பது உபாத்தியாயருக்கு எளிதில் தெரியவில்லை.

இஃது இவ்வாறாக, ஒரு விஷயத்தைப்பற்றிச் சொல்லிக்கொடுக்கும்போது ஹெலன் கெல்லருக்கு அது சுலபமாய் விளங்கவில்லை. அவள் அது யாதாயிருக்கவேண்டுமென்று யோசித்துக்கொண்டேயிருந்தாள். அந்நிலைமையில் உபாத்தியாயர் அவள் நெற்றியைத் தொட்டு, அதில் தன் விரல்களால் 'யோசனை' என்ற வார்த்தையை எழுதினார். உடனே விஷயம் நன்றாய் விளங்கியது. தன் மனோநிலைமைக்குத்தான் 'யோசனை' என்ற பெயர் என்பது தெரிந்தது. அப்படியே 'அன்பு,' 'உற்சாகம்,' முதலியவைகளும் மனோபாவங்களின் பெயர்களே தவிர அவைகளைத் தொட முடியாதென்பது தெற்றெனத் தோன்றியது! உபாத்தியாயருக்கும் மாணாக்கருக்கும் அதிக சந்தோஷம் உண்டாயிற்று!

இனி ஹெலன் கெல்லருக்குப் போதிப்பது சுலபமாய்விட்டது. தொட்டு வாசிக்கும்படியான எழுத்துகளில் புஸ்தகங்களை அச்சிட்டு உபாத்தியாயர் இவளுக்குக் கொடுத்துவந்தார். மணற்கேணியை வெட்ட வெட்ட, எப்படித் தண்ணீர் அதிகரிக்கின்றதோ, அப்படியே வாசிக்க வாசிக்க இவள் புத்தியும் நுட்பமடைந்தது.

கல்வியில் போதுமான தேர்ச்சி யடைந்தவுடனே இவளுக்கு ஸர்வகலாசாலைப் பரீக்ஷைகளில் தேறிப் பட்டப் பெயர்வாங்கவேண்டும் என்ற அவா அதிகரித்தது. அச்சிட்ட கடிதங்களைப் பார்ப்பதற்கும் பரீக்ஷகர் கேள்விகளைக்கிரகிப்பதற்கும் இவளால் முடியாததால், ஸர்வகலாசாலைச் சங்கத்தார் இவள் பரீக்ஷைக்கு வரக்கூடாது என்றுசொல்லிவிட்டார்கள். ஆனால் மிஸ் ஸல்லிவன் என்ற உபாத்தியாயர் நேரில் வந்து, "பரீக்ஷை வினாக்களை இவளுக்கு அர்த்தமாகும்படி இவள் உள்ளங்கையில் நான் எழுதுகிறேன். அதற்கு இவள் என் உள்ளங்கையில் எழுதி அளிக்கும் விடைகளை நான் வேறு கடிதத்தில் பரீக்ஷகர்களுந் தெரியும்படி எழுதுகிறேன்" என்று மிகவும் மன்றாடினாள். அச்சங்கத்தார், "இவளுக்குப் பரீக்ஷை தேறுவது என்னமோ அசாத்தியம் தான். பரீக்ஷைக்குப் போயாவது உட்கார்ந்தோம் என்ற திருப்தியாவது இருக்கட்டுமே" என்று நினைத்துப் பரீக்ஷைக்கு வர உத்தரவளித்தனர்.

பரீக்ஷையான பிறகு பார்த்ததிலோ, எல்லோரும் ஆச்சரியப்படும்படியாய் விடையளித்திருந்தாள். ஆதலின் அவ்வருஷத்தில் இவளே முதன்மையாய்த் தேறினாள்!

ஆயினும், முதலில் பரீக்ஷைக்கு வரக்கூடாது என்று ஸர்வகலாசாலைச் சங்கத்தார் சொன்னார்களே என்பது பெரிய மனக்குறையாயிருந்தது. ஆதலின் கொஞ்சங் கொஞ்சமாய் ஒவ்வொரு எழுத்தையும் உச்சரிக்க கற்றுக் கொடுத்தாள். இதுவரையிலும் பேசினதேயில்லை யாதலால், இப்படி உச்சரிப்பது வெகு சிரமமாயிருக்கிறது. பத்து வார்த்தை பேசின உடன் வியர்த்துவிடுகிறது.

அப்படியிருப்பினும், பிறந்ததுமுதல் திக்கிப் பேசும் வழக்கமுள்ள டிமாஸ்தனீஸ் என்பவர், எப்படிப் பிரசங்கஞ் செய்வதில் மேம்பாடு அடைந்தனரோ அப்படியே இவளும் நாளடைவில் நன்றாய்ப் பேச ஆரம்பித்துவிடுவாள் என்று நினைக்க இடம் இருக்கிறது.

இவள் புத்திசாலித்தனத்தையும் விடாமுயற்சியையும் மெச்சி அவ்வூரார் 'ரெந்தம் காடேஜ்' என்றதோர் மாளிகையைக் கட்டி இவளுக்கு இனாமாய்க் கொடுத்திருக்கிறார்கள். இன்னும், இவள் பெயரும் புகழும் உலகெங்கும் பரவியிருக்கிறது. திடமனதுடன் பல சாஸ்திரங்களையுங் கற்று, இன்னும் பல வருஷங்கள் வரையில் நீடூழி இம்மாது வாழ்வாளாக என்பதே எமது பிரார்த்தனை.

(தொடரும்.)

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஜி. ஏ. சுந்தரம், பி. ஏ., பி. எல்.]

### வழக்குத்தீர்த்த விவாகம்

திருநெல்வேலி ஜில்லாவில் விடையூர் என்னும் கிராமத்தில் சங்கரநமச்சிவாய முதலியார் ஸ்வீகார குமாரர் சித்திவிநாயகமுதலியார் எனப் பெயர்பூண்ட பண்ணையார் ஒருவர் இருந்தார். அந்தப் பக்கங்களில் அவர்தான் பெரிய பட்டாதார். சங்கரநமச்சிவாய முதலியார் சந்ததியில்லாமல் இறந்துபோனபின் அவர் மனைவி உமையாயி, சித்திவிநாயக முதலியாரை ஸ்வீகாரம் எடுத்துக்கொண்டாள். பெரிய பண்ணையாரானாலும், சித்திவிநாயக முதலியாருக்கு உலகவியாபாரங்களில் அதிகத் தேர்ச்சியில்லை. அவர் யாரையும் நம்பும் சுபாவமுள்ளவர்.

சங்கரநமச்சிவாய முதலியார் தம்பி ஈசானமூர்த்தி முதலியார் குமாரர் குற்றாலலிங்க முதலியாரும் விடையூரில் ஒரு பெரிய மிராசுதார். அவர் தன் பெரியதாயார் உமையாயியைத் தன் தாயார்போலவே கருதிவந்தார். சித்திவிநாயக முதலியாரைத் தன் சகோதரன்போலவே நினைத்தார். இவர்கள் இரண்டுபேர்களுக்கும் இருந்த ஒற்றுமை எல்லோரும் மெச்சத்தகுந்ததாக இருந்தது. நாளடைவில் உமையாயி காலஞ்சென்றாள்.

விடையூரிலுள்ளவர்களுள், கருப்பண்ண பிள்ளை கொஞ்சம் படித்தவர். குறைப்படிப்பிற் கேற்ற குணகுணங்களெல்லாம் அவரிடம்நிறைந்திருந்தன. பணப்பேய் அவரை நன்றாய்ப்பிடித்திருந்தது. வியவகார ஞானமும் கொஞ்சம் உண்டு. அவ்வூரிலும் பக்கத்திலுள்ள மற்ற ஊர்களிலும் நடக்கும் வியாஜ்யம் முதலான நடவடிக்கைகளுக் கெல்லாம் கருப்பண்ணபிள்ளையின் மந்திராலோசனை அத்தியாவசியம். அவர் உதவியைக் கோரினவர்கள் எவ்விதத்திலும் தங்கள் காரியத்தை நிறைவேற்றிவிடுவார்கள். அவர் உண்டாக்கும் வில்லங்கங்களையும் பின்னல்களையும் சிக்கெடுப்பது உயர்ந்த பாரிஸ்டர்களாலும் முடியாத காரியம்.

முன்னே சொன்னபடி உமையாயி இறந்தபின் கருப்பண்ணபிள்ளை புத்திக்கு இதிலிருந்து தமக்கு லாபம் கிடைக்கக்கூடும் என்று பட்டது. படிப்பு மட்டானாலும் தமக்குப் பொருள் சேரக்கூடிய வியவகாரங்களை யோசித்து சிருஷ்டிப்பதில் பிள்ளை, மகாநுட்பமான புத்தியுள்ளவர். பிற்காலத்தில் அற்பவியவகாரங்களில் புகுந்து சிரமப்படாமல் பெரிய லாபத்தை அடையக்கூடிய மார்க்கம் உமையாயி மரணத்திலிருந்து தென்பட்டது. மனதில் எல்லாம் யோசித்துத் தீர்மானம் செய்தபின், கருப்பண்ணபிள்ளை குற்றாலலிங்க முதலியார் மனதை கொஞ்சங்கொஞ்சமாகக் கலைக்க ஆரம்பித்தார்.

சித்திவினாயக முதலியார் சொத்து முழுவதும் நியாயமாய் குற்றாலலிங்க முதலியாரைச் சேரவேண்டியது என்று பலவிதமாக கருப்பண்ணபிள்ளை எடுத்துக்காட்டினார். முதலில் குற்றாலலிங்க முதலியார் கருப்பண்ணபிள்ளை வார்த்தைகளுக்கு செவிகொடுக்கவே இல்லை. கருப்பண்ண பிள்ளையும் பின்வாங்கவில்லை. "சங்கரநமச்சிவாயமுதலியாரும் ஈசானமூர்த்தி முதலியாரும், சொந்த அண்ணன் தம்பிகளாக இருக்க, மூத்தவருக்கு சந்ததி இல்லாமல் போக அவர் சொத்து எல்லாம் அவர் மனைவி ஜீவகாலத்திற்குப்பின் அவர் தம்பி மகனுக்கு கிடைக்கவேண்டியது நியாயமாயும் குடும்ப மேன்மைக்குப் பொருந்தினதாயும் இருக்க, சொத்துக்கு சம்பந்தமில்லாத வேறு குடும்பத்தான் ஒருவனை ஏதோ தயாவிஷயமாக உமையாயி போஷித்துவந்ததிலிருந்து அவன் சொத்தையெலலாம் கட்டிக்கொள்கிறதென்றால் அது அநியாயத்திலும் அநியாயமல்லவா" என்றும், பின்னும்பலவிதமாகக்கருப்பண்ணபிள்ளை குற்றாலலிங்க முதலியாரிடம் தினம் தினம் எடுத்துச் சொல்ல ஆரம்பித்தார். அவ்வூருக்கு அச்சமயம் சப்கலெக்டர் துரைவர, பெரிய பட்டாதாராகிய சித்திவினாயக முதலியாரே ஊராருக்குத் தலைவராக துரையை எதிர்கொண்டு வரவேற்றார். துரையும் அவருடன் கைகுலுக்கிப் புன்னகையுடன் சில வார்த்தைகள் பேசினார். இதுவரை கருப்பண்ணபிள்ளைக்கு காது கொடுத்துக் கேட்காத குற்றாலலிங்க முதலியார் உள்ளத்தில் இச்சிறு சம்பவம் ஒரு புது மனோபாவத்தை உண்டுபண்ணிற்று. 'ஸ்வீகாரம்' என்ற ஏற்பாட்டினாலல்லவா தனக்குக் கிடைக்கவேண்டிய சொத்து எல்லாம் தன்னைவிட்டு வேறொருவருக்குச் சேர்ந்து, அந்தஸ்து, கௌரவம் எல்லாம் வேறொருவர் பெற நேரிட்டது என்று எண்ணினார். அவருக்கு அதுவரையில் சொத்து வேறொருவரை அடைந்தது பெரிய நஷ்டமாகக் காணப்படவில்லை. சப்கலெக்டர் துரையவர்களோடு கைகுலுக்கி வார்த்தையாடும் பாக்கியம் போனதை அறிந்தபின்தான் அது தமக்கு ஒருகுறையாகத் தோற்றியது. அன்றைய தினம் இரவில் கருப்பண்ணபிள்ளை வழக்கம்போல குற்றாலலிங்கமுதலியாரிடம் பேசவந்தார். "இன்று கலெக்டர் துரையவர்கள் சித்திவிநாயக முதலியாருடன் கைகுலுக்கி வார்த்தையாடிவிட்டு உம்மைக் கண்ணெடுத்துக்கூடப் பாராமல் போய்விட்டாரே! இதெல்லாம் நியாயமா? உமது பெரிய தகப்பனார் சொத்தையெல்லாம் 'ஸ்வீகாரம்' என்ற வியாஜத்தால் அவர் கொள்ளையடித்துக்கொண்டு போய்விட்டதாலல்லவா இப்படியெல்லாம் நேருகிறது. இந்த சித்திவிநாயக முதலியார் முகத்தையாவது, உமது பெரிய தகப்பனார் பார்த்திருக்கிறாரா? அவர் சொத்தை இவர் அடைகிறதாவது?" என்று வெகுசாதுர்யமாய்ச் சொன்னார்.

குற்றாலலிங்க முதலியார், "பிள்ளைவாள், இதெல்லாம் சரிதான். எப்படியும் ஸ்வீகாரம் எடுத்தாய்விட்டது. இப்போது நாம் இதை யோசித்து என்ன செய்யமுடியும்?" என்றார்.

"ஸ்வீகாரமாவது ஒன்றாவது! சரியான சட்ட சம்மதமான ஸ்வீகாரம் ஒன்றும் நடக்கவே இல்லையே. கோர்ட்டிற்குப் போனால்





இந்த ஸ்வீகாரமெல்லாம் ஒரு நிமிஷத்தில் அடிபட்டுப் போய்விடும்."

"இருந்தாலும் என் பெரியவர்களுக்கு வம்ச விருத்திக்காகச் செய்யப்பட்ட ஸ்வீகாரத்தை நான் ஆக்ஷேபிப்பதும் சரியாகத் தோன்றவில்லையே?"

"உங்கள் பெரிய தகப்பனார் வம்சம் உங்களாலேதான் உண்மையாய் விருத்தியாகிறது. அவர் இறந்தபிறகு 'ஸ்வீகார' விளையாட்டு ஒன்று செய்துமுடிப்பதால் உங்கள் குடும்பத்தில் சம்பந்தமேயில்லாத ஒருவன் உங்கள் பெரிய தகப்பனார் வம்சத்தை விருத்திசெய்வான் என்று நினைப்பது சுத்த மூடநம்பிக்கையல்லவா? தவிரவும் உங்கள் பெரியதகப்பனார் உங்கள் பேரில் எவ்வளவு பிரியமாயிருந்தார்? சொத்தையெல்லாம் பறித்து, வேற்று மனிதனிடம் கொடுத்துவிட அவரே சம்மதிக்கமாட்டாரே. நன்றாய் எல்லாவற்றையும் யோசித்துப்பாருங்கள். எப்படி யோசித்தாலும் சொத்து உம்முடையது என்றுதான் ஏற்படுகிறது" என்றார் கருப்பண்ணபிள்ளை.

பின்னும் கொஞ்சநேரம் பேசியான பிறகு குற்றாலலிங்க முதலியார் மறுபடியும் சஞ்சலப்படுவதைப்பார்த்து கருப்பண்ணபிள்ளை, "ஐயா, உமது பெரிய தகப்பனார் சொத்து உமக்கும் உமக்குப்பின் உமது மக்களுக்கும் சேரவேண்டியதல்லவா? உமக்கோ இப்போதுள்ள சொத்து க்ஷீணித்திருக்கிறது. வேறு சம்பாத்தியமும் இல்லை. உமது பெண்மக்களுக்குக் கல்யாணம் முதலியன செய்வதற்கே உமது சொத்து முழுவதும் செலவாகிவிடும். உங்கள் பிள்ளை பொன்னம்பலம், ஓட்டாண்டியாகும்படிவரும். 'ஸ்வீகாரம்' என்று சொல்லும் மூடநம்பிக்கையைக் கைகொண்டு உமக்குச் சேரவேண்டிய ஆஸ்தியை இழந்து பையனையும் கெடுத்துவிடப் பார்க்கிறீரா. சித்திவிநாயக முதலியாருக்கு இருப்பதெல்லாம் ஓரே பெண். உமது குடும்ப சொத்துக்களெல்லாம் அவள் புருஷன் கைவசமாக, உமது மகன் கையில் ஓடெடுத்து அலையும்படி செய்வது துரோகம் என்று உங்களுக்கேப் புலப்படவில்லையா" என்று சொல்லிமுடித்தார்.

இந்த வார்த்தைகளைக் கேட்டதும் குற்றாலலிங்க முதலியார் கருப்பண்ண பிள்ளை வீசின வலையில முழுவதும் சிக்கிக்கொண்டார். அன்றிரவு வெகு நேரமட்டும் அவ்விருவரும் பேசிக்கொண்டிருந்தார்கள். சித்திவினாயக முதலியார் ஸ்வீகாரத்தை ஆக்ஷேபித்து அவர் சொத்தை வரப்பற்ற பிராது செய்வதாக குற்றாலலிங்க முதலியார் தீர்மானம் செய்துமுடித்தார்.

மறுநாளே கருப்பண்ணபிள்ளை குற்றாலலிங்க முதலியாரை திருநெல்வேலிக்கு அழைத்துப் போனார். இருவரும் அவ்வூர் பிரபல வக்கீல்கள் சிலரிடத்தில் கலந்தார்கள். பிராது ஜோடித்து முடித்து, கோர்ட்டில் தாக்கல் செய்துவிட்டு விடையூர் திரும்பிவந்தார்கள்.

## II

கருப்பண்ண பிள்ளை குற்றாலலிங்க முதலியாரை அழைத்துக்கொண்டு திருநெல்வேலி போனது முதலே, விடையூரில் எல்லோரும் கூடிக்கூடி ரகசியமாகப் பேசஆரம்பித்தார்கள். சிலர் சித்திவினாயக முதலியாரிடம் குற்றாலலிங்கமுதலியார் வியாச்சியம் தொடரப் போகிறதாய்ச் சந்தேகிப்பதாகச் சொன்னார்கள். சித்திவினாயகமுதலியார் அதை நம்பவில்லை. குற்றாலலிங்க முதலியார் திருநெல்வேலியிலிருந்து திரும்பி வந்தபின், ஊரார் வெளிப்படையாகவே அவர் வியாச்சியம் ஆரம்பித்துவிட்டதாகச் சொன்னார்கள். அப்போதும்கூட சித்திவினாயக முதலியார் அவர்களை முழுவதும் நம்பவில்லை. ஆனால் இரண்டொருதரம் தன்னைப் பார்த்தபோது குற்றாலலிங்க முதலியார் பேசாமல் ஒதுங்கிப்போனதிலிருந்து சிறிது சந்தேகம் ஏற்பட்டது.

நாளடைவில் பிராது அறிக்கை சித்திவினாயக முதலியாருக்கு வந்துசேர்ந்தது. அதைப் பார்த்ததும், முன்னால் குற்றாலலிங்க முதலியாரிடமிருந்த அன்பையும் இருவருக்குமுள்ள ஒற்றுமையையும் நினைத்துநினைத்து சித்திவிநாயக முதலியார் வெகுவாய் வருந்தினார். திடீரென்று பிராது செய்ததை நினைக்க நினைக்க அவர் மனம் புண்ணாயிற்று. மேலே நடக்கவேண்டியதை யோசித்து திருநெல்வேலிக்குப்போய் தம் வக்கீலிடம் விவரங்கள் எல்லாவற்றையும் தெரிவித்தார். வக்கீலும், உமையாயி ஸ்வீகாரம் செய்துகொண்ட காலத்தில், சங்கரநமச்சிவாய முதலியார் தாயாதிகள் யார் யார் உயிருடனிருந்தார்கள் என்பதையும், அவர்கள் ஸ்வீகாரத்துற்குச் சம்மதித்தார்களா என்பதையும் விவரமாய்க் கேட்டார். ஸ்வீகார காலத்தில் சங்கர

நமச்சிவாய முதலியார் தம்பியும், குற்றாலலிங்க முதலியார் தகப்பனுமான ஈசானமூர்த்தி முதலியார் மட்டுந்தான் உயிருடனிருந்தாரென்றும், அவர் எழுத்து மூலமாக ஸ்வீகார சம்மதிப்பத்திரம் ஒன்று எழுதிக்கொடுத்திருக்கிறாரென்றும் சித்திவிநாயக முதலியார் சொன்னார். அதன்மேல் வக்கீல் சித்திவிநாயக முதலியாரைப் பார்த்து "நீர் ஒன்றுக்கும் பயப்படவேண்டாம். எவ்விதத்திலும் உமக்கு நல்ல பலம் இருக்கிறது. ஈசானமூர்த்தி முதலியார் எழுதிக்கொடுத்த சம்மதிப் பத்திரத்தை மட்டும் வெகு ஜாக்கிரதையாய்க் காப்பாற்றி வைத்துக்கொள்ளும். அடுத்த தடவை இங்கே வரும்போது அதை என்னிடம் கொண்டுவந்து கொடுத்துவிடும்" என்று சொல்லி ஊருக்கு அனுப்பினார்.

சித்திவிநாயக முதலியார் விடையூர் வந்து சேர்ந்ததும் தன் வக்கீல் சொன்ன விஷயங்களை ஒன்றுவிடாமல் ஊராரிடம் சொல்லி வியவகாரம் எப்படியும் தனக்கு அனுகூலமாக முடிந்துவிடும் என்று பேசிக்கொண்டிருந்தார். அவர் சொன்ன விஷயங்களெல்லாம் கருப்பண்ண பிள்ளை காதிற்கு எட்டிற்று. குற்றாலலிங்க முதலியார் காதிற்கும் எட்டிற்று. ஈசானமூர்த்தி முதலியார் சம்மதிப்பத்திரம், இந்த வழக்கில் சித்திவிநாயக முதலியாருக்கு அருமருந்துபோன்ற உயிருக்குயிரான தஸ்தாவேஜு என்பது அவர்களுக்குத் தெரிந்தது. அந்தப் பத்திரம் சித்திவிநாயக முதலியார் கைவசம் இருக்கும்வரையில் அவருக்கு வழக்கு அநுகூலமாவது நிச்சயம் என்பதும் அவர்களுக்குப் பட்டது.

தங்கள் வியாஜ்யத்திற்கு பெரிய இடையூறாக இருக்கும் சம்மதிப்பத்திர விஷயமாக என்ன செய்யலாம் என்று குற்றாலலிங்க முதலியாரும் கருப்பண்ண பிள்ளையும் யோசித்தார்கள். ஆரம்பிக்கும்போது முதலியார் அரைமனதுடன் ஆரம்பித்தாரானாலும், ஆரம்பித்தபின் இடையில் நேரும் இடையூறுகளை எவ்விதத்திலும் களைந்தெறிந்துவிட வேண்டியதுதான் உசிதமெனத் தீர்மானித்தார். எவ்விதம் களைந்தெறிவது என்பது மட்டும் விளங்கவில்லை. கருப்பண்ண பிள்ளை குற்றாலலிங்க முதலியாரைப்பார்த்து "இந்த விஷயத்தை முழுவதும் என்னிடம் விட்டுவிடும்; நான் முடித்துத் தருகிறேன். என்ன செய்வேன், எப்படி செய்வேன் என்பது ஒன்றும் என்னைக் கேட்கக் கூடாது. பத்திரத்தை உமது கையில் சேர்ப்பித்து விடுகிறேன். நீங்கள் அதை வெகு சாவதானமாக மறைத்து வைத்துவிடவேண்டும். என் ஆட்கள் சிலர் மூலமாகக் காரியத்தை ஜயித்துக்கொடுக்கிறேன். இதற்காகப் பிரத்தியேகமாக ரூபாய் ஆயிரம் என்னிடம்கொடுத்துவிடவேண்டும்" என்றார். குற்றாலலிங்க முதலியார் அதற்கு இணங்கி, கேட்டபடி ரூபாயையும் கொடுத்துவிட்டார்.

வியாஜ்யத்திற்கு அடுத்த வாயிதா சமீபித்தது. சித்திவிநாயக முதலியார் திருநெல்வேலிக்கு தஸ்தாவேஜுகள் எல்லாவற்றையும் கொண்டுபோவதற்காக தன் பேழைப்பெட்டியைத் திறந்துபார்த்தார். பெட்டியில் சாமான்கள் வழக்கப்படியில்லாமல் சிறிது கலைந்திருந்தது. ஆனால் அதை சித்திவிநாயக முதலியார் குறிப்பிட்டுக் கவனிக்கவில்லை. அடியிலிருந்த பெரிய தகரக்குழாயை எடுத்து அதற்குள்ளிருந்த தஸ்தவேஜுகளைச் சோதித்தார். அவைகளை ஒவ்வொன்றாய் எடுத்துப் பார்த்து அவசியமானவைகளை ஒரு புறமாக அடுக்கிவைத்தார். மற்ற தஸ்தாவேஜுகள் எல்லாம் ஒழுங்காயிருந்தும், ஸ்வீகார சம்மதிப் பத்திரம் மட்டும் காணவில்லை. பேழையின் மற்ற பாகங்களில் எல்லாம் தேடிப்பார்த்தார். அகப்படவில்லை. மறுபடியும் பேழை முழுவதையும் நன்றாய்த் தேடினார். துணிகளையெல்லாம் விரித்து உதறிப்பார்த்தார். புஸ்தகங்களையெல்லாம் பக்கம் பக்கமாகப் பிரித்துப் பரிசோதித்தார். என்ன தேடியும், பத்திரம் அகப்படவில்லை. பிறகு சித்திவிநாயக முதலியார், வீடு முழுவதும் ஒரு மூலை விடாமல் தேடினார். ஒரு இடத்திலும் அகப்படவில்லை. உடனே அடுத்த தெருவிற்கு ஓடிப்போய், தன் மாப்பிள்ளை வெள்ளிமலை முதலியாரை அழைத்து வந்து இருவரும் மறுபடி வீடுமுழுவதும் தேடினார்கள். அகப்படவில்லை. சித்திவிநாயக முதலியாருக்கு ஏக்கம் பிடித்தது. வெள்ளிமலை முதலியார் அவரைத்தேற்றி, பிறகு சாவகாசமாய்த் தேடி, எப்படியும் கண்டுபிடித்துவிடலாம் என்றும் அப்படி நன்றாய்த்தேடியும் அகப்படாவிட்டாலும், அதனால் மட்டும் வியாஜ்யம் பிரதிகூலமாகப் போய்விடாது என்றும் தைரியம் சொன்னார். எப்படியும் திருநெல்வேலி போகவேண்டியது அவசியமானதால், போய்வந்த பின்பு யோசித்துக் கொள்ளலாம் என்று சொல்லி மாமனாரைத் திருநெல்வேலிக்கு அனுப்பினார். சித்திவிநாயக முதலியாரும் என்ன செய்வது என்று தெரியாமல் திருநெல்வேலி போனார்.

ஸ்வீகார வியாஜ்யம் விசாரணைக்கு வந்தது. சம்மதிப் பத்திரத்தை கண்டுபிடிக்க சித்திவிநாயக முதலியார் எவ்வளவோ முயற்சிகள் செய்தும் முடியவில்லை. வியாஜ்யம் விசாரணையாகி குற்றாலலிங்க முதலியாருக்கு அனுகூலமாக முடிந்தது. சித்திவிநாயக முதலியார் சொத்து முழுவதையும் இழந்தார். அவருடைய சிநேகிதர்களிற் சிலர், சென்னை ஹைகோர்ட்டில் அப்பீல் செய்யும்படி சொன்னார்கள். அதற்குவேண்டிய பொருளுதவி தான் செய்வதாய் அவர் மாப்பிள்ளை வெள்ளிமலை முதலியார் ஒப்புக்கொண்டார். சித்திவிநாயக முதலியாருக்கு முதலில் அப்பீல் செய்வதில் இஷ்டம் இல்லை. பிறகு சென்னைக்குப்போய் அங்குள்ள வக்கீல்கள் அபிப்பிராயத்தைத் தெரிந்துகொண்டு அதன்பேரில் முடிவாய்த் தீர்மானம் செய்யலாம் என்று பட்டது.

சித்திவிநாயக முதலியார், வெள்ளிமலை முதலியாரையும் அழைத்துக்கொண்டு சென்னப்பட்டணம் போய்ச்சேர்ந்தார். பல பெரிய வக்கீல்மார்களிடத்திலும் பாரிஸ்டர்களிடத்திலும் அபிப்பிராயம் கேட்டார்கள். முடிவில் பிரபல பாரிஸ்டர் மோரன்துரை அவர்களையும் பார்த்தார்கள். துரையவர்கள் தஸ்தாவேஜுகளையெல்லாம் பார்த்துத் தமது அபிப்பிராயத்தையும் சுருக்கமாகச்சொன்னார். சித்திவிநாயக முதலியாருக்கு எப்படியும் தன் கக்ஷி நியாயமான கக்ஷியானபடியால், உயர்ந்த நியாயஸ்தலத்தில் தனக்கே ஜயம் கிடைக்கும் என்று தோன்றிற்று. மோரன் துரையுடைய வாக்சாதுர்யத்தையும், அவர் வைத்திருந்த நூற்றுக்கணக்கான அழகான பெரிய புஸ்தகங்களையும் பார்த்ததும், சரஸ்வதி நர்த்தனம்செய்யும் இவ்விடத்தில்தான் தமக்கு நியாயம் தேடவேண்டிய முயற்சிகளை முடித்துக்கொள்ளவேண்டும் என்று பட்டது. மனதை திடப்படுத்திக்கொண்டு அப்பீல் தாக்கல் செய்துவிட்டு வெள்ளிமலை முதலியாருடன் சித்திவிநாயக முதலியார் விடையூர் வந்துசேர்ந்தார்.

சித்திவிநாயக முதலியாருக்குத் தன் அப்பீல் எவ்விதத்திலும் அனுகூலமாகிவிடும் என்ற தைரியம் பலமாயிருந்தது. ஆயிரக்கணக்காகச் சம்பளம் வாங்கிக்கொண்டு, பூரண பரிசீலனை செய்து நியாயம் கண்டுபிடிக்கும் உயர்ந்த நியாயாதிபதிகளுக்கு உண்மை எவ்விதத்திலும் தெரிந்துவிடும் என்பது அவர் எண்ணம். காணாமற்போன தஸ்தவேஜு விஷயத்தின் உண்மையைக்கூட அவர்கள் தெரிந்துகொள்ளக்கூடிய தெய்வீக சக்திவாய்ந்தவர்கள் என்றே அவர் மதித்தார். மேலும் பேசும் வல்லமையுள்ள மோரன்துரை, தன் பக்கமிருக்க சிறிதும் கவலைக்கிடமில்லையென்று தன் மனத்தைத் தேற்றிக்கொண்டார்.

அப்பீல் தாக்கலானதற்கு சுமார் ஒருவருஷத்திற்குப் பின் ஒருநாள் சித்திவிநாயக முதலியாருக்குத் தன் அப்பீல் அடுத்தவாரம் எடுக்கப்படும் என்று மோரன் துரையிடமிருந்து தகவல் கிடைத்தது. அப்போது சித்திவிநாயக முதலியார் மனைவி நோய்மேலிட்டுப் படுத்தப்படுக்கையாக இருந்தாள். அதனால் அப்பீல் பேசும்போது, தானும் பட்டணம்போய் ஹைகோர்ட்டில் இருக்கவேண்டுமென்று நினைத்திருந்தபடி செய்ய முடியவில்லை. இரண்டு நாளில் அவர் மனைவிக்கு வியாதி அதிகரித்து இறந்துபோனாள். அவள் இறந்து எட்டுநாள் ஆனதும், அப்பீல் விரோதமாகிவிட்டதாக சென்னையிலிருந்து கடிதம் கிடைத்தது. அடிமேல் அடியாக விழுந்ததும், சித்திவிநாயக முதலியார் மனம் உடைந்துபோய்விட்டது. தன் சொத்து முழுவதையும் இழந்ததுமல்லாமல் தனக்காகத் தன் மாப்பிள்ளை அவர் சுவல்ப சொத்தில் பெரும்பாகம் இழந்துபோக நேரிட்டதை நினைக்கவும் அவருக்கு அடக்கமுடியாத் துக்கம் உண்டாயிற்று. வெகு ஒற்றுமையாகவும் அன்பாகவும் வாழ்ந்துவந்த மனைவி திடீரென்று இறந்ததால் ஏற்பட்ட பெரும் துயரம் உள்ளத்தைக் கலக்கிக்கொண்டிருக்கும் சமயத்தில், எதிர்பாராதபடி மேல் கோர்ட்டிலும் தனக்குப் பிரதிகூலமான செய்தி வந்ததும் சித்திவிநாயக முதலியாருக்கு பித்துப் பிடித்ததுபோலாய்விட்டது.

(தொடரும்.)

தூரத்துப் பச்சை, கண்ணுக்குக் குளிர்ச்சி.

தூற்றர் என்போர் சொல் எழுத்து உணரார்.

# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(152-ம் பக்கத் தொடர்ச்சி)

### எட்டாம் அத்தியாயம்

### மெஹருஜான்

மொகலாயசேனை ரூபநகரத்திலிருந்தநாள் அவ்வளவும் ஆநந்தமயமா யிருந்தது. யுத்தம் ஒன்றும் இல்லாததால், கூடாரங்களில் எங்கும் நர்த்தனம் நடக்கவாரம்பித்தது. சேனையிலுள்ளவர் ரூபநகரத்தில் சந்தோஷத்திற்காகவே வந்தார்கள். கூடாரங்களில் ராத்திரியெல்லாம் ஸதிர் ஸங்கீத சப்தமே மேலிட்டிருந்தது.

நர்த்தனம் செய்கிற தாசிகளில் ஒருவள் பெயர், எங்கும் பிரக்யாதி கொண்டிருந்தது. டில்லியில் மெஹருஜான் என்கிற பெயர் யாருக்கும் தெரியாது. மெஹருஜான் தாசியாயிருந்தாலும் நன்னடத்தை யுள்ளவளாயிருந்ததால் மிக்கக் கீர்த்திபெற்றிருந்தாள்.

மொகலாய சேனாபதி அவள் ஸங்கீதத்தைக் கேட்க இஷ்டப்பட்டான். ஆனால் மெஹருஜான் பாடுவதற்கு ஒப்புக்கொள்ளவில்லை. அதிக ஜனங்களுக்கு எதிரில், தான் பாடுகிற வழக்கமில்லை என்று சொல்லிவிட்டாள். தன் கூடாரத்தில் தான் ஒருவனே உட்கார்ந்து கேட்பதாக ஒப்புக்கொண்டான். ராத்திரி வந்து பாடினாள். சேனாதிபதி மிகப் பிரீதியடைந்து பணம் கொடுப்பதற்குப் போனான். ஆனால் அவள் அதை எடுத்துக்கொள்ளாமல் "எனக்குப் பணம் வேண்டாம். இஷ்டமிருந்தால் நான் வேண்டிக்கொள்வதைக் கொடுங்கள். இல்லாவிடில், எனக்கு வேறு மரியாதை ஒன்றும் வேண்டா"மென்றாள்.

சேனாபதி—உனக்கு என்ன வேண்டும்?

மெகருஜான்—உம்முடைய குதிரைப்படையில் எனக்குக் குதிரைவீர உத்தியோகம் வேண்டும்.

சேனாபதி ஒன்றும் பதில்சொல்ல முடியாமல், மெஹருஜானின் அழகான முகத்தைப் பார்த்துக்கொண்டிருந்தான். அவன் பதில் சொல்லாமலிருந்ததைக் கண்டு மெகருஜான் "நான் குதிரை, கத்தி, பாலா, முதலியவற்றிற்குக் கிரயம் கொடுத்துவிடுகிறேன்" என்றாள்.

சேனாபதி—ஸ்திரீக்குக் குதிரைப்படையில் உத்தியோகமா?

மெகரு—அதனால் நஷ்டமென்ன? யுத்தமொன்றும் இல்லை. அப்படியே யுத்தம் வந்தாலும் ஓடிப்போகிறதில்லை.

சேனா—ஜனங்கள் என்ன சொல்லுவார்கள்?

மெகரு—உனக்கும் எனக்கும் மாத்திரம் தெரிந்திருக்கட்டும். மற்றொருவருக்கும் தெரிய வேண்டாம்.

சேனா—உனக்கு எதற்காக இந்த ஆசை?

மெகரு—எதற்காவதிருக்கட்டும். பாதுஷாவிற்கு இதனால் நஷ்டமொன்றுமில்லை.

சேனாதிபதி முதலில் கொஞ்சமிஷ்டமில்லாதவனாயிருந்தான். ஆனால் மெஹருஜான் விடவில்லை. கடைசியில் ஒப்புக்கொண்டான்.

மெஹருஜான்தான் அந்தத் தரியா.

### ஒன்பதாம் அத்தியாயம்

### மாணிக்கலாலன் விடைபெற்றுச் செல்லல்.

இந்த ஸமயத்தில், மாணிக்கலாலன் சமாசாரம் கொஞ்சம் சொல்லவேண்டியதாயிருக்கிறது. மாணிக்கலாலன் ராணாவிடம் விடைபெற்றுக்கொண்டு மறுபடியும் பருவதத்தின் குகைக்குப் போனான். திரும்பவும் கள்ளத் தொழிலில் பிரவேசிக்க இஷ்டமில்லை. ஆனால் பூர்வ சிநேகிதர் பிழைத்திருக்கிறாரோ செத்துப்போய்விட்டாரோ என்று பார்த்துப் போக ஏன் வரக்கூடாது? யாராவது பிழைத்திருந்தால் அவருக்குத் தன்னாலான உபகாரஞ் செய்து சொஸ்தம் செய்யவேண்டுமென்று வந்தான்.

வந்து பார்த்தபொழுது, இருவர் செத்து விழுந்திருந்தனர். மூர்ச்சை யடைந்தவன் எழுந்து புறப்பட்டுப்போயிருந்தான். அப்பொழுது மாணிக்கலாலன் காட்டுக்குப்போய் விறகுகட்டை கொண்டுவந்து, இரண்டு சிதையடுக்கி, சவங்களை அவைகள்மேலிட்டு நெருப்புப்போட்டு, மற்றுமுள்ள அந்திம கிரியைகளைச் செய்துவிட்டுப் புறப்பட்டுப்போனான். போகும்பொழுது, தொந்தரவுபட்ட பிராமணன் எப்படியிருக்கிறான் என்று வந்து பார்க்கவும் அவனைக் காணவில்லை. அங்கே நதியின் நிர்மலமான ஜலம் சேறினால் கலங்கியிருந்தது. அநேகவிடங்களில் செடி கொடிகள் அறுபட்டு இங்குமங்கும் விழுந்திருந்தன.





இந்த அடையாளங்களைப் பார்த்து மாணிக்கலாலன், அநேக ஜனங்கள் அங்கே வந்திருக்கவேண்டுமென்று மனத்தில் தீர்மானித்துக் கொண்டான். மேலும் குன்றின்மேல் குதிரைக் குளம்புகளின் அடையாளங்கள் கண்ணுக்குப் புலப்பட்டன. இவைகளையெல்லாம் பார்த்து, இங்கே அநேகம் குதிரைகள் வந்திருக்கவேண்டுமென்றும் அறிந்துகொண்டான்.

மாணிக்கலாலன், குதிரைகள் எந்த மார்க்கமாய்ப் போயிருக்கிறதென்று பார்க்க, சில தெற்கு முகமாயும், சில வடக்கு முகமாயும் போயிருப்பதாகக் காணப்பட்டன. கொஞ்ச தூரம் உற்றுப்பார்க்கவும் குதிரைகள் இது வரையில் தெற்குமுகமாய் வந்து, பின்னை வடக்குமுகமாய்த் திரும்பிப்போயிருக்கின்றனவென்று தெரிந்துகொண்டான்.

இப்படித் தீர்மானம் செய்துகொண்டு, மாணிக்கலாலன் வீட்டுக்குப் புறப்பட்டான். அங்கிருந்து அவன் வீடு, ஏழு எட்டுமைலுண்டு. அங்கேபோய் சமைத்துச் சாப்பிட்டுவிட்டு, பிறகு குழந்தையை எடுத்துக்கொண்டு வாயிற் கதவைப் பூட்டிக்கொண்டு புறப்பட்டான்.

மாணிக்கலாலனுக்குப் பந்துக்கள்யாருமில்லை. தூர உறவுள்ள ஒருகிழவி மாத்திரமிருந்தாள். அவள் ஒரு முறைக்கு அவனுக்கு அத்தையாக வேண்டும். குழந்தையை எடுத்துக்கொண்டு அவள் வீட்டுக்குப்போய் 'அத்தை' என்று கூப்பிட்டான்.

அத்தை—ஏனப்பா, குழந்தை மாணிக்கலாலா! என்ன காரியமாய் இங்கே வந்ததப்பா? என்றாள்.

மாணி—என் மகளை வீட்டில் வைத்துக் கொள்ளுகிறாயா?

அத்தை—எத்தனை நாளைக்கப்பா?

மாணி—இரண்டொரு மாதத்திற்கு.

அத்தை—அது எப்படி முடியும்? நான் ஏழை, குழந்தைக்குச் சாப்பாட்டுக்கு என்ன செய்கிறது?

மாணி—நீ குழந்தைக்கு இரண்டு மாதம் சாப்பாடுபோட முடியாதா?

அத்தை—அது என்ன வார்த்தை! இரண்டு மாதம் ஒரு குழந்தையை காப்பாற்றுகிறதற்கு ஒரு மோகரா ஆகாதா?

மாணி — நல்லது நான் ஒரு மோகரா கொடுக்கிறேன். குழந்தையை இரண்டுமாதம் சாதம்போட்டு வைத்துக்கொள். நான் உதயபுரத்துக்குப் போகிறேன். அங்கே ஸர்க்காரில் எனக்கு ஒரு பெரிய வேலையாயிருக்கிறது.

இவ்விதம் சொல்லி, ராணா கொடுத்த மோகராக்களில் ஒன்றை அவளிடத்தில் கொடுத்து குழந்தையை அவளிடத்தில்விட்டு 'குழந்தாய், உன் பாட்டியிடத்திற்குப் போ' வென்றான்.

கிழவி, "அந்த மோகரா குழந்தைக்கு ஒரு வருஷத்திற்கு அன்னவஸ்திரத்துக்குப் போதும். ஆனால் குழந்தை நம்மிடத்தில் இரண்டு மாதத்திற்குத்தான் இருக்கப்போகிறது. மேலும் மாணிக்கலாலனுக்குச் சர்க்காரில் வேலையாயிருக்கிறது. நல்ல பதவிக்கு வந்தாலும் வரலாம். அப்பொழுது நமக்கு ஏதேனும் கொடுக்கமாட்டானா? மனிதன் கையிலிருப்பது நல்லது" என்று யோசித்துக்கொண்டு, பணத்தைக் கையிலெடுத்துக்கொண்டு "என்னப்பா பெரிய வேலை. உன் குழந்தையை வைத்துக்கொள்வதில் எனக்கு ஒரு பாரமுமில்லை. நீ கவலைப்படவேண்டாம்" என்று சொல்லிக் குழந்தையைப் பார்த்து 'கந்தா இங்கே வா' என்று எடுத்துக்கொண்டாள்.

குழந்தையின் விஷயமாய் இவ்விதம்ஏற்பாடு செய்துவிட்டு ஒருகவலையுமில்லாமல் மாணிக்கலாலன் அவ்வூரிலிருந்து புறப்பட்டான். ஒருவருக்கு மொன்றுஞ்சொல்லாமல் ரூபநகரத்துக்குப் போகிற மார்க்கமாய்ப் பருவதத்தில் ஏறத் தொடங்கினான்.

அவன் மனத்தில் "இந்தவிடத்துக்கு அநேகம் குதிரைவீரர்கள் வருவதற்குக் காரணமென்ன? இங்கே ராணா ஒண்டியாய்த்தானிருந்தான். ஆனால் உதயபுரத்திலிருந்து ராணா தனியாய் வருவதற்குக் காரணமில்லை. ஆதலால் குதிரைவீரர்கள் ராணாவுடன் வந்திருக்கவேண்டும். அவர்கள் வடக்கு முகமாய் வந்தவர்கள்; உதயபுரத்துக்குப் போய்க்கொண்டிருக்கவேணும். இதனால் ராணா வேட்டைக்கு வந்ததாகத் தோன்றுகிறது. உதயபுரத்துக்குத் திரும்பிப் போயிருக்கிறான். ஆனால் போன மாதிரியாய்க் காணவில்லை. மறுபடியும் வடக்குமுகமாய்த்தான் பிரயாணம் செய்திருக்கிறான். அது எதற்காக? ரூபநகரம் வடக்கேதானிருக்கிறது. பார்க்கும்போது சஞ்சலகுமாரியின் காகிதத்தை வாசித்து குதிரைவீரர்களுடன் அவள் கோரிக்கைப்

பிரகாரம் போயிருக்கிறதாகத் தோன்றுகிறது. நான் அவன் சேவகனானபடியால் அவனிருக்கிற ஸ்தலத்துக்குப் போகவேண்டும். ஆனால் அவர்கள் குதிரையின்மேல் போயிருக்கிறார்கள். நான் நடந்துபோனால் காலதாமதமாகும். ஆனால் கல் முள் உள்ள பருவதத்தில் அவ்வளவு வேகமாய்ப் போகமுடியாது. நான் அவர்களைப் பிடிப்பது கஷ்டமல்ல" வென்று நினைத்துக்கொண்டு இராப்பகலாய் நடக்கத் தொடங்கினான். காலத்தில் ரூபநகரம் வந்து சேர்ந்தான். வந்துபார்த்தால் இரண்டாயிரம் மொகலாயவீரர் அங்கே கூடாரம் போட்டிருந்தார்கள். இராஜபுத்திர சேனையை எங்கும் காணவில்லை. அங்கே கேட்டதில் மறுதினமே மொகலாயர் இராஜகுமாரத்தியை யழைத்துப் போவதாகத் தெரியவந்தது.

மாணிக்கலாலன் புத்தி கூர்மையுள்ளவன். ரஜபுத்திரர் ஒருவரும் வரவில்லையென்று கண்டதும் மனங்கலங்கவில்லை. மனத்தில், மொகலாயர் ஒன்றும் செய்யமுடியாது. எஜமானன் இருக்கிறவிடம் அறியவேண்டுமென்று தீர்மானித்தான்.

மாணிக்கலாலன் அவ்வூரா னொருவனுக்கு இனாம் கொடுத்து டில்லிக்குப்போகிற மார்க்கத்தைக் காண்பிக்கச் சொன்னான். அவன் அப்படியே கொஞ்சதூரம் வந்து வழி காண்பித்தான். மாணிக்கலாலன் அவனைப் பிறகு அனுப்பிவிட்டான். பின்னர் டில்லி மார்க்கமாய் நாலு பக்கமும் உற்றுப்பார்த்துக்கொண்டு புறப்பட்டுப் போனான். இராஜபுத்திரர் டில்லி மார்க்கத்தில் எங்கேயோ ஒளிந்துகொண்டிருக்கிறார்களென்று நிச்சயித்தான். முதலில் கொஞ்சதூரம் போனான். ஒன்றும் தெரியவில்லை. இன்னும் கொஞ்சதூரம் போகவும், ஒரு இடத்தில் வழி குறுகலாகிக்கொண்டு வந்தது. இரண்டு பக்கத்திலும் மேடான குன்று சுமார் இரண்டு மைல் தூரம் போயிற்று. அந்த மேடுகளின் மத்தியில் ஒரு சிறிய வழி. வலப்பக்கத்தில் குன்று மிகவும் உயரமாயிருந்தது. இடப்பக்கத்திலிருந்த குன்று சாய்வாகி, போகப்போக உயரமாகிக்கொண்டு வந்தது. வலப்பாகத்திலிருந்த குன்று உயரமாயிருந்ததால் ஏறுவது மிக்க சிரமம். இடப்பாகத்திலிருந்து குன்று ஏறுவதற்கு சுலபமாயிருந்தது, உயரமதிகமில்லை. இடப்பாகத்தில் அப்புறம் போவதற்கு ஒரு சந்து விட்டிருந்தது. அந்தச் சந்தில் ஒரு ஒற்றையடிப்பாதையிருந்தது.

மாணிக்கலாலனுக்கு ஒரு சேனாதிபதியின் புத்தியும் கண்களுமிருந்தன. அதனால் அவன் இந்தக் குறுகலான மார்க்கத்தைப் பார்த்தவுடன் மனத்தில்,ராணா வந்திருந்தால்இங்கேயே இருக்கவேண்டும். மொகலாய சேனை இங்கு வரும்பொழுது இராஜபுத்திரக் குதிரைவீரர்கள் மின்னல்போல் அவர்கள்மேல் வந்து விழலாம். ஆனால் வலதுகைப்புறமிருக்கும் பருவதம் உயரமாயிருப்பதால் குதிரைகள் ஏறுவது இறங்குவது அசாத்தியம். இடதுகைப் பக்கத்திலிருக்கும் பருவதம் உயரக் குறைவாயிருந்ததால் குதிரைகள் அங்கேயே இருக்கவேண்டுமென்று நிச்சயித்துக்கொண்டு அதன் மேலேறிப் போனான். அப்பொழுது சாயங்காலமாயிற்று.

அங்கேபோய்ப் பார்க்கவும், ஒன்றும் கண்ணுக்குப் புலப்படவில்லை. மறுபடியும் தேடிப் பார்க்கவேண்டும் என்று நினைத்து மறுக்ஷணத்தில்'ராணாவைத்தவிர வேறுஒருவருக்கும் என்னைத் தெரியாது. அவர்கள் என்னைக் கண்டால் நான் மொகலாயரின் வேவுகாரன் என்று நினைத்து அடித்துக் கொன்றுவிட்டாலும் விடலாம்' என்று நினைத்து முன்னே போகாமலே அங்கேயே நின்றுகொண்டு மகாராணாவுக்கு ஜயம் என்று கூவினான்.

இந்தச் சத்தம் கேட்டவுடன் எங்கேயிருந்தோ நாலைந்து ஆயுதபாணிகள் எழுந்து நின்று, கையில் கத்தியை உருவிக்கொண்டு மாணிக்கலாலன் சிரசை வெட்டிப் போடுவதற்குத் தயார் செய்துகொண்டார்கள்.

அவர்களி லொருவன் அவனை அடிக்கவேண்டா மென்றான். மாணிக்கலாலன் அது யாரென்று பார்க்கவும் ராணாவாகவே யிருந்தான்.

ராணா—அடிக்கவேண்டாம் அவன் நம்மவனே என்று சொன்னவுடன் அந்த வீரர்கள் ஒளிந்துகொண்டார்கள்.

மாணிக்கலாலன், ராஜாவின் கட்டளைப் பிரகாரம் பக்கத்தில் போனான். ராணா,அங்கே ஒரு நிர்ஜனமான விடத்தில் அவனை உட்காரச் சொல்லி'நீ இங்கே எதற்கு வந்தாய்' என்றான்.

மாணி — பிரபு எங்கேயோ, அங்கேயே வேலைக்கார னிருக்கவேண்டுமல்லவா?விசேஷமாய்த் தாங்கள் இந்த ஆபத்தான காரியத்தில் முயற்சி எடுத்துக்கொண்டிருக்கும் போது வேலைக்காரனாகிய என்னால் ஆகவேண்டியகாரியம் ஏதாவதிராதா என இங்கு வந்தேன். மொகலாயர் இரண்டாயிரம்பேரிருக்கிறார்கள். மகாராஜா விடத்திலிருக்கிறவர் நூறு பேர். நான் எப்படிக் கவலையில்லாமல் இருக்கிறது? தாங்கள் எனக்குப் பிராணதானம் கொடுக்கவில்லையா? நான் அதை மறக்கமுடியுமா?

ராணா—நான் இங்கே வந்திருப்பது எப்படித் தெரிந்தது?

மாணிக்கலாலன் ஆதிமுதற்கொண்டு சங்கதிகளையெல்லாம் விவரமாய்ச் சொன்னான். அதுகேட்டு அரசன் சந்தோஷமடைந்து, வந்தது நல்லதாயிற்று என்று சொல்லி உன்னைப் போலொத்த கெட்டிக்காரன் வேண்டுமென்று தேடிக்கொண்டிருந்தேன். இப்பொழுது நான் சொல்லுகிற காரியத்தைச் செய்வாயா? என்று கேட்டான்.

மாணி—மனிதனுக்குச் சாத்தியமானதைச் செய்யத் தயாராயிருக்கிறேன்.

ராணா—நாமிருப்பது நூறு பேர்தான். மொகலாயர் இரண்டாயிரம் பேரிருக்கிறார்கள். நாம் யுத்தம் செய்தால் பிராணனை விடுவது தவிர, வேறுகதி ஒன்றுமில்லை. யுத்தம் செய்து ராஜகன்னிகையைக் காப்பாற்றுவது அசாத்தியம். ராஜகுமாரியை முதலில் ஜீவனோடு காப்பாற்றிக்கொண்டு, பிற்பாடு யுத்தம் செய்யவேண்டும். அவள் யுத்தத்திலிருந்தால் எங்கேயாவது கொல்லப்பட்டுப் போனாலும் போகலாம். ஆதலால் அவளை இரக்ஷிக்க வேண்டியது முதற்காரியமென்று சொன்னான்.

மாணி—நான் அற்பன். அஃதெல்லாம் எனக்கு எப்படித் தெரியும். என்ன செய்யவேண்டுமோ அது உத்தரவாகட்டும்.

ராணா — நீ மொகலாயக் குதிரைவீரனைப் போல் மாறுவேஷம் தரித்து, நாளைக் காலமே அவர்களுடன் வரும்பொழுது ராஜகுமாரத்தியின் பல்லக்குக் கூடவிருந்து, நான் சொல்லுகிறபிரகாரம் செய்யவேண்டும்.

இப்படிச் சொல்லி, செய்யவேண்டியதையெல்லாம் விவரமாய்ச் சொன்னான். மாணிக்கலாலன் கேட்டு 'மகாராஜாவுக்கு ஜயமுண்டாகட்டும். நான் காரியத்தை ஜயித்துக்கொண்டு வருகிறேன். தயவுசெய்து எனக்கு ஒரு குதிரை இனாமாகக் கொடுக்கவேண்டும்.

ராணா—நாங்களிருப்பது நூறுபேர். நூறு பேருக்கு நூறுகுதிரைதானிருக்கிறது. வேறு குதிரை இல்லை. பிறர் குதிரையைக் கொடுக்க முடியாது. வேண்டுமானால் என் குதிரையைக் கொண்டுபோ வென்றான்.

மாணி — பிராணன் போனாலும் அதைத் தொடமாட்டேன். எனக்கு வேண்டிய ஆயுதங்கள் கொடுக்கவேண்டும்.

ராணா—ஆயுதமேது? இருக்கிறது நமக்கே போதாதே. வேண்டுமானால் என்னுடையதைத் தருகிறேன்.

மாணி — அது முடியாது. எப்படியாவது இவைகளையெல்லாம் சம்பாதித்துக்கொள்ளுவதற்கு உத்தரவுகொடுக்கவேண்டும்.

ராணா- (நகைத்துக்கொண்டு) திருடுவாயோ?

மாணி — நான் அந்த வேலை செய்வதில்லையென்று முன்னமே சபதம் செய்திருக்கிறேன்.

ராணா—அப்படியானால் என்ன செய்வாய்?

மாணி—டக்காய் சம்பாதித்துக் கொள்ளுகிறேன்.

ராணா—(நகைத்து) யுத்த காலத்தில் எல்லோரும் வஞ்சகர்தான். நான் பாதுஷாவின் பேகம் ஸாகேபை, களவு செய்வதற்கே வந்திருக்கிறேன். கள்வரைப்போல் ஒளிந்துகொண்டிருக்கிறேன். நீ எப்படியாவது எல்லாவற்றையும் சம்பாதித்துக்கொள் என்றான்.

மாணிக்கலாலன், சந்தோஷத்துடன் நமஸ்காரம் செய்து புறப்பட்டுப்போனான்.

---

(170-ம் பக்கம் தொடர்ச்சி)

ஒருவன் உள்ளபடி ஓடுவதன்று. குடிகளின் கொள்கைகள் கூடியவரையில் கோணாது நிறைவுறும். நம் தமிழ்த்தாயின் பழைய அணிகளின் மதிப்பை உள்ளபடி நன்குவிளக்கவும், காலத்திற்கு வேண்டியாங்கு புதிய பல அணிகளைப் புனையவும் இடம் பொருள் ஏவலி யாவும் போதுமளவு கிடைக்கும். முதலில் வேண்டுவது நம்மவர் முயற்சி. அது நாம் விரும்பும் திருவினையாக்கும். "தனக்கென வாழாப் பிறர்க் குரியாளன்," என்று பாடிய சான்றோர் வழியினீர்!

"ஆவதும் அழிவதெல்லாம் அவர் செயல்"

என்பதையும் அகத்திருத்தித் தமிழ் வளம்படுத்தத் தலைப்படுமின். தலைவன் தண்ணருள் தட்டாதுதவும்.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDRENS' PAGES

[ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை, எம். ஏ.]

### விபூதி மான்மியக் கதை

முன்னொரு காலத்தில் வங்க தேசத்தில் புயபலன் என்றொரு அரசன் இருந்தான். அவன் செங்கோல் மன்னவன். தருமகுணமுள்ளவன். வேத முணர்ந்த பிராமணர்களுக்கு ஒரு நல்லதினத்தில் தருமஞ்செய்யக் கருதித் தகுந்த நாள் ஏற்படுத்தி, மறையவர்களை வரும்படி அவன் பிரசுரஞ் செய்தான். அவ்வாறே மறையவர் பலர், அத்தினத்தில் அரண்மனைக்கு வந்தனர். அவர்களுள் மகாவுத்தமரான சுசீலர் என்னும் வேதியரை, மற்றப் பிராமணர்கள் அரசனிடம் அழைத்துச் சென்று "மன்னவனே! இவர் விதர்ப்பநாட்டிலுள்ளவர். மகா புநிதர். வேதங் கரைகண்டவர். நீ யளிக்கும் தானத்தை இவருக்கு முன்பு கொடுக்கவும். பின்பு நாங்கள் பெறுகின்றோம்" என்றனர். அரசனும் மிக்க சந்தோஷம் அடைந்து சுசீலர் பாதங்களில் விழுந்து வணங்கி "சுவாமீ! யான்செய்த தவமோ! எங்கள் முன்னோர் செய்த தவமோ! தாங்கள் இங்கு வரப்பெற்றேன்" என்று சொல்லி அவருக்கு ரத்னாசனமிட்டுத் தனது இருகைநிறையப் பெருந்திரவியத்தை யள்ளிக்கொடுக்கச் சுசீலர் அவன் முகத்தை நோக்கி "மன்னவனே! நிதியுங் கதியும் ஒருங்கே உதவும் விபூதி உன் நெற்றியில் இல்லை. திருவெண்ணீறு இடாதவர்கள் பொல்லாத நரகத்தில் வேதனைப்படுவர் என வேதங்கள் முறையிடுகின்றன. நீ விபூதியிட்டுப் பின்பு எனக்குத் தருவதைத் தா. வாங்கிக்கொள்ளுகிறேன்" என்றனர். விதிப்பலனால் அரசனுக்கு இவ்வார்த்தைகள் கோபத்தை உண்டுபண்ண, "நான் விபூதியிடாவிட்டால் என்ன கெட்டுப் போய்விடும்" என்றான். அதற்கு மறையவர் "விபூதியிடாதவர் செல்வம் சிதைந்துபோகும், நாட்டை வேற்றரசர் கொள்வர், நோய் உண்டாகும், அங்க ஈனம் வரும்" என்றனர். மன்னவன் "நன்றுநன்று நீர் கூறினது; நான் விபூதியைத் தொடமாட்டேன். உமக்கு வேண்டுமானால் தானத்தை வாங்கிக்கொள்ளும்" என்றான். மறையவர் "திருநீறு தொடாதவர் நிதியை நாம் ஏற்பதில்லை" எனச் சொல்லி வெகுண்டெழுந்துபோய்விட்டார். அவர் போகுஞ் சமயத்தில் அரசனுடைய மனைவி தன் மூக்குத் தொளையில் ஒரு துரும்பையிட்டு வேணுமென்றே தும்மல் வருவித்துத் தும்மி "ஓய்! அந்தணரே! கொடுக்குந் தானத்தை வாங்காது போகின்றீர். என் தும்மலும் தடைசெய்கின்றது. ஆதலால் போகாதுநின்று தானம் வாங்கிக்கொண்டு போம்" என்றனள். சுசீலர் அவள் வார்த்தையை பொருட்படுத்தாது அங்கிருந்து நீங்கி, தமது சொந்த நாடாகிய விதர்ப்பநாட்டுக்குப் போய்விட்டார். பின்பு சில நாள் செல்ல, புயபல மன்னனுக்குப் பெருநோய் வந்தது; அவனுடைய சேனைகள் வியாதியால் இறந்தன; பகைவர்வந்து நாட்டைக் கைக்கொண்டனர்; அரசனும் அவன்மனைவியும் காட்டிற்றப்பியோடிக் காலங்கழிக்க நேர்ந்தது. இருவரும் பசியால் நலிந்து இருக்க இடமில்லாது அலைய, ஒருநாள் ஒருவேடன் வந்து அரசியைக்கைப்பிடித்துஇழுத்துச்சென்றான். அரசன் பிணியின்கொடுமையால் வேடனோடு எதிர்க்கமுடியாது நின்ற இடத்திற் புலம்பினான். அரசியும் புலம்பினாள். அவள் முறையிடுவதைக் கவனியாது, அவளை இழுத்துச் சென்ற வேடன்மீது ஒரு புலிபாய்ந்து அவனைக் கொன்றது. ஏதேனும் நாட்டை அடையக்கருதி காட்டில் வழிதேடி அலைந்த புயபலன், விதர்ப்பநாட்டைச் சேர்ந்தான். பசிநோய் மிகவருத்தப் பிச்சையெடுத்தும் திருடியுண்டுங் காலங்கழித்தான். தன் விதியை நினைத்து நினைத்துப் புலம்புவான். "தருமவழியில் நின்று யான் ஒரு சிறிதும் விலகவில்லையே. ஏனோ எனக்கு இவ்விதி" என ஏங்குவான். ஒருநாள் இவன் ஒருவீட்டிலுள்ள பொருளைத் திருடிவரக்கண்ட ஊர்க்காவலர் இவனைப் பற்றிப்பிடித்து, நாட்டு அரசன் முன் விடுப்ப, அரசன் இவன் கையையும் காலையும் வெட்டிவிடச் சொன்னான். அவ்வாறே தண்டிக்கப்பட்ட புயபலன், அவ்வூர்த் தெருக்களில் ஊர்வனபோல ஊர்ந்து யாசித்து உண்ணத்தலைப்பட்டான். ஒருநாள் ஒரு பிராமணர் வீட்டுக்கு எதிரில் இருந்து "ஐயா! அன்னமிடுங்கள்" எனக் கூவினன். வீட்டிலிருந்து வெளியேவந்த பிராமணர், முன்பு அரசனைத் திருநீறிடச் சொன்ன பிராமணோத்தமரான





சுசீலரே. இவனைக் கண்டதும், இவன் இன்னானென அறிந்தவராய் "நீ புயபலன் என்னும் அரசனல்லவா! திருநீறிடேன் என்று இக்கதிக்கு ஆளாகினையே" என வருந்தினர். தூக்கத்திற்கண்ட கனவை, விழித்தபின் அறிபவன்போல எல்லாம் புயபலனுடைய ஞாபகத்திற்குவர, அவன் அம்மறையவர் காலில் விழுந்து "ஐயனே! என்னைக் காக்கவேண்டும்" எனப் புலம்பினான். மறையவரும் மனமிரங்கினவராய் திருநீறு அளித்து, உடம்பெல்லாம் பூசு என்றனர். அவ்வாறே அரசன் பூச, அறுபட்ட கையுங்காலும் யாவரும் வியப்புற முளைத்து, முன்னினும் தேஜஸைத் தந்தன. அரசனுக்கு அப்போது உண்டான சந்தோஷத்துக்கு அளவில்லை. ஆடினான், பாடினான், திருநீற்றின் பெருமையைப் புகழ்ந்து புகழ்ந்து கூத்தாடினான். இந்நிகழ்ச்சியைத் தூரத்திலிருந்து பார்த்திருந்தாள் மூக்கறுபட்ட ஒரு மாது. அவள்தான் இப்புயபலனுடைய மனைவி. காட்டில் வேடன் கையினின்றும் விடுபட்ட பின்னர், காடெல்லாம் அலைந்து இவ்விதர்ப்ப நாட்டுக்கே வந்து, உண்ண உணவு கிடையாது திருட ஏற்பட்டு ஒருநாள் காவலர் கையிலகப்பட்டு அரசன் உத்தரவால் மூக்கறுபட்டாள். "அந்தோ! என் புருஷனைக் காணேனோ என்னும் ஒரு ஆசையல்லவா இந்த ஆவியைப் போக்கிக்கொள்ளாது இவ்வளவு அவமானங்களுக்கு ஆளாகிறேன்" எனத் தன்னையே நொந்து, திரிந்த அம்மாது மறையவர் வீட்டில் தன் புருஷனிருப்பதையும், சுசீலர் எதிரில் நின்று திருநீறளித்து அவன் மேனியைச் சீர்ப்படுத்தினதையுங் கண்டு தானும் அவர் முன்புபோய்—"ஐயா! அடியேனையும் காத்தருளவேண்டும்! நான் இம்மன்னவரின் மனைவி! தாங்கள் திருநீறு இல்லாது தானமளித்தால் வாங்கமாட்டேன் எனத் திரும்பின சமயத்தில் தங்களுக்குத் தடைசெய்யக் கருதி, மூக்கில் வேணுமென்றே துரும்பிட்டுத் தும்பின பாபத்தால் மூக்கறும்படியான தீவினைக்கு ஆளானேன்' எனச் சொல்லிப் புலம்பினாள். மறையவர் அவளுக்கும் வெண்ணீறளிக்க அவள் அதைப் பூசினவுடன் மூக்கு முன்போலத் தோன்றிப் பொலிந்தது. புயபலனும் அவன் மனைவியும் புளகாங்கிதராய்ச் சுசீலர் காலில் பலமுறை வீழ்ந்து வணங்கினர். இவ்வதிசயங்களைக் கண்ட ஊரினர் இந்நிகழ்ச்சிகளை அவ்வூர் அரசனுக்குத் தெரிவிக்க அவன் ஓடிவந்து சுசீலர் பாதத்தில் விழுந்து வணங்கி அவர் கையினின்று திருநீறு பெற்றுப் பூசிக்கொண்டு இவர்கள் இருவரும் யாரென விசாரித்ததில், தான் பல நாளாய்க் காடுகள்தோறும் ஆட்களைக்கொண்டு தேடியும் காணாத தன் மகளும் மருமகனும் எனத் தெரிந்து பெரிதும் சந்தோஷம் அடைந்தான். பின்னர் புயபலன், தன் மாமனாரளித்த சேனையோடும் சொந்த நாடாகிய வங்கநாட்டுக்குச் சென்று அங்கிருந்த அரசனைப் போரில் வென்று நாட்டை யடைந்து, திருநீற்றை யென்றும் போற்று மனத்தினனாகவும், பூரம் உடலினனாகவும் பொலிந்து உலகாண்டுவந்து ஈற்றில் ஸ்ரீகயிலாயபதியின் திருவடி நிழலை அடைந்தான். திருச்சிற்றம்பலம்.

# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

ஒரு பட்டணத்தில் தனஞ்சயன் என்னும் ஒரு வர்த்தகனிருந்தான். அவன் வழக்கமாய் இராக்காலங்களில் வெளியூர்ச் சரக்குகளைத் தானிருக்கும் பட்டணத்திற்குக் கொண்டுவந்து விற்றுவருவான். அவ்வாறு இராக்காலத்தில் சரக்குகள் கொண்டுவருபவன் தன் பட்டணத்து ஆயத்துறை வழியாய் வந்தால் சுங்கம் கொடுக்கவேண்டுமென்று எண்ணி, அவ்வழி வாராமல் வேறொரு கள்ளமார்க்கமாய்ப் பட்டணத்துக்குச் சரக்குகளைக் கொண்டுபோய் வர்த்தகம்பண்ணி ஜீவனஞ் செய்துவந்தான். இவ்வாறு நெடுநாள் செய்துவருகையில், ஒருநாள் அர்த்த ராத்திரியில் வெளியூரினின்றும் சரக்குகள் கொண்டு, தான் வழக்கமாகவரும் கள்ளவழியாய்ச் செல்லுகையில் அம்மார்க்கத்திலுள்ள ஒரு பெரிய ஆலவிருக்ஷத்தினின்றும் ஒரு பூதம் கீழே குதித்து அவனைத் துரத்திக்கொண்டுவர, அவன் எவ்வளவு விரைந்தோடியும் தலைமேலுள்ள மூட்டையின் பாரத்தாலும், பருத்துச் சரிந்த

தொந்தியின் பளுவாலும் மிக்க ஆயாச மடைந்து நின்று, ஓர் சமயோசித யுக்தியால் பயமொழிந்து தைரியங்கொண்டு, தன்னைத் துரத்தி வரும் பூதத்தை நோக்கி, கல கலவென்று சிரித்துக் கைகொட்டி "நீயா துரத்தி வருகின்றாய்? அந்தோ! நான் தெரியாமல் வீணே கால்கள் நோக, இவ்வளவு தூரம் ஓடி வந்தேனே" என்று மிகவும் அலக்ஷியமாகச் சொன்னான். அதுகேட்ட பூதம் திடுக்கிட்டு "இவன் நமக்கு இரையாகத்தக்க சாமானிய மனிதன்; அப்படியிருக்க, நம்மிடம் சிறிதும் பயமில்லாமல் மிகவும் அலக்ஷியமாய்ச் சிரித்துப் பேசுகின்றானே! இதன் காரணத்தை அறிவோம்" என்றெண்ணி அந்த வர்த்தகனை நோக்கி, "நீ என்னை வேறு யாவரென்றெண்ணித்தான் இவ்வளவுதூரம் ஓடிவந்தனை" யென்று கேட்க, அவன், "இப்பட்டணத்திலுள்ள ஆயக்காரனென்றெண்ணி இவ்வளவு தூரம் பயந்து வந்தேனேயல்லாமல், நீ துரத்தி வருகிறாயென்று தெரிந்தால் ஓரடியும் அப்புறம் எடுத்துவைக்கமாட்டேன்" என்று சொன்னான்.

இதைக்கேட்டுப் பூதம் வியப்பும் பயமும் கொண்டு அவனை நோக்கி, "அந்த ஆயக்காரன் என்னிலும் மிக்க வல்லவனா" என்று கேட்டது. வர்த்தகன் "அந்த ஆயக்காரனுடைய வல்லமைக்கும் கொடுமைக்கும் அளவேது? அப்படிக்கில்லாவிட்டால், யாருக்கும் அஞ்சா நெஞ்சமுடைய நான் இவ்வளவு திகில் கொண்டு ஓடிவருவேனா?" என்று மிகவும் வற்புறுத்திக் கூறினன். அப்படியானால் அந்த ஆயக்காரனை எனக்குக் காட்டென்று பூதம் கேட்க, இப்படிவந்தால் நீ அவனைக் காணமாட்டாய். இந்தச் சரக்கை என் வீட்டில் கொண்டுபோய்ச் சேர்த்துவிட்டு, மறுபடியும் இந்தக் கோணியைக் கொண்டுவந்தால் நான் உன்னை இந்தக் கோணிப்பையில் போட்டுக் கட்டிக்கொண்டு போகிறேன். அப்போது நீ அவனுடைய வல்லமையையும் கொடுமையையும் காண்பாயென்று அவன்கூற, பூதம் அதற்கிசைந்தது.

பின்பு வர்த்தகன் அந்த பூதத்தைக் கோணிப்பையிற் போட்டுக்கட்டி மூட்டைபோல் தலையில் வைத்துக்கொண்டு ஆயத்துறைவழியே செல்லுகையில் ஆயக்காரன் வந்து, "நீ யார்? இந்த மூட்டையில் என்ன?" என்று வினவலும், 'தனஞ்சயன் ஒன்றும் பேசாது மௌனமாய்ச் சென்றமையால் ஆயக்காரன் கோபித்து வந்து தலைமீதிருந்த மூட்டையைக் கீழே தள்ளிக் காலால் பலதரம் உருட்டி உதைத்துத் தன் கையிலுள்ள எழுத்தாணியால் பல விடங்களில் குத்திப்பார்த்து,இது என்ன சரக்கென்று வர்த்தகனைக் கேட்டான். அவன் இது புளி மூட்டையென்று ஆயக்காரனிடத்தில் சொல்ல அவன் அது புளியோ அல்லவோ என்பதைக் கண்டறியும்படி பின்னும் எழுத்தாணியால் மூட்டைமுழுவதும் குத்திக்குத்திப் பார்த்தான். பிறகு தனஞ்சயன் அதற்குரிய சுங்கத்தைக் கொடுத்துவிட்டு மூட்டையை எடுத்துக்கொண்டு கொஞ்சதூரம் போய் அதனை அவிழ்த்துப் பூதத்தை வெளியேவிட அது அவனைப்பார்த்து "அப்பா நீ சொன்னவை யாவும் உண்மையே. அந்த ஆயக்காரன் மிகக் கொடியவன், அவன் என்னை உதைத்து எழுத்தாணியால் குத்தினபடியால் என் சரீரமெல்லாம் சல்லடைக் கண்கள்போலாயிற்று. அவனை நினைத்தால் இன்னும் என் உள்ளம் நடுங்குகிறது, கர்ப்பம் கலங்குகிறது, நீ என்னைத் தூக்கிக்கொண்டு வராமல், இன்னும் சிறிதுநேரம் அங்கு வைத்திருப்பையேயானால் நான் செத்தே போயிருப்பேன். நீ அந்தச் சமயத்தில் செய்த நன்றிக்கு நான் என்ன கைம்மாறு உனக்குச் செய்யப்போகிறேன், எனக்குப் பிராணபிச்சை தந்த உனக்கு இம் மண்ணுலகத்தையும் விண்ணுலகத்தையும் பரிசாகக் கொடுத்தாலும் அந்த நன்றிக்குச் சமானமாகாது. ஆயினும், என்னால் கூடிய உதவி ஏதாவது நான் செய்தலே வேண்டும். இந்த நகரத்து அரசன் மகளை நான்போய்ப் பிடித்துக் கொள்ளுகிறேன். எவ்வளவு வல்லமையுள்ள மாந்திரிகன் வந்து ஓட்டினாலும் போகேன், நீ வந்து ஆயக்காரன் என்று கூறிய மாத்திரத்தில் விட்டுப் போவேன், நீ அரசனிடத்தில் வேண்டிய பொருள்பெற்றுச் சுகித்து வாழ்ந்திரு" என்று பூதங் கூறிப்போய் அரசன் மகளைப் பிடித்துக்கொண்டது. மாந்திரிகத்தில் வல்லவர்கள் பலர்வந்து தங்களால் கூடியமட்டில் ஓட்டமுயன்றும், அது போகாமையைக் கண்டு அரசன் பெருந் துயருற்று இப்பூதத்தை ஓட்டுபவர்கட்குப் பதினாயிரம்

தெள்ளிய திருமணி திருட்டுக்கு நவமணி.



பொன் தருகிறேனென்று பறையறைவிக்க வர்த்தகன் போய், அரசன் அனுமதியின்மேல் இராஜபுத்திரியருகிற் சென்று ஆயக்காரன் என்றும் பெயர்கூறிய மாத்திரத்தில் அப் பூதம் விட்டுப்போய் விட்டது. அதுகண்ட அரசன் அளவிறந்த மகிழ்ச்சியடைந்து, தான் முன் சொல்லியிருந்தபடி பதினாயிரம் பொன்னேயன்றி இன்னும் வேண்டிய பரிசுகளையும் அவனுக்குத் தந்து அனுப்பினான். பிறகு அப் பூதம் வேறொரு அரசன் மகளைப் பிடித்துக் கொண்டது. வர்த்தகனை அவ்வரசன் பிடிக்கவே அங்கும் போய் ஆயக்காரன் என்று சொல்ல, அப்பூதம் நீ ஏனிங்கு வந்தாயென்று கோபித்து கேட்க, 'ஆயக்காரன் உன்னைத் தேடிக்கொண்டு வருகின்றான். அது கூறும் பொருட்டுஇங்கு வந்தனன்' என்று சொல்லவே பூதங்கேட்டு, நல்லகாரியஞ் செய்தனை, இனிமேல் நானிருக்கும் இடத்தெங்கும் வாராதேயென்று கூறி, அவ்விடம் விட்டு நீங்கி மற்றொரு தேசத்தரசன் மகளைப் பிடித்துக் கொண்டது. வர்த்தகன் அரசனிடத்தில் மிகுந்த பொருள் பெற்றுக்கொண்டு திரும்பினான்.

சுற்றுப் பக்கங்களிலுள்ள பிரதேசங்களெங்கும் தனஞ்சயன்பூதம்ஓட்டுவதில் மகாவல்லவனென்று பெயர் வந்தபடியால், இம்மூன்றாவது அரசனும் தன்னைப் பலவகையாலும் பிடித்தபடியாலே ;மறுபடியும் பூதமிருக்கும் இடத்தை நாடிச் சென்று அங்கும் ஆயக்காரன் என்னும் பெயரைக் கூறியபோது, பூதம் கோபாவேசங் கொண்டு. அவ்வர்த்தகனைக் கொல்லவரலும்,அவன் (ஆயக்காரன்) இறந்து போய்விட்டனன்; அச்சுபசேதி கூற வந்தேனென்று மொழிந்தனன். பூதம் கோபந் தணிந்து இன்றோடு என் பீடை யொழிந்தது. நீ இவ்வரசனிடத்தில் வேண்டிய நிதிபெற்றுக் கொண்டுபோய் வாழ்கவென்று கூறியது. அதற்கு வர்த்தகன்,ஒன்று வேண்டும், நீ இனிமேல் இப்பிராந்தத்திலிராமல் நூறுயோசனைக்கப்புறமுள்ள யாரையாவது போய்ப் பிடித்துக்கொள்ள வேண்டியதேயன்றி, அதற்குள்ளேயிருக்கும் எவரையும்பற்றி யலைக்கக் கூடாது, இதுதான் நீ எனக்குச் செயற்பாலதாகிய கடைசி உதவியென்று கூறலும், அது அப்படியே ஆகட்டுமென்று கைபோட்டு வாக்குத்தத்தம் செய்து அந்தப் பிரதேசத்தை விட்டொழிந்தது. பிறகு தனஞ்சயன் திரண்டபொருள் பெற்றுக் குபேரனைப்போல் சுகித்து வாழ்ந்திருந்தனன். வர்த்தகன் தன்னறிவின் நுட்பத்தால் பொல்லாத பூதத்தினிடத்திலிருந்து தப்பித்துக்கொண்டதுமல்லாமல் அதைக்கொண்டே பெருஞ் செல்வனுமாயினன்.ஆகையால் அறிவினுஞ் சிறந்த பொருள் உலகத்தில் யாதுமில்லை.அறிவினாலாகாத காரியமும் திரிலோகத்தும் கிடையாது. ஆகவே அதை அபிவிருத்திசெய்ய ஒவ்வொருவரும் முயலவேண்டும்.

---

# புத்தக வரவு

## BOOKS RECEIVED

1. ஹரீணீ.—இஃது ஒரு தமிழ் நாடிகை. திரிசுரபுரம், ஹிந்து ஸெகண்டரி ஸ்கூல் ஸ்ரீமான் அ. கு. மதனகோபால தீக்ஷிதர் இயற்றியது. விலை, ரூ. 1.

2. ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேச மொழிகள்.—ஸ்ரீமான் ஸ்ரீசைல தாதாசாரியார், பி.ஏ., அவர்கள் மொழிபெயர்த்தது. அழகாய் காலிகோ பைண்ட் செய்யப்பெற்றது. விலை ரூ. 1-12-0, அட்டை பைண்ட் செய்தது. ரூ 1-6-0. வேண்டுவோர் ஸ்ரீராமகிருஷ்ணமடம், மயிலாப்பூர், சென்னை, என்ற விலாஸத்திற்கு எழுதிப் பெறலாம்.

3. மஹரிஷிகள் சரித்திரம் .—சஞ்சிகைகளாகப் பிரசுரிக்கப்படுவது. நமது விமர்சனத்திற்கு வந்திருப்பது முதலாம் சஞ்சிகையாகும். இது அகஸ்தியர், அத்ரி முதலான பத்து ரிஷிகளின் சரித்திரங்கள் கொண்டது. ஒவ்வொரு சஞ்சிகையின் விலை அணா 8. வேண்டுவோர், மதுரை ஜில்லா, பெரியகுளம், ரிடையர்ட் வக்கீல், ஸ்ரீமான் எம். ஆர். ஸ்ரீநிவாஸய்யருக்கு எழுதிப் பெறவும்.

குறிப்பு.—மேற்கண்ட புத்தகங்களின் விமர்சனம் பின்னர் சஞ்சிகையில் வெளிவரும்.

---

தென்னைமரத்திலே தேள்கொட்டப் பனைமரத்திலே நெறிகட்டினதுபோல்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**காசி அகில இந்திய சங்கம்.**

பாரதகலைகள் அழிந்துபோகாமல் பார்த்துக்கொள்ளவும், அவைகளை விருத்திசெய்யவும், அகில இந்திய சங்கமொன்று ஏற்படுததப்பட்டிருக்கின்றது அச்சங்கத்தின் தலைமைஸ்தானம் காசியிலிருக்கும். ஸர் ரவீந்த்ரநாத் டாகூர் அச்சங்கத் தலைவராவார். இந்திய சங்கீதத்தைப் பயில்வதற்கு வகுப்புகள் ஏற்படுத்தப்பட்டிருக்கின்றன. ஒரு பொருட்காட்சி சாலையும் ஸ்தாபிக்கப்பட்டிருக்கின்றது. வர்ணந் தீட்டும் வேலையில், பிரசித்திபெற்ற ஸ்ரீமான் அபானீந்தரநாத் தாகூர் அச்சங்க உபதலைவராக விருக்கின்றார்.

*
* *

**நமது புதிய இராஜப் பிரதிநிதி**

நமக்கு இனிமேல் இராஜப்பிரதிநிதியாக வரப்போகும் லார்ட் ரீடிங் 1860-ம் வருஷம் அக்டோபர் மாதம் லண்டனில் பிறந்தவர். ரூபஸ் டேனியல் ஐசக்ஸ் என்ற இயற்பெயரையுடைய இவர் லண்டனிலுள்ள சர்வகலாசாலைப் பள்ளிக்கூடத்திலும், ஹானோவரிலும், பிரஸ்ஸல்ஸிலும் படித்துத் தேர்ச்சியடைந்தவர். பால்யத்தில் இவர் பலவித கஷ்டங்களை அனுபவித்தாரென சொல்லப்படுகிறது. இவருடைய தன் முயற்சியாலும் தளராஉழைப்பினாலும் இடைவிடா ஊக்கத்தினாலுமே இப்பொழுதுள்ள நிலைமைக்கு வந்தவர் என்றும் சொல்லப்படுகிறது. இவர் 1887-ம் வருஷம் நியாயவாதித் தொழிலை ஆரம்பித்து அத்தொழிலில் பேரும் புகழும்பெற்று விளங்கினார். அடுத்த வருஷம் இவருக்கு கே. ஸி. என்ற கௌரவம் அளிக்கப்பட்டது. பிறகு 1919-ம் வருஷத்தில் ஆஸ்க்வித் அரசாங்கத்தார் இவரை ஸொலிஸிடர் ஜனரலாக நியமித்தார்கள். அதே வருஷத்தில் அட்டர்னி ஜனரல் பதவிக்கு நியமிக்கப்பட்டார். 1911-ம் வருஷம் இவர் ப்ரிவி கௌன்ஸில் அங்கத்தினரானார். 1910-ம் வருஷத்தில் இவருக்கு ஸர் பட்டம் வழங்கப்பட்டது. 1904-ம் (ஹு) முதல், இவர் ரீடிங் பிரதேசத்தின் பிரதிநிதியாக காமன்ஸ் ஸபையில் அங்கத்தினரா யிருந்தார். இவர் சமீபத்தில் இங்கிலாந்தின் பிரதம நீதிபதியாக இருந்தார். அமெரிக்காவில் இங்கிலாந்தின் ஸ்தானாதிபதியாகவும் சிலகாலம் இருந்திருக்கிறார். இவர், 60 வயதுக்கு மேற்பட்டு இராஜப்பிரதிநிதி பதவியை ஏற்றுக்கொள்வதால், கூரிய அனுபவமும் காரியங்களை நியாயப்படி செய்ய அறிவு முதலியவைகளைப் பெற்றிருக்கிறார் என்றே நம்ப வேண்டியிருக்கிறது. தம்முடைய புது நியமனத்தைப்பற்றி சீமையில் பேசும்பொழுது லார்ட் ரீடிங் பின்வருமாறு சொல்லியிருக்கிறார்:—

"இந்தியாவைப்பற்றிய எல்லா விஷயத்திலும் நியாயம் எதுவோ, அதன்படியே மனித ஜன்மத்தை யடைந்த என்னால், எவ்வளவு செய்ய முடியுமோ அவ்வளவும் செய்வேன். இந்தியா முன்னேற்றத்தில் என்னால் அதிக நன்மை செய்ய முடியாமற்போனாலும், கெடுதல் ஒன்றும் என்னால் விளையாதென்று நம்புகிறேன்."

இந்தியாவின் மிக்க நெருக்கடியான நிலைமையில் இவர் இராஜப்பிரதிநிதிப் பதவியை ஏற்றுக் கொள்ளுகிறார். இதுகாறும் இராஜப்பிரதிநிதியாயிருந்த கனவான்களைவிட இவருக்கு அதிகமான பொறுப்பு ஏற்பட்டிருக்கிறது. லார்ட் ரீடிங் கருணையுடனும், தாராள நோக்கத்துடனும் நடந்துகொள்வாரென நம்புகிறோம்.

*
* *

**சட்டசபையில் தேசபாஷை.**

சட்டசபை வாதங்கள் யாவும் தேசபாஷைகளில் நடைபெறவேண்டுமென்று பலர் பேசி வருகின்றனர். வங்காள சட்டசபையின் முஸ்லீம் அங்கத்தினரொருவர் சட்டசபையின் முதல் கூட்டத்தில், தாம் கொண்டுவரவிருக்கும் தீர்மானத்தையும் கேள்விகளையும் வங்காளி பாஷையிலேயே யெழுதியனுப்பினார். நடவடிக்கைகள் யாவும் ஆங்கிலத்திலேயே நடைபெறவேண்டுமாகையால், தங்கள் அறிக்கை ஏற்றுக்கொள்ளப்படமாட்டாது என்று தெரிவிக்கப்பட்டது. ஆங்கிலமறியாதவர்கள் சட்டசபையில் அங்கம் பெறுதற்குரிய விதமாகவும் விதிகள் செய்யப்பட்ட பின்னர், அரசாங்கத்தார் இவ்விதம் நடந்துகொள்வது அங்கத்தினர்களை அவமதிப்பதன்னியில், ஆச்சர்யத்தையும் விளைக்கிறது.



13 AUG 1921

["விவேக போதினி" அனுபந்தம்.
Supplement to the "Viveka Bodhini."]



மதுரை, திருமலை நாயகன் மகாலுக்கு உட்புகும் வழி.



மதுரை ஸ்ரீ மீனாக்ஷிசுந்தரேசுவரர் கோயில், பெரிய கோபுரம்.

# விவேகபோதினி

"எப்பொருளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

13 AUG 1921

தொகுதி XIII } ரௌத்ரிஸ்ரீ தை-மாசிமீ :: 1921-ம்ஸ்ரீ பிப்ரவரி-மார்ச்மீ } பகுதி ௮-௯


## முருகன் வழிபாடு
## WORSHIP OF MURUGA

சுடரனைய திருமேனி யுடையழகு முதுஞான
சொருபகிரி யிடமேவு முகமாறும்
சுரர்தெரிய லளிபாட மழலைகதி நறைபாய,
துகிரிதழின் மொழிவேத மணம்வீச,
அடர்பவள வொளிபாய அரியபரி புரமாட,
அயில்கர மொடெழில் தோகை மயிலேறி,
அடியனிரு வினைநீறு படஅமர ரிதுபூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்,
விடைபரவி அயன்மாலொ டமரர்முநி கணமோட
மிடறடைய விடம்வாரி யருள்நாதன்
மினலனைய இடைமாது இடமருவு குருநாதன்
மிகமகிழ அநுபூதி யருள்வோனே!
இடர்கலிகள் பிணியோட எனையுமருள் குறமாதி
னிணையிளகிர் முலைமார்பி னணைமார்பா!
இனியமுது புலிபாத னுடனரவு சதகோடி
யிருடியர்கள் புகழ்ஞான பெருமாளே.

அமுதத்துக்காகத் திருப்பாற்கடலைக் கடைந்த காலத்தில் அதிற்றோன்றிய ஆலகாலவிஷத்தைக்கண்டு பிர்மதேவர், மகாவிஷ்ணு, மற்றுமுள்ள தேவர்கள், முனிவர்கள் வெருண்டு நந்திகேசுவரரை வணங்கி அவரிடம் தங்களுக்கு நேர்ந்த விபத்தைத் தெரிவித்துவிட்டு ஓடவே, அச்சங்கதியை நந்திகேசுவரர் உரைக்கக் கேட்டுப் பரிதபித்து, வெளியே தோன்றும் அண்டங்களைக் காப்பாற்றுமாறு சென்று அவ் விஷத்தை வாரித் திருவாயிற் போட்டுக்கொண்டு, அதை விழுங்குமுன் உலகங்களனைத்தையு மீன்ற அன்னையாகிய பார்வதி தேவியார் அவ்விஷம் உள்ளே சென்று எம்பெருமானது வயிற்றிலடங்கிய அநேக அண்டங்களை அழிக்கா திருக்குமாறு அவரது கண்டத்தை யிறுகப்பிடித்து விஷம் உட்செல்லவொணாது தடுக்க, அவ்விஷத்தைத் தம் துகண்டத்திலேயே நிறுத்திக் கொண்டருளிய கருணைக் கடலாகிய நீலகண்டராயும், மின்னற் கொடியைப்போல் நுண்ணிய இடையையுடைய பார்வதிதேவியாரைத் தமது வாமபாகத்திலிருத்தி, தாம் தமது மெய்யன்பருக்குத் தமது உடலையும் பங்கிட்டுத்தர விசையும் வள்ளலென உணர்த்தியவராயும், உலகுகளுக்கெல்லாம் பரமஞானத்தைப் போதிக்கும் குருநாதராயுமுள்ள சிவபெருமான் மிகவும் மகிழுமாறு அறிவை யறிபவருக்கே விளங்கும் பிரணவப்பொருளைப் போதித்தருளிய சுவாமிநாதா! இப்பாவ வாழ்க்கையில் என்னைப் பின்தொடர்ந்து துன்புறுத்தும் இடையூறுகளும், வஞ்சனைகளும், முந்தைவினைப் பயன்களும் வெருண்டு என்னை விட்டகலுவதற்காகவே என்னை யீன்ற அன்னையான வள்ளிநாயகியாரது அழகிய தனபாரங்கள் உன்மார்பிற் படுமாறு அணைத்துக் கொண்ட அருளாளா! நினைப்போர்மனத்திற் சுகத்தை விளைவிக்கும் நெடுநாட்தொண்டர்களான வியாக்ரபாதர், பதஞ்சலி முதலிய எண்ணிறந்தஇருடிகள் புகழும் ஞான தேசிகனாகிய பெருமாளே! சுயஞ்சோதியே போன்ற திருமேனியும் அழகுவாய்ந்த கனிந்தஞானத்தின் சொரூபமான தோட்களின்மீது விளங்கும் ஆறு திருமுக மலர்களும் தோன்றவும், தேவர்களால் சாத்தப்பட்ட புஷ்பமாலையிலிருந்து தேன்ஒழுகவும், அதில்மொய்க்கும் வண்டுகள் இனிய கானஞ் செய்யவும், செம்பவளம்போன்ற நினது உதடுகளினின்றும் வரும் ஞானமொழிகள் வேதங்களின் சாரமேயடங்கியவை யாதலால் வேதங்களின் மணத்தை வீசவும், திருமேனியினின்றும் செம்பவளத்தின் மிகச் சிவந்தநிறம் உதித்து எங்கும் பரவவும், பெரியஞானிகளுக்கும் பெறுவதற்கரிய சிலம்புகள்—பல அண்டங்களிலுமுள்ள ஜீவராசிகள் நடந்துகொள்ள வேண்டிய தெவ்வாறெனத் தெரிவிப்பதற்கென்றே நிர்த்தனஞ் செய்யும் நின்கழல்களிலணிந்த சிலம்புகள்—அசைந்தொலிக்கவும், வேலைக் கையிற்றாங்கி அழகிய தோகையையுடைய மயில் மீதேறி, அமரர்கள் கண்டு 'இது மாயத்தோற்றம், உண்மையல்ல' எனவும், 'கடவுளின் அருள் அற்புதமானது, அதன் செயல் எப்போதும் அதிசயத்தையே விளைவிக்கும்' எனவும், நினது அடிமையாகிய அடியேனது நல்வினை தீவினைகளின் பயன் எரிந்து சாம்பலாய்ப் போகுமாறு என்முன்னே தோன்றி அடியேனுக்குத் தரிசனம் தந்தருளவேண்டும்.

# விவேக போதினி

தொ. 13] ரௌத்ரி தை-மாசிமீ [ப. 8 - 9


## ஸ்ரீகிருஷ்ணன்

## SRI KRISHNA

வெகு காலமாய்த் தங்களுக்குப் புத்திர பாக்கியமில்லாமல் வருந்தின நந்தகோபரும் யசோதையும் தங்களுக்கு ஆண் குழந்தை பிறந்ததால் பரமானந்தமடைந்து, வைதிகக் கிரியைகளைக் குறைவறச்செய்தும் அளவற்ற தானங்களைக் கொடுத்தும் மஹோத்ஸவம் கொண்டாடினார்கள். பகவான் வாசஞ்செய்த கோகுலமெங்கும் தனதானியங்களும் பசுக்களும் நிறைந்திருந்தன. சகலபிராணிகளையும் மயக்கி யந்திரத்தில் வைத்து ஆட்டுவதுபோல் சுழற்றும் மஹா மாயையை அடிமையாய்க் கொண்டவரும் அந்த மாயை அறியமுடியாத மகிமையுடையவருமாகிய பரம புருஷனே பூலோகத்தில் மானிட அவதாரஞ்செயின், அவருடைய திவ்ய மங்கள சொரூபத்தைக் கண்டு யார்தாம் மோகியார்? தமது அழகினாலும் விளையாட்டினாலும் பார்வையினாலும் அங்குள்ள ஸ்திரீ புருஷர்களையும் பசுபக்ஷிகளையும் மயக்கி மனத்தைக் கவர்ந்தார். அவரிருக்குமிடத்தில் என்றும் அவரைவிட்டுப் பிரியாத திருமகள் குடிகொண்டிருந்தாள்.

சிலநாட்சென்றபின், நந்தகோபர் கம்சனுக்கு வருஷவ்ரி செலுத்துவதற்காக மதுரைக்குச் சென்றார். அப்பொழுது வசுதேவர் அவரைக் கண்டு க்ஷேமம் விசாரித்து அவருக்குப் புத்திரர்கள் பிறந்ததைப்பற்றித் தாம் அந்தரங்கத்தில் கொண்டுள்ள களிப்பைத் தெரிவித்ததோடு திருப்தியுமடைந்தார்.

கம்சன் ஏவியபூதனையென்ற இராக்கதஸ்திரீ அங்கங்கே திரிந்து குழந்தைகளை வாரிப் பால் கொடுப்பதுபோல் கொடுத்துக் கொன்றுவந்தாள். அப்படியே எல்லோரையும் மயக்கும் உருவத்தையெடுத்து கோகுலத்துக்கு வந்து, நந்தகோபருடைய வீட்டில் இரத்தின தீபம் போல் விளங்கும் பகவானைக்கண்டு அவரைச் சாமானியமான குழந்தையென்று நினைத்து, வாங்கி மடியில் வைத்துக்கொண்டாள். அதன் அழகைக் கண்டு அதனிடத்தில் தனக்குண்டான அன்பினால் மயங்கினவள்போல் நடித்து அதற்கு விஷப்பாலைக் கொடுத்தாள். பகவான் அதையும் அவளுடைய பிராணனையும் சேர்த்துக் குடித்துவிட்டார். உடனே அவள் பேரிடிபோல் அலறிக்கொண்டு, கோரமான இராக்கத உருவமடைந்து கீழேவிழுந்து இறந்தாள். கிருஷ்ணனோ அவளுடைய தேகத்தின்மேல் விளையாடிக் கொண்டிருந்தார். யசோதையும் ரோஹிணியும் கோபிகளும் அவரை எடுத்துச் சமாதானஞ் செய்து, பெரியோர்களை அழைத்து, அவர்களைக்கொண்டு வேதமந்திரங்களால் ஹோமங்களையும் இரக்ஷைகளையும் செய்வித்தார்கள்.

பிறகு ஸ்ரீகிருஷ்ணனுடைய ஜன்ம நக்ஷத்திரத்தன்று யசோதை அவருக்கு மங்களஸ்நானஞ் செய்வித்து, தொட்டிலிற் படுக்கவைத்தாள். அதற்கு மேலிருந்த வண்டியில் கம்சனால் அனுப்பப்பட்ட ஓர்அசுரன் பிரவேசித்து, அவர்மேல் விழுந்து அவரை நசுக்கிக்கொல்லச் சமயம் பார்த்துக்கொண்டிருந்தான். அதையறிந்த கண்ணன் பால்குடிக்க விரும்பி அழுவதுபோல் அழுது, கால்களை உயரதூக்கி உதறினார். உடனே அந்த வண்டி துகள் துகளாய் உடைந்து நாற்புறத்திலும் விழுந்தது. அதில் புகுந்திருந்த அசுரனும் மாய்ந்தான். நந்தகோபர் குழந்தைக்கு நேர்ந்த ஆபத்தை நினைத்து, அதிலிருந்து விடுபட்டதற்காக ஈசுவரனைத் துதித்து, சாந்தி இரக்ஷை ஹோமம் முதலியவைகளை விதிப்படி செய்வித்தார்.

ஒருநாள் யசோதை குழந்தையைத் தன் மடியில் வைத்துக்கொண்டு கொஞ்சிக்கொண்டிருந்தாள். திடீரென்று அது மலைச் சிகரம் போல் தாங்கமுடியாத பளுவடைந்தபடியால் அதைப் பூமியில் வைத்து வேலைக்காரிகளை அழைக்கச் சென்றாள். அப்பொழுது கம்சனால் ஏவப்பட்ட திருணாவர்த்தனென்ற அசுரன் சுழல்காற்றைப்போல் உருவமெடுத்துக் கொண்டு வந்து கிருஷ்ணனைத் தூக்கிக் கொண்டு போனான். அப்பொழுது கற்கள் மழைபோல் விழுந்தன. எங்கும் புழுதி பரந்தது. மழையும் ஓயாமற் பெய்தது. எங்கும் இருள் சூழ்ந்தது. சண்டமாருதத்தின் ஒலியும் வேகமும் எல்லோரையும் பிரமிக்கச் செய்தன. அந்த அசுரன் பகவானைச் சுமக்க முடியாதவனாய் வர வர வேகம் குறைந்து, அவரைக் கீழேவிடப் பார்த்தான். ஆனால் அவர் அவனுடைய கழுத்தைக் கைகளாற் பிடித்து இறுக்கி, அவனுடைய ஆவியைக் கொள்ளைகொண்டார். உடனே அவ்வசுரன் தன் நிஜமான கோரவுருவத்துடன் கோகுலத்தில் விழுந்தான். குழந்தையும் அவனுடைய கழுத்தைக் கட்டிக்கொண்டே தொங்கிற்று. எல்லோரும் பார்த்து ஆச்சரியமடைந்து, இது பகவானுடைய கிருபையென்று அதற்கு யாதொரு அபாயமும் நேராதபடி பெரியோர்களைக்கொண்டு இரக்ஷை கட்டினார்கள்.

மற்றொரு நாள் கண்ணன் பால் குடித்துக் கொண்டிருக்கையில், யசோதை அவர் முகத்தைப் பார்த்துக்கொண்டேயிருந்தாள். அப்பொழுது குழந்தை கொட்டாவி விட்டது. அதன்வாயில் ஆகாயம் பூமி, சந்திரசூர்ய நக்ஷத்திரங்கள் பதினான்கு உலகங்கள் அவற்றிலுள்ள சராசரங்கள் எல்லாம் தெரிந்தன. அவைகளுக்குள் யசோதையும், அவளுடைய மடியில் ஒரு கிருஷ்ணனும் அவருடைய திறந்தவாயில் இன்னும் பதினான்கு உலகங்களும்தெரிந்தன. இப்படி எல்லையில்லாமல் போய்க்கொண்டேயிருப்பதைக் கண்டு பயந்து ஆச்சரியமடைந்து கண்களை மூடிக்கொண்டாள்.

வசுதேவருடைய வேண்டுகோளுக்கிணங்கி யாதவருக்குப் புரோகிதரான கர்க்காசாரியர் நந்தகோகுலத்துக்கு வந்தார். நந்தகோபர் அவரைப் பணிவோடு உபசரித்தார். அவர் பகவானைத் தரிசித்துப் பரமானந்தமடைந்து, "நந்தரே! நான் இந்தக் குழந்தைக்கு நாமகரணம் முதலிய ஸம்ஸ்காரங்களைச் செய்தால் கம்சன் இதைத் தேவகியின் புத்திரனென்று நினைப்பான். அதைத் தேடிக்கொண்டே இருக்கிறான். ஆகையால் ஒருவருக்கும் தெரியாமல் பரமரகசியமாய் இதைச் செய்யவேண்டும்" என்று சொல்லி, ரோஹிணியின் புத்திரனுக்கு இராமனென்றும் பலனென்றும் ஸங்கர்ஷணனென்றும் பெயர்கள்வைத்தார். யசோதையின் குழந்தைக்குக் கிருஷ்ணனென்று நாமகரணம் செய்தார். ஒருவரையொருவர் விரோதித்துக்கொள்ளும் யாதவர்களை ஒன்றுபடுத்தப் போவதால் மூத்தவனுக்கு ஸங்கர்ஷணனென்றும், வசுதேவருக்கு முன் ஜன்மத்தில் இளையவன் புத்திரனாயிருந்ததால் இளையவனுக்கு வாசுதேவனென்றும் பெயர் வைத்தேனென்று வெளிப்படையாய்ச் சமாதானஞ் சொன்னார்; உண்மையான காரணங்களை மறைத்தார்.

இராமகிருஷ்ணர்கள் தவழ்ந்தும் நடந்தும் சிரித்தும் குதித்தும் கூத்தாடியும் விளையாடினர். தாலாட்டு அம்புலி செங்கீரை சப்பாணி தளர்நடை பூச்சிகாட்டுதல் முலையுண்ணல் காதுகுத்தல் நீராட்டல் குழசீவக்காக்கையை வாவெனல், கோல்கொண்டு வரவிளம்பல், பூச்சூட்டல், காப்பிடல் முதலிய பருவங்களுக்குத் தகுந்த பாலலீலைகளைச் செய்து நந்தரையும் யசோதையையும் கோகுலத்திலுள்ள கோபர்களையும் கோபிகளையும் பசுக்களையும் மற்றுமுள்ள ஜந்துக்களையும் பரமானந்தமடையச் செய்தார்கள். மேலும் வீடுகளிற் புகுந்து கன்றுக்குட்டிகளை அவிழ்த்துவிடுவது, பால் தயிர் வெண்ணெய் முதலியவைகளைத்திருடித் தாங்களும் தங்களைச் சேர்ந்த சிறுவர்களும் உண்பது, மீந்தவைகளைப் பூனைகளுக்கும் நாய்களுக்கும் குரங்குகளுக்கும் ஏராளமாய்ப் போட்டு மகிழ்வது, சட்டிகளை உடைப்பது, குழந்தைகளை அடித்துக் கிள்ளி அழும்படி செய்வது, வீட்டு வேலைகளைச் செய்வதைத் தடுப்பது, ஒருவர் கையிலும் அகப்படாமல் ஓடுவது, தங்கள் மீதில் குற்றஞ்சொல்லும் கோபிகளைக் கண்டு பயந்தவர்போல் அழுது நாங்களொன்றுமறியோமென்று பறக்கப் பறக்க விழிப்பது முதலிய பாலலீலைகளால் எல்லோருடைய மனத்தையும் இந்திரியங்களையும் தேகத்தையும் தங்களிடத்தில் நாடும்படி செய்தார்கள்.

ஒரு நாள் "அம்மா! கிருஷ்ணன் மண்ணைத் தின்கிறான்" என்று பலராமன் முதலிய குழந்தைகள் யசோதையினிடத்தில் முறையிட்டார்கள். அவள் 'ஏன் இப்படிச் செய்கிறாய்? இதோ இராமனும் அந்தக் குழந்தைகளும்

சொல்லுகிறார்களே" என்று கேட்டாள். கிருஷ்ணன் "அம்மா எனக்கு ஒன்றும் தெரியாது. அவர்கள் சொல்லுவதெல்லாம் பொய். இதோ என் வாயைப் பார்" என்று வாயைத் திறந்தார். யசோதை பார்த்தபோது சகலப் பிரபஞ்சங்களையும் தன்னையும் அவருடைய வயிற்றிலே கண்டாள். அதனால் ஆச்சரியமும் பக்தியும் மேற்கொண்டு அவரை ஈசுவரனென்றே நினைத்துத் தோத்திரஞ் செய்தாள். கண்ணன் தம் மாயையால் அவளுடைய ஞானத்தை மறைத்து, எப்பொழுதும்போல் தாம் குழந்தையென்றே நினைக்கும்படி செய்தார். (வசுக்களுக்குள் சிரேஷ்டரான துரோணரும் அவருடைய மனைவியான தாரையும் பிரமதேவரை நோக்கித் தவஞ் செய்து, வரங்களைப் பெற்று, பகவானுக்குத் தாய்தகப்பனாகவிருந்து சகல கைங்கரியங்களையுஞ் செய்து அவரால் பலவிதமாய் ஆனந்தத்தை அனுபவித்து, முடிவில் அவருடைய திருவடிகளை அடைந்த நந்தகோபரும் யசோதையுமாய்ப் பிறந்தார்கள்.)

மற்றொருநாள் யசோதை கிருஷ்ணனைப் பற்றிக் கோபிகள் சொல்லும் குற்றங்களைக் கேட்டு சகிக்கமுடியாதவளாய் அவரைத் துரத்திப்பிடித்து, உரலோடு சேர்த்துக் கயிறு கொண்டு கட்டினாள். அந்தக் கயிறு இரண்டு அங்குலம் குறைவாக இருந்தது. அதற்கு எத்தனை கயிறுகளைச் சேர்த்துக்கட்டியும் அப்படியே இரண்டங்குலம் குறைவாயிருந்தது. அதனால் யசோதை கைசோர்ந்து சிரமப்படுவதைக்கண்ட கண்ணன் தாமாகவே அதற்குக் கட்டுப்பட்டார்.

குபேரனுடைய புத்திரர்களான நளகூபரன் மணிக்கிரீவனென்ற இருவர் நாரதருடைய சாபத்தால் மருதமரங்களாய்க் கோகுலத்தில் வளர்ந்து, பகவான் எப்பொழுது அங்கே அவதரித்துத் தங்களை அச்சாபத்திலிருந்து விடுவிப்பாரோவென்று நூறு தேவவருஷங்களாகக் காத்துக்கொண்டிருந்தார்கள். பகவான் தமது அன்புக்குகந்த நாரதருடைய வார்த்தையை நிறைவேற்ற விரும்பி, அந்த உரலை இழுத்துக்கொண்டே அவ்விரு மரங்களுக்கு நடுவிற் புகுந்து உரலை அவைகளில் மாட்டியிழுத்து, அவைகளைப் பேர்த்து பயங்கரமான சத்தத்துடன் விழும்படி செய்தார். உடனே அவைகளிலிருந்து குபேரபுத்திரர்கள் இருவரும் திவ்வியரூபத்துடன் வெளிப்பட்டு, கண்ணனைத் தோத்திரஞ்செய்து, விண்ணுலகஞ் சென்றார்கள். மரங்கள் முறிந்து விழுந்த சத்தத்தைக் கேட்டு, நந்தர் யசோதை முதலிய அனைவரும் ஓடிவந்து, குழந்தையை வாரியெடுத்து, பகவானுடைய கிருபையால் குழந்தை இவ்விதமான ஆபத்துக்களுக்குத் தப்பித்துக்கொண்டு வருகிறதென்று அதற்கு இரக்ஷை செய்தார்கள்.

பின்பு ஒருநாள் கிருஷ்ணன் விளையாடிக் கொண்டிருக்கும்பொழுது, தெருவில் ஒருத்தி பழமோ பழமென்று கூவிக்கொண்டு அங்கு வந்தாள். அதைக்கேட்டுக் கண்ணன் இருகைகளிலும் தானியத்தை எடுத்துக்கொண்டு ஓடிவந்து, "அடீ! பழக்காரி! நான் கைநிறையத் தானியம் கொண்டுவந்திருக்கிறேன். இதை அளந்துகொண்டு பழம்கொடு" என்றார். அவள் அவருடைய அழகைக்கண்டு மோகித்து, அவருடைய கைநிறையப் பழங்களைக் கொடுத்துப் பிறகு கூடையைப் பார்த்தாள். கூடை நிறைய நவரத்தினங்களிருந்தன. அதைக் கண்டு வியந்துசென்றாள். கண்ணன் அப்பழங்களை கோபஸ்திரீகளுக்குக் கொடுத்து விட்டு விளையாடப்போனார்.

அவ்விடத்தில் கண்ணனுக்கு மேற்கூறியவாறு நேர்ந்த ஆபத்துக்களையும் இன்னும் பல அபசகுனங்களையும் உன்னிக் கோகுலத்தை விட்டு பிருந்தாவனத்துக்குப்போவதாக நந்தர் உபநந்தர் முதலிய ஆயர்கள் நிச்சயித்து அங்கு சென்றார்கள். அங்கே கண்ணன் இராமன் முதலியவர்கள் யமுனைக்கரையில் கன்றுகளை மேய்த்துக்கொண்டிருக்கும்பொழுது ஓர் அசுரன் அவர்களைக் கொல்லக்கருதி, தானுமொரு கன்றுபோலுருத்தரித்துக் கன்றுகளோடு கன்றாய்ச் சஞ்சரித்தான். கிருஷ்ணன் அதைப் பலராமனுக்கு ஜாடையாய்க்காட்டி, அதனருகிற் சென்று அதன் பின்கால்களையும் வாலையும் சேர்த்துப்பிடித்துத் தூக்கி, விளாமரத்தின் கனிகளிற் குறிவைத்து எறிந்தார். அந்த அசுரன் உயிர் இழந்து பருத்தசரீரத்துடன் பூமியில் விழுந்திறந்தான். உதிர்ந்த விளாம் பழங்களைக் கோபாலர்கள் பொறுக்கிக் களிப்புடன் தின்றார்கள்.

தோராச் செய்கை தீராச் சஞ்சலம்.



மற்றொருநாள் அவர்கள் கன்றுகளுக்குத் தண்ணீர் காட்டிக்கொண்டிருக்கும்பொழுது, ஓர் அசுரன் கொக்கைப்போல் வேடந் தரித்து வந்து கண்ணனை விழுங்கினான். இராமனைத் தவிர மற்றெல்லோரும் கோவென்று கதறியழுதார்கள். நெருப்புத்தணலை விழுங்கினவனைப்போல் அந்த அசுரன் தத்தளித்து அவரைக் கக்கினான். அவர் கம்சனுடைய தோழனான அவ்வசுரனுடைய மூக்கைப்பிடித்து, இரண்டாகக் கிழித்தெறிந்து கொன்றார். அப்பொழுது தேவர்கள் மலர்மாரி பொழிந்தனர். மகரிஷிகள் புகழ்ந்தார்கள். கோபாலர்கள் மகிழ்ந்தார்கள்.

ஒருநாள் கிருஷ்ணன் வனபோஜனஞ்செய்ய நிச்சயித்து, பலவித அன்னங்களைத் தயார் செய்துகொண்டு கொம்பு, தம்பட்டம், புல்லாங்குழல் முதலிய வாத்தியங்களுடன் மாடுகளையும் கன்றுகளையும் ஓட்டிக்கொண்டு அங்கேசென்று, நானாவிதப் பாலகிரீடைகளைச் செய்து, சந்தோஷமாய்க்காலத்தைக்கழித்துக் கொண்டிருந்தார். அப்பொழுது பூதனை, பகாசுரன் என்பவர்களுக்குத் தம்பியான அகாசுரன் என்பவன் இராமகிருஷ்ணர்களைக் கொன்று தன் உடன்பிறந்தோரைத் திருப்திசெய்விக்க நினைத்து மலைப்பாம்பின் உருவமெடுத்து வழியிற் படுத்திருந்தான். ஆகாயத்தையும் பூமியையும் அளாவியிருந்த அதன் வாயைக்கண்டு, அதை ஓர் மலைக்குகை யென்று நினைத்து, ஆயச் சிறுவர்கள் அதில் நுழைந்தார்கள். கண்ணன் அதையெல்லா மறிந்து தாமும் பின் சென்றார். உடனே அகாசுரன் வாயை மூடினான். அசுரர்கள் கைகொட்டிக் கொக்கரித்தார்கள். தேவர்கள் கதறியழுதார்கள். கண்ணன் தம் தேகத்தைப் பெரிதாக்கி அவனுக்கு மூச்சுத் திணரச் செய்து அவன் தலையைப் பிளந்துகொன்றார். உடனே இடையர்களும் மாடுகளும் கன்றுகளும் வெளியில் வந்தார்கள். பிறகு அந்தத் தேகத்திலிருந்து ஓர் தேஜஸ்கிளம்பி யாவருங்காணக் கண்ணனுடைய சரீரத்திற் கலந்தது. தேவகணங்கள் கண்ணனைக் கொண்டாடிப் பூஜித்தார்கள். அப்பொழுது கண்ணனுக்கு வயது ஐந்து.

பிறகு அவர் அங்குள்ள ஓர் மணல்திட்டில் தோழர்களுடன் போஜனஞ்செய்து விளையாடிக் கொண்டிருக்கையில், கன்றுகள் வெகு தூரம் சென்று மறைந்தன. அவைகளைத் தேடிக்கொண்டு வருவதற்காகக் கண்ணன் தனியே போனார். அந்தச் சமயத்தில் பிரமதேவர் பகவானுடைய மகிமையைப் பார்க்க விரும்பி, அந்தக் கன்றுகளையும் சிறுவர்களையும் வேறிடத்தில்வைத்து மறைத்துவிட்டார். கிருஷ்ணன் அதை யறிந்து, தாமே அந்தச் சிறுவர்களாகவும் கன்றுகளாகவும் உருவங்களெடுத்து ஒருவருஷம் வரையில் கோகுலத்திலுள்ள எவருக்கும் கொஞ்சமேனும் பேதந் தெரியாமல் அந்தந்தப் பெற்றோர்களிடத்திலும் பசுக்களிடத்திலும் இயல்பாக நடந்துகொண்டார். நாராயண ஸ்வரூபமான பிரஜைகளிடத்தில் தாய் தகப்பன்மாருக்கும் மாடுகளுக்கும் அதுவரையிலில்லாத அன்புண்டானது ஆச்சரியமல்ல. முதலில் அதைக் கண்டு மோகித்த பலராமரும், பிறகு தம் ஞானக்கண்ணால் அதை அறிந்து வாசுதேவனுடைய மகிமையைக் கொண்டாடினார். பிரமதேவர் தமது உபாயம் பலிக்காததால் வெட்கமடைந்து பகவானை வணங்கித் தாம் செய்த அபராதத்தைப் பொறுக்க வேண்டுமென்று கூறி வணங்கி, சத்தியலோகத்தில் மறைத்து வைத்திருந்த கோபாலர்களையும் கன்றுகளையும் கொண்டுவந்து கொடுத்து, ஜகந்நாதனுடைய மகிமையைக் கொண்டாடினார். சிறுவர்களுக்கும் கன்றுகளுக்கும் அந்த ஒரு வருஷம் நொடிபோற் கழிந்தது.

ஆரியமத உபாக்கியானம்.—** நம் தமிழ்நாட்டில் "தேசியக் கல்வி" என்ற சொல் பரவுமுன்னமேயே, நமது இந்துமதத்தின் சிரோரத்தினமாய் விளங்குகின்ற வேதம், உபநிஷத் மகாபாரதப் புராணம் முதலிய உயர்தர நூற்களினின்றும் உத்தம தர்ம தத்துவங்களைக் கதைகளின் மூலமாகவே சிறுவர் சிறுமியர்க்குக் கற்பிக்க விரும்பி, கல்வி பயிலும் மாணவர்க்கெல்லாம் சிறந்தோர் ஞானவுணவளித்து தேசியக் கல்வியின் அஸ்திவாரத்தை ஆஸ்திகமுறையில் வலுப்படுத்தி விட்டதைக் குறித்துப் பெரிதும் மகிழ்ச்சி யுறுகின்றோம். நமக்குக் கிடைத்துள்ள புத்தகங்கள் 12-ம் பதிப்பாக வெளியிட்டிருப்பதைப் பார்க்கத் தமிழ்நாட்டு மக்களும், கலவிச் சாலைத் தலைவர்களும் இதன்பயனை நன்குணர்ந்து ஆதரிக்கிறார்களென்றே கருத இடமுண்டு. இவ்விரண்டு புத்தகங்களும் ஒவ்வொரு குடும்பத்திலும் ஸ்திரீ புருஷர்களால் பெரிதும் ஆதரித்துப்படிக்கத் தக்கனவாம். (வைசிய மித்திரன்.)

தேரை மோந்த தேங்காய் போல.

# தமிழ்நாட்டில் பிரதேசச் சுய ஆட்சி

## LOCAL SELF-GOVERNMEMT IN ANCIENT INDIA

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ.]

(109-ம் பக்கத் தொடர்ச்சி.)

முந்திய வியாசங்களிற் கூறியவாறு கிராமங்கள் ஒவ்வொன்றும் ஒவ்வொரு குடியரசுதரணியாகவிருந்தன. தங்களுடைய காரியங்களை விசேஷமாக அரசனது உதவியை நாடாமலே நடத்திக்கொண்டன. அவைகள் தங்களது நன்மையையே யன்றி நாட்டின் நன்மையையும் கருதி, பல தரும காரியங்களை நடத்திவந்தன. அவைகள், அக்காலத்தில் மேன்மையாகக் கருதப்பட்ட வேத சாஸ்திரங்களைப் போதிப்பதற்குக் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் ஏற்படுத்தி, அவைகளிற் படிக்கும் மாணாக்கர்களுக்குச் சௌகரியமாக அன்ன சத்திரங்களையும் ஆதுலசாலைகளையும் ஏற்படுத்தி, அத்தருமங்கள் என்றென்றைக்கும் நடந்துவருவதற்காகக் கிராமப் பொது நிலங்களிற் போதுமான வளவு நிலத்தைச் சிலாசாசன மூலமாக மர்னியமாகவிட்டுக் கல்வியை அபிவிருத்தி செய்துவந்தனவென்று பல சிலா சாசனங்களின் மூலமாக வெளியாகிறது.

இப்போது தென்னூற்காடு ஜில்லாவில் எண்ணாயிரம் என்று பெயர் வழங்கும் இராஜராஜச் சதுர்வேதிமங்கலத்தில் இராஜராஜ விண்ணகர் கோவிலில் சுமார் கி. பி. 1023-வது வருஷத்தில், அதாவது, சுமார் ஆயிரம் வருஷங்களுக்கு முன்னே, முதல் இராஜேந்திரச் சோழ தேவ மகாராஜன் காலத்தில் வெட்டிய ஓர் சிலாசாசனம் அவ்வரசன் போரில் வெற்றியடையுமாறு அக்கிராமச் சபையார் அக்கோவிலிலெழுந்தருளிய பரமசுவாமிக்குஏராளமான பூமிகளை மானியமாகவிட்டு, அப்பூமிகளின் வரும்படியை எவ்வாறு உபயோகிக்கவேண்டுமென்பதைக் குறித்து விவரமான விதிகள் ஏற்படுத்தினர்களென்பதைத் தெரிவிக்கிறது. அவ்வரும்படியிற் பெரும்பான்மையை கல்லூரிக்கும் அன்னசத்திரத்துக்குமே உபயோகிக்கவேண்டுமெனக் கண்டிருக்கிறது. அச்சிலாசாசனத்திற் கண்ட விஷயங்களை இங்கு சுருக்கமாக எடுத்துரைப்போம்.

1. கோவிலில் சந்நிதானத்தில் திருவாய்மொழிப்பிரபந்தத்தைச் சேவிப்பதற்காக நால்வர் நியமிக்கப்பட்டனர். அவர்களுக்குத் தினந்தோறும் மூன்று மரக்கால் நெல் கொடுக்கப்பட்டது. இந்தச் செலவுக்காக இராஜராஜநல்லூர் என்று பெயர் வழங்கிய ஆனுங்கூரில் ஒருவேலி இரண்டுமா நிலம் மானியமாக விடப்பட்டது.

2. அக்கோவிலைச் சேர்ந்த மடத்திலுள்ள இருபத்தைந்து ஸ்ரீ வைஷ்ணவர்களுக்கு அன்னமளிப்பதற்காக அதே ஊரில் ஒருவேலி நான்குமாநிலம் மானியமாக விடப்பட்டது.

3. ஆனி அனுலம் என்னும் உத்ஸவகாலத்தில் சுவாமியைத் தரிசிக்கவரும் வைஷ்ணவர்களுக்கும் தாஸர்களுக்கும் அன்னமளிப்பதற்காக அவ்வுத்ஸவத்துக்கென்று அறுபது கல நெல்லும் மூன்றுகழஞ்சு பொன்னும் வைக்கப்பட்டன.

4. சுவாமியைத் தேரின்மீது எழுந்தருளச்செய்வதற்கும், அப்போது சுவாமிக்குச் சாத்துவதற்குப் புதிய வஸ்திரமும் பரதேசிகளுக்கு அளிப்பதற்கு வஸ்திரங்களும் வாங்குவதற்கும், அபிஷேகம், புஷ்பமாலைகள், நைவேத்யம் இவைகள் சம்பந்தமான செலவுகள் செய்வதற்கும், மற்றும் சில ஆராதனைகளை நடத்துவதற்குமாக அரைவேலி இரண்டுமா நிலமும் கொஞ்சம் பொன்னும் வைக்கப்பட்டன.

5. அக்கோவிலைச் சார்ந்த வேதப்பாடசாலையிற் படித்துவந்த கீழேகண்ட மாணாக்கர்களுக்குக் கங்கைகொண்டசோழ மண்டபத்தில் தருமமாக அன்னமிடப்பட்டது.

(1) ரிக்வேதம் கற்போர் 75 - பேர்கள்.
(2) யஜுர்வேதம் கற்போர் 75 - பேர்கள்.
(3) சாண்டோகஸாமம் கற்போர் 20 - பேர்கள்.
(4) தளவாகரஸாமம் கற்போர் 20-பேர்கள்.
(5) வாஜஸநேயம் கற்போர் 20 - பேர்கள்.
(6) அதர்வவேதம் கற்போர் 10 - பேர்கள்.
(7) பௌதாயனீய க்ருஹ்ய கல்பமும் கனமும் கற்போர் 10 - பேர்கள்.

ஆக 230 - பிரமசாரிகள். ரூபாவதாரம் கற்போர் 40 - பிரமசாரிகள். ஆகமொத்தம் 270-பிரமசாரிகள். இவர்கள் ஒவ்வொருவருக்காகவும் தினமொன்றுக்கு ஆறுநாழிநெல் கொடுக்கப்பட்டது.





பிரமசாரிகள் மாத்திரமன்றி கிரகஸ்தர்களும் அங்கு கல்விகற்று வந்தனர்.

1. வ்யாகரணம் கேட்போர் 25 - பேர்கள்.
2. ப்ரபாகரம் கேட்போர் 35 - பேர்கள்.
3. வேதாந்தம் கேட்போர் 10 - பேர்கள்.

இவ்வெழுபது பேர்களும் பிரமசாரி ஆசிரமத்திலேயே வேதாத்தியாயனஞ் செய்து, பிறகு கிரகஸ்தாசிரமத்தில் வ்யாகரணம், ப்ரபாகரம், வேதாந்தம் இவைகளைக் கேட்டு விசாரணை செய்தவர்களாதலால், அவர்களுடைய குடும்பங்களையும் இரக்ஷிப்பதற்குப் போதும்படி அவர்களில் ஒவ்வொருவருக்கும் தினமொன்றுக்குக் குறுணி இருநாழி நெல் கொடுக்கப்பட்டது.

அப்பாடசாலையில் ரிக்வேதத்தைக் கற்பிக்க மூன்று வித்துவான்களும், யஜுர் வேதத்தைக் கற்பிக்க மூவரும், சாண்டோகஸாமம், தளவாகர ஸாமம், வாஜஸநேயம், பௌதாயனீய க்ருஹ்யம், கல்பம், காடகம் இவைகள் ஒவ்வொன்றையும் போதிப்பதற்கு ஒவ்வொரு வித்துவானும், ஆகப் பத்து வித்துவான்கள் நியமிக்கப்பட்டனர். வ்யாகரணம், ப்ரபாகரம், வேதாந்தம் இம்மூன்றையும் போதிப்பதற்கு மூன்று நம்பிமார்களும் நியமிக்கப்பட்டனர். இப்போதகர்களுக்கும் தினமொன்றுக்கு ஒவ்வொருவருக்கும் ஒருகலம் நெல்லுக்குக் குறையாமற் கொடுக்கப்பட்டது. ப்ரபாகரத்தைக் கற்பித்தபோதகருக்குத் தினமொன்றுக்கு முக்குறுணி நெல் கொடுக்கப்பட்டது. இப்போதகர்களுக்கும் மேற்கூறிய கிரகஸ்த மாணாக்கர்களுக்கும் வருஷமொன்றுக்குக் கொஞ்சம் பொன்னும் கொடுக்கப்பட்டது.

கோவிலைச் சார்ந்த சத்திரத்தில் வேதம் வல்ல பிராமணர்கள், பிராமணர்கள், ஸ்ரீ வைஷ்ணவர்கள், பாடசாலை மாணாக்கர்கள் 350 - பேர்கள், ஆகமொத்தம் 506 - பேர்களுக்குத் தினந்தோறும் தருமமாக அன்னமளிக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது.

மேற்கூறியவாறு கோவில்களைச் சார்ந்த தருமமாக ஏற்படுத்தப்பட்ட வேதசாஸ்திரப் பாடசாலைகளில் கல்வி கற்கும் மாணாக்கர்களுக்குச் சௌகரியமாக ஆதுலசாலைகளும் ஏற்படுத்தப்பட்டனவென்பது சிலாசாசனங்களால் வெளியாகிறது. செங்கற்பட்டு ஜில்லா மதுராந்தகம் தாலூகாவிலுள்ள திருமுக்கூடல் என்னும் கிராமத்தில் ஸ்ரீவெங்கடேசப் பெருமாள் கோவிலில் சுமார் கி. பி. 1067-ம் வருஷத்தில் வீரராஜேந்திரச் சோழ மகாராஜன் காலத்தில் வெட்டிய சிலாசாசனத்தில் அவ்வித ஆதுலசாலையைப்பற்றி விவரங்கள் கூறப்பட்டிருக்கின்றன. அக்கோவிலில் ஜனநாதமண்டபத்தில் வேதம் சாஸ்திரம் ரூபாவதாரம்முதலியன கற்பிப்பதற்காக ஓர்பாடசாலையும், அப்பாடசாலையிற் படிக்கும் சாத்திரர் (மாணாக்கர்)களுக்காக தருமபோஜனசாலையும் ஆதுலசாலையும் ஏற்படுத்தப்பட்டன. சாத்திரர்களுக்குப் போஜனமும், ஒவ்வொரு சனிக்கிழமையன்றும் ஸ்நானத்துக்கு எண்ணெயும், விளக்குக்கு எண்ணெயும் தருமமாகஅளிக்கப்பட்டன. ஆதுலசாலைக்கு வீரசோழன் என்று பெயரிடப்பட்டது. அவ்வாதுலசாலையில் நோயாளிகளுக்குப் பதினைந்து படுக்கைகள் ஏற்படுத்தப்பட்டன. அச்சாத்திரர்களுடைய சௌகரியத்துக்காகப் பின்னால் கூறப்படும் செலவுகள் செய்யும்படி திட்டம் செய்யப்பட்டது. 1. அரிசி, 2. பரம்பரையாக வைத்தியர்களாக விருக்கும் குடும்பத்தைச் சேர்ந்த ஒரு வைத்தியன், 3. செல்லியக்கிரியை பண்ணுவான் (இரணவைத்தியன்), 4. மருந்துச்சரக்குகள் கொண்டுவரவும், எரிதுரும்பு கொண்டுவரவும், மற்றும் ஆதுலசாலை சம்பந்தமான வேலைகளைச்செய்யவும் இரண்டு வேலைக்காரர்கள், 5. நோயாளிகளுக்குப் பணிவிடை செய்ய இரண்டு வேலைக்காரிகள், 6. பாடசாலையைச்சேர்ந்த போஜனசாலை ஆதுலசாலைகளிலுள்ள சில்லரை வேலைகளைச் செய்ய ஓர் வேலைக்காரன்.

அவ்வாதுலசாலையில் ஒவ்வொரு வருஷத்திலும் அவ்வருஷ உபயோகத்துக்குப் பின்வரும் மருந்துகள் சேகரித்து வைக்கப்பட்டன.

1.....ஹரீதாகி 2 படி, 2. கோமூத்ர ஹரீதாகி 2 படி, 3. தசமூலஹரீதாகி 1 படி, 4. பல்லாதக ஹரீதாகி 1 படி, 5. கண்டீரம் 1படி, 6. பால கோரண்டத் தைலம் 1 தூணி, 7. பஞ்ச...தைலம் 1 தூணி, 8. லசு......ண்டத் தைலம் 1 தூணி, 9. உத்தமகர்ணாதித்தைலம் 1 தூணி, 10...கிருதம் பதக்கு, 11. பில்வாதி கிருதம் பதக்கு, 12. மண்டூகர வடகம் 2000. 13. த்ரிவட்டி 1 நாழி. 14. விமலை 2000, 15. தாம்ராதி 2000, 16. வஜ்ரகல்பம் 1 தூணிபத

க்கு, 17. கல்யாண லவணம் 1 தூணி பதக்கு. 18. இவைகளுக்கு அநுபானமாக உபயோகிக்கவேண்டிய இதரசரக்குகள். 'புராண சர்ப்பி' என்பதைச் செய்வதற்குப் பசுவின் நெய்யும், இரவு முழுவதும் ஒரு விளக்கு 'எரிப்பதற்கு வேண்டிய எண்ணெயும் கொடுக்கும்படி ஏற்பாடு செய்யப்பட்டது. ஜனநாதமண்டபத்திலுள்ளவர்கள் பானம் செய்வதற்குப் பரம்பாரூரிலிருந்து தண்ணீர் கொண்டுவந்து அதில் ஏலக்காயும் விலாமிச்சை வேரும் போட்டு வாசனை கட்டவேண்டுமெனத் திட்டம் செய்யப்பட்டது.

மேற்கூறிய விவரங்களிலிருந்து, முற்காலத்தில் கிராமச்சபையார் கல்விப்பயிற்சியை மிகவும் முக்கியமானதாகக் கருதி அதனபிவிருத்திக் கனுகூலமாகத் தாங்களாகவே விஸ்தாரமான ஏற்பாடுகள் செய்துவந்தார்கள் என்றும், முற்காலத்தில் பலர் கோவில்களுக்குக் கொடுத்த ஏராளமான பொருள்களிற் சிறுபான்மையே கோவிலில் ஆராதனைக்கும் உற்சவங்களுக்கும் செலவழிக்கப்பட்டதென்றும், பெரும்பான்மையும் கல்வி அபிவிருத்திக்காகக் கல்லூரிகளையும் பாடசாலைகளையும் தருமபோஜனசாலைகளையும் ஆதுலசாலைகளையும் ஏற்படுத்தி நடத்துவதற்கே உபயோகிக்கப்பட்டதென்றும் தெரியவருகிறது.

தேசத்திற் பஞ்சம் ஏற்பட்ட காலத்திலும் கிராமச் சபையார் அரசனது உதவியின்றி ஜனங்களுடைய கஷ்டங்களை நிவர்த்திசெய்தார்கள் என்பது தஞ்சாவூர்ஜில்லாவில் ஆலங்குடி என்னும் கிராமத்திலுள்ள சிலாசாசனத்தால் தெரியவருகிறது. கி.பி. 1054-ம்வருடத்தில் மழைக்குறைவினாலோ வேறு யாது காரணத்தினாலோ அக்கிராமத்தில் விளைச்சலில்லாமற் போய்ப் பஞ்சம் ஏற்பட்டது. சாப்பாட்டுக்கு நெல்வாங்கவும் சாகுபடிக்கவசியமான விரைமுதலியதளவாடங்கள் வாங்கவும் கிராமத்தார்களிடத்திற் பொருளில்லாமல் வருந்தினார்கள். அப்போது சோழநாட்டை அரசாண்டுவந்த இராஜேந்திரதேவச் சோழமகாராஜனுக்கு முந்திய சோழவம்சத்தரசர்களான முதல் இராஜராஜன், முதல் இராஜேந்திரச்சோழன், இராஜாதிராஜன் இவர்கள் பாண்டியர், மேலைச்சாளுக்கியர், சேரர், சிங்களத்தார் முதலானவர்களோடு அடிக்கடி செய்து வந்த போர்களினாலும், இராஜாதிராஜன்செய்த அசுவமேத யாகத்தினாலும் பொக்கிஷம் காலியாகி, இராஜேந்திரதேவச் சோழமகாராஜன் அக்கிராமத்தவருக்குப் பொருளுதவி செய்து அவர்கள் கஷ்டங்களை நீக்கச் சக்தியற்றவனாயிருந்தான். ஆகையினால் அக்கிராமச் சபையார் அவ்வூர்ப் பொதுநிலத்தில் எட்டே முக்கால் வேலி நிலத்தை அவ்வூர்க் கோவிலுக்குப் பாத்தியப்படுத்தி அதற்குப்பிரதிப் பிரயோஜனமாக அக்கோவில் பண்டாரத்திலிருந்து 1011 கழஞ்சு பொன்னும் 464 பலம் வெள்ளியும் கொண்ட கோவில் நகைகளையும் பாத்திரங்களையும் பெற்றுக்கொண்டு, அப்பொருளைக்கொண்டு தானியம் முதலியன வாங்கிக் கிராமத்தார்களுடைய கஷ்டத்தைத் தவிர்த்தனர்.

கிராமநிலங்கள் முழுவதும் கிராமத்துக்குச் சொந்தமானவைகளாகக் கருதப்பட்டனவென்றும், நிலங்களுக்காகவும் மற்றவைகளுக்காகவும் அரசனால்விதிக்கப்பட்டவரிகளும்கிராமச் சபையாரிடமிருந்தே வசூலிக்கப்பட்டனவென்றும், அவ்வரிகளை ஊரிலுள்ள குடிகளுக்கும் பொருள்களுக்கும் பங்கிட்டது கிராமச்சபையார்களேயென்றும், ஊரிலுள்ள பொதுநிலங்களை விற்கவும் தானம்செய்யவும் கிராமச்சபையாருக்குப் பாத்தியமுண்டென்றும், கிராமத்துக்கு அவசியமான செலவுகளுக்காகக் கடன் வாங்கவும் அக்கடனுக்கு வட்டி கொடுப்பதற்காகப் பொதுநிலங்களை விற்றோ வரிகள் விதித்தோ தகுந்த ஏற்பாடுசெய்யவும் கிராமச்சபையாருக்குப் பாத்தியமுண்டென்றும் முந்தின வியாசங்களில் எடுத்துக் காட்டியிருக்கிறோம். கிராமச்சபையாருக்கு அவ்வளவு விரிவான அதிகார மிருந்ததினால்தான் மேலே கூறியவாறு கல்வியை அபிவிருத்திசெய்ததும் பஞ்ச காலத்தில் ஜனங்களின் கஷ்டத்தை நீக்கியதும் கிராமச்சபையாருக்குச் சாத்தியமாயிருந்தது என்பது யாவருக்கும் எளிதில் விளங்கும். (பின்னும் வரும்.)

சுதேசமித்திரன்.—* * நன்கு நடத்தப்படும் மாதாந்தரத் தமிழ்ச்சஞ்சிகைகளுள் விவேகபோதினியை முக்கியமாக எடுத்துச் சொல்லலாமென்பதற்கு இதற்குக் கிடைத்திருக்கும் மதிப்புரைகளே தக்க ஆதாரமாகும்.





# குருடர்களின் கல்விப்பயிற்சி

## EDUCATION OF THE BLIND

[ஸ்ரீமான் என். ஆர். கேதாரிராவ், எம்.ஏ., எல்.டி.]

(171-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஏதாவது ஒரு சமாசாரத்தைப்பற்றிக் கேட்டாலுஞ் சரி, வாசித்தாலும் சரி "இதனால் நாம் தெரிந்து கொள்வதென்ன?" என்று விசாரிப்பது கற்றறிந்தோர் வழக்கம். இதனாலேயே ஷேக்ஸ்பியர் (Shakespeare) என்ற மகாகவி, "புத்திமான்கள் கற்களினின்றும், ஓடைகளிலிருந்தும், கானகங்களினின்றும் காட்டாறுகளிலிருந்தும் ஞானத்தை அடைவார்கள்" என்று கூறியுள்ளார். எறும்பைப்போல் சுறுசுறுப்பாயிருக்க வேண்டுமென்றும், சிங்கத்தைப்போல் கம்பீரமாயிருக்க வேண்டுமென்றும் புறாக்களைப்போல் பாந்தவ்யம் பாராட்ட வேண்டுமென்றும், பூமாதேவியைப்போல் பொறுமையா யிருக்கவேண்டுமென்றும் பெரியோர் சொல்வதை நாம் கேட்டிருக்கிறோமல்லவா? அம்மாதிரியே ஹெலன் கெல்லரின் சரித்திரத்தை வாசிப்பதனால் நமக்குப் பயன் என்னவென்று சிலர் கேட்பார்கள். அதற்குத் தகுந்த உத்தரம் இங்குக் கூறுவாம்.

(1) மனிதனுக்கும் மற்ற மிருகங்களுக்குமுள்ள முக்கிய வித்தியாசங்கள் இரண்டு:—முதலாவது, மனிதனுக்கு பாஷா ஞானம் உண்டு. ஆயிரக்கணக்கான வார்த்தைகள் அடங்கிய பாஷைகளைப் பேசுவதால் அவன் நோக்கங்கள் விஸ்தாரமடைந்திருக்கின்றன. மிருகங்களுக்கோ கத்துதல், கனைத்தல், உறுமுதல், ஊளையிடுதல், கர்ச்சித்தல் முதலியவைகளைத்தவிர வேறு பாஷா ஞானம் கிடையாது; இரண்டாவது, மனிதனுக்குக் கூர்மையான புத்தியுண்டு. எப்படிப்பட்ட சீதோஷ்ண ஸ்திதியிலும் மனிதன் பிழைத்திருக்கிறான்; மிருகங்களோ அப்படியல்ல. வெகு உஷ்ணமான பிரதேசங்களில் வசிக்கும் மிருகங்களை சீதள தேசங்களுக்குக் கொண்டுபோனால் அவைகள் செத்துப்போய் விடுகின்றன. இதினின்றும் நமக்குத் தெரிவது என்னவெனில், மனிதனுக்கு எப்படிப்பட்ட கஷ்டம் சம்பவித்தாலும் சரி, அவன் தன் புத்தியினால் அவ்விடையூறுகளைத் தாண்டிவிடுகிறான். "மலைபோல்வந்த மிடிகளெல்லாம்" அவன் சக்தியினெதிரே "பனிபோல்" பறந்துவிடுகின்றன. அதற்கு ஹெலன் கெல்லரின் ஜீவிய சரித்திரமே ஒருபெருஞ் சான்றாகும். மனிதனுக்குள்ள பஞ்சேந்திரியங்களில் மிக முக்கியமானவை யென்று கருதப்படுகின்ற மூன்று சக்திகளை யிழந்தும், இம்மாது சிரோமணி சற்றும் மனத்தளர்ச்சி யடையாமல், கல்வி கற்கவேண்டுமென்ற அவாவினால் மேன்மேலும் முயற்சி செய்து, எல்லா இந்திரியங்களும் சரியாயிருக்கிற மனிதர்கள் பலரைக் காட்டிலும் கல்வி கேள்விகளிற் சிறப்புற்று விளங்குவதால், எவ்விதமான இடுக்கண்களையும் நாம் மனோதைரியத்தினால் வெல்லலாம் என்பது தெரியவில்லையா?

(2) நாம் எல்லோரும் கருணைக்கடலாகிய கடவுளின் குழந்தைகள்; அவர் நம்மைச் சரிவரப் பாதுகாத்து வருகிறார்; அவர் முன்னிலையில் சிறியோர் பெரியோரென்றும், ஏழை பணக்காரரென்றும், படிக்காதவர் படித்தவரென்றும் இன்னும் மற்றுமுள்ள வித்தியாசங்களும் இல்லை என்று பெரியோர் கூறுகிறார்கள். எல்லாவித சமய நூல்கள் கூறுவதும் இதுவேயாம். ஆனால் சிலர், "கடவுள் எல்லாரையும் பாரபக்ஷம் என்பதேயில்லாமல் ஸம்ரக்ஷிப்பவரெனில், சிலர் புத்திமான்களாகவும் சிலர் மூடராகவும் பிறப்பானேன்? சிலர் பணக்காரராகவும் சிலர் ஏழைகளாகவுமிருப்பானேன்? வயோதிகர் பலர் உயிர்த்திருக்க, சிறுவயதிலேயே சிலர் இறப்பானேன்?" என்ற பல கேள்விகள் கேட்கிறார்கள். அதற்குப் பலவிதமான உத்தரங்கள் உள்ளன*. முக்கியமாய்க் கவனிக்கவேண்டியதென்னவென்றால், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம் என்பவையெல்லாம் அவரது லீலைகளே தவிர வேறல்ல. அவரால் நாம் படைக்கப்பட்டுப் பலவித பிரயோசனங்களை யடைந்தபோதிலும், நம்மால் அவருக்கு ஒருவித பிரயோசனமுமில்லை† என்பதேயாம். உதாரணமாக, மகா துர

*இதற்குச் சரியான மறுமொழி கூறுவதென்றால், தத்துவ சாஸ்திரத்தின் ஸாராம்சத்தையே இங்கே சொல்லவேண்டிவரும். ஆதலின் சூக்ஷ்மமாய்க் கூறியிருக்கிறோம்.

† வேறு வழியாகவும் இதற்கு மறுமொழி கூறலாம். உதாரணமாக நாம் ஒருவழியைமட்டும் காட்டியிருக்கிறோம்.

திருஷ்டையானவள் என்று கருதப்பட்ட இந்த ஹெலன்கெல்லருக்கும் நமக்கில்லாத பலவிதமான சக்திகள் இருக்கின்றன. ஒரு பொருளை ஒரு தரம் தடவிப்பார்த்தவுடனே அதை நாம் பஞ்சேந்திரியங்களாற் கிரகித்து எப்படி வருணிப்போமோ அதைக்காட்டிலும் விமரிசையாய் வருணிக்கிறாள். நாம் ஐந்து இந்திரியங்களையும் வைத்துக்கொண்டு கிரகிக்கும் விஷயம் ஒவ்வொன்றையும், அவள் தனது அதிநுட்பமான இரண்டு இந்திரியங்களை வைத்துக்கொண்டு கிரகித்து விடுகிறாள்! இது எப்படித் தெரியும் என்றால், ஒருதரம் அவள் சலவைக்கல்லாற் செய்யப்பட்ட ஒரு விக்கிரகத்தைத் தன் கையால் தடவிப் பார்த்து வருணனை செய்திருக்கிறாள்; பெரும்பேர் படைத்த சிற்பசாஸ்திரிகள்கூட அதைவிட நன்றாய் வருணிக்கமுடியாது என்று பலரும் அதைப்பற்றிக் கூறியுள்ளார். ஆதலின், கடவுள் அவளது பஞ்சேந்திரியங்களில் மூன்றிந்திரியங்களைக் குறைத்துவிட்டதால், மற்றைய இரண்டு இந்திரியங்களையும் அதிநுட்பமாய் வைத்திருக்கிறாரென்று தெரிகிறதல்லவா? எவ்வளவு சுகத்தைக் கொடுக்கிறாரோ, அவ்வளவு கஷ்டத்தையும் கொடுப்பாரென்றும், மனிதனுக்கு மனிதன் அவருக்குக் கொஞ்சமும் பேதம் இல்லையென்பதும் இதினின்றும் விளங்கவில்லையா?

(3) முதன் முதலில் இம்மாதிரி ஊமையாயும், செவிடாயும், குருடாயும் ஒரு பெண் இருக்கிறாள் என்று கேட்டால், "ஐயோ பாவம்! அவள்எவ்வளவு கஷ்டப்படுவாளோ?" என்று பரிதபிக்கிறோம். ஆனால் அவளுடைய ஊருக்குப் போய் இரண்டு மூன்று நாள் அவளுடன் பழகிவந்தால் அவள் நம்மைக்கண்டு பரிதபிக்கும் நிலைமையிலிருக்கிறாளே தவிர நாம் அவளைக்கண்டு பரிதபிக்கவேண்டுவதில்லை என்று தெரியவரும். மேடம் ம்யாடர்லிங்க் என்ற பிரஞ்சு துரைசானி 1912-ம் வருஷ ஆரம்பத்தில் இவளைப் பார்க்கவேண்டும் என்ற ஆசையினால் இவளூருக்குப்போய் அங்கு மூன்றுநாள் இருந்தாள். மேடம் ம்யாடர்லிங்க் வரப்போகிற சமாசாரம் இவளுக்கு முன்னாலேயே பத்திரிகை மூலமாய்த் தெரியும். (ஏனெனில், ஒவ்வொரு பத்திரிகையிலும் என்ன விசேஷம் இருக்கிறது என்பதை விசாரித்துத் தெரிந்துகொள்வது இவள் வழக்கம்.)

சாலையிலிறங்கினவுடனே ஒரு சிறு உத்தியான வனமுண்டு. அதன் வழியாகத்தான் அவள் மாளிகைக்குச்செல்லவேண்டும். அதிதி அச்சிங்காரத் தோட்டத்தைத் தாண்டினவுடனே, ஹெலன்கெல்லர் சரேலென ஓடிவந்து அதிதியை வாரியணைத்துமுத்தங்கொடுத்தாள். "வருக! வருக!" என்று பிரஞ்சு பாஷையிலேயே நல்வரவு கூறி வெகு பக்ஷமாகவும் சந்தோஷமாகவும் இருந்தாள். ம்யாடர்லிங்கோ ஆனந்த பரவசமானாள். ஆனால் தானே வாய்விட்டுப் பேசுவதென்றால் நிரம்ப சிரமமாயிருந்ததால், இவள் உபாத்தியாயனியாகிய மிஸ். ஸல்லிவன் மூலமாய்ச் சம்பாஷணை செய்ய ஆரம்பித்தாள். மேடம் ம்யாடர்லிங்க் கேட்கும் கேள்விகளை யெல்லாம் ஹெலன்கெல்லரின் உள்ளங்கையி லெழுதி அவளுக்குத் தெரிவித்து, அவள் கூறும் மறுமொழிகளை யெல்லாம் தன் உள்ளங்கையில் எழுதப்பெற்று அவைகளை மிஸ் ஸல்லிவன் ம்யாடர்லிங்குக்கு எடுத்துக்கூறினாள்.

பற்பல விஷயங்களைப்பற்றிச் சம்பாஷணை நடந்தது. காவியம், நாடகம், தத்துவ சாஸ்திரம், இராஜ்யபரிபாலன மர்மங்கள், பெண்களுக்குரிய சுதந்தரங்கள் முதலிய எல்லா விஷயங்களிலும் தன் அபிப்பிராயத்தை ஹெலன்கெல்லர் வெகுசாதுரியமாய் வெளியிட்டாள். மாரிஸ் ம்யாடர்லிங்க் என்ற கவியின்பாடல்கள் பலவற்றை ஒப்புவித்தாள். சந்தேகம்உண்டாகக்கூடிய இடங்களில் பொருள் கூறினாள். இவைகளெல்லாவற்றையும்விட அதிக ஆச்சரியமான விஷயமென்னவென்றால், மேடம் ம்யாடர்லிங்கின் கையை நாலைந்துதரம் தொட்டுப்பார்த்து அவளுடைய குணாதிசயங்களைச் சற்றேனும் தவறாமல் வருணித்தாள்.

இப்படி இரண்டுநாட்கள் கழிந்தபின் "நான் போய் வருகிறேன். விடை தருக" என்று சொல்லி மேடம் ம்யாடர்லிங்க் புறப்பட்டு வந்துவிட்டாள். ஆனால் அப்பொழுதுதான் 'டைட்டானிக்' என்ற பெரியகப்பல் இங்கிலாந்திலிருந்து அமெரிக்காவுக்குப்போகும் வழியில் உடைந்துபோயிருந்தது. எல்லோரும் கப்பல் யாத்திரை செய்வதென்றால் பயப்பட்டுக்கொண்டிருந்தார்கள். ஆதலால் ம்யாடர்லிங்கும், "சில நாட்கள் கழித்து ஐரோப்பாவுக்குப் போகலாமே" என்று உத்தேசித்தாள். சும்மா





விருக்கும்போது இன்னொருதரம் ஹெலன்கெல்லரைப் பார்த்து வரலாம் என்றெண்ணி, தான்வரும் சங்கதியை அவளுக்கு முதலில் தெரிவிக்காமலே அவளிருக்குமிடத்துக்குச் சென்றாள்.

புதிதாய் வந்தவர் யாராயிருக்கலாம் என்று ஒருதரம் தன் கையால் தடவினாள் ; உடனே சந்தோஷத்தினாலும் ஆச்சரியத்தினாலும் மனம் பூரித்து, "மெ—டம்—மியா—டர்—லிங்க்" என்று ஒவ்வொரெழுத்தாய் உச்சரித்தாள். "போய் வருகிறேன்" என்று சொன்னவள் எக்காரணத்தினால் திரும்பிவந்தாளோவென்று ஆச்சரியப்பட்டாள். பிறகுதான் சமாசாரம் தெரியவந்தது.

ஆகையால், பஞ்சேந்திரியங்களில் முக்கியமான மூன்று இந்திரியங்கள் உபயோகப்படாமலிருந்தும், அவள் புத்தியிலும், சாதுரியத்திலும் சிறிதும் குறைந்தவளல்ல என்பது நன்றாய்ப் புலப்படும்.

(4) ஓரேமனத்துடன் சென்ற முப்பது வருஷ காலமாய்க் கொஞ்சமும் சலிக்காமல் ஹெலன்கெல்லருக்கு கல்விகற்றுக்கொடுத்து வரும் உபாத்தியாயனியாகிய மிஸ் ஸல்லிவனது* ஆற்றலை என்னென்று சொல்லுவோம்.

ஹெலன்கெல்லருக்கு முதலில் சொல்லிக்கொடுக்க ஆரம்பித்தபொழுது அவளுக்கு ஒன்பது வயதுதான் இருக்கும்.† அது முதல் இந்த முப்பது வருஷகாலமாய், தன் சந்தோஷம் என்பதைக் கொஞ்சமும் கவனிக்காமல் தன் மாணாக்கருடைய நன்மையையே பாராட்டிவந்த இவ்வுத்தமியின் குணாதிசயங்களை எவ்வாறு வருணிக்கலாம்! எல்லா உபாத்தியாயர்களும் இத்தகையராயிருப்பின், எவ்வளவு நன்மை உலகத்துக் குண்டாகும்!

சாதாரணமாய்ப் பூலோகத்திற் சண்டைசெய்யும் வீரர்களையும், பெருங்கவிகளையும், அரசுபுரியும் சக்கரவர்த்திகளையும் கியாதிபெற்றவர்களென்று கருதுவது வழக்கம். ஆழ்ந்து யோசித்துப் பார்த்தாலோ, இப்படி ஒருமைமனத்துடன் மற்றவர்நன்மைக்காக உழைத்துவரும் மிஸ் ஸல்லிவன் போன்றவர்களையும் மாட்சிமைதங்கிய பெரியோர்களாகக் கருதவேண்டும் என்பது நன்கு விளங்கும்.

(5) இம்மாதிரியே செவிடாயும், குருடாயும் ஊமையாயுமிருந்து எழுதப்படிக்கக் கற்றுக்கொண்டவர்கள் வேறு யாராவது இருக்கிறார்களா வென்று இனி விசாரிப்போம். ஹெலன்கெல்லருக்கு முன்னால் 1849-ம் வருஷத்தில் டாக்டர் ஹோ என்பவரிடம் வாசித்துவந்த லாரா பிரிட்ஜ்மன் என்பவளும் இப்படித் துரதிருஷ்டையானவளே. ஆனால் இவ்விருவரும் பிறவிக் குருடர்களல்ல ; பிறந்து இரண்டு வருஷத்துக்கு மேலேயே லாரா பிரிட்ஜ்மன் சாதாரணக் குழந்தைகளைப்போல்தான் இருந்தாள். ஹெலன்கெல்லரும் பிறந்து ஒன்றரை வருஷம் வரையில் திடகாத்திரமுடையவளாயும், ஒருவிதக் குறைவில்லாதவளாயும் இருந்தாளென்று நாம் முன்னமேயே கவனித்திருக்கிறோம்.

பிரான்ஸ் தேசத்திலுள்ள வர்டோ என்ற வூரில் 1885-ம் வருஷத்தில் பிறந்த மேரி ஹார்டின் என்பவளுக்கோ பிறந்தநாள் முதல் இவ்விதமான கஷ்டங்கள் இருந்தன. அவளுக்குப் பத்து வயது ஆகும்வரையில் அவள் பெற்றோர்களுக்கு என்ன செய்வது என்று தெரியவில்லை. பிறகு லார்னே என்ற இடத்திலுள்ள ஒருசந்நியாசினி மடத்துக் கனுப்பியதில், ஸிஸ்டர். செய்ன்ட் மார்கரெட் என்ற சந்நியாசினி அக்குழந்தையைக் கண்டு பரிதபித்துப் பல வருஷ காலம் கஷ்டப்பட்டு, மிருகத்தைப் பார்க்கிலும் ஈனமான ஸ்திதியிலிருந்தவளுக்குப் புத்திசாலித்தனமாய் எழுதவும் படிக்கவும் கற்றுக்கொடுத்துவிட்டாள்.

இம்மூன்று உதாரணங்களையும் ஒப்பிட்டுப் பார்த்தால், நமக்கு இரண்டுமூன்றுவிஷயங்கள் தெரியவருகின்றன. ஹெலன் கெல்லர், லாரா பிரிட்ஜ்மன், மேரி ஹார்டின் ஆகிய மூவருள் ஹெலன் கெல்லர் மகாபுத்திசாலி; எவ்விஷயத்திலும் தன் கூர்மையான புத்தியைச் செலுத்தி அபூர்வமான மர்மங்களையும் எளிதில் கிரகிக்கும் சக்தியுடையவள். லாராபிரிட்ஜ்மனைப்பற்றி அவ்வளவு தூரம் சிலாகித்துப் பேச முடியாது. மேரி ஹார்டினுக்கோ நமது கீழ்த்தரப் பாடசாலைகளில் வாசிக்கும் பிள்ளை

* இப்போது இவள் மிஸ்டர் மேஸி என்பவரை கலியாணம் செய்துக்கொண்டு மிஸ்ஸஸ். மேஸி என்ற பெயர் பூண்டிருக்கிறாள்.

† மிஸ் ஸல்லிவனும் அப்போது இருபத்தொரு வயதுள்ள சிறுமிதான்.

களுக்கு எவ்வளவு தெரியுமோ அவ்வளவுதான் தெரியும்.

பலவருஷகாலமாய் ஒரேமனதுடன் சொல்லிக்கொடுத்தும் ஏன் இவர்களுக்குள் இவ்வாறு வித்தியாசம் ஏற்பட்டது என்றால்:— குழந்தைகளின் குணம் பெற்றோர்குணத்தைப் பெரும்பாலும் அனுசரித்தேயிருக்கும் என்பது எல்லோருக்கும் தெரியும். *மேரிஹார்டின் என்பவளுடைய பெற்றோர்கள் தினம் தினம் கூலிவேலைசெய்து பிழைப்பவர்கள். லாரா பிரிட்ஜ்மனுடைய பெற்றோரைப்பார்க்கினும் ஹெலன் கெல்லருடைய பெற்றோர்கள் புத்திசாலியானவர்கள். ஆதலால்தான் வித்தை கற்கும் ஆசை அவளுக்குப் பிறந்த நாள்முதல் இருந்தது.

மற்றொரு விசேஷமும் புலப்படுகிறது. நெருங்கிய பந்துக்கள் ஒருவரையொருவர் மணந்து கொள்ளக்கூடாது என்று சொல்லுகிறார்களே, அதன் முக்கியக்காரணம் என்னவென்றால், அப்படிக் கலியாணம் செய்துகொண்டவர்களுக்குப் பிறக்கும் குழந்தைகளுக்கு ஏதாவது ஒருவிதமான குறையிருக்கும் என்பதே. திடகாத்திரராய் இருந்தால் புத்திமட்டாயிருக்கும்; புத்தி சாதாரணமாயிருந்தால் அங்கங்களில் ஏதாவது ஈனம் இருக்கும்; அதற்கு மேரி ஹார்டினது சரிதையே போதுமானது. உதாரணமாக, அவள் தாய்தகப்பன்மார்கள் கலியாணம் செய்துகொள்ளக்கூடாத நெருங்கிய பந்துக்கள். தெரியாமல் கலியாணஞ் செய்துகொண்டதால், அவர்களுக்குப்பிறந்த ஒன்பது குழந்தைகளில் மூன்றுபேர்கள் ஊமையாகவும் செவிடாகவும் இருந்தார்கள்; இரண்டு பேர்கள் குருடர்கள்; ஒன்று பாரிசவாயுவினால் கஷ்டப்பட்டது; மற்றொன்று குழந்தைப்பருவத்திலேயே செத்துப் போயிற்று. இப்படியே லாரா பிரிட்ஜ்மன் விஷயத்தைப்பற்றி விசாரித்தால், அவள் தாயார் உடம்பு சௌக்கியமில்லாதவளென்று தெரியவருகிறது.

ஆதலால்தான் நமது ஹிந்துக்களில் கலியாண காலங்களில் கோத்திரம், பிரவரம் முதலியவைகள் ஒத்து வருகின்றனவாவென்று பார்ப்பது வழக்கம். இப்போது நவீன நாகரிகமுடையோர்கள் "இவைகளிலெல்லாம் என்ன இருக்கிறது! அதேகோத்திரத்திலுள்ள பெண்ணைக்கொண்டால் என்னகெடுதிவரும்" என்று ஏளனமாய்ப் பேசுகிறார்கள். யூஜெனிக்ஸ் முதலிய சாஸ்திரங்களை வாசித்தால் நமது ஹிந்துக்களின் வழக்கம் அச்சாஸ்திரங்களை அனுசரித்ததேயன்றி வேறல்ல என்பது தெற்றெனத் தெரியும். எவ்விஷயத்தையும் ஆய்ந்தோய்ந்து பார்க்கவேண்டுமே தவிர, "நாம் தான் மேதாவிகள், நமது முன்னோர்களெல்லாம் மகா மூடர்கள்" என்றெண்ணி ஆதிகாலந்தொட்டு வரும் கொள்கைகளை அவசரப்பட்டுத் தள்ளிவிடுவது தவறு.

(6) இன்னும் ஹெலன்கெல்லரின் சரித்திரத்தைப்பற்றிச் சாவதானமாய் யோசித்தால் மனிதனுடைய சுபாவத்தைப்பற்றியும், கடவுளுடைய குணாதிசயங்களைப்பற்றியும் பற்பல உண்மைகள் தெரியும். விரிவுக்கு அஞ்சி ஏதோ முக்கியமானவற்றை மாத்திரம் இங்கு கூறியிருக்கிறோம். ஆயினும் இவைகளிலிருந்தே ஹெலன்கெல்லரின் சரித்திரம் ஒரு பெரிய அற்புதம் என்பது எல்லோருக்கும் விளங்கும்.

இதனாலன்றோ மார்க் ட்வேய்ன் என்பவர் "பத்தொன்பதாவது நூற்றாண்டில் பிறந்தவர்களுள் இருவர்தாம் மகான்களாவர்— அவர்கள் யாரென்றால், நெப்போலியனும், ஹெலன் கெல்லரும்தாம்" என்று கூறி ஐரோப்பா முழுவதையும் வென்று தன்னரசாட்சிக்குள் வைத்துக்கொண்ட தளகர்த்தாகிய நெப்போலியனுக்குச் சமானமாக ஹெலன்கெல்லரையும் வைத்தார்.

இப்படியே அமெரிக்காதேசம் முழுவதையும் சுற்றிப் பார்த்துவிட்டுவந்த ஹாடர் வில்லியம் என்ற ஆங்கிலேயதுரை, "அமெரிக்காவில் பூலோக அற்புதங்களில் இரண்டு அடங்கியிருக்கின்றன — அவையாவன, பெருங்கியாதிபெற்ற நயாகாரா என்னும் நீர்வீழ்ச்சியும் ஹெலன்கெல்லருமே" என்று சிலாகித்திருக்கிறார்.

* இதற்குப் பலவிலக்குகள் உள்ளன.

ஆரியமத உபாக்கியானம்.—நமது புராணங்களிலிருந்து எடுத்தெழுதப்பட்ட அநேகம் அருமையான கதைகள் கொண்டது. அழகிய ஆட்டோன் படங்களும் அநேகம் சேர்க்கப்பட்டிருக்கின்றன. சிறுவர் சிறுமியர் உத்சாகத்துடன் வாசிக்கத்தக்கது. முதற் பாகம் அ. 8. இரண்டாம் பாகம் அ. 10.





# ஸர். கே. சேஷாத்திரி ஐயர்
## SIR K. SESHADRI AYYAR

வேற்றுமை யில்லா விழுத்திணைப் பிறந்து
வீற்றிருந் தோரை யெண்ணுங் காலை
யுரையும் பாட்டும் உடையோர் சிலரே.

### பீடிகை

இப்பூமண்டலத்தில் கோடிக்கணக்காகப் பிறந்து வாழ்ந்துவரும் மக்கட்பரப்பில், நாடோறும் பாமரஜனங்களின் புகழ்மொழிக்கும் பண்டித சிரேஷ்டர்களின் ஸ்தோத்திர ரூபகமான செய்யுட்களுக்கும் இலக்காகி, அழியாப் புகழ்பெற்று விளங்குபவர் மிகவும் சிலரே. அவர்களும் இப்பூவுலகில் உள்ளவரை நீடித்த பேரும் புகழுமடைந்து பிறகு தேவர்களாய் வானாடு சென்று ஆங்கு அமரர் கணங்கள் போற்றப் பெருவாழ்வு வாழ்ந்துவருகிறார்களென்பதும் சாஸ்திரசம்மதமான விஷயமே. ஆகவே, இம்மையிலும் மறுமையிலும் மகா உத்கிருஷ்டமெனக் கருதப்படும் இப்புகழெனும் பெரும்பணியைப்பூண்டு, மானிடராசிகள் கடைத்தேறும் வண்ணம் நற்காரியங்களையே செய்துவரும் புண்ணிய புருஷர்களின் சரிதங்களைக் கேட்பதனாலும் அத்தூயோர்கள் அனுஷ்டித்துவரும் முறையைப் பின்பற்றுவதனாலும் நம்மவர்கள் மேம்பாடடைவரென்பது நிச்சயம்.

நல்லாரைக் காண்பதுவும் நன்றே நலமிக்க
நல்லார்சொற் கேட்பதுவும் நன்றே—நல்லார்
குணங்க ளுரைப்பதுவும் நன்றே யவரோ
டிணங்கி யிருப்பதுவும் நன்று.

என்று கூறப்பட்டிருப்பதால், அத்தகைய பெரும்புகழ் படைத்துச் சீமானாய் வாழ்ந்து வந்த புண்ணிய புருஷரான ஸர். கே. சேஷாத்திரி ஐயர் அவர்களுடைய திவ்விய சரிதத்தை ஒருவாறு சுருக்கமாகக் கூறுவோம்.

### பொதுக்குறிப்பு

"சோணாடு சோறுடைத்து" என வழங்கும் புகழைப்பரப்புங் காவிரி நதியின் தாயகமாய் பொதியமலையைப் போன்று, தென்றற் காற்றிற்குச் சந்தன மணமூட்டும் திருநாடு மகிஷமண்டலம் என்று கூறப்படும் மைசூர் நாடே. இந்நாட்டை முதன் முதலில் அரசாண்டுவந்த சாலிவாகனன் என்னும் அரசனாலேயே இத்தென்னாட்டிற்கு நற்காலம் உண்டாகி, ஒரு புதிய யுகம் ஆரம்பித்தது. உஜ்ஜைனி நகரத்தை யாண்டுவந்த விக்ரமாதித்தியன் என்னும் பேரரசனை வென்று புகழ்கொண்டமையினன்றோ நாம் இப்பொழுது வழங்கிவரும் சாலிவாகனனது சகாப்தம் எழுந்தது. அவன் வம்சத்தினரே நீண்டகாலமாக இந்நாட்டின் வளம் சிறிதுங் குன்றாது அரசாண்டுவந்தனர். மொகலாய ஆதிக்கியம் பெருகிய காலத்தும் தளர்வுறாதிருந்தும், பதினெட்டாம் நூற்றாண்டில் ஹைதர், திப்பு சுல்தான் என்னும் வீரர்களால் இந்நாடு கவர்ந்தாளப்பட்டு வந்தது. அக்காலத்திற்றான் இந்த நாட்டின் மகிமை சிறிது சிறிதாய்க் குறைந்துகொண்டே வந்தது. அந்த மகம்மதிய அரசாங்கம் நிலைகுலைந்தபின், சிறிதுகாலம் ஆங்கிலேயர் அரசாட்சி புரிந்து வந்தனர். கி. பி. 1881-ம் வருஷத்தில், இந்நாட்டுக்குரிய சாலிவாகன வம்சத்திலுதித்த ஸ்ரீ சாமராஜேந்திர உடையார் அவர்களுக்கு அரசுரிமை மீண்டுங் கொடுக்கப்பட்டது. இதுவே இந்திய அரசாட்சியில் ஆங்கிலேயர் செய்துள்ள பெருங்கீர்த்தியாக விளங்குகிறது. அப்பொழுது அந்த நாட்டின் வருமானம் மிகக் குறைந்தும் திருத்தமுறைகள் மிகுந்தும் இருந்தன. தேச நிலைமையோ பிறழ்ந்து கிடந்தது. இந்தக் குறைகளெல்லாம் அறிஞர்களாலேயே நிறைவுபடவேண்டியனவாயிருந்தன. ஆனால் சற்றேறக்குறைய நாற்பது வருடங்களுக்குள் அது எல்லாக் குறைகளும் தீர்ந்து, சுதேச இராஜாங்கங்களுக்குள் முதன்மைபெற்று மேனாட்டவர்களும் அதிசயிக்குமாறு மாறிவிட்டது. அதன் காரணமென்ன? அரசரின் பெருமையும், அமைச்சரின் திறமையுமே இந்த உன்னத நிலைமைக்குக் காரணங்களாம். இவர்களுள், இந்நாட்டை மந்திரி முறைமையில் பரிபாலித்துவந்த ஸ்ரீமான்களான அரங்காசார்லு, சேஷாத்திரி ஐயர், மாதவராவ், விசுவேசுவரய்யா முதலியவர்கள் மிகவும் மேன்மையாகக் கொண்டாடத்தக்கவர். இவர்களுடைய பரந்த அறிவே, இந்நாட்டிற் காணப்படும் ஒவ்வொரு நற்றுறைக்கும் அஸ்திவாரமாயும் புகழ்ச்சுடராயும் விளங்குகிறது. இவர்களனைவரும் தமது அரசரின் நாட்டை முன்னுக்குக் கொண்டுவருவதையே தமது வாழ்க்கை நோக்கமாகக் கருதியுழைத்துக் கண்ணுங் கருத்துமாயிருந்து, பற்பல சீர்திருத்தங்களைச் செய்து, குடிகளுக்குச் சந்தோஷத்தையும் சௌக்கியத்தையும்

பெருக்கி, ஜனங்களின் மெய்யன்பில் நிலைபெற அமர்ந்திருக்கின்றனர். அவர்களில் அரங்காசார்லு என்பவர், அரசர் சிங்காதனத்தேறிய அன்றே அமைச்சராகி, பல அரிய சீர்த்திருத்தங்களுக்கு விதையூன்றி, இரண்டாண்டுவரை ஜனநலத்திற்குழைத்துப் பிறகு விலகினர். 1883-ம் வருஷம் முதல் 1901-ம் வருஷம் வரை, பதினெண்ணாண்டுகள் திவானாயிருந்து, தேசவருமானத்தை நூறு லக்ஷங்களிலிருந்து நூற்றெண்பது லக்ஷங்களாக்கியும், உழவு, வாணிபம் முதலிய பொருளீட்டுஞ் சாதனங்களைப் பெருக்கியும், அரசாட்சித் துறை ஒவ்வொன்றிலும் கண்காணித்து உதவியும், வறுமைப் பிணி, நோய் முதலியவைகளை நீக்கச் சாதனங்களையெழுப்பியும், புதுப்புது வழிகளை இடையிடையே கூட்டியும்; அறிவின் சுவையையூட்டியும், மைசூர், பெங்களூர் என்னும் இருநகரங்களையும் பொன்னகரங்களாக்கியும், குடிதண்ணீர் வசதியேற்படுத்தியும், முடிவில் தன்னாடு செழிப்புற (Cauvery Power Installation Scheme) என்று கூறப்பட்ட மின்சார சக்திரூபகமான சாதனங்களை யுற்பத்திசெய்தும், இன்னும் எண்ணிறந்த நன்மைகளைச் செய்தும் வந்தவரான "இராஜ்யதுரந்தரர்" ஸ்ரீமான் ஸர். கே. சேஷாத்திரி ஐயர் அவர்களின் வாழ்க்கைச்சரிதத்தை கேட்க விரும்பாதவரும் உளரோ? அன்றியும், கர்ஸன் பிரபுமுதல் எளியோர் வரையில் சுத்த வீரனெனவும், உண்மைத் தேசாபிமானியெனவும் புகழுமாறு, நம் சேஷாத்திரி ஐயர் அவர்களுக்குத், தமது அரிய சக்திகளை நல்வழியிற் செலுத்தத்தக்க வன்மையுமிருந்தது. பல பெரிய தேசாபிமானிகளைப் போலவே இவர் வாழ்க்கையும் வறுமையினின்று எழுந்தது. பொது ஜனங்கள் ஒன்றுகூடி இவருக்கு ஞாபகச்சின்னம் எழுப்பியதும், அதைத் திறப்பதற்கு இராஜப்பிரதிநிதியான ஹார்டிஞ்சு பிரபு இணங்கியதுமே ஸ்ரீமான் ஐயர் அவர்களின் ஆட்சித்திறத்தையும் நற்குணங்களையும் இனிது விளக்குகின்றன.

## இளமைப்பருவம்



ஸர். கே. சேஷாத்திரி ஐயர்

கி. பி. 1845-ம் வருஷம் ஜூன் மீ 1-ம்தேதியே சேஷாத்திரி ஐயர் அவர்களின் ஜனனதினம். பாலக்காட்டுப் பிரதேசத்திலுள்ள குமாரபுரம் எனும் கிராமந்தான் ஐயர் அவர்களின் முன்னோர்கள் வசித்து வந்த இடம். ஆனால் அவர் தந்தையான கிருஷ்ணய்யர் என்பவர் தன்னுடைய சொந்த ஊரினின்றும் புறப்பட்டுவந்து கள்ளிக்கோட்டையில் குடியேறி, ஆங்கு ஒரு சாதாரண உத்தியோகத்திலமர்ந்திருந்தார். சேஷாத்திரி ஐயர், தாம் ஆறுமாதக் குழந்தையாயிருக்கையிலேயே, தம் தகப்பனாரை இழந்துவிடும்படியான துர்ப்பாக்கியத்தை யடைந்துவிட்டார். ஆகவே, இவருடைய பிற்காலவாழ்வின் புகழெல்லாம் தாயின் ஆதரவையும், ஜேஷ்ட சகோதரனின் உதவியையுமே பற்றியிருந்தது. அதனால் இவர் இளமைப் பருவத்தில் ஏனையோரைப் போலச் சிறிதும் சுகமடையவில்லை. இது வறுமையே பெருமைக்கு வித்து என்னும் பழமொழியை நன்கு விளக்குகின்றது.

நம் ஐயரின் பள்ளிக்கூட வாழ்வு, மிகவும்





அற்புதமாயிருந்தது. மாணவர் அனைவரினும் அவர் முதன்மையாய் விளங்கினர். கணித சாஸ்திரத்தில் இவர் ஞானம் உயர்ந்தோங்கி நின்றது. தவிரவும், கல்வியில் அவருக்கு மிகுந்த ஊக்கமும் இயற்கைத் திறமும் இருந்தபடியால், பள்ளிக்கூடத்தில் அளிக்கப்படும் அரியபரிசுகளைப் பெரும்பான்மையும் அவரே பெற்றுவந்தார். 1865-ம் வருஷத்தில் அவர் பீ. ஏ. பரீக்ஷையில் தேறினர்.

## வாழ்க்கை நிலை

மறுவருஷத்தில் கள்ளிக்கோட்டை கலெக்டர் ஆபீஸில் தர்ஜமா உத்தியோகத்தில் நமது ஐயர் அமர்ந்தார். மைசூர் இராஜ்யத்து திவான் உத்தியோகத்தைத் தமக்கு முன்னால் வகிக்கவிருந்த ஸ்ரீமான் அரங்காசார்லுவே அக்காலம் கள்ளிக்கோட்டையில் டிப்டிகலெக்டராகவிருந்தார். அரங்காசார்லு மஹாமதியூகி. மனிதர்களின் உள்ளங்களைச் சிறிதுபோழ்தில் அறியத்தக்க உத்தமர். அவர் மனத்தில் சேஷாத்திரி ஐயரின் வேலைத்திறனும் உத்தம குணங்களும் அன்பைப் பெருக்கின. ஆகவே, மலையாளநாட்டின் குளிர்ந்த தென்னஞ்சோலையினிடையிலே, அந்நாட்டின் அழகிய இயற்கை வளத்தின் நடுவிலே, இவ்விரு மகான்களுடைய நட்பெனும் விதை ஊன்றப்பட்டு, நாளடைவில் வளர்ந்து முதிர்ச்சிபெற்று உள்ள நாள் உள்ளவரை ஓங்கிவந்தது. இந்நட்பேதான் இருவரையும் புதிதாய் வாலைப்பருவமடைந்த மைசூர் நாட்டின் நன்மைக்குக் காரணபூதர்களாக்கி அந்நாட்டுக்குப் புத்துயிரளித்த இராஜ்யதந்திர துரந்தரர்களின் எண்ணிக்கையைப் பெருக்கியது.

1868-ம் வருஷம் ஜூன் மாதம் அரங்காசார்லு மைசூர் அரசாங்க உத்தியோகத்திலமர்ந்தார். இரண்டு மூன்று மாதங்களாவதற்குள்ளேயே தம்முடைய சலிப்பற்ற முயற்சியினாலும், சோர்வற்ற பொறுமையினாலும், உத்தம நீதியினாலும், உயர்குணத்தினாலும் அழியாப்புகழைச் சம்பாதித்துக்கொண்டார். மைசூர் அரண்மனையைச் சீர்திருத்தஞ் செய்வதற்கு அவர் காட்டியதிறனும், அவர் செய்த நிகரற்ற செய்கையும் அவருக்கு உயர்ந்த செல்வாக்கையும் பெரிய பதவியையும் கொடுத்துதவின. அக்காலத்தில் பரிதானம் வாங்குதல் முதலிய தீமைகளுக்கு எளிதிலிணங்காத திடச்சித்தமுள்ள உத்தியோகஸ்தர்கள் மைசூருக்கு அவசியமாயிருந்தனர். அரங்காசார்லுவின் நோக்கம் சேஷாத்திரி ஐயரைப் பற்றியது. ஐயர் அவர்களும் 1868-ம் வருஷம் அக்டோபர் மீ 30உ அஷ்டக்கிராமம் டிவிஷன் சூபரின்டெண்டெண்டு ஆபீஸில் நியாயஇலாகா சிரஸ்ததாரராக வமர்ந்தார். இலகுவாயும் தீவிரமாயும் உயர்பதவிகள் அவருக்குக் கிடைத்துக்கொண்டே வந்தன. சாதாரண மனிதர்களால் கனவிலுங் கருதக்கூடாத துறைகளில் தாளாண்மையோடு முயற்சி செய்யும் மனிதன் எளிதில் கொண்டுபோய்விடப்படுகிறான். இதுவே நமது ஐயரவர்கள் முன்னேற்றத்துக்குக் காரணம். மைசூரில் வந்து புகுந்த பத்து வருடங்களுக்குள் அவர் ஜில்லா அதிகாரி யானார். இந்தப் பத்துவருட காலத்துக்குள்ளேயே அவர் ஜூடிஷ்யல் சிரஸ்ததாராகவும் பப்ளிக் பிராஸிகியூடராகவும், ஜூடிஷ்யல் அஸிஸ்டெண்டு கமிஷனராகவும், அரண்மனைப் பொக்கிஷத்தலைவராகவும் வேலைபார்த்துவந்தார். 1874-ம் வருஷத்தில் பி. எல். பரீக்ஷையிலும், மற்றும் உயர்தர உத்தியோகங்களுக்குத் தன்னைத் தகுதியாக்கிக் கொள்ளுவதற்குரிய வேறுசிலபரீக்ஷைகளிலும்தேறினார். 1879-ம் வருஷம் பிப்ரவரிமாதத்தில் தும்கூர் டிப்டி கமிஷனராயும், 1881-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் மைசூர் டிப்டி கமிஷனராயும் வேலைபார்த்தார். இவ்வுத்தியோகங்களில் ஸ்ரீமான் ஐயர் தம் மனச்சாக்ஷிக்கு விரோதமின்றியும் நீதியுடனும் நடந்துவந்தாரென்று சொல்வது மிகையாகும்.

1881-ம் வருஷம் மார்ச் மாதம் 25-ம்தேதி மைசூர் இராஜ்யத்து ஜனங்களுக்குக் களிப்பையூட்டும் அரிய சம்பவம் ஒன்று நேர்ந்தது. மஹாராஜா சாமராஜேந்திர உடையார் சகல வைபவங்களுடன் அன்று முடிசூட்டப்பெற்றார். அன்றேதான் அரங்காசார்லு திவானாகவும், ஆலோசனைச் சபையின் அக்கிராசனாதிபதியாயும் நியமிக்கப்பெற்றார். ஜனங்களிற் பெரும்பான்மையோர் அவரை அன்னியரெனவும், சுயநலங்கருதிப் பிழைக்கவந்தவரெனவும் தூற்ற வாரம்பித்தனர். அக்காலத்தில் சமஸ்தானத்து வருவாயோ, மிகவும் குறைவு. குடிகளும் வறுமைப் பிணியால்

வருந்தினர். நம்பிக்கையுள்ள அதிகாரிகளோ மிகச் சிலர். எனவே இந்தநிலைமையில் அரங்காசார்லுவின்மனம் எவ்வாறு வருந்தியிருக்கும்? ஆனால் அவர் சற்றும் தளர்ந்திலர். யோக்கியர்களாயும், நம்பத்தக்கவர்களாயு முள்ளவர்களையே உத்தியோகத்துக்குப் பொறுக்கி எடுத்தார். அவர்களுள் நமது சேஷாத்திரி ஐயரே முதன்மைபெற்று விளங்கினவர். அவருக்குச் சில சட்டதிட்டங்களை ஏற்படுத்தும்படியான பொறுப்பு அளிக்கப்பட்டது. அவைகள் மிகவும் நேர்த்தியாய் அமைக்கப் பட்டதைக் கண்டு களிப்புற்ற அரங்காசார்லு, ஒருசமயம் தாம் தலைநகரைவிட்டு வெளியேபோக நேர்ந்தபோது, தம் ஆபீஸ் வேலையை நமது ஐயரிடம் ஒப்பிவித்துவிட்டுப் போயினர். தம்முடைய உத்தியோகவாழ்க்கையில் தாம் செய்யத் தீர்மானித்திருந்த சீர்திருத்தங்களுக்கெல்லாம் அஸ்திவாரம்போடும் பாக்கியம் ஒன்றையே அரங்காசார்லு பெற்றிருந்தார். எது எவ்விதமாயினும், தன்னுடைய நோக்கங்களனைத்தும் சேஷாத்திரி ஐயராலே இனிது நடைபெறுமென்ற நம்பிக்கைமட்டும் அவருக்கிருந்தது. 1883-ம் வருஷம் ஜனவரிமீ 20வ அரங்காசார்லு அகாலமரணமடைந்தார்.

### திவான் உத்தியோகம்

உடனே ஸ்ரீமான் சேஷாத்திரி ஐயர் திவானாய் நியமிக்கப்பட்டார். இவர் அந்த உத்தியோகத்தை வகிக்க ஆரம்பித்த காலத்தில் நாடிருந்த நிலைமையைத் தெரிந்து கொண்டாலன்றி, நாடு இவரால் அடைந்துள்ள நன்மைகளை யறிவது அசாத்தியம். அரசரோ சிறுவயதினரா யிருந்தனர். வரும்படி மிகவும் குறைந்திருந்தது. ஜனங்கள் கொடிய பஞ்சத்தினாற் பீடிக்கப்பட்டு, கொஞ்சங் கொஞ்சமாகத் தெளிந்துகொண்டிருந்தனர். அரசுரிமையும் பரீக்ஷார்த்த மெனவே கருதப்பட்டு வந்தது. இவைகளன்றி, சேஷாத்திரி ஐயரும் வயதிற் சிறியவராயிருந்தார். விரோதிகளிற் சிலர் இரகசியமாயும் சிலர் பகிரங்கமாயும் அவரைத் தூற்றிக்கொண்டிருந்தனர். ஆனால் அரசர் பால்யரா யிருந்தாலும் கல்வி கேள்விகளிற் பெரியராயிருந்தமையால், அவருடைய அன்பும் ஆதரவும் சேஷாத்திரி ஐயருக்கு எளிதிற் கிடைத்துவிட்டன. அரங்காசார்லுவின் உயர்ந்த எண்ணங்களை உருவாக்கும் வேலையொன்றே யிருந்தது. அதனால் இவருடைய ஜீவிய சரித்திரம் பெரும்பான்மையும் மைசூர் இராஜ்ய சரித்திரமாக மாறிவிட்டது. அவருடைய இராஜ்ய பரிபாலனகாலத்தை மூன்று பகுதிகளாகப் பிரித்தல்கூடும். 1886-ம் வருஷத்தோடு முடிவுபெறும் முதற்பகுதியில் இருப்புப்பாதைகளாலும் மற்ற விஷயங்களாலும் ஏற்பட்ட ஏராளமான செலவுகளையெல்லாம் தம் அபூர்வ சாமர்த்தியத்தாலும் ஊக்கத்தாலும் கொஞ்சங் கொஞ்சமாய்ச் சுருக்கி, முடிவில் 13 லக்ஷம் ரூபாய்களை மூலதனமாக்கினர். இது கருதியே அப்பொழுது அங்கு ரெஸிடெண்டாயிருந்த கர்டில்ஸ்டன் துரையும் "தகைமையும், அறிவும், ஊக்கமும் நிறைந்த சேஷாத்திரி ஐயர் அவர்களின் உதவியை இந்த அரசாட்சி பெற்றிராவிட்டால், இவ்விராஜ்யத்தினிடத்தில் எனக்குள்ள ஆதரவும்அன்பும் பயனற்று நிற்கும்" என்று கூறியுள்ளார். சேஷாத்திரி ஐயரின் புகழ் ஓங்கிவளர்ந்து வெளிநாடுகளிலும் பரவிற்று. 1886-ம் வருஷத்தில் சென்னை ஸர்வ கலாசாலை ஸகாக்களில் ஒருவராய்த் தேர்ந்தெடுக்கப்பட்டார். இந்திய கவர்ன்மெண்டார் இவ்விராஜ்யத்தின் கப்பத்தொகையை பின்னும் 10லக்ஷம் ரூபாய் கூட உயர்த்தமுயன்றபோது, நாட்டின்நிலைமை திருந்தும்வரை உயர்த்தக்கூடாதென்று நமது ஐயர் வேண்டிக்கொண்டதற் கிணங்கி பத்து வருஷங்களுக்குப்பிறகு உயர்த்துவதாக இந்திய அரசாங்கத்தார் தீர்மானித்து விட்டனர். இஃதொன்றே சேஷாத்திரி ஐயர் மைசூர் அரசாங்கத்தின்மீது வைத்திருந்த எல்லையற்ற அபிமானத்தைக் காட்டுகிறது. இவருக்கு ஸர் பட்டமும் அளிக்கப்பட்டது. இதன்பின் குடிகளுடைய க்ஷேமவிருத்திக்காகப் பாடுபடவேண்டிய தவசியமென்று ஸ்ரீமான் ஐயர் அவர்களின் மனத்திற்பட்டது. இதுவே இரண்டாவது பகுதியின் ஆரம்பம். 1886-87-ம் வருஷங்களில் விவசாயத்துக்கு வேண்டிய ஜலவசதியைச் செய்துகொடுத்து, பாசன வாய்க்கால்களை வெட்டி, நாட்டைச் செழிக்கச் செய்தனர். இவ்வருஷத்திலேயே பழைய சரித்திரவாராய்ச்சி இலாகாவொன்றுஸ்தாபிக்கப்பட்டது. கைத்தொழில் விவசாயக் காட்சிச்சாலைகள் ஏற்படுததப்பட்டன. 1889-ல் புதியசாலைகளைப்போட்டும், பாலங்களைக் கட்டியும், பொது





ஸ்தாபனங்களைப் பெருக்கியும் உழைத்தனர். 1890-ம் ௵ மைசூர் இராஜ்யத்தில் இருப்புப் பாதை போடப்பட்டது. அரசாங்க உத்தியோகஸ்தர்களுக்காக அந்தியகாலப் பணவுதவி நிதி ஒன்று ஸ்தாபிக்கப்பட்டது. 1891-92-ல் பொறுப்புள்ள உத்தியோகங்களை வகிக்கத் திறமையுள்ளவர்களைத் தேர்ந்தெடுக்கும் மைசூர் ஸிவில் ஸர்விஸ் போட்டிப் பரீக்ஷை ஏற்படுத்தப்பட்டது. அதே வருஷத்திலேயே, மைசூர் பெங்களூர் இரு பட்டணங்களுக்கும் நகரபரிபாலனச் சங்கத்தின் அங்கத்தினர்களைத் தேர்ந்தெடுக்கும் சுதந்தரம் அளிக்கப்பட்டது. 1891-ல் ஏற்பட்ட கொடிய பஞ்சம் வெகு சிரமத்துடன் அகற்றப்பட்டது. 1893-ல் மைசூர் பெங்களூர் என்னும் இரு நகரங்களுக்கும் குழாய்த்தண்ணீர் சௌகரியம் உண்டாயிற்று. இதனால் இவருடைய பெயர் பிரதி குடும்பத்திலும் புகழப்பட்டு வந்தது. இந்திய அரசாங்கத்தாரும் இவருக்கு K.C.I.E. என்னும் விருதையளித்தனர். 1894-ம் வருஷத்தில் விவசாயிகளுக்குப் பயன்தரும் விவசாய நிதிகள் ஏற்படுத்தப்பட்டன. மாரிக்கண்வாயைத் தடுத்து ஜலத்தைத் தேக்குவதற்கான முயற்சி ஆரம்பமாயிற்று. பால்யவிவாகத்தைத்தடுக்கும் சட்டத்தை ஏற்படுத்தி, ஜனாசாரச் சீர்திருத்தங்களை முன்னுக்குக் கொண்டுவந்தனர். நாட்டிற் பலவிடங்களில் இருப்புப்பாதைகள் போடத் தீர்மானிக்கப்பட்டதேயாயினும், சத்திரபதி சாமராஜேந்திர உடையார் அவர்களின் அகால மரணத்தால் மற்றெல்லாவித நற்காரியங்களுக்கும் தடை யேற்பட்டுவிட்டது.

தம் உத்தம நோக்கங்களைப் பூர்த்திபண்ணுவதில் மிக்க உதவியாயிருந்த அரசர் இறந்தபின், அவர் விருப்பத்திற்கன்றி மற்றொருவர் விருப்பத்துக்கும் இணங்கியறியாத நமது ஐயர் ஒரு கக்ஷியாரின் மனப்போக்கின்படி நடந்து, இவரது அருமை பெருமைகளைத் தெரியாத சிலருடைய வசைமொழிகளுக்கு உட்படவேண்டியிருந்தது. ஆனால் "மெய்வருத்தம் பாரார் பசிநோக்கார் கண்துஞ்சார் எவ்வெவர் தீமையுமேற்கொள்ளார் செவ்வி அருமையும் பாரார் அவமதிப்புங் கொள்ளார் கருமமே கண்ணாயினார்"

என்றவாறு, தம்முடைய கடமைகளைச் செய்வதினின்றும் சற்றேனும் பிறழ்வதில்லை. இதிலிருந்து மூன்றாவது பகுதி ஆரம்பமாகிறது.

"பட்டகாலிலே படும்" என்னும் பழமொழி இந்தப்பகுதியில் உண்மையாக விளங்கி, நமது சேஷாத்திரி ஐயருக்கு மிகுதியும் மனத்துயரமுண்டாக்கிற்று. மஹாராஜாவின் மரணத்துக்குப் பிறகு, 1896-ம் வருஷத்தில் மைசூரில் சரித்திர ஆராய்ச்சிக்குரிய சின்னங்கள் நிறைந்து மிக்க அழகுடன் அமைக்கப்பட்டிருந்த அரண்மனை தீக்கிரையாயிற்று. 1898-ல் பிளேக் என்னும் கொடியவியாதி தலையெடுத்து ஓங்கி வளர்ந்து, ஜனங்களை எளிதில் யமனுலகிற் கனுப்பிற்று. அக்காலத்தும் அரசாட்சியானது, மகாராணி அவர்களின் முதிர்ந்த அறிவின் துணையோடுகூடி இனிது நடந்துவந்தது. இல்லற தருமங்களும் மாணவ தருமங்களும் செழிக்கவாரம்பித்தன. பொதுநன்மைக்குரிய ஸ்தாபனங்கள் மிகுந்தன. 1896-ல் பெங்களூரின் மேலண்டைப் பாகம் விஸ்தரிக்கப்பட்டது. 1897-ல் விக்டோரியா வைத்திய சாலையும், மாணவர் விடுதியும் அமைக்கப்பட்டன. 1899-ல் மைனராயிருந்த மகாராஜா கிருஷ்ணராஜேந்திர உடையாருக்கு விவாக மகோற்சவம் நடந்தேறியது. அதே வருஷத்தில், காவிரியாற்றின் குறுக்கே அணைபோட்டு, ஜலத்தைத் தேக்கி, அதினின்றும் மின்சாரசக்தியை உற்பத்திசெய்யும் அரிய பெரிய முயற்சியும் ஆரம்பிக்கப்பட்டது. இதுவே ஐயர் அவர்களின் அபார அறிவின் சக்திக்கும் மனோ தைரியத்துக்கும் அறிகுறியாக நின்று, அவருக்கு என்றும் அழிவுறாப் புகழ்த்தூணை நிலைநிறுத்திவிட்டது. பெங்களூரின் வடபாகத்தையும், தென்பாகத்தையும் பெருக்கி அவைகளுக்கு முறையே மல்லேசுவரமென்றும், பஸவங்குடியென்றும் பெயரளிக்கப்பட்டன. சேஷாத்திரி ஐயர் பெண்கல்வி அவசியமென்று வற்புறுத்தினர். வெளிதேச யாத்திரையை ஆமோதித்தனர். பால்ய விவாகத்தைத் தடுத்தனர். மற்ற ஆசாரசீர்திருத்தங்கள்பரவ இடங்கொடுத்தனர். இவர்சமஸ்கிருத பாஷா விற்பன்னர். தேசீயக் கலையகத்துக்கு இவரே காரணபுருஷர். பின்வரும் சந்ததியாருக்கு உதாரணமாயும் நின்றார் இவர். ஆயினும் அநேக வருஷங்களாய்ச் சலிப்பின்றி இராஜ்யபாரந்தாங்கிய மனமும் சரீரமும் சற்று

இளைப்பாற விரும்பினர். 1900-ம் வருஷம் ஆகஸ்டு மாதத்தில் ஏழுமாத ரஜாப்பெற்றுக் கொண்டார். இதற்கிடையே, அவருடைய சுகதுக்கங்களைப் பங்கிட்டுக்கொண்டவளும், அவருடைய அதிர்ஷ்டங்களுக்குக் காரணமானவளுமான அவர் தருமபத்தினி அவரைத் தனியே விட்டு வானாடு புக்கனள். 1901-ம் வருஷம் செப்டம்பர் மாதம் 19-ம்வ்யன்று ஸ்ரீமான் இராஜ்ய துரந்தர ஸர். கே. சேஷாத்திரி ஐயர் அவர்களும் விண்ணுலகடைந்தனர்.

வாழ்க்கையின் பயனெலாம் வலனுறப் பெற்றனை
வாழ்க்கையின் கடனெலாம் வளம்பெற முடித்தனை
வாழ்க்கையின் முடிவினை வலிதினிற் றரித்தனை
வாழ்க்கையின் அமைதியை மன்னுக! மன்னுக!!

---

# புண்ணிய ஆலயங்கள்

## PLACES OF PILGRIMAGE

### 2. மதுரை

மதுரைமாநகர் எனச் சிறப்புற்றோங்கும் நகரம் பற்பல பெயர்களுடன் கூடி விளங்கும் இந்திய நகரங்களில் ஒன்றாகும். மதுரமென்பது பிரியமெனப் பொருள்படும். இந்நகருக்கு இப்பெயர் வாய்ந்த காரணம் பின் வருமாறு கூறப்பட்டுள்ளது:—

முன் ஒரு காலத்தில் தேவகுருவாகிய பிரகஸ்பதி பகவான் இந்திரனிடம் கோபங்கொண்டவராய், அவனது சபையினின்றும் அகன்றனர். ஸத்குருவின் சகாயமற்ற தேவர்கோன் தனது செய்கைகளால் பாபத்திற்குப் பாத்திரனானான். மகான்களது சினம் விற்பிடித்து நீர்கிழிய எய்த வடுப்போல் மாறுவதும் இயல்பேயன்றோ! பிரகஸ்பதியும் கோபமாறி, மறுபடியும் இந்திரனது சபைக்கு வந்ததும், அவனும் அவருக்கு வந்தனை வழிபாடுகள் செய்து தான் செய்த அபராதத்தைப் பொறுத்துத் தன்னை ஆட்கொள்ளும்படி வேண்டினான். கருணாநிதியாகிய அத்தேவ குருவும் மனமிளகி, பாபத்தினின்றும் தன்னை நிவர்த்தி செய்துகொள்ளக் கூடிய மார்க்கத்தை இந்திரனுக்கு உபதேசிக்க, அவனும் அவரது ஆணையைச் சிரமேற்கொண்டு பற்பல புண்ணிய ஸ்தலங்களை தரிசனம் செய்துகொண்டு வந்து, இறுதியில் ஓர் கடம்பவனமெனும் கடப்பங்காட்டை அடைந்தான். ஆங்குற்றதும், அதுகாறும் தன்னைப் பிடித்து வந்த பாபபரிபாகமான வேதனை தன்னைவிட்டு அகன்றதுகண்டு அகமகிழ்ந்து அத்தகைய அற்புத மாறுதலுக்குக் காரணம் யாதாக விருக்கலாமென நாற்புறமும் பரிசோதிக்க, அங்குள்ள ஓர் குளக்கரையின் அருகில் ஓர் அற்புதமான சிவலிங்கமிருக்கக் கண்டான். தனது பாப நிவர்த்திக்கும் மனச் சந்துஷ்டிக்கும் காரணம் அந்த லிங்கத்தினின்றிழியும் ஜோதியும் சக்தியுமே எனவறிந்த அமரர் கோன், விசுவகர்மாவெனப் பெயர் வாய்ந்த தேவச் சிற்பியை ஆங்கு வருவித்து, அவனது உதவியைக் கொண்டு தற்சமயம் மீனாக்ஷி சுந்தரேசுவராள் கோவிலெனத் துலங்கும் கோவிலைக் கட்டுவித்தான். ஈசன் உள்ள விடத்தில் ஈசுவரியும் இருத்தல் அவசியமேயன்றோ? ஆதலின், உலக மாதாவாகிய பராசக்திக்கும் அங்கு ஓர் கோவில் இந்திரனது சிற்பி விசுவகர்மாவினால் அமைக்கப்பட்டது.

பிறகு இந்திரன் அங்கு ஸ்தாபிக்கப்பெற்ற சக்தியையும், சிவனையும் பூசிக்க விரும்பி புஷ்பங்கள் கிடைக்காததால் மனம் வருந்த அவனது பக்தியின் மகிமையாலும் கடவுளது அருளினாலும் ஆங்குள்ள குளத்தில் ஏராளமான பொன் தாமரைமலர்கள் தென்பட்டன. மனமகிழ்ந்த தேவேந்திரனும் அம்மலர்களைக் கொய்து, மீனாக்ஷி சுந்தரேசுவராள் எனப் பெயர் கொடுக்கப்பெற்ற ஈசுவரனையும் ஈசுவரியையும் மனங்குளிர அருச்சித்து வந்தனை வழிபாடுகள் செய்து வணங்கினன்.

இந்திரனால் அமைக்கப்பட்ட அக்கோயிலைச் சுற்றி ஓர் அடர்ந்த கடம்பவனமிருந்ததால், நெடுநாள்வரையில் அக்கோயில் ஜனங்களுக்குத் தெரியாமலிருந்தது. அவ்வனத்தின் கீழ்த்திசையின் அருகில் குலசேகர பாண்டியன் என்னும் பெயர்வாய்ந்த ஓர் அரசன் அரசாட்சி செய்துகொண்டிருந்தான். அவனது பிரஜைகளில் ஒருவனாகிய ஓர் வர்த்தகன் மணவூர் தனஞ்சயன் என்போன் ஓர் இரவு வழி தப்பிப்போய் கோவிலைச் சூழ்ந்துள்ள கடம்பவனத்தில் அல்லாடித் திரிகையில், தற்செயலாய்க் கோவிலை யடைந்து அகமகிழ்ந்து ஆச்சரிய முற்றவனாய் மறுநாட்காலையில் தான் காட்டை விட்டுத் தன் நாடு சேர்ந்ததும், ஓடோடியும் பாண்டியனது அரண்மனையை அடைந்து அவனிடம் சங்கதிகளை விவரித்துக் கூறினான். பாண்டியனுக்கும், அவன் தூங்கும் பொழுது நித்திரைதனில் கடவுள் ஓர் சித்தரின் உருவாய்த் தோன்றிக் காட்டை யழித்து அக்கோவிலைச்சுற்றி ஓர் நகரத்தை அமைக்கும்படி கட்டளையிட்டிருந்தார். தான் கண்டது கனவோ நனவோவெனச் சங்கித்துப் பிரமித்திருந்த அவ்வரசனும், வர்த்தகன் கூறிய விஷயங்களைக் கேட்டு அதிசயித்து, ஓடோடியும் சென்று பார்த்து ஆனந்தித்துத் திரும்பி வந்து அநேகம் ஆட்களைக் கொண்டு கோவிலைச் சூழ்ந்துள்ள காட்டையழித்துச் சிற்பிகளைக் கொண்டு அக்கோவிலைச் சுற்றி ஓர் அழகிய நகரை அமைத்தான். அந்நகருக்கு யாது பெயர் கொடுப்பதெனச் சங்கித்து நிற்கும் சமயத்தில், கடவுளே அங்கு தோன்றித் தமது சடைகளினின்று எங்கும் அமிர்த தாரையைச் சொரிய அதினின்று அந்நகரத்துக்கு மதுராபுரிஎனப் பெயர்கொடுக்கப் பட்டது.



கிளிக்கூடு மண்டபம்.

மேற்கூறிய அற்புதச் செய்கையைத் தவிர மதுராபுரி நாதனாகிய ஸ்ரீ சுந்தரேசுவரர் கடாக்ஷித்தருளிய இன்னும் அனேகம் அற்புதசித்திகள் பின்னர் கூறப்படும்.

பரமனது சடாமகுடத்தினின்றிழிந்த மதுரமான அமிர்ததாரையின் வருஷத்திலிருந்து மதுரையெனப் பெயர்வாய்ந்த விஷயம் கூறப்பட்டது. இன்னும், இந்நகர் பற்பல நாமதேயங்களை அடைந்திருத்தலால், அவைகளின் சம்பவங்களையும், நோக்கங்களையும் இனிக் கூறுவோம்.

இந்நகருக்கு ‘ஹாலாஸ்யம்’ என்று ஓர் பெயரும் உண்டு; ‘ஹாலம்’ என்றால் ‘விஷம்’ ‘ஆஸ்யம்’ என்றால் ‘வாய்’ ஆதலின் ‘ஹாலாஸ்யம்’ எனின் ‘விஷவாய்’ எனப்பொருந்தும்.

இந்நகரம் இப்பெயர் பெற்றதற்குக் காரணம் பின்வருமாறு கூறப்பட்டுளது.

குலசேகரபாண்டியன், மதுரைமாநகரத்தை அமைக்கவிரும்பிய பொழுது அது எவ்வளவு விஸ்தீரணமுள்ளதாக விருக்கவேண்டும் என்பதுபுலப்படாமல்தவிக்க, ஹாலாஸ்யநாதனென்று பெயர் வாய்ந்திருக்கும் மதுரைக் கடவுள், தனது சர்ப்பங்களுள் ஒன்றை அவ்வரசனுக்கு உதவிபுரியுமாறு அனுப்ப, அதுவந்து, தனது வாலை வாயினாற் கடித்துக்கொண்ட வண்ணமிருந்து, நகருக்கு வரம்பு காட்டிக் கொடுத்ததிலிருந்து, அதற்குஆலவாய் அல்லது ஹாலவாய், அதாவது விஷத்துடன் கூடிய ஸர்ப்பத்தின் வாய் எனப் பெயர் வந்ததென்பர். ஞானிகள் இக்கதையிற்கூறியுள்ள *ஸர்ப்பம் ஈசுவரனது அகண்டமான முடிவில்லாத சரீரத்தைக்குறிக்க ஏற்பட்ட பிராணி என்றும், மத்தியஸ்தானத்தில் கட்டப்பட்டுள்ள கோவிலும் அதிலுள்ள கடவுளும் பராசக்தியாகிய அம்மனும் இந்த பிரம்மாண்டத்தின் மத்தியில் நிற்பவர்களெனவும் கூறுகின்றனர். மானிடர்களது இருதய கமலமெனும் ஆதாரத்தில் பகவான் இருப்பதற்கு

வரம்பு சரீரம் எப்படியோ, சகல வஸ்துக்களுக்கும் மத்தியில் கடவுளது சக்தி நின்று அந்தந்த வஸ்துக்களைத் தோன்றச் செய்வதும் எப்படியோ, அப்படியே சர்வக்ஞ மூர்த்தியாகிய கடவுளது சரீரம் எல்லையற்றிருக்க வேண்டியதும் அவசியமே யன்றோ! அவரது இருப்பிடத்தைக் குறிக்கும் மதுரைக்கோவிலுக்கும் அதைச்சுற்றி வரம்பு ஏற்பட்டிருக்கினும், ஓர் ஸர்ப்பம் அவ்வரம்பிற்காக நிற்பது, ஸர்வமும் அம்மதுரா புரியாகிய கடவுளது சரீரத்திலும், சகலமான அறிவும் சக்தியும் அம்மதுராபுரியின் ஹிருதயஸ்தானத்தைக் குறிக்கும் கோவிலுள் மீனாக்ஷி சுந்தரேசுவரரிலும் உள்ளதாக அறியப்படவேண்டும் எனக் கூறுகிறார்கள்.



பொற்றாமரைக் குளம்.

இப்பெயர் பெற்ற மதுரை மாநகர், மதுரை ஜில்லாவில் உள்ளது. இந்த ஜில்லாவின் வடக்கில் கோயமுத்தூர், திரிசிராப்பள்ளியென்னும் திருச்சினாப்பள்ளி, தஞ்சாவூர் முதலிய ஜில்லாக்கள் இருக்கின்றன. தவிர, கிழக்கில் சமுத்திரமும், தெற்கில் சமுத்திரமும், திருநெல்வேலி ஜில்லாவும், மேற்கில் திருவாங்கூர் இராஜ்ஜியமும் இருக்கின்றன. இந்த ஜில்லா 8813 சதுரமைல் விஸ்தீரணமுள்ளது. சுமார் முப்பது லக்ஷம் ஜனத்தொகையும் உள்ளதெனக் கூறலாம். இங்கு பேசப்படும் பாஷை தமிழ். நதிகளுள் முக்கியமானது வைகையாறு. இந்த ஜில்லாவில் அனேகம் துறைமுகப்பட்டினங்களும் சில குன்றுகளு மிருக்கின்றன. துறைமுகங்களில் முக்கியமானவைகள், ஆற்றங்கரை, தாமோதரபட்டினம், தேவிபட்டினம், கீழக்கரை, மண்டபம், மரக்காயப்பட்டினம், முத்துப்பேட்டை, பாம்பன், இராமேசுவரம் முதலியன. குன்றுகளுள், அழகர்மலையும் பழனிமலையும் திருவனந்தபுரம் குன்றுகளும் முக்கியமானவைகள். தேகாரோக்கியஸ்தானம் கோடைக்கானல்.

மதுரைத்தாலூகா பெரும்பாலும் ஓர் சமவெளிப்பிராந்திய மெனக்கூறலாம். இதன் வடக்கிலும், மேற்கிலும் இங்குமங்கும் பாறைகளும் குன்றுகளும் உண்டு.

பூமி சிலவிடங்களில் மணற்பாங்காயும், சில விடங்களில் களிராயும், இன்னும் சிற்சில விடங்களில் சுக்கான் பூமியாகவு மிருக்கிறது. அதிக செழுமையானபாகம் வைகைநதிபாயும் சமவெளியெனக்கூறலாம். மதுரைமாநகர்மதுரைத் தாலுகாவில் பிரதானமான வர்த்தக ஸ்தலம். நெசவுக்கும் சாயம் போடுவதற்கும் பெயர்பெற்றது. மதுரை சாயவேஷ்டி தெரியாதவர்கள் தென்னிந்தியாவில் இரார். வைகைநதிக்கு இரு அணைக்கட்டுகள் உண்டு. விவசாய சாதகமான பல ஏரிகளும் குளங்களுமிருக்கின்றன. இராணுவம் தங்குவதற்கு யோக்கியமான ஸ்தானங்களும் பல உண்டு.

மதுரைக்குத் தென்கிழக்கில் சுமார் ஒரு மைல் தூரத்தில் திருமலைநாயகன் மஹால் என்ற ஓர் அற்புதமான கட்டிடமுளது. அது கட்டப்பட்ட சந்தர்ப்பம் பின்வருமாறு கூறப்பட்டுள்ளது.

பதினாறாவது நூற்றாண்டில் திருச்சினாப்பள்ளிஜில்லாவில முத்துதிருமலை நாயக்கன் என்ற ஓர் அரசனிருந்தான். அவன் குன்ம

தேன்வார்த்து வளர்த்தாலும் காஞ்சிரம் தெங்கு ஆகுமே?



நோயினால் மிகவும் வருந்திக்கொண்டிருக்கையில் ஓரிரவு ஓர் கனவு கண்டான். அதனால் தனதுநோய் நீங்கிவிடுமென்றும் ஆனால் தான் மதுரைக் கோயிலைச் செப்பனிட வேண்டுமென்றும் தெரிந்துகொண்டான். கனவில் தோன்றிய சுந்தரேசுவரிடத்திற்கொண்ட பக்தியினிமித்தம் அவன் இவ்வழகிய மஹாலைக் கட்டிக்கொண்டு மதுரையில் வசித்துவந்தான்.

மதுரைக்குத் தெற்கில் சுமார் ஏழு மைல் தூரத்தில் திருப்பரங்குன்றம் எனும் குகைக் கோவில் இருக்கிறது. இது ஓர் சுப்பிரமணிய ஸ்தலம். இங்கு அவர் இந்திரனது குமாரியாகிய தேவசேனை என்பவளை மணந்துகொண்டதாகக் கூறப்படுகிறது.



துவஜஸ்தம்பம்.

மதுரையின் வடகிழக்கில் சுமார் ஆறு மைல் தூரத்தில், ஆனைமலைக் குன்றுகளிருக்கின்றன. தூரத்திலிருந்து பார்த்தால், ஓர் பெரிய கல்யானை, தலை மேற்கிலும், வால் கிழக்கிலும் படுத்திருத்தலைப்போலிருப்பதால் இக்கூட்டத்துக்கு ஆனைமலையெனப் பெயர்வந்தது.

மதுரைக்குக் கடம்பவனமென்ற பெயர் வந்ததற்குக் காரணம், அவ்விருக்ஷங்களடர்ந்த காட்டை அழித்து அங்கு அந்நகரம் அமைக்கப் பெற்றிருப்பதினாலேயாம்.

இந்நகருக்குத் தென்காசியென்று இன்னுமொரு பெயரும், நான்மாடக்கூடல் என்ற மற்றுமொரு பெயரும் உண்டு. இந்தியாவின் வடக்கில் கங்கைக்கரையிலுள்ள புண்ணிய க்ஷேத்திரமாகிய காசிபோன்ற மகிமையுடன் கூடிய ஸ்தலமாகையால் இதைத் தென்காசியெனக்கூறத் தடையென்ன? இதற்கு நான்மாடக்கூடல் என்ற பெயர்வந்ததின் காரணம், இனிக் கூறப்போகும் பிட்டுக்கு மண்சுமந்த பித்தனார் சுந்தரேசுவரரது லீலையால்விளங்கும்.

மதுரைப்பாண்டிய அரசர்களெல்லாரும் சுந்தரேசரது அருள்பெற்றிருந்தவர்கள். ஹாலாஸ்ய மாகாத்மியம் எனக் கூறப்படும் கிரந்தத்தில் அடங்கியுள்ள ஸ்ரீ சுந்தரேசுவரரது லீலைகள் 64 ம் மதுரைப்பாண்டியர்கள் காலத்துக் காண்பிக்கப்பட்டவைகளேயாம். அணிமாதி அஷ்டசித்திகள் எத்தகையனவென்று உலகிலுள்ளவர்களுக்குக்காண்பிக்கும்நிமித்தம் அவர் மேற்கூறிய லீலைகளை நடத்தியிருக்கிறார்.

அஷ்டசித்திகள் எவையெனில், அணிமா, மகிமா, கரிமா, லகிமா, பிராப்தி, பிராசாமியம், ஈசத்துவம், வசித்துவம் இவையாம். இவை சன்முறையே, பரகாயப் பிரவேசம், விசுவரூபம் எடுத்தல, இலேசான வஸ்துக்களை அதிகனமுள்ளவைகளாகச் செய்தல், கனமான வஸ்துக்களை இலேசாக மாற்றுதல், ஓர் சிறிய ரந்திரத்தின் வழியாய் பிரமலோகப் பிராப்தி அதாவது, பிரமலோகம் சென்று சஞ்சரித்தல், இந்த பிரமாண்டத்திலுள்ள மேலேழு, கீழேழு உலகங்களில் யதேச்சையாய்ச்சென்று சஞ்சாரம் செய்தல், சிருஷ்டி, ஸ்திதி, ஸம்ஹாரம், அதாவது, ஈன்று, அளித்து, அழிக்கும் சக்தியுடன் நவக்கிரகங்களையும் அடக்கியாளும் சாமர்த்தியம், எல்லாப் பிராணிகளையும், தேவர்களையும், ரிஷிகளையும், கின்னரர், கிம்புருஷர், வித்யாதரர் முதலிய விண்ணோர்கள் யாவரையும தன் வசப்படுத்தல் முதலியதைக் குறிக்கும்.

தைஈனுப் புல்லும் இல்லை, மாசிஈனு மரமும் இல்லை.

# கூட்டுறவு

## CO-OPERATION

[கீ. சி. இராமஸ்வாமி, பீ. ஏ., எல். டி.]

ஐக்கிய நாணயச் சங்கங்கள் நம் நாட்டில் கொஞ்சங் கொஞ்சமாக விருத்தியடைந்து வருவதால் அவைகளைப்பற்றி நாம் இங்கு விவரித்துக்கூறலாயிற்று. ஆனால் கூட்டுறவு பணவுதவியுடன்நிற்கவில்லையென்றுமுன்னமேயே கூறியிருக்கின்றோமாகையால், மற்றெவ்விதங்களில் கூட்டுறவு குடியானவர்களுக்கு உதவிசெய்கின்றது என்பதைக் கவனிக்க வேண்டும். இதற்கு வேற்று நாடுகளில் என்ன நடக்கின்றது என்பதைக் கவனிப்பது அவசியமாகின்றது.

குடியானவர்கள் ஓர் கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்த பின்னர், அவர்களுடைய காரியங்கள் அரசாங்கத்தாரால்கவனிக்கப்படுமென முன்னமேயே கூறியிருக்கிறோம். அந்த எண்ணத்துடன் இங்கிலாந்தில் பல பெரிய கூட்டுறவு மளிகைக் கடைகள் குடியானவர்களின் சரக்குகளை வாங்கவும் விற்கவும் ஏற்பட்டிருக்கின்றன. ஏனெனில், இங்கிலாந்திலும், ஸ்காட்லண்டிலும் பல குடியானவர்கள் கூட்டுறவுச் சங்கங்களில் சேர்ந்திருக்கின்றனர். அவர்கள் அச்சங்கங்களின் உதவியால் தங்கள் வயல்களைப் பயிரிட்டு, வந்த மகசூலை கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்றுவிடுகின்றனர். அச்சங்கங்கள் தாம் வாங்கினவற்றைத் தலைமைச் சாலைக்கு அனுப்ப, அங்கிருந்து இச்சரக்குகள், மறுபடியும் நாடெங்கும் பரவியிருக்கும் சிறு சங்கங்களுக்கும் கடைகளுக்கும் அனுப்பப்படுகின்றன. அச்சங்கங்கள் கொடுக்கும் விலை மற்ற இடங்களில் கிடைப்பதாகவேயாவது, அல்லது கொஞ்சம் உயர்ந்ததாகவாவது இருப்பதால், விற்பவர்களுக்கு இலாபமேயொழிய நஷ்டம் கிடையாது.

அயர்லாந்திலும் இம்மாதிரியே நடந்து வருகின்றது. இங்கிலாந்து, ஸ்காட்லண்டு ஐர்லாந்து இம்மூன்று தேசங்களில் ஐர்லாந்திலே தான் கூட்டுறவு சிறந்து வருகின்றது என்று சொல்லவேண்டும். இதற்குக் காரணம், ஐர்லாந்திலுள்ளவர்கள் இங்கிலாந்திலுள்ளவர்களைவிட ஏழைகளாக இருப்பது தான். இதனால் அவர்களுக்கு ஒற்றுமை அவசியமாக, அவர்கள் தங்கள் சுய முயற்சியால் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி முன்னுக்குவர முயற்சிசெய்கின்றனர். ஜனங்கள் தாங்களே தனித்தனியாக உழைத்து, கிடைத்த மகசூலைத் தாங்கள் அங்கத்தினர்களாயிருக்கும் கூட்டுறவுச் சங்கங்களுக்கு விற்பது ஒரு விதம். இன்னொரு விதமும் இருக்கின்றது. இக் கூட்டுறவுச் சங்கங்கள் முதற்பணமாகத் தம் அங்கத்தினர்களிடமிருந்து பணம் வசூலித்து, அப்பணத்தைக்கொண்டு தம் பேரிலேயே நிலங்கள் வாங்குகின்றன, அல்லது கைத்தொழிற் சாலைகளை ஸ்தாபிக்கின்றன. பிறகு இந்த நிலங்களைப் பயிரிடவும் தொழிற்சாலைகளில் வேலைசெய்யும் ஆட்களை நியமித்து அவர்களுக்குச் சம்பளம் கொடுத்து வருகின்றன. பிறகு அச்சரக்குகளை விற்றுக் கிடைக்கும் லாபத்தை அங்கத்தினர்களுக்குள் பங்கிடுகின்றன. வேலை செய்யும் கூலியாட்களுக்குக் கொஞ்சம் லாபம் கொடுக்கப்பட்டு வந்தபோதிலும், நாம் இவைகளைக் கூட்டுறவுச் சங்கங்களென்று கூற முடியாது. ஏனெனில், முதற்பணம் கூட்டுறவுச் சங்கங்களிலிருந்து வருகின்றது உண்மையேயானாலும், அவை, காரியத்திலும் லாபத்தைப் பங்கிடுவதிலும் கூட்டு வியாபாரக் கடைகளைப் போலவிருக்கின்றவேயொழிய, வேறில்லை. ஆனால் முற்கூறிய முறையில் நடத்தப்படும் சாலைகள் கூட்டுறவுச் சாலைகளாகும். அது குடியானவர்களுடைய லாபத்தை உத்தேசித்துக் கூட்டுறவுச் சங்கங்கள் என்ன செய்ய முடியும் என்பதை விளக்குவதால், சிறிது விரித்துக்கூற வேண்டியது அவசியம். நாம் தற்காலம் அமெரிக்காவில் நடக்கும் விஷயங்களைக் கூறினால் உண்மை தெளிவாக விளங்கும்.

வட அமெரிக்காவில் 'கலிபோர்னியா' என்னும் ஒரு மாகாணமிருக்கின்றது. அது ஐக்கிய மாகாணங்களில் ஒன்றாகும். அது நல்ல மழையும், உஷ்ணமும் பெற்றிருப்பதாலும், நிலம் செழுமையானதாலும் பலவிதப் பழவகைகள் அங்கு ஏராளமாய் விளைகின்றன. கிச்சிலிப் பழங்கள், திராக்ஷை, ஆப்பில் பழங்கள், அத்திப் பழங்கள் முதலிய பலவிதக் கனிகள் அங்கு பயிராகி வெளிநாடுகளுக்கு அனுப்பப்படுகின்றன. பழுத்த பழங்களை நம் தேசத்தில் நாம் சாப்பிட்டுவிடுகிறோம். ஆனால் ஒரு பழத்திற்குப் பருவமான பிறகு, அதை நாம் காண்பது அரிதாயிருக்கிறது. ஏனெனில், அப்பழத்தைத் தகுந்த வழியில் பக்குவப்படுத்தி வைத்துக்கொள்வதில்லை. ஆனால் ஆங்கிலேயர்களும் அமெரிக்கர்களும் பல நூதன முறைகளால், பழங்களைத் தகுந்தபடி பக்குவப்படுத்தி, வெகுகாலம் கெடாமலிருக்கும்படி பத்திரப்படுத்துகின்றனர். கலிபோர்னியாவில் பயிராகும் செடிகளிலிருந்து கிடைக்கும் பழங்கள் பக்குவப்படுத்தி பலதேசங்களுக்கு அனுப்பப்படுகின்றன. கலிபோர்னியன் பிக்ஸ் (Californian figs) என்னும் அத்திப் பழங்கள் உலகெங்கும் பெயர்போனவை.

இந்தப் பழங்களை அம்மாகாணத்திலுள்ளவர்கள் சிறு தோட்டங்களில் பயிராக்குகிறார்கள். அவர்களில் பெரும்பான்மையோர் பணக்காரர்கள் அல்ல. ஆகையால் பழங்களைப் பக்குவப்படுத்துவதற்கு வேண்டிய இயந்திரங்களை அவர்களில் ஒவ்வொருவரும் வாங்குவது கஷ்டம். ஆகையால்அவர்கள் கூட்டுறவுச் சங்கங்களை ஏற்படுத்தி அதன் மூலமாய்த் தங்கள் காரியங்களை நடத்திவருகின்றனர். இச்சங்கங்கள் அம்மாகாண முழுவதும் பரவியிருக்கின்றன. பழங்கள் மரத்திலிருந்து இறக்கப்பட்டவுடன், அவைகளை வெகு ஜாக்கிரதையுடன் பொறுக்கித் தகுந்த கூடைகளில் வைக்கிறார்கள். ஒவ்வொரு கூடையின்மீதும் பழத்தின் சொந்தக்காரனுடைய பெயர் எழுதப்பட்டிருக்கும். குறிப்பிட்ட தினத்தில், நாலைந்து தோட்டக்காரர்களுடைய பழங்களை எடுத்துக்கொண்டு போக ஒருவண்டி வருகின்றது. அவ்வண்டி தோட்டக்காரர்களுடைய கூட்டுறவுச் சங்க வண்டி. அவ்வண்டி பழங்களை எடுத்து அருகிலுள்ள ரயில்வேஸ்டேஷனுக்கு எடுத்துச்செல்லும். அங்கு ஒரு சங்க உத்தியோகஸ்தன் அக்கூடைகளைத் தகுந்த பந்தோபஸ்துடன் சமீபப் பக்குவச்சாலைக்கு அனுப்புகிறான். இப்பக்குவ சாலையும் தோட்டக்காரர்களுடைய கூட்டுறவுச் சங்கத்தைச் சேர்ந்தது. அதில் வேலை செய்பவர்களுக்கு சங்கத்தாரால் சம்பளம் கொடுக்கப்படுகிறது. பழஉற்பத்தியில் நல்ல ஞானமுள்ள சில தோட்டக்காரர்களும் அங்குமேற்பார்த்து வருகின்றனர். ஆகையால் திருட்டுத்தனத்திற்கு இடமில்லை.

பக்குவசாலையில் பழங்கள் எல்லாம் பலவிடங்களிலிருந்து வந்துசேர்ந்ததும், ஒவ்வொரு கூடையும் சாலையிலுள்ளவர்களால் திறக்கப்படுகின்றது ஒருவனுடைய பழக்கூடைகளைத் திறந்தவுடனே, பழங்கள் எல்லாம் ஜாதிக்கும் ருசிக்கும் தக்கபடி பிரிக்கப்படுகின்றன. இதனால் ஒவ்வொருவனுக்கும் முதல்தரமான பழங்கள் இத்தனை, இரண்டாந்தரம், மூன்றாந்தரம் பழங்கள் இத்தனை என்று எண்ணப்பட்டுவிடுகின்றன. அந்தக் கணக்கு கூடைகள் அனுப்பினவனுடைய கணக்கில் குறிப்பிடப்படுகின்றது. இவ்வேலை முடிந்தபின், பழங்கள் எல்லாம் பக்குவவேலை செய்கிறவர்களிடம் அனுப்பப்படுகின்றன. அவர்கள் பழங்களை எடுத்து உரித்து, உள்ளேயுள்ள விதைகளை எடுத்தும் பழங்களை உலரவைத்தோ அல்லது வேறு தகுந்த முறையினாலோ பக்குவப்படுத்துகிறார்கள். இது முடிந்ததும், பக்குவமான பழங்கள் விற்பனைக்குத் தயாராக பெட்டிகளிலும் கண்ணாடி ஜாடிகளிலும் வைக்கப்படுகின்றன. இவ்வேலை முடிந்ததும் பெட்டிகள் எல்லாம் தலைமைத் துறைமுகத்திற்கு அனுப்பப்படுகின்றன. மாகாணத்தில் பல பக்குவச்சாலைகள் இருப்பதால் பக்குவவேலை வெகு சீக்கிரத்திலேயே முடிந்துவிடுகிறது.

துறைமுகத்திலிருக்கும் தலைமைச் சாலைக்குத்தான் வேலை அதிகம். அச்சாலையும் தோட்டக்காரர்களாலேற்படுத்தப்பட்ட அங்கத்தினர் அதிகாரத்தில் இருக்கிறது. இச்சாலையில் (1) வரவுபிரிவு, (2) விளம்பரப்பிரிவு, (3) அனுப்புதல் பிரிவு, (4) செலவுபிரிவு, (5) கணக்குப் பிரிவு, (6) பங்கீடு பிரிவு எனப் பல பிரிவுகளைக் கொண்டு வேலைசெய்யப்படுகிறது. ஒவ்வொரு பிரிவின் வேலையையும் சற்று கவனிப்போம். வரவு பிரிவில், பல பக்குவச்சாலைகளிலிருந்து வரும் பழங்களும் பெட்டிகளும் கணக்குச் செய்து எழுதப்படுகின்றன. பிறகு, அந்தச்சங்கத்தார் தங்கள் சரக்குகளை விற்பதற்குத் தகுந்த விளம்பரங்களைப் பிரசுரம் செய்வது, விளம்பரப் பிரிவிலுள்ளவர்களுடைய வேலை. இப்பிரிவிலுள்ளவர்கள் பத்திரிகைகள் மூலமாயும், துண்டுக் கடிதங்கள், படங்கள், சந்தைகள் மூலமாயும், உலகமெங்கும் தங்களுடைய கனிவகைகளைப்பற்றித் தெரிவித்து அனைவரும் அவைகளை வாங்கும் மனோநிலையையடைய

தைபிறந்தால் வழிபிறக்கும்.



தையலும் இல்லான் மையலும் இல்லான்.

முயலுகிறார்கள். பற்பல தேசங்களிலிருந்தும் கனிவர்க்கங்களை அனுப்பும்படி வரும் நிருபங்களைக் கண்டு, அதிற் குறித்தபடி அனுப்புவது, அனுப்புதல் பிரிவின் வேலை. இவ்விதமாக ஒவ்வொரு பிரிவினரும் வேலை செய்து தங்கள் கனிகளை விற்று, வந்த பணத்தைப் பிரித்து முதலில் பழங்களை அனுப்பினவர்களுக்கு அனுப்புகிறார்கள். இதனால் நாட்டுப் புறத்தில் பழச் செடிகளைப் பயிராக்கினவனுக்கும், நல்ல லாபம் கிடைக்கின்றது.

இம்மாதிரியான சங்கம் ஒன்று நம் தேசத்திலிருக்கும் விவசாயிகளுக்கு அவசியமானதால், அவர்கள் செய்யவேண்டியது என்னவென்பதைச் சற்று கவனிப்போம்.

முதலாவது, நம் ராஜதானியிலிருக்கும் விவசாயிகள் எல்லாரும் தங்கள் தங்கள் தாலுக்காக்களிலோ, ஜில்லாவிலோ கூடி, தங்களுக்குள் ஓர் கூட்டுறவுச் சங்கம் ஏற்படுத்திக்கொள்ள வேண்டும். இச்சங்கம் விவசாயிகளுக்குப் பண உதவிசெய்வதோடு, அவர்களுடைய அதிக மகசூலையும் பெற்றுக்கொள்ள ஏற்பாடு செய்ய வேண்டும். இம்மாதிரிச் சங்கங்கள் ஐந்தாறு சேர்ந்து தகுந்தஇடத்தில் ஓர் தலைமைச்சங்கம் ஸ்தாபிக்கவேண்டும். அங்கு தானிய வகைகளாயிருந்தால், தகுந்த முறையில் சுத்தஞ் செய்யவும், கனிவகைகளாயிருந்தால் பக்குவஞ் செய்யவும் ஏற்பாடுகள் செய்யவேண்டும். பிறகு இவைகளுக்கு மேலாய்த் தலை ஸ்தலம் ஒன்றிருக்கவேண்டும். இங்குள்ளவர்கள் மிகுந்த புத்திவிசாலமும், வியாபாரத்தில் அனுபவமும் பெற்றவர்களாயிருத்தல் அவசியம். விவசாயிகளுடைய பிரதிநிதிகளும் இங்கு வேலைசெய்யலாம். இவர்கள் தானியம்முதலியவைகள் விலைஎவ்வெவ்விடங்களில் என்னென்னவிலைக்கு விற்கப்படுகின்றது என்பதையும், எப்படி அனுப்பவேண்டும், எவ்விதம் தங்கள் சரக்குகளை விளம்பரப்படுத்தவேண்டும் என்பதையுங் கவனிக்கவேண்டும். வியாபாரத்தின் மொத்தப் பொறுப்பும் இத்தலைஸ்தலத்தில் இருப்பவர்களுடையதாதலால் இங்கு வேலைபார்ப்பவர்கள் தகுந்த மனிதர்களாயிருக்க வேண்டுமென்று நாம் மறுபடியும் வற்புறுத்திக் கூறுகிறோம்.

இவ்வித ஏற்பாடு செய்யப்படுமானால், நம் தேசத்தில் தற்காலத்தில் விவசாயிகள், சங்கங்களுள்ள வியாபாரிகளிடம் அகப்பட்டு விழிக்கும் நிலைமையும், நம் தேசத்து சரக்குகளை ஏற்றுமதிசெய்து நூற்றுக்கணக்காய்ப் பணம் சம்பாதிக்கும் கோடீசுவரர்களிடம் தங்கள் பொருள்களைக் கொடுத்துவிடுதலும் நீங்கும். இத்தகைய ஏற்பாடுகள் இங்கிலாந்திலும் அமெரிக்காவிலும் செய்யப்படவே, சில கூட்டுறவுச் சங்கங்கள் தங்கள் சரக்குகளைப் பல தேசங்களுக்கு எடுத்துச்செல்ல கப்பல்கள்கூட வாங்கியிருக்கின்றன என்பது நாம் அறியவேண்டிய விஷயம்.

மேற்கூறியது மிகப் பெரிய ஏற்பாடாகத் தோன்றினும், ஆழ்ந்து யோசிக்குமிடத்து, மனிதர்களுக்குள் பரஸ்பர நம்பிக்கையும் அனுபவத்தினால் தேர்ச்சியான அறிவும், மன வெறுப்பின்றி ஒத்துழைக்க வேண்டுமென்னும் அவாவும் இருக்குமானால், நம் தேசம் கூட்டுறவுச் சங்கங்களின் பரவுதலினாலேயே வெகுசீக்கிரம் செல்வத்திலும் ஐக்கிய உணர்ச்சியிலும் வளரும் என்பதற்கையமில்லை.

இனி நகரங்களிலுள்ளவர்கள் கூட்டுறவினால் என்ன நன்மைகளையடையலாம் என்பதைக் கவனிப்போம்.

---

ஆரியமத உபாக்கியானம்.—* * நம் சிறுவர், சிறுமிகள் எவ்வளவுமுறை படித்தாலும் அலுத்துப் போகமாட்டார்களென்பது நிச்சயம். தற்காலம் வழங்கப்பட்டுவரும் கல்விமுறையில் ஸன்மார்க்கக் கல்வி போதிக்கப்படவில்லையாகையால, சிறுவர், சிறுமிகள் நாஸ்திகர்களாகி வருகிறார்களென்பதை யாவரும் அறிவர். * * இதைப் படிக்கும் நம் சிறுவர், சிறுமிகளும் குடும்ப ஸ்திரீகளும் நல்ல பயனையடைவார்களென்று நாம் உறுதிகூறுகிறோம். புராண இதிகாஸங்களினின்று நீதிபோதிக்கும் சிறு சிறு கதைகள் பொறுக்கப்பட்டு எளியநடையில் எழுதப்பட்டிருக்கின்றன. முதற் பாகத்தில் புத்திரர்கள் பெற்றோர்களுக்குச் செய்யவேண்டிய கடமைகளைப்பற்றியும், பிறகு மனைவி புருஷனுக்குச் செய்யவேண்டிய பணிகளைப்பற்றியும், குருபக்தி விசேஷம் சகோதர பாவம், தர்மவிஷயம் முதலியவைகளைப்பற்றியும் நன்றாகவும் படித்தால் மனது உருகும்படியாகவும் எழுதப்பட்டிருப்பது போற்றக்கூடியதாகும். * * அவசியம் இப்புஸ்தகங்களைத் தங்கள் சிறுவர் சிறுமிகளுக்கும் முக்கியமாக வீட்டுக் குடும்ப ஸ்திரீகளுக்கு வாங்கிக்கொடுப்பது அவசியமாகுமென்று நாம் வற்புறுத்துகிறோம்.

ஸமரஸ போதினி.





# வியாசலக்ஷணம்

## ESSAY WRITING

[ஸ்ரீமான் ஆர். கே. சுப்பிரமணிய ஐயர்.]

யாதேனும் ஒரு விஷயத்தை யெடுத்துக் கொண்டு அதைப் பல பிரிவுகளாக வகுத்து ஒவ்வொரு பிரிவிலும் அதைப்பற்றிய பல விசேஷங்களையும் நன்கு விளங்கும்படி விரித்துத் தொகுத்து எழுதினதே வியாசம் எனப்படும்.

வியாசம் எழுதுந் திறனானது எளிதில் அடையக் கூடியதன்று. யாதாமொருவருக்குப் பேசுந்திறன் எவ்வளவு இருந்தபோதிலும் எழுதத் தொடங்குங்காலை யொன்றும் புரியாது மயங்குவதுசகஜம். இதற்குக் காரணம் எழுதுவதில் பழக்கமின்மையேயாகும்.

நன்றுயெழுதுவதற்குத் தகுந்த கருத்துக்களும், அக்கருத்துக்களைத் தங்கு தடையின்றியும் வழுவின்றியும் வெளியிடக்கூடியதிறனும் வேண்டும். ஆன்றோர்களின் நூற்களைப்படித்து அக்கருத்துக்களை நம்மதாக்குவதோடு ஆண்டு உபயோகப்படுத்தியிருக்கும் சொற்களின் பிரயோகத்தையும் ஆராய்ந்து மனப்படுத்தி அதுபோல் எழுத முயலுவதினால் காலாவர்த்தியில் முன் சொன்னவற்றை யடையக்கூடும். இவ்வாறு கருத்துக்களும் சொற்றிறனுமுடைய ஒருவன் வியாசம் எழுதுவதில் கவனிக்கவேண்டிய முக்கியமான சில விதிகளைப்பற்றி மட்டுமே சுண்டிச் சொல்லுவோம்.

ஏதேனும் ஒரு விஷயத்தைப்பற்றி வியாசம் எழுத ஆரம்பிக்குமுன்னர் அதைப் பல பிரிவுகளாகப் பிரித்துக்கொள்ள வேண்டும். பின்னர், அப்பிரிவுகளில் ஒவ்வொன்றைப் பற்றியும் தோன்றிய கருத்துக்களைக் குறித்துக் கொள்ளவேண்டும். அதன் பின்னர் இக்கருத்துக்களை யெல்லாம் தக்க வாக்கியங்களால் விரித்துப் பத்தி பத்தியாய் எழுதி முறை தவறாது தொகுத்து அமைக்கவேண்டும்.

இனி வாக்கியங்களின் அமைப்பைப்பற்றி கவனிக்க வேண்டும். ஒலிக்கு அறிகுறியாய் நிற்பன வெழுத்துக்கள். இவ்வெழுத்துக்களாலாக்கப்பட்டு, பொருள், இடம், காலம், சினை, குணம், தொழில், இவ்வாறினையும் உணர்த்தாநிற்பன சொற்கள். நம் கருத்தை வெளியிட வேண்டி யிச்சொற்களை யொன்றோடொன்று சேர்த்து எழுதுவதால் பிறக்கும்வாக்கியங்கள். இவ்வாக்கியங்கள் நான்கு வகைத்தன:—

(1) தனிவாக்கியம்:—எழுவாயும் பயனிலையும் பெற்றும், சமயத்துக்கேற்ப செயப்படுபொருள் பெற்றோ பெறாதோ வருவது.

(2) சார்புவாக்கியம்:—எழுவாய் பயனிலைகள் பெற்றும் தன்னிடத்திலேயே கருத்து முற்றுப்பெறாது வேறுவாக்கியத்தைச் சார்ந்து வருவது.

(3) கலப்புவாக்கியம்:—தனிவாக்கியம் சார்புவாக்கியங்களுடன் கலந்து வருவது.

(4) தொடர்வாக்கியம்:—சார்பு வாக்கியத்தினியல்புபெற்றோ அல்லது பெறாதோ வுள்ள சில தனி வாக்கியங்கள் ஒன்று சேர்ந்து வருவது.

இவ்வித வாக்கியங்களால் நம் கருத்தை வெளியிடக்கூடும். எனினும் கீழ் குறித்த சில விதிகளை அனுசரிப்பது நன்றுயெழுத முயலுவோருக்கு இன்றியமையாததாகும்.

(1) எழுதுவோன் கருத்தை வாசிப்போருக்குத் தெளிவாய் முற்றிலும் அறிவிப்பதே முக்கியமானதாகையால் வாக்கியங்கள் எளியபதங்களைக் கொண்டு அமைக்கப்பட வேண்டும்; நீண்ட வாக்கியங்களைக் காட்டிலும் சிறிய வாக்கியங்களே மேலானவையாகும்.

(2) இடையினத்துக்கு வல்லினமும் வல்லினத்துக்கு இடையினமும் போன்ற எழுத்துக்குற்றங்களும் ஒருசொல்லுக்கு வொருசொல் மாறி யெழுதும் சொற்குற்றங்களும் எழுவாய் ஒருமையிலிருக்கப் பன்மைப் பயனிலை யுபயோகிப்பது, பன்மை யெழுவாயும் ஒருமைப் பயனிலையுமாய் எழுதுவது, இவ்வாறே திணையும் பாலும் மாறி எழுதுவது முதலான இலக்கணக் குற்றங்களும் நீக்கப்பட வேண்டும். இனிப் புணர்ச்சிக் குற்றம் ஏற்படுவது வெகு சாதாரணம். புணர்ச்சியிலக்கணம் நன்கறியாதோர் புணராது எழுதுவதே நன்று.

(3) குற்றமான சொற்களை நீக்கி நன்மொழிகளையே யுபயோகிக்க வேண்டும்.

(4) குறித்த பொருளைக் காட்டுதற்குரிய சொற்களில் குறைவுபட்டும் அதிகப்பட்டும் உபயோகியாது இருத்தலோடு, எவ்வளவு சொல்ல வேண்டுமோ அவ்வளவையும் தக்க சொற்களைக் கொண்டுச் சுருங்கச் சொல்லவேண்டும்.

(5) இரண்டு மூன்று பொருளைத் தரக்கூடிய வாக்கியங்களை நீக்கவேண்டும்.

(6) கூறியது கூறுதலையும், முன்கருத்துக்கு மாறுபட்டுப் பின் கூறுதலையும் விலக்கவேண்டும்.

(7) உதாரணங்களால் விளக்கக்கூடிய விடத்து அவை பொருத்தப் பெறவேண்டும்.

(8) பிற ஆசிரியர்கள் கூறியுள்ளதை யவ்வாறே ஒப்பியாது வியாசம் எழுதுவோன் சொந்த பாஷையில் அவர்கள் கருத்தை வெளியிடுவதே மேன்மையாகும்.

இவற்றுள் கூறியது கூறல் கூடாதென்றுலும், படிப்பவர்களின் மனோபாவத்தையெழுப்பி யவர்தம் மனத்தைக் கவரவேண்டுமிடத்தும், வேறு கோட்பாடுடையவர்களையும் நங்கோட்பாடுக்கியையச் செய்ய வேண்டுமிடத்தும், நாம் ஒருவருக்கொருவர் எதிர்நின்று வாதிக்குங்கால் நாம் சொல்லும் விஷயத்திற்கு ஓர்வித விசேஷத்தைப் புகட்டுவான், எப்படி ஒருமுறைக் கிருமுறையாய் வேறு பதங்களைக் கொண்டு சொல்வோமோ அவ்வாறே எழுதுமிடத்தும் சிற்சில சமயங்களில் கூறியதைக் கூறின் வழுவாகாது. இப்பயனை வேறுவழிகளாலும் அடையக்கூடும். என்னை யெனின்;

(1) மொழிநிலை மாற்றி யெழுதுதல்.

(2) மறுத்துக் கூறி எதிர்மறைப் பொருளைத் தருமாறு எழுதுதல்.

(3) நேர்க்கூறுவதில் வினாக்களைக் கொண்டு எழுதுதல்.

வாதத்துக்கிடமான சில விஷயங்களைப் பற்றி வியாசம் எழுதுங்கால், இருதலையுஞ் சொல்லவேண்டுவனவற்றைச் சொல்லிப் பின் மேற்சொன்னவற்றை யாதாரமாகக்கொண்டு ஒருகலைத் துணிபு பெற்றதாயிருக்கவேண்டும்.

வியாசம் எழுதுமிடத்து நங்கருத்தைப் பிறருக்கு நன்கறிவிக்கவேண்டியதே முக்கியகருத்தாதலின், நாடோடியாய் வழங்கி வரும் பிற பாஷைச் சொற்களை யுபயோகிப்பது பிசகாகாது.

நிறுத்தக் குறிகள் தமிழ் பாஷைக்குரியன வல்ல. அவை வேண்டியதுமில்லை. ஆயினும் இடமறிந்து உபயோகித்தால் நன்றே.

வியாசம் எழுதுவோர் முதற்சொல்லியபடி எழுதவேண்டிய விஷயத்தைப் பல பிரிவுகளாகக்கொண்டு அவ்வப்பிரிவில் எழுதவேண்டிய விஷயங்களை யெல்லாம் ஒருங்கு சேர்த்து முறைதவறாது பத்திபத்தியாய் மேற்கூறிய விதிகளை யனுசரித்து எழுதினால் அவ்வியாசம் நன்றாயிருப்பதற்கு ஐயமில்லை. இன்னும் பாஷையில் அதிகப் பயிற்சியுள்ளோர் அணிநலன்கள் பொருத்தி வாசிப்பவர்களுக்கும் கேட்பவர்களுக்கும் இன்பம் விளைக்கும்படி எழுதலாம். ஆயினும் வியாசங்களில் இவை அதிகமாயிருந்தால் அழகு கொடா.

---

## நமது சிறு கதை

### OUR SHORT STORY

[ஸ்ரீமான் ஜி. ஏ. சுந்தரம், பீ. ஏ., பி. எல்.]

(183-ம் பக்கத் தொடர்ச்சி)

அவர் மகள் முத்தம்மாளும், மாப்பிள்ளை வெள்ளிமலை முதலியாரும் எத்தனையோவிதங்களில் அவர் துக்கத்தைத் தணிக்கமுயன்றும் முடியவில்லை. சித்திவிநாயக முதலியார் திடீரென்று ஒருவரிடமும் சொல்லிக்கொள்ளாமல் ஊரை விட்டுப் போய்விட்டார்.

III

சித்திவிநாயக முதலியார் விடையூரைவிட்டு ஓடிப்போய் இருபது வருஷ காலத்திற்கு மேலாகிவிட்டது. அவ்வூரில் அவர் பெரியபண்ணையாராகயிருந்ததும் அவர் சுவீகாரம் கோர்ட்டில் அடிபட்டுபோனதும் பழங்கதையாகி விட்டது. அந்த வியவகாரங்களையெல்லாம் நன்றாகத் தெரிந்தவர்களும் ஊரில் ஒருவரும் இல்லை. கருப்பணபிள்ளை ஒரு பொய் தஸ்தவேஜு சிருஷ்டித்த கேசில் அகப்பட்டுக்கொண்டு அதில் நீடித்தகாலம் ஜெயில் தண்டனைக் குள்ளானார். அந்தக்கேசில் அவர் சேர்த்து வைத்திருந்த பணம் எல்லாம் செலவாகிவிட்டது. ஜெயிலி லிருந்து விடுபட்டுத் திரும்பிவந்ததும் மறுபடி விடையூருக்குவர இஷ்டமில்லாமல் வேறு ஊருக்குப் போய் விட்டார். வெள்ளிமலை முதலியாருக்கு ஒரு வியாதி உண்டாகி இறந்துபோய்விட்டார். அவர் மனைவி

தொட்டிலிற் பிள்ளைக்கு நடக்கிறபிள்ளை நமன்.



முத்தம்மாளும், மகன் நெல்லையப்பமுதலியார் என்னும் சிறுவனும் அவர்களுக்குள்ள சுவற்ப சொத்தை வைத்துக்கொண்டு காலக்ஷேபம் செய்தார்கள்.

குற்றாலலிங்க முதலியார் வியாச்சியத்தில் வென்றபின், சுமார் பதினாறுவருஷகாலம் பிரபலமாக வாழ்ந்திருந்து, பின் இறந்து போனார். சொத்தைச் சேர்ப்பதில் வெகு சிரமப்பட்டதாக அடிக்கடி அவர் மகன் பொன்னம்பல முதலியாரிடம் சொல்லியிருந்தார். முழு விவரத்தையும் சொல்லவில்லை. இறப்பதற்கு சில நாளைக்குமுன் குற்றாலலிங்க முதலியார் மகனைப் பார்த்து 'என் சொத்தில் பெரும்பாகம் என் பெரிய தகப்பனார் சங்கர நமச்சிவாய முதலியா ருடையது. அவர் சந்ததியில்லாமல் போய்விட்டபடியால் அது நமக்குக் கிடைத்திருக்கிறது. இடையில், அவருக்கு ஒரு சுவீகாரம் நடந்ததுபோல் கொண்டாடி அந்த சொத்தை அபகரிக்க ஒருவர் யத்தனித்தார். நான் வழக்கிட்டு சொத்தை வரப்பற்றினேன். வழக்கு நடந்துக்கொண்டிருந்த காலத்தில் எவ்வளவோ சாமர்த்தியமாகப் பலவேலைகள் செய்தேன். நீ அந்தக்காலத்தில் சிறு பையன். அப்பா, எல்லாம் உன்னை உத்தேசித்துத்தான் நான் அவ்வளவெல்லாம் சிரமப்பட்டது. சொத்தை நீ வெகுஜாக்கிரதையாய்க் காப்பாற்றவேண்டும். இதுவரை உனக்கு காந்திமதி ஒரு பெண்மட்டும் இருக்கிறாள். சுவாமி கிருபையால் இனிமேலும் ஆண் மக்களும் பெண்மக்களும் குறைவில்லாமல் பிறக்கும். இந்தப் பக்கங்களிலெல்லாம் நமது சொத்து பெருத்த சொத்து. கௌரவமாய் சொத்தை ஆண்டு அனுபவித்து உன் குழந்தைகளுக்குச் சேர்த்துவை. குழந்தை காந்திமதியை யாராவது நல்ல மிட்டாதாராகப் பார்த்து விவாகம் செய்துவை" என்று சொன்னார். பொன்னம்பல முதலியாரும் தன் தந்தையின் வார்த்தையைக் கைப்பிடித்து கௌரவமாய் வாழ்ந்து வந்தார். வெகு பக்தி சிரத்தையுடன் க்ஷேத்திர யாத்திரை தீர்த்த யாத்திரையெல்லாம செய்துபார்த்தும், காந்திமதிக்குப்பின் வேறு குழந்தை ஒன்றும் பிறக்கவேயில்லை.

VI

முருகக்கடவுள் படைவீடுகளில் ஒன்றாகிய பழனி எனும் ஸ்தலத்தில பரதேசியார் ஒருவர் நோயாளிகளுக்கு வைத்தியம் செய்துகொண்டும் எல்லோருக்கும் நல்ல உபதேசம் செய்துகொண்டும், இருப்பதாய் வதந்தி பரவிற்று. அவருடைய சாந்தம், சீலம், தயை முதலிய குணங்களைப்பற்றியும் அவருடைய மேன்மையான உபதேசங்களைப்பற்றியும் தமிழ் நாடெங்கும் எல்லோரும் பேசத் தொடங்கினார்கள். அவர் பழனி வந்துசேர்ந்து சில வருஷங்களுக்கெல்லாம் விடையூர் வெள்ளிமலை முதலியார் மனைவி முத்தம்மாள் அவள் மகன் நெல்லையப்ப முதலியை அழைத்துக்கொண்டு யாத்திரையாக அவ்வூர் வந்துசேர்ந்தாள். வந்த மறுநாள் நெல்லையப்ப முதலிக்குச் சுரம்கண்டது. முத்தம்மாள் இறங்கியிருந்த வீட்டிலுள்ளவர் பரதேசியாரைப்பற்றிச்சொல்லி அவரிடம்நெல்லையப்ப முதலிக்கு வைத்தியம் செய்யும்படி சொன்னார்கள். முத்தம்மாள், அவர்கள் சொன்னபடி பரதேசியார் தங்கியிருக்கும் மடத்தை விசாரித்துத் தெரிந்துகொண்டு மகனை அங்கே அழைத்துச்சென்றாள். அவர்கள் போனசமயம் பரதேசியார் வெளியே போயிருந்தபடியால் அவரைப் பார்க்க முடியவில்லை. அவர் வரும் வரையில் அங்கேயே இருந்து பார்த்துவிட்டுத் திரும்பலாம் என்று எண்ணி முத்தம்மாள் அந்த மடத்திலேயே அமர்ந்தாள். பரதேசியாரைப் பார்க்க வந்த மற்றஜனங்கள் எல்லோரும் ஒருவர்ஒருவராகப் போய்விட்டார்கள். மத்தியானம் ஒரு மணி சுமாருக்கு பரதேசியார் வந்துசேர்ந்தார். வந்து உட்கார்ந்ததும், முத்தம்மாள் அவரடிகளில் பணிந்து எழுந்தாள். அவர் பரமசாந்தராய் முகத்தில் அன்பு, பொறுமை, கோபமின்மை இவைகள் விளங்கிய திவ்ய தேஜஸோடு அமர்ந்திருந்தார். நரைத்து நீண்டு வளர்ந்த தாடியும் முடியும் பூண்டிருந்தார். முத்தம்மாள் வணங்கி எழுந்ததும், பரதேசியார் அவளைப் பார்த்து "அம்மா நீ எந்த ஊர், பையனுக்கு என்ன உடம்பு?" என்று கேட்டார். அவரைப் பார்த்ததும் சிறிது அதிசயித்த முத்தம்மாள் தன் பரபரப்பை அடக்கிக்கொண்டு "சுவாமீ நான் விடையூர். யாத்திரைக்குவந்த இவ்வூரில் என் ஒரே மகனுக்கு சுரம்கண்டு என்ன செய்கிறது என்று தெரியாமல் தவிக்கிறேன்" என்றாள். பரதேசியார் "விடையூரா?" என்று கேட்டு அதுவரை கவனித்துப்பாராத அவள் முகத்

தொட்டியப்பேய் சுடுகாடுமட்டும்.

தை உற்று நோக்கவும் முத்தம்மாள் பரதேசியாரைப் பார்த்து "அப்பா!" வென்ருள். பரதேசியாரும் "குழந்தாய் முத்தம்மா!" என்று சொல்லி அவளைத் தழுவிக்கொண்டார்.

பிறகு முத்தம்மாள் தன் புருஷன் காலஞ்சென்றதையும், தான் வேறு துணையின்றியிருப்பதையும் சொல்லி, சிறுவயதில் தான் இருந்த நிலைமையையும் இப்போது படும் துன்பத்தையும் பலவிதமாய் எடுத்துச்சொன்னுள். பரதேசியாராகிய சித்தி விநாயக முதலியார் அவளைப் பார்த்து "அம்மா இதற்கெல்லாம் இவ்வளவு தூரம் வருத்தப்படலாமா? நிதானித்து யோசிக்குமிடத்து நமக்கு வரும் துன்பங்களெல்லாம் ஏதோ ஒரு நன்மையைக் கருதி விதிக்கப்பட்டவைகள் என விளங்கும் ஈசனது சோதனைகளையெல்லாம் பொறுமையுடன் ஏற்றுக்கொள்வதுதான் நாம் செய்யக் கூடியதுஎன்று சொல்லி ஆற்றினுர். தன்மடத்திலேயே அவர்களை சாப்பாடுச்செய்ய சொல்லி நெல்லையப்ப முதலிக்கு வேண்டிய மருந்தையும் கொடுத்தார்.

எல்லோரும் சாப்பிட்டானபின், முத்தம்மாள் தன் தகப்பனுரைப்பார்த்து அவர் விருத்தாந்தந்தை விஸ்தாரமாகக் கேட்டாள். அவர் "விஸ்தாரமாய் சொல்ல எனக்கு மனமில்லை; சொலலவேண்டிய அவசியமுமில்லை. நான் விடையூரைவிட்டுப் போனதும் ஊருராய் சென்றுகோயில்களில்கிடைத்ததைஉண்டுதெருத் திண்ணைகளில்படுத்துத் திரிந்தேன். பல க்ஷேத்திரங்களுக்குச் சென்று சுவாமி தரிசனம் செய்தேன். ஸ்ரீ காளஸ்தி க்ஷேத்திரத்தில் ஈசனருளால் ஒரு பெரியவரைப்பார்த்தேன். அவரும் தன் மடததில் என்னை வைத்துக்கொண்டு எனக்குக் கொஞ்சம் வைத்தியம் சொல்லிக் கொடுததார். அங்கு மூன்று வருஷகாலம் இருந்து பிறகு மறுபடியும் பல ஸதலங்களுக்குச் சென்று காசிமாநகரை யடைந்தேன். தமிழ் நாட்டிலிருந்து அங்குபோய் வசிக்கும் மகான் ஒருவருடைய கிருபை எனக்குக கிடைத்தது. அவரிடம் பல சமய நுட்பங்களைத் தெரிந்து கொண்டு அவருக்குப் பணிவிடை செய்து கொண்டிருந்தேன. சில வருஷங்களானபின் அவர் என்னைப பாாத்து, "உனக்கு இந்த ஜன்மத்தில இவ்வளவுதான்." என்று சொலலி மறுபடி தமிழநாட்டிறகுத திருமபிப் போகும்படி எனக்குக் கட்டளையிட்டார். தமிழ்நாட்டிற்குத் திரும்பிவந்தது முதல், மூன்று வருஷ காலமாக நான் இவ்வூரிலேயே இருக்கிறேன். கடவுளது அளப்பரிய அருளால் நானும்சிவானுபூதி பெற்ற மகான்கள் அனுஷ்டித்த நெறியில் ஒரு சிறிய கோடியைக் கண்டறியலானேன். சொத்தையும் இல்லாளையும் காட்டி மறைத்ததெல்லாம் என்னை உலகவின்பங்களில் அழுந்தித்தத்தளித்து முழுகிப்போகாமல் கைதூக்குவதற்காகவே என்று நன்ருய்த் தெரிகிறது. அம்மா உனக்கும் இப்போது நீ படும் துன்பங்களெல்லாம் உண்மையில் அழிவில்லாத பெரும் நன்மைக்காகவே பகவானுல் அனுப்பப்பட்டவைகள் என்று உறுதியாய் நம்பு" என்று சொல்லி முடித்தார்.

வெகுசீக்கிரத்தில் நெல்லையப்ப முதலிக்கு உடம்பு குணப்பட்டது. முத்தம்மாள் தகப்பனுரைத் தன்னேடு விடையூருக்கு வரும்படி வேண்டினுள். சித்திவிநாயக முதலியார் முதலில் அதற்குச் சம்மதிக்கவில்லை. பிறகு மகளும் பேரனும் வெகுவாய்க் கட்டாயப்படுத்த, விடையூருக்கு வந்து சில காலம் இருந்துவிட்டு பிற்பாடு மறுபடி பழனிக்கே திரும்பி வந்துவிடுவதாக ஒப்புக்கொண்டார்.

V

சித்திவிநாயகர் மறுபடி விடையூர் வந்து சேர்ந்த சில நாள்வரை அவர் இன்னுரென்று அவ்வூராருக்கு வெளியாகவில்லை. யாரோ ஒரு பரதேசியார் முத்தம்மாள் வீட்டிற்கு வந்திருப்பதாகமட்டும் பேசிக்கொண்டார்கள். அவர் வந்த சிலநாளைக்குள் யாரோ ஒரு பெரியவர் வந்திருக்கும் விஷயம் கேள்விப்பட்டு பொன்னம்பல முதலியார் அவரைப் பார்க்க முத்தம்மாள் வீட்டிற்குச் சென்ருர். பணிந்து நின்ற பொன்னம்பல முதலியாரைஉட்காரச்சொல்லி சித்திவிநாயக முதலியார் "அப்பா நீ இவ்வூரில் எந்த வீடு? உன் தகப்பனுர் யார்"? எனறு கேட்டார்.

"சுவாமி நான் அடுத்த தெரு, என் தகப்பனுர் குற்ருலலிங்க முதலியார் சில வருஷங்களுககுமுன் காலஞ்சென்ருர் என்று பொன்னமபல முதலியார் பதில் சொன்னுர். இதைக்கேட்டதும சித்திவிநாயக முதலியாருககு வியவகாரங்களின் ஞாபகம் சிறிதுவர அப்பியாசபலத்தால் மனதை அமர்த்திக்கொண்டு,

தொட்டிலும் ஆட்டிப் பிள்ளையும் கிள்ளுவாள்.



"அப்படியா! உன்னைப் பார்த்தது எனக்கு வெகு சந்தோஷம். உனக்கு எத்தனை குழந்தைகள்?" என்ருர்.

"என் பெரியவர்கள் புண்ணிய பலத்தால் ஒரு பெண் இருக்கிருள். தங்களைப் போன்ற பெரியவர்கள் ஆசீர்வாதத்தால் ஆண்சந்ததி உண்டாகவேண்டும்"

"உன் இஷ்டப்படியே உனக்கு ஆண்சந்ததி உண்டாகும்படி கடவுள் கிருபைசெய்வார்" என்ருர் சித்திவிநாயக முதலியார்.

பிறகு சிறிது நேரம் மதவிஷயங்களைக் குறித்துப் பேசின பிறகு, பொன்னம்பல முதலியார் விடைபெற்றுச் சென்ருர்.

பரதேசியார் வந்தபின், சுமார் ஒரு மாதமானதும் அவர் முத்தம்மாள் தகப்பனுரான சித்திவிநாயக முதலியார் என்ற சமாசாரம் ஊரில் பரவிற்று. அவர்பேரில் குற்ருலலிங்க முதலியார் பிராதுசெய்து ஜயித்து அவர் சொத்தை யெல்லாம் தன் வசப்படுத்திக்கொண்ட விவரங்களை யெல்லாம் ஊராரில் கிழவர்களான சிலர் மற்றவர்களுக்கு விஸ்தாரமாயும் விசித்திர கற்பனைகளோடும் வர்ணனைகளோடும் எடுத்துச்சொன்னுர்கள். ஊரார்கள் அந்தப் பழைய வழக்கின் சாராம்சத்தைப் பற்றித் தங்கள் தங்கள் அபிப்பிராயங்களைக் கூசாமல் வெளியிடலானுர்கள். அவர்களில் பலர் உண்மையாகவே சித்திவிநாயக முதலியார் வசம் சுவீகார சம்மதிப் பத்திரம் ஒன்று இருந்ததென்றும் கருப்பண பிள்ளை உதவியால் குற்ருலலிங்க முதலியார் அந்தப்பத்திரத்தை அபகரித்துவிட்டாரென்றும் சொல்லிக் கொண்டார்கள்.

பொன்னம்பல முதலியார், ஊரில் பெரிய முதலாளி யானபடியால் ஒருவரும் அவரிடம் நேரில் சம்மதிப்பத்திர விஷயத்தைப்பற்றிய அபிப்பிராயத்தை வெளிப்படுத்தவில்லை. இருந்தாலும் ஒரு வார்த்தையும் அரை வார்ததையுமாக எல்லாப் பேச்சும் அவர் காதுறகு எட்டிற்று. பொன்னம்பல முதலியாருக்கு இது விஷயத்தில் உண்மையைத தெரிநதுகொள்ள வேண்டும் என்ற எண்ணம் உதிததது. ஒரு காலத்திலும் தன் தகப்பனுர் மானககேடான காரியம் ஒன்றும் செயதிருக்கமாட்டார் என்று அவர் பூழுமனதுடன் நம்பியிருந்தார். இருந்தாலும், பலர் பலவிதமாகப் பேசுவதால் உண்மையைத் துருவிப்பார்த்து தகப்பனுர் குற்றமற்றவர் என்பதை மனத்தில் எள்ளளவேனும் சந்தேகமில்லாமல் ரூபித்துக்கொள்ள வேண்டுமென்று அவருக்குப்பட்டது. தன் பேழைப் பெட்டிக்குள் ஒரு மூலையிலிருந்த சுவீகார வழக்கு சம்பந்தமான காகிதங்களை எடுத்துப் படித்துப்பார்த்தார். அவைகளிலிருந்து, தன்னுடைய பெரிய பாட்டனுர் சங்கர நமச்சிவாய முதலிக்கு அவர் மனைவி உமையாயி, சித்திவினுயக முதலியாரை சுவீகாரம் செய்துகொண்டதாகவும், அந்த சுவீகாரம் தனக்கு சம்மதம் என்று குறிப்பிட்டு தன் பாட்டனுர் ஈசான மூர்த்தி முதலியார் ஒரு சுவீகார சம்மதிப் பத்திரம் எழுதிக்கொடுத்ததாகவும், சித்திவிநாயக முதலியார் கக்ஷியாடி சுவீகார பத்திரம் தன் வசம் இருப்பதாகச் சொல்லியிருந்தும் கொண்டுவராமல் வாதி தரப்பில் மோசமாக அபகரித்துவிட்டதாகக் குறிப்பிட்டுஅதைக்கோர்ட்டார் ஏற்றுக்கொள்ளாமல் சித்திவினுயக முதலியாருக்கு விரோதமாகத் தீர்மானம்செய்த விவரம் தெரிந்துகொண்டார். தீர்ப்பில் "பிரதிவாதி ஏதோ சம்மதிப் பத்திரம் ஒன்று ஏற்பட்டதாக சொல்லுகிருர். அது உண்மையானுல் வாதி வழக்கை இழகக வேண்டியதுதான். பத்திரம் மட்டும் வெளிக்கு வரவிலலை. வாதி அபகரித்திருக்கலாம் எனறு குறிப்பாய்ச் சொல்லப்படுகிறது. அவ்விதம் வாதி அபகரித்திருக்கக்கூடும் என்று முடிவுசெய்ய, போதுமான காரணம் ஒன்றுமே யில்லை" என்று எழுதியிருந்ததையும் ஹைகோர்ட்டுத் தீர்ப்பில் "சுவீகார சம்மதிப் பத்திர விஷயமாய் இந்த வழக்கை விசாரித்த நிபுணரான நியாயாதிபதி சொல்லியிருககிறது சரிதான்" என்று எழுதியிருந்ததையும் பொன்னம்பல முதலியார் படித்துப் பார்ததார். இவைகளிலிருந்து, தன் தகப்பனுர் செய்த வியாச்சியத்தில சிததிவினுயக முதலியார் சம்மதப்பததிரத்தைக் குறிததுச்செயதககூிகளெலலாம் பொய் என்று மனதில தீர்மானித்தார். அக்காலத்தில் பொய் வாதங்கள் புரிநததற்குப் பரிகாரமாகவே சித்திவினுயக முதலியாா யாரோ ஒரு பெரியவரை வழிபட்டு நலல வழியில் திரும்பியதாகவும் ஊகித்தார். இது சம்பநதமாக தன் தகப்பனுர் தன்னிடம சொன்ன வார்த்தைகளையும நினைத்துக்கொண்

தொட்டிலிற் பழக்கம் சுடுகாடுமட்டும்.

டார். அவர் வெகு சிரமப்பட்டு வழக்கை ஜயித்ததாகச்சொன்னது வீண்எதிர்வாதங்களையெல்லாம் பொய் என்று காட்டுவதில் சிரமம் ஏற்பட்டதாகச் சொன்னதாக அருத்தம் செய்தார்.

நாளாக நாளாக ஊரார் முன்னிலும் பலமாக சுவீகாரப் பத்திரத்திரத்தைப்பற்றி தாங்கள் கொண்ட கருத்தை வெளியிட ஆரம்பித்தார்கள். ஒருவிதமாகத் தீர்மானத்திற்கு வந்தபொன்னம்பல முதலியார் மனதில் ஊரார் பேசிக்கொள்ளும் விஷயம் மறுபடி உறுத்த ஆரம்பித்தது. சுவீகார வியாஜ்ய காலத்தில் அவர் சிறுபிள்ளையாக இருந்தாலும் கருப்பணபிள்ளை தன் தகப்பனுருக்குக் கோர்ட்டு நடவடிக்கைகளில் உதவி புரிந்துவந்தது நன்ருக ஞாபகமிருந்தது. கருப்பணபிள்ளை யோக்கியதை பொன்னம்பல முதலியாருக்கு நன்ருகத் தெரியுமாதலால் ஒருக்கால் தன் தகப்பனுருக்குத் தெரியாமல் கருப்பணபிள்ளை ஏதாவது சேஷ்டை செய்திருப்பாரோ என்று யோசிக்கத் தொடங்கினர். வெகு நாளுக்கு முன் நடந்த விஷயமானதாலும், சித்திவிநாயகமுதலியார் வயதுமுதிர்ந்து ஞானமார்க்கத்தில் அப்பியாசம் செய்துகொண்டிருப்பவராதலாலும் அவரிடமேநேரில் இதைப்பற்றிக்கேட்டுப்பார்க்கலாமென்று தீர்மானித்தார். ஒருநாள் பொன்னம்பலமுதலியார்சித்திவிநாயகமுதலியாரிடம் சென்று அவரைப்பார்த்து "சுவாமி! நான் தங்களிடம் முதலில் வந்தபோது தாங்கள் இன்னுர் என்று தெரிந்துகொள்ளவில்லை. பிற்பாடுதான் தங்களைப்பற்றி எல்லா விவரங்களும் தெரிந்துகொண்டேன்". என் தகப்பனுர் தங்கள்மீபரில் வழக்கிட்ட சங்கதியும் தெரிந்துகொண்டேன். அப்போது அவர் தங்களிடம் ஏதாவது அபசாரப்பட்டிருந்தாலும் பெரியவராகிய தாங்கள் அவரை மன்னிக்கவேண்டும். இந்த விஷயங்களைப்பற்றி நான் பேசுவது தங்களுக்கு அதிருப்தியாய் இருந்தாலும் இருக்கலாம். இரண்டொரு விஷயங்கள் தங்களைக் கேட்டுத் தெரிந்துகொள்ள வேண்டுமென்று எனக்கு ஆசையாக இருக்கிறது. தங்கள் மனதுக்குச் சம்மதமானுல கேட்டுத் தெரிந்துகொள்ளுகிறேன்'' என்ருர்.

சித்திவிநாயக முதலியார் ''அவனன்றி ஓரணுவும் அசையாது'' என்ற வசனப்படி எல்லாவற்றையும் நடத்திவைப்பவர் சர்வேசுவரன். உன் தகப்பனுர் என்பேரில் வழக்குச் செய்தது என் நன்மைக்காகவே என்று நான் நிச்சயமாகவே நம்புகிறேன். இதுவிஷயமாய் எனக்கு ஒரு காலத்தில் இருந்த மனோவிகாரமெல்லாம் முற்றிலும் அடங்கிப் போய்விட்டது. இவைகளையெல்லாம்பற்றிப் பேசுவது உபயோகமற்ற வீண் வார்த்தை என்பதைத் தவிர அதில் எனக்கு மனக்கசப்பு ஒன்றுமேயில்லை'' என்ருர்.

பொன்னம்பலமுதலியார் சிறிது நிதானித்து ''தாங்கள் வசமிருந்த சம்மதிப் பத்திரம் சமயத்திற்கு உதவாமல் போனதைப்பற்றிப் பலர் பலவிதமாகப் பேசுகிருர்கள். அதுதான் எனக்குச் சிறிது மனத்துன்பம் உண்டாக்குகிறது'' என்ருர்.

"என்னுடைய நன்மைக்காகவேதான் அது எனக்கு உபயோகப்படாமல் போய்விட்டது"

"அந்தப் பத்திர சம்பந்தமாய் என் தகப்பனுர் ஒன்றும் பிசகான காரியம் செய்திருக்கமாட்டாரென்று நான் உறுதியாய் நம்புகிறேன். தங்களுக்கு அந்த விஷயத்தில் அவரிடம் ஏதாவது சந்தேகம் இருந்தாலும் அவரை மன்னிக்கவேண்டும்."

"நான் முன்னமேயே சொன்னேனே. உன் தகப்பனுர் செய்ததெல்லாம் என் நன்மைக்கே இடமாயிருந்தது என்பது என் மனப்பூர்வமான நம்பிக்கை."

இதற்குமேல் வெளிப்படையாக கேள்விகள் கேட்பது சரியல்லவென்றும், என்ன கேட்டாலும் வேறு விதமான பதில் கிடைக்காதென்றும் பொன்னம்பல முதலியாருக்குப்பட்டது. பிறகு சிறிதுநேரம் வேறுவிஷயங்களைப்பற்றிப் பேசிவிட்டு விடைபெற்றுச் சென்ருர். சித்திவிநாயக முதலியார் சொன்ன வார்த்தைகளிலிருந்து ஸ்பஷ்டமாய் ஒன்றும் புலப்படாவிட்டாலும் அவர் பொய் வாதம் செய்து அதற்கு ஒரு பரிகாரமாக சிரமப்பட்டு நல்ல நெறியில் நடந்துவருகிருரென்று தான் கொண்டிருந்த எண்ணம் ஸ்திரமாகவும் சித்திவிநாயகமுதலியார் வார்த்தைகள் இடங்கொடுத்தது. அதிலிருந்து தன் தீர்மானம் சரியென்று பொன்னம்பல முதலியார் மனதில் நிச்சயம் செய்துகொண்டார்.





## VI

காந்திமதி விவாகத்திற்கேற்ற பருவம் அடைந்தாள். பொன்னம்பலமுதலியார் தகுந்த நாயகனைப் பார்ப்பதற்காக தமிழ்நாட்டிலுள்ள பெரிய மிராசுதார்கள், மிட்டாதார்கள், பண்ணையார்கள் இவர்கள் குடும்பங்கள் ஒன்று தவருமல் விசாரித்தார். காந்திமதியும் ஒரு பெரிய பண்ணையாருடைய ஒரே மகளானதால் அவளை மணக்க ஆசையுள்ளவர்கள் அனேகம் பேர் இருந்தார்கள். அவர்களுள் ஆஸ்தியிலும் வயதிலும், குணத்திலும், குலத்திலும், மேன்மையுள்ளவர்களைத் தேர்ந்து தெரிவது பொன்னம்பல முதலியாருக்கு சிரமமாக இருந்தது. மணமகன் குணங்களோடு ஜாதகப் பொருத்தம், சகுனப் பொருத்தம் முதலியவைகளும் அமையவேண்டியிருந்ததால் தகுந்தநாயகனைத் தெரிந்து நிச்சயம் செய்வது மேலும் அதிக சிரமமாக இருந்தது. நன்ருய்ப் பரிசீலனை செய்து பொன்னம்பல முதலியார் முத்துக்கோட்டை மிட்டாதார் கனக சபாபதி முதலியார் மகன் சோமசுந்தர முதலியாரே தன் மகளுக்கு எல்லாவிதத்திலும் ஏற்ற புருஷன் என்று தீர்மானித்தார். மிட்டாதாருக்கும் பொன்னம்பல முதலியாருடன் சம்பந்தம் செய்யக்கூடிய பாக்கியம் கிடைத்தது வெகு சந்தோஷமாகவே இருந்தது.

கல்யாணம் நிச்சயமாய் முகூர்த்தமும் ஏற்படுத்தப்பட்டது. கல்யாணத்தை வெகு சிறப்பாகச் செய்ய எண்ணி முதலியார் அதற்கு வேண்டிய யத்தனங்களை ஆரம்பித்தார். சாமான்கள் ஏராளமாய்ச் சேகரிக்கப்பட்டன. தமிழ் நாட்டிலுள்ள கீர்த்திபெற்ற நாகசுர வாத்தியக்காரர்கள் சங்கீத வித்துவான்கள், தாசிகள், விகடகவிகள் ஜாலவித்தைக்காரர்கள் எல்லாரும் கல்யாணத்திற்கு வந்து சிறப்பிக்கும்படி ஏற்பாடுசெய்தார். அஷ்டாவதனிகள் சிலருக்கும் தமிழ்ப்புலவர்கள் பலருக்கும் அழைப்புப் பத்திரிகைகள் அனுப்பினுர். விடையூரைச் சுற்றியுள்ள ஊர்களிலுள்ளவர்கள் எல்லாரும் முகூர்த்தத்திற்கு நாளெண்ணிக் கொண்டிருந்தார்கள்.

தன் பெண்ணிற்கு விவாகம் நிச்சயமாய் முகூர்த்தம் ஏற்படுத்தப்பட்டிருக்கும் விஷயத்தை சித்தி விநாயக முதலியாரிடம் சொல்ல எண்ணி பொன்னம்பல முதலியார் ஒருநாள் முத்தம்மாள் வீட்டிற்குச் சென்ருர். எப்போதும் வீட்டுத்திண்ணையிலேயே உட்கார்ந்திருக்கும் சித்திவிநாயக முதலியார் அங்கே காணப்படாததால் பொன்னம்பல முதலியார் சிறிது நேரம் காத்திருந்து பார்த்துவிட்டுப் போகலாமென்று நினைத்துத் திண்ணையில் உட்கார்ந்தார். உள்ளே முத்தம்மாளோடு அடுத்த வீட்டுக் கிழவி அழகம்மாள் பேசிக்கொண்டிருந்தாள். அவர்கள் வார்த்தைகளிலிருந்து தன் வீட்டுக் கல்யாணத்தைப்பற்றித்தான் அவர்கள் பேசிக்கொண்டிருந்தார்கள் என்பது தெரிந்ததும் முதலியார் அவர்கள் வார்த்தைகளைக் கொஞ்சம் கவனமாகக் கேட்டார். கல்யாணத்திற்காகச் செய்யப்பட்ட ஏற்பாடுகளைப்பற்றி விஸ்தாரமாய்ப் பேசினுர்கள். பிறகு முத்தம்மாள் ''நல்ல பிரபு. அவருக்கு ஒரேபெண். எவ்வளவோ சிரமப்பட்டு மனத்திற்குப் பிடித்த இடத்தில் வரன் கிடைத்திருக்கிறது. கல்யாணம் நன்ருய் நடத்துவதற்கென்ன குறை'' என்ருள்.

அழகம்மாள் ''நீசொன்னது சரிதான். ஆனுல் பிள்ளை பார்ப்பதற்குமட்டும் ஊரூராய் அலைந்து யாரோ முன்பின் தெரியாத மிட்டாதாரனைப் பிடித்திருக்கவேண்டாம். தங்கம்போல உன் பிள்ளை நெல்லையப்பனுக்குக் கொடுத்திருக்கலாம்'' என்ருர்.

''நீங்கள் சொல்லுகிற தெல்லாம் என்ன நினைக்கக்கூடிய காரியமா? அவர்கள் ஸ்திதிக்கும் எங்கள் ஸ்திதிக்கும் எவ்வளவுதூரம்?''

''நீசொல்லுவது இந்தக்காலத்திற்குசரியாய்த் தானிருக்கும். ஆனுலும் எனக்குப் பிடிக்கவேயில்லை. நெல்லையப்பன் எதில் குறைந்தவன்? நல்லகுலம், ஒரேஊர், புத்திசாலி என்னவோ ஸ்திதியில்லையாம் இது ஒரு காரணமாகுமா?'' என்ருள் அழகம்மாள்.

''அதைப்பற்றி என்ன பேச்சு. இந்தக்காலத்தில் எல்லாரும் சொத்தைத்தான் முக்கியமாய் கவனிக்கிருர்கள். உங்களுக்காகவென்று வேறு விதமாய் நடக்கமுடியுமா!'' என்ருள் முத்தம்மாள்.

எனக்காக ஒருவர் ஒன்றைச்செய்யவேண்டுமென்று சொல்லவரவில்லை. நெல்லையப்பனும் காந்திமதியும் பரஸ்பரம் எவ்வளோ அன்பாக இருக்கிறதற்கு அவளை அவனுக்கே கொடுத்திருந்தால் நன்ருய் இருக்கும் என்று என் மனதில் பட்டதைச் சொன்னேன். ஆனுல் ஒரு

வேளை வேறு விதத்தில் ஏதாவது இடஞ்சல் ஏற்பட்டதோ என்னவோ ஜாதகம் வாங்கிப் பார்த்தார்களா? என்று கேட்டாள் அழகம்மாள்.

முத்தம்மாள் “இதென்ன மறுபடியும் இப்படிக் கேட்கிறீர்களே? அவர்கள்வந்து ஜாதகம் கேட்கும்படியான அந்தஸ்து எங்களுக்கு இருக்கிறதா ;” என்றாள்.

“அந்தஸ்தில் என்ன குறை? சொத்தொன்று தவிர வேறு எதில்நெல்லையப்பன் தாழ்ந்தவன். சொத்தும் பார்க்கப்போனால் பொன்னம்பல முதலியுடையது; எல்லாம் நெல்லையப்பனைச் சேரவேண்டியதுதான். என்னவோ வழக்குப் போட்டானாம். இருந்த பத்திரம் காணவில்லையாம். எப்படியோ சொத்துப் போய்விட்டால் சம்பந்தத்திற்கே யோக்கியதை யில்லாமல் போய்விடுமா” என்றாள் அழகம்மாள்.

இந்த வார்த்தைகள் எல்லாம் பொன்னம்பல முதலியார் மனதில் தைத்தன. சித்திவிநாயக முதலியாரை வேறு சமயம் பார்த்துக்கொள்ளலாமென்று திண்ணையைவிட்டு எழுந்து வீடு போய்ச்சேர்ந்தார்.

## VII

விடையூர் பெரியபண்ணையார் வீட்டுக்கல்பாணம் நெருங்கிவிட்டது. கொட்டகை போடவும் மற்றும் அவசியமான அலங்காரங்கள் செய்யவும் எத்தனங்கள் ஆரம்பிக்கப்பட்டன. கல்யாணத்திற்கு பல ஊர்களிலிருந்து அநேகர் வருவார்களென்று எதிர்பார்த்து பொன்னம்பலமுதலியார் தன்வீட்டிற்குப் பக்கத்திலுள்ள வீடுகளில் எட்டுவீடுகளைக்காலிசெய்ய ஏற்பாடுகள் செய்திருந்தார். விடையூரிலும் பக்கத்திலுள்ள கிராமங்களிலும் எங்குபார்த்தாலும் இந்தக் கல்யாணத்தைப் பற்றித்தான் பேச்சு.

அப்போது திருநெல்வேலி கோர்ட்டில் பொன்னம்பல முதலியாருக்கும் அடுத்த கிராமப்பண்ணையார் ஒருவருக்கும், ஒருவழக்கு நடந்துகொண்டிருந்தது. அதற்கு அவசியமான சிலமுக்கியமான தஸ்தவேஜுகளை உடனே தேடிப்பார்த்து அனுப்பவேண்டும் என்று பொன்னம்பல முதலியாருக்கு அவர்வக்கீலிடமிருந்து ஒரு தந்திவந்தது. அந்த தஸ்தவேஜுகள் பழையகாலத்தவைகள். அவைகள் வைத்திருக்கும் இடம் கூட தெளிவாய் ஞாபகம் இல்லை. வழக்கு பெரிய வழக்கானபடியாலும், வக்கீல் அவைகளை உடனே எடுத்தனுப்பும்படி தந்திகொடுத்திருப்பதாலும் அந்தக்காரியத்தை உடனே முடிக்க வேண்டியதாயிருந்தது. பொன்னம்பல முதலியார் வழக்கமாய் தஸ்தவேஜுகள் வைத்திருக்கும் பெட்டிகளில் பார்த்தார்; அகப்படவில்லை. பிறகு உபயோகமில்லாத பழைய தஸ்தவேஜுகள் கடிதங்கள் இவைகள் வைத்திருக்கும் பெட்டிகளில் தேடினார். அவைகளிலும் காணவில்லை. தந்தியில் குறிப்பிட்டிருந்த தஸ்தவேஜுகள் 20, 30, வருஷங்களுக்கு முற்பட்டவைகள். பெட்டிகளெல்லாம் காணாமல்போகவும் சற்றுயோசித்தார். பெரிய பேழையில் ஒரு மூலையில் தன் தகப்பனார் சில தஸ்தவேஜுகளைக் கட்டிவைத்திருந்தது ஞாபகத்திற்கு வந்தது. அந்தப்பேழையை சமீபத்தில் திறந்ததேயில்லை. ஒருக்கால் தனக்குவேண்டிய தஸ்தவேஜுகள் அதில் இருக்கலாம் என்று எண்ணி பொன்னம்பல முதலியார் வெகு சிரமப்படுப் பேழையைத் திறந்து அதில் ஒரு ஓரத்தில் இருந்த துணிப்பையையெடுத்தார். அழுக்கடைந்திருந்த அந்தப் பையைத்தட்டி பிரித்தார். உள்ளே அனேகபழைய தஸ்தவேஜுகள்இருந்தன. தமக்குவேண்டிய தஸ்தவேஜுகள் இவைதான் என்பது சுலபமாய்த் தெரியாததால் ஒவ்வொன்றையும் முழுதும் படித்துப்பார்த்து பொறுக்க வேண்டியதாயிற்று. முதலியாரும் சோம்பலில்லாமல் ஒவ்வொரு காகிதமாய்ப் பிரித்து ஒரு எழுத்துவிடாமல் படித்தார். வக்கீல் குறிப்பிட்ட தஸ்தவேஜுகள் சில அகப்பட்டன. மற்றவைகளையும் கண்டுபிடிப்பதற்காக மற்றக் காகிதங்களையும் படித்துக்கொண்டே போனார். கசக்கி மடிக்கப்பட்ட காகிதம் ஒன்றை எடுத்தார் அதையும் பிரித்து சாவதானமாகப்படிக்க ஆரம்பித்தார். இரண்டு மூன்று வரிகள் படித்ததும்பொன்னம்பலமுதலியார் பிரமித்துசற்று நேரம் ஒன்றுந்தோன்றாமல் அமர்ந்துவிட்டார். காகிதம் கையிலிருந்து கீழேவிழுந்தது. அதை எடுத்து முழுதும் கவனமாய்ப் படித்தார். மூன்றும் முறையும் அதில் அடியில்கண்டபடி எழுதியிருந்ததைப் படித்தார்.

“ஆயிரத்து நாற்பத்து மூன்றும் ஆண்டு
“ஆவணிமீ 23-ம் தேதி விடையூரி லிருக்கும்
“நெல்லையப்ப முதலியார் மூத்தகுமாரர் காலஞ்
“சென்ற சங்கரநமச்சிவாய முதலியாரிட பாரி
“உமையாயிக்கு அவ்வூர் மேற்படி நெல்லையப்ப
“முதலியார் இளையகுமாரர் ஈசானமூர்த்தி முத
“லியார் எழுதிக்கொடுத்த சுவீகார சம்மதிப்
“பத்திரம் என்னவென்றால்: தங்கள் புருஷ
“னும் என்னுடைய தமையனுருமாகிய சங்கர
“நமச்சிவாய முதலியார் சந்ததியில்லாமலே
“காலஞ்சென்று போய்விட்டதனாலே அவர்
“களுக்கு நல்லகதி கிடைப்பதற்கும் அவர்கள்
“வம்சம் விருத்தியாவதற்கும் அவருக்கு நமது
“இனத்தாருள் ஒரு நல்லபையனைத் தத்து எடு
“த்துவைப்பது அவசியமானபடியால் தாங்கள்
“நமது இனத்தாரான விருத்தாசல முதலியார்
“குமாரன் சித்திவிநாயகம் என்கிற பையனை
“சுவீகாரம் செய்துகொள்வதில் எனக்கு ஒரு
“ஆக்ஷேபனையுமில்லை யென்பதையும் அந்தக்
“காரியம் எனக்கு சர்வ சம்மதம் என்பதை
“யும் குறிப்பிட்டு இந்த சம்மதிப் பத்திரம்
“தங்களுக்கு மனப்பூர்வமாக எழுதிக் கொடுத்
“திருக்கிறேன்.”

ஈசானமூர்த்தி முதலி.”

தஸ்தவேஜின் எழுத்துக்களின் அமைப்பையும் கையொப்பத்தையும் பொன்னம்பல முதலியார் கவனித்துப் பார்த்தார். மற்ற தஸ்தவேஜுகளிலுள்ள ஈசானமூர்த்தி முதலியார் கையெழுத்தை முழுவதும் ஒத்திருந்தது.

தன் கையில் அகஸ்மாத்தாய் அகப்பட்ட பத்திரம் சித்திவிநாயக முதலியாரிடமிருந்து காணமற்போன பத்திரம்தான் என்று பொன்னம்பல முதலியாருக்குப் புலப்பட்டது. தன் தகப்பனார்தாம், வழக்கில் தாம் அநுகூல மடைவதற்காக எவ்விதமோ அபகரித்திருக்க வேண்டுமென்பதும் அப்போதே அவருக்குவிளங்கிற்று. குற்றாலலிங்க முதலியார் எவ்வளவோ சாமார்த்தியமாகப் பல வேலைகள்செய்து சிரமப்பட்டுச் சொத்துச் சேர்த்ததாகச் சாகும் காலத்தில் சொன்ன வார்த்தைகளின் உண்மையான உட்கருத்து அவருக்குத் தெளிவாக விளங்கிற்று. சித்திவிநாயக முதலியாரும் அவர் பெண் முதலியவர்களும் சென்ற இருபது வருஷங்களுக்கு மேலாக அனுபவிக்கும் துன்பங்களையும் அவர்களைச் சேரவேண்டிய ஆஸ்தியைத் திருடி அபகரித்துத் தானும் தன் குடும்பத்தாரும் மேன்மையாக வாழ்ந்துவருவதையும் நினைக்க வருத்தம் மேலிட்டது. இந்த உண்மை இதுவரை தெரியாம லிருந்தபோதிலும், தான் மோசடியாகக்கவரப்பட்ட சொத்தை வெகுகாலம் அனுபவித்துவந்தது வெளியானதும் இயற்கையாக நல்லகுணமுள்ள பொன்னம்பல முதலியார் உள்ளம் துடிதுடித்தது. தனக்கும் தெரியாமல் தன்னைச்சூழ்ந்த கொடும் வினையை எவ்விதம் நீக்கிக்கொள்வது என்பதைப்பற்றி உடனே யோசிக்கலானார். திருநெல்வேலிக்கு அனுப்ப வேண்டிய மற்ற தஸ்தவேஜுகளைக்கூடத் தேடி எடாமல், எடுத்துவைத்திருந்த தஸ்தவேஜுகளைமட்டும் உடனே அனுப்பும்படி சொல்லிவிட்டு, சித்திவிநாயக முதலியார் விஷயத்தில் நேர்ந்த குற்றத்துக்கு என்ன பரிகாரம் செய்கிறது என்று ஆழ்ந்து யோசித்தார்.

சொத்து முழுவதையும் சித்திவிநாயக முதலியாரிடம் கொண்டுபோய்ச் சமர்ப்பித்தாலுங்கூட அவர்பட்ட கஷ்டங்கள் மாறுமா? வேறு ஏதாவதுநல்லயோசனைசெய்து அவருக்குமனக்களிப்பு உண்டாக்கவேண்டும் என்று வெகு நேரம் யோசனைசெய்து ஒருவிதமாய் முடிவு செய்துகொண்டார். உள்ளத்தில் செய்த முடிவை வெளிப்படுத்தாமல் பொன்னம்பல முதலியார் அன்றிரவே முத்துக்கோட்டைக்குப்போய் மறுநாள் திரும்பிவந்தார். வந்ததும் சித்திவிநாயக முதலியாரிடம் சென்று “தடுக்க முடியாத சில காரணங்களால் முத்துக்கோட்டை மிட்டாதார் மகனுக்கு என் மகளைக் கொடுப்பது சாத்தியமில்லாமற் போய்விட்டது. இப்போது வைத்திருக்கும் முகூர்த்தத்திலேயே வேறு நல்ல பையனுக்குக் காந்திமதியை விவாகம் செய்துவிடவேண்டும் என்று நிச்சயித்திருக்கிறேன். என்மனதில் தங்கள் பேரன் நெல்லையப்பனே சரியான வரன் என்று நான் தீர்மானித்திருக்கிறேன். தாங்கள் சம்மதிக்கவேண்டும்” என்றார்.

சித்திவிநாயக முதலியார் “பொன்னம்பலம்! அவசரப்படாதே. முன் நிச்சயித்த முகூர்த்தத்தில் எவ்விதத்திலும் கலியாணம்முடிக்கவெண்ணி நீ இவ்விதம்சொல்லுகிறாய். அது அவ்வளவு சரியானதல்ல. பிரயத்தனப்பட்டால் முத்துக்கோட்டை மிட்டாதார்போன்ற பணக்காரர்கள் சம்பந்தம் உனக்குச் சுலபமாய்க் கிடைக்கும். அப்படியிருக்க அவசரப்பட்டு நெல்லையப்பனுக்குப் பெண்ணைக் கொடுத்துவிட்டால் பிறகு நல்ல பணக்காரவீட்டுப் பிள்ளைக்குக்

தொண்ணூறு கடனேடே தவரம்பருப்புக் காற்பணம்.





தொத்துக்குத் தொத்துச் சாட்சி, தவரம்பருப்புக்கு மத்தே சாட்சி.

கொடுத்திருக்கலாகாதா என்று வருத்தப்படுவாய். பதறாதே" என்றார்.

பொன்னம்பல முதலியார், "நான் ஒருக்காலும் அவ்விதம் எண்ணவே மாட்டேன். நான் ஏதோ அவசரப்பட்டுச் செய்கிறதாக நினைக்கக் கூடாது. இதற்குமுன் தோன்றாத சில யோசனைகள் எனக்கு இப்போதுதான் தோன்றின. வயதிலும், அழகிலும் நடத்தையிலும் நெல்லையப்பன் மேன்மையாகவே இருக்கிறான். தவிரவும், பழைய சுவீகார வியாச்சியத்தைப்பற்றியும், காணாமற்போன சம்மதிப் பத்திரத்தைப் பற்றியும் ஊரார் சொல்வதைக் கேட்கும்போதும் மற்ற நடவடிக்கைகளை யோசிக்கும்போதும் கோர்ட்டுக்களின் முடிவு என்னவானாலும் எல்லாச் சொத்துக்களும் என்னை அடைந்தது என்மனத்துக்குச்சரியென்றுபடவில்லை. சுவாமீ! இதுவிஷயமாய் எனக்குப் பலவிதமாக மனக்கவலையும் துயரமும் உண்டாகிக்கொண்டேயிருக்கிறது. தாங்கள் பொன்னையும் மண்ணையும் ஒன்றாகக் கருதும் பரிபக்குவநிலையடைந்திருக்கிறீர்களே யெனினும் என் மனதுக்கு நியாயப்பிசகாய்ச் சொத்து என்னைச் சேர்ந்திருக்கிறதோ என்ற கவலை தீராக் கவலையாக இருக்கிறது. என் ஒரேமகளும் தங்கள் பேரனும் எல்லாச் சொத்துக்களையும் சேர்ந்து அடைந்து ஒருமித்து அனுபவிக்க ஒருஏற்பாடு செய்துவிட்டால் என் மனப்புண் தானாக ஆறிவிடும். இவைகளையெல்லாம் யோசித்தே நான் இவ்விதம் தீர்மானித்திருக்கிறேன். இதற்கு நீங்கள் ஒரு ஆக்ஷேபனையும் சொல்லாமல் சம்மதித்தருள வேண்டும்" என்று வேண்டினார்.

பொன்னம்பலமுதலியார் சொன்னவைகளையெல்லாம் சித்திவிநாயகமுதலியார் யோசித்து அவையெல்லாம் உண்மையென்று உணர்ந்து ஈசன் திருவிளையாடலை வியந்து அவர் வேண்டுகோளுக்கு உடன்பட்டார்.

முன் நிச்சயித்திருந்த முகூர்த்தத்திலேயே சகல சம்பிரமங்களோடும் காந்திமதிக்கும் நெல்லையப்ப முதலியாருக்கும் கல்யாணம் நடந்தது. சுபம்!!!

---

குண்டலகேசி.—இது சரித்திர சம்பந்தமான ஒரு நாவல். எளிய நடையில் நாகை வி. கோபால கிருஷ்ணபிள்ளை எழுதியது. படிக்கப்படிக்க இன்பம் தரக்கூடியது. விலை அணா 5.

# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(187-ம் பக்கத் தொடர்ச்சி.)

### பத்தாம் அத்தியாயம்

### மாணிக்கலாலனது மாறுவேஷம்

மாணிக்கலாலன் அப்பொழுதே ரூபநகரத்துக்குத் திரும்பிவந்தான். அப்பொழுது சூரியன் அஸ்தமிக்கிற சமயமாயிருந்தது. அவன் கடைவீதியிற்போய் இங்குமங்கும் பார்க்க அது வெகு அழகாயிருந்தது. கடைகளிலெல்லாம் அநேகதீபங்கள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. நானாவிதமான தின்பண்டங்கள் நாவில் நீரூறச்செய்தன. புஷ்பங்கள் தரந்தரமாய்க் கண்ணுக்கு இரம்மியமாய்க் காணப்பட்டன. அவைகளின் இனிய கந்தத்தினால் மனத்துக்கு அபூர்வ அமைதியுண்டாயிற்று. மாணிக்கலாலனுக்குக் குதிரை ஆயுதங்களைச் சம்பாதிக்கவேணுமென்கிற உத்தேசம். ஆனால் அவ்வெண்ணத்தினால் வயிற்றுக்கு வஞ்சனைசெய்கிற எண்ணம் அவனுக்கில்லை. அவன்போய்க்கொஞ்சம் மிட்டாய் வாங்கித்தின்ன ஆரம்பித்தான். ஐந்தாறுசேர் மிட்டாய்தின்று ஒருசேர் பாலும் வாங்கிக் குடித்தான். கடைக்காரனுக்கு விலையைக் கொடுத்துவிட்டு வெற்றிலைவாங்குவதற்குப் புறப்பட்டான். அங்கே வெற்றிலை பாக்கு முதலான சாமான்கள் விற்கிற ஒரு இடம் வெகு அழகாயும் மனோகரமாயு மிருந்தது. கடையில் அநேக விளக்குகளும் லாந்தர்களும் தேஜோமயமாகச் செய்துகொண்டிருந்தன. சுவர்களில் நானாவர்ணமான காகிதங்கள் ஒட்டப்பட்டிருந்தன. வெகு அழகான படங்கள் தொங்கிக்கொண்டிருந்தன. சிருங்கார ரஸப்பிரதானமான படங்களே அதிகம். மத்தியில் கடைக்காரி மிருதுவான இரத்தினக்கம்பளியின்மே லுட்கார்ந்துகொண்டு வெற்றிலை விற்றுக்கொண்டிருந்தாள். அவளுக்கு வயது முப்பதிருக்கலாம். குரூபியல்ல. கண்கள் பெரிதாயும், பார்வை சஞ்சல முள்ளதாயு மிருந்தன. புன்சிரிப்பு வெகு ரஸமுள்ளதாயிருந்தது. மாணிக்கலாலன் இவைகளையெல்லாம் பார்த்து "வெற்றிலை கொடு"வென்றான்.

தாம்பூலம் விற்கிறவன் தானே உட்கார்ந்துகொண்டு விற்கவில்லை. அவள் உத்தரவுப் பிரகாரம் ஒருவேலைக்காரி, வெற்றிலை பாக்கு சுண்ணாம்பு முதலானவைகளைச் சரிசெய்து, வந்தவருக்கு விற்றுக்கொண்டிருந்தாள். எஜமானி துட்டு மாத்திரம் வாங்கிக்கொண்டு இனிப்பாய் நகைத்துக்கொண்டிருந்தாள்.

தாசி வெற்றிலை கிராம்பு பாக்கு முதலானவைகள் சேர்த்துக் கொடுத்ததால் மாணிக்கலாலன் ஒரு துட்டு ஜாஸ்தி கொடுத்து இன்னுமவ்வளவு வேணுமென்று கேட்டான். அது தயாராவதற்குள் எஜமானியுடன் பேசத் தொடங்கினான். அவள் ரூபத்தைமெச்சி, கடையின் அழகை யெல்லாம் சிலாகித்தான். அவள் மனம் கொஞ்சம் கரைந்தது. சொகுசான தாம்பூலத்துடன் இனிப்பான வார்த்தைகளாட ஆரம்பித்தான். இதற்குள் தாம்பூலம் தயாராயிற்று. தாசி ஏதோ கொண்டுவருகிறதற்காக வெளியே போனாள். அச்சமயத்தில் மாணிக்கலாலன் வெற்றிலைக்காரியைப் பார்த்து "மஹாராஜீ நீ வெகு கெட்டிக்காரி, உன்னைப் போன்றவளைத் தேடியே வந்தேன். எனக்கு ஒரு சத்துரு இருக்கிறான். அவனை ஒரு வீட்டுக்குள் அடைத்து கதவைப் பூட்டவேண்டுமென்று இருக்கிறேன். நீ சகாயம் செய்தால் அது செய்கிறவழி சொல்லுகிறேன். மோகரா ஒன்றும் கொடுக்கிறேன்" என்றான். வெற்றிலைக்காரி "என்ன செய்யவேண்டும்?" என்றாள்.

மாணிக்கலாலன் அவள் காதில் என்னென்னவோ சொன்னான். உடனே அவளும் சம்மதித்தாள். "மோகரா எனக்கு வேண்டாம். அந்த வேடிக்கையே போதும்" என்றாள்.

மாணிக்கலாலன் மசி பேனா கேட்கவும், தாசி அடுத்த கடையிலிருந்து கொண்டுவந்து கொடுத்தாள். மாணிக்கலாலன் வெற்றிலைக்காரியுடன் யோசித்து ஒரு காகிதம் எழுதினான். அது என்னவென்றால்:

"பிராணநாதா! நீ ஊருக்குள் வந்துவிட்டுப் போன பொழுது உன்னைப் பார்த்து மோகங்கொண்டிருக்கிறேன். உன்னை இன்னொருதரம் பாராமலிருந்தால் என் பிராணன் நில்லாது. நீ நாளைக்கே புறப்பட்டுப் போவதாகக் கேள்விப்பட்டேன். ஆதலால் இன்று ஒருதரம் அகத்தியம் வந்து எனக்குத் தரிசனம் கொடுக்கவேணும். வராவிட்டால் நான் நாக்கைப்பிடுங்கிக் கொண்டு மரணமடைவேன். இதைக் கொண்டு வருகிறவனுடன் கூடவரவேண்டும். அவன் வழி காண்பிப்பான்."

கடிதம் எழுதி, மேல்விலாசத்தில் மாணிக்கலாலன் 'மகம்மதுகான் ஸாகேபவர்களுக்கு' என்று எழுதினான்.

வெற்றிலைக்காரி.—அவன் யார்?

மாணிக்கலாலன்.—ஒரு மொகலாய குதிரை வீரன்.

வாஸ்தவமாய் மாணிக்கலாலனுக்கு மொகலாயசேனையில் யாரையும் தெரியாது. பார்த்ததுமில்லை. இரண்டாயிரம்பேரில் யாருக்காவது மகம்மது என்ற பெயரிருக்கவேண்டும், மொகலாயரில் கான் என்ற பட்டம் வழக்கமாய்ச் சேர்ப்பதுண்டு என்று அப்படி மேல்விலாசம் எழுதினான். எழுதிவிட்டு அவனை இங்கேயே அழைத்து வரட்டுமா என்று கேட்டான்.

வெற்றிலைக்காரி—இந்த வீடு பிரயோஜனமில்லை. வேறொருவீடு வாடகைக்கு வாங்கிக் கொள்ளவேண்டும்.

அவர்க ளிரண்டுபேரும் போய் விசாரித்து இன்னொருவீடு பார்த்தார்கள். வெற்றிலைக்காரி அந்த வீட்டை அலங்கரிக்க வாரம்பித்தாள். மாணிக்கலாலன்காகிதத்தைஎடுத்துக்கொண்டு மொகலாயசேனை இறங்கியிருந்த விடத்துக்குப் போனான். அங்கே நியமம் ஒழுங்கு ஒன்றுமில்லை. மாணிக்கலாலன் மொகலாயரில் யார் தன் கண்ணுக்குப் பட்டாலும் "மகம்மதுகான் யார்? அவருக்கு ஒரு காகிதமிருக்கிறது" என்று கேட்டுக்கொண்டிருந்தான். ஒருவரும் பதில் சொல்லவில்லை. கேட்டுச் சிலர் வைதார்கள்; சிலர் தெரியாது என்றார்கள். சிலர் தேடிப்பார் என்றார்கள். கடைசியில் ஒருவன் "மகம்மதுகான் யாரோ தெரியாது. ஆனால் என் பெயர் நூர் மகம்மதுகான். காகிதத்தைக் கொடு; பார்த்துக் காகிதம் எனக்கோ இல்லையோ சொல்லுகிறேன்" என்றான்.

மாணிக்கலாலன் ஆநந்தத்துடன் காகிதத்தை அவனிடத்தில் கொடுத்து மனத்தில் யாராயிருந்தாலு மிருக்கட்டும், பாசத்தில் விழுகிறான் என்று நினைத்துக்கொண்டான். மொகலாயன்; மனத்தில் காகிதம் யாருக்காயிருந்தாலென்ன, நான் ஏன் இந்தச் சமயத்தை விடவேண்டும், பெண்ணை ஏன் போய்ப் பார்த்துவரக் கூடாது என்று யோசித்துக்கொண்டு, காகிதம் எனக்குத்தான். போ, உன்னுடன்கூட வருகிறேன்" என்று சொல்லி, தன் கூடாரத்துக்குப் போய்க்

கண்ணாடியில் முகம் பார்த்து அத்தர் முதலான வாசனைத் திரவியங்களால் அலங்காரம் செய்துகொண்டு உடுப்புகள் தரித்துக்கொண்டு வெளியில்வந்து, "அடேய்! அந்தவிடம் எவ்வளவு தூரம்" என்று கேட்டான். மாணிக்கலாலன் கைகூப்பிக்கொண்டு, "ஹஸ்ரத்! வெகு தூரம். குதிரைமேலே போனால் நல்லது" என்றான்.

நிரம்பவும் நல்லது என்று சொல்லி கான் ஸாஹேப் குதிரையைக் கொண்டுவந்து சேணம் லகான் எல்லாமிட்டு ஏறிப்புறப்படுகிற சமயத்தில் மாணிக்கலாலன் மறுபடியும் கைகூப்பிக்கொண்டு, "ஹஸரத்! பெரியமனுஷியாள் வீட்டு சமாசாரம் கத்தி முதலானது இருந்தால் நல்லது" என்றான்.

சரியென்று சொல்லித் தான் சிப்பாயாகவிருந்து எதற்காக ஆயுதத்தை விட்டு விட்டுப் போக வேண்டுமென்று நினைத்து இடுப்பிற் கத்தியைக் கட்டிக்கொண்டு குதிரை மேலேறினான். குறித்த விடத்திற்கு அழைத்துவந்து மாணிக்கலாலன், "தாங்கள் இங்கே இறங்க வேண்டும். நான் குதிரையைப் பிடித்துக் கொள்ளுகிறேன். நீங்கள் வீட்டிற்குள் போகலாம்" என்றான்.

கான் ஸாஹேப் இறங்கினான். மாணிக்கலாலன் குதிரையைப் பிடித்துக்கொண்டான். கான்ஸாஹேப் கத்தியுடனே உள்ளே போய்க் கொண்டிருந்தான். பின்னே கத்தியை இடுப்பிற் கட்டிக்கொண்டு பெண்ணுடன் சம்பாஷணை செய்வது அயுக்தமென்று நினைத்துத் திரும்பிவந்து ஆயுதங்களை மாணிக்கலாவன் வசம் கொடுத்துவிட்டு உள்ளேபோனான். மாணிக்கலாலனுக்குக்காரியம் இன்னும் சுலபமாயிற்று. கான் ஸாஹேப் உள்ளேபோய்ப் பார்க்கையில் மரக்கட்டிலின்மேல், மெத்தை அமைத்து அதன்மேல் ஒருசுந்தரி உட்கார்ந்திருந்தாள். ரோஜா முதலான அத்தர்களால் வீடு முழுவதும் கம கம வென்றிருந்தது. கான் ஸாஹேப் ஜோடுகளைக் கழற்றிவிட்டு மஞ்சத்தின்மே லுட்கார்ந்தான். அவ்வழகியுடன் மிருதுவாய்ப் பேச வாரம்பித்தான். பிறகு உடுப்பை எடுத்துவிட்டு விசிறியைக் கையில் எடுத்துக்கொண்டு விசிறிக்கொள்ள வாரம்பித்தான். பெண்ணும் நாலைந்து இனிமையான வார்த்தைகள்பேசி அவனை மோகக்கடலி லாழ்த்திவிட்டாள். அச்சமயத்தில் மாணிக்கலாலன் வாசற் கதவைத் தட்டினான். யாரங்கே என்றாள். மாணிக்கலாலன் குரல் மாற்றிக் கொண்டு நான்தானென்றான்.

அப்பொழுது சாதுரியமுள்ள அந்தப்பெண் நடுநடுங்கி நாக் குழறக் கான்ஸாஹேபைப் பார்த்து"என்னவோ ஆபத்து வந்துவிட்டது. என் கணவன் வந்துவிட்டான்போ லிருக்கிறது. இன்றைக்கு வரமாட்டா னென்றிருந்தேன். நீங்கள் இந்த மஞ்சத்தின் கீழே ஒளித்துகொள்ளுங்கள். நான் அவனை யனுப்பிவிட்டு வருகிறேன்" என்றாள்.

மொகலாயன், "அதென்ன? கணவன் வந்தால் ஒளித்துகொள்ளவேணுமா? யாரானாலும் வரட்டும் கொன்றுவிடுகிறேன்."

வெற்றிலை விற்பவள் நாக்கைக் கடித்துக் கொண்டு, "இதென்ன விபரீதம்? என் கணவனைக் கொன்று என் அன்ன வஸ்திரத்தில் மண்போடுகிறதா? இதுதானா என் மேலுள்ள பிரீதி? வேகமாய்க் கட்டிலின்கீழே போங்கள். அவனை இப்பொழுதே அனுப்பிவிட்டு வருகிறேன்" என்றாள்.

இதற்குள் மாணிக்கலாலன் வாசற்கதவைப் பலமாகத் தட்ட ஆரம்பித்தான். நிர்வாகமில்லாமல் கான் ஸாகேப் மஞ்சத்தின் அடியே போனான். தேகம் கொஞ்சம் ஸ்தூலம். சுலபமாய்ப் போகமுடியாது. இரண்டொரு விடத்தில் தேகத்தில் சிராய்த்துவிட்டது. என்ன செய்கிறது? காமத்துக்காக மனிதன் என்னதான் அனுபவிக்கமாட்டான்? அந்த ஸ்தூலமான மாம்ஸ பிண்டம் மஞ்சத்தின் கீழே போய்ச் சேர்ந்தவுடன், பெண்மணி வாசற் கதவைத் திறந்தாள்.

உள்ளேவந்து,வெற்றிலை விற்பவள், "நீங்கள் எப்பொழுது போகப் போகிறீர்கள்? திரும்பி வந்ததற்குக் காரணமென்ன?" என்றாள்.

மாணிகக்லாலன் வேறு குரலுடன், "முன்னே சொல்லிக்கொண்டிருந்த பிரகாரம் கொத்துச்சாவியை வைத்துவிட்டுப் போய் விட்டேன்" என்றான்.

வெற்றிலைக்காரி சாவி தேடுகிறதுபோல் கான் ஸாகேபுடைய உடுப்புகளைக் கையில் எடுத்துக் கொண்டாள். மாணிக்கலாலன் ஜோடுகளைப் போட்டுக்கொண்டான். இருவரும் வெளியே வந்து வாசற் கதவைப் பூட்டிக்கொண்டு வேகமாய் வந்துவிட்டார்கள்.





கான்சாகேப் கட்டிலின் கீழே எலி மூட்டுப் பூச்சி முதலானவைகளால் மிகவும் உபத்திரவமடைந்தான்.

அவனை இவ்விதமாய்க் கட்டிலின்கீழடைத்துவிட்டு அவன் உடுப்புகளை மாணிக்கலாலன் தரித்துக்கொண்டான். ஆயுதங்களையும் எடுத்துக்கொண்டு அவன் குதிரையின் மேலேறி முஸல்மானரின் சைனியத்தில் அவனுக்குப் பதில் வேலை செய்வதற்காகப் புறப்பட்டுப் போனான்.

---

## நான்காம் பாகம்

### முதல் அத்தியாயம்

### சஞ்சலகுமாரியின் புறப்பாடு

மறுநாள் மொகலாயசேனை பிரயாணத்துக்குத் தயாராயிற்று. ரூபநகரத்துக் கோட்டையிலிருந்து தலைப்பாகை, கவசங்கள் தரித்து, நீண்ட மீசையுடைய குதிரைவீரர்கள் கையில் ஆயுதங்களுடன் வரிசை வரிசையாகப் புறப்பட்டார்கள். ஒவ்வொரு வரிசையிலும் ஐந்தைந்துபேர். ஒரு வரிசையின் பின் இன்னொரு வரிசையாக எல்லாரும் புறப்பட்டார்கள். குதிரைகள் லகானால் இழுக்கப்பட்டுக் கழுத்தை வளைத்துக்கொண்டு மெல்லப் போய்க்கொண்டிருந்தன.

சஞ்சலகுமாரி விடியற்காலத்தில் எழுந்து ஸ்நானம் செய்து இரத்தினாபரணங்களினால் அலங்கரிக்கப்பட்டாள். நிர்மலை ஆபரணங்களையெல்லாம் எடுத்துப் பூட்டினாள். சஞ்சலை, "பூமாலைகளைமாத்திரம் போடு நான் சிறைக்குப் போகப்போகிறேன்" என்றாள். நிர்மலை அடக்க முடியாமல் கண்ணீர் சொரிந்து கொண்டு,"இரத்தினநகைகளைப்பூட்டுகிறேன். நீ உதயபுர மகிஷி யாகப்போகிறாய்" என்றாள்.

சஞ்சலை—பூட்டு, பூட்டு. ஏன் அற்பமாய்ச் சாகவேணும்? அரசன் மகளாய்ப் பிறந்தேன்; அரசன் மகளாக செத்துப்போகிறேன்.

நிர்மலை ஆபரணங்களைப் பூட்டினாள். பூட்டிவிட்டு அவள் தேககாந்தியைப் பார்த்து அழத் தொடங்கினாள். ஒன்றும் சொல்லவில்லை. சஞ்சலை அவளை ஆலிங்கனம் செய்துகொண்டு அழுதாள்.

சஞ்சலை—நிர்மலா! இனி உன்னை நான் பார்க்கப்போகிறதில்லை. பிரமன் ஏன் இப்படிப் பரிகாசஞ் செய்கிறான்? இதோ பார்! இந்த அற்பமான முட்செடிகூடத் தான்பிறந்த விடத்திலேயே இருக்கிறது. நான் ஏன் ரூபநகரத்தில் இருக்கமட்டும் கூடாது?

நிர்மலா—உன்னை இன்னும் நான் பார்க்கப்போகிறேன். நீ எங்கே இருக்கிறாயோ அங்கே என்னைப் பார்ப்பாய். என்னைப் பார்க்காமல் நீ சாகமுடியாது. உன்னைப் பார்க்காமல் நான் சாகமாட்டேன்.

சஞ்சலை—நான் டில்லி மார்க்கத்தில் சாகப் போகிறேன்.

நிர்மலை—டில்லி மார்க்கத்தில் என்னைப் பார்ப்பாய்.

சஞ்சலை—நிர்மலை அது எப்படி? நீ எப்படிப் போவாய்!

நிர்மலை ஒன்றும் சொல்லவில்லை. சஞ்சலையின் கழுத்தைக் கட்டிக்கொண்டு அழுதாள்.

அலங்காரங்க ளானவுடன் சஞ்சலகுமாரி மகாதேவமந்திரத்துக்குப் போனாள். போய்ச் சிவபூஜையை வெகு பக்தியுடன் செய்தாள். பூஜையானவுடன், "தேவதேவ! மகாதேவ! சாவதற்கு புறப்படப்போகிறேன். ஆனால் ஒரு வார்த்தை கேட்கிறேன். சிறு பெண்ணான என் மரணத்தில் உமக்கு இவ்வளவு சந்தோஷமெதற்காக? பிரபுவே! நான் உயிரோடு இருந்தால் உம்முடைய சிருஷ்டி நடக்காதா? அப்படி உம்மிஷ்டமிருந்தால், என்னை அரசன் மகளாய் இந்த வுலகத்துக்கு ஏனனுப்பித்தீர்?" என்றாள்.

மகாதேவருக்குப் பூஜை செய்தவுடன், தாயினுடைய பாதவந்தனத்துக்குப்போனாள். நமஸ்காரம் செய்து எவ்வளவோ அழுதாள். தந்தைக்கு நமஸ்காரஞ் செய்தாள். அங்கேயும் மிகவும் அழுதாள். அங்கிருந்து தோழிமாருக்கெல்லாம் சொல்லிக்கொண்டாள். எல்லாரும் அழுதார்கள். சஞ்சலை சிலருக்கு ஆபரணங்களையும், சிலருக்குத் தான் விளையாடுகிற ஸாமான்களையும் சிலருக்குப்பணமும் கொடுத்தாள். சிலருக்கு அழவேண்டாம் திரும்பிவருவேன் என்றாள். சிலருக்கு புவனேசுவரியாகப் போகிறேன், ஏன் அழுகிறீர்கள் என்றாள்.

எல்லாரிடத்திலும் விடைபெற்றுக்கொண்டு சஞ்சலகுமாரி பல்லக்கிலேறிப் புறப்பட்டாள். ஒரு ஆயிரம் வீரர்கள் பல்லக்குக்கு முன்னே இருந்தார்கள். மற்றொரு ஆயிரம்பேர் பிந்தி நின்றுகொண்டார்கள். வெள்ளியினாற் செய்து

இரத்தினங்க ளிழைக்கப்பெற்ற அப்பல்லக்கு வெகு விசித்திரமாயிருந்தது. ஊரிலுள்ளவர்களெல்லாம் அதைப் பார்த்து வெகு ஆநந்தப்பட்டார்கள். சஞ்சலகுமாரி பல்லக்கு ஏறினவுடன் பேரி முதலான வாத்தியங்கள் கோஷித்தன. புஷ்பங்கள் பொறிகள் இவைகளினால் பல்லக்கு நிறைந்தது. புறப்படுவதற்கு சேனாதிபதி உத்தரவுகொடுத்தான். உடனே கரையுடைந்த தடாகத்தின் பிரவாகம்போல் அக்குதிரைப்படை புறப்பட்டது. குதிரைகள் லகானைக் கடிக்கிற சத்தமும், குதிரைக்காரர்களின் ஆயுதங்களின் சத்தமும் எங்கும் நிறைந்திருந்தன.

காலைவேளையிற் காற்றுவீசவும் குதிரைவீரர்கள் சித்தம் குளிர்ந்து பாடவாரம்பித்தார்கள். பல்லக்கின் பக்கத்தில் பின்னே இருந்தவன் ஒருவன் பாடினான்.

சஞ்சலை அதைக்கேட்டு, "இதென்ன? சவர்க்கலோகவைத்தியனான கோவர்த்தனகிரியைத் தூக்கி நிறுத்தின கிருஷ்ணபகவான் வந்து என்னை இரக்ஷிக்கமாட்டானோ? ஹா! முராரி! எங்கிருந்தாலும் என்னைவந்து காப்பாற்றவேணும்" என்று பிரார்த்தித்தாள். பாட்டுக் காதில் விழும்பொழுதெல்லாம் ராஜஸிம்ஹனைத் தியானம்பண்ணிக்கொண்டிருந்தாள். பாடுகிறவன் மாணிக்கலாலனென்று அவளுக்குத்தெரியாது. மாணிக்கலாலன் பெருமுயற்சியினால் இடம் விடாமல் பல்லக்குக்குப் பிந்தியே இடம்பிடித்துக்கொண்டு போய்க்கொண்டிருந்தான்.

## இரண்டாம் அத்தியாயம்

## நிர்மலை புறப்படுதல்

இங்கே நிர்மலகுமாரிக்குத் துக்கம்ஜாஸ்தியாயிற்று. சஞ்சலகுமாரி இரத்தினங்களிழைத்த பல்லக்கேறிப் புறப்பட்டுப் போனாள். முன்னும் பின்னும் உத்தரகுமாரனைப் போன்ற குதிரைவீரர்கள் அல்லாவின் மகிமையை பாடிக்கொண்டு ரூபநகரத்தின் பருவதங்கள் எதிரொலிக்கும்படி செய்துகொண்டு புறப்பட்டுப் போனார்கள். அந்த ஆயிரக்கணக்கான ஜனக்கூட்டத்தில் சஞ்சலை ஏகாங்கி. நிர்மலை அரண்மனை மாடிமேலேறிப் பார்க்க ஆரம்பித்தாள். பார்க்கையில் சேனை பருவதமார்க்கத்தில் ஏறியும் இறங்கியும் போய்க்கொண்டிருந்தது. காலைச்சூரியன் கிரணங்களில் அவர்கள் கத்திகள் ஜ்வலித்துக்கொண்டிருந்தன. வெகு நேரம் பார்த்துக்கொண்டிருந்தாள். கண்கள் எரிய வாரம்பித்தன. அப்பொழுது நிர்மலை மாடியிலிருந்திறங்கினாள். இறங்கிவந்து தன்னாபரணங்களையெல்லாம் கழற்றி மறைத்துக்கொண்டாள். ஒருவரும் பார்க்கவில்லை. சேர்த்துவைத்திருந்த பணங்களில் வேண்டுமளவு பணம் எடுத்துக்கொண்டாள். பிறகு ஒருவருக்கும் தெரியாமல் அந்தப்புரத்தை விட்டுப் புறப்பட்டு மொகலாயசேனை போன மார்க்கமாக வேகமாய் நடந்துபோனாள்.

## மூன்றாம் அத்தியாயம்

## மாணிக்கலாலனது எச்சரிக்கை

ஒரு பெரிய மலைப்பாம்பை யொக்கும் அச்சேனை பருவதமார்க்கங்களில் சுற்றிச்சுற்றிப் போய்க்கொண்டிருந்தது. எந்தச்சந்துவழியாய் பக்கத்திலிருந்த குன்றின்மேல் ஏறிப்போய் மாணிக்கலாலன் ராஜஸிம்மனைக் கண்டு அவனுடன் பேசிவிட்டுத் திரும்பிவந்தானோ அந்த இக்கட்டான சந்துக்குள் சைனியம் பிரவேசித்தது. குதிரைகளின் கணக்கற்ற குளம்புகள்பருவதத்தில் ஜாஸ்தியானசத்தம்செய்தன. மத்தியில் குதிரைகளின் கனைப்பும், ஆயுதங்களின் பயங்கரத்தொனியும் காடுகளின் இலைகள் செடிகள் அசையும் சத்தமும் சேர்ந்தன. நிர்ப்பயமாய் அந்த நிர்ஜனமான பிரதேசத்தில், வாசஞ் செய்துகொண்டிருந்த பக்ஷிகளும், மிருகங்களும் ஓடிப்போயின. இப்படி அந்த எல்லாக் குதிரைவீரர்களும் அந்தஇக்கட்டான மார்க்கத்தில் பிரவேசித்தார்கள். அப்பொழுது திடீரென்று டம் என்று ஒரு பயங்கரமான சத்தமுண்டாயிற்று. அந்த இடத்திலிருந்த வீரர்கள் ஸ்தம்பம்போல் நின்றுவிட்டார்கள். பார்க்கவே ஒரு பெரிய பாறைக்கல் பருவதத்தின் சிகரத்திலிருந்துசுழன்றுவிழுந்திருந்தது. அந்தக் கல்லின்கீழ் ஒரு குதிரைவீரன் அடிபட்டுச் செத்தும் மற்றொருவன் காயம்பட்டும் கிடந்தார்கள்.

பார்த்துக்கொண்டு இது என்னவா யிருக்கலாமென்று யோசித்துக்கொண்டிருக்கும்பொழுதுஇன்னொருகல் விழுந்தது. ஒன்று, இரண்டு, மூன்று, நாலு கிரமமாய் பத்து, இருபது, முப்பது விழுந்தது. நூற்றுகணக்காய்ச் சிறிதும் பெரிதுமாய் ஒரே கல்மழையாகப் பொழிந்தது. அநேக சிப்பாய்கள் குதிரைகளுடன் அடிபட்டு





இறந்தவரும் இறக்கிறவருமாய் மார்க்கமெல்லாம் விழவே பின்னே போகிறவர்களுக்கு இடமில்லாமற் போய்விட்டது. குதிரைகள் தங்கள் மேலிருந்தவர்கள் விழுந்தவுடன் ஓடவாரம்பித்தன. அவைகளை நிறுத்த முடியவில்லை. முன்னும் பின்னும் சேனைக்கூட்டம் குதிரைமேல் குதிரையும் சிப்பாய்மேல் சிப்பாயுமாக விழுந்து ஒருவரையொருவர் தள்ளிக்கொண்டு ஓடுகிறதற்கு வழிதேட ஆரம்பித்தனர். சேனையில் ஒழுங்கெல்லாம் தவறி ஒரே குழப்பமாய்ப் போயிற்று.

"யார் அங்கே! பத்திரம்! ஹுஷார் இடக்கைப்பக்கத்தில் ரஸ்தாவிருக்கிறது" என்று மாணிக்கலாலன் கூவினான். அவனிருந்தவிடத்திலெல்லாம் அந்தச் சத்தம் ஜாஸ்தியாயிற்று. போயிகள் தங்கள் உயிரைக் காப்பாற்றிக்கொள்ள நினைத்தார்கள். குதிரைகள் அவர்கள்மேல் விழுவதற்குச் சமயமாயிற்று. இந்தக் கணவாய் மார்க்கத்தின் இடப்பக்கத்தில் ஒரு சிறுசந்து மார்க்கம் இருந்ததென்றுமுன்னமே சொல்லியிருக்கிறோம். அதில் ஓரேசமயத்தில் ஒருவன் மாத்திரம் போகலாமே யொழிய அநேகர் பிரவேசிப்பதற்கு இடமில்லை. சேனைமத்தியிலிருந்த பல்லக்கு இந்த ஒற்றடிப்பாதைக்கு வரவே அந்தச் சத்தம் உண்டாயிற்று. அது ராஜஸிம்ஹன் ஏற்பாடு. மாணிக்கலாலனுக்கு அது தெரிந்ததால், பிராணபயமடைந்த போயிகளுக்கு இந்த மார்க்கத்தைக் காண்பித்தான். உடனே அவர்கள் தங்களுயிரைக் காப்பாற்றிக்கொள்வதற்காக இராஜகுமாரியின் பல்லக்கைத் தூக்கிக்கொண்டு புறப்பட்டார்கள்.

அவர்களுக்குப் பின்னே மாணிக்கலாலனும் குதிரைமேலேறிப் பிரவேசித்தான். இது கண்டு மற்றொரு சிப்பாய் இது பிழைப்பதற்கு வழி என்று நினைத்து அவன் பின்னே வர ஆரம்பித்தான். அவன் பிரவேசிப்பதற்கு முந்தியே பருவதத்திற்கு மேல்பாகத்திலிருந்து ஒருபெரிய கல்விழுந்து மார்க்கத்தை அடைத்துக்கொண்டது. அதனால் அடிப்பட்டு அச்சிப்பாய் பொடிபொடியாகிச் சிதறிவிட்டான். அச்சந்தின் வாய் மூடிப்போயிற்று. ஒருவருக்கும் அந்த மார்க்கத்தின் வழியாய்ப் போகமுடியவில்லை. மாணிக்கலாலன் ஒருவன் மாத்திரம் பல்லக்குடன் கூடப்போனான். அப்போது சேனாதிபதியான ஹஸனல்லிகான் சேனைகளுக்கெல்லாம் பின்னே இருந்தான். அவன் முதலில் சேனைகளெல்லாம் அந்தஇக்கட்டானவிடத்தில்போகும்படிகட்டளையிட்டுத் தான்மாத்திரம் எல்லாருக்கும் பின்னே வந்துகொண்டிருந்தான். அங்கங்கே சைனியமெல்லாம் கோவென்றலறவாரம்பித்ததும், என்ன காரணமென்று கேட்க ஒருவரும் ஒன்றும் சொல்லமுடியவில்லை. அப்பொழுது அவன் சேனை ஜனங்களைப் பின் வரச்செய்து தான் முன்னேபோய்க் காரணத்தை அறியவேண்டுமென்று முன்னே போனான்.

ஆனால் அவ்வளவு நேரம் சேனை நிற்கவில்லை. வலது பக்கத்தில் பருவதம் வெகு உயரமென்றும் ஏறுவதற்குக் கஷ்டமென்றும் அதன் சிகரத்தில் பாறைகள் அதிகமாகிக் கீழிருக்கும் ரஸ்தாவை இருட்டாக்கிக் கொண்டிருந்தனவென்றும் முன்னேயே சொல்லியிருக்கிறோம். இராஜபுத்திரர் அதன்மேலேறுவதற்கு மார்க்கம் தேடி ஐம்பதுபேர் மேலே ஏறி ஒருவருக்கும் பார்க்கமுடியாமல் நூறு நூறு கஜத்துக்கு ஒருவனாக நின்றுகொண்டு இராத்திரியே குவியலாய்ச் சேர்த்திருந்தபெரிய பெரிய கல்லுகளை ஒன்றொன்றாய்க் கீழேமார்க்கத்திற் போய்க்கொண்டிருந்த சேனையின்மேல் தள்ளிக்கொண்டிருந்தார்கள். யார் கற்களைத் தள்ளுகிறார்களென்பது கீழே இருக்கிறவர்களுக்குத் தெரியாது. பருவதத்தின்மேலிருக்கிற சத்துருக்களை அடிப்பதும் சாத்தியமில்லை. ஆதலால் ஓடுவது தவிர வேறொரு உபாயமுமில்லை. பல்லக்கின் முன்பாகத்திலிருந்த ஆயிரம்பேர்களில் சென்றவர்கள் அடிபட்டவர்கள் தவிர பாக்கியிருந்தவர்களெல்லாம் தப்பித்துக்கொண்டு ஓடிப்போனார்கள். ஐம்பது ரஜபுத்திரர் பருவதத்தின்மேலிருந்துகொண்டு கல்மழை பொழிந்துகொண்டிருந்தார்கள். பாக்கி ஐம்பது பேரும் ராஜஸிம்மனுடன் இடது பக்கத்திலிருந்த உயரமில்லாத பருவதத்தில் ஒளிந்துகொண்டிருந்தார்கள். அவர்கள் அதுவரையில் ஒன்றும் செய்யவில்லை. இப்போது அவர்களுக்கொரு வேலை வந்தது. எந்தவிடத்தில் கல்மழையினால் அதிகமான ஆபத்துண்டாயிற்றோ அங்கே மாபாரகன் இருந்தான். அவன் முதல் சைனிகரை அந்தவிடத்திலிருந்து வெளியே வரும்படி செய்யப் பிரயத்தனப்பட்டுக்கொண்டிருந்தான். ஆனால்

பார்த்துக்கொண்டிருக்கும்பொழுது பல்லக்கு அந்தச் சந்துவழியாய்ப் போயிற்று. அதன் பின்னே குதிரையின்மேலொருவன் போய்க் கொண்டிருந்தான். அவன் அப்புறம் போனவுடன் ஒரு பாறை, மேலிருந்து விழுந்து வழியை யடைத்துக்கொண்டது. இது கண்டு மாபாரகன் இது யாரோ துராத்துமா இராஜகுமாரத்தியை அபகரித்துக்கொண்டு போவதற்காசப்பிரயத்தனம் செய்திருக்கிறானென்று தீர்மானித்து சைனிகரைப் பார்த்து, "உயிர் போனாலும் போகட்டும். நூறுபேர் குதிரையைவிட்டிறங்கி பல்லக்கின் பின்னே போகவேண்டும். போகும்போது கல்லை ஒரு புறமாய்த் தள்ளிவிட்டுப் போகவேண்டும். புறப்படுங்கள். நான் வருகிறேன்" என்றுசொல்லி, மாபாரகன் குதிரையிலிருந்திறங்கி மார்க்கத்தை யடைத்துக் கொண்டிருந்த கல்லின்மேலேறி அந்தண்டைப்பக்கம் குதித்தான். அவனைப் பார்த்து நூறு பேர் அச்சந்து மார்க்கத்திற் பிரவேசித்தார்கள்.

ராஜஸிம்ஹன் இதைக் குன்றின்மேலிருந்து பார்த்துக்கொண்டிருந்தான். மொகலாயர் கணவாயின் வழியாய் வெளியே வருகிற வரையில் ஒருவரும் ஒன்றும் செய்யாமல் இருந்து, பிறகு அவர் வருகிறது நின்றவுடன் ஐம்பது இரஜபுத்திரர்கள் தமது குதிரைகளைக் குன்றின்மேலிருந்து மின்னலைப்போல் வேகமாய் விட்டுக்கொண்டு அவர்கள் மேல்விழுந்து அநேகரை கத்திக்கிரையாக்கினார்கள். மேலேயிருந்து குதிரைகள் வந்து விழுந்ததால் மொகலாயர் கலங்கிப்போய்விட்டார்கள். அநேகர் மாண்டார்கள். சிலர் குதிரைகளின் கால்களிற் சிக்கி இறந்தார்கள். பத்துப் பன்னிரண்டு பேர்கள் மாத்திரம் தப்பினார்கள். மாபாரகன் பின் திரும்பி வந்துவிட்டான். இரஜபுத்திரர் அவனைப் பின்தொடரவில்லை. மாபாரகனுடன் மொகலாய வேஷந்தரித்த மாணிக்கலாலனும் வெளியே வந்துவிட்டான். ஒரு குதிரையைப் பிடித்துக்கொண்டு அதன்மேலேறி குழப்பமடைந்த அந்தச் சேனையில் எங்கேயோ சேர்ந்துகொண்டான். அவனை ஒருவரும் கண்டுபிடிக்கவில்லை. மொகலாயர் புறப்பட்டு வந்த ரந்திரத்தின் வழியாய்த்தான் மாபாரகன் புறப்பட்டுவந்தான். அப்பொழுது பார்த்தவர் அவன் ஓடுகிறான் என்று தெரிந்துகொண்டார்கள். மாணிக்கலாலன் அங்கிருந்து புறப்பட்டு வாயுவேகமாய் ரூபநகரத்துக்கு ஓடினான்.

மாபாரகன் பாறையின் மேலேறிப் பின் பக்கம் இறங்கிவந்து, "இக்குன்று ஏறுவதற்குக் கஷ்டமில்லை. எல்லோரும் குதிரையுடன் ஏறலாம், கள்வர் கொஞ்சம்பேர்கள்தானிருக்கிறார்கள். வேரோடு அவர்களை அதம் செய்துவிடவேண்டும்" என்றான். அப்பொழுது ஐந்நூறு மொகலாயர் தீன்! தீன்! என்று உரத்துக் கூவிக்கொண்டு இடப்பக்கத்துப் பருவதத்தின் மேல் ஏற ஆரம்பித்தார்கள். மாபாரகன் அவர்களுக்கு அதிகாரி. மொகலாயரிடத்தில் இரண்டு பீரங்கிகளிருந்தன. ஒன்றைத்தூக்கிக் குன்றின் மேல் கொண்டுபோனார்கள். மற்றொன்று சிறியது. அதை யிழுத்துக்கொண்டுபோய் யானையைக்கொண்டு தூக்கி அந்தக் கணவாயில் விழுந்து கிடந்த பாறையின்மேல் வைத்தார்கள்.

## சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

(154-ம் பக்கத் தொடர்ச்சி.)

### இங்கிலாந்தில் டிஸம்பர் மாதம்

அரங்கனுக்குக் கமலா எழுதின கடிதத்தை அவளே தபாலில் போட்டுவந்த பிறகு, சுந்தரத்தைப்பார்த்து, "சுந்தரண்ணா! நான் எழுதின கடிதம் எத்தனை நாளில் அண்ணாவிடம்போய்ச் சேரும்?" என்றுகேட்டாள். அதற்குச் சுந்தரம், 'இன்னும் 20-நாளைக்குள் சந்தேக மில்லாமல் போய்ச்சேரும்" என்று சொல்ல, அவள் அப்பதிலைக் கேட்டுவிட்டுப் போய்விட்டாள்.

அன்றுமுதல் அவள் நாட்களை எண்ணுவதிலேயே கருத்தாயிருந்தாள். அடிக்கடி தன் தமயனிடமாவது, தகப்பனாரிடமாவது என்ன தேதியென்று விசாரிப்பதுண்டு. அவர்களும் அவளுடைய உண்ணோக்கத்தை அறிந்து சிரித்துக்கொண்டே தேதியைத் தெரிவிப்பார்கள்.

ஒருமாதங் கழிந்தது ; நாள்தோறும் தபால் வரும் வேளையில் வாயிலண்டைக் காத்திருப்பாள். தபால் அவர்கள் வீட்டிற்குவரும்போதெல்லாம், "தபால்காரா, எனக்குஏதாவதுகடிதம் உண்டா?" என்று கேட்பாள். அவன், "இல்லையம்மா. உனக்கு யார் கடிதம் எழுதுவார்கள்?" என்றுகேட்பான். அதற்கு அவள் "யாரோ?" என்று சொல்லிவிட்டு வருத்தத்துடன் உள்ளே போய்விடுவாள்.

கமலா கடிதம் எழுதிப்போட்ட 50-ம் நாள் அவள் பெயருக்கு ஒருகடிதம் வந்தது. தபால்காரனிடமிருந்து அவள் கடிதத்தை வாங்கினவுடனே, அவள் ஓரே ஓட்டமாய் ஓடி, கூடத்தில் தாயார் உட்கார்ந்திருக்குமிடத்தை அடைந்தாள். அங்கு அக்கடிதத்தைப் பிரித்து படிக்க ஆரம்பித்தாள்.

கடிதம் ரங்கனிடமிருந்து வந்தது. அது பின்வருமாறு:—

க்ஷேமம். லண்டன்.

19௨௧ ஜனவரி ௴ 1௳

சௌபாக்கியவதி கமலாவுக்குப் பிரியமுள்ள அண்ணா ரங்கன் அன்புடன் எழுதுவது.

நீ எழுதின கடிதம் கிடைத்தது. அவ்விடத்து விஷயங்களை அறிய எனக்கு மிகவும் சந்தோஷம். நீ நன்றாய் வாசிக்கிறாய் என்று உன் கடிதத்திலிருந்து தெரிகிறது. சுந்தரத்தையும் நன்றாய் வாசிக்கச் சொல்லவும். குழந்தை நன்றாய் விளையாடி வருகிறாளா? அப்பா அம்மா முதலியவர்களின் க்ஷேமத்தை அறிய நான் மிகவும் ஆவலாயிருக்கிறேன். ஆகையால் நீங்கள் யாராவது, அல்லது எல்லாருமாவது அடிக்கடி எனக்குக் கடிதம் எழுதவும்.

அவ்விடம் கோவில்களுண்டா என்று நீ கேட்கிறாய்; நம் ஊரில் இருப்பதைப்போல இங்குக் கோயில்கள் இல்லை. கிறிஸ்தவர்கள் கோவில்கள்தாம் இருக்கின்றன. அவைகளுக்கு "சர்ச்" என்று இங்கிலீஷில் பெயர். இந்த கிறிஸ்தவ கோயில்கள் நம் கோயில்களைப் போலில்லை; உள்ளே லிங்கங்களும் கிடையாது. ஜனங்கள் நம்மைப்போல் தேங்காய் பழம் முதலியவைகள் நைவேத்யம் செய்யமாட்டார்கள். ஆனால், அந்த கோயில்களில் வரிசை வரிசையாக பெஞ்சுகள் போட்டிருக்கும். ஒவ்வொரு ஞாயிற்றுக்கிழமையும் கிறிஸ்தவர்கள் அங்குவந்து பெஞ்சுகளில் உட்காருவார்கள். பிறகு அவர்கள் குருக்கள் ஒருவர்வந்து, ஒரு புஸ்தகத்தைத் திறந்து உரக்கப் படிப்பார். அதுதான் அவர்களுடைய ஜபம். பிறகு அங்கு வந்திருப்பவர்கள் எல்லோரும் சில ஸ்தோத்திரங்களை இங்கிலீஷில் பாடுவார்கள். அதன் பிறகு அவர்களுடைய குருக்கள் ஸத்விஷயத்தைப்பற்றி ஏதாவது பேசுவார். பிறகு எல்லாரும் வெளியே போய்விடுவார்கள். நம் ஊரில் கோவிலுக்குப் போகும்போது, ஜனங்கள் சிங்காரித்துக்கொண்டு போவதுபோலவே இங்குள்ள ஆங்கிலேயர்களும் நல்ல உடைகளைத் தரித்துக்கொண்டு போவார்கள்.

நான் இந்த கிறிஸ்தவக் கோயில்களுக்குப் போவதில்லை. ஆனால் என்னிடம் நம்முடைய பஞ்சாங்கம் இருக்கிறதே; அதைப் பார்த்து நமது பண்டிகைதினத்தில் அதிகாலையில் ஸ்நானஞ் செய்துவிட்டு, சில ஸ்தோத்திரங்களைச் சொல்லிவிட்டு என் பாடங்களைப் படிப்பேன். நானும் சிவஸ்வாமியும் இன்னும் சில சிநேகிதர்களும் ஒன்றாய்ச் சேர்ந்து, பஜனை செய்வோம். அவ்வளவுதான்.

மார்கழி மாதம் குளிர் என்று நீ எழுதியிருக்கிறாய். இவ்விடத்தில் இதுதான் மழைக் காலம். குளிர் உடம்பை நடுங்கச் செய்கிறது. சூரிய வெளிச்சம் வெகு குறைவு. உடம்பு முழுவதையும் போர்த்துக் கொள்ளாமல் வெளிக்கிளம்புவது முடியாது. வீட்டிற்குள் இருக்கும்போது நன்றாய்க் கம்பளிகளால் போர்த்துக்கொண்டு, அடுப்பண்டை உட்கார்ந்து குளிர்காயவேண்டும்.

இந்த மாதத்தில் பனிபெய்கின்றது. நம் தேசத்தில் பனிபெய்வதுபோல் இங்கு பனி பெய்வதில்லை. ஆனால் பனிபெய்து கொஞ்சமாய்ச் சேர்ந்து பனிக்கட்டி போலாகி, தரையையே மறைத்துவிடுகிறது. பனிக்கட்டியைக் கையால் தொட்டாலே, கை விறைத்துவிடுகிறதே! அப்படியானால் தரை முழுவதும் பனிக்கட்டியாலேயே மூடப்பட்டிருந்தால் எப்படியிருக்குமென்று யோசித்துப்பார். சில சமயங்களில் ஆறுகளும் குளங்களும் கூட இங்கே பனிக்கட்டியால் மூடப்பட்டு விடுகின்றன. அப்பொழுது ஜனங்கள் முக்கியமாய்ச் சிறுவர்கள் தங்கள் பூட்ஸுகளில், வழவழப்பான ஒரு பலகையைக் கட்டிக்கொண்டு, பனிக்கட்டியின்மேல் சறுக்கிக் கொண்டே போவார்கள். அப்படிப் போவதைப் பார்க்க வெகு வேடிக்கையாக இருக்கும். அடிக்கடி சறுக்கி விழுவதைப்பார்த்தால் எவ்லாரும்சிரிப்பார்கள். நான் அவர்களைப் போலவே சறுக்கிச் சறுக்கி நடக்க முதலில் பார்த்தபோது, பல

தடவை சறுக்கி விழுந்தேன். ஆனால் இப்பொழுது சுமாராய் நடந்து போவேன். சிறு பையன்கள், பள்ளிக்கூடம் இல்லாத வேளைகளில், இந்தப் பனிக்கட்டியை எடுத்து, ஒரு மனிதனைப்போல பொம்மை ஒன்று பெரியதாகச் செய்வார்கள். சிலபையன்கள் பனிக்கட்டிப் பந்துகள் செய்து ஒருவர்மேல் ஒருவர் வீசியெறிந்து விளையாடுவார்கள்.

இந்த மாதத்தில் பனிபெய்தபோது லண்டன் எப்படி இருந்தது தெரியுமா? தெருவெல்லாம், வெள்ளை வெளேறென்று பனியால் மூடப்பட்டிருந்தது. வீடுகள் மேலெல்லாம் பனி. இராத்திரி முற்றத்தில் ஒரு பாத்திரம் நிறைய ஜலம் வைத்திருந்தோமானால், அது காலைக்குள் உறைந்து கட்டியாய் விடும். அவ்வளவு குளிராயிருக்கிறது இத்தேசத்தில்.

இத்தேசத்தில் இந்த டிஸம்பர் மாதத்தில் கிறிஸ்தவர்களுக்குப் பெரிய பண்டிகை ஒன்று நடக்கின்றது. அது கிறிஸ்மஸ் பண்டிகை. நம்தேசத்தில் கூட இந்த கிறிஸ்மஸ் காலத்தில் பள்ளிக்கூடங்களுக்கும் ஆபீஸ்களுக்கும் ஒரு வாரம் லீவு விடுகிறார்கள். என்ன பண்டிகை தெரியுமா அது? அவர்களுடைய மதத்தை ஏற்படுத்தின கிறிஸ்து என்பவர் இந்த மாதம் 26உ பிறந்தாராம். அதனால் நாம் ஸ்ரீராமநவமி, ஸ்ரீகிருஷ்ணஜயந்தி, பொங்கல், தீபாவளி முதலிய பண்டிகைகளைக் கொண்டாடுவதுபோல, ஜனங்கள் இப்பண்டிகையை இங்கே கொண்டாடினார்கள். டிசம்பர் மாதம் 25உ வீட்டை எல்லாம் நன்றாய்ச் சுத்தம் செய்து, தோரணங்கள்கட்டி அலங்காரஞ் செய்துவைப்பார்காள். இராத்திரியெல்லாம் சிறுவர்கள் குதித்துக் கொண்டே இருப்பார்கள். சிறுவர்களுக்குப் பொம்மைகள், தின்பண்டங்கள், சட்டைகள் முதலியவற்றை வாங்கிவைப்பார்கள். பிறகு வீட்டின் கூடத்தில் ஒரு சிறு செடியை நட்டு அதன்கிளைகளில் பொம்மைகள் முதலிய எல்லாவற்றையும் தொங்கவிட்டு வைப்பார்கள். மறுநாள் காலையில், சிறுவர்கள் எழுந்ததும், அந்தச் செடியைக் கண்டு, தங்களுக்கு என்ன என்ன கிடைத்திருக்கின்றனவோ, அவைகளை எடுத்துக்கொள்வார்கள். வெகுதூரத்திலிருப்பவர்கள்கூட தங்கள் சிநேகிதர்களுக்கும் உறவானவர்களுக்கும் தகுந்த பொருள்களை வாங்கி அனுப்புவார்கள். எனக்குக்கூட என் நண்பர்கள் அநேக சாமான்களை வாங்கி அனுப்பினார்கள். "சந்தோஷமாகக் கிறிஸ்மஸ் காலம் கழியவேண்டும்" என்று அழகாய் அச்சிட்ட கார்டுகள் அனுப்புவார்கள். இந்த மாதிரியான கார்டுகள் மிகவும் அழகாயிருக்கும். பட்டணத்தில் இந்த கார்டுகள் ஒன்றை ஒரு ரூபாவிற்குக்கூட விற்கிறார்கள்.

26உ காலையில் எல்லோரும் எழுந்திருந்து, ஒருவரை யொருவர் பார்த்து "உங்களுக்கு நல்ல கிறிஸ்மஸ் உண்டாகட்டும்" என்று சொல்வார்கள். பிறகு எல்லாரும் அவர்களுடைய கோவில்களுக்குப்போய் கடவுளை ஸ்தோத்திரஞ்செய்து வருவார்கள். அன்றைய தினம் எல்லார் வீட்டிலும் கம்பீரமாக ஒரு விருந்து நடக்கும். என் சிநேகிதர்கள் பலபேர் இங்கிலீஷ்காரர்களாகையால், நானும் சிவஸ்வாமியும் பல வீடுகளுக்குப் போய்விட்டு வந்தோம்.

இன்றையதினம் ஜனவரீ 1உ. நம்மூரில் வருஷப்பிறப்புப் பண்டிகை யிருப்பது போலவே, இங்கேயும் இன்றையதினம் பண்டிகையாகத்தான் இருக்கிறது. "உனக்குப் புதுவருஷம் நல்லவருஷமாக இருக்கட்டும்" என்று அழகாய் அச்சிட்ட கடிதங்கள் ஒவ்வொருவருக்கும் அவர்களுடைய சிநேகிதர்களிடமிருந்து வரும். இன்றைய தினத்திற்குள் எனக்கு 30 கடிதங்கள் தபாலில் வந்தன.

எனக்கு இன்னும் அதிகம் எழுதவேண்டுமென்றிருந்த போதிலும், இப்பொழுது நேரமில்லை. நான் சௌக்கியமாய் இருப்பதாகவும் என்னைப்பற்றிக் கவலைப்படவேண்டாமென்று சொன்னதாகவும் அம்மாவுக்கும் அப்பாவுக்கும் சொல்லு. இங்கே குளிராயிருந்த போதிலும், நான் நல்ல கம்பளிப் போர்வைகளையும், சட்டைகளையும் வாங்கியிருப்பதால் எனக்குக் குளிர் அதிகமாகத் தெரியவில்லை. ஆகையால் என்னைப்பற்றி விசாரம் வேண்டாம். சிவஸ்வாமியும் சௌக்கியமாக இருக்கிறான்.

இந்தக் கடிதத்தை அம்மாவுக்கும் அப்பாவுக்கும், சுந்தரத்திற்கும் வாசித்துக்காட்டு. நீ நன்றாய் வாசித்துவா. அடுத்த கடிதத்தில் நான் இங்கே இருக்கும் இடங்களைக் காட்டும் படங்கள் அனுப்புகிறேன்.

வேணும் அநேக ஆசீர்வாதம்,
ரங்கன்.

தோட்டிபோல் உழைத்தால், துரைபோலச் சாப்பிடலாம்.



# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### மங்களம்

மங்கல மென்ப மனைமாட்சி மற்றத
னன்கல னன்மக்கட் பேறு.

ஒருவனுக்கு நன்மையென்று சொல்லப்படுவது நற்குண நற்செய்கைகளுடன் கூடின மனையாளேயாம். அதற்குச் சிறந்த ஆபரணமாவது நற்புதல்வரைப் பெறுதல் என அறிஞர் கூறுவர், என்று குறள் வகுத்துரைத்தது. பலவகையான மங்களமுளவாகவும் இங்கு கிருகஸ்த தர்மத்திற்குரிய நற்குண நற்செய்கைகளையும் அவைகளையுடைய மனைவியையுமே மங்கள மென்னுஞ் சொல்லாற் புகழ்ந்து கூறப்பட்டது. சகல மங்களகரங்களும் மனைவியாலுண்டாதலே யதற்குக் காரணம் போலும். "ஒருவன் தன் மனைவியை ஆடையாபரணங்களால் அலங்கரிக்க வேண்டியது. ஏனெனில் வீட்டிற்கு அழகினை யுண்டாக்குகிறவர்களான மங்கையர்களுக்கும் மஹாலக்ஷ்மிக்கும் சிறிதும் பேதமில்லை" என்று மநு கூறினார். சகல மங்களங்களுக்கும் மஹாலக்ஷ்மியே காரணம். அந்த மஹாலக்ஷ்மியோடு அபேதமாகவிருக்கிற மங்கையர்களும் அவ்வாறே யாதலால் அவர்களை மங்களமென்று கூறினாராம். "செல்வமில்லாத வீடு எப்படி விளங்காதோ அப்படியே மங்கையரில்லாத வீடுமாம்" என வேறுஸ்மிருதி கூறியது. "ஒருவன் தரித்திரனாயிருந்தாலும் மனதுக்கு மகிழ்ச்சி தரும் சுகுணநிறைந்த மனைவியை யடைந்திருப்பானானால் அவன் சகல செல்வங்களையுமுடையவனாகவே கருதப்படுவான்" என்று தேவஸ்மிருதி கூறியது. இவ்வாறே

நல்ல ஞாலமும் வானமும் பெறினும்,
எல்லா மில்லை யில்லில்லோர்க்கே"

என்று தமிழ் நீதிநூல்களும் கூறின. ஒருவன் உலகமுழுவதையுமடைந்து, வானுலகத்தையுந் தன்னதிகாரத்துக்குள் அடக்கியாள்பவனாயிருந்தாலும், நற்குணமுள்ள மனைவியில்லாதவனாயிருந்தால் அவன் அவ்வைசுவரியங்களெல்லாமில்லாதவனே யாகிறான் என்பது இதன்பொருள். பூலோக சுவர்க்கலோக வாழ்வுக்குரிய செல்வங்கள்கூட ஒரு மனைவிக்கு நிகராகாமலிருந்தால் அப்பெண்மணியின் மகிமை அளவு கடந்ததேயாம். அதனாலேயே சமஸ்த ஐசுவரியங்களுக்கும் மூலமான மஹாலக்ஷ்மிக்கும் நற்குணம்நிறைந்த மாதர்க்கும் அபேதங் கூறியது மநுஸ்மிருதி.

மங்களத்தை விரும்புகிறவர்கள் பெண்களை வெகு அன்புடன் ஆதரிக்கவேண்டும். தகப்பன், தாய், உடன் பிறந்தவன், கணவன், மைத்துனன் இவர்களால் பெண்கள் ஸன்மானிக்கப்படவேண்டும். "எந்த வீட்டில் பெண்கள் உபசரிக்கப்படுகிறார்களோ அந்த வீட்டில் சகல தேவர்களும் ஆனந்தத்துடன் வசிக்கிறார்கள். எந்த வீட்டிற் பெண்கள் உபசரிக்கப்படவில்லையோ அவ்வீட்டில் செய்யப்படுகிற சகல கருமங்களும் நிஷ்பலனாம்" என்றும் எந்தவீட்டில் வந்தபெண்களும் (மருமக்களும்) பிறந்த பெண்களும் துக்கிக்கிறார்களோ அந்தக் குடும்பம் நசித்துப்போகும். அவர்கள் எங்கே சந்தோஷிக்கிறார்களோ அவ்விடத்தில் வம்சவிருத்தியும் மங்களாபிவிருத்தியு முண்டாகும் என்றும் மநு கூறினார். இவைகளை யாராய்ந்து நோக்குங்கால் சகல மங்களங்களுக்கும் பெண்களே காரணமாகிறார்களென்றும் அவர்களே மங்கள ஸ்வரூபிகளென்றும் நன்கு புலப்படும்.

இவ்வாறு பெண்களின் மகிமை வர்ணிக்கப்பட்டதேனும், கற்புடைய ஸ்திரீகளே குறிப்பிற்கொள்ளத் தக்கவர்களாமென்பது கருத்து. இதனாலேயே,

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்,
திண்மை யுண்டாகப் பெறின்"

கற்பென்னும் வலிமையினையுடைய பெண்ணை யொருவன் அடைந்தால், அவளைவிட அவன் அடையத்தக்கவை யெவை யிருக்கின்றன, என்று நாயனார் கூறினார். இதனால் கற்புடைய பெண் இருக்கிற வீட்டிலேயே சகல மங்களங்களும் சகல தேவர்களும் வசிப்பார்களென்பது விளங்கும். அதை விளக்குதற்கு

"இல்லதெனில்ல வண்மாண்பானால்,
உள்ளதெ னில்லவண் மாணாக்கடை"

மனைவி நல்ல குணசாலியாயிருந்தால், அவளது கணவனுக்கு இல்லாதது ஒன்றுமில்லை. குணவதியாயில்லாதிருந்தால் அவனுக்குள்ளது ஒன்றுமில்லையென்று கூறினார்.

கற்பென்பது யாதெனில் - விவாகமாவ

தோணி போகும் துறை கிடக்கும்.

தற்கு முன் மாதாபிதா வம்ச குரு இவர்கள் கூறிய நெறியினின்றுந் தவறாதொழுகுவதும் விவாகமானபின் கணவன்கூறிய நெறி நிற்பது மாம். இயற்கையிலேயே வன்மையற்ற சரீர முடைய பெண்களுக்கு வேறு கர்மங்கள் விதிக்கப்படவில்லை. கணவன் செய்யும் இல்லற தருமத்திற்குத் துணையாய் நின்று அதனை நிறைவேற்றுவதே பெண்களுக்குப் பெருந் தவமாக விதிக்கப்பட்டது. ஆதலால் கணவன் மனங்கோணாமல் நடந்து அவனை யுபசரித்து வழிபட்டு, அவனையே தெய்வஸ்வரூபமாகக் கருதித் தரும நெறியில் நிற்பதே கற்பு என்று கூறப்படுவதாம். இதுவே அவர்களுக்குப் பல மாகும். இதனை ஸீதை, தமயந்தி, திரௌபதி முதலியவர்கள் தங்கள் பகைவர்களைச் சங்கரித்து மேன்மைபெற்றுச் சிறப்புற்று விளங்கின ரென்பதனா லறியலாம்.

இனி மங்களமென்பது ஐம்புலன்களா லுணர்ந்து அநுபவிக்கப்படும் ஆநந்தமேயாம். ஐம்புலன்களுள் ஒவ்வொன்றுந் தனித்தனியே வெவ்வேறு விஷயத்தை யுணருமேயன்றி எல்லா விஷயங்களையு மொருங்கே யுணர்ந் தனுபவிப்பதில்லை. ஏனெனில் ஐம்புலன்களையுமொருங்கே கவரும் பொருள்கள் இல்லை. பஞ்சேந்திரியங்களுக்கும் விஷயமாய் அவற்றையொருங்கே கவரும் தன்மை மங்கையரிடத்தி லுண்டு. அவர்களே பஞ்சேந்திரியங்களுக்கும் விஷயமாய் நின்று களிப்பித்து இந்திரிய ராஜனாகிய மனதுக்குங் களிப்பைத் தரத் தக்கவர்கள்; அந்தத்தில் ஸ்வர்க்காதி புண்ணிய வுலகவாழ்வைக் கொடுப்பவர்கள். அன்றியும் வீட்டைவிளக்கி மெழுகிச் சுத்திசெய்து, கோலமிட்டு, மஞ்சள்குங்குமந் தீற்றிப் பரிமளப் புகையிட்டுக் கண்ணுக்கும் மனதுக்கும் ரம்மியமாயிருக்கும்படி செய்துவைப்பவர்களு மவர்களே. இம்மை மறுமைக்குப் பயன்படுவதாகிய தேவாராதனைக்கு வேண்டும் உபகரணங்களைச் சேகரித்துச் சர்வமங்கள காரணமாகிய தேவபூசையை நடத்துவிப்பதுமவர்களே. பந்துக்களையும் நண்பர்களையும் உபசரித்து மகிழ்ச்சியுண்டாக்குகிறவர்களு மவர்களே. பெரிய ஆபத்து நேரிட்டகாலத்துத் தேறுதல்கூறித் துக்கத்தை யாற்றுபவர்களு மவர்களே. இத்தகைய காரணங்களால் வீட்டுக்கு மஹாலக்ஷ்மிபோல மங்களகரமாய் விளங்குகிறவர்கள் அவர்களேயாதலால் மனைவியையே மங்களமென்று கூறினர்.

இத்தகைய காரணங்களாலேயே

"கண்டுகேட் டுண்டுயிர்த் துற்றறியு மைம்புலனு
மொண்டொடிக்கண்ணே யுள"

உருவத்தாலும் சொல்லாலும், அருந்துவதாலும், முகர்தலாலும் அடையப்பெறும் மங்களமாகிய ஆனந்தமெல்லாம் இம்மங்கையரிடத்திலேயே யிருக்கின்றன. வேறெங்குமில்லையாம் என்றுகூறினர். மங்களசொரூபமாகிய மனைவியில்லாதார்க்கு இம்மை மறுமைப் பயன்கள் கிடைப்பதரிது. அதனை

"அறவோர்க் களித்தலு மந்தண ரோம்பலுந்,
துறந்தோர்க் கெதிர்தலுந் தொல்லோர் சிறப்பின்
விருந்தெதிர் கோடலுமிழந்தவென்னை"

இல்லறத்தார்க்கு உபசரிப்பதும்,மறையோரை யுபசரித்தலும், துறவிகளை யெதிர்கொண்டு உபசரிப்பதும், அதிதிகளைப் பூஜிப்பதுமாகிய இப் புண்ணியச்செய்கைகளெல்லாம் மனைவியில்லாதவர்க்கில்லை யென்றதனால் உணரலாம். அறம் பொருளின்பமென்று கூறப்பட்ட மூன்று புருஷார்த்தங்களுள் கடையது இவ்வுலகத்தோடொழியும். அறமானது இம்மை மறுமைகளிரண்டிலும்பொருளையு மின்பத்தையுந் தருவது பற்றிமறுமையில் தருமத்தின்கண் இச்சையை யுண்டாக்கியதனைச் செய்வதில் ஊக்கத்தையு முண்டாக்கும். பொருளும் இம்மை மறுமைகளில்அறத்தையுமின்பத்தையு முண்டாக்கும். இத்தகைய சிறப்புவாய்ந்த அறத்தைச் செய்வதற்குத் துணையாய்நின்று மும்மையிலும் நன்மைதருபவராகிய மாதர்களை மங்களமென்று கூறுவதில் யாதுந்தவறுதலில்லை. இதுபற்றியே "மாறில்; உடன்பிறப்பில்லா வுடம்புபாழ், பாழே, மடக்கொடியில்லாமனை" நல்லமனைவியில்லாதவீட்டை பாழ்வீடென்று கூறினர் ஔவையார். "மடன்மலராளன்னமனையில்லா வில்லம், இடுகாட்டை யொக்கு மிவண்" என்றதனால் நற்குணமுள்ள மனைவியில்லாத வீட்டையே சுடுகாடு என்றார்.

இத்தகைய மனைவியர் மகிமை அளவுகடந்ததாயினும், பரிபாலிக்கின்ற கணவர்களாலேயே அவர்கள்சிறந்து விளங்குவார்கள். அவர்களைப் பரிபாலிக்கும் முறை ஸ்மிருதிநூல்களில் விரிவாய்க் கூறப்பட்டுள்ளது. "நல்ல சந்ததியையும் ஐசுவரியத்தையும் பெற விரும்புகிற





புருஷர்கள் தத்தம் மனைவியின் மனங்கோணாது நடந்து அவர்களை இரக்ஷித்து வர வேண்டுவது அவசியம். அவ்வுபாயமாவது தாம் சம்பாதிக்குந் திரவியத்தை அவர்களிடங் கொடுத்து உசிதப்படி செலவழிக்கவும் அதைக் காப்பாற்றவும், பாத்திரங்களைச் சுத்தியாய் வைத்திருக்கவும், புத்திரர்களைச் சரியாய்ப் பாதுகாக்கவும், தமக்குப் பணிவிடைகளைச் சரியாய்ச் செய்துவரவும், உணவுக்குரிய பொருள்களைச் சமயமறிந்து உசிதப்படி சேகரிக்கவும், நன்றாய்ச் சமையல் செய்யவும், படுக்கை ஆசனம் பாத்திரமிவைகளைச் சுத்தமாய் வைக்கவும், சமயத்துக்கேற்றபடி அவைகளைச் சம்பாதிக்கவும் கற்பித்து, அவற்றில் சுவாதந்திரியமுள்ளவர்களாயிருக்கும்படி செய்யவேண்டும். இப்படிச் செய்தால் அவர்கள் மனமகிழ்ந்து கணவனுக்குக் கீழ்ப்படிந்து நடப்பார்கள். பிரியமாயிருக்கும் பட்சத்தில் நல்ல ஆடையாபரணங்களால் அவர்களை யலங்கரிக்கவேண்டும். இவ்வதிகாரத்தை அவர்களுக்குக் கொடாமல் தானேயாவது மற்றவர்களைக் கொண்டாவது நடத்திவருவார்களேயானால், அது மனைவியை இரட்சிப்பதாகாது; பெண்கள் மனமும் வெறுப்படையும். சமுத்திரத்தில் விழுந்த மஹாநதி எப்படி அந்தச் சமுத்திரத்தின் குணத்தையே யடைகிறதோ அப்படியே பெண்களும் எந்தக் குணமுள்ள புருஷனிடத்தில் பழகுகிறார்களோ அந்தப் புருஷன் குணத்தையே பெறுவார்கள். ஆதலால் புருஷன் துர்க்குணங்களை யொழித்து நற்குணங்களை யுடையவனாயிருந்து மனைவியையும் பழக்கவேண்டும். சற்சந்தானத்தை யுத்தேசித்துப் பெண்களை மிகவும் மேன்மையாய் நடத்தவேண்டும். மனைவியாலேதான் வீடு விளங்குகிறது. வீடுகளுக்குப் பெண்களே ஸ்ரீதேவி; இவர்களைவிட ஸ்ரீதேவி வேறாயிருப்பதில்லை. புத்திரர்களைப் பெறுதலும், அவர்களைப் பாதுகாத்தலும், பந்துமித்திரர்களை யனுசரித்தலும், புத்திரர்களால் தங்களையும் பிதிர்க்களையும் ஸ்வர்க்கத்திலேற்றல், கல்வி, மக்கள், தருமகாரியங்கள் இவைகளெல்லாம் மனைவியாலேயே நிலை பெறுகின்றன. ஆதலால் புருஷனும் மனைவியு மிணைபிரியாது ஒத்திருந்தே தர்மகாரியத்தை நடத்தவேண்டும். இருவரு மொத்துவாழும் வீடே ஸ்வர்க்கமாம். ஒற்றுமையில்லாத வீடே நரகமாம். ஒருநாள் கணவன் தன்னிடத்தில் அன்பாய்ப் பேசாவிட்டால் பெண்களின் மனது நெருப்புப்பட்டதுபோல வருந்திக் கருகும். இப்படிப்பட்ட மரியாதைகளோடு மனைவியைக் காப்பாற்றுவது எல்லா வருணத்தாருக்கும் பொதுவாதலால் ஒவ்வொருவரும் தத்தம் மனைவியைக் காப்பாற்றுவதில் கருத்துள்ளவர்களா யிருக்கவேண்டுமென்று மனுசொன்னார்.

மதுபானம், துர்ச்சகவாசம், கணவனைவிட்டுப் பிரிந்திருப்பது, அயல் வீடுகளிற் சென்று வீண்வார்த்தைகள் பேசுவது, அகால நித்திரை, பிறர் வீட்டில் வசிப்பது இந்த ஆறு தொழில்களும்கற்புடைய மாதர்க்குத் தகாதன. தெருத்திண்ணையில் உட்கார்ந்து பேசிக்கொண்டிருப்பது, ஜன்னலிலிருந்து பிறரைப் பார்ப்பது, துர்ஜனருடன்கூடி வீண்வார்த்தைகளைப் பேசுவது, பெருஞ்சிரிப்புச் சிரித்தல் இவைகள் பெண்களுக்கு அமங்களமாம். இவர்களும், செந்நிறமான மயிருள்ளவள், சரீரமெங்கும் உரோமமுடையவள், அதிகமாய்ப் பருத்தவள், அதிகமாய்ப் பேசுவதில் பிரியமுடையவள், பூனைக்கண்ணுள்ளவ்ள், ஈனச்செய்கையுள்ளவள் இவர்களும், மிகக் குட்டையாயிருப்பவள், மிகவும் நெட்டையாயிருப்பவள், பிங்கள வர்ணமான கண்ணுள்ளவள் இவர்களும் புருஷனுக்கு யமனைப்போல்பவ ராதலால் இவர்க ளிருக்குமிடத்தில் மூதேவியே வசிப்பாள். காக்கைபோன்ற குரலையுடையவள், வட்டமான கண்ணையுடையவ்ள், நெருங்கின புருவமுடையவள், விலகிய பற்களையுடையவள், விலாப்பருத்திருப்பவள், துர்ப்பாஷைகளைப் பேசுகிறவள், இப்படிப்பட்ட பலகுணங்களை யுடையவர்களும் அமங்கள சொரூபிகளாம்; ஆதலால் இம்மை மறுமை யின்பங்களை விரும்புகிற புருஷன் சாஸ்திரங்களிற்கூறிய சுபலக்ஷணங்களை யுடையவளும், மனதுக்கும் கண்ணுக்கும் ரம்மியமா யிருப்பவளுமான பெண்ணைத் தேர்ந்து மணம்புரிந்து வசிக்க வேண்டும். இவ்விதமான பெண்களையே "மங்களம்" என்று வியந்து கூறியது. அதேயன்றிப் பெண்ணினத்தார் எல்லாரையுங் குறித்தது அன்று. முன் கூறியுள்ள நற்குண நற்செய்கைகள் எந்தப் பெண்ணினிடத்திலிருக்கிறதோ அவளே வீட்டுக்கு ஸ்ரீதேவியாம்.

அவளே சகல ஐசுவர்யமாம். அவளே கணவனை ஸ்வர்க்கத்துக்குக் கொண்டுபோகும் ஓடம் போல்பவளாம். இத்தகைய பெண்களை மணந்த புண்ணிய புருஷர்கள் அவளையன்போடு நேசித்து இரக்ஷித்து வாழ்வார்களானால் அவ்வீட்டில் சகல மங்களங்களும் சர்வ தேவர்களும் நிரந்தரமாய் வசிப்பார்கள். இதுவே மங்களமாம்.

---

# புத்தக விமர்சனம்

## REVIEW OF BOOKS

**ஹரிணீ.**—ஸ்ரீமான் திரிசிரபுரம் அ. கு. மதனகோபால தீக்ஷதர் புதிதாய் இயற்றியிருக்கும் "ஹரிணீ" என்னும் தமிழ் நாடகம் காளிதாஸ மகாகவியின் "ரகுவம்சம்" என்னுங் காவியத்திற் கூறப்படும் அஜமகாராஜனது சரித்திரத்தை ஆதாரமாகக் கொண்டது. வடமொழியிலும் தென்மொழியிலும் தக்கதேர்ச்சியுள்ள இந்நூலாசிரியர் முதனூலின் கருத்தினின்றும் சிறிதும் வழுவாதிருப்பதுடன் சொற்சுவை பொருட்சுவை இரண்டும் விசேஷமாகப் பொருந்திய பல வெண்பாக்களை இடையிடையே அமைத்து, நடிப்பதற்கு யோக்கியமாகப் பல இனிய கீர்த்தனைகளினாலும் அலங்கரித்திருக்கிறார். நாடகபாத்திரங்களின் பேச்சு சாதுரியம் வாய்ந்து இயல்புகுன்றாதிருக்கிறது. நாடகரசங்களனைத்தும் விளங்கும் இந்நாடகத்தின் பீடிகையிற்றோன்றும் ஹாஸ்யரசம் விசேஷமாய் மெச்சத்தக்கது.

* *
*

**ஸ்ரீராமகிருஷ்ண பரமஹம்ஸரின் உபதேச மொழிகள்.**—சென்ற நூற்றாண்டில், வங்க நாட்டில் அவதரித்து, நம்மவர்க்கு மதாபிமானம் உண்டாகும்படிச் செய்த ஸ்ரீராமகிருஷ்ணருடைய உபதேசமொழிகள் 1001 அடங்கிய புத்தகம் வரப்பெற்றோம். நம் தேசத்தில் தோன்றிய பல மகான்களைப்போன்று, ஸ்ரீராமகிருஷ்ணர் அதிகமாகப் படித்தவரில்லை. ஆயினும், பக்தியினால் ஜகன்மாதாவையும் பரமேசுவரனையும் தரிசித்த மகானவர். அவர்பொழிந்த அமிர்த தாரைபோன்ற உபதேசங்களை பக்தர்கள் வங்காள பாஷையில் எழுதிவைத்திருந்தனர். அவை ஆங்கிலத்திலும், முன்னமேயே அச்சிடப்பட்டிருந்தபோதிலும் வெகு சில உபதேசங்களே அடங்கியிருந்தன. நம் பார்வைக்கு வந்திருக்கும் இந்நூலில், எல்லா உபதேசங்களும் வங்களம், ஆங்கிலம் இரண்டு பாஷைகளிலும் வல்லவரான ஒருவரால் மொழி பெயர்க்கப்பட்டிருக்கின்றன. எச்சாதியரும், இருபாலரும், பண்டிதரும்பாமரரும் இவ்வரிய நூலைப் படிப்பதால் நம்மதத்தின் உண்மைப் பொருளை எளிதில் அறிந்துகொள்வர் என்பதிற் சிறிதும் சந்தேகமில்லை..

*
* *

**மகரிஷிகள் சரித்திரம்.**—ஸ்ரீமான் எம். ஆர். ஸ்ரீநிவாஸய்யரவர்களால் இயற்றப்பட்டு சஞ்சிகைகளாக வெளிவரும் "மகரிஷிகள்" சரித்திரம், தற்சமயம் தெய்வபக்தி குன்றிவரும் நமது நாட்டவர்களை நல்வழிப்படுத்தும் நல்லாசிரியனாக இருக்கத்தக்க தகைமை வாய்ந்தது. சாதாரண மானிடராய்ப் பிறப்பவர் சர்வேசுவரனை மனத்திலிருத்தித் தவஞ்செய்வதனால், பஞ்சேந்திரியங்களையும் அடக்கி, காமக்குரோதாதிகளை வேருடன் களைந்தெறிந்து, முக்திவீடு சேர்ந்து பேரானந்தம் அனுபவிப்பதுடன் கடவுளது வல்லமையையு மடைந்து அவரைப் போலவே விளங்குவது சாத்தியமென்னும் உண்மையும், அத்தகைய தவஞ்செய்வதற்குரிய நெறியும், அவ்வாறு தவஞ்செய்யுங்கால் ஒருவருக்கு நேரக்கூடிய இடையூறுகளும் இச்சரித்திரத்திலிருந்து நன்கு புலப்படுகின்றன. பெரியோர்களின் சரித்திரங்களைப் படிப்பதனால் ஒருவன் தன்னைத் திருத்திக்கொள்ளும் வழியை எளிதிற்றெரிந்துகொள்ளலாமென்று சொல்லுவது மிகையாகும். நல்வழியிற் சேர்ந்து தமது சக்தியைப் பெருக்கிக்கொள்ள விரும்பும் ஒவ்வொருவருக்கும் இச்சரித்திரம் இன்றியமையாததெனக் கூறலாம்.

*
* *





# வேண்டும்

## WHAT WE WANT

*சங்கர சங்கர சம்பு—சிவ*
*சங்கர சங்கர சங்கர சம்பு.*

வேண்டிய வேண்டியாங் கெய்த-நம்முள்
வேண்டுமே வொழியாத வொற்றுமை தானும்.
பஞ்சம் படுத்தும் பாழ்பாட்டை-பார்த்தும்
மிஞ்சவே கண்டீரோ யாதேனும் பாட்டை.
இன்னும் அறியத்தான் இலையோ-நீவிர்
மன்னும் வழியொன்றும் தென்பட விலையோ.
ஒற்றுமை யொற்றுமை யென்று-நாளும்
ஓங்கி யுரைப்பதால் பயனேதும் உண்டோ?
நன்றதை நாடிடல் வேண்டும்-நாடி
நாட்டவே வேண்டும் நலமுற வென்றே.
அறிவை வளர்க்கும் நூற்கள்-நல்ல
ஆண்மை தனைத்தரும் போதங்கள் தாமும்.
பலரும் உதவிடல் வேண்டும்-இதினாற்
பலகோடி நன்மைகள் விளைந்திடும் உண்மை.
நாட்டுக் கல்விதான் வேண்டும்-அதை
ஊட்டப் பலருமே முன்வரல் வேண்டும்.
கூட்டங்கள் கூடிடல் வேண்டும்-கூடிப்
பாடங்கள் படித்திடப் பலருமே வேண்டும்.
சீட்டாட்ட மொழிந்திடல் வேண்டும்-தீமை
விளைவிக்கும் ஆட்டங்கள் தீய்ந்திடல்வேண்டும்-
துவேஷமொழிந்திடல் வேண்டும்-தூய
சிந்தனைதோன்றியே செழித்திடல் வேண்டும்.
பழையன கழிந்திடல் வேண்டும்-புத்தம்
புதியன புதிதெனப் புகுந்திடல் வேண்டும்.
நாட்டுச் சிறப்பதைத்தானே-நாளும்
நாடிய நாட்டங்கள் நாடிடல்வேண்டும்.
அனைவரும் ஒன்றெனும் பான்மை-என்றும்
அன்புடன்கூடியே அமைந்திடல் வேண்டும்.
திடமான சிந்தனை வேண்டும்-தீய
மடமையாம் மார்க்கங்கள் மாய்ந்திடல் வேண்டும்.
மதமென்பதொரு தனிச்சக்தி-அது
மதிகொண்டு அறியுமோர் மாண்புடை முக்தி.
மானிடர் யாவர்க்கும் உதவி-என்றும்
மனமுடன் புரிவதே நலமுடை நீதி.
ஏற்றமுடையன யாவும்-பிறர்
போற்றவே புரிந்திடல் மதமுடை போதம்.
மாற்றமதாகிய தோற்றங்கள் யாவும்-மூட
மதியினர் கொண்ட கூற்றங்கள் கண்டீர்.
நாட்டின் நலமதை நாடி-நாளும்
நன்மைகள் செய்யவே எண்ணங்கள் வேண்டும்.
ஒருவர்க்கு வந்த வாழ்வு-நாட்டின்
அனைவர்க்கும் வந்ததா யோர்ந்திடல் வேண்டும்.
இவ்விதத் தோற்றங்கள் வேண்டும்-இதைச்
செவ்விதா யறியுமோர் திடசித்தம் வேண்டும்.
நம்மில் பலபல மார்க்கம்-நாடும்
நாயக மணிகளாம் போதனை மார்கள்
ஒன்றெனும் பொருளதினுண்மை-நலமே
ஓதியே நாடெங்கும் உணர்த்திடல் வேண்டும்.
ஜாதிப் பகைமைகள் தாமும்-இன்று
நீதி யன்றெனும் நியாயங்கள் வேண்டும்.
படைப்புப் பலவகைதனிலும்-பார்க்கும்
பேதங்கள் யாதேனும் மக்களில் உண்டோ?
கபிலர் உரைதனைப் பார்க்கில்-கள்ள
ஞாயங்கள் வீழுமே புவிதனை நோக்கி.
பெற்றமும் எருமையும் வேறு-அவை
பிறப்பு வடிவெனும் தோற்றம் பல்லாற்றால்.
கூடுதல் உண்டோ அவைதாம்-மாறிக்
கூடிக் கருப்பெறல் கண்டவர் உண்டோ?
மாந்தர் தம்மில் இப்பேதம்-என்றும்
கண்டிலர் கொண்டிலர் கருதுவீர் போதம்.
வேதியர் என்பதோர் ஜாதி-தனி
வேற்றுமையாகவே கொண்டிலை நீதி.
ஒழுக்கமென்பதோர் ஓடம்-அதில்
தழுவியே யேறியோர் வேதியராவார்.
எக்குடிப் பிறந்தவரேனும்-அவர்
யாவரேயாயினும் ஆகுக நன்றே.
செப்பிய நன்னெறி நாடி-தீய
சிந்தனை யொழித்துமே வாழ்ந்திடிலன்றே,
ஒப்பிலா வேதியராவார்-உண்மை
செப்பினோம் வேறில்லை வாதங்கள் தாமும்.
இப்படி நினைப்பதே யியல்பாம்-நம்மில்
ஏற்படும் பகைமைகள் வேண்டுவதின்றாம்.
வேற்றுமை நீங்கிடல் வேண்டும்-நல்ல
எண்ணங்கள் என்றுமே தோன்றிடல் வேண்டும்.
ஆரிய ரென்பதோர் கூட்டம்- அற்றே
திராவிடரென்போரும் ஒரு தனிக்கூட்டம்.
முன்னவர் தென்னாடு கண்டார்-அன்றே
பின்னவர் வழிவழி வரவேற்புகொண்டார்.
ஒற்றுமை யென்னுமோர் கந்தால்-நன்றே
ஓட்டிப் பிணைத்தனர் அவர்தங்கள் வாழ்வை.
இன்று பிரித்தல் சரியோ-நீவிர்
இவ்வெண்ணங் கொண்டிடல் நன்றெனலாமோ?
வேண்டாம் விருப்பும் வெறுப்பும்-அந்த
வில்லங்கத்தாலே விளையும் பார்தீங்கு.
ஒன்றுபட்ட வாழ்க்கை தானும்-நம்மில்
உண்டாயின் உண்டாமே பல்வகைப்பாங்கும்.
நன்றிதை யோர்ந்திடல் வேண்டும்-இந்த
ஞானந்தான் சிறந்தது தேர்ந்திடுமின்றே.
ஜாதிப் பகைமைகள் நீங்கி-நல்ல
நீதி யுடைமைகள் பூண்டிடல் வேண்டும்.
தமிழ்மொழி பயில்பவ ரெல்லாம்-ஏகத்
தமிழ்க்குடிச்சேர்ந்தவர் தமிழர்கள் கண்டீர்!
ஈதல்லோ உண்மையின் தேற்றம்-அன்றித்
தீதான எண்ணங்கள் கொண்டிடல் தீதாம்.
எழுவீர் அனைவரும் இன்றே-உள்ளம்
வழுவாது வழுத்துமின் இறைதனை நன்றே.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**ஜப்பானியச் சரக்குகளை இந்தியாவில் பரப்புதல்**

இந்தியாவிலுள்ள பஞ்சாலைகளின் விலைக்குக் கீழே 100-க்கு 20 குறைத்து ஜப்பானியர் தம் துணிகள் முதலிய சரக்குகளை இந்தியாவுக்குக் கொணர்ந்து விற்றுவருவதாக "டைம்ஸ்-ஆப்-இந்தியா" அறிவிக்கிறது. அவர்களுக்குப் பஞ்சு அதிகமாக வேண்டுமென்றும், பஞ்சு வாங்க அவர்களிடம் பணமில்லையென்றும், ஆதலால் மிச்ச சரக்குக்களை விற்றுத்தள்ளி மேலே பஞ்சு வாங்கப் பணம் சேர்க்கும்பொருட்டு இந்த முறையை அனுசரிக்கிறார்களென்றும் அப் பத்திரிகை அபிப்பிராயப்படுகிறது. மேலும், இங்ஙனம் செய்வதால் இந்தியாவில் பஞ்சு விலை குறையக் கூடுமாதலால், இந்தியாவிலிருந்து மிகவும் ஸரஸமான விலையில் பஞ்சு வாங்கிக்கொள்ளலாமென்ற கருத்தினால் அவர்கள் இவ்வாறு செய்வதாக "காமர்ஸ்" (வியாபாரம்) என்ற வர்த்தகப் பத்திரிகை சொல்லுகிறது. " இதைத் தடுப்பதற்கு ஏதேனும் வழி கிடையாதா?" என்று "காமர்ஸ்" கேட்கிறது. பம்பாயிலுள்ள ஆலைத்தலைவர்களின் சங்கத்தார் இப்போதே விழிப்பெய்தி இராஜாங்கத்தார் மூலமாக இதற்கு நிவாரணந் தேடுதற்குரிய முயற்சிகள் செய்தாலன்றிப் பின்பு பருத்திக்குப் பணம் வேண்டியிருக்கையிலே சங்கடம் நேருமென்று " டைம்ஸ் ஆப் இந்தியா " எச்சரிக்கிறது. இங்கிலாந்தில் இங்ஙனம் பிறநாட்டுச் சரக்குகள் ஸரஸ விலையால் பரவி விடாதபடி தடுக்க முயற்சிகள் செய்யப்படுகின்றன. அவ்வித முயற்சிகள் செய்யுமாறு ஆலைத்தலைவர்கள் இந்தியா கவர்ன்மெண்டாரை வற்புறுத்தும்படி "டைம்ஸ் ஆப் இந்தியா" சிபார்சு செய்கிறது. ஆனால் ஆங்கிலேய கவர்ன்மெண்டாரிடத்து இங்கிலாந்திலுள்ள வியாபாரிகளுக் கிருக்கும் சலுகை இந்தியா கவர்ன்மெண்டாரிடத்து இந்திய வியாபாரிகளுக்கில்லை யென்பதை "டைம்ஸ் ஆப் இந்தியா" மறந்துபோய்விடுகிறது. இந்திய வியாபாரிகளின் நன்மையையே கருதி இந்தியா கவர்ன்மெண்டார் வியாபார சம்பந்தமான சட்ட திட்டங்கள் செய்வார்களா?

**சாஸ்திர ஆராய்ச்சியும் தேசத்தின் செல்வமும்**

இந்தியாவின் வறுமை தொலைய வேண்டுமானால் சாஸ்திரக்கல்வி இப்போதிருப்பதைக் காட்டிலும் எத்தனையோ மடங்கு விஸ்தாரமாகப் பரவுதல் இன்றியமையாததென்பது தெளிவாகப் புலப்படும். இதற்கு முக்கியமாகச் செய்யவேண்டிய ஆரம்பகாரியம் ஐரோப்பிய 'ஸயன்ஸ்' சாஸ்திரங்களில் முக்கியமானவற்றை தேச பாஷைகளில் மொழிபெயர்த்தலே. சாஸ்திர அறிவு நமக்குள்ளே பரவி, நம்மவர் ஆங்காங்கே சாஸ்திர ஆராய்ச்சிகள் நடத்தி, புதிய யந்திர தந்திரங்களும், இயற்கைச் சக்திகளும் கண்டுபிடித்து, அவற்றைக் கைத்தொழில், விவசாய முறைகளில் பிரயோகப்படுத்த வேண்டும். இதற்கெல்லாம் மூலாதாரம் ஸயன்ஸ் ஞானம் நமக்குள்ளே அதிகமாய்ப் பரவச்செய்வதேயாம். ஏற்கெனவே "ஸயன்ஸ்" பயிற்சி பெற்றிருப்போர், இவ்விஷயத்தில் எவ்வகையிலும் தங்கள் கடமையை நேராகச் செலுத்த வேண்டும். இனி அவர்கள் மேன்மேலும் தங்கள் ஆராய்ச்சிகளைக் கைத்தொழில், விவசாய நெறிகளிலே பிரயோகப்படுத்தி, வியாபாரிகளுக்கும் முதலாளிகளுக்கும் நல்ல பயன் காட்டித் தாமும் கீர்த்திபெறுவதுடன் தேசத்துக்கும் உபகாரம் பண்ணுதல் முதற்காரியம். சாஸ்திர ஆராய்ச்சியால் செல்வம் அபிவிருத்தியடையுமென்பதை ஜனங்களுக்கு எடுத்துக் காட்டவேண்டும்.

*
* *

**ஸர் ராஷ்விகாரி கோஸின் உயில்**

காலஞ்சென்ற ராஷ்விகாரி கோஸ் கீழ்க் கண்டவாறு தமது ஆஸ்தியைப் பல ஸ்தாபனங்களுக்குப் பிரித்துக் கொடுத்திருக்கின்றார். விவசாயத்தை விருத்திசெய்யும் நோக்கத்துடன் கல்கத்தா சர்வகலாசாலைக்கு $2\frac{1}{2}$-லட்சமும், கிராமத்தில் ஏற்படுத்தியிருக்கும் அவரது பாடசாலைக்கு லட்சத்து 50 ஆயிரம் ரூபாயும், கிராமத்திலுள்ள ஒரு சிவன் கோயிலுக்கு சொற்ப பூசொத்தும் 50-ஆயிரம் ரூபாயும், தமது குடும்பத்தாருக்குக் கொடுக்கவேண்டியதுபோக மிஞ்சும் சுமார் 10 லட்ச ரூபாயை வங்காள தேசீய கல்விச் சாலைக்கும் எழுதிவைத்திருக்கின்றார்.

*
* *




# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

13 AUG

தொகுதி XIII } ரௌத்ரிஃ பங்குனிமீ :: 1921-ம் ஏப்ரல்மீ { பகுதி 10


# முருகன் வழிபாடு

## WORSHIP OF MURUGA

தகர நறுமலர் பொதுளிய குழலியர்
கலக கெருவித விழிவலை படவிதி
தலையி லெழுதிய மனைவயி னுறவிடு வதனாலே

தனயர் அனைதமர் மனைவியர் சினெகிதர்
சுரபி திரவிய வகையென நினைவுறு
தவன சலதியின் முழுகியெ யிடர்படு துயர்தீர;

அகர முதலுள பொருளினை யருளிட
இருகை குவிசெய்து ஞருகிட வுருகியெ
அரக ரெனவல னிடமுற எழிலுன திருபாதம்

அருள அருளுடன் மருளற இருளற
கிரண அயில்கொடு குருகணி கொடியொடு
அழகு பெறமா கதமயில் மிசைவர இசைவாயே;

சிகர குடையினி னிரைவர இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவ னளையது
திருடி யடிபடு சிறியவ னெடியவன் மதுசூதன்

திகிரி வளைகதை வசிதனு வுடையவ
னெழிலி வடிவின லரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி மருகோனே!

பகர புகர்முக மதகரி யுழைதரு
வனிதை வெருவமுன் வரஅருள் புரிகுக
பரம குருபர இமகிரி தருமயில் புதல்வோனே!

பலவின் முதுபழம் விழைவுசெய் தொழுகிய
நறவு நிறைவயல் கமுகடர் பொழில்திகழ்
பழநி மலைவரு புரவல அமரர்கள் பெருமாளே.

வேண்டிய போதடியர் வேண்டிய வெறுதுதவும் பேராற்றலும் பெருங்குணமும் வாய்ந்த சர்வேசுவரன் ஒருவனே மானிடர் வழிபடத்தக்கவன் என்ற மெய்யை உலகுக்குப் போதிக்க வேண்டுமென்ற கருத்துடன் கோகுலத்திலுள்ளவர்கள் தேவேந்திரனுக்குச் செய்யவாரம்பித்த திருவிழாவை நிறுத்தி, தனக்கே உற்சவம் நடத்தும்படி செய்து, அதைக் கண்டு மாயையினடிமையான தேவேந்திரன்கோபித்துப் பெய்த தாங்கவொணாத மழையின் கொடுமையினின்றும் கோபாலர்களது சம்பத்தான பசுக்களைத் தப்புவிப்பதற்காக கோவர்த்தனகிரியைத் தூக்கிக் குடையாகப் பிடித்து தூரத்திலுள்ள மேய்ச்சற்றரைக்குச் சென்றிருந்த பசுக்களின் கூட்டங்கள் அக்குடையின் கீழ்வந்து தங்கும்படி தனது புல்லாங்குழலின் இனிய கானத்தினால் அவைகளை யழைக்க வல்ல சாமர்த்தியமுடையவனும், உயர்பதவி, சம்பத்து, பராக்கிரமம், பக்கவலிமை முதலிய ஜடவுலகப் பெருமைகளைச் சிறிதும் மதியாது பக்தியையே பெரிதாக மதிப்பதுதான் பரம்பொருளின் குணம் என்பதைப்போதிக்குமாறு பாண்டவர்க்காகத் தூது சென்ற காலத்தில் துரியோதனனது வேண்டுகோளுக்கிணங்கி அவன் அரண்மனையில் தங்காது விதுரனது சிற்றில்லத்துக்குச் சென்று உறைந்தவனும், ஜீவாத்மாக்களை மாயையினின்று விடுவிப்பதற்கு எவ்விழிதொழிலையும் செய்ய ஈசன் தயாராயிருப்பதைப் போதிப்பதற்கென்றே பரிசுத்தமான வெண்ணெயைத் திருடி யசோதையின் கையினால் அடிபட்ட சிறுவனும், சர்வேசுவரனைத் தவிர நிகரற்றவர் உலகிலில்லை யென்பதைத் தெரிவிக்குமாறு தான் இணையிலியென்று மமதை கொண்டிருந்த மகாபலிசக்ரவர்த்தியை யழிப்பதற்காகத் திருவிக்கிரமாவதாரம் பூண்டவனும், முக்திக்குக் காரணமானவனும், சக்ரம், சங்கம், கதை, கத்தி, வில் என்ற பஞ்சாயுதங்களைக் கைகளிற் றாங்கியவனும், யாவர் மனத்தையுங் கவரத்தக்க அழகு வாய்ந்தவனும், தன்னைக் கொல்ல வந்த காளியன் என்ற சர்ப்பத்தின் படங்களின் மீதேறி நிர்த்தனஞ்செய்து அவனை மாய்த்தவனும், வினைப்பயனைச் சங்கரிக்கவல்லவனுமான மகாவிஷ்ணுவின் திருமருகா? மிக்கவொளி வீசும் கபிலநிறமுள்ள முகத்தையுடைய மதயானையின் உருக்கொண்டு மான் மகளான வள்ளிநாயகியார் பயந்து மனங்கலங்கும்படி அத்தேவியார் முன் விநாயகர் தோன்றியகாலத்தில் அப்பயத்தை யகற்றி அருள் புரிந்தவனான ஜீவகோடிகளின் இதயத்தாமரைகளி லுறையும் குகனே! பரம்பொருளே! பரம்பொருளை யடைவதற்கவசியமான ஞானத்தைப்

(இதன் தொடர்ச்சி 257-ம் பக்கம் பார்க்க.)

விவேக போதினி

தொ. 13] ரௌத்ரி௵ பங்குனி௴ [ப. 10

## ஸ்ரீகிருஷ்ணன்

## SRI KRISHNA

ஒருநாள் இராமகிருஷ்ணர்கள் யமுனைக் கரையில் ஆடு மேய்த்துக் கொண்டிருக்கும் போது இருகக்ஷிகளாய்ப்பிரிந்து, வேடிக்கையாய் விளையாடிக்கொண்டிருந்தார்கள். அதற்கருகிலுள்ள ஒரு வனத்தில் முதிர்ந்த பனம்பழங்கள் நிறைந்திருக்கக்கண்டு, கோபாலர்கள் கண்ணனை வேண்டினார்கள். பலராமர் அதற்கிணங்கி, பழங்களைப் பறித்துக் கொண்டிருக்கையில், அவ்வனத்துக்குக் காவலனான தேனுகாசுரன் ஓடிவந்து, அவரை மார்பில் உதைத்தான். கழுதை உருவங்கொண்ட அந்த துஷ்டனைப் பலபத்திரர் கால்களைப் பிடித்துச் சுழற்றி விட்டெறிய, பனைமரங்கள் ஒன்றின்மேல் ஒன்று தாக்கி முறிந்து விழுந்து, பூமியெங்கும் பழங்களை உதிர்த்தன. தேனுகன் மாண்டதைக் கண்டு அவனுடைய பந்துக்கள் நரிவேஷம் பூண்டு எதிர்க்க, இராமகிருஷ்ணர்கள் அவர்களை ஒரு நொடியில் அடித்துக் கொன்றார்கள்.

இன்னுமொரு நாள் கண்ணன் மாத்திரம் கோபாலர்களை அழைத்துக்கொண்டு யமுனா நதிக்குச்சென்றார். வெயிலினால் இளைத்து தாகமெடுத்து பசுக்களும் கோபாலர்களும் யமுனையின் மடுவிலிருக்கும் ஜலத்தைக் குடித்து, அதிலுள்ள விஷத்தால் மயங்கிவிழுந்து மரணமடைந்தார்கள். கண்ணன் அவர்களைத் தமது அமுதப்பார்வையால் பிழைக்கச் செய்தார். காளியனென்ற மகா சர்ப்பம் அங்கிருப்பதால் பலருக்குப் பயமும் அபாயமும் நேர்வதை அறிந்து, கண்ணன் அங்கிருந்த உயரமான கடம்ப மரத்தின்மேல் ஏறி, மடுவிற் குதித்து ஜலத்தைக் கலக்கி விளையாடினார். அந்தச் சத்தத்தைக் கேட்ட காளியன் கடுங்கோபங் கொண்டு அவரைக்கடித்து இறுக்கிப்பிடித்துக் கொண்டது. கரையிலிருந்த இடையர்களும் பசுக்களும் பயத்தாலும் வருத்தத்தாலும் கதறியழுதார்கள். கோகுலத்திற் காணப்பட்ட அபசகுனங்களைக் கவனித்த நந்தர், தனியாய்ப் போயிருக்கும் தமது குழந்தைக்கு ஏதோ அபாயம் நேரிட்டதென்று மனம்பதைத்து, ரோகிணி, யசோதை முதலியவர்களுடன் ஓடிவந்தார். கண்ணன் யமுனையின் நடுவில் காளியனாற் கட்டுண்டு மயங்கிக் கிடப்பதைப் பார்த்து, தலையிலும் மார்பிலும் அடித்துக்கொண்டு தாங்களும் ஜலத்திற் குதிக்கப் போனார்கள். பகவானுடைய கருத்தை அறிந்த பலராமர் அவர்களைத் தடுத்து தேறுதல்செய்தார். தமது பக்தர்களை நெடுநேரம் வருத்தப்படுத்தக்கூடாதென்று எண்ணிய கிருஷ்ணன் உடனே கருணைகூர்ந்து, தமது தேகத்தைப் பெருக்கச்செய்து பாம்பின் கட்டைத் தறித்து அதனுடைய உடலைக் கால்களாலும் கைகளாலும் குத்தி, அதிவேகமாய் அதனைச் சுற்றி வட்டமிட்டு மயங்கச் செய்து, சமயம் பார்த்து அதனுடைய தலையில் ஏறிப் படங்களில் நிர்த்தனஞ் செய்தார். அவருடைய பாரத்தைத் தாங்கமுடியாத காளியன் களைத்துத் தளர்ந்து, தேகம் நொந்து, கண்கள் பிதுங்கி, மூச்சுத் திணறி, மூர்ச்சையடைந்து பிணம்போல் விழுந்தது.

அப்பொழுது அதனுடைய மனைவிகள் காணிக்கைகளுடன் கோவிந்தனை அடிபணிந்து, அவரது மகிமையைத் துதித்து, "சர்வலோக சரண்யனும் கருணாமூர்த்தியாயும் விளங்கும் உமது மகிமையை அறியாமல் இந்தக் காளியன் செய்த அபராதத்தை மன்னித்து, எங்களுக்கு இவனுடைய உயிரைப் பிச்சையாய்க் கொடுக்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். அதைக்கேட்டு, கண்ணன் மனமிரங்கி காளியனை விடுவித்து, "இனி நீ இவ்விடத்தில் தங்காதே. உன் பரிவாரங்களுடன் சமுத்திரத்திற்குப் போ" என்று கட்டளையிட்டு, யமுனையினின்று விஷம் நீங்கச்செய்து கரைக்கு வந்தார். எல்லோரும் அவரை ஆலிங்கனஞ் செய்துகொண்டு மகிழ்ந்து புகழ்ந்தார்கள்.





அன்று இராத்திரி அங்கெல்லோரும் தூங்கிக்கொண்டிருக்கையில், காட்டுத்தீ பற்றிக்கொண்டு அவர்களை எரிக்க ஆரம்பித்தது. எல்லோரும் இராமகிருஷ்ணர்களைச் சரணமடைய, கண்ணன் அந்த நெருப்பைக் குடித்து, அவர்களுக்கு நேர்ந்த ஆபத்தைப் போக்கினார்.

ஒருநாள் கோபாலர்கள் வனத்தில் விளையாடிக் கொண்டிருக்கையில் இருவரிருவராய்ச் சண்டைசெய்து, தோற்றவன் ஜயித்தவனைச் சிறிது தூரம் தூக்கிக்கொண்டு போகவேண்டுமென்று பந்தயம்வைத்து ஆடினார்கள். அப்பொழுது கம்சனால் அனுப்பப்பட்ட பிரலம்பாசுரன் அவர்களில் ஒருவனாய் வேடந்தரித்து, பலராமரைத் தூக்கிக்கொண்டு மறைந்தான். ஆயினும் அவருடைய சரீரபாரத்தைத் தாங்கமுடியாமல் நிஜரூபத்தை எடுத்தான். உடனே பலராமர் அவனுடைய தலையை முஷ்டியால் உடைத்து அவன் உயிரைக் கொள்ளைகொண்டார்.

இப்படித் தங்களுடைய ஆச்சரியகரமான வீரச்செயல்களைக் காட்டி, இவர்கள் தேவர்களோ திரிமூர்த்திகளோவென்று எல்லோரும் அடிக்கடிமலைத்துப் பக்தியால்பரவசமடையும்படிக்கும், உடனே அந்த ஞானத்தைத் தம் மாயையால் மறைத்து, அவர்கள் தங்களைச் சாதாரண மானிடக் குழந்தைகளென்றெண்ணி எல்லையற்ற பிரீதிவைக்கும்படிக்கும் செய்தார்கள். இதனால் அவர்கள் எல்லோரும் எக்காலத்திலும் எந்த ஸ்திதியிலும் எந்த விடத்திலும் கண்ணனையே நினைத்து, அவருடைய அழகையும் குணங்களையும் பராக்கிரமத்தையும் வருணித்து, அவைகளைத் தாங்கள் நடித்துக்காட்டி, தங்களுடைய உடலையும் ஆவியையும் அவருக்கே அர்ப்பணஞ்செய்து, பரமானந்தத்தை அனுபவித்துக்கொண்டிருந்தார்கள்.

கோகுலத்திலுள்ள சில பெண்கள் மார்கழி மாதத்தில் கடுமையான விருதத்தை அனுஷ்டித்து, மகாதேவியை ஆராதித்துத் தங்களுக்குக் கண்ணனே கணவனாயிருக்கவேண்டுமென்று பிரார்த்தித்துக்கொண்டிருந்தார்கள்.

ஒருநாள் யமுனைக்கரையில் பசுக்களை மேய்த்துக்களைத்துப்போயிருந்தகோபாலர்களிற்சிலர் பசியால் வாடிக் கண்ணனிடம், வந்து "கண்ணா! எங்களுடைய கஷ்டத்தைத் தீர்க்கவேண்டும்" என்று பிரார்த்தித்தார்கள். கிருஷ்ணன், "இதற்குச் சமீபத்தில் சில பிராமணர்கள் யாகஞ் செய்கிறார்கள். அவர்களிடத்திற் சென்று எங்களுடைய பெயரைச் சொல்லி, அன்னம் கேளுங்கள்" என்றார். கேவலம் கர்மங்களைச் செய்து அவற்றின் பயன்களை அடைய விரும்பி, தாங்கள் ஞானிகளென்று மதித்திருந்த அந்தப்பிராமணர்கள், கண்ணனை இடையனென்று மதித்து, ஒன்றும் பதில் சொல்லாமல் அலக்ஷியமாயிருந்தார்கள். அதைக் கேட்ட பகவான் சிரித்துக்கொண்டு, "நீங்கள் அந்தத் தீக்ஷிதர்களுடைய பத்தினிகள் இருக்குமிடத்திற்குச் சென்று, நானும் இராமனும் இங்கு வந்திருப்பதாகவும், அன்னம் வேண்டுமென்று விரும்புவதாகவும் சொல்லுங்கள்" என்று அந்தக் கோபாலர்களை அனுப்பினார்.

கண்ணனுடைய அனந்த கல்யாண குணங்களைக் கேட்டு, அவரிடத்தில் ஈடுபட்ட மனமுடையவர்களாய், அவரைத் தரிசிக்கவேண்டுமென்று நெடுநாளாய் ஆசைகொண்ட அந்த உத்தமிகள், மதுரமான அன்னங்களைப் பக்குவம் செய்து எடுத்துக்கொண்டு கண்ணனிருக்குமிடத்திற்குவந்து, அவைகளைச் சமர்ப்பித்து, அவர்கள் புசித்தவுடன் அவரைப் பணிந்து, கண்கொட்டாமல் அவருடைய திருமுக மண்டலத்தைப் பார்த்துக்கொண்டே நின்றார்கள். கண்ணன் அவர்களைக் கிருபையுடன் கடாக்ஷித்து, "நீங்கள் என்னிடத்தில் வைத்த பக்திக்கு நான் மிகவும் சந்தோஷித்தேன். உங்களுடைய புருஷர்கள் எவ்வளவு தடுத்தும் கேட்காமல் என்னைப் பார்க்க வந்திருக்கிறீர்கள். ஆகையினால் சீக்கிரமாய் யாகசாலைக்குத் திரும்பிப்போங்கள். நான் உங்களுக்கு என்ன செய்யவேண்டும்?" என்று கேட்டார்.

அந்த ஸ்திரீகள், "நாதா! வீடு வாசல் கணவன் பிள்ளை தனம் முதலிய யாவையும் விட்டு, உமது பாதமே கதியென்று வந்தடைந்தோம். எங்களை எப்பொழுதும் ஆட்கொண்டு உமது கைங்கரியத்திலேயே ஈடுபட்டிருக்கச் செய்யவேண்டும். எங்களைக் கணவர்கள் மறுபடியும் அங்கீகரிக்கமாட்டார்கள். எங்களுக்கு வேறு கதியில்லை" என்றார்கள்.

கண்ணன், "என் உத்தரவு முன்னிற்பதால் உங்களை எவரும் கொண்டாடுவார்கள். மனத்

தை என்னிடத்தில் எப்பொழுதும் நாட்டி, என் குணங்களைச் சொல்லியும் கேட்டும் ஸ்மரித்தும்,என்னையே யாவுமாய்ப் பாவிப்பது என்னை அடைவதற்குரிய வழியாகும். கேவலம். என் சரீர சம்பந்தத்தாலும் எனக்கருகிலிருப்பதாலும் அது கிடைக்காது. நீங்கள் எங்கிருந்தாலும் உங்களுடைய மனம் என்னிடத்திலேயே லயிக்கட்டும்'' என்று அநுக்கிரகித்து விடைகொடுத் தனுப்பினார். அப்படிச்சென்ற அவர்களை அவர்களுடைய கணவர்களும் வெகு பிரீதியுடன் அங்கீகரித்துக் கொண்டார்கள். "ஐயோ! நாம் அஞ்ஞானத்தாற் கண்ணனை பகவானென்றறியாது பெருங் குற்றத்தைச் செய்தோமே. நமது பிறப்பு, படிப்பு, அநுபவம், நியமம் தவம் இவையாவும் வீணாயினவே! பிறருக்கு ஆசார்யர்களாயிருந்தும் கேவலம் ஸ்திரீகளுக்குள்ள பக்தியும் ஞானமும் நமக்கில்லாமற் போயினவே! லோகநாதா! உமக்கு நமஸ்காரம். உம்முடைய மாயையால் மயங்கினேம்.எங்களை மன்னிக்க வேண்டும்'' என்று எண்ணிப் பச்சாத்தாபமடைந்து கண்ணனைத் தரிசிக்க விரும்பினார்கள். ஆனால் கம்சன் என்ன செய்வானோ வென்ற பயம் அவர்களைத் தடுத்தது.

ஒரு நாள் கோகுலத்திலுள்ளவர்கள் வழக்கப்படி இந்திரனுக்கு யாகஞ் செய்வதற்காக ஏற்பாடு செய்துகொண்டிருந்தார்கள். கண்ணன் அதை அறியாதவர்போல் "பெரியோர்களே! இது என்ன யாகம்? எந்தப் பலனைப் பெறுவதற்காக? அந்தப் பலனைக் கொடுக்கும் தேவதை யார்? இந்த யாகத்தை செய்யத் தகுந்தவன் யாவன்?'' என்று கேட்டார். நந்தன் "நமக்குப் பசுக்களும் தானியங்களும் ஜீவாதாரம். இவை தகுந்த காலத்தில் மழைபெய்வதால் செழிக்கும். அந்த மழையைக் கொடுக்கும் தேவேந்திரனை உத்தேசித்து, ஆடு மாடுகளை மேய்க்கும் குலத்தாரான நாங்கள் இந்த யாகத்தைச் செய்கிறோம்'' என்றார்.

கண்ணன், "அது எப்படி? அவரவர்களுடைய ஸ்வபாவத்துக்குத் தகுந்தபடி செய்யும் கர்மங்களுக்கு ஈசுவரனே பலனைக் கொடுக்கிறார். இதில் இந்திரனுக்கு என்ன சம்பந்தம்? நமக்கு இந்தக் காடுகளும் மலைகளுமே வீடு. பசுக்களையும் பிராமணர்களையும் நதிகளையும் பூஜிக்கவேண்டும். ஆகையால் நீங்கள் இதுவரையில் இந்திரனுக்குச் செய்த சகல உபசாரங்களையும் இந்த கோவர்த்தன மலையின் தேவதைக்கும் பிராமணர்களுக்கும் ஏழைகளுக்கும் பசுக்களுக்கும் செய்து உத்ஸவம் கொண்டாடுங்கள்'' என்றார்.

அவர்கள் கண்ணனுடைய வார்த்தைக்கிணங்கி அப்படியே செய்து, கோவர்த்தனகிரியைப் பூஜித்துப் பலிபோட்டார்கள். கண்ணன் அந்தப் பர்வததேவதையாய் உருவந் தரித்து, மேல் நின்று அந்தப் பலியை ஏற்றுக் கொண்டார். தாமும் கோபாலர்களில் ஒருவராயிருந்து அதை நமஸ்காரஞ் செய்து அதன் மகிமையைக் கொண்டாடினார்.

இந்திரன் அதை யறிந்து, கண்ணனுடைய மாயையினால் மதிமயங்கி, தனக்குச் செய்ய வேண்டிய பூஜையை அவர் தடுத்ததற்காகக் கோபங்கொண்டு, ஏழு காளமேகங்களை அழைத்து, "இந்தக் கோகுலமும் கோபர்களும் கோபாலர்களும் பசுக்களும் கன்றுகளும் ஸ்திரீபுருஷர்களும் நீங்கள் பெய்யும் மழையினால் நடுங்கிப் பயந்து விறைத்து மடியவேண்டும். அவ்வாறு பெய்யுங்கள்''என்று கட்டளையிட்டான்.

அப்படியே அந்த மேகங்களிலிருந்து யானைத் துதிக்கையைப் போன்ற மழைத்தாரைகள் ஓயாமல் இராப்பகலாய்ப் பெய்ய ஆரம்பித்தன; அதனால் எங்கும் பிரவாகம் மேடுபள்ளமில்லாமல் நிரம்பியது. இருட்டினாலும் பெருங் காற்றினாலும் அடை மழையினாலும் மரங்கள் முறிந்துவிழும் சத்தத்தினாலும் மனிதர்களும் பசுக்களும் நடுநடுங்கி அடியார்க்கெளியனான கண்ணனைச் சரணமடைந்தார்கள்.

கிருஷ்ணன் இந்திரனுடைய அறிவீனத்தை நினைத்துச் சிரித்து, அவனுடைய மதத்தையும் மயக்கத்தையும்போக்குவற்கு,அந்தக்கோவர்த்தன மலையை ஒரு கையால் தூக்கி, குழந்தைகள் நாய்க்குடையைப் பிடுங்கித் தலைக்குமேல் பிடிப்பதுபோல் விளையாட்டாய்க் குடையாகப் பிடித்து, எல்லோரையும் அதன் கீழ் தங்கும்படிசெய்து, ஏழுநாட்கள் சற்றும் அசையாமல் அவர்களுக்கு யாதொரு குறைவுமில்லாமல் காப்பாற்றினார்.

அதைக்கண்டு இந்திரன் கர்வமழிந்து, மோகமொழிந்து, மழையை நிறுத்தி, கண்ணனுடைய பாதங்களில் விழுந்து "அஞ்ஞானத்தால் நான் செய்த அபராதத்தை மன்னித்து

நகைத்து இகழ்வோனை நாயென நினை.



எனக்கு இனி இவ்வித மோகம் நேராதபடி கிருபைசெய்யவேண்டும்'' என்று பிரார்த்தித்தான்.

அவனுடன் அங்கு வந்த காமதேனு தன் குழந்தைகளான பசுக்களைக் காத்த கண்ணனை அடிபணிந்து, தன் பாலைப் பொழிந்து அவருக்கு அபிஷேகஞ் செய்தது. இந்திரன் ஆகாய கங்கையிலிருந்து கொண்டுவந்த புண்ய தீர்த்தத்தினால் அவருக்குத் திருமஞ்சனம் செய்வித்து, கோவிந்தனெனப் பெயரிட்டான்.

கோபர்களும் கோபிகளும் கோபாலர்களும் கண்ணனுடைய ஆச்சரியகரமான செயல்களைப்பார்த்து, வரவரச் சந்தேகமும் ஆச்சரியமும் ஆனந்தமும் பெருகப்பெற்றார்கள்.

ஒரு நாள் துவாதசியன்று நந்தர் அருணோதயத்துக்கு முன் அசுரகாலத்தில் யமுனையில் ஸ்நானஞ் செய்துகொண்டிருக்கையில், ஓர் அசுரன் அவரை வருணலோகத்துக்கு இழுத்துக்கொண்டு போனான். கண்ணன் அதை யறிந்து, எல்லோரையும் சமாதானப்படுத்திவிட்டுத், தாம் வருணலோகம் சென்றார். அங்கே அந்தத்திக்பாலன் அவரைவணங்கி வரவேற்றுப் பூஜித்து, "ஸர்வேச்வரா! தெரியாத்தனத்தினால் என் வேலைக்காரன் உமது தகப்பனாருக்குச் செய்த அபசாரத்தைப் பொறுத்தருள வேண்டும்'' என்று மன்னிப்புக் கேட்டுக்கொண்டு, அக்காரணத்தால் பகவான் தன்னிடத்தில் வந்ததைப்பற்றி மகிழ்ந்து, நந்தகோபருடன் கண்ணனைப் பூமியில் கொண்டுவந்துவிட்டு விடைபெற்றுச் சென்றான். அதைக் கேட்ட எல்லோரும் கோவிந்தனை ஈசுவரனென்றே நினைத்துப் பூஜித்தார்கள்.

உலகமெங்கும் மகிழ்ந்திருக்கும் சரத்காலத்தில், நிலவொளி வீசும் இராக்காலங்களில் கண்ணன் யமுனைக்கரையில் கேட்பவர்களின் உடலுக்கும், உயிருக்கும் மனமுதலிய இந்திரியங்கட்கும்இன்பமளிக்கும் இனிமையான தம் வேணுகானத்தால் சகல கோபிகளையும் மாடுகளையும் கன்றுகளையும் தம்மிடத்துக்கு வருவித்துஅவர்களுக்கு நடுவில் தாம்பாடிக்கொண்டும் ஆடிக்கொண்டும் விளையாடி அவர்களுக்குப் பரமானந்தத்தைக் கொடுத்தார். அவர்கள் கணவர்களையும் தனதானியங்களையும் பிள்ளைகளையும் வீடுவாசல்களையும் உற்றார்பெற்றோரையும் மறந்து, தங்களுடைய காரியங்களைவிட்டு, அந்தக் கண்ணனையே கதியாக அடைந்தார்கள். சகல ஜீவகோடிகளிடத்திலும் ஆத்மாவாய் விளங்கும்பகவான் அந்தக்கோபிகளின் கோரிக்கையை அறியாதவரா? கேவலம் தமது நினைப்பினாலேயே அவர்களுக்குப் பரமானந்தத்தையுண்டுபண்ணினார். அவர்களோ கிருஷ்ணனிடத்தில் நாடின மனமுடையவர்களாய், அவருடைய கதைகளையே சொல்லிக்கொண்டும், அவருடைய சரித்திரங்களையே நடத்திக்காட்டிக்கொண்டும்,அவரையே எங்கும் பார்த்தும், தங்களையும் அவராகவே நினைத்து மகிழ்ந்தார்கள். கணவனால் தடுக்கப்பட்ட சில கோபிகள், வீட்டிலிருந்தே அவரை ஏகாந்தத்தில் தியானித்து, அவரிடத்திலேயே மனத்தை நாட்டி, ஸமாதியில் கலந்து, தேகத்தை விட்டு, அவருடைய திருவடிகளை யடைந்தார்கள்.

இப்படிக் கண்ணனும் பலராமனும் கோகுலத்தில் வளர்ந்துகொண்டு, கம்சனுடைய தோழர்களான அசுரர்களை சமயம் நேரும் பொழுது பலவிதமாய்க் கொன்று, தாம் அவதரித்த காரியத்தை நிறைவேற்றிக்கொண்டிருக்கும்பொழுது,இதையெல்லாம் தன் தூதர்கள் மூலமாய் அறிந்த கம்சன், ஆச்சரியமும் பயமும் சந்தேகமு மடைந்தான். அப்பொழுது நாரதர் வந்து கம்சனைக் கண்டு, "வசுதேவருக்குத் தேவகியிடத்தில் பிறந்த எட்டாவது புத்திரனே கிருஷ்ணன். ரோகிணியினிடத்தில் பிறந்த புத்திரனே பலராமன். உனக்குப்பயந்து அவர்களை வசுதேவர் நந்தகோபருடைய வீட்டில் விட்டிருக்கிறார். ஆகாயத்தில் பறந்து போன பெண்ணே யோகமாயை, யசோதையினிடத்தில் பிறந்த குழந்தை. உன்னால் அனுப்பப்பட்ட அசுரர்கள் யாவரும் இராமகிருஷ்ணர்களால் கொல்லப்பட்டார்கள். ஜாக்கிரதையாய் இரு'' என்று எச்சரித்துப்போனார்.

கம்சன் வசுதேவரையும் தேவகியையும் சிறையில் அடைத்தான். அவர்களைக் கொன்றால்இராமகிருஷ்ணர்கள்ஓடிப்போவார்களென்று அவனுக்குப் பயமிருந்தது. பிறகு தன் மந்திரிகளையும் நண்பர்களையும் தருவித்து,"கேசி! நீஇப்பொழுதேசென்றுஇராமகிருஷ்ணர்களைக் கொன்று வா. அப்படி அவர்கள் உனக்குத் தப்பினால் இங்கே ஏதாவது உபாயஞ் செய்து அவர்களைத் தருவிக்கிறேன். அவர்களை மல்லயுத்தத்தில் நீங்கள் அடித்துக் கொல்லவேண்

நக்குகிற நாய்க்குச், செக்கு என்றும், சிவலிங்கம் என்றும் தெரியுமா?

டும். நமது பட்டத்து யானையான குவலயா பீடத்தைக்கொண்டு வரும்வழியில் அவர்களைத் தடுத்துக் கொல்லுகின்றேன். வரும் சதுர்தசி தினத்தில் தனுர்யாகத்தைச் செய்யப் போகிறேன். அதற்காக எல்லோரையும் தருவிக்க வேண்டும். அக்ரூரரே! நீர் எனக்கு மித்திரர், மந்திரி. இப்பொழுதே கோகுலத்துக்குச் சென்று, அங்கிருக்கும் வசுதேவ புத்திரர்களான இராமகிருஷ்ணர்களையும் நந்தன் முதலிய கோபர்களையும் அழைத்துவாரும்; அவர்களைக்கொல்வதற்காகப் பலஉபாயங்களைச்செய்திருக்கிறேன்" என்று இவ்வாறான தன் சூழ்ச்சிகளை யெல்லாம் அவர்களுக்கு எடுத்துச் சொல்லியனுப்பினான்.

கம்சனால் அனுப்பப்பட்ட மகா குரூரனான கேசியென்ற அசுரன் குதிரை வடிவங் கொண்டு, கோகுலத்துக்கு வந்து எல்லோரையும் நடுங்கச்செய்தான். அவர்கள் கண்ணனைச் சரணமடைய, பகவான் அவனுடைய கால்களைப் பிடித்துச் சுழற்றி, பூமியில் அடித்துக் கொன்றார்.

பிறகு மகாத்மாவான அக்ரூரர் மதுரையிலிருந்து புறப்பட்டு அதிவேகமாய் நந்தகோகுலத்துக்குச் சென்றார். அவர் பகவானிடத்தில் எல்லையற்ற பக்திவைத்த பரமசாதுவாகையால் அவர் தமக்குக் கம்சன் இட்ட கட்டளையைப் பெரிய அநுக்கிரகமாய் நினைத்து மகிழ்ந்தார். "இந்தக் காரணத்தாலாவது நான் பரமபுருஷனை கண்ணனைத் தரிசிக்கும் பாக்கியத்தைப் பெற்றேனே. அவரை மதுரைக்கு அழைத்துப்போய் கம்சன் முதலிய துஷ்டர்களை யழித்து, விஷ்ணுவின் அவதார காரியத்தை நிறைவேற்றுவதில் ஏதோ ஒருவிதமாய் கைங்கரியஞ் செய்யும் பாக்கியம் எனக்குக் கிடைத்ததே" என்று நினைத்து நினைத்துப் போகும் வழியெல்லாம் பகவானை நமஸ்கரித்துக்கொண்டே சென்றார். நந்தகோகுலத்துக்குச்சென்று, மாட்டுக்கொட்டிலில் இராமகிருஷ்ணர்களைக் கண்டு கண்ணாரத் தரிசித்து, அவர் பாதங்களில் விழுந்து, தம் பெயரைச் சொல்லி, அபிவாதனஞ்செய்தார். கண்ணன் அவரைத் தூக்கி, ஆலிங்கனஞ்செய்து, விதிப்படி உபசரித்து, க்ஷேமம் விசாரித்தார். போஜன மானபின், அக்ரூரர் கம்சனுடைய கெட்ட எண்ணத்தையும், ஆலோசனைகளையும், தேவகி வசுதேவர்களின் நிலைமையையும், நாரதர் கம்சனை எச்சரித்ததையும், தம்மை அவன் அனுப்பிய காரியத்தையும் எடுத்துரைத்தார். பகவான் அவரை ஆதரித்துப் புன்சிரிப்புடன் "இவையெல்லாம் எனக்குத் தெரியாதவையல்ல. நாரதர் இங்கேவந்து, இதுவரையில் நடந்ததையும் இனி நடக்கப்போவதையும் எனக்குத்தெரிவித்துப்போனார். நீர் ஒன்றுக்கும் கவலைப்படவேண்டாம்" என்றார்.

பிறகு நந்தகோபருக்கு அந்தச் செய்தியைத் தெரிவித்து, தனுர்யாகத்தைப் பார்ப்பதற்கு எல்லோரும் போகவேண்டுமென்று பிரயாணத்துக்குத் தயார் செய்யச்சொன்னார். அவருடைய பிரிவை ஆற்றாமல் அனலிலிட்ட மெழுகைப்போல் தவிக்கும் கோபிகளை ஒருவாறு சமாதானஞ் செய்துவிட்டு, அங்கிருந்து அக்ரூரருடன் மதுரையை நோக்கிப் புறப்பட்டார்.

போகும் வழியில் அக்ரூரர் யமுனையில் ஸ்நானஞ்செய்தார். அப்பொழுது ஜலத்தில் இராமகிருஷ்ணர்களைக் கண்டு பிரமித்து, கரையில் பார்க்கும்பொழுது, அவர்களையே இரதத்திற் கண்டார். மறுபடியும் ஜலத்தில் மூழ்கினார். அங்கே ஆதிசேஷனுடைய மடியில் யோகநித்திரை செய்யும் நாராயணமூர்த்தி, சங்கசக்ர கதாதாரியாய் லக்ஷ்மீஸமேதராய் வனமாலை கௌஸ்துபம் ஸ்ரீவத்ஸம் முதலிய அலங்காரங்களுடன், நந்த ஸுநந்த ஜயவிஜயர் முதலிய நித்ய ஸூரிகளும் ஸனகாதி யோகிகளும், மகேச்வரன் பிரமா இந்திரன் முதலிய தேவர்களும் தேவரிஷிகளும் பிரகலாதர் முதலிய பாகவதர்களும் சகல சக்திகளும் பூஜைசெய்ய விளங்குவதைக் கண்டு ஆனந்தமடைந்து, மெய்மறந்து தழுதழுத்த குரலுடன் அந்த விசுவரூபத்தைத் தோத்திரஞ் செய்தார்.

---

பஞ்சரத்தினம்.—புதிய பதிப்பு. 5-அழகிய ஆப்டோன் படங்கள் கொண்டது. சிறுவர் சிறுமியருக்கு உபயோகமாகும்படி, எளிய நடையில் எழுதப்பட்டது. இதில் சீதை, ருக்குமணி, சகுந்தலை, தமயந்தி, சாவித்திரி முதலிய ஐந்து ஸ்திரீ ரத்தினங்களின் சரித்திரம் கொண்டது. இது ஒவ்வொருவர் வீட்டிலும் அவசியம் இருக்கவேண்டிய நூல். விலை, அணா. 12. எல்லாத் தமிழ், இங்கிலீஷ் பத்திரிகைகளாலும் நன்குச் சிலாகிக்கப் பெற்றது.

(துரைத்தனத்தார் அங்கீகரித்தது.)

நச்சுமரம் ஆனாலும் நட்டவர்கள் வெட்டுவார்களா?



# கந்தரநுபூதி ஆராய்ச்சி

## KANDAR ANUBOOTHI

[ஸ்ரீமான் வ. சு. செங்கல்வராய பிள்ளை அவர்கள், எம்.ஏ.]

விவேக போதினியின் 1919-ஆம் ஜூன்மீ பகுதியிற் கந்தரலங்கார ஆராய்ச்சி வெளிவந்தது. கந்தரலங்கார ஆசிரியராகிய ஸ்ரீ அருணகிரிநாத சுவாமிகளே கந்தரநுபூதி என்னும் நூலுக்கும் ஆசிரியர். ஸ்ரீகந்தபிரான் இவருக்குச் செய்த உபதேசச் சிறப்பையும் அப்பிரானது திருவருட் பிரசாதத்தின் பெருமையையும் பேசும் நூலாதலின் இந்நூலுக்குக் கந்தரநுபூதி என்னும் பெயர் போந்தது. (அநுபூதி=திருவருட் பிரசாதம்). முருகபிரான் இவரைத் தடுத்தாட்கொண்டு, திருவடிசூட்டி, மௌனோபதேசஞ்செய்த பிறகு இந்நூலை இவர் பாடினர் என்பது,

"எனையாண்ட இடந்தானே பொருளாவது" (௩);
"மெய்ப்பொருள் பேசியவா" (அ),(கக); "முருகன்*
சும்மாஇரு, சொல்லற என்றலுமே" (கஉ);
"உபதேசம் உணர்த்தியவா" (உ௦); "வேலவனன்
றெவ்வாதெனவுணர்வித்தது" (௩௦); "நீதாளியை
யாண்டது செப்புமதோ" (௩அ);
நினதன்பருளால் பேசா அநுபூதி பிறந்தது" (ச௩);
"முருகன் சரணம் சூடும்படி தந்தது (சச)

எனவருந் திருவாக்கால் அறியக்கிடக்கின்றது. இந்நூல் ஐம்பத்தொரு செய்யுட்கள் கொண்ட அற்புதச் சிறுநூல். பொருட்சிறப்பில் இச்சிறுநூலுக்கிணையாம் பிறநூல் இல்லை யென்பது சரதம். ஐம்பத்தொரு செய்யுட்களுக்கு மேற்பட்டனவாய் அச்சிடப்பட்டுள்ள பாடல்கள் அருணகிரியாருடைய திருவாக்கு அல்ல என்பதிற் சிறிதேனும் ஐயமில்லை. பொருட்பொலிவு சொற்பொலிவு ஒன்றுமில்லாத அப்பாடல்கள் இவ்வைம்பத்தொரு பாடல்களோடு சேர்க்கப்பட்டது பாலொடு நீர்கலந்த பாபத்துக் கிணையென்னலாம். ஆயினும் அருணகிரியாருடைய நடைச்சிறப்பும் பொருட்சிறப்பும் உணர்ந்த அடியராம் அன்னங்கள் இவைதாம் அருணகிரியார் திருவாக்காகும் பால், இவைதாம் ஏனையர் இடையிற் பெய்த நீர் என எளிதில் உணர்ந்து நீரை விலக்கிப் பாலைப்பருகும். இனி, ஒரு சாரார் "பேசா அநுபூதி பிறந்ததுவே" என்னும் 43 - ஆவது செய்யுளொடு நூல் முடிவு பெறுகின்றது; இறுதியிலுள்ள எட்டுப் பாடல்களுங்கூட கந்தரநுபூதியைச் சேர்ந்ததல்ல. 'அநுபூதி பிறந்ததுவே' என முடிந்த காரணத்தாற்றான் நூலுக்குக் கந்தரநுபூதி எனப் பெயர்வந்தது. "பேசா அநுபூதி பிறந்தது" என்று கூறின பின்னர், பாடல்கள் பேசினர் என்பது பொருத்தமில்லை என்று கூறுவர். இதை ஆராய்வோம். இறுதி எட்டுப் பாடல்களின் சொல்லும் பொருளும் முன்னுள்ள 43-பாடல்களின் சொல்லுக்கும் பொருளுக்குங் குறைவுபடாதனவாய் மிக விசேடமாகவே புலப்படுகின்றன; பேசா அநுபூதியைக்குறித்துப் பன்னிரண்டாம் பாடலிலேயே "சும்மா இரு சொல்லற" என்று கூறியிருக்கின்றாரே; ஆதலின் இந்நூல் பன்னிரண்டாம் செய்யுளொடு முடிவுபெற்றது என்றுங் கூறலாமே.

"அருணை நகர் மிசை கருணையொ டருளிய
மவுன வசனமும் இருபெரு சரணமு
[மறவேனே (469)

என்னும் திருப்புகழைப் பாடினபின் கடல் மடை திறந்ததுபோல ஆயிரக்கணக்கான திருப்புகழ்ப் பாடல்களையும், கந்தரலங்காரம், திருவகுப்பு முதலிய பிரபந்தங்களையும் பாடவில்லையா? இக்காரணங்களால் இக்கொள்கை அடியேன் சிற்றறிவுக்குப் பொருத்தமாகத் தோன்றவில்லை. ஆதலால் இவ்வாராய்ச்சியிற் கந்தரநுபூதி "நெஞ்சக் கனகல்லும்" என்னும் விநாயக வணக்கத்திற் றுவக்கி "குருவாய் வருவாய் அருள்வாய் குகனே" என்னும் 51-ஆவது செய்யுளின் ஈற்றடியோடு முடிவதாகக் கொள்ளப்பட்டிருக்கின்றது.

இந்நூலிலுள்ள 51செய்யுட்களையும் பொருள் வழிப் பிரிவு செய்தால் அவை பின்வருமாறும்.

### I. பிரார்த்தனைப் பதிகங்கள்.

| | |
|---|---|
| 1. ஆடும் (க) | 6. விதிகாணும் (௩௫) |
| 2. கார்மா (க௦) | 7. சாகாது (சக) |
| 3. முருகன் குமரன் (க௫) | 8. காவாகிய (ச௫) |
| 4. கருதா (உக) | 9. எந்தாயு (ச௬) |
| 5. சிங்கார (௩ச) | 10. உருவாய் (௫க) |

### II

தன்குறை கூறித் தன்னெஞ் சமூங்கிக்
கதியிலி தனக்குங் கதியுள தோனல்.

நஞ்சுக்குள் இருந்தாலும் நாகமணி மாணிக்கமே, குப்பைக்குள் இருந்தாலும் குன்றுமணி குன்றுமணியே.

11. விளைபட்ட (௪) | 19. ஆதாரம் (௨௯)
12. மகமாயை (௫) | 20. மின்னே (௨௭)
13. திணியான (௯) | 21. கலையே (௩௨)
14. மட்டூர் (௬) | 22. சிந்தாகுல (௩௩)
15. போராசை (௧௯) | 23. மாவேழ் (௩௬)
16. அடியைக் (௨௩) | 24. வினையோட (௪0)
17. கூர்வேல் (௨௪) | 25. ஆறுறை (௪௭)
18. மெய்யே (௨௫) | 26. மதிகெட் (௫0)

III

தான்பெற்ற உபதேசப் பெருமையும்
ஆநந்தப் பேறும்.

27. உல்லாச (௨) | 34. காளைக் (௨௨)
28. வானோ (௩) | 35. ஆனா (௨௮)
29. அமரும் (௮) | 36. செவ்வான் (௩0)
30. கூகா (௧௧) | 37. ஆதாளி (௩௮)
31. செம்மான் (௧௨) | 38. குறியைக் (௪௨)
32. முருகன் றனிவேல் (௧௩) | 39. தூசா (௪௩)
33. அரிதாகிய (௨0) | 40. சாடும் (௪௪)
| 41. தன்னம் (௪௬)

IV

யான் செய்த பிழையென்னே
என நைந்து தொழுதிரங்கல்.

42. இல்லே (௨௬) | 43. பாழ்வாழ்வு (௩௧)

V. முருகன் பேருமை.

44. உதியா (௧௮) | 45. அறிவொன்றற (௪௮)

VI. வறுமையின் கொடுமை.

46. வடிவும் (௧௬)

VII. உலகுக் குபதேசம்.

47. யாமோதிய (௧௭)

VIII. சிவபிராற் குபதேசம்.

48. நாதா குமரா (௩௯)

IX. நெஞ்சொடுகிளத்தல்.

49. கெடுவாய் (௭)
50. கைவாய் (௧௪) | 51. கிரிவாய் (௩௭)

இந்நூல் முழுவதையும் நித்திய பாராயணத்துக்கு வைத்துக்கொள்வது மிக விசேடமென்று ஆன்றோர் பலர் கூறியுள்ளனர். அவ்வாறு வைத்துக்கொள்ள இயலாதவர் பின் வரும் ஆறு திருப்பதிகங்களை நித்திய பாராயணத்துக்கு வைத்துக்கொள்வது மிகவும் உத்தமம்.

I. திருப்பணிப் பதிகம்.

ஆடும் பரிவேல் அணிசே வலெனப்
பாடும் பணியே பணியா அருள்வாய்
தேடுங் கயமா முகனைச் செருவிற்
சாடுந் தனியானை சகோதரனே.

II. கதிதரு பதிகம்.

கெடுவாய் மனனே கதிகேள் கரவா
திடுவாய் வடிவேல் இறைதாள் நினைவாய்
சுடுவாய் நெடுவே தனைதூள் படவே
விடுவாய் விடுவாய் வினையா வையுமே.

III. கூற்றொழி பதிகம்.

கார்மா மிசைக்கா லன்வரிற் கலபத்
தேர்மா மிசைவந் தெதிரப் படுவாய்
தார்மார்ப வலாரி தலாரி யெனுஞ்
சூர்மா மடியத் தொடுவே லவனே.

IV. பிறவியொழி பதிகம்.

மாவேழ் சனனங் கெடமா யைவிடா
மூவேடனை யென்று முடிந் திடுமோ
கோவே குறமின் கொடிதோள் புணருந்
தேவே சிவசங் கரதே சிகனே.

V. இறவி (இறப்பு)யொழி பதிகம்.

சாகா தெனையே சரணங் களிலே
காகா நமனார் கலகஞ் செயுநாள்
வாகா முருகா மயில்வா கனனே
யோகா சிவஞா னொபதே சிகனே.

VI. குருமுகூர்த்தப் பதிகம்.

உருவாய் அருவாய் உளதாய் இலதாய்
மருவாய் மலராய் மணியாய் ஒளியாய்
கருவாய் உயிராய்க் கதியாய் விதியாய்
குருவாய் வருவாய் அருள்வாய் குகனே.

இப்போது அச்சிட்டு உலவும் சில பதிப்புக்களிற் பாடல்களுக்குச் சிறிதேனுஞ் சம்பந்தமில்லாத தலைக்குறிப்புக்கள் காணப்படுகின்றன.

இனி இந்நூலிற் சிற்சில பாடல்களில் உள்ள விசேடங்களைக் கூறுவாம்.

தாம் வழிபடுகடவுளாம் சண்முகப்பெருமானுக்கு உரியதாகிய இந்நூல் சிறந்து விளங்க வேண்டியே விநாயக மூர்த்தியை வணங்குவதாகக் காப்புச்செய்யுள் கூறுகின்றது. தன் நாயகன் பொருட்டன்றிப் பிறரை வணங்காப் பத்தினிபோல முருகன்பொருட்டன்றி வேறு மூர்த்திகளை நேரே வழிபடாப் பெருமையை உடையவர் நமது ஆசிரியர் என்பது இதனாலும் இவர் அருளிய திருப்புகழ் ஆகிய பிறநூல்களாலும் விளங்குகின்றது.

1. "ஆடும்" (௧): மயிலை "ஆடும்பரி" என்றும் கோழியை "அணிசேவல்" எனவும் சிறப்பித்தவர் வேலை "வேல்" எனவே அடைமொழி கொடாது கூறினது அடைமொழியின்றியே அதன்பெருமையை யாவரும் உணர்ந்துளாராதலின்; "யாரே அழகுக்கழகு

நடக்க அறியாதவனுக்கு நடுவீதி காதவழி.



செய்வார்" என்னும் நியாயம். வேல், மயில், சேவல் இவைதமைப் பாடுவதே தமக்குத் திருப்பணியாக வேண்டுமென்று இங்குக் கேட்டுக்கொண்டவரத்தை இறைவன் இவருக்கு வயலூரில் அளித்தனர் என்பது "பக்கரை விசித்ரமணி" (௩) "கோலகுங்கும" (611) என்னுந் திருப்புகழ்ப் பாக்களால் அறியக் கிடக்கின்றது.

2. 'என்னை யிழந்தநலம் சொல்லாய்' (௨) என இங்குக் கேட்டவரம் பின்னர்ச் சித்தித்தது என்பது "சொல்லுகைக்கில்லை யென்றெல்லாமிழந்து சும்மாவிருக்கும் எல்லையுட்செல்ல எனைவிட்டவா" (௧0), "என்னை மறந்திருந்தேன்" (௧௯), "வரையற்றவுணர்" (௯௧) என்னுங் கந்தரலங்காரச் செய்யுள்களால் தெரிகின்றது.

3. "எனையாண்ட இடம்" (௩) என்பது நினைக்க முத்தியளிக்குந் தலமாகிய திருவண்ணாமலை. இத்தலத்திலேதான் ஸ்ரீ அருணகிரியார் பேரின்பநிலையாம் திருவடி சூட்டப்பெற்று மௌனோபதேசம் பெற்றனர். "அருணையிற் சித்தித்தெனக்குத் தெளிவருள் பெருமாளே" (507) முதலிய திருப்புகழ்ப் பாக்களிற் காண்க.

4. 'மகமாயை' என்னும் ஐந்தாவது செய்யுளில் இறைவனைச் சிந்தித்தும் சகமாயை நீங்க வில்லை என்றவர் 'அமரும்பதி' என்னும் எட்டாவது செய்யுளில் இறைவன் மெய்ப்பொருள் உபதேசம் செய்தவுடன் அம்மாயை நீங்கித் தொலைந்தது என்றார்.

5. இயமன் வருந் தருணத்தில் தன்னைக் காத்து ரக்ஷிக்கவேண்டும் எனக் "கார்மா (10)" என்னும் பாடலிற் சொல்லியுள்ள கருத்து "பஞ்ச பாதகம் (18)" "தமர குரங்களும் (522)" என்னுந் திருப்புகழிற் காணலாகும்.

6. "கூகா - (௧௧)" இங்கு "நாகாசலம்" என்பது திருச்செங்கோடு; இஃது ஒருதலம்தான் இந்நூலிற் சொல்லப்பட்டுள்ளது.

7. "நாமேல் நடவீர் (௧௭)" என்பது "வாயே வாழ்த்து கண்டாய்" என்னும் தேவாரக் கருத்து.

8. "மிடியென்றொருபாவி (௧௬)" "அழுக்காறென ஒரு பாவி" என்றார் தெய்வப் புலமைத் திருவள்ளுவனார். மிடியின் கொடுமை "வறுமையாகிய தீயின் மேற் கிடந்து நெளியுநீள் புழுவாயினேன்" திருப்புகழ்—(714) என இவர் கூறுதலிற் பெறப்படும்.

9. "முழுதுஞ் செய்யோய் (௨௫)" முருகபிரான் செந்நிறத்தவர். "செய்யன் சிவந்த ஆடையன்" என்பது திருமுருகாற்றுப்படை.

10. பன்னிரு வாகுவிலென் சொல்லே புனையும் (௨௬) "பலபல பைம்பொற் பதக்க மாரமும், அடிமை சொலுஞ்சொற் றமிழ்ப்பனீரொடு, பரிமள மிஞ்சக் கடப்ப மாலையு மணிவோனே 158" என்னுந் திருப்புகழ்க் கருத்து.

11. "வாழ்வா யினிநீ" (௩௧) என்பது "காயங் காட்டிக் கண்ணீர் கொண்டால் வாழ்ந்து போதீரே" என்னும் ஸ்ரீ சுந்தரர் தேவாரக் கருத்து.

12. "குமராநம" (௩௯) "குமாராயநம" என்பது ஆறெழுத்தென்பர் ஆசிரியர் நச்சினார்க்கினியர்.

13. "கிராதகுலி" (௩௮) = வேடர்குலத்தவள்; குலி = குலத்தவள். குலத்தவன் என்பது "குலவன்" எனவரும்; "குலமிலாதானைக் குலவனே" என்பது தேவாரம். குலத்தவள் என்பது குலி-எனப் பெண்பாலில் வரும். "கிராத குலி, மாமறை முனி குமாரி" (௩) என்றார் மயில் விருத்தத்திலும்.

இந்நூலினுள்ள விஷயங்கள் சுருங்கக் கூறின் விநாயக பராக்ரமங்களுள் கஜமுக சம்ஹாரம் (௧), சுப்பிரமணிய பராக்ரமங்களுள் தன்னைத் தடுத்தாட்கொண்டது (௩), திருவடி சூட்டினது (௪௪), மௌனோபதேசம் செய்தது (௮, ௧௨, ௪௩), சூரசம்ஹாரம் (௪, ௧0, ௧௯, ௨௪, ௪௭), அசுரசம்ஹாரம் (௫0), கிரௌஞ்சமலையைப் பிளந்தது (௪, ௬, ௨௪, ௩௨), பொன்னுலகம் புரந்தது (௨0, ௪௭), வள்ளி தாசன் என்பது (௯, ௨௨, ௩௫), சிவகுருவானது (௩௯).

இவ்வாராய்ச்சியால் 'பேசாஅநுபூதி' கிடைத்தவுடனே பாடினது கந்தரநுபூதி யென்றும், முருகன் திருவருள் பெரிதும் ஊறியூறிப் பேரானந்தம் முதிர்ந்து ததும்பின நிலையிற் பாடினது கந்தரலங்காரம் என்றும் கொள்ளுவதற்கு இடம் ஏற்படுகின்றது. கிளிரூபம் பெற்றபின் இவ்வநுபூதி பாடினர் என்னும் கொள்கைக்கு இடம் ஒன்றும் நூலில் ஏற்படவில்லை. கிளிரூபம்பெற்றபின் திருவகுப்பு பாடினர் என்பதற்குச் சான்று உளது என்பது இனி எழுதும் திருவகுப்பு ஆராய்ச்சியிற் காட்டுவோம்.

"உனது காவிய நூலா ராய்வேன்
இடர் படாதருள் வாழ்வே நீயே—தரவேணும்"
திருப்புகழ்—(135.)

---

**K. Natesa Ayyar Esq., Inspector of Schools.**— I shall be glad to recommend purchase of copies of your Journal "Viveka Bodhini" which is *very suited for the needs of Elementary & Secondary grade teachers,* to the Chairmen of Municipal Councils & Presidents of Taluk & District Boards. The articles are *of varied interest* and so *well calculated to widen the sympathies and expand the interests of teachers.* *It is written in simple unpedantic style.*

32. நரிவாலைக்கொண்டு கடல் ஆழம் பார்க்கிறதுபோல.

## நோய்க் கிடங்கொடேல்

## PREVENTION IS BETTER THAN CURE

[ஸ்ரீமான் ஜி. கண்ணுசாமி பிள்ளை.]

### காபி குடியின் கேடு

கல்வியும் செல்வமும் நாகரிகமும் நிறைந்த நமது தேசத்தில் முற்காலத்தில் நமது முன்னோர்கள் நல்ல திடகாத்திரர்களாயும்,நோயற்றவர்களாயும், மிகுந்த ஆயுளுடையவர்களாயும் இருந்திருக்க, அவர்களின் சந்ததிகளாகிய நாம் மெத்தபலவீனர்களாயும் அநேக நூதன,வியாதிகளினாற் பீடிக்கப்பட்டவர்களாயும் அற்ப ஆயுளுள்ளவர்களாயும் இருப்பதற்குக்காரணம் தற்கால நவீன படாடோபமும் மேல் நாட்டு வியாபாரவர்க்கத்தினரின் ஏமாற்றமானவைகளும் நமதுதேச சீதோஷ்ணஸ்திதிக்குச் சிறிதும் ஒவ்வாதவைகளும் நமது இந்தியதேசச்செல்வநிலையைப்பெரிதும் பாதிப்பவைகளும் கொடிய பித்தோஷ்ண குணத்தை யுடையவைகளும் மலபந்த ரோகத்தை யுண்டுபண்ணி நூதன ரோகசம்பவத்தை உண்டுபண்ணியும் பிரதம ஆதாரமாகிய ஜீவசக்தியையும் தேக அவையவாதிகளில் மூத்திர வுறுப்பு இந்திரிய வுறுப்பு முதலிய மிருதுவான ஜெனனேந்திரியங்களைக் கெடுத்து மிக்க கொடிய ரோகத்திற்குள்படுத்தி அற்ப ஆயுளைத் தரத்தக்கவைகளுமான நூதன ஆகாரங்களாகிய கோகோ, டீ, காபி முதலியவைகளை இடையறாது உட்கொள்ளும் வழக்கமேயாம்.

அதிலும் பனி குளிர் தொந்தரவுள்ள மேல் நாட்டு மலைப்பிராந்தியங்களில் வசிப்போருக்குச் சிறிது அனுகுணமாக மேல்நாட்டு வியாபாரவர்க்கத்தாரால் கண்டுபிடிக்கப்பட்டதும் நமக்கு எவ்வாற்றேனும் பொருந்தாத கொடிய உஷ்ணத்தன்மையும், விஷத்தன்மையு முள்ளதுமான பேரினம் தெரியாதவொரு காட்டுக்கொட்டையைக் கழுக்கிய கஷாயத்தை அத்யுஷ்ண தேசவாசிகளாகிய நாம் உட்கொள்ள முயன்றதால் ஏற்பட்ட அனர்த்தங்கட்கோர் அளவின்று.

அந்தக் கஷாயத்தை காலவரையின்றிக் காலை மாலை நடு நிசியிலும் வயிறு நிறைந்த ஆகாரத்தின்மேலுங் குடித்துக் களித்து வருவதின் பயனாய் அது நம்மையே சாப்பிட முயன்றுவிட்டு, நமது உடல், பொருள், ஆவி மூன்றையும் கொள்ளைகொண்டு, நமது மக்களையும் உண்ணப்பாலின்றித் தவிக்கவிட்டு,தாய்மார்களின் நோக்கத்தில் ஏதேதோ மேனாட்டு ஏமாற்றமான நூதன மாவு டப்பிகளைக் காட்டிவிட்டு வயிற்றுக்கட்டி முதலிய அசாத்திய ரோகங்களைமூட்டிவிட்டுக் கொல்லுகிறது. நமது தேகத்தையும் அசாத்தியமான மூத்திரப்பை ரோகங்களில் ஆழ்த்தி விடுகிறது. அதை நிவர்த்திக்கவும், நமது மூதாதைகளான திரிகாலவர்த்தமானங்களையும் உணர்ந்த ஞான பண்டிதர்களான சீவகாருண்யம் நிறைந்த மகரிஷிகள் செய்துவைத்த பூர்வ 'ஆயுர்வேத சாஸ்திரப் படிப்புணர்ச்சியுடைய மருத்துவர்களையே விசேஷமாய்க் காணோம். தற்கால அரசாங்கமுறையினர்களுக்கும் அதனிடத்து யாதொரு ஆதரவும் நன்மதிப்புமில்லை யென்று தெரிகிறது. இப்போதுள்ள மேல்நாட்டுமருந்துகள் எவ்வளவோ உயர்ந்த மாதிரியாயிருந்தும் நமது தேச சீதோஷ்ணநிலைக் கொவ்வாததால் உண்பார்க்கு'குளிக்கப்போயும் சேற்றைப்பூசிக் கொண்டது போலும்' கற்பகத்தைச் சார்ந்தும் காஞ்சிரங்காயானது போலும் கெட்ட பயனையே தருகின்றன. நமது சைவ வைஷ்ணவப்பிராம்மண சம்பிரதாயத்துக்கும் அதிவிரோதமானவைகளும் வாயினாற் சொல்லவும் மெத்த அருவருப்பானவைகளுமான மீன் எண்ணெய், பன்றிக்கொழுப்பு, கோழிக்குஞ்சு ரஸம் மாட்டுமாமிச சத்து முதலியவைகள் சேர்ந்த மருந்துகளைக் கொடுக்கிறார்கள். அதிலும் அம்மூத்திரவியாதி குணமடையா விட்டால், பட்டினியாய்க் கிடப்பதே சுகம் என்று முடிக்கிறார்கள். இக்கொடிய காப்பிகுடியையும் அதன் தீங்கையும் எனது அனுபவத்துக்கெட்டிய வரையில் விரித்துரைப்ப தென்றால் என் மனம் நடுங்குகிறது 'விவேகபோதினியும்' இடந்தாராதாகையால் நன்மையையே நாடும் நற்குணமுடையீர் ! அன்பிற சிறந்த அறிவுடையீர் ! நமக்கு நயவஞ்சகமான குணத்தையே அளிக்கும் ஆங்கிலப்படிப்பின் முதிர்ச்சியின் காரணமாய் நாம் பெற்ற நவீனபடாடோப நாகரிகத்தால் அடைந்த சுகம்போது மென்றுணர்ந்து, இனியேனும் நமது பூர்வ பழக்க வழக்கங்களை யனுசரித்து ஆகாரங்களை யுண்டு, இகபரசாதனத்துக்குரிய அருமையான தேகம் நோயற்றிருக்குமாறு,மனஞ்செல்லும் வழியைப் பின்பற்றியிராமல், முந்துங்கள். மேற்சொல்லிய காப்பிகுடியினாலும் பிராந்தி முதலியவையின் அபரிமிதக் குடியினாலும் மலபந்தத்தினாலும் உண்டாவதான மூத்திரரோகத்தை நிவர்த்திக்கும்படியான இலகுவானதும் சுவையில் காப்பியை ஒத்ததுமான ஓர் கஷாயபக்குவத்தை வரைகிறேன். இஷ்டமும் நம்பிக்கையுமுள்ளவர் உபயோகித்துச் சுகம் பெறுவார்களாக!

கருவேலின் காய் அல்லது பட்டை, நாவல் கொட்டை, மருதம் பட்டை, ஆலம் பட்டை, ஆவாரம் பட்டை இவைகளோடு, கருவேலங் காய் அல்லது கருவேலம் பட்டை அல்லது நாவல்கொட்டை, (இவ்விரண்டில் ஏதேனுமொன்றை சேர்த்திடித்து காப்பிபோல் கஷாயம் செய்து பால் சர்க்கரை சேர்த்து உட்கொண்டு வரலாம்.

## தமிழின் அருமையும் அதன் தற்கால நிலையும்

## THE GREATNESS OF TAMIL AND ITS PRESENT PLIGHT

[ஸ்ரீமான் M. R. சுப்பிரமணிய ஐயர்.]

தமிழ் என்பதற்கு இனிமை என்பது பொருள். இஃது தன்னிடத்துள்ள இன்பச்சுவைமிக்க மொழிகளாலும் அருமைப்பாக்களாலும் அறிவுடையோரையும் சாமானியர்களையும் களிக்கச் செய்தலான் இதற்குத் 'தமிழ்' எனப் பெயர் வந்தது.

எந்நாட்டினும் நன்றாகிய பொன்னாடாம் இப்பரதகண்டத்திலே கிறிஸ்து பிறப்பதற்கு சுமார் 6,000 வருஷங்களுக்கு முன்னிருந்து ஸமஸ்கிருதம், தமிழ் என்ற இருபாஷைகள் வழங்கிவந்தன. இவ்விருபாஷைகளன்றி உலகத்தில் ஸம்பூர்ணத்துவ முடையனவும், ஆத்மார்த்த பலனைத்தரக்கூடியனவுமாக வேறுபாஷைகள் இருப்பதாகத் தெரியவில்லை. இந்த இருபாஷைகளிற்றாம் உலகத்தில் ஒருவன் பயிலவேண்டிய மோக்ஷ சாதனங்களும், நல்ல நீதிகளும் பொதிந்து கிடக்கின்றன. இந்தியாவில் இவ்விரு பாஷைகளும் என்றும் அழியாது என்றும் நிலைபெற்றிருக்கின்றன. இந்த இரு பாஷைகளும் தெய்வத்தன்மை பொருந்தியவை. இவற்றிற்கு முதற்கர்த்தன் முக்கண்ணனார்; அன்னவர் இவ்விரண்டினில் தமிழ்ப்பாஷையை அகத்தியருக்கும், ஸமஸ்கிருதத்தை பாணினி என்ற முனிவருக்கும் வழங்கியருளினார். இஃது,

"வடமொழியைப் பாணினிக்கு
வகுத்தருளி அதற்கிணையாத்
தொடர்புடைய தென்மொழியை
யுலகமெலாம் தொழுதேத்தும்
குடமுனிக்கு வலியுறுத்தார்
கொல்லேற்றுப் பாகரெனில்
கடல்வரைப்பி னிதன்பெருமை
யாவரே கணித்தருள்வார்"

என்பதனால் நன்கு விளங்குகிறது. மேலும் மனோன்மணீயத்தின் ஆசிரியரான ஸ்ரீமான் சுந்தரம் பிள்ளையவர்கள் தமது நூலில்,

"நீராரும் கடலுடுத்த நிலமடந்தைக்கெழில் ஒழுகும்
சீராரும் வதனமெனத் திகழ் பரதகண்டமிதில்,
தக்க சிறு பிறைநுதலும் தரித்த நறுந்திலகமுமே
தெக்கணமு மதிற்சிறந்த திராவிட நற்றிருநாடும்;
அத்திலகவாசனைபோ லனைத்துலகம் இன்பமுற
எத்திசையும் புகழ்மணக்க இருந்த பெருந்தமிழ
ணங்கே !"

என்று கூறியிருத்தலாலும்,

"பல்லுயிரும் பலவுலகும்
படைத்தளித்துத் துடைக்கினுமோர்
எல்லையறுபரம் பொருள் முன்
இருந்தபடி இருப்பதுபோல்
கன்னடமும், களிதெலுங்கும்,
கவின்மலையாளமும் துளுவும்
உன் உதரத்துதித்தெழுந்தே
ஒன்றுபலவாயிடினும்,
ஆரியம்போல் உலகவழக்
கழிந்தொழிந்து சிதையாஉன்
சீரிளமைத்திறம்வியந்து செயல்
மறந்து வாழ்த்துவமே."

என்பதாலும்,

"பொருப்பிலே வளர்ந்து தென்னன்
புகழிலே கிடந்து சங்கத்
திருப்பிலே யிருந்து வைகை
யேட்டிலே தவழ்ந்த பேதை
நெருப்பிலே நின்று கற்றோர்
நினைவிலே நடந்தோர் ஏன
மருப்பிலே பயின்றபாவை
மருங்கிலே வளருகின்றாள்"

என்று வில்லிபுத்தூரார் குமாரர் வரந்தருவா

ரெனக் கூறியுள்ளதாலும் நமதருமைத்தமிழின் அருமையும் இனிமையும் நன்கு விளங்குகிறது.

தமிழின் கண்ணுள்ள ஒவ்வொரு சிறந்த நூலும் தமிழின் அருமை பெருமைகளை விளக்கி நிற்கும். கம்பனது கவியின் இன்பமும், நளவெண்பாவின் நயமொழி மேன்மையும், திருவள்ளுவரின் அருள்மொழி நயமும் சிலப்பதிகாரத்தின் இலக்கியமும் தமிழின் பெருமைகளை நன்கு விளக்கற்பாலன. இது மாத்திரமன்று.

"விளங்கிழை பகிர்ந்த மெய்யுடை முக்கட்
காரணன் உரையெனும் ஆரணமொழியோ ?
ஆதிசீர் பரவும் வாதவூர் அண்ணல்
மலர்வாய்ப் பிறந்த வாசகத்தேனோ ?
யாதோ சிறந்ததென்கு வீராயின்,
வேதம் ஓதின், விழிநீர்பெருக்கி
நெஞ்சம் நெக்குருகி நிற்பவர்காண்கிலேம்;
திருவாசகம் இங்கு ஒருகால் ஓதின்,
கருங்கல் மனமும் கரைந்துகக் கண்கள்
தொடுமணற் கேணியின் சுரந்து நீர்பாய,
மெய்ம்மயிர் பொடிப்ப, விதிர் விதிர்ப்பெய்தி,
அன்பர் ஆகுநர் அன்றி
மன்பதை உலகில் மற்றையர் இலரே."

என்ற நால்வர் நான்மணி மாலையினாலும் நம் அருமைத் தமிழின் அணிகெழுபோக்கு நன்கு விளங்குகின்றது. இனித் தமிழ்மொழியின் அமைப்பைச் சற்று கவனிப்போம்.

தமிழின் நெடுங்கணக்கு மிகவும் விநோதமானது; இஃது பன்னீருயிரும், 'பதினெண் மெய்யும்ஓராயுதமுமாகமுப்பத்தோரெழுத்துக்களுடையது. இவையே தமிழின் முதலெழுத்துக்களாகும். இவற்றுள் "ற, ழ, ன" என்ற மூன்றெழுத்துக்களும் தமிழ்ப் பாஷையின் சிறப்பெழுத்துக்களாம். தமிழின்வழித் தோன்றிய கன்னடம், துளுவு, மலையாளம், தெலுங்கு முதலிய பாஷைகளிலன்றிப் பிறபாஷைகளில் இவ்வெழுத்தொலிகளில்லை.

ஏனையபாஷைகளைப் போலல்லாமல் தமிழில் உயிர் மெய்யெழுத்துக்களின் வைப்புமுறை மிகவும் நேர்த்தியானது. பிறபாஷைகளில் இவ்விதமான ஒழுங்குடை வைப்புமுறையில்லையென்றே சொல்லலாம். உதாரணமாக, ஆங்கிலத்தை எடுத்துக் கொள்வோமானால், அதன் 26 எழுத்துக்களில் உள்ள 5 உயிரெழுத்துக்களும் ஒன்று முதலிலும், மற்றொன்று அதற் கைந்தெழுத்துக்களுக் கப்பாலும், இன்னொன்று அதற்கு நான்கெழுத்துக்களுக் கப்பாலும் இவ்வாறு ஒரொழுங்கின்றி அமைந்திருப்பதைக் காணலாம்.

நிற்க, பண்டைத்தமிழர் கணக்கறிவில் சிறந்து விளங்கினரெனத் தெரிகிறது. நம் தமிழர்க்கு ஆதிகாலந்தொட்டு ஒன்று முதல் நூறுயிரம்வரையில் எண்ணத் தெரியுமென்று திண்ணமாய்க் கூறலாம். ஏனெனில், அவற்றைக் குறிக்கும் சொற்களும் எழுத்துக்களும் தனித்தமிழ். ஆழாக்கு, உழக்கு, நாழி, குருணி, பதக்கு, தூணி, கலன் என்ற முகத்தலளவைக்கணக்கும், சாண், அடி, முழம் என்ற நீட்டலளவைக் கணக்கும், பலம், சேர், வீசை, மணங்கு, பொதி என்ற எடுத்தலளவைக் கணக்கும், அரை, கால், அரைக்கால், மாகாணி, ஒருமா, அரைமா, காணி முந்திரி, இம்மி, முதலிய கீழ்வாய்க்கணக்குகளும் அவற்றைக் குறிக்கும் குறியீடுகளும் தமிழர்களின் கணக்கறிவின் மேன்மையை நன்கு விளக்கும்.

இவ்வாறு நமது தமிழ் நாட்டிலே நமதருமைத்தமிழ் வளம்மிக்கு வாழ்ந்தது. அக்காலத்துப் புலவர்கள் தமிழைப் பெரிதும் பாராட்டி ஆர்வத்தோடு பயின்று பற்பல நூல்களைச் செய்தார்கள். அவர்களுடைய நூல்கள் இன்பம் பயக்கத்தக்கனவாயும் அருமையான கருத்துக்கள் அடங்கியனவாயும் இருந்தன என்பதற்கு,

"மாட்டாருந் தென்களந்தைப்படிக்காசன்
உரைத்த தமிழ் வரைந்த வேட்டைப்
பட்டாலேசூழ்ந்தாலும்மூவுலகும் பரிமளிக்கும்
பரிந்த வேட்டைத்
தொட்டாலுங் கைம்மணக்கும் சொன்னாலும்
வாய்மணக்கும் துய்யசேற்றில்
நட்டாலும் தமிழ்ப்பயிராய் விளைந்திடுமே
பாட்டின் நறுநளினந்தானே"

என்று ஓர் தமிழ்ப்புலவர் கூறியுள்ள செய்யுளே போதிய சான்றுபகரும். இதுவேயன்றித் தமிழ் மொழியின் பெருமையை விளக்க இன்னும் பலவிஷயங்களுள:

சீத்தலைச் சாத்தனார் தமிழை யாரேனும் இழிவாகக் கூறினும், தமிழ்ச் சொற்களையும் பொருள்களையும் பிழைபடக் கூறினும் மனம் பொறாது குண்டெழுத்தாணியால் தம் தலையிற் குத்திக்கொண்டு தலைமுழுவதும் சீவடிந்து





கொண்டிருந்த புண்களாயிருக்க, திருவள்ளுவர் தமது திருக்குறளை மதுரைச்சங்கத்திலே அரங்கேற்றுங்கால் ஒவ்வொரு குறளையும் பற்றிய ஆக்ஷேபத்துக்குச் சமாதானத்தையும் அதன் பெருமையையும் எடுத்துரைத்ததனால், சிந்தைக்கும் செவிக்கும் இனிமையான திருக்குறளின் 1330 பாக்களும் அமிழ்தினும் விழுமித்தாக சாத்தர்க்கு ஆனந்தம் அளித்து சீத்தலையும் காய்ந்ததென்றால் தமிழின் இனிமையை என்னென் றுரைப்பது!

மற்றும், நந்திவர்மன் என்ற அரசன் தன் தம்பியால் தன்னைக் கொல்வதற்கென்றே இயற்றப்பட்ட "நந்திக் கலம்பகம்" என்ற வசைநூலைக்கண்டு, அதைக் கேட்பதால் தான் இறப்பது நிச்சயம் என்று தெரிந்திருந்தும், சந்தனக்கட்டை கொண்டடுக்கிய சிதையிலிருந்தபடியே அந்நூல் முழுவதும் கேட்டு, அதன் சொற்சுவை பொருட்சுவை முதலியவற்றைக்கண்டு ஆனந்தித்து உயிர் துறந்ததானது தமிழின் இனிமையையும் முற்காலத் தாசர்க்கு தமிழின்கண்ணுள்ள அபிமானத்தையும் வெள்ளிடைமலைபோல் விளக்குகின்றது.

**தமிழின் தற்காலநிலை.**— நாம் இதுகாறும் தமிழின் அருமையைப்பற்றி ஒருவாறு கூறினோம். இனி, தமிழின் தற்கால நிலைமையைப் பற்றியும், அஃது இனி இருக்கவேண்டிய நிலைமையைப்பற்றியும் சிறிது கூறி அதனுடன் நமது விஷயத்தைத் முடித்துக்கொள்வோம்.

நம்மை ஒரு ஜாதியார் என்றும், ஒரு கட்டுக்கடங்கியவர்களென்றும், பாஷாபிமானிகளென்றும், தேசாபிமானிகளென்றும், யோக்கியர்களென்றும் காட்டக்கூடியதும், நமது சரித்திரங்களையும் நமது ஆன்றோரின் நீதி வாக்கியங்களையும் நமது புராதனக் கொள்கைகளையும் ஞாபகப்படுத்தத்தக்கதும் நமது தாய்ப் பாஷையேயாகும். இவ்வுண்மையை உணர்ந்த ஐரோப்பியரும் ஜப்பானியரும் தத்தம் பாஷைகளை எவ்வளவோ கௌரவமாகப் போற்றி வருகிறார்கள். பிறபாஷைகளைப்போல் இரவல் வாங்கிச் சேர்க்கப்படாத நம் தமிழ்பாஷையோ நாளுக்குநாள் குன்றிக் குலைந்து வருகின்றது. நமது நாட்டார் பலருக்குப் பாஷாபிமானம் உண்டாகவில்லை. அப்படிப்பட்ட கோடரிக் காம்புகள் தங்களுக்குத் தமிழ்ப்பாஷை தெரியாமலிருப்பது பெருங் கௌரவமென்றெண்ணிப் பெருமை பாராட்டுகின்றனர். எவ்வளவுக் கெவ்வளவு தங்களுக்குத் தமிழ்ப் பாஷை தெரியவில்லையோ அவ்வளவுக் கவ்வளவு ஆங்கில பாஷையில் தங்களுக்கு மிகுந்த ஞானமிருக்குமென்று உலகத்தார் எண்ணுவார்களென்பதே இவ்வறிவிலிகளின் நோக்கம். இத்தகையோர்கள், சற்றுத் தமிழ் தெரிந்தவர்கள் எவரேனும் தமிழைப் படிக்கக்கண்டால் "ஏனையா இந்தப் பாழுந் தமிழைக் கட்டிக் கொண்டு அழுகிறீர்கள் ? சுத்தக் கிராமியமாக இருக்கிறீர்களே" என்று சொல்வார்கள்.

தாங்கள் தமிழ்ப் புத்தகங்களையும், தமிழ்ப் பத்திரிகைகளையும் படிப்பதே இல்லையென்று பெருமை பாராட்டிக்கொள்வார்கள். இப் படிப்பட்ட பெரியவர்கள் ஆங்கிலத்திலே, 'போப்' என்பவர் மொழிபெயர்த்த திருக்குறளை வாங்கிப் படிப்பார்கள். அன்பர்களே! பாருங்கள், நமது இந்தியாவிலே, நமது பாரதபூமியிலே, நமது செந்தமிழ் நாட்டிலே உதித்து, செந்தமிழ் மக்களின் இரத்தத்திலே ஊறி, செந்தமிழ்ப் புலவர் பாடிய "திருக்குறள்" ஒரு ஆங்கிலேயரால் மொழிபெயர்த்து எழுதப்படுவதால் இவர்களுக்கு மேன்மையாகத் தோன்றுகின்றது! ஆறாயிரம் மைல்களுக்கப்பாலுள்ள ஒரு தேசத்தவர் மொழிபெயர்த்து தமது தேச மாணவர்களுக்கும், தமது நாட்டுப் பிரஜைகளுக்கும் உதவுமாறு செய்திருக்கும் இத் திருக்குறளை நமது சொந்த பாஷையிலிருந்து கற்காமல், ஒரு பிறநாட்டு மனிதர் செய்த மொழிபெயர்ப்பைப் படிப்பதானது ஒரு இனிய தின்பண்டத்தை, இனிமையாக உண்டு அநுபவிக்காமல், மண்ணிற் போட்டுப் புறட்டி உண்பதுபோ லிருக்கின்றது.

இதுதான் இப்படியாயிற்றென்றால், இக்காலத்திய மாதர்களிற் பலர், தற்கால நவீன நாகரிக முறைப்படி ஆங்கிலபாஷை முதலிய பிறபாஷைகளில் புலமைபெற வெண்ணி அப்பாஷைகளை மிகவும் கஷ்டப்பட்டுக் கற்றுக் கொண்டு தாம் பேசும்பொழுதும் எழுதும் பொழுதும் அப்பாஷைகளைத் தமிழுடன் கலந்து உபயோகிக்கிறார்கள். ஆனால் நாம் நமது நாட்டு மாதர்களைப் பிறபாஷைகளைக் கற்க வேண்டாமென்று சொல்ல வரவில்லை. நமது தேசத்து மாதர்கள் நல்வாழ்வு வாழ்ந்து, நற்கதி யடைவதற்கு வேண்டிய நீதிகளடங்கிய

பல அருமை நூல்கள் நமது தாய்ப்பாஷையில் பொலிந்து கிடக்கும்போது, இவர்கள் பிறபாஷைகளில் தலையிட்டுக்கொண்டு ஆங்கிலத்தையாவது தமிழையாவது முற்றுந்தெரிந்துகொள்ளாமல் இரண்டுமற்றவர்களாய் இருப்பதைப் பற்றி விசாரப்படவேண்டியிருக்கிறது. நமது தேசபாஷையாகிய தமிழிலும் ஸமஸ்கிருதத்திலும் இல்லாத நீதிகளும், கடவுளை வழிபடும் மார்க்கங்களும், பதிவிரதா தர்மத்தைக் காக்கும் முறைகளும், ஏனைய சாஸ்திரங்களும்வேறெந்தப் பாஷையிலும் இல்லையென்றே சொல்லலாம். மேற்கூறிய விஷயங்களை நமது நாட்டு மாதர்களுக்குப் போதிய உதவிபுரிவதால் அவர்கள் நமது தேசபாஷையைக்கல்லாது ஆங்கிலம் முதலிய பிறபாஷைகளைக் கற்பதில் நாட்களைச் செலவழித்து, தங்கள் வாணாளை வீணாளாகக் கழிப்பது மிகவும் பரிதபிக்கத்தக்கது. இவர்கள் ஆங்கிலம் முதலிய பாஷைகளைக் கற்கச் செலவழிக்கும் நேரத்தை தமிழ்ப்பாஷையின் பொருட்டுச்செலவழிப்பார்களானால் எவ்வளவு அறிவுடையவர்க ளாக்லாம்? பிற்காலத்தில் அவர்களது புத்திரர்களுக்கும் புத்திரிகளுக்கும், பௌத்திரர்களுக்கும், பௌத்திரிகளுக்கும் தமிழ் நீதிகளிலும் தமிழ்ப் பாஷையிலும், தமிழ் வழக்கங்களிலும், தமிழ் நாகரிகங்களிலும் எவ்வளவு மேன்மை யுண்டாகும்படி செய்யலாம்? ஒரு பிறபாஷையைக் கஷ்டப்பட்டுக் கற்றுக்கொள்வதைக் காட்டிலும், நமது சொந்த பாஷையா யுள்ளதும் நமது சிறுவயதிலிருந்து நமது இரத்தத்தோடு கலந்து ஊறியதும், நமது தாய் மழலையாடக் கற்றுக்கொடுத்ததும், பாலுடன்சேர்த்து புகட்டியதுமான நமது தேசபாஷையைக் கற்பது எவ்வளவு சுலபமான காரியம்?

நிற்க, நம் நாட்டில் ஆங்கிலத்தையே மிகுதியும் விரும்பிக் கற்கும் சிறுமிகளுக்கும் ஒரு விஷயத்தில் நாம் பரிந்து பேசவேண்டியதாக இருக்கிறது; இக்காலத்துச் சிறுமிகளை மணக்கும் இளைஞர்களில் நவீன நாகரிகப் பைத்தியம் தலைக்கேறிய சிலர், தங்கள் மனைவிமக்கள் தங்களோடு ஆங்கிலத்திலேயே பேசவேண்டுமென்றும், ஆங்கில முறைப்படியே நடந்துகொள்ள வேண்டுமென்றும் மேல்நாட்டு ஜட நாகரிக முறைகளை மாத்திரம் அநுசரித்துக் கூறுதலால், நமது நாட்டுப் பெண்களின் பாடு கஷ்டமாய்ப் போய்விட்டது. ஆகையால் இவ்விஷயத்தில் நமது தேசத்திளைஞர்களிலும், முதியவர்களிலும் இவ்வாறு நடந்துகொண்டு வருபவர்களும் இனி நடக்க விரும்புவோரும் தமது புத்தியை நேர்வழியிற் செலுத்தி, தமிழை மேன்மேலும் அபிவிருத்திசெய்யும் எண்ணங்கொள்ளுமாறு முழுமுதற்கடவுளாம் எல்லாம்வல்ல இறைவன் அருள்புரியவேண்டும்.

இஃதிவ்வாறாக, தற்காலம் பொருள்வருவாய்க்குரிய கல்வி தமிழ்ப்பாஷையில் இல்லாமையால் நம்நாட்டுக் கல்விமான்களும் சிறுவர்களும் வயிற்றுக்கொடுமையைத் தணிக்கும் பொருட்டும், புகழை நாடியும், தமிழை மறந்து ஆங்கிலம் முதலியவற்றைக் கற்க வேண்டியதாயிற்று. இத்துன்பம் ஒழியுமாறு நமதுதேசத்திலே தமிழ்ப்பயிரை வளம்செய்து வளர்க்க வேண்டும். நமது நாட்டுக் கலைவல்லோரனைவரும் தமிழ்மாத்திர மறிந்தவர்கள் கூட ஆங்கிலங் கற்றவர்களைப்போல் கல்விநலம் பெற்று உயர்வாழ்வு வாழும்பொருட்டு தேகசிரமமும் மனோசிரமமும் எடுத்துக்கொண்டு ஆங்கில பாஷையிலும் மற்றப் பிறபாஷைகளிலும் உள்ள அறியநூல்களை நமது தாய்ப்பாஷையில் மொழிபெயர்த்துச் சேர்க்கவேண்டும். நமது நாட்டுக் கல்விச்சாலைகளில் எப்படி ஆங்கிலத்தில் உபந்நியாசங்களும் நாடகங்களும் நடத்தப்படுகின்றனவோ, அதேமாதிரி தாய்ப்பாஷையில் உபந்நியசிக்க பிள்ளைகளைப் பழக்கவேண்டும். வியாசங்கள் எல்லாம் தமிழில் மிகுதியாய் எழுதவேண்டும், தக்க தமிழ்ப்புலவர்களைக் கொண்டு கல்விச்சாலைகளில் தமிழ்ப்போதிக்குமாறு செய்யவேண்டும். நமது நாட்டு இளைஞர்களுக்கு இப்பொழுதிருக்கும் தமிழ்ப்புலவர்களிடத்திருக்கும் அருவருப்பை நீக்கும்பொருட்டு ஒரு கலாசாலையில் எப்படி ஆங்கிலத்தில் மிக்கப் புலமைவாய்ந்த உபாத்தியாயரை நியமிக்கிறார்களோ, அதுபோல் தமிழ்ப்பாஷை போதிப்பவரையும் போதிய சம்பளங்கொடுத்து சாமர்த்தியசாலிகளாக நியமிக்கவேண்டும்.

இன்னும் தமிழை வளர்க்கும்பொருட்டு கவி இயற்றப் பழகியவர்கள், கற்றவர் மற்றவர் யாவர்கும் பயன்படுமாறு இனிமைவாய்ந்த செந்தமிழ் நடையில் பாக்களையும் வசனங்களையும் எழுதி யுதவவேண்டும். இதனால் தேசாபிமானமும் பாஷாபிமானமும் மிகுதியும் உண்டாகும்.





# குமரவேள் முட்டைப் பெயர் கொண்ட தமிழ்விளையாட்டு

## A LEELA OF THE LORD KUMARA

[ஸ்ரீமான் S.A. திருமலைக்கொழுந்துபிள்ளை, பி.ஏ.]

முன்னர், குழந்தைச்சிவனார் ஔவைப்பிராட்டியாரை யாட்கொண்டு அம்முதியாள் வாயிலிருந்து அரிய சில உறுதிகளை உலகினர்க்கு உதவிய திருவிளையாட்டைக் கூறினோம். இப்போழ்து குமரக்கடவுள் பொய்யாமொழிப்புலவரை யாட்கொண்ட செந்தமிழ்த் திருவிளையாட்டை விளக்குதும்.

பொய்யாமொழிப்புலவர் கல்விச்செல்வமும் அருட்செல்வமும் பெற்ற உயரிய புலவர். மறைந்துபோன கடைச்சங்கத்தைத் திரும்பவும் உயிர்கொடுத்துத் தழைப்பிக்க முயற்சித்தவர். மிக்க தெய்வீகம் வாய்ந்தவர். இவர் சிவபெருமா னிடத்தே இடையறாத அன்பு பூண்டவர். சிவபெருமானை யன்றி வேறொருவரையும் புகழ்ந்து பாடார். சிலர் இவரை நோக்கி, "ஓ! புலவர்சிகாமணி! நீர்சிவபெருமானையடிக்கடி பாடுகின்றீரே? குழந்தைச் சிவனாராகிய முருகவேளைப்பற்றிப் பாடினாலென்ன? சிவன்வேறு சிவகுமாரன் வேறெனவோ எண்ணுகின்றீர்?" எனக்கேட்டபோழ்து, அவர் அவர்களை நோக்கி, 'கோழிக்கும்பாடி குஞ்சிற்கும் பாடவோ?' என அலக்ஷியமாகக் கூறினர். தமிழிற்கு அதிதெய்வமாகிய குமரவேள் இவரது செருக்கையடக்க எண்ணங்கொண்டார்.

ஓர் சமயம் பொய்யாமொழிப்புலவர் தக்க சம்மானம் பெற்று நிதித்திரளோடு ஓர் பாலைவனத்தின் வழியாக வரும்படி நேர்ந்தது. இதுவே அவரை யாட்கொள்வதற்கேற்ற சமயமுமாயிற்று.

வெய்யகானகத்தின் வழித்தாய் வருகின்ற புலவர், எதிரே சிறிது தூரத்தில் அச்சந்தரத்தக்க உருவத்தோடு வேலைத்தாங்கி யொரு வேடன் நிற்பதைக்கண்டு, 'ஐயோ! அருள் சிறிதுமற்ற வதனங்கொண்ட வனவேடன் கையிலகப்பட்டுக் கொண்டோமே; நிதிபோயினும் போகுக, உயிரோடாவது விட்டுவிடுவானோ? எனவேங்கி அச்சத்தோடு மெல்லெலன வருவாராயினர். புலவர் வேடனைச் சமீபித்ததும், குமரவேள் அவரை நோக்கி 'நீ யார்?' என்று வினவினர். கவிவாணர் அவரை நோக்கி 'நான் தமிழ்ப்புலவன், எனது பெயர் பொய்யாமொழி' எனக் கூறினர்.

முருகவேள் அவரை நோக்கி 'இனிய பெயர் படைத்தோய்! தமிழ்ச்சுவையையும் அறிவாய் போலும்' என அசதியாடினர். உடனே புலவர்க்கு அச்சம் விலகிற்று. 'நல்லவேளை உயிர் தப்பினோம், வேடனேயாயினும் தமிழ் மணங் கண்டவனாக விருக்கிறான்; ஒரோவழி நிதியை அபகரித்துக் கொள்ளினும், உயிருடன் விட்டுவிடுவானென்பது திண்ணம்' என வெண்ணி அவரை நோக்கி 'வேடர் பெருமானே! தமிழ்ச்சுவையைச் சிறிது கண்டுளேன், ஐயமில்லை' என்றார்.

முருகவேள் அவரைநோக்கிப் புன்முறுவலுடன் 'ஏ புலவ! என் பெயரை முன்னிட்டு நற்றுயிரங்கலாக ஓர்வெண்பா வழுவின்றிப் பாடவல்லையோ?' எனக் கேட்டார். இம்மாற்றம் புலவரது செவித்தலத்துட் புகவே, பொய்யாமொழியருக் குண்டாகிய உவகையை எங்ஙனங் கூறுவது! 'ஆ, ஆ, கோரரூபம் கொண்டவனாயினும், வனவேடன் தமிழ்ச்சுவையை நன்கறிந்துளான்' என வுள்ளம்பூரித்த புலவர், குகப்பெருமானை நோக்கி 'ஐயா, தாங்கள் ஆணைதந்த வண்ணமே வெண்பாவைப் பாடுகிறேன். அருள்புரிந்து தங்களது நாமத்தைத் திருவாய் மலர்ந்தருள்க' என்றார். உடனே குமரவேள் மகிழ்ந்து 'என்னை முட்டையெனக் கூறுவதுண்டு. நீரும் அவ்வாறே என்பெயரையமைத்து நான் கேட்ட துறையைப் பாடுதிர்' என்றார்.

இந்நாமத்தைக் கேட்ட புலவர் 'இப்பெயர் விபரீதமானதாகத் தோன்றுகின்றதே' எனத் திகைத்தாராயினும், குமரன் திருவிளையாட்டின் உள்ளீட்டை யோராராய்ப் பின்வரும் வெண்பாவைக் கடிதிலிசைத்துக் கூறினர்'—

பொன்போலும் கள்ளிபொறிபறக்குங் கானலிலே
என்பேதை செல்லற்கியைந்தனளே—மின்போலும்
மானவேன் முட்டைக்கு மாறாயதெவ்வர் போங்
கானவேன் முட்டைக்குங் காடு.

சொற்சுவை ததும்பிநின்ற இவ்வெண்பாவைச் செவியேந்த குமரக்கடவுள், அதனில் பொருள் முரணிருப்பதை மனத்துட்கொண்டு புலவரைநோக்கி, 'நீர்தாமோ பொய்யாமொழிப் புலவர்? சொற்சுவையே குறியாய், வாய்புளித்ததோ மாங்காய் புளித்ததோ வென, பொருட்குற்றம் நோக்காது பாடுதல்தானோ புலவர்க்

கழகு? புலவ! தலைவி தலைவனோடு உடன் போக்காய்வந்த பாலைவனத்தின் கொடுமையை மிகச்சிறப்பாக வர்ணித்தாய்; தண்ணீர் கிடைக்கப்பெறாத வெஞ்சுரத்தின்கண்ணும்பால்சுரக்க வல்ல கள்ளிச்செடியும் அக்கானலின் கொடுமையால் எரிந்து கங்காகி அனற்பொறி வீசா நின்ற தென்றாயே; பின்னர் எம்மதிகொண்டு அவ்வனத்தின்வழிச் செல்பவர் காலை வேலை முட்டைக்குமெனக் கூறினாய். கள்ளி நெருப்பாய்ப்போன கானகத்தில் வேலமுள் சாம்பராகாது தளைத்திருந்து குத்தியதோ? நீதானோ பொய்யாமொழிப் புலவன்? ஏ பொய்ப் பெயரினாய்! உனக்கென்ன செருக்கு? என்று வசையாடினர்.

இம்மாற்றம் புலவரது செவித்தலத்துட் புகவே அவருக்குண்டாகிய மனநெகிழ்ச்சியை என் சொல்வது! ஓர்பக்கம் திகிலும், ஓர்பக்கம் ஆச்சரியமும், ஓர்பக்கம் ஆனந்தமும் விளைந்தன. புலவர் சிந்திப்பார்: 'இவரை முதற்கண் தமிழ்ச்சுவை யறியா அருளிலா மறவன் என மதித்து அச்சத்திற் காளானேன்; பின்னர் ஏதோ சிறிது தமிழ் மணங்கண்ட வனவேடன் என வெண்ணமுற்று உயிரச்சம் நீங்கினேன்; துறைபாடச்சொன்ன சதுர்ப்பாட்டை நோக்கி தமிழ்ச்சுவையை நன்குணர்ந்த புலவரென வெண்ணி இரும்பூதெய்தினேன்; இப்போது, எனது கவியை குணக்குற்றம் ஆய்ந்து, வழுவுற்ற பாட்டென என்மதியைப் புறங்கண்ட இவர் பேரறிவை நோக்கின் இவரை யாரென மதிக்க வல்லேன்! தமிழ்முனியையும் பணிகொள்ள வல்லார்போலும்! இவ்வாறு மனங்கலங்கிய புலவர், குமரவேளை நோக்கி 'புலவர் திலகமே! உள்ளபடி எனது பாட்டில்நேர்ந்த வழுவை எடுத்துக்காட்டி நல்லறிவு செலுத்திய நன்றியை மறவேன்; தங்களை யுள்ளபடி தெளிகின்றிலேன்; அடியேன்பால்யாதே செருக்குள' தென மிகவும் பணிந்த மொழிகளால் குமரவேளை யுகப்பித்தார். அப்போது கடவுள் 'இன்னும் இவன் மாயை தெளிகிலன்போலும்' எனச் சற்று தனது திவ்விய வுருவோடு ஆறுமுகங்களையுங்காட்டி, 'ஏ கவிவாண! 'நீ கோழிக்கும் பாடி, குஞ்சுக்கும் பாடவோ?' என மதியாது செருக்கொடு திரிந்தாயன்றோ? இப்பொழுது எம்மதியால் குஞ்சுக்கும் கீழ்ப்போய் முட்டையைப் பாடினாய்!' என அதட்டினர்.

புலவர் நடுநடுங்கி பக்தியாற் பரவசமெய்தி நாக்குளறி தழுதழுத்த மொழிகளால் 'சரவண பவனே! சிவனார் குமரனே! உனது திருவிளையாட்டை ஒன்றிற்கும் பற்றாத வடியேன்பாற் புரிந்த அருளுக்கு நாயேன் ஓர் சிறிதும் பாத்திரனோ? தமிழறியும் பெருமாளே! நான் மூக்காலும் நின தடிமை. என்னைக் கடைத்தேற்ற வேண்டுவது நினது பாரம். உனதருள்வாக்கால் நற்றாயிரங்கல் என்னுந் துறையை யான் உய்யுமாறு பாடித் தருக வெனப் பணிந்தார்.

குகப்பெருமான் மகிழ்வெய்தி 'புலவ! அச்சந்தீர்; நீ கேட்கும் துறையை யுன்பேரொடு பாடுகிறேன், கேண்மதி' எனக்கூறிப் பின் வரும் வெண்பாவை யிசைத்தார்,

விழுந்த துளி அந்தரத்தே வேமென்றும் வீழின்
எழுந்து சுடர்சுடு மென்றேங்கிச் -செழுங்கொண்டல்
பெய்யாத கானகத்திற் பேய்வளையுஞ் சென்றனளே
பொய்யாமொழிப் பகைஞர் போல்

[செழுமை தங்கிய மேகம் தன்னிடத்திருந்து திவலைகளை அக்கானகத்தில் நழுவவிடின் அவை தரையைக் கிட்டுமுன், வெப்பத்தால் வெந்துபோம்; ஓரோவழி வேகாது தரையைக் கிட்டுமாயினும் அவ் வெஞ்சுரத்திலிருந்து குபீரென வெழுஞ்சுடரால் சுட்டுப் பொசுக்கப்படும் என ஏக்கமுற்று எக்காலத்தும் மழை பொழியாத அப்பாலைவனத்தின் வழி எனது பேதைப்பெண் பொய்யாமொழிப் புலவரது பகைஞர்அவ்வழி பயந்தோடுவதுபோல் தானும் தலைவனுடன் சென்றனளே! ஈதென்ன பாவம்!]

இவ்வரிய வெண்பாவை கேட்டலுமே, புலவர் மற்றும் பரவசமுற்று 'சிவனார் திருமகனே! உனதருளால் உனக்கே யடிமையாகி உய்ந்தேன்! உய்ந்தேன்! உனதருள் என் பால் எப்பொழுதும் குன்றாதிருக்கவேண்டும். என்பொருட்டு நீ முட்டையெனப் பெயர் படைத்தாயாதலின் அப்பெயரும் இவ்வுலகில் நிலவும்படியும் அருள்செய்' எனப் பிரார்த்தித்தார். புலவர் வேண்டியவாறே, கடவுள் அருள் புரிந்து கட்புலனுக்கெட்டாது மறைந்தார்.

இனி, வெள்ளியம்பலத்திற் றுள்ளிய பெருமானாகிய இவரது அப்பனார்கீரனைச் செருக்கொடுக்கின தமிழ்விளையாட்டைக் கூறுதும்.

---





(241-ம் பக்கத் தொடர்ச்சி)

போதிக்கவல்ல குருவே! இமவான் புதல்வியான பார்வதிதேவியார் ஈன்றருளியதிருமகனே! முதிர்ந்த பலாப்பழங்களினின்று பெருகும் இனியதேன் பாய்ந்து நிரம்பிய கழனிகளினாலும் கமுகு அடர்ந்து வளர்ந்துள்ள சோலைகளினாலும் விளங்கும் பழனித் தலத்தில் நின் திருவடி தரிசனம் தந்து உலகோரைக் காப்பாற்றவென்றே அமர்ந்திருப்பவனே! தேவர்களை அசுரர்களிட்ட சிறையினின்றும் விடுவித்து அவர்களுக்கு வாழ்வை மீண்டுமளித்த பெருமானே! நறுமணமிக்க தகரமலர்களை மிகுதியாகச் சூட்டிய கூந்தலையுடைய மாதர்கள் ஆடவர் மனம் கலங்குமாறு கர்வத்துடன் நோக்கும் பார்வையாம் வலையிற் சிக்கும்படி என் தலையிலெழுதி பிரமன் என்னைத் தாயின் கருவிற் சேர்த்ததினால், பிள்ளைகள், தாயார், சுற்றத்தார், மனைவி, சிநேகிதர், பசு முதலிய பலவகைச் சம்பத்துகளின் மீது கொண்ட ஆசையாகிய சமுத்திரத்தில் முழுகியனுபவிக்கும் கஷ்டங்களினால் நான் படுந்துயரம் நீங்குமாறு, அகரத்தை முதலாக வுடைய ஓம் என்னும் பிரணவமானது உணர்த்தும் வஸ்துவை எனக்கு அருளுவதற்காகவும், (என்னை அதைக் கற்றுக்கொள்ளும் தகைமையுடையவனாகச் செய்யும் பொருட்டு) நான் இரு கைகளையும் குவித்துக் கும்பிட்டு மெய்யன்பினால் மனமுருகி அரகரா என்று கூறி உன்னைப் பிரதக்ஷணஞ்செய்யும்படி செய்து நின் இருபாதாரவிந்தங்களையும் அடியேன் சென்னிமேற் சூட்டியருளி, அவ்வாறு அவை சூட்டப்பெறுவதனால் நான் அருள் பெற்றவுடனே அதன் பயனாக என்னைச் சூழ்ந்துள்ள மாயையும் அஞ்ஞானமும் அகலும்படிசெய்வதற்காகவும், ஞானவொளியை வீசும் ஞானசக்தியான வேலாயுதத்தைக் கையிற்றாங்கியும் நின் வரவையே எதிர்பார்த்து வருந்திக்கொண்டிருக்கும் எனது மனம் நின் வரவை முன்னரே தெரிந்துகொண்டு துயர்நீங்கிக் களிக்கும் பொருட்டு 'ஞானசூரியன் உதயமாகிறான்' என்று கூவி உலகோரைக் களிப்பிக்கும் சேவல் நின் கொடியிற் றோன்றவும், என் மனம் களிக்குமாறு நின் அழகு முழுவதையும் என் கண்கள் காணவும், உக்கிரதுரகமாகிய பச்சைமயிலின் மீதேறி வந்து எனக்குத் தரிசனம் தந்தருளவேண்டும். [*வித்தகமருப்புடைய விநாயகர் வள்ளிநாயகியார் முன் தோன்றி பரம வித்தையினால் இம்மாயவுலகத்தில் அருளில்லார்க்கு நேரும் துன்பங்களைத் தெரிவிக்கவே, உலகமாதாவான அவ்வம்மையார் பயந்து, அதுவரை தமது பக்கத்திலேயே நின்றும் தாம் அறியாதிருந்த தமது நாயகனை ஒருமைமனத்துடன் நாடவும், இதயகமல வாசியான குகப்பெருமான் அவ்வம்மையாரின் பயத்தை யகற்றி அவரை யிறுகவணைத்து பரமசுகமான பேரானந்தத்தில் ஆழ்த்தினாரென்பது கவனிகத்தக்கது.

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

## திருப்பதி வேங்கடநாதர்

## தேர்வண்டிக்கால் சரித்திரம்

மூவிருமுகங்கள் போற்றி
முகம்பொழி கருணைபோற்றி
ஏவருந் துதிக்க நின்ற
வீராறு தோள்போற்றி—காஞ்சி
மாவடி வைகுஞ் செய்வேண்
மலரடிபோற்றி யன்னான்
சேவலுமயிலும் போற்றி
திருக்கைவேல் போற்றி போற்றி!

புண்ணிய பூமியாகிய பரதகண்டத்திலுள்ள பல நாடுகளுள் வடக்கின்கண் அகத்திய மகா முனிவருக்குத் தமிழறிவுறுத்திய பரமாசாரியராகிய திருமுருகக்கடவுளது வரைப்பாகிய திருவேங்கடத்துக்குச் சமீபத்தில், செல்வச் சிறப்பினாலும், பொன்னிறமுள்ளபொருள்களையுடைமையாலும், சுவர்க்கலோகமும் நாணுமாறு பொலிவுபெற்று, ஓங்கியுயர்ந்தடர்ந்து வளர்ந்து பலகாததூரம் நறுமணம் வீசும் சந்தனம் சாந்தம் தேவதாரு பாதிரி முதலிய விருக்ஷங்களையும், கற்பகவிருக்ஷம்போன்ற அநேக பலவிருக்ஷங்களையும், அமிர்தம் போன்ற இனிய நீரையுடைய இளந் தேங்காய்கள் நிரம்பிய சோலைகளையும், திவ்விய பரிமளகந்தம் வீசும் நீர்ப்பூ, நிலப்பூ, கொடிப்பூ முதலிய நானாவித விசித்திரமான மலர்கள் நிறையப்பெற்ற நந்தவனங்களையும், மகளிர் புனல் விளையாட்டுக்குரிய வாவிகளையும் பொய்கைகளையும், மென்னடைபயின்று போதுபோக்குதற்குரிய குயில்முதலிய பறவைகளையும், பொன்னிறமுள்ள பெரிய கோபுரங்களையுடைய மதில்களையுமுடையதாய் அசுர சிற்பியாகிய மயனென்பவன் தனது திறமுழுவதையும் காட்டக்கருதி நிருமித்ததுபோல விளங்கி ஆகாயத்தில் உலவுகிற சூரிய சந்திரர்களாகிய இரு சுடர்களும் ஒளிவீசாது மறைந்தாலும் தனது மாளிகைகளின் இரத்தினங்களினாலும் பொன்னினாலும் பேரிருளையுமொழித்துப் பிரகாசிக்க வல்லதாய், பொன்னுலகத்தில் வாழ்கின்ற தேவர்கட்கதிபதியாகிய தேவேந்திரனுடைய இராஜதானி நகரமாகிய அமராவதியும் தனக்கொப்பாகப் பெறாததான திரு

---

வளர்பாகா நகரத்தில் தருமசீலையென்னும் திவ்வியநாமம் பூண்ட ஒரு பதிவிரதையிருந்தாள்.

"பெண்ணிற் பெருந்தக்க யாவுள கற்பென்னுந்
திண்மை யுண்டாகப் பெறின்"

என்று தெய்வப் புலமைத் திருவள்ளுவ நாயனார் திருவுளம்பற்றினபடி நாணம், மடம், அச்சம், பயிர்ப்பென்னும் நால்வகைக்குணங்களும் ஏதுவாக, மனத்தைப் பலவிடத்துஞ் செல்லவிடாது நிறுத்திக் கற்புநிலையைக் காத்தும்,

"வேத மோதிய வேதியர்க்கோர்மழை
நீதிமன்னர் நெறியினுக் கோர்மழை
மாதர்கற்புடை மங்கையர்க் கோர்மழை
மாதமூன்று மழையெனப் பெய்யுமே"

என்றமுதியோர் வார்த்தைக்குக்கனமுண்டாக்கியும், "குலமகட் கழகு தன் கொழுநனைப் பேணுதல்" என்ற நீதியைக் கடைப்பிடித்து "தாசிபோல் பணியில் புத்திதன்னிலே யமைச்சுப்போலும்—தேசினிற்றிருவுமூட்டுஞ் சினேகத்திலன்னைபோலும்--மாசிலாப்பொறைக்குப் பூமா தென்னவு மருவுநாளில்-வேசிபோற்குணமிதாவு மிகுந்த கற்பினுக்கே நன்றே" என்ற நீதிப்படி அம்மாது தன் கணவனுக்குத் தாசிபோல் பாதப்பணிவிடை செய்தும், மந்திரிபோலச் சமயோசிதமறிந்து நல்லவாலோசனை சொல்லியும், ஸ்ரீமகா லட்சுமிபோலப் பெண்ணைப் பெண் இச்சிக்கத்தக்க அதிரூப சௌந்தரியம் வாய்ந்து பூமாதேவிபோலச் சலியாத பொறுமையுடையவளாயும், வேசைபோலப் பர்த்தாவைச் சரசகேளி விநோதத்தாற் களிப்பித்தும், சரீர இரட்சணையிலே "தாய்க்குப் பின் தாரம்" என்று உலகஞ் சொல்லுகிறபடி அன்புள்ள தாய்போல் இனிய உணவுகளால் போஷித்தும் அறுவகைக் குணங்களும் வாய்ந்தும்,மரக்கலத்தை யாதரவாகக்கொண்டு கடலைக் கடந்து கரையேறுகின்றவர்களைப் போல, தன் நாயகனது இல்வாழ்க்கைக்குத் துணையாகி, பிரமசாரி, வானப்பிரஸ்தன், சந்நியாசி முதலியோரை உபசரித்தல் ஆதியாகிய அறங்களைச்செய்து மோட்சக்கரை யேறுவதற்குத் தன் பர்த்தாவுக்கு அனுகூலமாயிருந்தும், "மாமியார் மெச்சிய மருமகள் இல்லை" என்னும் பழமொழியைப் பொய்ப்பித்தும், கண்டவர்களெல்லாம் இந்த உத்தமி கல்வியிற் கலைமாதோ! கற்பில் அருந்ததியோ! கருணையில் பார்வதியோ! பரிசுத்தத்திற் பவானியோ! என்று அதிசயிக்கும்படி விவேகமும், கற்பும், இரக்கமும், சுசியும் வாய்ந்தவளாயிருந்தாள்.

"கடகரி யஞ்சி நடுங்கி வருந்திடு
மடுவினில் வந்துத வும்புய லிந்திரை
கணவன ரங்க முகுந்தன் வருஞ்சக டமோதி"

என்றபடி கந்தமலர்த்தடத்தில் நொந்தாதிமூலமென்ற கடவாரணத்தைக் காத்தருள் புரிந்தவனும், நற்கருணைசேர் குணகரனாகிய முத்துக்குமரனுக்கு மாமனும்,

"உரியதவ நெறியில்நம நாரணாயவென
ஒருமதலை மொழியளவி லோராத கோபமுட
னுனதிறைவ னெதனிலுள னோதாய டாவெனுமு
[னுறு தூணில்
உரமுடைய அரிவடிவ தாய்மோதி வீழவிர
லுகிர்புதைய இரணியனை மார்பீறி வாகைபுனை
உவணபதி நெடியவனும்"* * * என்றபடி

நரஸிம்மாவதாரஞ் செய்து பிரகலாதனை இரக்ஷித்தவனும்,

"கருதியி லங்கை யழிந்துவி டும்படி
அவுணர டங்கம டிந்துவி ழும்படி
கதிரவ னிந்து விளங்கி வரும்படி விடுமாயன்"

என்றபடிகொடியஇராவணன் முதலோர் முடிகள் பொடிபடவே செய்துவிடும்வீரகோதண்டபாணியான இராமாவதாரமெடுத்தவனும்,

"கனைதகன சாபதி கிரிவளை வாளொடு கைவசிவித்த
கோபாலம கீபன்தேவிம கிழ்ந்து வாழ— [நந்த
கயிறொடு லூகலமுருள வுலாவிய கள்வனறப்பயந்து
ஆகாயக பாலம்பீறவி மிர்ந்து நீள,
விதரண மாவலி வெருவ மகாவ்ருதவெள்ள
வெளுக்கநின்ற நாராயணன்"

என்றபடி, ஸ்ரீகிருஷ்ணாவதாரஞ் செய்து தூய தேவகிக்குத் தன் திருவிளையாட்டைக் காட்டினவனும் பாண்டவர்க்குச் சகாயமாய்த் தேர் விடுத்து துஷ்டநிக்ரகஞ் செய்து சிஷ்ட பரிபாலனம்பண்ணினவனும், மகாபலி சக்ரவர்த்தியையொழிக்கத் திருவிக்ரமாவதாரமெடுத்தவனுமாகிய ஸ்ரீமந்நாராயணனுடைய சகல ஜகத்காரணத்வத்தையும், சர்வரக்ஷகத்வத்தையும், சமஸ்த கல்யாண குணாத்மகத்தையுங் குறிக்கும் "அ" என்ற அகாரம், அந்நிய சேஷத்வ நிவர்த்தியையும் பகவதநந்நிய சேஷத்வத்தையும் பொருளாகக்கொண்ட "உ" என்ற உகாரம், இருபத்தைந்தாமட்சரமாயும், ஞானாநந்தமயமாயுள்ள ஆத்மாவை யுணர்த்தும் "ம"

நடை சிறிதாகில் நாள் ஏறும், படை சிறிதாகிற் பயம் ஏறும்.



என்ற மகாரம் ஆகிய மூன்று அட்சரங்களாலாய ஓங்காரமாகிய "ஓம்" என்ற முதற் பதம் —யானெனதென்னும் அகங்கார மமகாரமாகிய நிவர்த்தியையும், சுதந்தர ஹீனத்தையும், பாரதந்திர ஸ்வரூபத்தையும் விளக்கி நிற்கும் "நம" என்ற இரண்டாம் பதம்,—சேதனாசேதனங்களுடைய நித்யத்தையும், அவற்றின் சமூகத்தையும், பெரிய பிராட்டியார் தொடக்கமான நாச்சிமாரையும் நித்திய சூரிகளையுங் கூறுகின்ற நாரமான "நார",மேற்கூறியவைகளை ஆசிரயமாகவுடையதை விளக்கும் அயனமான "அயன", எல்லாவித கைங்கர்யங்களையும் செய்யவேண்டுமென்று கூறுகின்ற ஆயவென்பதான "ஆய"என்ற மூன்று பிரிவுகளால் ஆகிய "நாராயணாய" என்னும் மூன்றும் பதம், இவைகளினாலாகிய "ஓம்நமோ நாராயணாய" என்றமுப்பதங்களையுடையதும், (ஓம்) அகாரவாச்சியான ஸ்ரீமந்நாராயணனுக்கே உரியவனான நான் (நம:) எனக்குரியனன்றி, (நார) சகல சேதனாசேதனவஸ்துக்களுக்கும் (அயன) ஆசிரயனான நாராயணனுக்கே (ஆய) எல்லாக் கைங்கர்யங்களையுஞ் செய்கின்றவனாகின்றேன் என்று பொருள் படுகிறதும், பிரமன் முதல் எறும்பீறுயுள்ள எல்லாவுயிர்களுக்கும் ஸ்ரீமந்நாராயணனே மாதாவாயும், பிதாவாயும், இருப்பிடமாயும், இரட்சகனாயும், சினேகனுமிருப்பதால் மோட்ச சாம்பிராச்சியத்துக்குபாயமும்அவனேயென்று உணர்த்தி பகவானுக்கும் ஜீவர்களுக்குமுள்ள நவ சம்பந்தங்களையுணர்த்துவது, சகல வேதசார சங்கிரகமாகியதுமான திருவஷ்டாட்சரத்தை,

"இரவினிடை துயிலுகினும் யாரோடு பேசுகினும்" எக்காலத்திலும் உகந்து சொல்வாள். சக்ரந்தரித்தபொற்கரனேயென்றும்,விபீஷணர்க்கருள்செய்த கிருபாகரனேயென்றும், முத்துக்குமரனுக்கு மாமனான ஸ்ரீதரனேயென்றும்,பல்குனனுக்கு அனுக்கிரகித்த பரிவிடுபாகாவென்றும், பங்கினுறையும்அலர்மேல் மகிழ் மோகாவென்றும், தூய திருவேங்கடரமணாவென்றும் திருமாலின் திவ்வியநாமங்களை இடைவிடாது சொல்லிக் கொண்டிருப்பாள். தருமசீலை அப்படி இனிது வாழ்ந்துவ மங்களில அவளுக்கு முப்பது வயதுமாகப் புத்திரப் பேறின்றியிருந்தாள்.

"விரிகடல முதமும் வேலை ஞாலமுஞ்
செறிமுகத்தழலுமிழ் சிறுகண் யானையு
மெரிமணிக் குப்பையு மெளிதி னெய்தலா
மருமகப் பேறுதான் மற்றரிய தென்பவே"

என்றும்,

"குதலை மென்மொழிச்
செம்மையா வரு மகப்பெறாத தீமையோர்க்
கிம்மையு மறுமையு மின்பமில்லையால்"

என்றும்,

"பொன்னுடைய ரேனும் புகழுடைய ரேனு மற்
றென்னுடைய ரேனு முடையரோ— வின்னடிசில்
புக்களையும் தாமரைக்கைப் பூநாறும் செய்யவாய்
மக்களை யிங்கில்லாதவர்"

என்றும் தமிழ்வல்லோரும் உரைத்தவாறும் புத்திரப்பேறில்லாமல் தருமசீலை தியங்கினாள். "புத்" என்ற நரகத்தில் வீழ்ந்து தவிக்க வேண்டுமே யென்றேங்கினாள். புத்திரனைத் தலைமேல் வைத்துக் கொஞ்சும் பாக்கியம் பெறாத தலை கழனியில் நடும் நாற்று முடியென்றும், புதல்வனைப்பார்த்து மகிழாதகண் பாம்புப்புற்றின் கண்ணென்றும், பிள்ளையின் மழலைச்சொல்லைக் கேளாத செவி பாழான சாரத்துளையென்றும், குழந்தையை ஆலிங்கனஞ்செய்து தடவிக்கொடாத கை உலக்கையென்றும் வீட்டு உத்திரக்கை யென்னும், குழந்தையோடு கொஞ்சிக்குலவாத வாய் மலஜலமோடுங்கால்வா யென்றும் சுண்ணாம்புக் காளவா யென்றும், பாலகனில்லாத பாழுஞ் சரீரம் கள்ளி மரமென்றும் துக்கித்துத் தனக்கு அங்கங்களிருப்பதைக் காட்டிலும் இல்லாமலிருப்பதே நலமென்றும் நொந்து கொள்வாள். பிறகு காசி இராமேசுவரம் முதலிய க்ஷேத்திரங்களுக்குப் பீடாபரிகாரமாய்த் தன் நாயகனுடன் யாத்திரை செய்தாள்.

"கரிபரியாயிரங்கள் கனத்த கோதானம் பூமி
பரிவொடு ரசிதஞ்சொர்ண பாத்திரம் பண்பாமென்று
மிருகுற மொத்தகன்னி கோடிதானீந்திட்டாலும்
அரிதிதுவென்றே யன்னமே யதிகமாம்"

என்றபடி ஆயிரம் யானையும் ஆயிரங் குதிரையும் வெள்ளிப்பாத்திரஞ் சுவர்ணப்பாத்திரம் நலஉபயகுல விசித்திரமான கன்னியாஸ்திரீகளாலே கோடி கன்னிகாதானஞ் செய்திட்டாலும், அன்னதானத்துக் கீடாகா தென்பதைக் கைக்கொண்டு சிறப்பாய் அன்னதானஞ் செய்தும்,

நஷ்டத்துக்குப் பலர், நயத்துக்கு ஒருவரோ ?

"ஓரரசாலும்வேம்பு மொருபத்துப் புளியமூன்றுஞ்
சீர்பெறு விளாவும் வில்வ மூன்றுடன் சிறந்தநெல்லி
பேர்பெறு மைந்தெங்கு பெருகுமா வைத்தும் பேறி
யார் பயிராகிச் செய்தாலவர்க்கில்லை நரகந்தானே"

என்றவாறு அரசு, வேம்பு, வில்வம் முதலிய மரங்களைப் பயிர்செய்தும்

"துறந்தார்க்குந் துவ்வா தவர்க்கு மிறந்தார்க்கு
மில்வாழ்வா னென்பான் றுணை"

என்றவாறு, கற்புடை மனைவியோடு இல்லின் கணிருந்த தருமசீலையின் நாயகன் தன்னை யொழித்த மூவர்க்கும், துறந்தார்க்கும் துவ்வா தவர்க்கும் இறந்தார்க்கும், தேவர்க்கும், முனிவர்க்கும், விருந்தினர்க்கும், சுற்றத்தார்க்கும், பிறர்க்கும் துணையாதல், வேள்விசெய்தல், சீலங்காத்தல் முதலியவைகளை அருளுமன்பு முடையவராய்ச்செய்தும், யாருமிலா அநாதைப் பிரேதத்தை ஸம்ஸ்கரிப்பித்தும், தர்மவைத்திய சாலை முதலியவைகளை யேற்படுத்தியும், சத்திரஞ்சாவடி தண்ணீர்ப்பந்தல்முதலியவைகளைக் கட்டுவித்தும், கணக்கில் வரம்பற்ற பசுக்களை யாதரித்து அவைகளின் பாலை எளிய குழந்தைகட்குச் சுடுகக்கொடுப்பித்தும் தரும சீலையும், அவளது பர்த்தாவும் இல்லறமார்க்கத்தில் தருமம்வழுவாது நடந்துவந்தார்கள்.

இப்படி நிகழுங் காலத்தில் ஒருநாள் யாருதி முதலான பாகவதர்களும், பிரகலாதன் முதலான பக்தஜனங்களும் ஸ்தோத்திரம் பண்ணும்படியாகவும், ஸனக ஸனந்தனுள் முதலானவர்கள் பூஜிக்கும்படியாகவும், பிரும்மருத்ரேந்திராதி, லோகபாலகர்கள் சேவிக்கும்படியாகவும், சமஸ்த பிராணிகளுக்கும் புத்திமுக்தி சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும்படியாகவும் ஸ்ரீவைகுண்டத்திலிருந்து வந்து ஸ்ரீவேங்கடாசலத்திலே எழுந்தருளியிருக்கும் பகவான் ஸ்ரீமந்நாராயணமூர்த்தி தரும சீலையின் மெய்யன்பை நுகர்ந்தருளுவதற்குத் திருவுளங்கொண்டு ஒரு வயோதிகப் பிராமணனைப்போல் திருவேடங் கொண்டு, தரும சீலையின் வீட்டு வாயிலிற் சென்று, திருவமுது வேண்ட, அடியார்கள் மேலே முழுமையும் பதிந்த அன்புகொண்ட சிந்தையையுடையவரான தருமசீலையின் பதியானவர், அப்பக்தருக்கு இன்சொற்களினால் நல்வரவளித்து தன்னுடைய கிரகத்தினுள் அழைத்துப் போக, தரும சீலை அவருடைய திருவடிகளை தூயநீர் கொண்டு மெல்லத்துலக்கி, அவ்வதிதுல்ய தீர்த்தத்தைத் தன் சிரமேற் றெளித்து அன்புடன் பருகி, அவரை ஆசனத்திலிருத்தி, விதிப்படி அர்ச்சித்து நமஸ்கரித்து, கைப்பு, புளிப்பு தித்திப்பு, துவர்ப்பு, கார்ப்பு, உவர்ப்பு என்று சொல்லப்படும் அறுவகைச் சுவையை யுடையனவாய், உண்ணப்படுவது, தின்னப்படுவது, நக்கப்படுவது, பருகப்படுவது என்ற நால்வகைப்படுமுணவுகளைச்சமைத்து அவருக்குத் திருவமுது செய்விப்பதற்குமுன், அப்பெரியவர் தருமசீலையைப் பார்த்து,

"ஆறுதிங்க ளொழிந்துண்போ
முண்ணுமளவுந் தரியாது
சோறுநாளு முண்பீர்முன்
னுண்பதென்னம் முடன்றுய்ப்ப
மாறின்மகவு பெற்றீரேன்
மைந்தன் றன்னை யழையுமென"

என்று பரமசிவன் சிறுத்தொண்ட நாயனாரிடம் திருவிளையாடல் செய்தவாறு, ஸ்ரீமந்நாராயண மூர்த்தியான அந்த வயோதிகர் தருமசீலையைப் பார்த்து அவளுடைய புத்திரனையழைக்கும்படி திருவாய்மலர்ந்தருள, அவள் தன்னுடைய மனத்திலுள்ள துயரந் தாங்கமாட்டாமல்,

"தெள்ளியதோர் பிள்ளையில்லை,
திருமாலின் செயலோநான
டியேன், உள்ளங் கலங்கி
மெத்த வுருகுது நானென்செய்வேன் !
குறையது வல்லால் வேறு
குறையில்லை"

என்க, மறையவர் புசிக்கேனென்று மறுத்துக் கோபங்கொண்டு

"மைந்தனில்லா மனையில் மறையோர்
புசிக்கமாட்டார்"

என்றும்,

"தெரிவது மென்ன
பிரமதேவனே சொல்லக்கேளீர்
அறிகுவீ ரொன்றுபிள்ளை
யாகிலுமில்லா தார்க்கு
இருபிறப்பினிலுஞ்சொர்க்க
மில்லாதனென வேதத்தில்
முறையமதிடுது வேத முற்றிலுஞ் சோதித்தேனே,

என்று வேதவியாசரும் பிரமதேவருக்குச் சொல்லியிருக்கிறரே; ஆனபடியால் தீதில்லாத சொர்க்கமற்றசேயிலாரகத்திற்புசியேன்'





என்று சொல்லத் தருமசீலை துயருற்றாள். அப்போது "அம்மணி! ஏதுஞ் சஞ்சலம்வேண்டாம்; அலர்மேலுறையும் மங்கையைக்காக்கும் ஆண்டவனைத் தொழுதலால் ஆதிநாளிற் செய்த வினை தீரும். வினைதீர்ந்தபின் புத்திர பாக்கியத்தைப் பெறுவாய்! ஸ்ரீதரனைப் பணிவாய்! அவரீவார் சுதன்றனை!" என்று திருவாய்மலர்ந் தருளி, திருவமுது ஏற்றுக்கொள்ளாமல் வெளியே சென்றதும், "ஐயோ! அடியவர் திருவமுது செய்தற்கு இடையூறுமிதுவோ" என்று துக்கித்து, சஞ்சலக் கடலில் மூழ்கி, "தெய்வமே! இதுவென்ன தீவினை வார்த்தை யென் செவியிற் கேட்கலானேன்! மெய்யான அன்பர் என் வீடு வந்து புசியாமற் போன விபரீதத்தை என்னென்று சொல்வேன்! வாளாலேதா னறுத்து வதை செய்திடுகின்றவாறு போலிருந்ததே! பாலகனில்லாப் பாவியானேனே!

"வீங்குநீ ரருவி வேங்கட மென்னு
மோங்குயர் மலையத் துச்சி மீமிசை
விரிகதிர் ஞாயிறுந் திங்களும் விளங்கி
யிருமருங் கோங்கிய விடைநிலைத் தானத்து
மின்னுக்கொடி யுடுத்து விளங்குவிற் பூண்டு
நன்னிற மேக நின்றது போலப்
பகையணங் காழியும் பால்வெண் சங்கமுந்
தகைபெறு தாமரைக் கையி னேந்தி
நலங்கிளர் தாமம் மார்பிற் பூண்டு
பொலம்பூ வாடையிற் பொலிந்து தோன்றிய
செங்க ணெடியோ னின்ற வண்ணமும்"

என்று சேரமுனியாகிய இளங்கோவடிகள் துதித்தவாறு, கொடிவழித்தீர்த்த முதலிய புனித வாவிகளையுடைய வேங்கடமென்று கூறப்படும் மலையினுச்சிமீது ஞாயிறுந்திங்களும் இருமருங்கும் ஓங்கி விளங்கிய இடைப்பட்ட விடத்தே நல்ல நீலநிறத்தையுடைய மேகம் தன்மின்னலாகிய புதுப்புடைவையை யுடுத்துத் தன் வில்லாகியபணியைப் பூண்டுநின்றாற்போலப் பகையை வருத்தும் ஆழியையும், சங்கத்தையும் அழகிய தாமரைக்கையகத்தே வலனு மிடனு மேந்தி அழகு கிளருமாரத்தைத் திருமார்பிற் பூண்டு பொற்பூவாடையையுடுத்து வெளிப்பட்ட செவ்வரிபடர் திருக்கண்மலர்களையுடைய நெடியோனே! என்றும்.

'சிகர குடையினி னிரைவர இசைதெரி
சதுரன் விதுரனில் வருபவ னெளியது
திருடி யடிபடு சிறியவ னெடியவன்...மதுசூதன்...
திகிரி வளைகதை வசிதனு வுடையவ
னெழிலி வடிவின னரவுபொன் முடிமிசை
திமித திமிதிமி யெனநட மிடுமரி"......என்றும்'

"ஒருபது சிரமிசை போர்ற ராவண
னிருபது புயமுட னேந்து மேதியு
மொருகணை தனிலற வாங்கு மாயவா'......என்றும்,

"கலின் வடிவமான அகலிகை பெணுன
கமல பத மாயா'..............................என்றும்

ஸ்ரீமந்நாராயணனைத் துதித்து,

"மைந்தனைப் பெற்றளென்று
மகிலஞ் சொன்னாலே போதும்
கந்தனையுந் தேர் வண்டிக்
காலுக்குக் கொடுப்பேனென்று
சிந்தையில் நினைந்தாளந்தத்
தேன் மொழி கணவன் மாமன்
நந்நரி முகுந்தா வென்று
நண்ணுவாரே"

என்று மனத்தில் சுரேச்சபதஞ் செய்து கொள்ள, சமஸ்த ஜீவராசிகளுக்கும் கேட்டமாத்திரத்தில் புத்தி முக்தி முதலிய சர்வாபீஷ்டங்களையுங் கொடுக்கும் ஸ்ரீமந்நாராயண மூர்த்தி அவள்மீது கருணைகொண்டார்.

"கருணைசெய் தவளிட திருவயிறுதனிற்
கருப்பந்தரிக்க அவள் கண்டாள்
தரும சீலையும் ஒருபது திங்களிற்
றனயனைப் பெற்றெடுத்துக் கொண்டாள்."

மாலின் திருவருட் செயலினாலே தன்வயிற்றிற்சனித்த அப்பாலகனுக்கு வேங்கடரமணனென்று நாமகர்ணம் செய்வித்தாள். குழந்தையும் நாளொருமேனியும் பொழுதொருவண்ணமுமாய் வளர்ந்து பத்துமாதமுமாக, "மைந்தனைப் பெற்றனுந் தேர்வண்டியிற் கொடுப்பேனென்று, தெந்தனமாகவேண்டிச் சிறுவனைப் பெற்றேமென்றும், சிந்தையு மகிழ்ந்தாயிப்போ திங்களுமோர் பத்துமாச்சு, வந்த வற்பிசி மாசத்தேர் வண்டியிற் கொடுப்பாய் பெண்ணே!" என்று அச்சுதன் அவள் நித்திரைதனில் சொல்லிமறைய, தருமசீலை நித்திரை தெளிந்தெழுந்து பெருமூச்சு விட்டுக் கதறி, பெற்றெடுத்து வளர்த்த பாலகனை யெப்படித் தேர் வண்டிக்கிரையாய்க் கொடுப்பதென்று வாய்விட்டலறி,

"உலகமுண்டபெருவாயா வுலப்பில்கீர்த்தியம்மானே
நிலவும்சுடர் சூழொளி மூர்த்தி நெடியாயடியேனு
[ருயிரே
திலதமுலகுக்காய் நின்ற திருவேங்கடத் தெம்பெரு
[மானே
குலதொலடியே னுன்பாதம் கூடுமாறு கூறுயோ?"

என்றும்,

"இருமையுமென்னு ளத்தமர்ந்த ராமநாமத்
தென்னரசே யென்னமுதே யென்றுயே நின்
மருமலர்ப் பொன்னடி வழுத்துஞ் சிறியே னந்தோ
மனந்தளர்ந்தே மறிந்து மருள்வழங்கிலாயோ".

என்று திருவேங்கடரமணனைத் துதிசெய்து, "பேதைமை யென்பது மாதர்க்கணிகலனல்லவோ? அழும் பெண்ணைக் கண்டால் பேயுமிரங்குமே! பிள்ளையைக் 'கொடுத்து என்னைக் கொள்ளையடிப்பதும் நீதியோ? மிருகண்டுவும் ஞானச் சதிராளும் புத்திரனில்லாமையால் ஈசனைநோக்கித்தவஞ்செய்ய, ஈசன் தரிசனங் கொடுத்து,

"அந்தணர்குலத்தில்வந்த அருமறைதன்னிற்சேர்ந்த
விந்தைசேர்மிருகண்டா நீ விரைவுடன் வனற்றிற்ரு
[னும்
எந்தனை நோக்கிநீயு மெழிற்றவஞ் செய்ததாலே
புந்தியில் மிகமகிழ்ந்தோம் புகலுவீர் வாழி வாழி!

என்று திருவாய்மலர்ந் தருள, அவர்களும் "புத்திர வாஞ்சை யினாலே கானகத்தில்வந்து தேவரீரைப் பணிந்து தவம்புரிந்தோம். எங்கள் குறைதீர ஒரு மொழியுரைக்கவேணும்" எனப் பிரார்த்திக்க, "நூறுவயதுள்ள மதியில்லாத பிள்ளைவேண்டுமா? அல்லது பதினறுவயதுள்ள மதியுள்ளபிள்ளை வேண்டுமா?" வெனக் கேட்டு, அவர்கள் வேண்டுகோளுக்கிணங்கி, சகல குண சம்பன்னனையும், அறிவிலும் உருவத்திலும் நிகரற்றவனையுமுள்ள ஓர் மகனையளித்து, அவனை மீட்டுக் கேட்கப் பதினறுவருஷம் பொறுத்தானே இல்லறத்தை வெறுத்த தவசியான பரமசிவன்! பல தேவிமார்களை மணந்தும், பல கோபியர்களுடன் கூடியும் இல்லறத்திலேயே உழலும் நீ எனக்கு மகவையளித்துப் பத்துமாதத்தில திருப்பிக்கேட்பது மழகோ? கருணையில் பரமசிவனுக்கு நீ குறைந்தவனே! கிருஷ்ணவதாரத்தில் கருணைவடிவமான குழந்தையா யிருந்ததை நீ மறந்தனையோ"? என்றும்,

"எந்தைவருக ரகுநா யகவருக
மைந்த வருக மகனே இனிவருக
என் கண்வருக எனதா ருயிர்வருக...... அபிராம—
இங்குவருக அரசே வருகமுலை
யுண்க வருக மலர்சூ டிடவருக
என்று பரிவி னெடுகோ சலைபுகல... வருமாயன்"

என்றபடி ஸ்ரீ ராமவதாரத்தில் நீ குழந்தையா யிருந்ததை மறந்தனையோ?" என்றும்,

"மனந்தளர்ந்தேன் வருந்துகின்ற வருத்தமெல்லாம்
ஐயாவென்னு ளத்தமர்ந்தாய் நீதான் சற்று
மறியாயோ வறியாயே லறிவாரியாரோ
பொய்யான தன்மை யினேனெனினு மென்னைப்
புறம்விடுத்த லழகேயோ பொருளாவெண்ணி
மெய்யாவென் றனையந்நா ளாண்டாயிந்நாள்
வெறுத்தனையேயெங்கேயான்மேவுவேனே" என்றும்,

"பாண்டவர் தூதா! அனுதரக்ஷகா! வேங்கடரமணா! சங்கடஹரணா! பாண்டுரங்கா! புண்டரீகவரதா! ஓ பராத்பரா! ஓம் நாராயணா! ஓம் நமோநாராயணாயா! ஸ்ரீமந் ஓம்நமோ நாராயணாயா!" என்று ஹரியைத் துதித்தாள். அவ்வருஷத்திய ஆர்ப்பசிமாதத் தேருங்கூடக்க தருமசீலை மனத்தில் திடங்கொண்டு கனவு தனது நினைவுதானென்று கவலைவிடுத்து தன்னருமைப் புதல்வனை அணிபணிகளால் அலங்கரித்துப் பிரியமுடனே வளர்த்துவர வருடமும் ஐந்தாக, தருமசீலை கனவையே மறந்தாள்.

"மன்னுதபோதனியார்க்குக் கனவின்கண் மழவிடை
[யார்
உன்னுடைய மனக்கவலை யொழி நீ யுன்னுடன்பிறந்
[தான்
முன்னமே முனியாகியெனையடையத்தவமுயன்றான்
அன்னவனை யினிச்சூலை மடுத்தாள்வ மெனவருளி"

என்று பரமசிவன் திலகவதியாருக்குச் சொப்பனத்திற் றோன்றி, "இனி அவனைச் சூலை நோயினால் வருத்தி ஆட்கொள்வோம்" என்று திருவருள்சுரந்து தருமசேனரென்ற திருநாவுக்கரசு நாயனாருடைய வயிற்றிலே கொடிய சூலைநோயுண்டாக்கிக் குடலைக் குடைதலுற்றதுபோல், ஸ்ரீமந் நாராயணன்,

ஐந்து வற்சரம்பொறுத்தா ரப்புராஹரியும்பார்த்துக்
கந்தனுக்குக்குத்ரவியாதிகற்பித்தார்பெற்பித்தாரே".

[பின்னும் வரும்.]

நண்டுக் குடுவையை நடுத்தெருவில் உடைத்ததுபோல.



# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

### நான்காம் அத்தியாயம்

### சஞ்சலையின் சாகசம்

அப்பொழுது தீன் தீன் என்று சப்தம் செய்துகொண்டு ஐந்நூறு குதிரை வீரர்-யமனைப் போன்றவர்கள்-பருவதத்தின் மேலேறினார்கள். குன்று உயரமதிகமில்லை யென்று முன்னேயே சொல்லி யிருக்கிறேமல்லவா? அதனால் அதன் மேலேறுவதற்கு அதிகநேரம் பிடிக்கவில்லை. குன்றின்மேலேறிப்பார்க்கவும், அங்கே ஒன்றும் கண்ணிற் படவில்லை. மபாரகன் தான் தோல்வி யடைந்து திரும்பி வந்த கணவாய் மார்க்கத்தில் கள்வர் காத்துக்கொண்டிருக்க வேண்டுமென்று தெரிந்துகொண்டான். வெளிப்புறம் போவதற்கு வேறொரு மார்க்கமிருந்தது. அதை மூடி விட்டு அவரைத் துவம்ஸம் பண்ணவேண்டுமென்று நிச்சயம் செய்துகொண்டான். முதல் ரந்திரத்தில் ஹஸனல்லிகான் சைனியத்தை நிறுத்திக்கொண்டிருப்பானென்று தெரிந்துகொண்டு தான் இன்னொரு ரந்திரத்தின் ஜாடை பிடித்துக்கொண்டு சைனியத்துடன் போனான். அங்கே பார்க்கவே நாற்பத்தாறு இராஜபுத்திரர்- அதிகமில்லை :- சரீரமெல்லாம் இரத்தமயமாயிருந்தது.- பல்லக்கின் பின்னே போய்க்கொண்டிருந்தார்கள். மபாரகன் இவர்களுக்கு வெளிப்புறம் போகிற மார்க்கம் தெரிந்திருக்கவேண்டும்என்று அவர் பின்னே மெல்லமெல்ல அவர்கள்மேல் கண் வைத்துக்கொண்டு போனான். போகப்போக பருவதத்தின் உயரம் குறைந்து வந்து, முன் பக்கத்தில் வெளியில் போகிற மார்க்கம் கண்ணுக்குத் தென்பட்டது. அப்பொழுது மபாரகன் குதிரைகளையெல்லாம் விரட்டிக்கொண்டு போய் அம்மார்க்கத்தை மறைத்துக்கொண்டான். இராஜபுத்திரர் கொஞ்சம் களைப்பாறிக்கொண்டு வந்ததால், இன்னுமவ்விடம் வந்து சேரவில்லை. மோகலாயர் மார்க்கத்தை மறைத்துக்கொண்டு அந்த ரந்திரத்தின் வாயில் பீரங்கியைக் கொண்டுவந்து வைத்துக்கொண்டார்கள். மேலும் அங்கே வருகிற இராஜபுத்திரரைப் பரிகாசம் பண்ணுவதுபோல் தங்கள் தீன் தீன் சப்தத்தைச் செய்துகொண் டிருந்தார்கள்: அச்சத்தத்தைக் கேட்டு இராஜபுத்திரர்கொஞ்சம் பதறினார்கள். அவர்களுக்குப் பீரங்கிகளில்லை.

ராஜஸிம்ஹன் பார்க்கவும், பிழைக்கிற வழி ஒன்றும் தோன்றவில்லை. மோகலாயர் சேனை இருபது மடங்கு ஜாஸ்தியாயிருந்தது. வெளிப்புறம் போகிற மார்க்கம் கட்டிப் போயிற்று. வேறு மார்க்கமில்லை. உயிர்விடுவது தவிர வேறொரு மார்க்கமும் காணப்படவில்லை. ராஜஸிம்ஹன் அம்மார்க்கத்தைப் பிடிக்கவேண்டுமென்று தீர்மானித்தான். அப்பொழுது தன் சைனிகரை நோக்கிச் சொன்னதாவது:—

"சேவகர்களே—பந்துக்களே! நான் இன்று மனப்பூர்வமாய் உங்களிடம் மன்னிப்புக்கேட்டுக்கொள்ளுகிறேன்: என் தப்பினால்தான் இந்த ஆபத்து உண்டாயிற்று. பர்வதத்திலிருந்திறங்கி வந்தது தப்பு. இப்பொழுது இரண்டு சந்து மார்க்கங்களும் அவர்கள் வசமாயின. இரண்டிடங்களிலும் பீரங்கிகள் சத்தம் கேட்கிறது. இரண்டிடங்களிலும் நம்மைப்போல இருபது மடங்கு ஜனங்கள் நின்றுகொண்டிருக்கிறார்கள். சந்தேகமில்லை. ஆதலால் நாம் உயிர் தப்புவதற்கு வழியில்லை. ஆனால் என்ன நஷ்டம்? இராஜபுத்திரனாய்ப் பிறந்து எவன்தான் சாவதற்குப் பயப்படுவான். எல்லாரும் சாகத்தான்வேண்டும். ஒருவனும் பிழைத்திருக்க வேண்டாம். ஆனால் மொகலாயரை யடித்துச் செத்துப் போவோம். சாகிறதற்கு முன் மோகலாயரில் இரண்டுபேர்களை யாவது சொல்லாமல் செத்துப் போகிறவன்; இராஜபுத்திரனல்ல. இராஜபுத்திரர்களே! கேளுங்கள். இந்த மார்க்கத்தில் குதிரை போகாது. எல்லாரும் குதிரையைவிட் டிறங்குங்கள். நாம் கத்தியைக் கையிற் பிடித்து வீசிக்கொண்டு போய் பீரங்கியின்மேல் விழவேண்டும். பீரங்கி நம் கையில் அகப்பட்டால் அதன்மேல் பார்ப்போம்" என்று சொல்ல இராஜபுத்திரரெல்லோரும் குதிரைகளிலிருந்து கீழே குதித்து உறைகளிலிருந்து கத்திகளை உருவிப் பிடித்துக்கொண்டு நின்றார்கள். அவர்களது உறுதியான பிரதிக்ஞையையும் முக காந்தியையும் பார்த்து பிராணன் போனாலும் இராஜபுத்திரரிலொருவனாவது பின் திரும்பமாட்டானென்று அறிந்துகொண்டான். அப்பொழுது ராஜஸிம்

நண்டு கொழுத்தால் வளையில் இராது.

ஹன் உற்சாகத்துடன் வரிசைக்கு இரண்டு பேர்களாய் வாருங்களென்றான். கால் நடையாய் இரண்டிரண்டு பேர்களாய் வரிசையாய்ப் போனார்கள். ராணா ராஜஸிம்ஹன் எல்லாருக்கும் முதலாளாகப் போனான். இன்று சமீபத்தில் யமன் இருந்ததைப் பார்த்தும் அவன் மனத்தில் கொஞ்சமாவது கலக்கமில்லை.

இந்தச் சமயத்தில் பர்வத ரந்திரமெல்லாம் அசையும்படியும் பருவதத்திலெல்லாம் பிரதித்துவனி யுண்டாகும்படியும், மகாகாளிக்கு ஜயம் உண்டாக! தேவிக்கு ஜயம் உண்டாகட்டும்! என்று உரத்துச் சத்தமிட்டார்கள்.

மிகவும் சந்தோஷகரமான இந்தச் சத்தத்தைக் கேட்டு ராஜஸிம்ஹன் என்ன நடந்திருக்கிறதென்று பின் திரும்பிப்பார்த்தான். பார்க்கவும் இரண்டு பக்கங்களிலும் வரிசையாய் இராஜபுத்திரர் நின்றுகொண்டிருக்கிறார்கள். மத்தியில் விசாலமான கண்ணுடைய யாரோ - ஸாக்ஷாத் தேவியே - புன்சிரிப்புடன் நடந்து வருகிறாள். இல்லை. யாரோ தேவி, மானிட சரீரத்தைத் தரித்துக்கொண்டு வருகிறாள். இல்லை. பிரமன் தேவியினழகை வைத்து மானிடப் பெண்ணைச் சிருஷ்டித்திருக்கிறான். ஒன்றும் நிச்சயமாய்ச் சொல்ல முடியவில்லை. இராஜபுத்திரரெல்லோரும் மனத்தில் இராஜபுத்திர குல தேவதையான பகவதியே அவர்களை இரக்ஷிப்பதற்காகத் தானே யுத்தகளத்திற்கு வந்திருக்கிறாளென்று தீர்மானித்தார்கள். அதனால்தான் அவர்கள் ஜயத்துவனி செய்தார்கள்.

ராஜஸிம்ஹன் பார்த்து, இவள் மானிடப் பெண்ணே, ஆனால் சாமானிய மனுஷியல்லவென்று தெரிந்துகொண்டு, பல்லக்கு எங்கேயிருக்கின்றது என்று கேட்டான்.

ஒருவன் பின்னேயிருந்து "பல்லக்கு இந்தப் பக்கம் இருக்கிறது" என்றான்.

ராணா—அது காலியாயிருக்கிறதோ பார்.

சைனிக—பல்லக்குக் காலி. இராஜகுமாரத்தி யவர்கள் மகாராஜா எதிரில்.

சஞ்சலகுமாரி அப்பொழுது ராஜஸிம்ஹனுக்கு பிரணாமம் செய்தாள்.

ராணா—இராஜகுமாரி! நீ எதற்காக இங்கே வந்தது?

சஞ்சல—மகாராஜா! தங்களுக்கு நமஸ்காரம் செய்வதற்காக வந்தேன். அது ஆயிற்று. இன்னொரு பிரார்த்தனையுண்டு. நான் புத்தியில்லாதவள். ஸ்திரீகளுக்குச் சுபாவமாயுள்ள வெட்கமெனக்கில்லை. மன்னிக்கவேண்டும். நான் வேண்டுவதை இல்லை யென்று சொல்லப்படாது.

சஞ்சலகுமாரி பயத்துடன் வேண்டிக் கொண்டாள்.

ராஜஸிம்ஹன் "உனக்காகவே இவ்வளவு தூரம் வந்தேன். உனக்குக் கொடுக்காமலிருப்பது ஒன்றுமில்லை. வேண்டுவது என்ன?" என்றான்

சஞ்சலகுமாரி மறுபடியும் கைகூப்பிக் கொண்டு, "நான் சஞ்சல புத்தியுள்ளவளானதாலும் சிறு பெண்ணானதாலும் வரும்படி தங்களுக்கு எழுதினேன். ஆனால் என் நிஜமான அபிப்பிராயத்தைத் தாங்களறிந்து கொள்ளவில்லை. இப்பொழுது நான் மோகலாய சக்கரவர்த்தியின் ஐசுவரிய சமாசாரத்தைக் கேட்டு ஆசையுள்ளவளானேன். தாங்கள் உத்திரவு கொடுக்கவேணும். நான் டில்லிக்குப் போகிறேன்" என்றாள்.

ராஜஸிம்ஹன் கேட்டு ஆச்சரியமடைந்து பிரீதியுள்ளவனாகி, "நீ டில்லிக்குப் போகவேண்டுமானால் போகலாம். என்னால் தடையில்லை. ஆனால் நீ போகமாட்டாய். இப்பொழுது நான் உன்னை அனுப்பிவிட்டால், மோகலாயர் நான் பிராண பயத்தால் உன்னை விட்டுவிட்டதாக நினைப்பார்கள். முதலில் யுத்தம் முடியட்டும். பிறகு நீ போகலாம். உன் அபிப்பிராயம் எனக்குத் தெரியாது என்று நினைக்கவேண்டாம். நான் உயிருடனிருக்கிறவரையில் நீ டில்லிக் குப்போகமாட்டாய" என்று சொல்லி, சைனிகரைப் பார்த்து, "நீங்கள் முன்னே போங்கள்" என்று சொன்னான்.

அப்பொழுது சஞ்சலகுமாரி புன்சிரிப்புச் சிரித்துக்கொண்டு மிருதுவாகப் பார்த்துக் கொண்டு, வலக்கை சுண்டு விரலிலிருந்த வைர மோதிரத்தை இடக்கையினால் திருகிக்கொண்டு ராஜஸிம்ஹனுக்குக் காண்பித்து, "மகாராஜா! இந்த மோதிரத்தில் விஷமிருக்கிறது. டில்லிக்குப் போவதற்கு விடாமற்போனால், நான் விஷத்தைச் சாப்பிடுவேன்" என்றாள்.

ராஜஸிம்ஹன் நகைத்து, "ராஜகுமாரி! நான் வெகு நேரம் பார்த்து அப்பொழுதே அறிந்து கொண்டேன். ஆனால் நீ நினைப்பதுபோல் ஆகமுடியாது. இன்றைக்கு இராஜபுத்திரர் உயிர்





பிழைப்பது கஷ்டம். இன்றுசாகத்தான் வேண்டும். இல்லாவிட்டால் இராஜபுத்திரர் பெயர் கெட்டுப்போம். நான் எதுவரைக்கும் உயிரோடிருக்கிறேனோ அதுவரைக்கும் நீ என் வசமிருக்கவேண்டும். நான் இறந்த பிறகுஉனக்கு எங்கே வேண்டுமோ அங்கே போ" என்றான்.

சஞ்சலகுமாரி நகைத்துப் பிரீதியினால் முகமலர்ந்து வணக்கத்துக்குப் பரவசளாகி கடைக் கண்ணால் பிரீதியுடன் ராஜஸிம்ஹனைப் பார்த்து தனக்குள் தானே, 'வீரசிகாமணி! இன்று முதல் நான் உனக்கடிமை யானேன். உனக்குத் தாசியாகாமல் சஞ்சலை ஒரு நாள்கூட பிராணன் வைத்துக்கொள்ளமாட்டாள்' என்று மனத்தில் நினைத்துக்கொண்டு, ராஜஸிம்ஹனைப் பார்த்து, "மகாராஜா டில்லீசுவரன் யாரை மகிஷியாக விரும்புகிறாரோ, அப்பேர்ப்பட்டவள் ஒருவருக்கும் கைதியாகவிராள். இதோ பார்! நான் மொகலாய சைனியத்தின் பக்கம் போகிறேன். என்னைத் தடுப்பது யார் பார்ப்போம்!" என்று சொல்லி, சஞ்சலகுமாரி ராஜஸிம்ஹனை ஆச்சரிய பாசத்தில் கட்டிவிட்டு ரந்திரத்தைக் குறித்துப் புறப்பட்டுப் போனாள். அவளைப் போய் தொடுவது யாராலாகும்? அவள் போவதை ஒருவரும் தடுக்கவில்லை. நகைத்துக்கொண்டே சுவர்ணமயமான அந்தப் பிரதிமை ரந்திரமுகமாய்ப் போயிற்று.

சஞ்சலகுமாரி ஒண்டியாய், கோபத்தினால் ஜ்வலித்துக்கொண்டு ஆயுதங்களைக் கையிலேந்திக்கொண்டிருக்கிற ஐந்நூறு வீரர்களுக்கு முன்னே போய் நின்றாள். மார்க்கத்தைத் தடுத்து நடுவில் வைத்திருந்த அந்த பீரங்கி இப்பூலோக வச்சிராயுதம். அந்தப் பீரங்கியின் வாய்க்குச் சரியாய்ப் போய் பரமசுந்தரியான சஞ்சலை நின்றுகொண்டாள். பார்த்து ஆச்சரியமடைந்து மொகலாய சைனிகர் 'இவ்ள் பருவதத்திலுள்ள தேவதையே' என்றார்கள். மனுஷிய பாஷையில் பேசி, அவள் 'இந்தச் சேனையின் சேனாபதி யாரெ'ன்றாள்.

மபாரகனே ரந்திரத்தின் முகத்தில் இராஜபுத்திரரை எதிர் நோக்கி நின்றுகொண்டிருந்தான். அவன் "இந்தச் சேனை இந்த அறபனுடைய ஆதீனம். தாங்கள் யார்?" என்று கேட்டான்.

சஞ்சலகுமாரி நான் சாமானியமான ஸ்திரீ. உம்மைக் கேட்டுக்கொள்ள வேண்டுவது கொஞ்சமிருக்கிறது. ஒரு பக்கமாய் வந்தால் சொல்லுகிறேன்" என்றாள்.

மபாரகன் அப்படியானால் ரந்திரத்தின் மத்தியில் வரவேண்டுமென்றான். சஞ்சலகுமாரி அப்படியே போனாள். மபாரகன் பின்னே போனான்.

மற்றவருக்குக் கேட்காம லிருக்குமிடத்துக்கு வந்து, சஞ்சலகுமாரி, "நான் ரூபநகரத்தரசன் மகள். பாதுஷா என்னை விவாகம் செய்துகொள்ள வேண்டுமென்று என்னையழைத்து வருகிறதற்காக இந்தச் சேனையை அனுப்பியிருக்கிறார். இதை நம்புகிறீரோ இல்லையோ?" என்றாள்.

மபாரகன். - தங்களைப் பார்த்தவுடனேயே நம்புகிறேன்.

சஞ்சலை. - எனக்கு மொகலாயனை விவாகம் செய்துகொள்ள இஷ்டமில்லை. அப்படிச் செய்துகொண்டால் மகா பாபம் என்று எனக்குத் தோன்றுகிறது. என்னுடைய தந்தை பலஹீனராயிருக்கிறார். அவர் என்னை உம்முடன் அனுப்பிவிட்டார். அவரால் ஒன்றும் முடியாது என்று நினைத்து ராஜஸிம்ஹனுக்கு நான் தூதனை யனுப்பினேன். என் துரதிர்ஷ்டவசமாய் அவர் ஐம்பது பேர்களை மாத்திரம் அழைத்து வந்திருக்கிறார். அவர் பலம் வீரிய பராக்கிரமம் எல்லாம் பார்த்திருக்கிறீரல்லவா!

மபாரகன் ஆச்சரியப்பட்டு, "இதென்ன? ஐம்பது பேர்களா இத்தனை மொகலாயரை அடித்தது?" என்றான்.

சஞ்சலை.—இது விசித்திரமல்ல. மற்ற இடங்களிலும் இந்த மாதிரியே நடந்திருப்பது தெரிந்திருக்கலாம். ஆனால் அது எப்படி இருந்தாலுமிருக்கட்டும். ராஜஸிம்ஹன் இன்றைக்கு உம்மால் தோல்வியடைவான். அதனால் நானாகவே உம்மிடம் வந்துவிட்டேன். என்னை டில்லிக்கு அழைத்துக்கொண்டு போம். யுத்தத்தினால் இனிப் பிரயோஜனமில்லை.

மபாரக.—நீங்கள் உங்கள் உயிரைக் கொடுத்து இராஜபுத்திரரைத் தப்ப வைக்கவேண்டுமென்று இஷ்டமிருக்கிறவர்களாகத் தெரிகிறது. அவருக்கும் அதே இஷ்டமா?

சஞ்சலை.—அது எப்படி யிருக்கும்? நீர் என்னை அழைத்துக்கொண்டு போனாலும் அவர்கள் யுத்தம் செய்தே தீருவார்கள், என் இஷ்டமென்னவென்றால், நீர் என்னுடைய

இஷ்டத்திற்கிடங் கொடுத்து அவர்களை இரக்ஷிக்கவேண்டும்.

மபாரக—.அது ஆகலாம். ஆனால் கள்வரைத் தண்டிக்கவேண்டியது அவசியம். நான் அவர்களைக் கைதிகளாக்குகிறேன்.

சஞ்சலே.—வேறு என்ன செய்ய முடியுமானாலும், அது மாத்திரம் உம்மால் செய்ய முடியாது. அவர்களை யடித்துக் கொல்லலாமே யொழிய கைது செய்யமுடியாது. அவர்கள் எல்லோரும் இறப்பதற்குத் தயாராயிருக்கிறார்கள். நிச்சயப்படியே செய்வார்கள்.

மபாரக.—அதை நம்புகிறேன். ஆனால் தாங்கள் டில்லிக்குப் போவது நிச்சயமோ?

சஞ்சலே.—உம்முடன் வருவதற்குத் தீர்மானித்திருக்கிறேன். ஆனால் டில்லி வரைக்கும் வந்து சேருவேனோ என்னவோ அது சந்தேகம்.

மபாரக.—அதென்ன?

சஞ்சலே.—உங்களுக்கு யுத்தம் செய்து இறப்பது ஸஹஜம். நான் ஸ்திரீ. இருந்தபடியே சாவதற்குத் தெரியாதா?

மபாரக.—எங்களுக்குச் சத்துருக்களிருக்கிறார்கள். அதனால் சாகவேண்டும். பூமண்டலத்தில் தங்களுக்குச் சத்துருக்கள் உண்டோ?

சஞ்சலே.—நானே எனக்குச் சத்துரு.

மபாரக.—எங்கள் சத்துருக்கள் கையில் ஆயுதங்களுண்டு. தங்களுக்கு?

சஞ்சலே.—விஷம்.

மபாரக.—எங்கேயிருக்கிறது? தாயே! எதற்காகத் தற்கொலை செய்துகொள்ள வேண்டும்? தங்களுக்குப் போவதற் கிஷ்டமில்லாமலிருந்தால், தங்களிஷ்டத்துக்கு விரோதமாய் அழைத்துக்கொண்டு போவது எங்களுக்குச் சாத்தியமோ? டில்லீசுவரன் தானே வந்து நின்றாலும் தங்களைப் பலாத்காரமாய் அழைத்துப் போகமாட்டார். அதமனான நான் எந்த மட்டும்? தாங்கள் கவலைப்படவேண்டாம். ஆனால் இந்த இராஜபுத்திரர்கள் பாதுஷாவின் சேனையை ஆக்கிரமித் திருக்கிறார்கள். மொகலாய சேனாபதியா யிருந்துகொண்டு நான் அவர்களை மன்னிப்பதெப்படி?

சஞ்சலே.—மன்னித்துப்பிரயோஜனமில்லை. யுத்தம் செய்யும்?

இச்சமயத்தில் இராஜபுத்திரருடன் ராஜஸிம்ஹன் அங்கே வந்து நின்றுகொண்டான். யுத்தஞ்செய்யும் இராஜபுத்திர ஸ்திரீகளுக்கும் இறப்பதற்குத் தெரியும்.

மொகலாய சேனாதிபதியுடன் சங்கோசமில்லாமல் சஞ்சலை என்ன பேசுகிறாளோ கேட்கவேணும் என்று ராஜஸிம்ஹன் அச்சமயத்தில் வந்து சஞ்சலையின் பக்கத்தில் நின்றுகொண்டான். அப்பொழுது சஞ்சலை அவன் பக்கம் பார்த்து நகைத்துக்கொண்டு, "மகாராஜாதி ராஜ! தங்கள் பக்கத்தில் தொங்குகிற கத்தியைத் தயவுசெய்து தாசியாகிய எனக்குக் கொடுக்கவேணும்" என்றாள்.

ராஜஸிம்ஹன் நகைத்து, "நீ யதார்த்தமான பகவதியே" என்று சொல்லித் தன் கத்தியை எடுத்து சஞ்சலையின் கையிற் கொடுத்தான்.

அதுகண்டு மபாரகன் நகைத்து சஞ்சலகுமாரியின் வார்த்தைக்கு ஒன்றும் பதில் சொல்லாமல், ராஜஸிம்ஹனைப்பார்த்து, "உதயபுரத்திய வீரர் எத்தனை நாட்களாய் ஸ்திரீகள் பாகுபலத்தால் காப்பாற்றப்படுகிறார்கள்?" என்றான்.

ராஜஸிம்ஹன் கண்கள் சிவந்தன. அவன் "எத்தனை நாட்களாய் மொகலாய பாதுஷா அபலையரின்மேல் துராசாரம் செய்ய வாரம்பித்தானோ அது முதற்கொண்டு இராஜபுத்திர கன்னிகைகள் பாகுக்களில் பலமுண்டாயிற்று" என்று சொல்லி, தன் சிப்பாய்களைப் பார்த்து, "இராஜபுத்திரர் வாக்குயுத்தத்தில் ஸமர்த்தரல்ல. இவர்களோடு வாக்கு யுத்தம் செய்வதற்கு நமக்கு அவகாசமுமில்லை. வீணாய்க் காலத்தைப் போக்கவேண்டாம். இந்த மொகலாயரைத் துரும்பைப்போல் அடித்துப் போடுங்கள்" என்றான்.

இதுவரையில் இருதரத்துச் சைனியத்தாரும் சும்மாவிருந்து கொண்டிருந்தார்கள். பிரபுவினுத்திரவில்லாததால் ஒருவரும் யுத்தத்தில் பிரவிருத்திக்கவில்லை. இப்பொழுது ராணாவினுத்திரவாகவே 'அம்மனவருக்கு ஜயம்' என்று ஆரவாரித்துக் கொண்டு இராஜபுத்திரர் கரையை யுடைத்த நீர்ப்பெருக்கைப்போல் வந்து மொகலாய சேனையின்மேல் விழுந்தார்கள். ஆனால் இருதரத்தாரும் இருந்தவிடம் விட்டு நகரவில்லை. அந்த ரணகளத்தில் இரு சைனியங்களுக்கும் மத்தியில் கத்தியை வைத்துக்கொண்டு சஞ்சலகுமாரி ஸ்திரமாய் நின்றுகொண்டாள். கொஞ்சம்கூட அசையவில்லை.





அப்பொழுது சஞ்சலகுமாரி உரத்து "எது வரைக்கும் ஒரு தரத்தாராவது யுத்தத்திலிருந்து திரும்புகிறதில்லையோ அதுவரையில் நான் இந்தவிடத்தை விட்டு அசையமாட்டேன்" என்று சொல்லி, "என்னை அடித்துக் கொன்றாலொழிய நீங்கள் அஸ்திர யுத்தம் செய்யமுடியாது" என்றாள்.

ராஜஸிம்ஹன் கோபங்கொண்டு "நீ இப்படிச் செய்வது சரியல்ல. உன்னால் இராஜபுத்திரருக்கு இந்த அவமானமுண்டாக்கலாமா? லோகத்தார் இன்று தினம் ராஜஸிம்ஹன் ஸ்திரீயினுபகாரத்தால் பிராணனை இரக்ஷித்துக்கொண்டான் என்று சொல்வார்களே" என்றான்.

சஞ்சலே.—தாங்கள் மரணமடைவதற்கு யார் அப்படி செய்தது? அதற்கு முதல் நாள் சாகிறதற்கு இஷ்டமுள்ளவளா யிருக்கிறேன். இந்த அனர்த்தத்துக்கெல்லாம் யார் மூலமோ அவள் தான் முதலில் சாகவேண்டும்.

சஞ்சலை அசையவில்லை. மொகலாயர் ஆயுதங்களைத் தூக்கினவர் கீழே இறக்கிகொண்டார்கள். மபாரகன் சஞ்சலகுமாரியின் செய்கையைப் பார்த்து ஒன்றும் தெரியாமல் மயங்கினான். அப்பொழுது இருதரத்தாருக்கும் நடுவில் மபாரகன் உரத்து 'மொகலாய பாதுஷா ஸ்திரீகளுடன் யுத்தம் செய்கிற வழக்கமில்லை. ஆதலால் நாம் இந்த ஸௌந்தரியிடம் தோல்வியை ஒப்புக்கொண்டு ரணகளத்தை விட்டு விட்டுப் போவோம். ராணா ராஜஸிம்ஹனுடன் யுத்தம் செய்து தோல்வியோ ஜயமோ என்கிற விஷயம் வேறு, இடத்தில் தீர்மானிக்கப்படும் என்று நம்புகிறேன். ராணாவை இப்பொழுதே கேட்டுக்கொள்வதென்னவென்றால், அப்பொழுதும் ஸ்திரீகளை கூப்பிட்டுக்கொண்டு வரக்கூடாது என்றான்.

சஞ்சலகுமாரி மபாரகனைக் குறித்துக்கொஞ்சம் மனங்கலங்கினாள்.

மபாரகன் அப்பொழுது அவளுக்குச் சமீபத்திலேயே குதிரை மேலேறிக் கொண்டிருந்தான். சஞ்சலை அவனைப் பார்த்து, "ஸாஹேபாரே. என்னை ஏன் விட்டு விட்டுப் போகிறீர்? என்னை அழைத்துவரும்படி உம்மை டில்லீசுவரர் அனுப்பியிருக்கிறார் என்னை அழைத்துப் போகாமலிருந்தால் டில்லி பாதுஷா என்ன சொல்லுவான்?" என்றாள்.

மபாரக.—பாதுஷாவைக் காட்டிலும் பெரியவன் ஒருவனிருக்கிறான். அவனுக்குப் பதில் சொல்லிக்கொள்ளுவேன்.

சஞ்சலே.—அது பரலோகத்திலல்லவா? இவ்வுலகத்தில்?

மபாரக.—மபாரக அல்லிகான் இந்த லோகத்தில் ஒருவருக்கும் அஞ்சுவதில்லை. கடவுள் தங்களுக்கு பாக்கியத்தைக் கொடுக்கட்டும். நான் உத்தரவு வாங்கிக்கொள்ளுகிறேன்—என்று சொல்லி குதிரையின் மேலேறிக் கொண்டான். தன் சைனியத்துக்குப் பின் திரும்பும்படி உத்தரவுகொடுத்தான். அச்சமயத்தில் பின் பக்கத்தில் ஓரே தடவையில் ஆயிரம் துப்பாக்கிகளின் சத்தம் கேட்டது. ஓரே தடவையில் நூறு பேர் மோகலாய வீரர் பூமியில் விழுந்து மாண்டார்கள். மபாரகன் பார்க்கவும், வெகு கோரமான ஆபத்தாயிற்று.

---

# சிறுவர், ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## CHILDREN'S AND LADIES' PAGES

### செட்டியாரும் குடியானவனும்

முன்னொரு காலத்தில் சுப்பராயன் என்ற குடியானவன் ஒருவன் ஒரு குக்கிராமத்தில் வசித்துவந்தான். அவன் மிகவும் ஏழை. அதே கிராமத்தில் நடேச செட்டி என்று ஒரு மளிகைக்கடை வியாபாரி இருந்தான். அச்சிறு கிராமத்தில் வசிக்கும் ஜனங்களுக்கு அவசியமான, எண்ணெய், உப்பு, அரிசி, மிளகாய் பருப்பு முதலியவைகளை விற்று ஜீவனம் செய்துவந்தான். வழக்கம்போல் தன் கடைக்கு ரொக்கமாய் சாமான்கள் வாங்கிக் கொண்டு வருவதற்கு அருகில் இருக்கும் பெரிய பட்டணத்திற்கு அந்த செட்டி போய்க் கொண்டிருந்தான். வழியில், அப்பட்டணத்தில் வசிக்கும் ஒரு ரொக்கக்கடை நாட்டுக்கோட்டை செட்டிக்கு மாதாமாதம் தவறாமல் வட்டி கொடுக்கிறதற்காகபோய்க்கொண்டிருக்கும் சுப்பராயனை சந்தித்தான். சுப்பராயனின்

பாட்டனார், அவருடைய தகப்பனின் கர்மாதிகளின் பொருட்டு 50 வருஷங்களுக்கு முன் தன் நிலங்களின்மேல் 100ரூபாய் கடன் வாங்கினாராம். அக்கடனானது ஆரம்பத்தில் 100 ரூபாய் இருந்தபோதிலும், இவ்வளவு வருஷங்களாக வட்டிமேல் வட்டியாய், இப்பொழுது 1000, ரூபாய்க்குச் சரியாய் விட்டது. அந்த தவணைக் கடைக்காரனிட மிருந்து எவ்விதமாய் தன் பிதுரார்ச்சித நிலங்களை மீட்கிறது என்ற கவலையுடனே அந்த சுப்பராயன் போய்க்கொண்டிருந்தான். அவனை நடேசன் சந்தித்து "சுப்பராயா, சௌக்கியமா? வழக்கம்போல் தவணை வட்டி செலுத்துவதற்காக செல்கிறாயோ?" என்றான். "ஆமாம் செட்டியாரே, ஏதோ என் தாதாகாலத்தில் கடன் வாங்கினது இப்பொழுது 1000, ரூபாயாய் விட்டது. அவ்விடாமுண்டன் கையிலிருந்து எப்படி இவ்வாயிரம் ரூபாயைக் கொடுத்து என் நிலங்களை மூட்டிக்கொள்கிறது என்று தான் தெரியவில்லை" என்றான். "என்னப்பா, பண்ணுகிறது. அவரவர்கள் தலைவிதிபோல தான் நடக்கும். அது கிடக்கட்டும், வழி களைப்பில்லாமல் இருப்பதற்காக நாம் இருவரும் ஒருவொருக்கொருவர் கதை சொல்லிக்கொண்டு போகலாம் வா" என்றான் நடேசன். "ஆமாம் அப்பா, விதியை யாரால் வெல்லமுடியும்? நாம் இருவரும் ஒரு பந்தயம் போட்டுக்கொள்வோம். நாம் இருவரும் கதை சொல்லும்பொழுது, எவ்வளவு அண்டப்புளுகு கதையா யிருந்தபோதிலும், கதை கேட்கிறவன், அது பொய், நிஜமல்ல என்று சொல்லாமலிருக்கவேண்டும். அப்படித் தவறி, பொய் சொல்லிவிட்டால் கதை கேட்கிறவன் கதை சொல்லுகிறவனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுத்துவிடவேண்டும்" என்றான். அதற்கு நடேசன் சம்மதித்து பின்வருமாறு கதை சொல்லத் தொடங்கினான்.

"என் கொள்பாட்டன், எங்கள் ஜாதி செட்டிகளுக்குள் மிகவும் பணக்காரனும் முதல்வனாகவும் இருந்தாரல்லவா?" "ஆமாம் அப்பா, நிஜம்தான்" என்றான் சுப்பராயன். "அவர் ஒரு சமயத்தில் 40 கப்பல்களில் சாமான்களை ஏற்றி சீன தேசத்திற்குச் சென்று அங்கு, ரத்தினங்களிலும் ஆபரணங்களிலும் வியாபாரம் செய்தார்."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன். "அவர், அங்கு வெகு காலம் இருந்து நிறைய திரவியம் தேடி திரும்பி வரும்பொழுது அநேக அபூர்வ சாமான்களை வாங்கிக் கொண்டுவந்தார். அவைகளில் ஒன்று பேசும் சிலை. அது முழுத்தங்கத்தில் அபூர்வமாய் வேலை செய்யப்பட்டது. அதைக்கேட்கும் கேள்விகளுக்கெல்லாம் சரியான பதில் சொல்லக்கூடியது."

"ஆமாம் அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன். "என் முன்னோர் திரும்பி ஊருக்கு வந்தவுடன், இவ்வதிசய சிலையைப் பார்த்து தன் ஜாதக பலன்களைத் தெரிந்துகொள்ள பலர் என் முன்னோரிடத்தில் வந்துகொண்டிருந்தார்கள். ஒரு நாள் உன்னுடைய கொள்பாட்டனும் அச்சிலையைக்கண்டு சில கேள்விகேட்க வந்தார். சிலையைப்பார்த்து, உன் முன்னோர் "எல்லா ஜாதிகளிலும் புத்தி கூர்மையுள்ள ஜாதி எது" என்று கேட்டார். "மளிகைக்கடை செட்டிஜாதி' என்று அச்சிலை பதிலளித்தது. "எது மிகவும் முட்டாள் ஜாதி' என்றதற்கு "குடியான ஜாதி" என்றது. கடைசியாக உன் முன்னோன் கேட்ட கேள்வி என்னவென்றால் என் குடும்பத்தில் யார் பெரிய முட்டாள்" அதற்கு அச்சிலை 'உன் கொள் பேரன் சுப்பராயன் தான்" என்றது.

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன். இந்த அவமதிப்புக்குப் பதில் சரியானபடி சமயம் வந்தபொழுது கொடுக்கிறது என்று மனதிற்குள் தீர்மானித்துக்கொண்டான் சுப்பராயன்.

"சரி, இப்படி கொஞ்சகாலத்திற்குள் இச்சிலையின் கீர்த்தி வெகுதூரம் பரவி, கடைசியில் ராஜன் காதிலும் எட்டியது. அரசன் உடனே என் கொள்பாட்டனை வரவழைத்து அச்சிலையை வாங்கிக்கொண்டு அதற்குப் பதிலாக என் முன்னோனை முதல் மந்திரியாய் வைத்துக் கொண்டான்."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன்.

"என் கொள் பாட்டன் வெகுகாலம் உத்தியோகம் செய்து கடைசியில் காலகதியடைந்தான். அவ்வேலைக்கு என்பாட்டனார் வந்தார். ஆனால் அவர் அந்த வேலை சரியாய் கவனிக்காததால், அரசனுக்கு கோபம் பொங்கி யானை காலில் தன் பாட்டனாரை இடற உத்தரவளித்

நமன் அறியாத உயிரும், நாரை அறியாத குளமும் உண்டோ?



தான். அதற்காக என் பாட்டனாரை ஒரு மதம் பிடித்த யானைக்கு எதிராகக்கட்டி உருட்டிவிட்டார்கள். ஆனால் அந்த யானையோ, என் பாட்டனாரைக்கண்டதும் மிகவும் சாதுமிருகம்போல் பணிவாய் நின்று, தன் துதிக்கையால் என் பாட்டனாரைத் தூக்கித் தன் முதுகில் உட்கார்த்திவைத்தது."

"ஆமாம் அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன்.

"இதைக் கண்டதும் அரசனுக்குக் கோபம் தணிந்து, பழையபடி மந்திரிஸ்தானத்தையும் அனேக வெகுமதிகளையும் என்பாட்டனாருக்கு கொடுத்தான். என் பாட்டனாரின் காலத்திற்குப் பிற்பாடு, என் தகப்பனார் பட்டத்திற்கு வந்தார். ஆனால் என் தகப்பனாருக்கு அவ்வேலை பிடிக்காதலால், ராஜினாமா கொடுத்துவிட்டு, உலகத்தைசுற்றிவரப் பிரயாணப்பட்டார். இந்தமாதிரி சுற்றிக்கொண்டு வருகையில் தன்னைக் கடிப்பதற்காக தன் காதினருகில் பறந்து வருகிற ஒரு கொசுவைக்கண்டு பயந்தார்."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன்.

"அக்கொசுவைக்கண்டு பயந்து அதன் கால்களில் பணிந்து தன்னைக் காப்பாற்றும்படி அதை மிகவும் வேண்டிக் கொண்டார். இம்மாதிரி வேண்டிக்கொண்டதைப் பார்த்து மனமிரங்கி அக்கொசு "ஐயா செட்டியாரே, உன்மேல் திருப்தியானேன். உனக்கு நான் ஒருநன்மை செய்கிறேன். பார்" என்று சொல்லி தன் வாயை திறந்தது. அதற்குள் ஒரு ஜ்வலித்துக் கொண்டிருக்கிற தங்க அரண்மனையையும், அந்த அரண்மனையின் மாடியில் ஒரு அழகிய இராஜஸ்திரீயையும் கண்டார். அரண்மனை வாயிலில் அந்த ஸ்திரீயை அபகரிக்க, ஒரு திருடன் தயாராயிருப்பதையும் கண்டார். எப்பொழுதும் தைரியமும் பெருந்தன்மையும் உடைய என் தகப்பனார் உடனே அக்கொசுவின் வாயிற்குள் குதித்து அதன் வயிற்றிற்குள் சென்றார்.

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் சுப்பராயன்.

"உள்ளே சென்றதும் முதலில் கண்ணுக்குச் சற்று இருட்டாயிருந்தபோதிலும் சற்றுநேரத்திற்கெல்லாம், அவ்வரண்மனையையும் ராஜஸ்திரீயையும், திருடனையும் பார்த்தார். அத்திருடனை உற்றுப்பார்க்கவே உன் தகப்பனென்று கண்டுகொண்டார். பிறகு அந்த ராஜஸ்திரீக்காக ஒரு வருஷம் வரையில் அக்கொசுவின் வயற்றிலேயே இருவரும் சண்டையிட்டார்கள். அதற்குப்பிறகு உன் தகப்பனார் முற்றிலும் தோற்றுவிட்டார். அதன்மேல் என் தகப்பனார் அந்த ராஜகுமாரியைக்கல்யாணம் செய்துகொண்டு அவ்வரண்மனையிலேயே வசித்துவந்தார். அங்குதான் நான் பிறந்தேன். உன் தகப்பனே எங்கள் அரண்மனையில் வாசக்காற்போன் உத்யோகம் பெற்று இரவுபகலாய் வாசற்காத்துக் கொண்டிருந்தார். இந்த மாதிரி 15 வருஷம் சென்றது. எனக்கு 15 வயதானபொழுது, கொதிக்கும் ஜலமாய் ஒரு பெரிய மழை பெய்தது. எங்கள் அரண்மனையும், அதில் கரைந்து போய் ஒரு எரியும் ஸமுத்திரத்தில் நாங்கள் மிதந்தோம். பிறகு நாங்கள் நால்வரும் (அதாவது, உன் தகப்பனார், என் பிதா, என் தாயார், நான்) மிகவும் கஷ்டப்பட்டு ஒரு கரை சேர்ந்தோம். அந்த அந்த அதிசயத்தை என்ன செல்வேன்! நாங்கள் உள்ளே சென்றது வேறுதேசம்! இப்பொழுது கரை சேர்ந்தது இத்தேசம். காலசம்பவத்தினால், மந்திரிபதவியுடன் எல்லாசொத்தையும் இழந்ததினால் என் தகப்பனார் தன் விதியை நொந்து இவ்வூரிலேயே ஒரு மளிகைக்கடை வைத்து வியாபாரம் செய்யத்தொடங்கினார். காலக்கிரமத்தில் என் தகப்பனாரும் என் தாயாராகிய ராஜஸ்திரீயும் காலகதியை யடைந்தார்கள். இவ்வளவுதான் என் கதை" என்றான்.

"ஆமாம், அப்பா, நிஜந்தான். நான் சொல்லப் போகும் கதை அவ்வளவு ஆச்சரியமாயில்லாவிட்டாலும், நிஜத்திற்கு ஒன்றும் குறைவில்லை கேள்" என்று சுப்பராயன் சொல்லத்தொடங்கினான்.

"என்னுடைய கொள்பாட்டனார் தன் கிராமத்தில் இருந்த மிராசுதார்களுள் மிகவும் பணக்காரர். அவருடைய கம்பீரமான தோற்றமும் அவருடைய புத்திகூர்மையும், அவரைக் கண்டவர்கள் எல்லோருக்கும் அவரிடத்தில் பெரிய மதிப்பு செய்தது. கிராமத்தில் பெரிய பண்ணை யாகையால் அவ்வூரில் நடக்கும் பஞ்சாயத்து முதலியவைகளில் அவருக்கே ப்ரதமஸ்தானம். அவருடைய உதாரகுணத்திற்காக

நம்ப வைத்துக் கழுத்து அறுக்கலாமா?

அவரை எல்லோரும் புகழ்ந்தார்கள். ஊரில் யாராவது பிச்சை யென்று வந்தால் இல்லை என்று ஒருக்காலும் சொல்லமாட்டார். மேலும் அவர் மிக பலிஷ்டர். பீமசேனனுக்குச் சமானமான பலம் இருந்ததினால் துஷ்டர்கள் எல்லாரும் பூனையைக்கண்ட எலிபோல் நடுங்கினார்கள். இதனால், ஊரில் சற்குணம் பரவி வெகு செழிப்பாயிருந்தது."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன்.

"இப்படியிருக்கும்போது ஒருகாலத்தில் ஊரெங்கும் பஞ்சம் வந்தது. மழைபெய்யாமல் ஏரிகுளம் எல்லாம் வற்றிப்போகவே மரங்களெல்லாம் பட்டுபோயின. மிருகங்கள், பக்ஷிகள் முதலியன ஆயிரமாயிரமாக மடிந்தன. முன்வருஷங்களில் மீற்றுவைத்த சொத்தெல்லாம் விரயமாய்,ஜனங்கள் பிழைக்க வழியற்று தத்தளிக்கிறதைப் பார்த்து ஊரிலிருக்கும் எல்லா வைசிய ஜனங்களையும் கூப்பிட்டு ஒரு பஞ்சாயத்து கூடி என் முன்னோர் பின்வருமாறு சொன்னார். "ஜனங்களே, இப்போது பஞ்சமானதினால் நாமெல்லாரும் ஆகாரத்திற்கே வழியில்லாமல் மிகவும் கஷ்டப்படுகிறோம். நீங்கள் பின்வருமாறு என் சொல்படி கேட்டால், நான் உங்களுக்கு நன்மைசெய்து இப்பிரதேசத்திற்கு க்ஷேமத்தை உண்டாக்குவேன். அதாவது, உங்கள் கிராமமாகிய இந்த ஊரை என் வசம் ஆறுமாத காலத்திற்கு ஒப்புவிக்கவேண்டும். ஆறுமாதத்திற்குப் பிறகு உங்களுக்குக் கொடுத்துவிடுகிறேன். என்ன சொல்கிறீர்கள்" என்றார். அதற்கு அவர்கள் தங்களுக்குள் சற்று நேரம் ஆலோசனை செய்து அந்த உடன்படிக்கைக்குச் சம்மதித்தார்கள் உடனே என் முப்பாட்டனார் இடுப்பில் சரியாய்ச் கச்சை கட்டிக்கொண்டு அந்த ஆயிரம் காணியுள்ள கிராமத்தை அப்படியே தன் தலையில் தூக்கி வைத்துக் கொண்டார்."

"ஆமாம். அப்பா, நிஜந்தான்" என்று வெளிப்படையாய் நடேசன் சொல்லி இந்த அண்டபுளுகிற்கு தனக்குள்ளேயே சிரித்துக்கொண்டான்.

"சரி, அதற்குமேல் அக்கிராமத்தை அப்படியே தலையில் தூக்கினபடியே எந்தெந்த விடத்தில் மழைபெய்கிறதோ அந்த விடமெல்லாம் தூக்கிக்கொண்டு போய் அம்மழையெல்லாம் அப்படியே தன் கிராமத்தில் ஏந்திக் கொண்டார் இந்தமாதிரி குளங்களும் ஏரிகளும் நிறைந்துபோகவே, மற்ற வைசியர்களெல்லாரையும் கூப்பிட்டு நிலங்களைச் சரியாய் உழுது பயிர்செய்ய உத்திரவிட்டார். இந்த மாதிரி ஆறு மாதகாலம் மழை பெய்கிற தேசங்களெல்லாம் சுற்றினார். இதற்குள் மற்ற ஜனங்களும் நிலங்களை உழுது பயிரிட்டார்கள். பயிர்களெல்லாம் செழிப்பாய் வளர்ந்து ஆகாயமேவி வளர்ந்தன."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். "இந்த மாதிரி ஆறுமாத காலம் சுற்றிவிட்டு பழையபடி தன் ஊரை பழைய இடத்திலேயே வைத்தார். அந்த வருஷம் மிகவும் ஜாஸ்தியாய்க்கண்டுமுதல் செய்து களித்தார். கிராமத்திலுள்ள மற்றவர்களும் அவரிடத்தில் பக்திகொண்டு கிராமத்தை அவருக்கே கொடுத்துவிட்டு அவரிடத்தில் ஜீவனம் செய்துவந்தார்கள்"

"ஆமாம் அப்பா நிஜந்தான்" என்றான் நடேசன். இந்த மாதிரி இவர்கள் பேசிக்கொண்டே பட்டணம் வந்துசேர்ந்தார்கள்.

"எல்லா நெல்லையும் சேர்த்துக்கொட்டின பொழுது, அக்கம்பக்கம் ஊர்களிலிருந்து ஜனங்களெல்லாம் இவ்வதிசயத்தைப் பார்க்க வந்து, ஏராளமாய் விலைக்கு வாங்கிக்கொண்டு போனார்கள். அச்சமயத்தில் உன் முப்பாட்டனார் மிகவும் ஏழை. அவன்மேல் கருணை புரிந்து என் முன்னோர், ஜனங்களுக்கு நெல்லை அளந்துகொட்ட வேலைக்கு வைத்துக்கொண்டார்"

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். "உன் முன்னோர் இராப்பகலாய் நெல்லை அளக்கிற வேலையிலேயே இருந்தார். அவரைப் பார்த்தால் பரிதாபமாயிருந்தது. ஏனென்றால் அவர் பெரிய முட்டாள். அளக்கும்பொழுது கணக்கெண்ணுவதில் அடிக்கடி தவறிவிடுவார். அதற்காக என் முன்னோரிடத்தில் அடிக்கடி உதையும் அடியும் வாங்குவார்."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். இதற்குள் அவர்கள் கடன்பட்ட நாட்டுக் கோட்டை செட்டி வீட்டிற்கு வந்துசேர்ந்தார்கள். இருவரும் கதை சொல்லிக்கொண்டே உள்ளே நுழைந்து அந்த நாட்டுக்கோட்டை செட்டிக்கு வந்தனமளித்து





அவனருகிலேயே உட்கார்ந்து கொண்டு அவனுடன் பேசாமலேயே சுப்பராயன் கதையை ஆரம்பித்தான். "சரி என் முப்பாட்டனார் நெல்லையெல்லாம் விற்றானவுடன் உன் முன்னோரை வேலையிலிருந்து நீக்கிவிட்டார். உன் முன்னோரும் பிழைக்க வழியற்று என் முன்னோரிடத்தில் நூறு ரூபாய் கடன் கேட்டார். அதையும் என் முன்னோர் கொடுத்தார்."

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். அதற்குமேல் தவணை செட்டிக்கும் காது கேட்கும்படி உரத்த தொனியுடன், "சரி அக்கடனை உன் முன்னோன் திருப்பிக் கொடுக்கவில்லை" என்றான் சுப்பராயன்.

"ஆமாம், அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். "உன் பாட்டனாரும் கொடுக்கவில்லை, உன் தகப்பனாரும் கொடுக்கவில்லை. நீயும் இதுவரையில் திருப்பிக்கொடுக்கவில்லை" என்றான் சுப்பராயன்.

"ஆமாம் அப்பா, நிஜந்தான்" என்றான் நடேசன். "அப்பணமானது அது முதற்கொண்டு வட்டிமேல் வட்டியாய் இதுவரையில் சரியாய் ஆயிரம் ரூபாய் ஆகிறது. அப்பணத்திற்கு நீ எனக்குக் கடன்பட்டிருக்கிறாய்.

"ஆமாம் அப்பா, நிஜந்தான்" என்றான். நடேசன்.

"சரி, நீ இக்கடனை என் நண்பர் நாட்டுகோட்டை செட்டியாருக்கு முன்னாலேயே ஒப்புக்கொண்டுவிட்டபடியால், உடனே தயவுசெய்து அப்பணத்தை அவரிடத்தில் கொடுத்துவிட்டு என் நிலங்களை என்னிடம் மீட்டுக்கொடு" என்றான் சுப்பராயன்.

இதைக்கேட்டதும், நடேசன் மிகவும் திகிலடைந்தான். அவனோ மூன்றாவது மனுஷ்யன் எதிரில், தான் கடன்பட்டதாக ஒப்புக்கொண்டான். இது வெறும் கதை, நிஜமல்ல என்று சொன்னால் தான் போட்ட பந்தயப்படி சுப்பராயனுக்கு ஆயிரம் ரூபாய் கொடுக்க வேண்டும். நிஜம்தான் என்று சொன்னாலும், தான் ஒப்புக்கொண்டபடி தவணைக்கடைசெட்டிக்கு 1000 ரூபாய் கொடுக்கவேண்டும். இந்த தர்ம சங்கடத்திற்கு யோஜித்து வேறுவழி தோன்றாமல் அக்கடனைக் கொடுத்துவிட்டு, தான் இறுமாப்படைந்து சுப்பராயனை திட்டியதால் இந்த மாதிரி நேர்ந்ததென்று நினைத்து வருத்தமுற்று தன் வீடுபோய்ச் சேர்ந்தான்.

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**தேசபாஷை மூலமாய்க் கற்பித்தல்**

பாட்னா சர்வகலாசாலையின் சென்ற செனேட் கூட்டத்தில், தேச பாஷை மூலமாய்க் கல்வி கற்பிக்கப்பட வேண்டுமென ஒரு தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. அது சம்பந்தமாய் விதிகளமைக்க ஒரு கூட்டம் கூடியது. வைஸ் சான்லர் அக்கிராஸனம் வகித்தார். அப்பொழுது மிஸ்டர் ஜெயஸ்வால் என்றவர் மெட்றிகுலேஷன் பரீக்ஷையில் ஆங்கில பாடம் ஒன்று தவிர, மற்றபாடங்களை யெல்லாம் அந்தந்த மாணவனின் தேசபாஷையிலேயே பரீக்ஷிக்க வேண்டுமென ஒரு தீர்மானம் கொண்டுவந்து இத்தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டிய அவசியத்தைப்பற்றிப் பேசுங்கால், இத்தீர்மானம் நிறைவேற்றப்படாமற் போனால், செனேட் சபையாரைப் பொது ஜனங்கள் பரிகசிப்பார்கள் என்று கூறினார். அக்கிராஸனர் குறுக்கிட்டு விஷயத்தையொட்டிப் பேசவேண்டுமென்றார். உடனே மிஸ்டர் ஜெயஸ்வால் கையில் வைத்திருந்த காகிதங்களை யெல்லாம் கிழேஎறிந்துவிட்டுஉட்கார்ந்துவிட்டார். தீர்மானத்தைப் பிரேரிக்கப்போவதில்லையாவென தலைவர் கேட்டார். "பயனில்லை" யென்று அங்கத்தினர் பதிலளித்தார்.

ஜஸ்டிஸ் ஜாவாலாபிரசாத் குறுக்கிட்டு, பேசுவதற்கு ஏற்பட்ட காலஅளவு பூராவும் கொடுக்கும்படி வைஸ் சான்ஸலரைக் கேட்டார். அதன்மேல் மிஸ்டர் ஜெயஸ்வால் இத்திருத்தம் செய்வதால், கல்வி விருத்தியடையுமென்பதை வற்புறுத்திப் பேசினார். பலர் ஆதரித்தும் கண்டித்தும் பேசினர். 1923-ம் வருஷ முதல், பரீக்ஷையில் இங்கிலீஷ் பாடத்தைத் தவிர மற்றவைகளைத் தேச பாஷையிலேயே பரிசோதிக்கலாமென்றும், 1928-ம் வருஷத்திற்குப் பிறகு, தேச பாஷையிலேயே அவசியம் பரிசோதிக்கப்படவேண்டும் என்றும் ஒரு திருத்தப் பிரேரணை கொண்டுவரப்பட்டது. கடைசியில் இது சபையினரால் அங்கீகரிக்கப்பட்டது. இந்தத் தீர்மானம் நம்மவருக்கு ஆறுதலை யுண்டுபண்ணாமலிராது.

***

**ஜப்பானில் ஏழைக் குழந்தைகளின் கல்வி**

ஜப்பான் அரசியலில் கல்வி இலாகா அதிகாரிகள், ஏழ்மையின் கொடுமையால் பாடசாலைக்குப் போகக் கூடாத நிலைமையி லிருக்கும் குழந்தைகளுக் கெல்லாம் வேண்டிய பள்ளிக்கூடச் செலவுகளை ராஜாங்கத்திலிருந்து இனாமாகக் கொடுப்பதற்குரிய ஏற்பாடுகள் செய்து வருவதாக ஜப்பானியப் பத்திரிகைகள் அறிவிக்கின்றன. இப்போது ஜப்பானில் பள்ளிக்கூடத்திற்குப் போகும் பிராயத்திலுள்ள குழந்தைகளின் தொகை சுமார் எண்பது லக்ஷம். இவர்களில் முப்பதினாயிரம் பேர், வறுமையாலே பாடசாலைக்குப் போக இயலா திருக்கிறார்கள். எண்பதாயிரம் பிள்ளைகள் புஸ்தகம் இரவல் வாங்கிக் கொண்டேனும், தர்ம போஜன முண்டேனும், படித்து வரக்கூடிய நிலையி லிருக்கிறார்கள். நாற்பதாயிரம் பேர், பாடசாலையில் சேர்ந்தும், ஏழ்மை மிகுதியால், படிப்பு ஸம்பூர்ணமாகு முன்னரே பாடசாலையை விட்டுவிட வேண்டிய ஸ்திதியி லிருக்கிறார்கள். எனவே, மேற்கூறிய எண்பது லக்ஷத்தில் ஒரு லக்ஷத்தைம்பதினாயிரம் பேர் ஸர்க்கார் உதவிக்குப் பாத்திரமாகக் கூடியவர்களென்று தெரிகிறது. இத்தனை பேருக்கும் கல்விப் பயிற்சி, தாமே ஏற்படுத்திக் கொடுக்கவேண்டு மென்பது ஸர்க்காரின் உத்தேசம். இதற்காக வருகிற "தயத்" (ஜப்பானியப் "பார்லிமெண்டு" ஸபையின்) என்ற கூட்டத்தில் முப்பது லக்ஷம் யென்—அதாவது நாற்பத்தைந்து லக்ஷ ரூபாய்—ராஜாங்கத்தாராலே கேட்கப்படுமாம்.

*
* *

**ஸர். ஜே. ஸி. போஸின் உபந்நியாசம்**

ஸர் ஜகதீச சந்திரவஸு, கல்கத்தாவில் ஓர் உபந்நியாசம் செய்தபோது, அவர் கூறியதன் சாரமாவது: "நான் எங்கும் சுற்றி வந்ததினின்றும் பொருளாதார நிலைமையால் கஷ்டம் விளைந்திருக்கின்றன தென்பதைஉணர்ந்துகொண்டேன். பொருள்களை விருத்திசெய்யும் சக்தி உலகத்தில் முன்னை விட அதிகப்பட்டிருக்கின்றதா என்பதை ஆராய்ந்து பார்ப்போம். நார்ம்வ தேசத்தினர் தங்கட்குக் கிடைத்துள்ள பொருள்களைக்கொண்டு சாஸ்திரங்களின் வழியாய் அவைகளை விருத்திசெய்துகொண்டு உன்னத நிலைமையி லிருக்கின்றனர். இந்தியரும் இந்தியாவில் இயற்கையாக அமைந்துள்ள பொருள்களைத், தக்க வழியில் உபயோகப்படுத்திக் கொண்டால் உலகத்திலுள்ள எல்லா நாடுகளிலும் இந்தியா செல்வத்திற் சிறந்த நாடாக விளங்கும். ஒரு வண்டி நெல் விளையக்கூடிய நிலத்தை, சாஸ்திரத்தின் உதவியால் 4 வண்டி நெல் விளையக்கூடியவாறு செய்யலாம். நம் நாட்டின் பொருளாதார நிலைமையை விருத்தி செய்வதற்கு வேண்டிய முதலுமிருக்கின்றது. தேசாபிமானம் வாய்ந்த ஆட்களு மிருக்கின்றனர். ஆனால் வேலையில் பயிற்சி மாத்திரம்தானில்லை. கட்டுப்பாடு வேண்டிய அளவு இருக்கின்றது. இதுவரை நேர்ந்த பல கஷ்டங்களையெல்லாம் இந்தியர் சமாளித்து வந்திருப்பதால், இந்தியாவினிடத்தே ஓர் அபூர்வ சக்தி மறைந்திருக்கின்றது. தற்சமயம் அச்சக்தியை உபயோகித்து நற்கதி அடைய வேண்டும்."

*
* *

**உயிர் காப்பாற்றும் மிதவை**

சமுத்திரத்தின் வழியாகக் கப்பலில் ஏறிச் செல்லும்போது, கப்பலுக்கு ஏதேனும் ஆபத்து நேர்ந்து உடைந்து போகும் பக்ஷத்தில் பிரயாணிகள் உயிர் தப்பித்துக்கொள்வதற்காகநீர்மிதவைகள் ஏற்பாடு செய்திருக்கிறார்கள். அதைப் பிடித்துக்கொண்டே ஒருவன், நீரில் மிதந்து கொண்டிருக்க முடியும். இப்போது மார்க்கோனி யென்பவர் புதியதான மிதவை யொன்றைக் கண்டுபிடித்திருக்கிறார். அதில் திருகு ஒன்று இருக்கிறது. அத்திருகைப் பிடித்து அசைத்தால் எந்தப் புறம் வேண்டுமானாலும் போகமுடியுமாம்.

*
* *

**இந்தியாவின் ஜனத்தொகை**

1921-ம் வருடம், மார்ச் மாதம் எடுத்த ஜனத்தொகை நிர்மாணப்படி இந்தியாவின் ஜனத்தொகை 31 கோடியே 90 லட்சம் (319 மில்லியன்). 1911-ம் வருடத்திய ஜனத்தொகை 31-கோடியே 15·16 லட்சம். சென்ற பத்து வருடத்தில், நமது தேசத்தில் ஜனத்தொகை நூற்றுக்கு $1\frac{1}{4}$ வீதம் அதிகமாயிருக்கிறது. மற்றத் தேசங்களின் ஜனத்தொகை வளர்ச்சியை நோக்குமிடத்து, இந்தியாவின் ஜனத்தொகை வளர்ச்சி மிகப் பரிதபிக்கத்தக்க நிலைமையி லிருக்கிறது.

நரி கொழுத்தால் வளையில் இராது.

("விவேக போதினி" அநுபந்தம்.)



உடனே இருவரும் ஒரே சமயத்திலெழுந்து சந்நியாசியின்மேற் பாய்ந்தனர்.



அடே பாபி! உன் கை அப்படியே அசைவற்று நிற்கக் கடவது!

(விக்ரமசிங்கன் கோட்டை என்னும் புதிய நாடகத்தின் படங்களில் இரண்டு.)

Supplement to the "Viveka Bodhini."


# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII | துன்மதிஸூ சித்திரைமீ :: 1921-ம்ஸூ மேமீ | பகுதி 11


## முருகன் வழிபாடு
### WORSHIP OF MURUGA

ஏது புத்தி ஐயா எனக்கினி
யாரை நத்திடு வேன வத்தினி
லேயிறத்தல் கொலோஎனக்குநீ தந்தைதாயென்

றேயி ருக்கவு நானு மிப்படி
யேத வித்திட வோச கத்தவ
ரேசலிற்பட வோநகைத்தவர் கண்கள்காணப்;

பாதம் வைத்திடை யாதெ ரித்தெனை
தாளில் வைக்கநீ யேம றுத்திடில் [டிப்
பார்ந கைக்குமை யாதகப்பன்முன் மைந்தனோ

பால் மொழிக்குர லோல மிட்டிடில்
யாரெ டுப்பதெ னாவெறுத்தழ
பார்வி டுப்பர்க ளோஎ னக்கிது சிந்தியாதோ;

ஓத முற்றெழு பால் கொதித்தது
போல எட்டிகை நீசமுட்டரை [வே
யோட வெட்டிய பானு சத்திகை யெங்கள்கோ

ஒத்த மொய்ச்சடை யாடவுற்றமர்
மான்ம ழுக்கர மாட பொற்கழ
லோசை பெற்றிட வேநடித்தவர் தந்தவாழ்வே;

மாதினைப்புன மீதிருக்குமை
வாள்வி ழிக்குற மாதினைத்திரு
மார்பணைத்தம யூர அற்புத கந்தவேளே

மாரன் வெற்றி கொள் பூமுடிக்குழ
லார்வி யப்புற நீடு மெய்த்தவர்
வாழ்தி ருத்தணி மாம லைப்பதி தம்பிரானே.

மாயையின் வலிமையினால் நினது ஆற்றலை யறியாது நின்னுடன் போர்புரியத் துணிந்த நீசர்களாயும் மூடர்களாயுமுள்ள அசுரர்கள் தோல்வியடைந்து கலைந்து சப்த சமுத்திரங்களும் ஒரே காலத்தில் பொங்கியெழுந்தாலன்ன பேரிரைச்சலுடன் எண்திசைகளிலும் ஓடும்படி வெட்டித்துணித்ததாயும் சூரியனைப்போல் ஒளி வீசுவதாயுமுள்ள ஞானசக்தியான வேலைக் கையிற்றாங்கிய எங்கள் அரசே! கங்கையைத் தாங்கிய சடாமுடி யாடவும் தமதிருப்பிடமாக்கிக்கொண்டு மானும் மழுவும் அழகாயமர்ந்துள்ள திருக்கரங்களாடவும், திருக்கால்களில் அணிந்துள்ள பொற்கழல்கள் அண்டங்களனைத்தும் ஒற்றுமைப்பட்டு நடக்கும்படி இயக்குமாறு ஒலிக்க நடனம் புரிந்தருளிய சிவபெருமான் கொடிய அசுரர்கைப்பட்ட தேவர்களும் அஞ்ஞான அந்தகாரத்தில் பாபங்களின் வாய்ப்பட்டுத் தியங்கிய மானிடர்களும் உய்வதற்கென்றே தந்தருளிய செல்வமே! செழிப்பாய் வளர்ந்துள்ள தினைக்காட்டில் குருவிகளை யோட்டிப் பயிரைப் பாதுகாத்து வந்தவளும் மையிடப்பெற்று ஒளி வீசும் நயனங்களை யுடையவளுமான குறப்பெண்ணை சுந்தர வுருவத்துடன் மார்போடணைத்துப் பேரானந்த வாரிதியிற் சேர்த்தருளிய அழகிய மயில் வாகனனே! ஆறுருவங்களைத் தாங்கி உலக மாதாவான பார்வதி தேவியாரால் சேர்த்தணைக்கப்பட்டவுடன் ஓருருவங்கொண்ட கந்தா! மன்மதனை வெட்கச்செய்யும் சுந்தர வடிவமே! மன்மதனால் வெல்லப்பட்ட பூமுடித்த கூந்தலையுடைய வனிதையர் நினது சௌந்தரியத்தைக்கண்டு அதிசயித்து நினது பாதாரவிந்தங்களில் ஈடுபடுமாறு, வெகு காலமாய் நின்வயின் மெய்யன்பு பூண்ட தவசிகள் தமதுறைவிடமாக்கிக்கொண்ட திருத்தணிகைத் தலத்தில் எழுந்தருளியுள்ள நாதனே! நான் புல்லறிவுடையனாதலால் நினதருளுக்குப் பாத்திரனல்லன் என்பது உண்மையே யெனினும், பிறந்தது முதல் இதுவரை சன்மார்க்கத்தை நாடாத நான், கருணைக் கடலாகிய உன்னுடைய தயவையே பெற முடியாவிடில், இனிமேல் எத்தெய்வத்துக்குத் தொண்டுசெய்து அதனருளைப் பெறுவது சாத்தியம்? அது சாத்தியமல்லவாதலால், இப்பிறப்பைப் பாழ்க்கடித்து இறத்தல் முறையோ? எனக்கு நீ தந்தையும் தாயுமாயிருக்கையில் நான் இவ்வாறு மனம் வெதும்பித் துயருறுதல் நீதியோ? பரதெய்வமல்லாத ஒரு தேவதையை இவன் ஆராதித்தானுகையால் இவன் துயரக்கடலைக் கடக்க வலியற்றவனாயிருக்கிறானென்று உலகோர் ஏசினால் உனது பெருமைக்குக் குறைவு வாராதோ? உன்னை யண்டியதில் நான் ஏமாந்து போனதாக


(இதன் தொடர்ச்சி 279-ம் பார்க்கவும்.)

விவேக போதினி

தொ. 13] துன்மதிஸூ சித்திரைமீ [ப. 11

## ஸ்ரீகிருஷ்ணன்

### SRI KRISHNA

அவர்கள் மதுரா நகரத்திற்குச் சென்று அதன் அழகைப் பார்த்துக்கொண்டு வீதிகளில் சஞ்சரித்தார்கள். அவர்களுடைய வரவை அக்ரூரரால் அறிந்த கண்ணபிரான் அவர்களைக் கொல்லுவதற்கு வேண்டிய உபாயங்களைச் செய்துவைத்துக்கொண் டிருந்தார். அந்நகரத்திலுள்ள ஸ்திரீகள் இராமகிருஷ்ணர்களின் வரவை அறிந்து, தங்களுடைய வீட்டுக்காரியங்களை மறந்து, போட்டது போட்டபடி விட்டுவிட்டு, அவர்களைத் தரிசனஞ்செய்வதற்காக ஓடிவந்தார்கள். இராமகிருஷ்ணர்கள் ராஜவீதியில் போனார்கள். அப்பொழுது ஓர் வண்ணானைக் கண்டு, "எங்களுக்கு சுத்தமான வஸ்திரங்கள் கொடு. உனக்கு க்ஷேம முண்டாகும்" என்று கண்ணன் வேண்டினார். அந்தத் துஷ்டன் அவர்களை அதட்டி "அரசனுடைய வஸ்திரங்களைத் தரிப்பது காடுகளில் சஞ்சரிக்கும் மிருகங்களான உங்களுக்குத் தகுமோ. உங்களுடைய கர்வத்தைக் கம்ஸ மகாராஜா அடக்குவார்" என்று பிதற்றினான். கண்ணன் தம் கையால் அவனுடைய தலையை வெட்டி, இஷ்டமான வஸ்திரங்களை எல்லோருக்கும் எடுத்துக் கொடுத்தார். பின்பு ஒரு சேணியன் கண்ணனுக்கு நேர்த்தியான பட்டுவஸ்திரங்களையும் ஆபரணங்களையும் சமர்ப்பித்தான். அவனுக்குக் கிருஷ்ணன் இம்மையில் சுகத்தையும் பெருமையையும் மறுமையில் தன் பரமபதத்தையும் அளித்தார்.

பிறகு அவ்விருவரும் ஸுதாமாவென்ற ஆண்டியினுடைய வீட்டுக்குச் சென்றார்கள். அவன் அவர்களை மகாபக்தியுடன் உபசரித்து, நேர்த்தியான மாலைகளால் அலங்கரித்தான். அவனுக்குக் கிருஷ்ணன் பூர்ணமாய் அநுக்கிரகஞ்செய்து தம்மிடத்திலும் தம் பக்தர்களிடத்திலும் சகலப் பிராணிகளிடத்திலும் எல்லையற்ற பிரீதியிருக்கும்படி வரமளித்தார்.

பின்பு அவர்கள் வீதியில் தங்களுக்கு எதிரில் ஒரு கூனி, தங்கப் பாத்திரத்தில் நேர்த்தியான சந்தனத்தை எடுத்துக்கொண்டு வருவதைக்கண்டு, அவளை நோக்கி, "பெண்ணே! இந்தச் சந்தனத்தை எங்களுக்குக் கொடு. உனக்கு க்ஷேம முண்டாகும்" என்றார்கள். அவள், "சுவாமி! நான் கம்ஸனுக்குச் சந்தனஞ் சேர்த்துக்கொடுக்கிறவள். ஆனாலும் இதைப் பூசிக்கொள்வதற்கு நீங்களே தகுந்தவர்கள்" என்று கூறி, அந்தச் சிவப்புச் சந்தனத்தை அவர்களுக்குச் சமர்ப்பித்தாள். அப்பொழுது கண்ணன் தம் கால்களால் அவளுடைய கட்டைவிரல்களை யழுத்தி அவளைத் தூக்கி, அவளுடைய கோணலை மாற்றி அவள் நிகரற்ற அழகுபெறும்படி செய்தார்.

பிறகு கிருஷ்ணன் யாகசாலைக்குச் சென்று, தம்மைத் தடுக்கும் காவலாட்களை அடித்துத் துரத்தி அந்த யாகமண்டபத்தில் வைக்கப்பட்டிருந்த மலைபோன்ற வில்லை விளையாட்டாய் எடுத்து நாணேற்றி முறித்தெறிந்தார். அந்தத் துண்டுகளால் அங்கிருந்த கம்ஸனுடைய கிங்கரர்களை அடித்துக்கொன்று, தங்களுடைய விடுதிக்குச் சென்றார்.

இதையெல்லாம் கம்ஸன் கேட்டு, மனங் கலங்கினான்; அபசகுனங்களால் திகிலடைந்தான்; இரவுமுழுவதும் தூக்கமில்லாமல் மறுநாட்காலையில் சபாமண்டபத்துக்கு வந்து, நந்தகோபனையும் இராமகிருஷ்ணர்களையும் அழைத்துவரும்படி தூதர்களை அனுப்பினான்.

வாசலில் நிறுத்திவைக்கப்பட்டிருந்த குவலயாபீடமென்ற பட்டத்து யானையை அதன் பாகன் ஏவினான். கண்ணனை அது எதிர்த்தது. அவர் அதைக் கைகளால் இடித்து நொறுக்கிக் கீழே இழுத்துத்தள்ளி, தந்தங்களைப் பிடுங்கி, அவைகளாலேயே அதை அடித்துக்கொன்றார்.

பிறகு சபைக்குட் பிரவேசித்து, தங்களைச் சண்டைக்கழைத்த சாணூரன் முஷ்டிகன் என்ற மல்லர்களை எதிர்த்து, கண்ணன் சாணூரனையும், பலராமன் முஷ்டிகனையும் ஒரு நொடியில் ஜயித்து, யமலோகத்துக்கனுப்பினார்கள்.

பிறகு கண்ணன் அற்புதத் திறனுடன் கம்ஸன் உட்கார்ந்திருந்த மஞ்சத்தின்மேலேறி, அவனோடு நெடுநேரம் யுத்தஞ்செய்து அவனைக் கீழே தள்ளி, அவன்மீது குதித்தார். அவன் உயிரிழந்து, எப்பொழுதும் அவருடைய ஞாபகத்துடன் இருந்ததாலும், பகவானுடைய கையால் மரணமடைந்ததாலும் சகல பாபங்களும் நீங்கி, அவருடைய சொரூபத்தை யடைந்தான். அவனுக்குத் துணையாய் வந்த சகோதரர்களை பலராமர் அடித்துக் கொன்றார். பிறகு கண்ணன், இறந்தவர்களுக்காகத் துக்கித்தோர் எல்லோரையும் சமாதானப்படுத்தி, கம்ஸனுடைய தகப்பனான உக்கிரஸேனனை மதுரைக்கு அரசனாக்கி இந்திரனுடைய சபையை அங்கே வரவழைத்து, அந்த ராஜ்யத்தில் தருமத்தையும் சத்தியத்தையும் நிலைநிறுத்தினார். பிறகு கண்ணனும் பலராமரும் தங்களுடைய பெற்றோரான வஸுதேவர் தேவகியிடத்துக்குச் சென்று, அடிபணிந்து, வணங்கி, "இதுவரையில் தங்களுக்குப் பணிவிடைசெய்யும் பாக்கியத்தைப் பெறாதவர்களானோம்" என்று கூறி வருந்தினார்கள். பெற்றோர்கள் அவர்களைச் சமாதானஞ்செய்து வாரியெடுத்தணைத்து, உச்சி முகர்ந்து, ஆனந்தக்கண்ணீரால் நனைத்தார்கள்.

பிறகு கிருஷ்ணன் நந்தகோபரையும் யசோதையையும் நமஸ்கரித்து, "நீங்கள் எங்களைப் பெற்றதுமுதல் உயிருக்குயிராய் வளர்த்துவந்தீர்கள். நாங்கள் உங்களுக்கு எவ்விதத்திலும் அடிமைப்பட்டவர்கள். நாங்கள் எத்தனை ஜன்மங்க ளெடுத்தாலும் என்ன செய்தாலும் உங்களிடத்திலிருந்து பெற்ற உபகாரத்துக்குப் பதில் செய்யமுடியாது. இப்பொழுது கோகுலத்துக்குப் போங்கள். அடிக்கடி வந்து உங்களைத் தரிசனஞ் செய்துகொள்கிறோம்" என்று ஆறுதல் சொல்லியனுப்பினார்.

வஸுதேவர் கர்க்காசாரியரால் இராமகிருஷ்ணர்களுக்கு உபநயனம் முதலிய ஸம்ஸ்காரங்களை விதிப்படி செய்வித்தார். மனுஷ்யாவதாரமெடுத்தபடியால் அதற்குரிய தருமங்களை தாமே நடத்திக்காட்ட விரும்பி, இராமகிருஷ்ணர்கள் அவந்தீ நகரத்திலுள்ள சாந்திபர் என்ற அந்தணரிடத்தில் சகல வேத சாஸ்திரங்களையும் கற்றுக்கொண்டார்கள். விதிப்படி குருவுக்குப் பணிவிடைசெய்து, குருதக்ஷிணையாய் அவருடைய இறந்துபோன மகனை இயமலோகத்திலிருந்து கொண்டுவந்து கொடுத்து, குருவாலும் குருபத்தினியாலும் பூர்ணமாய் அநுக்கிரகிக்கப்பட்டு, மதுரைக்குத் திரும்பினார்கள்.

கிருஷ்ணனுக்கு உயிர்த் தோழனான உத்தவரென்ற மஹாபக்தர் ஒருவர் உண்டு. அவருக்குக் கண்ணனைத்தவிர வேறு தெய்வமில்லை. உலகமில்லை. முக்தியில்லை. பெண்டு பிள்ளையில்லை. அவருக்கே, பரம தத்வ இரகசியங்களைக் கண்ணன் பூர்ணமாய் உபதேசித்தார். அவரைக் கோகுலத்துக்கனுப்பி, தன் பிரிவை சகிக்காமல் வருந்தும் கோபிகளை சமாதானஞ் செய்வதற்காக அனுப்பினார். "நந்தரையும் யசோதையையும் அவர்களுடைய பந்துக்களையும் பெரியோரையும் நான் நமஸ்கரிக்கிறேன். கோபிகள் என்னையே நம்பி யாவரையும் விட்டு என்னைப் பிரிந்ததால் ஆறாத்துயரத்தை அடைந்திருக்கிறார்கள். என்னை அண்டினவர்களை நான் கைவிடேன். சீக்கிரத்தில் திரும்பிவருகிறே னென்ற சமாசாரத்தைச் சொல்லி, அவர்களுடைய துக்கத்தைப் போக்கும்" என்று சொல்லியனுப்பினார்.

அப்படியே உத்தவர் கோகுலத்துக்குச் சென்று நந்தர் முதலியவர்களால் உபசரிக்கப்பெற்று, கண்ணன் சொல்லியனுப்பிய சமாசாரத்தை விஸ்தாரமாயும் அழகாயும் அவர்களுக்கும் கோபிகளுக்கும் எடுத்துச் சொல்லி, "கண்ணன் உங்களிடத்திலேயே எப்பொழுதும் வசிக்கிறா ரென்பதே உண்மை. உங்களைப்போல் பாக்கியசாலிகள் வேறுண்டோ?" என்று அவர்களுடைய விரக தாபத்தைத் தீர்த்தார்.

ஒருநாள் கண்ணன் அக்ரூரருடைய வீட்டுக்குச் சென்று, அவரால் பரமோபகாரஞ் செய்யப்பெற்று, அவரைப் புகழ்ந்து, "நீர் அஸ்தினபுரத்துக்குச் சென்று சமீபத்தில் மரணமடைந்த பாண்டு மஹாராஜாவின் புத்திரர்களும், என் அத்தையான குந்தியின் மைந்தர்களுமான பாண்டவர்களின் க்ஷேமத்தை அறிந்துவாரும். அவர்களிடத்தில் திருதராஷ்டிரன் முதலியவர்கள் என்ன எண்ணங்

கொண்டிருக்கிறார்கள், எப்படி நடந்து கொள்ளுகிறார்கள் என்றும் கவனித்து வாரும்" என்றார். அக்ரூரர் அவ்வுருடைய கட்டளையைச் சிரஸால் வகித்து, அஸ்தினபுரத்துக்குச் சென்று, அங்குள்ளவர்களின் நடத்தையையும் நோக்கத்தையும் பாண்டவர்களிடத்தில் அவர்கள் நடந்துகொள்வதையும் கவனித்துக் கொண்டு சிலமாதங்கள் வரையில் அங்கேயே தங்கியிருந்தார். பிறகு மதுரைக்கு வந்து தாம் கண்டறிந்த விஷயங்களை விஸ்தாரமாய், கண்ணனிடத்திற் சொல்லி, கௌரவர்களின் துவேஷத்தையும் மனப்பான்மையையும் எடுத்துரைத்தார்.

கம்ஸனுடைய மனைவிகள் மகத தேசத்தரசனான ஜராஸந்தனென்ற தங்களுடைய பிதாவிடத்திற் போய் முறையிட, அந்த மகா பலவான் கடல்போன்ற சேனையுடன் வந்து மதுரையை முற்றுகை போட்டான். இராமகிருஷ்ணர்கள் தேவலோகத்திலிருந்து தங்களுடைய இரதங்களையும் ஆயுதங்களையும் சாரதிகளையும் தருவித்து, அவனுடன் கோர யுத்தஞ்செய்து அடித்துத் துரத்தினார்கள். இப்படிப் பதினேழு தடவை அபஜயமடைந்து, மறுபடியும் யுத்தத்துக்கு வந்தான். அதற்கு முன்னமே நாரதரால் தூண்டப்பட்ட காலயவன் என்ற மிலேச்ச தேசத்தரசன் மதுரையைச் சூழ்ந்து கொண்டான். இவ்விருவரோடும் ஒரே காலத்தில் யுத்தஞ்செய்ய இஷ்டமில்லாமல் கண்ணன் சமுத்திரத்தின் நடுவில் ஓர் ஆச்சரியகரமான நகரத்தைக் கட்டுவித்தார். அந்தத் துவாரகையில் சகல திக்பாலர்களும் தங்களுடைய அருமையான வஸ்துக்களை அனுப்பினார்கள்.

பிறகு மதுரைக்கு வந்து ஆயுதமில்லாமல் வெளியில் வந்த கண்ணனைக் கண்டு, காலயவன் தானும் ஆயுதமில்லாமல் யுத்தஞ்செய்ய வேண்டுமென்று கருதி அவரைத் தொடர்ந்தான். அவனை வெகுதூரம் ஏமாற்றிக் கொண்டுபோய் ஒரு குகைக்குள் புகுந்து, அங்கே நித்திரை செய்யும் ஒருவன்மேல் தம் பீதாம்பரத்தை விரித்துப் போட்டுவிட்டுக் கண்ணன் மறைந்தார். காலயவன் அங்கேவந்து, கிருஷ்ணன் தூங்குகிறவன்போல் வேஷம் போடுகிறானென்றெண்ணி, அவனைக் காலால் உதைத்தான். அவன் திடுக்கிட்டெழுந்து கோபத்துடன் காலயவனைப் பார்க்க, அந்த மிலேச்ச அரசன் கபிலரால் எரிக்கப்பட்ட ஸகர புத்திரர்களைப்போல் சாம்பலானான்.

முன்பு மாந்தாதாவின் புத்திரனான முசுகுந்த சக்கரவர்த்தி தேவர்களுக்குப் பேருதவி செய்து, அவர்களால் நீண்ட தூக்கத்தையே வரமாய்ப் பெற்று, இந்தக் குகையில் படுத்திருந்தான். அவனுடைய தூக்கத்தைக் கலைத்தவனை அவன் பார்த்தால் எரிந்துபோகக் கடவதென்று தேவதைகளின் வரம் ஏற்பட்டிருந்தது. அதையறிந்த கண்ணன் காலயவனை அவ்விதமாய்க் கொல்லுவித்தார். பிறகு அவர் முசுகுந்தனுக்குத் தரிசனங் கொடுத்து, அவனால் தோத்திரஞ் செய்யப் பெற்று, அவனுக்கு நல்லுபதேசஞ் செய்தார்.

ஆனர்த்த தேசத்துக்கரசனான ரைவதர், தன் பெண்ணான ரேவதியை பலராமருக்கு விவாகஞ் செய்துகொடுக்கும்படி பிரமனால் கட்டளையிடப்பட்டார். பிறகு விதர்ப்ப தேசத்தரசனான பீஷ்மகன் பரம பாகவதன்; அவனுக்கு ருக்மி முதலான ஐந்து புத்திரர்களும் ருக்மிணி என்ற ஒரு பெண்ணுமுண்டு. அவள் பால்யம்முதல் கண்ணனையே பதியாய் அடைய விரும்பினாள். ருக்மியைத் தவிர மற்ற எல்லோருக்கும் அது இஷ்டமாகவே இருந்தது. அவளுக்குத் தகுந்த வயதுவந்ததும் பீஷ்மகன் மந்திரிப் புரோகிதர்களுடன் ஆலோசித்து, அவளைக்கண்ணனுக்குமணஞ்செய்துகொடுப்பதாய் முடிவுசெய்தான். அதை யறிந்த ருக்மி தனக்குப் பரம மித்திரனும் சேதிதேசத்தரசனான தமகோஷனுடைய புத்திரனும், பிறந்தது முதல் கண்ணனைத் துவேஷித்து வந்தவனுமிருந்த சிசுபாலனுக்கு ருக்மிணியை விவாகஞ் செய்துகொடுப்பதாக தான் நிச்சயித்திருந்தபடியால் தகப்பன் முதலிய பெரியோர்களை நிந்தித்துத் தடுத்து, தன் தங்கையைச் சிசுபாலனுக்கே மணஞ் செய்துகொடுப்பதாய் நிச்சயித்து, எல்லோருக்கும் விவாக முகூர்த்தப் பத்திரிகை அனுப்பினான்.

ருக்மி அசுராம்சமாய்ப் பிறந்தவன். கம்ஸன் முதலிய துஷ்டர்களுடன் சேர்ந்தவன். கண்ணனிடத்தில் இயற்கையாகவே அவனுக்குத் துவேஷம் உண்டு. ஸனகாதி யோகிகளால் சபிக்கப்பட்ட விஷ்ணுவின் துவாரபாலகர்கள்





தங்களுடைய இந்த மூன்றாவது ஜன்மத்தில் சிசுபாலனும் தந்தவக்திரனும் பிறந்திருந்தார்கள். இவ்விருவரும் கண்ணனுடைய அத்தையின் பிள்ளைகளல்லவா?

ருக்மிணி அதை யறிந்து, தனக்கு வேறு கதியில்லையென்று கண்டு ஸர்வலோக சரண்யனான பகவானையே சரணமடைந்து, தனக்கு வேண்டியவரான ஒரு பிராமணனிடத்தில் தன் பிரார்த்தனையைத் தெரிவித்து, கண்ணனுக்கு ஒரு கடிதமெழுதி அவருடைய கையில் கொடுத்தனுப்பினாள். அந்த வேதியர் துவாரகைக்கு அதிவேகமாய்ச் சென்று, கிருஷ்ணனால் உபசரிக்கப்பெற்று, அவரிடத்தில் "ஸ்வாமி! விதர்ப்பதேசத்தரசனுடைய புத்திரியும் உமக்கு வேலைக்காரியுமான ருக்மிணிக்கு சமீபத்தில் விவாகம் நிச்சயிக்கப்பட்டிருக்கிறது. அம்மாது உமக்குச் சில சமாசாரங்களை எழுதி என் மூலமாய் அனுப்பியிருக்கிறாள்" என்று கடிதத்தைக் கொடுத்தார்.

கண்ணன் அதை வெகு பிரியத்துடன் வாங்கிப் பிரித்து வாசித்தார்: "அண்டினவர்களைக் கைவிடாதவரே! தாழ்வில்லாதவரே! பதினான்கு உலகங்களிலும் அழகில் நிகரற்றவரே! உமது கல்யாணகுணங்களைக் கேட்பவர்களின் காதின்வழியாய் அவை உள்ளே புகுந்து, சகல தாபங்களையும் தீர்க்கின்றன. அவர்களுக்குச் சகல புருஷார்த்தங்களும் அடிமைகளாயிருக்கின்றன. உமது திவ்விய மங்கள உருவத்தைத் தரிசிப்பதே கண்படைத்ததற்குப் பயன். இவ்விதமான உமது குணங்களையும் சொரூபத்தையும்பற்றிக் கேள்விப்பட்டு, என் மனம் வெட்கத்தைவிட்டு உம்மிடத்திலேயே ஈடுபட்டிருக்கிறது.

(2) முகுந்தா! மனிதர்களிற் சிறந்தவரே! ஒரு பெண்ணுக்கு இவ்வளவு தைரியமா என்று எண்ணக்கூடாது. குலத்திலும் நடத்தையிலும் ஐசுவரியத்திலும் காந்தியிலும் உமக்கு நீரே நிகர். நல்ல குலத்தில் பிறந்தவளும் புத்திசாலியுமான எவள்தான் சகல பிராணிகளின் மனத்தை மயங்கச் செய்கிற உம்மிடத்தில் ஆசைப்படமாட்டாள். மேலும் இது எனக்கு விவாக சமயமல்லவா? இது தவறினால் உம்மை நான் அடைவதெப்படி? கன்னிகையும் பெற்றோரும் பந்துக்களும் யாவரும் விரும்பக்கூடிய குணங்கள் அனைத்தும் உம்மிடத்தில் குடிகொண்டிருக்கின்றன.

(3) செந்தாமரைக் கண்ணா! லோகநாதா! நான் பிறந்து நினைவு தெரிந்தது முதல், உம்மையே என் பதியாய்க் கோரியிருக்கிறேன். உடலையும் உயிரையும் உமக்கே அர்ப்பணஞ் செய்துவிட்டேன். நீர் இங்கே வந்து என்னைப் பத்தினியாய்க் கொள்ளவேண்டும். சிங்கம் போன்ற வீரரான தாங்கள், அடையத் தகுந்த என்னை அற்பமான நரியைப்போன்ற சிசுபாலன் தொடாமற் காப்பாற்றும்.

(5) நான் இதுவரையில் கிணறு, குளம் வெட்டுவிப்பது, யாகஞ் செய்விப்பது, தானம், தீர்த்தயாத்திரை, விரதம், தேவகுருப்பிராமணர்களைப் பூஜிப்பது முதலியவைகளைக் குறைவறச்செய்து பரமாத்வை ஆராதித்திருந்தால், கண்ணன் இங்கு வந்து என்னைப் பாணிக்கிரகணஞ் செய்யட்டும். சிசுபாலன் முதலிய மற்றவர்கள் என்னை அணுகாமல் தடுக்கட்டும்.

(5) ஒருவராலும் ஜயிக்க முடியாதவரே! என் விவாக தினத்தில் நீர் ஒருவருக்கும் தெரியாமல் சைனியங்களுடன் இங்கே வந்து சிசுபாலன் முதலியவர்களின் படையை அழித்து, உமது பராக்கிரமத்தால் ஜயிக்கப்பட்ட பந்தயமான என்னை இராக்ஷத விதிப்படி மணஞ் செய்யும்.

(6) 'நீயோ அந்தப்புரத்தில் சஞ்சரிக்கிறவள், உன் பந்துக்களைக் கொல்லாமல் உன்னை விவாகஞ் செய்துகொள்வதெப்படி' யென்றால், உபாயம் சொல்லுகிறேன். விவாகத்திற்கு முந்தின தினத்தில் நகரத்திற்கு வெளியிலிருக்கும் பார்வதியின் ஆலயத்திற்கு விவாகமாகும் கன்னிகை போவது வழக்கம். அங்கிருந்தே என்னைக் கொண்டுபோகலாம்.

(7) கண்ணா! உமது பாததூளியைத் தரிப்பதால் அஞ்ஞானம் நீங்குகிறதென்று பெரியோர்களும் அதை விரும்புகிறார்கள். அப்படிப்பட்ட உமது அனுக்கிரகம் எனக்குக் கிடைக்காவிடில், நான் எத்தனை தடவை பிறந்தாலும், விரதங்களையும் நியமங்களைஞ் செய்து உயிரை விடுவேனேயொழிய வேறொருவரையும் மனத்தால் நினைக்கமாட்டேன். உம்மை அடையாமல் விடமாட்டேன்" என்று எழுதியிருந்தது.

---

## வர்த்தமானப் பத்திரிகையும் அதன் பிரயோசனமும்

### THE NEWSPAPER AND ITS USE

[ஸ்ரீமான் சா. தா. மூர்த்தி முதலியார்.]

வர்த்தமானப் பத்திரிகையினுடைய பிரயோசனத்தை ஆங்கிலம் படியாத தமிழரிற் பலர் இன்னும் அறியவில்லையென்று கூறுவதற்காக என்னை வைதல்வேண்டாம். அற்புத சம்பவங்கள் அடுத்தடுத்து வெகுவிரைவாய் ஏற்பட்டுவரும் இந்நவீனகாலத்தில், எல்லாத் தேசத்தினர்களும் அன்றாடம் நடைபெறும் உலக விவகாரங்களை மிக்க ஆவலுடன் கவனித்துவர, தமிழ் நாட்டவரிற் பலர், இன்னும் கிணற்றுத் தவளைகளைப் போலவே இருந்து வருகிறார்கள். தமிழனாகிய நான் என்னுடைய சகோதரர்களாகிய தமிழர்களைத் தவளைகளென்று கூற எனக்குச் சுதந்தரமுண்டென்று நினைக்கிறேன். அன்றியும், காரணமின்றி அவ்வாறு உரையாடவில்லை. 'ஆதியில் நம்முடைய நாட்டில் பத்திரிகைகள் இருந்தனவா? அவைகளில்லாமல் நம்முடைய நாடு, நனி சிறந்து விளங்கவில்லையா? பத்திரிகைகளைப் படியாமற் போனால் என்ன உலோபம்?' என்று கேட்குனர் பலர் உண்டு. ஆதியில் தமிழரிற் படியாதோரேயிருக்கவில்லை. கல்வியே மானிடருடைய கண்களென்றும், தேகவுறுப்புகளிலிருந்து விளங்கும்கண்கள் புண்களேயென்றும் அக்காலத்தில் கருதியிருந்தனர். ஒவ்வொருவரும் அவரவர் பொருட் சக்திக்கு இசைந்தவரையில் நானாதேச யாத்திரை செய்துவரவேண்டுமென்பது கட்டாய முறையில் ஏற்படுத்தப்பட்டிருந்தது. இன்னும் எண்ணிலாச் சாதகங்கள் தமிழர்களை யுயர்த்து முறையா யேற்பட்டிருந்தன. அவையெல்லாம் இப்பொழுது பொய்யாய் பழங் கதையாய், மெல்ல மெல்லக் கனவாய்ப் போய்விட்டன. காலங்கள்தோறும் புது நடைகள், புதுக் கருத்துகள், புதிய முயற்சிகள், புதிய வழக்கங்கள் இவைகளையொட்டிப் போதலன்றோ கிரமம்? காலத்தோடு இயைந்து ஒழுகும் தேசத்தவர்களே பயனடைவர். நம்முடைய நாடு, எல்லா வளங்களிலும் அதிக உச்சத்திலிருந்த காலத்தில் இருந்தவிடந் தானும் தெரியாமலிருந்த நாடுகளெல்லாம் இன்று மேலோங்கி நிற்க, நாம் இருக்கின்றோமோ என்பது தானும் சங்கை கொள்ளக்கூடிய தன்மையில் நம்முடைய நிலை குலைந்துபோயினதற்குக் காரணம் யாது? காலப்போக்கை யறிந்து அதனோடு செல்லாமையே யாகும். நம்மைச் சுற்றிலுமுள்ள நாட்டவர்கள் ஆகாயத்தை நோக்கியோட, நாம் பாதாளத்தைத் தேடிப் போகிறோம்! இதுதான் உண்மை!

இன்று நம்மை எல்லா விதங்களிலும் சீர்திருத்தஞ்செய்து வைக்கக்கூடியவை பத்திரிகைகளே. காலப்போக்கைக் காட்டும் கருவிகளே அவைகள். திசைகளை யறிவிக்கும் கருவிக்கு திசைமானி யென்று கூறுவதுபோல, பத்திரிகைகளைக் காலமானி, வர்த்தமானி என்று கூறலாம். பற்பல நாடுகளில் பல பல பெரியோர்களால் கண்டுபிடிக்கப்படும் புதிய தரிசனைகள், பிறரது அரிய வுழைப்பினால் உலகத்துக்கே ஏற்படும் நன்மைகள், வியாபாரத் திறமைகள், அரசாங்க நிலை, காலநிலை, விவசாய முறைகளில் நவீன சாதகங்கள், இவைபோன்ற எண்ணிற்கடங்கா விஷயங்களை நமக்கு அறிவிக்கக்கூடிய பத்திரிகையை நாம் வாசிக்காமல் நம்முடைய வாணாளைப் போக்குவது சரியாமோ?

தமிழ் நாடு, என்றுமே எல்லா விஷயங்களிலும் மற்ற இந்திய நாடுகளைப் பார்க்கிலும் முன் செல்லும் வழக்கம்போல, இப்பத்திரிகை விஷயத்திலும் முன்னேற்றமடைந்து வருகிறது. மாதப்படி எத்தனையோ புதுப் பத்திரிகைகள் தோன்றுகின்றன; பழமையாயுள்ள பத்திரிகைகள் இதுவரையில் எவ்வளவோ நன்மைகளைச் செய்திருக்கின்றன. ஜனங்களுடைய குறைபாடுகளை அரசாங்கத்தாருக்கு எடுத்துக் காட்டி வேண்டிய நன்மைகளைத் தேட, பத்திரிகையே யன்றோ உற்ற துணையாயிருக்கின்றது?

மேற்கத்திய நாடுகளுக்குச் சென்றிருந்தோர்கள், அங்கே கூலி வேலை செய்வோரும், வண்டியோட்டுவோருங்கூட பத்திரிகையைப் படிக்காமற் பொழுதுபோக்குவது கிடையாது என்று சொல்லும்பொழுது நம்முடைய தமிழர்கள் இந்த வழியை யனுஷ்டிக்கும் காலம் வருமோஎன்று ஏங்கவேண்டியதாயிருக்கிறது.

சொற்பப் படிப்பினரும் பத்திரிகையைப் படிப்பதினால் மிக்கத் திறமைசாலியாகளாகக் கூடும். இவ்வகையினர் பலரை நாம் நம்முடைய நட்பாளர்களிற் காணலாம். 'கண்டதைப் படித்தால் பண்டித னாகலாம்' என்பது நம்முடைய நாட்டுப் பழமொழியல்லவா? இதில் ஏதும் பிசகு உண்டோ? கண்டதைப் படிக்க பத்திரிகையைப் பார்க்கிலும் வேறு ஒரு வழியுண்டா?

ஆதியில் நம்முடைய நாட்டில் பத்திரிகையிருக்கவில்லைதான். இருந்தாலும் ஒரு சாதனம் ஏற்பட்டபிறகு அதை உபயோகித்துக் கொள்ளாமலிருக்க வேண்டாமே. நமக்கு எளிதிற் கிடைக்கத்தக்கனவற்றை நாம் வேண்டாமென்று ஒதுக்கிவிடுதல் நமதறிவிற் கழகாகுமோ? இவைகளை யெல்லாம் ஒன்றுகூட்டி ஆராயுமிடத்து நம்முடைய நாட்டவர் தங்களுடைய பாராமுகத்தினாலேற்படும் தீங்கையுணர்ந்து பத்திரிகைகளைப் பராமரிக்க வருவார்களென்பது என்னுடைய உறுதியான நம்பிக்கை.

பத்திரிகையைப் படிப்போம். இன்னும் பல நூற்களையும் படிப்போம். மற்றவர் நம்மைப் போற்ற, மதியுற்றவராய் விளங்கிடுவோமே. முற்றிலும் மேன்மையாய் விளங்கி, வெற்றி பெற்றிடும் வழியதை யடைவோம். இதை வெற்றுரையாகக் கொள்ளாமல், இன்றே கற்றிடுவீர் நல்ல மார்க்கம்! இதனால் உண்டே உங்களுக்குப் பலநன்மை! ஆதலின் உடனே யெழுவீர் மயக்கம் விட்டின்றே! தமிழர்களே தாமதியாது எழுமின்!

---

(273-ம் பக்கம் தொடர்ச்சி.)

வெண்ணி என்னைக் கண்டு நகைப்பவர் கண்கள் காண உனது பாதாரவிந்தங்களை என் தலைமீது சூட்டி பக்ஷத்துடன் நினது சேவடிகளில் அடியேனைச் சேர்த்துக்கொள்ள இசையாவிட்டால், உலகம் உன்னை நீதி தவறி நடந்தவனெனப் பழிக்கும். அது மாத்திரமன்று; குதலைச்சொல் மாறாத பாலகன் 'என்னைக் காப்பாற்றுவார் ஒருவருமில்லையே; யாரேனும் என்னை ஆதரிக்கமாட்டார்களா' என்று புலம்பிக் கதறிக்கொண்டே செல்லுகையில், பின்னேவரும் அக்குழவியின் தந்தை அதை யெடுத்து ஆதரிக்காமல் வாளாவிருப்பானேல், உலகத்தார் அவனை எளிதில் விடுவார்களென்றா நினைக்கிறாய்? உலகின் அத்தகைய வழக்கம் என் விஷயத்தில் மட்டும் அனுஷ்டிக்கப்படாமற் போமா? ஆகையினால் மனத்திற் சிறிது அச்சத்துடன் உன் சேயாகிய என்னை ஆதரித்து உனதருளிற் சேர்ப்பாயாக!



## சடாக்வா இயக்கம்

### CHATAQUA MOVEMENT

முற்றிலும் ஜனப்பொறுப்பு ஆட்சியையே அடிப்படையாய்க்கொண்டு நிருவாகம் செய்யப்பட்டுவரும் அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களில் ஏற்பட்டுள்ள பல ஸ்தாபனங்களில் மிக்க நவீனமானதும் மற்றெல்லாவற்றிலும் சிறந்து விளங்குவதாயுமிருப்பது "சடாக்வா" இயக்கமே. "சடாக்வா" என்பது இராச்சியத்தின் பொதுவான பிரசங்க மேடை; அது ஜனங்களுக்கென ஏற்பட்ட சர்வகலாசாலை. பொது ஜனங்களுக்காக ஸ்தாபனம் செய்யப்பட்ட இந்த வித்தியா சம்பந்தமான இயக்கத்தினால் அமெரிக்காவில் வருஷவாரியில் 150 லக்ஷரூபாய் செலவழிக்கப்படுகின்றது. தவிர, 80 லக்ஷ ஜனங்கள் ஒவ்வொரு வருஷமும் இதைக் கண்டுகளிக்கச் செல்லுகின்றனர்.

ந்யூயார்க் நாட்டிலுள்ள "சடாக்வா" என்னும் ஏரியின் கரைகளில் போடப்பட்ட ஒரு பெரிய கூடாரத்தின்கண் சுமார் 50 வருஷங்களுக்குமுன் இவ்வியக்கம் ஆரம்பிக்கப்பட்டது. இங்கே இளவயதில் கலாசாலைப் படிப்பின் வசதியை இழந்தவர்களி லநேகர் பிரசங்கங்கள் மூலமாயும், வேடிக்கைகள் வாயிலாகவும், வாசிப்புக் கிரமங்களாலும் (Reading Courses), தாங்கள் இழந்த படிப்பை யபிவிருத்தி செய்துகொள்ளும்பொருட்டு ஒன்று கூடினார்கள். அவர்கள் இவ்வேரிக் கரையின்பேரில் கூடியிருந்தபடியால் இவ்வேரியின் பெயரே அக்கூட்டத்திற் கிடப்பட்டது. நாளடைவில் இவ்வேற்பாட்டைக் கண்ணுற்ற இதர சமூகங்களும் தங்களுக்குள்ளேயே "சடாக்வாக்கள்" உண்டாக்கிக்கொண்டு சற்றேறக்குறையதாய்ச் 'சடாக்வா'வின் கொள்கைகளை நாடெங்கும் பரப்பலானார்கள்.

வெகு காலமாய் அமெரிக்காவிலுள்ள ஓரேரியின் பெயராய் வழங்கப்பட்டுவந்த "சடாக்வா" வென்னும் பதம், இப்பொழுது ஆங்கிலபாஷையில், ஜனங்களின் அறிவைப் பெருகச் செய்வதற்குக் காரணமாயிருக்கும் ஒரு பெரிய ஸ்தாபனத்தின் பெயராய்விட்டது. இன்றைக்கு அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களெங்கும் "சடாக்வா"க்கள் ஏற்பட்டு உலகத்திலுள்ள

மேதாவிகள் மூலமாய் ஜனங்களுக்குப் பல விதங்களிலும் அறிவை யூட்டுகின்றன.

தற்காலம் நடத்தப்படும் "சடாக்வா"க்கள் வாசிப்புக் கிரமங்களை விட்டுவிட்டன; ஆனாலும், இப்போதைய "சடாக்வா" சுமார் அரை நூற்றாண்டுக்கு முன்னிருந்ததைவிட மிகச் சுவை பொருந்தியுள்ளதாய் இருக்கின்றது. பிரசங்கங்கள், பாட்டுகள், வேடிக்கைகள், நாடகங்கள் முதலியவைகளெல்லாம் "சடாக்வா" நிகழ்ச்சி முறையி லடங்கியிருக்கின்றன. தினம் மூன்று முறையாக ஒரு "சடாக்வா" ஐந்து முதல் பத்து நாட்கள் வரையில் கூடும். அவற்றில் முற்பகல் நேரம் வித்திய சம்பந்தமான பிரஸங்கங்களுக்காவது, சமய சம்பந்தமான பிரசங்கங்களுக்காவது நியமிக்கப்படுவது வழக்கம்; மேலும் அவ்வேளைகளில் சிறு பிள்ளைகளுக்கு ஒரு உபாத்தியாயர் பலவித விளையாட்டுக்களையும், தேகப்பயிற்சியையும் கற்றுக்கொடுப்பார். பிற்பகல், பாட்டுக்களிலும் பிரசங்கங்களிலும், மாலை வேளைகள் வேடிக்கைகள் கேளிக்கைகள், ஜாலங்கள், பாட்டுக்கள், ஷேக்ஸ்பியர் கவியால் இயற்றப்பட்ட நாடகங்கள் இவைகளிலும் அல்லது இதரவிதமான விநோதங்களிலும் செலவிடப்படும். இவ்விதமான நிகழ்ச்சி முறைகளில் சுமார் ஐம்பது முதல் எழுபது பேர்கள் வரையில் உபந்யாசம் செய்தல், நடித்தல் முதலிய கைங்கரியங்களைச் செய்வார்கள். குறைவில்லாத சுவை பொருந்திய "சடாக்வா" நிகழ்ச்சி முறையொன்றை ஏற்படுத்துவது சுலபமான காரியமன்று. 'சடாக்வா' வானது ஜனங்களின் நாகரீக அறிவை விருத்திசெய்யவேண்டும். ஆகையால் அதில் ராஜ்யம், அரசியல், ஜனாசாரம், வித்தை முதலியவை சம்பந்தமான விஷயங்களில் பிரசங்கங்கள் நடைபெறும். அது மானிட புத்தியை விசாலிக்கச் செய்யவேண்டும். ஆதலால் அங்கே கல்வி, சாஸ்திரம், பிரயாணம் முதலிய விஷயங்களைப்பற்றிய் பிரசங்கங்கள் செய்வதுண்டு; அன்றியும், சித்திரரஸஞானம் வேண்டுகிறவர்களுக் கென்றே பாட்டு, சித்திரபோதனை முதலியவைகளும் நடைபெறுகின்றன. ஆதலால் "சடாக்வா' நடைமுறை சகலருக்கும் பயன்படுமாறு அமைக்கப்பட் டிருக்கிறது. நாம் முன்னர் சொல்லியபடி கல்வி, சமயம் இவைகளோடு கூடி "சடாக்வா" வேடிக்கையாயும், இன்பமாயுமிருக்கும். அமெரிக்காக் கண்டத்து ஜனங்கள் தங்களுடைய நித்தியக் கவலைகளையும் வேலைகளையும் விட்டு "சடாக்வா" விற்கு வந்து கூடுவார்கள். அதுகாலை அவர்கள் தங்களுடைய மனத்துக்கும் உடலுக்கும் ஒருவாரம் ஓய்வு கொடுத்து, உற்சாகத்தின் பண்டிகையையும் சந்தோஷத்தின் காலத்தையும் கொண்டாடிக் களிப்பெய்துவார்கள்.

"சடாக்வா" நடைமுறையில் உபந்யாசம் முதலிய கைங்கரியங்கள் செய்பவர்கள் "மேதாவிகள்" என்றழைக்கப்படுகிறார்கள். கல்வி, ஜனாசாரவேலைகள் முதலியவைகளில் மிகுந்த சாமர்த்தியம்வாய்ந்து நாடெங்கும் பெயர்பெற்ற ஸ்திரீ புருஷர்க்ள், கீர்த்திவாய்ந்த நூலாசிரியர்கள், சித்திரக்காரர்கள், மிகுந்த நாவன்மையுடன் பேசக்கூடிய பிரசங்கிகள், காங்கிரஸ்காரர்கள் அமெரிக்கா ஸெனெட்சபை அங்கத்தினர்கள், கவர்னர்க்ள், மந்திரிகள் முதலிய எல்லோரும் "சடாக்வா" மேடையில் பேசுவதுண்டு.

சாதாரணமாய்ப் பிரசங்கி யொருவன் வாரமொன்றுக்கு ரூபாய் நூறுமுதல் முந்நூறு வரையில் சம்பளமாய்ப் பெறுவது அமெரிக்காவில் வழக்கம். எனவே "சடாக்வா" இயக்கத்தின் பெருக்கம் சக்திவாய்ந்த "மேதாவிகள்" தங்கள் சாமர்த்தியத்தை ஜனங்களுக்குக் காட்டுவதற்கு ஒரு நிலைக்களமாயிருப்பதுமன்றி, அநேகருடைய ஜீவியத்துக்கும் ஆதாரமாயிருக்கிறது. சுமார் 50 வருடங்கட்கு முன் அத்தேசத்தில் பிரசங்கிகளுக்கு நிலையான ஊதியம் கொடுப்பது வழக்கமில்லை; அக்காலத்தில் அவர்கள் தங்களுடைய வரவினாலேற்பட்ட செலவுக்குக்கூட போதாத சொற்பத் தொகையையே பெற்று வந்தனர். மிகுந்த சொல்லலங்காரத்துடன் அமெரிக்காவிலுள்ள பிரசங்கிகளில் நாவன்மையுடன் பேசுகின்றவரான மிஸ்டர் ஹென்ரி வார்ட் பீச்சர் என்பவர் ஒரு காலத்தில் 12 படி உருளைக்கிழங்கைத் தான் பேசியதற்குக் கூலியாகப் பெற்றனராம்! அதுபோல் ஜான் - பி - காப் என்ற மற்றொரு பிரசங்கி தனக்குச் சன்மானமாயளிக்கப்பட்ட சிறிய பன்றியிறைச்சித் துண்டொன்றை ஆவலுடன் வாங்கிக்கொண்டார்! பணத்துக்காகப் பிரசங்கம் செய்யும் தொழிலைக் கண்டுபிடித்தவர் தாம் எழுதிய வியாசங்களினால் உலக





முழுவதிலும் பெரும் புகழ்பெற்ற அறிஞர் எமர்ஸன் என்பவராவார். அவர் ஆரம்பத்தில் சொற்பத் தொகையையே தமது சம்பளமாய்ப் பெற்றுக் கொண்டிருந்தார். ஒருசமயம் அவர் தம்மைப் பிரசங்கத்துக்காக நியமித்த ஒரு கமிட்டிக்கு, அவர்கள் கொடுப்பதாய்ச் சொல்லிய பதினைந்து டாலருக்கே தாம் வருவதற்கு ஒத்துக் கொள்வதாயும், ஆனால் தம்முடைய குதிரைக்கு வேண்டிய நான்கு படி கொள்ளையும் அவர்களே கொடுக்கும்படி நேரிடும் என்றும் எழுதினார். சென்ற நூற்றாண்டிலிருந்த மேதாவிகளில் பெரும் பெயர்பெற்ற அவர் மிகுந்த சச்சரவுசெய்த பிறகே குதிரைக்குத் தேவையான கொள்ளைப் பெற்றார்! ஆனால் அவருடைய பிற்காலத்தில், அவர் சம்பளம் அதிகமாய் ஏறலாயிற்று. அதுகாலை அவர் தாம் செய்யும் ஒவ்வொரு பிரசங்கத்துக்கும் 450 ரூபாய் முதல் 1500 ரூபாய் வரையில் வாங்குவது வழக்கம்.

அமெரிக்காவில் புகழ்பெற்ற கதாசிரியரான மிஸ்டர் மார்க் ட்வெயின் அந்நாட்டின் இன்னொரு பிரபலப் பிரசங்கியாவார். 1874-ம் வருஷத்தில் ஐம்பது பிரசங்கங்களுக்காக அவருக்களிப்பதாய்ச் சொல்லிய 90,000 ரூபாய்களைப் போதாதென அவர் மறுத்துவிட்டார். அமெரிக்கா ஐக்கிய மாகாணங்களின் உபஸ்தாநாதிபதியான தாமஸ் ஆர். மார்ஷல் "சடாக்வாவில்" தாம் செய்யும் ஒவ்வொரு பிரசங்கத்துக்கும் 900 ரூபாய் பெறுகின்றார். ஆனால் 'சடாக்வா பிரசங்கிகளின் அரசர்" என்று பெயர்பெற்ற வில்லியம் ஜென்னிங்ஸ்ப்ரையன் என்பவரோடு மாத்திரம் போட்டிபோடுவதற்கு ஆங்கு ஒருவராலும் முடியாது.

அத்தேசத்தின் உள்நாட்டு மந்திரியாயிருக்குங்கால் வருஷமொன்றுக்கு 36,000 ரூபாய் சம்பாதித்துக் கொண்டிருந்த அவர் இப்பொழுது "சடாக்வா மேதாவி' என்ற ஹோதாவில் மாத்திரம் வருஷமொன்றுக்கு 4,14,000 ரூபாய் சம்பாதிக்கின்றனரென்று அமெரிக்க பத்திரிகைகள் கூறுகின்றன. அவருக்கு மந்திரிப் பதவியைக்காட்டிலும் 'சடாக்வா பிரசங்கி'யின் தொழிலே மிக்க ஏற்றதுபோலும்! அமெரிக்காவில் நாவன்மையுடன் பேசும் வேறெந்தப் பிரசங்கியும் அவரைப் போல் பணவசூலைப் பெருக்கச்செய்ய முடியாதாம்! அவருக்கவ்வளவு சக்தியுள்ளதாகையால், தமக்கு எவ்வளவு பணம் வேண்டுமென்பதை அவரே திட்டம் செய்துகொள்ளுவார். ஒரு பிரசங்கத்துக்கு அவருடைய குறைந்த கட்டணம் 750 ரூபாய்.

அங்குச் செய்யப்படும் பிரசங்கங்களுக்கு யாதொரு கால நிர்ணயமும் ஏற்பட்டிருக்கவில்லை. ஆனால் ஒரு பிரசங்கம் 50 நிமிஷங்களுக்குக் குறையாமலும் 90 நிமிஷங்களுக்கதிகப்படாமலு மிருக்கவேண்டுமென்ற வழக்கம் மாத்திரம் அங்கு அனுசரிக்கப்பட்டு வந்திருக்கின்றது.

அமெரிக்கப் பிரஸங்கியானவன், தெளிவாயும் மெதுவாயும் பேசுவான். அவனுடைய உச்சரிப்புத் தெளிவாகவும், தொனி சம்பாஷிக்கும்போ திருப்பது போல்வும், ஜாடைகள் மிதமாயும், பேச்சின் நடை பகட்டான பதப்பிரயோகங்களால் அலங்கரிக்கப்பட்டு டம்பமான நடையுடன் கூடியிராமல், எல்லோருமறிவதற்குரியவளவு எளிதாயும் வல்லமை பொருந்தியதாயுமிருக்கும். மொத்தமாய், அவன் தான் சொல்லுவது ஜனங்களுக்கு விளங்கவேண்டுமென்ற ஓரெண்ணத்தை மனத்தில் வைத்துக் கொண்டு பேசுவான். பெரும்பாலும் இவ்வேனிற்காலச் "சடாக்வா" கூட்டங்கள் வெட்டவெளிகளில் பெரிய கூடாரங்களில் நடைபெறுகின்றனவாகையால், இம்மேடைகளில் பேசுகின்றவர்கள், குழந்தைகளின் கூக்குரல் சப்தம், 'படபட' வென்றடிக்கும் மாரியின் ஓசை, மைதானத்தில் கட்டுக்கடங்காது வீசும் காற்றின் பேரிரைச்சல் இவற்றைப் பொருட்படுத்தாது, ஜனங்களுக்கு நன்றாய்க் கேட்கும் வண்ணம் அமைந்துள்ள பெருங்குரலைப் பெற்றிருக்க வேண்டும். அமெரிக்கப் பொதுப் பிரசங்கிகளுக்கு மற்றெல்லாவற்றைக் காட்டிலும் திடமாய்ப் பிரதிபலிக்கின்ற குரலொன்றே மிகவும் முக்கியமான தேவையாகும். திடமான குரலைப் பெற்றிருந்தால் மட்டுந்தான் அவர்கள் ஜனங்களின் ஆதரவைப் பெறமுடியும். அஃதின்றேல் எவ்வளவு அழகியப் பிரசங்கமும் அங்கு சோபிக்கவே சோபிக்காது.

"சடாக்வா" பிரசங்கி, சாதாரண மனிதனுக்கும் பெரிய நிபுணனுக்கு மிடையிலுள்ள ஒரு மனிதனவான். சரியான தருணத்தை எதிர்

பார்த்துக்கொண்டிருக்கும் ‘மேதாவி’ பொது ஜனங்களுக்கு நவீன சாஸ்திர ஆராய்ச்சியாலும், கலா வல்லபத்தாலும் விளைந்த பலன்களை எளிய நடையில், அவர்கள் மனத்துக்கு நன்றாய் அர்த்தமாகும்படி விவரித்துக் கூறி, தன்னாற் கூடியவரையி லவர்களின் அறிவை விருத்திசெய்ய முயற்சிசெய்வான். “சடாக்வா” அதிகாரிகள் பிரசங்கிகளிடத்தில் ஒருவிதத் தைரியத்தை எதிர்பார்ப்பதுமன்றி, பிரிட்டிஷ் அரசியலைப்பற்றியும், பிரசித்திபெற்ற கோடீசுவரரான ஜான் ராக்பெல்லரின் ஸ்டாண்டர்ட் ஆயில் கம்பெனியைப்பற்றியும் சில வார்த்தைகள் சொல்லும்படி வேண்டுகிறார்கள். “சடாக்வா” கூட்டங்களில் பிரசங்கம் செய்யும் ஒவ்வொருவரும் ஒரு செய்தியை உடையவர்களாயிருக்கவேண்டும். அவர்கள் மிகுந்த தைரியத்தோடு அதிக கற்பனா சக்தி வாய்ந்த மனத்தையுடையவர்களென்பதை நிரூபித்துக் காட்டவேண்டும். “ இதுவரையில் வெளிச்சமென்பதே பிரகாசிக்காமல் அஞ்ஞான விருள்சூழ்ந்த மூலை முடுக்குகளிலெல்லாம் உண்மை யறிவு என்னும் பெரிய தீப வொளியைக்கொண்டு போவதே அவர்களின் முக்கிய காரியமாகும்.”

பண்டைக்காலத்தில், புராதன ஆதென்ஸ் நகரத்துஇராஜதந்திரியானபோஷியனென்பவர், தாம் செய்யும் பிரசங்கத்தைச் செவி கொடுத்துக் கேட்போர்கள், எப்பொழுதாவது பலமாய்க் கரகோஷம் செய்வார்களேயாகில், தம்மைச் சுற்றியுள்ள நண்பர்களை நோக்கி, “நான் ஏதாவது தப்புச் செய்துவிட்டேனா? அல்லது முட்டாள்தனமாய் ஏதேனும்கூறிவிட்டேனா?” எனக் கேட்பாராம். ஆனால் அமெரிக்காவிலோ ஜனங்கள் அடிக்கடி செய்யும் கரகோஷங்களே ஓர் பிரசங்கம் ஒழுங்காகவும் நன்றாகவும் செய்யப்பட்டதென்றறிவிப்பதற்கு முக்கியமான அத்தாட்சியாகக் கருதப்படுகிறது. ஆகையால் ‘சடாக்வா’ மேடையில் பிரசங்கம்செய்வோன் தான் பேசுவதைச் செவியுறும் கூட்டத்திலெவ்விதமாய்ப் பேசினால் ஜனங்களுடைய ஆதரவைப்பெற முடியுமென்பதை முன்னதாகவே யறிந்துகொண்டு அவர்களுக்குச்சந்தோஷத்தையும்,திருப்தியையும் கொடுக்கும்வார்த்தைகளைப் பேசி, அவர்களை இன்பமென்னும் சாகரத்திலமிழ்த்த முயற்சி செய்வது வழக்கம். எவ்வளவோ பெரிய மேதாவிகளெல்லாம் இவ்வற்பக் கர கோஷத்துக்கும், ஆரவாரத்துக்கு ஆசைப்பட்டுத் தங்களுடைய அதிசயிக்கத்தக்க கலா வல்லபத்தையும், உயர்ந்த அறிவையும் இவைகளின் முன்னர் தியாகஞ் செய்துவிடுகின்றனர். ஆனால் இவ்விஷயங்களில் நாம் அவர்கள்மீது வெகுவாய்க் குறைகூற இடமில்லை. ஏனெனில், உலகத்திலுள்ள ஒவ்வொருஅரசியல் நிபுணனும் “ஜன ஆதரவை வேண்டி, அவர்கள் உதவியை நாடும் எவ்விதமான காரியங்களிலும், பொது ஜன அபிப்பிராயம் நன்கு மதிக்கப்படவேண்டும்” என்று சொல்லுவதில்லையா? தவிர பொது ஜன ஊழியனை “சடாக்வா” பிரசங்கி, அவர்கள் மனோபீஷ்டத்தைப் பூர்த்திசெய்யக் கடமைப் பட்டவனல்லவா? வெகு காலமாய் அமெரிக்க ஜனங்களின் தன்மையை மிகவும் ஆழ்ந்து கவனித்துப் பார்த்தவர்கள், அவர்கள் வேடிக்கையான கதைகளிலும், இன்பத்தையளிக்கும் வார்த்தைகளிலும், சொல்லலங்காரம் பொருந்திய கவிகளிலும் மிகுந்த பிரியமுள்ளவர்களென்பதை நன்கறிவார்கள்.

“சடாக்வா மேதாவிகள்” எல்லோரும் ஒரே பிரசங்கத்தைப் பலமுறை செய்வதுண்டு. “சடாக்வா” பிரசங்கிகளின் “ நக்ஷத்திரமாகிய” வில்லியம் ஜென்னிங்ஸ் ப்ரையன் என்பவர் தமக்கு மிகவும் பிரியமுள்ள “சமாதான அரசன்” “ஒரு மனிதனது ஆரம்பம்” என்ற இரு விஷயங்களையும்பற்றி கணக்கற்ற முறை பிரசங்கித்திருக்கிறார். ஆனால் “டெம்பிள் ஸர்வ கலாசாலை”யின் அத்தியக்ஷகரான டாக்டர் ரஸ்ஸல் எச். கான்வெல் என்னு மறிஞர், “வைர நிலங்கள்” என்னும் ஒரே பிரசங்கத்தைச் சுமார் ஐயாயிரம் தடவைகளுக்குமேல் செய்திருக்கிறாராம். அந்நாட்டில் வேறொருவரும் ஒரே பிரசங்கத்தைப்பற்றி அத்தனை முறை பேசியதே கிடையாது. மேலும் அவரது பிரசங்கத்தில் ஒரு விசேஷமென்னவென்றால், சென்ற முப்பது வருஷங்களாக அவர் அப்பிரசங்கத்தினின்றும் கிடைக்கும் வருவாய் மொத்தத்தையும் அப்படியே கல்வி கற்பதற்கு உதவிவேண்டும் வாலிபர்களுக்குக் கொடுத்து உதவுகின்றார். அம்மாதிரி அவரால் இதுவரையில் ஒத்தாசை செய்யப்பட்ட மாணவர்களின் தொகை ஆயிரத்தறுநூறாகும்.

நாம்இதற்குமுன் கூறியபடி ஒரு “சடாக்வா” கூட்டம் ஏழு அல்லது எட்டுப் பிரசங்கங்க

நல்லவர் கண்ணில் நாகம் பட்டாலும் கொல்லார்.



ளோடு கலைந்துவிடுகிறதில்லை; அதில் பிரசங்கங்கள் தவிர இரண்டு மூன்று நாட்கள் வரையில் கேளிக்கைகளும், பாட்டுகளும், ஜாலங்களும், நாடகங்களும்,வாத்தியக் கச்சேரிகளும் உண்டு. சிலர், ஜனங்களுக்கு வேடிக்கையான கதைகள் சொல்லியும், ஹாஸ்யங்கள் செய்தும், விநோதமாயும், சிரிப்பை யுண்டாக்கத்தக்கதாயும் பாக்களை ஒப்புவித்தும் இன்னும் பலவிதங்களில் ஜனங்களைக் களிக்கச்செய்வார்ள். பொதுவான “சடாக்வா” வென்னும் கட்டடம் “பிரசங்கங்கள்” என்னும் அஸ்திவாரத்தையே அடிப்படையாகக்கொண்டு எழுப்பப்பட்டிருக்கின்றது. எக்காரணத்தைக் கொண்டேனும் இவ்வியக்கத்தினின்றும் பிரசங்கம் செய்வதைத் தள்ளிவிடுவார்களே யாகில், அதுகாலை இது எதற்கும் உதவியற்றுப்பணத்தைச்செலவழிப்பதற்குக் காரணமாயிருக்கும் ஒரு வேடிக்கை போலவே கருதப்பட்டு, இன்று பெற்றுள்ள மதிப்பை யிழந்துவிடும்.

(தொடரும்)

# நமது சிறு கதை

## OUR SHORT STORY

(262-ம் பக்கத் தொடர்ச்சி.)

திருவேங்கடநாதர் அக்குழந்தை வயிற்றில் சூலைநோயை யுண்டாக்கினார். “ஐயோ! அம்மா! வயிறு வலிக்கிறதே! என்ன வலி! இதென்ன வலி! என்னாற் சகிக்க முடியவில்லையே! என்ன பாவத்தைச் செய்தேனோ! ” என்று ஐந்து வயதுப் பாலகனாகிய வேங்கடரமணன் வாய்விட்டுக் கதறுவான். சர்ப்பவிஷந் தலைக்கேறினாற் போல் மயங்கி மூர்ச்சை யடைவான். கஷாயம், லேகியம், பஸ்பம், மாத்திரை முதலியவைகளை முறைப்படி வைத்தியர்கள் செய்துகொடுக்க, அச்சூலை நோயானது முன்னினுமதிகப்பட, “இந்தச் சூலை நோய்போலக் கொடிய நோய் நாம் முன்னொருபோதும் கண்டறியோம். இதற்கு யாது செய்வோம்!” என்று துக்கமுற்று அவரவர்கள் வந்த வழியே திரும்பிச்செல்ல, மறையவர்கள் வந்து கிரக ஜபஞ்செய்து, பின் கும்பத்திலுள்ள ஜலத்தைக் குழந்தைக்குக் கொடுக்க, வலி முன்னினும் பதின்மடங்கு அதிகரிக்க, மறையவர்கள் திகில்கொண்டு மனங்கலங்கி “ இந்நோயை நீக்குவதற்கு நாம் வல்லோமல்லேம் ” என்று சொல்லிக்கொண்டு அவனைக் கைவிட்டுப் போக, சோதிடர்வந்து, “வேங்கடேசனை நாம் வேண்டி மெத்தவும் மறந்ததாலே, சங்கட வயிற்றுநோவு வருத்துகின்றது. ஏதோ பிரார்த்தனை செலுத்தத் தவறியிருக்கிறீர்கள் ; திருமாலின் திவ்விய க்ஷேத்திரங்கள் நூற்றெட்டினுள் ஒன்றும், வடநாட்டுத் திருப்பதிகள் பன்னிரண்டினுள் முதலதும்,தன்னையடைந்தவர்களுடைய பாவங்களத்தனையு மொழிப்பதனால் “வேம்”=பாவம், “கடம்”=எரித்தல் என்று பொருள்படும் திருநாமம் பூண்டு, “வேம்”=அழிவின்மை,“கடம்=ஐசுவரியம்” என்றும் அழிவில்லாத ஐசுவரியங்களைத் தன்னை யடைந்தவர்களுக்குத் தருமென்று வாராகபுராணத்திற் கூறியபடி யுள்ளதுமான திருவேங்கடத்துக்கு ஏறுவீரானால், இக்கொடிய சூலைநோய் அகலும்,மாயனார் மருந்தல்லாது வாங்குமோ இவ்வயிற்று நோவு! ” என்று சொல்விட்டுப்போக, குழந்தை வேங்கடரமணன், “அடியேன் கொடிய சூலை நோயைச் சகிக்கலாற்றாமையால், உம்மையே கதியென்றடைந்தேன்; தமியனுக் கருள்செய்யும் !” என்று திருமாலுக்கு விண்ணப்பஞ்செய்து கீழே விழுந்தயர்ந்தான். வேங்கடேசனை நாம் வேண்டி, மெத்தவும் மறந்ததாலே சங்கட வயிற்று நோவு தனையனை வருத்துகிற தென்று தருமசீலையின் நாயகனுக்குத் தெரிந்தவுடன், அவர் தம் குழந்தை, நாயகி, தகப்பன், தாயார் ஆகிய நால்வருடனும் திருப்பதிக்குப் புறப்பட்டார்.

“சேஷனே! உலகத்தில்உன்னைப்பார்க்கிலும் எனக் கந்தரங்கமானவ ரில்லாமையா லுன்னாலொருகாரியம் எனக்கு நடக்கவேண்டியதாயிருக்கிறது. அஃதென்னவென்றால் அப்பிரதேசத்தில் நாம் நிவாசம் பண்ணவேண்டுமென்று நினைக்கின்றோமாகையால், நீ அவ்விடத்திலே பர்வதாகாரமா யமைக்கடவாய்” என்று திரு

நல்லவன் ஒருவன் நடுவே நின்றால் அறுத வழக்கும் அறும்.

மால் திருவனந்தாழ்வாரிடஞ் சொல்ல, க்ஷீராப்தி நாதனுடைய நியமனத்தைச் சிரமேற்கொண்டு படத்தோடுகூடிய தன்னுடைய சிரத்தை ஸ்ரீவேங்கடாசலத்திலும், சர்வா பீஷ்டத்தையுங் கொடுக்கும் மகாப்பிரசித்தமான ஸ்ரீ நரசிம்மமூர்த்தி எழுந்தருளியிருக்கும் ஸ்ரீசைலத்தில் தன் வாலையும் வைத்துக்கொண்டு பரப்பிநின்றதும், பூர்வத்தில் நாராயணனென்னும் பிராமணப் புனிதனொருவன் புஷ்கரணி தீரத்திலே வெகுகாலந் திருமாலைப் பூஜைசெய்து அங்கு தரிசித்து "அடியேனுடைய அபீஷ்டமென்னவென்றால், பூமியிலிருக்கின்ற மனிதர்களுக்கு அடியேனைப்போல வருத்தமுற்றுத் தவஞ்செய்யச் சக்தியிராதாகையாலே, சமஸ்தாத்மாக்களையும் அனுக்கிரகித்துசர்வாபீஷ்டத்தையுங் கொடுக்கும்பொருட்டு எப்போதைக்கும் இந்த ஸ்வாமி புஷ்கரணிக் கரையிலே க்ஷண காலமும் நீங்காது ஸ்ரீஸமேதனாக எழுந்தருளி சமஸ்தாத்மாக்களுக்கும் கடாக்ஷித்துச் சேவை சாதிக்கவேண்டும். இந்தப் பர்வதத்துக்கு அடியேனுடைய பெயருமிருக்கும்படியாகக் கிருபை செய்தருளவேண்டும்" என்று திருமாலை வேண்டிக்கொள்ள ஸ்ரீய:பதியும் அவ்வாறே கடாக்ஷித்து, அக்காரணத்தினால் நாராயணகிரி என்று பெயர் வழங்கப்படுவதும், ஆயிரங்கண்களையுடைய இந்திரனது பெறுதற்கரிய மணிக்கலம்பெய்த பணிப் பெட்டகத்தைத் திறந்து வைத்தாலொத்த மதில் வட்டத்தை யுடையதும், பூலோக வைகுண்டமென்று வழங்கப்படுவதுமான திருவேங்கடத் தலத்தினுள் நுழைந்தார்கள். குலம் நான்காய் வகுத்தவகையில், அந்தணர், அரசர், வணிகர், வேளாளரென்று சொல்லப்பட்டார் வசிக்கும் நான்காய் வேறுபட்ட தெருக்களும், மகர தோரணங்கள் நிலைபெற நிறுத்தின மாடவீதிகளையும், பைம்பொன்னாற்செய்த நிறைகுடத்தையும், பாலிகையையும், விளக்கையும் கொடியும், கவரியும் வஞ்சனையாற் சிலர் மருந்தூட்டவுண்டு பித்தேறினரும், நஞ்சையுண்டு நடுங்கு துயரமுற்றோரும், அழலும் விஷத்தையுடைய அரவின் வாயிற் கடியுண்டவரும், பிதுங்கின கண்களையுடைய பேய்பிடிக்கப்பட்டாரும் ஒருகாற் சூழவந்து தங்களில் மூழ்க அத்துயர்கள் நீங்குதற்குக் காரணமானவைகளும், இந்திரனாற் செய்யப்பட்ட ஐந்திர வியாகரணமென்னுமிலக்கணத்தை யுணர்த்தக் கூடியவைகளும், இப்பிறப்புக்குக் காரணமாகிய பழம் பிறப்பையுணர்த்தக்கூடியவைகளும், எண்வகைச் சித்திகளையும் மானிடர் தவஞ்செய்து வருந்திப் பெறுமல் தங்களுள் நீராடுவதனாலேயே பெறும்படி செய்ய வல்லவைகளும், முனிவர் முதலிய இவ்வுலகத்தாரும், தேவகணங்களாகிய பொன்னுலகத்தாரும் வந்து நீராடுதற்குரிய பெருமை வாய்ந்தவைகளுமான கோனேரி, ஆகாசகங்கை, பாபவிநாசம், பாண்டவ தீர்த்தம், குமாரதாரை, தும்புரு தீர்த்தம், ஆழ்வார் தீர்த்தம் முதலிய புண்ணிய தீர்த்தங்களையும், அறமும் அதன் துறைகளும் விளங்குவதற்குக் காரணமாகிய அறவோர்களுடைய இடங்களையும், மனிதர் எத்தொழிலைச் செய்தாலும், அது புண்ணிய பாவங்கட்குச் சம்பந்தப்பட்டு அதற்குரிய வினைப்பயனைப் பூட்டுமாதலால், "இருவினையு மிடைவிடா எவ்வினையும்" என்றபடி தீவினை இரும்பு விலங்கு போலவும், நல்வினை பொன்விலங்கு போலவும் நின்று மோட்சத்துக்குச் செல்ல வொட்டாமற் பந்தமுறுத்தும் என்பதைத் தெளிவாயறிந்து அவ்விருவினைகட்குப் பெருஞ் சத்துருக்களாய், வேதங்களையும் பழமையான சாஸ்திரங்களையும் அறிந்த பெருந்தவத்தையுடைய முனிவர்களது ஆசிரமங்களையும் பார்த்து ஆநந்தித்து, தருமசீலையும் அவளுடன் சென்றவர்களும் மேற்கூறிய நானாவித தீர்த்தங்களில் ஸ்நானஞ்செய்து அற்புத கோவிந்தராஜனைத் தொழுது, ஏழு பர்வதங்களின் காட்சியைக் கண்டு, இராஜரீக ஸ்ரீநிவாஸனைத் தரிசித்து,

"மெச்சு திரு வேங்கடவா வெண்பாவிற் பாதியிலென்
இச்சையிலுன் சன்ம மியம்பாவா — மச்சாகூர்
மாகோலா சிங்காவா மாராமா ராமாரா
மாகோபா லாமாவா வாய்"

என்று காளமேகப் புலவர் பாடியபடி, திருமாலின் அவதாரங்களின் பெருமையைத் துதித்துப் பிறகு ஹரி விசித்திர இரதத்தில் வருவதைக் கண்டானந்திக்க ஓர் சத்திரத்தில் தங்கினார்கள்.

பூரி, பேரி, நகரா, துந்துபி முதலிய வாத்தியங்கள் முழங்கவும், சதுர் வேதங்களும் மறையவர்கள் முழக்கிடவும், சுரர் மலர்மாரி பொழியவும், திருவேங்கடமூர்த்தியின் இரதமுமோடித் திடீரென்று மடத்தின் வாயிலில் நின்





றது. அங்கு நின்றதேர் நகர்வதாயில்லை. பிறகு ஓர் அந்தணர் ஆவேசங்கொண்டு தருமசீலையினருகிற் சென்று, "[illegible]! நீ சொன்னவாறு சுதனை தேர்வண்டிக்காலிலே தந்துவிடுப்பாய். 'மைந்தனைப் பெற்றாளென்று அகிலஞ் சொன்னாற்போதும், கந்தனை யுந்தன் தேர்வண்டிக்காலுக்குக் கொடுப்பேனென்று' சொன்னதை நானா மறப்பேன்? கொடு புதல்வனை!" என்று சொன்னார். அப்போது தருமசீலை கோவென்று கதற, "எந்தனைப் பெற்று மகிழ்ந்து இஷ்டமுடன் பார்த்திருந்த தாயே! நீர் சஞ்சலமுற்றே தியங்கி வந்ததென்ன? என்னோ டவ்வகை யுரைத்தீராகில் உம் சந்தேகந் தீர்த்திடுவேன்; தயைபுரிந்து சொல்லவேண்டும்" என்று வேங்கடரமணன் தருமசீலையைக் கேட்க, தருமசீலை நடந்த இரகசியத்தை அவளிடஞ் சொன்னாள்.

வேங்கடரமணன்:— தங்களைப்போன்றவர்களுமிப்படிச் சஞ்சலப்படுவது தர்மமோ?

"புறந்தூய்மை நீரா னமையு மகந்தூய்மை
வாய்மையாற் காணப்படும்."
"ஐயத்தி னீங்கித் தெளிந்தார்க்கு வையத்தின்
வான நணிய துடைத்து."
"ஓர்த்துள்ள முள்ளா துணரி னொருதலையாப்
பேர்த்துள்ள வேண்டா பிறப்பு."
"நன்றாங்கா னல்லவாக் காண்பவ ரன்றாங்கா
லல்லற் படுவதெவன்."

கொடுத்ததைக் கேட்கில் அடுத்தீது பகையா? சொன்னசொல் தவறுவது மகத்தான தோஷமே! பிறப்பதும் இறப்பதும் பேருலகோர்க்கே; பெருவினையது தொலையாது; சிறப்புடன் ஹரிபதம் பெறப் பல ஜன்மத்திற் செய்த புண்ணியம் வேண்டும்; எத்தனை நாளிருந்தாலும் மண்ணுலகிற் செய்திடுவது பொய்யாது; பத்தர்கள் மனதில் நித்தமிடு ஹரி பதத்தை யடைவதே போதும். ஆனபடியால்; என் தாயே! நீ துக்கிக்காதே. உற்சாகமாய் என்னை வண்டிக்காலிற் கொடு!

தருமசீலை.—அப்பா என் கண்ணே! வேங்கடரமணா! கொஞ்சு மஞ்சுகமுடைய குஞ்சரமே! குமரனினு மழகான என் கண்மணியே! குறையே வைத்தெழுதினான். ஜன்மத் தீவினையோ, செய்த பாவமின்னுந் தீரவில்லையோ அறிகிலேன். வஞ்சகமாகச் சிறுவனை யளித்ததும் மாயமே! என் செல்வமே! வருந்தியே பெற்றெடுத்த பாலன்தான் இறந்தபின் நானுமிருப்பேனோ! ஹே! அநாதரக்ஷகா! மகனை எப்படிக் கொடுப்பேன்! தசரதேந்திரன் நேம மிகு தவத்தில் பிறந்து புவனமெங்குஞ் சிறந்த ஸ்ரீஹரி! கௌசிகன் பின்சென்று யாகத்தைக் காத்து, மாசிலாத அகலியை சாபத்தைத்தீர்த்து, வனிதை ஜானகியை இனிதுடன் மங்கள மணஞ்செய்து மகிழ்ந்த பெருங் குணக் கல்யாணராமா! விபீஷணனை இலங்கைக்கு அரசனாக விதித்து அவன் சென்னிமீதினிற் சேவடி பதித்து, கருமுகில்போல அயோத்திமா நகரில் வந்துதித்து, கனமகுடஞ்சூடி அனைவருந் துதிக்க நின்ற பட்டாபிராமா!

என்று திருமாலைத்துதித்து "என்மகன்மேல் நீ இரதத்தை இனிது நடத்துவாய்" என்று வேண்டிக்கொண்டு, "வாடா என் கண்மணியே! உன்னைத் தேர்வண்டிக்காலிற் கொடுக்கிறேன்! அப்பா! என் கண்மணியே! உனை நித்தம் ஆதரவாய் வளர்த்த நான் உனக்குக் கூற்றுவனாயினேனே!" என்று சொல்லிக்கொண்டு இரு விழிகளினின்றும் புனல்சொரியத் தன் மைந்தனை இடது சக்கரத்தடியிற் படுக்கவைத்து, "ஹே! வேங்கடரமணா! வளர் வேங்கடாசல மகா மூர்த்தியே! நீ வருவாய்! உன் பிரார்த்தனையும் பெறுவாய்!' என்றாள். ஹரியின் திருசரணத் தியானமேலீட்டினால் பெற்ற புதல்வனுந் தானுமாக இரதத்தினடியிற் தருமசீலை படுத்தவுடன் வடம்பிடித்திழுக்க,

"அடிய னிரு வினைநீறு பட அமரரிது பூரை
அதிசயமெ னருள்பாட வரவேணும்"

என்று தருமசீலை துதித்ததற்கிணங்கி, இரதமும் அவர்களிருவரையுந் தாண்டிக் குடுகுடெனச் சென்றது. தாயும்பிள்ளையுமெழுந்தார்கள்! ஆகாயத்தில் அமரர் ஆர வாரித்துப் புஷ்பமாரி பொழிந்து தேவதுந்துபி முழக்கினார்கள். வேங்கடரமணனும், தருமசீலையும் எழுந்து ஆனந்த வருவி சொரிய, எலும்பும் மனமும் நெக்குநெக்குருகப் பரவசர்களாய் விழுந்து நமஸ்கரித்து, எழுந்து அஞ்சலியஸ்தர்களாகி நின்று தோத்திரம் செய்தவுடன், பக்தர்கள், பாடியாடிக் களி கூறவும், வேதங்கள் கோஷிக்கவும், நானாவித வாத்தியங்கள் முழங்கவும் தேர் புறப்பட்டு நிலைக்கு வந்தது.

சுபம்! சுபம்!! சுபம்!!!

## தமிழ்நாட்டில் பிரதேசச் சுய ஆட்சி

### LOCAL SELF GOVERNMENT IN ANCIENT INDIA

[ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம். ஏ.]

கிராமங்கள் தங்கள் காரியங்களைத் தாங்களே நடத்திக்கொண்ட குடியரசு தாணிக ளென்பதற்கும், அரசன் தனக்கு ஆகவேண்டிய காரியங்களைக் கிராமங்களின் அதிகாரிகளான கிராமச் சபைகளைக்கொண்டு நடத்திக் கொண்டானேயன்றிக் கிராமங்களிலுள்ள தனித்தனிக் குடிகளை நேரில் எக்காரியத்துக்கும் அணுகவில்லை யென்பதற்கும் கீழேகண்ட சிலாசாசனங்கள் நிகரற்ற சாக்ஷியங்க ளாகின்றன. அரசன் குறிப்பிடும் ஊழியங்களைச் செய்யத் தகுந்த மனிதர்களை யனுப்பவேண்டுவது கிராமச் சபைகளின் கடமையென்றும் உத்தரவுகளுக்குக் கீழ்ப்படிந்து நடப்பது கிராமத்தார்களின் கடமையென்றும், அவ்வாறு அனுப்பப்பட்டு ஊழியஞ் செய்பவர்களுக்குரிய ஊதியத்தைக் கிராமச் சபைகளே அவர்களுக்குக் கொடுத்து, தங்கள் தங்கள் கிராமங்கள் அரசனுக்குச் செலுத்தவேண்டிய இறையிலிருந்து அவ்வூதியத் தொகையைப் பிடித்துக் கொள்ள வேண்டுமென்றும் கீழேகண்ட சிலாசாசனங்களால் தெரியவருகிறது.

அச்சிலாசாசனங்கள் இராஜராஜதேவர் என்னும் சோள மகாராஜன் தனது ஆட்சியின் 29-வது ஆண்டில் செய்த கட்டளையின்படி இராஜராஜேசுவரர் கோவில் என்ற தஞ்சைப் பெரிய கோவிலுக்கு பொக்கிஷதார்கள், கணக்கர்கள், வேலைக்காரர்கள் முதலியவர்களைக் கொடுக்கவேண்டிய கிராமங்க ளின்னின்னவெனத் தெரிவிக்கின்றன. அச்சாசனங்கள் மேற்கூறிய தஞ்சைப் பெரிய கோவிலின் சுவர்களின் கற்களில் வெட்டப்பட் டிருக்கின்றன.

"கோராஜகேசரிவர்மரான ஸ்ரீராஜராஜதேவர்க்கு யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீராஜராஜதேவர் உடையார் ஸ்ரீ ராஜ ராஜீஸ்வரம் உடையார்க்குச் சோழமண்டலத்தும், பாண்டிநாடான ராஜராஜ மண்டலத்தும், தொண்டை நாடான ஜயங்கொண்ட சோழமண்டலத்தும் ப்ரும்ம தேயங்களிலாரே அவ்வவ ப்ரும்மதேயங்களில் பூமி ஸம்பத்தும் பந்துஸம்பத்தும் அர்த்த ஸம்பத்தும் உடையாராயிருப்பாரை ஸ்ரீபண்டாரஞ் செய்ய பிராம்மணரையும், திருப்பரிசாரகஞ் செய்ய மாணிகளையும் (ப்ரும்மசாரிகளையும்), கணக்கெழுத கரணத்தார்களையும் சந்த்ராதித்யவல் இடக்கடவார்களாக, உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய்மொழிந்தருள இட்ட அவர்களில் பண்டாரி ஒருவனுக்கு ஓராட்டைக்கு நெல்லு *** கலமும், திருப்பரிசாரகஞ் செய்யும் மாணி ஒருவனுக்கு நிசதம் நெல்லுப்பதக்கும் ஆட்டைவட்டன்(வருஷமொன்றுக்கு) காசுநாலும் * * * * ஆக இப்படி நிவந்தமாக உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது."

"அருமொழிதேவ வளநாட்டு மங்கலநாட்டு மங்கலத்து ஸபையோர் இடக்கடவ ஸ்ரீபண்டாரஞ்செய்யும் பிராம்மணன் ஒருவன்; திருப்பரிசாரகஞ்செய்யும் நிமாண்(ப்ரும்மசாரி) ஒன்று ** * * * உய்யக்கொண்டான் வளநாட்டுத்திருநறையூர் நாட்டுத் தண்டத்தொட்டமான மும்முடிச்சோழச் சதுர்வேதி மங்கலத்து ஸபையோர் இடக்கடவ திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் ஒன்று கணக்கெழுதுங் கரணத்தான் ஒருவன் இவன் இடக்கடவகீழ்க்கரணத்தார்கள் இருவர் * * * * * கேரளாந்தக வளநாட்டு உறையூர்க் கூற்றத்து ராஜாச்ரயச் சதுர்வேதி மங்கலத்து சபையோர் இடக்கடவ ஸ்ரீபண்டாரஞ் செய்யும் பிராம்மணன் ஒருவன் திருப்பரிசாரகஞ் செய்யும் மாண் இரண்டு * * * * * [இச்சிலாசாசனத்தில் மேற்கூறியவாறு 145" கிராமச்சபைகளின் கடமை கூறப்படுகிறது.]

II. கோராஜகேசரி வர்மரான ஸ்ரீராஜராஜதேவர் குக்யாண்டு இருபத்தொன்பதாவது வரை உடையார் ஸ்ரீராஜராஜதேவர் உடையார் ஸ்ரீ ராஜராஜீஸ்வரம் உடையார்க்குச் சோழமண்டலத்து ப்ரும்ம **** இட்ட திருமெய்க்காப்பார்களுக்குப் பேரால் ஆட்டைவட்டன் நூற்றுக்கல நெல்லும் திருமெய்க்காப்பார்களை இட்ட அவ்வவ ஊர்களிலாரே அளக்கக்கடவார்களாகவும். இந்நெல் அவ்வவ ஊர்களிலார்க்கு சந்த்ராதித்யவல் ஆட்டாண்டுதோறும் தன் கடமைக்குச் செலவு பெறவும். ஆக இப்படி நிவந்தமாக உடையார் ஸ்ரீராஜராஜதேவர் திருவாய் மொழிந்தருளினபடி கல்லில் வெட்டியது." * * * [இச்சிலாசாசனத்தில் 114 கிராமச்சபைகளின் கடமை கூறப்பட்டிருக்கிறது.]

(தொடரும்.)

நல்லாரை நாவில் உரை, பொன்னைக் கல்லில் உரை.



## ஹாஸ்யத் துணுக்குகள்

### WIT AND HUMOUR

[ஸ்ரீமான் பி. எஸ். நீலகண்டம்]

"அப்பனிரந்துண்ணி யாத்தாள் மலைநீலி
ஒப்பரிய மாம னுறிதிருடி-சப்பைக்கால்
அண்ணன் பெருவயிற னாறுமுகத்தானுக்கிங்
கென்ன பெருமையிது."—காளமேகப்புலவர்.

**விகடன்**:—மகராஜ்! ஒரு விண்ணப்பம். "என்னைப்பற்றி நீ இனிமேல் ஏதாவது பரிகாசஞ்செய்வாயாகில்—நவாப்பு, சோடாப்பு என்று பார்க்கமாட்டேன்—உன்னை ஒரே குத்தாய்க் குத்திக் கொன்றுவிடுவேன். ஜாக்கிரதை" என்று நேற்று என்னிடஞ்சொன்னார். அதனால் எனக்கு ரொம்பவும் பயமாயிருக்கிறது.

**நவாப்**:—பூ! இவ்வளவுதானே! அவன் மட்டும் உன்னை யப்படிச் செய்யட்டும். பிறகு ஐந்து நிமிஷம் அவன் இருக்கிறானாவென்று பார்ப்போம்.

**விகடன்**:—பார்ப்போமென்று பன்மையில் சொல்லுகிறீர்களே! ஐந்து நிமிஷத்துக்கு முன்னாலென்றால் குணமுண்டு.

*
* *

**யஜமானன்**:—யாரடா, அங்கே! உள்ளே போய் வாய்க்கொப்பளிப்பதற்கு ஒரு சொம்பு ஜலம் கொண்டுவா.

**வேலைக்காரன்**:—வண்டியோட்ட நான் அமர்த்தப்பட்டேனே யொழிய, கேவலம் தண்ணீர் கொண்டுவருவதற்கல்ல.

**யஜமானன்**:— அப்படியா? நியாயந்தான். வண்டியைக்கட்டு; பரிசாரகனை வரச்சொல்லுகிறேன்; காவேரி யாத்துக்குப்போய் ஜலங் கொண்டுவர வேண்டும்.

*
* *

**டாக்டர்**:—என்ன ஐயா! இப்படி இரத்தம் ஒழுகுகிறது, சிரித்துக்கொண்டு வருகிறீர்!

**ராமுடு**:—ஏ அப்பா, என்ன வலி!—நினைத்துக்கொண்டால் சிரிப்புத்தான் வருகிறது—அப்பா, அப்பா என்ன வலி!—பெரியகோயிலுக்குச் சமீபத்திலுள்ள அகழியோரத்தில் உட்கார்ந்து முகக்ஷவரஞ் செய்துகொண்டிருந்தேன். திடீரென்று அதிர்வேட்டுப்போட்டான். அவ்வளவுதான் எனக்குத் தெரியும். அத்தோடு பரியாரியும் அகழில் விழுந்திறந்தான். என் மூக்குந் தொலைந்தது. என் மூக்கைச் செதுக்கினானே. வேணும் அந்தப் பயலுக்கு இது—அப்பா, என்ன வலி!

*
* *

இராஜ சபையில் ஒரு வித்வானுக்கும், விகடனுக்கும் விவாதமேற்பட, விகடன் வித்வானைப்பார்த்து, "நீர் என்னவோ பெரிய வித்வானென்று மமதைகொண்டிருக்கிறீரே. பதிவிரதை வயிற்றில் பிறந்தவர்கட்குக் கூட இவ்வளவு கர்வமிராதுபோ லிருக்கிறதே" என்றான்.

**வித்வான்**:—எதற்கும் ஒரு அளவுண்டு. உமது ஊத்தைவாயை அந்தமட்டோடு மூடும்.

**விகடன்**.—உமது தாய் பதிவிரதையல்ல. உள்ளதைச் சொன்னால் உடம்பில் எரிச்சல் தான். அதன் இரகசியமெனக்குத் தெரியும். மணஞ்செய்யுங்காலத்தில் உமதுதாய் அக்கினி வருணன் முதலிய பஞ்சதேவர்களுக்கு முதலில் சமர்ப்பிக்கப்பட்டாள். ஆகவே, அவளுக்கு அந்தக் காலத்திலேயே பதிவிரதா பங்கமேற்பட்டது.

*
* *

பரீக்ஷார்த்தமாகக் காலக்ஷேபஞ் செய்த ஒரு பாகவதர் தனக்குக் கொடுக்கப்பட்ட ஒரு நாழிகை சாவகாசத்தில் தன்னுடைய வாக்குச் சாதுர்யத்தையும் கல்வித்திறத்தையும் காட்டவேண்டி, குறிப்பிட்ட நாழிகைக்குள் ஸ்ரீமத் வால்மீகி இராமாயணத்தை முடிக்க வெண்ணி "ராமன் ஜனனஞ் செய்தார் ** * * சத்துருக்களை ஹதஞ்செய்தார் * * * * * **பரதருக்கு மகுடத்தைக் கொடுத்து வனஞ் சென்றார்" என்று சாதுர்யமாய்ச்சொன்னவுடன் சபையிலுள்ளவரெல்லோரும் இராமர் வனஞ் சென்றதை நினைத்து வருந்த, ஒருவர் மடமடவென்று சிரித்தார். காரணத்தைக் கேட்க "இப்போதுதானே ராமன் ஜனித்தார். அதற்காக சந்தோஷிக்கின்றேன். இதென்ன வால்மீகி ராமாயணமா? அல்லது மோட்டார் பஸ் ராமாயணமா?"

*
* *

நல்லோர் ஒருவருக்குப் பெய்யும் மழை எல்லாருக்கும் ஆம்.

சிறுபையன்.—குட்மார்ணிங் ஸார்! தாங்கள் பெயர்போன நாவலிஸ்டாமே! எங்க அப்பா சொன்னார்.

நாவலிஸ்ட்.—பெயர் போகாத நாவலிஸ்ட்டு தான். அதற்கென்ன இப்போது?

பையன்.—இல்லை? ஒரு காலணா வேண்டும்.

நாவலிஸ்ட்.—அடா, டா, டா! அதுதானே யில்லை.

பையன்.—சரி, அதுபோனால் போகிறது. பாவம்! தங்களுக்கு வெள்ளெழுத்து மட்டும் வராமலிருக்கவேண்டும். கண்ணாடியையாவது போட்டுக்கொண்டு எழுதிப் படிக்கலாமென்றால், அதை மாட்டிக்கொள்ளவும் தங்கள் மூக்கில் இடமில்லையே. பாவம்!

*
* *

பிள்ளை.—அப்பா! நேத்திக்கு ஒரு நல்ல சொப்பனங்கண்டேன். அப்போ, அம்மா வந்து நேக்கு ஒரு குஞ்சாலாடு வாங்கிக் கொடுத்தா. நீ வந்து ஒரு ஜிலேபி வாங்கிக் குடுத்தே, இன்னிக்கு வாங்கித் தா அப்பா!

தகப்பனார்.—அடே மடையா! சொப்பனம் என்ன காண்கிறோமோ அதற்கு நேர்விரோதமா யல்லவா நடக்கும்?

பையன்.—இவ்வளவுதானே. யாரு எது வாங்கித்தந்தா எனக்கென்ன? நேர்விரோதமாய் நீ குஞ்சாலாடு வாங்கித்தா, அம்மா ஜிலேபி வாங்கித்தரட்டும்.

*
* *

ராமன்.-என்னடா ராமா அநியாயமாயிருக்கு! நம்ம பள்ளிக்கூடத்திலே பொஸ்தகத்தையெல்லாம் வச்சுக்கிண்டு எல்லாருக்கும் கொடுக்கிறாரே அவர் லைப்ரேரியன்னாம். நம்பகிட்டெல்லாம் சம்பளத்தை வசூல்பண்ணி, சம்பளம் குடுக்காட்டா வெளீலேவெரட்டறானே அவன் ரைட்டராம். மரியாதையைப்பார்த்தயோனா.

நடேசன்.— பூ, இவ்வளவுதானே. நாம்ப இன்னமே, நிறையபொஸ்தகமெல்லாங்குடுக்கிறாரே, அவரெ லைப்ரேரியர் என்று கூப்பிடலாம். பள்ளிக்கூடத்தைவிட்டு வெரட்டறானே அவனெ ரைட்டன் என்கலாம். அதாண்டா சரி.

*
* *

நாட்டுக்கோட்டை செட்டியார்:—வக்கீலய்யாவா? வாங்க! வாங்க! இங்ஙனே குந்துங்க. என்ன நூத்தி எளுவத்தி அஞ்சு ரூபாய்க்கி பில் அனுப்புச்சிரிக்கீங்க?

| | | |
|---|---|---|
| 1. | கொள்ளு மூட்டை வாகின் சார்ஜ் | 16-8-0 |
| 12. | பேடண்டு மெடிஸன் | 19-4-6 |
| | | 35-12-6 |

இந்த 35-12-6-க்கு என்ன கணக்கு?

வக்கீல்.—அதுவா! என்னுடைய குதிரைக்குக் கொள்ளு மூட்டை இரண்டு அனுப்பினீர்களோனோ! அதுக்கு ரயில் சார்ஜ் ரூ 16-8-0 கொடுத்தேன். கொள்ளு சிலாக்கியமாயிருந்தபடியால் கொஞ்சம் சுண்டல் செய்து சாப்பிட்டேன். பேதியாயிற்று—கொள்ளு அவ்வளவு உயர்தரமல்லபோ லிருக்கிறது—தங்கள் கேஸ் அன்றைக்குத்தான் ஈராங்கி. உடனே பேடண்டு மெடிஸன் வாங்கிச் சாப்பிட்டுவிட்டு கோர்ட்டுக்குப் போகவேண்டியதாயிற்று. அது தான் இந்தச் சில்லரை ரூ 19-4-6.

*
* *

தெனாலிராமன்.— ஏன் அய்யா! ஒரு நாளைக்கு எத்தனை குதிரைசெய்வீர்? பழுவெல்லாம் பொறுத்தப்பட்டு இந்தக் குதிரை அநேகமாய்ச் செய்தாய்விட்டது போலிருக்கே. ஏ அப்பா, நல்ல லாபம் வரும்.

கருமான்.—(நகைத்து) உமக்குப் பயித்தியமாவென்ன? என்ன உளறுகிறீர்!

தெனாலிராமன்.—எனக்கா தெரியாது நீர் செய்கிற வியாபாரம்? பின் எதற்காக அதோ அந்தத் தளவாடங்கள் அடுக்கடுக்காய் வைக்கப்பட்டிருக்கின்றன. அதோ குதிரைபோன்ற அந்த இரும்புக்கூடு என்ன?

கருமான்.—பேஷ்! என்ன புத்தி! அதோ அடுக்கப்பட்டிருப்பவைஏத்தச்சால்கள்; அடுத்தது பூண்போடவேண்டிய உலக்கைகளும், ஏற்கால்களும்; அவைகளுக்குப்பக்கத்திலிருப்பவை ஜன்னற் கம்பிகள். அதோ குதிரை போன்ற அந்த இரும்புக்கூடு ஜட்காவண்டிக் குதிரை. நல்ல கவனம் பண்ணினீர்.

* *
*





பெரியதனக்காரன்.—ஏண்டா நச்சு! இங்கே கன்னுக்குட்டி போச்சா? நீ பார்த்தாயா?

நச்சு.—கெழக்கத்திக் கன்னுதானே. அந்த நெத்திச்சுட்டி நேர்வடுவாக் கன்னுதானே. பொய்யில்லை நெஜந்தான். எல்லாரும் பாத்தாளே. இப்படித்தான் போச்சு நேத்திக்கு. பாவம்! செத்துப்போச்சு. நேமத்துக் கன்னுக்குட்டியாம்.

பெரியதனக்காரன்.—அந்த எழவெ யாருடா கேட்டா யிப்போ? நம்ம கன்னுக்குட்டி இப்போ இப்புடி வயல்லே போச்சாமேடா!

நச்சு.—இல்லை. நான் பார்க்கல்லே.

*
* *

உபாத்தியாயர்.—யாரடா அது, பார்த்தனா? என்ன நுழைநரிபோல் வந்து உட்காருகிறாய்? ஏண்டா இவ்வளவு நாழி?

பையன்.—நான் என்ன ஸார் பண்ணரது? தெருவெல்லாம் மழைபெய்து ஓரே சரக்கலாயிருக்கிறது. ஓரடி மின்னாலே வச்சா ரெண்டடி பின்னாலே வழுக்கிறது.

உபாத்தியாயர்.—அப்படியா? நீ சொல்லுகிறபடியிருந்தால் நீ இங்கே வந்திருக்கவே முடியாதே.

பையன்.—ஆமா! ஆமா! அப்படித்தான் இரண்டடி நடந்துபார்த்தேன். பிறகு பின்னாலே திரும்பி நடக்க ஆரம்பித்தேன்.

*
* *

கடன்கொடுத்தவன். — ரொம்ப நாளாச்சு; இப்போ கொடுத்தால் தேவலை. ஓங்ககிட்டே பணம் இப்போ பொழக்கமாய் இருக்கென்று கேள்விப்பட்டேன்.

கடனாளி.—ஆம் ஐயா! பணம் இருக்கு. உமக்கு என்ன பயம்? சீட்டுத்தான் இருக்கே. சீட்டுநோட்டு ஒன்றும் எழுதிக்கொடுக்காமல் ரொம்பபேர் கிட்டே வாய்ப்பேச்சில் பணம்வாங்கியிருக்கிறேன். அதைக் கொடுத்துவிட்டு உமக்குக் கொடுக்கிறேன்.

கடன்கொடுத்தவன்.—அப்படியா? இதோ சீட்டைக் கிழித்தெறிந்து விட்டேன்.

கடனாளி.—இனிமேல் ஒரு நிமிஷங்கூட தாமதிக்கமாட்டேன். இந்தாரும் பணம்!

# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(232-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஐந்தாம் அத்தியாயம்

### மாணிக்கலாலனது தந்திரம்

மாணிக்கலாலன் அந்தப் பருவதத்தின் கணவாய் மார்க்கத்திலிருந்து இறங்கி, குதிரையை விரட்டிக்கொண்டு ரூபநகரத்துக் கோட்டை போய்ச் சேர்ந்தான். ரூபநகரத்தரசனுக்கு சில சிப்பாய்க ளிருந்தார்கள். அவர்கள் சம்பளத்துக்கு வேலை செய்பவரல்ல. விவசாய ஜீவனம் உள்ளோர். வேண்டியபொழுது கூப்பிட்டால், தடி, கத்தி, கோடரி முதலியன எடுத்துக் கொண்டு வருவார்கள். ஒவ்வொருவனுக்கும் ஒவ்வொரு குதிரையுண்டு. மொகலாய சேனை ரூபநகரத்துக்கு வந்தபொழுது அரசன் பறையடித்து அவர்களைச் சேர்த்திருந்தான். மொகலாய சேனைக்கு மரியாதை செய்வதற்காகவும் தங்கள்தேசத்தின் கௌரவத்திற்காகவும்பட்டணத்துக்கு அவர்கள் வரவழைக்கப்பட்டதாக வெளியிற் சொல்லிக்கொள்ளப்பட்டது. உண்மையாக மொகலாய சேனையினால் ஏதாவது தொந்தரவுண்டானால் அதைநிவாரணம்செய்துகொள்வதற்காகசேர்க்கப்பட்டது. அரசன் கூப்பிட்டதும், அவர்கள் கோல், கத்தி முதலானவைகளை எடுத்துக்கொண்டு வந்துசேர்ந்தார்கள். வந்தபிறகு இராஜன் தன் ஆயுதசாலையிலிருந்து அவர்களுக்கெல்லாம்ஆயுதங்கள் கொடுத்தான். அவர்களுக்கு அநேகவிதமான வேலைகள் கொடுக்கப்பட்டன. மொகலாய சேனையருடன் கலந்து அவர்கள் அங்கிருந்தவரையில் வெகு ஆநந்தத்துடன் காலத்தைப் போக்கினார்கள். இப்பொழுது இராஜகுமாரியை யழைத்துக் கொண்டு சேனை புறப்பட்டவுடன் அவர்கள் தங்கள் தங்கள் வீட்டுக்குப் புறப்படுவதற்காக அரசனிடம் உத்தரவு வாங்கிக்கொண்டார்கள். அவர்கள் ஆயுதங்களைக் கொடுத்துவிட்டு, அரசனிடம் மரியாதை பெற்றுக்கொண்டு, குதிரை மேலேறுகிற சமயத்தில் மாணிக்கலாலன் வியர்க்க வியர்க்க குதிரையை விரட்டிக் கொண்டுவந்து நின்றான்.

மாணிக்கலாலன் முன்போல் மொகலாய உடுப்புத் தரித்துக்கொண் டிருந்தான். மொகலாய சைனியத்தான் இந்த நிலைமையில் வருவது கண்டு எல்லாரும் ஆச்சரியப்பட்டார்கள். அரசன் என்ன சமாசாரமென்று கேட்டான்.

மாணிக்கலாலன் சலாம் செய்து, 'மகாராஜா! வெகு கஷ்டமாயிற்று. ஆயிரம் பேர்கள் கள்வர்கள் வந்து இராஜகுமாரத்தியை அபகரித்துக்கொண்டார்கள். ஹஸனல்லி கான் பகதூர் என்னைத் தங்களிடம் அனுப்பியிருக்கிறார்கள். அவர் பிராணனில் ஆசையில்லாமல் யுத்தம் செய்துகொண்டிருக்கிறார். ஆகையினால் இன்னும் சைனியம் வேண்டும். அதில்லாமல் பிழைப்பது கஷ்டம், தங்கள் சைனியத்தின் சகாயத்தை விரும்புகிறார்" என்றான்.

அரசன் வருத்தத்துடன் "கடவுள் கிருபையினால் தன் சிப்பாய்கள் தயாராயிருக்கிறார்கள்" என்று நினைத்துக்கொண்டு, அவர்களைப் பார்த்து, "உங்கள் குதிரைகள் தயாராயிருக்கின்றன. ஆயுதங்கள் இன்னும் கையிலிருக்கிறது. நீங்கள் இப்பொழுதே அங்கே போகவேண்டும். நானே உங்களுடன் வருகிறேன்" என்றான்.

மாணிக்கலாலன் "மன்னிக்கவேண்டும். தயவு செய்து என் வார்த்தையைக் கேட்கவேண்டும். உத்தரவானால் இவர்களை அழைத்துக்கொண்டு நான் முன்னே போகிறேன். மகாராஜா இன்னும் ஆட்களைச் சேகரித்துக்கொண்டுவரலாம். கள்வர் ஐந்தாறு ஆயிரம் இருக்கிறார்கள் போல் தோன்றுகிறது. சேனை அதிகமில்லாமற் போனால் ஜயிப்பது கஷ்டம்" என்றான்.

ஸ்தூலபுத்தியுள்ள அரசன் அதற்கொப்புக்கொண்டான். அந்த ஆயிரம் பேர்களையுமழைத்துக்கொண்டு மாணிக்கலாலன் முன்னால் புறப்பட்டான். அரசன் இன்னும் ஆட்கள் சேர்ப்பதற்காக கோட்டையில் நின்றான். மாணிக்கலாலன் அச்சிப்பாய்களுடன் இரணகளத்தை நோக்கிப் புறப்பட்டான்.

மாணிக்கலாலன் இரஸ்தாவில் போகும்பொழுது அவனுக்கு ஒரு லாபமுண்டாயிற்று. மார்க்கத்தில் ஒரு மரத்தின்நிழலில் ஒரு ஸ்திரீ படுத்திருந்தாள். குதிரைக்காரர் போவதைக்கண்டு எழுந்து நின்றாள். ஏதோ துக்கமடைந்தவள்போலத் தோன்றிற்று. மாணிக்கலாலன் அவளைப் பார்த்து குதிரையை விட்டிறங்கி அவள் சமீபத்திற் போனான். மாணிக்கலாலன் "யாரம்மா? இங்கே எதற்காகப் படுத்துக் கொண்டிருந்தாய்?" என்று கேட்டான்.

யுவதி.—தாங்கள் யாரைச் சேர்ந்தவர்கள்?

மாணிக்க.—நான் ராணா ராஜஸிம்ஹன் சேவகன்.

யுவதி.—நான் ரூபநகரத்திய இராஜகுமாரத்தியின் தோழி.

மாணிக்க.—அப்படியானால் இந்த நிலைமை ஏன்?

யுவதி.—இராஜ குமாரத்தியை டில்லிக்கழைத்துப் போகிறார்கள். நானும் கூட வருகிறேனென்றுசொன்னேன். ஆனால் அவள் என்னை விட்டுவிட்டுப் போய்விட்டாள். அதனால் அவளிருக்கிற விடத்துக்கு நடந்துபோகிறேன்.

மாணிக்க.—நீ நடந்து கால்வலியால் நடக்க முடியாமல் படுத்துக்கொண்டாயா?

நிர்மலை.—வெகுதூரம் நடந்துவந்தேன். இனி முடியாது. கடந்தவழி அதிகதூரமில்லை.

நிர்மலை இதுவரையில் நடந்தவளல்ல. அவளுக்கு அது வெகு தூரமாய்த் தோன்றிற்று.

மாணிக்க.—அப்படியானால் என்ன செய்யப் போகிறாய்?

நிர்மலை.—செய்கிறதென்ன? செத்துப்போகிறேன் இங்கேயே.

மாணிக்க.—எதற்காகச் சாகிறது? இராஜகுமாரத்தியிடம் போகப்படாதோ?

நிர்மலை.—போகிறதெப்படி? நடக்க முடியாது.

மாணிக்க.—குதிரைமேல் ஏறிக்கொள்ளப் படாதோ?

நிர்மலை.—(நகைத்து) குதிரைமேலே!

மாணிக்க.—ஆமாம், குதிரைமேலே! கஷ்டமென்ன?

நிர்மலை.—எனக்குச் சவாரிசெய்யத் தெரியுமோ?

மாணிக்க.— தெரியவேண்டுமென்கிற அவசியமில்லை.

நிர்மலை.—ஆக்ஷேபனையில்லை. ஆனால் ஒரு கஷ்டமிருக்கிறது. குதிரைமேல் ஏறத் தெரியாது.

மாணிக்க.— இது ஒரு கஷ்டமா? என் குதிரைமேல் ஏறிக்கொள்ளுகிறாயா? நான் பிடித்துக்கொள்ளுகிறேன்.





நிர்மலை சங்கோசமில்லாமல் விநோதமாய்ப் பேசிக்கொண்டிருந்தாள். இப்பொழுது முகத்தைத் திருப்பிக்கொண்டு கோபங்கொண்டு, "நீர் உம்முடைய வேலைக்குப்போம். நான் என் மரத்தடியில் விழுந்து கிடக்கிறேன். இராஜகுமாரத்தியைப் பார்த்து எனக்காகவேண்டுவது ஒன்றுமில்லை" என்றாள்.

மாணிக்கலாலன் ஸ்திரீ வெகு அழகு என்று கண்டு ஆசையை யடக்கமுடியாமல், "அம்மா உனக்கு விவாகமாயிற்றோ?" என்றான்.

நிர்மலை மாணிக்கலாலனைப் பார்த்து நகைத்து, 'இல்லை' என்றாள்.

மாணிக்க.— நீ என்ன ஜாதி?

நிர்மலை.— நான் ரஜபுத்திர ஸ்திரீ.

மாணிக்க.—நான் ரஜபுத்திரன்; எனக்கும் பெண்ஜாதியில்லை. ஒரே ஒரு பெண் குழந்தை இருக்கிறது. நீ அதற்குத் தாயாகிறாயா? நான் விவாகம் செய்துகொள்ளுகிறேன். அப்படியானால் என்னுடன் குதிரைமேலேறி உட்காருவதற்கு ஆக்ஷேபனை என்ன?

நிர்மலை.—நீ ஆணையிட்டுக்கொடு!

மாணிக்க.— என்ன பிரமாணம் செய்யவேண்டும்?

நிர்மலை.—கத்தியைத் தொட்டுக்கொண்டு என்னைக் கலியாணம் பண்ணிக் கொள்ளுகிறேனென்று சொல்!

மாணிக்கலாலன், "நான் இன்று யுத்தத்தில் தப்பிப்பிழைத்தால் உன்னைக்கலியாணம் பண்ணிக்கொள்ளுகிறேன்" என்று பிரமாணம் செய்தான்.

நிர்மலை "அப்படியானால், நட! குதிரைமேலேறவேணும்" என்றாள்.

மாணிக்கலாலன் சந்தோஷத்துடன் நிர்மலையைக் குதிரைமேலேற்றி உட்காரவைத்துப் பிடித்துக்கொண்டு நிதானமாய்ப் போனான்.

## ஆறாம் அத்தியாயம்

## தந்திரத்தின் வெற்றி

யுத்தகளத்தில் ஒரு மறைவான இடத்தில் நிர்மலையைக் குதிரையிலிருந்திறக்கி அங்கேயே உட்கார்ந்திருக்கும்படி சொல்லிவிட்டு, ராஜஸிம்ஹனுடன் மபாரகன் யுத்தஞ்செய்யுமிடத்துக்குப் போய், மாணிக்கலாலன் மபாரகன் பின்னே நின்றுகொண்டான்.

மாணிக்கலாலனுக்கு அந்தப் பிரதேசத்தில் யுத்தம் நடக்கிறதாகவிருந்த விஷயம் தெரியாது.

ஆனால் சந்துமார்க்கத்தை இரண்டு பக்கங்களிலும் அடைத்துக்கொண்டு, ராஜஸிம்ஹன் வெளியே வரமுடியாமல் செய்துவிட்டு, அவன் சைனியத்தை அங்கேயே நாசஞ்செய்வார்கள் என்று நிச்சயித்து, உதவிக்கு சைனியம் கொண்டுவருவதற்காக ரூபநகரம்போய் அங்கிருந்து அவர்களை அழைத்துவந்து அங்கே நிறுத்தினான். வந்து பார்க்கவும் ரஜபுத்திரருக்குத் தொண்டையில் உயிரிருந்தது. யமன் சமீபத்தில் நெருங்கினான். அப்பொழுதுமாணிக்கலாலன் மபாரகன் சைனியத்தை விரலினால் காண்பித்து, ரூபநகரத்துச் சிப்பாய்களைப் பார்த்து, "இவர்களே கள்வர். இவர்களை அடித்துப் போடுங்கள்" என்றான்.

அவர்களிற் சிலர், "அவர் முஸல்மானரல்லவா?" என்றார்கள்.

மாணிக்கலாலன், "துருக்கர்கள் கள்வர்களாவதில்லையோ? இந்துக்களால் அவ்வளவு கெடுதி செய்யமுடியுமா? அடியுங்கள்!" என்றான்.

மாணிக்கலாலன் உத்தரவுப் பிரகாரம், ஒரே தடவையில் ஆயிரம் துப்பாக்கிகள் சுடப்பட்டன.

எங்கேயிருந்து சிப்பாய்கள் வந்து அடிக்கிறார்களென்று மபாரகன் திரும்பிப் பார்த்தான். மொகலாயர் நடுநடுங்கி மறுபடியும் யுத்தம் செய்யவில்லை. மபாரகனுக்கு அவர்களை ஓடாமல் நிறுத்தமுடியவில்லை. அப்பொழுது ரஜபுத்திரர், 'அம்மனுக்கு ஜயம்!' என்று கூவிக்கொண்டு அவர்களைத் துரத்த வாரம்பித்தார்கள்.

மபாரகன் சைனியம் சின்னாபின்னமாய் குன்றின்மேலேறி நாலா பக்கங்களிலும் ஓடவாரம்பித்தது. ரூபநகரத்துச் சிப்பாய்கள் அவர்களைத் துரத்திக்கொண்டு குன்றின்மேலேறினார்கள். மபாரகன் அவர்களைத் திருப்பிக்கொண்டுவரப் பிரயத்தனம் செய்தவன் எங்கே போனானோ தெரியவில்லை.

இச்சமயத்தில் நடந்ததை ஆச்சரியத்துடன். பார்த்துக்கொண்டிருந்த ராஜஸிம்ஹனது பக்கத்தில்வந்து மாணிக்கலாலன் பிரணமம் செய்தான். ராஜஸிம்ஹன், "இதென்ன வியாபாரம்? ஒன்றும் தெரியவில்லையே." உனக்கேதாவது தெரியுமா!" என்று கேட்டான்.

மாணிக்கலாலன் நகைத்து, "தாங்கள் ரந்திரத்துக்குள் பிரவேசித்தவுடன் பெரிய ஆபத்து வந்ததென்று தெரிந்துகொண்டு பிரபுவின் பிராண ரக்ஷணைக்காக ஓடிப்போய் வேறொரு வஞ்சனைக் காரியம் செய்துவந்தேன்" என்று சொல்லி நடந்த விருத்தாந்தத்தை யெல்லாம் சுருக்கமாய்ச் சொன்னான். ராஜஸிம்ஹன் ஆநந்தத்துடன் மாணிக்கலாலனை ஆலிங்கனம் செய்துகொண்டு, "மாணிக்கலாலா! நீயே உண்மையான பக்தியுள்ளவன்! நீ செய்த காரியத்துக்குத் தக்க மரியாதை உதயபுரிக்குப் போகும் போதே செய்கிறேன். ஆனால் உன்னால் நமக்கு ஒரு நல்ல சமயம் வீண்போயிற்று. இன்றையதினம் ரஜபுத்திரர் என்ன செய்துவிட்டு செத்துப்போவார்களென்று மொகலாயருக்கு காண்பிப்பதா யிருந்தோம்" என்றான்.

மாணிக்க.—மகாராஜ் மொகலாயருக்கு அந்தப்பாடம் சொல்லிக்கொடுப்பதற்குத் தங்கள் சேவகர்கள் அநேகம்பேர்க ளிருக்கிறார்கள். இப்பொழுது உதயபுரத்து மார்க்கத்தில் ஒருவிதமான அபாயமுமில்லை. இராஜதானியை விட்டுக், குன்றுகளில் எதற்காக இருக்கவேண்டும்? இப்படி இராஜகுமாரத்தியை யழைத்துக்கொண்டு சுதேசத்துக்குத் தயவுசெய்து புறப்படவேண்டும்.

ராஜஸிம்ஹன்.—நம்முடன் வந்தவரில் சிலர் பருவதத்தின்மே லிருக்கிறார்கள். அவர்களை இறக்கி யழைத்துவரவேண்டும்.

மாணிக்க.— நான் அவர்களைக் கூப்பிட்டுக் கொண்டு வருகிறேன். தாங்கள் முந்தியே தயவு செய்து புறப்படவேண்டும்.

ராணா சஞ்சலகுமாரியுடன் உதயபுர முகமாய்ப் புறப்பட்டுப் போனான்.

## ஏழாம் அத்தியாயம்

## நிர்மலையின் மனம்

ராணா புறப்பட்டுப் போனவுடன் மாணிக்கலாலன் ரூபநகரத்துச் சிப்பாய்களின் பின்னே பருவதத்தின்மே லேறினான். மொகலாயர் அடிபட்டு அகப்பட்ட வழியில் ஓடிப்போனார்கள். அப்போது மாணிக்கலாலன் ரூபநகரத்தாரைப் பார்த்து, "சத்துருக்கள் ஓடிப்போனார்கள். இனி ஏன் சிரமப்படவேண்டும்? காரியம் சித்தியாயிற்று. பின்திரும்பி ரூபநகரம் போங்கள்" என்றான். அவர்கள் சத்துருக்கள் ஒருவருமில்லையென்று தெரிந்துகொண்டாலும், நடந்துபோன விஷயத்தில் இனிமேல் என்ன செய்கிறதென்று கொண்டு அங்கே அகப்பட்டதை லூட்டிசெய்து வேண்டுமளவு திரவியத்தை யெடுத்துக்கொண்டு வெகு சந்தோஷத்துடன் ஜயக்கொடியுடன் தங்கள் ஊர்ப்பக்கம் திரும்பினார்கள். ஒருமணி நேரத்துக்கெல்லாம் பருவத மார்க்கத்தில் மனிதரே இல்லை. கேவலம் செத்தவர், அடிபட்டவர், அவர்கள் குதிரைகள் மாத்திரம் விழுந்திருப்பதைக் கண்டு, குன்றின்மே லிருந்துகொண்டு ஒருவருக்கும் தெரியாமல் கல்மழை பொழிந்த ரஜபுத்திரர்கள் இறங்கிவந்து, எங்கும் ஒருவருமில்லாதது கண்டு, ராணா மிஞ்சியிருந்தவர்களை யழைத்துக்கொண்டு உதயபுரம் போயிருக்கவேண்டுமென்று நினைத்துக்கொண்டு அவனைத்தேடிக்கொண்டு உதயபுரம் போனார்கள். போகும்போது வழியில் ராஜஸிம்ஹனைக் கண்டுகொண்டார்கள். எல்லோரும் உதயபுரம் புறப்பட்டுப் போனார்கள்.

மாணிக்கலாலன் மாத்திரம் போகவில்லை. அவன் நிர்மலையை யழைத்துக்கொண்டு போவதற்குப் பிரயத்தனம் செய்துகொண்டிருந்தான், எல்லோருக்கும் என்னென்னவோ சொல்லியனுப்பிவிட்டு நிர்மலையினிடம் வந்து அவளுக்குப்போஜனஞ்செய்வித்து அக்கிராமத்திலிருந்து ஒரு பல்லக்கும் போகிகளும் தருவித்தான். நிர்மலை தோலியில் உட்கார்ந்து கொண்டாள். நிர்மலையுடன் தன் அத்தையின் ஊருக்கு வந்தான். அத்தையைக் கூப்பிட்டு, "அத்தை ஒரு நாட்டுப்பெண்கொண்டுவந்திருக்கிறேன்" என்றான். நாட்டுப்பெண்ணைக் கண்டவுடன் அத்தைக்குக் கொஞ்சம்முகம் சுண்டிற்று. 'இவன் இரண்டு மோகரா எனக்குக் கொடுத்து வருகிறான். அவன்பெண்டாட்டி வந்தால் அவளுக்கு ஒருவேளை அன்னம்போடாமல் எப்படி யனுப்புகிறது?' என்று நினைத்துக்கொண்டு, "நாட்டுப் பெண் தேவலை" யென்றாள்.

மாணிக்க.—இன்னும்கலியாண மாகவில்லை.

அத்தை—அதென்ன? அப்படியானால் நம்ம வீட்டில்—

மாணிக்க.—அந்த யோசனை எதற்காக? நீயே கலியாணம் செய்துவை. இன்றே ஆகட்டும்.

அத்தை.—ரொம்ப சந்தோஷம். உனக்குக் கலியாணம் செய்துவைக்காமல் வேறு யாருக்

நன்றாய் இருந்தாம் நல்விசுட்ட பணிகாரம்.



குச் செய்துவைக்கிறது? ஆனால் கொஞ்சம் செலவு ஆகுமே.

மாணிக்க.—அதைப்பற்றி யோசிக்கவேண்டாம்.

யுத்தமானவுடன் கொள்ளையடிப்பது வழக்கமென்று எல்லாருக்கும் தெரிந்திருக்கலாம். மாணிக்கலாலன் யுத்தபூமியிலிருந்து வரும்பொழுது மொகலாய சேனையிலிருந்து அகப்பட்டதை எடுத்துக்கொண்டு வந்திருந்தான். அதில் சில மோகராக்களை எடுத்து அத்தைக்குமுன் வைத்தான். அத்தை வெகு ஆனந்தத்துடன் பணத்தையெல்லாம் எடுத்துக்கொண்டு, கல்யாணக்காரியம் செய்யத்தொடங்கினாள். விவாகத்துக்குப் புஷ்ப சந்தனமும் புரோகிதனும் தருவித்தான்.

மாணிக்கலாலன் சாஸ்திரப்பிரகாரம் நிர்மலைக்குப் பதியானான்.

மாணிக்கலாலன் ராணாவின் சைனியத்தில் ஒரு பெரிய பதவியை யடைந்து தன் புத்தி சாதுரியத்தால் எங்கும் மரியாதை யடைந்தானென்று சொல்லவேண்டிய அவசியமில்லை.

---

## ஐந்தாம் பாகம்

## முதல் அத்தியாயம்

## மபாரகனும் தரியாவும்

மபாரகன் ரணகளத்திலிருந்து எங்கேயோ மறைந்து போனானென்று முன்னமே சொல்லியிருக்கிறோம். அதற்குக் காரணமென்னவென்றால்: அவன் குதிரையின்மே லேறிக் கொண்டு தன் சைனியத்தாதரை அழைத்துக் கொண்டு போகும்போது மார்க்கத்தில் ஒரு கிணறு இருந்தது. பருவதத்தின்மேல் வாசம் செய்தவர் யாரோ தண்ணீருக்காக வெட்டியது. செடி கொடிகள் வளர்ந்து கிணற்றின் வாய் மூடிப் போயிருந்தது. மபாரகன் அதை யறியாமல் குதிரையை விட்டுக்கொண்டு வந்தான். குதிரையுடன் அதில் விழுந்து மறைந்தான். கிணற்றில் நீரில்லை. ஆனால் விழுந்த அடியினால் குதிரை செத்துப்போயிற்று. விழுந்த காலத்தில் வெகு ஜாக்கிரதையா யிருந்ததால் மபாரகனுக்குக் காயம் அதிகமில்லை, கிணற்றிலிருந்து மேலே வருவதற்கு உபாயமில்லை. யாராவது வந்து மேலே தூக்குவார்களென்ற எண்ணத்துடன் உள்ளேயிருந்து உரத்துச் சத்தமிட்டான். ஆனால் யுத்தகோலாகலத்தில் ஒருவருக்கும் சத்தம் கேட்கவில்லை. ஒரு தடவைமாத்திரம் தூரத்திலிருந்து 'தைரியமாயிரு! நான் தூக்கிவிடுகிறேன்!' என்று கேட்டது. அதுவும் சந்தேகம்.

யுத்தம் முடிந்தவுடன் மெல்ல யாரோ கிணற்றின் அடியில் வந்து "உயிரோடிருக்கிறாயா?" என்று கேட்டார்.

மபாரகன்.—இருக்கிறேன், நீ யார்?

மேலிருந்தவர்.—நான் யாராயிருந்தா லென்ன? காயம் ஜாஸ்தியோ?

மபாரகன்.—சாதாரணமா யிருக்கிறது. அடி ஜாஸ்தியில்லை.

மேலிருந்தவர்.—நான் நாலு ஐந்து கட்டைகளை வஸ்திரத்தைக் கயிறுபோல் கிழித்து கட்டி கீழேவிடுகிறேன். நீ கட்டையை இரண்டு கைகளினாலும் கெட்டியாய்ப்பிடித்துக்கொண்டால் நான் மேலே இழுத்துவிடுகிறேன்.

மபாரகன் ஆச்சரியப்பட்டு, "இதென்ன? ஸ்திரீயின் குரல்போல் தோன்றுகிறது! நீ யார்?" என்றான்?

ஸ்திரீ.—குரல் உனக்குத் தெரியவில்லையா?

மபாரகன்.—தெரிந்தது, தரியா! நீ எங்கிருந்து இங்கே வந்தாய்!

தரியா "உனக்காகவே வந்தேன். இப்போது இழுக்கிறேன் ஏறு" என்று சொல்லி, கட்டின கட்டைகளை கிணற்றுக்குள் விட்டாள். கத்தியினால் கிணற்றின் வாயில் படர்ந்திருந்த செடி கொடிகளை வெட்டியெறிந்து மபாரகன் கட்டைகளைப் பிடித்துக்கொண்டவுடன் மேலே இழுத்தாள். ஆனால் பலம் போதவில்லை. அப்பொழுது அவள் அதன்மேலே போட்டிருந்த குறுக்குமரத்தின் மேலாக வஸ்திரக்கயிற்றைப் போட்டு தண்ணீர் இழுக்கிறதுபோல் இழுத்தாள். மபாரகன் மேலே வந்து தரியாவைப்பார்த்து ஆச்சரியப்பட்டு, இதென்ன வேஷம்?" என்றான்.

தரியா.—பாதுஷாவின் சிப்பாய்.

மபார.—எதற்காக?

தரியா.—உனக்காக.

மபார.—எதற்காக?

தரியா.—இல்லாவிட்டால் இவ்வளவு நேரம் உன்னை யார் காப்பாற்றியிருப்பார்கள்?

மபார.—அதற்காகவா நீ டில்லியிலிருந்து இங்கே வந்தது? அதற்காக இந்த வேஷம்

நாடு அறிந்த பார்ப்பானுக்குப் பூணூல் வேண்டுமோ?

போட்டுக்கொண்டாயா? இதென்ன இரத்தம்!—உனக்குக் காயமாயிற்றே? ஏன் இப்படிச் செய்தாய்?

தரியா.—உனக்காகத்தான் செய்தேன். செய்திராவிட்டால் நீ இப்பொழுது பிழைத்திருப்பாயா? ஜேப உன்னீஸாவுக்கு இவ்வளவு பிரீதி உன்னிடத்திலிருக்கிறதா?

மபாரகன் முகம் வாடி "ஜேப உன்னீஸாவுக்கு இவ்வளவு பிரீதியில்லை" என்றான்.

தரியா.—நாங்கள் ஏழை. ஆதலால் பிரீதி மனத்தில் உண்டு. இங்கேயே உட்கார்ந்து கொள். உனக்காகப் பல்லக்குக்குச் சொல்லியிருக்கிறேன். காயப்பட்டதனால் குதிரையின் மேல் உன்னால் உட்காரமுடியாது.

யுத்தத்தில் மொகலாய சேனையில் தோலிகள் இருந்தன. சண்டை பயத்தினால் போகிகள் ஓடவாரம்பித்துக் கொண்டிருந்தார்கள். தரியா மபாரகன் கிணற்றில் விழுந்ததையறிந்து இரண்டு பல்லக்குகளைப் போகிகளுடன் தயார் செய்து வைத்திருந்தாள். அவர்களை இப்பொழுது அழைத்துவந்தாள். ஒன்றில் மபாரகனை உட்காரவைத்து மற்றொன்றில் தான் உட்கார்ந்துகொண்டு டில்லிமார்க்கமாய்ப்புறப்பட்டான். பல்லக்கில் உட்காரும்போது மபாரகன் தரியாவை முத்தமிட்டுக்கொண்டு, "இனி உன்னை நான் கை விடுவதில்லை" என்றான்.

கொஞ்சதூரம் வந்து சேர்ந்து, தரியா மபாரகனுக்கு உபசாரங்கள் செய்தாள். அவள் சிகிச்சையினால் அவனுக்குக் கொஞ்ச மாரோக்கிய முண்டாயிற்று.

டில்லி சேர்ந்தவுடன், மபாரகன் தரியா கையைப் பிடித்துக்கொண்டு தன் வீட்டுக்குப் போனான். சிலநாள் இருவரும் வெகு சுகமாய் காலங்கழித்தார்கள். பிறகு அந்தச் சுகத்துக்குப் பிரதியாக உண்டான பலன் பயங்கரமாயிருந்தது. தரியாவுக்கும் பயங்கரமா யிருந்தது. மபாரகனுக்கும் பயங்கரமா யிருந்தது. அவுரங்கசீபுக்கும் ஆபத்தை விளைவித்தது. அதைப் பின்னே சொல்லுவோம். இப்பொழுது சஞ்சலகுமாரியின் விஷயமாய்ச் சொல்லவேண்டிய விஷயங்கள் சில உண்டு.

### இரண்டாம் அத்தியாயம்

### சஞ்சலையின் வார்த்தை

ராஜஸிம்ஹன் உதயபுரம் வந்துசேர்ந்தானென்று முன்னமே சொன்னோம். சஞ்சலகுமாரியைக் காப்பாற்றுவதற்காக யுத்தமாயிற்று. அவளை இரக்ஷித்து அழைத்துக்கொண்டு போய்த் தன் அரண்மனையில் இருக்கும்படி செய்தான். ஆனால் அவளை உதயபுரத்தில்வைத்துக்கொள்ளுகிறதா? ரூபநகரத்துக்கு அவள் தகப்பனாரிடமனுப்பிவிடுகிறதா என்கிற விஷயம் தீர்மானம்பண்ணுவது கஷ்டமா யிருந்தது. இந்த விஷயத்தைக் குறித்து ஆலோசனை செய்துகொண்டிருக்கும் பொழுது அவன் சஞ்சலையைப் பார்க்கவேயில்லை.

இதற்குள் சஞ்சலை ராணாவின் நடத்தையைப் பார்த்து ஆச்சரியப்பட்டு 'எல்லாவற்றையும் பார்க்கும்பொழுது ராணா என்னை விவாகம் பண்ணிக்கொள்ளுவதாகத் தோன்றவில்லை. அப்படி அவர் விவாகம் செய்துகொள்ளாவிடில், நான் எதற்காக அவர் அரண்மனையில் இருக்கவேணும்? போகவேண்டியதாயிருந்தாலும் எங்கேதான் போகிறது?' என்று யோசித்துக்கொண் டிருந்தாள்.

ராஜஸிம்ஹன் தீர்மானம் ஒன்றும் செய்ய முடியாதவனாய்ச் சில நாட்கள் சென்றவுடன், சஞ்சலகுமாரியின் அபிப்பிராயத்தை அறிவதற்காக அவளிருக்குமிடத்துக்கு வந்தான். அங்கே போகும்பொழுது, சஞ்சலை அநந்த மிசிரனுடன் அனுப்பித்த காகிதத்தையும் எடுத்துக்கொண்டு போனான்.

ராணா ஒரு ஆசனத்தி லுட்கார்ந்தவுடன் சஞ்சலை வந்தனம் செய்துவிட்டு வெட்கத்துடனும் வணக்கத்துடனும் ஒருபக்கமாய் நின்றுகொண்டிருந்தாள். பார்வைக்கு ரதி போலிருந்த அவள் தேக காந்தியைப்பார்த்து அரசன் மயங்கினான். ஆனால் அப்பொழுது தன் மனத்தை யடக்கிக்கொண்டு "ராஜகுமாரி! உன்னுடைய அபிப்பிராயம் என்னவென்று தெரிந்து கொள்ளுவதற்காக வந்தேன். உன் பிறந்தகத்திற்குப் போகிறதற்கு இஷ்டமோ? இல்லாவிட்டால் இங்கே இருக்கிறதற்கு இஷ்டமோ? உனக்கு என்ன இஷ்டம்" என்றான்.

இதுகேட்ட சஞ்சலகுமாரியின் வாயிலிருந்து ஒருவிதமான வார்த்தையும் வெளிப்படவில்லை. ஒன்றும் பேசாமல் மௌனமாயிருந்தாள்.

அப்பொழுது அரசன் சஞ்சலகுமாரியின் காகிதத்தை யெடுத்து அவளுக்குக் காண்பித்து "இது நீ எழுதிய கடிதமோ?" என்றான்.

நாடு எங்கும் வாழந்தால் கேடு ஒன்றும் இல்லை.



சஞ்சலை.—ஆமாம்.

ராணா.—ஆனால் ஆரம்பமும் முடிவும் ஒரே மாதிரியில்லை. இரண்டு பேர்கள் சேர்ந்து எழுதினதுபோல் தோன்றுகிறது. உன் கையால் எழுதினது எது?

சஞ்சலை.—முதற்பாகம் என் கையெழுத்து.

ராணா.—அப்படியானால் கடைசிப் பாகம் வேறொருவர் எழுதினதோ?

இந்தக் கடைசிப் பாகத்திலேயே விவாகத்தின் பிரஸ்தாபம் எழுதியிருந்ததென்று வாசிப்பவர்களுக்கு ஞாபகமிருக்கலாம். சஞ்சலகுமாரி, "நான் அதை எழுதவில்லை" என்றாள்.

ராணா.—ஆனால் உன்னுடைய சம்மதத்துடன் எழுதினதோ?

சஞ்சலை.—க்ஷத்திரியர் விவாகத்துக்காகவே கன்னிகாஹரணம் செய்வார்கள். வேறு உத்தேசத்தினால் கன்னிகாஹரணம் செய்வது மகா பாபம். பெரிய பாபத்தைச் செய்யும்படி தங்களுக்கு எப்படிச் சொல்லக்கூடும்?

ராணா.—நான் உன்னை ஹரணம் செய்யவில்லை. உன்னுடைய ஜாதிகுலத்தை இரக்ஷிப்பதற்காக முஸல்மானர் கையிலிருந்து உன்னை இரக்ஷித்தேன். இப்போது உன்னை உன் தந்தை வீட்டுக்கு அனுப்புவது ராஜதர்மம் என்று தோன்றுகிறது.

சஞ்சலகுமாரி கொஞ்சம் நாணமடைந்தாள். பிறகு நிமிர்ந்து ராஜஸிம்ஹன் முகத்தைப் பார்த்து, "மஹாராஜா! தங்கள் ராஜதருமம் தங்களுக்குத்தெரிந்திருக்கவேண்டும். என்னுடைய தருமம் எனக்குத் தெரியும். எப்பொழுது நான் தங்கள் பாதங்களில் என்னுடைய ஆத்மாவைச் சரணமாகக் கொடுத்தேனோ அப்பொழுதே தருமப்பிரகாரம் நான் தங்களுக்குப் பாரியையானேன். தாங்கள் என்னை அங்கீகரித்தாலும் சரி, விட்டுவிட்டாலும் சரி, தருமப் பிரகாரம் நான் வேறு ஒரு பர்த்தாவையும் வரிக்கக் கூடாது. தாங்கள் என்னுடைய பர்த்தாவானதால் தங்களுடைய உத்தரவுப்படி நான் நடக்கச் சித்தமாயிருக்கிறேன். தாங்கள் என்னை ரூபநகரத்துக்குப் போகும்படி உத்தரவு செய்தால் போகிறேன். அங்கேபோனால் என் தகப்பனார் மறுபடியும் என்னைப் பாதுஷாவினிடம் அனுப்பவேண்டியதாய் வரும். ஏனென்றால், அவரால் என்னை இரக்ஷிக்கமுடியாது. அப்படியே தங்களுக்கிஷ்டமிருந்தால் 'நான் டில்லிக்குப்போகிறேன். உத்தரவு கொடுக்கவேண்டும்,' என்று யுத்தகளத்திலேயே வேண்டிக்கொண்டேனே. ஏன் தாங்கள் நான் போகாதபடி தடைசெய்தீர்" என்றாள்.

ராஜஸிம்ஹன்.—அது என்னுடைய மானத்தையும் உன்னுடைய மானத்தையும் இரக்ஷிப்பதற்காக.

சஞ்சலை.—அப்படியானால் தங்களைச் சரணமடைந்தவளை மறுபடியும் டில்லிக்குப்போகும்படி பார்ப்பீர்களா?

ராஜஸிம்ஹன்.—அது ஆகாது. அப்படியானால் நீ இங்கேயே இருக்கலாம்.

சஞ்சலை.—விருந்தாளியைப் போலிருக்கிறதா? தாசியாயிருக்கிறதா? ரூபநகரத்தின் கன்னிகை மகிஷியாயில்லாமல் வேறுவிதமாயிருக்கமுடியாது.

ராஜஸிம்ஹன். — உன்னைப்போலொத்த லோகமோகினியான சுந்தரி எந்த ராஜனுக்கு மகிஷியாயிருக்கிறாளோ அப்பேர்ப்பட்ட ராஜனை எல்லாரும் மகா பாக்கியவானென்று சொல்வார்கள். நீ இப்பேர்ப்பட்ட நிகரில்லாத ரூபவதியாயிருப்பதினாலேயே உன்னை விவாகஞ்செய்து கொள்வதற்கு சங்கோசமாயிருந்தேன். சாஸ்திரத்தில் ரூபவதியாகிய பாரியை சத்துரு என்று சொல்லியிருக்கிறதல்லவா?

சஞ்சலகுமாரி கொஞ்சம் நகைத்து, "நான் சிறு பெண். நான் பேசுவதில் பிசகிருந்தால் மன்னிக்கவேண்டும். உதயபுரத்து ராஜமகிஷிகளெல்லாரும் குரூபிகளோ?" என்றாள்.

ராஜஸிம்ஹன்.—உன்னைப்போல் சுந்தரிகளொருவருமில்லை.

சஞ்சலை.—நான் இப்பொழுது சொல்வதைத் தங்கள் மகிஷிகளுடன் சொல்லக் கூடாதென்று வேண்டிக்கொள்ளுகிறேன். மகாராணா ராஜஸிம்ஹனும்கூடப் பயப்படத்தக்க ஸ்தலமுண்டோ?

ராஜஸிம்ஹன் உரக்கச் சிரித்தான். சஞ்சலகுமாரி அதுவரையில் நின்றுகொண்டிருந்தவள் உட்கார்ந்துகொண்டு மனத்தில் 'இனி ராணா என்வசமானார். என்விஷயத்தில் இவர் மகாராணா ராஜஸிம்ஹனில்லை. இப்போது இவர் என்னுடைய பதி,' என்று நினைத்துக் கொண்டாள்.

உட்கார்ந்துகொண்டு, சஞ்சலகுமாரி, "மகாராஜா! தங்கள் உத்தரவில்லாமல் எதிரில் நான்

காடு காடாயிற்று, காடு கழனி ஆயிற்று.

உட்கார்ந்துகொண்டதற்கு மன்னிக்கவேண்டும். ஏனென்றால், தங்களிடத்தில் ஞானோபதேசம் செய்துகொள்ளுவதற்காக உட்கார்ந்துகொண்டேன். சிஷ்யனுக்கு உட்கார்ந்துகொள்ள அதிகாரமுண்டு. மகாராஜ், ரூபவதியாயுள்ள பத்தினி சத்துருவாவது எப்படி? தயவுசெய்து சொல்லவேண்டும்'' என்றாள்.

ராஜஸிம்ஹன்.—அதைச் சுலபமாய்ச் சொல்லக்கூடும். பாரியை ரூபவதியாயிருந்தால், அவள்பொருட்டு மனஸ்தாபம் முதலானதுண்டாகின்றது. இதோபார்! நீ இன்னும் எனக்குப் பாரியையாகவில்லை. ஆனால் அதற்குள் எனக்கும் அவுரங்கசீபுக்கும் உன்பொருட்டு விவாதமுண்டாயிற்று. நம்முடைய வம்சத்தில் பத்மினியின் சரித்திரம் கேட்டிருக்கிறாயல்லவா?

சஞ்சலை.—ரிஷிவாக்கியத்தில் எனக்கு அதிக நம்பிக்கை யுண்டாகவில்லை. சுந்தரிகளான மகிஷிகளில்லாவிட்டால் அரசர்களுக்குச் சண்டைகள் உண்டாவதில்லையா?

ராஜஸிம்ஹன்.—இன்னும் ஒன்று சொல்லலாம். ரூபவதியான பாரியையினிடத்தில் புருஷன் மோகமடைகிறான். இது இராஜாக்களுக்கு கேடு விளைவிக்கும், ஏனென்றால், அதனால் இராஜ காரியத்துக்கு அட்டி உண்டாகிறது.

சஞ்சலை.—மகாராஜாக்கள் அநேகம் மகிஷிகள் மத்தியிலிருந்தாலும் ராஜகாரியங்களை மறந்துவிடுவார்களோ? என்னைப் போன்ற ஒரு பெண்ணுக்காக மகாராணா ராஜஸிம்ஹன் தன் இராஜகிருத்தியங்களை மறந்துவிடுவாரென்பது நம்பத்தக்க வார்த்தையாகுமோ?

ராஜஸிம்ஹன்.—அவ்வளவு நம்பக்கூடாததல்ல. சாஸ்திரத்தில் "விருத்தஸ்ய தருணீ விஷம்" என்று சொல்லியிருக்கிறது.

சஞ்சலை.—மகாராஜா விருத்தரோ?

ராஜஸிம்ஹன்.—யுவா புருஷனல்ல.

சஞ்சலை.—எவனுக்குப் பலமும் தைரியமும் உண்டோ அவனே ரஜபுத்திர கன்னிகைகளுக்கு யுவ புருஷனவன். பலஹீனனான யுவாவை விருத்தனாகத்தான் எண்ணுவோம். மற்றதெல்லாம் அதிருஷ்டவசம்!

ராஜஸிம்ஹன்.— ரூபவானையும், பலமுள்ளவனையும், யுவ புருஷனையும் எத்தனையோ ரஜபுத்திரர்களிருக்கிறார்கள்.

சஞ்சலை.—இருக்கட்டும். நான் தங்களிடத்தில் என் ஆத்துமாவைச் சரணமாகக் கொடுத்திருக்கிறேன். வேறொருவனுக்குப் பத்தினியானால் துர்நடத்தையுள்ளவளாவேன். நான் மிகவும் வெட்கமில்லாமல் தங்களுடன் பேசுகிறேன். ஆனால் தாங்கள் யோசிக்க வேண்டுவது என்னவென்றால்—துஷ்யந்தனால் தள்ளிவிடப்பட்ட சகுந்தலை லஜ்ஜையை விடும்படியாயிற்று. அதே நிலைமை எனக்கு முண்டாயிருக்கிறது. தாங்கள் என்னைத் தள்ளிவிட்டால் நான் ராஜஸமந்திரத்தில்(ராஜஸிம்ஹன் கட்டுவித்த புஷ்கரணியின் பெயர்) விழுந்து பிராணத்தியாகம் செய்யவேண்டும்.

ராஜஸிம்ஹன் வாக்குவாதத்தில் தோற்றவனாய்— 'நீ எனக்குத்தக்க மஹிஷி. நீ ஆபத்தில் விழுந்திருந்த பொழுது என்னைப் பதியாக விரும்பியிருக்கலாமென்றும் இந்த வயதில் என்மேல் உனக்குப் பிரீதி இருக்குமோ இல்லையோவென்றும் எனக்குச் சந்தேகங்கள் இருந்தன. அந்தச் சந்தேகங்கள் இதுவரையிலும் நடந்த வார்த்தைகளால் தீர்ந்து போயின. நீ என்னுடைய மஹிஷியாவாய். உன்னுடைய தகப்பனுக்கு இஷ்டமோ இல்லையோ என்று தெரிந்துகொள்ள வேண்டுமென்றிருக்கிறேன். உன்னுடைய தந்தையின் இஷ்டமில்லாமல் உன்னை விவாகம் செய்துகொள்வது சரியல்ல. அதற்குக் காரணமென்னவென்றால், உன்னுடைய தந்தையின் ராஜ்யம் சிறியதாயிருந்தாலும் சைனியமும், ஸ்வல்பமாயிருந்தாலும், விக்கிரமஸிம்ஹன் மகா வீர புருஷனென்றும் மகாசேனைக்குத் தலைவனாகக் கூடியவனென்றும் பிரசித்தனாயிருக்கிறான். எப்படியும் மொகலாயருடன் சண்டை நான் செய்தே தீரவேண்டியிருக்கும். அப்படியிருக்கும் பக்ஷத்தில் உன்னுடைய தந்தையின் உதவி எனக்கு வெகு உபயோகமாயிருக்கும். அவர் உத்தரவில்லாமல் நான் உன்னைக் கலியாணம் செய்துகொண்டால், அவர் ஒரு நாளும் எனக்கு உதவி செய்யமாட்டார். மொகலாயருடன் சேர்ந்து எனக்குச் சத்துருவாயும் ஆகலாம். அது யுக்தமல்ல. ஆதலால் அவருக்கு ஒரு காகிதமெழுதி அவருடைய அனுமதிபெற்றுப் பிறகு உன்னைக் கலியாணம் செய்துகொள்ளுகிறேன். அவர் சம்மதிப்பாரோ மாட்டாரோ?'' என்று கேட்டான்.

நனைந்த கிழவன் வந்தால் உலர்ந்த விறகுக்குச் சேதம்.



சஞ்சலை.—சம்மதிக்காமலிருக்கிறதற்குக் காரணமொன்றுமில்லை. தாய்தந்தையர்களின் ஆசீர்வாதத்துடன் தங்கள் பாத ஸேவை விரதத்தைத் தொடங்குவது எனக்கும் இஷ்டந்தான். ஜனங்களை அனுப்புவது சரியே.

அப்பொழுது ராஜஸிம்ஹன் வணக்கமாய் ஒரு காகிதமெழுதி ஒரு தூதன் கையில் கொடுத்து விக்கிரமஸிம்ஹனிடமனுப்பினான். சஞ்சலகுமாரியும் தாயின் ஆசீர்வாதத்துக்காக ஒரு காகிதமெழுதி யனுப்பினாள்.

## மூன்றாம் அத்தியாயம்

## விக்கிரமஸிம்ஹனது பதிற்கடிதம்

ரூபநகரத் தரசனுடைய பதில் கடிதம் சரியான காலத்தில் வந்துசேர்ந்தது. பதில் மிகவும் பயங்கரமாயிருந்தது. ராஜஸிம்ஹனுக்கு வந்த கடிதம் பின் வருமாறு இருந்தது. "தாங்கள் ராஜஸ்தானத்துக்குத் தலைவர்; ராஜபுதன தேசத்துக்குக் கிரீடம் போன்றவர். இப்பொழுது ரஜபுத்திரன் என்கிற பெயருக்குத் தோஷம் உண்டுபண்ணத் தயாராயிருக்கிறீர். தாங்கள் தங்கள் சைனியத்துடன் பலாத்காரமாய் என் பெண்ணை அபகரித்துக் கொண்டு போயிருக்கிறீர். என் பெண் பூலோக மகிஷியாயிருந்திருப்பாள். அதற்கு நீர் விக்கினமாய் நின்றீர். தங்களிடத்தில் இப்பொழுது நான் வைரம் கொண்டாடும்படி யாயிற்று. என்னுடைய அனுமதியுடன் நீர் என் மகளை விவாகம் செய்யமுடியாது".

"பூர்வகாலத்தில் க்ஷத்திரியகுலத்தில் வீர புருஷர்கள் அநேகர் கன்னிகாபஹரணம் செய்து விவாகம் செய்து கொண்டிருக்கிறார்களென்றும், பீஷ்மர், அர்ஜுனன், மற்றும் ஸாக்ஷாத் ஸ்ரீகிருஷ்ணன் இவர்கள் கன்னிகைகளை அபகரித்துப்போனார்களென்றும் நீங்கள் சொல்லலாம். ஆனால் அப்படிப்பட்ட பலம், வீரியம், சௌரியம் தங்களுக்கு எங்கேயிருக்கிறது? தங்கள் தோள்களில் அப்பேர்ப்பட்ட பலமிருந்திருந்தால் மொகலாய பாதுஷாக்கள் ஹிந்துஸ்தானத்திற்கு வந்திருக்கமாட்டார்களே. நரிகள் சிம்மத்தைப்போலிருக்கவேண்டுமென்றால் முடியுமோ? நான் ரஜபுத்திரன். முஸல்மானருக்குக் கன்னிகாதானம் செய்வதால் கௌரவம் விருத்தியாகாதென்று தெரியும். ஆனால் அப்படிச் செய்யாவிட்டால் ரூபநகரத்துக் கோட்டையில் ஒரு கல்கூட மிஞ்சாது. நான் என்னைக் காப்பாற்றிக் கொள்ளும்படி நேரிட்டால் எனக்குச் சகாயம் யார் செய்வார்? தமக்கு அப்பேர்ப்பட்ட சக்தி யுண்டென்று தெரிந்தால் அப்போது பார்த்துக்கொள்வோம்; தங்களுக்குக் கன்னிகாதானம் செய்தாலும் செய்கிறேன்."

"பூர்வகாலத்தில் இராஜாக்கள் கன்னிகாபஹரணம் செய்து விவாகம் செய்வது வழக்கமுண்டு என்பது நிஜந்தான். ஆனால் இப்பேர்ப்பட்ட சாதுரியமான பொய் ஒருவரும் சொன்னதில்லை. தாங்கள் எனக்குத் தூதனையனுப்பி என்னுடைய சைனியத்தைக் கொண்டுபோய் என் பெண்ணை அபஹரணம் செய்தீர். இல்லாவிட்டால் தங்களுக்கு இந்தக் காரியம் முடிந்திராது. இதனால் எனக்கு எவ்வளவு துன்பத்தை விளைவித்தீர்? யோசித்துப் பார்க்க வேண்டும். மொகலாய பாதுஷா என்னவென்று நினைப்பான்? என்னுடைய மோசத்தால் என்னுடைய சைனியமே போய் யுத்தம் செய்து கன்னிகையைப் பற்றிக்கொண்டதாகவல்லவா நினைப்பான்? அதனால் முதலில் ரூபநகரத்தை நாசஞ்செய்து, பிற்பாடு உம்மைத் தண்டிக்க வாரம்பிப்பான். எனக்கும் யுத்தம் செய்யத் தெரியும். ஆனால் மொகலாயரின் லக்ஷலக்ஷக்கணக்கான சைனியத்தின் முன்பு யாரால் நிற்கமுடியும்? அதனால்தான் ரஜபுத்திரரெல்லாம் அவனுக்குள்ளடங்கி யிருக்கிறார்கள். அவன்முன்பு நான் எவ்வளவு?"

"பாதுஷாவுக்கு நடந்த விருத்தாந்தத்தை யதார்த்தமாய்ச் சொன்னாலும் பிரயோசனமில்லை. தாங்கள் என் பெண்ணைக் கலியாணம் செய்துகொண்டிருந்தால் பாதுஷாவுக்கு அப்பெண்ணை மறுபடியும் கொடுக்கமுடியாது. அப்போது எனக்கும் என் மகளுக்கும் தப்பித்துக்கொள்வதற்கு உபாயமே இராது."

"தாங்கள் என் பெண்ணை விவாகம் செய்துகொள்ளக்கூடாது. செய்துகொண்டால் நான் இடுகிற சாபத்துக்குப் பாத்திரமாவீர். என் பெண் கணவனையிழந்து குழந்தைகளில்லாமல் போகவேண்டுமென்று சபித்துவிடுவேன். பின்னும் தங்கள் ராஜதானியும் நாய்நரிகளுக்கு வாஸஸ்தலமாகட்டும்."

விக்கிரமஸிம்ஹன் இந்தப் பயங்கரமான வார்த்தைகளை யெழுதி, பிற்பாடு கடைசியில்



நாட்டுக்கு நல்ல துரை வந்தாலும், தோட்டிக்குப் புல் சுமை போகாது.

ஒரு வரியில் "தாங்கள் எப்பொழுது என் மகளுக்குத் தக்க வீரன் என்று அறிவதற்குக் காரணமுண்டாகிறதோ, அப்போது பூரண மனத்துடன் தங்களுக்குக் கன்னிகாதானம் செய்து கொடுக்கிறேன்" என்று எழுதிக் காகிதத்தை முடித்தான்.

சஞ்சலகுமாரியின் தாயார் காகிதத்துக்கு யாதொரு பதிலும் கொடுக்கவில்லை. ராஜஸிம்ஹன் அவள் தகப்பனாரின் காகிதத்தை வாசித்துக் காண்பித்தான். சஞ்சலகுமாரி ஒன்றும் பதில் சொல்ல முடியாமல் மயங்கினாள்.

பிறகு ராஜஸிம்ஹன் "இப்பொழுது என்ன செய்கிறது? விவாகம் செய்துகொள்வது சரியாகுமோ?" என்று கேட்டான்.

சஞ்சலகுமாரி கண்ணிலிருந்து ஒருசொட்டு நீர் விட்டு, "தகப்பனார் சாபத்தைத் தலையில் தாங்கிக்கொண்டெந்தப்பெண் தான் கலியாணம் செய்துகொள்ளத் துணிவாள்?" என்றாள்.

ராணா.—அப்படியானால் தகப்பனார் அரண்மனைக்குப்போக இஷ்டமிருந்தால் அனுப்புகிறேன்.

சஞ்சல.—சரிதான். அப்படித்தான் செய்ய வேண்டும். ஆனால் தாய் வீட்டுக்குப் போவதும் டில்லிக்குப் போவதும் ஒன்றே. அதைக் காட்டிலும் விஷபானம் செய்வது கெட்டதோ?

ராணா.—நான் சொல்லுவதைக் கேள். நீ எனக்குத் தகுந்த மகிஷி. நான் உன்னை விட்டிருக்கமாட்டேன். ஆனால் உன் தந்தையின் ஆசீர்வாதமில்லாமல் உன்னைப் பாணிக்கிரகணம் செய்துகொள்ளக்கூடாது. அவருடைய ஆசீர்வாதம் கிடைக்குமென்ற நம்பிக்கை என் மனத்தில் உண்டு. மொகலாயருடன் யுத்தம் நடப்பது நிச்சயம். மகாதேவனே எனக்கு சகாயம். அந்த யுத்தத்தில் மொகலாயரைத் தோற்கடிக்கவேண்டும். இல்லாவிட்டால் சாகவேண்டும். இது இரண்டு தவிர வேறு முடிவு இல்லை.

சஞ்சலை.—தாங்கள் மொகலாயரைத் தோற்கடிப்பீர்களென்று எனக்கு நிச்சயமான நம்பிக்கையுண்டு.

ராணா.—ஆனால் அது கஷ்டஸாத்தியம். ஜயித்தால் உன் தகப்பனாரின் ஆசீர்வாதம் கிடைக்கும்.

சஞ்சலை.—அதுவரையில்?

ராணா.—நீ என்னுடைய அந்தப்புரத்திலிரு. மற்ற மகிஷிகளுக்குப்போல் உனக்கும் ஒரு அரண்மனை கட்டுவிக்கிறேன். தாசிமார்கள் சகல உபசாரங்களுஞ் செய்வார்கள். நீ கொஞ்ச நாளுக்குள் மகிஷியாவாயென்று பிரசித்தம் செய்விக்கிறேன். சாஸ்திரோக்தமாய் விவாகம் ஆகிறவரைக்கும் நான் உன்னை வந்து பார்ப்பதில்லை. இதற்கு என்ன சொல்லுகிறாய்?

சஞ்சலை யோசித்துப்பார்த்து அதைக் காட்டிலும் வேறு உபாயம் ஒன்றும் சரியாகத் தோன்றவில்லை யென்று சொல்லி ஒப்புக்கொண்டாள். ராஜஸிம்ஹன் தான் சொல்லிய பிரகாரம் ஏற்பாடுகள் செய்வித்தான்.

### நான்காம் அத்தியாயம்
### தோழிகள் சம்பாஷணை

சஞ்சலகுமாரி ராஜமகிஷியானாளா வென்று நிர்மலை மாணிக்கலாலனைக் கேட்டாள். எப்பொழுது கலியாணமாயிற்று? கலியாணமாயிற்றோ இல்லையோ. அந்த விஷயங்கள் அவனால் சொல்லக்கூடவில்லை. நிர்மலை தானே சஞ்சலகுமாரியைப் பார்ப்பதற்காகப்புறப்பட்டு வந்தாள்.

நிர்மலையைப் பார்த்து வெகு நாளானதால் சஞ்சலகுமாரி மிக்க ஆனந்தமடைந்தாள். நிர்மலை தானும் கூடவருகிறேனென்று எவ்வளவு சொல்லியும் சஞ்சலை ஒத்துக்கொள்ளவில்லை. ரூபநகரத்தை விட்டு வந்தநாள் முதற்கொண்டு நடந்த சங்கதிகளை யெல்லாம் ஒருவருக்கொருவர் சொல்லிக்கொண்டார்கள். நிர்மலையின் சுக சௌபாக்கிய வார்த்தையைக் கேட்டு சஞ்சலை சந்தோஷமடைந்தாள். சுகம்—ஏனென்றால் மாணிக்கலாலன் ராணாவின் அரண்மனையில் அநேக பட்டங்கள் பெற்றிருந்தான். பணமும் சேர்த்திருந்தான். ராணாவின் அனுக்கிரகத்தால் சைனியத்தில் உன்னத பதவியை யடைந்திருந்தான். வெகு கௌரவமுள்ள உத்தியோகஸ்தன். நிர்மலைக்கு அரண்மனை போன்ற பெரிய மாடி வீடு—பணம், காசு—வேலைக்காரர் முதலிய எல்லாம் கிடைத்திருந்தது. பின்னும் மாணிக்கலாலன் அவள் சொன்னபடியெல்லாம் கேட்டான். பின் வேறு சுகம் என்ன வேண்டும்? ஆனால் நிர்மலை சஞ்சலையின் துக்கத்தைக் கேட்டு வருத்தப்பட்டாள். சஞ்சலையின் தாய் தகப்பனாரையும் ராஜஸிம்ஹனையும் வெறுத்துக்கொண்

நாணும் கால் கோணும், நடக்கும் கால் இடறும்.



டாள்; சஞ்சலகுமாரியையும் கோபித்துக் கொண்டாள். ராஜஸிம்ஹனைக்கண்டால் இரண்டொரு வார்த்தை கேட்கவேண்டுமென்று பிரதிக்ஞை செய்துகொண்டாள். சஞ்சலகுமாரி, "அதெல்லாம் அப்படியிருக்கட்டும். என்னோடுகூடத் தெரிந்தவர் யாருமில்லை. நம்ம மனுஷியாள் என்று சொல்லக்கூடியவர் ஒருவருமில்லை. இப்படி என்றால் இங்கே இருக்க முடியவில்லை. இங்கே சுவாமியே உன்னை கூப்பிட்டுக்கொண்டு வந்து விட்டிருக்கிறார். உன்னைப் போக விடமாட்டேன். நீ என்னோடுகூட இங்கேயே இருக்கவேண்டும்" என்றாள்.

அது கேட்டதும் நிர்மலைக்குக் கொஞ்சம் மனக்கலக்க முண்டாயிற்று. இப்போதுதான் எல்லாம் புதிது புதிதாய் வந்திருக்கிறது. பர்த்தா புதிது, சுகம் புதிது. இவைகளை யெல்லாம் விட்டுவிட்டு சஞ்சலகுமாரியோடு கூட இருக்கிறதெப்படி? நிர்மலைக்கு உடனே ஒப்புக்கொள்ள முடியவில்லை. பொய்ச்சாக்குச் சொல்லுகிறதற்கும் இஷ்டம் இல்லை. உள்ள சங்கதியைத் திறந்து சொல்வதும் கஷ்டம். "அதைப் பற்றிப்பின்னாலே சொல்லுகிறேன்" என்றாள்.

சஞ்சலை கொஞ்சம் கண்ணீர்விட்டு மனத்தில் "நிர்மலை என்னைக் கைவிட்டுவிட்டாள்; பகவானே! நீரும் கைவிடக்கூடாது" என்று நினைத்துக்கொண்டு, பிறகு சிரித்துக்கொண்டு, "நீ ரூபநகரத்திலிருந்து எனக்காகக் கால் நடையாய் நடந்துவந்து வழியில் சாகிறதற்குத் தயாராயிருந்தாயே—இப்போ?—இப்போது பர்த்தாவி னுடையவளாய் விட்டாய்!" என்றாள்.

நிர்மலை கொஞ்சம் வெட்கமடைந்து மனத்துக்குள் தன்னைத்தானே நிந்தித்துக்கொண்டு "யாரை எஜமானனாகப் படைத்திருக்கிறேனோ அவனை ஒரு வார்த்தை கேட்க வேண்டும். அப்புறம் கழுத்தில் பெண் ஒன்று கட்டிக்கொண்டிருக்கிறேன். அதற்கு ஏதாவது ஒருவழி செய்துவிட்டு வரவேணும்" என்றாள்.

சஞ்சலை.—பெண் யார்? ஏன் இங்கே அழைத்துக்கொண்டு வரவில்லை?

நிர்மலை.—அதற்கு இங்கே என்ன வேலை? யாரோ அத்தையாம். ஒருத்தி இருக்கிறாள். அவளைக் கூப்பிட்டுக்கொண்டுவந்து வீட்டில் வைத்துவிட்டு வருகிறேன்.

இதற்குப் பிறகு நிர்மலை வீட்டுக்குப் புறப்பட்டுப்போனாள். வீட்டுக்குப் போய் மாணிக்கலாலனுக்கு சமாசாரமெல்லாம் தெரிவித்தாள். மாணிக்கலாலனுக்கு அவளை அனுப்புவது கஷ்டமாய்த் தோன்றிற்று. ஆனால் எஜமானனிடத்தில் பக்தியுள்ளவன். ஆக்ஷேபிக்கவில்லை. அத்தை வந்து வீட்டுக் காரியத்தை ஒப்புக்கொண்டாள்.

### ஐந்தாம் அத்தியாயம்
### ஜோஸ்யம் கேட்டல்

நிர்மலை பல்லக்கிலேறி வேலைக்காரிகளுடன் ராணாவின் அந்தப்புரத்திற்குப் புறப்பட்டுப் போனாள்.—மார்க்கத்தில் ஒரு பெரியவீடு. அந்த வீட்டின் வாசலில் பெரிய கூட்டம். சப்தத்தைக்கேட்டு பல்லக்கிலிருந்த நிர்மலை தாசிகளை என்னவென்று கேட்க, "அங்கே ஒரு ஜோஸ்யர் குறிபார்த்துச் சொல்லுகிறார். அநேக ஜனங்கள் வந்து கேட்டுக்கொண்டு போகிறார்கள். அவர் சொல்லுகிறபடியெல்லாம் சரியாய் நடக்கிறதாம்" என்று அவர்கள் சொன்னார்கள். உடனே மற்ற ஜனங்களை அவ்விடம்விட்டுப் போகும்படி செய்வித்து, வேலைக்காரர்களை தான் இன்னாரென்று ஒருவருக்கும் சொல்ல வேண்டாமென்று சொல்லி, பின்பு வீட்டுக்குட் சென்றாள்; போய் குறிகேட்கு மிடத்தில் உட்கார்ந்து கொண்டாள். ஜோஸ்யன் பிரணாமம் செய்து, அவள் கையில் ஏதோ ஒரு பதார்த்தத்தைக் கொடுத்து, அம்மா! "தங்கள் கேள்வி என்ன?" என்றான்.

நிர்மலை.—நான் சொல்கிறதைக்கவனித்துப் பார்த்துச் சொல்லவேணும்.

ஜோஸ்யன்.—கேள்வி என்ன? சொல்லுங்கள்.

நிர்மலை.—எனக்குத் தோழி ஒருவளிருக்கிறாள்.

ஜோஸ்யன்.—(ஏதோ அடையாளம் செய்துகொண்டு) அப்புறம்.

நிர்மலை.—அவளுக்கு இன்னும் கலியாணமாகவில்லை.

ஜோஸ்யன். —(முன்போலவே) அதற்கப்புறம்?

நிர்மலை.—அவளுக்கு எப்போது கலியாணம் நடக்கும்?

ஜோஸ்யன் மறுபடியும் ஏதோ எழுதிக்கொண்டான். குறிபார்க்க வாரம்பித்தான். நிர்மலையைப் பின்னும் சில கேள்விகள் கேட்டான். பின்னும் ஏதோ கோடுகள் கிழித்துப்

நாயும் வளர்த்து நரகலும் வாருவானேன்?

பார்த்தான். அநேக புத்தகங்களைத் தேடிப் பார்த்தான். கடைசியில் நிர்மலையினிடம் திரும்பிவந்து தலையை யாட்டினன்.

நிர்மலை.—கலியாண மாகாதோ?

ஜோஸ்யன்.—சாஸ்திரம் அநேகமாய் அப்படித்தான் சொல்லுகிறது.

நிர்மலை.—அதென்ன 'அநேகமாய்'?

ஜோஸ்யன்.—ஏக சக்ரவர்த்தியின் மகிஷியாயிருக்கிறவள் வந்து உன் சகிக்கு சேவை செய்தால், அப்போதுதான் விவாகமாகும். அது இல்லாவிட்டால் இல்லை. அது முடியாத காரியமானதால் விவாகமாகாதென்றே தீர்மானமாய்ச் சொல்லுகிறேன்.

நிர்மலை "அது நடக்காதுதான்" என்று சொல்லி, ஜோஸ்யனுக்குச் சன்மானம் கொடுத்து, பிறகு புறப்பட்டுப் போனாள்.

## ஆறும் அத்தியாயம்

## அவுரங்கசீப்பின் கோபாவேசம்

ரூபநகரத்தின் ராஜகுமாரியின் ஹரணசமாசாரம் டில்லி வந்து எட்டியது. டில்லியில் உடனே அதிகமான கோலாகலமுண்டாயிற்று. பாதுஷா அவுரங்கசீபு கோபத்தினால் மதி மயங்கி தன் சைனியத்தின் சேனாபதிகளில் சிலரை வேலையிலிருந்து தள்ளிவிட்டான். சிலருக்கு மரணதண்டனை விதித்தான். ஆனால் பிரதான குற்றவாளிகளான ராஜஸிம்ஹன், சஞ்சலகுமாரி இவர்களிருவருக்கும் அவ்வளவு சீக்கிரமாய்த் தண்டனை விதிப்பது கஷ்டமாயிருந்தது. ஏனென்றால், மீவார் ராஜ்யம் சிறியதாயிருந்தாலும், அது பருவதங்களால் எங்கும் சூழப்பட்டிருந்தது. நாலுதிக்குகளிலும்தாண்ட முடியாத பருவதங்கள் சூழ்ந்துகொண்டிருந்தன. ராஜபுத்திரரெல்லாரும் வீரபுருஷர்கள். மேலும் ராஜஸிம்ஹன் ஹிந்துவீர சூடாமணி. அப்பேர்ப்பட்ட ஸ்தலத்தில் ராஜபுத்திரர்கள் என்ன செய்யக்கூடியவரென்பதை பிரதாபஸிம்ஹன் அக்பர் பாதுஷாவுக்கு முன்னமே காண்பித்திருந்தான். அப்பொழுது பிரபஞ்சத்துக்குப் பாதுஷாவாயிருந்தவன் அடிப்பட்டுக் கள்ளனைப்போல் ஓடிப்போக வேண்டியதாயிருந்தது.

ஆனால் அவுரங்கசீப்பின் கோபம் சாதாரணமாய் அணையத்தக்கதல்ல. ஹிந்துக்களுக்குத் தீங்கு செய்வதற்கே அவன் பிறந்தவன். அவனுக்கு ஹிந்துக்களின் குற்றமே மிகவும் பொறுக்க முடியாதது. ஒரு ஹிந்து, மகாராஷ்டிர தேசத்தான், ஏற்கனவே பலதடவை அவமதித்திருந்தான். இப்பொழுது ராஜபுத்திரனும் அவமானம் செய்தான். மகாராஷ்டிரனுக்கு விசேஷமாய் ஒன்றும் செய்யமுடியாமல் போயிற்று. ராஜபுத்திரனுக்கும் பலாத்காரமாய் ஒன்றும் செய்யமுடியாது. ஆதலால் ராஜஸிம்ஹனுடைய அபராதத்துக்காக ஸமஸ்தமான ஹிந்து ஜாதியாருக்கும் உபத்திரவம் செய்யவேண்டும் என்கிற அபிப்பிராயமடைந்தான்.

முஸல்மானர் காலத்தில்மகாகஷ்டமான ஒரு வரி ஏற்பட்டிருந்தது. முஸல்மானர் அந்த வரி கொடுக்கவேண்டுவதில்லை. ஹிந்து ஜனங்கள் மாத்திரந்தான் அந்த வரி கொடுக்கவேண்டியவர்கள். அந்த வரியின் பெயர் "ஜாஸியா". இராஜநீதியை நன்றாயறிந்தவனான அக்பர் பாதுஷா இதனாலுண்டான கஷ்டத்தைத் தெரிந்துகொண்டு அதைத் தள்ளிப்போட்டான். இப்பொழுது ஹிந்துக்களின்பேரில் பகையுள்ள அவுரங்கசீபு அந்த வரியை மறுபடியும் ஏற்படுத்தி ஹிந்துக்களைத் தொந்தரவு செய்யவாரம்பித்தான்.

அவுரங்கசீப்பின் ஆதீனத்திலுள்ள ஹிந்துக்களெல்லாரும் ஜாஸியா வரி கொடுத்தார்கள். பிரமபுத்திர நதிமுதல் ஸிந்துநதி வரைக்குமுள்ள ஹிந்துக்களின் தேவதா விக்கிரகங்களெல்லாம் பொடிபண்ணப்பட்டன. வெகுகாலமாய் ஆகாயத்தை எட்டி நின்றுகொண்டிருந்த தேவாலயங்களெல்லாம் இடிக்கப்பட்டன. அவைகளிருந்த விடங்களில் பள்ளிவாசல்கள் நிர்மிக்கப்பட்டன. காசியில் விசுவேசுவரன் மந்திரம் நாசமாயிற்று. மதுராவில் கேசவாலயமும் அதேகதி யடைந்தது.

ராஜஸ்தானத்திலுள்ள ராஜபுத்திரர்களெல்லாரும் ஜாஸியா வரி கொடுக்கும்படியாயிற்று. ராஜபுத்திரர் அவுரங்கசீப்பின் பிரஜைகளல்லராலும் இந்துக்களென்கிற காரணங்கொண்டே இப்படி உத்தரவாயிற்று. முதலில் ராஜபுத்திரர் சம்மதிக்கவில்லை. உதயபுரம் தவிர மற்றவிடங்களிலுள்ள ராஜபுத்திரர்களெல்லாரும் மானுமியில்லாக் கப்பலைப்போல் திக்கற்றவரானார்கள். கீர்த்திபெற்றஜயஸிம்ஹன் அவுரங்கசீப்பின்தந்திரத்தாலும் கபடத்தாலும் விஷங் கொடுத்துக் கொல்லப்பட்டான். இளம்பிராயத்திலுள்ள அவன் மகன் டில்லியில் சிறையிலிருந்தான்.





ஆனதால் ஜயபுரத்தாரும் வரி கொடுத்தார்கள். யோதபுரத்தில் யசோவந்தஸிம்ஹன் லோகாந்தரமடைந்த காலமாயிருந்தது. அவன் இராணி இராஜப்பிரதிநிதியாயிருந்தாள். ஸ்திரீயானபோதிலும் வரிகொடுக்கச் சம்மதிக்கவில்லை. அவுரங்கசீப் யுத்தம்செய்யப் பிரயத்தனப்பட்டான். உடனே அவள் யுத்தத்துக்குப்பயந்து வரிக்குப் பதிலாக இராஜ்யத்தில் சில பாகத்தை விட்டுக் கொடுத்தாள்.

ராஜஸிம்ஹன் ஜாஸியா வரிகொடுக்கவில்லை. அந்த வரி விஷயமாய் அவன் அவுரங்கசீப்புக்கு ஒரு காகித மெழுதினன். இதைப்பற்றி ராஜஸ்தான் சரித்திரத்தி லெழுதியிருப்ப தென்னவென்றால் :—

The Rana remonstrated by letter, in the name of the nation of which he was the head, in a style of such uncompromising dignity, such lofty yet temperate resolve, so much of soul-stirring rebuke mingled with a boundless and tolerative benevolence, such elevating excess of the Divinity with such pure philanthropy, that it may challenge competition with any epistolary production of any age, clime or condition. Tod's Rajasthan, Vol. I, Page 381. *

*(இதன் மொழிபெயர்ப்பு மறுசஞ்சிகையில்வரும்.)

இந்தக் கடிதம் பாதுஷாவின் கோபாக்கினியில் நெய்யாகுதி செய்த மாதிரியாயிற்று.

பாதுஷா, ராஜஸிம்ஹன் ஜாஸியா வரி கொடுத்தே தீரவேண்டுமென்பதாயும், அவன் ராஜ்யத்திலுள்ள தேவாலயங்களை இடித்துவிடும்படியாயும் ஆக்ஞாபித்தான். ராஜஸிம்ஹன் யுத்தத்துக்குப்பிரயத்தனம்செய்யவாரம்பித்தான். அவுரங்கசீப்பும் யுத்தத்துக்குப் பிரயத்தினம் செய்ய வாரம்பித்தான். அப்பேர்ப்பட்ட பயங்கரமான பிரயத்தனம் அவன் அதுவரைக்கும் ஒருபொழுதும் செய்ததில்லை. சீன தேசத்தரசன் பாரசீக இராஜாவை எதிர்க்கவேண்டுமானால் எப்படிப்பட்ட பிரயத்தனஞ் செய்வானோ அதற்குமதிகமாய் இச்சிறிய ஒரு இராஜ்யத்தின் அரசனுடன் யுத்தத்துக்குத் தயார்செய்தான். உலகத்தில் பாதிக்கு அதிபதியான க்ஸர்க்ஸீஸ் (Xerxes) அற்பமான க்ரீஸ் ராஜ்யத்தை ஜயிப்பதற்குஎப்படி சைனியத்தைச் சேகரித்தானோ, அப்படியே அவுரங்கசீப்பும் ராஜஸிம்ஹனை எதிர்ப்பதற்காகமுயற்சிகளெல்லாம்செய்தான். கிரீஸ் தேசச் சரித்திரம் எல்லாருக்கும் உள்ளங்கை நெல்லிக்கனிபோல் தெரியும். ராஜஸிம்ஹன் சரித்திரம் நம் தேசத்தாரில் ஒருவருக்கும் தெரியாது. இக்காலத்திய படிப்பின் பலனும் இது.

# சிறுவர்களுக்கான பக்கங்கள்

## CHILDREN'S PAGES

வறுமையால் கஷ்டப்படும் சிறுவர்கள்தைரியத்தை இழந்து மனோவிசாரம் கொள்ளலாமா? கையிற் காசின்றி, தெரிந்த மனிதர்கள் யாருமின்றி கல்விக்காகப் பட்டணத்திற்கு வரும் சிறுவர்கள் எத்தனைபேர்கள்? இவர்கள் கஷ்டப்படுவது தம் பெற்றோரது ஆடம்பரத்தினாலும், அஜாக்கிரதையினாலுமேயன்றி இச்சிறுவர்களுடைய செய்கையாலன்று என அனைவரும் சொல்வர். ஆனால் இந்தச் சிறுவர்களும் அம்மாதிரி கஷ்டப்பட்டே தம் காலத்தைக் கழிக்க வேண்டுமா?, அல்லது செல்வமும் சிறப்பும் பெற முயன்று, பின்னாளில் சுகமாக இருப்பார்களா? எப்படியாவது கஷ்டப்பட்டு, நம் கடமையைச் செய்தால், நாம் முன்னுக்குவர முடியுமா? என்ற கேள்விகள் கஷ்டப்படும் சிறுவன் ஒவ்வொருவனுக்கும் தோன்றும்.

அதற்குப் பதில் ஒன்றே; கஷ்டப்படுவது என்றும் வீண்போகாது. கடவுள் கொடுத்த புத்தியைத் தகுந்தவழியே உபயோகித்து சத்திய நெறியைக் கைப்பற்றி யொழுகவேண்டும். ஊக்கமும் விடாமுயற்சியும் கைக்கொள்ள வேண்டும். சிறு கஷ்டங்களால் மனத்தளர்ச்சி யடைதல் கூடாது.

இவ்வளவு தைரியமாக நாம் கூறுவதற்குக் காரணங்க ளிருக்கின்றன. உலகத்தில் பல தேசங்களிலும், பெரியோர் பலர் ஏழ்மையினின்று முன்னுக்கு வந்திருக்கின்றனர். பெஞ்ஜமின் பிராங்க்லின் என்னும் அமெரிக்கனும், மற்றும் பலரும் தாம் சிறுவயதிற் பட்ட கஷ்டங்களைப் புத்தகமாக எழுதி வைத்திருக்கின்றனர். ஆகையால் பலர் பட்ட கஷ்டங்களை நாமும் படுகின்றோமே யன்றி, நமக்



162084

கென்று புதிதாகக் கஷ்டங்கள் உண்டாவது இல்லை. அவர்களைப்போலவே நாமும் கஷ்டப்படின், வறுமை நம்மை விட்டு நீங்குமென்பதற்கு ஐயமில்லை.

கஷ்டங்களுக்குப் பயப்படுவது அசட்டுத்தனம். கஷ்டங்கள் பல வந்தே தீரும். அவைகளைக் கண்டு பயப்படுபவர்களுக்கு அவை அதிகமாகவே தோன்றும். மருண்டவன் கண்ணுக்கு இருண்டதெல்லாம் பேய் அன்றோ? ஆனால் அவைகளை உற்றுநோக்கிப் பார்ப்பின் அக்கஷ்டங்கள் இருக்குமிடம் தெரியாமல் மறைந்துபோம்.

சென்னை ஹைகோர்ட்டிற்குள் நீ சென்றிருக்கிறாயா? அங்கே போயிருந்தால் ஸர் டி. முத்துஸ்வாமி அய்யர் என்பவருடைய சிலையை நீ பார்த்திருப்பாய்! ஏழைக்குடியில் பிறந்தவர் அவர். படிப்புக்காக மிகவும் கஷ்டப்பட்டவர். இப்பொழுதும் படிப்புக்காகக் கஷ்டப்படும் சிறுவர்கள் ஸர். டி. முத்துஸ்வாமி அய்யரை நினைவுக்குக் கொண்டுவந்து, அவரது வாழ்க்கையால் தைரியமடைந்து வாசித்து வருகின்றனர். ஏன்? அவர் சென்னையில் படிக்க வந்திருந்தபோது படிக்க இடமிராது, தீபம் வைத்துப் படிக்கப் பணமில்லாததினால் தெருவில் எரியும் முனிஸிபல் லாந்தரில் வாசித்து முன்னுக்கு வந்ததாகப் பெரியோர்சொல்வது வழக்கம். அவரைவிட அதிகமாக கஷ்டப்பட்டவர்களுண்டா? ஸர். டி. முத்துஸ்வாமி அய்யர் அவ்வாறுபடித்து, பிறகு ஹைகோர்ட்டில் ஜட்ஜாக இருந்தார். கஷ்டம் அவர் பட்டதில்லையா?

பம்பாய் ராஜதானியில் ஜாம்ஸெட்ஜீஜீஜீபாய் என்று ஒருவர் இருந்தார். அவர் சிறுவயதிலேயே வியாபாரம் செய்ய ஆரம்பித்தார். என்ன வியாபாரம் தெரியுமா? புட்டிகள்—கண்ணாடி சீஸாக்கள் வியாபாரம். இதை மூலதனமாக வைத்துக்கொண்டு அவற்றை விற்றுப் பணம் சம்பாதித்தார். பிறகு கஷ்டப்பட்டதினால் அவர் லக்ஷாதிகாரியாகி, ஜனங்களுக்குப் பலவித உதவிகளைச் செய்தார். அவருடைய நற்செயல்களுக்காக விக்டோரியா மஹாராணியார் பட்டங்கள் தந்தனர். அந்த இரண்டு சீஸாக்களுக்கு மேலில்லையா உன்னிடமிருக்கும் சொத்து—அவரைப்போல் தைரியம் உன்னிடமில்லையா?

காரியங்கள் ஆரம்பிக்கும்போது கஷ்டமாய்த்தானிருக்கும். ஆதரிப்பவர் ஒருவருமிருக்கமாட்டார்கள். ஆதலால் அதற்காக ஒருவன் பயப்படலாமா? கஷ்டம் வந்தாலென்ன? அவைகளைத் தாண்டுவதுகெட்டிக்காரத்தனம். கிராமபோன், டெலிபோன் முதலியவைகளைக் கண்டுபிடித்த எடிஸன் என்பவர் இளமையில் என்னவாயிருந்தார் தெரியுமா? அவர் அமெரிக்காவிலுள்ள ஐக்கிய மாகாணங்களில் பிறந்தவர். அவர் தாய்தந்தையர் மிகவும் ஏழைகளாதலால், எடிஸன் பள்ளிக்கூடத்தில் அதிககாலம் படிக்கவில்லை. ஐக்கிய மாகாணங்களில் கிழக்கேயிருந்து மேற்கே செல்லும் ரயில்வேயில் இவர் ஸமாசாரப் பத்திரிகைகளை விற்று வந்தனர்.

சாதாரணமாய் நம் தேசத்தில் ரயில்வே ஸ்டேஷன்களில் ஸமாசாரப் பத்திரிகைகளை "ஐயா இன்றையதினம் 'ஹிந்து' ஒரு அணா" "ந்யு இந்தியா ஒரு அணா" 'மெட்ராஸ் மெயில் ஒரு அணா' என்று விற்கும் சிறுவர்களுக்கும் தாமஸ் ஆல்வா எடிஸனுக்கும் ஒரு வித்தியாசமும் இராது. ஆனால் விடாமுயற்சி யுடையவராகையினாலும், முன்னுக்கு வரவேண்டுமென்ற பேரவாக் கொண்டவராகையினாலும், எடிஸன் தமக்கேற்பட்ட ஓய்வு நேரங்களில் தம் அறிவை விருத்திசெய்துகொண்டார். இம்மாதிரிதந்தியைப்பற்றின விஷயங்களையும்மின்சாரசக்தியைக் குறித்தும் ஆராய்ச்சிசெய்து கிராமபோன், போனகிராப் முதலிய புதிய யந்திரங்களை உண்டாக்கினார். உலகமெங்கும் அவரைப்போல் பெயர்பெற்றவர் எவருமில்லை.

டிக் விட்டிங்டன் என்னும் ஆங்கிலச் சிறுவனைப்பற்றிநீங்கள் வாசித்திருப்பீர்கள். அவன் பிழைக்க வழிதேடும் பொருட்டுத் தன் ஊரைவிட்டு லண்டன் நகரத்திற்குச் சென்றான். அங்கே ஓர் வர்த்தகனிடம் வேலையாளாக அமர்ந்து, தன் யோக்கியதையாலும், கஷ்டத்தினாலும் செல்வமடைந்து கடைசியாகத் தன் எஜமானனின் மகளைக் கலியாணஞ் செய்துகொண்டதுமன்றி, லண்டன் நகரத்து மேயர் (அதிபதி) பதவியும் பெற்றான்.

வறுமையைத்தாண்டி முன்னுக்கு வந்தவர்களன்றோ இவர்கள்! இவர்களைவிடப் பலவிதங்களிலும் சுகமாயிருக்கும் நம் சிறுவர்கள் கஷ்டப்படின் நல்ல நிலைமைக்கு வரமாட்டார்களோ?





# ஸ்திரீகளுக்கான பக்கங்கள்

## LADIES' PAGES

### உண்மை நேசம்

பாண்டிய நாட்டின் தலைநகராகிய மதுரையம்பதியில் மகிபதி என்றொரு வணிகனிருந்தான். அவன் வியாபார நிமித்தம் வடக்கே காஷ்மீர தேசத்துக்குப் போகவேண்டியிருந்தது. ஆனால் வீட்டில் தங்கியிருந்த அவன் மனைவி மக்களும், மற்றும் நண்பர்களும் எப்பொழுதும் அவன் ஞாபகமாகவே யிருந்தார்கள். இப்படியிருக்குங் காலத்தில் ஒரு நாள் அவ்வீட்டுக்குச் சிவப்பழம் என்று சொல்லத்தகும் ஓர் சாது அதிதியாக வந்தார். அவரை மகிபதியின் மனைவி உபசரித்து உண்டி யுதவினாள். யாது காரணம்பற்றியோ அதிதியின் க்ஷுபாதைமட்டும் நீங்கவில்லை. ஆயினும் அதை வெளியிடாமல், வீட்டின் தெருத்திண்ணையில் சிறிது படுத்துக் களைப்பாறச் சென்றவர், தம் பசி நீங்காமையின் காரணத்தை ஞானதிருஷ்டியா லுணர்ந்தார். மகிபதியின் மனைவியை விளித்துத் தமக்கு தாகசாந்தி செய்ய இன்னும் சிறிது ஏதாவது வேண்டுமெனக் கூற, அவ்வம்மணியும் வெள்ளித் தட்டில் சில பக்ஷணங்களையும் வெள்ளிக் கிண்ணத்தில் பாலையும் அனுப்பினார். அன்றையதினம் மாலை, சாது புறப்பட்டுப் போய்விட்டார். வெள்ளிப்பாத்திரங்களை மட்டும் காணோம்!

சில நாட்கள் சென்ற பிறகு, தேசாந்தரம் சென்ற மகிபதி வீடு வந்துசேர்ந்தான். ஆ! என்ன ஆச்சரியம்! தின்பண்டங்களுடன் சாதுவுக்கு அனுப்பிய வெள்ளிப் பாத்திரங்கள் மகிபதி மூட்டையில் இருக்கின்றன! அவன் மனைவி அவைகள் ஏதெனக் கேட்டாள். "ஆகா! ஆச்சரியமாயிருக்கிறது. ஒருநாள் பகல் சுமார் இரண்டு மணிக்கு எனக்குப் பசியாயிருந்தது. திடீரென்று என் முன்னே தட்டில் தின்பண்டங்களும் கிண்ணத்தில் பாலும் கொண்டுவந்து வைக்கப்பட்டிருந்தன. நானிருந்த இடத்தில் வேறொருவரும் இல்லை. எல்லாம் பகவான் அனுக்கிரகம்" என்றான் மகிபதி.

ஆ! இது வெறும் கதை என்று நீங்கள் சொல்லலாம். ஆனால் பல மைல்களுக்கப்பால் உள்ள நம் பந்து ஜனங்களையும் நண்பர்களையும் எக்காலமும் மறவாதிருக்க வேண்டுமென்னும் செவ்வியதோர் கடமையை இது வற்புறுத்துகின்றதல்லவா? அந்நிய நாட்டில் உள்ள நம் பந்துக்கள் அல்லது நண்பர்களில் ஒருவர், நாம் அவரைப்பற்றி எப்பொழுதும் சிந்திக்கிறோமென்றும், பல காதங்களுக்கப்புற மிருந்தபோதிலும் இடையறா மனோபாந்தவ்யம் சூக்ஷமமாய்ப் பொருந்தியுள்ளதென்றும் அறிந்தால் எவ்வளவு மகிழ்ச்சியடையமாட்டார்!

வண்டிகளென்ன, புகை வண்டியென்ன, கப்பல்களென்ன, இவைகள் எல்லாம் உலக முழுவதும் தபால் மார்க்கமாய் நம் நேசர்களுக்குக் கடிதங்களைச் சேர்க்கின்றன. ஆனால் நம் மனமோ, தபால், தந்தி இவைகளினும் துரிதமாய் நம் நண்பர் உலகத்தின் எந்த மூலையிலிருந்தாலும் நமது அன்பாகிய சமாசாரத்தைச் சேர்க்கின்றது.

நம் அன்பை நண்பருக்கு அர்ப்பணம் செய்வது, புதிய சிநேகிதருக்கு மாத்திரமா? பழைய சஹாக்களை நாம் மறந்துவிடலாமா? நல்லார் செய்யும்நேசம் நாடோறும் விருத்தியாகுமல்லவா? பழையநட்பு எக்காலும் பழுத்தகனிபோல இனிப்பைக் கொடுக்குமன்றோ? பகவான் ஸ்ரீ கிருஷ்ணர் என்ன செய்தார்? தம் பால்ய சிநேகிதரை மறந்தாரா? குசேலர் பரம தரித்திரராய் இருந்தகாலத்தும் அவரது நட்பைவிடாமலும் கைம்மாறு கருதாமலும், சிறிதேனும் அசட்டை செய்யாமலும் உதவினரன்றோ? தவிர, பிருந்தாவனத்திலிருந்த கோபாலர்களை அவர் கடைசிவரையிலும் மறந்தனரா? இதன்றோ உண்மைநேசம்! இதைவிட்டு, ஸம்பத்து வந்த காலத்தில் கும்பல் கூடி இச்சகம் பாடி நேசம் பாராட்டுவதும், இடுக்கண்கள் நேர்ந்த காலத்தில் அற்ற குளத்தில் அருநீர்ப் பறவை போல் கைவிட்டு விடுவதுமா உண்மை நட்பு? எக்காலத்தும் ஒரே நிலையாய் தம்நேசரது கஷ்டசுகங்களைத் தமதாகவே கருதி மனமொத்து நடப்பவரே மெய்ச்சினேகராவர். ஆனால் நேசர்களுக்குள் சச்சரவு நேரிடாதோ? ஆம், நேரிடும். நாம்நம் அண்ணன் தம்பிகளோடும், விளையாட்டுத் தோழரோடும் சச்சரவு செய்கிறதில்லையா? அடுத்த நிமிஷத்தில் கூடிக்கொள்கிறதுமில்லையா? அப்படிக் கூடிக்கொள்வது நமக்கு எவ்வளவு சந்தோஷமாயிருக்கிறது? உண்மை நட்பின் லக்ஷணம் அதுவன்றோ?

# பிரபஞ்ச வர்த்தமானம்

## NEWS AND NOTES

**தேச பாஷைக்குக் கவுரவம்.**

வங்காளத்திலுள்ள சுமார் 500 பாடசாலைகளின் தலைமை உபாத்தியாயர்கள் யாவரும் ஒன்று சேர்ந்து கல்கத்தா செனேட் மண்டபத்தில் ஒரு கூட்டம் கூடினர். வைஸ்சான்ஸலர் ஸர் ஆஸுடோஷ் முகர்ஜி அக்கிராசனம் வகித்தார். கீழ்க்கண்ட தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன. தொழிற்கல்வியையும் சாஸ்திரக்கல்வியையும் கற்பிப்பதற்கான சவுகரியம் ஏற்படும்படி 'மெட்ரிகுலேஷன்' கல்வி முறையை மாற்ற வேண்டும். "மெட்ரிகுலேஷன்" பரீக்ஷைக்குச் செல்லும் மாணவனுக்குக் குறைந்தது 14 வயதாவது நிரம்பியிருக்கவேண்டும். ஆங்கில பாடத்தைத் தவிர மற்றப் பாடங்களெல்லாம் தேசபாஷையிலேயே கற்பிக்கப்படவேண்டும்; தேசபாஷையிலேயே பரீக்ஷிக்கப்படவும்வேண்டும். குறிப்பிட்ட ஒன்பது தொழில்களில் ஒன்றிலாவது பயிற்சி பெற்றிருப்பதாக ஒவ்வொரு மாணவனும் நற்சாக்ஷிபத்திரம் கொண்டு வரவேண்டும்.

கடைசித் தீர்மான விஷயமாய் சில ஆக்ஷேபங்கள் கிளம்பின. ஸர் ஆஸுடோஷ் முகர்ஜி அதற்குப் பதிலளிக்கையில் "குறிப்பிட்ட ஒன்பது தொழில்களில் எதுவும் கஷ்டமானதல்ல வென்பதே எனது அபிப்பிராயம். பல வருஷங்களாய் நம் மாணவர்களுக்குத் தொழிற்கல்வி போதிக்கப்பட வேண்டுமென விரும்பி வந்தேன். இப்பொழுது நம் நாட்டினர் அதன் பெருமையை உணர்ந்துகொண்டதால் அதைப் பிரஸ்தாபித்தேன். நான் பிறரது கட்டாயத்தின்மேல் இம்முறையை அனுஷ்டிக்க முன்வரவில்லை" என்று கூறினர்.

தமிழ் ஜில்லாக்கள் தவிர மற்ற விடங்களில் பாஷாபிமானம் அதிகமா யிருப்பதைக் கவனிக்க மிகவும் சந்தோஷமாயிருக்கிறது. தமிழ்நாடு எப்போது விழித்துக்கொள்ளுமோ?

*
* *

**மூளை விஷ ஜுரம்.**

மூக்கிலிருந்து வரும் சளியிலுள்ள ஓர் நுட்பமான கிருமியால் இது உண்டாக்கப்பட்டு வெகு சீக்கிரம் புழுதியால் பரவப்படுகிறது. இதன் பிரசாரம் அதிகம். இதைத் தடுக்கும் வழிகள்:—பலர்கூடி வேலை செய்யுமிடங்களில் நோயாளியைக் கண்டு விலகு. நல்ல காற்றோட்டமுள்ள விடத்தில் இரு. நீயும் உன்னைச்சேர்ந்த யாவும் சுத்தமா யிருக்கவேண்டும். ஜனக்கூட்டத்தை நாடாதே. தும்பும் போதும் இரும்பும் போதும் வாயையும் மூக்கையும் துணியால் மூடிக்கொண்டு அதைப் பிறகுக் கொளுத்திவிடு. ஜலத்தில் உப்பைக் கரைத்து அதனால் வாயையும் மூக்கையும் அடிக்கடி சுத்தம் செய்; என்று சென்னை சுகாதார உத்தியோகஸ்தர் அறிவிக்கிறார்.

*
* *

**சுருட்டை யொழித்தல்**

அமெரிக்காவில் குடியை ஒழிக்குமாறு நீண்ட காலத்துக்கு முன்னரே ஒரு முயற்சி ஏற்பட்டு, அதில் ஒருவாறு வெற்றி ஏற்பட்டிருக்க, சுருட்டுக் குடிப்பதை ஒழிக்கவும் ஒரு முயற்சி அங்கே தொடங்கி யிருக்கிறது. சாராயக் குடிக்கு அடுத்த ஸ்தானத்தில் அவர்கள் சுருட்டுக் குடிப்பதையும் தீமையென்று கருதுகிறார்கள். அங்குள்ள 'மாதர் கிறிஸ்தவ குடிவிலக்குச் சங்கத்தார்' இது சம்பந்தமாக வசந்த காலத்தில் இலட்சக்கணக்காக துண்டுப் பத்திர வாயிலாகவும் வேறு பல வழிகளிலும் பிரசார வேலை தொடங்கி யிருக்கிறார்களென்று அறிகிறோம். இத்தகைய முறைகளை நமது நாட்டிலும் மேற்கொள்வது அவசியமாகும்.

## புத்தக வரவு
## BOOKS RECEIVED

விக்ரமசிங்கன் கோட்டை மர்மம் அல்லது கற்பின் வெற்றி.*—இது ஸ்ரீமான் பி. எஸ். சுப்பிரமணியம், எம்.ஏ., அவர்கள் எழுதியது. தற்காலம் வெளிவந்திருக்கும் துப்பறியும் நாவல்களுள் இது சிறந்ததெனச் சொல்லலாம். இதைப்பற்றிய விமர்சனம் அடுத்த பத்திரிகையில் வெளிவரும். (இந்த நவீனத்திலுள்ள படங்களில் இரண்டு இச்சஞ்சிகைக்கு முகப்புப் படங்களாகச் சேர்க்கப்பட்டிருக்கின்றன.)

* விலை ரூ. 1. அல்லயன்ஸ் கம்பெனி, மயிலாப்பூர்.

Supplement to the "Viveka Bodhini."

" விவேக போதினி " அநுபந்தம்.



ஸ்ரீகிருஷ்ண பகவான் அர்ஜுனனுக்குக் கீதை உபதேசம் செய்தல்.



ஸ்ரீகிருஷ்ண பகவான் உருக்குமிணியைத் தேரிலேற்றிச் செல்லுதல்.



# விவேகபோதினி

"எப்பொரு ளெத்தன்மைத் தாயினு மப்பொருண்
மெய்ப்பொருள் காண்ப தறிவு."—திருவள்ளுவர்.

தொகுதி XIII } துன்மதிஞு வைகாசிமீ :: 1921-ம்ஞு ஜூன்மீ { பகுதி 12


## முருகன் வழிபாடு

### WORSHIP OF MURUGA

விறல்மார னைந்து மலர்வாளி — சிந்த
மிகவானி லிந்து — வெயில்காய
மிதவாடை வந்து தழல்போல — வொன்ற
வினைமாதர் தந்தம் — வசைகூற ;

குறவாணர் குன்றி லுறைபேதை கொண்ட
கொடிதான துன்ப — மயில்தீர
குளிர்மாலை யின்க ணணிமாலை — தந்து
குறைதீர வந்து — குறுகாயோ ;

மறிமா னுகந்த இறையோன் — மகிழ்ந்து
வழிபாடு தந்த — மதியாளா
மலைமாவு சிந்த அலைவேலை — யஞ்ச
வடிவே லெறிந்த — அதிதீரா ;

அறிவாலறிந்து னிருதா — ளிறைஞ்சு
மடியா ரிடைஞ்சல் — களைவோனே
அழகான செம்பொன் — மயில்மே லமர்ந்து
அலைவா யுகந்த — பெருமாளே.

தாருகவனத்து முனிவர்களால் கொல்லும்படி ஏவப்பட்டு வந்த அழகிய மானை அன்புடன் கையிற்றாங்கிய எமதிறைவனுகிய பரமேசுவரன் தேவர்கள் செய்த தவத்தைக் கண்டு மகிழ்ச்சியடைந்து, அஞ்ஞான விருளிற் பட்டுத்தியங்கிய தேவர்களும் பூவுலகோர்களும் ஞான நெறி கண்டு உய்யுமாறு அவர்களுக்கு ஞானத்தைப் புகட்டுவதற்காகவே அளித்தருளிய ஞான தேசிகனே! க்ரௌஞ்சகிரியும், சூரனது மாய வுருவமான மாமரம் பிளக்கவும், சூரன் ஒளிந்துகொண்ட சமுத்திரம் நடுநடுங்கவும் வடித்துக் கூரிய வேலை எறிந்த மகாதீரனே ! உனது பெருமையையும் பரமாத்மாவுக்கும் ஜீவாத்மாவுக்கு முள்ள சம்பந்தத்தையும் தமது அறிவினால் உணர்ந்து உனது பாதாரவிந்தங்களில் வீழ்ந்துவணங்கும் மெய்யடியார்களுக்கு நேரும் இடையூறுகளைக் களைந்தெறிபவனே ! அழகிய பொன்னிறமுள்ள மயில் மீதமர்ந்து கடலின் அலை மோதப்பெறும் திருக்கோயில் பொருந்திய திருச்செந்தூரில் மகிழ்ந்து வீற்றருளும் பெரியோனே !

மிக்க வலிமைபொருந்திய மன்மதன் ஐந்துவித மலர்களாகிய பாணங்களைவிடுத்துத் துன்புறுத்தவும், அகன்ற வானத்தினின்று சந்திரன் அமுதகலைகளை வீசாது வெப்பமான கிரணங்களினால் வருத்தவும், மந்தமாருதம் வீசி அக்கினியைப்போல் எரிக்கவும், கொடிய மனத்தையுடைய மாதர்கள் தங்களுக்குத் தோன்றிய வசைமொழிகளைக் கூறவும், குறவர்களது குன்றில் வசிக்கும் பேதைப் பெண் உரைக்க வொணுத துன்பத்தை யடைந்தாள் ; அதற்குக் காரணம் நின்னிடத்திற் கொண்ட ஆராத காதலே யாகும். அவளது ஆசை தீருமாறு, அவள் அவ்வாறு துன்புறும் அந்திப்பொழுதில் அவளுக்கு மாலையிட்டு அவளை மணந்து, அவளது குறையைத் தீர்ப்பதற்கு வந்தருளவேண்டும்.

 நாய்க்கு வேலையும் இல்லை, இருக்க நேரமும் இல்லை.

# விவேக போதினி

தொ. 13] துன்மதி௵ வைகாசிமீ௴ [ப. 12


## ஸ்ரீகிருஷ்ணன்

### SRI KRISHNA

இப்படி ருக்மிணி அனுப்பிய இரகசிய சமாசாரத்தை அறிந்து கண்ணன், "நானும் ஆதிமுதல் அவளையே மணஞ்செய்ய விரும்பியிருக்கிறேன். ருக்மி முதலியவர்களின் எண்ணம் எனக்குத் தெரியாததல்ல" என்றுரைத்து அந்த வேதியருடன் ஒரே இராத்திரியில் விதர்ப்ப தேசம் வந்துசேர்ந்தார். பிராமணனால் அவருடைய வரவை அறிந்த ருக்மிணி, பகவானுடைய கருணையை நினைத்து நினைத்து பரமானந்த மடைந்து, உடல்பூரித்தாள். அந்த அந்தணருக்குத் தான் வேறு பதில் உபகாரம் செய்யத்தகாதென்று சாஷ்டாங்கமாய் நமஸ்கரித்தாள்.

பலராமர் தன்னிடத்தில் சொல்லிக்கொள்ளாமல் கண்ணன் போனதை அறிந்து சைனியங்களுடன் குண்டின நகரத்திற்கு வந்து சேர்ந்தார். பீஷ்மகர் அவர்களைத் தகுந்தபடி உபசரித்து, விடுதிகளில் அமர்த்தினார்.

அப்படியே சேதிதேசத் தரசனான தமகோஷன் தன் புத்திரனுக்கு மங்கள காரியங்களைச் செய்து விவாகத்துக்குத் தயாராயிருந்தான். ருக்மி, தந்தவக்கிரன், ஜராஸந்தன் முதலிய அவனுடைய நண்பர்கள் வெகு ஜாக்கிரதையாய் அவனைக் காத்துவந்தார்கள்.

ருக்மிணி மங்கள ஸ்நானஞ்செய்து பூஜாத் திரவியங்களுடன் கால்நடையாய் கௌரியின் ஆலயத்திற்குச் சென்று, விதிப்படி மகாதேவியை ஆராதித்து தனக்குக் கண்ணனே பதி யாகவேண்டுமென்று பிரார்த்தித்தாள்.

பிறகு வெளியில் வருவதற்குள், அரசர்கள் இரண்டு வரிசைகளாய் இரதங்களை நிறுத்திக்கொண்டு அவளைப் பார்த்துக்கொண்டே யிருந்தார்கள். ருக்மிணி எல்லோருக்கும் கடைசியிலிருந்த கண்ணனுடைய இரதத்துக்கருகில் வந்தவுடன் பகவான் அவளைத் தூக்கிப் பக்கத்தில் வைத்துக்கொண்டு அதிவேகமாய் ஜய கோஷத்துடன் துவாரகையை நோக்கிச் சென்றார். அவரைத் தடுத்த ஜராஸந்தன் முதலியவர்களை ராமன் முதலிய யாதவ வீரர்கள் அடித்துத் துரத்தினார்கள். அவர்கள் நகரத்திற்கு வந்து, பாரியைப் பறிகொடுத்த சிசுபாலனைத் தேற்றினார்கள். விடேன் தொடேனென்று துரத்திக்கொண்டுபோன ருக்மியைக் கண்ணன் பிடித்துக் கொல்லப்போகும் பொழுது ருக்மிணி பிரார்த்தித்ததால் உயிருடன் விட்டார். பிறகு துவாரகையில் கண்ணனுக்கும் ருக்மிணிக்கும் திருக்கல்யாண மஹோத்ஸவம் நடந்தது.

மன்மதன் அவர்களுக்குப் புத்திரனாய்ப் பிரத்யும்னனென்ற பெயருடன் பிறந்தான். பத்து நாளைக்குப் பிறகு சம்பாசுரன் அக்குழந்தையைத் தன் சத்துரு வென்று எண்ணி அபகரித்துக் கடலில் எறிந்தான். அதை ஒரு மீன் விழுங்கிற்று. அந்த மீன் செம்படவர்களால் பிடிபட்டு சம்பரனுடைய சமையற்கட்டிற் போய்ச் சேர்ந்தது. அதன் வயிற்றிலிருந்த சிசுவை அவனுடைய மனைவி மாயாவதி கண்டு, நாரதரால் உண்மையை அறிந்து, தான் ரதியென்றும் அவன் மன்மதனென்றும் கண்டுகொண்டு அந்தக் குழந்தையையே கணவனாய் அடைந்தாள். காலக்கிரமத்தில் அவன் சகல மாயைகளையும் கற்று, சம்பரனைக் கொன்று தன் பத்தினியுடன் துவாரகைக்கு வந்துசேர்ந்தான்.

பிறகு கண்ணன் சத்திராஜித்தின் பெண்ணாகிய ஸத்யபாமையையும், ஜாம்பவானுடைய பெண்ணாகிய ஜாம்பவதியையும், சூர்ய புத்திரியான காளிந்தியையும், மித்திரவிந்தை, ஸத்யா, பத்ரா முதலியவர்களையும் விவாகஞ்செய்தார். சிலகாலத்துக்குப் பிறகு நரகாசுரனுடைய கொடுமையைப்பற்றி இந்திரன் முறையிட, கண்ணனும் ஸத்யபாமையும் கருடன் மேலேறி அவனுடைய அரண்களையும் யந்திரங்களையும் காவல்களையும் மந்திரங்களையும்

நாய் சமுத்திரத்திலே போனாலும் நக்குத் தண்ணீர்.



நாசஞ்செய்து, முரனை ஸம்ஹரித்து அவனுக்காகப் பரிந்துகொண்டுவந்த பூமி புத்திரனான நரகாசுரனை தன் சக்கரத்தால் மாய்த்தார். அவனால் சிறையில் அடைக்கப்பட்டிருந்த அநேகம் ராஜ குமாரிகளையும் மனைவிகளாய் அங்கீகரித்தார்.

ஒரு நாள் ஸத்யபாமை இந்திராணியைக் கண்டு பொறாமைகொண்டு பாரிஜாதத்தைப் பூமிக்குக் கொண்டுவரவேண்டுமென்று வேண்ட, கண்ணன் தேவலோகத்திற்குச் சென்று அந்த விருக்ஷத்தை ஸத்யபாமையின் தோட்டத்தில் வைத்தார்.

பிறகு ஒரு சமயம் பாணாசுரனுடைய புத்திரியான உஷை ஸ்வப்னத்தில் ஒருவனைக் கண்டு, அவனையே மணம்புரிய ஆசைகொண்டு ஏங்கியிருந்தாள். அவளுடைய சகியான சித்ரலேகை மூவுலகிலுமுள்ள ரூபவான்களின் படங்களை எழுதிக்காட்ட உஷை அவர்களில் அநிருத்த னென்ற பிரத்யும்னனுடைய புத்திரனைக்கண்டு வெட்கி, "இவரே என் மனத்தைக் கவர்ந்தவர்" என்றாள். அதை யறிந்து சித்திரலேகை மாயாசக்தியால் துவாரகைக்குச் சென்று அந்தப்புரத்தில் படுத்திருக்கும் அநிருத்தனை மயக்கி, உஷையிடத்திற் கொண்டுவந்துவிட்டாள்.

அவ்விருவரும் காந்தர்வ விவாகம் புரிந்து கொண்டு சுகமாய் வசித்தார்கள். பாணாசுரன் இதை யறிந்து அநிருத்தனைப் பிடித்துக்கட்டிச் சிறையில் வைத்தான்.

துவாரகையிலுள்ளவர்கள் அந்த இராஜகுமாரனைத் தேடிக் காணமல் நாரதரால் அவனிருப்பிடம் தெரிந்து, பாணாசுரனைச் சூழ்ந்து கொண்டார்கள். அந்த அசுரனுக்குச் சகாயமாய் அவனுடைய குலதெய்வமான பரமசிவனும் பிரமதகணங்களும் யுத்தத்திற்கு வந்தார்கள். முடிவில் விஷ்ணுவின் படை சிவன் படையை ஜயித்துப் பின்னடையச்செய்தது. பிறகு கண்ணன் பாணனுடைய ஆயிரம் கைகளில் இரண்டைத்தவிர மற்றவைகளை வெட்டித்தள்ளினார்.

அப்பொழுது சிவன் அவனுக்காகப் பரிந்து கண்ணனைக் கொண்டாடி பாணனுடைய உயிரைத் தப்புவித்து, அவனுக்கு சிவனும் விஷ்ணுவும் ஒன்றேயென்ற தத்துவத்தை உபதேசித்தார். பிறகு விதிப்படி உஷையை பாணன் அநிருத்தனுக்கு விவாகம் செய்வித்தான்.

பாண்டவர்களுக்கு அபாயம் நேரிடும்பொழுதெல்லாம், அவர்கள் தங்களுக்குக் குலதெய்வமான கண்ணனைத் தியானித்து அவரால் சகல மங்களங்களையும் பெற்றார்கள். திரௌபதியின் ஸ்வயம்வர காலத்தில், கண்ணன் அங்கே வந்திருந்து, தான் அந்த வில்லை வளைப்பதற்கு ஒருவனாய்ப் போகாமல் அர்ஜுனனுக்கு விட்டுக் கொடுத்தார். பிறகு பாண்டவர்கள் இந்திரப்பிரஸ்தத்தி லிருக்கும்பொழுது கண்ணன் அர்ஜுனனைக்கொண்டு காண்டவ வனத்தை எரித்து அக்கினி தேவனுக்குக் கொடுத்தார். மயன் கட்டிய சபையில் தனக்கு நேர்ந்த அவமானத்தைப் பொறுக்காமல் துரியோதனன் பாண்டவர்களை அழைத்துச் சூதாடி ஜயித்து, திரௌபதியை மானபங்கஞ் செய்யப் போனபொழுது அந்த உத்தமி வேறு கதியற்றவளாய் கண்ணனைச் சரணமடைந்து கோவென் றலற அவர் துவாரகையிலிருந்து அநுக்கிரகித்து, குறையாத வஸ்திரங்களை அவளுக்குக் கொடுத்து மானத்தைக் காப்பாற்றினார்.

தருமபுத்திரர் இந்திரப்பிரஸ்தத்தில் இராஜஸூயயாகம் செய்ய யத்தனித்தபொழுது, கண்ணனும் தம் பரிவாரங்களுடன் அங்கே சென்று, பீமன் அர்ஜுனன், தர்மன், நகுல சகாதேவர், திரௌபதி முதலியவர்களால் அளவற்ற அன்புடன் உபசரிக்கப்பட்டார். ஜராஸந்தனுக்கு பீமனால் மரணமென்றும், அதற்குக் காலம் வந்ததென்றும் அறிந்து கண்ணன் பீமார்ஜுனர்களுடன் அவனுடைய பட்டணத்திற்குச் சென்று, பீமனால் அவனை யுத்தத்திற்கு அழைப்பித்துக் கொல்லுவித்தார்.

பிறகு பீமாதியர் நான்கு திக்குகளிலும் விஜயஞ்செய்து, அரசர்களை ஜயித்து, தனங்களைக் கொண்டுவந்து குவித்து, யாகத்திற்கு ஆரம்பித்தார்கள்.

அப்பொழுது யாரை முதலில் பூஜிக்கலாமென்று கேள்வி பிறந்தபொழுது, சகாதேவன் கண்ணனைக் குறிப்பிட்டான். எல்லோரும் ஒப்புக்கொண்டதை அறிந்த தருமநந்தனர் அவரை மகாப் பிரீதியுடன் பூஜித்தார். கண்ணனைப் பால்யம் முதல் துவேஷித்தவனும் அவருக்குச் சத்துருவாய்ப் பிறந்த ஜயனான சிசுபாலன் பொறாமைகொண்டு கண்ணனையும்

நாய் நக்கிச் சமுத்திரம் குறையுமா ?

அவரைப் புகழ்ந்த சகாதேவன் பீஷ்மர் முதலியவர்களையும் வாயில் வந்தபடியெல்லாம் நிந்தித்தான். கண்ணன் அவன் செய்யும் அபராதங்களை நூறுவரையில் பொறுத்திருந்து, பிறகு தம் சக்கராயுதத்தால் அவனுடைய தலையை வெட்டி, அவனுடைய தேகத்திலிருந்து கிளம்பின தேஜஸைத் தம்மிடத்தில் சேர்த்துக் கொண்டார்.

இப்படி விஷ்ணுவின் காவலாளர்களான ஜயவிஜயர்கள் ஸனகாதியரின் சாபத்தால் முதலில் ஹிரண்யகசிபு ஹிரண்யாக்ஷர்களாயும்பின் இராவண கும்பகர்ணர்களாயும், பிறகு சிசுபால தந்தவக்திரர்களாயும் மூன்று ஜன்மங்கள் எடுத்தார்கள். அவர்களைக் கொல்வதற்காக நாராயணன், நரஸிம்ஹன், ராமச்சந்திரன், கண்ணனென்ற திவ்யாவதாரங்களை எடுத்து, அவர்களை ஸம்ஹரித்து, அஞ்ஞானத்தைப் போக்கி, வைகுண்டம் சேர்ப்பித்தார்.

அந்த யாகத்தில் கிருஷ்ணன் ஸாதுக்களுடைய பாதங்களைக் கழுவி சுத்தஞ்செய்வதென்ற கைங்கரியத்தை ஒப்புக்கொண்டார். கௌரவருக்கும் பாண்டவருக்கும் நடந்த யுத்தத்தில் கண்ணன் தாம் ஆயுதமெடுத்து யுத்தஞ்செய்வதில்லையென்று துரியோதனனுக்குப் பிரதிக்ஞைசெய்து அர்ஜுனனுக்கு ஸாரதியாயிருந்தார். அவனை வெளிப்படையான காரணமாக வைத்துக்கொண்டு பாரதயுத்தத்தை உண்டுபண்ணி, அதில் கௌரவ பாண்டவ சைனியங்களான 18 அக்ஷௌஹிணிகளையும் மடியச்செய்து தருமபுத்திரருக்குப் பட்டங் கட்டினார். பஞ்ச பாண்டவர்களுக்குள் தமக்குத் தோழனும் அன்பிற்குரியவனுமிருந்த அர்ஜுனனைக் காரணமாய் வைத்துக்கொண்டு, சகல ஜீவகோடிகளுக்கும் கீதையென்ற பரப்ரஹ்ம வித்தையை அருளிச் செய்தார். பாரதயுத்தமென்ற மகா சமுத்திரத்தைப் பாண்டவர்கள் கண்ணனென்ற கப்பலில் ஏறிக் கடந்தார்கள்.

பால்யத்தில் தம்முடன் வித்தியாப்பியாசஞ் செய்த குசேலரென்ற பிராமணன் வறுமையால்வருந்தி அதைத் தீர்த்துக் கொள்ளும்பொருட்டுக் கண்ணனை வந்து தரிசித்தார். பகவான் அவருக்குப் பரமோபசாரஞ்செய்து தம் படுக்கையில் உட்காரவைத்து, தாமே பணிவிடை செய்து, அளவற்றஐசுவரியத்தைக் கொடுத்தார்.



ஸ்ரீகிருஷ்ண பகவான் குசேலரை உபசரித்தல்.

அர்ஜுனன் ஒருகால் தீர்த்த யாத்திரை செய்யும்பொழுது கண்ணனுடைய உடன்பிறந்தாளான சுபத்திரையின் ரூபலாவண்யத்தைக் கேள்விப்பட்டு, ஆசைமிகுந்து கண்ணனை வேண்டினன். அவர் அவனுக்குச்சந்நியாசிவேஷங்கொடுத்து, துவாரகைக்குச் சமீபத்தில் வைத்தார். பிறகு இராமனையும் யாதவர்களையும் அவரைப் பூஜிக்கச் செய்து, சுபத்திரையை அவருக்குப் பணிவிடை செய்ய நியமித்தார். ஏதோ ஒரு காரணத்தால் இராமனையும் மற்றுமுள்ளோரையும் வேறிடத்திற்கு அழைத்துப்போனார். அந்த சமயத்தில், அர்ஜுனன் சுபத்திரைக்குத் தான் இன்னானெனத் தெரிவித்து, காந்தர்வ விவாகஞ் செய்து, அவளுடன் இரதத்திலேறி தன்





தேசத்திற்குச் சென்றான். அதைக்கேட்டு, கோபங்கொண்டு தூரத்தின பலராமரைக் கண்ணன் சமாதானஞ்செய்து தடுத்து, எல்லோருடனும் அஸ்தினபுரத்திற்குச் சென்று, விதிப்படி விவாகஞ்செய்வித்தார்.

இப்படி ஸ்ரீமந்நாராயணன் பிரமா முதலிய தேவதைகளின் பிரார்த்தனைக் கிணங்கி, பூபாரத்தைத் தீர்த்து, சாதுக்களை இரக்ஷித்து, தருமத்தை நிலைநாட்டுவதற்காக பூமியில் தேவகீ வசுதேவர்களுக்குப் புத்திரராய் அவதரித்துத் தாமும் மற்றவர்களை வெளிப்படையான காரணபூதராய்க்கொண்டும் அசுராம்சமாய்ப் பிறந்தவர்களைப் பலவிதமாய் பல சமயங்களில் சங்கரித்தார். அப்படியும் யாதவ வம்சத்திலுள்ளவர்கள் பலத்தாலும் கர்வத்தாலும் இறுமாந்து, அக்கிரமம் செய்வதைக் கண்டு, அவர்களையும் அழிக்க நினைத்துக் கடற்கரைக்கு வேடிக்கையாய் அவர்களை அழைத்துப்போய் அளவுக்கு மிஞ்சி மதுவைக் குடிக்கும்படி செய்தார். இதனால் அவர்கள் மெய்ம்மறந்து அங்குள்ள சாபம் பெற்ற இருப்புக் கோரைகளாலும் ஆயுதங்களாலும் ஒருவரையொருவர் அடித்துக் கொண்டு மடியும்படி செய்தார். இப்படித் தம் அவதார காரியத்தை முடித்து, தம் பிரிய சிஷ்யனான உத்தவரை பதரி ஆசிரமத்திற்கு அனுப்பிவிட்டு, பலராமனை சமுத்திரக்கரையில் சமாதியிலிருந்து தம் தேகத்தைவிட்டு ஆதிசேஷ ரூபத்துடன் வைகுண்டத்திற்குப் போகும்படி ஆஞ்ஞாபித்தார்.

பிறகு ஓர் அசுவத்த மரத்தடியில் தாம் சமாதியிலிருந்தார். அப்பொழுது ஓர் வேடன் அவரை மானென்ன நினைத்து, இருப்புக்கோரையால் செய்யப்பட்ட ஈட்டியைக்கொண்டு பாதத்தில் அடித்தான். உடனே அத்தேகத்திலிருந்து சங்கசக்ர கதாபாணியாயும் திவ்யாலங்காரத்துடனும் கூடிய பகவான், ரதத்திலிருந்த ஸாரதியான தாருகனை அழைத்து, துவாரகை சமுத்திரத்திற் கிரையாகுமென்றும் எல்லோரும் இந்திரப்பிரஸ்தத்திற்குப் போகவேண்டுமென்றும் துவாரகையிலுள்ளவர்களுக்குத் தெரிவிக்கச்செய்து, பிறகு பிரமாதி தேவகணங்கள் சேவிக்க, தம் படிச்சோதிக்கு எழுந்தருளினார். அவருடன் ஸத்யம் தர்மம் பொறுமை லக்ஷ்மி இவை சென்றன.

# சடாக்வா இயக்கம்

## CHATAQUA MOVEMENT

(283-ம் பக்கத் தொடர்ச்சி.)

ஆரம்பத்தில் "சடாக்வா"க்களெல்லாம் முற்றிலும் ஸ்வதந்திரமுள்ள இயக்கங்களாயிருந்தன. அக்காலங்களில் ஒவ்வொரு ஜனசமூகமும் தங்களுடைய விருப்பத்துக்கிசைந்த 'மேதாவிகளை' வரவழைத்து அவரவர்களே "சடாக்வாக்களை" நடத்திக்கொண்டிருந்தார்கள். சென்ற சில வருடங்களாய் "பிரயாணச் சடாக்வா" அல்லது "பிரயாணக் கூடாரம்" என்ற ஏற்பாடொன்று ஆரம்பிக்கப்பட்டு நடந்துவருகிறது. இவ்வேற்பாட்டை "ஜனசம்பந்தமான கல்வி யபிவிருத்தியில் கடைசி அடி" என்று அமெரிக்காவில் கூறுகிறார்கள். இவ்வேற்பாட்டின்கீழ் ஒரு கம்பெனியார் ஒரே பிரயாணத்தில் சுமார் நூறு அல்லது அதற்கு மேற்பட்ட "சடாக்வாக்களை" ஆரம்பித்து நடத்துவார்கள். அது பின்வருமாறு நடத்தப்படும்:—இக்கம்பெனியார் ஒரே சமயத்தில் ஏழு நகரங்களில் "சடாக்வாக்களை" ஆரம்பிப்பார்கள்; ஆனால் ஒவ்வொரு ஊரிலும் ஏழு நாட்களுக்குக் குறையாமல் கட்டாயம் கூட்டங்கள் கூடவேண்டும். பிரயாணத்தின் முதல் பட்டணத்தின் ஆரம்பநாள் நிகழ்ச்சி முறை, அடுத்த தினம் இரண்டாவது ஊருக்குச் செல்லும். இதேமாதிரி, ஒருவாரமுடிவில் ஏழு இடங்களில் கூட்டங்கள் நடைபெறுமல்லவா? அப்போது முதல் கூடாரம் எட்டாவது ஊருக்குப் பிரயாணஞ் செய்வதற்குத் தயாராயிருக்கும். ஆகையால் ஒரே பட்டணத்திற்கு ஒரு வாரத்துக்கு வேண்டிய மேதாவிகளைக் கொண்டே ஏழு பட்டணங்களுக்கு ஒரு வாரத்துக்குத் தேவையானவர்களை யனுப்புவதற்கு இக்கம்பெனி நிர்வாகஸ்தர்களால் இயலும்.

அமெரிக்காவில் விளம்பரஞ் செய்யும் தொழிலை சாஸ்திரங்களிலொன்றாகவே மதித்து அதை மிக்க ஆவலுடன் கற்றுக்கொள்ளுகின்றனர். ஆனால் அவ்விளம்பரத்தொழிலின் முழுவேகத்தையும் சக்தியையும் 'சடாக்வா' விளம்பரக்காரர்கள் உபயோகப்படுத்துவதுபோல் வேறொருவரும் உபயோகப் படுத்துவதில்லை. "சடாக்வா மேதாவிகள்" வருவதற்கு அநேக மாதங்கள் முன்னதாகவே, அவர்களு

டையவருகையையறிவிக்கும் குறிகளை ஒருவன் எங்குங் காணலாம். சுவர்களிலெல்லாம் அவர்கள் வரவைத் தெரிவிக்கும் விளம்பரங்கள் ஒட்டப்பட்டிருக்கும். மூலை முடுக்குகளிற்கூட 'சடாக்வா'த் துண்டுக் கடிதங்கள் விநியோகப்படுத்தப் பட்டிருக்கும்; பலவித வர்ணங்களில் அழகாய் அச்சிடப்பட்ட கடிதங்களை பெரிய இடங்களிலெல்லாம் தொங்கவிட்டிருப்பார்கள்; "சடாக்வா சமாசாரங்கள்" என்று உள்ளூர் பத்திரிகைகளில் அப்போதைக் கப்போது வெளியாகும் செய்திகள், அதில்பாகங்களெடுத்துக்கொள்ளும் 'மேதாவிகள்', அவர்களுடைய ஜீவிய சரித்திரம், இதற்குமுன் அவர்களடைந்திருக்கும் புகழ் முதலியவைகளைப்பற்றி மிகவும் புகழ்ச்சியுடன் கூறும் விளம்பரப்பத்தியாகும். சில சமயங்களிற் இச்செய்திகளில் "மேதாவிகள்" எனப்படுவோரின் தப்பிதங்களைக்கூட வெளியிடுவதுண்டு. வேறொன்றும் சொல்லமுடியாத காலங்களில், "பிரசங்கம் செய்பவர் மிகுந்த பலம் பொருந்தியவர், தேகாரோக்கியமுடையவர்" "வாத்தியசாலைத் தலைவனை. ஜனங்கள் மிக்க ஆரவாரத்துடன் வரவேற்பாரென்பது திண்ணம்! ஹா! அவன் எவ்வளவு 'அழகாய்ப் புன்னகை புரிவான்" என்றிவ்விதமாய் ஜனங்களுக்கு உறுதிமொழி கூறப்படும்.

நவீன முறைகளில் வேலைசெய்யும் கம்பெனிகளெல்லாம், தேர்ச்சிபெற்ற பத்திரிகாசிரியர்களையும் சகல சமாசாரங்களையும் நன்கறிந்த விளம்பரக்காரர்களையும், "அழகிய நிகழ்ச்சிமுறை விளம்பரப் பத்திரங்களை"த் தயார்செய்வதற்காக நியமிப்பார்கள். அவர்கள் உள்ளூர் பத்திரிகைகளுக்கு, 'மேதாவிகளின் உருவப்படங்களுடன், அவர்கள் யோக்கியதைகளையும், "சடாக்வா" சம்பந்தமாய்ப் பொதுஜனங்களறியவேண்டிய சமாசாரங்களையும் தயார் செய்துகொடுப்பார்கள். அவர்களனுப்பும் சமாசாரங்களை அச்சுக் கோக்கவேண்டிய சிரமத்தைக்கூட பத்திரிகாசிரியர்களெடுத்துக் கொள்ள வேண்டியதில்லை. ஏனெனில், இச் சமாசாரங்கள் துத்தநாகத் தகடுகளில் அச்சுக் கோக்கப்பட்டு, தபால் பார்சல்களில், விளம்பரக் கட்டணங்களுடன் பிரசுரிப்பதற்காக அனுப்பப்படும். ஆ! ஆ! நவீன விளம்பரத்தின் மகிமைதான் என்னே!

"சடாக்வா" விளம்பரங்களினின்றும் எடுக்கப்பட்ட சில வாக்கியங்கள் பின்வருமாறு:—"மேடைகளில் பிரசங்கம் செய்வோர்களில் மிகச் சிறந்தவர்", "இந்தியானு நாட்டுப் பிரசங்கிகளில் ரொம்பவும் கெட்டிக்காரரும் நாவன்மையுடையவரும் இவரே", "அமெரிக்காவிலுள்ள கோமாளிகளில் எனக்கு நிகரில்லை", "உலகத்திலேயே என்னைவிட சாமர்த்தியமான ஜாலக்காரன் கிடையாது", "உலகமுழுவதிலும் பிரஸிடெண்ட் வில்ஸனை அறியாதவரில்லை; அதுபோல் அமெரிக்காவில் என்னையறியாத மனிதர் கிடையாது."

"சடாக்வா" விஷயமாய் இடம்பமாய்ச் சிங்காரிக்கப்பட்ட பலவிதக் கட்டுக்கதைகளில் இவைகள் சுவல்பமானவைகளே யாகும். இவ்விதமான சமாசாரங்களைப் பலவிதமாய்த் திரித்தும் மிகவும் உயர்த்தியும், "பேனைப் பிள்ளையாராக்கிப், பிள்ளையாரைப் பெருமாளாக்கி"க் கூறுவது, அமெரிக்காவில் நித்திய வழக்கமாதலால்; ஆதிமுதல் டாம்பீக வாழ்விலும், யோவிநியாயங்களிலும், தங்களைத் தாங்களே உயர்த்திக் கூறும் குணங்களிலும் பழக்கப்பட்ட அந்நாட்டு ஜனங்கள், தங்களுக்கு வழக்கமாய் வரும் அம்மை முதலிய தொத்து நோய்களைப் போல், அவ்வளவு சகஜமாய் இவ்வார்த்தைகளை மதித்து, அவைகட்கு உடன்பட்டிருக்கின்றனர். எது எப்படியாயினும் "விளம்பரக்காரன்" ஜனங்களுக்குச் "சடாக்வா" ஜ்வரம் நன்குபிடிக்கும் வண்ணம், தன்னால் கூடியமட்டும் பிரயாசையெடுத்துக் கொண்டு வேலைசெய்வான். அவன், "இதுவரையில் இப்போது "சடாக்வா"வில் தோன்றும் 'மேதாவிகளை'ப் போல் எங்கும் கண்டிருக்க முடியாது. அதில் 'பியானோ' வாத்தியத்தை வாசிக்கிறவன், அவ்வாத்தியம் வாசிப்பதில் தனக்கு 'நிகரில்லை'யெனப் பெயர் பெற்ற பாட்ருஸ்கி (Padrewsky) யினும் சிறந்தவன்; ஆங்கு பாடவரும் ஸ்திரீ தேவலோக மாதர்களிலும் சாமர்த்தியசாலியாவாள்; பிரசங்கம் செய்யும் 'மேதாவியோ,' "ஸிஸிரோ, டெமாஸ்தெனிஸ்" என்ற நாவன்மைப் புலவர்களைக் காட்டிலும் நன்றாய்ப் பிரசங்கம் செய்யக்கூடியவன்" என்று கூறுவான். பல சொல்லியென்ன? வரப்போகும் 'சடாக்வா' உலகத்தில் எட்டாவது அதிசய

நாய்வேஷம் போட்டால் குலைக்கவேண்டும்.



மாகும்? இத்தகைய ஒரு பெரிய விழாவிற்குச் சென்று இன்பமென்னும் அமுதத்தைப் பருகாமல் ஒருவன் இருக்கமுடியுமா?

பெரிய கூடாரம் வருவதற்குச் சில தினங்கள் முன்னதாகவே நகரமுழுதும் அமர்க்களமாயிருக்கும். நகரமாந்தர்களனைவரும் விசேஷ நாட்களிலணிவதுபோல் புதிய அழகிய உடைகளை ஒழுங்காய் அணிந்திருப்பார்கள். வீடுகள் தோறும் 'அமெரிக்க ஐக்கியமாகாணக் கொடிகளை'த் தொங்கவிட்டிருப்பார்கள். கடைகளின் ஜன்னல்கள் "சடாக்வா மேதாவி"களுடைய உருவப்படத்தோடு கூடிய பெரிய விளம்பரக் காகிதங்களால் அலங்கரிக்கப்பட்டிருக்கும். தெருக்கள் எல்லாம் பெரிய கொடிகளாலும், சிறிய கொடிகளாலும், மின்சார விளக்குகளினாலும் அலங்கரிக்கப்பட்டு அழகிய தோற்றத்தையுடையவைகளாய் இருக்கும். எல்லாவித வண்டிகளிலும், பெரிய விளம்பரத்தையுடைய துணிகளையும், காகிதங்களையும் ஒட்டியிருப்பார்கள். வேலிகளெல்லாம் கொடிகள், எங்கு கண்டாலும் கொடிகள், கொடிகள் தவிர வேறொன்றுமில்லை. வீட்டிலும், வெளியிலும், மூலையிலும், முடுக்கிலும், தெருக்கோடிகளிலும், வீட்டுத்தோட்டங்களிலும் "சடாக்வா"வைப்பற்றிய பேச்சுத்தான். சில வாலிபர்கள் ஒன்றுகூடி "மோடார்" வண்டிகளிலேறிக் கொண்டு தங்களுடைய "சடாக்வாவை"ப் பற்றி உரத்தகுரலில் சந்தோஷமாய்க் கூவிக் கொண்டு பவனிவருவார்கள்.

கடைசியில் அப்பெரிய கூடாரம் ஊருக்கு வந்துவிட்டது. அப்போது ஜனங்களுக்கிருக்கும் குதூகலம் சொல்லத்தரமல்ல. மானேஜரும் அவரைச் சார்ந்தவர்களும் கூடாரத்தை நாட்டுவார்கள். சீக்கிரத்திலேயே அக்கூடாரத்தின் வெள்ளை நுனி ஆடுகிறது; கூடாரத்தின் கொடிகள் நாலாபக்கமும் பறக்கின்றன; உள்ளே எல்லாம் தயாராயிருக்கும். வெகுகாலமாய் ஆவலுடன் எதிர்பார்க்கப்பட்டிருந்த ஆரம்பநாள் உதயமாகின்றது. நகராதிகாரி எழுந்திருந்து, "சடாக்வா"வைப் பொதுஜனங்களின் சார்பாக வரவேற்று உபசரித்து, 'ஜனங்கள் அவர்களிடம் கொண்டுள்ள விசுவாசத்தையும் அறிவிப்பார். அது முடிந்தவுடன் மின்சாரப் பொத்தானை அழுத்தியது போல் நிகழ்ச்சிமுறை ஆரம்பமாகும். கல்வி, வேடிக்கை, நாடகம், ஜாலம், சந்தோஷம் முதலியவைகளை அங்கமாய்க்கொண்ட வாரம் ஆரம்பிக்கப்படுகின்றது!

"சடாக்வா"க் கூட்டம் நடக்கும்போது, கடைகள், பாங்குகள், தபாலாபீசுகள் முதலியவைகளெல்லாம் மூடப்படும்; அங்குள்ள ஒவ்வொருவனும் "சடாக்வா" பூமிக்குச் செல்லுவான். அதுகாலை அவ்வொரு இடத்தைத் தவிர்த்து, வேறெந்த இடமும் ஒரே நிசப்தமாய் இருக்கும். தினந்தோறும் செவியுறும் சமுத்திரம்போன்ற பேரிரச்சலை அக்காலத்தில் கேட்கமுடியாது.

"சடாக்வா" வின் பணசம்பந்தமான பாகத்தைப்பற்றி யறிய அநேகர் விரும்பலாம். உள்ளூர்த் தலைவர்களடங்கிய கமிட்டியொன்று குறைந்தபக்ஷம் இத்தனை பிரவேச டிக்கட்டுகளாவது விற்பனையாகுமென்று "சடாக்வா" கம்பெனியாருக்கு உத்தரவாதஞ்செய்வார்கள். ஒரு "சடாக்வா" நிகழ்ச்சிமுறை நடத்துவதற்கு ஒருசிறிய கிராமத்தில் 600 ரூபாய் வரை பிடிக்கும். ஒரு பெரிய பட்டணத்தில் 12,000 முதல் 15,000 ரூபாய் வரையில் பிடிக்கும். ஒருவன் தனித்தனியாய்ப் பிரவேச டிக்கட்டுகள் வாங்கி, நடைமுறை மொத்தத்திற்கும் செல்வானேயானால் அவனுக்கு இருபத்துநான்கு முதல் இருபத்தேழு ரூபாய் வரையில் செலவாகும். ஆனால் ஒரே மொத்தமாய் டிக்கட்டொன்றை வாங்கினால் "சடாக்வா" நிகழ்ச்சி முழுவதையும் நான்குமுதல் ஏழுரூபாய்ச் செலவிலேயே கண்டுகளிக்கலாம்.

"சடாக்வா" இயக்கத்தினின்றும் ஜனங்களுக்கு உண்டான ஒரு அரிய நன்மை யாதெனில், பள்ளிக்கூட வசதியை அனுபவிக்காத ஜனங்களின் உபயோகத்திற்கென ஏற்படுத்தப்பட்டிருக்கிற "சர்வகலாசாலை விஸ்தரிப்பு" என்பதேயாகும். அமெரிக்க கல்வித்தலைவர்கள் வெகுகாலம் ஆலோசித்தபின்னர், கடைசியில் பின்வரும் முடிவிற்கு வந்திருக்கின்றனர்.

"பொதுஜனங்களில் மிகச்சொற்பத்தொகையினரே, அதுவும் வருடத்தில் சில மாதங்களே, பள்ளிகளில் வாசிக்கின்றார்களாதலால், இரஸாயனசாலைகள், வாசகசாலைகள், படிப்பதற்கான அறைகள், தேர்ச்சிபெற்ற அபாரபுத்தியுள்ள போதகர்கள் முதலிய சகல சௌகரி

நாலு ஆறு கூடி, ஒரு பாலாறு ஆயிற்று.

யங்களுடன்கூடி அறிவுக்கும், ஆராய்ச்சிக்கும் உறைவிடமாயிருக்கும் ஒரு பெரிய கலாசாலையை நாட்டின் ஏதோ ஒரு பாகத்தில் நிர்மாணம் செய்து அதை நடத்துவது, பெருந்தொகையினராகிய பொதுஜனங்களின் தேவைக்கு முற்றிலும் போதாததாகும். இராச்சியத்தில் அறிவே ஜீவாதாரமான சக்தியாய் இருக்கவேண்டும் பக்ஷத்தில் அது எல்லா ஜனங்களுக்கும் எட்டக்கூடியதாய் இருக்கவேண்டும். அது ஜனசமூகத்தின் அபிவிருத்திக்கு உழைக்கக்கூடியவர்களின் சக்திக்கு உட்பட்டிருத்தல் வேண்டும். சர்வகலாசாலையில் ஒன்றாய்த் திரட்டப்பட்ட அறிவை, சகலஜனங்களும் உபயோகப்படுத்துவதற்கான வழியொன்றை உண்டாக்குவதே "சர்வகலாசாலை விஸ்தரிப்பு" ஏற்பாட்டின் நோக்கமும் காரியமுமாகும்."

இத்தகைய உயர்ந்த ஜனநாயகக் கொள்கையைக் கடைபிடித்தே, தற்காலம் அமெரிக்காவில் அநேகமாய் எல்லாச் சர்வகலாசாலைகளிலும் ஜனங்களுக்குப் பிரகிருதிசாஸ்திரம், சரித்திரம், சித்திரம், மானிடதேக சாஸ்திரம் போன்ற பலவித சாஸ்திரங்களிலும், இன்னும் அவர்களுக்கு வேண்டிய ராஜீய, ஸமூக, நகரத்திற்குரிய விஷயங்களிலும் இதுகாறும் அவர்களுக்கிருந்த ஊக்கத்தையும் ஞானத்தையும் விருத்தி செய்வதற்கென்றே, பிரத்தியேகமாய் அநேக பிரசங்கிகளை நியமித்திருக்கிறார்கள்.

'சர்வகலாசாலை விஸ்தரிப்பு'க்கும், 'சடாக்வா' இயக்கத்திற்கும் சிற்சில வித்தியாசங்களுண்டு. விஸ்தரிப்புக் கிரமங்கள் பெரும்பாலும் பிரசங்கங்களாலேயே ஆக்கப்பட்டிருப்பதுமல்லாமல், அவைகள் போதனை சம்பந்தப்பட்டமட்டில் "சடாக்வா" வினுஞ் சிறந்தவை. மேலே சொல்லப்பட்டதில், வித்தியா விஷயங்களில் மாத்திரந்தான் பிரசங்கங்கள் நடைபெறுகின்றனவென்றுகூடச் சொல்லலாம். அவைகள் ஹாஸ்யரஸம் பொருந்தியிருக்கமாட்டா. எதுஎப்படியாயினும் 'சர்வகலாசாலை விஸ்தரிப்பு' ஏற்பாடு இராஜ்யத்தின் எல்லையையே சர்வகலாசாலைக் கட்டிடத்தின் எல்லையாகவும் ஜனங்களின் வீடுகளையே கல்வி கற்பிக்கப்படும் அறைகளாகவும் கொண்டிருக்கிறது. காலஞ்சென்ற W. T. ஸ்டெட் துரை, "சர்வகலாசாலை விஸ்தரிப்பு ஏற்பாடு சக்கரங்களுடன் கூடிய கலாசாலையாகும்" என்று கூறிய மொழிகளின் உண்மையை இதுகாலை எல்லோரும் காண்கிறார்கள்.

"சமூக வாழ்க்கையில் 'சடாக்வா' இயக்கத்தினால் இன்னின்ன பயன்கள்தாம் உண்டாயின" என்று சுலபமாய் கணக்கிட்டுக் கூற முடியாது. மொத்தமாய் அது அறிவை விருத்திசெய்யும் விநோதமான இயக்கங்களில் மிக்க நவீனமானது என்று மாத்திரம் நாம் திடமாய்க் கூறலாம். யாஜி அமெரிக்க ஐக்கிய மாகாண ஸ்தானாதிபதியான ரூஸ்வெல்ட் இதைப்பற்றிப் பேசும்போது, "முற்றிலும் ஜனங்களின் நன்மைக்கென்றே உண்டாக்கப்பட்ட இதைவிடச் சிறந்த இயக்கமொன்றை நான் கண்டதேயில்லை" என்று மொழிந்திருக்கிறார். உள்ளபடியே தேசீய எண்ணங்களை உயர்த்துவதிலும், கல்வியறிவைப் பரவச்செய்வதிலும், மானிடவர்க்கத்தை அபிவிருத்திக்குக் கொண்டுவருவதிலும் "சடாக்வா" இயக்கம் மிக்க அரிய, அதிசயிக்கத்தக்க வேலைகளைச் செய்துகொண்டுவருகின்றது.

---

பொறுமை.—பிறர் நம்மை நிந்திக்குமிடத்தும், நாம் பொறுமையாயிருப்பது நன்று. நம்மைவிட உயர்ந்தவர்கள், நம்மை நிந்தித்தால், நம்மிடம் ஏதோ குறையுளதென்றெண்ணி அதை நிவர்த்திக்க யத்தனப்படவேண்டும். நமது குறையை யெடுத்துக் கூறினதற்காக அப்பெரியோர்களிடம் நன்றி பாராட்டவேண்டும். நம்மைவிடத் தாழ்ந்தவர்கள் நம்மை நிந்தித்தால் அதை யோர்பொருட்டா யெண்ணாமல், மறுமொழியுஞ் சொல்லாமல் சும்மா விருப்பது நன்று. கீழ்த்தனமானவர்கள் செய்யும் நிந்தையை விவேகிகள் லக்ஷ்யஞ் செய்யார்கள். நமக்கு ஸமானமானவர்கள் நம்மை நிந்திப்பார்களாகில் அவர்களுக்குத் தக்க சமாதானஞ் சொல்வது கடமையே. அப்போதும் பொறுமையுடன் பதிலளிக்க வேண்டுமே யல்லாது, வரம்பு கடந்து வசனிக்க லாகாது. மேற்கூறிய நீதி லௌகீகர்களுக்கே யன்றி ஞானிகளுக்கல்ல. ஞானிகளும், ஸாதுக்களும் யார் எவ்விதமாய் நிந்தைசெய்தாலும் அதைப் பாராட்டார்கள். இதற்கு கங்காநதியே திருஷ்டாந்தம். பரிசுத்தமான கங்கையில் சாக்கடை ஜலம் விழுகிறது. அதற்காக கங்கை கோபங்கொண்டு வற்றிப் போகிறதில்லை. அதுபோல ஞானிகள் யாரிடமும் கோபங் கொள்ளார்கள். ஆகையினால் ஒருவன் பொறுமையைக் கைக்கொண்டால் யாதொரு இடையூறுமின்றி யுகமுடன் வாழக்கூடும்.





# திருப்பதி தேவாலயம்

## TIRUPATI TEMPLE

தூர நின்று கண்ணிற் படும்போதே பக்தியை விளைவிக்கும் வேங்கடாசலத்தின்மேல் திருக்கோயில் கொண்டருளிய ஸ்ரீ வேங்கடாசலபதியின் பூர்வ வரலாறுகள், (கடவுளின் மகிமை அறியக்கூடாதது என்பதை விளக்குவான்போல்) நன்கு தெரியவரவில்லை. இந்துக்களுக்கு இம்மூர்த்தியிடம் எல்லையில்லாப் பக்தியுண்டு. இந்தியாவிலுள்ள கோயில்களுள் திருப்பதிஒன்றின் காலவரையறை மாத்திரம் இன்னதென்று குறித்துச் சொல்லக்கூடாத அவ்வளவு பழமை மிக்கது. அநேக நூறு மைல்களுக்கப்பாலுள்ள நேபாளம், பூடான், காஷ்மீரம், கன்யாகுமரி முதலியவற்றினின்று பக்திமிகுதியால் கணக்கற்ற யாத்ரீகர்கள் இங்கு வந்து குவிகின்றனர். ஜகத்ரக்ஷகரான மஹா விஷ்ணு 28 யுகங்களுக்குமுன் உலகத்திலுள்ள பாமரர்களைக் கடைத்தேற்றும்பொருட்டு வைகுண்டத்தை நீத்து பூவுலகு புக்கார். கோயிலின் விக்ரஹம் முற்றிலும் 7 அடி உயரம் இருக்கிறது. மூர்த்தி, சங்கு சக்கரங்களை ஓரிரு திருக்கரங்களில் ஏந்திக்கொண்டு மற்றிரு கரங்களால் தனது பக்தர்களுக்கு முக்தி யளிக்கும் பாவனையாக இருக்கிறது. இவ் விக்ரஹத்தை சுயம்பு என்று கூறுகின்றனர்.

பூர்வம் மஹா விஷ்ணு, ஓர் அரண்யத்தில் குகையொன்றில் எழுந்தருளா நிற்ப, ஓர் பசு ஒவ்வொரு நாளும் மூர்த்தியின்மேல் பாலைச் சொரிந்து அபிஷேகஞ் செய்துவந்தது. நாளடைவில் அக்குகையே கோயிலாக மாறியது. பின்பு பிரமதேவர் அப்பணிவிடையை ஏற்று வெள்ளிக்கிழமை தோறும் பூஜை நடத்திவந்தார். இச்சடங்கு இன்றைக்கும் நடைபெறுகிறது. பிரமாவானவர் புரட்டாசி மாதத்தில் 9 நாட்கள் நடைபெறும் ஓர் திருவிழாவை பிரதிஷ்டை செய்தார். அன்றியும், அவர் விலைமதிக்க வொண்ணாத கிரீடமொன்றையும், வாகனங்கள் பலவற்றையும் காணிக்கையாகக் கொடுத்தார். இன்றைக்கும் நடத்தப்பெறும் இவ்வுற்சவந்தான் கோயிலின் வரும்படிக்கு முக்கிய ஆதாரமாகும். வேதங்களாலும், ஆழ்வார் திருமொழிகளாலும், புராணங்களாலும் சிறப்பிக்கப்பட்டிருக்கிற இத் திருப்பதியின் புராதன மேன்மையை இக்கோயிலின் தர்மகர்த்தர்கள் காத்துவருகின்றனர்.

பிரமதேவனும் தேவதைகளும், மஹாரிஷிகளும், அரசர்களும் செய்த தவத்தின் பழைய சின்னங்களை இப்போதும் இம்மலையின்மேல் காணலாம். இங்குதான் பிரமா, இந்திரன், குமாரசுவாமி, அகத்தியர், வசிஷ்டர் முதலியோர் தமது மனோரதத்தைப் பூர்த்தி செய்துகொண்டது. பிரமா எங்ஙனம் அப்போது தேவதைகள்முன் தோற்றினாரோ அங்ஙனமே மானிடர்க்கும் தரிசனம் அளிப்பதாக வாக்குறுதி செய்தார். தசரதர் இங்கு தவமியற்றியே இராமர் முதலான நால்வரைப் பெற்றார். அஞ்சனாதேவி வேங்கடாசலபதியை ஆசரித்து ஆஞ்சனேயரைப் பெற்றாள். சுக்ரீவன், ஆஞ்சனேயர், இராமர் முதலானோர் இராவண சம்ஹாரத்தின் பொருட்டு இலங்கைக்குப் போம்போது இம்மூர்த்திக்குக் காணிக்கைகளைச் செலுத்திச் சென்றனர். தொண்டைமான் சக்ரவர்த்திகளும், மற்றோரும் வேங்கடாசலபதியின் கடாக்ஷத்தால் தம் விரோதிகளை வெற்றி கொண்டனர்.

ஆயினும், புராண வரலாறுகளை நோக்கின், மஹாவிஷ்ணு மானிடரை இரக்ஷிக்கவென்றே பூலோகத்திற்கு வரவில்லை யென்றும், வைகுண்டத்தில் பரந்தாமன் தன்னிடம் அவமரியாதையாய் நடந்துகொண்டதால் முனிந்து கொண்டு மண்ணுலகெய்திய மலராளைத் தேடிக்கொண்டு திருமால் திருப்பதியை அடைந்ததாகத் தெரியவரும். ஸ்ரீதேவி இவ்வுலகிலேயே திருப்பதிக்கு 3 மைல் தூரத்திலுள்ள ஒரு கிராமத்தில் எழுந்தருளினள். இன்றைக்கும் அவள் அங்கிருக்கிறாள். அகாசன் என்னும் மன்னனின் மகளாகிய பத்மாவதியின்மேல் ஆசைகொண்டு மஹாவிஷ்ணு அவளை நாரத மஹரிஷியின் உதவியால் மணந்துகொண்டார். குபேரன் இந்த மஹோற்சவத்தின் செலவுகளை ஏற்றுக்கொண்டான். அதை இம்மூர்த்தி பக்தர்களின் காணிக்கைகளால் திருப்பிக்கொடுப்பதாகப் பாவனை. வேங்கடாசலபதியின் விவாஹ மஹோற்சவம் புரட்டாசி மாதத்தில் இந்த 9 நாட்களில் கொண்டாடப்படுகிறது. இக்காலத்திலேதான் அக்கோயிலின் வருமானத்தில் மூன்றில் இரண்டு பங்குக்குமேல் வசூலாகிறது.

ஓர் முறை மஹாவிஷ்ணு நாரத மஹரிஷியைப் பார்த்து, "ஓ நாரத! நான் கலியுகத்தில் சக்ரவர்த்திகளாலும், சோழராஜன் மகனாலும் வழிபாடுகள் செய்யப்பட்டு அவர்களினால் திருப்பதி மலையில் எழுந்தருளச் செய்யப்படுவேன்" என்று திருவாய்மலர்ந்தருளியதாக நாரத புராணத்தில் 8, 9 சர்க்கங்களில் கூறப்பட்டிருக்கிறது. சோழராஜர்கள் இயற்றிய கட்டிடங்களிலிருந்து இக்கோயிலின் பழமையை ஒருவாறு கூறலாம். ஆயினும், அதற்கு முன்னர் பூஜை நடந்துவந்ததோ, கோயிலின் கட்டிடங்கள் ஏதாவது இருந்தனவோ என்பன ஒன்றும் தெரியவில்லை. திருப்பதிக் கோயிலின் கட்டிடத்தின் தன்மையை நோக்கின், அது பலரால் பல காலங்களில் பலமுறைகளில் கட்டப்பட்டிருக்கிறதென்று தெரியவரும். முன்னேயுள்ள கோயிலின் மதிட்சுவரால் அநேக யுகங்களுக்கு முன் மஹாராஜா சங்கரன் என்பவன் சிறிதும்பெரிதுமான இரண்டு மண்டபங்களைக் கட்டுவித்தான் என்று தெரியவரும். வெளியிலுள்ள பிராகாரங்களில் இரண்டாவதை பரீக்ஷித்து மஹாராஜனும், வெளியேயுள்ள மதிலை அவனுடைய மகனாகிய ஜனமேஜயனும் கட்டியதாக வராஹபுராணம், ஸ்காந்தபுராணம் முதலியவற்றில் கூறப்பட்டிருக்கிறது. விக்ரமார்க்கன் அதற்கு 600 வருஷங்களுக்குப்பின் அக்கோயிலை அநேகமுறை சீர்திருத்தினான். நாளடைவில் அக்கட்டிடங்களும் இடிந்து பாழாக, காளஹஸ்திக்கு அருகில் அரசுபுரிந்த தொண்டமான் சக்கரவர்த்தி அவற்றை மறுபடி புதிய சிற்பமுறையாய் முதன்முதலில் கட்டினான். அவனைத்தான் இப்போதுள்ள கோயிலின் மூலகர்த்தா என்று கூறுகின்றனர்.

ஆரம்பத்தில் கட்டியனவும், பின்பு புதுப்பிக்கப் பட்டனவும் திராவிடர்களின் சிற்பத்தை அநுசரித்திருக்கின்றன. பலிபீடமும் அதன்மேலுள்ள விமானமும், பிராகாரத்துள்ளே போகும் கோபுரவாயில்களும், மூலஸ்தானத்திற்குப் போகும் மண்டபங்களும், சிற்பத்திறன் அமைந்த பூஜை மண்டபங்கள், உற்சவ பீடங்கள் முதலியனவும், மடைப்பள்ளியும், யாகசாலையும், தான்யவகைகள் இருக்கு மிடமும், மாட்டுக்கொட்டமும், கிணறுகளும், கொடிக்கம்பமும் சகலமும் கோயிலின் மதிலுக்குள்ளேயே அடங்கியிருக்கின்றன. அக்கோயிலின் கட்டிட முறைக்கும் சளுக்யர், புத்தர், ஜைனர் முதலியவருடையதுக்கும் யாதொரு சம்பந்தமும் இல்லை. திருப்பதிக்கோயிலிலுள்ள மற்றொரு விசித்திர மென்னவெனில், அந்நியர்களின் படையெடுப்பால் கர்ப்பக்கிரஹத்திற்குத் தீங்கொன்றும்உண்டாகாதபடி அதன்மேல் நிர்மாணிக்கப்பட்டிருக்கும் பிரமாண்டமான கோபுரம் இங்கு காணப்படாததாகும்: காஞ்சீபுரம், சிதம்பரம், ஸ்ரீரங்கம் முதலிய கோயில்களுக்குப்பூதாகாரமான கோபுரங்களைக்கட்டிய கிருஷ்ணதேவராயர், திருப்பதிக்கும் அங்ஙனம் செய்வது அவ்சியமன்றென்று எண்ணிவிடுத்தனர் போலும். அக்கோபுரம் எவ்வகையிலும் மற்றவைகளைவிடப் பெரிதாயிராமல் நடுத்தரமாகவே யிருக்கிறது.

கோயில் கிழக்குநோக்கி யிருக்கிறது. அதைச் சுற்றியுள்ள மதில்கள் 137 கஜம் நீளமும் 87 கஜம் அகலமும் 12 அடி உயரமும் இருக்கின்றன. அவற்றில் பலவற்றின்மேல் கல்வெட்டுகள் இருக்கின்றன. வெளியேயுள்ள சுவர்களின் வலதுபாதியின் மேலுள்ள லிகிதங்கள் நெருப்பால் அழிந்துபோயின. முதல் வாயிலின் வழியே பிரவேசித்தவுடன், கல்லாலான ஓர் தலைவாயில் காணப்படும். அதன் இருபக்கங்களிலும் சின்னதேவி, திருமலாதேவி என்னும் தன்னிரு மனைவிகளுடன் கிருஷ்ணதேவராயரும், வேங்கடப்தி ராயரும் முழு உருவத்தில் தாமிர விக்ரஹங்களில் நிறுத்தப்பட்டிருக்கின்றனர். வெங்கடபதிராயருக்குஇடதுபக்கத்தில் திருமலைராயரும் அவரது பட்ட மகிஷியும் கல்லில் முழுஉருவத்திற்குசெதுக்கி வைக்கப்பட்டிருக்கின்றனர். சமாதியடைந்தா லொழிய அரசர் முதலிய எவரும் கோயில்களில் இடம் பெறார்களென்றிருக்க இதை நோக்கின் விநோதமாகத் தோன்றுகிறது. இவ்வாயிலுக்கு எதிரேயுள்ள ஓர் சிறிய மண்டபத்தில் மூன்று விக்ரஹங்கள் இருக்கின்றன. அவற்றுள் ஒன்று கட்டித்தாமிரத்தாலும் மற்றவை தாமிரத்தகட்டினாலும் ஆகியவை. தெற்கேயுள்ள வாயிலுக் கடுத்தாற்போல் பிரமோற்சவகாலத்தில் உபயோகிக்கப்படுகிற ஓர் மண்டபம் இருக்கிறது. இதற்கு மேற்கே 12-ம் நூற்றாண்டின் சிற்பத்தைவிளக்குகின்ற $2\frac{1}{2}$ அடி உயரமான பீடமுள்ள 6 அடி சதுர மண்டபமொன்றுண்டு. இதன்மேல் சிற்பத்திறமை மிகுந்த $4\frac{1}{2}$ அடி உயரமுள்ள

நாலும் இரண்டும் சொல்லுக்கு உறுதி, ஆலும் வேலும் பல்லுக்கு உறுதி.



நான்கு ஸ்தம்பங்கள் நாட்டப்பட்டு ஒன்றுக்கொன்று இணைக்கப்பட்டிருக்கின்றன. தென்மேற்குமூலையில் 8பெரிய அறைகளுள்ள தானியம் முதலியவை சேர்த்துவைக்கும் இடம் ஒன்றுண்டு. வடமேற்கு மூலையில் ஓர் சிறிய ஊற்று காணப்படுகின்றது. அதற்கு 6 அடி நீளம் $4\frac{1}{2}$ அடி அகலம் 1 அடி உயரமுள்ள சவுக்கமான ஓர் பிடிச்சுவர் உண்டு. அதில் சில சமயம் தரைக்கு ஓரடி ஆழத்தில் 12 அடி ஜலம் நிற்பதுண்டு. ஓர்நதி கோயிலின் குறுக்கே ஓடி, வெளியே யுள்ள ஓர் குளத்திற்போய் விழுகிறது. வடக்குக் கோபுரவாயிலின் அருகில் மாட்டுக்கொட்டம்இருக்கிறது. கோயிலிலுள்ள மூர்த்திகளின்மேற் சாத்தப்பெற்ற புஷ்பங்கள் முதலியன யாவும் வடமேற்குக் கோடியிலுள்ள பாதிப் பிறை வடிவான கிணறொன்றில் கொண்டுபோய்ப் போடப்படுகின்றன.

இரண்டாம் பிராகாரத்தின் கோபுரவாயிலுக்கு அடுத்தாற்போல் ஓர் பளிங்கு மாளிகை கட்டப்பட்டிருக்கிறது. இப் பிராகாரத்திலுள்ள கொடிக்கம்பம் பூமிக்குமேல் 50 அடியும் கீழே 8அடியும் இருக்கின்றது. இப்பிராகாரம் முழுதும் கருங்கல் தளவரிசை செய்யப்பட்டிருக்கிறது. அவை தேய்ந்து தேய்ந்து கண்ணாடிபோல் வழவழுப்பா யிருக்கின்றன. கோயிலுக்குத் தேவையான ஜலமெல்லாம் தெற்குப் பக்கத்திலுள்ள ஓர் கிணற்றிலிருந்து எடுத்துக்கொள்ளப்படுகிறது. இதன் ஜலம் பளிங்குபோல் தெளிவாயும் சுத்தமாயும் இருக்கிறது. மேலும் அது ஒருபோதும் வற்றுவதே கிடையாது. தெற்குப் பக்கத்தின் முடிவில் மடைப்பள்ளியும், யாகசாலையும் இருக்கின்றன. மேற்குப்பாகம் முழுதும் பொன் வெள்ளி வாஹனங்கள் வைக்கப்பட்டு இரட்டைப் பூட்டுப் பூட்டி பதனப் படுத்தப்பட் டிருக்கின்றன. வடக்குப்பக்கத்தில் ஒன்றுமேஇல்லை. மூன்றாவது கோபுர வாயிலுக் கெதிரேயுள்ள மண்டபத்தில் ஸ்ரீ ராமாநுஜர் எழுந்தருளியிருக்கிறார்.

மூன்றாவது கோபுரவாயிலின் வழியே போனால் கர்ப்பக்கிரஹத்திற்குக் கொண்டுபோய் விடுகிறது. அதன் தெற்குப்பக்கத்தில் இரண்டு கண்டாமணிகள் தொங்குகின்றன. கோயில் ஹுண்டி வடக்குப் பக்கத்தில் இருக்கிறது. இதை ஓர் ஆயுதபாணியான ஜவான் காத்து வருகிறான். வேங்கடாசலபதிக்குச் செலுத்தும் காணிக்கைகளை இந்த ஹுண்டியில்தான் போடவேண்டும். கண்டாமணிகள் இரண்டும் உருவத்தில் மிகப்பெரியனவாயும், அதிக கனமானவையாயும் இருக்கின்றன. அவைகள் சப்திக்கும்போது ஒன்று கோவிந்தாவென்றும் மற்றொன்று நாராயணாவென்றும் உச்சாரணம் செய்வதாகக் கூறுவர். அவற்றின் மேலுள்ள வெட்டுகளால் அவை சுமார் 150 வருஷங்களாக உபயோகப்பட்டுவருவதாக அறியலாம். நெடுநாளாக அவற்றை அடிக்கடி உபயோகித்து வந்தும் அதனால் அவைகளுக்கு ஒருவித கெடுதியும் உண்டானதாகத் தெரியவில்லை. சுமார் $54\frac{1}{4}$ மணங்கு நிறையுள்ள மற்றொரு கண்டாமணி 1876-ம் வருஷம் தயாரிக்கப்பட்டது. அதற்குப் பிடித்த செலவு ரூ.1,106-8-6ஆகும். இதை ஆராதனை காலங்களில் உபயோகிக்கின்றனர். கோயிலின் நடுவிமானத்தின் கீழே வேங்கடாசலபதி ஸ்வாமி பிரதிஷ்டை செய்யப்பட்டிருக்கிறார். பொன்னாலும் வெள்ளியாலும் தாமிரத்தாலும் ஆகிய பலவிக்ரஹங்கள் மூர்த்தியைச் சுற்றிலும் நிறுத்தப்பட் டிருக்கின்றன. அதிக விலைமதிப்புள்ள ஆபரணங்களும், பாத்திரங்களும் இங்குதான் இருக்கின்றன. இவைகளை எவ்வளவு குறைவாக மதிப்பிடினும் 50 லக்ஷம் ரூபாய்க்குமேலாகும்! இந்த கர்ப்பக்கிரஹத்தைச்சுற்றி சிறிய மதிலொன்றெடுக்கப்பட் டிருக்கிறது.

திருப்பதி கோயிலுக்கு வெளியே பல மண்டபங்கள் இருக்கின்றன. அவைகள் சோழர்களாலோ ராயர்களாலோ கட்டப்பட் டிருக்கலாம் என்று தோன்றுகிறது. கோயிலின் சந்நிதியில் மதிலுக்கு வெளியே ஆயிரங்கால் மண்டபம் கட்டப்பட்டிருக்கிறது. துவாரபாலகர்கள் குதிரைகளின்மேல் ஏறியிருக்கும் பாவனையாக அவற்றில் சிற்பவேலை செய்யப்பட்டிருக்கிறது. கோயிற் குளத்தின் வடமேற்கு மூலையில் சிற்பத்திறமை பொருந்திய கல் தேரொன் றிருக்கிறது. மலையின்மேல் ஏறிச்செல்லும் கற்படிகளும், மலையின்மேலுள்ள தளமும் ராமதேவ ராஜனால் போடப்பட்டவை. அப் படிகளில் அநேக பாஷைகளில் கல்வெட்டுகளோ அல்லது நமஸ்கரித்தவாறுள்ள உருவங்களோ செதுக்கப்பட்டிருக்கின்றன.

வேங்கடாசலபதிக்கு ஜனங்கள் தமது மனோரதங்கள் நிறைவேறும்பொருட்டு சிலர் கோயி

நால்வர் வாக்குத் தேவர் வாக்கு.

லின் தரையில் உருண்டுகொண்டு போவதாகவும், சிலர் முடிகொடுப்பதாகவும், காணிக்கை செலுத்துவதாகவும் பலவகையாய் வேண்டுதலை செய்துகொள்வர். பின்பு, அவரவர்களுடைய வேண்டுதலை நிறைவேறியவுடன் அதைச் செலுத்துவதற்காகத் திருப்பதி மலைக்குச் செல்வார்கள். இங்ஙனம் பிரதாபருத்ர ராஜன் என்பவன் 18-லக்ஷம் ரூபாய் பொறுமான மரகதமணியாலான மாரணி யொன்றை காணிக்கையாகச் செலுத்தினான். கோயிலுக்குச் சொந்தமான ஆபரணங்கள் அநேகமாய் ராஜாக்கள் மஹாராஜாக்கள் மஹாராஷ்டிர அரசர்கள் முதலியோரின் காணிக்கைகளே யாகும். அவற்றின் ஜாப்தா மிகப் பெரியது.

வேண்டுதலை மறந்துவிடப்படுமானால் கனவினில் வேங்கடாசலபதி வந்து அதை நினைப்பூட்டுவதாகச் சொல்லுவார்கள். கோயில்களிற் அநேகம் ஏதோவொரு காலத்தில் பிரபலமாயிருந்து பின்பு அதோகதி அடைந்ததாகக் கேட்டிருக்கிறோம். ஆனால் திருப்பதிக் கோயிலை நோக்கின், அதன் வருமானம் நாளுக்கு நாள் அதிகரித்துவருவதும் தவிர, நாகரீகம் வளர வளர அதனிடம் ஜனங்களுக்குள்ள பக்தியும் விருத்தி யடைந்துவருகிறது. கர்ப்பக்கிரஹத்தில் வேங்கடாசலபதிக்கு முன்னே ஸ்ரீசங்கராசாரியர் சூக்ஷ்மமான சக்கரமொன்றை அமைத்தனர். இச்சக்கரத்தின் மகிமையால் கணக்கற்ற பணமும் ஜனங்களும் வந்து குவிகின்றனர்.

முன் சென்னை கவர்னராய் இருந்த ஸர் தாமஸ் மன்ரோ மலையின்மேல்ஏறிக்கோயிலைப் பார்க்க விரும்பினாராம். ஆனால் வேங்கடாசலபதி அவருடைய கனவில் தோன்றி அவரைத் தம்மிடம் வரக்கூடாதென்று பயமுறுத்தித் தடுத்துவிட்டாரென்று ஓர் பழங்கதை வழங்குகிறது. அதனால்தான் ஐரோப்பியரொருவரும் அம்மலையின்மேல் போகக்கூடாதென்று உத்தரவு பிறப்பிக்கப்பட்டதாம். இப்போதும் அப்படியே நடந்துவருகிற தாயினும், சில ஐரோப்பிய ராஜாங்க உத்தியோகஸ்தர்கள் மாத்திரம் குறிப்பிட்ட ஓர் காலம்வரையில் அங்கிருக்க இடங்கொடுக்கப்பட் டிருக்கின்றனர். ஸர் தாமஸ் மன்ரோ ஓர் தரிசு நிலத்துக்குப் பதிலாக ஓர் நஞ்சை நிலத்தைக் கோயிலுக்கு விட்டுவிட்டதற்காக அவருடைய பெயரால் ஒவ்வொருநாளும் அன்னம் நைவேத்யம் செய்யப்படுகிறது.

நிற்க, திருப்பதிக் கோயிலின் நிலைமை திருப்திகரமா யில்லை. பல மண்டபங்கள் தாழ்ந்துபோயும், கோபுரவாயில்கள் புதுப்பிக்கப்படாமலு மிருக்கின்றன. கோயிலின் நிர்வாகமும் நன்றாயில்லை. இவற்றை சீக்கிரம் கவனித்து தக்க ஏற்பாடுகள் செய்வார்களாக. ஸ்ரீ வேங்கடாசலபதி அருள்புரிவாராக.

---

# உண்மை

## TRUTH

உண்மை பிரகாசமுடைய தாகையினால் பொய்மை மயக்கங் கொண்ட கண்களுக்கு அதைக் கண்டால் கூசுதலேற்படும். இவ்வுண்மையைப் பிரத்தியட்ச அனுமானத்தால் கண்டறியவேண்டுமாயின், வெகு சுலபமாக, ஆனால் வெகு திட்டமாக அறியலாம். கபடத்தன முடையவனை அவனுடைய முகத்துக்கு நேரில் ‘கபடன்’ என்று கூறினால், அவன் உடனே சீற்றங்கொள்வான். லோபக் களஞ்சியமா யுள்ளவனைப் பார்த்து ‘லோபி’ என்றால் அவனுக்கு அது சிறிதும் பிடிக்காது. பேராசைப் பெட்டகமாயுள்ளவனை நோக்கி “நீ பேராசைக்காரன்” என்றுரைத்தால் அவன் சொன்னவனை விழுங்கலாமா வென்று யோசிப்பான். குரூபியை ‘ஏ! எட்டேகால் லட்சணமே’ என்றால் அவனுக்கு அது நேர்வாள மருந்தாகவிருக்கும். உண்மையைச் சொன்னால் உலகமே வெறுக்கிறது. உலகமென்பது உயர்ந்தோர் மாட்டதாயிற்றே, அத்தகையோர் வெறுப்புக் கொள்ளக் காரணமில்லையே என்ற கேள்வியெழும். ஆகையினால் நம்முடைய உலகம் தாழ்ந்தோர் மாட்டது. உயர்ந்தோர் என்போர் எதில் உயர்ந்தவர்களென்றால், மாற்றில். தாழ்ந்தோரும் அப்படியே மாற்றில் தாழ்ந்தோர். மாற்றில் உயர்ந்தோரிடம் பிரகாசம் விளங்கும். மாணிக்கம், வயிரம் முதலிய முழுமணிகளிடம் உள்ளதுபோல, மாற்றில் தாழ்ந்தோர்களிடம் இருள் மிகுந்து நிற்கும். பல வர்ணக் கண்ணாடிகள்போல உண்மைக்கு என்றும் எல்லாவிடங்களிலும் எப்படிச் சிறப்புண்டோ, அப்படியே மாற்றிலுயர்ந்தோர்களும் என்றும் எப்பொழுதும் எல்லா விதங்களிலும் சிறப்படைவார்கள். உண்மைக்கு ஆயுள் இறுதி கிடையாது. பொய்மை அற்ப ஆயுள்கொண்டது. ஒருவன் பொய்மை மமயக்கங்கொண்டிருந்தால், அது சொற்ப காலத்துக்கே ஆகும், உண்மையாகிய ஆதித்தன்-ஞான சூரியன்-அவனது உள்ளத்தில் பிரகாசஞ்செய்யும் வரையிலுந்தான். சூரியன் உதயமானதும் இருள் இருந்தவிடந் தெரியாது ஒழிந்து ஓடிவிடுவதுபோல, பொய்மை மயக்கங் கொண்டவர்களுக்கும் ஞான முதயமாயின மாத்திரத்தில் மனமாசு நீங்கிவிடும். ஞானமுதயமாகாத உள்ளமு முண்டு. இத்தகைய உள்ளமுடையோர், உலகத்தின் வட தென் துருவங்களுக்கு ஒப்பாவர். வட தென் துருவங்களில் சூரிய உதயம் அஸ்தமனம் கிடையாது. வருஷத்தின் பெரும்பாகமும் ஒருவிதமான சொற்ப வெளிச்சமுண்டு. மற்றக் காலங்களில் ஓரே இருள், கரிய மை போன்ற இருள். இத்தகையோருக்கு பிறர் எடுத்துக்காட்டும் உண்மையாகிய பிரகாசம் தோன்றினாலும் உடனே அந்தகாரம் மூடிவிடும். கடவுள் காருண்யர். எல்லாவற்றிலும் நன்மை, தீமையாகிய இரண்டையும்காட்டி யுதவியுள்ளார். தீமையினுடைய தீத்தன்மையினால் நன்மையினுடைய நலமுடைமை விளங்குகிறது. மனிதருக்கும் சித்தம் புத்தியென்று இரண்டைக் கொடுத்திருக்கிறார். இவ்விரண்டையும் அகங்காரம் என்னும் துலாக்கோலில் மாட்டித் தொங்கவிட்டிருக்கிறாரென்னலாம். ஆகையினால் சித்தமும் புத்தியும் சரியாக சமநிலையில் நின்றால் மாத்திரமே ஞானம் உதயமாகும். சித்தம் ஒரு வழியாகவும் புத்தி வேறுவழியாகவும் போகுமேயானால், தராசுத்தட்டின் ஒருபுறம் தாழவும் மற்றொன்று உயரவும் ஆகும். நாம் காணும் பலருக்கு கூர்மையான புத்தியிருக்கக் காண்கிறோம். ஆனால் அத்தகையோருக்குச் சித்தம் வேறு வழியிற் செல்லக் காண்கிறோம். ஒரு சிலருக்குச் சித்தம் சிறந்த வழியினதா யிருக்கக் காண்கிறோம். ஆனால் புத்தி அதற்கு மாறாகிய தன்மையிலிருக்கக் காண்கிறோம். இவ்வுண்மையை யல்லவா நக்கீரர் காட்டினிடமாகப் பூஜை புரியுங் காலையில் குளக்கரையில் நடந்த சம்பவம் வெளியிடுகிறது. ஒரு ஜந்து அங்கே தோன்றியது. அதனுடைய பாதி யுருவம் பறவை, மற்றைப் பாதி மச்சம். மச்சம் பறவையை ஜலத்துக்குள் வலிந்துபற்றி யிழுத்தது. பறவை மச்சத்தைத் தரைப்புறமாய் வலித்தது. இவ்விதமாகிய ஜந்துவினால் யாது பயன்? இதேமாதிரியான மனிதர்களால் யாது பயன்? பறவை பறவையா யிருக்கவேண்டும். மச்சம் மச்சமாயிருக்கவேண்டும். மனிதன் மனிதனாயிருக்கவேண்டும். சித்தமும் புத்தியும் ஒன்று கூடி விளங்கவேண்டும். காகத்தைக் காகமென்று கூறாது வேறென்னவென்று சொல்வது? மயில் என்றும் மயில்தானே. நாரையும் அப்படித்தானே. சிங்கம் சிங்கம்தான். குதிரை குதிரையே. யானை ஒட்டகமாகாது. அறிவாளி அறிவாளியே. அறிவிலி அறிவிலியே. சித்தம் சித்தமே. புத்தி புத்தியே. இவை இரண்டும் ஒன்றுபட்டால் பாலும் பாலும், நீரும் நீரும், பாலும் நீரும், நீரும் பாலும் வேற்றுமை தோன்றாது கலப்பதுபோல, உண்மை உண்மை யெனவும், பொய்மை பொய்மை யெனவும் விளங்கும். உண்மையை விரோதிக்கிறவன் மானிடருடன் வசிக்கவேண்டாம். கானகஞ் செல்லுதல் அமைவுடையதாகும். உண்மை, உண்மை, உண்மை, என்றும் எக்காலத்திலும் உண்மை வேண்டும். இப்படியாக நாம் ஓங்கி உரைக்கவேண்டும்.





---

பஞ்சரத்தினம்.—* * பிள்ளை, தந்தையிடத்தும் தாயிடததும் நடந்துகொள்ளவேண்டிய முறையும், மனைவி புருஷனிடத்து நடந்துகொள்ளவேண்டிய முறையும், சகோதரர்கள் நடந்துகொள்ள வேண்டிய முறையும் வேறு பலநீதிமுறைகளும் இப்பஞ்சரத்தினங்களின் சரித்திர வாயிலாக நனகு விளக்கப்பட்டுள்ளன. இவ்வைவர் சரித்திரத்தையும் சுருக்கமாக முறைபடுத்திச் செய்திருப்பது ஆசிரியர் திறத்தைக் காட்டுகிறது. இந்நூல சிறுவர்க்கும் பெரியார்க்கும் - ஆண் பெண் இருபாலார்க்கும் பயன்படுமாறு நல்ல தமிழ் நடையில் எழுதப்பட்டுளது. இந்நூலின் உள்ளுறை படிப்போர் மனதைத் தன்வழியீர்க்குந் தன்மையது. இந்நூல் ஒவ்வோர் இந்து குடும்பத்திலுமிருக்க வேண்டுவது அவசியமாகும். துரைத்தனத்லாரால் அங்கீகரிப்பட்டது.

## சாமான்களின் விலை குறையுமா ?

## WILL THE PRICES FALL ?

சாமான்களின் விலை இப்படியே அதிகமாயிருக்குமா? அல்லது குறையுமா? இக்கஷ்டத்தை நிவர்த்திப்பதற்குரிய வழிகள் என்ன ?

சாமான்களின் விலை விஷயத்தைப்பற்றி தற்காலம் முடிவாகச் சொல்வது அசாத்தியமான விஷயம். விலை அதிகப்பட்டதற்குக் காரணம் எல்லாருக்கும் நன்றாய்த் தெரியும். யாரைக் கேட்டாலும் ஐரோப்பாவில் நடந்த மகாயுத்தம் இம்மாதிரி செய்துவிட்டதென்று சொல்லுவார்கள். சாகுபடி செய்துகொண்டிருந்த ஜனங்களெல்லோரும் யுத்தத்துக்குக் கொண்டுபோகப்பட்டார்கள். சாதாரணமாக நடந்துகொண்டுவந்த கைத்தொழிலும் குறைந்துவிட்டது. ஆகவே விளைபொருள்களும் கைத்தொழிற் சாமான்களும் குறைவுபட்டன. அநேக கப்பல்கள் முழுகிப் போயின. சாமான்களின் இறக்குமதி ஏற்றுமதி குறைந்து போயின. ஒரு தேசத்திலிருந்து மற்றொரு தேசத்துக்குப் போய்க்கொண்டிருந்த சாமான்கள் போகமுடியாமற் தடைபட்டன. ஆகையால் பல வருஷங்களாக இப்படியாகவே, அதாவது, சாமான்கள் குறைந்து, தொழிலாளிகளும், அதிகமாயில்லாமற் போகவே, தொழிலாளிகளும் அதிகப் படுத்தும்படியாய் ஏற்பட்டது. அவர்களுடைய கூலியையும் அதிகரிக்கும்படியாய்விட்டது. சண்டை கடோரமாக நடந்து கொண்டிருந்தபொழுது, கவர்ன்மெண்டார் தங்களுக்கு வேண்டிய உணவு சாமான்களைத் தருவித்துக் கொடுக்க, கண்ட்ராக்டர்கள் ஏற்படுத்தவே, விலை மேன் மேலும் அதிகரித்தது. இதெற்கெல்லாம் சர்க்காரில் அதிகப்பணம் நோட்டுகள் மூலமாக புழங்கிக் கொண்டிருந்ததினால் அதயனுடை வருத்தம் அதிகமாகத் தெரியவில்லை. சண்டைக்கு முன்னால் இருந்த கூலியாட்களோ அதிகமாகவில்லை. பணம் அதிகமாகப் புழங்கவும் சாமான்கள் குறைவாயிருந்ததாலும் சாமான்களின் விலை அதிகமானதற்குக் காரணங்கள் என்று தெளிவாய் விளங்கும். சண்டை நின்றவுடன், சாமான்களின் விலை குறைந்து போய்விடும் என்று எல்லோரும் எண்ணியிருந்தார்கள். சண்டை நின்று இரண்டு வருஷங்களாகிவிட்டன. சாமான்களின் விலையோ குறைந்தபாடில்லை. இதற்குக் காரணம் என்னவென்றால், ஐரோப்பாவிலுள்ள தேசங்களெல்லாம் முன்னிருந்த நிலைமைக்கு வரவில்லை. யுத்தத்துக்கு முன்னே விளைந்துகொண்டிருந்த அளவு இப்பொழுது விளையவில்லை. கையிருப்பில் இருந்த சாமான்களெல்லாம் செலவழிந்து போய்விட்டன. கைத்தொழில் இயந்திரங்களெல்லாம் அவைகள் இருந்த விடத்தைவிட்டுப் பெயர்ந்தன. சில அழிக்கப்பட்டன. பணமும் அதிகமாகச் செலாவணி ஆகவில்லை. ஐரோப்பாவிலுள்ள தேசங்களிலெல்லாம் கரன்ஸி நோட்டுகள் செல்லுவதில்லை. நாணயம்தான் செலவாணிக்கு உபயோகமாகும். இவைகள் கிடைப்பதோ அரிது.

இந்தக் கஷ்டங்களெல்லாம் நீங்கவேண்டுமானால் பல வருஷங்கள் பிடிக்கும். அந்தந்த தேசத்திலுள்ள விளைபொருள்களும் கைத்தொழில்களும் முன்னிருந்த நிலைமைக்கு வரும் வரையில் இந்தப்படிதான் இருக்குமென்பதற்குச் சந்தேகமில்லை. விளைவுப் பொருள்களும், கைத்தொழிற் சாமான்களும் அதிகரித்துக்கொண்டே வந்தால் சாமான்களின் விலையும் நாளடைவிற் குறைந்துகொண்டே வந்துதான் தீரவேண்டும்.

பல ஜனங்கள் பருத்திவிலை குறைந்திருக்கிறதே, ஏன் துணிவிலை குறையக் கூடாது என்று கேட்கிறார்கள். பருத்தியை வாங்கித் துணி நெய்யும் ஐரோப்பிய தேசங்களில் பணப்புழக்கம் கிடையாது. இவர்கள் சாமான்கள் வாங்கவேண்டுமானால் தங்க நாணயம் கொடுத்தால்தான் வாங்கமுடியும். அல்லது, தங்களுடைய சாமான்களை ஏற்றுமதிசெய்து அதின் விலைக்குப் பதிலாக இதர சாமான்களை மாற்றிக்கொண்டால் சரிப்பட்டுவரும். இவை இரண்டும் செய்யப் பணமுமில்லை சாமான்களும் இல்லை. நம்முடைய இந்தியாதேசத்தில் போதுமான இயந்திரங்கள் வைத்து இந்தக் காலம் துணிகள் நெய்து விற்கமுடியுமேயானால், ஜனங்களுக்கு அதிக அனுகூலமாகும். இத்தேசத்திலே இப்படி கைத்தொழிலிற் பிரயாசை எடுத்துக்கொள்பவர் அரிது. ஆகையால் துணி விலை குறையவேண்டுமானால் ஐரோப்பாவிலுள்ள இயந்திரங்கள் வேலைகளைத் தொடங்கவேண்டும். அல்லது இந்தியாவில் இயந்திரங்கள் அதிகமாக ஏற்படவேண்டும். இவைகள் இரண்டும் சமீபத்தில் நடக்கக் கூடியதாகவில்லை. இதேமாதிரி, உணவுக்கு வேண்டிய நெல், கோதுமை, சர்க்கரை முதலான சாமான்களுக்கும் அவைகளெல்லாம் இதரதேசங்களில் அதிகமாக சாகுபடியாகி முன்னிருந்த விளைவு வரும்வரையில் விலை குறையாது அப்படியே இருக்கும். அப்படி வரவேண்டுமானால் ஐரோப்பிய தேசங்களின் ஜனங்கள் சமாதான ஸ்திதிக்கு வந்து தங்கள்விவசாயத்தையும் கைத்தொழில்களையும் விருத்தி செய்தால் அதிகமாகத் தானியத்தை வேண்டமாட்டார்கள். விலையும் குறைந்துகொண்டு வந்தே தீரவேண்டும். இப்படிச் செய்ய பல வருஷங்கள் ஆகுமாதலால் இந்தியாவிலுள்ள விளைவுப் பொருள்களை அதிகப்படுத்த வேண்டுவது அவசியம். நம்முடைய தேசத்துக்கு வேண்டிய பல சாதனங்களையும் சுலபமாக நாமே எளிதிற் செய்துகொள்ள இதுதான் தகுந்த காலம். பெரிய யுத்தம் நடந்து கொண்டிருந்த பொழுது ஜப்பான், சீனா முதலான தேசங்களிலிருந்து இந்தியாவுக்கு வேண்டிய சாமான்கள் இறக்குமதி செய்யப்பட்டன. இத்தேசத்திலுள்ள பணமெல்லாம் இதர தேசங்களை விருத்திசெய்ய உபயோகமாயிற்று. நம்முடைய தேசத்தாரும் ஏன் தங்களுக்கு வேண்டிய சாமான்களை உள் நாட்டிலேயே செய்துகொள்ள பிரயாசை யெடுத்துக் கொள்ளக்கூடாது? எல்லாரும் ஒன்றுசேர்ந்து கைத்தொழில்களையும் விவசாயத்தையும் விருத்தி செய்தாலொழிய, நம்முடைய தேசத்திலுள்ளவர்கள் முன்னுக்குவரக் காரணமில்லை. ஆகையால் கவர்ன்மெண்டார் இது விஷயத்தில் வேண்டிய பொருளுதவியும், கல்வித் தேர்ச்சியும் கொடுக்கவேண்டுவது அவசியம். இப்படிச் செய்தால் எங்கும் சுபிக்ஷம் உண்டாகும்.

---

## ஐக்கிய நாணய சங்கங்களும் எலிமெண்டரி பாடசாலைகளும்

## CO-OPERATIVE CREDIT SOCIETIES & ELEMENTARY SCHOOLS

[ஸ்ரீமான் C. வேங்கடேசய்யர், பி.ஏ., எல்.டி.]

### கூடிற் பயன் படல்

செத்தைபல கூடியொரு கயிறனது கொண்டு
 திண் கரியையுங் கட்டலாம்
திகழ்ந்தபல துளிகூடி யாறுயின் வாவியொடு
 திரளேரி நிறைவிக்கலாம்
ஒத்தநுண் பஞ்சுபல சேர்ந்து நூலாயிடி
 னுடுத்திடுங் கலையாக்கலாம்
ஓங்கிவரு கோலுடன் சீலையுங் கூடினு
 லுயர் கவிகை யாக் கொள்ளலாம்
மற்றுமுயர் தண்டுலத்தோடு தவிடுமி கூடின்
 மல்குமுளை விளைவிக்கலாம் [வர்
மனமொத்த நேயமொடு கூடியொரு வர்க்கொரு
 வாழின் வெகு வெற்றி பெறலாம்
அற்றகனி யைப்பொருத் தரிபிரமர் தேடரிய
 வமலனே யருமை மதவேள்
அனுதினமு மனதினிலை தருசதுர கிரிவளர்
 றப்பளீசுர தேவனே !

மேற் காட்டிய செய்யுளின் கருத்தைப் பூர்த்தி செய்யும் நோக்கங்கொண்டே ஐக்கிய நாணயச் சங்கங்கள் ஏற்பட்டுள்ளன. சங்கத்தினங்கத்தினர் ஒவ்வொருவரும் தகுந்த சிரத்தையுடன் உழைத்தாலன்றி சரிவர சங்கம் நடை பெறுவதரிது. இதுபற்றியே கவியில் 'மன மொத்த நேய மொடு கூடியொருவர்க்கொருவர் வாழின் வெகு வெற்றி பெறலாம்' என்றார். இவ்வாறு ஏற்பட்டுள்ள சங்கங்களில் பஞ்சாயத்தார்களைத் தேர்ந்தெடுக்குங்கால் தங்களுள் யாரிடம் முழுநம்பிக்கை யிருக்கிறதோ அவர்களையே நியமிக்கிறார்கள். அவ்விதமமைந்துள்ள கமிட்டியை பொது ஜனங்களால் சரியானபடி தேர்ந்தெடுக்கப் பெற்ற பிரதிநிதிகளடங்கிய பஞ்சாயத்தெனவே கொள்ளலாம். சங்கங்களும் கட்டிட இலாகா சட்டங்களின்படி ரிஜிஸ்டராவதால் கவர்ன்மெண்டாரால் ஏற்படுத்தப்பெற்ற சட்டதிட்டங்களின்படி நடந்துவரும் சபைகளு மாகின்றன.

ஏற்ற விதிகளின்படி சர்க்கார் உத்தியோகஸ்தர்களின் பரிசீலனைக்குத் தங்கள் கணக்குகளை உட்படுத்தி அவ்வப்போது வேண்டிய சீர்திருத்தங்களைச் செய்வித்து அலுவல் நடத்துவதால் சரியானபடி லேவாதேவி நடைபெறவில்லையென்றுசொல்ல நாவெழாது. அவ்விதம் தணிக்கை செய்துள்ள கணக்குகளில் பிழையுமிரா.

இம்முறையின்கண் ஏற்பட்டுள்ள சங்கங்களும் இனி ஏற்படும் சங்கங்களும் பொது நன்மையை நாடியே யமைந்து வருவதால் பலர் சேர்ந்ததாலாய பயன் யாவர்க்கும் பொதுவென்று கருதி, கிடைக்கும் லாபத்தில் ஒரு பங்கு பொதுநன்மைக்கென்று தீர்மானித்திருப்பதை சங்க விதிகளிற் காணலாம்.

பொதுஜனக்கூட்டத்திற்கு உபயோகமாகும் பொருட்டு ஏற்கனவே கட்டப்பட்டுள்ள இடங்களும் உள. இன்றேல், பஞ்சாயத்து சபை கூடவும், கணக்குகள் வைக்கவும் வேண்டி அநேக இடங்களில் லாபத் தொகையிலிருந்து கட்டிடம் புதுப்பிப்பதும் உண்டு. இச்சபைகளில் நாற்காலி, மேஜை, பலகைகள், பெஞ்சு, பேனா, மைக்கூடு முதலியன இருக்கவேண்டியது அவசியம்.

பஞ்சாயத்து சபையிலுள்ளவர்களில் ஒருவரோ அல்லது பிரத்தியேகமாக நியமிக்கப்பட்ட ஒருவரோ சங்கத்தின் கணக்குகளை சரிவரப்பார்த்து வருகிறார் என்பது யாவருக்கும் தெரிந்த விஷயம். அக் கணக்குப்பிள்ளைக்கு மாதச்சம்பளமோ அல்லது வருஷக்கடைசியில் லாபத்தில் ஒரு வீதாசாரமோ கொடுத்துவருவதும் வழக்கமேயாம். இவ்வீதாசாரம் சபைக்குத் தகுந்தபடி பேதப்படும்.

அநேக இடங்களில் இத்தொழிலை மாத்திரம் பிரத்தியேகமாகப் பார்த்துவருபவர் அரிது. வேறு தொழில்களில் அமர்ந்துள்ளோர்கள் தங்கட்கு ஒழிந்த நேரத்தில் இவ்வலுவலைச் செய்வதாக ஒப்புக்கொண்டு வருகிறார்கள். இதற்காகத் தனி குமாஸ்தா ஏற்படுத்தி நடத்திவரும் சங்கங்க ளநேகமிரா.

இக்கணக்குப் பிள்ளையின் முக்கிய அலுவல்களில் சிலவற்றை இங்கு விவரிப்போம்.

சபையின் மெம்பராகுமுன் விண்ணப்பம் வாங்கி, வேண்டிய சங்கதிகளைக் குறித்துக் கொள்பவர் இவர்.

லேவாதேவி செய்யுமிடத்து அடிக்கடி கொடுக்கல் வாங்கல் செய்வது மிவர்தாம்.

வசூலாகும் தொகையை அன்றாடம் கணக்குடன் சேர்த்து பிரசிடெண்டிடம் கொடுத்து கையொப்பம் வாங்கி வருபவருமிவரே.

பஞ்சாயத்து, சங்கம் இவைகளின் முன் வைக்க கணக்குகள் தயாரிப்பவரும் சங்கதிகளை விவரித்துக் கூறுபவரும் இவர்தான்.

மேற்கூறியவைகளி னின்றும் இக்குமாஸ்தா தினசரி பஞ்சாயத்து மெம்பர்களுடன் கலந்து ஆலோசிப்பதும், அடிக்கடி மெம்பர்களைச் சந்தித்துப் பேசுவதும், அவர்களும் இவரிடம் முழு நம்பிக்கை வைப்பதுமாக விருப்பதால் சற்றுசெல்வாக்குள்ளவரென்றே எண்ணலாம்.

கல்வியின் பெருமையைப்பற்றியும், ஒவ்வொரு கிராமத்திலு மிருக்கும் பிள்ளைகள் எல்லோரும் நன்றாய்ப் படிக்க வேண்டுமென்பதைப்பற்றியும் எடுத்துரைக்கின் விரியும். பெரியோ ரியற்றிய 'எண்ணு மெழுத்தும் கண்ணெனத்தகும்' என்றது உண்மையென யாவரும் அறிவர்.

இனி நாம் கவனிப்பது யாதெனின், கிராமங்கள் தோறும் பாடசாலைகள் ஸ்திரமாக ஏற்பட்டு கிரமமாக நடைபெறுவதற்கு வேண்டிய முக்கிய சாதகங்கள் என்ன? மேற்குறித்த சங்கங்களைக்கொண்டு எவ்வாறு (பாடசாலை) அவைகளை விருத்தியாக்கலாம் என்பதேயாம்.

மாணவர்களும், ஆசாரியனு மின்றேல் பாடசாலையென்ற பெயர் பொருந்தாது. ஐக்கியச்சங்கங்கள் ஏற்பட்டுள்ள இடங்களில் ஜனங்களிருப்பார்களென்பது திண்ணம். எவ்வளவு சிறிய சங்கமாயினும் அச்சங்கத்தின் எல்லைக்குள் ஒரு உபாத்தியாயருக்குத் தகுந்த பிள்ளைகளிருப்பார்க ளென்பதும் திண்ணமேயாம்.

கவர்ன்மெண்டார் ஆங்காங்கு ஏற்படுத்தியுள்ள போதனாமுறைப் பாடசாலைகள் காணாதென வுன்னி அப்பாடசாலைகளின் எண்ணத்தைக் கூறியிருப்பது சட்ட சபையில் நடந்த விருந்தாந்தங்களில் ஒன்றாகும். சமீபத்தில் அவ்வாறு செய்திருப்பதையும் அறியலாம். ஆகையால் தற்கால மிருக்கும் போதனாமுறை யறிந்த உபாத்தியாயர்களின் தொகை அதிகரிக்கும் என்று நம்பலாம். இவ்வுபாத்தியாயர்கள் சங்க குமாஸ்தாவாக நியமிக்கப்பட்டால் சபை நடவடிக்கைகளைஎவ்வாறறிவார்கள்என்பதைப்பற்றி ஐயமிருக்கலாம். பாடசாலை உபாத்தியாயர்கள் சிறு சிறு தபாலாபீசில் வேலைபார்ப்பதும், ஸ்டாம்பு விற்பதும், ஐக்கிய சங்கங்களில் கணக்குகள் பார்த்துவருவதும் நாம் பார்க்கிறோம். தாங்களே நாளடைவில் தெரிந்துகொண்டிருக்கிறார்கள். ஆகையால் இவைகள்தெரியாவிடினும் ஐக்கிய நாணயச் சங்க இன்ஸ்பெக்டரைக் கொண்டு விடுமுறை நாட்களில் உபாத்திமைச்





சங்கங்களில் விவரித்துச் சொல்லும்படியும் கேட்டுக்கொள்ளலாம். உபாத்தியாயர்களையே குமாஸ்தாக்களாக ஏற்படுத்துவது நிச்சயமென்றால் தகுந்த சிரத்தையுடன் போதனாமுறைப்பாடங்களுடன் கற்பிக்கும்படி கவர்ன்மெண்டைக் கேட்டுக்கொள்ளலாம்.

கட்டிடம்.—ஊர் பொதுக்கட்டிடம், அம்பலம், மண்டபம், கோவில், வாடகை வீடுகள் இவைகளில் பாடசாலைகள் வைத்திருப்பதைக் காண்கிறோம். ஐக்கியச் சங்கங்களும் பொது நன்மையைக் கருதியே ஏற்பட்டுள்ளன. தனிமையாய் சபைக்கென்று கட்டிடம் ஏற்படாத இடங்களில் பணம்சேரும்வரை பாடசாலையும் சங்கமும் மேற்கூறிய இடங்களிலே யமைக்கப்பெறலாம். அல்லது சர்க்கார் கிராண்டைப் பெற்று தாங்களும் கொஞ்சம் திரவியம் செலவிட்டால் கட்டிடம் சீக்கிரம் ஏற்பட்டுவிடும். பாடசாலைகள் ஏற்பட்டு நிலைத்து வருவதற்கு முன்னே கட்டிடம் கட்டுவது சில இடங்களில் சரியான எண்ணமாகத் தோன்றவில்லை யாதலால் பாடசாலை ஏற்பட்டு இரண்டொரு வருஷங்களில் விருத்தி செய்துகொள்வது உசிதம்.

யாவற்றினும் முக்கியமானதும், முதலில் கவனிக்கவேண்டியதுமானது பொருள். 'அருளில்லார்க்கவ்வுலகமில்லை பொருளில்லார்க்கிவ்வுலகமில்லாகியாங்கு' என்றபடி பொருளின்றி இவ்வித முயற்சி பயன்படா. கல்விக்குப் பொருள்வேண்டும்.

ஐக்கிய நாணயச் சங்கங்களில் மெம்பர்களாயிருப்போர்கட்கு பணம் வேண்டிய காலத்தில் கிடைக்குமென்றால் அதில் மெம்பராகவும் குமாஸ்தாவாகவும் அமர்ந்துள்ளவருக்கு பொருளுக்கு என்ன குறைவு? இலவசமாக யாத்திரம் எடுத்துக்கொள்ளக் கூடாதேயொழிய கடனாகப் பெற்றுக்கொள்ளலாம். அவர் அதைக் கட்டி முடிவுபெறும் வழி யெங்கே என்று கேட்கலாம். அவைகளாவன: பிரதி வருஷமும் மார்ச்சு மாதத்தில் பாடசாலையின் கிராண்டுத் தொகை கிடைப்பது யாவருமறிந்ததேயாம். , வருஷக் கடைசியில் குமாஸ்தாவுக்கு சங்கத்தின் லாபத்திலிருந்து ஒரு பங்கு கிடைக்கிறது. பாடசாலை பஞ்சாயத்தாரால் நடத்தப்பட்டு வருவதால் அதன் பிரசிடெண்டு இத்தொகைகளைத் தாமே பெற்றுக்கொண்டு உபாத்தியாயரிடம் கடனுக்கு வரவாக வைத்துக் கொள்ளலாம்.

உபாத்தியாயர்கட்கு போதுமானபடி சம்பளம் கிடைக்குமோ என்ற விசாரம் அடுத்ததாகும். போர்டு எலிமெண்டரி பாடசாலையில் அமர்ந்துள்ள உபாத்தியாயருக்கு மாதச் சம்பளம் 12 ரூபாய். தற்காலம் கொடுத்துவரும் அலவன்ஸை நிறுத்தி, சம்பளம் உயர்த்துவதாகக் கேள்வி. இருந்தபோதிலும் அலவன்ஸ 3½ ரூபாய்; ஆக மொத்தம் (12 + 3½) 15½ ஆகிறது. காபிடேஷன் அலவன்ஸைப்பற்றி பிற்பாடு கவனிப்போம். கவர்ன்மெண்டில் H. E. பயின்ற ஒருவருக்கு மாதம் ஒன்றுக்கு கிராண்டு 7-10-8. அவர் ஊக்கத்துடன் உழைத்து படிப்பில் தேர்ச்சியில்லாத தாழ்ந்த ஜாதிப்பிள்ளைகளைச் சேர்த்தால் 100-க்கு 50-க்கு குறைவின்றி கிராண்டு கூட்டிக் கொடுக்கப்படும். ஆகையால் கவர்ன்மெண்டிலிருந்து மாதம் 12 ரூபாய் கிடைக்கும். ஐக்கிய சங்க நடவடிக்கைகளைப் பார்ப்பதால் கிடைக்கும் வீதாசாரமோ, மாத சம்பளமோ 5 ரூபாயாக வைத்தாலும் மாதம் 17 ரூபாய் ஆகிறது. அல்லது பாடசாலையின் சுதந்தரத்தை வகிக்கும் பஞ்சாயத்தார், குமாஸ்தா உபாத்தியாயருக்கு ஒருவித மாதச் சம்பளம் கொடுத்து, தங்கள் வரவு செலவு கணக்கை யனுப்பினால் அவ்வித பாடசாலைகட்கு அதிகமாக கிராண்டு கிடைக்கலாம் என்று எண்ண இடமுண்டு.

உபாத்தியாயர் சம்பளத்திற்கே இவ்வளவு சிரமமென்றால், உபகரணங்கட்கென்செய்வது என்பதை நோக்குவோம். எலிமெண்டரி பாடசாலைகளில் அதிக மேஜை நாற்காலி தேவையென்பதில்லை. புஸ்தகம், படங்கள் வகைதான் வேண்டும். லாபத்தில் ஒரு பகுதி படிப்புக்காக என்று எடுத்து வைப்பதுடன் மாசாமான்களுக்காகக் கிடைக்கும் கிராண்டும் கூடினால் சுமார் ஐந்து வருஷங்களில் தேவையானது சப்ளை செய்துவிடலாம். காட்சிசாலை படங்கள் முதலியன உபாத்தியாயராலும் சேகரிக்கப்படவேண்டும்.

இவ்வித மமைந்துள்ள பாடசாலைகள் ஒழுங்காக நடைபெறுவதென வெண்ண இடமுண்டோவெனின், அதிகம் விவரிப்பது அவசியமானதாகத் தோன்றவில்லை. தினசரி, பாடசாலைக்கு வராமலும் படிப்பிலும் தேர்ச்சியி

னும் குறைவாகவு மிருக்கும் பிள்ளைகளின் பெற்றோர்களை குமாஸ்தா அடிக்கடி பார்க்க அவகாசமிருப்பதால் பெற்றோரிடம் சொல்லி ஒழுங்குபடுத்துவது எளிதாகும். தாய்தந்தையர்க்கும் தங்கள் குழந்தைகளின் அபிவிர்த்தியைக் குறித்து விசாரிக்க சமயம் வாய்க்கிறது. பிரசிடெண்டு தினசரி குமாஸ்தாவைப் பார்ப்பதால் விஷயங்களை நேரில் சொல்ல சமயம் ஏற்படுகிறது. பரீக்ஷாதிகாரிளும் பஞ்சாயத்தாரிடம் குறைகளை எடுத்துக்காட்டி சீர்திருத்தம் செய்வது எளிதாகிறது.

இவ்வாறமைந்துள்ள பாடசாலைகட்கும் போர்டு பாடசாலைகட்கும் பேதமென்ன? இப்பாடசாலைகளில் ஜனங்கட்கு உண்டாகும் உற்சாகமும், சிரத்தையும் போர்டு பாடசாலைகளில் பொதுவாக இந்து பிள்ளைகளின் நன்மைக்காக உபாத்தியாயருக்கும் பெற்றோர்கட்கும் ஒருவர்க்கொருவர் இருந்துகொள்ள வேண்டிய பற்று இல்லை என்பது நிச்சயம். சில இடங்களில் தனக்குச் சம்பளம் சரிவரக் கிடைத்து வருவதால் அதை அளிக்கும் மேலதிகாரிகட்கேதான் தன்னிட வேலையைப் பற்றி எடுத்துச் சொல்வதா யெண்ணி பெற்றோர்களிடம் சங்கதிகளை உபாத்தியாயர்கள் விவரித்துச் சொல்வதில்லை. அவர்களுடைய விசாரணைக்குப் பதிலும் கொடுப்பதில்லை. சில இடங்களில் கிராமத்தாரும், போர்டு பாடசாலையானபடியால் தங்களுக்கு அதில் யாதொரு கவலையுமில்லாமல் ‘இராமனாண்டா லென்ன, இராவணனாண்டா லென்ன’ வென்றபடி வாளாநிற்கிறார்கள். பிள்ளைகளைச் சேர்ப்பதும், படிப்பிப்பதும் உபாத்தியாயர் தொழில் என்கிறார்கள். தங்கள் குழந்தைகளின் க்ஷேமத்தைக் கருதும் உபாத்தியாய ரென்ற பிரியமில்லை. இவ்வித மனோபாவம் பாடசாலையின் அபிவிர்த்திக்கு அறிகுறி யாகாது. ‘கல்லியாண முழக்கு பெரியதுதான், மாப்பிள்ளை தயார் காணோ’ மென்றவாறு பாடசாலை மாதிரிப் பாடசாலைதான். முக்கியமான அம்சம் மாணாக்கர்கள்-அது இல்லை. சங்கியை குறைந்து, ஒழுங்கு குறைந்து, தேர்ச்சியு மில்லாமலிருப்பதை அநேக பாடசாலைகளில் பார்க்கிறோம். உபாத்தியாயர்களை அதிகாரிகள் கண்டிக்கிறார்கள், ஊரினும் விரும்பார்கள்—மத்தளத்திற்கு இருபுரம் அடிபோல் உபாத்தியாயர்கள் வியசனமடைகிறார்கள். உபாத்தியாயர்களும், பெற்றோர்களும், பிள்ளைகளும், உத்தியோகஸ்தர்களும் யாதொரு பயனுமடைகிறதில்லை. இது எல்லாவிடங்களிலு மில்லாவிடினும், சிற்சில குறைகள் காணப்படுகின்றன.

உபாத்தியாயரே மானேஜராக இருந்துவரும் எய்டெட் பாடசாலைகளிலிருக்கும் குறைகளென்னவென்று கவனிப்போம்.

பாடசாலை முதலிற் ஏற்படுத்தும்பொழுது உபாத்தியாயரின் கஷ்டம், கம்பர் தில்லை மூவாயிரத்தாரைச் சேர்த்துத் தன் பாடலை அரங்கேற்றியதை யொக்கும். ஏற்படினும், உபாத்தியாயரே சம்பள வசூல் செய்துகொள்ளவேண்டுமென்பர். மடமோ, கோவிலோ, இடிந்தவீடோ, அல்லது உபாத்தியாயர் இருப்பிடத்திலோதான் பாடசாலை வைத்துக்கொள்ளவேண்டும். கன்று காலிகள் கட்டும் தொழுவம்கூட பெற்ற பிள்ளைகள் உட்காருவதற்கு உரித்ததாயிராது. அம்மாதிரியே அவைகளை மேய்க்கும் இடையனினும் தாழ்ந்தவனென்றே உபாத்தியாயர்களின் பதவியாகிறது. ஆரம்பித்த இரண்டு மூன்று மாதங்களில் சம்பள வசூலில்லாமல் வேறு அலுவல் பார்த்துக்கொண்டு பாடசாலைகளை அடைத்துவிடுகிறார்கள். விசாரித்தால் ‘வாத்தும் கூத்து மூன்றுநாள்’தா னென்கிறார்கள். தப்பி எங்கேயாவது நிலைத்துவிட்டாலோ பாடசாலைக்கு வேண்டிய சின்னங்கள் இரா. டிபார்ட்மெண்டினும் இவ்வுபாத்தியாயர்களை நம்பி கட்டிடம் உபகரணங்கட்கு திரவிய சகாயம் தருவது கடினம். கிராமத்தில் கை நீட்டி உதவுவாரில்லை. ‘தடி எடுத்தவன் தண்டக்காரன்’ என்றாற்போல் எல்லோரும் விரட்டுவார்கள். இதனால் மரியாதை குறைவதுமின்றி, நீடுழிகாலம் நிலைத்திருப்பது போய், உபாத்தியாயருடைய ஜீவனோபாயத்திற்காகவேற்பட்ட பாடசாலை யென்றே விளங்கிவிடுகிறது. இவைகளினும் தப்பி அதிர்ஷ்ட வசத்தாலே பிழைத்திருப்பதும் சில உள. ஆகையால் மேல் எடுத்துக்காட்டிய விஷயங்களை தீர்க்கமாக ஆலோசித்து கூடுமானவரை ஏற்கனவே ஏற்பட்டும் இனி ஏற்படவும்போகிற சங்கங்கள், பாடசாலைகள் இவைகளை ஒருங்கே சேர்த்து வைத்தால் அநேககுறைகள் நிவர்த்தியாகுமென்றெண்ணி இரண்டையும் ஸ்தாபிப்பீர்கள்.

(இதன் தொடர்ச்சி 336-ம் பக்கம் பார்க்க.)





# ராஜஸிம்ஹன்

## RAJASIMHAN

[எம். ஏ. பட்டம்பெற்ற ஒருவர் எழுதியது.]

(301-ம் பக்கத் தொடர்ச்சி.)

### ஆறும் பாகம்

### முதல் அத்தியாயம்

### சஞ்சலகுமாரியும் நிர்மலையும்

ராஜஸிம்ஹன் தீவிரமாய்க் கடிதத்தை எழுதி டில்லிக்கனுப்பியது முதல் அக்கினி ஜ்வலிக்கவாரம்பித்த தென்று சொல்லலாம். முதலில் கடிதத்தை எடுத்துக்கொண்டுபோய் அவுரங்கசீபுக்குச் சேர்ப்பிக்கத் தக்கவர் யாரென்பதே வெகு யோசனையாயிருந்தது. ஏனென்றால், கடிதத்தைக் கொண்டுபோகிற தூதன் நீதிசாஸ்திரப் பிரகாரம் கொல்லத் தகாதவனானாலும் பாபிஷ்டனான அவுரங்கசீபு தூதர்களில் அநேகரை வதஞ் செய்திருந்தானென்று எங்கும் பிரசித்தமாயிருந்தது. பிராணனுக்குப் பயப்பட்டுக்கொண்டு பிராணனை இரக்ஷித்துக்கொள்ள சாமர்த்திய மில்லாதவர்களை யனுப்புவதற்கு ராஜஸிம்ஹனுக்கு இஷ்டமில்லை. அப்பேர்ப்பட்ட கெட்டிக்காரர் மனத்துக்கு யாரும் தோன்றவில்லை. அப்பொழுது மாணிக்கலாலன் வந்து தன்னை அந்தக் காரியத்தில் நியமிக்கவேண்டுமென்று கேட்டுக்கொண்டான். ராஜஸிம்ஹன் அவன் சரியான பாத்திரனென்றறிந்து அவனை நியமித்தான்.

இந்தச் சமாசாரம் கேட்டு சஞ்சலகுமாரி நிர்மலகுமாரியை அழைத்து, “நீ உன் கணவனுடன் போகிறதில்லையோ” என்று கேட்டாள்.

நிர்மலை ஆச்சரியப் பட்டாள். “எங்கே போகிறது? டில்லிக்கோ? எதற்காக?” என்றாள்.

சஞ்சலை.—ஒருதரம் பாதுஷாவின் ரங்கமஹலைப் பார்த்துவருகிறதற்காக.

நிர்மலை.—அது நரகமென்று கேட்டிருக்கிறேனே.

சஞ்சலை.—நீ நரகத்துக்குப் போகவேண்டாமா என்ன? நீ அந்த அப்பாவி மாணிக்கலாலனைப் படுத்திவைக்கிற பாட்டுக்கு உனக்கு நரகம் நிச்சயந்தான்.

நிர்மலா.— அழகைப்பார்த்து எதற்காகக் கலியாணம் செய்துகொள்ளவேண்டும்?

சஞ்சலை.—நீ மாத்தடியில் விழுந்து சாகிறாயே என்று நினைத்துக் கலியாணம்பண்ணிக்கொண்டது.

நிர்மலை.—நான் அவனைக் கூப்பிட்டு ‘கலியாணம் பண்ணிக்கொள்ளாவிட்டால் தீராது என்று சொல்லவில்லையே.’ இப்போது அந்த பூதத்தைச் சுமந்துகொண்டு டில்லிக்குப்போய் என்ன செய்யவேண்டும்?

சஞ்சலை.—உதயபுரி பேகம் வருகிறதற்காக ஒரு கடிதத்தைக் கொண்டுபோய் அவளுக்குச் சேர்ப்பிக்கவேண்டும்.

நிர்மலை.—எதற்காக?

சஞ்சலை.—எனக்கு அவள் தாம்பூலம் சரிசெய்து கொடுப்பதற்காக.

நிர்மலை.—நிஜந்தான். மறந்து போய்விட்டேன். புவனேசுவரி வந்து உனக்கு சேவை செய்யாமல் போனாற் உனக்குப் பூதம் கிடைக்காது.

சஞ்சலை.—போ — தூர — நான்தான் பூதமாய் உட்கார்ந்திருக்கிறேனே. பாதுஷாவின் பேகம் வந்து எனக்குத் தாசியாகவேண்டும். இல்லாவிட்டால் நான் விஷபானம் செய்யவேண்டும். இது ஜோஸியன் சொல்லவில்லையா?

நிர்மலை.—காகிதம் எழுதிவிட்டால் பேகம் வந்துவிடுவாளோ?

சஞ்சலை.—என் உத்தேசம் யுத்தத்தைக் கிளப்புவது. யுத்தத்தைக் கிளப்பிவிட்டால் ராணாவுக்கு நிச்சயம் ஜயமுண்டாகும். பேகம் வேலைக்காரியாவாள். அதுவு மல்லாமல் நீ யோதபுரி பேகத்தைப் பார்த்துக்கொண்டு வருவதும் ஒரு உத்தேசம்.

நிர்மலை.—அப்படியானால் இந்தக் காரியம் எப்படி நிறைவேறவேண்டுமோ அதற்குத் தகுந்த உபாயங்களெல்லாம் விவரமாய்ச் சொல்.

சஞ்சலை.—யோதபுரி பேகத்தின் முத்திரை மோதிரம் நம்மிடத்தி லிருக்கிறதல்லவா? அதை எடுத்துக்கொண்டுபோ. அதனுதவியால் ரங்கமகலுக்குள் பிரவேசித்து யோதபுரியைப் பார்க்கலாம். பார்த்து விருத்தாந்தத்தையெல்லாம் அவளுக்குத் தெரிவித்து நான் உதயபுரி பேகம் பேருக்குக் கொடுக்கிற கடிதத்தைக் காண்பி. அவள் எப்படியாவது அது உதயபுரிக்குப் போய்ச் சேரும்படி செய்வாள். எப்போது உன்னுடைய ஸ்வய புத்தி போதாமலிருக்கிறதோ அப்போது கணவனிடமிருந்து கொஞ்சம் புத்தியைக் கடன்வாங்கிக்கொள்.

நிர்மலே, "நான் சொல்லுகிறபடியல்லவா எல்லாம் நடக்கிறது எங்கள் வீட்டில் ?" என்று சிரித்துக்கொண்டு, கடிதத்தைவாங்கிக் கொண்டு புறப்பட்டுப் போனாள். கணவனுடன் கூட அநேகம் ஜனங்களுடன் டில்லி யாத்திரை போகிறதற்கு வேண்டிய காரியங்களைச் செய்ய வாரம்பித்தாள்.

## இரண்டாம் அத்தியாயம்
## மாணிக்கலாலன் ஏற்பாடுகள்

பிரயாணத்துக்கு அநேக சாமான்களைத் தயார் செய்துகொண்ட மாணிக்கலாலன் அவைகளில் ஒன்றை நிர்மல குமாரிக்குக் காண்பித்தான். நிர்மலே வெகு ஆச்சரியத்துடன் அதைப் பார்த்தாள். அவன் ஒரு விரலுக்குப் பதிலாக ஒரு புதிய விரல் செய்து கொண்டிருந்தான். நிர்மலே, "இது எதற்காகப் புதியதாயிற்று" என்றாள்.

மாணிக்கலாலன்.—செய்யச் சொன்னேன்.

நிர்மலே.—எதனால் ?

மாணிக்க.—யானை தந்தத்தினால். புதிதென்று தெரியாமலிருக்கிறதற்காக ஒரு சிறிய தோலை மேலேபோட்டு என்னுடைய சரீரத்தின் வர்ணமாக்கச் சொன்னேன். வேண்டிய போது எடுத்துப் போட்டுக் கொள்ளலாம்; எடுத்துவிடலாம்.

நிர்மலே.—இது எதற்காக வேண்டியது ?

மாணிக்க.—டில்லியில் தெரியும். டில்லியில் வேஷம் மாறவேண்டி வந்தாலும் வரும். விரலில்லாதவன் என்ன வேஷம்போட்டுக்கொண்டாலும் தெரிந்து போய்விடும். இரண்டுவிதமிருந்தால் சரியாயிருக்கும்.

நிர்மலே சிரித்தாள். பிற்பாடு மாணிக்கன் ஒரு கூட்டில் இரண்டு புறாக்களை எடுத்துக் கொண்டான். அந்தப் பக்ஷிகளை வெகு ஜாக்கிரதையாய்த் தயார் செய்திருந்தான். தூது காரியங்களில் அவைகளுக்குத் தீர்ந்த சாமர்த்தியமுண்டு. பூர்வகாலத்தில் பாரதவருஷத்தில் இந்தக் காரியத்துக்காகத் தயார் செய்யப்பட்ட புறாக்களைப்பற்றி அநேக விடங்களில் படித்திருக்கிறோம். புறாக்களின் குணங்களை நிர்மலைக்கு மாணிக்கன் நன்றாய்த் தெரிவித்தான்.

டில்லி பாதுஷாவைக் குறித்துத் தூதனை அனுப்பவேண்டுமானால், சில காணிக்கைகளைக் கூட அனுப்புகிற வழக்கமுண்டு. ராஜஸிம்ஹன் சில சாமான்களை மாணிக்கலாலனுடன் அனுப்புவித்தான். சிநேகமில்லாததால் அதிக பதார்த்தங்களை யனுப்பவில்லை.

குறிக்கப்பட்ட தினத்தில் ராணாவின் கடிதத்தையும் உத்தரவையும் பெற்றுக்கொண்டு, நிர்மலேயுடனும் வேலைக்காரர் யானை குதிரை பல்லக்கு வண்டிகள் முதலான ஸரபராவுடனும் வெகு அட்டஹாஸமாய் டில்லிக்குப் புறப்பட்டான். போய்ச் சேருவதற்கு அநேக நாட்கள் ஆயின. இன்னும் கொஞ்சதூரம் போகவேண்டியிருக்கும்போதே மாணிக்கலாலன் தன் பரிவாரத்தை நிறுத்தி இறக்கிவிட்டு நிர்மலையையும் பரிவாரத்தையும் அவ்விடத்திலேயே இருக்கும்படி சொல்லிவிட்டு, நம்பிக்கையுள்ள ஒருவனை மாத்திரம் அழைத்துக் கொண்டு டில்லிக்குப் போனான்.

போகும்போது கல்லினாற் செய்யப்பட்ட சில சாமான்களை எடுத்துக்கொண்டு போனான். தந்தத்தினால் செய்யப்பட்ட விரலை யெடுத்து நிர்மலகுமாரி கையிற் கொடுத்து, நாளை வருகிறேனென்றான்.

மாணிக்கலாலன் கல்லினாற் செய்த ஒரு பதார்த்தத்தையும் அதில் ஒரு சிறிய குறியையும் காண்பித்து, "எல்லா கல் சாமான்களிலும் இந்தக் குறி இருக்கிறது" என்றான்.

நிர்மலே.—எதற்காக ?

மாணிக்க.—டில்லியில் நீயும் நானும் அலைய வேண்டியதா யிருக்கிறது. அதுவுமல்லாமல் மொகலாயரின் பிரதிபந்தகத்தினால் ஒருவருக்கொருவருடைய சமாசாரம் தெரியாமல் போனால், கல் சாமான்களை வாங்குகிறதற்காக பஜாருக்கு ஆளனுப்பி எந்தக் கடையில் சாமானின்மேல் இந்த அடையாளமிருக்கிறதோ அந்தக் கடையில் விசாரித்தால் என்னைப்பற்றின வர்த்தமானம் கிடைக்கும்.

இப்படி ஏற்பாடு செய்துவிட்டு மாணிக்கலாலன் கல் சாமான்களை யெடுத்துக்கொண்டு நம்பிக்கையுள்ள அந்த ஆளையும் அழைத்துக் கொண்டு டில்லிக்குப் போனான். அங்கே போய் ஒரு வீட்டை வாடகைக்கு வாங்கி கூடப் போயிருந்தவனை கல் சாமான்களை விற்கும்படி செய்துவிட்டு, மறுபடி திரும்பி சீபிரம் வந்துசேர்ந்தான். பின்பு எல்லாரையுமழைத்துக்கொண்டு நிர்மலேயுடன் டில்லிக்குப் போனான். அங்கே ஒரு விடுதியிலிறங்கி பாதுஷாவுக்குச் சமாசாரமனுப்பினான்.

நானும் அறியேன் அவளும் பொய் சொல்லாள்.



## மூன்றாம் அத்தியாயம்
## நிர்மலேயின் யுக்தி

மத்தியானகாலத்தில் அவுரங்கசீபு தர்பாரில் வந்துட்கார்ந்தான். மாணிக்கலாலன் தர்பாரில் வந்து ஆஜரானான். டில்லி தர்பாரைக்குறித்து அநேக சரித்திரங்களில் வருணிக்கப்பட்டிருக்கிறது. அதைப்பற்றி மறுபடியும் இங்கே வருணிப்பதாக நமக்கு அபிப்பிராயமில்லை. மாணிக்கலாலன் முதற் படியில் ஏறி, ஒருதரம் முழங்கால் மட்டியிட்டு எழுந்தான். மறுபடி வேறொரு காலால் முழங்காலிட்டு எழுந்தான். இப்படி மூன்று தரம் முழங்காலிட்டுப் பிறகு ஸிம்மாஸனத்தின் சமீபத்தில்போய் சந்நிதானத்தில் நின்றுகொண்டான். பிற்பாடு வந்தனம் செய்து ராஜஸிம்ஹன் அனுப்பிய சாமான்னியமான காணிக்கைகளைப் பாதுஷாவின் சமுகத்தில் அர்ப்பித்தான். அவைகள் வெகு சாமான்னியமா யிருந்ததைப் பார்த்து அவுரங்கசீபு வெகு கோபங்கொண்டான். ஆனால் வாயினால் ஒன்றும் சொல்லவில்லை. அனுப்பிய சாமான்களில் இரண்டு கத்திகளிருந்தன. அவைகளில் ஒன்று உரையிலிருந்தது. மற்றொன்று உரையிலிருந்து எடுக்கப்பட்டிருந்தது. அவுரங்கசீபு உரையில்லாத கத்தியை எடுத்துக்கொண்டு சாமான்களை அங்கீகரித்துக்கொள்ளவில்லை.

மாணிக்கலாலன் ராஜஸிம்ஹன் கடிதத்தைக் கொடுத்தான். கடிதத்தின் அர்த்தத்தை யறிந்துகொண்டு கோபக்கடலில் மூழ்கினான். ஆனால் வெளிப்படையாய்க் காட்டவில்லை. அவன் மாணிக்கலாலனை வெகு மரியாதையுடன் க்ஷேம சமாசாரங்களை விசாரித்தான். அவனுக்கு உயர்ந்த ஒரு விடுதி தயார்செய்து கொடுக்கும்படி உத்தரவு செய்தான். பிறகு மறுதினம் பதில் கொடுப்பதாய்ச் சொல்லி மாணிக்கலாலனை யனுப்பிவிட்டான்.

உடனே தர்பாரைவிட்டுப் புறப்பட்டுப்போய் மாணிக்கலாலனை வதஞ்செய்ய ஆட்களுக்கு ஆக்ஞாபித்தான். போனவர்கள் மாணிக்கலாலனைத் தேட வாரம்பித்தார்கள். அவனுக்கு ஆதரவுடன் பாதுஷாவின் உத்தரவுப்படி உபசாரஞ் செய்யப் போனவர்களும் தேடவாரம்பித்தார்கள். டில்லியில் எங்கும் தேடினார்கள்—அவன் எங்கும் அகப்படவில்லை. அவன் வதைக்கு உத்தரவாவதற்கு முந்தியே எங்கேயோ தப்பியோடிப் போய்விட்டான். ஜனங்கள் அவனைத் தேடிக்கொண் டிருக்கும் பொழுது, மாணிக்கலாலன் வேஷம் மாறி, தன் கல் சாமான்களை கடையில் வர்த்தகம் செய்துகொண்டிருந்தா னென்று சொல்ல வேண்டிய அவசியமில்லை. அவனைத் தேடிக் கொண்டிருந்தவர்கள் அவனை எங்கும் காணாமல் அவன் இறங்கியிருந்த ஸ்தலத்திற் போய் அங்கே இருந்தவரையெல்லாம் பிடித்துக்கொண்டு கொத்தவாலினிட மழைத்துக்கொண்டு போனார்கள். அவர்களுடன் நிர்மலகுமாரியையும் அழைத்துக்கொண்டு போனார்கள்.

கொத்தவால் அந்த ஜனங்களிடமிருந்து ஒரு சமாசாரத்தையுமறிய முடியவில்லை. பயங்காண்பித்தும் அடித்தும் பார்த்தான்; ஒன்றும் வெளிப்படவில்லை. மாணிக்கன் சமாசாரம் ஒன்றும் கிடைக்கவில்லை. அவர்கள் எப்படிச் சொல்லமுடியும் ? அவர்களுக்கே தெரியாதே.

கடைசியில் கொத்தவால் நிர்மலகுமாரியை விசாரிக்க வாரம்பித்தான். அவள் ராணா மனிதன் தனக்குத் தெரியா தென்றாள்.

கொத்தவால்.—அவன் பெயர் மாணிக்கலாலஸிம்ஹன்.

நிர்மலே.—மாணிக்கலாலஸிம்ஹன் பரிச்சயம் எனக்கில்லை.

கொத்தவால்.—நீ ராணாவின் தூதன் பரிவாரத்துடன் வரவில்லையா ?

நிர்மலே.—நான் உதயபுரத்தை ஒரு நாளும் பார்த்ததே யில்லை.

கொத்தவால்.—அப்படியானால் நீ யார் ?

நிர்மலே.—நான் ஜோதபுரி பேகம் ஸாகேபவர்களின் ஹிந்து தாசி.

கொத்தவால்.—யோதபுரி பேகம் ஸாகேபவர்களின் தாசியானால், மகலை விட்டு ஏன் வெளியில் வந்தாய்? அவர்கள் ஒருபொழுதும் வெளியில் வருவதில்லையே.

நிர்மலே.—நான் ஒருநாளும் வெளியில் வந்தவளல்ல. இப்போது ஹிந்துஜனங்கள் வந்திருக்கிறார்களே என்று கேட்டு, பேகமவர்கள் அவர்களிறங்கியிருக்கிற விடத்துக்கு அனுப்பினார்கள்.

கொத்தவால்.—அது எப்படி? எதற்காக?

நிர்மலே.—ஸ்ரீ கிருஷ்ணனுடைய சரணாமிருதத்திற்காக. அதை ரஜபுத்திரரெல்லாரும் போட்டுக்கொண்டிருக்கிறார்கள்.

நான் ஒன்றை எண்ண விதி ஒன்றை எண்ணிற்று.

கொத்தவால்.—நீ ஒண்டியாய் எப்படி மகலிலிருந்து வெளியில் வந்தாய்?

நிர்மலை.—இதன் பலத்தினால்.

என்று சொல்லி நிர்மலை யோதபுரி பேகம் ஸாகேபின் முத்திரை மோதிரத்தை உடுப்பிலிருந்து எடுத்துக் காண்பித்தாள். பார்த்துக் கொத்தவால் மூன்று ஸலாம் செய்து, "நீங்கள் போங்கள். உங்களை யாரும் ஒன்றும் செய்ய மாட்டார்கள்" என்றான்.

நிர்மலை, "கொத்தவாலரே! ஒரு உதவிசெய்ய வேண்டும். நான் ஒருபொழுதும் மகலிலிருந்து வெளியில் வந்தவளல்ல. வெகு பயமாயிருக்கிறது. தாங்கள் தயவுசெய்து ஒரு மனிதனைக் கூட அனுப்பி மகலுக்கு அழைத்துக்கொண்டு போகும்படி உத்தரவு செய்தால் வெகு உபகாரமாயிருக்கும்.

கொத்தவால், உடனே ஆயுதபாணியான ஒரு மனிதனை யழைத்து நிர்மலையை அந்தப்புரத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் விட்டுவரும்படி ஆக்ஞாபித்தான். பாதுஷாவின் பிரதான மகிஷியின் முத்திரை மோதிரத்தைப் பார்த்தவுடன் வேலைக்காரர் ஒருவரும் தடைசெய்யவில்லை. நிர்மலை பேசுகிற சாதுரியத்தால் தந்திரமாய் யோதபுரி பேகம் இருக்கிற இடத்தைத் தெரிந்துகொண்டாள். அங்கேபோய் யோதபுரிக்குப் பிரணாமம் செய்து முத்திரை மோதிரத்தைக் காண்பித்தாள். பார்த்தவுடன் வெகு ஜாக்கிரதையாய் ராஜமகிஷி அவளை ஒரு ஏகாந்தமான ஸ்தலத்திற்கு அழைத்துக்கொண்டுபோய் விசாரிக்க வாரம்பித்தாள்.

யோதபுரி.—உனக்கு இந்த மோதிரம் எப்படிக் கிடைத்தது?

நிர்மலை.—நான் சங்கதிகளையெல்லாம் விஸ்தாரமாய்ச் சொல்லுகிறேன்.

நிர்மலை முதலில் தன் சொந்த சமாசாரங்களையெல்லாம் சொன்னாள். அதற்குப் பிறகு தேவியென்னும் வேலைக்காரி ரூபநகரத்திற்குவந்து சொன்னதை யெல்லாம் சொல்லி, மோதிரத்தை விட்டுப்போனதையும் சொல்லி, கடைசியில் தனக்கும் சஞ்சலகுமாரிக்கும் நேர்ந்ததையெல்லாம் சொன்னாள். மாணிக்கலாலனுக்கும் தனக்கு முண்டான பரிச்சயத்தையும் சொன்னாள். மாணிக்கலாலனுடன் கூடவந்தது, சஞ்சலகுமாரி கடிதம் கொடுத்திருந்தது, டில்லியில தனக்கு உண்டான ஆபத்து, ஆபத்திலிருந்து சாமர்த்தியமாய் தப்பிக்கொண்டு அந்தப்புரத்திற்குள் வந்துசேர்ந்தது இவைகளையெல்லாம் சொன்னாள். எல்லாவற்றையும் சொல்லி, பிறகு சஞ்சலகுமாரி உதயபுரி பேகம் பெயருக்குக் கொடுத்திருந்த கடிதத்தைக் கொடுத்து, "இக்கடிதத்தை எப்படி உதயபுரிபேகமுக்குச் சேரும்படி செய்கிறதென்று தெரிந்துகொள்வதற்காகத் தங்களிடம் வந்தேன்" என்று சொன்னாள்.

ராஜமகிஷி.—அதற்கு உபாயமுண்டு. ஜேப உன்னீஸாவின் உத்தரவு வேண்டும். இப்பொழுது போனால் கலகமுண்டாகும். இராத்திரி இந்தப் பாபிகள் மதுபானஞ் செய்து மயங்கிக் கிடக்கும்போது அந்த உபாயத்தைச் செய்வோம். இப்பொழுது நீ போய் என் ஹிந்து வேலைக்காரிகளிருக்கிற இடத்தில் இரு. இந்துக்கள் சமைத்த அன்னத்தைச் சாப்பிடலாம்.

நிர்மலை ஒப்புக்கொண்டாள். பேகம் அதற்கு வேண்டிய உத்தரவுகள் செய்தாள்.

## நான்காம் அத்தியாயம்

### கடித மளித்தல்

இராத்திரி வெகு நேரமாயிற்று. அப்பொழுது யோதபுரி பேகம் நிர்மலையைக் கூப்பிட்டு, சொல்ல வேண்டியதெல்லாம் சொல்லி ஒரு தூதியைக் கொடுத்து ஜேப உன்னீஸாவினிடமனுப்பினாள். நிர்மலை ஜேபஉன்னீஸாவின் அறையில் போய்ப் பார்க்கவும் புஷ்பக் குவியல்களின் சுகந்தம், அத்தர் வாசனையுடன் கலந்திருந்ததைப் பார்த்து ஆச்சரியப்பட்டாள். நானாவிதமான இரத்தினங்களிழைக்கப்பட்ட மாடி மஞ்சத்தினாபரணங்கள் எல்லாவற்றையும் பார்த்துப் பிரமித்தாள். எல்லாவற்றைக் காட்டிலும் ஜேப உன்னீஸாவின் விசித்திரமான அலங்காரத்தையும் காந்திமிக்க சந்திர சூரியர் போல் ஜ்வலிக்கின்ற அவள் ஸௌந்தரியத்தையும் பார்த்து வியப்படைந்தாள். இவைகளால் சூழப்பட்ட ஜேப உன்னீஸாவைப் பார்த்தால் தேவலோகத்திலுள்ள அப்ஸர ஸ்திரியோ வென்று தோன்றும்.

ஆனால் அப்பொழுது அப்ஸரஸின் கண்கள் மூடியிருந்தன. முகம் சிவந்திருந்தது. திராக்ஷாரஸம் தன் பூரணாதிகாரத்தையும் செலுத்திக்கொண்டிருந்தது. நிர்மல குமாரி அவளெதிரிற்போய் நின்றாள். அவள் மயக்கத்துடன் 'நீ யார்' என்றாள்.

நான் கெட்டேன் நாதன் பயிராக்கினன்.